ANNUAL RESEARCH SESSION 2022

PROCEEDINGS

EXPLORING CONTEMPORARY SRI LANKAN ISSUES AND REDESIGNING THE FUTURE

Faculty of Arts and Culture
Eastern University, Sri Lanka

Exploring Contemporary Sri Lankan Issues and Redesigning the Future

Annual Research Session-2022

Faculty of Arts & Culture
Eastern University, Sri Lanka

Title : Exploring Contemporary Sri Lankan Issues and Redesigning the Future

Editorial Board

Editor : Mrs.Gowry Luxmykanthan

Co-editors : Mrs.Jeyapiratheeba Anton Arulrajah

Mr.K.Gukan

Mr.M.Prahasan

Mrs.Prashanthi Ilango

Mr.V.Sasikaran

Edition : 2022

Published by : Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka

ISBN : 978-624-5731-14-5

Organizing committee

Chairman

Prof.J.Kennedy

Coordinator

Dr.V.Gunapalasingam

Secretary

Mr. M.L.Mohemed Helfan

Committee Members

Mrs.Jeyapiratheeba Anton Arulrajah

Mrs.Gowry Luxmykanthan

Mr.K.Gukan

Mr.M.Prahasan

Mrs.Prashanthi Ilango

Mr.V.Sasikaran

Advisory Board

Prof.V.Gunaretnam

Prof.T.Krishnamohan

Prof.V.Inpamohan

Prof.S.Santhirasegaram

PANEL OF REVIEWERS

1. Prof. V. Gunaretnam	Eastern University, Sri Lanka
2. Prof. T. Krishnamohan	Eastern University, Sri Lanka
3. Prof.T.Bhavan	Eastern University, Sri Lanka
4. Prof. V. Inpamohan	Eastern University, Sri Lanka
5. Prof. S. Santhirasegaram	Eastern University, Sri Lanka
6. Dr.S.Maunaguru (Retired Prof)	Eastern University, Sri Lanka
7. Mrs.M.Sitralega (Retired Prof)	Eastern University, Sri Lanka
8. Mr.M.Selvarajah (Retired Prof)	Eastern University, Sri Lanka
9. Dr.S.Yogarajah (Retired Prof)	Eastern University, Sri Lanka
10. Dr.P.Pushparatnam (Retired Snr. Prof)	University of Jaffna
11. Dr.Ammankili Murugathas (Retired Snr. Prof)	Eastern University, Sri Lanka
12. Dr.C.Arulmoly (Retired Prof)	Eastern University, Sri Lanka
13. Dr. K. Rajendram	Eastern University, Sri Lanka
14. Dr. M. Nadira	Eastern University, Sri Lanka
15. Mr. C. Sivanayagam	Eastern University, Sri Lanka
16. Mrs. R. V. Francis	Eastern University, Sri Lanka
17. Mr. P. Sachithanantham	Eastern University, Sri Lanka
18. Dr. S. Kesavan	Eastern University, Sri Lanka
19. Dr. S. Jeyasankar	Eastern University, Sri Lanka
20. Mrs.S.Maheswaranathan	Eastern University, Sri Lanka
21. Mr. K. Sathiyasegar	Eastern University, Sri Lanka
22. Mr. A. J. Hussain	Eastern University, Sri Lanka
23. Mr. M. Ravi	Eastern University, Sri Lanka
24. Dr. Jeyapraba Suresh	Eastern University, Sri Lanka
25. Mr. M. T. M. Rizvi	Eastern University, Sri Lanka
26. Dr. P. Pretheeba	Eastern University, Sri Lanka
27. Dr.S.Anuzsiya	South Eastern University of Sri Lanka
28. Mrs. P. Moses	Eastern University, Sri Lanka
29. Mr. R. Kiruparajah	Eastern University, Sri Lanka
30. Mr. S. Jeganathan	Eastern University, Sri Lanka
31. Mrs.Shanthini Arulanantham	University of Jaffna
32. Mr. K. Mathiseelan	Eastern University, Sri Lanka
33. Mr. R. Sahayaseelan	Eastern University, Sri Lanka
34. Dr.S.Muhunthan	University of Jaffna
35. Dr.Vigneswary Pavanesan	University of Jaffna
36. Mrs. J. Anton Arulrajah	Eastern University, Sri Lanka
37. Mr. G. Vickneswaran	Eastern University, Sri Lanka
38. Mr. A. Yogarajah	Eastern University, Sri Lanka
39. Dr. K. Suresh	Eastern University, Sri Lanka
40. Dr. S. Sivaretnam	Eastern University, Sri Lanka
41. Dr.Jeyaranjini Gnanathas	Eastern University, Sri Lanka
42. Mr. S. K. Shivahaneshan	Eastern University, Sri Lanka

43. Mrs.Dilanthy Thavakumar	Eastern University, Sri Lanka
44. Mr; A. L. M. Mujahid	Eastern University, Sri Lanka
45. Mr. M. B. Fowzul	Eastern University, Sri Lanka
46. Mr. S. Chandrakumar	Eastern University, Sri Lanka
47. Mr. V. Alagaratnam	Eastern University, Sri Lanka
48. Dr.C.Y.Thangarajah	Eastern University, Sri Lanka
49. Mr.K.Gnanaretnam	Open University of Sri Lanka
50. Rev. Fr. A. A. Navaretnam	Eastern University, Sri Lanka
51. Mrs. T. Sachithanantham	Eastern University, Sri Lanka
52. Mr.K.Mohanathasan	Eastern University, Sri Lanka
53. Dr.R.Sarveswara	University of Jaffna
54. Dr.Kalawathy Chandramohan	Open University of Sri Lanka
55. Mr. C. Sasitharan	Eastern University, Sri Lanka
56. Dr. R. Premkumar	Eastern University, Sri Lanka
57. Mr. A. Kanneraj	Eastern University, Sri Lanka
58. Dr.J.S.Rohan Savarimuttu	Eastern University, Sri Lanka
59. Mr. K. Ravichandran	Eastern University, Sri Lanka
60. Dr.T.Pratheepan	Uva Wellasa University
61. Mrs. M.Y.M. Suheera	South Eastern University of Sri Lanka
62. Mr.T.Selvamanoharan	University of Jaffna
63. Mrs. V. Selvanayagam	Eastern University, Sri Lanka
64. Mrs. N. Chenthurran	Eastern University, Sri Lanka
65. Dr. K. Shrikarunaakaran	Eastern University, Sri Lanka
66. Mrs. R. Thakshaayini	Eastern University, Sri Lanka
67. Mrs. G. Luxmykanthan	Eastern University, Sri Lanka
68. Mr. N. Vaman	Eastern University, Sri Lanka
69. Mr. N. Subaraj	South Eastern University of Sri Lanka
70. Mrs.Selvakumari Sivalingam	South Eastern University of Sri Lanka
71. Mr. K. Gukan	Eastern University, Sri Lanka
72. Mr.K.Ketheeswaran	Open University of Sri Lanka
73. Mrs. Vijitha Thivakaran	Eastern University, Sri Lanka
74. Mr. M. Prahasan	Eastern University, Sri Lanka
75. Dr.T.Vivanantharasa	Eastern University, Sri Lanka.
76. Dr. N. Pushparajah	Eastern University, Sri Lanka

MESSAGE FROM THE VICE CHANCELLOR

It is with great pleasure and pride I am forwarding this message on the occasion of the Annual Research Session – ARS 2022, organised by the Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka under the theme of **"Exploring Contemporary Sri Lankan issues and Redesigning the Future"** which is timely and relevant theme of great consequence will be held on 1st November, 2022.

The Annual Research Session publishes the results of multidisciplinary research covering areas of Contemporary Issues: Governance and Development, Contemporary Challenges in Education, Contemporary Social Issues, Religions and Worship Traditions, History and Personalities, Geography and Environmental issues, Literature & Human Values, Philosophy and Values and Arts and Aesthetics.

Research is a process that, by applying the method of scientific attempts to obtain information relevant and reliable (credible and credit), to understand, verify, correct or apply knowledge. Research is formalized curiosity which creates new knowledge. Therefore, for researchers, it is very useful to frequently attend and present their recent research papers at conferences and seminars, and receive feedback and comments.

I believe that the theme of the ARS 2022 has led the research community in particular within the University to bring forward with technological advancements to overcome the contemporary Sri Lankan issues and redesigning the future. It can be expected that ARS 2022 will provide a platform for all the academic community and other graduates to present their valuable research findings and interact with experts in the sector, peers, and prospective stakeholders towards the contemporary Sri Lankan issues. Also, this will provide a good opportunity to enhance the research culture within the University.

I take this opportunity to thank and congratulate each one of the participants for attending this ARS and the Keynote speaker for sharing their expertise and experience. I sincerely hope that your research findings and dissemination of research knowledge will help us to positively contribute towards the development of Sri Lankan contemporary issues and redesigning the future.

Finally, I take this opportunity to appreciate all dedicated members of the organising committee, academic staff, sponsors and volunteers for their untiring support and contribution for succeeding this ARS 2022.

Prof. V. Kanagasingam,
Vice Chancellor,
Eastern University, Sri Lanka,
01.11.2022.

FROM THE DESK OF THE CHAIR …

"If you would not be forgotten, as soon as you are dead and rotten, either write things worth reading, or do things worth writing." – Benjamin Franklin

This is true in all the cases, and it is more relevant and effective in the case of the theme of this Annual Research Conference – 2022 of the Faculty of Arts and Culture of the Eastern University, Sri Lanka. The theme is most relevant to the present Sri Lankan context, "Exploring Contemporary Sri Lankan Issues and Redesigning the Future."

Every threat or challenge opens another door of opportunity in many ways, there is no doubt on this. This is what we call from ages as "necessity is the mother of invention." Once we discover the actual cause of the threat or challenge, the solution will be at our feet. Sri Lanka is now undergoing many threats and challenges in many fields, viz. livelihood, education, social setups, etc. in the name of economic crises. Though it is unfortunate to the Nation, whether we like it or not, this situation arrived. It is the time to find new avenues to overcome these challenges and find out new solutions in the form of experiences and research. It is the prime duty of the academia, though a student or a teacher. This conference paws ways to reach this target to reshape and redesign the country and I strongly trust that will help our Nation to come back from the present crises.

Faculty of Arts & Culture, EUSL has its long tradition of disseminating knowledge to the needy, especially to the wider community both across the nation and the globe. One such dissemination is conducting research conferences with the support of the students and staff of the Faculty. Thus, this conference, focusing solutions and suggestions to the present Sri Lankan scenario.

This conference would be a failure, if the organizing team is weak. But I am unable to find mistakes even at micro level, since the organizing team is so strong, energetic, lively, and firm. I congratulate the Coordinator, Secretary, and every member of the organizing committee of this ARS-FAC 2022.

I extend my thanks and appreciation to the EUSL administration, particularly the Vice Chancellor, Bursar, and the Registrar who constantly supported for the successful conduction

of this Annual Research Secession even during this severe economic crisis which directly affects the state universities.

I then extend my sincere gratitude to the Senior Assistant Registrar and every staff of the Office of the Dean of Faculty of Arts & Culture for their constant support in this successful nature of this conference.

I thank each researcher, for, you are the base for this conference who whole heartedly gave your researches to this conference and accepted all the comments without any hesitation that the reviewers pointed out and made all necessary amendments on your writing part. And I sincerely thank all the reviewers who accepted our invitations to review the articles. Reviewing is not a simple process, I know it very well, but you took this task and did your assigned job without any hesitation and within the timeframe.

Finally, I wish all the best for the success of this Annual Research Conference 2022 of the Faculty of Arts & Culture which will definitely show many ways to come out from this present scenario of our great Nation.

Prof. J. Kennedy,
Dean,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka,
November 2022.

ஆய்வரங்க இணைப்பாளரின் செய்தி

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடம், மனிதப்பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் சார் ஆய்வுகளுக்கு முன்னுரிமையும் முக்கியத்துவமும் அளிக்கின்ற அதேவேளை மாற்று ஆய்வுப் புலங்களையும் ஊக்குவிக்கின்றது. இவ்வகையில் கலை கலாசார பீடம் வருடாந்தம் ஆய்வு மாநாடு ஒன்றினை ஒழுங்கமைத்து நடாத்தி வருகின்றது. மேற்குறித்த புலங்களில் புலமைசார் ஆய்வாளர்களின் ஆய்வுக் கட்டுரைகளை மதிப்பீடு செய்து அவற்றினை அளிக்கை செய்வதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. அவற்றிலே விசேட கற்கை நெறியினை நிறைவு செய்கின்ற மாணவர்களின் வருங்கால ஆய்வு முயற்சிகளுக்கு வழிப்படுத்தலை முதன்மை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மாநாடு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

இன்றைய உலகில் நவீனமான சிந்தனைகளும் புதிய கண்டுபிடிப்புகளும் நாளுக்கு நாள் பல்கிப்பெருகிக் கொண்டு செல்வதனை அவதானிக்க முடிகின்றது. ஐரோப்பிய மற்றும் வளர்ச்சியடைந்த நாடுகளின் விஞ்ஞானத் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளுடன் போட்டி போட்டு முன்னேற்றமடையக் கூடிய சூழல் வளர்முக நாடுகளிடம் வறிதாகவே காணத்தக்கது. அரசியல், பொருளாதாரம், சமூக – சமய நல்லிணக்கம், மொழி, இலக்கியம், புவியியல் முதலிய இன்னோரன்ன துறைகளில் காணத்தக்க பின்னடைவுகள் அனைத்துப் புலங்களிலும் மிகுந்த தாக்கத்தினைச் செலுத்துகின்றன எனலாம். இவற்றினைக் கருத்திற்கொண்டே எமது ஆய்வு மாநாட்டின் தொனிப்பொருள் “ Exploring Contemporary Sri Lanka Issues And Redesigning The Future ” என வடிவமைக்கப்பட்டுள்ளமை கவனத்திற்குரியது.

இவ்வாய்வு மாநாட்டினை சிறப்பான வகையில் ஒழுங்கமைப்பதற்கு அனுமதியளித்த உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் அவர்களுக்கு முதற்கண் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் எமது பீடாதிபதி பேராசிரியர் ஜீ.கென்னடி அவர்களது பங்களிப்பு இம்மாநாட்டில் குறிப்பிடற்குரியது. மற்றும் ஆய்வு மாநாட்டிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலோசனை சபையினரும் எமது செயற்பாடுகளுக்கு பக்கபலமாக இருந்தமை கவனத்திற்கொள்ளத்தக்கது. எமது மாநாட்டின் இதழாசிரியர் திருமதி கௌரி லக்சுமிகாந்தன் செயலாளர் திரு.எம் எல். முஹமட் ஹில்பான் மற்றும் உறுப்பினர்களான திருமதி ஜெ.அன்ரன் அருள்ராஜ், திரு.கோ.குகன், திரு.மா.பிரகாசன், திருமதி.பி.இளங்கோ, திரு.வீ.சசிகரன் ஆகியோரின் காத்திரமான பங்களிப்பினாலேயே இம்மாநாடு குறித்த நாளில் இடம்பெறுகின்றமை முக்கிய அம்சமாகும். அத்துடன் எமது பீடத்தின் சிரேஸ்ட பதிவாளர், உதவி நிதியாளர், ஊழியர்கள் அனைவருக்கும் எமது மாநாட்டுக்குழுவின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலாநிதி. வ.குணபாலசிங்கம்,
வருடாந்த ஆய்வு மாநாட்டு இணைப்பாளர் - 2022,
கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

ABSTRACT OF KEYNOTE ADDRESS

ANNUAL RESEARCH SESSION-2022

இலங்கை உலகளாவிய தரப்படுத்தலில் குறைந்த வருமானமட்ட நாடு என தரமிறங்கியுள்ளது இதற்கான அவசியமென்ன?

இன்று இலங்கை மக்கள் அமைதி இழந்தவர்களாகவும் போகும் வழி வரைபடம் எதுவும் இல்லாதவர்களாகவும் பொருளாதாரப் பலமற்றவர்களாகவும் அடுத்தவேளை உணவுக்கும் எரிபொருளுக்கும் அடுத்தவரை நம்பியிருக்கும் துர்ப்பாக்கியநிலையில் இருப்பதையிட்டு வெட்கமும் கவலையுமடைகிறோம். இந்நிலையில் பல்வேறு நாடுகளிடமிருந்து வாங்கிய கடன் 51 பில்லியன் அமெரிக்க டொலரையும் அதன் வட்டியையும் திரும்பச் செலுத்தும் வழியறியாமல் இப்போதைக்கு திரும்பச் செலுத்தமாட்டோம் என்று 12-04-2022 அன்று அறிவித்தோம். இதுவே நாம் தரமிறங்க முதற் காரணமாகும். இலங்கையராகிய நாம் இன்று பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளோம். உலக நாடுகளே எங்களுக்கு உதவுங்கள் எம்மக்கள் உண்ண போதுமான உணவில்லை; குழந்தைகளுக்கு போதுமான உணவுமில்லை; போசாக்கான உணவுமில்லை; உணவுப் பாதுகாப்புமில்லை; நோய்வாய்பட்டவர்களுக்கு மருந்து வசதிகளுமில்லை; மக்கள் மூன்றுவேளை உணவும் உண்ணமுடியவில்லை; போக்குவரத்து வசதிகளுக்கு பெற்றோலியத்தைப் பெற போதுமான டொலரும் இல்லை; விவசாயத்துக்குத் தேவையான உள்ளீடுகளும் இல்லை; இளவயதினருக்கு போதிய கல்வி வசதியுமில்லை; ஏனைய உலக நாடுகளெல்லாம் தங்களை ஸ்திரப்படுத்தி முன்னேறிவரும் காலத்தில் எமது நாடு – -8% எதிர்க்கணிய வளர்ச்சிப்போக்கில் கீழ்நோக்கிச் செல்கிறது. இதனால் இலங்கையை நடுத்தர வருமானமட்டத்தில் இருந்து தரம் இறக்கி குறைவருமான மட்ட நாடு எனக் கருதப்படவேண்டுமென இன்றைய ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க அமைச்சரவையைக் கோரினார்.

பொருளாதார நிபுணர் உமேஸ்பொரமுதலி நடுத்தர வருமானம் கொண்ட நாடென உலக வங்கி வழங்கிய அந்தஸ்த்தை அரசாங்கம் மாற்றமுடியாது. ஆனால் அவ்வாறான மாற்றத்தைக்கோர முடியும் என்றார்.

இந்தநிலையில் சந்தை நிபந்தனைளின் அடிப்படையில் கடன் தகுதியினை சலுகை நிதி தேவை மற்றும் இலகுகடன் சேவை வசதி ஆகியவற்றின் அடிப்படையில் அரசாங்கம் உலகவங்கி குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கு வழங்கப்படும் கடன்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளது. இக்கோரிக்கை தற்போது பரிசீலனையில் உள்ளதாக உலகவங்கி தெரிவித்துள்ளது.

ஒரு நாட்டின் கடன் தகுதியினை கருத்திற் கொண்டு உலகவங்கி கடன் வழங்குகிறது. எனினும் இக்கடன்கள் வழங்கப்பட்டால் இக்கடனின் இறுதிசெயல்திறன் அளவீட்டுத் தரவைப் பெற திட்டத்தின் முன்னேற்றம், விளைவுகள், பயனாளிகள் மீதான தாக்கங்கள் ஆகியவை முழுவதும்

கண்காணிக்கப்படுகிறது. அதன் பின்னர் இறுதி முடிவுகள் எதிர்பார்த்த முடிவுகளுடன் ஒப்பிடப்படுகின்றது.

உலக வங்கி தனிநபர் மொத்த தேசிய வருமானத்தைப் பொறுத்து நாடுகளை பல்வேறு வருமானக் குழுக்களாக வகைப்படுத்துகிறது. குறைந்த வருமானம் கொண்ட நாடு என்ற நிலைக்கு தள்ளப்பட்ட இலங்கையின் தனிநபர் வருமானம் 1085 அமெரிக்க டொலர்களாக குறையவேண்டும். பொருளியலாளர்களின் மதிப்பீட்டில் இது சாத்தியமற்றது. இலங்கையைத் தரமிறக்கினால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து மக்கள் பட்டினியால் வாடநேரும் என்று பொருளியல் விமர்சகரான சாயுதம்சிங் தெரிவித்துள்ளார்.

உலக வங்கியின் தரப்படுத்தலின்படி குறைந்த வருமான நாட்டின் தனிநபர் வருமானம், 1085 டொலர் மற்றும் அதைவிடக் குறைவான வருமானம் குறைவருமான நாடென்றும், குறைந்த நடுத்தர வருமானம் கொண்ட நாட்டின் தனிநபர் வருமானம் 1086 முதல் 4255 டொலர் என்றும், உயர் நடுத்தர தனிநபர் வருமானம் கொண்ட நாடு 4256 முதல் 13225 டொலர் கொண்டதாகவும், உயர் வருமானம் கொண்ட நாட்டில் தனிநபர் வருமானம் 13226 டொலரும் அதற்கு மேற்பட்டதாக இருக்கும் என வகைப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இலங்கை குறைந்த வருமானமட்ட நாடு என்ற நிலைக்குத் தரம் இறங்குவதற்கு யார் காரணம்? அரசாங்கமும் அரசியல்வாதிகளும் தான் என்றால், இதிலிருந்து மீட்டெடுக்க திட்டமிடவேண்டியவர்களும் அவர்களே. அவர்களின் ஊழல் செயற்பாடும் முறையற்ற நிர்வாகமும் முறையற்ற நிதி முகாமைத்துவமுமே காரணமென நெருக்கடிக் கால ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இலங்கை அன்னியராட்சியிலிருந்து விடுபட்ட பின்னர் சுதந்திர இலங்கைக்கான புதிய பொருளாதாரக் கட்டமைப்பை ஏன் உருவாக்கவில்லை? அன்றைய அரசியல்வாதிகள் அரசியல் அதிகாரத்தில் மோகங் கொண்டிருந்தனர். புதிய இலங்கைக்கான பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்காது பிரித்தானியர் விட்டுச்சென்றதை தொடர்வதாகவே இருந்தனர். இதுவே இன்றைய நெருக்கடிக்கு தோற்றுவாயாக அமைந்தது. பிரித்தானியர் ஆட்சியிலிருந்து விடுபட்ட இந்தியா சுதந்திரமடைந்ததோடு தூர நோக்கோடு தமக்கென ஒன்பது ஐந்தாண்டு பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தை முன்னிறுத்தி பொருளாதாரத்தை முன்கொண்டுசென்றது. இலங்கை பெருந்தோட்ட பொருளாதாரத்தை மாத்திரம் நம்பி பொருளாதாரச் செயற்பாடுகளை தொடர்ந்தது. இலங்கை தன்னை மாற்றாமல் தொடர்ந்தும் உலகப் பொருளாதாரத்தில் தங்கியிருக்கும் நாடாக இருந்தது. தனது வளத்தை மையமாகக் கொண்ட சுயசார்புப் பொருளாதாரத்திற்குத் தன்னைத் தயார்ப்படுத்தவில்லை. பெருந்தோட்ட ஏற்றுமதிப் பொருளாதாரமாக தொடர்ந்தது. இதனால் எப்போதும் வெளிநாட்டு அதிர்வுகளை எதிர்கொள்ளவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டது. இன்று குறை வருமானமட்ட நாடு என அறிவிக்கும்படி அமைச்சரவைக்கு பிரேரணை சமர்பிக்குமளவிற்கு உலகளாவியரீதியில் தரம் தாழ்த்திக்கொண்டுள்ளது. இதற்கான பின்னணியை நோக்குவது அவசியமாக உள்ளது. இன்று ஏற்பட்டுள்ள சமூக, அரசியல், பொருளாதார நெருக்கடியும், அதன்வழி வந்த இளைஞர் அமைதியின்மைக்கும் அரசாங்கத்தின் பிரதம மந்திரியும் மேன்மைதங்கிய ஜனாதிபதியும் பதவி விலகுமளவிற்கு ஏற்பட்ட நெருக்கடி முன்னைய கால நெருக்கடிகளின் திரண்ட விளைவாகும். இந்நிலையில் வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும்போது இலங்கைப் பொருளாதாரத்தை

வழிப்படுத்திய அரசியல் மற்றும் அரசியல்வாதிகளின் வகிபாகம்பற்றி நுணுக்கமாக ஆராய்வது இச்சந்தர்ப்பத்தில் அவசியமாக உள்ளது. ஆங்கிலேயர் ஆட்சியின்பின் ஜனநாயக அரசாங்கத்தை கையகப்படுத்திய நான்கு பிரபுத்துவ குடும்பங்கள் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு வகைசொல்ல வேண்டியவர்களாக உள்ளனர் என பாராளுமன்றத்தின் மக்கள் பிரதிநிதி டலஸ் அழகப்பெரும சுட்டிக்காட்டினார்.

1 D.S சேனநாயக்க குடும்ப ஆட்சி

2 பண்டாரநாயக்க குடும்ப ஆட்சி

3 ஜெயவர்த்தன குடும்ப ஆட்சி

4 ராஜபக்ச குடும்ப ஆட்சி

இன்றுள்ள அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிகளை தீர்க்க அரசியல் பொருளாதார சமூக மாற்றம் ஒன்று அவசியம் என்பதை முதன்மைப்படுத்தி எல்லாக் கட்டமைப்பும் முறைமைகளும் மாற்றமுறுதல் வேண்டுமென்ற கோரிக்கை மாற்றத்தை முன்னிறுத்தும் மக்களிடமிருந்தும், எதிர்கால சந்ததியை பிரதிநித்துவப்படுத்தும் இளைஞர்களிடமிருந்தும் இடையறாது எழுந்துள்ளது

பேராசிரியர் வி பி சிவநாதன்,
ஓய்வுநிலைப் பேராசிரியர்,
பொருளியற்றுறை,
கலைப் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

உள்ளடக்கம்

Contemporary Issues: Governance and Development

1. தொழிலாளர் சம்பளத்தில் கல்வி மற்றும் அனுபவத்தின் விளைவு (கொழும்புத்துறை J/62 கிராம சேவகர் பிரிவிற்கு உட்பட்டது) 01
குணசாயினி மகேந்திரன்

2. The Green Tourism Role in the Hospitality Industry: A Systematic Literature Review 16
Vinoja Sridharan, Kamalakumari Karunaanithy

3. Women's Informal Employment In Sri Lanka: An Empirical Analysis 33
Navaratnam Balamurali

4. கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமை முகாமைத்துவ ஜனாதிபதி செயலணியும் அது மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் பேசும் மக்களின் அடையாளத்தில் ஏற்படுத்திய தாக்கங்களும்: ஓர் விமர்சன நோக்கு 51
மாதங்கி உதயகுமார், அ. கண்ணேராஜ்

5. இலங்கையின் முஸ்லிம் தனியார் சட்டமும் அதன் அண்மைக்கால போக்கும்: விஷேட ஆய்வு நிந்தவூர் காதி நீதிமன்றம் 63
தாஜுதீன் முஹம்மது முபாஸ், செ.சிவநாயகம்

6. முரண்பாடுகளை தீர்ப்பதில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் வகிபங்கும் தெரிவு செய்யப்பட்ட நாடுகளில் அதன் நடைமுறையும்: ஓர் இஸ்லாமிய சட்டவியல் நோக்கு 75
அ.ஜ.முஹம்மட் அஸ்லம், முஹம்மது ஹனீபா முஹம்மது நைறூஸ், இக்பால் சௌஜான்

7. அடிப்படை உரிமை மீறல்கள் - மலையக சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு 91
புளோரிடா சிமியோன்

Contemporary Challenges in Education

8. இடர்கால சூழலில் பொருத்தமான மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதில் அதிபர்கள் எதிர்கொள்ளும் முகாமைத்துவச் சவால்கள் 98
கனகசுந்தரம் குவேந்திரா, செ.அருள்மொழி

9. Covid – 19 காலப்பகுதியில் விசேடதேவையுடைய மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளுகின்ற சவால்கள் 111
வே.லமினா, ரா.தக்ஷாயினி

10. க.பொ.த (சா/த) பரீட்சையில் மாணவர்களின் ஆங்கிலப் பாட அடைவில் வீட்டுச் சூழலின் பங்களிப்பு 125
டி. விதுக்ஷனா

11. பாடசாலை நூலகங்களின் வினைத்திறன் செயற்பாடுகள் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றலில் ஏற்படுத்தும் செல்வாக்கு (ஏறாவூர் கோட்டப் பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் அளவை நிலை ஆய்வு) 137
முகமட் உசனார் நவ்பர்காந்
12. நிகழ்நிலைக் கற்பித்தலினால் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள் 149
சங்கர் மீருஜா

History and Personalities

13. திருகோணமலை -மட்டக்களப்பு இயேசு சபை ஆயர்களும் அவர்கள் சேவைக் காலத்தில் எதிர்நோக்கிய சவால்களும் 161
தனுகா யோகநாதன், நிலாந்தினி செந்தூரன்
14. நவீன வானியல் துறையில் ஈழத் தமிழரின் முதல் வழிகாட்டி பேராசிரியர் அலன் ஆபிரகாம் 173
ரமேஷ் பென் டில்கரன்
15. நாயக்க மன்னர்களில் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் - ஓர் வரலாற்று ஆய்வு 184
தனுஷா மோகனதாசன், நிலாந்தினி செந்தூரன்
16. மந்துவில் கிராமம் - ஒரு வரலாற்று நோக்கு 195
கமலநாதன் நிரோஜினி, சி.கி.சிவகணேசன்
17. ஐரோப்பியர் காலக் கல்லறைகளும் கல்வெட்டுக்களும் - ஒரு ஆவணப்படுத்தல் (ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தை மையப்படுத்தியது). 209
சந்தியோமயர் சதீஸ்குமார், சி.கி.சிவகணேசன்
18. மட்டக்களப்பு சைவத் தமிழ் அறிஞர் வித்துவான் ச.பூபாலபிள்ளை ஓர் ஆய்வு 218
ருஜானி நிமலேஸ்வரன்

Contemporary Social Issues

19. கொவிட்-19 பெருந்தொற்றுநோயின் போதான குடும்ப வன்முறை மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருளாதாரக் காரணிகள்: யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வரணிக் கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு 226
ஞா.சார்த்திகா
20. கோறளைப்பற்று பிரதேச செயலகப்பிரிவில் வாழ்கின்ற மாற்றுத்திறனாளர்களின் சமூக ஓரங்கட்டப்படுதலை மையப்படுத்திய ஓர் சமூகவியல் ஆய்வு 239
துரைராசா யுஜந்தன்
21. நவீனமயமாதல் செயன்முறையும் சுதேசிய பழங்குடிகளின் வாழ்வியல் மாற்றங்களும் - அளிக்கம்பை மற்றும் காஞ்சிரங்குடா பிரதேசத்தை மையப்படுத்திய சமூக மானிடவியல் ஒப்பீட்டாய்வு 254
சு.சதுர்சிகா, கு.விக்னேஸ்வரன்

22. இளவயதுத் திருமணத்திற்கான காரணங்களும், அதன் தாக்கங்களும்: இலங்கையின் கிழக்கு மாகாண முஸ்லிம்களை மையப்படுத்திய ஒரு சமூகவியல் ஆய்வு 266
இக்பால் சௌஜான், ராஸிக் அஹ்மட் சர்ஜுன், கன்சூல் கரீம் பாத்திமா நஸ்மா

23. சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் தொழில்சார் சுகாதார ஆபத்துக்கள்: வவுனியா மாவட்டத்தின் நகரசபை மற்றும் பிரதேச சபைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு மருத்துவ சமூகவியல் ஆய்வு 286
பா.பிரசாந்தி, சி.சிவகாந்தன்

24. மீனவர்களின் தொழில்சார் ஆரோக்கியம், வாழ்க்கைப்பாணி மற்றும் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தை: குச்சவெளி பிரதேச செயலகத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு 399
சா.மதுஷா, சி.சிவகாந்தன்

Arts and Aesthetics

25. ஆற்றுகைப் பண்பும் காட்சி நிலையும்: பாரதியின் குயில் பாட்டினை மையமாகக் கொண்ட ஓர் ஆய்வு 310
கு.ரவிச்சந்திரன், கா.அற்புதன்

26. தமிழர் பாரம்பரிய தோல்வாத்தியங்களான மத்தளம், பறை, உடுக்கை உருவாக்க முறைமையும் அதன் தொழிநுட்பங்களும் - ஓர் ஆய்வு 319
கு.ரவிச்சந்திரன், சு.சஞ்சீபன்

27. சி.மௌனகுருவின் நாடகங்களிலும் ஆற்றுகைகளிலும் பௌராணிகத் தொன்மங்கள் 334
செ.வெவோகா, சாந்தி கேசவன்

28. Cooking as a public performance - A study based on “Ezhuththani” play 346
R.Sulaxshana

29. வவுனியா பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் பற்றிக் (Batik) உற்பத்தியினை பயிலுவதன் ஊடாக அதன் அழகியல் வடிவமைப்புக்களில் தமிழர் மரபுசார் வடிவமைப்புக்களை வெளிப்படுத்தல் 352
சதாசிவம் மகிலினி, துஷ்யந்தி சத்தியஜித்

Religions and Worship Traditions

30. பெரியதம்பிரான் சடங்காற்றுகையில் ஏற்பட்ட மாற்றங்கள்: மட்டக்களப்பு ஏறாவூர்ப் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு 367
சு.சந்திரகுமார், கு.மதுசாந்

31. இந்துப் பாரம்பரியத்தில் ஓலைச்சுவடி - ஆரையம்பதி பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு 380
வரதராசா வஷ்மியா, சாந்தி கேசவன்

32. கதிரவெளி வதனமார் வழிபாட்டு முறைகளும், சமூக வழமைகளும் 391
உ. ஜீவதர்சன்

33. கதிரவெளிப் பெரியசுவாமி கோயில் வழிபாட்டு மரபுகளும், மாற்றங்களும் 404
அ.தனோஜன்
34. பத்தாசிசார் வழிபாட்டுப் பாடல்கள் பிரதிபலிக்கும் இந்து சமயப் பண்பாட்டம்சங்கள் 417
கிருபைரெத்தினம் சர்வேஸ்வரன்
35. மட்டக்களப்பு இந்துக்களின் வழிபாட்டில் குலக்குறியம் 436
கோ.ஆரணி, ந.சுபராஜ்

Geography and Environmental issues

36. Discourse Study Conducted on Illegal Sand Mining in Sri Lanka 450
Kaushalya. G. N, Liyanage. D. L. N. P, Jayawardene. K. J. A. C. M
37. பஸ்பாகே கோரளை பிரதேச செயலகப் பிரிவில் நிலச்சரிவு அனர்த்தம்: ஓர் இடரீதியான நோக்கு 461
டேனியல் காமதேனு கிறிஸ்டினா, செ.வசந்தகுமாரி
38. கினிகத்தேனை கிராம சேவகர் பிரிவு எதிர்நோக்கி வரும் சூழலியல் பிரச்சினைகள் 479
ஆ.மோகனதர்ஷினி
39. வெஞ்சர் கிராம நிலதாரி பிரிவில் காணப்படும் சூழலியல் பிரச்சினைகளும் அவற்றை இழிவளவாக்குவதற்கான வழிமுறைகளும் 495
தேவசகாயம் என்டன் சகாயராணி

Literature & Human Values

40. நந்தினிசேவியரது சிறுகதைகள் : உள்ளடக்கம், உருவம் பற்றிய ஆய்வு 508
அரியநாயகம் சிவரூபினி, நதிரா மரியசந்தனம்
41. சடங்குப் பாடல்கள் வெளிப்படுத்தும் இலக்கியச் சிறப்புக்கள் - ஆரையம்பதி பிரதேசத்தில் பயில்நிலையிலுள்ள சடங்குப் பாடல்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு 523
கஸ்தூரி சர்வேஸ்வரன், சி.சந்திரசேகரம்
42. சைவசித்தாந்த சிந்தனைகள் தொடர்பான ஆய்வுகள் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆய்வரங்க கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டது. 535
தி.குறிஞ்சி
43. சைவ சித்தாந்தம் மற்றும் கிறிஸ்தவ வேதாகமம் கூறும் ஆன்மா எனும் எண்ணக்கரு: ஓர் ஒப்பீட்டு ஆய்வு 547
சித்திரவேல் மேரி ஆஞ்சலா, சோ.ஜெகநாதன்

44. இலங்கை முஸ்லிம்களின் சமய, சமூக எழுச்சிக்கு மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் ஆற்றிய பங்களிப்புக்கள் - ஒரு வரலாற்றுப் பார்வை 557
ஏ. ஐ.ஃபர் ஹுஸைன்

Philosophy and Values

45. பெண் ஏன் அடிமையானாள்?, இரண்டாம் பாலினம் (The Second Sex) ஆகிய நூல்களின் நோக்கில் பெண் விடுதலை - ஒரு பெண்ணிய மெய்யியல் ஒப்பீட்டாய்வு 566
சந்திரபோஸ் பபிதாதர்ஷி, இரத்தினசபாபதி பிரேம்குமார்

46. திருக்குறளிலும் நாலடியாரிலும் நட்பு எனும் எண்ணக்கரு – ஒரு தத்துவார்த்த ஒப்பீட்டு ஆய்வு 581
அ.அணேஜா

47. சமூக சீர்திருத்த திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற மாற்றீட்டுத் தண்டனை ஏற்பாட்டினால் சிறு குற்றமிழைத்தோர் எதிர்நோக்கும் சமூகத்தாக்கம் - மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பிரதேசங்களை மையப்படுத்திய ஓர் ஒழுக்கவியல் ரீதியான ஆய்வு 594
சபேசன் சஜிதா, முனியாண்டி ரவி

48. குடும்ப பிரச்சினைகளும் தீர்வுகளும் - ஒரு குடும்ப உளவளத்துணை நோக்கு களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகப்பிரிவை மையப்படுத்திய ஆய்வு 608
சுரேஸ்குமார் யுகானா, சோ.ஜெகநாதன்

49. கணவனை இழந்த பெண்களின் வாழ்வியல் பிரச்சினைகள்- உளவியல் நோக்கு மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவை மைப்படுத்திய ஆய்வு 623
பவளசிங்கம் சசித்தா

தொழிலாளர் சம்பளத்தில் கல்வி மற்றும் அனுபவத்தின் விளைவு (கொழும்புத்துறை J/62 கிராம சேவகர் பிரிவிற்கு உட்பட்டது)

குணசாயினி மகேந்திரன்
பொருளியற்றுறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
sayinimahendran@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

நன்கு கல்விகற்ற மற்றும் விசேட நுட்பத்தினை கொண்ட சனத்தொகையே அறிவினை திரட்ட, பரப்ப, பயன்படுத்த, உருவாக்க மிகவும் அவசியமானதாகக் கருதப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் கல்வியானது பாடநூலை மையமாகக் கொண்டிருக்கும் நிலையில் மனித மூலதன உருவாக்கமானது அவர்களது சம்பளத்தினை அதிகரிக்கின்றதா? என்பது கேள்விக்குரியாகும். இதனை கருத்திற் கொண்டு கொழும்புத்துறை J/62 கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட தொழில்புரியும் நபர்களின் சம்பளத்தின் மீது மனித மூலதனத்தின் தாக்கத்தினை மையப்படுத்திய இவ்வாய்வினூடாக மனித மூலதனத்தின் கூறுகளில் ஒன்றான கல்வி தொழிலாளர் சம்பளத்தில் எதிர்க்கணிய தாக்கத்தினையும் அனுபவமானது நேர்க்கணியத் தாக்கத்தினையும் ஏற்படுத்துவதனைக் காணமுடிகின்றது. சம்பளத்தின் மீது கல்வி மற்றும் அனுபவத்தின் தாக்கம் தொடர்பாக ஆய்வு செய்வதற்கு 104 தொழில்புரியும் நபர்கள் படைமுறை மாதிரி எடுத்தலின் அடிப்படையில் மாதிரியாக தெரிவு செய்யப்பட்டு முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களில் இருந்து தரவுகள் திரட்டப்பட்டு தரவுகளானவை இணைவுக்குணகப் பகுப்பாய்வு, பிற்செலவு பகுப்பாய்வு, சிதறல் வரைபடம், விபரணப் பகுப்பாய்வு போன்றவற்றின் மூலம் Ms Excel, SPSS (சமூக விஞ்ஞானத்திற்கான புள்ளிவிபரவியல் பொதி) கணனி மென்பொருளினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. பிற்செலவு பகுப்பாய்வின் மூலம் பெறப்பட்ட முடிவுகளின்படி ஆய்வுப் பிரதேசத்தில் தொழிலாளர்களுடைய கல்விகற்ற ஆண்டுகள் அவர்களுடைய சம்பளத்துடன் எதிர்க்கணிய தொடர்பினை கொண்டிருக்கின்றது. அதாவது 1% பொருண்மை மட்டத்தில் கல்வி கற்ற ஆண்டானது ஒரு ஆண்டினால் அதிகரிக்கும்போது சம்பளமானது 1670.1 ரூபாவால் குறைவடைகின்றது. அவர்களது அனுபவம் சம்பளத்துடன் நேர்க்கணியத் தொடர்பினை கொண்டுள்ளது. அதாவது 1% பொருண்மை மட்டத்தில். அனுபவ ஆண்டானது ஒரு ஆண்டினால் அதிகரிக்கும்போது சம்பளமானது 421.4 ரூபாவால் அதிகரிக்கின்றது. எனவே கல்வி கற்ற ஆண்டுகளானது மனித மூலதனத்தினை விருத்தி செய்து அவர்களது சம்பளத்தினை அதிகரிப்பதற்குப் பதிலாக குறைந்த கல்வியாண்டை கொண்டவர்கள் அதிக சம்பளத்தினை பெற வழிவகுக்கின்றமையானது அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகம் வரையில் பாடப்புத்தக அணுகுமுறைக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்காது செயல்முறைக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கி மாணவர்களது புதிய சிந்தனை மற்றும் அறிவுருவாக்கம் போன்றவற்றினை அதிகரிப்பதற்கு தூண்டுதல் வழங்காமையே இதற்கு காரணமாகும். இலங்கையின் தொழிற்சந்தை தேவையை சந்திப்பதற்கான உயர் கல்வியானது சமகால தொழில்நுட்ப மாற்றங்களை உள்வாங்கக்கூடிய வகையில் தரமுயர்த்தப்படுவதன் மூலம் அவர்களின் எதிர்கால சம்பளத்தினை அதிகரிக்க செய்து நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளிடையே மீண்டெழும் தன்மையை கட்டியெழுப்பி பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய வகையில் மனித மூலதன விருத்தியானது காணப்பட வேண்டும் என்பதனை கவனத்திற் கொண்டு செயற்பட வேண்டும்.

திறவுச் சொற்கள்: கல்வி, சம்பளம், மனித மூலதனம், அனுபவம், கொழும்புத்துறை

அறிமுகம்

மனித மூலதனம் என்பது ஒரு ஊழியரிடம் இருக்கும் விசேட திறன், ஆற்றல் ஆகும். மிகுதியாக பயிற்சியினை பெற்ற ஊழியப்படையே ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகான இன்றியமையாதவொரு உள்ளீடாகும் என்ற வகையில் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு மனித மூலதனமானது இன்றியமையாததாகக் காணப்படுகின்றது.

> "மனித மூலதன வளர்ச்சி மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை உந்துகின்றது எனில் வேகமாக வளரும் பொருளாதாரங்கள் வேகமாக வளர்ச்சியடையும். மனித மூலதனத்தைக் கொண்டிருக்கும் (William Easterly, page 73 - 84)"

ஒரு நாட்டில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதில் அந்நாட்டின் கல்வி மட்டத்தின் முக்கியத்துவம் பல்வேறு ஆய்வுகள் மூலம் ஐயம் திரிபுபட நிரூபிக்கப்பட்டிருக்கிறது. பொருளாதார அபிவிருத்தியில் உயர் சாதனைகளைப் புரிந்துள்ள நாடுகளில் அவற்றின் பொருளாதார செயலாற்றத்தை நிர்ணயித்த ஒரே முக்கிய காரணியாக அவற்றின் உயர்கல்வி மட்டுமே அடையாளங் காணப்பட்டிருக்கிறது. நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் பெறும்

நாடுகளிலும் சார்பளவில் உயர்ந்த கல்வி மட்டங்களைக் கொண்டுள்ள நாடுகள் சிறப்பான நலன்களை எய்தியுள்ளன. குறிப்பாக பாடசாலைக்கல்வி மட்டத்திற்கும் உயர்ந்த வருவாய் மட்டங்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உள்ளமை கண்டறியப்பட்டிருக்கிறது.

கிழக்காசியாவின் துரித வளர்ச்சியடைந்த நாடுகள் பலவற்றில் அவற்றின் வெற்றிக்கு அந்நாடுகளின் கல்விக் கொள்கைகளும் அவற்றின் மூலம் கட்டியெழுப்பப்பட்ட மனித மூலதனத் திரட்சியுமே முக்கிய காரணங்களாக அமைந்தன. ஜப்பான், கொரியா, சிங்கப்பூர் ஆகியன ஆழமானதும் ஊடுருவல் மிக்கதுமான கல்விச் சீர்திருத்தக் கொள்கைகளை அமுல்படுத்தின. அதேவேளை சீனாவும் வியட்நாமும் பின்வந்த காலங்களில் அதுபோன்ற கொள்கைகளை நடைமுறைப்படுத்தி அவற்றின் நன்மைகளை தற்போது அறுவடை செய்து கொண்டிருக்கின்றன.இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் கல்வி மீது மேற்கொள்ளப்பட்ட செலவீடு மற்றும் கல்வி கற்ற ஆண்டுகளின் எண்ணிக்கை அவற்றின் பொருளாதார வளர்ச்சியுடன் நேர்த்தொடர்பினைக் கொண்டிருக்கின்ற போதிலும் நடைமுறையில் தொழிலாளர் சம்பளத்தினை தீர்மானிப்பதில் ஒரு சிறந்த காரணியாக அமையவில்லை. எனவே மனித மூலதன அபிவிருத்திக்கென செலவிடப்பட்ட பெருமளவான நிதி சிறந்த மனித மூலதனத்தினை உருவாக்குவதன் ஊடாக பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கத்தவறிவிட்டதென்றே கூற வேண்டும். இதற்கு முக்கிய காரணமாக நாட்டில் உருவாக்கப்பட்ட மனித வளம் தொழிற்றுறைக்கு ஏற்ற வளமாக இல்லாமையே முக்கிய குறைபாடாகும்.

பல குறைபாடுகள் காணப்படும் நிலையில் கிழக்காசிய நாடுகளின் அனுபவங்களைப் பாடமாகக் கற்றேனும் அரசாங்கத்தால் இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும். கல்விக்கான செலவு மனித மூலதனத்தை உருவாக்குவதற்கான ஒரு செலவாகக் கருதப்படல் வேண்டும். அதேவேளை கல்வித்துறையில் முறையான சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் கல்வி மீது மேற்கொள்ளப்பட்ட செலவீடு மற்றும் கல்வி கற்ற ஆண்டுகளின் எண்ணிக்கை அவற்றின் பொருளாதார வளர்ச்சியுடன் நேர்த்தொடர்பினைக் கொண்டிருக்கின்ற போதிலும் நடைமுறையில் தொழிலாளர் சம்பளத்தினை தீர்மானிப்பதில் ஒரு சிறந்த காரணியாக அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயம் ஆகும்.

ஆய்வு வினா

இந்த ஆய்வினுடைய ஆய்வு வினாக்களாக பின்வருவன காணப்படுகின்றன.

1. ஒருவருடைய கல்வி தகைமை அதிகரிக்கின்ற போது அவருடைய சம்பளம் அதிகரிக்கின்றதா?
2. ஒருவருடைய அனுபவம் அதிகரிக்கும் போது அவருடைய சம்பளம் அதிகரிக்கின்றதா?

ஆய்வுப் பிரச்சினை

அபிவிருத்தியடைந்துவரும் நாடான இலங்கையில் மனித மூலதன அபிவிருத்திக்கு பல மில்லியன் ரூபா வருடா வருடம் செலவு செய்யப்படுகின்றது. இவ்வாறு செலவு செய்யப்பட்டு

உருவாக்கப்படும் மனித மூலதன அபிவிருத்தி இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக அபிவிருத்திக்கு பங்காற்றியுள்ளதா? அல்லது இல்லையா? என்பதுடன் அது தொழிலாளர்களின் சம்பளத்தினை தீர்மானிப்பதில் சிறந்த காரணியாக உள்ளதா என்பதும் ஆய்வுக்குரிய விடயமாக காணப்படுகின்றது.

பௌதீக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண்ணில் குறிப்பாக கல்வி அறிவில் இலங்கை ஜப்பானை நெருங்கிவிட்டதாகப் பேசப்படுகின்றது. அவ்வாறெனில் ஜப்பானில் கல்வியை பூர்த்தி செய்து வெளியேறும் ஒரு மனித வளம் ஜப்பானின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி பங்காற்றும் அளவிற்கு இலங்கையில் கல்வியை பூர்த்தி செய்து வெளியேறும் ஒரு மனிதவளம் இலங்கையின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி பங்காற்றியுள்ளதா அல்லது புள்ளிவிபர ரீதியாக இலங்கை ஜப்பானின் கல்வி அறிவை எட்டியிருக்கின்ற போதிலும் தர ரீதியில் அல்லது உற்பத்தி திறனில் இலங்கை ஜப்பானுக்கு கீழ் நிலையில் உள்ளதா என்பது ஆய்வுக்குரிய விடயமாக காணப்படுகின்றது. இலங்கையில் மனித மூலதன அபிவிருத்தி என்பது இன்றியமையாத ஒன்று என்ற வகையில் இது ஓர் ஆய்வு விடயமாகும்.

கொழும்புத்துறைப் பிரதேசத்தில், பொருளாதார அபிவிருத்திக்கு தேவையான பொருத்தமான பயிற்சிகளைப் பெற்ற மனித வளத்தின் பற்றாக்குறை மற்றும் நூற்கல்வி பயின்று வேலையில் அமர்த்த முடியாதவர்கள் உள்ளமை அத்துடன் பாடசாலை மற்றும் பல்கலைக்கல்வியின் பாட ஏற்பாட்டின் பொருத்தப்பாடின்மை, செயல்முறைக்கல்வியின் பற்றாக்குறை போன்றவற்றினால் மனித மூலதன அபிவிருத்தியானது குறைபாடாக காணப்படுகின்றமை போன்ற பிரச்சினைகள் காணப்படுகின்றன என்ற வகையில் இது ஓர் ஆய்வு விடயமாகும்.

ஆய்வு நோக்கம்

பிரதான நோக்கம்

தொழிலாளர் சம்பளத்தில் கல்வித் தகைமை ஏற்படுத்தக்கூடிய விளைவை ஆராய்வது இதன் நோக்கமாகும்.

துணை நோக்கம்

மனித மூலதனத்தின் கூறுகளில் ஒன்றான அனுபவம் தொழிலாளர் ஒருவருடைய சம்பளத்தில் ஏற்படுத்தக்கூடிய விளைவை ஆராய்தல்.

முன்னைய ஆய்வுகளின் மீளாய்வு

Scott A. Wolla & Jessica sullivan (2017) ஆகியோரினால் அமெரிக்காவின் இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாக வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது விவரண புள்ளிவிபரவியல் முறை மற்றும் இணைவுக்குணக முறை போன்றன பயன்படுத்தப்பட்டு பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கல்விநிலை மற்றும் மக்கள் கொண்டுள்ள செல்வம் ஆகிய இரண்டும் வருமானத்துடன் தொடர்புடையது. உயர்கல்வியை கொண்ட குடும்பங்கள் அதிகளவான திரவச் சொத்துக்களை கொண்டுள்ளன. செல்வத்தை கட்டியெழுப்புவதில் பெரும்பகுதியானது நிதி ரீதியான முடிவெடுப்பதுடன் பிணைக்கப்படுவதால், காலப்போக்கில் செல்வ சமத்துவமின்மையை குறைப்பதில் நிதி ரீதியான கல்வியறிவு முக்கிய பங்கு வகிக்கக்கூடும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

Wit Wannakrairaj (2012) என்பவரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது தாய்லாந்தின் தனிநபர்களினுடைய குறுக்கு முகத்தரவுகள் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளன. மாறிகளுக்கிடையிலான தொடர்பானது இணைவுக் குணகம் மூலமும் சாதாரண பிற்செலவு பகுப்பாய்வு முறையினூடாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவாக கல்வி மற்றும் அனுபவம் ஆகிய இரண்டும் ஊதியத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்துவதுடன் நகர்ப்புற, கிராமப்புற தொழிலாளர் சந்தையில் உள்ள தொழிலாளர்களின் ஊதியத்துடன் கல்வியும் அனுபவமும் நேரான தொடர்பினைக் கொண்டுள்ளது.

ARP Weerasiri & Samaraweera (2020) ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது இலங்கையின் இரண்டாம் நிலைத்தரவுகள் பெறப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவாக கல்வி, மொழியறிவு, டிஜிட்டல் கல்வியறிவு, தொழிற் பயிற்சி ஆகியவை இளைஞர்களின் வேலைவாய்ப்புடன் நேர்த்தொடர்பினைக் கொண்டுள்ளன. மேலும் கல்வி, தொழிற் பயிற்சி மற்றும் கிடைக்கும் சந்தை வாய்ப்புகளுடன் அவர்களுடைய திறன் பொருத்தமின்மையாக காணப்படுவதனை வெளிப்படையாக காணமுடியும் என்பதனை ஆய்வு முடிவு செய்கின்றது.

Ajantha Sisirakumara (2015) என்பவரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது இலங்கையின் கூலி வித்தியாசத்தை ஆராய்கின்றது. இதற்காக இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் எளிய பிற்செலவு பகுப்பாய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவாக ஆரம்ப மற்றும் இடைநிலைக்கல்வி மக்களிடையே வருமான ஏற்றத்தாழ்வை குறைக்கிறது. அதேசமயம் இளங்கலைப் பல்கலைக்கழகக் கல்வி வருமான சமத்துவமின்மைக்கு பங்களிக்கின்றது. மேலும் நகர்ப்புற மற்றும் பொதுத்துறை ஆண் ஊழியர்கள் ஒப்பீட்டளவில் அதிக ஊதியம் பெறுகிறார்கள். கல்வி வசதிகளை ஊக்குவிக்காத எந்த ஒரு கொள்கையும் இந்நன்மைகளைக் குறைக்கும்.

Ramani Gunatilaka (2008) என்பவரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இரண்டாம் நிலைத் தரவுகள் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் பிற்செலவு பகுப்பாய்வு முறையினைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் ஆய்வின் முடிவாக இளமை மற்றும் சீனியாரிட்டி அதிக வருமானத்தினை பெறுகின்றது. அதிக கல்வியினை அடைதல் முறையான வேலையில் குறிப்பிடத்தக்களவு அதிகளவு ஊதியத்திற்கு வழிவகுப்பதுடன் உற்பத்தி மற்றும் சேவைகளில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவரும் விவசாயத்தில் பணிபுரியும் ஊழியர்களை விட அதிகமாக சம்பாதிக்கின்றார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆய்வு முறையியல்

ஆய்வுப் பிரதேசம்

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தின் கீழ் காணப்படும் J/62 கிராமசேவகர் பிரிவானது ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இது கொழும்புத்துறை கிழக்கில் அமைந்துள்ளதுடன் இதன் பரப்பளவு 0.46 சதுர கிலோமீற்றர் ஆகும். இங்கு 639 குடும்பங்கள் காணப்படுவதுடன் 1965 குடித்தொகை காணப்படுகின்றது. 1965 குடித்தொகையில் 690 குடித்தொகை தொழில்புரிவோராக காணப்படுகின்றனர்.

மாதிரி எடுத்தல் முறை

J/62 இல் 1965 குடித்தொகை உள்ளது. இதில் தொழில்புரியும் 690 பேரில் 104 பேர் (104/690*100=15.07%) அண்ணளவாக 15 வீதம்) படைமுறை மாதிரி எடுப்பு முறையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் தொழில்புரியும் 690 பேரில் தரம் 4 வரை கல்வி கற்ற 11 நபர்களில் 2 நபர்களும், தரம் 5 வரை கல்வி கற்ற 29 நபர்களில் 4 நபர்களும், தரம் 6 வரை கல்வி கற்ற 9 நபர்களில் 1 நபரும், தரம் 7 வரை கல்வி கற்ற 10 நபர்களில் 2 நபர்களும், தரம் 8 வரை கல்வி கற்ற 40 நபர்களில் 6 நபர்களும், தரம் 9 வரை கல்வி கற்ற 45 நபர்களில் 7 நபர்களும், தரம் 10 வரை கல்வி கற்ற 85 நபர்களில் 13 நபர்களும், தரம் 11 வரை கல்வி கற்ற 201 நபர்களில் 30 நபர்களும், தரம் 13 வரை கல்வி கற்ற 178 நபர்களில் 27 நபர்களும், டிப்ளோமா வரை கல்வி கற்ற 40 நபர்களில் 6 நபர்களும், 42 பட்டதாரிகளில் 6 நபர்களுமாக மொத்தமாக 104 குடித்தொகை மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தரவு சேகரிப்புக் கருவிகள்

முதலாம் நிலைத்தரவுகள்

- வினாக்கொத்து
- நேர்காணல்

  இவ்வாய்விற்காக நேர்காணலானது குறைந்த மற்றும் அதிக கல்வி ஆண்டைக் கொண்டவர்கள் குறைந்த மற்றும் அதிக அனுபவ ஆண்டை கொண்டவர்களிடம் நேரடி உரையாடல் மூலம் இடம்பெற்றதுடன் சில கட்டமைக்கப்பட்ட, கட்டமைக்கப்படாத வினாக்கள் கேட்கப்பட்டு தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டது.
- நேரடி அவதானம்

  ஆய்வுப் பிரதேசமானது எனது வாழிடமாகவும் எனக்கு மிகவும் பரீட்சயமான இடமாகவும் அமைவதனால் கல்விகற்ற ஆண்டுகள், அனுபவ ஆண்டுகள் என்பன தனிநபர்களின் கூலி மற்றும் சம்பளத்தில் எவ்வகையான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன என்பது பற்றிய தகவல்கள் ஆய்வுப் பிரதேசத்தில் இருந்து நேரடி அவதானம் மூலம் பெறப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலைத்தரவுகள்

- ஆய்வுக் கட்டுரைகள்
- கிராமம் சார் வெளியீடுகள்
- பிரதேச செயலாளர் அறிக்கை

தரவுப் பகுப்பாய்வு

அட்டவணை : ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சார் மற்றும் சாரா மாறிகளின் அளவீட்டு முறைகள்

மாறிகள்	குறியீடு	மாறி வகை	அளவீடு
தொழிலாளர் கூலி மற்றும் சம்பளம்	Y	சார் மாறி	மாதாந்தம் பெறுகின்ற சம்பளம் ரூபாவில்
மனித மூலதனம்	X_2	சாரா மாறி	
1. கல்வி	$X_{2.1}$		1. கல்வி கற்ற ஆண்டுகளின் எண்ணிக்கை
2. அனுபவம்	$X_{2.2}$		2. வேலை செய்யும் ஆண்டுகளின் எண்ணிக்கை

தரவுப் பகுப்பாய்வானது விபரணமுறை, இணைவுக்குணக முறை, சிதறல் வரைபட முறை, பிற்செலவு பகுப்பாய்வு மற்றும் 5 புள்ளி licket scale ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டு மாறிகளுக்கு இடையிலான தொடர்பினை விளக்குவதற்கு சிதறல் வரைபடம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இரண்டு மாறிகளுக்கு இடையிலான தொடர்பினை துல்லியமாக அளவிட்டு விளக்குவதற்கு இணைவுக்குணக முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. பல்மாறி சூழ்நிலையை விளக்குவதற்கு பிற்செலவு பகுப்பாய்வு பயன்படுத்தப்பட்டுள்ளது.

தரவுப் பகுப்பாய்வும் கருதுகோள் பரிசோதனையும்

இலங்கையைப் பொறுத்தவரையில் மனித மூலதன அபிவிருத்தியின் குறிகாட்டிகள் அதிகரித்துச் என்றாலும் நடைமுறையில் கல்வியானது தொழிலாளருடைய சம்பளத்தினை தீர்மானிப்பதில் சிறந்த காரணியாக அமையவில்லை. அதாவது மனித மூலதன அபிவிருத்தியானது பொருளாதார வளர்ச்சியுடன் குறிப்பிடத்தக்களவு நேர்க்கணிய தொடர்பினை கொண்டிருந்தாலும் நடைமுறையில் தொழிலாளர் ஒருவருடைய சம்பளத்தினை தீர்மானிப்பதில் சிறந்த காரணியாக அமையவில்லை. அந்த வகையில் ஆய்விற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட J/62 கிராம சேவகர் பிரிவின் கீழ் மனித மூலதனமானது தொழில்புரியும் தனிநபர்களின் கூலி சம்பளத்தில் எத்தகைய தாக்கத்தினை கொண்டுள்ளது என்பதை ஆராய முடியும்.

கருதுகோள் பரிசோதனை 01

Ho: கல்வி கற்ற ஆண்டுகளுக்கும் தொழிலாளர் சம்பளத்திற்கும் இடையே எதிர்க்கணியத் தொடர்பு காணப்படவில்லை.

Ha: கல்வி கற்ற ஆண்டுகளுக்கும் தொழிலாளர் சம்பளத்திற்கும் இடையே எதிர்க்கணியத் தொடர்பு காணப்படுகின்றது.

அட்டவணை – ஆய்விற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட மாதிரிகளின் கல்வி கற்ற ஆண்டுகள் பற்றிய விபரண பகுப்பாய்வு

மாறி	அதி கூடியது	அதி குறைந்தது	இடை	நியம விலகல்
கல்வி கற்ற ஆண்டுகளின் எண்ணிக்கை	17 ஆண்டுகள்	4 ஆண்டுகள்	11.17	2.816

மூலம் - வினாக்கொத்து பகுப்பாய்வு 2021

இதனடிப்படையில் 104 அவதானங்களையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது அத்தனை அவதானங்களிலும் மிகக் கூடிய கல்வி ஆண்டாக 17 வருடங்களும், மிகக் குறைந்த கல்வி ஆண்டாக 4 வருடங்களும் காணப்படும் அதேவேளை கல்வி ஆண்டுகளின் மொத்த பெறுமதியை அவதானங்களால் பிரித்து வரும் இடை 11.17 ஆக காணப்பட நியமவழுவானது 2.816 ஆகக் காணப்படுகின்றது.

வரைபடம் - சிதறல் வரைபடம்



(மூலம்: கள ஆய்வு 2021)

வரைபடத்தின்படி சாராமாறியான கல்வி கற்ற ஆண்டுகளின் எண்ணிக்கைக்கும் சார்மாறியான சம்பளத்திற்கும் இடையே எதிர்க்கணியத்தொடர்பு காணப்படுகின்றது.

மாறி	R	R Square	Adjusted R Square
கல்வி கற்ற ஆண்டுகளின் எண்ணிக்கை	.485	.235	.228

கல்விகற்ற ஆண்டுகளின் எண்ணிக்கைக்கும் சம்பளத்திற்கும் இடையில் 48 சதவீதமான மறை இணைவு காணப்படுகின்றது. மேலும் துணிவுக்குணம் 0.235 ஆகும். இதிலிருந்து தொழிலாளர்

சம்பளத்தினை தீர்மானிப்பதில் கல்விகற்ற ஆண்டுகளின் எண்ணிக்கை 23 வீத பங்களிப்பை வழங்கியுள்ளது. மிகுதி 77 வீதம் சம்பளத்தினை தீர்மானிக்கும் ஏனைய காரணிகளிலேயே தங்கியுள்ளது.

அட்டவணை - பிற்செலவு பகுப்பாய்வு முடிவுகள்

ANOVA

Model		Sum of Squares	df	Mean Square	F	Sig.
1	Regression	2278476069.335	1	2278476069.335	31.393	.000
	Residual	7403123481.549	102	72579641.976		
	Total	9681599550.885	103			

மாறி	B	t-value	Sig.
(Constant)	53145.303	15.478	.000
கல்வி கற்ற ஆண்டுகளின் எண்ணிக்கை	-1670.098	-5.603	.000

மூலம் - வினாக்கொத்து பகுப்பாய்வு 2021

அட்டவணையின் படி மதிப்பிடப்பட்ட பின்னர் பிற்செலவு சமன்பாடானது பின்வருமாறு அமையும்.

W & S = 53145.303 - 1670.098 YOE

(.000) (.000)

W& S = சம்பளம்

YOE = கல்வி கற்ற ஆண்டுகளின் எண்ணிக்கை

இதன்படி கல்வி கற்ற ஆண்டுகளின் எண்ணிக்கைக்கும் சம்பளத்திற்கும் இடையே எதிர்க்கணியத்தொடர்பு காணப்படுகின்றது. அதாவது கல்வி கற்ற ஆண்டானது ஒரு ஆண்டினால் அதிகரிக்கும்போது சம்பளமானது 1670.1 ரூபாவால் குறைவடைகின்றது. எனவே மேற்படி முடிவுகளிலிருந்து கல்வி கற்ற ஆண்டுகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு தொழிலாளர் சம்பளத்தினை மேல் உயர்த்துவதற்கு பங்காற்றவில்லை என கூறிக்கொள்ளலாம்.

இதனைவிட பண்புரீதியில் இடம்பெற்ற நேர்காணல், நேரடி அவதானம், முன்னர் செய்யப்பட்ட ஆய்வுகளினூடாக நிறுவுதல் போன்றவையும் கருதுகோளை நிரூபிக்க பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்தவகையில் ஆய்வின் போது நடைபெற்ற நேர்காணலில் 47 வயதுடைய பட்டதாரி ஆசிரியர் ஒருவர் இது தொடர்பாக கருத்துக்களை குறிப்பிடும்போது,

“17 வருட கல்விக்கு ஏற்ற சம்பளத்தை பெற முடியாத நிலையே உள்ளது. பகுதி நேர வேலை ஊடாகவே எனது வருமானத்தினை அதிகரித்து வருகின்றேன். எனது கல்விக்கும் நான் பகுதி

நேரமாக ஈடுபடும் வேலைக்கும் இடையே எந்தவித தொடர்பும் இல்லை. நான் படித்த கல்வியை கொண்டு உழைக்கும் சம்பளத்தை விட பகுதி நேர வேலையில் அதிகம் பெறமுடிகின்றது. ஒருவருடைய தொழில் மூலமான வருவாய்க்கும் அவரின் கல்விக்கும் இடையில் தொடர்பு இல்லை என்றே கூற வேண்டும்.''

தரம் 06 வரை கல்வி கற்ற 60 வயதுடைய வணிகத் தொழிலில் ஈடுபடும் ஒருவர் இது தொடர்பாக கருத்துக்களை குறிப்பிடும் போது,

''கல்வி என்பது வருமானத்தை உழைப்பதற்கு அவசியமானது அல்ல. கல்வி கற்பதன் மூலம் சமூகத்தில் மதிக்கப்படும் தன்மை அதிகரிக்கின்றதே தவிர இக்கல்வி மூலம் அன்றி அனுபவம் மூலமே எனது தொழிலில் அதிகளவு வருவாயினை பெற்றுக்கொள்கின்றேன். தரம் 11/13 படித்துவிட்டு அரசாங்க தொழில் மூலம் ஒருவர் பெறும் சம்பளத்தினை விட அதிகம் உழைக்கின்றேன். 40 வருடங்களாக வணிக தொழிலில் ஈடுபட்டு வருகிறேன். எனது 40 வருட அனுபவமே எனது வருவாயினை அதிகரித்துள்ளது.''

ஆய்வுப் பிரதேசத்திலே நான் வசிப்பவன் என்ற வகையில் எனது நேரடி அவதானமும் ஆய்வுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில்,''இப்பிரதேசத்தில் ஏட்டுக்கல்வி முறையே இன்றும் காணப்படுகின்றது. இதனால் மாணவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட ஓர் எல்லைக்குள் தமது கற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன் விளைவாக தேடியறியும் தன்மை, கற்பனைவளம், தொழில்நுட்ப ஆற்றல் போன்றவை இன்னமும் வளர்சியடையாமல் காணப்படுகின்றன. அத்துடன் கல்வி முறைமை தொழில் வாய்ப்பிற்கு ஈடுகொடுக்க கூடியதாக இல்லாமையால் கற்றவர்கள் தெருவில் நிற்கவேண்டிய நிலை ஏற்படுவதுடன், அவர்களது கல்விக்கு ஏற்ற கூலி மற்றும் சம்பளத்தினை பெறமுடியாத நிலையினை அவதானிக்கமுடிகின்றது''. அதுமட்டுமல்ல முன்னர் செய்யப்பட்ட ஆய்வுகளும் கல்வி கற்ற ஆண்டுகளின் எண்ணிக்கைக்கும் தனிநபர்களின் கூலி மற்றும் சம்பளத்திற்குமிடையே எதிர்க்கணியத் தொடர்பு உள்ளது என்பதைக் காட்டிநிற்கின்றன.

''வறிய நாடுகளின் பொதுக்கல்வியானது மாணவர்கள் படிக்கின்ற வருடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கின்றதே ஒழிய நாட்டின் உற்பத்தித் திறனுக்கோ பொருளாதார வளர்ச்சிக்கோ உதவவில்லை. கல்வியறிவு இல்லாமல் சுயமாக வேலை செய்து வருமானம் பெற்ற வறிய குடும்பப் பிள்ளைகளை அர்த்தம் இல்லாத இலவசக் கல்வி மூலம் பட்டத்தைக் கொடுத்து, அரசின் கைகளை எதிர்பார்த்து இருக்கின்ற வேலையற்ற பட்டதாரி ஏழ்மைக் கூட்டத்தை உருவாக்கியது தான் குறைவிருத்தி நாடுகளின் உயர்கல்வி ஆகும்.'' (சந்திரசேகரம் 2014)

''தனிநபர்கள் ஆரம்பத்தில் பாடசாலையை விட்டு விலகுவதானது ஊழியப்படையில் இணைவதன் மூலம் உயர்ந்த ஊழியத்தினை உழைப்பதற்கு ஊக்குவிக்கின்றது''. (Kumara, Ajantha Sisira 2015) ''கல்வி (இரண்டாம் நிலைக்கு பின்னர் அல்லது அதற்கு மேல்), மொழியறிவு, டிஜிட்டல் கல்வியறிவு, தொழில் பயிற்சி ஆகியவை இளைஞர்களின் வேலைவாய்ப்புடன்

நேர்த்தொடர்பினைக் கொண்டுள்ளன. மேலும் கல்வி, தொழிற் பயிற்சி மற்றும் கிடைக்கும் சந்தை வாய்ப்புகளுடன் அவர்களுடைய திறன் பொருத்தமின்மையாகக் காணப்படுவதனை வெளிப்படையாக காணமுடியும். இலங்கையில் இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தின் அடிப்படை நிகழ்வாக இன்னும் திறமைகள் பொருந்தாமல் உள்ளமையே முக்கிய காரணமாகும்.'' (Weerasiri & Samaraweera 2020)

"1960 முதல் 1987 வரையிலான காலகட்டத்தில் ஆபிரிக்க நாடுகள் அதாவது அங்கோலா, மொசாம்பிக், கானா, சாம்பியா, மடகஸ்கார், சூடான் மற்றும் செனகல் போன்ற நாடுகள் மனித மூலதனத்தில் விரைவான வளர்ச்சியைக் கொண்டிருந்த போதிலும் அந்நாடுகளின் வளர்ச்சி பின்தங்கிய நிலையிலேயே இருந்தன. மனித மூலதனத்தில் மிதமான வளர்ச்சியுடன் ஜப்பான் போன்ற நாடுகள் வளர்ச்சி அதிசயங்களாக இருந்தன. சிங்கப்பூர், கொரியா, சீனா மற்றும் இந்தோனேசியா போன்ற பிற கிழக்காசிய அதிசயங்கள் மனித மூலதனத்தில் விரைவான வளர்ச்சியைக் கொண்டிருந்தன, ஆனால் அவற்றின் வளர்ச்சி ஆபிரிக்காவின் பின்தங்கிய நிலைக்கு சமமாகவோ குறைவாகவோ இருந்தன.'' (William Easterly, Page 73-74)

"இலங்கையில் இலவசக் கல்வி மீதான அரசாங்கச் செலவீடு முற்றாக வினைத்திறமையற்றதாகும். இலங்கையில் உயர்கல்வி கற்று வெளியேறுகின்ற பட்டதாரிகள் திறன்கள் அற்றவர்களாக தனியார் துறைகளுக்கு ஒவ்வாத பட்டதாரிகளாகக் காணப்படுகின்றனர். இக்கல்வியானது தொழில்நுட்பத் திறன்களையோ, முயற்சியாண்மைத் திறன்களையோ வளர்த்தெடுக்கவில்லை. நாட்டின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட பல்கலைக்கழகங்களை உருவாக்குவதைத் தவிர்த்து அரசியல்வாதிகளின் வாக்கு வங்கியை தளமாகக் கொண்ட பல்கலைக்கழகங்களும், பாட நெறிகளும் அதிகரித்துச் செல்வதைக்காணலாம். (சந்திரசேகரம் 2014).

இலங்கை அரசாங்கம் தரமான கல்வியை பெறுவதற்கான ஒவ்வொருவரின் உரிமையையும் பாதுகாப்பதற்குப் பதிலாக, கல்வியை இலவசமாக வழங்க முயற்சித்தது. எனவே, இலங்கையின் கல்விக் கொள்கை வகுப்பாளர்களால் சம உரிமை மற்றும் கல்வியின் தரம் ஆகிய இரண்டும் சமரசம் செய்யப்பட்டுள்ளன. இலவசக் கல்விக் கொள்கையானது கல்வியறிவு வீதம், பாடசாலை மாணவர் சேர்க்கை வீதம் மற்றும் கல்வியில் பாலின சமத்துவம் போன்றவற்றில் தெற்காசியாவில் முன்னணியில் இருப்பதற்கு இலங்கையை இயலுமைப்படுத்திய போதிலும், மாறிவரும் உலகத்தை எதிர்கொள்ளும் வகையில் அது முன்னேற்றமாக அபிவிருத்தி செய்யப்படவில்லை என விமர்சிக்கப்படுகிறது. (Kingsley Karunaratne Alawattegama 2020)

www.srilankagk.com எனும் இணையத்தளத்தில் காணப்பட்டவாறு "இலங்கையின் இன்றைய கல்வி முறையில் அவதானிக்கக் கூடிய முக்கிய பிரச்சினையாக வேலையின்மை காணப்படுகின்றது. காரணம் படிப்பிற்கேற்ற தொழிலின்மை மற்றும் ஊதியம் இன்மை, படித்தவர்களை விட படிக்காதவர்கள் அதிகம் சம்பாதிக்கின்றனர். எனவே அதிகளவு பட்டதாரிகள் வேலையின்றி இருக்கின்றனர். காரணம் தொழில் உலகுக்கும், கல்வி உலகுக்கும் இடையில் உள்ள இணக்கமின்மையாகும்."

ஒட்டுமொத்த ரீதியில் நோக்கும் போது கல்வி கற்ற ஆண்டுகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது தொழிலாளர் சம்பளம் குறைவடைந்து செல்வதுடன் நடைமுறையில் கல்வியானது தொழிலாளர் சம்பளத்தினை தீர்மானிப்பதில் சிறந்த காரணியாக விளங்கவில்லை என்பதனை இணைவுக்குணக, பிற்செலவு பகுப்பாய்வு சிதறல் வரைபடம் மற்றும் பண்பு ரீதியிலான பகுப்பாய்வு முறைகளினூடாக விளக்க முடியும்.

கருதுகோள் பரிசோதனை 02

Ho: அனுபவத்திற்கும் தொழிலாளர் சம்பளத்திற்கும் இடையே எதிர்க்கணிய தொடர்பு காணப்படுகின்றது.

Ha: அனுபவத்திற்கும் தொழிலாளர் சம்பளத்திற்கும் இடையே எதிர்க்கணியத் தொடர்பு காணப்படவில்லை.

அட்டவணை – ஆய்விற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட மாதிரிகளின் அனுபவ ஆண்டுகளினுடைய விபரண ரீதியான பகுப்பாய்வு

மாறி	அதி குறைந்தது	அதி கூடியது	இடை	நியம விலகல்
அனுபவ வருடங்கள்	2 Years	47 Years	16.32	10.868

மூலம் - வினாக்கொத்து பகுப்பாய்வு 2021

இதனடிப்படையில் 104 அவதானங்களையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது அத்தனை அவதானங்களிலும் மிகக் கூடிய அனுபவ ஆண்டாக 47 வருடங்களும், மிகக் குறைந்த அனுபவ ஆண்டாக 2 வருடங்களும் காணப்படும் அதேவேளை அனுபவ ஆண்டுகளின் மொத்த பெறுமதியை அவதானங்களால் பிரித்து வரும் இடை 16.32 ஆக காணப்பட நியமவழுவானது 10.868 ஆகக் காணப்படுகின்றது.

வரைபடம் - சிதறல் வரைபடம்



(மூலம்: கள ஆய்வு 2021)

வரைபடத்தின்படி சாராமாறியான அனுபவ ஆண்டுகளின் எண்ணிக்கைக்கும் சார்மாறியான சம்பளத்திற்கும் இடையே நேர்க்கணியத்தொடர்பு காணப்படுகின்றது.

அட்டவணை – பிற்செலவு பகுப்பாய்வு அனுபவ வருடங்கள் எண்ணிக்கைக்கும் தொழிலாளர் சம்பளத்திற்கும் இடையில் உள்ள தொடர்பு

Model	R	R Square	Adjusted R Square
அனுபவ வருடங்கள்	.472	.223	.216

மேலும் அனுபவ ஆண்டுகளின் எண்ணிக்கைக்கும் சம்பளத்திற்கும் இடையிலான இணைவுக்குணகம் 0.472 ஆகக் காணப்படுகின்றது. எனவே அனுபவ ஆண்டுகளின் எண்ணிக்கைக்கும் சம்பளத்திற்கும் இடையில் 47 சதவீதமான நேர் இணைவு காணப்படுகின்றது.

ANOVA

Model		Sum of Squares	df	Mean Square	F	Sig.
1	Regression	2160858862.229	1	2160858862.229	29.307	.000
	Residual	7520740688.656	102	73732751.850		
	Total	9681599550.885	103			

மாறி	B	t-value	Sig.
(Constant)	27608.500	18.116	.000
அனுபவ வருடங்கள்	421.434	5.414	.000

மூலம் - வினாக்கொத்து பகுப்பாய்வு 2021

அட்டவணையின் படி மதிப்பிடப்பட்ட பின்னர் பிற்செலவு சமன்பாடானது பின்வருமாறு அமையும்.

W&S = 27608.5 + 421.43 YOJ

(.000) (.000)

W & S = சம்பளம்

YOJ = அனுபவ ஆண்டுகளின் எணிக்கை

இதன்படி அனுபவ ஆண்டுகளின் எண்ணிக்கைக்கும் சம்பளத்திற்கும் இடையே நேர்க்கணியத்தொடர்பு காணப்படுகின்றது. அதாவது அனுபவ ஆண்டானது ஒரு ஆண்டினால் அதிகரிக்கும்போது சம்பளமானது 421.4 ரூபாவால் அதிகரிக்கின்றது.

இப்பகுப்பாய்வு முறையும் ஒருவரது அனுபவ ஆண்டுகளின் எண்ணிக்கையானது நடைமுறையில் தொழிலாளர் சம்பளத்தினை தீர்மானிப்பதில் பொருளுள்ள காரணியாகக் காணப்படுகின்றது என்பதையே காட்டுகின்றது.

இதனைவிட பண்புரீதியில் இடம்பெற்ற நேரடி அவதானம், முன்னர் செய்யப்பட்ட ஆய்வுகளினூடாக நிறுவுதல் போன்றவையும் கருதுகோளை நிரூபிக்க பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்தவகையில் முன்னர் செய்யப்பட்ட ஆய்வுகளும் அனுபவ ஆண்டுகளின் எண்ணிக்கைக்கும் தொழிலாளர்களின் சம்பளத்திற்குமிடையே நேர்க்கணியத் தொடர்பு உள்ளது என்பதை காட்டிநிற்கின்றன.

“எல்லா இடங்களிலும் பல வருட அனுபவத்துடன் ஊதியங்கள் அதிகரிப்பதைக் காண்கிறோம். வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் கூட பழைய தொழிலாளர்கள் எப்போதும் இளைஞர்களை விட அதிகமாக சம்பாதிக்கிறார்கள்.” (William Easterly, Page 73-74).

“அனுபவம் ஊதியத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டுள்ளதுடன் நகர்ப்புற மற்றும் கிராமப்புற தொழிலாளர் சந்தையில் உள்ள தொழிலாளர்களின் ஊதியத்துடன் நேரான தொடர்பினைக் கொண்டுள்ளது. (Wit Wannakrairaj, 2012)"

“தர உயர்ச்சியுடையவருடைய குறைந்த சம்பள மட்டத்தினை தீர்மானிப்பதில் **வேலை அனுபவம்** ஆதிக்கமுடையதாக இருக்கின்றது. அதே வேளை தொழினுட்ப நிபுணத்துவம், **சிறப்பான பயிற்சி** போன்றன தர உயர்ச்சியுடையவரின் உயர்ந்த சம்பள மட்டத்திற்கு பெரிய பங்குவகிக்க முடியும்.” (Mihir Dash, Suprabha Bakshi, Aarushi Chugh 2017).

ஆய்வுப் பிரதேசத்திலே நான் வசிப்பவன் என்ற வகையில் எனது நேரடி அவதானமும் ஆய்வுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில் “புதிதாக ஒருவரை பணியில் இணைக்கையில், அவரது முந்தைய பணி அனுபவம் மற்றும் முந்தைய நிறுவனத்தில் அவர் பெற்ற சம்பள விவரம் ஆகியவை கணக்கில் கொண்டு ஒரு குறிப்பிட்ட சதவீதம் உயர்வு வழங்கப்படுவதனை அவதானிக்கமுடிகின்றது”.

மேலும் https://www.averagesalarysurvey.com எனும் இணையத்தளத்தில் காணப்பட்டவாறு “வெவ்வேறு அனுபவ வருடங்கள் சம்பளத்தினை பாதிக்கின்றது. இலங்கையில் சராசரியாக 20 வருடங்களிற்கு மேல் அனுபவம் உடையவர்கள் 5,805,445 ரூபா சம்பளத்தினையும் ஒரு வருடத்திற்கு குறைந்த அனுபவம் உடையவர்கள் 1,378,389 ரூபா சம்பளத்தினையும் பெறுகின்றனர்” என குறிப்பிடப்பட்டிருந்தது.

முடிவுரை

முதலாவது “கருதுகோள் கல்வி கற்ற ஆண்டுகளுக்கும் தொழிலாளர் சம்பளத்திற்கும் இடையே எதிர்க்கணியத் தொடர்பு காணப்படுகின்றது” என்பதாகும். இரண்டாவது கருதுகோள் “அனுபவம் மீதான முதலீட்டிற்கும் தொழிலாளர் சம்பளத்திற்கும் இடையே எதிர்க்கணியத் தொடர்பு காணப்படவில்லை” என்பதாகும். மேற்படி இரண்டு கருதுகோள்களும் சமன்பாடுகளின் மதிப்பீடுகளின்படி சான்றுகளுடன் நிறுவப்பட்டுள்ளதால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

இணைவுக்குணக பகுப்பாய்வின் மூலம் பெறப்பட்ட முடிவுகளின்படி தொழிலாளர் சம்பளத்தினை தீர்மானிப்பதில் மனித மூலதன கூறுகளில் ஒன்றான அனுபவம் தொழிலாளர் சம்பளத்துடன் நேர் இணைவினை கொண்டுள்ளது. ஆனால் கல்வியானது தொழிலாளர் சம்பளத்துடன் எதிர் இணைவினையே கொண்டுள்ளது.

பிற்செலவு பகுப்பாய்வின் மூலம் பெறப்பட்ட முடிவுகளின்படி ஆய்வுப் பிரதேசத்தில் தொழிலாளர்களுடைய கல்வி கற்ற ஆண்டுகள் அவர்களுடைய சம்பளத்துடன் எதிர்க்கணிய தொடர்பினைக் கொண்டிருக்கின்றது. அதாவது 1% பொருண்மை மட்டத்தில் கல்வி கற்ற ஆண்டானது ஒரு ஆண்டினால் அதிகரிக்கும்போது சம்பளமானது 1670.1 ரூபாவால் குறைவடைகின்றது. அவர்களது அனுபவம் சம்பளத்துடன் நேர்க்கணியத் தொடர்பினை கொண்டுள்ளது. அதாவது 1% பொருண்மை மட்டத்தில். அனுபவ ஆண்டானது ஒரு ஆண்டினால் அதிகரிக்கும்போது சம்பளமானது 421.4 ரூபாவால் அதிகரிக்கின்றது.

அந்தவகையில் மனித மூலதனத்தின் மீதான செலவீடானது பொருளாதார வளர்ச்சியுடன் நேர்த்தொடர்பினைக் கொண்டிருக்கின்ற போதிலும் நடைமுறையில் தொழிலாளர் சம்பளத்தினை தீர்மானிப்பதில் ஒரு சிறந்த காரணியாக அமையவில்லை. அதாவது நடைமுறையில் ஒருவர் கல்வி கற்ற ஆண்டுகளின் எண்ணிக்கையானது அவர் பெற்றுக்கொள்கின்ற கூலி மற்றும் சம்பளத்தில் எதிர்க்கணியத் தொடர்பினை கொண்டுள்ளது. இருந்த போதிலும் அனுபவமானது ஒருவருடைய சம்பளத்துடன் நேர்க்கணிய தொடர்பினை கொண்டுள்ளது. இத்தெளிவான முடிவினை இணைவுக்குணகப் பகுப்பாய்வு, பிற்செலவு பகுப்பாய்வு, சிதறல் வரைபடம், விபரணப் பகுப்பாய்வு போன்றன SPSS (சமூக விஞ்ஞானத்திற்கான புள்ளிவிபரவியல் பொதி) கணனி மென்பொருளினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் Ms Excel, நேர்காணல், நேரடி அவதானம், முன்னர் செய்யப்பட்ட ஆய்வுகள் என்பவற்றின் மூலமும் பெறக்கூடியதாக இருந்தது.

உசாத்துணை

1. "இலங்கையின் சமகால சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள்" (2014). பொருளியல் துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். குரு பிறிண்டேர்ஸ் 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
2. Ajantha Sisira Kumar. (2015). Wage Differentials in Srilanka: The case of a post- conflict country with a free education policy SriLanka. Available from:https://mpra.ub.uni-muenchen.de|68068|. (accessed 20 may 2021).
3. ARP weerasiri, GRSRC Samaraweera. (2020). Factors influencing Youth Unemployment in SriLanka Asian journal of management studies. Available from: https://www.sab.ac.lk/ajms/
4. Google (2022). Available at: https://www.averagesalarysurvey.com (Accessed: 25.02.2022).
5. Kingsely Karunaratne Alawattegama. (2020). Free Education Policy and its Emerging Challenges in Sri Lanka. Available from: http://dx.doi.org/10.19044/ejes.v7no1a1.
6. Mihir Dash, Suprabha Baksh, and Aarushi Chugh. (2017). The relationship between work experience and employment and employee compensation: A case study of the Indian in Industry.
7. Ramani Gunatilaka. (2008). Informal Employment in Sri Lanka: Nature, Probability of Employment and Determinants of Wages, www.ilo.org/publns.
8. Santhirasegaram. S & Reginold. L. (2014). அறிவுப் பொருளியல். ஸே எம் ஒப்செற் பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம்.
9. Scolt A. Walla. and Jessica Sullivan. (2017). Education, Income, and wealth.
10. Statistical Hand Book – 2019, Divisional Secretariat - Jaffna, Divisional planning branch Divisional Secretariat Jaffna.

11. William Easterly. (2002). The Elusive Quest for Growth. The MIT press, Cambridge, Massachusetts London, England.
12. Wit Wannakrairaj. (2012). The effect of Education and Experience on wages: The case study of Thailand in 2020. Southeast Asian journal of economics, 1, 27 – 48.

The Green Tourism Role in the Hospitality Industry: A Systematic Literature Review

Vinoja Sridharan[1], Kamalakumari Karunaanithy[2]
[1,2]Department of Economics, Faculty of Arts, University of Jaffna, Jaffna, Sri Lanka
[1]sridharanvinoja23@gmail.com, [2]kkamal@univ.jfn.ac.lk

Abstract

This study with an objective to distinguish the elements, and trends and to bring out the apparent benefits and challenges related to green tourism initiatives in the hospitality industry. This study is based on analyzing a total of 50 articles directing attention to the green tourism role in the hospitality industry, published between 1998 and 2022. The current study reveals four themes: the elements and trends and the apparent benefits and challenges related to green tourism initiatives in the hospitality industry. Since the study is based on a literature survey, the systematic literature review was used as a methodology to address the research questions- what are the elements and trends, and what are the benefits and challenges related to green tourism initiatives in the hospitality industry? As found in the literature survey the most important elements of green tourism in the hospitality industry featured: ecological obligation protection, local economic essentialness, cultural variety, and experiential lavishness. The current trend identified in the literature green tourism initiative: it gives an important happenstance to guests while getting to the next level of personal satisfaction and safeguarding the local area; it has a significant instructive part as an opportunity to learn respect for nature and local culture; provides a chance for some self-reflection propelled by the excellence of the environmental factors; also benefits the local area (recruiting staff locally obtaining neighborhood produce, local contributions in navigation, and sorting out the tourism activities). The benefits identified in the literature were decreasing ecological effect, financial contemplations, competitive advantage, brand recognition, company image, other benefits, namely, helping public relations, individual moral obligation, and political contemplations. The internal and external challenges in the hospitality industry are an absence of respondent information, the apparent cost of applying or enrollment, a lack of time, and the amount of work involved in compliance. Moreover, the researcher proposes some suggestions in the tourism sector area to feature the significance of the green and sustainable tourism sector.

Keywords: eco-friendly, environmental factors, green tourism, hospitality industry, sustainability

1. Introduction

1.1 Background of the study

The tourism industry is the third biggest economic activity in the world (after oil and automobiles), and it is quite possibly the quickest growing action (Batta, 2009). The action of tourism is comprised of the hospitality and convenience area, the transportation area, and the diversion area with guest attractions, for example, exhibition hall, carnivals, sports offices, and so forth. The functions of tourism should be visible as the framework, which constrains some processes and strategies: it includes arranging, sorting out, planning, preparing, observing, and assessing at different levels (global, public, local, and neighborhood) (Susanty et al., 2018). The tourism industry is the idea that can be perceived in another way relying upon the circumstance (OECD, 1991), while at the same time, The World Travel and Tourism Council in 1995 characterized the tourism industry as the activities of people going to and remaining in places outside their standard climate for close to one sequential year for business, relaxation, and for other reasons.

Nature Based Tourism is a worldwide, multibillion dollar industry and has encountered an uncommonly high pace of development of somewhere in the range of 10% and 15% every year (Dybsand, 2020; Mehme-Toglu, 2007; Reynolds and Braithwaite, 2001). As per the World Travel and Tourism Council (WTTC, 2013), the tourism industry's immediate commitment to GDP was 5% in Kenya, 4.8% in Tanzania, 3.2% in South Africa and 3% in Namibia. As indicated by the WTTC (2017), the tourism industry development in South Asia (where Nature Based Tourism is a significant part) represents 5.7% of the region's GDP (Suresh et al., 2021).

In the tourism industry, economic action should associate with the idea of sustainable advancement is an industry reliant upon the natural resources and social legacy of each organization, which sells these resources as a component of its products of his and simultaneously, shares a few resources with others, including nearby networks. The goal of green tourism is to increase people's awareness of environmental issues and respect for the natural world. Programs that reduce the harmful effects of traditional tourism on the environment and strengthen locals' sense of cultural identity are included in the notion of green tourist travel. Green tourism is therefore an essential component of campaigns to promote reduction, reuse, recycling, energy efficiency, water conservation, and community empowerment to grow economic activities, in addition to considering environmental and cultural aspects. Green tourism will advance community sustainability, culture, and the environment at popular tourist destinations (Andari and Setiyorini, 2016). As tourism is supposed to keep on growing in the years ahead, current tourism propensities will become unsustainable, in light of the fact that they are causing an excessive amount of damage to the environment, nearby networks, and the world's regular assets. This makes sustainable travel fundamental for the long-term feasibility of the tourism industry as a whole. By focusing on sustainable tourism, legislatures, travel organizations, aircraft, hotels, and eateries travelers can all assist with guaranteeing the tourism industry is as yet conceivable in the years to come. At the point when steps are taken to give advantages to local people and limit the damage brought about by the tourism industry, it turns into a force for good on the planet.

Green Tourism is another trendy expression that is contacting everyone's heart, which means addressing environment-friendly tourism activities and empowering all parties to acknowledge the inherent worth of the resources (Rani and Rashi, 2014). As of not long ago, there is basically little writing in regards to the green tourism role in the hospitality industry. Going green has turned into the practice of the day since individuals have acknowledged how the green world could carry tone to their lives. The green tourism initiative is more appropriate to the present

world and ought to be looked at from the mark of different partners in the advancement of tourism and hospitality sectors as this drive to contend and confront the challenges with their partners at worldwide levels. Hence, thematic analysis was undertaken through a systematic review to recognize the most influential areas that require papers and unique researches that distinguish the main categories of research in the field of green tourism role in the hospitality industry, published between 1998 and 2022. The current study reveals four themes: the elements and trends of green tourism in the hospitality industry and the apparent benefits and challenges related to green tourism initiatives in the hospitality industry.

Overall, this study aims to answer two of the most important questions: first, what are the elements and trends of green tourism in the hospitality industry, and secondly, what are the benefits and challenges related to green tourism initiatives in the hospitality industry as cited in the literature? And this paper evaluates the elements and trends in the green tourism initiatives in the hospitality industry that are cited in the literature and brings out the apparent benefits and challenges related to green tourism initiatives in the hospitality industry, as cited by past studies.

1.2 Significance of the study

As per the World Tourism Organization, green the tourism industry represents 7-20% of the complete tourist services (Plotnikova, 2018). Green Tourism likewise fosters a sound economy that will improve the tourism destinations across the world and which can procure another tag for our tourism industry to drive. In actuality, ecological contamination and its pessimistic effects are achieved while individuals are zeroing in on economic growth and tourism improvement. The hotel industry is one of the significant parts of tourism advancement, so it consumes a significant measure of assets and energy on the planet. If green the board can be successfully carried out, not exclusively can cost-effective, yet additionally, the negative natural effects can be decreased. To an ever-increasing extent, for instance, ecologically wise tourists are searching out green tourist objections — those that put forth a proactive attempt to resolve basic issues like waste management, water supply, carbon emissions, and biodiversity protection (Rani and Rashi, 2014). This paper reviews published studies related to green tourism role in the hospitality industry by bringing out the elements and trends of green tourism in the hospitality industry and the benefits and challenges related to green tourism initiatives in the hospitality industry.

2. Literature review

2.1 Green Tourism Concept

The making of a quality ecological and service area for our people in the future, as well as endeavors toward sustainable development utilizing the most recent modern patterns, has turned into a squeezing need. Green tourism was embraced by the industry as a system under local area social obligation in this troublesome situation to achieve this objective. The economic, social, and ecological variables of the objections impact the method of green tourism activities (Markose et al., 2022). Most green tourism drives are generally founded on the triple bottom line sustainability structure. It is the basic standard for adjusting economic, environmental, and social fields (Aguiñaga et al., 2018). Green tourism is the term utilized in the act of sustainable tourism that protected the future necessities of adequate economic, environmental, social, and cultural assets (Azam and Sarker, 2011). Green tourism is a type of eco-tourism improvement idea. As per Fandeli (2000), eco-tourism was presented by the association of the ecotourism society in 1990 and made sense that eco-tourism was a type of movement to regular regions that is finished determined to monitor the environment and preserves the life and the prosperity of nearby inhabitants (Andari and Setiyorini, 2016). Likewise, concern for the natural environment would be communicated in harmless to the ecosystem strategic policies and commitment by hotels to utilize assets capably (Jonker and De-Witte, 2006:1). Green tourism, which is a significant part of the sustainable tourism industry, is characterized as travel to destinations where the flora, fauna, and social legacy are the essential attractions. The definition is additionally extended to incorporate ecologically sustainable travel to destinations where the environmental influences are limited fully intent on regarding and safeguarding natural resources and adjusting projects to fit the setting of delicate resources (NCC, 1996; Graci and Dodds, 2008). Perceiving the natural environment as a fundamental tourism industry resource, public and private areas of the tourism industry are progressively taking on and executing naturally viable improvement estimates to restrict the negative ecological effects related to the tourism industry improvement (Furqan et al., 2010).

2.2 The Elements of Green Tourism

"Greening" of tourism is a need that can make the tourism industry more serious, empower developments, utilization of advanced arrangements, employment, and increment of the tourism income within the Croatian economic framework. There fore tourism should turn into a critical piece of the green and circular economy idea that is supported by the EU and UNWTO (EC, 2015; Vella, 2016) by the method for putting the concentration the reduction of biological

impression (discharges and contamination, utilization of water, energy, and other resources) and objectives of assurance and tourism affirmation of nature, custom, and social legacy. More concretely, green tourism advancement requires nonstop, systematic measures and examination of the effect of tourism activities to keep away from, decline, or moderate negative environmental influences. The upgrades of environmental sustainability of tourism incorporate different levels, from destinations to goods/services suppliers and most preparation and official cycles. Moreover, green tourism improvement accepts quality and competitive tourism items founded on the legacy and presence in every single significant sort and part of tourism inside or outside safeguarded regions (Carić, 2018). Researchers proved that the spread of sustainable consumption is a method for protecting the ecology and also, working on personal satisfaction. Sustainable consumption is perceived to mean the utilization of services and products that fulfill essential needs and work on personal satisfaction with insignificant utilization of natural resources and with minimal harm to the ecology. The primary objective is to notice the issues of ecology and health. It is feasible to accomplish the premises of sustainable consumption by animating the interest for the items which are made with the utilization of energy-proficient advances, non-harmful materials, and so on (Rashchenko, 2017).

In order to limit the adverse consequences of technology applications on humans and the environment, the greening system comprises innovation application advancement without harming, overexploiting, or exhausting natural resources, energy utilization decrease, the formation of products that can be totally reused or recovered, diminishing how much waste and contamination during assembling and usage. As such, the green, ecological or clean innovation involves natural feasible planning, manufacturing, utilizing, and disposing of negligible or no effect on the environment, and as such addresses a central empowering innovation supporting green development and the improvement of the green economy (Gavrilović and Maksimović, 2018). Sustainable tourism is a tourism industry movement that considers the present and future economic worth, environmental effects, meeting support, environmental industry, and nearby networks (UNEP and WTO, 2015). According to Yoeti and Gunadi (2013), sustainable tourism is a nonstop cycle and requires continuous checking of its effects, and can contain demonstrated and restorative measures if necessary. The priority character of the advancement of the administration area is because of their elevated degree of benefit and, a fast restitution level permits affirming the need for green tourism enactment in rural regions (Plotnikova, 2018).

2.3 Green Tourism Trends

Green tourism is profoundly evolved in Western Europe and the USA. Specialists say that this is because of the low degree of employment in the area (Rashchenko, 2017). The rising number of smart gadgets has a tremendous effect on the tourism and hotel industry. Subsequently, the substance smart of and simultaneously reasonable, green, or capable tourism is in the utilization of green ICTs. The usage of sensors, cameras, and cell phones, cloud administrations and the internet of things, big data investigation, and joint effort of the web and mobile services, all together contribute to greening the tourism industry (Gavrilović and Maksimović, 2018). In addition, Graci (2008:254) sees that where there is the absence of government regulations on the tourism industry, the emphasis on voluntary drives brought about low administrative tensions (Mbasera et al., 2017). Organizations are currently understanding that they need to embrace an environment-friendly accommodating method of activity. Numerous hotels are answering guests' requests for a healthier and greener way of life by making their organizations more eco-agreeable (Rani and Rashi, 2014). The Green Tourism Business Scheme (2010), launched in 1997, is the national sustainable tourism certificate scheme for the UK, with 2144 current individuals (Carić, 2018). Right now, in the tourism business, rural green tourism possesses a specific specialty in the worldwide tourism market and gets extensive deals and vacation destinations (Gutkevych and Haba, 2020).

2.4 Perceived Challenges in Green Tourism

Absence of partner investment, collaboration, and mindfulness, absence of financing for SHGs (self-improvement gatherings — these are little gatherings of devastated individuals, moreover alluded to as Kudumbasrees) to begin private companies, absence of government coordination of the thought, underutilization of ranges of abilities of neighborhood assets, etc., are a portion of the major holes that should be taken care of in request to accomplish the ideal consequences of being mindful to the tourism industry (Hasana et al., 2022). The research done by Hillary (1995), and Smith Kemp (1998) noticed that numerous hospitality administrators (hotels included) have restricted information on their environmental carbon and other impressions, which fundamentally is hampering their capacity to carry out powerful natural practices. Tzschentke, Kirk, and Lynch (2008:131) trust that restricted mindfulness among hotel proprietors of natural impression has been distinguished as an obstruction to change. Graci (2009:46) noticed the absence of abilities, information, skill, and data in a hotel association. Furthermore, the business all in all has enormously upset the degree of sustainability of

ecological drives (Plessis and Kruger, 2017). Inner difficulties incorporated an absence of respondent information on the tourism idea, the apparent cost of applying as well as enrollment, an absence of time to finish the application cycle, and how much work engaged with consistency (Jarvis et al., 2010).

2.5 Perceived Benefits in Green Tourism

Presenting an idea of green tourism is one of the works to change the inclination of the entrepreneur to select the best course and methods of transportation that can lessen the adverse consequence of their movement action to the environment (Susanty et al., 2018). Accomplishing smart and green tourism requires specific activities including the development of environmentally protected, recyclable, and biodegradable items, utilizing energy proficient activities with negligible or no contamination, productive waste administration, rationing social and regular resources, and so on (Gavrilović and Maksimović, 2018). Sustainable tourism gives a significant encounter to guests while getting to the next level of personal satisfaction and safeguarding the host local area, guarantee progression of regular assets they depend on a large group of local area social congruity fulfilling experience for guests, and guarantees a harmony between necessities of the industry, the environment, and neighborhood local area allies (Cosma and Buzoianu, 2015). The standards of sustainable development figured out at the UN conference on the environment as well as additional improvement of worldwide participation specifies the acknowledgment of complicated measures pointed toward saving human existence and wellbeing, tackling segment issues, forestalling violations, poverty eradication, diminishing income differentiation, and changing consumption patterns (Rashchenko, 2017). At the point when provoked by the advantages recognized in the literature: decreasing environmental effect, financial contemplations, brand recognition, and different benefits, for example, helping public relations, individual moral obligation, and political contemplations (Jarvis et al., 2010). The idea of green tourism can reinforce nature to guarantee long-haul strength of the environment to support life; support nearby economic imperativeness of neighborhood economies, organizations, and networks towards sustainable economic help; experience advancing and fulfilling experience through dynamic cooperation and significant individual inclusion with nature, individuals, places, and unique societies (Cosma and Buzoianu, 2015).

3. Methodology

Research on green tourism role in the hospitality industry has broadly stretched out in the new past; considering it as an alternate exploration field. To recognize the most recent elements and trends of green tourism and the benefits and challenges related to green tourism initiatives in the hospitality industry, the author has used an efficient system to find out the articles. The journal articles have been viewed in this research since they are considered solid and available sources. Magazines, theses, conference papers, and book areas have been banished in light of the differentiations of the survey. Concocting search strategies for systematic literature review is a testing task. Different places of cooperation need exceptional sentence structure, the unmistakable arrangement of rules furthermore, and pictures fascinating to each informational collection that makes sense on how a precisely fabricated search works. Typical language structure activities contain the use of enclosures additionally, Boolean chairmen, for instance, "AND," "Or on the other hand," and "NOT," which are introduced in each critical association point produce single-line inquiries in a text record, which licenses brief checking of the significance of gained references and viable upgrade (Surangi, 2020). From the outset, the Google scholar data set was used for revelations of journal articles distributed from 1998 to 2022 including the keywords eco-friendly, environmental factors, green tourism, hospitality industry, and sustainability. In the wake of examining every one of the papers, duplicate documents were dispensed with, and an amount of 55 papers were recognized. Every abstract was read to ensure that the paper focuses on green tourism role in the hospitality industry; when there was a vulnerability, the whole paper was read to get confirmation of whether or not the article is associated with the particular points. Finally, the research takes in the leftover 50 papers. The arrangements of different research areas that rose up out of the most referred research papers were used as a foundation for the topical investigation. Subsequently, themes show the significant contentions discusses and sensible association with research questions.

4. Data Analysis and Discussion

Data examination was done utilizing thematic analysis. A thematic analysis was directed to go dive further into the explicit area and perceive the specific themes being investigated.

4.1 Thematic Analysis- Themes Derived from the Literature

All papers were organized into different classifications and themes inside each gathering were dissected. Inside each grouping, a couple of sub-themes were recognized (see figure 01), and the analysis of the theme is presently deciphered and depicted:



Figure 01: Themes derived from literature review on green tourism role in the hospitality industry

a) The elements of green tourism initiatives in the hospitality industry

The metropolitan green tourism idea can be separated into four parts; 1. Ecological obligation - protect, save, or potentially upgrade nature also, the physical environment guarantees the drawn-out strength of the life-supporting environment. 2. Local economic essentialness – supporting nearby economies, organizations, and communities to guarantee economic imperativeness and maintainability. 3. Cultural variety - regarding and appreciating societies and social variety to guarantee the well-being of nearby or host cultures. 4. Experiential lavishness - giving enriching and fulfilling encounters through dynamic, individual, and significant participation in, and contribution with, nature, individuals, places, and additionally societies (Dodds and Joppe, 2001). The scope of green tourism administrations is very wide (from quiet rest to dynamic rest): trips (climbing, trekking, horseback riding, and so on.); rest by the water; strolling; workshops; wellbeing further developing practice (knead, showers, tea, and so on.); accommodation and meals; plant-developing and domesticated animals raising (Rashchenko, 2017). Green promotion has developed over a time of time through three stages (Jain, Naidu, and Payasi, 2010; Jayakumar, 2017): 1. Environmental green marketing - during this period all promoting activities were engaged to survive and give answers to environmental issues. 2. Ecological green marketing - this period was committed to the advancement of clean

advancements, and new items, which deal with issues in regards to contamination and waste. 3. Sustainable green marketing - this stage came to unmistakable quality in the last part of the 1990s and the mid-2000s (Gavrilović et al., 2018). Principles of the board of green tourism in the states of a unified regional local area: Subsidiarity - the instrument of administration is framed from the base up all issues that can be really settled locally are inside the capability of the metropolitan specialists as the nearest to the populace; Raising money - the method involved with drawing in reserves and different assets fundamental for the execution of a specific venture or its activities, specifically, human, material, instructive, which structure, for instance, a unified regional local area can't give by itself; Re-evaluating - the exchange by the organization of a portion of its capabilities to address the issues of the populace to the next party, specifically, through the production of interterritorial or between ranch training serving the helpful; Lean administration, re-designing, the executives by objectives, the board by results, project the board, e-administration, benchmarking (Plotnikova, 2018).

Mihalič (2016) contended that there are three stages in sustainable tourism: "awareness", "plan" and "activity". Green tourism can lead the way to the truly necessary progress to the green and roundabout economy and has defined three gatherings of activities for accomplishing ecological maintainability and esteeming normal legacy: partnership and limit advancement, support, and overseeing green tourism improvement (Carić, 2018). The idea of green tourism, one with a moderately high intricacy can be seen through the accompanying three regions: environmental obligation, conservation, fortifying nature, and the physical environment (Cosma and Buzoianu, 2015).

Walker and Walker (2011:311) propose components of a green hotel with an obligation to the environment: Arranging harmless ecosystem feasts, going computerized and using eco-accommodating systems like electronic enlistment, staying away from filtered water, and work on filling water glasses just when requested to lessen squandering, utilize fair exchange things which advance solid workplace, save energy, and relieve the power utilization connected with visitor travel by utilizing carbon balances, Utilize all the more harmless to the ecosystem transportation, for example, biodiesel vehicle rentals and eco-transports, support utilization of reusable packs and advanced reusable bags, use dinnerware, and glassware and support the utilization of biodegradable disposables, and fertilizer food scraps to lessen financial and natural expenses (Plessis and Kruger, 2017).

b) The trends of green tourism initiatives in the hospitality industry

The new progressive phase of green tourism will prompt reception of the "Idea of the State program of improvement of the tourism and resorts for the period till 2022" (Cabinet of Ministers of Ukraine of 08.01.2013, pp.638.) and "draft state program of improvement of the tourism and resorts period up to 2022", which will decide its need also, empower it to draw in confidential area venture assets to sporting and the tourism organizations and backing activities (Gutkevych and Haba, 2020). Numerous hotels are answering visitors' requests for a better and greener way of life by making their organizations more eco well disposed. In recent years, the hotel business has started to ‘green up' tasks. It has gone past leaving out little cards to reuse towels and clothes. A few hotels and hotel networks take sustainability more truly than others, however, the business overall has positively become greener in recent years. Indian tourism and hotel industry efforts to promote the concept of green tourism to enhance their business in a green way. There are four steps to a green strategy: assess your ecological wellbeing; map out the green excursion; understand the green vision; and talk green to your youngsters (Rani and Rashi, 2014). In 2016 the Action Plan for Green Tourism Development expected to make synergy with different areas (for instance waste, energy, nature assurance, water management, spatial arranging, traffic, and so forth.). And South Africa confines the year 2015 top ecotourism objections through wild scenes, customs explicit natural. Worldwide forced by such nations, like Australia, the US, and Kenya, hold key components that permit tourists to encounter and find out about them (Cosma and Buzoianu, 2015).

c) The challenges related to the green tourism initiatives in the hospitality industry

The green tourism association is a non-benefit association and is generally new. Getting the business to get involved with the idea was troublesome, and subsequently, most of the monies came from government subsidizing awards. This came about in a very restricted marketing financial plan, and along these lines there was an absence of media following, promoting the use, and so forth (Dodds and Joppe, 2001). Tragically in this industry creating there are a few cutoff points for the proficient lead of tourism activities. Among that, disinterest among partners like financial backers, investors, and providers are the main components (Cosma and Buzoianu, 2015). The amount of help for the advancement of the capable tourism industry was very poor, with minimal neighborhood help and backing (Manag, 2022).

The challenges the hotel industry is confronting are that green the industry is still new in the hotels: it is difficult for employees to comprehend and embrace green administration drives;

the workers are contributing to the execution of green drives in the hotels without clear ideas. A few hotels are over 30 years of age and manufacturers were not worried about green assembling the inconsistency with new necessities of greening and, the establishment of a better kind of air conditioner system which is a lot greener than whatever is as of now in the hotel. There are no green administration strategies in hotels, and hotels are not certified by environmentally friendly associations (Plessis and Kruger, 2017). Inner difficulties incorporated a lack of respondent information on the sustainable tourism industry idea, the apparent cost of applying as well as participation, a lack of time to finish the application interaction, and the amount of work engaged with compliance. Indirect boundaries, considered beyond the prompt control of the organizations, incorporated a need for steady financing, unfortunate customer information, poor marketing support, the impacts of the downturn, and inflexibility of the plan, all of which are associated with past investigations (Jarvis et al., 2010).

d) The benefits related to the green tourism initiatives in the hospitality industry

The improvement of green tourism on a national scale will permit the work of 100 thousand individuals every year and will build the level of food and economic security of families, and will advance the recovery of the organization of settlements in country regions (Plotnikova, 2018). Green tourism is searching for green traveler objections — those that put forth a proactive attempt to resolve basic issues like fossil fuel byproducts, biodiversity protection, waste management, and water supply. Utilizing eco-accommodating items for day-to-day housekeeping not just diminishes the effect of cleaning on the environment, yet additionally, assists with tending to expansive visitor wellbeing concerns, that can be aggravated by customary details. While specific cleaning practices can be taken on to restrict visitor openness to explicit substance parts of conventional items, the main secure method for decreasing this openness is to wipe out their utilization and change to greener item choices (Rani and Rashi, 2014). The green tourism mission zeroed in on adjusting the economy, social, and ecological development of the objections (Markose et al., 2022). Harmless to the ecosystem rehearses help trust in visitors and patrons and fortify the association notwithstanding contest and also, an eco - well-disposed hotel gets the opportunity of acquiring a strategic competitive advantage (Park, Kim and McCleary, 2014:110). The hotel that has harmless to the ecosystem certification keeps up with guidelines through keeping the rules and it gets global acknowledgment. Likewise, representatives realize what is generally anticipated of them with regards to ecological issues. At the point when clients are drawn to the hotel that has been guaranteed by a very certified accreditation association, the hotel pushes upwards in business,

subsequently putting the organization at a competitive advantage over its uncertified partners (Plessis and Kruger, 2017). According to an economic perspective, the advancement of green tourism will bring about developing livelihoods of the populace and replenishment of country networks' spending plans. The main social viewpoint is to work on the health of the populace. Also, it will prompt the formation of extra business. This movement will likewise increment the ecological consciousness of the general public and will protect public customs. According to Polonsky and Rosenberger (2001), by taking on green guidelines production processes, accessible resources are consumed in better habits, which prompts cost decrease, by offering green items that green shoppers need to purchase, address the needs of the market, fulfill clients, and prompts expanded productivity. And also, the greening system can be considered as an opportunity to further develop items, grow new business systems, mission, and vision, and so on taking into account the rules of green promotion (Gavrilović and Maksimović, 2018).

5. Conclusion

The major inspiration driving this paper has been to review the empirical literature associated with green tourism role in the hospitality industry. The analysis clearly reveals that green practices have turned into a road to progress in the hospitality industry. While legislative guidelines may at first drive experts to execute green practices at minimal levels, the review reveals that inactive interest frequently develops into dynamic support because of the business-related benefits got from - and resulting customer interest for - green practices. This study revealed published research papers on green tourism role in the hospitality industry. The paper has additionally assessed the elements and trends of green tourism and the benefits and challenges related to green tourism initiatives in the hospitality industry (Kim and Fairhurst, 2017). The governments both at central and state levels along with professional bodies and other vital stakeholders in the concept should take effective measures and even make special legislations to see that everyone should implement these hard rules and regulations and see that they are going by the green concepts and spreading the initiative of going green. There are human resources that can do the green plans evenly and vertically, yet in addition, that decision and policy creators must find the components for persuading, supporting, outline working, and in particular safeguarding from un-straightforward and specific interest. Proceeding with training work in the soul of ecotourism and sustainable tourism ought to be accomplished by the advancement of biological attention to the populace twinned with sensations of affection and regard for nature, noteworthy locales, landmarks of craftsmanship, and design after some time. This ought to be upheld by activities connected with the limitless worth of the

environment and the tourism possible in creating and becoming aware of advancements and valuable networks in the soul of ecotourism.

Moreover, this study provides suggestions based on literature to maintain significant destinations. Administrations ought to keep on giving preparation and training to tourism entertainers, networks, and guests on how to keep the environment lovely and sustainable; ensuring the implementation of environmental standards and their incorporation into business activities; working on the quality principles of items and, bundling for the item; the foundation of limited-time procedures adjusted to new portions of green customers by working with gatherings of environmental protection; improvement of ecological guidelines furthermore, sending off green drives; eco label certificates advancements. To recap the overall survey, a couple of impressions of research gaps (Table 01) are recognized from past empirical investigations.

Furthermore, the literature reviewed that ecological obligation, local economic essentialness, cultural variety, and experiential extravagance are the primary parts of the green tourism concept. Regarding challenges faced by hoteliers while executing green administration drives, the review revealed that employees in hotels are not finding it simple to embrace green the board drives, there was obstruction from individuals in the hotels as green administration was being presented for the first time, lack of knowledge on coming up with practical green administration drives, and moderateness of carrying out the green administration drives, for example where development of the hotel was done the way a while ago when developers were not worried about the green structure. At the point when provoked by the advantages recognized in the literature, diminishing ecological effect, expanding the level of food and economic security of families, financial contemplations, competitive advantage, job opportunities, and different benefits, for example, helping public relations, individual moral obligation, and political contemplations. Since tourism and the travel industry enterprises can produce huge social, economic, and social advantages and improvement of any locale, a huge number of tourist destinations are attempting to draw in tourists to their locations in different ways. Hence, an international comparative study would be exceptionally important. This study adds to the attention regarding green tourism role in the hospitality industry research area by requesting and depicting the immense proportion of distributions over the period 1998-2022 and showing gaps inside each of these themes.

Table 01: Gaps in the green tourism role in the hospitality industry literature

Research Area	Previous Studies	Little or no research (Research gaps)
The green tourism role in the hospitality industry	The area is chiefly examined by researchers in developed countries	Different settings, particularly developing nations
	Theoretical focus is dominating	Quantitative study
	Research topics: Green concept, Application, Challenges, and benefits	The study should focus on the attitudes and perceptions of the green tourism
		Research in the view of other significant factors in the model, for example, reliability, responsibility, environmental exercises performed by clients in their day-to-day routines, or related knowledge related to green hotels

References

1. Andari, R. a. S. H., 2016. GREEN TOURISM ROLE IN CREATING SUSTAINABLE URBAN TOURISM. *South East Asia Journal of Contemporary Business, Economics and Law,* 11(2), pp. 18-25.
2. Azam, M. a. S. D., 2010. Green tourism in the context of climate change towards sustainable economic development in the South Asian region. *Journal of Environmental Management & Tourism,* 2(1), pp. 06-12.
3. Budiasa, M. e. a., 2019. Implementation of Green Tourism Concept on Glamping Tourism in Bali. *Advances in Social Science, Education and Humanities Research,* Volume 354, pp. 210-213.
4. Carić, H. e. a., 2018. Perspectives of greening tourism development – the concepts, the policies, the implementation. 66(1), pp. 78-88.
5. Chengcai, T. e. a., 2017. A Review of Green Development in the Tourism Industry. *Journal of Resources and Ecology,* Volume 8, pp. 449-459.
6. COSMA, M. a. B. O., 2015. Promoting tourism green- essence of a cleaner environment and sustainable. *Academia de Studii Economice din București,* pp. 53-57.
7. Dodds, R. a. J. M., 2001. Promoting urban green tourism: The development of the other map of Toronto. *Journal of Vacation Marketing,* 7(261), pp. 261-266.
8. Font, X. a. T. J., 2001. Promoting Green Tourism: the Future of Environmental Awards. *INTERNATIONAL JOURNAL OF TOURISM RESEARCH,* Volume 3, pp. 9-21.

9. Furqan, A. e. a., 2010. PROMOTING GREEN TOURISM FOR FUTURE SUSTAINABILITY. *Theoretical and Empirical Researches in Urban Management,* pp. 64-73.

10. Gavrilović, Z. a. M. M., 2018. Green Innovations in the Tourism Sector. *STRATEGIC MANAGEMENT,* Volume 23, pp. 036-042.

11. Gibson, A. e. l., 2003. Ecotourism in the city? Toronto's Green Tourism Association. *International Journal of Contemporary Hospitality Management,* 15(6), pp. 324 - 327.

12. Gutkevych, S. a. H. M., 2020. Rural Green Tourism: Current Trends and Development Prospects. *Informacijos mokslai,* Volume 89, pp. 116-133.

13. Hasan, A., 2015. Green Tourism Marketing Model. *Journal Media Wisata,* 13(2), pp. 267-293.

14. Ibrahim, Y., 2017. Towards Sustainable Environmental Management through Green Tourism: Case study on Borneo Rainforest Lodge. *Asian Journal of Tourism Research,* 2(3), pp. 122-142.

15. Ilyas, M. e. a., 2014. Application of green tourism in the Mount Rinjani National Park area to support sustainable tourism. *International Journal of Green Tourism Research and Applications,* 4(1), pp. 16-22.

16. Jarvis, N. e. a., 2012. The Benefits and Challenges of Sustainable Tourism Certification: A Case Study of the Green Tourism Business Scheme in the West of England, pp. 2-25.

17. Joppe, M. a. D. R., 1998. Urban Green Tourism: Applying ecotourism principles to the city. *Travel and Tourism Research Association,* pp. 4-6.

18. Les, A. a. R. A., 2017. GREEN TOURISM AS A COMPONENT OF SUSTAINABLE CONSUMPTION. *Proceedings of the 11th International Academic Conference,* pp. 238–242.

19. Markose, N. e. a., 2022. Sustainability Initiatives for Green Tourism Development: The Case of Wayanad, India. *Journal of Risk and Financial Management,* 15(52), pp. 1-13.

20. Mbasera, M. e. a., 2017. Impeding factors hindering the implementation of green management initiatives in hotels: A developing country perspective. *African Journal of Hospitality, Tourism and Leisure,* 6(2), pp. 1-10.

21. MELER, M. a. H. M., 2014. *Tourism & Hospitality Management 2012, Conference Proceedings,* pp. 130-139.
22. MICHAILIDOU, A. e. a., 2016. GREEN TOURISM SUPPLY CHAIN MANAGEMENT BASED ON LIFE CYCLE IMPACT ASSESSMENT. *European Journal of Environmental Sciences,* 6(1), pp. 30-36.
23. Mogollón, J. M. H. e. a., 2013. AUTHENTICITY IN ENVIRONMENTAL HIGH-QUALITY DESTINATIONS: A RELEVANT FACTOR FOR GREEN TOURISM DEMAND. *Environmental Engineering and Management Journal,* 12(10), pp. 1961-1970.
24. Petrevska, B. a. C. V., 2017. Branding the Green Tourism in Macedonia. *Sociologija i prostor,* 201(1), pp. 101-116.
25. Plotnikova, M., 2018. GREEN TOURISM DEVELOPMENT IN SMART COMMUNITIES. *Baltic Journal of Economic Studies,* 4(3), pp. 203-209.
26. Rani, R. a. R., 2014. A Study of Green Practices in Hospitality and Tourism Industry in India. *International Research Journal of Management Science & Technology,* 5(7), pp. 85-93.
27. Rong, P., n.d. Building of Green Tourism Supply Chain and Study on Collaborative Optimization from the Perspective of Industrial Convergence. *Advances in Social Science, Education and Humanities Research,* pp. 175-180.
28. Setyaningsih, W. e. a., 2015. Low Impact Development as an Implementation of the Eco Green Tourism Concept To Develop Kampung Toward Sustainable City. *Procedia - Social and Behavioral Sciences* , Volume 179, pp. 109-117.
29. Susanty, A. e. a., 2018. Implementation of green tourism concept through a dynamic programming algorithm to select the best route of tourist travel. *IOP Conf. Series: Earth and Environmental Science,* Volume 195, pp. 1-8.
30. Tao, H. e. a., 2021. IMPLEMENTING FOR INNOVATIVE MANAGEMENT OF GREEN TOURISM AND LEISURE AGRICULTURE IN TAIWAN. *The International Journal of Organizational Innovation,* 13(3), pp. 211-219.

31. Widana, P. a. S. K., 2020. The management of Cau Belayu Tourism Village based on green tourism business scheme. *International Journal of Green Tourism Research and Applications* , 2(2), pp. 53-62.
32. Zengeni, N. a. e. a., 2013. Hoteliers' Perceptions of the Impacts of Green Tourism on Hotel Operating Costs in Zimbabwe. *Australian Journal of Business and Management Research,* 2(11), pp. 64-73.
33. Zengeni, N. a. L. T., 2021. Environmental Awareness Initiatives and Eco-Inclusion of Hotel Guests In Green Tourism Practices In Zimbabwe. *IOSR Journal Of Humanities And Social Science,* 26(11), pp. 42-51.

WOMEN'S INFORMAL EMPLOYMENT IN SRI LANKA: AN EMPIRICAL ANALYSIS

Navaratnam Balamurali
Department of Social Studies, Open University of Sri Lanka, Nugegoda, Sri Lanka
nbala@ou.ac.lk

Abstract

The study of labour force participation in the informal sector is very useful for implementing and formulating employment opportunities and human resource development policy programs. This study analyses the determinants of informal employment with a special focus on women by analyzing the factors associated with the probability of women's participation in informal employment. We used Sri Lankan Labour Force Survey micro level data set in 2019, employing multinomial logistic regression modeling to investigate differential impacts of socio –economic determinants of informal employment. It was identified that informal employment in formal sector is not recognized in national statistics, but attached to the formal sector instead. 38 percent of informal employment in formal sector is performed by women. Also, it was found that most males and females in the informal work are married. With reference to the probability of employment, contrary to what is found in most developing countries, in Sri Lanka women are less likely to participate in the informal economy compared to non-participant men. Compared to non-participant married women, never married women are more likely to be informally employed. Although widowed women were less likely to participate in the informal economy, divorced and separated groups were more likely to do so, which was also the case for overall female heads of household. While negative relationship was found between the probability of female participation in the informal economy and the age category, more education and literacy in at least two languages including English are found to be reducing the likelihood of women's participation in informal employment which is also what one finds with regards to men. All in all, this study emphasizes the importance of identifying informal employment in formal sector in national statistics and of concentrating on education, literacy, and female-heads of household– particularly the ones who are divorced and separated- in programs aimed at improving employment conditions of women.

Keywords: Informal employment, Labou force survey, multinomial logistic regression

1. Introduction

The primary objective of this study is to examine the situation of women in informal employment in Sri Lanka through an up-to-date analysis of the most recent sample survey data available. In doing so, first attempt to analyse the extent and nature of informal employment in the country overall and in relation to women specifically. Here, it is particularly hoped to identify the extent of informal employment in the formal sector and its gender composition. Then, move on to scrutinize the factors associated with women's probability of participating in informal employment. These findings are thus hoped to inform and inspire the design of appropriate policies and advocacy mechanisms to alleviate vulnerabilities faced by women in the sector.

Rational for this study stems from two perspectives. From a development point of view, the bottom tier of the informal sector is largely characterized by unfavorable, precarious working environments and lack of access to legal protection and social security across the developing nations (Chen, 2010; Gunther and Launov, 2012). Further, the trends in global south also depict

that women are largely disadvantaged across the informal sector. Turning to Sri Lanka, literature on women in informal economy also convey that women are particularly vulnerable in this sector as they are mostly concentrated in the poverty ridden, insecure informal settings (Gunatilaka, 2008; Gunawardena 2006; Jayaweera and Sanmugam, 1998). Women in the sector are confronted with unsatisfactory working conditions, but have no legal protection in terms of working hours, minimum wages, rewards or any kind of health and safety insurance at work (Ibid). Consequently, rights of women in the informal sector are severely hampered requiring special attention in the country's development agenda. Understanding the situation of women in informal economic activities is paramount in protecting their rights to safe employment as enshrined in Convention on Elimination of all forms of Discrimination against Women (CEDAW, 1979) to which Sri Lanka is a signatory of since 1980. But this requires a clearer understanding of the sector. Hence, from a development perspective, this study is imperative as it seeks to establish a deeper understanding of the situation of women in informal employment.

From a statistical point of view, a comprehensive analysis of women in the informal sector was not possible thus far due to the limited availability of data in Sri Lanka. Gunatilaka (2008) is the only study that analyses the extent and probabilities with regards to women in the informal sector at the macro level while also trying to pertain to the international standard statistical definition of informal employment, prior to this study. However, she uses data from the Labour Force Survey (LFS) 2006 conducted by the Department of Census and Statistics (DCS), which limits the conformity to the international standard definition and suffers from the lack of data from the formerly conflict affected Northern and Eastern Provinces. The Labour Force Survey (LFS) conducted in 2013 by the Department of Census and Statistics, used in this study, contained the most up to date published data available during the time of analysis and has data relating to all segments of the informal sector, and also the data from former conflict-affected zones. Hence, the current study largely overcomes the aforementioned limitations of the study by Gunatilaka (2008).

Furthermore, the 15th International Conference on Labour Statisticians (15th ICLS), extended the definition of informal sector to informal employment, because there certainly are forms of informal employment outside the informal sector (Hussmanns, 2003). However, the DCS of Sri Lanka, to date, uses the sector based definition in identifying informality in labour. Consequently, informal employment outside the informal sector is hidden or rather captured in the formal sector by this sector-based definition, which is misleading to a greater extent and

inevitably hinders the recognition of even the existence of such informal forms of employment. I specifically identify this hidden category by using the international standard definition of informal employment adopted by 15th ICLS. Overcoming the aforementioned limitations, this study contributes to the existing literature by executing a more complete, up to date analysis of the extent and nature of informal employment and of the factors associated with probability of women's participation in informal employment, which complies largely with the international standard definition of informal employment and also identifies the informal employment outside the informal sector.

2. Literature Review

Considering theoretical literature on women in informal employment, on one hand the free-market proponents view the informal economy as a great source of empowerment to women offering greater flexibility for them to manage their time between their household chores and economic participation (USAID, 2005). On the other, the feminist economic perspective holds that informality leads women into greater impoverishment by limiting their engagement to mere "survivalist" economic activities driven by their reproductive responsibilities and discriminative structure of gender in informal economy (Meagher, 2010).While the empowerment debate holds that women could empower themselves in the economy once market access is improved, the impoverishment perspective contends that women's empowerment could be achieved only by removing them from the informal sector (Meagher, 2010; USAID, 2005). Both of these theoretical debates, however, agree that women are largely disadvantaged in the informal economy at its current status quo. In consideration of literature on informal sector in Sri Lanka, a range of factors appear to be associated with informal employment. Poor access to infrastructural facilities such as roads, electricity, schools and health, remoteness from the commercial centers and poverty appear to drive Sri Lankans into the informal sector (Arunatilake and Jayawardena, 2005). In addition, Chandrasiri (2013,) underscores that low levels of education characterize informal sector in Sri Lanka and that the majority of those employed in the sector have not progress beyond the G.C.E. Ordinary Level in their educational attainment compared to the formal sector where the majority has surpassed this qualification. Chandrasiri further argues that, 'the growth and expansion of IE (Informal Economy) sector in Sri Lanka has been largely due to the weak labour absorptive capacity of the formal sector, particularly the private sector, to generate adequate employment and incomes for new entrants to the labour market. This could also be attributed to growth deficiency resulting from inadequate demand for labour, and problems relating to the business

environment. The main reason for the former, inadequate demand for labour, is due to presence of highly segmented labour markets and rigid labour laws and factors affecting the business environment. As noted by the Investment Climate Assessment, regulatory procedures and corrupt practices in granting permission, issuing licenses, etc. have led to persistence in informality." Further, applying an econometric model to the Labour Force Survey Data from year 2019, Gunatilaka and Vodopivec (2010) observe that informal sector workers are more disadvantaged along the lines of age, ethnicity, and education and skills compared to formal workers in Sri Lanka. Therefore, the literature reveals that the informal sector in Sri Lanka resembles the global patterns.

Literature on women in informal sector in Sri Lanka is rather sparse. Jayaweera and Sanmugam (1998) studying the female Mahaweli settlers involved in coir industry and agricultural work were the first to draw attention to the unsatisfactory working conditions and the lack of any kind of legal protection in terms of working hours, minimum wage, rewards or any kind of health and safety insurance at work. In addition, working poor, mainly women, in the informal economy are not rewarded commensurately with their education endowment unlike the non-poor with the same level of endowment (Gunatilaka 2010). Low connectivity, poor access to infrastructure and hindrances caused by ethnicity and language could partly explain this labor market segmentation due to the working poor's inability to access better job opportunities (Gunatilaka 2010). Poor working women are particularly affected by these factors (Gunatilaka 2010, Gunawardena 2006). Further through her research, Gunatilaka (2010) characterizes a typical poor worker as a woman and was a private (probably informal) sector employee. On average, the pay women in the informal sector receive was 40 per cent less than what the men in the sector were paid, even when additional attributes were controlled for (Gunatilaka 2008). Therefore, available literature portrays an image of women in the informal sector in Sri Lanka which is very similar to what one could see in other developing countries.

From a statistical point of view, a comprehensive analysis of women in the informal sector was not possible thus far due to the limited availability of data in Sri Lanka. Several scholars, however, have extensively analysed the informal sector with the limited data available; therefore, resulting in partial analysis of the sector as opposed to a more complete one. Gunawardena (2006), using the 1996-2004 data of the QLFS analyses the gender wage gaps in the private and public sector without much specific focus on the informal sector. In another attempt to understand the sector, Arunatilaka and Jayawardena (2010) studying household

survey data from two different time periods, conclude that people's participation in the informal sector is determined by "a mix of market considerations and skill mismatches, moderated by household and societal factors." Neither did this study contain a gendered analysis of the informal sector which is the focus of the current study. Given the limited number of studies that focus on Sri Lankan women in informal economy and the constraints that existed thus far in terms of data availability, the findings of this study will contribute to the existing literature a comprehensive analysis of the situation of women in informal employment in the country.

Before proceeding further, three key concepts found in literature and how they are used in this paper should be clarified. First, *informal sector* refers to the overarching umbrella concept of informality which could broadly be defined as the sphere in which economic activities "take place beyond the legal purview of the state" (Gunatilaka, 2008, 3). However, due to the existence of different theoretical approaches4 and the heterogeneity observed in the sector, there is no one universally applicable definition. Second, the *informal economy*, as defined by the ILO in 2002, is "all economic activities by workers and economic units that are – in law or in practice – not covered or insufficiently covered by formal arrangements" (ILO 2002b). Thus, informal economy refers to all informal economic activities, and informal sector refers to the all-encompassing sphere in which these activities take place. Hence, these two are used inter-changeably in this paper. Third, *informal employment* is defined by the 15th ICLS as the aggregate number of informal jobs irrespective of the sector or production unit in which it is carried out: in formal sector enterprises, informal sector enterprises or households (Hussmanns, 2003).

3. Methodology

This study uses data from all four quarters of the Labour Force Survey conducted in 2019 by DCS covering all nine provinces and 25 districts. The conceptual framework used in this study to analyse informal employment based on the conceptual framework devised by 15th ICLS is given in table 1 below.

Table 1: Conceptual framework for informal employment used in this study

Production Units by type	**Jobs by status in employment**									
	Own Account workers		Employers		Contributing family workers		Employees		Members of producer cooperatives	
	Informal	Formal	Informal	Formal	Informal	Formal	Informal	Formal	Informal	Formal
Formal Sector Enterprise		11		**12**	1		2	13		
Informal Sector Enterprise	3		4		5		6	7	8	
Household	9						10			
Public sector production unit								14		

This study analyses informal employment as defined by 15th ICLS (see annex I) as opposed to informal sector employment measured by DCS (see annex II). Here, the national thresholds used by DCS (for instance, the minimum number of employees for defining a formal sector enterprise) are combined with the international statistical definition by 15th ICLS and its conceptual framework to define informal employment. Since public sector is distinguishable from the other two sectors, the conceptual framework in this study also includes public sector as a type of production unit. Employees in the public sector- those who work in the central and provincial governments and the semi-government sector- are considered inherently formal because they operate within strict legal purview of the government. In contrast to what 15th

ICLS recommended, this analysis includes agricultural activities in the total employment. According to this framework, private informal employment is captured in cells 1 to 6 and 9 to 10, private formal employment in cells 7 and 11 to 13, public formal employment in cell 14, employment in the informal sector in cells 3 to 7 and informal employment in the private formal sector in cells 1 and 2. The analysis of this study is twofold. First, the extent and nature of the informal employment with a special focus on women will be discussed using the estimated population proportions produced through the statistical software used in this study (i.e. Stata-14). The econometric analysis uses sample weights in order to ensure the representativeness of the findings. Second, the factors associated with the probability of women's participation in informal employment are analysed by implementing a maximum likelihood multinomial logistic model because the kind of analysis involves multiple employment outcomes. While this study does not look at the determination of wages, it does, however, involve the first two of the three stage process as described by Heckman (1979). In fact, in countries with large informal sectors, it is apparent that the majority of informal workers enter the labour market as already self-employed workers. Thus, it could be argued that individuals take the decisions to participate, be employed and be employed in a particular sector all at the same time. Therefore, instead of using the sequential Heckman procedure, this study collapses the decision making process into just one stage where labour market outcomes are determined simultaneously. This can be modelled using any appropriate multinomial regression technique, which can easily be performed using Stata-14. Accordingly, the study deploys a maximum likelihood multinomial model with five outcomes for three sub-samples: (a) all working age persons in the sample (model 1), (b) all working age men (model 2) and (c) all working age women (model 3) separately. The model follows the linear functional form given below.

$$S_{ij} = \beta X_t + \varepsilon_{ij}$$

While the dependent variable S_{ij} designate the 5 different employment outcomes, S_{ij} represent the labour market outcome j of person i The employment outcomes that S will take are (i) non-participation12 in the labour force, (ii) unemployment, (iii) public formal employment, (iv) private formal employment and (v) informal employment. X_{it} is a vector denoting different groups of explanatory variables which include demographic attributes, education and literacy, and spatial characteristics. While β represents a vector of regression coefficients ε_{ij} denotes the error term with a logistic distribution.Since the direct interpretation of coefficients obtained by this models involves log-odds, marginal effects of each model are interpreted instead. An

analysis of marginal effects will give more meaningful and direct interpretations of the probabilities of employment.

4. Results

4.1 Extent and nature of informal employment

It is estimated that total employment in Sri Lanka in 2019 is 8,417,673, the estimate by DCS being 8,417,674 for the same year (DCS, 2019). Out of the total employment, 68.6 percent belonged to informal employment as per the 15th ICLS definition used in this paper. Formal employment- both public formal (15 percent) and private formal (15.4 percent) - accounted for the rest of the 31 percent of the total employment. According to the sector based DCS definition the share of informal employment in total employment was approximately eight percentage points less (60.8 percent) than what is found in this study (DCS, 2019). It is clear that this difference is caused because the informal employment in formal sector (7.9%) is correctly included as informal employment in this study, which is captured as part of formal employment in the DCS statistics. It is estimated that 667,882 people involve in informal jobs in formal sector out of which 62 percent are males and 38 percent are females. Unfortunately, even the existence of this category of informal workers is not recognized or rather they are misleadingly attached to the formal sector due to the definitional limitations in national statistics. Likewise, 88 percent of informal employment comes from the informal sector and rest of the 12 percent comes from the formal sector. Considering the nature or the characteristics of informal workers. in relation to demographic characteristics, what one sees is that both formal and informal employment favour men over women. Married individuals composed overwhelming majority of the informal employment- 76 percent. Proportionately more widows are represented in informal employment than divorced and separated individuals. With respect to household membership of individuals, presence of heads in informal employment is slightly more than that of non-heads. In view of ethno-religious variable, while Sinhalese Buddhist compose more than two thirds of all informal employment, the Sri Lankan Tamil Hindus have the second highest representation in the same. As age increases, individuals' representation in informal employment increases to peak at 40 to 49 age category and then begin to decrease. Moving on to education and literacy levels of people, more educated people are less represented in the informal sector. However, approximately half of informal workers has obtained a senior secondary level qualification. Similarly, least literate people are represented in informal work than in formal employment categories. Referring to spatial variations of individuals, workers from the rural sector dominate informal employment corresponding to the largest

representation of rural sector in country's population. The biggest proportion of informal employment is found in relation to workers from the Western Province. In the formerly conflict affected Eastern province, both public formal workers (four percent) and informal workers (five percent) are in almost equal proportions, while the trend is same for the other conflict affected Northern province too. Parallel to what one sees in relation to provinces, the workers in the three districts in the Western Province- Colombo, Gampaha and Kalutara have their least concentration in informal employment.

In view of characteristics of informal workers by gender demographics reveal that more males (71 percent) than females (64 percent) are informally employed which complies with the findings of Gunatilaka (2008) but contradicts the findings of Arunatilake and Jayawardene (2005) as for their study it was females who were most represented in informal employment. Most males and females in the informal work are married. While more than two-thirds of males in informal work were heads, overwhelming majority of females who were informally employed were non-heads, as expected from a patriarchal country such as Sri Lanka. Proportionately more Sinhala Buddhist women compared to Sinhala Buddhist men are represented in informal employment. However, regarding Muslim Moor, less than half the proportion of Muslim Moor men in the informal employment is to be found for their female counterparts. Considering educational attainment and literacy level, most men and women doing informal work had a senior secondary level educational qualification, while the proportion of women in informal employment who had a tertiary qualification was slightly more than men who had one. Considering literacy, more women in informal work are literate only in Sinhala compared to men, while the trend is opposite for men and women who are literate only in Tamil. More men than women were literate in all three languages. Interestingly, informally employed illiterate women have a slightly higher representation than illiterate men. Referring to spatial attributes, rural sector hosts most of men and most women in informal employment. Also, women and men from the Western province comprise most of the informal employment. While Central, Southern and Sabaragamuwa provinces almost equal proportions of men and women who are informally employed could be found, in formerly conflict affected Eastern and Northern provinces women are underrepresented in informal employment. However in North Western, North Central and Uva provinces, women's representation was higher in informal employment compared to men's representation. In all five districts in the Northern Province and all three districts in the Eastern province, women's concentration in informal work was less than that of men.

4.2 Factors associated with probability of women's involvement in informal employment

Probability of informal employment with reference to all working age women is examined with occasional reference to model 1 for all working age persons and model 2 for all working age men The demographic attributes will be analysed first. Contrary to what is found in most developing countries, in Sri Lanka women are less likely to participate in the informal economy compared to non-participant men. Considering marital status, compared to non-participant married women, never married women are six percent more likely to be in the informal sector, whereas they are four percent more likely to be involved in the private formal employment, 0.5 percent more likely to be in the public formal employment. What this shows is that marriage reduces the likelihood of participation in the labor force altogether and therefore also more strongly in informal employment. The results of the estimation based on the sample of men shows that the impact of marriage on the probability of men's participation in the informal work was positive. This is clearly not the case with women. Thus, while theoretically, and even empirically, the literature suggests that married women are likely to work informally because of the flexibility that the sector offers, enabling them to manage their dual roles, this does not seem to be the case in Sri Lanka. In contrast to the findings in relation to men's greater likelihood of being informally employed, which may be due to either lack of other opportunities, or a desire for flexibility, other considerations are likely to influence married Sri Lankan women in their decision of whether or not to take up an informal sector job.

Besides, while more than half of widows in our sample are found to be heads of household, they are less likely to be employed in informal employment (and also in public formal employment) and are more likely to be in private formal employment compared to the non-participant married women. Widows are more likely to be in private formal employment compared to (non-widowed) non-participant married women, widowers are less likely to be employed overall in all three employment outcomes: public formal, private formal and informal in comparison to (non-widowed) non-participant married men. In contrast, one could notice that divorced (17 percent) and separated (nine percent) women are more likely to participate in informal employment relative to their non-participant married female counterparts. Approximately half of divorced women and more than half of separated women in the sample are found to be heads of households. The flexibility found in informal employment might be concentrating women who have to shoulder the economic responsibilities as well as household

responsibilities both at once in the informal employment. As per the above discussion, the flexibility did not seem to be a defining factor for married women (not divorced or not separated). It could be that married women who are mostly non-heads have more space to choose because of the availability of income from their spouses, whereas divorced or separated women who are mostly heads are likely to have less choice but be employed in whatever the opportunity they come across. However, looking at the estimated mean hourly wages whether informal employment has an empowerment effect particularly on divorced women is questionable with lower wages they receive -Rs. 58.42 compared to Rs. 141.58 received by men who are divorcees. Similarly, compared to non-participant women who are non-heads of households, heads have a higher propensity to be in private informal employment- six percent more. This however seem to support that women are drawn towards informal employment due to the flexibility it offers them to manage multiple responsibilities. Female heads who are natural to be forced to allocate their time between both economic and household responsibilities, seem to be utilizing this flexibility more compared to the non-participant non-heads.

Looking at ethno-religious attributes of women in relation to non-participant women who are Sinhala Buddhists, the women who are Sinhala Christians (four percent), Sri Lankan Tamil Christians (six percent) and Muslim Moors (11 percent) are less likely to participate in the informal economy. Participating Muslim Moor women are generally less likely to participate in all employment outcomes. The situation contradicts with men who are Muslim Moor as they are more likely than their non-participant Sinhala Buddhist male counterparts to be employed in the informal sector. This complies with what Gunatilaka (2008) has also found about Moor community. As observed in Weeratunge's (2001) study their entrepreneurial culture in small scale enterprises is stronger. Since the marginal effects related to the participation of other ethno-religious categories are not significant for women, one cannot see their impact over employment.

In comparison to the non-participant women between 30 to 39 years who do not participate in the labour force, women of all other age cohorts except women between 40 to 49 years and 50 to 59 years are unlikely to be in informal employment. This displays an inverted u-shaped association between the probability of women's participation in informal work and their age categories which is parallel to what was found in relation to all working age individuals.The more the women are educated the less they are likely to be in informal employment. For

instance, compared to non-participant women with an educational qualification less than the primary level, women with a tertiary qualification are 13 percent less likely to be in the informal employment, whereas women with a senior secondary qualification are only six percent unlikely. Therefore, education is one of the important factors that policy makers should focus on to enable women's access to formal employment. Women workers with a tertiary qualification (47 percent more) are most likely to be found in public formal employment compared to their non-participant least educated counterparts.

Women of all literacy levels and languages are less likely to be in informal employment compared to non-participant women who are literate only in Sinhala. However no clear association of literacy in different languages can be derived mainly because even the ones who are not literate in any of the languages are less likely to be informally employed. Nonetheless, considering the magnitude, women who are literate only in English are the least likely (14 percent) to be in informal employment compared to the base category. However, this group is a thin minority of women in the working age group as found in the sample. Women literate in all three languages seem to have the greatest likelihood (seven percent more) in participating in public formal employment and also approximately seven percent less likely to be in informal employment compared to non-participant women alliterate only in Sinhala. Also, women literate in both Sinhala and English were also more likely to participate in formal forms of employment. There is substantial evidence (Dundar et al., 2014) suggesting that literacy in English language is paramount to occupational progress, particularly in relation to private formal employment. Therefore, improving women's literacy in all three languages or two language including English could be a means to enable women to move from informal employment to the formal sphere. Model 1 and 2 also reports a similar situation in relation to education and literacy (refer table 6 and 7 respectively). More education and literacy in at least two languages including English seem to be reducing the likelihood of individuals' participation in informal work.

In view of spatial factors, compared to non-participant women in the urban sector, rural women are more likely to be in informal work in contrast to the women in estate sector who have a less likelihood to be in informal employment. Taking province of residence into account, women in all provinces except Northern and Eastern Provinces have a higher likelihood to participate in informal employment compared to the non-participant women in the Western province. What one sees in these two formerly conflict affected provinces is that women are more likely

to be found in public formal employment than private formal and informal employment, compared to non-participant women in the Western province. Men in these two provinces are more likely than non-participant men in the Western Province to work informally (refer table 7).

5.Conclusions and, research and policy implications

Considering the findings of this study, one cannot be satisfied simply because more males than females are informally employed or that women are less likely to be informally employed compared to non-participant men. Sri Lanka is a signatory of the CEDAW since July 1980 and thereby the government of Sri Lanka is made responsible to protect women's rights "to same employment opportunities," and "to promotion, job security and all benefits and conditions of service" (CEDAW, 1979). As was very well established in literature, women are particularly disadvantage in informal employment, and this study finds that more than half of employed women are in informal employment. Therefore, this calls attention of policy makers to safeguard the rights of women by improving their conditions of employment. .Further, the findings clearly establish that informal employment in formal sector is not recognized in national statistics or rather misleadingly attached to the formal sector and that 38 percent of informal employment in formal sector is performed by women. While this calls attention for the rights of both men and women in this category, given that women are specifically vulnerable in informal employment, special attention should be given to these women. The first step would be to adopt the international standard definition of informal employment as opposed to limiting the scope of national statistics to informal sector. This should not be a difficult endeavor because DSC already collects sufficient information to do so. Also, it is worth collecting data on producer's cooperatives in order to fully comply with the 15th ICLS definition. By collecting data also on producers' cooperatives, full compatibility to this definition can be achieved in Sri Lanka.

There are important conclusions to be reached considering the factors associated with probability of women's employment. Although married women are less likely to be informally employed compared to their non-participant female counterparts, divorced and separated women are more likely to participate in informal employment, majority of these two categories were also found to be heads of household. For the purpose of closely analyzing these categories, the estimated mean hourly wages were also looked at and that revealed that the category of divorced women earn even less than half of what divorced men would earn. In connection to

this trend, in comparison to non-participant female non-heads, female heads of household display a higher propensity to be in informal employment. However, it was interesting that widowed women are less likely to be informally employed. Therefore, divorced and separate women, who might also be socially marginalized due to their marital status, and overall the female heads of household who have to shoulder both economic and household responsibilities than other women should be given special focus in terms of providing safer employment opportunities. Improving the levels of literacy and education of women becomes important as per the findings of this study, as it is found that more education and literacy in at least two languages including English reduce the likelihood of individuals' participation in informal work. Literacy in English should thus be given significance in literacy and education programs targeted at women.

Considering the spatial factors, it should also be noted that although women in estate sector are reported to be less likely to be informally employed compared to non-participant urban men, unlike rural women who are more likely, the marginalization of estate workers particularly women is well documented in literature (CEPA, 2005). Therefore, employment in estate sector should be treated as a separate matter of importance. It was also found that women in all provinces except Northern and Eastern Provinces have a higher likelihood to participate in informal employment compared to the non-participant women in the Western province. The two formerly conflict affected provinces report a negative association with women's probability of participating in the informal employment, compared to non-participant women in the Western province. Although, women are more likely to be employed in private formal employment in these two provinces, since the end of the armed conflict in Sri Lanka, these districts are in an economic transition. Hence, more economic opportunities are still coming up. Therefore, it is important to support the livelihoods of these people, particularly the female headed households in order for them access safe employment opportunities. As a future research implication, it is worth looking at the probability of informal employment with the selected sample of female heads of household, in order to better understand patterns of informal employment with regards to women in Northern and Eastern provinces. All in all, this study emphasizes the importance of identifying informal employment in formal sector in national statistics and of concentrating on education, literacy, and female heads of household– particularly the ones who are divorced and separated- in programs aimed at improving employment conditions of women.

6 Annexures

Annex I: Conceptual framework of informal employment devised by the 15th ICLS

In absence of an international statistical definition of the informal sector, the 15th ICLS stepped forward to devise a conceptual framework in satisfying two key objectives: (i) providing guidelines for national statistical agencies to develop "definitions and classifications of the informal sector" and to allow them to follow appropriate data collection mechanisms pertaining to the local variations, and (ii) enhancing the international comparability of statistics from each country by reducing such variations and standardizing the definitions (ILO, 1993). While this conceptual framework was submitted to the 17 International Conference of Labour Statisticians (17th ICLS), it "examined the framework, made some minor amendments to it, and adopted guidelines endorsing it as an international statistical standard" (Hussmanns, 2003).

It should be reiterated that the 15th ICLS's conceptual framework defines informal employment as opposed to informal sector because informality in economic activities could be found even outside of the informal sector (Hussmanns, 2003). In the framework informal employment is defined in terms of sectors and jobs. As per this framework, a sector refers to a production unit as an observation unit whereas employment is referred to as occupations as observation units (ILO, 1993). There are three sectors or three types of production units as observation units: (a) formal sector enterprises, (b) informal sector enterprises, and (c) households. Formal sector enterprises include "corporations (including quasi-corporate enterprises), non-profit institutions, unincorporated enterprises owned by government units, and those private unincorporated enterprises producing goods or services for sale or barter which are not part of the informal sector" (Hussmanns, 2001).

A production unit is identified to be informal based on several criteria. First, these units have to be unincorporated enterprises owned by households, by own-account individuals, individuals who are helped by their unpaid household members, or by groups of individuals from different households forming unincorporated partnerships and co-operatives. No or little financial separation between these enterprises and the owners of the enterprises is possible as complete accounts are not maintained. Second, all or some produce of these units have to be for barter or sale. Third, the production unit should not be registered under any form of national legislation. Fourth, in terms of employment, the number of employees should be below a nationally pre-determined threshold, and the employees had to be unregistered legally. Finally, 15th ICLS recommended the non-inclusion of agricultural activities and production done purely

for one's own final consumption or own fixed capital formation. Inclusion of paid domestic workers in households was also kept optional based on national situation by the 15th ICLS. However, paid domestic workers were excluded entirely in 17th ICLS guidelines, which is one of the amendments to the 15th ICLS definition (ILO, 1993; Hussmanns, 2001; ILO, 2003a; ILO, 2003b).Households as production units refer to households whose production is completely limited for their own final use, such as subsistence farming and own-house constructions, and also the households who provide work for domestic workers on a paid basis. Unpaid domestic or personal services, such as child care provision and daily housework, are not included in households as production units since currently these activities are not recognized as employment in the System of National Accounts (Hussmanns, 2001; ILO, 2003a; ILO, 2003b; OECD, 2008).Similarly, jobs as observation units are categorized as per employment status and whether they are formal or informal in nature.Employment status is derived from International Classification of Status in Employment (ICSE-93) which categorizes employment into five different types: (a) own-account workers, (b) employers, (c) contributing family workers, (d) employees, and (e) members of production cooperatives. According to this framework, each of these job categories could be either informal or formal in nature. Jobs as observation units are considered informal when the enterprises in which a particular job is placed is small in employee number or not registered, or when a particular job and its incumbent lack the coverage from labour legislations (ILO, 2003a; ILO, 2003b). Table 3 provides a matrix of this conceptual framework.

Annex II: Statistical definition used by the Department of Census and Statistics

DCS has been collecting sufficient data since 2013 to allow for a comprehensive analysis of informal employment according to the aforementioned international conceptual framework. Nonetheless, it still uses the concept of informal sector employment or employment in the informal sector to define the informal sector, as opposed defining informal employment (DCS, 2013).

As per LFS 2013 the employed population includes (1) persons who work as paid employees, (2) employers, (3) own account workers (self-employed), or (4) contributing family workers (DCS, 2013). The employers, own-account workers or self-employed individuals and unpaid family workers are classified as being in formal employment (i) if their production unit is registered in Employment Provident Fund (EPF) or Department of Inland Revenue (DIR); (ii) if formal accounts are maintained by the institution; or (iii) if the number of regular employees

exceeds nine (DCS, 2013). This definition is consistent with the characterization of production units as observation units to identify informal sector enterprises in the 15th ICLS's conceptual framework, with national thresholds for number of employees. If the employers, own-account workers and self-employed individuals do not belong to the formal sector, they are considered as informal employers, own-account workers and self-employed individuals (DCS, 2013).

Concerning employees, it should be noted that formal employees include those who are in the public sector- that is the central and provincial governments and the semi-government sector. Therefore, employees were identified as formal (i) if they belong to the public sector or (ii) have a permanent tenure. The LFS 2013 schedule allows to learn whether an employee receives some form of social or job security such as pension or paid leave which are prescribed in 15th ICLS as a criterion to define whether an employee is formal or informal. However, DCS uses the sole criteria of having a permanent tenure to define a formal sector employee, in addition the public sector criterion. Employees who do not satisfy these conditions are categorized in to informal employees (DCS, 2013).

In short, according to the DCS definition, the aggregation of employers in the formal sector production units, own account workers running formal sector production units, unpaid family workers serving in formal sector production units and employees who belong to the public sector or have a permanent tenure encapsulate formal sector employment. The total number of employed persons who do not belong to the formal sector is considered as informal sector employment.

References

1. Arunatilake, N., & Jayawardena, P. (2005). Informality in the Sri Lankan Labour Market. Colombo, Sri Lanka: Institute of Policy Studies, unpublished manuscript.
2. Arunatilake, N., and Jayawardena, P. (2010). Why People Choose to Participate in the Informal Sector in Sri Lanka. The Indian Journal of Labour Economics, 53(2), 225-250.
3. Chandrasiri, S. (2013). Employment Sector Employment. Working Paper No. 139., International Labour Office, Geneva.
4. Chant, S. and Pedwell, C. (2008). Women, Gender and the Informal Economy: An Assessment of ILO Research and Suggested Ways Forward, International Labour Organisation (ILO) Discussion Paper, Geneva: ILO.
5. .Chen, M. (2010). Informality, Poverty and Gender: Evidence from the Global South, Chapter 71. International Handbook of Gender and Poverty: Concepts, Research, Policy. S. H. Chant, S. H. (Ed.), Cheltenham: Edward Elgar Publishing Limited.
6. Chen, M. A. (2012). The informal economy: Definitions, theories and policies. Women in informal economy globalizing and organizing: WIEGO Working Paper, (1).
7. Convention on Elimination of All Forms of Discrimination Against Women (CEDAW), (1979). Available at http://www.ohchr.org/Documents/ProfessionalInterest/cedaw.pdf
8. .Department of Census and Statistics (2019). Sri Lanka Labour Force Survey: Annual Report.
9. Gaughan, J. P., and Ferman, L. A. (1987). Toward an Understanding of the Informal Economy. The Annals of the American Academy of Political and Social Science, (493)15-25.

10. Günther, I., and Launov, A. (2012). Informal Employment in Developing Countries: Opportunity or Last Resort? Journal of development economics, 97(1), 88-98.
11. Gunatilaka, R. (2008). Informal Employment in Sri Lanka: Nature, Probability of Employment and Determinants of Wages. International Labour Organization, Colombo.
12. Gunatilaka, R. (2010). Sri Lanka's Working Poor. Geneva: ILO.
13. Gunatilaka R., and Vodopivec, M. (2010). "Chapter 2: Labor Market Institutions and Labor Market Segmentation in Sri Lanka." In The Challenge of Youth Employment in Sri Lanka. Eds. Gunatilaka R., Mayer, M. and Vodopivec, M. World Bank.
14. Gunawardena, D. (2006). Exploring the Gender Wage Gaps in Sri Lanka: A Quintile Regression Approach, A paper presented during the 5th PEP Research Network General Meeting; June 18-22, 2006, Addis Ababa, Ethiopia.
15. Hart, K. (1973). Informal Income Opportunities and Urban Employment in Ghana.The Journal of Modern African Studies, 11(01), 61-89.
16. Heintz, J. (2010). Women's Employment, Economic Risk and Poverty, Chapter 66. International Handbook of Gender and Poverty: Concepts, Research, Policy. S. H. Chant, S. H. (Ed.), Cheltenham: Edward Elgar Publishing Limited.
17. Hussmanns, R. (2001). Informal sector and informal employment: Elements of a conceptual framework. Paper presented at the 5th Meeting of the Expert Group on Informal Sector Statistics (Delhi Group), New Delhi.
18. Hussmanns, R. (2003). Statistical definition of informal employment: Guidelines endorsed by the Seventeenth International Conference of Labour Statisticisns : Agenda item (i) of the 7th Meeting of the Expert Group on Informal Sector Statistics (Delhi Group) (2004), International Labour Office, Geneva
19. ILO- International Labour Organization. (1972). Employment, Incomes and Equality: a Strategy for Increasing Productive Employment in Kenya; Report of an Inter-agency Team financed by the United Nations development programme. International Labour Office, Geneva
20. ILO (1976), Growth, Employment and Equity: A Comprehensive Strategy for Sudan. International Labour Officer, Geneva.
21. ILO (2002a). Women and men in the informal economy: A statistical picture. Employment sector, International Labour Office, Geneva.
22. ILO-International Labour Office (2002b): Effect to be given to resolutions adopted by the International Labour Conference at its 90th Session (2002), (b) Resolution concerning decent work and the informal economy; Governing Body, 285th Session, Seventh item on the agenda; Geneva, November 2002 (doc.GB.285/7/2)
23. ILO- International Labour Office (2003a). Guidelines concerning a statistical definition of informal employment, endorsed by the Seventeenth International Conference of Labour Statisticians (November-December 2003); in: Seventeenth International Conference of Labour Statisticians (Geneva, 24 November - 3 December 2003), Report of the Conference; Doc. ICLS-R-2004-01-0295-1-EN.doc/v2; International Labour Office, Geneva, 2003
24. ILO- International Labour Organization (2003b). Report of the Conference: Seventeenth International Conference of Labour Statisticians, Geneva, International Labour Office, Geneva
25. ILO (2012). Global Employment Trends for Women. International Labour Organization, Geneva.
26. ILO- International Labour Organization (2013). Women and men in the informal economy: A statistical picture. International Labour Office, Geneva.
27. Jayaweera, S., and Sanmugam, T. (1998). Women's Rights in the Informal Sector: Mahaweli Settlements, Coir Industry. Centre for Women's Research (CENWOR).

கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமை முகாமைத்துவ ஜனாதிபதி செயலணியும், அது மட்டக்களப்பு மாவட்ட தமிழ் பேசும் மக்களின் அடையாளத்தில் ஏற்படுத்திய தாக்கங்களும்: ஓர் விமர்சன நோக்கு

மாதங்கி உதயகுமார்,[1] அ. கண்ணேராஜ்[2]
[1,2]சமூக விஞ்ஞானங்கள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[1]mathangielizabath@gmail.com, [2]kanneraja@esn.ac.lk

ஆய்வுச் சுருக்கம்

2019இல் அதிகாரத்துக்கு வந்த கௌரவ கோத்தபாய ராஜபக்ஷ அவர்கள் நாட்டின் அரசியலமைப்பின் உறுப்புரிமை 33 இற்கமைய கிழக்கு மாகாணத்திற்கான தொல்பொருள் மரபுரிமை முகாமைத்துவ ஜனாதிபதி செயலணியொன்றை அமைத்தார். இந்தச் செயலணி அமைக்கப்பட்டது முதல் பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாகியது. அத்துடன் இது தனது செயற்பாடுகளை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பித்தபோது மாவட்ட மக்களிடையே பல்வேறு வகையான பதற்ற நிலைமைகளையும், அமைதியின்மைகளையும் ஏற்படுத்தியிருந்தது. இவ்வாறான செயற்பாடுகள் மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களது உரிமைகளை மீறுவதாகவும், பாதுகாப்பற்ற நிலைமைகளை ஏற்படுத்துவதாகவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இந்த வகையில் மேற்படி செயலணியின் தோற்றமும், அதன் செயற்பாடுகளும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் பேசும் மக்களது அடையாளங்களில் தாக்கம் செலுத்தி உள்ளதா? என்பதை ஆராய்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும். இவ்வாய்விற்காக முதல்நிலைத் தரவுகளும், இரண்டாம்நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டன. குறிப்பாக மாவட்டத்தின் முக்கிய அரசியல் தலைமைகள், அரச அதிகாரிகள், தொல்லியல் தொடர்பான ஆர்வலர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் போன்றோர்கள் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டனர். அதன் மூலம் இச்செயலணியின் உள்நோக்கங்கள் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பாகவும், அதனால் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் எதிர்நோக்கிய அசௌகரியங்கள் தொடர்பாகவும் தகவல்கள் திரட்டப்பட்டன. திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையிலும், அவதானிப்புகள் மற்றும் அனுமானங்கள் ஊடாகவும் ஆய்வின் முடிவுகள் பெறப்பட்டன. ஆய்வின் முடிவுகளாக இச்செயலணியின் உருவாக்கத்திற்கான பல மறைமுக நோக்கங்கள் காணப்படுகின்றமையையும், மத ரீதியாக, மொழி ரீதியாக, வதிவிட ரீதியாக தமது சுதந்திரம் மறுக்கப்படுகின்றமையும், தமிழ் பேசும் மக்களது அடையாளங்கள் சிதைக்கப்படுவதையும் அறிய முடிந்தது. அதேவேளை மாவட்டத்தில் குறிப்பிட்ட சிலபிரதேசங்களை இலக்கு வைத்தே தொல்பொருள் செயலணியின் செயற்பாடுகள் அமைந்திருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

திறவுச் சொற்கள்: கிழக்கு மாகாணம், தொல்பொருள் அடையாளங்கள், ஜனாதிபதி செயலணி, தமிழ் பேசும் மக்கள், சிறுபான்மையோர் உரிமைகள்

அறிமுகம்

இவ்வாய்வானது மட்டக்களப்பு மாவட்டத்தில் தொல்பொருள் தொடர்பிலான ஜனாதிபதி செயலணியின் செயற்பாடுகள் மாவட்டத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களின் அடையாளங்களில் ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றியதாகும். கிழக்கு மாகாணத்தில் உள்ள மட்டக்களப்பு மாவட்டம் பெரும்பான்மையாகத் தமிழ் மக்களைக் கொண்ட ஓர் வரலாற்று சிறப்புமிக்க பிரதேசமாகும். இங்கு தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் மற்றும் பறங்கியர் என அனைத்து இன மக்களும் வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கை சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் பின்பற்றிய தமிழர்களுக்கு எதிரான பல தவறான கொள்கைகளினால் இன முரண்பாடுகள், மோதல்கள் மற்றும் பல்வேறு இனக்கலவரங்கள் இடம்பெற்று வந்துள்ளன. அது இறுதியில் உள்நாட்டு யுத்தத்திற்கு வழியேற்படுத்தியிருந்தது. முப்பது வருடங்களுக்கு மேலாக இடம்பெற்ற யுத்தத்தினால் முழு நாடும் பல்வேறு வகையான இழப்புக்களைச் சந்தித்திருந்தது. இவ் உள்நாட்டு யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் காணப்பட்டது. அத்துடன் அபிவிருத்தியிலும் பின்தங்கியிருந்தது. எவ்வாறெனினும், 2009 இல் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் இந்நிலைமையில் மாற்றம் ஏற்பட்டு, அபிவிருத்திப் பாதையில் படிப்படியாக நகரத் தொடங்கியது. இந்த நிலையிலேயே 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற கோத்தாபாய ராஜபக்ஷ அவர்கள் 2020 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 02 ஆம் திகதி கிழக்கு மாகாண

தொல்பொருள் மரபுரிமை முகாமைத்துவ ஜனாதிபதி செயலணியை அமைத்தார். அது 2178/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டு நடைமுறைக்கு வந்தது.

இச்செயலணியானது ஆரம்பத்தில் நாட்டின் பாதுகாப்பு செயலாளரான முன்னாள் இராணுவ அதிகாரி ஜெனரல் கமல் குணரத்ன அவர்களின் தலைமையின் கீழ் பௌத்த மதத்தலைவர்கள் மற்றும் பெரும்பான்மையினரான சிங்களவர்களை மட்டும் உறுப்பினர்களாகக் கொண்டு கிழக்கு மாகாணத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டு அமைக்கப்பட்டிருந்தது (https://www.parlsl Admin of Peoples' alliance for right of land). இதன் பின்னர் எழுந்த கண்டனங்களைத் தொடர்ந்து சிறுபான்மையின உறுப்பினர்கள் இருவர் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

இச்செயலணியின் நோக்கமானது கிழக்கு மாகாணத்தில் காணப்படுகின்ற தொல்பொருள் பிரதேசங்களை அடையாளப்படுத்தி, எல்லையிட்டு பாதுகாப்பது எனத் தெரிவிக்கப்பட்டிருப்பினும், வெறுமனே மட்டக்களப்பு மாவட்டத்தை மட்டும் முதன்மைப்படுத்தியிருந்தது. அத்துடன் தொல்பொருட்கள் தொடர்பான விடய ஞானமுடையோர் ஏனைய இன, மத மக்கள் மத்தியில் இருந்த போதும் குழுவின் உறுப்பினர்களாக சிங்கள பௌத்தர்கள் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறான விடயங்கள் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் உள்ளிட்ட கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களை தோற்றுவித்திருந்தது. இச்செயலணியானது மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் தொல்பொருள் சார்ந்த இடங்கள் பரந்து காணப்பட்ட போதும் அறுநூற்று நாற்பத்தெட்டு இடங்களை தொல்பொருள் மரபுரிமை சின்னங்கள் காணப்படுகின்ற இடங்களாக அடையாளப்படுத்தியதுடன், பல பிரதேசங்களில் தமது ஆய்வுகளை ஆரம்பித்திருந்தது (தேசிய கண்காணிப்பு அலுவல்கள் செயலகத்தின் கண்காணிப்பு பிரிவு, அறிக்கை,2019). அவற்றில் பல தனியார் காணிகளாகவும். நீண்டகாலமாக மக்களால் வழிபாட்டுத்தலங்களாகவும், விவசாய நிலங்களாகவும், தொழில் செய்யும் இடங்களாகவும், பொதுப்பயன்பாட்டு இடங்களாகவும் பயன்படுத்தப்பட்டிருந்தன.

இன்று உலகளாவிய ரீதியாக மனித உரிமைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. அத்துடன் இலங்கையும் மனித உரிமைகள் தொடர்பாக பல்வேறு சர்வதேச சாசனங்களில் கையொப்பமிட்டுள்ளது. ஆதலால் மனித உரிமைகளைப் பேண பல்வேறு முயற்சிகளையும் எடுத்து வருகின்றது. இவ்வாறான பின்னணியில் மேற்படி செயலணியினால் காணிகளில் மரபுரிமைச் சின்னங்கள் இனங்காணப்பட்டு அதனை பாதுகாக்கவும், பராமரிக்கவும் முயல்கின்ற வேளைகளில் பல்வேறு பிரச்சினைகள் எழ ஆரம்பித்தன.

ஏற்கனவே பல்வேறு பாதிப்புகளுக்கு உட்பட்ட மட்டக்களப்பு மாவட்ட மக்கள் தமது அடிப்படை உரிமைகள், மனித உரிமை, வாழ்வியல் உரிமை, தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கான உரிமைகள் மீறப்படுவதாகவும், தாம் பிரதேசம், மதம், இனம் போன்ற காரணிகளினால் புறக்கணிக்கப்படுவதாகவும் உணரத் தலைப்பட்டனர். அத்துடன் தமது இன, மத, மொழி, வாழ்வியல் பிரதேசம், தொழில் போன்ற அடையாளங்கள் திட்டமிடப்பட்டு அழிக்கப்படுவதற்கான முயற்சியாக இவற்றைக் கருத முற்பட்டனர். எனவே இவ்வாய்வானது ஜனாதிபதி செயலணியினது செயற்பாடுகள் மட்டக்களப்பு மாவட்ட மக்களது அடையாளங்களில் ஏற்படுத்திய தாக்கங்கள் தொடர்பாக கவனம் செலுத்தியது.

இலக்கிய மீளாய்வு

கிருஷ்ணமோகன். த, 2021, ‘‘மோதல் தீர்வுக் கற்கைகள் ஓர் அறிமுகம்’’, குமரன் புத்தக இல்லம், கொழும்பு-06. ‘‘ஒவ்வொரு தனிமனிதனுக்கும் மனித உரிமைகள் அவசியம். மனித உரிமைகள் பாதுகாக்கப்படாமல் சமாதானத்தை அடைய முடியாது. சமாதானம் இல்லாமல் மனித உரிமைகளை பாதுகாக்க முடியாது. மனித உரிமைகள் பாதுகாக்கப்படாத சமாதானம் பலவீனமானதாகும் ’’ எனவும் குறிப்பிடுகின்றார் (ப 220). மேலும் ஜொகான் கல்துங்கின் வன்முறைக் கோட்பாடு, வன்முறை முக்கோணி, வன்முறை சுழற்சி, கலாசார வன்முறையின் தூண்டிகள் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது (ப 135- 143).

பத்மநாதன். சி,(2016), ‘‘இலங்கை தமிழர் வரலாறு’’, மற்றும் பத்மநாதன். சி,(2013), ‘‘இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்- II’’ இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு ஆகிய நூல்களில் மட்டக்களப்பு நகரின் பண்பாட்டு சின்னங்கள், கல்வெட்டுக்கள் பற்றிய விபரங்கள் மற்றும் மாவட்டத்தில் அடையாளங்காணப்பட்ட தொல்லியல் இடங்கள் பற்றி குறிப்பிடுகின்றார்.

புஸ்பரட்ணம், (2007) ‘‘ தொல்லியல் நோக்கில் ஈழத்தமிழரின் பண்டைக்கால மதமும், கலையும்’’ குமரன் புத்தக நிலையம். இக்கட்டுரை மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்கள் பண்டைய காலத்தில் வசித்தமையையும் அவர்களது மதம் மற்றும் கலாசாரங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றது.

‘‘தேசிய கண்காணிப்பு அலுவல்கள் செயலகத்தின் கண்காணிப்பு பிரிவு, அறிக்கை’’ இலக்கம் சீ ஏ எஸ்/ சீ/ பீ ஈ ஆர்/ ஏ / ஏ. ஆர்/ சீ/ 2019. இவ்வறிக்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற தொல்பொருள் அடையாளம் காணல், பாதுகாத்தல், எல்லையிடல் மற்றும் தொல்பொருள் அகழ்வு நடவடிக்கைகள் என்பனவும் தொல்பொருள் திணைக்களத்தின் நடவடிக்கைகளில் இடம்பெற்ற குறைபாடுகளாகக் சுட்டிக்காட்டுகின்றது.

Bandarage.A, 2009, ‘‘The Separatist Conflict in Sri Lanka", எனும் அறிக்கையில் இலங்கையின் பிரிவினைவாத பிரச்சினையை விளக்குவதுடன் சிக்கலான வரலாறு மற்றும் நடைமுறையில் உள்ள அதிகார போட்டி நிலை, பிரச்சினைக்கான மூலம் போன்றவற்றை விளக்குவதுடன் பரந்த அளவாக ஆராய்கிறது.

‘‘Sri Lanka : UN Report describes Alarming rights situation’’,இன் படி இலங்கையில் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நவம்பர் மாதம் வரை இடம்பெற்ற 45 காணிப் பிரச்சினைகள் தொடர்பாக தெரிவிக்கின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் Michelle Bachelet அவர்களின் கூற்றுப்படி அரசாங்க திட்டங்களை அடையாளம் காணுதல், பௌத்தமத தலங்களை கிழக்குப் பிரதேசங்களில் அமைத்தல் ஆகியன கிழக்கு இனரீதியான காணிப்பரம்பல்களில் மாற்றத்தை ஏற்படுத்துவது சம்மந்தமாக குறிப்பிடுகின்றார். குறிப்பாக இவ்வறிக்கை கிழக்கு மாகாண தொல்பொருள் செயலணியின் நோக்கங்களுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது.

Bandaranayake. S, 2003, "Archaeological Heritage Management in Sri Lanka:", The role of the political Rulers in the Buddhist monasteries, இந்நூல் புராதன சின்னங்களை பாதுகாப்பது தொடர்பான அரசின் செயற்பாடு பற்றி விளக்குகிறது. இது கிழக்கு மாகாணத்துக்காக அமைக்கப்பட்ட தொல்பொருள் மரபுரிமை ஜனாதிபதி செயலணி தொடர்பாகவும் அது தனது செயற்பாடுகளை செய்வது தொடர்பாகவும் குறிப்பிடுகின்றது.

Wicramasinghe .N , 2013, "History as Heritage: producing the present in post war Sri Lanka" இலங்கையில் யுத்தத்தின் பின்னரான மரபுரிமைக்கு திரும்புதல், பொருளாதார அபிவிருத்தியும், மரபுரிமையும், மரபுரிமைகளை பேணிப் பாதுகாப்பதற்கான அமைப்புரீதியான நிறுவனங்கள், அரச மற்றும் சட்டரீதியான அமைப்புகள் போன்றவை பற்றியும், மரபுரிமை தொடர்பான நடைமுறைகள், முரண்பாடுகள், கருத்து வேறுபாடுகள் போன்றவை தொடர்பாக விளக்கப்பட்டுள்ளது. இது ஆய்வுடன் மிக நெருக்கமான தொடர்பு கொண்டதுடன் யுத்தத்தின் பின்னரான பிரச்சினைகளை உள்ளடக்கியுள்ளது.

Keethaponcalan.S.I,(2020) "Sri Lanka: weaponizing Archaeology" என்னும் கட்டுரையானது இலங்கையில் தொல்பொருள் சின்னங்கள் அமைந்துள்ள இடங்கள் தொடர்பாக நடைமுறைச் சிக்கல்களை கூறுவதாகவும், இச்செயலணியின் செயற்பாடுகள் காரணமாக தமிழ் முஸ்லிம் மக்கள் எதிர்கொள்கின்ற காணி தொடர்பான பிரச்சினைகளையும் விளக்குவதாக அமைந்திருக்கின்றது.

"The presidential Task Force for Archaeological Heritage management in eastern province" (2020) Admin of Peoples' alliance for right of land கட்டுரையானது கிழக்கு மாகாணத்திற்கான தொல்பொருள் மரபுரிமை சின்னங்கள் முகாமைத்துவ செயலணி எந்த அதிகாரத்தின் கீழ் ஜனாதிபதியால் அமைக்கப்பட்டது, செயலணி அமைக்கப்பட்டதற்கான காரணங்கள், செயலணிக்கான அதிகாரங்கள், செயலணியின் உறுப்பினர்கள், செயலணிக்கு எதிரான விமர்சனங்கள், ஏனைய தொல்பொருள் செயலணியுடன் தொடர்புடைய நிறுவன அமைப்புகளும், இவ்வாறான நிறுவனங்களுடன் மேற்படி செயலணிக்கு உள்ள தொடர்பு தொடர்பாகவும், இச்செயலணியின் செயற்பாடுகள் தொடர்பான சிபாரிசுகளையும் விளக்குவதாக அமைகிறது.

மேலதிகமாக இந்த செயலணி அமைக்கப்பட்டு அதன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்றுவரை அதன் செயற்பாடுகள் மற்றும் அவற்றுக்கு எதிரான முன்னெடுப்புக்கள் தொடர்பாக காலத்துக்கு காலம் வெளிவந்த பத்திரிக்கை செய்திகளையும் மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலான செய்திகளும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வு முறையியல்

இந்த ஆய்விற்கான பிரச்சினையை தெளிவாக வரையறை செய்து, அதனை பகுப்பாய்வு செய்வதற்கான தரவுகள், தகவல்கள் சேகரிக்கப்பட்டு, சேகரிக்கப்பட்ட விபரங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அவற்றிலிருந்து முடிவுகள் பெறப்பட்டுள்ளது.

தரவு மூலங்களும் தரவு சேகரிப்பும்

இவ்வாய்வுக்காகத் தரவுகள் முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை மூலங்களின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்டது. முதல்நிலைத் தரவுகள் நேர்காணல்கள், தொலைபேசி ஊடான கலந்துரையாடல்கள், கள விஜயம், எழுமாறான நேர்காணல் போன்ற கருவிகள் மூலமாகப் பெறப்பட்டுள்ளன. நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டவர்களிடம் இருந்து அவர்களது அனுபவம், உணர்வுகள், அவர்கள் எதிர் நோக்கிய பிரச்சினைகள், சுய கருத்துக்கள் போன்றவற்றின் ஊடாக தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இதற்கென தெரிவுசெய்யப்பட்ட பிரதேசத்தில் வசிக்கின்ற பொதுமக்கள், மக்கள் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள், உள்ளூர் அரசியல் பிரமுகர்கள், தொல்பொருளியலுடன் தொடர்புடைய ஆர்வலர்கள் போன்றவர்கள் பயன்படுத்தப்பட்டனர்.

இரண்டாம் நிலைத் தரவுகளாக ஆய்வுடன் தொடர்புடைய நூல்கள், தல வரலாறுகள், சஞ்சிகைகள், அறிக்கைகள், பத்திரிக்கைச்செய்திகள், சமூக ஊடக செய்திகள் போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு பெறப்பட்ட தரவுகள் பொதுமைப்படுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

இவ்வாய்வில் பண்புசார் பகுப்பாய்வு மற்றும் அளவுசார் பகுப்பாய்வு ஆகியன இணைந்த வகையிலான கலப்புப் பகுப்பாய்வு பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு இனங்காணப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக பரிசோதனைகள் மேற்கொள்ளக் கூடிய வாய்ப்புகள் மிகவும் அரிதாகக் காணப்பட்டது. ஆதலால் அவதானிப்புக்கள்(Observing Phenomena), அனுமானங்கள் என்பவற்றில் அடிப்படையிலான விமர்சன ரீதியான(Descriptive Method) கண்டடைவுகள் பெறப்பட்டுள்ளன.

ஆய்வுப் பிரச்சினை

வர்த்தமானி அறிவித்தலின்படி, 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 02 திகதி செயற்பாட்டிற்கு வந்த கிழக்கிலங்கைத் தொல்பொருள் மரபுரிமை செயலணியின் நோக்கம் இலங்கை மிகவும் சிறப்பானதும், பெருமை வாய்ந்ததுமான மரபுரிமை கொண்ட நாடாகும். ஒரு நாட்டின் தொல்பொருள் மரபுரிமையானது தனித்துவமான அடையாளத்தையும், வரலாற்றுப் பாரம்பரியத்தையும் பிரதிபலிப்பதாகும். இவ்வாறான மிகப் பெறுமதியான மரபுரிமைகள் இயற்கை மற்றும் மனிதக் காரணிகளால் தொடர்ச்சியாக அச்சுறுத்தலுக்கு உட்படுவதுடன் அழிவடைந்து வருகின்றது எனவும், இலங்கை உள்நாட்டு மற்றும் சர்வதேச ஒப்பந்தங்கள் ஊடாக இவ்வாறான மரபுரிமைகளை பேணிப்பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளது (அதிவிசேட வர்த்தமானி இல 2178/17,2020) எனக் கூறப்பட்டுள்ளது.

இச்செயலணி அமைக்கப்பட்டமைக்கான நோக்கங்கள் நேரடியாக மேற்கண்டவாறாக குறிப்பிடப்பட்டிருப்பினும் பல்வேறு வகையான மறைமுக நோக்கங்களை அது கொண்டிருப்பதாக சந்தேகங்கள் எழுந்தன. மேலும் இச்செயலணியின் செயற்பாடுகளினால் மாவட்ட மக்களின் வாழ்வியல், மத, கலாசார மற்றும் பொருளாதார ரீதியான இயல்பு நிலைகளில் தாக்கங்களை ஏற்படுத்தி இத்தாக்கங்களினால் மாவட்ட தமிழ் பேசும் மக்களின் இன, மத, கலாசார, வாழ்வியல் அடையாளங்களில் சிதைவுகளை ஏற்படுத்துவதனூடாக அவர்களின் கலாசார உணர்வுகளில் எதிர்மறையான பாதிப்புக்களை ஏற்படுத்துவதுடன் அது கலாசார வன்முறைக்கு

தூபமிடுவதனூடாக நாட்டில் இனங்களுக்கிடையேயான இன வன்முறைக்கு வழிவகுக்கும் எனும் கோணத்தில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வின் நோக்கம்

இவ்வாய்வின் பிரதான நோக்கம் கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமை செயலணி மட்டக்களப்பு மாவட்ட தமிழ் பேசும் மக்களது அடையாளங்களில் ஏற்படுத்திய தாக்கங்கள் தொடர்பானதாயினும் இதன் உப நோக்கங்களான இச்செயலணியானது மாவட்ட மக்களின் இயல்பு வாழ்க்கையில் ஏற்படுத்திய பாதிப்புக்கள் மற்றும் அதன் விளைவாக ஏற்படக்கூடிய கலாசார வன்முறைகள் மற்றும் இச்செயலணியின் உருவாக்கம் தொடர்பான மறைமுக காரணிகளை கண்டறிதல் போன்றவையாகும்.

ஆய்வு வினாக்கள்

1. இச்செயலணியின் செயற்பாடுகள் இம்மாவட்டத் தமிழ்பேசும் மக்களின் இயல்பு வாழ்க்கையில் தாக்கம் செலுத்தி உள்ளதா?
2. தமிழ்பேசும் மக்களின் வாழ்விடங்கள் பறிக்கப்படுகின்ற சந்தர்ப்பம் காணப்படுகின்றதா?
3. இச்செயலணியின் செயற்பாடுகள் கலாச்சார வன்முறையை தூண்டுவதன் ஊடாக மீண்டும் ஓர் இனமுரண்பாட்டினைத் தோற்றுவிக்குமா?
4. கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமை முகாமைத்துவ செயலணி அமைக்கப்பட்டதன் உள்நோக்கம் என்ன?

ஆய்வுக் கோட்பாடு

இவ்வாய்வினை முன்னெடுத்துச்செல்ல ஜோஹன் கல்துங் அவர்களின் வன்முறை கோட்பாடு பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஜொஹான் கல்துங்கின் வன்முறைக் கோட்பாடு.

ஒரு சமூகம் ஆரோக்கியமாக செயல்படுத்துவதற்கும், அபிவிருத்தி அடைவதற்கும் தனிமனிதனின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத போது மோதல்கள், வன்முறைகள் தோன்றுகின்றன. இம்மோதல்கள் உளவியல் ரீதியாக தோற்றம் பெற்று சமூகரீதியாக மாற்றமடைந்து வன்முறைக்கு காரணமாகின்றன. வன்முறையின் விளைவாக முழுச் சமூகமும் அழிவைச் சந்திக்கின்றன என அவர் விளக்குகின்றார். இவர் தனது கோட்பாட்டினை தேவைகளும் வன்முறையும், வன்முறை முக்கோணி என இரண்டாக வகைப்படுத்தி விளக்குகின்றார் (கிருஷ்ணமோகன் 2021:135) இந்த ஆய்வுடன் இவரது வன்முறை முக்கோணி என்ற கோட்பாட்டு விளக்கம் மிகப் பொருத்தமானதாக அமைந்து காணப்படுகின்றது.

வன்முறை முக்கோணி

ஒரு மனிதன் சக மனிதனை அல்லது அவனது சொத்துக்களை நேரடியாகத் தாக்குவதன் மூலம் சேதம் விளைவிக்கும் அல்லது அழிக்கும் நடத்தையை வன்முறை எனலாம். கல்துங் தனது வன்முறை தொடர்பான விளக்கங்களை முக்கோண வடிவில் கூறியுள்ளார். இந்த முக்கோணியின்

மூன்று மூலைகளும் நேரடி வன்முறை, கட்டமைப்பு வன்முறை, கலாசார வன்முறை என்பவற்றை அடையாளப்படுத்துகிறது (கிருஷ்ணமோகன் 2021:138)



(வரைபடம் - 01)

இந்த மூன்று வன்முறைகளும் ஒன்றிலிருந்து மற்றொன்று தோற்றுவிக்கப்படுகின்றது. இவரது கட்டமைப்பு வன்முறை தொடர்பான விளக்கங்கள் 1960 முன்வைக்கப்பட்டிருப்பினும் கலாசார வன்முறையானது மிகவும் அண்மைக் காலங்களிலேயே சேர்த்துக் கொள்ளப்பட்டது (கிருஷ்ணமோகன் 2021:139).

முடிவுகளும், கலந்துரையாடலும்

இவ்வாய்வின் அடிப்படையில் நான்கு பிரதான முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இச்செயலணியின் தோற்றம் மற்றும் செயற்பாடுகளால் மட்டக்களப்பு மாவட்ட மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்ற முடிவு பெறப்பட்டது. அத்துடன் இதன் செயற்பாடுகளினால் மாவட்ட மக்களின் இயல்பு நிலையில் எதிர்மறையான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன என்ற முடிவிற்கும் அத்துடன் இச்செயலணியின் உண்மையான நோக்கங்கள் முரண்பட்டுள்ளன என்ற முடிவிற்கும் இவற்றினூடாக மாவட்டத் தமிழ் பேசும் மக்களின் அடையாளங்களை சிதைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்ற முடிவிற்கும் வர முடிந்தது.

செயலணிகளின் செயற்பாடுகளின் அடிப்படையில் மாவட்டத்தில் இந்து ஆலயங்கள் கிறிஸ்தவ தேவாலயங்களில் ஏற்படுத்தப்பட்ட தடைகள் தாமதங்கள் போன்றவற்றினாலும் ஆலயங்களில் சிலை உடைப்பு சம்பவங்கள் போன்றவற்றால் பொதுமக்கள் குறிப்பாக இளைஞர் யுவதிகள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டமை, அவை பொலிஸ் மற்றும் இராணுவத்தால் அடக்கப்பட்டமை போன்றவை காரணமாக மாவட்ட மக்களின் மத ரீதியான உரிமைகள் மீறப்பட்டன. அதேபோல மாவட்டத்தில் விவசாய செய்கையாளர்கள் கைது செய்யப்பட்டமை, விவசாய காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்டமை அவர்களுக்கு எதிராக பொலிஸ் மற்றும் நீதிமன்றம் என்பவற்றின் ஊடாக தடைகள் ஏற்படுத்தப்பட்டமை போன்றவற்றால் மாவட்ட மக்களது பொருளாதார உரிமைகள் மீறப்பட்டிருந்தன. அதேபோல மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த வீடுகள் தொல்பொருள் சின்னங்களாக இனங்காணப்பட்டமையும் தமது விருப்பிற்கமைய தமது சொந்த வீடுகளை அமைத்துக்கொள்ளவும் பராமரிக்கவும் முடியாத வகையில் ஏற்படுத்தப்பட்ட தடைகள் அவர்களது வாழ்வதற்கான உரிமைகளை தடைசெய்திருந்தன.

அதேபோல மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மட்டுமான இந்தச் செயலணியின் செயற்பாடுகள் இன ரீதியாக, மத ரீதியாக, மொழி ரீதியாக அரசியல் கொள்கை ரீதியாக பிரதேச ரீதியாக மட்டக்களப்பு மக்களின் சமத்துவ உரிமைகள் மீறப்பட்டிருந்தன. இவற்றின் மூலமாக இம்மாவட்ட மக்களது இயல்புநிலையில் இச்செயலணியின் செயற்பாடுகள் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தியது என்ற முடிவிற்கு வரப்பட்டது.

மேலும் இவ்வாறான மக்களின் இயல்பு வாழ்வியல் முறையில் பாதிப்பு ஏற்பட்டதனால் மாவட்டத்தில் அவ்வப்போது மக்களுக்கும் அரசு படைகள் மற்றும் செயலணி உறுப்பினர்களுக்கும் இடையே பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன. மக்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்கள் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்களினால் இனங்களுக்கிடையே முரண்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டு மீண்டும் இன வன்முறை இடம்பெறக்கூடிய சாத்தியங்கள் காணப்பட்டன. இவ்வாறாக மக்களின் கலாசார உரிமைகள் மறுக்கப்பட்டமையினால் கலாசார வன்முறை உருப்பெறக்கூடிய ஏதுநிலை காணப்பட்டது. இதுவே கட்டமைப்பு வன்முறையாக மாறி, நேரடி வன்முறையை தோற்றுவிக்கக் கூடிய நிலையை மாவட்டத்தில் உருவாக்கியது.

இச்செயலணியின் நோக்கமானது தொல்லியல் பிரதேசங்களை பாதுகாத்துப் பேணுவதாக அமைந்திருந்தாலும் உண்மையில் அதன் நோக்கங்கள் முரண்பட்டுள்ளது. இதன்படி இச்செயலணி அமைக்கப்பட்டதன் மறைமுக நோக்கங்களாக பொதுத்தேர்தலில் சிங்கள பௌத்த வாக்காளர்களின் வாக்குகளை இலக்கு வைத்தல் அதன் ஒரு உள்நோக்கம் என கண்டறியப்பட்டது. இது அரசியல் தலைமைகள், சிவில் அமைப்புக்களின் அறிக்கைகள், நேர்காணலில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் ஊடாக பெறப்பட்டது. அத்துடன் பௌத்தத்துக்கு முன்னுரிமை, இராணுவத்திற்கு முதலிடம் என்ற சிங்கள பௌத்த பேரினவாத சிந்தனைகளின் வெளிப்பாடே செயலணியின் தோற்றம் மற்றும் செயற்பாடுகளின் உள்நோக்கங்கள் என்ற முடிவிற்கு கொண்டு வந்தது.

இச்செயலணியின் தலைவராக பாதுகாப்பு அமைச்சின் பிரதானியான ஜெனரல் கமல் குணரத்ண நியமிக்கப்பட்டதுடன் பௌத்த குருமாரும், சிங்கள பெரும்பான்மையினரும் நியமிக்கப்பட்டமை, பௌத்தத்திற்கு முன்னுரிமை, இராணுவத்திற்கு முதலிடம் என்ற அதன் இன்னொரு மறைமுக நோக்கத்தை வெளிப்படுத்துகின்றது. அதேபோல சிறுபான்மையினர் மத்தியில் தொல்பொருள் தொடர்பான வல்லுனர்கள் இருந்தும் அவை கவனத்தில் கொள்ளப்படாமலும், கிழக்கு மாகாணத்திலுள்ள இரு பல்கலைக்கழகங்களில் உள்ள பேராசிரியர் எவரும் இச்செயலணியில் உள்வாங்கப்படாமையும், பல்வேறு எதிர்ப்புகளின் பின் இச்செயலணியில் அங்கத்துவம் பெற்ற இரு சிறுபான்மையினரும் இச்செயலணியில் காத்திரமான பங்களிப்பை செய்யாமை போன்றவற்றால் கிழக்கு மாகாணத்தில் சிங்கள பேரினவாதத்தை நிலைநிறுத்துவது இச்செயலணியின் பிறிதொரு நோக்கமாகப் பார்க்கப்பட்டது. அத்துடன் தொல்பொருள் மரபுரிமை பிரதேசங்களில் ஆய்வு நடவடிக்கை மேற்கொள்கின்ற உறுப்பினர்கள் அங்குள்ள இடிபாடுகள், நினைவுச் சின்னங்கள் மற்றும் பிரதேசங்கள் அனைத்தும் பௌத்த மதத்துக்குரியன என்ற முடிவின் அடிப்படையிலேயே நோக்குகின்றனர். இது சம்பந்தமாக மேலதிக ஆய்வுகளோ ஆதாரங்களோ அற்ற நிலையில் கருத்துகள் வெளியிடப்படுகின்றன. தொல்லியலாளர்கள் மற்றும் வரலாற்று ஆசிரியர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘நாகர்’’ எனும் மக்கள் வாழ்ந்ததையும்

அவர்கள் தமிழர்களாக காணப்பட்டதையும், அவர்களில் சிலர் பௌத்தத்தை சார்ந்து இருந்தார்கள் என்பதையும் ஆதாரங்களுடன் நிறுவியுள்ளனர் (பத்மநாதன் :73). இந்த விடயங்கள் செயலணியால் கவனத்தில் எடுக்கப்படாமை மூலமாக கிழக்கில் மத மேலாதிக்கத்தை நிலைநாட்டுதல் என்ற மறைமுக கொள்கை தெளிவுபடுத்தபடுகின்றது.

இவ்வாய்வின் அடுத்த முடிவாக அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டது. இச்செயலணியின் செயற்பாடுகள் அரசியல் அமைப்பில் இலங்கைப் பிரஜைகளுக்கு அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளின் உறுப்புரைகள் மீறப்பட்டுள்ளதாக கொள்ளப்படலாம். அதன்படி அரசியல் அமைப்பின் அத்தியாயம் இரண்டில் உறுப்புரை 10 , 12 (1) (2), மற்றும் 14 (1) (அ), (ஆ), (இ), (உ), (ஊ), (எ), (ஏ) என்பவை மீறப்பட்டுள்ளன.

இந்தச் செயலணியினால் ஏற்படுத்தப்பட்ட மதரீதியான மேலாதிக்கம், கலாசார ரீதியான புறக்கணிப்பு, மக்களின் வாழ்வியல் உரிமை மறுக்கப்பட்டமை, கலை பண்பாட்டு ரீதியான புறக்கணிப்புகள் இன, மத அரசியல் கொள்கைகள், பிரதேச ரீதியாக ஏனைய மக்களிடமிருந்து இம்மாவட்ட மக்களைப் புறந்தள்ள மேற்கொண்ட நடவடிக்கைகள், செயலணியின் மறைமுக நோக்கங்களை நிறைவேற்ற முயன்றமை போன்றவை மாவட்டத்தில் வாழும் மக்களது தமிழர் என்ற இன அடையாளத்தையும், தமிழர் பாரம்பரியமாக வாழ்ந்த பிரதேசம் என்ற பிரதேச அடையாளத்தையும், இந்து, கிறிஸ்தவர் என்ற மத அடையாளங்களையும் அவர்களது தொன்மையான கலை பண்பாட்டு அடையாளங்களையும், அரசியல் கொள்கைகளையும் மாற்றி அமைப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்றன என்ற ஆய்வின் பிரதான நோக்கம் அடையப்படுவதற்கு காரணிகளாக இருந்தன.

கோட்பாட்டின் பொருத்தப்பாடு

மேற்படி ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட ஜொஹான் கல்துங்கின் வன்முறை கோட்பாடு மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது. இவரது கோட்பாட்டின் வன்முறை முக்கோணியில் குறிப்பிடப்பட்ட கலாசார வன்முறை என்பது மேற்படி செயலணியினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட இயல்புநிலை குழப்பங்களுடன் தொடர்புடையது. இங்கு பல்லின, பல்மத, பல் கலாசார மக்கள் வாழ்கின்ற போதும் கலாசார உரிமைகளுக்கான அங்கீகாரம் கிடைக்காமையினால் மட்டக்களப்பு மாவட்ட மக்களின் இயல்பு நிலையில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

கல்துங் அவர்கள் சுட்டிக்காட்டிய கலாசார வன்முறைகளை தூண்டக்கூடிய ஆறுவகையான அடையாளங்களில் விஞ்ஞானம் தவிர்ந்த ஏனைய ஐந்து அடையாளங்களான சமயம், கருத்தியல், மொழி, கலை, பொருளாதாரம் ஆகியனவே தொல்பொருள் செயலணியினுடைய தோற்றம் மற்றும் அவற்றின் செயற்பாடுகளினால் பாராபட்சத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், கண்டனப் பேரணிகள், ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் போன்றன இடம் பெற்றுள்ளன. இவற்றின் மூலம் வன்முறை ஏற்பட்டு அது அரசியல்வாதிகள், மதவாதிகள் மற்றும் பேரினவாதிகளின் தூண்டுதலுக்கு உட்படுத்தப்படுமேயாயின் அது கட்டமைப்பு வன்முறைக்கு வழி வகுக்கும். இது நேரடி

வன்முறையை தூண்டுவதாக அமையும். இது வன்முறைச் சுழற்சியாக உருவெடுக்கலாம். இதுவே இந்த ஆய்விற்கும், கோட்பாட்டுக்கும் இடையிலான பொருத்தப்பாட்டை பிரதிபலிக்கின்றது.

முடிவுரை

இந்த ஆய்வு நடவடிக்கைகளின் போது மதிப்பு மற்றும் பெறுமதிமிக்க தொல்பொருள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது அனைவராலும் ஏற்கப்பட்டது. எனினும் அதனை மேற்கொள்வதற்காக எடுக்கப்பட்ட செயற்பாட்டு நடவடிக்கைகள் மாவட்ட மக்களுக்கு உளவியல் ரீதியான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் ஏற்கனவே இந்நாட்டில் இடம்பெற்ற துரதிஷ்ட சம்பவங்களினால் மத, இன, மொழி, கலை, கலாசாரம், தொழில், அரசியல் சித்தாந்தங்கள் காரணமாக பாதிக்கப்பட்ட இம்மாவட்ட மக்கள் மத்தியில் செயலணியின் செயற்பாடுகளினால் இடம்பெற்ற சம்பவங்கள் தமது கலாசார உரிமைகளும், அடையாளங்களும் அங்கீகரிக்கப்படாத நிலையில் முரண்பாடுகள் ஏற்பட்டன.

எனினும் இலங்கை முழுவதுமாக தொல்பொருள் பாதுகாப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று அந்ததந்த பிரதேச மக்களது அடையாளங்களில் பாதிப்பு ஏற்படாதவாறு எதிர்கால சந்ததியினருக்கு சேர்ப்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்வது சிறப்பானதாகும். இதற்கென நாட்டில் உள்ள புத்திஜீவிகள், விடயஞானம் உள்ளோரை சேர்த்துக் கொண்டு அவர்களிடம் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதுடன் சமூகத்தில் அதற்கான பொறுப்புக்கள் கையளிக்கப்படுதல் பொருத்தமானதாகும்.

தொல்பொருள் சின்னங்கள் அனைத்துமே பௌத்த மத அடையாளங்கள் என்ற கண்ணோட்டங்களை தவிர்த்து தொல்பொருள் அடையாளங்கள் இந்த நாட்டின் முன்னோர்களின் அடையாளம் என்பதையும் அது அக்காலங்களில் அந்தந்த பிரதேசங்களில் வாழ்ந்த மக்களின் பயன்பாட்டு எச்சங்கள் என்பதையும் உணர்ந்து அரசு இதற்கான பொறுப்புகளைப் பக்கச்சார்பற்ற விதத்தில் செயற்படுத்த முன்வருதல் வேண்டும். இதற்காக நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஸ்தாபிக்கப்பட்ட தொல்பொருள் திணைக்களத்தை நவீனமயப்படுத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு சிறந்த அறிவு, ஆற்றல்களை வழங்கி அவர்களுடைய திறமையான செயற்பாடுகளை பெறுதல் அவசியமாகும்.

மேலும் இந்த ஆய்வு தொடர்பாக தொடராய்வுகள் மேற்கொள்வதற்கு விடயத்துடன் பொறுப்புடைய உத்தியோகத்தர்கள், புத்திஜீவிகள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆய்வாளர்கள் முன் வருவதன் அவசியம் உணரப்படுகின்றது. இந்த ஆய்வின் போது பெறப்பட்ட தகவல்களின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்திருக்கக் கூடும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. எனவே இதனை அடியொட்டியதான ஆய்வுகள் முன்னெடுக்கப்படுதல் அவசியமாகின்றது.

மேலும் ஆய்வு நடவடிக்கைகளின் போது பலரும் ‘‘விசார’’ எனும் சொல் பைரவர் பந்தல் அமைத்து வழிபாடு செய்கின்ற இடத்தை குறித்து பயன்படுத்தியமையை அவதானிக்க முடிந்தது. குறிப்பாக மாவடிவேம்பு பகுதியில் உள்ள தோட்டத்து காணி மற்றும் வேற்றுச்சேனையில் அமைந்துள்ள ஆலய பிரதேசங்களில் இது பிரதிபலிக்கப்பட்டது. ஒரு சிலர் விசார எனும்

சொல்லே விஹாரை என திரிவுபடுத்தப்பட்டுள்ளதாக கருத்துத் தெரிவித்தனர். இது விடயமாக ஆழமான ஆய்வுகள் எதிர்காலங்களில் முன்னெடுக்கப்படுதல் மிக அவசியமானதாக அமைகின்றது.

ஆய்வு முடிவுகளில் இருந்து பின்வரும் **பரிந்துரைகள்** முன்வைக்கப்படுகின்றன.

- கிழக்கு மாகாணத்துக்கு மட்டுமன்றி முழு நாட்டிற்கும் தொல்பொருள் பாதுகாப்பிற்கென துரித செயலணி அமைக்கப்படவேண்டும்.
- அந்த செயலணி அனைத்து இன, மத பிரிவினரையும் உள்ளடக்கிய வகையிலும், நிபுணத்துவமுடைய சிவில் அதிகாரிகளை கொண்டதாகவும் அமைதல் வேண்டும்.
- நூற்றாண்டு காலம் பழமை வாய்ந்த தொல்பொருள் திணைக்களத்தை நவீன தொழில்நுட்ப வசதிகள் கொண்டு மாற்றியமைத்து, போதுமான உத்தியோகத்தர்களை கொண்டு இயக்கலாம்.
- மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு வரலாறு மற்றும் தொல்லியல் சார் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தலாம்.
- கிழக்கு மாகாணத்திலுள்ள இரு பல்கலைக்கழகங்களிலும் தொல்லியல் கற்கைகள் தொடர்பான பீடங்கள் அமைக்கப்பட்டு பொறுப்புகள் வழங்கப்படலாம்.
- தொல்பொருள் விடயப்பரப்பு மாகாண அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு, அந்தந்த பகுதி உள்ளூராட்சி மன்றங்களின் பரிபாலணத்தின் கீழ் கொண்டுவரப்படுதல் சிறப்பாகும்.
- எந்த ஒரு மதமோ, இனமோ, பிரதேசத்தினரோ உளரீதியாக பாதிப்படையாத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.
- தொல்பொருள் என்பது மதம், இனம் தழுவியதாக பார்க்கப்படாது அது தொல்லியல் பெறுமானமாகப் பார்க்கப்பட வேண்டும்.
- தொல்லியல் மரபுரிமை சின்னங்கள் அது அமைந்துள்ள பிரதேச மக்களது, சொத்துக்கள் என்பதையும் அவற்றை பராமரிப்பது அவர்களுடைய கடமையும், பொறுப்புமாகும் என்பவற்றையும் வலியுறுத்தல்.
- உல்லாசப் பயணத்துறையில் வருமானம் ஈட்டக்கூடிய வகையில் தொல்லியலை சந்தைப்படுத்த நடவடிக்கை எடுத்து அதனூடாக உள்ளூர் மக்களின் வருமானத்தை அதிகரிக்கலாம்.
- ஆலயங்கள், பொது இடங்களில் இனங்காணப்பட்ட அசையும் தொல்பொருள் சின்னங்களை உரியவர்களின் பராமரிப்பில் விடப்பட்டு அவை மேற்பார்வை செய்யலாம்.
- தொல்பொருள் அடையாளம் காணப்பட்ட வதிவிடக் காணி, பொருளாதார காணி போன்றவற்றை அரசு பொறுப்பேற்றால் அதற்குப் பதிலாக உரியவருக்கு உடனடியாக மாற்று காணியை வழங்குதல் வேண்டும்.

உசாத்துணை

1. பத்மநாதன். சி,(2016), இலங்கை தமிழர் வரலாறு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
2. பத்மநாதன். சி,(2013), இலங்கை தமிழர் சாசனங்கள்- II, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

3. புஸ்பரட்ணம், (2007) தொல்லியல் நோக்கில் ஈழத் தமிழரின் பண்டைய கால மதமும் கலையும், குமரன் புத்தக நிலையம்.
4. மொஹமட், அ, (2021) "தொல்பொருள்கள் பெயரால் முன்னெடுக்கப்படும் காணி அபகரிப்பு", இலங்கையில் தொல்பொருள் உரித்துக்களின் முகாமைத்துவம் (2019), தேசிய கண்காணிப்பு அலுவல்கள் செயலகத்தின் கண்காணிப்பு பிரிவு, அறிக்கை இலக்கம் சீஏஎஸ்/ சீ/ பீஈஆர்/ ஏ/ஏ. ஆர்/சீ/2019.
5. கிருஷ்ணமோகன். த, 2021, மோதல் தீர்வுக் கற்கைகள் ஓர் அறிமுகம்", குமரன் புத்தக இல்லம், கொழும்பு-06.
6. Bandaranayake. S, (2003), "Archaeological Heritage Management in Sri Lanka" The role of the political Rulers in the Buddhist monasteries.
7. DeVotta, Neil, (2006), Ethnolinguistic Nationalism and Ethnic Conflict in Sri Lanka in P. Sahadevan and Neil DeVotta. Eds. Political of Conflict and peace in Sri Lanka, new Delhi. Manak .
8. Kulandaiswamy.M.S, (2000), Sri lankan Crisis: Anatomy & Ethnicity, pace and security dethi, Authors press.

இணையம்

9. Bandarage.A, (2009), "The Separatist Conflict in Sri Lanka", https://www.routledge in.com.;
10. Sri Lanka : UN Report describes Alarming rights situation,hrw.org/news/2022/3/3.
11. Wicramasinghe .N , (2013), Hstory as Heritage: producing the present in post war sri lanka htt://jstor .org
12. Keethaponcalan. S. I, (2020) "Sri Lanka:weaponizing Archaeologyhttps"://engli sh.newstube.lk
13. Politicizing Archaeology militarizing virtue Gaslighting the electorate 2020,ground views.org
14. The presidential Task Force for Archaeological Heritage management in eastern province 2020 https://www.parlsl Admin of Peoples' alliance for right of land .
15. பத்மநாதன். சி,(2012),"மட்டக்களப்பு தொல்லியல், தமிழ் பௌத்தம், https:// sivasinnapodi.wordpress.com" இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

பத்திரிக்கை மற்றும் சஞ்சிகை

16. "தேசிய கண்காணிப்பு அலுவல்கள் செயலகத்தின் கண்காணிப்பு பிரிவு, அறிக்கை" இலக்கம் சீ ஏ எஸ்/ சீ/ பீ ஈ ஆர்/ ஏ / ஏ. ஆர்/ சீ/ 2019.
17. அதிவிசேட வர்த்தமானி இல 2178/17,2020
18. திருமலை நவம்.(2020) , "கிழக்கை பௌத்த ராஜதானியாக்கும் முயற்சி", வீரகேசரி, பக்கம் 11 (2020.06.06)
19. சுபத்ரா (2020) , "செயலணிகளின் ஆட்சி", வீரகேசரி, பக்கம் 06 ,(2020.06.07)
20. திருமலை நவம்(2020), "புதிய செயலணி ஜனநாயகம் முறைமைக்கு அமைவானதா?", வீரகேசரி, பக்கம் 11(2020.06.20)
21. நிப்ராஸ். A. S, (2021), "தொல்பொருள் செயலணியும் முஸ்லிம் பிரதிநிதித்துவமும்", வீரகேசரி, பக்கம்07. (2021.12.5)
22. பாலச்சந்திரன். P. K, (2020) "இராணுவ மயப்படுத்தப்பட்ட செயலணிகள் ஊடாக ஆட்சி செய்வது ஜனநாயகத்தை மலினப்படுத்தும்", வீரகேசரி, பக்கம்04(2020.06.11)
23. மாணிக்கவாசகம். P, (2020) " ஜனாதிபதி செயலணியும் திருப்புமுனை செயற்பாடும் ", வீரகேசரி, பக்கம்13 (2020.06.17)
24. சரவணன். N, (2020), "சிறுபான்மை இனங்களுக்கு எதிரான தொல்லியல் போர் பிரகடனம்" வீரகேசரி, பக்கம் 09 (2020.08.09)
25. மாணிக்கவாசகம் .P, (2020) "ஜனநாயக வழிப்படுத்தலில் இருந்து விலகும் செயற்பாடு" வீரகேசரி, பக்கம் 12, (2020.06.03)
26. அமீர் அலி, (2020) "ராஜபக்சவின் ராஜதானியில் சிறுபான்மை இனங்களின் எதிர்காலம;" வீரகேசரி, பக்கம் 05 (2020.08.16)
27. மாணிக்கவாசகம். P, (2020) "தடைக்கல்", வீரகேசரி, பக்கம்28 (2020.01.01)
28. மாணிக்கவாசகம் .P (2020) "இரட்டைக் குழல் துப்பாக்கி" வீரகேசரி, பக்கம் 12 (2020.06.08)

இலங்கையின் முஸ்லிம் தனியார் சட்டமும் அதன் அண்மைக்கால போக்கும் : சிறப்பு ஆய்வு நிந்தவூர் காதி நீதிமன்றம்

தாஜுதீன் முஹம்மது முபாஸ்[1], செ.சிவநாயகம்[2]
[1,2] சமூக விஞ்ஞானங்கள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
[1]mufasnmohamed@gmail.com, [2]sivac69@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

பல்லின மக்கள் வாழும் இலங்கை நாடானது பல்வேறு சட்ட முறைமையை கொண்டுள்ளது. இவற்றுள் முஸ்லிம் தனியார் சட்டத்தின் அண்மைக்கால போக்கானது பல்வேறு விமர்சனங்களைக் கொண்டு காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக முஸ்லிம் தனியார் சட்டம் நீக்கப்பட்டு பொதுச் சட்டத்தின் கீழ் முஸ்லிம்களின் விவாக, விவாகரத்துத் தொடர்பான விவகாரங்கள் கொண்டு வருவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றது. அந்த வகையில் அண்மைக்காலமாக இச்சட்டத்தை நீக்க வேண்டுமென்பதற்காக முன்வைக்கப்படும் பிரதான வாதங்களில் ஒன்றுதான் முஸ்லிம் தனியார் சட்டத்தினால் பெண்களுக்கு உரிய நீதி கிடைப்பதில்லை என்ற வாதமாகும். அதனை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் தனியார் சட்ட ஏற்பாடுகள் மற்றும் காதி நீதிமன்றம் தொடர்பாக பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றமையை அவதானிக்கலாம். முஸ்லிம் தனியார் சட்ட ஏற்பாடுகள் என்னும் போது திருமண வயது, பெண்கள் கையொப்பம், பலதாரமணம், காதி நீதிமன்றம், பெண் காதி நீதிபதிகள், பதிவு முறைகளிலும் மற்றும் விவாகரத்தின் போதான தீர்ப்புக்களால் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை இனங்கண்டு அவற்றை தீர்த்துக்கொள்வதற்கான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதன் மூலமாக முஸ்லிம் தனியார் சட்டத்தினை முற்றாக நீக்குவதனை விட இச்சட்டங்கள் மூலமான விமர்சனங்களை இனங்கண்டு முஸ்லிம் பெண்களினுடைய ஜனநாயக உரிமைகளை வலுப்படுத்தும் நோக்கில் குறித்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது பொருத்தமானதாக அமையும். இச்சூழ்நிலையினை விளங்கிக் கொள்வதற்காக நிந்தவூர் பிரதேச காதி நீதிமன்றத்தினை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுவதுடன் முதலாம் நிலைத் தரவுகளாக வினாக்கொத்து, நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவுகளும் இரண்டாம் நிலைத் தரவுகளாக புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் பகுப்பாய்வுக்குப் பயன்படுத்தப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திறவுச் சொற்கள்: முஸ்லிம் தனியார் சட்டம், காதி நீதிமன்றம், முஸ்லிம் பெண்கள், காதி நீதிபதி

ஆய்வின் அறிமுகம்

பல்லின மக்கள் வாழும் இலங்கை நாடானது பல்வேறு சட்ட முறைமையை கொண்டுள்ளது. அந்தவகையில் இலங்கையின் பொதுச் சட்டமானது இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் பொதுவானதாகும். பொதுச் சட்டத்திற்குச் சமாந்தரமாக வேறு சட்டங்களும் இலங்கையில் காணப்படுகின்றன. அவை கண்டியச் சட்டம், தேசவழமைச் சட்டம், முக்குவர் சட்டம் மற்றும் முஸ்லிம் தனியார் சட்டம் போன்றன காணப்படுகின்றன(Cooray,2003). கண்டியச் சிங்களவர்கள் கண்டியச்சட்டம் மூலமும், யாழ்ப்பாணத் தமிழர்கள் தேசவழமைச் சட்டம் மூலமும் இஸ்லாமிய நம்பிக்கையைப் பின்பற்றுபவர்கள் முஸ்லிம் தனியார் சட்டம் மூலமும் ஆளப்படுகின்றனர். குடியியல், குற்றவியல் விடயங்களில் எல்லோரும் எவ்வித வேறுபாடுகளுமின்றி பொதுச் சட்டத்தினாலேயே ஆளப்படுவர்(Mazahir et al.,2017).

அந்தவகையில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் சவுதி அரேபியா, இந்தோனேஷியா, சிரியா, மலேசியா போன்ற நாடுகளில் பொதுவாக இஸ்லாமிய சட்டங்களின் அடிப்படையிலேயே குடியியல் மற்றும் குற்றவியல் அம்சங்கள் அமுலாக்கப்படுகின்றன(Mazahir et al.,2017). ஆனால் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழும் இந்தியா, இலங்கை போன்ற ஒரு சில நாடுகளிலேயே இஸ்லாமிய சட்டங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. ஆயினும் இலங்கை வாழ் முஸ்லிங்களுக்கென முஸ்லிம் தனியார் சட்டம் காணப்படுகின்றது. இச்சட்டமானது இலங்கை முஸ்லிம்களின் திருமணம், மண நீக்கச்சட்டம், முஸ்லிம் வாரிசுரிமைக் கட்டளைச்சட்டம், மற்றும் பள்ளிவாசல்கள், வக்ப் - தர்ம நம்பிக்கை பொறுப்புச் சட்டம் போன்ற விடயங்களில் மாத்திரமே சட்ட ஏற்பாடுகளைக் கொண்டு காணப்படுகின்றன. அதிலும் திருமணம், மண நீக்கச்சட்டம் மாத்திரமே பொதுச்சட்டத்தின் தலையீடின்றி முழுமையாக

நடைமுறையிலுள்ளது (Mazahir et al.,2017). இந்த அடிப்படையிலேயே திருமணம், மண நீக்கம் தொடர்பாக 1929 ஆம் ஆண்டு தொடக்கம் "காதி நீதிமன்றங்கள்" ஆரம்பிக்கப்பட்டு இன்று வரையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இலங்கை முஸ்லிம்களுக்குக் கிடைத்திருக்கும் சிறப்பான உரிமைகளில் ஒன்றுதான் முஸ்லிம் தனியார் சட்டம். அதிலும் குறிப்பாக முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டமாகும். இதன் மூலம் இலங்கை வாழ் முஸ்லிம்கள் பல வரப்பிரசாதங்களைப் பெற்றுள்ளனர். ஆயினும் தற்போது இலங்கையில் "ஒரே நாடு ஒரே சட்டம்" என்ற தலைப்பில் முஸ்லிம் தனியார் சட்டம் நீக்கப்பட்டு பொதுச் சட்டத்தின் கீழ் முஸ்லிம்களின் விவாக, விவாகரத்துத் தொடர்பான விவகாரங்கள் கொண்டு வருவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதையும் அதற்காக ஜனாதிபதி செயலணியொன்று அமைக்கப்பட்டுள்ளமையையும் நாம் அறிவோம்.

அண்மைக்காலமாக இச்சட்டத்தை நீக்க வேண்டுமென்பதற்காக முன்வைக்கப்படும் பிரதான வாதங்களில் ஒன்றுதான் "முஸ்லிம் தனியார் சட்டத்தினால் பெண்களுக்கு உரிய நீதி கிடைப்பதில்லை" என்ற வாதமாகும். அதனை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் தனியார் சட்ட ஏற்பாடுகள் மற்றும் காதி நீதிமன்றம் தொடர்பாக பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றமையை அவதானிக்கலாம். அதிலும் குறிப்பாக பெண்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என்ற கருத்தும் நிலவுகின்றது. அவ்வாறான சூழ்நிலையினை விளங்கிக் கொள்வதற்காக நிந்தவூர் பிரதேசத்தின் காதி நீதிமன்றம் திருமணம், மண நீக்கம், திருமண சட்ட ஒழுங்குகள், வரையறைகள் என்பவற்றினை எவ்வாறு செயற்படுத்துகின்றது, அவ்வாறு செயற்படுத்தும் போது முன்வைக்கப்படுகின்ற விமர்சனங்கள் எவை என்பதனையும் அறிந்து கொள்வதற்காக இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

ஆய்வுப் பிரச்சினையும் ஆய்வு வினாக்களும்

இலங்கை முஸ்லிம் தனியார் சட்ட ஏற்பாடுகளினால் முஸ்லிம் பெண்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றமை குறித்து எழுந்துள்ள பாரிய சர்ச்சைகள் ஆய்வுப் பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றது. அதாவது முஸ்லிம் தனியார் சட்ட ஏற்பாடுகள் எனும் போது திருமண வயது, பெண்கள் கையொப்பம், காதி நீதிமன்றம், பெண் காதி நீதிபதிகள், பதிவு முறைகள் மற்றும் விவாகரத்தின் போதான தீர்ப்புக்களால் பெண்கள் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

1. முஸ்லிம் தனியார் சட்டமானது விவாகம், விவாகரத்து விடயங்களில் எவ்வாறான சட்ட ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது?
2. அண்மைக் காலத்தில் முஸ்லிம் தனியார் சட்டம், காதிநீதிமன்றங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் எவை?
3. முஸ்லிம் தனியார் சட்டத்தினால் முஸ்லிம் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள் எவை?
4. நிந்தவூர் பிரதேசத்தில் முஸ்லிம் பெண்களில் திருமண உரிமை, சமத்துவம் எந்தளவு காணப்படுகின்றது?

5. விவாகரத்தின் போதான தீர்ப்புக்களை வழங்குவதில் நிந்தவூர் காதி நீதிமன்றத்தின் வகிபாகம் எத்தகையது?

ஆய்வு நோக்கங்கள்

1. முஸ்லிம் தனியார் சட்டம் விவாகம், விவாகரத்து விடயங்களில் எத்தகைய சட்ட ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது என்பது தொடர்பாக அறிதல்,
2. முஸ்லிம் தனியார் சட்ட ஏற்பாடுகளினால் முஸ்லிம் பெண்கள் எவ்வாறான பிரச்சினைக்கு உள்ளாகின்றனர் என்பதை கண்டறிதல்,
3. நிந்தவூர் பிரதேசத்தில் பெண்கள் அனுபவிக்கும் திருமண உரிமை, சமத்துவத்தின் நிலையினை கண்டறிதல்,
4. அண்மைக்காலத்தில் முஸ்லிம் தனியார் சட்டம், காதி நீதிமன்றங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றி வெளிக்கொண்டு வருதல்,
5. விவாகரத்தின் போது நிந்தவூர் காதி நீதிமன்றத்தின் வகிபாகத்தினை அறிதல்.

ஆய்வுக் கருதுகோள்

"இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தினூடாக முஸ்லிம் பெண்களின் ஜனநாயக உரிமைகளை வலுப்படுத்தல்"

ஆய்வு முறையியல்

ஒரு ஆய்வுக்கு அவசியமாக அமைவது ஆய்வு முறையியலாகும். அத்தோடு ஆய்வுக்குத் தேவையான தரவுகள் இன்றியமையாதவையாகும். இத்தரவுகளே ஆய்வின் நம்பகத்தன்மை, உறுதிப்பாடு என்பவற்றிற்கு அடிப்படையாக அமைகின்றன. இதன்படி இவ்வாய்வானது தரவு சேகரிப்பு முறை மற்றும் தரவு பகுப்பாய்வு முறை என்பவற்றைக் கருத்தில் கொள்கின்றது. இதன்படி எனது ஆய்விற்கான முதலாம் நிலைத் தரவுகளாக வினாக்கொத்து மூலம் திரட்டப்படும் தரவுகள், நேர்காணல் தரவுகள், நிந்தவூர் பிரதேச காதி நீதிமன்ற அறிக்கைகள் மற்றும் நேரடி அவதானம் என்பவற்றின் மூலம் தகவல் சேகரிக்கப்பட்டுள்ளது. அதாவது ஆய்வுப் பிரதேசத்திலுள்ள விவாகரத்துக்காக காதி நீதிமன்றம் சென்ற குடும்ப நபர்களையும், விவாகரத்து பெற்ற நபர்களையும் மற்றும் காதி நீதிமன்ற நீதிபதிகளையும், ஊழியர்களையும் சந்தித்து பேட்டி மூலம் தகவல் சேர்க்கப்பட்டுள்ளது. அத்தோடு நிந்தவூர் பிரதேச காதி நீதிமன்ற சில வழக்கு விசாரணைகள் நேரடியாக அவதானிக்கப்பட்டுள்ளது.

மேலும், நிந்தவூர் பிரதேசமானது 25 கிராம சேவகர் பிரிவைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிற்கும் 5 வினாக்கொத்துக்கள் வீதமாக வழங்கப்பட்டு மொத்தமாக 125 வினாக்கொத்துக்கள் மூலமாக தரவுகள் திரட்டப்படும். இவ்வினாக்கொத்துக்கள் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலுள்ள 5 நபர்களிடம் எழுமாற்று தெரிவின் ஊடாக பகிர்ந்தளிக்கப்பட்டு தரவுகள் பெறப்படும். இரண்டாம் நிலைத் தரவுகளில் ஆய்வுத் தலைப்புடன் தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தளத் தரவுகள் மற்றும் ஒலிநாடாக்கள் போன்றவற்றின் மூலமாக பெறப்பட்ட தரவுகள் பண்பு ரீதியாக பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. ஆகவே இங்கு எண் மற்றும் பண்பு ரீதியான இரு பகுப்பாய்வு முறைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

ஆய்வுப் பிரதேசம்

இவ்வாய்வானது பல்லின மக்கள் வாழும் அம்பாறை மாவட்டத்தில் காணப்படும் நிந்தவூர் பிரதேசத்தினை அடிப்படையாக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள நிந்தவூர்ப் பிரதேசமானது 25 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. இங்கு முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக வாழ்வதோடு, தமிழர்கள் சிறுபான்மையினராக வாழ்கின்றனர். இந்த ரீதியில் நிந்தவூர் பிரதேசத்தில் உள்ள காதி நீதிமன்றத்தின் செயற்பாடுகளின் ஊடாக முஸ்லிம் தனியார் சட்டம் எதிர் நோக்கும் சவால்களை விளங்கிக் கொள்வதற்கான அவசியம் உணரப்படுகின்றது.

பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

நிந்தவூர் பிரதேசத்தில் திரட்டப்பட்ட தரவுகளை பகுப்பாய்வுக்கு உட்படுத்தி வரைபுகளுடாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

01. முஸ்லிம் தனியார் சட்டம் மற்றும் காதி நீதிமன்றம் தொடர்பாக கேட்கப்பட்ட வினாவுக்கு பதிலளித்தவர்கள்



(மூலம் : களஆய்வு, வினாக்கொத்து, ஆனி 2022)

25 கிராமசேவகர் பிரிவிலும் சேகரிக்கப்பட்ட தரவுகளினடிப்படையில் பெரும்பான்மையான நபர்கள் முஸ்லிம் தனியார் சட்டம் தொடர்பாக அறிந்துள்ளமையை காணமுடிகின்றது. அரசியல், சமூக, பொருளாதார, கல்வி ரீதியாக முன்னேற்றமடைந்து வருகின்ற நிந்தவூர் பிரதேசமானது முஸ்லிம் தனியார் சட்டம் தொடர்பான ஆரம்ப அறிவை கொண்டுள்ளமையானது இவ்வாய்வின் முன்னேற்றத்திற்கு அடிப்படை காரணமாக அமைந்துள்ளது.

இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட நேர்காணலின் போது சில குடும்ப நபர்கள் காதி நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தவர்களாகவும் அல்லது வழக்கினை சமரசம் செய்வதற்காக அங்கு சென்றவர்களாகவும் இருப்பதை அறிய முடிகின்றது. மேலும், இப்பிரதேச மக்கள் காதி நீதிமன்றம், அதன் நடைமுறை மற்றும் காதி நீதிபதி தொடர்பான தகவல்களை நன்கு அறிந்துகெண்டிருந்தார்கள்.

02. முஸ்லிம் தனியார் சட்டத்தில் காணப்படும் பெண்களின் திருமண வயதினை பொதுச்சட்டத்தின் படி மாற்றுவது தொடர்பாக கேட்கப்பட்ட வினாவிற்கு விடையளித்தவர்கள்



(மூலம் : களஆய்வு, வினாக்கொத்து, ஆனி 2022)

தற்போதுள்ள முஸ்லிம் தனியார் சட்டத்தில் திருமணம் தொடர்பான விடயங்கள் 17வது பிரிவில் விளக்கப்பட்டுள்ளது. அதில், 12 என நிர்ணயிக்கப்பட்டுள்ள திருமண வயதெல்லை இலங்கையில் ஒரு பிரச்சினையாகவும் சர்ச்சையாகவும் மாறியுள்ளது. இது சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு சட்ட ரீதியாக அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது என்று பெண்ணியல்வாத அமைப்புக்களும் சர்வதேச நிறுவனங்கள் சிலவும் குற்றஞ்சாட்டி வருகின்றன. இது தொடர்பில், முஸ்லிம் சமூகத்திற்குள்ளும் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன. இந்த அடிப்படையில் நிந்தவூர் பிரதேசத்தில் முஸ்லிம் பெண்களின் திருமண வயதினை மாற்றவது தொடர்பாக வினாக்கொத்து மூலம் கோரப்பட்ட போது ஆம், மாற்றுவது நல்லது என 96 பேர் குறிப்பிட்டிருந்தனர்.

நடைமுறையிலுள்ள முஸ்லிம் தனியார் சட்டத்தில் பெண்களின் திருமண வயதெல்லை 12 ஆக இருப்பது சில சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஏதுவாக அமைகிறது என்று ஒரு சிலர் கருதினாலும், இதன் காரணமாக ஏற்படும் உடல், உள, சமூக ரீதியான பாதிப்புகளை அடிப்படையாகக் கொண்டு திருமண வயதில் மாற்றம் தேவை என்ற கருத்து வலுவடைந்துள்ளது. எனவே, இது பற்றிய நடைமுறை ரீதியான சட்டத் தெளிவும் மார்க்க நிலைப்பாடும் இலங்கை முஸ்லிங்களுக்கு அவசியமாகின்றது.

முஸ்லிம் தனியார் சட்டத்தில் பெண்களின் திருமண வயதெல்லையினை மாற்ற வேண்டியது அவசியமில்லை என்று கூறியவர்கள் பின்வரும் நியாயத்தினை முன்வைத்தனர். அதாவது ஒரு பெண் பருவமடைந்தவுடன் திருமண வயதை அடைந்துவிடுகின்றாள் அவளுக்கு உடன் திருமணம் செய்துவிடலாம் என்று கூறுவதுடன் அவர்களின் வாதத்திற்குரிய சில கருத்துக்களையும் முன்வைக்கின்றனர். இவ்வாறு, திருமண வயதெல்லையைத் தீர்மானிக்கும் போது அநாதைகள், பாதுகாப்பற்றோர், சுற்றுச் சூழலால் பாதிப்பு ஏற்படும் என்று அஞ்சப்படுவோர் ஆகிய சூழ்நிலைக் கட்டமைப்புக்குள் வாழும் பெண் பிள்ளைகளுக்கு வயதை நிர்ணயம் செய்ய முடியாது. எனவே, அவர்களது பாதுகாப்பிற்காக அவர்கள் பருவ வயதை அடைந்தவுடன் திருமணம் செய்து வைக்க வேண்டும். அதனால், அவர்கள் பாதுகாக்கப்படுவர் என்று வயதை நிர்ணயம் செய்யும் தரப்பிற்கு எதிராக தனது கருத்தினை திருமண வயதெல்லையினை மாற்ற வேண்டியது அவசியமில்லை என்ற தரப்பினர் குறிப்பிட்டார்கள் (மூலம் : நேர்காணல், 2022).

அதேபோன்று முஸ்லிம் தனியார் சட்டத்தில் பெண்களின் திருமண வயதெல்லையினை ஆம், மாற்றுவது நல்லது என்று கூறுபவர்கள் பெரும்பான்மையினராக இருப்பதுடன் நேர்காணலின் போது இது தொடர்பாக பின்வரும் கருத்தினை பதிவு செய்தனர். 12 வயதில் ஒரு பெண்

திருமணம் செய்து வைக்கப்படும்போது அவளது கல்வி பாதிக்கப்படுகிறது. அதனால், அவள் குடும்ப வாழ்வில் ஆண்களின் அடுத்த பகுதியாகச் செயற்படும் தகைமையை பெறாதவளாகக் காணப்படுவாள். அதனால், குடும்ப வாழ்வில் புரிந்துணர்வற்ற தன்மையும் வேறு சில பிரச்சினைகளும் எழும் எனக் குறிப்பிட்டனர். மேலும், இலங்கையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள திருமணத்துக்கான ஆகக் குறைந்த வயதெல்லையை நிர்ணயிக்க வேண்டும். மற்றும் சிறுவயது திருமண பிரிவை முஸ்லிம் தனியார் சட்டத்திலிருந்து நீக்க வேண்டும். திருமண வயதெல்லை என்பது தன்னிச்சையாகவோ ஒரு பிரதிநிதித்துவமற்ற குழுவாலோ, வேறு குழுக்களாலோ தனிநபர்களாலோ தீர்மானிக்கப்பட்டு விட முடியாது எனவும் தங்களது கருத்துக்களை பதிவுசெய்தனர். ஒரு பெண் பருவ வயதை திருமணத்திற்கான ஒரு நிபந்தனையாகக் கொள்வதனை விட இலங்கையின் பொதுச்சட்டத்தின் படி மாற்றுவது நல்லது என்பதுடன் தற்காலத்தில் முஸ்லிம்களுக்கு பெண்களுக்கு அவசியமான மாற்றமாகவும் பார்க்கப்படுகின்றது.

03. காதி நீதிபதியாக தெரிவு செய்யப்படுபவரின் தகைமையை மறுசீரமைக்க விரும்புகின்றீரா கேட்கப்பட்ட வினாவிற்கு விடையளித்தவர்கள்



(மூலம் : களஆய்வு, வினாக்கொத்து, ஆனி 2022)

இலங்கையின் நீதிச் சேவைகள் ஆணைக்குழு காதி நீதிபதிகளை நியமிக்கின்றது. இந்நியமனத்தைப் பெறுபவர் இஸ்லாமியத் திருமணம், விவாகரத்து, வாரிசுரிமை வஸிய்யத்(மரண சாசனம்) போன்ற விடயங்கள் தொடர்பாக ஆழ்ந்த அறிவுடையவராக இருக்க வேண்டும். ஆனால், அவ்வறிவுசார் புலமைத்துவத்தை மையப்படுத்தி அந்நியமனம் வழங்கப்படுவதற்கு ஏற்ற எந்த ஒரு வழிமுறையும் நடைமுறையில் இல்லை. இந்நீதிபதிகளினை நியமிக்கும் போது தேசிய ரீதியான ஒரு பரீட்சையோ, அல்-ஆலிம் பெறுபேறோ, அரபுக் கல்லூரிகளின் பெறுபேறோ, பல்கலைக்கழகப்பட்டமோ இந்நியமனத்துக்குரிய தகுதியாகக் கொள்ளப்படுவதில்லை. இதன் காரணமாக காதி நீதிபதிகளின் தகுதி தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுகள் ஆய்வுப்பிரதேசத்தின் நேர்காணலின்போது முன்வைக்கப்பட்டது (மூலம் : நேர்காணல், 2022). ஆயினும் நிந்தவூர் பிரதேசத்தில் ஆரம்பம் முதல் நியமிக்கப்பட்ட காதிகள் சிறந்த கல்வித்தகைமையினை கொண்டிருந்தமை களஆய்வின் போது புலனாகியது எடுத்துக்காட்டாக, தற்போதய தலைவர் ஹாஜி எஸ். எல். அப்துல் சலாம் அவர்கள் முன்னாள் அதிபராகவும், சமாதான நீதவானாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

04. காதி நீதிமன்றத்தினால் வழங்கப்படும் தீர்ப்புக்களில் ஏற்படும் திருப்தி தொடர்பாக விடையளித்தவர்கள்



(மூலம் : களஆய்வு, வினாக்கொத்து, ஆனி 2022)

காதி நீதிமன்றங்களை பொறுத்தவரையில் வழங்கப்படும் தீர்ப்புக்களில் பெண்களுக்கு மட்டும் அநீதி இடம்பெறுகின்றது எனக் கூறமுடியாது. நேர்காணலின் போது ஆண்களும் பாதிக்கப்படுகின்றார்கள் என்பது தெரியவந்தது. அதாவது காதி நீதிமன்றங்களில் வழங்கப்பட்ட தீர்ப்புக்களில் பெண் தரப்பிற்கு சார்பாக வழங்கப்பட்ட சில தீர்ப்புக்களினாலும், ஆண் தரப்பிற்கு சார்பாக வழங்கப்பட்ட சில தீர்ப்பினாலும் இரண்டு தரப்புமே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே இருபாலாருக்கும் இவ்வாறு வழங்கப்பட்ட குறிப்பிடத்தக்க தீர்ப்புக்கள் சமத்துவத்தினை ஏற்படுத்தவில்லை எனக்கூறியதுடன் அத்தோடு நேரடியாகக் கூட காதி நீதிமன்ற தீர்ப்பினால் பாதிக்கப்பட்ட சில ஆண்கள் அவருடைய சம்பவத்தையும் மிக வருத்தத்துடன் தெரிவித்தார்கள். குறிப்பாக பராமரிப்புச் செலவு வழக்குத் தீர்ப்பின் மூலம் ஆண்களுக்கு அதிகளவான பாதிப்பு ஏற்படுவதாக கூறப்பட்டதுடன் (மூலம் : நேர்காணல், 2022). இவ்வாறான ஒரு வழக்கினை நேரடியாக அவதானிக்கவும் முடிந்தது. எனவே பெண்கள் மாத்திரம் தான் பாதிக்கப்படுகிறார்கள் என்று கூற முடியாது. காதி நீதிமன்றத்தினால் வழங்கப்படும் தீர்ப்புகள் திருப்தியளிக்காமைக்கு காதிமார்களுடைய பலவீனத்தையும், பக்கச்சார்பு நிலமையினையும் காரணம் என முன்னாள் காதி அல்ஹாஜி எஸ்.எச்.எல்.ஏ. கபூர் அவர்கள் சுட்டிக்காட்டினார்.

05. காதிகளின் சமத்துவத்தை பேணுவதில் காதிகளாக பெண்களை நியமிப்பது தொடர்பாக விடையளித்தவர்கள்



(மூலம் : களஆய்வு, வினாக்கொத்து, ஆனி 2022)

தற்போதுள்ள காதி நீதிமன்றம், ஆண்களே காதிகளாக இருக்கக் கூடிய இடம் என்பதன் காரணமாக, அங்கு பெண்களுக்கு நீதி கிடைப்பதில்லை என்று காதி நீதிமன்றம் தொடர்பாக முஸ்லிம் பெண்ணியல்வாதிகளும் மனித உரிமை செயற்பாட்டாளர்களும் பல விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். அதேபோன்று "பெண்கள் ஆட்சித் தலைமையை ஏற்கக்கூடாது என்று இஸ்லாம் கூறுகிறது. இது பெண்களின் உரிமையைப் பறிப்பதும் அவர்களை அவமானப்படுத்துவதுமாகும்" என்று முஸ்லிமல்லாதவர்கள் சிலரும் விமர்சனம் செய்கின்றனர்.

காதிகளாக பெண்களை நியமிப்பது நல்லது என குறிப்பிட்டவர்கள் பெண் முழு சமூகத்தின் கலீபா என்ற பாரிய அரசியல் தலைமைப் பொறுப்பை ஏற்பது தவிர, நீதிபதி போன்ற பொறுப்புகளை ஏற்றுச் செயல்பட முடியும் எனக் கூறுகின்றனர். தகுதி இல்லாத ஓர் ஆண் இருப்பதைவிட, தகைமை பெற்ற ஒரு பெண் அப்பணியை செவ்வனே நிறைவேற்றுவாளாக இருந்தால், அதற்கு இஸ்லாம் அங்கீகாரத்தை வழங்கும் என்ற கருத்தை அவர்கள் முன்வைக்கின்றனர். அத்தோடு, பெண்கள் சில தனிப்பட்ட விடயங்களைக் கூற முடியாது தவிப்பதை இல்லாமல் செய்ய முடியும் என்ற நியாயமும் முன்வைக்கப்படுவதால், காதி நீதிமன்றங்களில் பெண்களை நீதிபதிகளாக நியமிப்பது முரணான செயற்பாடு அல்ல (மூலம் : நேர்காணல், 2022) என்ற கருத்தை அவர்கள் முன்வைக்கின்றனர்.

அத்துடன் பெண்கள் இலங்கையில் ஆண்களுக்கான அரபுக் கல்லூரிகளில் கற்பிக்கப்படும் அடிப்படையான பாட உள்ளடக்கங்களையே பெண்களுக்கான அரபுக் கல்லூரிகளிலும் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. அங்கு பெண்களை காதிகளாக உள்வாங்குவதற்கேற்ப பாடவிதான மாற்றத்தை ஏற்படுத்தலாம். இதன் மூலம் எதிர்காலத்தில் அரபுக் கல்லூரிகளிலிருந்து பட்டம்பெற்று வெளியாவோர் காதி நீதிபதிகளாக சேவை செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும் எனவும், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய சட்டத் துறையை விசேட துறையாக கற்கின்ற போது அதில் இலங்கையின் சட்டத்துறை தொடர்பாகவும் விரிவான கற்கைகளை கொண்டுள்ளதனால் இவ்வாறான இடங்களில் பட்டம்பெறும் பெண்களை காதிகளாக நியமிக்க முடியும் எனக் குறிப்பிட்டார் (மூலம் : நேர்காணல், 2022). இச்சட்டமூலம் கொண்டு வந்த காலத்தை விட தற்போது பல படித்தரங்களில் பெண்கள் முன்னேற்றம் கண்டுள்ளார்கள். தற்பொழுது நீதித்துறையில் எத்தனையோ முஸ்லிம் பெண்கள் சட்டத்தரணியாக இருக்கிறார்கள். எனவே காதி நீதிமன்றம் என்பது சாதாரண விடயம் இதிலும் நிச்சயமாக பெண்களுக்கு வர முடியும். என்னை பொறுத்தவரையில் மேல் நீதிமன்றத்திற்கோ, உச்ச நீதிமன்றத்திற்கோ முஸ்லிம் பெண்கள் வரும் காலம் வெகு தொலைவில் இல்லை என்பதற்காகத் தான் இந்த விடயத்தில் அவசரமாக சீர்திருத்தம் தேவை என்று கருதுகிறேன் (மூலம் : நேர்காணல், 2022). எனவும் தங்களது கருத்தினை நேர்காணலின் போது தெரிவித்தனர்.

நேர்காணலின் போது பெண்களை நியமிப்பது தேவையற்றது என கூறியவர்களும் இருக்கவே செய்கின்றனர். ஒரு காதியைப் பொறுத்தவரை, வலி (பாதுகாவலர்) இல்லாத வேளையில் இன்று நடைமுறையிலுள்ள முஸ்லிம் தனியார் சட்டத்தில், "ஒரு பெண்ணுக்கு மணம் முடித்து வைக்கத் தகுதி பெற்ற பொறுப்பாளர் - வலி இல்லாத பட்சத்தில் குறிப்பிட்ட பிரதேசத்தை சேர்ந்த காதியே அப்பெண்ணுக்கு வலியாக இருந்து மணம் முடித்து வைப்பார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் பெண்ணும் காதியாக அமரமுடியும் என

வைத்துக்கொண்டால் ஒரு பெண்ணுக்கு இன்னொரு பெண் வலியாக இருக்க வேண்டிவரும். அப்படியாயின் அதையும் நீங்கள் ஏற்றக்கொள்கின்றீர்களா என கேள்வி எழுப்பப்பட்டன. இதேபோல், பெண்கள் மட்டும் காதிகளாக அமர்த்தப்படும் காதி நீதிமன்றில், ஆண்கள் மணவாழ்வில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை முன்வைக்க முடியாத சூழ்நிலை ஏற்படும் என்றும் ஆண்கள் மூலமாக அச்சுறுத்தல் ஏற்படலாம் எனவும் தற்போதைய காதியினாலும் ஜூரியினாலும் கூறப்பட்டது (மூலம் : நேர்காணல், 2022). எனவே, பெண் காதிகளாக நியமிக்கப்பட தகுதியுடையவர்களாக்கப்படல் வேண்டும் என்பதுடன் அவர்களுக்கு சட்டரீதியான பாதுகாப்பும் கொடுக்கப்பட வேண்டும் எனவும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

06. காதி நீதிமன்றத்துக்கு சென்று வழக்குத் தொடர்ந்த பின் காதி நீதிமன்றத்தினால் சம்பந்தப்பட்டவருக்கு ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பாக விடையளித்தவர்கள்



(மூலம் : களஆய்வு, வினாக்கொத்து, ஆனி 2022)

காதி நீதிமன்றத்துக்கு சென்று வழக்குத் தொடர்ந்த பின் காதி நீதிமன்றத்தினால் சம்பந்தப்பட்டவருக்கு உடல், உள ரீதியான அசௌகரியங்கள் ஏற்படுகின்றது என்ற கருத்தினை அடிப்படையாகக்கொண்டு ஆய்வுப் பிரதேசத்தில் தகவல்களை சேகரித்தபோது காதி நீதிமன்றங்களை பொறுத்தவரையில் வழங்கப்படும் தீர்ப்புக்கள் பெண்களுக்கு மட்டும் அசௌகரியங்கள் இடம்பெறுகின்றது எனக் கூறமுடியாது நேர்காணலின் போது ஆண்களும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் தொடர்பாக விடையளித்தவர்கள் (மூலம் : நேர்காணல், 2022) என்பது தெரியவந்தது அவ்வாறு ஏற்பட்டிருப்பின் எவ்வகையானது எனக் கோரப்பட்ட போது பெரும்பான்மையான நபர்களால் அச்சுறுத்தல் அல்லது மிரட்டுதல் மற்றும் தகாத சொற்பிரயோகம் பிரயோகிக்கப்டுப்படுகின்றமை பற்றிக் குறிப்பிட்டனர். காதிகள் அதிகமாக கோபப்படுவதனையும் என்னால் அவதனிக்கக்கூடியதாக இருந்தது. இதில் அதிகமாக முஸ்லிம் பெண்களே ஏதோ ஒரு அடிப்படையில் சில இன்னல்களுக்கு உட்படுகின்றனர் (மூலம் : நேர்காணல், 2022).

முடிவுரை

அண்மைக்காலமாக இச்சட்டத்தை நீக்க வேண்டுமென்பதற்காக முன்வைக்கப்படும் பிரதான வாதங்களில் ஒன்றுதான் “முஸ்லிம் தனியார் சட்டத்தினால் பெண்களுக்கு உரிய நீதி கிடைப்பதில்லை” என்ற வாதமாகும். அதனை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் தனியார்

சட்ட ஏற்பாடுகள் மற்றும் காதி நீதிமன்றம் தொடர்பாக பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றதனால் அதனை ஆய்வு செய்ய வேண்டியதில் அவசியம் ஏற்பட்டு வருகின்றது. இதனால் தான் ஆய்வானது பின்வரும் கருதுகோளைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதாவது "இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தினூடாக முஸ்லிம் பெண்களின் ஜனநாயக உரிமைகளை வலுப்படுத்தல்" என்பதாகும். இத்தகைய கருதுகோளானது முதலாம் நிலைத் தரவுகளையும், இரண்டாம் நிலைத் தரவுகளையும் சேகரித்து ஆய்வுப் பிரதேசமான நிந்தவூர் பிரதேசத்திலே பிரயோகப்படுத்தப்பட்டு நடைமுறையில் பயன்படுத்தப்பட்டு வாய்ப்புப் பார்க்கப்பட்டு சமூகத்திலே முஸ்லிம் தனியார் சட்ட ஏற்பாடுகளின் மூலம் சமூகத்தில் முஸ்லிம் பெண்களுக்கு மாத்திரம் அநீதி இழைக்கப்படவில்லை இவ்வேற்பாட்டினால் ஆண்களும் அநீதிற்கு உள்ளாகின்றனர் என்பது ஏற்கப்பட்டுள்ளது.

எனவே காதி நீதிமன்றத்தின் காத்திரமான செயற்பாடுகளை இன்னும் முஸ்லிம் சமூகம் எதிர்பார்த்துக்கொண்டே இருக்கிறது எனலாம். ஆதலால் முஸ்லிம் தனியார் சட்டத்திற்கு மற்றும் காதி நீதிமன்ற செயற்பாடுகளுக்குத் தடையாகவுள்ள ஏற்பாடுகள் அடையாளம் காணப்பட்டு இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தில் முஸ்லிம் பெண்களினுடைய ஜனநாயக உரிமைகளை வலுப்படுத்தும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது காலத்தின் தேவையாகும். ஆகவே, இலங்கையின் காதி நீதிமன்ற முறைமையானது சிறந்தது என்ற காரணத்தினால், சட்டம், நடைமுறைச்சட்டம் போன்றவற்றின் பல விடயங்களையும் தேவைக்கேற்ற வகையில் அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன.

பரிந்துரைகள்

இலங்கையின் முஸ்லிம் தனியார் சட்டம் மற்றும் அதனை நடைமுறைப்படுத்தும் காதி நீதிமன்றம் தொடர்பான அண்மைக்காலமாக மேல் எழுந்துள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்காக பின்வரும் பரிந்துரைகளை முன்வைக்கலாம்.

- முஸ்லிம் தனியார் சட்டம் பற்றிய சட்ட விளக்கங்கள், செயற்பாடுகள் இன, மத, மொழிகளுக்கு அப்பால் அனைத்து மக்களுக்கும் விரிவாக தெளிவுபடுத்தப்படல் வேண்டும்.
- முஸ்லிம் தனியார் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் காதி நீதிமன்றம் தொடர்பில் எழுந்துள்ள சவால்களை மார்க்க அறிஞர்கள், புத்திஜீவிகளின் ஆலோசனையின் அடிப்படையில் களைவதற்கு முனைய வேண்டும்.
- முஸ்லிம் தனியார் சட்டத்தின் மூலமாக முஸ்லிம் பெண்களுக்கு பால்நிலை சமத்துவ எண்ணக்கருவினை பேணும்வகையில் மாற்றங்கள் முன்வைக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.
- முஸ்லிம் பெண்களின் திருமண வயதெல்லையை 16 அல்லது 18 ஆக உயர்த்துவது தொடர்பான மாற்றங்களைக் கொண்டு வரும் போது விஷேட சந்தர்பங்களில் பருவ வயதினை அடைந்தவர்கள் திருமணம் செய்யக்கூடிய கட்டாய ஏற்பாடு உருவாக்கப்பட வேண்டும்.

- காதி நீதிமன்ற செயற்பாடுகளுக்கென நிரந்தர கட்டடத் தொகுதி அமைக்கப்பட வேண்டும்.
- காதி நீதிமன்றத்தின் காதிமார்களினால் ஏற்படும் அசோகரியங்களுக்கு வழக்காளிக்கு சட்ட ரீதியான பாதுகாப்பு ஏற்பாடுகள் முஸ்லிம் தனியார் சட்ட திருத்தத்தின் மூலமாக கொண்டுவரப்பட வேண்டும்.
- காதி நீதிமன்ற நிர்வாக செயற்பாடுகளில் பெண்களின் பங்களிப்பைப் பெற ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.
- பெண்கள் காதிகளாகவோ, ஜூரிகளாகவோ, திருமணப் பதிவாளர்களாகவோ, காதிகள் சபை அங்கத்தவராகவோ நியமிக்கப்படும் முன்னர் இஸ்லாமிய மார்க்க வழிகாட்டல் மற்றும் நடைமுறையில் சிக்கல்களை ஆழமாக விளங்கி நியமிப்பது மிக முக்கியமானதாகும். மேலும் இவ்வாறு நியமிக்கப்படின் பெண்களுடைய பதவிக்காலத்தில் பதவிப்பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.
- எல்லா நீதிமன்றங்களும் நீதிமன்ற நடவடிக்கையின் போது பெண்களுக்கு ஆதரவளிப்பதற்காக கட்டாயமாக பெண் உளவளத்துணை ஆலோசகர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- காதி நீதிபதிகள் நியமனம் செய்யப்படும் போது மார்க்கக்கல்வி, இறையச்சம், மார்க்க ஷரீயாச்சட்டம், கல்வித்தகைமை, நல்லொழுக்கம் ஆகியவைகளைக் கருத்திற் கொண்டு போட்டிப் பரீட்சைகள் வைத்து காதி நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நாட்டின் ஏனைய நீதிபதிகள் நியமிக்கப்படும் அமைப்பினூடாக காதி நீதிபதிகளை நியமிக்க ஏற்பாடுகள் செய்யலாம்.
- தராதரங்கள் உயர்த்தப்பட்டு இஸ்லாமிய சட்டத்திலும் நாட்டுச் சட்டதிலும் போதுமான தெளிவும் புலமையும் உள்ளவர்களாக அவர்கள் தகைமையுள்ளவர்களாக ஆக்கப்பட வேண்டும். அத்தோடு, காதி நீதவான்களின் சேவைகள் ஒழுங்கமைக்கப்படவும் வேண்டும்.
- காதி நீதிபதியாக ஆண்களே இருக்க வேண்டும் என்ற வழிமுறையிலிருந்து திருமணப் பிணக்குகளோடு காதி நீதிமன்றத்திற்கு ஆண்களும், பெண்களும் வருவதனால் காதி நீதிமன்ற விசாரணைகளின் போது மதிப்பீட்டாளர்களில் ஒருவராக பெண்களை நியமிக்கலாம்.
- காதி நீதிமன்றத்தில் ஜூரிகளாக (மதிப்பீட்டாளர்கள்) இருப்பவர்களை போட்டிப் பரீட்சைகளின் மூலமும், நேர்காணல் மூலமும் நியமிக்கலாம். இதனால் சிறந்தவர்களது சேவை காதி நீதிமன்றத்திற்கு கிடைக்கும். அதேபோல் காதிகள் நியமிக்கப்பட முன்னரும் நியமிக்கப்பட்ட பின்னர் தொடர்ச்சியானதுமான போதிய பயிற்சிகள் காதிகளுக்கு வழங்கப்படல் வேண்டும்.
- காதி நீதிமன்றத்தினையும், மேன்முறையீட்டு சபையையும் இணைத்து ஒரே நாளில் வழக்குகளை விசாரிக்கச் செய்யலாம். இதனால் தம்பதிகளுக்கு வழங்கப்படும் தீர்ப்புகளில் அதிக உறுதித்தன்மையும், நியாயத்தன்மையும் பேணப்படும்.
- ஆலோசனைச் சபை நியமிக்கப்பட வேண்டும் அதில் 50 சதவீதமான பெண்களைக்கு இடம் ஒதுக்கப்பட வேண்டும்.

- காதி நீதிமன்றங்களை மேற்பார்வை செய்யும் முறைமை உருவாக்கப்பட வேண்டும் அதாவது காதி நீதிமன்ற நடவடிக்கைகளையும், பதிவுகளையும் கண்காணிப்பதற்காக ஒரு முறைமையை நிர்மானித்தல் கண்காணிப்பின் கீழான அவதானிப்புகளாவன தொடர்ச்சியான பயிற்சிகளில் உள்வாங்கப்படல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட வழிகளில் ஏற்கனவே முன்வைத்த ஆலோசனைகளை அடைந்து கொள்ள முடியும். இந்த விடையங்கள் சார்ந்து திருத்தங்கள் செய்கின்ற போது அவை அனைத்தும் இஸ்லாமிய மார்க்க விதிமுறைகளுக்கு அமைவாக இருப்பதை உறுதிப்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும். எனவே இவற்றைக் கடைப்பிடிக்கும் போது முஸ்லிம் தனியார் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் காதி நீதிமன்றத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது ஏற்படக்கூடிய பிரச்சினைகளை தீர்க்கலாம்.

உசாத்துணை

1. அமீன், ஏ.எச்.ஜி. (2001), "காதி நீதிமன்ற நடைமுறைகளும் செயற்பாடுகளும்", அல்-அமீன் சட்ட மத்திய நிலையம், கொழும்பு.
2. அமீன், எம்.ஐ.எம். (2004), "காதி நீதிபதிகள்: தகைமைகளும் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நியதிகளும்", இல் அல்ஹஸனாத் (ஜுன் இதழ்), இலங்கை ஜமாத்தே இஸ்லாமிய வெளியீடு, தெமட்டக்கொட.
3. சலீம் மர்சூப். (2001), "இலங்கையின் காதி நீதிமன்ற முறைமையும் முஸ்லிம் பெண்கள் மீதான அதன் தாக்கமும்", முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி, கொழும்பு.
4. பிரதேச கலாசாரப் பேரவை, (2015), "நிந்தவூர் வரலாறும் வாழ்வியலும்", பிரதேச கலாசாரப் பேரவை பிரதேச செயலகம் - நிந்தவூர்.
5. Coory, L.J. (2003), An Introduction to the legal system of Sri Lanka, Lake House Investments; 2nd Edition. Colombo.
6. Mazahir, S.M.M., Helfan, M.L.M., Rakshana Farvin, M.U., & Shihana M.S.F. (2017), இலங்கை முஸ்லிம் தனியார் சட்டம் குறித்த கருத்து நிலை : இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு. E-Proceeding (Vol.I), South Eastern University Arts Research Session , 368-373.
7. Jalaldeen, M.S. (2004), The Muslim Law of Marriage, Divorce and Maintenance in Sri Lanka, Haji Omar Foundation for Peace, Education and Research, 2nd Edition, Colombo.
8. Jazeel, M. I. M., & Fowzul, M. B. (2018), Qualifications of Quazi in Sri Lanka: A Field Study from Islamic Perspective Sri Lankan Journal of Arabic and Islamic Studies, 1(1), 32 - 51.
9. Jazeel, M. I. M., & Fowzul, M. B. (2019), Behaviors of the Quazi in Sri Lanka: An Empirical Study from Islamic Perspective. Sri Lankan Journal of Arabic and Islamic Studies. 2(1), 15-30.

நேர்காணலில் பங்குபற்றியோர் விபரம்

1. அல்ஹாஜி எஸ்.எச்.எல்.ஏ. கபூர் (முன்னாள் காதி) – நிந்தவூர்
2. அல்ஹாஜி சிக்கந்தர் அகமது (முன்னாள் காதி) - நிந்தவூர்
3. முகம்மது சரீபு ஐவாத் (விவாகரத்தானவர்)
4. அல்ஹாஜி எஸ். எல். அப்துல் சலாம் (தற்போதைய காதி)
5. ஹுசைன் உம்முஹையிஸர்
6. முகம்மது அலியார் அப்துல் அஸீஸ் (விவாகரத்தானவர்)
7. அபூபக்கர் சித்தி பாயிஸா
8. காதர் முகையிதீன் முஹம்மது அறபாத்
9. யாக்கூப் சித்தி ஜெஸிமா - (விவாகரத்தானவர்)
10. அன்வர் பாத்திமா நுஸ்கா
11. உமர் லெவ்வை சித்தி முனிரா
12. முகம்மது பஸீல் கபூர் பாத்திமா சபா
13. இஸ்மாலெவ்வை இஸ்ஸதீன் (ஆசிரியர்)
14. அல்ஹாஜி. றகூல் (தேசிய கல்வியியல் கல்லூரி அட்டாளச்சேனை – முன்னால் தலைவர்)
15. PMM. இப்றாஹீம் (ஓ.பெ. பிரதி அதிபர்) - தற்போதைய ஜுரி
16. இக்பால் அறபாத்
17. அப்துல் றகீம் அனிஸா
18. அமீர் பாத்திமா நிப்லா
19. உதுமா லெவ்வை சுபீனா

முரண்பாடுகளை தீர்ப்பதில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் வகிபங்கும், தெரிவு செய்யப்பட்ட நாடுகளில் அதன் நடைமுறையும்: ஓர் இஸ்லாமிய சட்டவியல் நோக்கு

அப்துல் ஜப்பார் முஹம்மட் அஸ்லம்[1]*, முஹம்மது ஹனீபா முஹம்மது நைறூஸ்[2], இக்பால் சௌஜான்[3]
[1,2,3]இஸ்லாமியக் கற்கைகள் துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்
*ajaslam345@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

உலகில் நாளுக்கு நாள் பிரச்சினைகளும், மோதல்களும் அதிகரித்த வண்ணம் உள்ளன. இவ்வாறு இடம்பெறும் மோதல்கள் தனிநபர், இனக்குழுக்கள், சமூகம், நாடு என வியாபித்துச் செல்கின்றமையை அவதானிக்க முடியும். மறுபுறம் மோதல் முரண்பாட்டுத் தீர்வு, மத்தியஸ்தம் தொடர்பான புதிய கற்கைகள் போன்றன உலகின் பல முன்னணி கல்வி நிறுவனங்களால் வழங்கப்பட்டு வருகின்றன. இருப்பினும், இஸ்லாத்திற்கு முற்பட்ட ஜாஹிலியாக் காலத்திலேயே முதன் முதலில் மத்தியஸ்தத்தைக் குறிக்க ‘‘ஸுல்ஹ்’’ மற்றும் ‘‘தஹ்கீம்’’ போன்ற வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டன. இஸ்லாத்தின் வருகையுடன் அல்-குர்ஆனின் போதனைகளுடன், நபி (ஸல்) அவர்களின் விரிவான நடைமுறைகளில் நவீன மத்தியஸ்தத்தின் இயல்புகளைக் கண்டுக் கொள்ள முடிவதுடன், இஸ்லாத்தில் முதல் மத்தியஸ்தகராகவும் இறைத் தூதர் திகழ்ந்துள்ளார். இப்பின்னணியிலேயே இஸ்லாமிய சட்டவியல் நோக்கில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்றால் என்ன, அது தெரிவு செய்யப்பட்ட நாடுகளில் எவ்வாறு பிரயோகிக்கப்படுகிறது போன்றவற்றை கண்டறிவதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது ஒரு நூலக ஆய்வாக காணப்படுவதுடன், இதில் பண்பு சார் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுக்குத் தேவையான முதலாம் நிலைத் தரவுகள் நேரடியாக அல்-குர்ஆன், ஸுன்னா போன்றவற்றிலிருந்து பெறப்பட்டதுடன், இவற்றிற்கு மேலதிகமாக இரண்டாம் நிலைத் தரவு மூலங்களான ஆய்வுக் கட்டுரைகள், புத்தகங்கள், சஞ்சிகைகள், இணைய ஆக்கங்கள், அறிக்கைகள் போன்றனவும் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டன. பெறப்பட்ட தகவல்கள் அனைத்தும் விபரண முறையில் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவானது இஸ்லாமிய சட்டவியல் நோக்கில் மத்தியஸ்தம் என்பது பர்ளு ஐய்னாகவும், சில நிலைகளில் பர்ளுக் கிபாயாவாகவும் அமைந்துள்ளதுடன், உலகின் பல நாடுகளின் சட்ட ஏற்பாடுகளில் மத்தியஸ்தத்திற்கான முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. பொதுவாக உலகளாவிய இஸ்லாமிய மனித உரிமைகள் பிரகடனம், கெய்ரோ மனித உரிமைகள் பிரகடனம் காணப்படுவது போன்று மோதல் தீர்வுக்கான மத்தியஸ்தம் தொடர்பில் தனியான கோட்பாடுகள் உருவாக்கப்பட்டு உலக நாடுகளின் சட்ட யாப்புகள் வரை அவை விரிவாக்கம் செய்யப்பட வேண்டிய தேவை உள்ளமையை இவ்வாய்வு பரிந்துரை செய்கிறது.

திறவுச் சொற்கள்: மத்தியஸ்தம், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம், மோதல் தீர்வு, ஸுல்ஹ், தஹ்கீம்

1. அறிமுகம்

முரண்பாடு என்பது மனித வாழ்வில் தவிர்க்க முடியாத ஓர் அம்சமாகும். மனிதன் ஒரு சமூகப் பிராணி என்றவகையில் அவன் பிற மனிதர்களுடன் இணைந்து வாழும் போது தோன்றும் பிணக்குககளில் ஒற்றுமை, உடன்பாடு, ஒருமைப்பாடு போன்றன காணப்படுவது போன்று உடன்பாடின்மை, வாதப் பிரதிவாதங்கள் போன்றனவும் காணப்படுகின்றன (குணரத்தினம், 2012). இவற்றை கற்கால மனிதர்கள் முதல் தற்கால மனிதர்களின் நடத்தையிலும் அவதானிக்க முடியும். பொதுவாக மனிதர்களுக்கு மத்தியில் போட்டித் தன்மை காணப்படுவது இயல்பான ஒன்றாகும். மனிதனின் இயல்பு வாழ்க்கையில் இப்போட்டித் தன்மை உக்கிரமடைந்து முரண்பாடுகளுக்கும், மோதல்களுக்கும் வழிவகுக்கிறது (Augestine, 1995). மனிதன் எதிர்நோக்கும் ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும், குழப்பங்களுக்கும் பின்னால் நல்லதோ-கெட்டதோ, வெற்றியோ-தோல்வியோ ஒரு முடிவு இருக்கிறது. இவ்வாறு மோதலில் இருந்து ஒரு முடிவை நோக்கி நகர்வதற்கு இன்றியமையாத ஓர் அம்சமாக மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் காணப்படுகிறது (Bono, 1985).

மத்தியஸ்தம் என்பது மாற்று முரண்பாட்டுத் தீர்வின் (Alternative Dispute Resolution-ADR) ஒரு வடிவமாக கொள்ளப்படும் அதேவேளை இது உதவி அளிக்கப்பட்ட பேச்சு வார்த்தையின் (Assisted Negotiation) ஓர் வடிவமாகவும் பார்க்கப்படுகிறது. உலகின் பல நாடுகளில் ‘‘மூன்றாம் தரப்பு மத்தியஸ்தகர்’’ என்னும் பெயரில் அரச அலுவலகங்களில் சமயத்

தலைவர்கள், ஊர்ப் பெரியவர்கள், மத ஆலயங்களின் தலைவர்கள் கடமையாற்றிவருகின்றனர் (Sheefa & Begum, 2022). மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பில் அல்-குர்ஆன் வழிகாட்டி இருப்பதுடன், நபி (ஸல்) அவர்களும் அவர்களைப் பின்தொடர்ந்து வந்த தோழர்களும் தாம் வாழ்ந்த சமூகத்தில் செயற்படுத்திக் காட்டியுள்ளனர் (Mohd Salleh, 2004). முரண்பட்ட மனிதர்களுக்கு மத்தியில் மத்தியஸ்தம் செய்வதன் அந்தஸ்து பற்றி அல்லாஹ் சூரா அந்நிஸாவின் 114வது வசனத்தில் இவ்வாறு கூறுகின்றான்

> ‘‘நபியே! தர்மத்தையும் நன்மையானவற்றையும் மனிதர்களிடையே சமாதானம் செய்து வைப்பதையும் தவிர அவர்களின் இரகசியப் பேச்சில் பெரும்பாலானவற்றில் எந்த விதமான நலமும் இல்லை ஆகவே எவர் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி இதனை செய்கின்றாரோ அவருக்கு நாம் மகத்தான நற்கூலியை வழங்குவோம்” (அல்-குர்ஆன் 4:114).

ஒரு பிரச்சினைக்கு தீர்வு காண்பது கடினமாகின்ற போது மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அல்குர்ஆனின் சூரா நிஸாவின் 35 வது வசனம் பின்வருமாறு வழிகாட்டுகின்றது.

> **وَاِنْ خِفْتُمْ شِقَاقَ بَيْنِهِمَا فَابْعَثُوْا حَكَمًا مِّنْ اَهْلِهٖ وَحَكَمًا مِّنْ اَهْلِهَا ۚ اِنْ يُّرِيْدَآ اِصْلَاحًا يُّوَفِّقِ اللّٰهُ بَيْنَهُمَا ۗ اِنَّ اللّٰهَ كَانَ عَلِيْمًا خَبِيْرًا**
>
> ‘‘(கணவன்-மனைவி ஆகிய) அவ்விருவரிடையே (பிணக்குண்டாகி) பிரிவினை ஏற்பட்டுவிடும் என்று நீங்கள் அஞ்சினால் கணவனின் உறவினர்களிலிருந்து ஒருவரையும் மனைவியின் உறவினர்களிலிருந்து ஒருவரையும் மத்தியஸ்தர்களாக ஏற்படுத்துங்கள் அவ்விருவரும் சமாதானத்தை விரும்பினால், அல்லாஹ் அவ்விருவரிடையே ஒற்றுமை ஏற்படும் படி செய்துவிடுவான் - நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிபவனாகவும், நன்குணர்கிறவனாகவும் இருக்கின்றான்.’’ (அல்-குர்ஆன் 4:35).

மேலே உள்ள வசனம் பொதுவாக கணவன்- மனைவிக்கிடையில் இடம்பெறும் பிணக்குகளை மத்தியஸ்தம் செய்துவைப்பது பற்றி பேசுவதன் மூலம் ஒரு மனிதனின் சமூக வாழ்வு தொடக்கம் குடும்ப வாழ்வுவரை மத்தியஸ்தம் செல்வாக்குச் செலுத்தியுள்ளமையை புரிந்து கொள்ள முடியும்.

பொதுவாக மத்தியஸ்தம் பற்றிய கருத்தியல் இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முற்பட்ட காலம் முதல் இருந்து வருகின்ற ஒன்றாகும். இஸ்லாத்தின் தோற்றத்தின் பின் குறித்த நடைமுறைக்கு சட்ட அங்கிகாரம் வழங்கப்பட்டு அவை ஒழுங்கமைப்பட்டது என்றால் மிகையாகாது. எனவேதான் இவ்வாய்வானது இஸ்லாத்தின் மத்தியஸ்தம் பற்றிய எண்ணக்கருவையும், அதன் சட்டவியல் நோக்கையும் ஆராய முனைகிறது.

2. ஆய்வுப் பிரச்சினை

நவீன உலகில் மோதல் முரண்பாடு மற்றும் மோதல் தீர்வு என்பது ஒரு வளர்ந்து வரும் துறையாக மாறியுள்ளது. இதற்கு நேர்மாற்றமாக சமூகத்தில் மோதல்களின் எண்ணிக்கையும்,

அதன் வடிவங்களும் பல்வேறு மாற்றங்களுக்குட்பட்டு வருகின்றன. சாதாரண கொடுக்கல் வாங்கல் முதல் குடும்ப வாழ்வு வரை மோதல்-முரண்பாடு என்பது வியாபித்துக் காணப்படுகின்றது. மனிதர்களில் பலர் கசப்பான மோதல் நினைவுகளை மனதில் வைத்துக் கொண்டு, விரும்பத்தகாத உணர்வுகளுடன் வாழ்ந்து வருகின்றனர். இது அச்சுறுத்தல், விரோதம், தவறான புரிதல், காழ்ப்புணர்வு, அவமரியாதையாக பிறரை நடத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு இட்டுச் செல்கின்றது. குறிப்பாக முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் இவ்வாறு பிற மனிதனுடன் நடந்து கொள்வது பாவமான செயலாக இருப்பதுடன், இஸ்லாம் எப்போதும் சமாதனத்தை போதிக்கும் மார்க்கமாகவும் காணப்படுகின்றது. மேலும், இஸ்லாம் சமூக நலனில் கூடுதல் அக்கறை செலுத்தும் மார்க்கம் என்பதால் பிற நபர்களுக்கிடையில் இடம்பெறும் முரன்பாடுகளை ஒரு முஸ்லிம் முன்வந்து தீர்த்து வைப்பது நன்மையைப் பெற்றுக் கொடுக்கும் காரியமாகவும் பார்க்கின்றது.

உலக அரங்கில் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கென ஒவ்வொரு சமூகமும் தனித்துவமான நடைமுறைகளைப் பின்பற்றி வருகின்றன. இவற்றில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்த நடைமுறை என்பது பரவலாக பிரயோகிக்கப்பட்டுவரும் ஒன்றாகும். உலக சர்வதேச சமூகம் (Leaque of Nation) மற்றும் ஐக்கிய நாடுகள் சபை (United Nation-UN) போன்ற நிறுவனங்கள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் மேற்கொள்ளும் உலகின் முன்னணி நிறுவனங்களாகும். இருப்பினும் மத்தியஸ்தம் பற்றிய சிந்தனைகளும், நடைமுறைகளும் குறித்த நிறுவனங்கள் உலகில் தோற்றம் பெறுவதற்கு முதல் நடைமுறையில் இருந்து வருகின்றது. இஸ்லாமிய வரலாற்றின் ஆரம்பம் முதல் பிணக்குகளைத் தீர்த்துவைப்பதற்காக மத்தியஸ்தம் செய்யும் செயன்முறை குறித்த வழிகாட்டுதல்கள் அல்-குர்ஆன் போதனைகளிலும், இறைத்தூதரின் நடைமுறைகளிலும் அவதானிக்க முடியும். இதனடிப்படையில் முரண்பாடுகளைக் கையாள்வதில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் வகிபங்கு, அதன் நியமங்கள் குறித்து இஸ்லாமிய சட்ட நோக்கில் ஆராய்வதன் தேவை நவீன உலகில் எழுந்துள்ளதுடன், இது பற்றிய நவீன கோட்பாடுகள் முஸ்லிம் அறிஞர்களால் உருவாக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதற்கமைய இஸ்லாமிய சட்டவியலில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் எவ்வாறு முரன்பாடுகளைத் தீர்ப்பதில் பங்களிப்புச் செய்கின்றது என்பதை சட்ட மூலாதாரங்களின் துணையுடன் ஆராய்வதன் மூலம் கொள்கை வகுப்பாளர்களுக்கும், எதிர்கால ஆய்வாளர்களுக்கும் இவ்வாய்வின் கண்டறிதல்கள் உதவியாக அமையவுள்ளது.

3. ஆய்வின் நோக்கங்கள்

- **a.** மத்தியஸ்தம் தொடர்பில் இஸ்லாமிய சட்டவியல் நோக்கில் மதிப்பிடல்
- **b.** மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் நடைமுறை வடிவங்களை அடையாளம் கண்டு அவற்றைத் தெரிவு செய்யப்பட்ட நாடுகளின் நடைமுறைகளுடன் ஒப்பீட்டு நோக்கல்

4. ஆய்வு முறையியல்

இது பண்புசார் முறையிலமைந்த ஒரு நூலக ஆய்வாக இருப்பதுடன், இதில் முன்னைய இலக்கியங்களின் மீதான மீளாய்வு பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வுக் தேவையான தரவுகள்

நேரடியாக இஸ்லாமிய சட்டவியல் மூலாதாரங்களான அல்குர்ஆன், ஸுன்னா போன்றவற்றிலிருந்து பெறப்பட்டதுடன், இவற்றிற்கு மேலதிகமாக இரண்டாம் நிலை மூலங்களான ஆய்வுக்கட்டுரைகள், இணைய ஆக்கங்கள், நூல்கள், அறிக்கைகள் போன்றனவும் வாசிப்புக்குட்படுத்தப்பட்டன. ஆய்வின் பெறுபேறுகள் எழுத்துக்களிலும் சொற்களிலும் விபரண முறையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

5. இலக்கிய மீளாய்வு

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தலைப்புடன் தொடர்புடைய பல ஆய்வுக்கட்டுரைகள் வாசிப்புக்குட்படுத்தப்பட்டன. அவற்றில் சில பின்வருமாறு

Mediation In Islam, (2014) எனும் தலைப்பில் Azwina Wati Abdull Manaf, Asrfarina Karthika Binti Shakri & Siti Marshita எனும் ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் மாற்றுப் பிரச்சினை தீர்வு நடைமுறைகள் நீதிமன்றத்திற்கு வெளியே பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரு நடைமுறையாகும். அத்தகைய தீர்மானங்களில் மத்தியஸ்தம் மற்றும் பேச்சுவார்த்தை என்பன அடங்குகின்றன. இன்று காணப்படுகின்ற மாற்று பிரச்சினை தீர்வு வகைகளில் மத்தியஸ்தமும் ஒன்றாகும் என்றும் இது இஸ்லாமிய சட்டவியலில் காணப்படுவதோடு இஸ்லாமிய மத்தியஸ்தம் அல்லது வசாதா இன்று நன்கு நிறுவப்பட்டுள்ளது எனவும், இவ்வாய்வானது இஸ்லாமிய மத்தியஸ்தம் பற்றியும், மலேசிய சூழலில் அதன் நடைமுறை பற்றியும் ஆராய முனைவதோடு ஒரு மத்தியஸ்தரிடம் இஸ்லாமிய மத்தியஸ்தம் பற்றிய அறிவு காணப்படுவதோடு இஸ்லாமிய சட்டவியலின் பொது விதிகளையும் அவர் அறிந்திருப்பது அவசியமாகும் என்பதையும் இவ்வாய்வு பரிந்துரைக்கிறது.

முரண்பாட்டுத் தீர்வு முயற்சிகளில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் (2012) எனும் தலைப்பில் எஸ். எம் ஆலிப் என்பவரால் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வில் மூன்றாம் தரப்பினர் யார் என்பதை வரையறை செய்து வரலாற்றில் மத்தியஸ்த நடைமுறைகள், மத்தியஸ்த வழிமுறைகள், உபாயங்கள் என்பனவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் உலகில் நடைமுறையில் உள்ள மத்தியஸ்த செயல்முறை கட்டமைப்பையும், அதன் தன்மைகளையும் கோடிட்டு காட்டியுள்ளார்.

தீர்ப்பளிக்கும் ஒழுங்கு ஓர் இஸ்லாமிய பார்வை (2015) எனும் தலைப்பில் Jazeel M.I.M, Fowzul M.B ஆகியோர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இஸ்லாமிய நீதிபரிபாலன முறையில் தீர்ப்பளிக்கும் ஒழுங்கு மிகப் பிரதானமானதாகும். நீதிபதியின் தீர்ப்பு நீதமானதாகவும், பக்கசார்பற்றதாகவும், வெளிப்படையானதாகவும் இருக்க வேண்டும் என்பதில் இஸ்லாம் அதிகம் கரிசனை செலுத்துகின்றது. மேலும், ஒரு நீதிபதி தீர்ப்பளிக்கும் போது வாதி, பிரதிவாதி உடன் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள், தீர்ப்புக்கான மூலாதாரங்கள், தீர்ப்பு வழங்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் தொடர்பில் இஸ்லாமிய சட்ட மரபான ஷரீஆவின் பெறுமானங்களை தொகுத்தறிவதை இவ்வாய்வு பிரதான குறிக்கோளாக கொண்டுள்ளது. தீர்ப்பளித்தலுடன் தொடர்பான சட்ட ஒழுங்குகள் பற்றிய இஸ்லாத்தின் வழிகாட்டல்களை நேர்த்தியாக கட்டமைத்திருப்பதே இவ்வாய்வின் பிரதான கண்டறிதலாகும்.

Rossiman., N.S.B. (2020), The Significance of Sulh in the Shari'ah Court" எனும் தலைப்பில் எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரையானது நூலக ஆவணங்கள், மத்தியஸ்தம் குறித்து முன்னைய ஆய்வுகள் என்பவற்றை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆவணப் பகுப்பாய்வாகும். இதில் திருமண மோதல்கள் குடும்பத் தகராறுகள் என்பவற்றை தீர்ப்பதிலும் சரியான முடிவுகளை வழங்குவதிலும் இணக்க சபைகளின் பயன்பாடு மற்றும் நடைமுறை அதன் முக்கியத்துவம், வரலாற்றில் இணக்க சபைகளில் செயற்பாடுகள் குறித்து ஆராய்கிறது. இஸ்லாத்தில் இணக்கம் என்பது **صلح** எனும் சொல்லின் மூலம் அழைக்கப்படுகின்றது. நீதிமன்றங்களில் **صلح** எனப்படும் இப்பகுதி வழக்குகளை செயன்முறைப்படுத்துவதிலும், வாதப்பிரதிவாதிகளுக்கிடையில் வழக்குகளைத் தீர்ப்பதில் ஊக்கியாகவும் செயல்படுகின்றது என்பதுடன், இணக்கப்பாட்டின் படிமுறைகள் தொடர்பிலும் விபரிக்கின்றது. இஸ்லாமிய இணக்கசபை அமைப்பானது குறைந்த செலவையும், இருதரப்பினர்களுக்கிடையிலும் முறையான தகராறு தீர்வினையும் வழங்கி வருகின்றது எனவும் இவ்வாய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மேலும் **صلح** அமைப்பானது இரு தரப்பினர்களுக்கிடையில் வழக்குகளின் இரகசியத்தன்மையினை பேணுவதாகவும் இலகுவான முறையில் இணக்கம் பெற்று வெற்றி-வெற்றி (Win-Win Situation) என்னும் நிலையினை உத்தரவாதப்படுத்தும் சூழ்நிலையினையும் உருவாக்குகின்றது என்பது இவ்வாய்வின் முடிவாகும்.

Nora Abdul Hak மற்றும் Hank Ambarase Khan (2013), The Application of Sulh In Resolving Community Disputes எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட இவ்வாய்வானது இணக்கம் (**صلح**) தொடர்பான நடைமுறையினை கோட்பாட்டு ரீதியில் ஆராய்கிறது. இஸ்லாமிய இணக்க சபை, மலேசியாவில் காணப்படும் இணக்க சபைகள் மற்றும் மலேசியாவில் வாழும் இந்திய முஸ்லிம்களுக்கிடையில் ஸுல்ஹ் இன் செல்வாக்கு, மத்ஹப்களின் நோக்கில் இணக்கம், இளைஞர்களுக்கு மத்தியில் இணக்கப்பாடு குறித்த கருது நிலை, இணக்க சபைகளின் தற்கால போக்கு போன்றவற்றை மதிப்பீடு செய்வதுடன், நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இருந்த இணக்க முறைமைகளின் (**صلح**) வகைகள் மற்றும் குடும்ப மோதல்களை தீர்ப்பதில் ஸஹாபாக்களினால் பயன்படுத்தப்பட்ட உத்திகள் போன்றன ஆராயப்பட்டுள்ளன. மேலும் இஸ்லாத்தின் வருகைக்கு முன்பே மத்தியஸ்தம் அரபு சமூகத்தில் காணப்பட்டுள்ளது. இஸ்லாத்தின் வருகைக்குப் பின் இந்நடைமுறை இஸ்லாமிய சட்டவியல் வரையறைகளுக்குக் கீழ் கொண்டு வரப்பட்டு இன்று வரை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இது சமூக மத்தியஸ்தம், மூன்றாம் நிலை முரண்பாட்டு தீர்வு எனவும் அழைக்கப்படுகிறது. இன்றைய சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு இதன் நடைமுறைகள் புதுப்பிக்கப்பட வேண்டும் என்பதை இவ்வாய்வு பரிந்துரை செய்கிறது.

மேற்குறிப்பிட்ட ஆய்வுகளில் இருந்து இவ்வாய்வுக்குத் தேவையான தகவல்கள் பெறப்பட்டது. இவ்வாய்வு மேற்குறிப்பிட்ட ஆய்வுகளில் இருந்து இவ்வாய்வு நோக்கம், முறையியல், ஆய்வுத் தலைப்பு போன்றவற்றிலிருந்து வேறுபடுவதுடன், மத்தியஸ்தம் பற்றி இஸ்லாமிய சட்டவியல் நோக்கில் ஆராய்கின்றமையாலும், உலகநாடுகளில் நடைமுறையில் உள்ள மத்தியஸ்த நடைமுறைகளை பரீட்சிக்கின்றமையினாலும் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகின்றது.

6. கலந்துரையாடல்

இப்பகுதியில் பகுப்பாய்வு செய்யப்பட்ட தகவல்கள் மூன்று உப-தலைப்புகளின் கீழ் முன்வைக்கப்பட்டுள்ளது. அவை முறையே முரண்பாடுகளைத் தீர்ப்பதில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் வகிபங்கு, இஸ்லாமிய சட்டவியல் நோக்கில் மத்தியஸ்தம் மற்றும் தெரிவு செய்யப்பட்ட நாடுகளில் மத்தியஸ்த நடைமுறை போன்றனவாகும்.

6.1. முரண்பாடுகளை தீர்ப்பதில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் வகிபங்கு

- ***இஸ்லாத்தில் மத்தியஸ்தம்***

இஸ்லாத்தில் நீதி செயற்பாட்டின் பண்பை கூறும் இரு பதங்களை அல்குர்ஆன் கொண்டுள்ளது. அவை ‘‘ஹுக்ம்’’, ‘‘கழா’’ என்ற பதங்களாகும். கழா என்ற சொல் மொழி ரீதியில் சட்டம் இயற்றுதல், தீர்மானித்தல், முடிவெடுத்தல் என்று பொருள்படும். ஹுக்ம் என்பது சட்டம் இயற்றுதல், மத்தியஸ்தம் செய்தல், தீர்வு கூறுதல் என்று பொருள்படும். மேலும் சுல்ஹ், இஸ்லாஹ் போன்ற அரபு வார்த்தைக்கு முரண்பட்ட இரு தரப்பினர்களுக்கிடையே இணக்கத்தை ஏற்படுத்தல் எனும் பொருளில் அல்குர்ஆனில் பயன்படுத்தப்பட்டுள்ளது (Jazeel, 2018). பிணக்குகளை நீக்கி இணக்கத்தை ஏற்படுத்துவதன் அவசியம் குறித்து அல்குர்ஆனும், ஸுன்னாவும் பல இடங்களில் வலியுருத்திக் கூறுகின்றன. அவற்றில் சில,

لَا خَيْرَ فِىْ كَثِيْرٍ مِّنْ نَّجْوٰىهُمْ اِلَّا مَنْ اَمَرَ بِصَدَقَةٍ اَوْ مَعْرُوْفٍ اَوْ اِصْلَاحٍ بَيْنَ النَّاسِ ۗ وَمَنْ يَّفْعَلْ ذٰلِكَ ابْتِغَاۤءَ مَرْضَاتِ اللّٰهِ فَسَوْفَ نُؤْتِيْهِ اَجْرًا عَظِيْمًا

‘‘தர்மத்தைப் பற்றி அல்லது நன்மையானவற்றைப் பற்றி அல்லது மனிதர்களுக்கிடையில் சமாதானம் ஏற்படுத்துவதைப் பற்றி ஏவியவரைத் தவிர அவர்கள் பேசும் பெரும்பாலானவற்றில் யாதொரு நன்மையும் இல்லை. மேலும் எவர் அல்லாஹ்வின் பொருத்தத்தை நாடி அதைச் செய்கிறாரோ நாம் அவர்களுக்கு மகத்தான நற்கூலியைத் தருவோம்’’ (அல்குர்ஆன், 4 :114).

மேலும்,

وَاِنِ امْرَاَةٌ خَافَتْ مِنْۢ بَعْلِهَا نُشُوْزًا اَوْ اِعْرَاضًا فَلَا جُنَاحَ عَلَيْهِمَاۤ اَنْ يُّصْلِحَا بَيْنَهُمَا صُلْحًا ۗ وَالصُّلْحُ خَيْرٌ ۗ وَاُحْضِرَتِ الْاَنْفُسُ الشُّحَّ ۗ وَاِنْ تُحْسِنُوْا وَتَتَّقُوْا فَاِنَّ اللّٰهَ كَانَ بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرًا

‘‘ஒரு பெண் தன் கணவன் தன்னை வெறுத்து விடுவான் என்றோ அல்லது புறக்கணித்து விடுவான் என்றோ பயந்தால், அவர்கள் இருவரும் தங்களுக்குள் (சமாதானமான) ஒரு முடிவைச் செய்து கொண்டால் அவ்விருவர் மீது குற்றமில்லை அத்தகைய சமாதானமே மேலானது இன்னும், ஆன்மாக்கள் கருமித்தனத்திற்கு உட்பட்டவையாகின்றன. அவ்வாறு உட்படாமல்) ஒருவருக்கொருவர் உபகாரம் செய்து, (அல்லாஹ்வுக்குப்) பயந்து நடப்பீர்களானால் நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றையெல்லாம் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்.” (அல்குர்ஆன் 4: 128)

இவ்வசனம் குடும்ப முரண்பாடுகளைக் கையாழ்வதில் மத்தியத்தை ஏற்படுத்திக் கொள்வதன் அவசியத்தை வலியுருத்தி நிற்கின்றது.

وَاِنْ طَآىِٕفَتٰنِ مِنَ الْمُؤْمِنِيْنَ اقْتَتَلُوْا فَاَصْلِحُوْا بَيْنَهُمَا فَاِنْۢ بَغَتْ اِحْدٰىهُمَا عَلَى الْاُخْرٰى فَقَاتِلُوا الَّتِيْ تَبْغِيْ حَتّٰى
تَفِيْٓءَ اِلٰٓى اَمْرِ اللّٰهِ ۚ فَاِنْ فَآءَتْ فَاَصْلِحُوْا بَيْنَهُمَا بِالْعَدْلِ وَاَقْسِطُوْا ۗ اِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُقْسِطِيْنَ

"விசுவாசிகளில் உள்ள இரு கூட்டத்தார் தங்களுக்குள் சண்டை செய்து கொண்டால் அவ்விரு சாராருக்குமிடையே சமாதானம் செய்து வையுங்கள். அவர்களுக்கிடையே நீதியைக்கொண்டு சமாதானம் செய்து வையுங்கள். நீங்கள் நீதியாகவும் நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீதியாளர்களை நேசிக்கின்றான்." (அல்குர்ஆன் 49:9)

இவ்வசனம் பொதுவாக சமூகத்தில் இடம்பெறும் முரண்பாடுகளின் போது மத்தியஸ்தம் செய்வதை குறித்து நிற்பதுடன், மத்தியஸ்கரிடம் காணப்பட வேண்டிய மிகப் பிரதான பண்பான நீதமாக நடந்து கொள்வதன் முக்கியத்துவம் தொடர்பிலும் குறிப்பிடுகின்றது.

اِنَّمَا الْمُؤْمِنُوْنَ اِخْوَةٌ فَاَصْلِحُوْا بَيْنَ اَخَوَيْكُمْ وَاتَّقُوا اللّٰهَ لَعَلَّكُمْ تُرْحَمُوْنَ

"நிச்சயமாக விசுவாசிகள் (ஒருவர் மற்றவருக்கு) சகோதரர்களே! ஆகவே (சண்டையிட்டுக் கொள்ளும்) உங்களுடைய இரு சகோதரர்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். நீங்கள் அருள் செய்யப்படுவதற்காக அல்லாஹ்வுக்குப் பயந்தும் கொள்ளுங்கள்." (அல்குர்ஆன் 49.10)

"ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் தன் தோழர்களைப் பார்த்து, "நோன்பு, தொழுகை மற்றும் தர்மத்தை விட அந்தஸ்தால் கூடிய ஒன்றை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா? எனக் கேட்டார்கள். அதற்கு தோழர்கள் "ஆம் அல்லாஹ்வின் தூதரே" என்று கூறியதும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் "முரண்பட்ட மக்களிடையே இணக்கம் ஏற்படுத்தி வைப்பதாகும்." (அறிவிப்பவர் அபூதர்தா (ரழி), ஆதாரம் : அஹ்மத், அபூதாவூத், திர்மிதி).

ஒரு வழக்கின் முடிவாக முரண்பட்டவர்களுக்கு மத்தியில் சமரசத்தை ஏற்படுத்துவதே இஸ்லாமிய நீதிப் பரிபாலனத்தின் நோக்கமாகும். "உங்கள் சகோதரர்களுக்கு இடையில் இணக்கத்தை ஏற்படுத்துங்கள்". (அல்குர்ஆன் 49:10) என்ற வசனம் இதையே குறிக்கிறது.

اِنَّ اللّٰهَ يَاْمُرُكُمْ اَنْ تُؤَدُّوا الْاَمٰنٰتِ اِلٰٓى اَهْلِهَا ۙ وَاِذَا حَكَمْتُمْ بَيْنَ النَّاسِ اَنْ تَحْكُمُوْا بِالْعَدْلِ ۗ اِنَّ اللّٰهَ نِعِمَّا يَعِظُكُمْ بِهٖ ۗ
اِنَّ اللّٰهَ كَانَ سَمِيْعًۢا بَصِيْرًا

"(விசுவாசிகளே! உங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட) அமானிதங்களை சொந்தக்காரர்களிடம் நீங்கள் ஒப்படைத்து விடுமாறும், மனிதர்களுக்கு இடையில் நீங்கள் தீர்ப்பு கூறினால், (பாரபட்சமின்றி) நீதமாகவே தீர்ப்பளிக்குமாறும் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு கட்டளையிடுகிறான். நிச்சயமாக அல்லாஹ் எதனை உங்களுக்கு உபதேசிக்கிறானோ அது மிக நல்லதாகும்." (அல்குர்ஆன் 4:58).

இந்த அல்குர்ஆன் வசனமானது நீதிபதிக்கு மட்டுமின்றி மத்தியஸ்தருக்கும் பொருந்தக்கூடியதாகும்.

> நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், ‘‘மனிதர்கள் சூரியன் உதிக்கின்ற ஒவ்வொரு நாளிலும் தம்முடைய ஒவ்வொரு மூட்டு எலும்புகளுக்காகவும் தர்மம் செய்வது கடமையாகும். இருவருக்கிடையே நீதி செலுத்துவதும் தர்மம் ஆகும்.” (அறிவிப்பவர் அபூ ஹுரைரா (ரழி) (புகாரி).

மேலும்,

> நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ‘‘முரண்பட்டவர்களிடையே இணக்கத்தை ஏற்படுத்துவதற்காகப் பொய் கூறும் ஒருவர் பொய்யர் அல்ல.” (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

நேரடியாக இஸ்லாம் பொய்பேசுவதை தடைசெய்துள்ள போதிலும், இரு நபர்களுக்கிடையில் இணக்கத்தை ஏற்படுத்துவதற்காக பொய் உரைப்பது தவறல்ல என்பதை இஸ்லாம் வழிகாட்டுகிறது.

நபியவர்களிடம் கொண்டுவரப்பட்ட பிணக்குகளுக்கு சமரசத்தையே தீர்வாக நபியவர்கள் முன்வைத்தார்கள். உதாரணமாக

> ‘‘சுபைர் (ரழி) அவர்களுக்கும் அன்சாரி தோழர் ஒருவருக்கும் இடையிலான தோட்டத்திற்கு நீர் பாய்ச்சுவது தொடர்பில் பிணக்கு ஏற்பட்டது. இது குறித்து இருவருவராலும் சாதகமான தீர்வை அமைத்துக் கொள்ள முயற்சிக்கப்பட்டது.’’ (புகாரி : ஹதீஸ் 2231).

நீதிமன்றத் தீர்ப்புக்கு முன் மத்தியஸ்த செயற்பாடு இடம்பெற வேண்டும் என்பதே இஸ்லாத்தின் நிலைப்பாடாகும். இதனாலேயே கலீ.ஃபா உமர் (ரழி) அவர்கள் நீதிமன்றத் தீர்ப்பைப் பிற்போடுவதால் வழக்காளிகள் தமக்குள் சமரசமாகிக் கொள்வர் எனக் கருதி வழக்குகளைப் பிற்போடுவது சிறந்தது என்று ஆலோசனையை வழங்கினார்கள்.

அதேபோல் ஒருவரின் உரிமைக்கான வழக்கில் சாட்சியங்களும் சான்றுகளும் முன்வைக்கப்படாத போது அதன் தீர்ப்பு சமரசமாக அமைவது ஏற்புடையது என்பதையே நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரி காண்பிக்கிறது. பின்வரும் நிகழ்வு இதற்கான எடுத்துக்காட்டாகும்.

> ஒரு வழக்கில் தீர்ப்பு வழங்குகின்ற போது நபி (ஸல்) இவர்கள் இவ்வாறு கூறினார்கள் ‘‘நிச்சயமாக நான் ஒரு மனிதன், நீங்கள் என்னிடம் வந்து உங்களது வழக்கை முன்வைக்கிறீர்கள். உங்களில் சிலர் மற்றவரை விட ஆதாரத்தை எடுத்துரைப்பதில் நாவன்மை உடையவராக இருக்கலாம். எனவே நான் அவ்வாதப் பிரதிவாதத்தை செவிமடுத்ததற்கு ஏற்ப தீர்வை வழங்குவேன். இவ்வாறு நான் (வாதத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு சகோதரனுடைய உரிமையை (உரிமையில்லாத) மற்றவருக்கு வழங்கினாலும் (அவர் அதனை எடுக்க வேண்டாம். ஏனெனில் நான்

அவருக்கு மற்றவருக்கு (உரியதென) நரகத்தின் ஒரு துண்டையே பெற்றுக் கொடுக்கிறேன். (தனக்கு உரிமை இல்லாததை அவர் தன் வாதத் திறமையால் பெற்றுக் கொள்வது அவரை நரகிற்கு இட்டுச் செல்லும்) என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதும் அவ்விரு வழக்காளிகளும் அழுதார்கள் (நரகத்தை அடைவதை விட ஆதாரம் அற்ற பொருளை விட்டுக் கொடுப்பதே சிறந்தது என்ற முடிவுக்கு வந்தார்கள்). அவ்விருவரும் மற்றவரை நோக்கி எனது உரிமையை உனக்கு விட்டுத் தருகிறேன் என்று கூறிக் கொண்டு அப்பொருளை எடுத்துக் கொள்ளுமாறு இருவரும் ஆளுக்காள் வற்புறுத்தினார்கள். இறுதியில் இருவரும் குலுக்கல் மூலம் தமது உரிமையை விட்டுக் கொடுக்க முன் வந்தார்கள் (புகாரி, ஹதீஸ் : 2680).

- ***ஸுல்ஹின் சுருக்கமான வரலாறு***

இஸ்லாத்தின் வருகைக்கு முன் ஸுல்ஹ் மற்றும் தஹ்கீம் ஆகியவை சர்ச்சைத் தீர்வுக்கான நிலையான முறைகளாக இருந்தன. தஹ்கிம் மிகவும் கட்டமைக்கப்பட்ட தீர்வு முறையாகவும் மற்றும் சர்ச்சைக்குரியவர்கள் ஒரு தீர்வை அடையத் தவறியபோதும் இதனை அடிக்கடி பயன்படுத்தப்படுத்தினர் (Ramahi, 2008).

இக்காலப்பகுதியில் ஹாகிம்கள் (நடுவர்கள்) ஒரு முக்கிய இடத்தைப் பெற்றதோடு முக்கியமாக சமூகத்தின் உயர்மட்டக் குழுவிலிருந்தும் குணப்படுத்துனர்களிடமிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்கு அமானுஷ்ய சக்திகள் இருப்பதாக நம்பப்பட்டது. ஹாகிம்கள் மீதான மூடநம்பிக்கைகள் காரணமாக மக்கள் உணர்ச்சிப்பூர்வமாக அச்சுறுத்தப்பட்டனர். இஸ்லாம் ஹாகிம்களைப் பற்றிய தவறான நம்பிக்கையை நீக்கி, தஹ்கிமை படிப்படியாக முறையான கழாவுக்கு உயர்த்தும் முறையாக மாற்றியது. சூனியத்தை நிராகரிப்பது பற்றி குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا إِنَّمَا الْخَمْرُ وَالْمَيْسِرُ وَالْأَنْصَابُ وَالْأَزْلَامُ رِجْسٌ مِنْ عَمَلِ الشَّيْطَانِ فَاجْتَنِبُوهُ لَعَلَّكُمْ تُفْلِحُونَ

> ‘‘ஈமான் கொண்டோரே! மதுபானமும், சூதாட்டமும், கற்சிலைகளை வழிபடுதலும், அம்புகள் எறிந்து குறி கேட்பதும், ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்களிலுள்ளவையாகும். ஆகவே நீங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள்” (மாயிதா : 90).

ஸுல்ஹ் மற்றும் தஹ்கீம் ஆகியவற்றின் நடைமுறைகள் இஸ்லாத்தின் போதனைகளின்படி அறிமுகப்படுத்தப்பட்டதோடு சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கான ஒரு முறையாகவும் அங்கீகரிக்கப்பட்டது. நபி (ஸல்) அவர்கள் அரசின் தலைவராக மட்டுமின்றி ஒரு சில வழக்குகளுக்கு மத்தியஸ்தராகவும், நடுவராகவும் செயற்பட்டுள்ளார்கள் (Wahed, 2015).

பல்வேறு இடங்களுக்கு இஸ்லாம் விரிவடைந்ததன் காரணமாக மத்தியஸ்தர் மற்றும் நடுவரின் பங்கு மற்ற அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டது. முஆத் பின் ஜபல் மற்றும் அலி பின் அபி தாலிப் ஆகியோரை யமனில் காழியாக நியமித்தமை நபி (ஸல்) அவர்களிடமிருந்த பிரதிநிதித்துவத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். காழி என்பவர் அக்காலப்பகுதிகளில் அவர்களின் செயல்பாடுகளுக்கு இடையே தெளிவான வேறுபாடு இல்லாததால், ஒரு

நீதிபதியாக மட்டுமல்லாமல் ஒரு மத்தியஸ்தராகவும், நடுவராகவும் செயல்பட்டார். இருப்பினும், காதியின் முக்கிய பணியானது குர்ஆன் சுன்னாவின் பொதுவான நெறிமுறைகள், கொள்கைகளுக்கு ஏற்ப தீர்ப்பினை வழங்குவதாகும்.

குலபாஉர்ராஷீதூன்களின் காலப்பகுதியில் ஒரு காழி நீதிபதியாக, நடுவராகவும், மத்தியஸ்தராகவும் கடமையாற்றினார். ஸுல்ஹ் பரவலாகப் பயன்படுத்தப்பட்டதோடு சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கான ஒரு கருவியாகவும் அங்கீகரிக்கப்பட்டது. உதாரணமாக, முதல் கலீபா அபூபக்கர் (ரழி) மத்தியஸ்தத்தைப் பயன்படுத்தினார்.

- ***ADR (Alternative Dispute Resolution) மாற்று தகராறுத் தீர்வு மற்றும் (Sulh) இணக்கப்பாடு***

ADR அதன் அதிகாரத்தன்மை அடிப்படையில் மூன்று வகைகளாக வகைப்படுத்த முடியும்.

1. சட்ட மற்றும் நீதித்துறை அதிகாரத்தால் அங்கிகரிக்கப்படும் முறையான ADR.
2. சட்ட மற்றும் நீதித்துறை அல்லாத அதிகாரத்தால் அங்கீகரிக்கப்படும் காழி நீதிமன்ற முறையான ADR.
3. நிர்வாக மற்றும் மரபு சட்டஅதிகாரத்தின் மூலம் அங்கிகரிக்கப்படும் முறைசாரா ADR ஆகும் (Rahman, 2015).

ADR என்பதை ஒரு பிணக்கின் போது சட்டப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு நீதிமன்றத்திற்குச் செல்வதற்கு முன் மக்களுக்கு உதவுவதற்கான மாற்றுத் தீர்வு நடைமுறைமையாகும் என வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது. சில இடங்களில் இது வெளிப்புற தகராறு தீர்வு என்றும் அழைக்கப்படுகிறது. இது பிணக்குகளை தீர்ப்பதற்கான சாத்தியமான ஒரு வழிமுறையாகும். சமூக கலாசாரத்தின் அடிப்படையில் பல்வேறு நாடுகளில் இந்த அமைப்பு தொடர்பான பல்வேறு சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மாற்றுத் தகராறு தீர்வு (ADR) என்ற சொல் தகராறுகளைத் தீர்ப்பதற்கான அனைத்து முறைகளையும் கொண்டது. ADR என்பது தரப்பினர்கள் தங்கள் பிணக்குகளை விசாரணையின்றி தீர்க்க உதவும் பரந்த அளவிலான பிணக்கு தீர்வு செயல்முறைகளைக் குறிப்பதோடு முறைசாரா விவாதங்கள் முதல் முறையான தீர்ப்புகள் வரை, பதினாறுக்கும் மேற்பட்ட வேறுபட்ட யுனுசு செயல்முறைகள் தற்போது நடைமுறையில் உள்ளன (Hyder, 2015).

மறுபுறத்தில் ஸுல்ஹ் என்பது மனிதர்களுக்கிடையேயான ஒரு சர்ச்சையை முடித்தல், சமரசம் அல்லது முடிவுக்கு வருதல் என்று பொருள் கொள்ளப்படுகிறது. *Sulh* என்பது சச்சரவுகளை சுமூகமாகத் தீர்ப்பதற்கான ஒரு வகையான ஒப்பந்தமாகும். இது நீதிமன்றத்திற்கு வெளியே ஏற்றுக் கொள்ளத்தக்க தீர்வை அடைவதற்கும் தகராறு செய்பவர்களிடையே இணக்கமாக நீதியை மீட்டெடுப்பதற்கான ஒரு செயல்முறையாகும்.

இப்னு குதாமாவின் கூற்றுப்படி, ‘‘ஸுல்ஹ்’’ என்பது இரு சர்ச்சைக்குரிய குழுக்களுக்கிடையில் இடம்பெறும் ஒப்பந்தமாகும். இது சமாதானத்திற்கு வழிவகுப்பதோடு இஸ்லாத்தில்,

வழக்குகளைத் தவிர மற்ற எல்லா நிகழ்வுகளிலும் சுல்ஹ் செயல்முறையை நடைமுறைப்படுத்த முடியும்'' எனக் குறிப்பிடுகிறார் (Hoque, 2020).

- **ஸுல்ஹின் கூறுகள்**

ஸுல்ஹ் ஆனது இஸ்லாமிய சட்டத்தின் கீழ் செல்லுபடியாகும் ஒப்பந்தம் ஒன்றை உருவாக்க சில அத்தியவசிய கூறுகளைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

a) அல்-முதகாசிமான்

(i) அல்-முஸ்லஹ் லஹு ∴அல்-முத்தஇ, (வழக்காளி)

(¡¡) அல்-முஸ்லஹ் அலைஹி/ அல்-முத்தஆ அலைஹி (அவருக்கு எதிராகக் கோரிக்கை அறிவிக்கப்பட்டுள்ள நபர்)

b) அல்-முசாலஹ் அன்ஹு (பொருள்- உரிமை கோரல் பதிவு செய்யப்பட்ட விஷயம்)
c) அல்-முஸாலஹ் பிஹி∴ பத்ல் அல்-ஸுல்ஹ் - பரிசீலனைக்காக வழங்கப்படும் பொருள்)
d) அல்-ஈஜாப்
e) அல்-கபூல் (Haroon, 2017).

6.2. இஸ்லாமிய சட்டவியல் நோக்கில் மத்தியஸ்த்தம்

மனிதர்களுக்கு மத்தியில் மத்தியஸ்தம் செய்வது அல்லாஹ் கடமையாக்கியவற்றில் நன்மையை ஏவி தீமையை தடுத்தல் எனும் அம்சத்தின் கிளை விடயங்களுள் ஒன்றாகும். மத்தியஸ்தம் என்பது நபிமார்கள் நல்லோர்களின் வழிமுறையாகும். இது மஹாஸினுஸ் ஷரீஆ (ஷரீஆவின் அழகுகளில்) ஒன்றுதான் பிற மனிதர்களை நேசிப்பதும், அவர்களுக்கிடையேயான உறவையும் அன்பையும் விரிவுபடுத்தி ஓர் ஒருங்கிணைந்த சமூகத்தை உருவாக்குவதுமாகும். சமூகத்தில் நிகழும் பிணக்குகளின் போது மத்தியஸ்தம் செய்து குறித்த பிணக்கினைத் தீர்த்து வைக்க முன்னின்று செயற்படுவது அச்சமூக உறுப்பினர்களின் கட்டாயமாகும் (احمد عماري, 2015).

இப்னுல் கைய்யிம் (ரஹ்) மத்தியஸ்தம் தொடர்பில் இவ்வாறு குறிப்பிடுகின்றார் ''முஸ்லிம்களுக்கு மத்தியில் ஆகுமாக்கப்பட்ட மத்தியஸ்தம் (ஸுல்ஹ் அல்-ஜாயிஸா) என்பது அல்லாஹ்வுடைய பொருத்தத்தையும், பிணக்குடன் தொடர்புடைய இரு தரப்பினர்களினதும் பொருத்தத்தைக் கொண்டமைந்ததே. மேலும், ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு பிரதேசத்திலும் மத்தியஸ்தம் செய்வதற்கென்று ஒரு சாரார் இருப்பது பர்ளு கிபாயாவாகும். அது கால, நேர, சூழல், பிணக்குகளின் தன்மைகளுக்கேற்ப வித்தியாசப்படுகிறது.'' (عصام حسنيين, 2017).

அஹ்மத் அம்மாரி குறிப்பிடுகையில் ''உபரியான (நபிலான) வணக்கங்களில் ஈடுபடுவதை விட மனிதர்களுக்கு மத்தியில் மத்தியஸ்தம் செய்து வைப்பது மிக ஏற்றமானதாகும். மேலும், மத்தியஸ்தம் என்பது ஓர் பர்ளு கிபாயாவாகும். சமூகத்தில் இருக்கின்ற சில நல்லுள்ளம் படைத்த மனிதர்களால் அதை நிறைவேற்றப்பட்டால் அதன் கடமை அச்சமூகத்தைவிட்டும் நீங்கி விடுகிறது'' (احمد عماري, 2015).

6.2. முஸ்லிம் நாடுகளில் மத்தியஸ்தம்

இப்பகுதி உலகில் தேர்வு செய்யப்பட்ட முஸ்லிம் நாடுகளில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது, எச்சட்ட நடைமுறையின் கீழ் குறித்த நடைமுறை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது போன்றன பற்றிய ஒரு சுருக்கமான பார்வையை வழங்குகின்றது.

i. மலேசியா

மலேசியாவில் Meditation Legal Validity Act, Islamic Religious Act, Syariah Court Civil Procedure மற்றும் Islamic Family Law Act போன்ற சட்ட ஏற்பாடுகள் மூலம் மத்தியஸ்தத்திற்கான சட்டபூர்வ தன்மை வழங்கப்பட்டுள்ளது. அதாவது மத்தியஸ்தம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான விதிகள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் மத்தியஸ்த சட்டத்திற்கு கீழ் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஸுல்ஹ் நடைமுறைகள் காணப்படுகின்றன. அந்நடைமுறைகளாவன நீதிமன்றத்தில் எவ்வாறு வழக்கு பதிவு செய்தல், விசாரணைகளை எவ்வாறு மேற்கொள்ளுதல், பதிவாளர் மூலம் வழக்குகளை எவ்வாறு கொண்டு செல்வது, மத்தியஸ்தத்திற்கான Notice (அழைப்பானை) எவ்வாறு வெளியிடுவது தொடர்பான விடயங்கள், (ஸுல்ஹ்) இணக்கப்பாட்டின் முடிவுகள் தொடர்பான விடயங்கள், வெற்றி தோல்விகளை இனங்காண்பதற்கான விடயங்கள் என்பன இதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மலேசியாவில் ஸுல்ஹ் என்பது முஸ்லிம்களிடையே பரவலாக நடைமுறையில் காணப்படும் ஒன்றாகும். எனவே ஆரம்ப காலகட்டத்தில் சிரியா நீதிமன்ற சிவில் நடைமுறைச் சட்டம் 2004 இனை தவிர ஏனைய சட்டங்களில் மத்தியஸ்தம் இடம்பெறுவதற்கு குறிப்பிட்ட வழிகாட்டுதல்கள் ஏதும் இருக்கவில்லை. திருமணத்தை கலைக்கும் வழக்குகளுக்கு மத்தியஸ்தம் பொதுவாக பயன்படுத்தப்பட்டது.

இஸ்லாமிய குடும்பச் சட்டம் 1984 இன் படி திருமணம் தொடர்பான வழக்குகளை மத்தியஸ்தத்தைப் பயன்படுத்தி தீர்க்க முடியுமாகும். எடுத்துக்காட்டாக, இஸ்லாமிய குடும்பச் சட்டம் 1984இன் பிரிவு 15 இன் படி கணவன் அல்லது மனைவி மத்தியஸ்தத்தின் மூலம் திருமணம் செய்துகொள்வதற்கான வாக்குறுதியை மீறுவதாகவோ திருமண உடன்படிக்கை செய்வதாகவோ உரிமை கோரலாம். பிரிவு 56, 58, 59 மற்றும் 68 ஆகியவை விவாகரத்துக்கான துணை உரிமைகோரல்களை வழங்குகின்றன. எனவே மத்தியஸ்தம் என்பது இஸ்லாமியக் கண்ணோட்டத்தின் கீழ் பரிந்துரைக்கப்படுவதோடு ஊக்குவிக்கவும்படுகிறது. ஏனெனில் இம்மத்தியஸ்தம் பரஸ்பரம், ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்மானத்தையும் ஒற்றுமைக்கான முயற்சியையும் வழங்குகிறது என்பதில் ஐயமில்லை (Manaf & Mahyut, 2018).

ii. இந்தோனேசியா

2003 இல் இந்தோனேசிய மத்தியஸ்த மையம் உருவாக்கப்பட்டது. முதல் இந்தோனேசிய மத்தியஸ்த மையம் (IMC) தொடர்பான நடவடிக்கைகள் நீதிபதிகள், சமூகத்தில் உயர்ந்த பொதுமக்களுக்கு மத்தியஸ்தப் பயிற்சி அளிப்பதை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. 2004இல் இது சட்டபூர்வமாக நிறுவப்பட்டதோடு மத்தியஸ்தம் தொடர்பான வழக்குகள்

நிர்வகிக்கப்பட்டன. உண்மையில் அந்த நேரத்தில் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டன. அந்நேரத்தில் இந்தோனேசியாவின் உச்ச நீதிமன்றம் நிலுவை வழக்குகளில் சவால்களை எதிர்கொண்டது. உச்ச நீதிமன்ற அளவில் கொண்டுவரப்பட்ட சில வழக்குகளை குறைக்க மத்தியஸ்தம் செய்ய மனிதர்கள் விரும்பினர். நீதிபதிகளுக்கான பயிற்சிகள் மற்றும் சான்றிதழ்கள் இந்த முயற்சியை முன்னோக்கி நகர்த்தின.

2003ஆம் ஆண்டில் விசாரணைக் கட்டத்திற்குச் செல்வதற்கு முன் சிவில் வழக்குகள் மத்தியஸ்தம் செய்யப்பட வேண்டும் என்பதை நீதிமன்றம் அங்கீகரித்தது. இது IMC இன் பணியை மேலும் அதிகரிக்க ஒரு அற்புதமான வாய்ப்பை வழங்கியது. அதிக மக்கள்தொகை கொண்ட நகரங்களுக்கு மத்தியஸ்தம் தேவைப்படும் பல வழக்குகள் காணப்பட்டன. அவர்களில் ஒரு சிறிய பகுதி மட்டுமே இதை கடந்து சென்றது. உண்மையில் சில நீதிபதிகள் மத்தியஸ்தம் என்பது கூடுதல் பொறுப்பாகவோ அவர்களின் நிபுணத்துவத்திற்கு அப்பாற்பட்ட பணியாகவோ உணரலாம். நீதிமன்ற வழக்குடன் ஒப்பிடும்போது மத்தியஸ்தம் குறைவாக இருக்கலாம். வழக்குடன் ஒப்பிடும்போது நடுவர் மன்றமும் குறுகியதாக இருக்கலாம். ஆனால் தொடர விரும்பும் பணிக்கு மத்தியஸ்தம் ஒரு சிறப்பு கட்டமைப்பைக் கொண்டதாக அமைந்திருந்தது.

பஹ்மி எனும் மத்தியஸ்த ஆய்வாளர் குறிப்பிடும் போது இந்தோனேசியாவில் பல பழங்குடியினர் உள்ளனர். அவர்கள் தங்கள் சொந்த பிரச்சினைகள, தங்கள் உறுப்பினர்களிடையே உள்ள பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது என்ற சமூக கட்டமைப்பொன்றை அவர்கள் கொண்டுள்ளனர். எனினும் கல்வியில் மேற்குலகின் செல்வாக்கிற்குப் பிறகு மக்கள் அதிக வழக்காடுகின்றனர். சிலர் தங்கள் சொந்த பெற்றோரை நீதிமன்றத்திற்கு கொண்டு வருகிறார்கள். இது அதிக பிணக்குகளை உருவாக்குகிறது. ஆயினும் எல்லாத் துறைகளிலும் கவனம் செலுத்துவது முக்கியமான ஒன்றாகும். சில தொற்றுநோய்கள் பல மத்தியஸ்தர்களை பாதித்திருந்தாலும் அதை தொடர்ந்து செய்யும் திறனாக செய்யும் பொழுது புதிய உறவுகளை மீண்டும் இணைப்பதற்கும் பலத்தை ஏற்படுத்தவும் மத்தியஸ்தம் உதவுகிறது என்றார் (Gamarra, 2021).

iii. எகிப்து

எகிப்தின் வரலாறு, மதம், கலாசாரம் மற்றும் சட்ட முறைமைகள் ஆகியவை மத்தியஸ்தத்திற்கான சான்றுகளை முன்வைக்கின்றன. புகார்களைப் பெறுவதற்குப் பொறுப்பான அரச நிர்வாக அதிகாரி அடிக்கடி மனுவை இவ்வாறு ஆமோதிப்பார். ‘‘மத்தியஸ்தம் செய்வது சிறந்தது” அது வெற்றியடையவில்லை என்றால், ‘‘அதற்குரிய சட்ட முறைமை பின்பற்றப்படும்’’.

மத்தியஸ்தம் பற்றிய பல குறிப்புகளை இரண்டு முதன்மை எகிப்திய மதங்களில் எளிதாகக் காணலாம். இஸ்லாத்தில் முகம்மது நபி (ஸல்) அவர்கள் வெவ்வேறு பழங்குடியினர்கள், குழுக்களுக்கு இடையேயான பிணக்குகளை தீர்க்க மத்தியஸ்தம் செய்ததாகவும் மத்தியஸ்தத்தின் மூலம் சர்ச்சைகளைத் தீர்ப்பதை ஊக்குவித்ததவராகவும் இஸ்லாமிய வரலாற்றில் அறியப்படுகிறார். இதே போன்ற குறிப்புகள் பைபிளிலும் காணப்படுகின்றன.

எகிப்தில் மத்தியஸ்தம் விரிவடைவதற்கான காரணங்கள்

IFC - உலக வங்கியின் கருத்துக்கணிப்பின் படி, வணிக ஒப்பந்தங்களைச் செயற்படுத்த எகிப்தில் உள்ள நீதிமன்றங்களின் வேண்டுதலின் படி 1,010 நாட்களுக்கு சராசரியாக 26% செலவு செய்யப்படுகின்றன. எகிப்து தனது நீதிப்பரிபாலனத்தின் தரத்தை மேம்படுத்துவதற்கும் மத்தியஸ்தத் திறனையும், தரத்தையும் அதிகரித்துக்கொள்ள மிகவும் தேவை காணப்படுகிறது என்பதை இந்தப் புள்ளிவிவரங்கள் தெளிவுபடுத்துகின்றன.

எகிப்தின் மத்தியஸ்த சட்டங்கள்

எகிப்தில் இரண்டு சட்டங்கள் நீதிமன்றத்துடன் இணைக்கப்பட்ட மத்தியஸ்த செயன்முறைகளை நிர்வகிக்கின்றன.

1) குடும்ப நீதிமன்றங்கள்

2) பொருளாதார நீதிமன்றங்கள்

குடும்ப நீதிமன்றங்களில், நீதிமன்ற உறுப்பினர் ஒருவரால் மத்தியஸ்தம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. பொருளாதார நீதிமன்றங்களில் நீதிபதி ஒருவரால் மத்தியஸ்தம் நடைமுறைபடுத்தப்படுகிறது. இத்திட்டங்கள் எகிப்தில் மத்தியஸ்தத்தின் பயன்பாட்டை ஊக்குவித்துள்ளன. எனினும் வழக்கறிஞர்கள் திருப்தியடையவில்லை என்பதோடு இந்த செயன்முறைகளை வழக்காடுவதற்கான பயனற்ற முறைமையாகவும் கருதுகின்றனர் (Elnegahy, 2020).

iv. துருக்கி

நாம் ஏற்றுக்கொண்டாலும் இல்லாவிட்டாலும் இந்த வேகமான நூற்றாண்டில் நாம் அனைவரும் மத்தியஸ்தர்களாக இருக்க வேண்டும். ஆதாரங்கள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டு வருவதோடு நேரம் மிகவும் மதிப்புமிக்கதாக காணப்படுகிறது. உலகெங்கிலும் உள்ள பல்வேறு அதிகார வரம்புகளில் உள்ள பல நீதிமன்றங்கள், துருக்கியில் உள்ள சிவில் நீதிமன்றங்கள் வழக்கு சுமைகளை நிர்வகிப்பது தொடர்பான கட்டாய சிக்கல்களை எதிர் கொண்டுள்ளன. தற்போது துருக்கியில் உள்ள இந்த சிவில் நீதிமன்றங்களில் அதிகமான வழக்குகள் உள்ளன. அது தவிர இவ்வழக்குகள் அதிக செலவுகளைக் கொண்டிருப்பதோடு இறுதித் தீர்ப்புக்கு நீண்ட காலம் தேவைப்படுகிறது. அதிகப்படியான பணிச்சுமை காரணமாக துருக்கிய நீதிமன்றங்கள் வழங்கும் சட்ட சேவைகளின் தரமும் கேள்விக்குறியாக மாறியுள்ளது. துருக்கியில் அதன் குடிமக்கள், முதலீட்டாளர்களுக்கு மட்டுமல்லாது வெளிநாட்டினர், வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் புதிய, பயனுள்ள மற்றும் செலவு குறைந்த பிணக்கு தீர்வு முறை இன்றியமையாத தேவையாகும்.

துருக்கியில் பொதுத் தகவல் மேம்பாடு, மத்தியஸ்தம் போன்ற அம்சங்களில் பல நாடுகள் தங்கள் நீதி அமைப்புகளுடன் போட்டியிடாமல் சிவில் பிணக்குகளுக்கு தீர்வுகளை வழங்க (ADR) முறைகளை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்துவதற்கும் ஒரே மாதிரியான முயற்சிகளைக் கொண்டிருந்தன. நடுநிலையான மூன்றாவது சச்சரவுகளுக்கான தீர்வுகள்,

பேச்சுவார்த்தைகளை நடத்தும் ஒரு சிறந்த விருப்பமாக மத்தியஸ்தம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பிரபலமான சூத்திரமாக மாறியது (Paksoy, 2020).

07. முடிவுரை

இவ்வாய்வுக் கட்டுரையானது முன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றிய அல்-குர்ஆன், ஸுன்னாவின் வகிபங்கினையும் அதன் நடைமுறைச் செயற்பாட்டு வடிவம் குறித்தும் கலந்துரையாடுகிறது. அந்தவகையில் ஒவ்வொரு நாட்டிலும் மத்தியஸ்தத்தினை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் மத்தியஸ்த சபைகள் எனும் பெயரில் பல்வேறு சட்டங்களால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை தேர்வு செய்யப்பட்ட நாடுகளின் நடைமுறைகளில் இருந்து புரிந்து கொள்ள முடியும். மத்தியஸ்தம் என்பது மோதல் தொடர்பான கற்கையில் முக்கிய பங்கு வகிக்கின்ற ஒன்றாகும்.

இது தீர்வினை அன்றி ஒரு நடைமுறை செயற்பாட்டை குறிக்கிறது. அதாவது தீர்ப்பானது மோதலின் காரணிகளை குறைக்கும் அதேவேளை மத்தியஸ்தம் என்பது நடு நிலைப்படுத்தல், சமாதான பேச்சுவார்த்தை போன்ற செயற்பாடுகள் பற்றியதாகும். இஸ்லாத்தைப் பொருத்தவரை இம்மத்தியஸ்தமானது அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் பரவலாகப் பேசப்படும் ஒன்றாக உள்ளது. இஸ்லாத்தின் வருகைக்கு முன் ஸுல்ஹ் மற்றும் தஹ்கீம் ஆகியவை சர்ச்சை தீர்வுக்கான நிலையான முறைகளாக இருந்துவந்துள்ளதுடன், இஸ்லாத்தின் தோற்றத்தின் பின் இஸ்லாத்தின் போதனைகளின் கீழும் ஒரு கட்டமைக்கப்பட்ட முறைக்கு கொண்டுவரப்பட்டது. நபி (ஸல்) அவர்கள் ஓர் அரசின் அதிபராக மட்டுமன்றி ஒருசில பிணக்குகளுக்கு மத்தியஸ்தராகவும், நடுவராகவும் செயற்பட்டுள்ளார்கள். மத்தியஸ்தத்தின் செயற்பாடு முஸ்லிம் நாடுகளில் மட்டுமன்றி முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் நாடுகளிலும் அதனை நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் இன்றைய உலகில் தேவையாக உள்ளது. இஸ்லாமியப் படுத்தல் என்பது அனைத்துத் துறைகளிலும் பரவியதாக உள்ளதுடன், உலக நாடுகளில் பிரயோகிக்கக் கூடிய ஒரு முழுமையான இஸ்லாமிய மத்தியஸ்தத்தின் கோட்பாடுகளை வழங்குவது காலத்தின் தேவையாக உள்ளது.

உசாத்துணை

1. Aadham Ibrahim. (2021). فقة الإصلاح بين الناس. www.neelwafurat.com. https://www.neelwafurat.com/itempage.aspx?id=egb268569-5285856&search=books
2. Abdullah Haroon, (2017). The Use of Alternative Dispute Resolution (Sulh) In Sharia cases, Mohammed Bello Centre, Wuse, Abuja.
3. Augestine, N.R. (1995). Managing the crisis, You tried to prevent. Harvard business Review on Crisis Management Retrived fromhttps://hbr.org/1995/11/managing - the-crisis-You –tried-to-prevent
4. Amari, A. (2015, March 17). الإصلاح بين الناس. www.alukah.net. Retrieved October 4, 2022, Fromhttps://www.alukah.net/sharia/0/83870/%D8%A7%D9%84%D8%A5%D8%B5%D9%84%8%A7%D8%AD%D8%A8%D9%8A%D9%86%D8%A7%D9%84%D9%86%D8%A7%D8%B3/
5. Azwina, Asrfarina and siti marshita, ((2018**,** Mediation in Islam, Advanced Science letters, 24(7), pp.5171-5173(3) American Scientific Publishers, https**:**//doi.org//10.1166asl**.**2018.11297
6. De Bono,E. **(**1985**)** Conflicts: A better way to resolve them. Harrap Limited, London, London
7. Elizabeth Gamarra, (2021). Mediation in Indonesia, A Leadership Perspective. Member Spotlight: Fahmi Shahab. https://mediatorsbeyondborders.org/mediation-in-indonesia-a-leadership-perspective-
8. Ferda Paksoy, (2020). Development of mediation in turkey. https://www.adristanbul.com/en/development-of-mediation-in-turkey/
9. Hoque, M. R. (2020). The Paradoxical Use of the Term Sulh: An Analytical Study from Quranic Perspective. Journal of Ma'alim al-Quran Wa al-Sunnah, 16(1). https://doi.org/10.33102/jmqs.v16i1.184

10. Hassanein, I. (2017). فقه الإصلاح بين الناس ينبغي أن يكون في كل محلة قوم يقومون بهذا الواجب. موقع أنا السلفي.https://anasalafy.com/ar/76707-%D9%81%D9%82%D9%87-%D8%A7%D9
11. Jazeel. M.I.M., Fowzul.M.B, (2015) தீர்ப்பளிக்கும் ஒழுங்கு ஒரு இஸ்லாமிய பார்வை.இ Second International Symposium - 2015,FIA,SEUSL, P.230-23
12. Khalid Iqbal, Islamic Mediation, https://www. rahmaa.org/domestic - violence/Islamic mediation/
13. Krishnamohan.T. (2014.09.19), %d;whk; jug;G kj;jpa];jk;, Retrived in (2022.09.16) from https://www.tkm.politicalmanac.com /
14. Lim Ren wei, (2021). Understanding Mediation in Malaysia: Does It Actually Work?. https://hhq.com.my/publications/understanding-mediation-in-malaysia-does-it-actually-work/
15. Mohd Fuad Mohd Salleh, (2004). Third-Party Intervention: Conflict Management in The Malay Society. Malaysia-Indonesia International Conference on Economics, Management and Accounting (MIICEMA) 2014, 10 - 11 November 2014, Bangi/Putrajaya, Malaysia
16. Osman Abdul Hamid, (..(1999kes-kes maltertangguh di mahkamah Syariah Negeri Selangor (unpunished Master Thesis). University Kebangsan Malaysia, Bangi Malaysia.
17. Sherif Elnegahy, (2020). Mediation has been embraced in egypt, throughout history. https://weinsteininternational.org/egypt/egypt-bio/.
18. Syed Hussin, (.(1977Masyarakat dan pimpinan kampung di Malaysia. Penerbit fajar Bakti, Kualalumpur.
19. ஆலிப், S.M, முரண்பாட்டுத் தீர்வு முயற்சிகளிளல் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் வகிபங்கு, *Kalam Journal*, VOL-7,p.66-78,FAC,SEUSL.
20. பாத்திமா ஷீபா, M.I, இஸ்மியா பேகம், M.S, (2022). இஸ்லாமிய நோக்கில் முரண்பாடும் சமாதானமும். மருதமுனை: ஜெஸா கிறபிக்ஸ்.
21. வேலுப்பிள்ளை குணரத்தினம், (2007). முரண்பாடும் சமாதானமும் ஓர் அறிமுகம்.6: *KUMARAN PRESS*

அடிப்படை உரிமை மீறல்கள் - மலையக சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

புளோரிடா சிமியோன்
சமூக விஞ்ஞானங்கள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
floridasimeon18@gmail.com, floridas@esn.ac.lk

ஆய்வுச் சுருக்கம்

கி.பி.1820-1840 ஆம் ஆண்டு காலகட்டத்தில் இந்தியாவின் தென்மானிலத்திலிருந்து இலங்கை பெருந்தோட்ட பயிர்செய்கைக்காக ஆங்கிலேயரால் அழைத்து வரப்பட்ட இந்திய வம்சாவளி மக்களே இன்றைய மலையகத் தமிழர்களாவர். இவர்கள் இன்று நாட்டின் மொத்த சனத்தொகையில் 5.3% ஆக குடியேறி வாழ்ந்து வருகின்றனர். இலங்கையில் இம்மலையக சமூகம் 200 வருட காலத்தை கடந்தவிட்ட நிலையில் நீண்ட காலமாக இவர்கள் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் நிர்வாக பொறிமுறையிலிருந்து ஓரங்கட்டப்பட்டு வந்துள்ளதுடன் தோட்ட முகாமைத்துவத்தின் கட்டுப்பாடுகளுக்குட்பட்ட வாழ்க்கை முறையினையே கொண்டிருக்கின்றனர். இலங்கையில் தேசிய ரீதியான அபிவிருத்தி அடைவுமட்டங்களில் உரிமை மறுக்கப்பட்டவர்களாக பொதுச்சேவைகளை பெற்றுக் கொள்வதில் பாரபட்சமாக நடாத்தப்படுகின்ற ஓர் இனக் குழுவாக காணப்படுகின்றனர். அதற்கான காரணங்கள் யாவை, அதனால் எதிர் கொள்ள நேரிடும் சவால்கள் முதலானவற்றை இவ்வாய்வு வெளிப்படுத்த முயலுகின்றது. அதற்காக பொருத்தமான இடத்தெரிவை மேற்கொண்டு எளிய எழுமாற்று மாதிரி எடுப்பு முறையினூடாக, நேர்காணல் மற்றும் களவிஜயம் மூலம் முதலாம் நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளதுடன் இலக்கிய மீளாய்வுகளாக மலையக மக்களின் வாழ்வியலைப் பேசும் நூல்கள், சஞ்சிகைகள் பத்திரிகைக் கட்டுரைகள், இணையவழி உசாவல்கள் முதலியவற்றை இரண்டாம் நிலைத் தரவுகளாகக் கொண்டு விவரண ஆய்வு முறையினைக் கையாண்டு விளக்க முற்பட்டுள்ளதுடன் மேல் நோக்கிய அணுகுமுறை மற்றும் கீழ் நோக்கிய அணுகுமுறை என்பவற்றையும் துணையாகக் கொண்டு ஆய்வுக் கட்டுரை முன்வைக்கப்படுகின்றது.

திறவுச் சொற்கள்: மனித உரிமை, மலையக மக்கள், சட்டங்கள், அபிவிருத்தி, பொதுச்சேவை

ஆய்வு அறிமுகம்

கி.பி.1820-1840 ஆம் ஆண்டு காலகட்டத்தில் இந்தியாவின் தென்மானிலத்திலிருந்து இலங்கை பெருந்தோட்ட பயிர்செய்கைக்காக ஆங்கிலேயரால் அழைத்து வரப்பட்ட இந்திய வம்சாவளி மக்களே இன்றைய மலையகத் தமிழ் மக்களாவர் (சதீஸ்குமார் 2015). 1815ம் ஆண்டு பிரித்தானிய ஏகாதிபத்தியத்தியினுடைய விளைவால் தென்னிந்தியாவில் இருந்து 1803ம் ஆண்டு சாலை அமைக்கும் பணிக்கென பிரட்ரிக் நோர்த்தினால் தமிழ் நாட்டிலிருந்து ஒப்பந்த கூலிகளாக அழைத்து வரப்பட்டனர் (விஜேசந்திரன், ரமேஸ் 2013). இந்தியாவின் இராமேஸ்வரம், தலைமன்னார், தம்புள்ளை, மாத்தளை வழியாக நடைப்பயணத்தினூடாக கண்டியை அடைந்து 1823ம் ஆண்டு கவர்னர் எட்வட் பான்ஸ் ஆரம்பித்த கன்னொருவ கோப்பித்தோட்டத்திலே இம்மலையக தமிழரின் சரித்திரம் உதயமாகியது. 1867ம் ஆண்டு (1869 கோப்பிக்கு ஏற்பட்ட வெளிறல் நோயின் பின்) லூல்கந்துற தோட்டம் ஹேவாஹெட்ட பகுதியில் தேயிலையும், களுத்துறை பகுதியில் இறப்பரும் தெங்கும் பயிரிடப்பட்டன. இவற்றை பராமரித்து உற்பத்தி பொருளை பெற இந்திய வம்சாவளி தொழிலாளர்களின் தேவைப்பாடு அவசியமாக உணரப்பட்ட போது இம்மக்கள் இங்கு நிரந்தரமாகவே லயன் வாழ்க்கைக்குள் சிறைப்பிடிக்கப்பட்டனர். இச்சமூகமே இன்று தேசிய யரீதியில் Indiyan Tamils, Plantation Tamils, Estate Tamils, Upcountry Tamils or Hill country Tamils என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் இன்று நாட்டின் மொத்த சனத்தொகையில் 5.3% ஆக பதுளை, கண்டி, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, காலி, மாத்தளை, மொனராகலை, குருணாகல், கொழும்பு மற்றும் வட கிழக்கில் கலவர காலத்தில் குடியேறியும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் பெருந்தோட்டங்களில் வசிப்போர் 88.4% மலையத் தமிழராகவும், 10.7% சிங்களவர்களாவும், 0.9% ஏனைய இனத்தவர்களாகவும் காணப்படுகின்றனர். 15 லட்சம் மலையக தமிழர்களில் 2/3 பகுதியினர் பெருந்தோட்டங்களிலேயே வசிக்கின்றவர்களாகவும், 1/3 பங்கினர் தோட்டத்தொழிலில் இருந்து

விடுபட்டும் காணப்படுகின்றனர் (சதீஸ்குமார் 2015). இத்தகைய வரலாற்றைக் கொண்ட மலையக சமூகம் 200 வருட காலத்தை கடந்தவிட்ட நிலையில் இலங்கையில் தேசிய ரீதியான அபிவிருத்தி அடைவுமட்டங்களில் அடிப்படை உரிமைகளை பெற்றுக் கொள்வதில் பாரபட்சமாக நடாத்தப்படுகின்றனர். அதாவது நீண்ட காலமாக இம்மலையக மக்கள் அரசியல, சமூக, பொருளாதார மற்றம் நிர்வாக பொறிமுறையிலிருந்து ஓரங்கட்டப்பட்டு வந்துள்ளதுடன் தோட்ட முகாமைத்துவத்தின் கட்டுப்பாடுகளுக்குட்பட்ட வாழ்க்கை முறையில் சூழப்பட்டவர்களாக காணப்படுகின்றனர். இதற்கான அடிப்படை காரணம் 1948 ஆம் ஆண்டு இம்மலையக மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் (ரமேஸ் 2012). இதன் விளைவு இன்றும் இலங்கை அரசின் அனைத்து மட்டத்திலும உள்ள மனித உரிமை சட்டங்கள் மற்றும் அது தொடர்பான ஏற்பாடுகளில் புறக்கணிக்கப்பட்ட சமூகமாகவே அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

மனித உரிமை சார்ந்த சட்டங்கள் என்பது ஒரு நாட்டில் வாழும் சகல பிரஜைகளுக்கும் எவ்வித பாகுபாடுமின்றி அனைத்து விதமான அரச சேவைகளையும் பெற்றுக்கொள்வதற்கான உரிமையை உறுதிபடுத்தியுள்ளது. இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியல் திட்டத்தின் 3வது அத்தியாயத்தில் இலங்கை பிரஜைகள் அனைவரும் அரசாங்கத்தின் பொதுச்சேவைகளை பெற்றுகொள்வதற்கு உரித்துடையவர்கள் என்றும் பொதுச்சேவைகளை வழங்கும்போது அரசாங்கம் பிரஜைகள் எவருக்கும் இன, மத, மொழி பிரதேசம், அரசியல் காரணமாக வேறுபாடுகள் காட்டப்படக் கூடாது எனவும் குறிப்பிடுகின்றது. அந்தவகையில், மலையக மக்கள் அரசியல், சமூக, பொருளாதார, நிர்வாக மற்றும் தொழில் மட்டங்களில் அரசாங்கத்தின் சேவைகளை பெற்றுக்கொள்வதில் உரிமை மறுக்கப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர் (சந்திரசேகரம் 2001). அதேவேளை இவ்வனைத்து உரிமைகளும் மலையக மக்கள் தவிர்ந்த ஏனைய பிரஜைகளுக்கு மாத்திரம் சரியாக வரையறுக்கப்பட்டுள்ளமை ஒரு வகையான அரச பாகுபாடாகக் கருதுப்படுகின்றது. ஆகவே அரசியல், சமூக, பொருளாதார, நிர்வாக பொறிமுறைகளில் உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கான விழிப்புணர்வுகளை வழங்குவதே இவ்வாய்வின் கலந்துரையாடலாக அமைந்துள்ளது.

ஆய்வுப் பிரச்சினை

நாட்டின் மொத்த சனத்தொகையில் 5.3% ஆக வாழும் மலையக மக்கள் சமூக, பொருளாதார, அரசியல் அபிவிருத்தியிலும் தேசிய அபிவிருத்தியிலும் எதிர்மறையான தாக்கத்தினை அனுபவித்து வருகின்றனர். இந்நாட்டின் ஏனைய பிரஜைகள் அரசியல், சமூக, பொருளாதார மட்டங்களில் பெற்று கொண்ட ஏற்றங்கள், சமூக அசைவியக்கம் என்பன மலையக மக்கள் மத்தியில் ஏற்படவில்லை. எனவே இப்பிரச்சினையின் ஆழத்தையும் உண்மைத்தன்மையின் தாற்பரியத்தையும் ஆய்வு செய்தல் இவற்றில் காணப்படும் குறைபாடுகளை வெளிக்கொண்டு வருதல் மற்றும் சகல மட்டங்களிலும் உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல் என்பன இன்றைய காலகட்டத்தின் முக்கிய தேவையாகும். இப்பின்புலத்தின் அடிப்படையில் மலையக மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் உரிமை மீறல்கள் பாகுபாடுகள் தொடர்பான ஆய்வொன்றினை மேற்கொள்ள வேண்டிய அவசியமாகும்.

ஆய்வு வினா

மலையக சமூகம் ஒரு தேசிய இனத்துக்குரிய அடையாளத்தினை பெற்றுக் கொண்டுள்ள போதிலும் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதற்கான காரணம் என்ன?

ஆய்வு நோக்கம்

மலையக மக்கள் எதிர்நோக்கும் உரிமைகள் சார்ந்த அரச பாகுபாட்டினை ஆய்வு செய்தல் மற்றும் அதற்கான தீர்வகளை பரிந்துரைத்தல்.

ஆய்வு முறையியல்

இவ்வாய்விற்கான தகவல்கள் முதலாந்தர மற்றும் இரண்டாந்தர தரவு மூலங்களில் இருந்து பெறப்பட்டுள்ளன. முதலாந்தர தரவுகள் நோக்க மாதிரியெடுப்பு முறையின் அடிப்படையில் பெருந்தோட்ட மக்களை அதிகளவில் பிரதிநிதித்துவபடுத்தும் பதுளை மாவட்டத்தில் லுனுகலை பிரதேசசபை மற்றும் பசரை பிரதேசசபை என்பன் இவ்விடய ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன. மேற்படி பிரதேச சபையின் ஆட்சிபுலத்திற்குள் வாழும் தோட்ட மக்கள் தொழிற்சங்க தலைவர்கள், அரசியல் பிரதிநிதிகள், தோட்ட முகாமையாளர்கள், சமூக நல உத்தியோகஸ்தர்கள் போன்றவர்களுடன் மேற்கொள்ளபட்ட நேர்காணல் மூலம் தரவுகள் பெறப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளாக முன்னைய ஆய்வு அறிக்கைகள், ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை பிரகடனங்கள், இலங்கையின் அரசியல் யாப்பு, இலங்கையின் குடித்தொகை மற்றும் புள்ளிவிபர அறிக்கைகள், புத்தகங்கள் போன்ற வெளியீடுகள் பெறப்பட்டுள்ளன.

ஆய்வு பற்றிய கலந்துரையாடல்:

மலையகத் மக்களின் உரிமைகளை பாதிக்கும் வகையில் வரலாற்றில் செய்யப்பட்ட உடன்படிக்கைகள். இந்திய – பாக்கிஸ்தானியர் சட்டம் - 1949, சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தம் -1964, சிறிமா -சாஸ்திரி ஒப்பந்த அமுலாக்கச் சட்டம் - 1967, நாடற்றோர் சட்டம் - 1986, நாடற்றோர் சிறப்பு ஏற்பாட்டுச் சட்டம் - 1988, குடியுரிமைச் சட்டம் - 2000, பிரஜாவுரிமை சட்டம் - 2003 இவ்வாறான உடவடிக்கைகள் மலையக தமிழ் சமூகத்தின் அடிப்படை உரிமையை மீறுவதாக அமைந்ததோடு இம்மக்களின் அரசியல் பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட்டு ஏனைய இனங்களில் இருந்து இரண்டாம்தர சமூகமாக அடையாளப்படுத்துவதற்கான வாய்பினை ஏற்படுத்தியது. மேலும் இம்மக்கள் மீதான கட்டமைக்கபட்ட வன்முறைகள், நேரடியான இன வன்முறைகள் (1958, 1970, 1977,1981, 1983) ஆண்டுகளில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு இவர்களது சனத்திரள் சிதறடிக்கப்பட்டு வரலாறுகள் சிதைக்கப்பட்டன. ஆயினும் இன்றைக்கு நாட்டின் மொத்த சனத்தொகையில் 5.3% மாக இம்மக்கள் வாழ்கின்றனர். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் பெருந்தோட்ட சமூகம் எதிர்நோக்கும் அடிப்படை உரிமை மீறல்கள் பரவலாகக் காணப்படுகின்றன. அவையாவன,

வீட்டுத்திட்ட அபிவிருத்தி : 1986ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் கொண்டுவரப்பட்ட UNO 1986 அபிவிருத்திக்கான உரிமை தொடர்பான சர்வதேச பிரகடனமானது அபிவிருத்தி ஒவ்வொரு பிரஜையின் உரிமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்றும் இன, மத, பிறப்பு, பிரதேசம், வம்சாவழி ரீதியான எந்த பாகுபாடும் காட்டப்பட கூடாது என்கின்றது. ஆயினும் 1930ம் ஆண்டு

கொண்டு வரப்பட்ட இந்திய தொழிலாளர் சட்டமானது பெருந்தோட்டங்களின் வேதனம், வீடு, கல்வி, சுகாதாரம் போன்றவற்றையும் தோட்டத்தொழிலாளர்களின் சேமநலன்களை மேற்கொள்ளும் உரிமையினையும் தோட்ட முகாமையாளரிடமும் தனியார் கம்பனிகளிடமும் வழங்கியது. இச்செயற்பாடு இவர்களை ஒரு தனியான நிர்வாக முறைக்குள் கொண்டு சென்றதுடன் அபிவிருத்தியிலும் பாதிப்பை ஏற்படுத்தியது. பெருந்தோட்டங்களில் 75 வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்ட 6 அடி அகலத்தையும் 10 அடி நீளத்தையும் கொண்ட லயன் அறைகளிலே 80% மக்கள் வாழ்ந்து வருகின்றனர். 1984ஆம் ஆண்டு முதல் முன்னெடுக்கப்பட்ட 10 இலட்சம் வீடமைப்பு திட்டத்தின் கீழ் இம்மக்களுக்கான துணைத்திட்டம் ஆரம்பிக்க முன்வந்த போதும் அது முழுமை பெறவில்லை. எனினும் 1988 – 1990ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்களுக்கான இரட்டை வீட்டுத்திட்டம் வெளிநாட்டு நிதிதிட்டத்துடன் அமுல்படுத்தப்பட்டது. ஆனால் சமூக நலநிதி அறிக்கை 8,20,000 பேர் 191,000 லயன்களில் வாழ்ந்து வருவதாக கூறுகின்றது. இதில் 25% லயன்கள் திருப்தியானதாகவும் 5% எவ்வித திருத்த வேலைகளையும் செய்ய முடியாதவையாகவும் 70%மான லயன்கள் போதிய அடிப்படை வசதி அற்றவை(FCE 2005) எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது. இதில் 36,000 தனி வீடுகளை தாபித்துள்ளது. இது தனிவீட்டு திட்டமாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது ஆனால் இதற்கான காணி உறுதியினை வழங்குவதில் சட்டச்சிக்கல் உள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வகையான நெருக்கடியான வாழ்வியல் நிலைமைகள் இவர்களது கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் மற்றம் வாழ்வாதாரத்தினை வெகுவாக சிதைத்துள்ளது. அதாவது சுகாதாரம் தொடர்பான விடயங்களை நோக்கினால், இன்றைக்கு மலையகத்தில் 2/3 பங்கு மக்களே சுகாதார சேவையை நிவர்த்தி செய்கின்றனர். காரணம் வைத்தியர்கள் ஒரு வருடக்காலம் பயிற்றப்பட்டவர்களாகவே உள்ளனர். இவர்கள் (M.B.B.S) டாக்டர் தரத்தினை உடையவர்கள் அல்ல. பெருந்தோட்டத்தில் ஒருசில வைத்தியசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றும் அங்கு அபிவிருத்திகள் இல்லை. தோட்டங்களுக்கு சுகாதார வைத்திய அதிகாரி (MOH) பொது சுகாதார பரிசோதகர் (PHI) செல்வது போதுமானதாக இல்லை. அதுமட்டுமல்லாது தோட்ட சேமநல அதிகாரிகள் மூலமே கர்ப்பிணித்தாய்களுக்கு மகப்பேற்று சேவை வழங்கப்படுகின்றது. இத்தகை செயற்பாடுகளின் விளைவு கிராம, நகர, தேசிய சிசுமரண வீதம் முறையே 7.4%, 14.9%, 19.2% மாக காணப்பட, பெருந்தோட்டங்களில் இச்சிசுமரண வீதம் 47.5% உள்ளது (MNBEI 2006). இதற்கு காரணம் முறையான சுகாதார வசதி இன்மையே ஆகும்.

தொழில் இன்மை : அரச தொழிற்துறையில் மலையக மக்களது பங்கு மிகக் குறைவு. 0.1% அரச துறையில் உள்ளனர். 2% மாகாண சேவையிலும் 0.5% அரசாங்கசபை மற்றும் கூட்டுத்தாபனங்களிலும் தொழில் புரிகின்றனர். அதாவது 1975ஆம் ஆண்டு தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்ட பின் பெருந்தோட்டத்துறை நிர்வாக வேலைகள் மற்றும் சேவைகள் பெரும்பான்மை மக்களுக்கு சென்றது. இன்று தொழில் நிமித்தம் கொழும்பு மற்றும் ஏனைய நகர்ப் புறங்களிலே அதிகமான கூலிக்காக வேலை செய்கின்றனர். இதில் பெருமளவானவர்கள் இளைஞர்களாவர். இலங்கையின் நகர, கிராம வறுமை வீதம் முறையே 2.7%, 7.6% இருக்கும்

போது பெருந்தோட்டத்துறையின் வறுமை வீதம் 10.9% காணப்படுகின்றமை மலையக மக்களின் சிக்கலான நிலைப்பாடினை சுட்டிகாட்டுவதாக காணப்படுகின்றது (2012/2013 HIES).

கல்வி : மலையகத்திலுள்ள பாடசாலைகளை பொறுத்தமட்டில் 54% சதவீதமானவை ஆரம்ப கல்வியை மாத்திரமே போதிக்கின்றன. 31% பாடசாலைகள் இரண்டாம் நிலைக் கல்வியை போதித்து வருகின்றன. இதில் தரம் 11 வரையான வகுப்புக்களை கொண்ட பாடசாலைகள் (13%) ஆகவும், உயர்தரத்தில் விஞ்ஞானம், கணிதம், வணிகம், கலை ஆகிய பாடங்களைக் கொண்ட பாடசாலைகள் 2% ஆகவும் உள்ளன. இவ்வினக் குழுக்களுக்கான பாடசாலை வளமானது ஏனைய சமூக கட்டமைப்போடு ஒப்பிடும்போது சிறிய அளவிலான வளத்தினையே கொண்டுள்ளது. மலையகத்தில் 5%க்கும் குறைவான தமிழ் தேசிய பாடசாலைகளே உள்ளன. இவை (கண்டி, பதுளை, மாத்தளை) பெரும்பாலும் நகரங்களிலேயே அமைக்கப்பட்டுள்ளன. பெருந்தோட்ட பகுதியில் அமைக்கப்படவில்லை. 15 தேசிய பல்கலைக்கழகங்களில் ஆண்டுக்கு சராசரியாக 90% ஆன மாணவர்கள் சகல பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படும் போது மலையகத்தில் இருந்து 15% க்கும் குறைவான மாணவர்களே பல்கலைக்கழகத்தில் உள்வாரியாக கல்வி பயில்கின்றனர். இவற்றில் பெரும்பான்மையோர் கலைத் துறையினராகவே காணப்படுகின்றனர். குறிப்பாக 1930ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் கல்வி தேசியமயமாக்கப்பட்ட போது 1960ஆம் ஆண்டு காலபகுதியில்தான் பெருந்தோட்ட பகுதி தேசிய கல்வி நீரோட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டது. இது ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடுகையில் 30வருட காலம் தேசிய கல்வி முறைக்குள் பெருந்தோட்டம் உள்வாங்கப்படவில்லை என்பது இச்சமூகத்தின் வளர்ச்சிக்கு தடையாக இருப்பதற்கான காரணமாய் அமைந்துள்ளது.

பாராபட்சமான சட்டங்கள் : அதாவது பிரதேச சபையின் சில சட்டங்கள் பெருந்தோட்ட சமூகக் கட்டமைப்புக்குள் இதன் சேவை வழங்களை கட்டுப்படுத்துவதாக காணப்படுகின்றது. குறிப்பாக பிரதேச சபைகள் சரத்து 33, 19(xiv), 19(xxii), 134(4) ஆகியன பிரதேச சபைகள் கிராமிய பிரதேசத்துக்குள்ளேயே செயற்பட முடியும், தோட்டங்கள் தனி சொத்துடமை என்றும் பிரதேச சபையின் நிதி கிராமிய அபிவிருத்திக்காவே செலவிட முடியும் எனவும் பெருந்தோட்டங்கள், தோட்ட உற்பத்திக்கான செயற்பாட்டுக்கு ஆக்கப்பட்ட பிரதேசங்கள் எனவும் இப்பிரதேச சபை சட்டங்கள் குறிப்பிடுகின்றன. ஆனால் பெருந்தோட்ட சொத்துக்களுக்கு அபிவிருத்தி நிலையை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகள் போதுமானளவு செய்யப்படவில்லை. மேலம் பிரதேசசபை சட்டதின் மூலம் பெறப்படும் உரிமைகள் மலையக மக்களுக்கு சமத்துவமாக கிடைக்கப்பெறவில்லை. தேசிய ரீதியில் செயற்படும் கல்வி, சிறுவர் விவகாரம், சுகாதாரம் போன்ற அமைச்சுகளினுடைய நிதி ஒதுக்கீடுகள் பெருந்தோட்டப் பகுதியை நோக்கிய அபிவிருத்தி திட்டங்களுக்கு சிறிய அளவிலேயே செலவிடப்படுகின்றது. இது தேசிய ரீதியில் ஏனைய பிராந்தியங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியிலும் பார்க்க குறுகிய அளவாகும். குறிப்பாக 1992இல் ஐக்கிய நாடுகள் சபையால் கொண்டுவரப்பட்ட சிறுபான்மையினர் தொடர்பான பிரகடனம், சிறுபான்மையினருக்கு எதிரான பாகுபாடுகள் மற்றும் உரிமைகள் மீறப்படுவதை தடுத்து அவர்களது உரிமையினை ஊக்குவிப்பதையே நோக்காகக் கொண்டிருந்தது. 1948ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அனைத்துலக மனித உரிமை பிரகடனத்தின் 22ஆம் உறுப்புரையானது ஒவ்வொரு பிரஜையும் சமூக பாதுகாப்புக்கான வளங்களைப் பெற்று தமது மதிப்பு மற்றும் ஆளுமையை விருத்தி செய்வதற்கும், சமூக, பொருளாதார, கலாசார உரிமைகளை பெறுவதற்கும் உரித்துடையவர்கள் எனக் குறிப்பிடுகின்றது. இதனை மேற்கொண்டு பார்க்கும் பொழுது பெருந்தோட்ட சமூகத்தின் செயற்பாடுகளில் இலங்கை அரசு இவ்வுரிமைகளை முழுமையாக மீறியுள்ளது.

பரிந்துரைகள் மற்றும் முடிவுரை

ஒரு சமூகத்தினுடைய அசைவு இயக்கத்தினை தீர்மானிப்பதில் அரச நிர்வாக கட்டமைப்பு, பொதுச்சேவைகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் என்பன முக்கியமானவை. ஆனால் மேற்குறிப்பிட்டப்பட்ட பல பாரபட்சமான செயற்பாடுகள் இலங்கையின் பொருளாதாரத்தினை பலப்படுத்தும் பெருந்தோட்ட சமூகத்தின் வளர்ச்சி நிலைக்கு மிகப்பெரும் தடைக்கல்லாகவே காணப்படுகின்றது. ஆகவே இம்மக்களும் தேசிய நீரோட்டத்தில் இணைக்கப்பட்டு ஏனைய சமூகத்தினர் அனுபவிக்கின்ற அடிப்படையான சகல உரிமைகளையும் பெறவேண்டுமாயின். முதலில் மலையக மக்கள் அரச நிர்வாக இயந்திரத்திற்க்குள் சட்டரீதியாக உள்வாங்கப்பட வேண்டும். அதாவது பெருந்தோட்ட மக்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல், குறைத்தீர்க்கும் நிவாரண பொறிமுறையொன்றை உருவாக்குதல், அமுக்க நலன் பேண் குழுக்களை கட்டியெழுப்புதல், நியாய பிரசாரங்களை முன்னெடுத்தல், ஐக்கிய நாடுகள் சபையின் முறைபாட்டு பொறிமுறையினை பயன்படுத்தல், மனிதவுரிமைகள் அமைப்புகளுக்கு அறிக்கைச் சமர்பித்தல், அரசியல் ரீதியான அழுத்தங்களை ஏற்படுத்தல், மக்களின் புரிந்துணர்வையும் மங்காற்றலையும் அதிகரித்தல், அடிப்படை உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கான அத்திவாரமாகிய புதிய உள்ளூராட்சி சபைகளை தாபித்தல், பிரதேசசபை சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்தல், தோட்டங்களை கிராமங்களாக பிரகடனப்படுத்தல், சர்வதேச ரீதியாக மேற்கொள்ளப்படும் சேவைவழங்கல், கொள்கை திட்டமிடல் செயற்பாடுகளில் பெருந்தோட்ட சமூகம் முதன்மைபடுத்தல், மலையக மக்கள் குறித்து மேற்கொள்ளப்படும் பாரபட்சமான நிர்வாக முறைகள் ஒழிக்கப்படுவதுடன் பெருந்தோட்டத்துறை மக்களின் அபிவிருத்திக்கான நீண்டகால,குறுங்கால திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு செயற்படுத்தப்படுத்தல் போன்றன மலையக மக்கள் அரசியல், பொருளாதார, நிர்வாக மற்றும் சமூக மட்டங்களில் எதிர்கொள்ளும் உரிமை மீறல்களை மட்டுப்படுத்துவதற்கான பரிந்துரைகளாக அமையப் பெறுகின்றன.

இத்தகைய செயற்திட்டங்கள் வெற்றி பெறவேண்டுமாயின் மலையக மக்கள் இந்நாட்டில் தங்களுடைய நிலை குறித்த சரியான தெளிவை உணர்ந்து தமக்கான சேவையை அரசிடமிருந்து பெற்று அடிப்படைப் தேவைகளை நிறைவேற்றக்கூடிய ஓர் சிறந்த தலைமைத்துவத்தினை தோற்றுவிக்க வேண்டும். நடைமுறை அரசியல்நிலை குறித்த தெளிவினை பெற்று அரசாங்கத்திற்கான அழுத்தத்தினை தொடர்ச்சியாக கொடுக்கும் ஓர் மக்கள் சமூகமாக மாறவேண்டும். தற்போது வளர்ச்சியடைந்து வரும் கல்வித் தரத்தின் வேகத்தினை அதிகரிக்கச் செய்து எதிர்கால மலையக சமூகத்தினை கல்வியில் முன்னணி வகிக்கும் சமூகமாக தோற்றுவிப்பதற்கு ஒவ்வொரு மலையகத்தவரும் தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அரசியல், சமூகம், பொருளாதாரம் தொடர்பான விழிப்புணர்வை பெற்றவர்களாக மலையக மக்கள் தங்களை மாற்றி கொள்ள வேண்டும். அதற்கான செயற்திட்டங்களை இம்மக்கள் மத்தியில் இருந்து உருவாகிய கல்வி மட்டத்தில் தேர்ச்சி பெற்ற ஒவ்வொருவரும் பொறுப்பேற்க வேண்டும். அதுமாத்திரமின்றி தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான நியாய பிரசாரங்கள், ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் என்பன மலையக மக்களுக்கு காட்டப்படும் பாகுபாடான அரசாங்க சேவை வழங்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்திடம் அழுத்தங்களை பிரயோகிக்க வழிவகுக்கும். அதேநேரம்

இப்பிரச்சினை தொடர்பாக சர்வதேச ரீதியிலான கவனயீர்ப்பொன்றும் ஏற்படும். இத்தகைய உயர் மட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு மலையக அரசியல் தலைமைகளினதும் சிவில் சமூகத்தினதும் கூட்டான செயற்பாடு மற்றும் அதனோடு இணைந்த மக்களின் பங்குபற்றல் அத்தியாவசியமான ஒன்றாகக் கருதப்படுகிறது.

உசாத்துணை

1. லோரன்ஸ்.அ. (2006) ‘‘மலையக சமகால அரசியல் - அரசியல் தீர்வு’’, மலையக வெளியீட்டகம் தலவாக்கலை.
2. சரவணன்,என்., (2001), ‘‘இலங்கை அரசியலில் பெண்களும், பெண்களின் அரசியலும்’’, மூன்றாவது மனிதன் பதிப்பகம், கொழும்பு.
3. சாரல் நாடன்., (1997), ‘‘மலையகம் வளர்த்த தமிழ்’’, துரைவி வெளியீடு, சென்னை.
4. சாரல் நாடன்., (2008), ‘‘தேபக்தன் கோ.நடேசய்யர்’’, குமரன் புத்தக இல்லம், கொழும்பு
5. சத்தியநாதன், ச., (1999), ‘‘மலையக அரசியலும், ஜீவ வாழ்வும்’’, ஞானம் பதிப்பகம், கண்டி.
6. Guyde Fontgallan.M., (1987), “Buddhasinglavarum Sirupanmayinrum”, besant nager, Madras – India.
7. Lenin Mathivanam. J., (2010), “Malaiyakam Teciyam Carvatecam”, Kumaran Book House Colombo 10.
8. Vamadevan. M. (2014) “Malayagam Samaththuram A biviruthiyai wokki, Bakya Pathippagam
9. Kodikara, C., Sri Lanka. Ministry of Child Development and Women's Empowerment, United Nations Development Programme (Sri Lanka), Sri Lanka. Ministry of Child Development and Women's Empowerment, & UNDP Sri Lanka. (2009). The Struggle for Equal Political Representation of Women in Sri Lanka [E-book].p19-28
10. Kumari Jayawardena, Pradeep Peiris, Buddhima Padmasiri, And B. Skanthakumar. (2014). WOMEN IN THE TEA PLANTATIONS OF SRI LANKA: AT THE CENTRE OF PRODUCTION, ON THE MARGINS OF SOCIETY [E-book]. Social Scientists' Association, Colombo November 2014.
11. Kandasamy, M. V. (2002). The Struggle Continues-—Institute of Social Development.
12. Kurian., R. (1982). Women Workers in the Sri Lanka Plantation Sector. A Historical and Contemporary Analysis. Women, Work and Development Series. International Labour Organization.
13. Ramesh,R.,2012, Local Government authorities and Plantation Tamil Community in Sri Lanka: A Theoretical Critique, a memorial oration of late R. Sivalingam Highlands Central College: Hatton.

இடர்கால சூழலில் பொருத்தமான மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதில் அதிபர்கள் எதிர்கொள்ளும் முகாமைத்துவச் சவால்கள்

கனகசுந்தரம் குவேந்திரா[1], செ.அருள்மொழி [2] ,
[1,2] கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[1]Kuvendra5@gmail.com, [2]Chellaih.arulmoly@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இடர்கால சூழலில் பாடசாலை முகாமைத்துவத்தினை திறம்பட முன்னெடுப்பதற்கு பொருத்தமான மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதில் அதிபரின் முகாமைத்துவ திறன் முக்கியமானதாகும். இவ்வாறு பொருத்தமான மாற்றங்களை நடைமுறைப்படுத்தும் போது அதிபர் பல சவால்களை எதிர்நோக்குகின்றார். இவ்வாய்வின் முக்கிய நோக்கம் இடர்கால சூழலில் பொருத்தமான மாற்றங்களை நடைமுறைப்படுத்தும் போது அதிபர்கள் எதிர்கொள்கின்ற முகாமைத்துவ பிரச்சினைகளைக் கண்டறிந்து மேம்படுத்துவதற்கான விதப்புரைகளை முன்மொழிவதாகும். இவ்வாய்வு அளவைநிலை ஆய்வு முறையில் ஒழுங்கமைக்கப்பட்டு மட்டக்களப்பு கல்வி வலய ஏறாவூர்ப்பற்று – 1 கோட்ட 10 பாடசாலைகளின் அதிபர்களும் SDEC இல் அங்கம்பெறும் பெற்றோர்களும் நோக்க மாதிரி அடிப்படையில் முழுமையாகவும், ஆசிரியர்கள் பால் ரீதியாக படையாக்கப்பட்டு ஆய்விற்காக தெரிவுசெய்யப்பட்ட 10 பாடசாலைகளிலும் 3:1 என்ற விகித அடிப்படையிலும், மாணவத்தலைவர்கள் பால்ரீதியாக படையாக்கப்பட்டு 2:1 என்ற விகிதத்திலும் தெரிவுசெய்யப்பட்டு முறையே நேர்முகம் காணல், வினாக்கொத்து மூலமாக பல தரவுகள் சேகரிக்கப்பட்டு சதவீத அளவீட்டு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகள் யாவும் இடர்காலத்தில் அதிபரின் பொருத்தமான மாற்றங்கள், அம்மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதிலுள்ள முகாமைத்துவ சவால்கள், அச்சவால்களை எதிர்கொள்வதற்கான முகாமைத்துவ திறன்கள், அதிபர்கள் முகாமைத்துவ சவால்களை முகங்கொடுப்பதிலுள்ள பிரச்சினைகள், சவால்களை வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கான ஆலோசனைகள் போன்ற ஆய்வு நோக்கத்தின் அடிப்படையில் பண்பு ரீதியாகவும், அளவு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டு எடுத்துக்கூறப்பட்டுள்ளன. ஆய்வு முடிவுகளிலிருந்து இடர்கால சூழலில் கல்விச் செயற்பாட்டிற்கு பொருத்தமான முகாமைத்துவ மாற்றங்களை அதிபர்கள் நடைமுறைப்படுத்தும் வேளையில் முகாமைத்துவ சவால்களை எதிர்கொள்கின்றனர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் போன்றோரின் ஒத்துழைப்பையும், மேல்நிலையிலுள்ள அதிகாரிகளின் ஒத்துழைப்பையும் அதிபர்கள் தமது முகாமைத்துவ மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றனர். அதிபரானவர் இடர்கால சூழலில் பாடசாலை முகாமைத்துவத்தினை மேற்கொள்ள பாடசாலைக்கு உள்ளேயும், வெளியிலும் பல சவால்களை எதிர்கொண்டவர்களாக காணப்படுகின்றனர். எழுகின்ற சவால்களை தீர்த்து நிலையான ஸ்திர தன்மையுடைய பாடசாலை முகாமைத்துவத்தினை மேற்கொள்வதற்கு அதிபர்களுக்கென விசேடமான முகாமைத்துவ திறன்கள் ஆலோசனைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன.

திறவுச் சொற்கள்: இடர்கால சூழல், வகிபங்கு, முகாமைத்துவம்

1.0 அறிமுகம்

1.1 ஆய்வு அறிமுகம்

ஒரு நாட்டின் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்திக்கு உந்து சக்தியான அமைவது அந்நாட்டின் கல்வியே ஆகும். இதற்கிணங்க அனைவருக்கும் கல்வியினைப் பெற வகை செய்யவேண்டும். இதனடிப்படையில் இலங்கையில் 1938ஆம் ஆண்டு 31ஆம் இலக்க கல்விச் சட்டத்தில் குறிப்பிட்டதன்படி 5-16 வயதுக்குட்பட்ட அனைவருக்கும் கல்வியை பெற்றுக்கொள்ள வழிசமைக்கப்பட்டுள்ளது. பல்தரப்பட்ட சமூக மற்றும் பொருளாதார சூழல்களிலிருந்து வருகைத் தரும் பிள்ளைகளின் தேர்ச்சிகளை விருத்தி செய்து தேசிய கல்விக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளக் கூடிய விசேட பணி பாடசாலையினால் நிறைவேற்றப்படுகின்றது. இதன்போது அதிபரே பாடசாலையை நெறிப்படுத்தும் வழிகாட்டியாகத் திகழ்கிறார். எனினும் இத்தொனிப்பொருளானது தற்போதைய இடர்கால சூழலில் நிறைவேற்றப்படுகின்றதா என்பது ஆராயப்படவேண்டிய ஒன்றே.

தற்போதைய சூழலில் இவ்வாறான இடர்கால சூழலே தற்போதை கொவிட்-19 தொற்றுப்பரவலால் முழுஉலகிலும் தாக்கம் செலுத்திக்கொண்டுள்ளது. இந்நிலையில் நாட்டின் அனைத்துத் துறைகளும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் ஏனைய துறைகளை போன்றே கல்வித்துறையும் இவ்விடர்கால சூழலின் தாக்கத்திற்கெதிராக வழமையான கற்றல்-கற்பித்தல்

செயற்பாடுகளை முன்னெடுப்பதில் கவனஞ்செலுத்தியுள்ளன. இந்த இடர்காலசூழலிலும் அனைவருக்குமான கல்வியை பெற்றுக்கொடுப்பதை ஒவ்வொரு பாடசாலை அதிபர்களும் தமது முகாமைத்துவ நடைமுறைகளினூடாக பல்வேறு பிரயத்தனங்களை மேற்கொண்டு உறுதிப்படுத்துகின்றனர்.

அதிபரின் வகிபாகமானது ஒரு பாடசாலை நிர்வாகத்தினை வினைத்திறனாக மேற்கொண்டு விளைதிறனுடைய பாடசாலை வெளியீடுகளை சமூகத்திற்கு தனது பாடசாலை சார்ந்து வழங்கும் உன்னத பணியினை குறித்து நிற்கின்றன. இவ்வாறான பணியினை மேற்கொள்ளும் போது அதிபரானவர் தனது முகாமைத்துவ உத்திகளை சிறந்த முறையில் பிரயோகித்து செயற்படல் வேண்டும். பாடசாலை அதிபரானவர் தனது முகாமைத்துவ உத்திகளை தற்போதைய இடர்காலச் சூழலில் பாடசாலை நிர்வாகம் சார்ந்து பிரயோகிக்கையில் பல்வேறுபட்ட தடைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இப்பின்னணியில் இடர்கால சூழலில் பொருத்தமான மாற்றங்களை நடைமுறைப்படுத்தும் போது அதிபர்கள் எதிர்கொள்கின்ற முகாமைத்துவ சவால்களை எதிர்கொள்வதற்கான வழிவகைகளை எடுத்துரைத்தல் அவசியம் எனும் நோக்கில் இவ்வாய்வானது முன்னெடுக்கப்படுகின்றது.

1.2 ஆய்வுப் பிரச்சினை

மட்டக்களப்பு கல்வி வலய ஏறாவூப்பற்று - 1 கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளை மையமாக கொண்டு இடர்கால சூழலில் பொருத்தமான மாற்றங்களை கையாண்டு கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளை வழமையான வேகத்தில் ஏற்படுத்த பாடசாலை அதிபர்கள் முனையும் போது அவர்களுக்கு ஏற்படும் முகாமைத்துவ ரீதியான சிக்கல்களை ஆராய்வதாக இந்த ஆய்வு அமைகின்றது.

இங்கு பாடசாலைசார்ந்த வளப்பற்றாக்குறை முக்கிய சவாலாக அமைகின்றது. அந்தவகையில் இத்தொற்று இடர்காலசூழலில் உபாயமான நிகழ்நிலை கற்பித்தலை (Online teaching) மேற்கொள்வதற்கேற்ற தொழிநுட்ப வளங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பாடசாலைகளில் குறைவானதாகவும், சில பாடசாலைகளில் முழுமையாக இல்லாத நிலையிலும் காணப்படுகின்றது. இச்சூழலில் பாடசாலை அதிபர் நிகழ்நிலை கற்பித்தலை ஊக்குவிப்பதில் பின்வாங்கும் பரிதாபநிலை காணப்படுகின்றது. இதனை Tedmem (2020) பாடசாலை நிர்வாகிகள் கோவிட் - 19 காலத்தில் கல்விச் செயற்பாடுகளை இணையத்தள தொழிநுட்பங்களின் உட்கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்தி பாடங்களைக் கற்பிக்கும் செயல்பாட்டில் கற்பித்தல் சிக்கல்கள் காணப்படுவதாகவும், இணையத்தள தொழிநுட்பங்களின் உட்கட்டமைப்பு அணுகல் போன்றவற்றில் பிரச்சினைகளை எதிர்கொள்வதாகவும், தொற்றுக்காலத்தில் இணையவழியாக பாடசாலைகளை முன்னெடுப்பதில் தொழிநுட்ப சிக்கல்களை அனுபவிப்பதாக அதிபர்கள் கருத்து தெரிவித்தனர் என தனது ஆய்வில் குறிப்பிடுகின்றார்.

ஆய்வுப்பிரச்சினை கூற்று

மட்டக்களப்பு கல்வி வலயத்திலுள்ள ஏறாவூர்ப்பற்று கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள் தற்போதைய இடர்காலசூழலில், பொருத்தமான மாற்றங்களை நடைமுறைப்படுத்த சாதாரண காலங்களை பார்க்கிலும் கூடுதலான முகாமைத்துவ சிக்கல்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

1.3 பொதுநோக்கம்

ஏறாவூர்ப்பற்று கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு இடர்கால சூழலில் பொருத்தமான மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதில் தோன்றும் முகாமைத்துவ சவால்களை வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு தேவையான திறன்களை தெரியப்படுத்துதல்.

1.3.1 சிறப்பு நோக்கங்கள்

1. இடர்கால சூழலில் அதிபர்கள் மேற்கொள்ளும் பொருத்தமான முகாமைத்துவ மாற்றங்களை ஆராய்தல்.
2. இடர்கால சூழலில் அதிபர்கள் பொருத்தமான முகாமைத்துவ மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதில் எதிர்கொள்ளும் சவால்களை கண்டறிதல்.
3. இடர்கால சூழலில் ஏற்படும் முகாமைத்துவ சவால்களை எதிர்கொள்வதற்கு அதிபர்களுக்கு அவசியமான முகாமைத்துவ திறன்களை இனங்காணல்.
4. இடர்கால சூழலில் அதிபர்கள் எதிர்கொள்ளும் முகாமைத்துவ சவால்களை வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கான ஆலோசனைகளை முன்மொழிதல்.

1.4 ஆய்வு வினாக்கள்

அ) இடர்கால சூழலில் அதிபர்கள் மேற்கொள்ளும் பொருத்தமான முகாமைத்துவ மாற்றங்கள் எவை?

ஆ) இடர்கால சூழலில் அதிபர்கள் பொருத்தமான முகாமைத்துவ மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதில் எதிர்கொள்ளும் சவால்கள் எவை?

இ) இடர்கால சூழலில் ஏற்படும் முகாமைத்துவ சவால்களை எதிர்கொள்வதற்கு அதிபர்களுக்கு அவசியமான முகாமைத்துவ திறன்கள் எவை?

ஈ) இடர்கால சூழலில் அதிபர்கள் எதிர்கொள்ளும் முகாமைத்துவ சவால்களை வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கான ஆலோசனைகள் எவை?

2.0 இலக்கிய மீளாய்வு

Sumitra Pokhrel, Roshan Chetri (2021) போன்றோர் கொவிட் - 19 தொற்றுநோய் கல்வி முறைகளில் மிகப்பெரிய இடையூறை ஏற்படுத்தியுள்ளது. 200 இற்கு மேற்பட்ட நாடுகளில் கிட்டத்தட்ட 1.6 பில்லியன் கற்றலில் ஈடுபடுகின்றவர்களில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பாடசாலைகள், நிறுவனங்கள் மற்றும் பிற கற்றல் நிலையங்களை மூடுகின்ற அளவிற்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இது உலக மாணவர்களில் 94% இற்கும் அதிகமானவர்களை பாதித்துள்ளது. நம் வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் மாற்றங்களை கொண்டு வந்துள்ளது. இதனால் ஏற்பட்ட சமூக விலகல் மற்றும் கட்டுப்பாட்டு கொள்கைகள் போன்றன வழமையான கல்வி நடவடிக்கைகளில் கணிசமாக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் கட்டுப்பாடுகளை

தளர்த்திய பிறகு பாடசாலைகளை மீண்டும் திறப்பதில் முகாமைத்துவ நடைமுறை சவால்கள் உள்ளன என தற்போதைய இடர்கால சூழலில் முகாமைத்துவம் பற்றி தனது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.

Alma Harris, Michel Jone (2020) என்பவர்கள் தற்போதைய அழுத்தமானதும், குழப்பமானதுமான இடர்கால சூழலில் பணிபுரியும் பாடசாலை அதிபர்களுக்கு அளவில்லாத அழுத்தம் நிறைந்து காணப்படுகின்றது. சாதாரண காலம் போன்று கல்வி நடவடிக்கைகளை பெற ஆசிரியர்கள், மாணவர்கள் காத்திருக்கின்றனர். இதனை உறுதிப்படுத்த ஸ்திர தன்மையுடைய தலைமைத்துவத்தின் முகாமை அவசியமாகின்றது. இதுவே சீரான கல்விச் செயற்பாடுகளுக்கு உறுதியளிக்கும் எனவும் மேலும் அநேகமான பாடசாலை அதிபர்கள் தற்போதைய இடர்கால சூழ்நிலைக்கு ஏற்ப முகாமைத்துவ சவால்களை எதிர்கொள்ளக் கூடிய வகையிலான பயிற்சித்திட்டங்கள் மூலம் தயார்ப்படுத்தப்படுகின்றனர். ஏற்கனவே உள்ள முகாமைத்துவ நுட்பங்களை மறுசீரமைத்து, தற்போதைய நிலையை எதிர்கொள்ள அதிபர்களிடம் தயார்ப்படுத்தலை மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் ஏற்கனவே உள்ள முகாமைத்துவ நடவடிக்கைகள் தற்போதைய சூழலுக்குப் பொருந்தாது. எனவே புதிய திறன்கள், நடைமுறைகள் உள்ளடங்கிய புதிய திட்டங்கள் அவசியமாகின்றன எனவும் கூறுகின்றார். இங்கு அதிபர்களின் இடர்காலநிலைக்கு பொருத்தமான மாற்றங்களை நடைமுறைப்படுத்தல் அவசியமாகின்றன குறிப்பிடுகின்றனர்.

UNESCO (2020) கோவிட் தொற்றுநோய் இலங்கை மக்களின் வாழ்வாதாரத்தை பாதித்தது போலவே மாணவர்களின் கல்வி அமைப்பையும் பாதித்துள்ளது. ஆதலால் இலங்கையில் பாடசாலைகள் மூடப்பட்டன, மாணவர்களின் கல்வி கற்றல் மற்றும் கற்பித்தல் செயன்முறை பாதிக்கப்பட்டுள்ளது. எனினும் மாணவர்கள் தங்கள் கற்றல் கற்பித்தல் செயன்முறைகளிலிருந்து முடங்கிவிடவில்லை. வீட்டில் இருந்தபடியே இணையத்தள தொழிநுட்பங்களின் உதவியின் மூலமாக தங்கள் கற்றல் செயன்முறைகளில் ஈடுபடுகின்றனர். ஆயினும் இணையத்தள தொழிநுட்பங்களின் உதவியின் மூலமாக தங்கள் கற்றல் செயன்முறைகளில் ஈடுபடுவது அனைத்து மாணவர்களாலும் சாத்தியமாகாத ஒன்றாகக் காணப்படுகின்றது. ஏனெனில், மாணவர்கள் மட்டுமன்றி ஆசிரியர்களும் இணையத்தள தொழிநுட்பங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பாடங்களை கற்கும் மற்றும் கற்பிக்கும் செயற்பாட்டில் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.

3.0 ஆய்வு முறையியல்

ஆய்வு முறையியல் சிறப்பானதாக காணப்படும் பட்சத்திலேயே தீர்வுகள் நம்பகத் தன்மையாக அமையும். இவ்வாய்வில் எண், அளவு ரீதியான முறையியல்களும், பண்பு ரீதியான முறையியல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எண் ரீதியான முறையியலினுள் எண்கள், அட்டவணைகள், வரைபடங்கள், மாணவர் தொகை, விகிதங்கள் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் புறவயத்தன்மையாக ஆய்வு கொண்டு செல்லப்படுகின்றது.

ஆய்வு தொடர்பான கோட்பாட்டு ரீதியான உறுதிப்படுத்தலுடன் தொடர்பு கொண்டதாக பண்பு ரீதியான முறையியல் காணப்படுகின்றது. இங்கு சம்மந்தப்பட்ட பாடசாலைகளில் ஆசிரியர்கள், மாணவர்களிடத்தில் வினாக்கொத்து மூலமாகவும், அதிபர்கள் மற்றும் பெற்றோர்களிடத்தில் நேர்காணல் மூலமாகவும் பெறப்பட்ட தகவல்கள், அபிப்பிராயங்கள், எண்ணங்கள், வெளிப்பாடுகள் போன்ற அகவய உணர்வுகளும் ஆய்வில் கருத்திற் கொள்ளப்படுகின்றன.

அளவுரீதியான, பண்புரீதியான விடயங்களை அடிப்படையாக கொண்டு இவ்வாய்வு அமைவதால் இவ்வாய்வில் கலப்பு ஆய்வு வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு வினாக்கொத்து மற்றும் நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவுகள் அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் அமைவதால் இது ஒரு அளவை நிலை ஆய்வாக அமைந்துள்ளது.

3.1 மாதிரித் தெரிவு

இதனடிப்படையில் இவ்வாய்வானது ஏறாவூர்ப்பற்று - 1 கல்விக்கோட்டத்திலுள்ள பாடசாலைகளை மையமாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏறாவூர்ப்பற்று - 1 கோட்டத்தில் 1 1AB பாடசாலை, 4 1C பாடசாலைகள், 3 வகை II பாடசாலைகள், 2 வகை III பாடசாலைகள் என மொத்தமாக 10 பாடசாலைகள் காணப்படுகின்றன. ஆய்வின் பொருத்தப்பாடு கருதி ஏறாவூர்பற்று - 1 கோட்டத்திலுள்ள 10 பாடசாலைகளையும் நோக்க மாதிரி அடிப்படையில் ஆய்வினை மேற்கொள்ளும் பொருட்டு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஆய்வுப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் ஆண், பெண் என படையாக்கப்பட்டு 3:1 என்ற விகித்தில் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இதற்கமைய 233 ஆசிரியர்களிலிருந்து 68 ஆசிரியர்கள் மாதிரி தெரிவாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆய்வுப் பிரதேச பாடசாலைகளில் காணப்படும் 260 மாணவ தலைவர்களிலிருந்து ஆண், பெண் என படையாக்கப்பட்டு அவர்களில் இருந்து 2:1 எனும் விகிதத்தில் மாணவத்தலைவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இதற்கமைய எல்லாமாக 132 மாணவ தலைவர்கள் மாதிரி தெரிவாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் SDEC இல் அங்கம் வகிக்கும் அனைத்து பெற்றோர்களும் மாதிரி தெரிவாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். குறித்த குழுவில் பெற்றோர்களின் அங்கத்துவ எண்ணிக்கையானது மாணவர்தொகைக்கு ஏற்பவே அமைகின்றது. அதாவது 100 இற்கு குறைவாயின் 3 பெற்றோரும், 101 - 500 வரையில் 4 பெற்றோரும், 501 - 1000 வரையில் 5 பெற்றோர்களுமென அங்கம் வகிப்பர். ஆய்வுக்காக தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகள் அநேகமாக 5, 6 பெற்றோர்களே அங்கம் பெறுகின்ற அளவிலான மாணவர்தொகையினை கொண்டுள்ளன. இதனடிப்படையில் 41 பெற்றோர்கள் மாதிரி தெரிவாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

4.0 தரவுப் பகுப்பாய்வுகள்

4.1 இடர்கால சூழலில் அதிபர்கள் மேற்கொள்ளும் பொருத்தமான முகாமைத்துவ மாற்றங்கள்

அதிபரிடம் மேற்கொண்ட நேர்காணலின் போது தற்போதைய தொற்றுக்கால இடர்நிலைமையின்போது நீர் எவ்வாறான முகாமைத்துவ மாற்றங்களை மேற்கொள்கின்றீர்கள் என வினவிய வினாவிற்கும், பாடசாலை அபிவிருத்திச்சங்க பெற்றோர்களிடம் மேற்கொள்ளப்பட்ட நேர்காணலின் போது தற்போதைய தொற்றுக்கால இடர்நிலைமையின்போது பாடசாலை அதிபர்கள் எவ்வாறான முகாமைத்துவ மாற்றங்களை மேற்கொள்கின்றார்கள் என வினாவப்பட்ட போது அவர்கள் அளித்த பதில்கள் உரு 4.1 காட்டுகிறது.



உரு 4.1 இடர்கால மாற்றங்கள் தொடர்பான அதிபர், பெற்றோர் நேர்காணல் பெறுபேறு

உரு 4.1 இன்படி சுழற்சி முறையில் ஆசிரியர்களை அழைத்தல், சுழற்சி முறையில் மாணவர்களை அழைத்தல், நிகழ்நிலைக் கற்பித்தலை ஊக்குவித்தல், பெற்றோர்களுடனான வகுப்பாசிரியரின் தொடர்புகளை what'sapp Groups மூலமாக பேணல் போன்ற பதில்களை 10 அதிபர்களும் வழங்கியிருந்தார்கள். இது மாதிரி தெரிவின் பதில்களுள் 100% ஆகும் வசதிகுறைந்த மாணவர்களை அருகிலுள்ள தொழினுட்ப வளமுடைய மாணவர்களுடன் இணைத்து கற்றலை சீராக மேற்கொள்ள வகைசெய்தல் 8 (80%) அதிபர்கள், 29 (70.7%) பெற்றோர்கள் பதில்களாக அளித்தார்கள். மேலும் சுழற்சி முறையில் ஆசிரியர்களை அழைத்தல், சுழற்சி முறையில் மாணவர்களை அழைத்தல், நிகழ்நிலைக் கற்பித்தலை ஊக்குவித்தல், இது மொத்த அதிபர்களில் பெற்றோர்களில் 29 (70.7%) ஆகும். இதனூடாக இடர்கால சூழலில் அதிபர்கள் மேற்கொள்ளும் பொருத்தமான முகாமைத்துவ மாற்றங்கள் தொடர்பான தெளிவு விளக்கப்படுகின்றது.

அல்மா ஹாரிஸ், மைக்கல் ஜோன் (Alma Harris, Michel Jone – 2020) மேற்கொண்ட ஆய்வின் வாயிலாக பெறப்பட்ட முடிவுகளுடன் ஒத்ததன்மையுடையதாக அமைகின்றது. தற்போதைய அழுத்தமானதும், குழப்பமானதுமான இடர்கால சூழலில் பணிபுரியும் பாடசாலை அதிபர்களுக்கு அளவில்லாத அழுத்தம் நிறைந்து காணப்படுகின்றது. இந்நிலையில் சாதாரண காலம் போன்று கல்வி நடவடிக்கைகளை பெற ஆசிரியர்கள், மாணவர்கள் காத்திருக்கின்றனர். இதனை உறுதிப்படுத்த ஸ்த்திர தன்மையுடைய தலைமைத்துவத்தின் முகாமை அவசியமாகின்றது. ஏற்கனவே உள்ள முகாமைத்துவ நடவடிக்கைகள் தற்போதைய சூழலுக்குப் பொருந்தாது.

எனவே புதிய திறன்கள், நடைமுறைகள் உள்ளடங்கிய புதிய திட்டங்கள் அவசியமாகின்றன எனவும் கூறுகின்றார். இங்கு அதிபர்களின் இடர்காலநிலைக்கு பொருத்தமான மாற்றங்களை நடைமுறைப்படுத்தல் அவசியமாகின்றன என குறிப்பிடுகின்றனர்.

4.2 இடர்கால சூழலில் அதிபர்கள் பொருத்தமான முகாமைத்துவ மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதில் எதிர்கொள்ளும் சவால்கள்



உரு 4.2 இடர்கால சூழலில் அதிபர்கள் பொருத்தமான முகாமைத்துவ மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதில் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பான அதிபர்கள் அளித்த பதில்கள்

உரு 4.2 இன்படி அதிபர்கள் இடர்கால சூழலில் பொருத்தமான மாற்றங்களை நடைமுறைப்படுத்தும் போது அதிபரிற்கு ஏற்படுகின்ற வளங்கள் சார்பான தடைகள் எவை என வினாவப்பட்ட போது தொழினுட்ப தேர்ச்சியுடைய ஆளணி வளக்குறைபாடு, தொழினுட்ப வள குறைபாடு, பெற்றோர்களின் ஒத்துழைப்பின்மை, இடர்கால சூழலில் செயற்படக் கூடியதாக ஆலோசனைகள் இன்மை, பொருத்தமான மாற்றங்களை நடைமுறைப்படுத்துகையில் தமக்கு மேலுள்ள அதிகாரிகளின் வரையறைகள் தடையாக அமைகின்றது, மிககுறுகிய காலங்களில் அடிக்கடி மாற்றப்படுகின்ற கல்வி சுகாதார ஆலோசனைகள் போன்றனவும் பதில்களாக அதிபர்களால் அளிக்கப்பட்டன. இதன்மூலமாக இடர்கால சூழலில் அதிபரானவர் பாடசாலை கல்விச் செயற்பாடுகளை முன்கொண்டு நடாத்த எதிர்கொள்கின்ற முக்கி விடங்கள் புலப்படுகின்றன.

TEDMEM (2020) என்பவர் கோவிட் - 19 கல்வி சமத்துவமின்மை, சமூகத்தில் வசதி குறைந்தவர்களை எவ்வாறு ஆழமாக பாதிக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறார். உதாரணமாக, அமெரிக்காவில் தொற்றுநோய் டிஜிட்டல் சாதனங்கள் மற்றும் இணைய அணுகலுக்கான

ஏற்றத்தாழ்வுகளை எடுத்துக்காட்டுகிறது. பாடசாலைகள் மூடப்பட்ட போது 15% அமெரிக்க குடும்பங்கள் மற்றும் 35 சதவிகிதம் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் பாடசாலை வயது குழந்தைகளுக்கு வீட்டில் அதிவேக இணைய இணைப்பு இல்லை. இதனால் ஏழ்மையான மாவட்டங்களில் கிட்டத்தட்ட 2/3 வீதமானவர்கள் அடிப்படை தொழில்நுட்பத்தின் பற்றாக்குறை ஒரு பெரியபிரச்சனை என்று தெரிவித்தனர் என தனது ஆய்வில் குறிப்பிடுகின்றார்.

3. இடர்கால சூழலில் ஏற்படும் முகாமைத்துவ சவால்களை எதிர்கொள்வதற்கு அதிபர்களுக்கு அவசியமான முகாமைத்துவ திறன்களை இனங்காணல்.



உரு 4.3 அதிபர்களுக்கு அவசியமான இடர்கால முகாமைத்துவ திறன்கள் தொடர்பான அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர் போன்றோரின் கருத்து.

இதன்படி இடர்கால சூழலில் கல்விச்செயற்பாடுகளை முன்னெடுத்து பொருத்தமான மாற்றங்களை நடைமுறைப்படுத்த பாடசாலை அதிபர்களுக்கு காணப்பட வேண்டிய விசேடமான முகாமைத்துவ திறன்கள் எவை என வினாவப்பட்ட போது நெருக்கடிகளை எதிர்கொண்டு பிரச்சினைக்கு தீர்வினை பெறும் திறன், ஆசிரியரின் திறன் அறிந்து பொறுப்புக்களை வழங்கல், வினையாற்றல், புதுமை, முன்னேற்றப்பாங்கை வளர்த்தல், பாடசாலை முன்னேற்றம், அபிவிருத்திக்கு முன்னின்று உழைத்தல், தொழினுட்ப தொடர்பாடல் திறன், தெளிவான இலக்கு, ஆளணி அபிவிருத்தி, தீர்மானம் எடுக்கும் திறன் போன்றன பதில்களாக அளிக்கப்பட்டன. இங்கு அனைத்து பதில்களையும் பகுத்து நோக்கும் போது அதிபரானவர் இடர்நிலைமையில் பாடசாலை முகாமைத்துவத்தினை வினைத்திறனாக முன்னெடுக்க கொண்டிருக்க வேண்டியனவாக காணப்படுகின்றது.

இங்கு பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டு பெறப்பட்ட பதிலும் நெட்டோலிகி (2020), குறிப்பிடுவது போல் நெருக்கடியான நேரத்தில் பாடசாலை அதிபர்கள் விரைவாகவும் தொலை நோக்குடனும் செயல்பட வேண்டும். ஆனால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் பக்க விளைவுகளை கவனமாக

கருத்தில் கொள்ள வேண்டும். மேலும் ஹாரிஸ் மற்றும் ஜோன்ஸ் (Harrish and Johns - 2020) அவர்கள் மேற்கொண்ட ஆய்வின் முடிவோடும் ஒத்ததன்மையுடையதாக அமைகின்றது என்பதை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து முன்னோக்கி நகரும் போது பாடசாலை அதிபர்கள் அதிகளவில் தொழில்நுட்ப ஆர்வலர்களாகவும் நன்கு அறிந்தவர்களாகவும் இருக்க வேண்டும் என்ற கருத்தின் மூலம் அறியமுடிகின்றது

4.4 இடர்கால சூழலில் அதிபர்கள் எதிர்கொள்ளும் முகாமைத்துவ சவால்களை வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கான ஆலோசனைகளை முன்மொழிதல்.



உரு 4.4 இடர்கால சூழலில் அதிபர்கள் எதிர்கொள்ளும் முகாமைத்துவ சவால்களை வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கான அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஆலோசனைகள்.

இதன்படி அதிபர்களிடமும், ஆசிரியர்களிடமும், மாணவர்களிடமும் உமது பாடசாலை அதிபர் இத்தொற்றுக் காலத்தில் முகாமைத்துவ சவால்களை வெற்றி கொள்ள நீர் முன்வைக்கும் ஆலோசனைகள் யாதென கருதுகின்றீர்கள் என வினாவப்பட்டது. அதற்கு மேலே உருவில் காட்டப்பட்டுள்ளவாறு பதில்கள் வழங்கப்பட்டன. மேலும் பெற்றோர்களில் 92.6% ஆனவர்கள் பாடசாலையிலுள்ள தொழினுட்ப வளங்களை விருத்தி செய்தல் என்பதனையும், 97.5% பெற்றோர்கள் தொழினுட்ப அறிவுடைய ஆசிரியர்களை பயிற்றுவித்தல் என்பதனையும், 85.3% பெற்றோர்கள் தொற்று பரவாத வண்ணம் சுகாதார நடைமுறைகளை பாடசாலையினுள் ஏற்படுத்தல் , 56% பெற்றோர்கள் வெளியிலிருந்து பாடசாலையினுள் வருபவர்களை மட்டுப்படுத்தல் மற்றும் கையேடு ஒன்றை பேணுதல், 90.2% பெற்றோர்கள் ஆசிரியர், மாணவர்களுக்கு சுகாதார நடைமுறைசார்ந்த ஆலோசனைகளை முன்வைத்தல் போன்ற பதில்களை ஒட்டுமொத்தமாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கினங்க இடர்கால சூழலில் ஏற்படுகின்ற முகாமைத்துவ தடைகளை வெற்றிகொண்டு பாடசாலை கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்க அதிபருக்கு உதவியாக அமைகின்ற ஆலோசனைகள் வெளிக்காட்டப்பட்டுள்ளன.

5.0 முடிவுகளும் விதப்புரைகளும்.

5.1 இடர்கால சூழலில் அதிபர்கள் மேற்கொள்ளும் பொருத்தமான முகாமைத்துவ மாற்றங்கள்.

முடிவுகள்

- ஆய்வுப்பிரதேச பாடசாலைகளில் இடர்காலம் தொடர்பாக பாடசாலை ஆளணியினர்களான 78.8% ஆன ஆசிரியர்களும், 63% ஆன மாணவர்களுமே போதியளவு விளக்கத்தினை கொண்டுள்ளனர். இங்கு முழுமையான விளக்கங்கள் குறைவான நிலையிலுள்ளதை அறிய முடிகின்றது. இதனால் இடர்நிலைமைகளில் சீரான கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் சிக்கலான நிலைமைகள் காணப்படுவதனையும் அறியமுடிகின்றது.
- இடர்கால சூழலில் மாணவர்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு, சராசரியாக 49.6% ஆன ஆசிரியர்களும், 58.8% ஆன மாணவர்களும் நவீன தொழினுட்ப சாதன பயன்பாடுகள் ஆய்வுப்பிரதேச பாடசாலைகளில் இடம்பெறுவது என்பதை தமது பதில்களின் மூலம் உறுதிப்படுத்தினர். இது குறைந்த வீதத்தையே காட்டுகின்றது.
- இடர்காலசூழலில் பாடசாலை முகாமைத்துவத்தினை வழமைபோல் கொண்டு செல்ல அதிபர்கள் மேற்கொள்கின்ற முகாமைத்துவ செயற்பாடுகளுக்கு பல தடைகள் காணப்படுவதனை ஆய்வுப்பாடசாலைகளின் 100% ஆன அதிபர்கள், 95.5% ஆன ஆசிரியர்கள், 83.3% ஆன மாணவர்கள் போன்றோரின் பதில்கள் மூலம் அறியமுடிகின்றது.

விதந்துரைப்புக்கள்

- பெற்றோர்களுக்கு, மாணவர்களுக்கான இடர்காலம் தொடர்பான போதிய விளக்கத்தினை பெற்றுக்கொடுத்தல் அவசியமாகும். இதன்மூலம் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை சீரான முறையில் முன்னெடுக்க முடியும்.
- இடர்கால நிலைமைகளில் அதிபரினால் ஏற்படுத்தப்படுகின்ற முகாமைத்துவ நடைமுறைகளுக்கு ஆசிரியர்கள், மாணவர்கள் முழுமையாக தமது ஒத்துழைப்பை வழங்குதல் வேண்டும். இதன்மூலம் அதிபரின் முகாமைத்துவ சவால்கள் குறைய வாய்ப்புண்டு.
- ஆசிரியர்களுக்கு தொழினுட்ப சாதன கையாளுகை தொடர்பான அறிவினை விருத்தி செய்யக்கூடிய செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல். மரபுவழி கற்பித்தலினை படிப்படியாக குறைத்து பழமை பேணும் ஆசிரியர்களின் கற்பித்தல் முறைகளை மாற்றி காலத்திற்கேற்ற கற்பித்தலை முன்னெடுக்க வகை செய்தல்.

5.2 இடர்கால சூழலில் அதிபர்கள் பொருத்தமான முகாமைத்துவ மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதில் எதிர்கொள்ளும் சவால்கள்.

முடிவுகள்

- ஆய்வுப்பிரதேச பாடசாலைகளில் இடர்நிலைமையின் போது அதிபரினால் மேற்கொள்ளப்படும் பொருத்தமான மாற்றங்களுக்கு, பெற்றோர்களின் ஒத்தழைப்பு குறைவாக காணப்படுவதனை 60.6% ஆன மாணவர்கள், 100% ஆன அதிபர்கள், 66% ஆசிரியர்கள் வழங்கிய பதில்களினூடாக அறியமுடிகின்றது.
- அனைத்து மாணவர்களும் நிகழ்நிலை கற்பித்தலினை வினைத்திறனாக பெற்றுக் கொள்வதற்காக பாடசாலை அதிபர்கள் முழுமையாக உழைக்கின்றமையை, 95% ஆன ஆசிரியர்கள், 98% ஆன மாணவர்கள் வழங்கிய பதில்களின் மூலமாக அறியமுடிகின்றது.
- கிராம ரீதியாக குழுமுறைக் கற்பித்தலினை மேற்கொள்வதற்கான செயற்பாடுகளை ஆய்வுப் பிரதேச பாடசாலை அதிபர்கள் அநேகமானோர் ஊக்குவிக்கின்றமையை 80% ஆன அதிபர்களின் கருத்துக்கள் மூலம் அறியமுடிகின்றது.

விதந்துரைப்புக்கள்

- இடர்கால சூழலில் அதிபர்கள் நடைமுறைப்படுத்துகின்ற முகாமைத்துவ மாற்றங்களுக்கு பெற்றோர்கள் முழுமையாக தமது பங்களிப்பினை வழங்க ஏற்பாடுகளைச் செய்தல்.
- கிராம ரீதியான குழுமுறை கற்பித்தலுக்கான அதிபர்களின் ஊக்குவிப்புக்கேற்ற வகையில் பாடசாலை மாணவர்கள் ஒத்துழைப்பை வழங்கல் வேண்டும்.
- பாடசாலை அதிபர்களின் இடர்காலத்துக்கு பொருத்தமான மாற்றங்களுக்கு ஆசிரியர்கள் தமது பங்களிப்பினை முழு மனதுடன் வழங்குதல்.

5.3 இடர்கால சூழலில் ஏற்படும் முகாமைத்துவ சவால்களை எதிர்கொள்வதற்கு அதிபர்களுக்கு அவசியமான முகாமைத்துவ திறன்கள்.

முடிவுகள்

- பாடசாலை சார்ந்த தொழினுட்ப வசதிகள் ஆய்வுப்பிரதேச பாடசாலைகளில் குறைந்தளவிலேயே காணப்படுவதனை 100% ஆன அதிபர்களினதும், 98% ஆன மாணவர்களினதும் பதில்கள் மூலம் அறியமுடிகின்றது.
- ஆய்வுப் பாடசாலைகளில் இருக்கின்ற வளங்கள் வினைத்திறனாக பயன்படுத்தப்படுகின்ற போதும் அதிபர்களுக்கு மேலதிகமான வளத்தேவை அவசியமாகின்றது என்பதனை 100% ஆன அதிபர்களிதும் 98% ஆன ஆசிரியர்களினதும் பதில்களின் மூலம் அறியலாம்.

- இடர்கால சூழலில் பாடசாலை ஆளணியினரை ஒருங்கிணைத்தலானது பாடசாலை அதிபருக்கு சவாலாக அமைகின்றது என்பதனை 86% ஆன பெற்றோர்களின் கருத்துக்கள் சுட்டிகாட்டுகின்றன.

விதந்துரைப்புக்கள்

- ஆசிரியர்களின் தொழினுட் அறிவினை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல்.
- அதிபர்களின் வினையாற்றல், புதுமை, முன்னேற்றப்பாங்கை வளர்க்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- நெருக்கடியினை எதிர்கொண்டு பிரச்சினைக்கு தீர்வினைப் பெறுகின்ற திறன்களை அதிபர்களிடம் ஏற்படுத்தல்.

5.4 இடர்கால சூழலில் அதிபர்கள் எதிர்கொள்ளும் முகாமைத்துவ சவால்களை வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கான ஆலோசனைகள்.

முடிவுகள்

- தொழினுட்ப சாதன வசதியற்ற மாணவர்களினால் நிகழ்நிலை கற்றலில் ஈடுபடுவதற்கு முடியாமல் போவதனாலும் அதிபர்களுக்கு தமது முகாமைத்துவத்தினை திறம்பட மேற்கொள்ள முடியாமல் போகின்றமையை 97% ஆன மாணவர்களின் கருத்தின் மூலம் அறியமுடிகின்றது.
- சமூக சங்கங்கள் மூலமாகவும் பாடசாலைக் கல்வியை மாணவர்களுக்கு இடர்காலங்களிலும் முழுமையாக உறுதிப்படுத்த பாடசாலை அதிபர் உதவிகளை வேண்டிநிற்கின்றார் என்பதை 100% ஆன அதிபர்களின் பதில்களின் மூலம் அறியமுடிகின்றது.
- தொழினுட் வசதியற்ற மாணவர்களுக்கும் தொற்றுக்கால செயலட்டைகள், பாடக்குறிப்புகள் போன்றவற்றை வழங்க அரசசார்பற்ற நிறுவனங்களினதும், தன்னார்வளர்களினதும் ஒத்துழைப்புக்களை அதிபர்கள் பெறுவதற்காக முயலுகின்றனர் என்பதை 93% ஆன ஆசிரியர்களின் கருத்துக்களின் அறியமுடிகின்றது.

விதந்துரைப்புக்கள்

- தொழினுட்ப வசதியற்ற மாணவர்களுக்கும் தொற்றுக்கால செயலட்டைகள், பாடக்குறிப்புகள் போன்றவற்றை வழங்க அரசசார்பற்ற நிறுவனங்களினதும், தன்னார்வளர்களினதும் ஒத்துழைப்புக்களை அதிபர்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும்.
- சமூக சங்கங்கள் மூலமாகவும் பாடசாலைக் கல்வியை மாணவர்களுக்கு இடர்காலங்களிலும் முழுமையாக உறுதிப்படுத்த பாடசாலை அதிபர்களுக்கு அனைத்து விதத்திலும் உதவிகளை வழங்கவேண்டும்.

- உதாரணம் - கிராம அபிவிருத்திச் சங்கம், ஆலய நிர்வாகங்கள், இளைஞர் கழகம், விளையாட்டுக் கழகம்.

- இடர்காலங்களில் பாடசாலை அதிபர்களின் முகாமைத்துவத்திற்கு மேல்நிலை அதிகாரிகளின் இணக்கப்பாட்டை அதிகரித்தல் அவசியமாகும்.

உசாத்துணை

1. அருள்மொழி.செ (2016), "பாடசாலை மட்ட மேற்பார்வையும் மதிப்பீடும்", கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை, வந்தாறுமூலை.
2. அருள்மொழி.செ (2016), "கல்வி ஆய்வு முறைகள்", ராஜா புத்தக நிலையம், மட்டக்களப்பு.
3. சின்னத்தம்பி, மா., (2006) "பாடசாலை முகாமைத்துவம்" விஸ்டம் பப்ளிகே'ன், கொக்குவில், இலங்கை.
4. செல்வராஜா, மா., (1996), "அபிவிருத்திக்கான முகாமைத்துவ சிந்தனைகளும் செயற்பாடுகளும்", தேசிய கல்வி நிறுவகம், மகரகம.
5. Azorín, C., A. Harris, and M. Jones. 2020. "Taking a Distributed Perspective on Leading Professional Learning Networks." School Leadership & Management .
6. Harris, A. 2020. "COVID-19 – School Leadership in Crisis?" Journal of Professional Capital and Community. https://www.emerald.com/insight/publication/issn/2056-9548#earlycite
7. Netolicky, D. M. 2020. "School Leadership During a Pandemic: Navigating Tensions." Journal of Professional Capital and Community. OECD (2020). A framework to guide an education response to the COVID-19 Pandemic of 2020. Paris: OECD Publishing.
8. TEDMEM (2020). COVID-19 Salgınında Ogrenmenin Surdurulmesi. Retrieved on 12 June 2020 from https://tedmem.org/covid-19/covid-19-salgininda-ogrenmenin-surdurulmesi#return-note-3280-1.
9. UNESCO (2020). COVID-19 Educational Disruption and Response.

Covid – 19 காலப்பகுதியில் விசேடதேவையுடைய மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளுகின்ற சவால்கள்

வே.லமினா[1], ரா.தக்ஷாயினி[2]
[1,2]கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[1]lamina567@gmail.com, [2]thakshaayinir@esn.ac.lk

ஆய்வுச் சுருக்கம்

Covid – 19 காலப்பகுதியில் விசேடதேவையுடைய மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளுகின்ற சவால்கள் எனும் தொனிப்பொருளை அடிப்படையாகக் கொண்டமைந்த இவ்வாய்வானது, இக்காலப்பகுதியில் விசேடதேவையுடைய மாணவர்களின் நலன்களைக் கருத்தில் கொள்ளும் வழிமுறைகள் இனங்காணப்பட்டு, அவர்களுக்குரிய கற்றல் - கற்பித்தல் முறைகள் கண்டறியப்பட்டு, இவ் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளுகின்ற சவால்களை இனங்கண்டு அவர்களுக்கான தீர்வாலோசனைகளை முன்வைப்பதாக அமைந்தது. யாழ்ப்பாணக்கல்வி வலயத்திற்குட்பட்ட விசேடஅலகுடைய பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நோக்கமாதிரியின் அடிப்படையில் விசேடஅலகுடைய 13 பாடசாலைகளிலிருந்து அதிபர்களும்(13), ஆசிரியர்களும்(26), விசேட தேவையுடைய மாணவர்களும்(76), பெற்றோர்களும்(76) தெரிவுசெய்யப்பட்டனர். ஆய்விற்காக தரவுசேகரித்தல் கருவிகளாக வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் மூலமாகப் பெறப்பட்ட அளவறிசார் தரவுகள் Excel மூலமாகவும் பண்பறிசார் தரவுகள் வியாக்கியானம் செய்யப்பட்டு பெறுபேறுகளும் முடிவுகளும் கண்டறியப்பட்டுள்ளன. இவ் ஆய்வின் மூலம் பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் Covid –19 காலப்பகுதியில் விசேடதேவையுடைய மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஒழுங்கபடுத்துவதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளுகின்ற சவால்களாக வளப்பற்றாக்குறை, வேறுபட்ட வகையுடைய விசேடதேவையுடைய மாணவர்களுக்கு ஒரே நேரத்தில் கற்பித்தலை ஒழுங்கமைக்க முடியாமை, பெற்றோர்களின் பங்களிப்பின்மை, விசேடதேவையுடைய மாணவர்களின் ஈடுபாடு குறைவடைந்து காணப்படுதல், விசேடதேவையுடைய மாணவர்களின் வரவு குறைவாக காணப்படுதல் என்பன கண்டறியப்பட்டன. இவ் ஆய்வுப்படி விசேடகல்வியை ஆசிரியர்கள் முழுமையாக விளங்கி அர்ப்பணிப்புடனும், செயற்திறனுடனும், கற்பித்தலுக்கான நுட்பங்களை வினைத்திறனாகக் கையாண்டு, விசேடதேவையுடைய மாணவர்களுக்கு கற்பித்தலை முன்னெடுக்கும் வகையில் விதப்புரைகள் முன்மொழியப்பட்டன.

திறவுச் சொற்கள்: Covid – 19 காலப்பகுதி, விசேடதேவை, கற்றல், செயற்பாடுகள், ஆசிரியர்கள், சவால்கள்

1.0 அறிமுகம்

1.1 ஆய்வு அறிமுகம்

குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் சுமைகளாக இருக்கக் கூடிய மனிதர்களை குடும்பத்தின், சமூகத்தின், நாட்டின் ஏன் உலகத்தின் வளங்களாய்க் கூட மாற்றுவது கல்வியேயன்றி வேறெதுவுமில்லை. இந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த கல்வியினை நமது மாணவச் செல்வங்கள் அனைவராலும் இலகுவாகப் பெற்றுவிடமுடிவதில்லை. பல்வேறு வகையான உடல், உள நிலைமைகள், குறைபாடுகள் காரணமாக கல்வி கற்பதிலே இடர்பாடுகளை, அல்லது சிரமங்களை எதிர்கொள்ளுகின்ற பல மாணவர்களும் நம்மிடையே இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்களும் பொதுவான கல்வி நீரோட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டியவர்களே என்னும் சீரிய சிந்தனையின் விளைவாக உதயமான துறையே விசேடகல்வித் துறையாகும். பரந்து விரிந்த பல விடயப்பரப்புகளை உள்ளடக்கிய ஒரு துறையாக அனைத்து நாடுகளிலும் இது வளர்ச்சியடைந்து வருகின்றது. ‘‘எல்லோருக்கும் கல்வி என்னும் இலக்கினை இலகுவாக எட்டிப்பிடிப்பதற்கு விசேட கல்வித்துறையின் பங்களிப்பு இன்றியமையாதது.

விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளை பொதுவான பாடசாலைகளில் பொதுவான வகுப்புகளில் உட்படுத்தலானது உலகெங்கிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ள மனித

உரிமைகளின் ஓர் அம்சமாக மாறியுள்ளது. இது குறைபாடுகளைக் கொண்டோரை வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்திலும் உட்படுத்தல் எனவும் கருதப்படுகின்றது. விசேட கல்வியில் உட்படுத்தல் கல்வி என்பது தற்போது ஒரு கல்வித் தத்துவமாக மாறியுள்ளது. இது சகல பிள்ளைகளினதும் கல்வித்தரத்தை மேம்படுத்தும் ஒன்றாக அமைந்துள்ளது.

அனைத்துத் துறைகளிலும் செல்வாக்குச் செலுத்தும் வகையில் விசேட தேவையுடைய மாணவர்களை வளர்த்தெடுக்கும் மாபெரும் பணி ஒவ்வொரு ஆசிரியருக்கும் உண்டு. இதனடிப்படையில் கல்வியானது சமத்துவ முறையில் அனைவருக்கும் கிடைக்க வேண்டியது அவசியமாகும். இதனைக் கருத்திற் கொண்டு வகுப்பறையில் சாதாரண மாணவர்களுடன் விசேடதேவையுடைய மாணவர்களையும் இணைத்துக் கற்றல் கற்பித்தல் இடம்பெறுகின்றது. அதனடிப்படையில் ஆசிரியர்கள் விசேடதேவையுடைய மாணவர்களை இனங்கண்டு கொள்வது அவசியமாகும். இனங்காண்பது மட்டுமன்றி இனங்காண்பதற்கு தேவையான பயிற்சி, அனுபவம், முன்கூட்டிய தீர்மானம், பொருத்தமான உபகரணங்கள், கற்பித்தல்ச் சூழல், பொருத்தமான இடம் என்பவற்றை சிறப்பானதாக மேற்கொள்ள வேண்டும்.

Covid -19 காலப்பகுதியில் விசேடதேவையுடைய மாணவர்கள் கற்றல் செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு பல்வேறுவகையான இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். இன்று பாடசாலைக் கல்வியில் கற்றலில் இடர்படும் விசேடதேவையுடைய மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்த வண்ணமே உள்ளனர்.

கல்வி அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த கல்விசார் அமைப்புகளால் வெளியிடப்படுகின்ற சகல சுற்றறிக்கைகளும் பாடசாலையில் நடைமுறைப்படுத்த வேண்டிய தேவைப்பாடும் உள்ளது. இதனால் ஆசிரியர் தனது வாண்மைத்திறனை விருத்தி செய்வது மட்டுமன்றி இன்றைய அறிவுப் பொருளாதாரத்தோடு இணைந்ததாக மாற்றத்தை நோக்கி செயற்பட வேண்டிய தேவையும் எழுந்துள்ளது. இதனால் சாதாரண மாணவர்களுடன் ஏனைய பின்தங்கிய நிலையில் உள்ள விசேடதேவையுடைய மாணவர்களையும் மையப்படுத்தியே தனது ஒவ்வொரு செயற்பாட்டினையும் முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளதால் ஆசிரியர் தொழில் சவால் மிக்கதாகவும், பாரிய பொறுப்பு வாய்ந்த தொழிலாகவும் காணப்படுகின்றது.

விசேடதேவை கொண்ட பிள்ளைகளது கற்றலில் பல காரணிகள் சவாலாக அமைகின்றன. இன்றைய காலகட்டத்தில் உலகையே அச்சுறுத்தி வருகின்ற Covid- 19 வைரஸ் நோயானது விசேடதேவையுடைய மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் பிள்ளைகளது உடல், உள காரணிகளுடன் குடும்பம், பாடசாலை சமூகமயமாக்கல் செயற்பாடுகள் போன்ற பல காரணிகள் சவால்மிக்கதாக அமைகின்றது. விசேடதேவையுடைய பிள்ளைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களது கற்பித்தல் செயற்பாடுகளை ஆசிரியர்கள் ஒழுங்கமைக்கின்ற பொழுது எதிர்கொள்ளுகின்ற சவால்கள் என்பவற்றையும் அறியும் பொருட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

அவ்வாறு மேற்கொள்வதன் மூலமே விசேடதேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கும் போது ஏற்படும் இடர்பாடுகளைக் களைந்து சிறப்பானதும், வினைத்திறனுள்ளதுமான கற்பித்தலினை மேற்கொள்ள முடிகிறது. அத்துடன் விசேட தேவையுடைய மாணவர்கள், தாங்களும்

தடைகளைத் தாண்டி முன்னேற்ற பாதையில் செல்வதற்கு கல்வியானது உறுதுணையளிக்கின்றது என்ற மனப்பான்மையுடன் வெற்றிநடை போடுவதற்கு வாய்ப்பளிக்கின்றது. ஆகவே இவ்வாய்வானது Covid – 19 காலப்பகுதியில் விசேடதேவையுடைய மாணவர்களில் கற்றல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதில் ஆசிரியர்கள் எதிர்கொள்கின்ற சவால்களை இனங்கண்டு அவற்றுக்கான ஆலோசனையாகவும் தீர்வாகவும் அமைகிறது.

1.2 ஆய்வுப் பிரச்சினை

Covid – 19 தொற்று நோயின் பரவலானது தனியாள், குடும்ப, சமூக மற்றும் தேசிய அளவில் மிகவும் எதிர்பாராததும் மோசமானதுமான விளைகளை ஏற்படுத்தியுள்ளது. சமூக பொருளாதார மற்றும் உளவியல் அம்சங்களை ஆட்டங்காணச் செய்துள்ளது. பலதரப்பட்ட பராயத்தினர் மத்தியில் சிறுவர்களே மிகவும் பாரதூரமான பாதிப்புக்களுக்கு உள்ளான தரப்பினராக உள்ளனர். இதிலும் விசேடதேவையுடைய மாணவர்கள் துரிதமாக நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகின்ற நிலையை ஆய்வுப்பிரதேசத்தில் அவதானிக்க கூடியதாக உள்ளது. கற்றலில் பின்னடைவு ஏற்படும் அதேவேளை எதிர்காலத்தில் பாடசாலை இடைவிலகல் அதிகரிப்பதற்கான ஏதுநிலையும் அதிகரித்துள்ளது. அந்த வகையில் நோயின் இயல்பு, அதன் பரவலையும் நோயையும் தவிர்ப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை விளங்கி பாடசாலைச் சூழலை தயார்செய்வதே முதல்ப் பணியாக இருக்க வேண்டும். (மத்திய வங்கி ஆண்டறிக்கை, 2021)

சாதாரண மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் நிகழ்நிலை மூலமாகவும், சமூக வலைத்தளங்கள் வாயிலாகவும் இடம்பெறுகின்றன. விசேடதேவையுடைய மாணவர்களால் சாதாரண மாணவர்களைப் போன்று நிகழ்நிலை மூலமாகவும், சமூக வலைத்தளங்கள் வாயிலாகவும் கற்றல் செயற்பாடுகளை ஒழுங்கமைக்க முடியாத நிலையினை யாழ் கல்வி வலய விசேட அலகுடைய பாடசாலைகளில் அவதானிக்க முடிந்தது. ஏனெனில் விசேடதேவையுடைய மாணவர்கள் எனப்படுபவர்கள் சாதாரண மாணவர்களை விட வேறுபட்ட தன்மைகளையுடைய பிள்ளைகள், வகுப்பறைக் கற்பித்தல் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தங்கள் துலங்கலை ஏற்படுத்த முடியாது அவதியுறுபவர்களே ஆவார் (தனபாலன்,2010).

Covid – 19 காலகட்டத்தில், உலகளாவிய ரீதியில் இடர்காலத்திற்குப் பொருத்தமான கல்விமுறையாக இணையவழிக் கற்றல் (Online Learning) மற்றும் தொலைக்கல்வி (Distance Education) என்பவற்றை ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞான கலாசார அமைப்பு (UNESCO) முன்மொழிந்திருந்தது. இது எமது நாட்டிலும் இணையவழி கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு மேலும் வழிவகுத்தது. அந்த வகையில் வாய்புறம் (Viber), புலனம் (Watsapp) குழுக்கள், ZOOM/ Google meet/ Microsoft Teams/ web ex/Discord செயலிகள் ஊடாகக் கற்பித்தல் முகநூல் (Facebook), இணையவழியூடாக வினாத்தாள் மென்பிரதிகள் மற்றும் சமூக ஊடகங்கள், அரச தொலைக்காட்சி, E- கல்விக்கூடம் (E-Thaksalawa, Learning management System) போன்ற இணையவழிக் கற்பித்தல் செயற்பாடுகள் என பல முன்னெடுக்கப்பட்டன.

இவ்வாறாக இணையவழிக் கற்பித்தலானது சாதாரண மாணவர்களுக்கு பொருத்தமானதாக காணப்படுகின்ற பொழுது, விசேட தேவையுடைய மாணவர்களுக்கு பொருத்தமற்றதாக அமைகின்றது. இதனால் இக் காலப்பகுதியில் விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதில் ஆசிரியர்கள் பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொள்கின்மையை ஆய்வுப்பிரதேசத்தில் அவதானிக்க முடிந்தது. Covid – 19 தொற்று நோயானது கண்டுபிடிக்கப்பட்ட காலத்திலிருந்து விசேட தேவையுடைய மாணவர்களை பாடசாலைக்கு வரவழைக்க முடியாத நிலைமைகளை ஆசிரியர்கள் எதிர்கொண்டனர். ஏனெனில் விசேட தேவையுடைய மாணவர்களை இந்நோய்த் தொற்றானது ஏற்படுகின்றமையைத் தவிர்ப்பதற்காக அவர்களை பாடசாலைக்கு வரவழைப்பது மட்டுப்படுத்தப்பட்டது. அத்துடன் நோய்தொற்று ஏற்படுமானால் அவர்களை அதிலிருந்து மீட்டெடுப்பது பாரிய சவாலானதாகும்.

விசேட தேவையுடைய மாணவர்கள் அனைவரும் வேறுபட்ட வயதினராகவும், வேறுபட்ட விசேட தேவைகள் உடையவர்களாகவும் காணப்படுகின்றனர். இதனால் இவர்களை ஒன்றாக இணைத்து இணையவழி மூலமாக கற்பித்தலை ஒழுங்கமைக்க முடியாத நிலைகள் உள்ளன. இதனால் ஆசிரியர்கள் விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்களை வழிகாட்டுவதன் மூலம் கற்பித்தலை ஒழுங்கமைக்கின்றமையை ஆய்வுப் பிரதேசத்தில் காணக்கூடியதாக உள்ளது. ஆயினும் இம்முறையிலும் ஆசிரியர்கள் சவால்களை எதிர்கொள்கின்றனர். விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்களை வழிகாட்டுவதற்கு அவர்களிடம் Smart phone, Labtop வசதிகள் இல்லாத நிலை காணப்படுகின்றது. அத்துடன் ஒரு குடும்பத்தில் சகோதரர்களும் கல்வி கற்கின்ற செயற்பாடுகளுக்கு Smart phone பயன்படுத்த வேண்டியுள்ளதால் விசேடதேவையுடைய பிள்ளைகளின் கல்வி செயற்பாடுகளை ஒழுங்கமைக்க முடியாதுள்ளது. ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள மாணவர்களில் 70 சதவீதமானோர் கிராமப்புறங்களில் இருந்தும், பொருளாதார நலிவுற்ற குடும்பங்களிலிருந்தும் கல்வி கற்கின்ற மாணவர்களாகவே உள்ளனர்.

அத்துடன் பெற்றோர்களை பாடசாலைக்கு அழைத்து செயலட்டைகள், வர்ண படங்கள் செயற்பாட்டு கைநூல்களை கையளிப்பதும் இந்நோய் நிலைமைக் காலப்பகுதியில் சாத்தியமற்றதாக உள்ளது. ஏனெனில் பெற்றோர்கள் வெளியில் செல்கின்ற நிலையில் நோய்க்கவிகளாக உருவாகின்ற நிலையும் தற்காலத்தில் காணப்படுகின்றது. அத்துடன் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகளை சமூக வலைத்தளங்கள் வாயிலாக வழங்குகின்ற பொழுது, அதனை சகோதரர்களும் பெற்றோர்களுமே பூர்த்தி செய்து ஆசிரியர்கயிடம் வழங்குகின்ற நிலையினையும் காணக்கூடியதாக உள்ளது.

ஆய்வுப் பிரதேசத்திலுள்ள விசேட தேவையுடைய மாணவர்கள் பாடசாலையில் ஆசிரியரின் தூண்டலுக்கு துலங்குகின்ற நிலை வீட்டில் மாறுபட்டதாக உள்ளது. அதாவது பெற்றோருடைய கற்பித்தல் பாணிகளை விரும்பாதவர்களாகவும், கோபமடைகின்ற நிலையினையும் ஆய்வுப்பிரதேசத்தில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

ஆய்வுப் பிரச்சினைக் கூற்று

விசேட தேவையுடைய மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். Covid - 19 காலப்பகுதியில் சாதாரண மாணவர்களுக்கே சவாலாக அமைகின்ற கற்றல் - கற்பித்தல் முறைகள் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு பொருத்தமானதாக அமையுமா என்பது கேள்விக்குறியாகவுள்ளது. விசேட தேவையுடைய மாணவர்கள் பல்வேறு வகைப்பட்டவர்களாக காணப்படுகின்ற பொழுது, அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப கற்றல் செயற்பாடுகளை ஒழுங்கமைக்க வேண்டிய தேவையுள்ளது. இவ்வாறு Covid - 19 காலப்பகுதியில் கற்றல் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கின்ற பொழுது ஆசிரியர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொள்ளுகின்றனர்.

1.3 ஆய்வின் நோக்கம் - பொது நோக்கம்

Covid – 19 காலப்பகுதியில் விசேடதேவையுடைய மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதில் ஆசிரியர்கள் எதிர்கொள்கின்ற சவால்களை இனங்கண்டு அவற்றுக்கான தீர்வுகளை முன்வைத்தல்.

1.3.1 சிறப்பு நோக்கங்கள்

1. Covid – 19 காலப்பகுதியில் விசேட தேவையுடைய மாணவர்களின் நலன்களை கருத்தில் கொள்ளும் வழிமுறைகளை கண்டறிதல்.

2. Covid – 19 காலப்பகுதியில் விசேட தேவையுடைய மாணவர்களுக்குரிய கற்றல் - கற்பித்தல் முறைகளை இனங்காணல்.

3.Covid – 19 காலப்பகுதியில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு கையாளக்கூடிய ஆசிரியர்களின் திறன்களை கண்டறிதல்.

4.Covid – 19 காலப்பகுதியில் விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதில் ஆசிரியர்கள் எதிர்கொள்கின்ற சவால்களைக் கண்டறிதல்.

2.0 இலக்கிய மீளாய்வு

பெருந்தொற்று தாக்கிய நாளிலிருந்து இலங்கை மாணவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் கல்வி வாய்ப்பை இழந்துள்ளனர். கல்வி மன்றம் நடாத்திய ஆராய்ச்சியின் படி, 45 சதவீத மாணவர்களுக்கு மட்டுமே இணையவழிக் கல்விகற்கும் வாய்ப்பு கிடைத்தது. மிகுதி 55 சதவீத மாணவர்களும் கைவிடப்பட்ட நிலை தான் ஏற்பட்டுள்ளது. நவம்பர் 2020 இல் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் படி, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களில் சராசரியாக 5 சதவீதத்தினருக்கு மட்டுமே ZOOM போன்ற மென்பொருளைப் பயன்படுத்தி நிகழ்நேர வகுப்பறை அனுபவத்தை வழங்க முடிந்தது. மேலும் 40 சதவீத மாணவர்களுடன் சமூக ஊடகங்கள் மூலம் மட்டுமே தொடர்பு கொள்ளப்பட்டது. எமது கற்றல் முறை ஏற்கனவே வெற்றிகரமான ஒன்றாக இல்லை. அதன் பொருத்தமற்ற தன்மையை இணையவழிக் கல்வி மேலும் வெளிப்படையாக்கியுள்ளது (தருசி வீரசிங்க, 2021).

Covid - 19 அனைத்துக் குழந்தைகளுக்கும் இடையூறு விளைவித்தாலும் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு இதன் விளைவுகள் வலுவாக இருக்கும். சிறப்புத் தேவைகள் உள்ள குழந்தைகளிடையே எதிர்மறை உணர்ச்சிகள் தோன்றுவதை முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. அவர்கள் அதிகமாக அழுகிறார்கள், வழக்கத்தைவிட பதட்டமாக உணர்கின்றார்கள், அதிக கோபமடைந்து சோகமாக உணர்கிறார்கள் (நயரா பெராசதேகி சஞ்சோ,2021).

கோவிட் நம் உலகையே தலைகீழாக மாற்றிவிட்டது. நம் குழந்தைகள் கல்வி கற்கும் விதத்தில் மிகப்பெரிய முன்னோடியில்லாத மாற்றத்தைக் கண்டிருக்கின்றனர். அவர்களின் வாழ்நாளில் பொது சுகாதாரம் பாதுகாப்பிற்காகவோ அல்லது எந்த காரணத்திற்காகவோ அரசாங்கத்ததால் பள்ளிகள் மூடப்படும் நிலையை அனுபவித்ததில்லை. அனைத்து பள்ளி வயதுக் குழந்தைகளும் மோசமாக பாதிக்கப்படுகின்றனர். அதிலும் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு கூடுதல் கவனம் தேவையாகவுள்ளது (Hickman & lowder, 2021).

3.0 ஆய்வு முறையியல்

ஆய்வை மேற்கொள்வதற்கு பலவகையான ஆய்வு முறைகள் காணப்பட்டாலும் ஆய்வாளரது ஆய்வுச் செயற்பாடுகளுக்குப் பொருத்தமாக அளவைநிலை ஆய்வு முறை தெரிவுசெய்யப்பட்டுள்ளது. கல்விசார் பிரச்சினைகள் தொடர்பாக ஆய்வுகளில் அளவைநிலை ஆய்வுகள் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றது. இந்த ஆய்வு தொடர்பாக ஆய்வாளர் அளவைநிலை ஆய்வுமுறையினை தெரிவு செய்தலில் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இலகுவாக மேற்கொள்ளக் கூடியதும் பரந்த பிரதேசங்களை உள்ளடக்கிய வகையில் ஆய்வுப் பிரதேசமும் குடித்தொகையும் உள்ளதால் இம்முறை சிறந்ததாகும்.

ஆய்விற்குத் தேவையான தரவுகளைச் சேகரிக்கும் பொருட்டு பயன்படுத்தப்படும் ஆய்வுக்கருவிகளில் இங்கு முதலாவதாக பயன்படுத்தப்படுவது வினாக்கொத்து முறையாகும். Covid -19 காலப்பகுதியில் விசேடதேவையுடைய மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதில் ஆசிரியர்கள் எதிர்கொள்கின்ற சவால்கள் என்ற ஆய்வுத்தலைப்பினைச் சரியான முறையில் ஆய்வு செய்வதற்குத் தேவையான தரவுகள் வினாக்கொத்து முறை மூலம் ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்டது.

ஆய்விற்குத் தேவையான தரவுகளை சேகரிக்கும் பொருட்டு பயன்படுத்தப்படும் ஆய்வுக்கருவிகளில் அடுத்ததாக பயன்படுத்தப்படுவது நேர்காணல் முறையாகும். இங்கு நேர்காணல் முறையானது தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளுக்கு ஏற்ப அதிபர்களுக்கான நேர்காணல் இடம்பெறுகின்றது. அத்துடன் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களிடம் நேர்காணல் மேற்கொண்டு ஆய்வுக்குத் தேவையான தரவுகள் பெறப்பட்டன. ஆய்விற்குத் தேவையான தரவுகளைச் சேகரிக்கும் பொருட்டு பயன்படுத்தப்படும் ஆய்வுக்கருவிகளில் அடுத்ததாக நேரடி அவதானிப்பு முறை பயன்படுத்தப்படுகின்றது. இங்கு நேரடி அவதானிப்பு முறையானது தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளுக்கு ஏற்ப மாணவர்களை அவதானம் செய்வதன் மூலம் நேரடி தகவல்கள் பெற முடியும் என்ற நோக்கில் அவதானம் இடம்பெறுகின்றது.

3.1 மாதிரித்தெரிவு

குறிப்பிட்ட ஒரு நோக்கத்தின் அடிப்படையில் அல்லது தேவையின் அடிப்படையில் குடித்தொகையில் இருந்து மாதிரியை தெரிவு செய்யும் முறையாகும். பெரிய எண்ணிக்கையிலான சனத்தொகைகளை உள்ளடக்கிய ஆய்வுகளை மேற்கொள்வது சிரமமாக இருக்கும் சந்தர்ப்பங்களை மாதிரி எடுப்பு முறை பயன்படுத்தப்படுகின்றது. மாதிரி எடுப்பு முறையானது பொருத்தமான வகையிலும் திருத்தமான வகையிலும் அமையும் பொழுது தான் ஆய்வு ஆனது திருத்தமானது ஆகவும் உண்மைத் தன்மை கொண்டதாகவும் அமையும். முழு தொகுதிகளினதும் பண்புகளை மாதிரி எடுப்பானது பிரதிநிதித்துவம் செய்யத்தக்கதான உபாயங்களை ஆய்வாளர் மேற்கொள்ள வேண்டும். ஆய்வாளர் முற்தீர்ப்பு மேற்கொள்ளாது ஆய்வின் நோக்கத்தை முன்னிறுத்தி நடந்துகொள்ளல் மாதிரி எடுப்பை வளப்படுத்தும்.

யாழ் கல்வி வலயத்தில் மொத்தமாக 116 பாடசாலைகள் உள்ளன. அவற்றுள் 1AB பாடசாலைகள் 17 உம், 1C பாடசாலைகள் 13 உம் உள்ளன. இவற்றுள் 13 பாடசாலைகள் விசேட அலகுடைய பாடசாலைகளாக உள்ளடங்கியுள்ளன. இந்த வகையில் ஆய்வாளனால் தெரிவு செய்யப்பட்ட ஆய்வுப் பிரதேசத்தில் விசேட அலகுடைய பாடசாலைகளாக இரண்டு தேசிய பாடசாலையும், இரண்டு 1AB பாடசாலையும் ஏழு 1C பாடசாலையும் இரண்டு Type- ll பாடசாலையும் உள்ளடங்கியுள்ளன. இதில் ஆய்வாளனால் 13 விசேட அலகுடைய பாடசாலைகள் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் 13 அதிபர்களும், 26 ஆசிரியர்களும், 76 மாணவர்களும், 76 பெற்றோர்களும் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டனர்.

4.0 தரவுப்பகுப்பாய்வுகள்

4.1 Covid – 19 காலப்பகுதியில் விசேட தேவையுடைய மாணவர்களை நோய்த்தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கான வழிமுறைகளை அறிதல்.

Covid – 19 தொற்று நோயின் பாரவலானது தனியாள், குடும்ப, சூழல், மற்றும் தேசிய அளவில் மிகவும் எதிர்பாராததும், மோசமானதுமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. விசேட கல்வித் தேவையுடனான மாணவர்களில் பெரும்பாலானோர் உடல்நலக் குறைபாடுகளினால் பாதிக்கப்பட்டுள்ளமையினால் அம் மாணவர்களிடம் நோய் எதிர்ப்பு சக்தியானது மிகக் குறைவான மட்டத்தில் காணப்படும்.

இந்த Covid – 19 தொற்று தொடர்ந்திருக்கும் காலத்தில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அல்லது மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அல்லது மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அல்லது சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்கள் வழங்குகின்ற அறிவுறுத்தல்களுக்கேற்ப தாமதிக்காது செயற்பட வேண்டும் என பாடசாலைகளுக்கு 15/2020 இலக்க சுற்று நிருபம் மூலம் அறிவிக்கப்பட்டது.

அந்த வகையில் Covid – 19 காலப்பகுதியில் விசேட தேவையுடைய மாணவர்கள் நோய்த் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கான வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா? என ஆசிரியர்களிடம்

வினாக்கொத்தின் மூலமாக வினாவிய பொழுது பெறப்பட்ட தரவுகள் உரு 4.1 இல் தரப்பட்டுள்ளது.



உரு 4.1 Covid – 19 நோயிலிருந்து பாதுகாப்பான வழிமுறைகளைப் பின்பற்றல்

இவ் உருவினைத் துணையாகக் கொண்டு பார்க்கும் போது Covid- 19 காலப்பகுதியில் விசேட தேவையுடைய மாணவர்களை நோய்த்தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கான வழிமுறைகள் பின்பற்றப்பட்டனவா? என வினாவிய வேளையில் ஆம் என 69 சதவீதமானோரும் ஓரளவு என 31 சதவீதமானோரும் விடையளித்துள்ளனர். இல்லை என எந்தவொரு ஆசிரியரும் பதிலளிக்கவில்லை. இதிலிருந்து Covid – 19 காலப்பகுதியில் விசேட தேவையுடைய மாணவர்களை நோய்த் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கான வழிமுறைகளை ஆசிரியர்கள் எல்லோராலும் பின்பற்றப்படுகின்றமையை அவதானிக்கலாம்.

Covid - 19 தொற்றுநோய்ப் பரவலானது 2020 மார்ச் நடுப்பகுதியளவில் உலகம் முழுவதும் துரிதமாகப் பரவி "உலகதொற்றுநோய்" ஆக அதனைப் பிரகடனப்படுத்துவதற்கு உலக சுகாதார அமைப்பினை நிர்ப்பந்தித்திருந்தது. உலகளாவிய தொற்றுநோயானது இன்றுவரை அனைத்து நாடுகளிலும் மனிதாபிமான மற்றும் பொருளாதாரம், இரண்டின் பாதிப்புகள் முன்னர் எதிர்பார்க்கப்படாத சுவடொன்றினை விட்டுச்சென்றுள்ளது (மத்திய வங்கி ஆண்டறிக்கை, 2020). அதனால் நோய்த்தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கான வழிமுறைகளைப் பின்பற்றவேண்டியுள்ளது.

4.1.1 Covid – 19 காலப்பகுதியில் நோய்த் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கு விசேட தேவையுடைய மாணவர்கள் வழிமுறைகளைப் பின்பற்றுதல்.

Covid – 19 காலப்பகுதியில் விசேட தேவையுடைய மாணவர்கள் நோய்த் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கான வழிமுறைகள் பின்பற்றுகின்றனரா? என மாணவர்களை அவதானத்தின் அடிப்படையில் பெறப்பட்ட தரவுகள் உரு 4.2 இல் தரப்பட்டுள்ளது.



உரு 4.2 Covid -19 நோயிலிருந்து பாதுகாப்பதற்கான வழிமுறைகளை மாணவர்கள் பின்பற்றுதல்.

இவ் உருவினைத் துணையாகக் கொண்டு பார்க்கும் போது, Covid – 19 தொற்று நோயிலிருந்து பாதுகாப்பதற்கான வழிமுறைகளை மாணவர்கள் பின்பற்றுகின்றனரா? என அவதானித்த போது மிக நன்றாக 3 சதவீதமான விசேட தேவையுடைய மாணவர்களே வழிமுறைகளைப் பின்பற்றுகின்றனர். நன்றாக பின்பற்றுபவர்கள் 10 சதவீதமான விசேட தேவையுடைய மாணவர்களும், ஓரளவு பின்பற்றுகின்றவர்களாக 20 சதவீதமானோரும், குறைவான வழிமுறைகளைப் பின்பற்றுகின்ற விசேட தேவையுடைய மாணவர்கள் 26 சாவீதமானோரும், மிகக் குறைவான வழிமுறைகளைப் பின்பற்றுகின்ற விசேட தேவையுடைய மாணவர்கள் 41 சதவீதமானோராகவும் காணப்படுகின்றது.

இதிலிருந்து Covid – 19 காலப்பகுதியில் மிகக் குறைந்தளவு வழிமுறைகளைப் பின்பற்றுகின்ற மாணவர்களே அதிகமாக உள்ளனர். அதற்கு அடுத்த படியாக குறைந்தளவு வழிமுறைகளைப் பின்பற்றுகின்ற விசேடதேவையுடைய மாணவர்கள் உள்ளனர். மிக நன்றாக பின்பற்றுகின்ற மாணவர்கள் மிகக் குறைந்தளவு சதவீதத்திலேயே உள்ளனர். ஆசிரியர்கள் வழிமுறைகளைப் பின்பற்றுகின்ற போதிலும் மாணவர்கள் அதனைப் பின்பற்றாமையை இங்கு காணமுடிகின்றது. அத்துடன் ஆசிரியர்கள் நோய்த் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கான வழிகாட்டல்களை வழங்குகின்ற பொழுது ஏற்றுக்கொள்ளாத நிலையினையும் அவதானிக்க முடிந்தது. விசேட தேவையுடைய மாணவர்கள் நோயின் தன்மையினைப் பற்றி அறியாதவர்களாகவும், வழிமுறைகளைப் பின்பற்றுவதற்கு விரும்பாதவர்களாகவும் உள்ளனர்.

4.2 Covid – 19 காலப்பகுதியில் சாதாரண மாணவர்களுக்கான கற்றல் - கற்பித்தல் முறைகள் விசேடதேவையுடைய மாணவர்களுக்கு பொருந்துகின்ற தன்மை

Covid – 19 காலப்பகுதியில் சாதாரண மாணவர்களுக்கான கற்றல் - கற்பித்தல் முறைகள் விசேடதேவையுடைய மாணவர்களக்கு பொருத்தமாக அமைகின்றதா என வினாக்கொத்தில் ஆசிரியரிடம் வினாவிய பொழுது பெறப்பட்ட தரவுகளை உரு 4.3 இல் காணலாம்.



உரு 4.3 சாதாரண மாணவர்களுக்கான கற்றல்- கற்பித்தல் முறைகள் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு பொருந்துகின்ற தன்மை

இவ்வுருவினை துணையாகக் கொண்டு நோக்குகின்ற பொழுது முழுமையாக சாதாரண மாணவர்களுக்கான கற்றல் - கற்பித்தல் பொருந்தாமையை அவதானிக்கலாம். Covid – 19 காலப்பகுதியில் சாதாரண மாணவர்களுக்கான கற்றல் - கற்பித்தல் முறைகள் பொருத்தமாக அமையவில்லையென 58 சதவீதமானோரும், ஓரளவு பொருத்தமாக அமைகின்றது என 42 சதவீதமானோரும் விடையளித்திருந்தனர். Covid – 19 காலகட்டத்தில் உலகளாவிய ரீதியில் இடர்காலத்திற்கு பொருத்தமான கல்வி முறையாக இணையவழிக் கற்றல் மற்றும் தொலைக்கல்வி என்பவற்றை ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞான கலாசார அமைப்பு முன்மொழிந்திருந்தது. இதில் இணையவழிக் கற்றலானது சாதாரண மாணவர்களுக்கு முழுமையாக பொருந்துகின்ற அதேவேளை விசேட தேவையுடைய மாணவர்களுக்கு குறைவாக காணப்படுகின்றது.

விசேடதேவையுடைய மாணவர்கள் அற்பப்பார்வை, ஒட்டிஸம், டவுண்சின்றம், மனவளர்ச்சிக் குறைபாடு, கேட்டல் இயலாமை, கற்றல் இயலாமை, உடலியற் குறைபாடு போன்ற பல்வேறு வகைப்பட்டவர்களாக காணப்படுகின்றமையினால், அவர்களின் விசேடதேவைகளுக்கு ஏற்ப கற்றல் - கற்பித்தல் முறைகளை இனங்காண வேண்டியுள்ளது. அந்த வகையில் ஓரளவு என குறிப்பிட்ட ஆசிரியர்கள் பொருத்தமாக அமைகின்ற கற்றல் - கற்பித்தல் முறைகளாக சமூக வலைத்தளங்கள் வாயிலாக செயலட்டைகளை வழங்குதல், கற்பித்தல் காணொலிகளை அனுப்புதல், பயிற்சிகளை அனுப்புதல் போன்ற முறைகளை பின்பற்றுகின்றமையினைக் குறிப்பிட்டுள்ளனர். இல்லையென குறிப்பிட்டிருந்த ஆசிரியர்களிடம் வினாக்கொத்தில் காரணத்தை வினாவிய பொழுது அற்ப பார்வையுடைய மாணவர்களுக்கு சாதாரண மாணவர்களுக்கான கற்றல் - கற்பித்தல் முறைகள் பொருத்தமற்றது என குறிப்பிட்டிருந்தனர்.

இலங்கையில் Covid – 19 தொற்றுகளின் பரவலினால் இக்காலப்பகுதியில் அனைத்துத் துறைகளும் முடங்கிக் கிடக்கின்றன. இவ்வேளையிலே கல்வித்துறையினை சீரமைக்க வேண்டி இலங்கை அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட ஒரு மாற்றீடாக நிகழ்நிலைக் கல்விமுறை

காணப்படுகின்றது (Faslul farisa Asadh,2021). இம்முறையானது விசேடதேவையுடைய மாணவர்களுக்கு பொருத்தமில்லாதுள்ளது.

4.3 தொழிநுட்ப சாதனங்கள் ஊடான கற்பித்தலை ஒழுங்கமைத்தல் தொடர்பாக ஆசிரியர்களால் வழங்கப்பட்ட பதில்கள்

தொழிநுட்ப சாதனங்கள் ஊடான கற்பித்தலை ஒழுங்கமைப்பதற்கு உடன்படுகின்றீர்களா? என ஆசிரியரிடம் வினாக்கொத்தில் வினாவிய பொழுது பெறப்பட்ட தரவுகளை உரு 4.4 இல் காட்டப்படுகின்றது.



உரு 4.4 தொழிநுட்பசாதனங்களுடனான கற்பித்தலில் ஆசிரியர்களின் உடன்பாடு

இவ் உருவினைத் துணையாகக்கொண்டு நோக்குகின்ற பொழுது முழுமையாக என எந்தவொரு ஆசிரியரும் பதிலளிக்கவில்லை. நடுத்தரமாக என 38 சதவீதமான ஆசிரியர்களும், ஓரளவாக என 62 சதவீதமான ஆசிரியர்களும் பதிலளித்திருந்தனர். அந்தவகையில் பாடசாலைகளில் பெரும்பாலான கற்பித்தலை விசேடகற்றல் தேவைகள் உள்ள மாணவர்களின் தேவைக்கு ஏற்ப மாற்றியமைக்க முடியும். மாணவர்களின் கிரகிப்பு, கற்பித்தல் செயன்முறைகள் மற்றும் அவர்களின் வேலைகளின் தரம் ஆகியவற்றை இதன் மூலம் மேம்படுத்த உத்திகளைப் பயன்படுத்த முடியும் என புத்தாக்கம்சார் கற்பித்தல், கல்வி அமைச்சினால் 2009 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிக்கைகயில் கூறப்பட்டது. ஆகவே காலத்தின் தேவைக்கு ஏற்ப கற்பித்தல் முறைகளிலும் மாற்றங்களை உட்புகுத்த முடிகின்றது.

4.4 வேறுபட்ட வகையுடைய விசேடதேவையினருக்கு ஒரே நேரத்தில் கற்பித்தலை ஒழுங்கமைப்பதன் சாத்தியமற்ற தன்மை பற்றி ஆசிரியர் கூறிய பதில்கள்.

விசேடதேவையுடைய மாணவர்கள் வேறுபட்ட வகையினராகவும் வேறுபட்ட கற்றல்த் தேவையுடையவர்களாகவும் காணப்படுகின்றனர். இதனால் ஒரே நேரத்தில் எல்லா மாணவர்களுக்கும் கற்பித்தலை ஒழுங்கமைப்பது சாத்தியமற்றதாக உள்ளது. இக்கருத்தை எந்தளவு ஏற்றுக்கொள்கின்றீர்கள் என ஆசிரியர்களிடம் வினாவிய பொழுது பெறப்பட்ட தரவுகளை உரு 4.5 இல் தரப்பட்டுள்ளது.



உரு 4.5 வேறுபட்ட வகையுடைய விசேடதேவையினருக்கு ஒரே நேரத்தில் கற்பித்தலை ஒழுங்கமைப்பதன் சாத்தியமற்ற தன்மை

இவ்வுருவினைத் துணையாகக்கொண்டு நோக்கினால் இக்கருத்தினை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லையெனவும், ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் எந்தவொரு ஆசிரியரும் பதிலளிக்கவில்லை. ஓரளவு ஏற்றுக்கொள்கிறேன் என 31 சதவீதமான ஆசிரியர்களும், ஏற்றுக்கொள்கிறேன் என 19 சதவீதமான ஆசிரியர்களும், பூரணமாக ஏற்றுக்கொள்கிறேன் என 50 சதவீதமான ஆசிரியரகளும் பதிலளித்திருந்தனர். அந்த வகையில் விசேட தேவையுடைய மாணவர்கள் ஒவ்வொரு வகுப்பிலும் வேறுபட்ட வகையுடையவர்களாக உள்ளனர். இவர்களின் வகைப்பாட்டிற்கு ஏற்ப கற்றலை ஒழுங்கமைக்க வேண்டிய தேவை ஆசிரியர்களுக்கு உள்ளது.

5.0 முடிவுகளும், விதந்துரைகளும்

5.1 covid - 19 காலப்பகுதியில் விசேட தேவையடைய மாணவர்களின் நலன்களைக் கருத்தில் கொள்ளும் வழிமுறைகளைக் கண்டறிதல்

முடிவுகள்

1. Covid – 19 காலப்பகுதியில் விசேடதேவையுடைய மாணவர்களினை நோய்த் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கான வழிமுறைகள், சாதாரண மாணவர்களுக்குப் பின்பற்றப்படுகின்ற பொதுவான வழிமுறைகளாகவே காணப்படுகின்றது.
2. Covid - 19 தொற்றுநோயின் தன்மைகளை அறியாதவர்களாக விசேட தேவையுடைய மாணவர்கள் நோய்த் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கான வழிமுறைகளை பின்பற்ற மறுக்கின்றனர்.

விதப்புரைகள்

1. சுகாதார அதிகாரிகளினால் ஆசிரியர்களுக்கு வழிகாட்டல்கள், கருத்தரங்குகள், செயற்றிட்டங்கள் வழங்குவதன் மூலம் விசேடதேவையுடைய மாணவர்களினை நோய்த்தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கு வழிமுறைகளை மேலும் வலுப்படுத்த முடியும்.

2. Covid - 19 நோய் பற்றிய காணொலிகள் மூலமாகவும், நாடகங்கள் காட்சிப்படுத்தி விசேடதேவையுடைய மாணவர்களை நோய்த்தாக்கம் பற்றி விழிப்புணர்வடையச் செய்தல்

5.2 Covid - 19 காலப்பகுதியில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கற்றல் - கற்பித்தல் முறைகளை இனங்காணல்.

முடிவுகள்

1. சாதாரண மாணவர்களுக்கான கற்றல் - கற்பித்தல் முறைகள் பொருந்தாது என 58 சதவீதமான ஆசிரியர்களும், ஓரளவு பொருந்துகின்றது என 42 சதவீதமான ஆசிரயர்களும் கூறுகின்றனர்.
2. இணையவழிக் கற்பித்தல் சாத்தியமற்ற விசேட தேவையுடைய மாணவர்களுக்கு, பெற்றோர்களை வழிகாட்டுவதன் மூலம், சகோதரர்களை வழிகாட்டுதல் மூலமும், விசேட கற்றல் உபகரணங்களை வீடுகளுக்கு வழங்கியும், செயலட்டைகள் பயிற்சிப் புத்தகங்களை வழங்கியும் கற்றல் - கற்பித்தலினை ஆசிரியர்கள் ஒழுங்கமைக்கின்றனர்.

விதப்புரைகள்

1. சாதாரண மாணவர்களுக்கான கற்றல் - கற்பித்தல் முறைகளை விசேட தேவையுடைய மாணவர்களுக்கு வினைத்திறனாக எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்பதனைக் கண்டறிந்து ஆசிரியர்களுக்கு வாண்மைத்துவ பயிற்சிகளை வழங்குதல்.
2. காலமாற்றத்திற்கேற்ப பொருத்தமாக கற்பித்தல் நுட்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் ஒவ்வொரு பாடசாலை ஆசிரியர்களது செயற்பாட்டினைத் தூண்ட வேண்டும்.

5.3 - Covid - 19 காலப்பகுதியில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு ஆசிரியர்காளால் கையாளக்கூடிய திறன்களைக் கண்டறிதல்

முடிவுகள்

1. விசேட தேவை கொண்ட மாணவர்களுக்கு விளைதிறன் மிக்க கல்வியினை வழங்குவதன் மூலம் அந்த மாணவர்களை விருத்தி செய்ய முடியும். அதற்காக ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன.
2. Covid - 19 காலப்பகுதியில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு, விளையாட்டுடனான கற்பித்தல், வீட்டிலுள்ள பொருட்களைக் கொண்டு ஆக்கங்களைத் தயாரிக்கச் செய்தல், காணொலி மூலம் கற்பித்தல், படங்களுக்கூடாக பயிற்சிகளை வழங்குதல், பெற்றோர்களுக்கு வழிகாட்டிக் கற்பித்தல், உதாரணங்களைக் காட்டி செயலட்டைகளை வழங்க சுயமாகக் கற்கச் செய்தல் போன்ற நுட்பங்களைக் கையாளுகின்றனர்.

விதப்புரைகள்

1. ஆசிரியர்கள், விசேட தேவையுடைய மாணவர்கள் தொடர்பான செயற்பாடுகளில் கலந்துகொண்டு நாளுக்கு நாள் ஏற்படும் விசேடதேவையுடைய மாணவர்கள் தொடர்பான

மாற்றங்கள், புதிய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் இற்றைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

2. விசேட தேவையுடைய மாணவர்களின் வகைப்பாட்டிற்கு ஏற்ப கற்பித்தலில் புதிய புதிய நுட்பங்களைக் கையாள்வதுடன் நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப, விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வியிலும் புதிய மாற்றங்களை உள்வாங்குதல்.

5.4 Covid 19 காலப்பகுதியில் விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதில் ஆசிரியர்கள் எதிர்கொள்கின்ற சவால்களைக் கண்டறிதல்.

முடிவுகள்

1. Covid - 19 காலப்பகுதியில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு வளங்கள் போதுமானதாக இல்லையென 81 சதவீதமான ஆசிரியர்கள் கூறுகின்றனர்.
2. Covid - 19 காலப்பகுதியில் வீட்டிலிருந்தவாறே மாணவர்களுக்கு கற்றல் - கற்பித்தலை ஒழுங்கமைப்பதற்கு பெற்றோர்களின் பங்களிப்பானது ஓரளவாகவே கிடைக்கப் பெறுகின்றது.

விதப்புரைகள்

1. அதிபர்கள், விசேட அலகு வகுப்பறைகளுக்கு தேவையான வளங்களை சமூக ஆர்வலர்கள், தொண்டு நிறுவனங்கள் ஊடாக பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்தல்.
2. விசேட தேவையுடைய கல்வியைப் பெற வேண்டிய பிள்ளைகளின் பெற்றோருக்கு விசேட தேவையுடைய பிள்ளைகளின் இயலுமைகள் பற்றியும், அவர்களுக்கான கற்றல் வாய்ப்புக்கள் பற்றியும் விழிப்புணர்வுகள் வழங்கப்பட வேண்டும்.
3. விசேட தேவையுடைய பிள்ளைகளது ஆற்றல்கள், திறமைகளைப் பாராட்டுவதோடு அவர்களின் ஆற்றல்களை முன்னேற்றுவதற்கு தேவையான உதவிகளையும், ஊக்கங்களையும் வழங்குதல்.

உசாத்துணை

1. அருள்மொழி.செ, 2008, **பிள்ளை வளர்ச்சியும் கற்றலும்**, எவக்கிறீன் பிறிண்டேர்ஸ்.
2. மத்திய வங்கி ஆண்டறிக்கை, **சிறப்புக் குறிப்பு**, Covid-19 உம் இலங்கையும்.
3. ஜெயராசா.சபா, 2012, **கற்றல் இடர்பாடுகளும் தீர்வுகளும்**, சேமமடு பதிப்பகம்.
4. செல்வநாயகம்.இ, இரசீந்திரன்.ஆ, 2007, **சீரிய சிந்தனை**, திருவள்ளுவர் பிரஸ்.
5. சிவகுமார்.த, 2010, **விசேட கல்வி அறிமுகப் பிரயோகங்களும்**, கக்ஸ்ரொன் பிறிண்டேர்ஸ், மட்டக்களப்பு.
6. தருசி, விரசிங்க, 2021, **கல்வியில் பெருந்தொற்றின் தாக்கம்**, நிமிர்வு.
7. கிரிஜா.க, 2020, **கற்றலில் இயலா நிலையும் அதன் பிரயோகங்களும்**, வலு ஜனவரி-மார்ச் காலாண்டு இதழ்.
8. Mohamed Hilmy Suhaila, 2020, Covid – 19, **தொற்றுக்கால மாணவர்களின் கல்வி**, ஆய்வுக்குரல்.
9. Famees.M.F, Fathima Sajla.J.S, 2020, **கோவிட் 19 இனால் கற்றல் செயற்பாடுகளில் மாணவர்கள் எதிர்கொண்ட சவால்கள்**, ஆய்வுக்குரல்.
10. Faslul Farisa Asadh, 2020, **கொரோனா பரவலும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளும்**, ஆய்வுக்குரல்.
11. நயாரா பெராசதேகி சஞ்சோ, கோவிட் - 19 பூட்டுதலின் போது சிறப்புத் தேவைகள் உள்ளகுழந்தைகளின்நல்வாழ்வு: https://www.tandfonline.com/doi/full/10.1080/08856257.2021.1949093

க.பொ.த (சா/த) பரீட்சையில் மாணவர்களின் ஆங்கிலப் பாட அடைவில் வீட்டுச்சூழலின் பங்களிப்பு

டி.விதுக்ஷனா
கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
vithukshana08@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இலங்கையைப் பொறுத்த வரையில் க.பொ.த (சா/தா) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் சிறந்த அடைவினைப் பெறுவது என்பது மாணவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு அவசியமான ஒரு தேவையாக உள்ளது. இருப்பினும் மண்முனை மேற்குக் கல்விக் கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் மாணவர்களின் இவ்வாங்கிலப் பாட அடைவானது மிகவும் தாழ் நிலையில் உள்ளது. இதனை எடுத்தியம்புவதாக "க.பொ.த (சா/தா) பரீட்சையில் மாணவர்களின் ஆங்கிலப் பாட அடைவில் வீட்டுச்சூழலின் பங்களிப்பு" எனும் தலைப்பிலான இவ்வளவை நிலை ஆய்வானது தரம் 12, 13 மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மண்முனை மேற்குக் கல்விக் கோட்டத்திலுள்ள 2 1AB பாடசாலைகளினதும், 4 1C பாடசாலைகளினதும் அதிபர்கள் 6 பேரும், ஆங்கிலப் பாட ஆசிரியர்கள் 14 பேரும், ஆங்கிலப் பாடத்திற்கான சேவைக்கால ஆலோசகர் ஒருவரும் நோக்க மாதிரியின் மூலமும், தரம் 12, 13 மாணவர்கள் 172 பேரும் படையாக்கப்பட்டு இலகு எழுமாற்று மாதிரி மூலமும், அம்மாணவர்களின் பெற்றோர்கள் 34 பேரும் இலகு எழுமாற்று மாதிரி மூலமும் தெரிவுசெய்யப்பட்டு ஆசிரியர்கள், மாணவர்களிடமிருந்து வினாக்கொத்து மூலமும், அதிபர்கள், பெற்றோர்கள், ஆங்கிலப்பாடத்திற்கான சேவைக்கால ஆலோசகர் போன்றோரை நேர்காணல் மூலமும், மாணவர்களின் வீட்டுச் சூழலை அவதானத்தின் மூலமும், அடைவு தொடர்பாக ஆவணம் மூலமாகவும் அளவு மற்றும் பண்பு ரீதியானதாகத் தரவுகள் பெறப்பட்டுள்ளன. இவை எண் சதவீத அளவீட்டு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகள் யாவும் மாணவர்கள் ஆங்கிலப் பாடத்தில் காட்டும் ஈடுபாடும், 5 வருட அடைவின் போக்கும், ஆங்கிலப் பாடத்தில் மாணவர்கள் அடைவைப் பெறுவதற்கான வீட்டுச்சூழலின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை இனங்காணல், ஆங்கிலப்பாடம் தொடர்பான பெற்றோர்களின் மனநிலையை ஆராய்தல், ஆங்கிலப் பாடத்தில் வீட்டுச்சூழலின் பங்களிப்பினையும், அவற்றுக்கான தீர்வாலோசனைகளையும் கண்டறிதல் போன்ற ஆய்வு நோக்கத்தின் அடிப்படையில் பண்பு, அளவு ரீதியாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இவற்றின் முடிவுகளுள் 91.55% ஆன மாணவர்கள் ஆங்கிலப் பாடத்தின் மீது மிகக் குறைவான ஈடுபாட்டைக் கொண்டு காணப்படுதோடு அதற்கு அவர்களின் வீட்டுச்சூழலே காரணமெனவும் குறிப்பிட்டுள்ளனர், மாணவர்களின் வீட்டுச்சூழலான பெற்றோரின் கல்வி மட்டம், தொழில், வருமானம், ஒழுக்கச் செயற்பாடுகள், ஊக்கல், மனநிலை போன்றன மாணவர்களின் ஆங்கிலப் பாட அடைவில் தாக்கம் செலுத்தக்கூடியன, ஆங்கிலப்பாடம் மாணவர்களின் எதிர்காலத் தொழிலுக்கு அவசியமில்லை எனும் மனப்பாங்கோடு மாணவர்களின் பெற்றோர்கள் காணப்படுகின்றனர் போன்ற முடிவுகளும், பெற்றோர்கள் மற்றைய பாடங்களைப்போல் எதிர்கால வாழ்க்கைக்கு மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடமும் அவசியம் என்பதை உணர்ந்து கொள்வதோடு தங்கள் பிள்ளைகளுக்கும் அவை பற்றி விழிப்புணர்வூட்டி தகுந்த வீட்டுச்சூழலை அமைத்துக்கொடுக்க வேண்டுமென்ற விதப்புரைகளும் இவ்வாய்வில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

திறவுச் சொற்கள்: க.பொ.த (சா/தா) பரீட்சை, மாணவர்களின் அடைவு, வீட்டுச்சூழல், பங்களிப்பு

1.0 அறிமுகம்

1.1 ஆய்வு அறிமுகம்

இன்று உலகில் உள்ள பல்வேறு பாகங்களிலும், பல்வேறு துறைகளிலும் பல பரிமாணங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாய்வுகள் ஏதேனும் ஒரு பிரச்சினையை தீர்க்கும் விதமாக உள்ளது. தற்போதுள்ள நவீன வேலை உலகத்திற்குள் நுழைவதற்கான அடிப்படைத் தகுதியாக ஆங்கிலப் புலமை காணப்படுகின்றது. க.பொ.த (சா/தா) பரீட்சையில் ஆங்கிலப் பாடச் சித்தி பெறுவதும் என்பது பல அரசாங்க வேலைகளுக்கும், தனியார் வேலைகளுக்கும், பல உயர் கற்கைநெறிகளுக்குமான அடிப்படைத் தகைமையாக உள்ளது.

இச்சூழலில் ஆய்வுப் பிரதேசமான மண்முனை மேற்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மண்முனை மேற்குக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் இருந்து க.பொ.த (சா/தா) வரைக் கற்று முடித்த மாணவர்களில் பெருமளவான மாணவர்கள் ஆங்கிலப் பாடத்தில் சித்தி பெறுகின்ற சதவீதம் மிகக் குறைவாக உள்ளது என சமூக நலன் விரும்பிகள், கல்வி அதிகாரிகள் போன்றோர் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கின்றனர் (மட்டக்களப்பு மேற்கு வலய மட்ட வருடாந்த அறிக்கை, 2019) இதற்கான காரணங்களாக பல காரணங்கள் காணப்படினும் மாணவர்களுக்கான

ஆங்கிலப்பாட அடைவில் நேரடியாக தாக்கம் செலுத்தும் சூழலான மாணவர்களின் வீட்டுச்சூழலானது காணப்படுகின்றது. எந்த ஒரு மாணவனுக்கு அவனது வீட்டுச்சூழல் தகுதியான, வாய்ப்பான சூழலாக அமைகின்றதோ, அம்மாணவனின் கல்வி அடைவுகள் உயர்ந்தளவில் காணப்படும். ஆனால் ஆய்வாளனின் ஆய்வுப் பிரதேசத்தில் இத்தகைய மாணவர்களின் வீட்டுச்சூழல் தகுதியானதாகவும், போதுமானளவு ஆரோக்கியமானதாகவும் அமையப்பெறவில்லை என்பதை ஆய்வுப்பிரதேசத்திற்குட்பட்ட குறிஞ்சாமுனை பிரதேச சபையின் வருடாந்த அறிக்கைகளிலிருந்தும், கருத்துக்களிலிருந்து அறிய முடிகின்றது.

இதனை அடிப்படையாகக் கொண்டு "க.பொ.த (சா/தா) பரீட்சையில் மாணவர்களின் ஆங்கிலப் பாட அடைவில் வீட்டுச்சூழலின் பங்களிப்பு" எனும் தலைப்பில் தரம் 12, 13 மாணவர்களை உள்ளடக்கி ஐந்து வருடத்தில் பெறப்பட்ட க.பொ.த (சா/தா) ஆங்கிலப் பாடப் பரீட்சைக்கான பெறுபேற்றினை அடிப்படையாகக் கொண்டு (2014, 2015, 2016, 2017, 2018) மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட மண்முனை மேற்குக் கல்விக் கோட்டப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1.2 ஆய்வுப் பிரச்சினை

க.பொ.த (சா/தா) பரீட்சையில் ஆங்கிலப் பாடச் சித்தி பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்கள் 9 பாடங்களில் தோற்ற வேண்டிய நிலை உள்ளது. இவைகளுள் 6 பாடங்கள் கட்டாய பாடங்களாகக் காணப்படுகின்றன. இப்பாடங்களுள் ஒன்றான ஆங்கிலப் பாடத்தின் அடைவின் வீழ்ச்சிக்கான காரணங்களை இனங்காண்பதோடு, மாணவர்களின் அவ்வடைவின் வீழ்ச்சியில் செல்வாக்கு செலுத்தும் வீட்டுச்சூழல் சார் காரணிகளை இனங்கண்டு அவ்வடைவை அதிகரிக்கச் செய்வதற்கான ஆலோசனைகளை முன்வைப்பது ஆய்வாளனின் எதிர்பார்பாகும்.

இதன்படி கிழக்கு மாகாணத்திலுள்ள 17 கல்வி வலயங்களிலே க.பொ.த (சா/தா) பரீட்சையில் ஆங்கிலப் பாட அடைவில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் 17 ஆவது இடத்தில் (இறுதி இடத்தில்) உள்ளது. இவ்வலயத்தில் கடந்த 5 வருட காலமாக ஒவ்வொரு வருடமும் 2000 இற்கு மேற்பட்ட மாணவர்கள் க.பொ.த (சா/தா) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் தோற்றினாலும் 106 மாணவர்கள் மட்டுமே சித்தி அடைகின்றனர். இது வலயத்திள்ள முழு மாணவர் தொகையில் 5.09% ஆகும். மண்முனை மேற்குக் கல்விக் கோட்டத்தைப் பொறுத்த வரையில் உயர்ந்த பெறுபேறுகளை உடையவர்களும் ஆங்கிலத்தில் குறைவான அடைவைப் பெறுகின்றார்கள். இதன்படி இது ஒரு முக்கிய பிரச்சினையாக இப்பிரதேசத்தில் காணப்படுகின்றது. (மட்டக்களப்பு வலய பெறுபேற்று மதிப்பீட்டு அறிக்கை, 2019)

இது தொடர்பான காரணங்களை அறிவதற்காக முனைந்தபோது ஆய்வுப் பிரதேசத்தில் பெற்றோர்கள் அதிகளவானவர்கள் வெளிநாடு செல்வதும், அதனால் பெற்றோர்கள் பலர் மறுமணம் செய்வதும், பல ஒழுக்க சீர்கேடான விடயங்களில் ஈடுபடுவதும், பல பெற்றோர்கள் மதுவுக்கு அடிமையாக இருப்பதும், பெற்றோர்கள் பலர் பருவகாலத் தொழிலுக்கு செல்வதும், மாணவர்களையும் அப்பருவகாலத் தொழிலில் ஈடுபடுத்துவதும் அதிகமாக உள்ளதாகவும், அநேகமான மாணவர்கள் அம்மம்மாவுடன் வசிப்பதும், பல மாணவர்கள் தொழிலுக்காக

கொழும்பு போன்ற இடங்களுக்கு செல்வதற்காக பாடசாலையைவிட்டு இடைவிலகியுமுள்ளதாக குறிஞ்சாமுனை பிரதேச செயலகப் பிரிவு மற்றும் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத் தரவுகளும், கருத்துக்களும் தெரிவிக்கின்றன (குறிஞ்சாமுனை பிரதேச செயலக வருடாந்த மதிப்பீட்டு அறிக்கை, 2019).

இவ்வாறான வீட்டுச்சூழல் க.பொ.த (சா/தா) பரீட்சையில் மாணவர்களின் ஆங்கிலப்பாட அடைவில் தாக்கம் செலுத்துவதாக அமைவதால் இவற்றை ஆராயும் நோக்கில் இவ்வாய்வுத் தலைப்பு ஆய்வாளனால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஆய்வின் வரையறை

இந்த ஆய்வில் மாணவர்களின் வீட்டுச்சூழல் எனும்போது பெற்றோரின் மனநிலை, தொழில், ஊக்கல், பெற்றோரின் ஒழுக்கம் சார்பான விடயங்கள், பெற்றோரின் செயற்பாடுகள், பெற்றோருக்கும், பிள்ளைகளுக்குமுள்ள தொடர்பு, வீட்டுச்சூழலின் அமைவிடம், குடும்பத்தின் தன்மை, பிள்ளையின் மனநிலை போன்ற விடயங்களை ஆராய்வதனூடாக ஆங்கிலப்பாட அடைவில் ஏற்படும் தாக்கத்தை ஆய்வாளன் ஆராய்ந்துள்ளார். எனவே இவற்றை உள்ளடக்கி வீட்டுச்சூழலை ஆராய்வதை நோக்காகக் கொண்டு ஆய்வின் வரையறையானது ஆய்வாளனால் வரையறுக்கப்பட்டுள்ளது.

ஆய்வுப் பிரச்சினைக் கூற்று

மட்டக்களப்பு மேற்கு வலயத்தில் உள்ள மூன்று கோட்டங்களோடு ஒப்பிடுகையில் மண்முனை மேற்குக் கோட்டப் பாடசாலைகளில் அதிகமான மாணவர்கள் க.பொ.த (சா/தா) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் குறைவான பெறுபேறுகளைப் பெறுகின்றனர்.

அட்டவணை 1.1: மட்டக்களப்பு மேற்கு வலயத்திலுள்ள மூன்று கோட்டங்களிலும் 2019 க.பொ.த (சா/தா) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையிலான சித்தி சதவீதம்.

Division	No Sat	No Pass	Pass %	Number of Pass				
				A	B	C	S	W
MW	1530	44	2.87	2	0	14	28	1486
MSW	360	51	14.16	0	0	18	33	309
EPW	192	11	5.73	0	0	1	10	181
ZONE	2082	106	5.09	2	0	33	71	1976

மூலம்: திட்டமிடல் பிரிவு, மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம், குறிஞ்சாமுனை - 2019

இத்தரவின் படி கடந்த 2019 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மேற்கு வலயத்தில் (MW) உள்ள மூன்று கல்விக் கோட்டங்களில் க.பொ.த (சா/தா) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையும், அதில் சித்தியடைந்த, சித்தியடையாத மாணவர்களின் எண்ணிக்கை விபரமும் குறித்துக் காட்டப்பட்டுள்ளது. இதன்படி 1530 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய போதும் 44 மாணவர்கள் மட்டுமே ஆங்கிலப் பாடத்தில் சித்தியைப் பெற்றுள்ள கல்விக் கோட்டமாக மண்முனை மேற்குக் கல்விக் கோட்டம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இத்தரவின்படி 2.87% ஆக அங்கு சித்தி காணப்படுகிறது. எனவே இவ்வாறான சித்தியை எய்துவதில் மாணவர்களுக்கு உள்ள வீட்டுச்சூழல் சார்பான பிரச்சினைகளை இனங்காண்பதற்காக ஆய்வாளனால் குறித்த பிரதேசத்தில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1.3 ஆய்வின் நோக்கம் - பொது நோக்கம்

மட்டக்களப்பு மேற்கு வலயத்தின் மண்முனை மேற்குக் கல்விக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் க.பொ.த (சா/தா) பரீட்சையில் மாணவர்களின் ஆங்கிலப் பாட அடைவில் வீட்டுச்சூழலின் பங்களிப்பைக் கண்டறிதல்.

1.3.1 சிறப்பு நோக்கங்கள்.

1. க.பொ.த (சா/தா) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் மாணவர்களின் ஈடுபாட்டினையும், கடந்த 5 வருட கால அடைவினையும் கண்டறிதல்.
2. க.பொ.த (சா/தா) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் மாணவர்கள் அடைவைப் பெறுவதற்கான வீட்டுச்சூழலின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை இனங்கானல்.
3. ஆங்கிலப் பாடம் தொடர்பான பெற்றோர்களின் மனநிலையை ஆராய்தல்.
4. க.பொ.த (சா/தா) பரீட்சையில் மாணவர்களின் ஆங்கிலப் பாட அடைவில் வீட்டுச்சூழலின் பங்களிப்பை ஆராய்ந்து அவற்றுக்கான ஆலோசனைகளை முன்வைத்தல்.

2.0 இலக்கிய மீளாய்வு

Douglas , Cooper Smith , Coolengeloo & Deddman (1983) உள்ளிட்ட ஆய்வு குழுவினர் பலர் பிள்ளைகளின் உயர்வான உள்ளார்ந்த ஆற்றல்களை நிறைவேற்றும் செயலில் குடும்பம் வகிக்கும் முக்கியத்துவத்தைப் பல ஆண்டுகள் வலியுறுத்தி வந்துள்ளனர். பிள்ளை தொடர்பாகப் பெற்றோரின் கல்வி எதிர்பார்ப்புக்கள், பெற்றோரின் சமூக, வர்க்க மற்றும் கல்வித் தகைமைகளின் வேறுபாடுகளுக்கேற்ப மாறி மாறி அமைவதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும் தனது ஆராய்ச்சிகளின் முடிவில் ‘‘மாணவர்களின் அடைவுமட்டத்துக்கும், சமூகப் பொருளாதார அந்தஸ்து, வீட்டுச்சூழல் என்பவற்றுக்குமிடையே நெருங்கிய தொடர்புள்ளது’’ எனக் குறிப்பிட்டுள்ளனர்.

வேலுப்பிள்ளை, (2007) என்பவர் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிப்பதிலுள்ள சவால்கள் எனும் ஆய்வில் மாணவன் வீட்டில் உள்ள போது அவனது கற்றல் நடவடிக்கைகளை கண்காணிக்காமை, மாணவருக்கு ஏற்ற கற்றல் சூழலை ஏற்படுத்திக் கொடுக்காமை, மாணவர் கற்கும் நேரங்களில் தொலைக்காட்சிப் பெட்டியை பார்த்தல், ஆசிரியர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தாமை போன்ற காரணங்களைக் குறிப்பிட்டுள்ளார். இவ்வீட்டுச் சூழல் அவர்களின் அடைவில் தாக்கம் செலுத்துகின்றன எனத் தனது ஆய்வு முடிவுகளை வெளியிட்டுள்ளார்.

குடும்பங்கள் ஒற்றுமை நிலவும் குடும்பங்களாகவோ (Accord Homes), பூசல் நிரம்பிய குடும்பங்களாகவோ (Discord Homes), பிளவுபட்ட குடும்பங்களாகவோ (Broken Homes)

இருக்கக் கூடும். ஒற்றுமை நிலவும் குடும்பங்களே குழந்தைகள் சிறப்பாக வளரத் தகுந்த சூழ்நிலையைத் தோற்றுவிக்க இயலும் என்பது தெளிவு. இன்று நவீன கால மாற்றங்கள் குடும்பத்தின் செல்வாக்கினைக் குறைத்துள்ளன. பெண்கள் வேலை தேடி உழைத்தல், விவாகரத்து, முரண்பட்ட பண்பாடுகளைக் கொண்ட ஆண்களும், பெண்களும் மணமுடித்து முரண்படுதல், பெற்றோரைப் பிரிந்து வாழ்தல், பெற்றோரின்றி வாழும் பிள்ளைகள், பெற்றோர் மறுமணம் செய்தல், பெற்றோர் வெளிநாடு செல்தல் போன்றன பிள்ளையின் கற்றலை மட்மல்லாது அவர்களது அடைவுமட்டத்தையும் பாதிக்கின்றன (சந்தானம், 2007).

Marzano, (2003) என்பவர் மேற்கொண்ட ஆய்வின் முடிவின்படி குடும்பச்சூழலானது மாணவரின் கற்றல் அடைவில் மிகுந்த செல்வாக்குச் செலுத்துவதாகக் கூறுகின்றார். அத்துடன் கல்வியறிவுடைய பெற்றோர் தங்களது பிள்ளைகளுக்கு வீட்டில் கற்றலுக்குரிய வசதிகளைச் செய்து கொடுப்பதாகவும், கல்வியறிவு இல்லாத பெற்றோர் அவ்வாறு வசதிகளைச் செய்து கொடுப்பதில்லை எனவும் கூறுகின்றார். எனவே இவை மாணவர்களின் அடைவில் செல்வாக்குச் செலுத்துவதாக சுட்டிக் காட்டுகின்றார். பாடசாலை நிர்வாகத்தினர் பெற்றோருக்கு உளவளத்துணை ஆலோசனையையும், வழிகாட்டலையும் வழங்குவதன் மூலம் மாணவர்களது கற்றலுக்கு பெற்றோர்கள் பொருத்தமான வீட்டுச்சூழலை அமைத்துக் கொடுக்க முடியும் என்கிறார்.

Slavin, (1996) தனது அடைவுமட்டம் தொடர்பான ஆராய்ச்சியின் முடிவில் பின்வரும் விடயத்தினை வெளியிட்டுள்ளார். அடைவுமட்டத்திற்கு சமூக, பொருளாதார அந்தஸ்து, வீட்டுச் சூழல் என்பவற்றிற்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. வீட்டில் அதிகளவில் கற்பதன் மூலம் தாழ்ந்த ஆற்றல் படைத்த மாணவர்கள் உயர்ந்த ஆற்றல் படைத்த மாணவர்கள் பெறும் புள்ளிகளுக்குச் சமனான புள்ளிகளைப் பெறுவதற்கு உதவும் வகையில் ஈடுசெய்யக் கூடிய தாக்கத்தை அது ஏற்படுகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

3.0 ஆய்வு முறையியல்.

ஆய்வு முறையியல் சிறப்பானதாகக் காணப்படும் பட்சத்திலேயே தீர்வுகள் நம்பகத் தன்மையாக அமையும். இவ்வாய்வில் எண், அளவு ரீதியான முறையியல்களும், பண்பு ரீதியான முறையியல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எண் ரீதியான முறையியலினுள் எண்கள், அட்டவணைகள், வரைபடங்கள், மாணவர் தொகை, விகிதாரங்கள் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் புறவயத்தன்மையாக ஆய்வு கொண்டு செல்லப்படுகிறது.

ஆய்வு தொடர்பான கோட்பாடு ரீதியான உறுதிப்படுத்தலுடன் தொடர்பு கொண்டதாக பண்பு ரீதியான முறையியல் காணப்படுகின்றது. இங்கு சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்களிடத்தில் வினாக்கொத்து மூலமாகவும், அதிபர்கள், ஆங்கிலப் பாடத்திற்கான சேவைக்கால ஆலோசகர்கள், மாணவர்களின் பெற்றோர்களிடத்தில் நேர்காணல் மூலமாகவும், மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்ட பெற்றோரின் வீட்டுச்சூழலிருந்து அவதானம் மூலம் பெறப்பட்ட தகவல்கள், அபிப்பிராயங்கள், எண்ணங்கள், வெளிப்பாடுகள் போன்ற அகவயமான உணர்வுகளும் ஆய்வில் கருத்திற் கொள்ளப்படுகின்றன.

இதன்படி அளவு ரீதியான, பண்பு ரீதியான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு அமைவதால் இவ்வாய்வு கலப்பு அணுகுமுறையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. அத்தோடு வினாக்கொத்து மற்றும் நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவுகளை அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்து அதன் மூலம் முடிவுகளைக் கண்டறிவதாக இவ்வாய்வானது அமைவதால் இவ்வாய்வின் வடிவம் ஒரு அளவை நிலை ஆய்வு வடிவமாக அமைந்துள்ளது.

3.1 மாதிரித் தெரிவு

ஆய்விற்காகத் தெரிவு செய்யப்பட்ட மண்முனை மேற்கு கல்விக் கோட்டத்தில் காணப்படும் 30 பாடசாலைகளையும் ஆய்வுக்குட்படுத்துவது சற்றுக் கடினம் என்பதாலும், அதிக காலம் தேவைப்படும் என்பதாலும், அப்பாடசாலைகள் அனைத்திற்கும் செல்வதற்கான போக்குவரத்து வசதி குறைவு என்பதாலும் ஆய்வின் பொருத்தப்பாடு கருதி மண்முனை மேற்குக் கல்விக் கோட்டத்திலுள்ள 6 பாடசாலைகள் வசதி மாதிரியின் அடிப்படையில் ஆய்வினை மேற்கொள்ளும் பொருட்டு தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதன்படி நான்கு 1C பாடசாலைகளும், ஒரு 1 AB பாடசாலைகளும் ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இவ்வாய்வில் தரம் 12, 13 மாணவர்களில் இருந்து ஆய்வு மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதற்கான காரணம் என்னவெனில், அவர்களே சென்ற வருடம் அல்லது அதற்கு முன் க.பொ.த (சா/தா) பரீட்சையைத் தோற்றியவர்களாகவும், ஆங்கிலப் பாடத்தில் சித்தியைப் பெற்றவர்களாகவும், பெறாதவர்களாகவும் இருப்பதனால் ஆய்வின் நோக்கம் கருதி அவர்கள் இந்த ஆய்வில் மாதிரித் தெரிவுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் ஆய்விற்காகத் தெரிவு செய்யப்பட்ட 6 பாடசாலைகளில் காணப்படும் தரம் 12, 13 இல் கல்வி கற்கும் 516 மாணவர்கள் ஆண்கள், பெண்கள் என படையாக்கப்பட்டு, இலகு எழுமாற்று மாதிரியின் மூலம் 3 : 1 எனும் விகிதத்தில் 172 மாணவர்கள் ஆய்வு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதன்படி 234 ஆண் மாணவர்களிலிருந்து 78 மாணவர்களும், 282 பெண் மாணவர்களில் இருந்து 94 மாணவர்களுமாக மொத்தமாக 172 மாணவர்கள் ஆய்வு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் தரம் 12, 13 இல் கல்வி கற்கும் 516 மாணவர்களில் இருந்து ஆய்வு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட 172 மாணவர்களின் பெற்றோர்களில் இருந்து எழுமாறாக 34 பெற்றோர்கள் 5 : 1 எனும் விகிதத்தின் அடிப்படையில் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் ஆய்வு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஆய்வாளனால் தெரிவுசெய்யப்பட்ட ஆறு பாடசாலைகளில் ஆங்கிலப் பாடம் கற்பிக்கும் 14 ஆசிரியர்கள் ஆய்வு நோக்கத்தின் அடிப்படையில் நோக்க மாதிரியெடுப்பு முறையைப் பயன்படுத்தி மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்தோடு 06 பாடசாலைகளை நிர்வகிக்கும் 06 அதிபர்களும் நோக்க மாதிரியின் அடிப்படையில் இவ்வாய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஆய்வின் நோக்கம் கருதி ஆங்கிலப் பாடத்திற்காக மட்டக்களப்பு மேற்கு வலயத்தில் பொறுப்பாக்கப்பட்ட 01 சேவைக்கால ஆலோசகரும் நோக்க மாதிரியெடுப்பு முறையின்

அடிப்படையில் இவ்வாய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவ்வாறாக இவ்வாய்வுக்காக ஆய்வாளனால் மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டு உள்ளனர்.

4.0 தரவுப் பகுப்பாய்வுகள்

4.1 ஆங்கிலப் பாடத்தின் மீது மாணவர்கள் கொண்டுள்ள ஈடுபாடும், 5 வருட அடைவின் போக்கும்.

ஆங்கிலப் பாடம் மீதான மாணவர்களின் ஈடுபாடு எத்தகையது? என மாணவர்களிடம் வினவியபோது 91.55% ஆன மாணவர்கள் ஆங்கிலப் பாடத்தின் மீது மிகக் குறைவான ஈடுபாட்டையே கொண்டிருப்பதாக பதிலளித்திருந்தனர்.



உரு 4.1 : ஆங்கிலப் பாடம் மீதான மாணவர்களின் விருப்புக் குறைவுக்கான காரணங்கள் பற்றிய மாணவர்களின் கருத்து.

உரு 4.1 இன்படி அதற்கான காரணத்தை வினவியபோது 62% ஆன மாணவர்களின் வீட்டுச்சூழல் ஆங்கிலப்பாடம் கற்பதற்கு ஏதுவாக அமையவில்லை எனக் குறிப்பிட்டுள்ளனர். இதனைத் தவிர வேறுகாரணங்களாக ஆங்கிலப்பாடத்தின் முக்கியத்துவம் பற்றிய அறிதல் பெற்றோருக்கு இல்லாமை மற்றும் மாணவர்களின் சமூக மற்றும் மாணவத் தனியாளின் ஆங்கிலப் பாடம் கடினம் என்ற எதிர்மறை மனப்பாங்கு ஆங்கிலப் பாடத்தின் மீது விருப்பை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக அமையவில்லை எனக் குறிப்பிட்டுள்ளனர். அந்தவகையில் அதிகமான (62%) மாணவர்களின் வீட்டுச்சூழல் ஆங்கிலம் கற்பதற்குரிய ஊக்குவிப்புக்களை வழங்காமல் உள்ளதால் அதன்மீது மிகக்குறைவான விருப்பத்தை மாணவர்களுக்கு ஏற்படுத்தியது எனக் காரணங்காட்டியுள்ளனர்.

5 வருடங்களில் க.பொ.த (சா/தா) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் மாணவர்களின் அடைவின் போக்கு தொடர்பாக ஆவணப்படிவத்தின் மூலம் தரவுகள் திரப்பட்டதற்கிணங்க 2014-2018 வரையில் மண்முனை மேற்கு கல்விக் கோட்டத்தில் ஆங்கிலப் பாட அடைவானது தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து செல்வதை அட்டவணை 4.1 இன் மூலம் காணலாம்.

அட்டவணை 4.1 : மண்முனை மேற்குக் கல்விக் கோட்டத்திற்கான க.பொ.த (சா/தா) ஆங்கில பாடப் பரீட்சைக்கான பெறுபேற்றுத் தரவுகள். (2014 – 2018)

வருடம்	A	B	C	S	W	தோற்றியோர்	சித்தி அடையாதோர்

2014	0	0	2	47	380	429	380
2015	0	1	3	39	426	469	426
2016	1	0	7	27	503	538	503
2017	1	2	7	32	486	528	486
2018	2	2	20	38	471	533	471

மூலம்: வலயக் கல்வி அலுவலகம், மட்டக்களப்பு மேற்கு – குறிஞ்சாமுனை

4.2 க.பொ.த (சா/தா) பரீட்சையில் மாணவர்களின் ஆங்கிலப் பாடச் சித்தியில் வீட்டுச்சூழலின் பங்களிப்பின் முக்கியத்துவம்.

மாணவர்களின் வீட்டுச் சூழல் ஆங்கிலப் பாட அடைவில் செலுத்தும் பாதிப்பை பற்றி மேலும் பல தகவல்களை அறிந்து கொள்ளும் நோக்கில் அதிபர்களின் நேர்காணலின் போது மாணவர்களின் ஆங்கிலப் பாட அடைவுக்கும் வீட்டுச் சூழலுக்கும், பெற்றோரின் கல்வித் தகைமை, தொழில் (வருமானம்) என்பவற்றுக்கும் இடையே தொடர்பு உண்டு என நீங்கள் கருதுகின்றீர்களா? எனும் வினாவை வினவிய போது ஆய்விற்காகத் தெரிவு செய்யப்பட்ட அதிபர்களில் அனைவரும் ஆம் எனப் பதில் அளித்ததோடு மாணவர்கள் பாடசாலையைவிடுத்து அதிக நேரம் சுயகற்றலில் ஈடுபடும் இடம் அவர்களின் வீடாகக் காணப்படுவதோடு, மாணவர்களின் கற்றலில் முக்கிய பங்காளிகள் பெற்றோர்கள் எனவும், அவர்களின் எல்லா செயற்பாடுகளும் மாணவர்களின் கற்றலில் தாக்கம் செலுத்தும் எனவும், அந்த வகையில் அவர்களின் கல்வி மட்டம், தொழில், வருமானம், ஒழுக்கச் செயற்பாடுகள் போன்ற அனைத்து வீட்டுச் சூழல் காரணிகளும் மாணவர்களின் ஆங்கிலப் பாட அடைவில் மட்டுமல்லாது ஒட்டு மொத்த கல்வியிலும் பாதிப்பை ஏற்படுத்தும் எனப் பதில் அளித்திருந்தனர். அத்தோடு இப்பிரதேசத்தில் அதிகமான பெற்றோர் மதுப் பாவனை, புகைத்தல், சிறுவர் துஸ்பிரயோகம் போன்ற ஒழுக்கச் சீர்கேடான நடத்தைகளில் ஈடுபடுகின்றனர், அத்தோடு மாணவர்களைத் தொழிலுக்கு அனுப்புதல், வீட்டில் அமைதியற்ற சூழ்நிலை காணப்படுதல் போன்ற பல விடயங்கள் மாணவர்களின் கற்றலில் தாக்கத்தைச் செலுத்துகின்றன போன்ற கருத்துக்களையும் குறிப்பிட்டிருந்தனர்.

4.3 ஆங்கிலப் பாடம் தொடர்பான பெற்றோர்களின் மனநிலை

க.பொ.த (சா/தா) பரீட்சையின் மாணவர்கள் ஆங்கிலப் பாடத்தில் சித்தியடைவது அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு அவசியம் எனக் கருதுகின்றீர்களா எனப் பெற்றோரிடம் வினவிய போது அதற்கு 85.29% ஆன பெற்றோர்கள் அவசியமில்லை எனவும், 14.71% ஆன மாணவர்கள் ஆம் எனவும் பதில் அளித்திருந்தனர். இவை தொடர்பான காரணங்கள் உரு 4.2 இல் காட்டப்பட்டுள்ளது.



உரு 4.2 ஆங்கிலப் பாடம் தொடர்பான பெற்றோரின் நிலைப்பாடு தொடர்பான மாணவர்களின் கருத்து.

இதன்படி அதிகமான பெற்றோர் (78%) சிங்களமும், தமிழும் மட்டுமே வாழ்க்கைக்கு போதுமானது எனும் மனநிலையுடன் உள்ளனர். அத்தோடு 48 சதவீதமான மாணவர்கள் தங்களது பெற்றோர் ஆங்கிலம் கற்க அதிக பணம் தேவைப்படும் எனும் மனப்பாங்கில் உள்ளனர் எனவும் பதிலளித்திருந்தனர். இப் பெற்றோரின் மனநிலை மாணவர்களின் ஆங்கில பாடக் கற்றலில் அதிக பாதிப்பை செலுத்தும் காரணிகளாக அமைகின்றன.

4.4 க.பொ.த (சா/தா) பரீட்சையில் மாணவர்களின் ஆங்கிலப் பாட அடைவில் வீட்டுச்சூழலின் பங்களிப்பு.

க.பொ.த (சா/தா) மாணவர்களின் வீட்டுச்சூழல் அவர்களின் ஆங்கிலப் பாட அடைவில் ஏற்படுத்தும் பங்களிப்பு தொடர்பாக அறியும் நோக்கில் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட பெற்றோர்களின் வீட்டுச் சூழலினை அவதானிப்படிவம் கொண்டு அவதானித்ததின் மூலமும், ஆங்கிலப் பாட ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் ஆங்கிலப் பாடத்திற்கான சேவைக்கால ஆலோசகரிடமும் பெறப்பட்ட தரவுகளுக்கமைவான துலங்கல்கள் உரு 4.3 இல் காட்டப்பட்டுள்ளது.



உரு 4.3 ஆய்வுப் பிரதேசத்தில் க.பொ.த (சா/தா) மாணவர்களின் வீட்டுச்சூழலானது எவ்வாறு காணப்படுகின்றது என்பது தொடர்பான பாடசாலைச் சமூகத்தினரின் கருத்துக்கள்.

மேற்காட்டப்பட்ட துலங்கல்களின் அடிப்படையில் மாணவர்கள் ஆங்கில பாடத்தைக் கற்பதற்கு அவர்களின் வீட்டுச்சூழல் போதிய பங்களிப்பை அளிக்காததோடு ஊக்கலையும் வழங்காத தன்மை புலப்படுத்தப்படுகின்றது. மாணவர்களுக்கு ஆங்கிலப்பாடத்தை கற்க வேண்டும் என்ற எண்ணத்தை உண்டுபண்ணாத சூழலாக அவர்களின் வீட்டுச்சூழல் காணப்படுவதால் அவர்களின் அடைவானது தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகின்றது. மாணவர்களின் பெற்றோர்களில் பலர் வெளிநாடு செல்லுதல், மதுக்கு அடிமையாதல், மறுமணம் செய்தல், வன்முறைகளில் ஈடுபடுதல், சகோதரர்களை கவனிக்கும்படி பணித்தல், தாய்மார்கள் பருவ காலத் தொழிலுக்கு செல்வதோடு

பிள்ளைகளையும் அழைத்தல் போன்ற பல்வேறு காரணங்கள் மாணவர்களின் ஆங்கில பாட அடைவில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. எனவே ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படும் இவ்வீட்டுச்சூழல் நிலைமையானது எவ்வகையிலும் மாணவர்களின் ஆங்கிலப்பாட அடைவில் பாதிப்பை மட்டுமே ஏற்படுத்தும் என்பது இக்கண்டறிதல்களில் இருந்து புலப்படுகின்றது.

5.0 முடிவுகளும் விதப்புரைகளும்

5.1 ஆங்கிலப் பாடத்தின் மீது மாணவர்கள் கொண்டுள்ள ஈடுபாடு, 5 வருட அடைவின் போக்கும்

முடிவுகள்

1. 91.55% ஆன மாணவர்கள் ஆங்கிலப் பாடத்தின் மீது மிகக் குறைவான ஈடுபாட்டைக் கொண்டு காணப்படுகின்றனர்.
2. 62% ஆன மாணவர்களின் வீட்டுச்சூழல் ஆங்கிலப்பாடம் கற்பதற்கு ஏதுவான சூழலாக அமையாததால் ஆங்கிலப்பாட அடைவு குறைகின்றது என மாணவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.
3. பெற்றோர்கள் மற்றைய பாடங்களைப்போல் ஆங்கிலப் பாடத்திற்கு முக்கியத்துவமளிக்காமை.
4. 5 வருடங்களாக ஆய்வுப் பிரதேசப் பாடசாலைகளில் மாணவர்களின் க.பொ.த (சா/தா) ஆங்கில பாடப் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்ச்சியாக குறைந்த வண்ணம் உள்ளன.

விதப்புரைகள்

1. பெற்றோருக்கு ஆங்கிலப் பாட அடைவில் வீட்டுச்சூழல் பெறும் முக்கியத்துவத்தை உயர்த்தும் வகையில் விழிப்புணர்வு கூட்டங்கள் பாடசாலைகளால் நடாத்தப்படல் வேண்டும்.
2. ஆரம்பப் பிரிவின் நேரசூசியில் ஆங்கிலப் பாடத்தை இணைப்பதோடு அவை ஆசிரியர்களினூடாக குறித்த பாடவேளையில் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுவதை அதிபர் தனது மேற்பார்வையின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
3. பெற்றோர்களுக்கு மற்றைய பாடங்களைப்போல் ஆங்கிலப்பாடமும் முக்கியம் எனும் மனப்பாங்கை பாடசாலை சமூகம் உருவாக்க வேண்டும்.
4. வலயத்தினாலும், பாடசாலைகளினாலும் க.பொ.த (சா/தா) ஆங்கிலப் பாடப் பரீட்சைப் பெறுபேறுகளின் வீழ்ச்சிக்கான காரணங்களை கண்டறிந்து அதனை நிவர்த்தி செய்ய உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

5.2 க.பொ.த (சா/தா) பரீட்சையில் மாணவர்களின் ஆங்கிலப் பாடச் சித்தியில் வீட்டுச்சூழலின் பங்களிப்பின் முக்கியத்துவம்

முடிவுகள்

1. பெற்றோரின் கல்வி மட்டம், தொழில், வருமானம், ஒழுக்கச் செயற்பாடுகள், ஊக்கல், மனநிலை, வீட்டுச் சூழலின் தன்மை போன்ற அனைத்து வீட்டுச்சூழல் காரணிகளும் மாணவர்களின் ஆங்கிலப் பாட அடைவில் தாக்கம் செலுத்தக்கூடியன.

விதப்புரைகள்

1. பெற்றோர்கள் மாணவர்களின் எதிர்காலத் தேவைகளை நிலைநிறுத்தி அவர்களுக்கான தகுந்த ஆரோக்கியமான, விளைதிறனை ஏற்படுத்தக்கூடிய சூழலை ஏற்படுத்திக்கொடுப்பதினை நோக்காகக் கொண்டு ஒவ்வொரு விடயத்திலும் செயலாற்ற வேண்டும்.

5.3 ஆங்கிலப் பாடம் தொடர்பான பெற்றோர்களின் மனநிலை

முடிவுகள்

1. க.பொ.த (சா/தா) பரீட்சையில் ஆங்கிலப் பாடச் சித்தியானது மாணவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு அவசியமில்லை எனும் மனநிலையில் அதிகமான பெற்றோர்கள் உள்ளனர்.
2. எமது நாட்டிற்குள் வாழ சிங்கள மொழியும், தமிழ் மொழி மட்டுமே அவசியம் எனும் மனப்பாங்கை கொண்டு பெற்றோர் காணப்படுகின்றனர்.
3. தங்களது பிள்ளைகளால் ஆங்கிலம் கற்கவோ அல்லது புரிந்து கொள்ளவோ முடியாது எனும் எண்ணத்தை பெற்றோர்கள் கொண்டு காணப்படுகின்றனர்.
4. ஆங்கிலம் கற்க அதிக பணம் தேவை எனும் மனநிலையோடு மாணவர்களின் பெற்றோர்கள் காணப்படுகின்றனர்.

விதப்புரைகள்

1. பெற்றோர்களுக்கு ஆங்கிலப்பாடச் சித்தியின் அவசியத்தை பாடசாலையோ அல்லது வலயக் கல்வி அலுவலகமோ பல கருத்தரங்குகளை நடாத்தி விழிப்புணர்வூட்ட வேண்டும்.
2. ஆங்கில மொழியின் அவசியத்தை மேடை நாடகமாகவோ, குறுந் திரைப்படமாகவோ நடித்து பெற்றோர்களுக்கு புரிய வைத்தல் வேண்டும்.
3. பிள்ளைகள் ஆங்கிலப் பாடச் சித்தியின் தேவையை உணர்ந்திருப்பின் அதன் அவசியத்தை தமது பெற்றோர்களிடம் விளக்கி அதற்கான ஊக்கலை அவர்களிடமிருந்து பெற எத்தணிக்க வேண்டும்.
4. ஆங்கிலப் பாடத்தைக் கற்பதற்கு பணம் ஒரு தடையாக அமையாத வண்ணம் பல இலவச தனியார் ஆங்கில வகுப்புக்களை மேற்கொள்ள சமூக மட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

5.4 க.பொ.த (சா/தா) பரீட்சையில் மாணவர்களின் ஆங்கிலப் பாட அடைவில் வீட்டுச்சூழலின் பங்களிப்பு

முடிவுகள்

1. மாணவர்களின் பெற்றோர்கள் ஒற்றைப் பெற்றோராகவும், மறுமணம் செய்தோராகவும் காணப்படுகின்றனர். இதனால் வீட்டு வன்முறை அதிகம் நிகழும் சூழலாக மாணவர்களின் வீட்டுச் சூழல் காணப்படுகின்றது.

2. மாணவர்களின் தந்தையர்கள் மதுக்கு அடிமையான நிலையிலும் உள்ளனர். மதுபாவனையால் வீட்டில் முரண்பாடுகள் ஏற்படுவதோடு அமைதியற்ற வீட்டுச்சூழலும் காணப்படுகின்றது.
3. க.பொ.த (சா/தா) பரீட்சையில் ஆங்கிலப் பாடச் சித்தியின் அவசியம் தொடர்பாக பெற்றோர்கள் விழிப்புணர்வற்று காணப்படுகின்றனர்.
4. மாணவர்களை பருவ காலத் தொழிலில் பெற்றோர்கள் ஈடுபடுத்துகின்றனர்.

விதப்புரைகள்

1. பெற்றோர்களின் தனிப்பட்ட குடும்ப நகர்வுகள் மாணவர்களின் கல்வியை அதிகமாக பாதிக்கும் என்பது தொடர்பான அறிவூட்டலை தகுந்த உளவளத்துணையாளர்களை கொண்டு பிரதேச மட்டத்தில் அவர்களுக்கு விழிப்புணர்வூட்ட வேண்டும்.
2. ஆய்வுப் பிரதேசத்தில் மதுக்கு அடிமையானவர்கள் குறித்து தரவுகளை எடுத்து அவர்களுக்கு மது மீட்டெடுப்பு தொடர்பான சிகிச்சைகளை அழிக்க பிரதேச மட்ட சுகாதார குழுக்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அத்தோடு அவர்களின் மதுப்பாவனை அவர்களின் பிள்ளைகளின் கல்வியில் பாதிப்பை செலுத்தும் என்பது தொடர்பாக அவர்களுக்கு விழிப்புணர்வூட்ட வேண்டும்.
3. கிராம சேவையாளர் பிரிவினூடாக ஆங்கில பாடச் சித்தியின் அவசியம் தொடர்பான கூட்டங்களையோ, தெரு நாடகங்களையோ நடாத்தி பெற்றோர்களுக்கு விழிப்புணர்வூட்டலாம்.
4. அதிபர் ஆங்கிலப் பாடத்தில் நன்கு செயற்படும் பிள்ளைகளுக்கான வசதிகளையும், வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்க தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

உசாத்துணை

1. சந்தானம், எஸ். 2007. **கல்வியும், சமூகமும்**, உதயம் ஆப்செட், சென்னை.
2. வேலுப்பிள்ளை, அ. 2007, **தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிப்பதிலுள்ள சவால்கள்**, கல்வி முதுமானிக் கற்கைக்கான ஆய்வு, கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை.
3. Douglas, I. Cooper Smith., et.al. 1983. "**The home and the school"**, Educational research, London, Hodder and Stoughton.
4. Marzano, 2003. **Factor contributing toward poor performance of grade 12 learners at Monashi and Mokwatedi High Schools**, Unpublished Med thesis, turfloop graduate school, South Africa.
5. Slavin, R. E. 1996. **Research for the future – Research on cooperative learning and achievement: What we know, What we need to know,** Contemporary Educational Psychology, 21(4): 43-69.

பாடசாலை நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகள் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றலில் ஏற்படுத்தும் தாக்கம் (ஏறாவூர் கோட்டப் பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் அளவை நிலை ஆய்வு)

முகமட் உசனார் நவ்பர்காந்

கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
nouferkhan@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

வளர்ந்து வரும் தொழிநுட்ப தொழில் நுணுக்க அறிவுப் பெருக்கமானது மனிதனை வாழ்வில் எதிர் நீச்சல் போட்டாலே வாழ முடியும் என்ற நிலைக்கு உட்படுத்தியுள்ளது. இதற்கு ஈடு கொடுக்க வேண்டுமாயின் பல்வேறுபட்ட விடயங்களையும் சமகால நிகழ்வுகளையும் உள்வாங்கும் திறன் கொண்டவர்களாகவும் இருத்தல் காலத்தின் தேவையாகும். அதற்கு முதுகெலும்பாகத் திகழ்வது நூலகமே. இதனடிப்படையிலே ஏறாவூர் கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் காணப்படுகின்ற நூலகங்களின் முக்கியத்துவம் தொடர்பாகவும் அதனை பயன்படுத்துகின்ற சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றல் தொடர்பாகவும் இவ்வாய்வு ஆராய்கின்றது. இதன்படி இவ்வாய்வினை மேற்கொள்வதற்காக மட்டக்களப்பு மத்தி வலயத்தின் ஏறாவூர் கல்விக் கோட்டத்தில் உள்ள 07 பாடசாலைகளும் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாய்விற்கான ஆய்வு மாதிரிகளாக 07 அதிபர்கள், 50 ஆசிரியர்கள், 105 மாணவர்கள், 5 நூலகப் பொறுப்பாளர்கள் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பெறப்பட்ட அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகள் பொருத்தமான மென்பொருள் முறைகளின் ஊடாக பகுப்பாய்வு, வியாக்கியானம், கலந்துரையாடல் போன்ற செயற்பாடுகளுக்குள் உள்வாங்கப்படுவதுடன் பகுப்பாய்வின் மூலம் பல்வேறு முடிவுகளும் கண்டறியப்பட்டுள்ளன. ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் 75 சதவீதமான முடிவுகளில் பாடசாலை நூலகங்கள் பொருத்தமான இடத்தில் அமையவில்லை முடிவுகள் பெறப்பட்டுள்ளன (வீதிக்கு அருகில் நூலகங்கள் காணப்படுவதனால் வாகனங்களின் சத்தம் அதிகமாகவும், புறாக்களின் தொல்லை அதிகமானதாகவும், எச்சங்கள் நிரம்பியும் நூலகங்கள் காணப்படுகின்றன). ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் 80 சதவீதமான முடிவுகளில் நூலகங்களில் தேவைக்கு போதுமானளவு பௌதீகவளங்கள் காணப்படவில்லை (மாணவர்களுக்கு போதுமானளவு தளபாடங்கள், கட்டிட வசதிகள் இல்லாத நிலையும் காணப்பட்டது). பாடசாலையில் நூலகங்கள் வினைத்திறனாக செயற்படுவதற்கு போதுமானளவு பௌதீக மற்றும் மனித வளம் இல்லாத நிலையும், இதனால் மாணவர்கள் தாமாக நூலகத்தை பயனபடுத்துவதில் காட்டும் அலட்சியப்போக்கு காரணமாக சுயகற்றல் செயற்பாடுகள் பாதிப்படைகின்றமை போன்ற பல பிரச்சினைகள் கண்டறியப்பட்டுள்ளன. இதனடிப்படையில் பாடசாலை நூலகத்தை வினைத்திறனாக்குவதன் மூலம் மாணவர்களின் சுயகற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் மாணவர்களின் தேவைப்பாடு கருதி பொருத்தமான சம கால நூல்களிற்கான கொள்வனவில் கவனம் செலுத்துதல், வலயக்கல்வி அலுவலகத்திடம் பாடசாலை நூலகத்தின் நிலைமையை எடுத்துக்கூறி அரசின் நிதி உதவியை பெற்று நூலகத்தை விஸ்தரிக்க முயற்சித்தல் போன்ற வகையில் விதப்புரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

திறவுச் சொற்கள்: பாடசாலை நூலகங்கள், வினைத்திறன், சிரேஷ்ட இடைநிலை மாணவர்கள், சுயகற்றல்

1.0 அறிமுகம்

1.0 ஆய்வு அறிமுகம்

“ஒரு நூலகம் திறக்கப்படும் பொழுது நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன்” என அறிஞர் விக்டர் ஹியுகோ கூறியுள்ளார். அதற்கு முதுகெலும்பாகத் திகழ்வது நூலகமே. இதன் காரணமாக நூலகங்கள் இன்றைய சமூகத்திற்குத் தேவைப்படுகின்ற அவசியமான நிறுவனங்களாகிவிட்டன. ஆலயம் இல்லாத ஊரில் மட்டுமல்ல நூலகம் இல்லாத ஊரிலும் குடியிருக்க கூடாது என்பார்கள். உண்மைதான். நூலகம் என்பது ஒவ்வொரு ஊர்களிலும் மட்டுமன்றி வீடுகளிலும், பாடசாலைகளிலும் இன்றியமையாத ஒன்றாகும்.

இலங்கையில் கிராமம் முதல் நகரப்புறங்கள் வரை நூலகங்கள் இருப்பினும் அதனைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து வருகிறது. பாடசாலைகளில் நூலகங்கள் மாணவர்களுக்கு மிகப்பெரிய ஒரு பொக்கிசமாகும். மாணவர்கள் தங்களது சுய அறிவை வளர்த்தெடுக்க்கூடிய, வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தக்கூடிய முக்கியமான இடமாகும். ஆனாலும் இன்றைய காலகட்டத்தில் மாணவர்கள் நூலகங்களை பயன்படுத்துவது அரிதாகிக்கொண்டு வருகின்றது. இதனால் கல்வியில் பின்னடைவு காணப்படுவதனை ஆய்வாளனால் அறிய முடிகின்றது. கிராமப்புற பாடசாலைகளில் இதன் தாக்கம் சற்று அதிகமாகும்.

ஏறாவூர் கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் நூலகங்கள் சிறப்பாக இயங்காத ஒரு நிலை காணப்படுகிறது. இப்பாடசாலைகளில் ஒரு சில பாடசாலைகளில் நூல்களை மாத்திரம் கொண்டு சிறிய நூலக மாதிரி அமைப்புகள் பேணப்பட்டு வருகின்றன. சில பாடசாலைகளில் நூலகத்திற்கென தனியான கட்டிடங்கள் இன்றி மாணவர் வகுப்பறைகள் நூலகங்களாக செயற்படுகின்றன. சிறியளவிலான நூல்கள் பரிமாற்றம் இடம்பெறுகின்றது. இன்னும் ஓரிரு பாடசாலைகளில் மாத்திரமே நூலகம் கட்டிட வசதிகளுடனும், நூலக சேவையாளர் மூலமும் நூல்கள் பரிமாற்றத்துடனும் நூலகச்சேவை இடம்பெறுகின்றது. இன்றைய பாடசாலைகளில் நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகளை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதனால் பயனடைகின்ற அனைத்து தரப்பினரும் இடர்பாட்டுக்குள்ளாகின்றனர். ஏறாவூர் கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் காணப்படுகின்ற பாடசாலை நூலகங்களின் வினைத்திறன் செயற்பாடுகள் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றலில் ஏற்படுத்தும் செல்வாக்கு தொடர்பாகவும் குறிப்பிடுகின்றது.

ஆய்வுப் பிரச்சனைக்கூற்று

பாடசாலைகளில் காணப்படுகின்ற நூலகங்கள், நூலகம்சார் வினைத்திறனற்ற செயற்பாடுகள் பாடசாலையில் கல்வி பயில்கின்ற சிரே‘ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றலில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது.

1.2 ஆய்வுப் பிரச்சினை

பாடசாலையிலே நூலகங்களின் பங்கு மிகவும் இன்றியமையாதது. நூலகங்கள் வினைத்திறனாக செயற்படுகின்றபோது மாணவர்கள் மாத்திரமின்றி ஆசிரியர்கள், அதிபர்கள் போன்ற அனைத்துத் தரப்பினரும் நூலகங்களினால் சிறந்த பயனைப் பெறுவர். ஏறாவூர் கோட்டப் பாடசாலைகளில் நூலகங்கள் வினைத்திறனற்று செயற்படுகின்ற நிலையே தற்போது காணப்படுகின்ற நிலைமை ஆகும். பாடசாலையில் நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகள் மாணவர்கள் நூலகங்களை பயன்படுத்துவது தொடர்பான பிரச்சினைகளையும் உருவாக்கியுள்ளதுடன் அவர்களது சுயகற்றல் செயற்பாட்டிலும் தாக்கத்தை ஏற்படுத்துவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

ஏறாவூர் கோட்ட பாடசாலைகளால் கல்வி பயிலும் சிரேஷ்ட இடைநிலை மாணவர்கள் தற்போது நூலகங்களைப் பயன்படுத்துவது அரிதாகிக் கொண்டு வருகிறது. இவர்களுக்கு ஒரு வாரத்தில் ஒரு நூல் பாடவேளை நூலகப் பாடமாக ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் அப்பாடவேளையில் நூலகத்திற்கு செல்வதனைத் தவிர்க்கின்றனர். அத்துடன் இந் நூலகப் பாடத்தை வேறு பாட ஆசிரியர்கள் தங்களது பாடவிடயங்களுக்காக மாணவர்களைப் பயன்படுத்துகின்றனர். மாணவர்களும் நூலகத்தைப் பயன்படுத்துவதில்லை. ஆசிரியர்களும் பயன்படுத்துவதில்லை. நூலக அமைப்பு பாடசாலையில் காணப்பட்ட போதும் நூலகப் பயன்பாட்டிற்கு முக்கியத்தவம் அளிக்கப்படவில்லை.

பாடசாலைகளில் வாரத்தில் 40 பாடவேளைகளில் ஒரு பாடவேளை நூலகப் பாடமாக ஒதுக்கப்பட்டுள்ளது. அந் நூலகப் பாடவேளையை மாணவர்கள் எவ்வாறு பயன்படுத்துகிறார்கள்? என்ற கேள்விக்கு அனேக பாடசாலைகளில் பயன்படுத்தவதில்லை என்பதே பதிலாக கிடைக்கும். பாடம் சம்மந்தமான கற்றல் கற்பித்தல் மேம்பாட்டிற்கு நூலகங்கள் பயன்படுத்திடாமையால் மாணவர்கள் நூலகத்தின் மீது எவ்வாறான மனப்பாங்கை கொண்டுள்ளார்கள் என்பதுடன் அது அவர்களது சுய கற்றலில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதனையும் அறிய வேண்டி உள்ளது.

1.3 ஆய்வின் பொது நோக்கம்

பாடசாலை நூலகங்களின் வினைத்திறன் தொடர்பாகவும் இந் நூலகங்களினை பயன்படுத்துவதில் சிரேஷ்ட இடைநிலை மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அவர்களது சுயகற்றலில் ஏற்படுத்தும் தாக்கத்தையும் கண்டறிந்து சீர் செய்வதற்கான சிபாரிசுகளை முன்வைத்தல் ஆகும்.

1.4 சிறப்பு நோக்கங்கள்

1. பாடசாலைகளின் நூலகங்களின் வினைத்திறனைக் கண்டறிதல்.
2. பாடசாலை நூலகங்களின் வினைத்திறன் செயற்பாடுகள் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றலில் ஏற்படுத்தும் தாக்கத்தினை இனங்காணல்.
3. மாணவர்களின் சுயகற்றலிற்கும் பாடசாலை நூலகங்களின் வினைத்திறன் செயற்பாடுகளுக்கும் இடையிலான தொடர்பினை மதிப்பீடு செய்தல்.
4. பாடசாலை நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளை இனங்கண்டு சுயகற்றலினை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை முன்வைத்தல்.

2.0 இலக்கிய மீளாய்வு

Gulcincribb & Hoit, (2012) ஆகியோர் மாணவர்களின் ஈடுபாடும் நூலகப் பயன்பாடும் என்ற ஆய்வில் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான மாணவர்கள் அங்கு காணப்படும் நூலகத்தை பயன்படுத்துகையில் நூலக வசதி கொண்ட நூலக வசதி கொண்டிராத பாடசாலைகளிலிருந்து வந்தவர்கள் என்பதை அறியக்கூடியதாகவும், 2009ல் துருக்கியில் 72 சதவீதமான பாடசாலைகளில் நூலகங்கள் காணப்படவில்லை என்பதாகவும், மாணவர்கள் முதலில் நூலக கலாச்சாரத்தின் எண்ணக்கருவை அறிந்து, புரிந்து கொள்ளவேண்டியதன் அவசியத்தையும் 87 சதவீதமான மாணவர்களின் கூற்றுப்படி உயர்தரப் பாடசாலைகளில் நூலகங்கள் காணப்படினும் தகவல்கள் அறிவைப் பெறுவதற்கான திருப்திகரமான நிலையில் அவைகள் காணப்படவில்லை என்பதையும் அறியக்கூடியதாக உள்ளது.

Schultz et al, (2015) ஆகியோர் பாடசாலை நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடும் மாணவர்களின் மனப்பாங்கும் என்ற ஆய்வில் பாடசாலை நூலகங்கள் பாடசாலை சமூகத்திடையே மிகவும் இன்றியமையாத கற்றல் தேவையாக இருக்கிறது. இது மாணவர்களுக்கு மட்டுமின்றி எல்லா கற்பவர்களுக்கும் இது மிகவும் முக்கியமானதாகும். பாடசாலைகளில் நூலகங்கள் மாணவர்களுக்கு இந்த உலகின் நாளுக்கு நாள் நிகழும் மாற்றங்களையும், புதிய விடயங்களையும் அறிந்து கொள்ளத் தேவையான அடிப்படைகளை வழங்குகிறது. நூலகங்களின் பிரதான இலக்கு மாணவர்களிடையே வாசிப்பதன் மூலம் தகவல்களைத் திரட்டி சமூகத்தினரிடையே மிகவும் ஆளுமையுடையவர்களாக மாற்றுதல். மாணவர்கள் சுயமாகவே தமது தற்றுணிவில் சிறந்த தீர்மானங்களை எடுப்பவர்களாகவும் மாற்றுதல். அது மட்டுமன்றி குழுவாகவும், தனித்தும் இயங்கக் கூடியவர்களாக அவர்களை மாற்றுதல். பாடசாலை நூலகங்களின் மாதிரியுருவானது உள்ளக, வெளியக மற்றும் தேசிய ஆணைக்குழுக்களின் சமனிலையான தொழில் வாய்ப்புக்களுக்கு தேவையான கற்றலுக்கான அபிவிருத்திகளை வழங்குகிறது.

Comprehensive Centre, (2011) செய்த ஆய்வில் நூலகங்கள் மூலம் நேர்மறையான தாக்கங்களை மாணவர்கள் அடைவில் காட்டமுடியும் அவை பின்வரும் வழிமுறைகளிலாகும். வலுவான நூலகத்திட்டம், போதுமான ஊழியர், வளங்கள் மற்றும் நிதிகள் என்பவை தலைமை வகிக்கின்றது. அதிக மாணவர் அடைவுகளை அவர்களின் பெரியார்களின் சமூகத்தின் சமூக பொருளாதார வர்க்கம் அல்லது கல்வி மட்டங்கள் பொருட்படுத்தாதவை. வலுவான கணனி இணையங்கள் நூலக வளங்களை வகுப்பறை

மற்றும் ஆய்வகங்களில் தொடர்பு படுத்தப்பட்டு மாணவர் அடைவில் தாக்கத்தை செலுத்துகின்றது. எங்கு பாடசாலை நூலகங்கள் பயன்படுத்தப்படுகின்றதோ அங்கு பரீட்சை பெறுபேறு அதிகரித்துக் காணப்படும்.

Lance, (2010) அவர்கள் நூலகங்கள் மாணவர் முன்னேற்றம் தொடர்பான பாடசாலையினுடைய வாசிகசாலையினதும் நூலகர்களின் பாட அடைவு மட்டம் சம்பந்தமான கண்டுபிடிப்புக்கள் என்ற ஆய்வில் பாடசாலை நூலக உத்தியோகத்தர்கள் மாணவர்களில் முன்னேற்றகரமாக இருப்பது ஆய்வின் முடிவாகும். 2002-2009 வரை 17 மாகாணங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாசிகசாலை உத்தியோகத்தர்களின் பரீட்சைப் பெறுபேறு தொடர்பைக் காட்டும் சான்றுகள் இந்த ஆய்வின் மூலமாக காட்டப்பட்டுள்ளது. பாடசாலை நாளாந்த வாழ்க்கை இந்த உறவின் மூலமாக நல்ல நிலையைக் காட்டுகிறது. உயர்ந்த மட்ட பரீட்சை முடிவுகள் அதிபரின் பாராட்டு, தொழினுட்பம், கற்பித்தல், தகவல் தொடர்பாடல், கல்வியறிவு மேலோங்கி காணப்படுகிறது. பாடசாலை சுய கணிப்பீடு, அதிபர்களினால் அத்தியாவசியமானதென மதிக்கப்படுகிறது. பல கொள்கைகளும் பயிற்சி முறைகளும் நூல்கள் மூலமாக திறமையாக மேற்கொள்ளப்பட்டது.

3.0 ஆய்வு முறையியலும் வடிவமைப்பும்

விபரண ஆய்வு முறைகளில் ஒன்றான அளவை நிலை ஆய்வுமுறை இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தியாயம் ஒன்றிற்கான ஆய்வு அறிமுகத்தில் அறிமுகம், ஆய்வின் பின்னணி, ஆய்விற்கான நியாயம், ஆய்வுப் பிரச்சினைகள் ஆய்வின் நோக்கங்கள் ஆய்வுப் பிரதேசம் என்பன தொடர்பான செயற்பாடுகள் அமைந்துள்ளன. ஆய்வுப் பிரச்சினைக்குரிய தீர்வைக் காண, ஆய்வுநோக்கங்களை உருவாக்க, ஆய்வு தொடர்பான முன்னைய அறிவு அவசியமாகும். இவ்வாய்வினை மேற்கொள்வதற்குத் தயாரிக்கப்பட்ட ஆய்வுக் கருவிகளாக வினாக்கொத்து, நேர்முகங்காணல், அவதானம் என்பன அமைந்தன. இவ்வாய்வில் அளவு மற்றும் பண்பு ரீதீயில் அமைந்த கலப்பு முறையியல் (Mixed Method) பயன்படுத்தப்பட்டுள்ளது. அளவு, எண் ரீதியிலான முறையியலாக எண்கள், புள்ளிவிபரங்கள், அட்டவணைகள், வரைபுகள், மாணவர்தொகை, வரைபடங்கள், விகிதாசாரங்கள் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன் மூலமாக புறவயத்தன்மை கொண்டதாக ஆய்வு முன்னெடுத்துச் செல்லப்படுவதுடன் தரவுகளினதும் தகவல்களினதும் நம்பகத்தையும், தகுதியையும் உறுதிப்படுத்தும் வகையில் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

3.1 மாதிரித் தெரிவு

ஆய்வாளன் ஒரு ஆய்வினை மேற்கொள்ளும் போது முழுப்பிரதேசத்திலும் ஆய்வினை மேற்கொள்வது கடினமான விடயமாகும். இலகுவாக ஆய்வினை மேற்கொள்வதற்காக மாதிரித் தெரிவு அமைதல் வேண்டும். குறித்த ஓர் ஆய்விற்காக தரவுகளை சேகரிப்பதற்காக மாதிரி எடுத்தல் முறை பயன்படுத்தப்படுகின்றது. இந்த மாதிரி எடுத்தல் பொருத்தமான முறையிலும், திருத்தமான முறையிலும் அமைதல் ஆய்விற்குச் சிறந்ததாக அமையும். ஆய்விற்கான நோக்கத்தினைக் கருத்திற் கொண்டு இங்கு உள்ள 18 பாடசாலைகளில் 7 பாடசாலைகளும் நோக்க மாதிரியில் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் 1AB, 1C மற்றும் TypeII பாடசாலை வகைகளும் உள்ளடங்குகின்றன. இவற்றில் கல்வி கற்கும் க.பொ.சாதாரண தரம்(10,11) மற்றும் க.பொ.உயர் தரம்(12,13) மாணவர்கள் 1575 பேரில் 105 பேர் 15:1 என்னும் விகிதத்திலும் , 145 ஆசிரியர்களில் 3:1 விகிதத்தில் 50 ஆசிரியர்களும் படையாக்கப்பட்ட எழுமாற்று மாதிரி மூலமாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்., 7 நூலகப் பொறுப்பாளர்கள் மற்றும் 8 அதிபர்களும் நோக்க மாதிரியில் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மொத்தமாக இவ்வாய்வுக்கென 170 பேர் ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

3.2 தரவுப் பகுப்பாய்வும் வியாக்கியானமும்

சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றலில் பாடசாலை நூலகங்களின் முக்கியத்துவம் என்னும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வை முன்னெடுப்பதற்காக ஆய்வு நோக்கத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சிறப்பு நோக்கங்களுக்கமைவாக ஆய்வு வினாக்கள் தயாரிக்கப்பட்டன. மேலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வெவ்வேறாக தயாரிக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டதோடு அதிபரிடம் நேர்முகம் காணலின் மூலம் ஆய்வுக்குத் தேவையான தரவுகள் சேகரிக்கப்பட்டன. மேலும் அவதானம் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டு அவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் Microsoft Excel மூலம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு இவை முப்பரிமாண படங்கள், சலாகை வரைபுகள், அட்டவணையாக்கம் மூலம் காட்டப்பட்டு வியாக்கியானம் செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டதுடன் கலந்துரையாடலும் மேற்கொள்ளப்பட்டது.

4.0 முடிவுகள்

4.1 பாடசாலை நூலகங்களின் வினைத்திறன் செயற்பாடுகள்

ஏறாவூர் கோட்டப் பாடசாலை நூலகங்களின் வினைத்திறன் செயற்பாடுகளை அறியும் முகமாக மாணவர்களிடமிருந்தும், நூலகப் பொறுப்பாளர்களிடமிருந்தும் வினாக்கொத்துக்கள் மூலம் தகவல்கள் பெறப்பட்டுள்ளன. மாணவர்களிடமிருந்தும், நூலகப் பொறுப்பாளர்களிடமிருந்தும் பௌதீக வளம், மனித வளம், சுயகற்றல், நூலகச் செயற்பாடுகள் தொடர்பாகவும் மேலும் நூலகப் பொறுப்பாளர்களிடமிருந்து சூழல் தொடர்பாகவும் வினாக்கொத்துக்கள் மூலம் தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

4.1.1 பௌதீகவளப்பற்றாக்குறை

நீங்கள் பயன்படுத்தக்கூடியவாறு பொருத்தமான இடத்தில் நூலகம் அமைந்துள்ளதா? எனும் வினா வினவப்பட்ட போது அதற்கு மாணவர்கள் அளித்த விடைகள் பின்வரும் அட்டவணை 4.1 இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 4.1 பொருத்தமான இடத்தில் நூலகம் அமைதல் பற்றிய விபரம்

விடையளித்த விதம்	விடையளித்தோர் தொகை	விடையளித்தோர் சதவீதம்
ஆம்	26	25
ஓரளவு	43	41
இல்லை	36	34
மொத்தம்	105	100.00

இங்கே பாடசாலை நூலகம் செயற்படுகின்ற தன்மை பற்றி ஆம் என்று 25 என்ற சதவீதமான மாணவர்களும், ஓரளவு என்று 41 சதவீதமான மாணவர்களும், இல்லை என்று 34 சதவீதமான மாணவர்களும் விடையளித்துள்ளனர். இவ்வினாவின் தொடர்ச்சியாக 1.2.1 இல் ஓரளவு, இல்லையெனில் எவ்வாறான இடத்தில் நூலகம் அமைந்துள்ளது? எனும் திறந்த வினா வினவப்பட்டபோது அதற்கு மாணவர்கள் அளித்த விடைகள் பின்வரும் அட்டவணை 4.2 இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 4.2 நூலகம் அமைந்துள்ள இடம் பற்றிய விபரம்

விடையளித்த விதம்	விடையளித்தோர்தொகை	சதவீதம்
அதிக இரைச்சலான பகுதியில்	24	30
மாணவர்களின் மலசலகூடத்திற்கு அருகில்	20	25
புறாத்தொல்லை காணப்படும் இடத்திற்கருகில்	24	30
வசதியற்ற அறையில்	11	15
மொத்தம்	79	100.00

4.2 பாடசாலை நூலகங்களின் வினைத்திறன் செயற்பாடுகள் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றலில் ஏற்படுத்தும் தாக்கத்தினை இனங்காணல்.

ஏறாவூர் கோட்டத்தில் அமைந்துள்ள பாடசாலை நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகள் மாணவர்களின் சுயகற்றலில் ஏற்படுத்தும் தாக்கங்கள் தொடர்பாக அறியும் முகமாக மாணவர்களிடமிருந்தும், நூலகப் பொறுப்பாளர்களிடமிருந்தும் வினாக்கொத்துக்கள் மூலமும், நூலகப்பாடவேளை ஆசிரியர்களிடமிருந்து நேர்காணல் மூலமும் தகவல்கள் பெறப்பட்டுள்ளன. மாணவர்களிடமிருந்து நூலகம், மனித வளம், சுயகற்றல், நூலகச் செயற்பாடுகள் தொடர்பாக கூற்றுக்கள் வடிவில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதற்காக வலுவாக ஏற்றுக் கொள்கிறேன், ஏற்றுக் கொள்கிறேன், கூற முடியாதுள்ளது, எதிர்க்கிறேன், வலுவாக எதிர்க்கிறேன் எனவும் மேலும் பொறுப்பாளர்களிடமிருந்து மாணவர்களின் சுயகற்றல் தொடர்பாகவும் வினாக்கொத்துக்கள் மூலம் தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

மாணவர்களிடம் நீங்கள் நூலகத்தில் தினசரிப் பத்திரிகைகளை வாசிப்பது தொடர்பான வினா வினவப்பட்டபோது அதற்கு மாணவர்கள் அளித்த விடைகள் பின்வரும் உரு 4.1 இல் காட்டப்பட்டுள்ளன.



உரு 4.1 மாணவர்கள் நூலகத்தில் தினசரிப் பத்திரிகை வாசித்தல்

இங்கே மாணவர்களிடம் நூலகத்தில் தினசரிப் பத்திரிகைகளை வாசிப்பது பற்றி வினவப்பட்ட போது அதிகம் என்று 17 சதவீதமான மாணவர்களும், சாதாரணம் என்று 27 சதவீதமான மாணவர்களும், குறைவு என்று 56 சதவீதமான மாணவர்களும் விடையளித்துள்ளனர்.

4.3 மாணவர்களின் சுயகற்றலிற்கும், பாடசாலை நூலகங்களின் வினைத்திறனற் செயற்பாடுகளுக்கும் இடையிலான தொடர்பினை மதிப்பீடு செய்தல்.

ஏறாவூர் கோட்டத்தில் அமைந்துள்ள பாடசாலை நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகள் மாணவர்களின் சுயகற்றலில் ஏற்படுத்தும் தாக்கங்களுக்கும் இடையிலான தொடர்புகளை அறியும் முகமாக மாணவர்களிடமிருந்து வினாக்கொத்துக்கள் மூலம் தகவல்கள் பெறப்பட்டுள்ளன.அதற்கான பின்வரும் வினாக்கள் வினவப்பட்டன. அதற்காக அவர்கள் வழங்கிய விடைகள் கீழே தரப்படுகின்றன.

பாடசாலை நூலகத்தினால் உங்களுக்கு நன்மைகள் கிடைக்கும் என்பதைப் புரிந்து நூலகத்திற்குச் செல்ல நீங்கள் ஈடுபாடு காட்டுகிறீர்கள் எனும் கூற்றுக்கு மாணவர்களின் துலங்கல்கள் உரு 4.2 இல் காட்டப்பட்டுள்ளன.



உரு 4.2 நூலகத்திற்குச் செல்ல ஈடுபாடு காட்டுதல்

இங்கே பாடசாலை நூலகத்தினால் உங்களுக்கு நன்மைகள் கிடைக்கும் என்பதைப் புரிந்து நூலகத்திற்குச் செல்ல நீங்கள் ஈடுபாடு காட்டுகிறீர்கள் என்ற கூற்றுக்கு வலுவாக ஏற்றுக்கொள்கிறேன் என்று 20 சதவீதமான மாணவர்களும், ஏற்றுக்கொள்கிறேன் என்று 28 சதவீதமான மாணவர்களும், கூற முடியாதுள்ளது என்று 6 சதவீதமான மாணவர்களும், எதிர்க்கிறேன் என்று 29 சதவீதமான மாணவர்களும், வலுவாக எதிர்க்கிறேன் என்று 27 சதவீதமான மாணவர்களும் துலங்கியுள்ளனர்.

4.4 பாடசாலை நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகளினைச் சீர்செய்து சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றலை ஏற்படுத்த தேவையான வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகள்

ஏறாவூர் கோட்டப் பாடசாலை நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகளைச் சீர் செய்து சிரேஸ்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றலை ஏற்படுத்த தேவையான வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பாக மாணவர்களிடமிருந்து வினாக்கொத்துக்கள் மூலம் தகவல்கள் பெறப்பட்டுள்ளன. அதற்காக அவர்கள் வழங்கிய விடைகள் கீழே தரப்படுகின்றன.

நூலகங்கத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என நீர் கருதும் செயற்பாடுகள் எவை எனத் திறந்த வினா வினவப்பட்டபோது அதற்கு மாணவர்கள் அளித்த விடைகள் பின்வரும் அட்டவணை 4.3 இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 4.3 நூலகத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என மாணவர்கள் கருதும் செயற்பாடுகள் பற்றிய விபரம்

விடையளித்த விதம்	விடையளித்தோர் தொகை	சதவீதம்
சமகாலத்திற்கு தேவையான நூல்கள் வேண்டும்	21	21
போதியளவு மும்மொழி சார்ந்த நூல்கள் காணப்பட வேண்டும்	17	17
நிரந்தரமான நூலக ஆசிரியர் தேவை	18	18
வாசிப்பு போட்டிகள் நடாத்தப்பட வேண்டும்	12	11
டிஜிடல் நூலகம் அமைக்கப்பட வேண்டும்	11	10
கவர்ச்சிகரமான முறையில் மாற்றியமைக்கப்பட வேண்டும்	13	13
போதிய பௌதீக வளங்கள் தேவை	05	4
நூலகக் கண்காட்சிகள் நடைபெற வேண்டும்	05	4
வாசிப்பு மாதம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் (ஒக்டோபர்)	03	2
மொத்தம்	105	100.00

இங்கு நூலகத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என மாணவர்கள் கருதும் செயற்பாடுகள் பற்றிய வினவப்பட்ட போது சமகாலத்திற்கு தேவையான நூல்கள் வேண்டும் என 20 சதவீதமான மாணவர்களும், போதியளவு மும்மொழி சார்ந்த நூல்கள் காணப்பட வேண்டும் என 17 சதவீதமான மாணவர்களும், நிரந்தரமான நூலக ஆசிரியர் தேவை என 18 சதவீதமான மாணவர்களும், வாசிப்பு போட்டிகள் நடாத்தப்பட வேண்டும் என 11 சதவீதமான மாணவர்களும், டிஜிடல் நூலகம் அமைக்கப்பட வேண்டும் என 10 சதவீதமான மாணவர்களும், கவர்ச்சிகரமான முறையில் மாற்றியமைக்கப்பட வேண்டும் என 13 சதவீதமான மாணவர்களும், போதிய பௌதீக வளங்கள் தேவை என 4 சதவீதமான மாணவர்களும், நூலகக் கண்காட்சிகள் நடைபெற வேண்டும் என 4 சதவீதமான மாணவர்களும், வாசிப்பு மாதம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் (ஒக்டோபர்) என 2 சதவீதமான மாணவர்களும் விடையளித்துள்ளனர்.

5.0 தீர்வுகளும் ஆலோசனைகளும்.

5.1 பாடசாலை நூலகங்களின் வினைத்திறன் செயற்பாடுகள்

முடிவுகள்

ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் 82.84 சதவீதமான நூலகங்கள் பெயரளவில் செயற்படுகின்றன. (இவ்வாய்வின் நூலகங்கள் ஓரளவு தான் செயற்படுகின்றன எனவும் போதியளவு தளபாடங்கள்

இல்லாதநிலை காணப்படுகின்றன எனவும், தொகுதிப்பாடம் நடைபெறும் இடமாக செயற்படுகின்றன எனவும் முடிவுகள் பெறப்பட்டுள்ளன). ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் 75 சதவீதமான முடிவுகளில் பாடசாலை நூலகங்கள் பொருத்தமான இடத்தில் அமையவில்லை முடிவுகள் பெறப்பட்டுள்ளன. (வீதிக்கு அருகில் நூலகங்கள் காணப்படுவதனால் வாகனங்களின் சத்தம் அதிகமாகவும், புறாக்களின் தொல்லை அதிகமானதாகவும், எச்சங்கள் நிரம்பியும் நூலகங்கள் காணப்படுகின்றன. மலசலகூடத்திற்கு மற்றும் வீதிக்கு அருகில் நூலகங்கள் காணப்படுவதனால் சிலவேளைகளில் துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கப்பட்டன.). ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் 80 சதவீதமான முடிவுகளில் நூலகங்களில் தேவைக்கு போதுமானளவு பௌதீகவளங்கள் காணப்படவில்லை. (மாணவர்களுக்கு போதுமானளவு தளபாடங்கள், கட்டிட வசதிகள் இல்லாத நிலையும் காணப்பட்டது)

விதப்புரைகள்

மாணவர்களின் தேவைப்பாடு கருதி பொருத்தமான சம கால நூல்களிற்கான கொள்வனவில் கவனம் செலுத்துதல்.உதவிகள் பெறக்கூடிய அரச சார்பற்ற நிறுவனங்களிடம் நூலகங்களை சிறப்பாக செயற்படுத்துவதற்கான கட்டிடங்கள், தளபாடங்கள், நூல்களிற்கான உதவிகளைக் கோரி முடிந்தளவில் பெற்றுக் கொள்ளல், நூலகத்திற்கான ஆசிரியர் நூலகத்தைத் தொடர்ச்சியாக செயற்படாத விடத்து ஏனைய ஆசிரியர்களையும் பயன்படுத்தி பாடசாலை நடைபெறும் நேரம் முழுவதும் நூலகம் திறந்திருக்க நடவடிக்கை எடுத்தல். வலயக்கல்வி அலுவலகத்திடம் பாடசாலை நூலகத்தின் நிலைமையை எடுத்துக்கூறி அரசின் நிதி உதவியை நூலகத்திற்குப் பெற்று நூலகத்தை விஸ்தரிக்க முயற்சித்தல். பாடசாலைகளில் க.பொ.த (சா.∴தர), (உ.∴தர) மாணவர்களுக்கான செயற்திட்டங்களின் மூலமும் பாடசாலைகளில் தர உள்ளீட்டு நிதியைப் பயன்படுத்தியும் முடியுமானளவு புத்தகங்களைக் கொள்வனவு செய்ய ஆவணை செய்ய வேண்டும். பாடசாலைகளின் செயற்பாடுகள் குறித்து அடிக்கடி மேற்பார்வை செய்வதனை உறுதிப்படுத்த வேண்டும்.

5.2 பாடசாலை நூலகங்களின் வினைத்திறன் செயற்பாடுகள் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றலில் ஏற்படுத்தும் தாக்கத்தினை இனங்காணல்.

முடிவுகள்

ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் 69.09 சதவீதமான முடிவுகளில பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களே நூலகத்தை செயற்படுத்துகின்றனர். ஆசிரியரது நேரசூசியின் படி அவர் கற்பிக்க வேண்டிய பாடங்கள் தவிர்ந்த நேரத்திலும், ஒதுக்கப்பட்ட நூலகப் பாடத்திற்கான வேளையிலும் மாத்திரம் தான் நூலகம் செயற்படுகின்றது. நூலகத்திற்கு பொருத்தமான ஆசிரியர் இல்லாததாலும், இடமாற்றம் பெற்று ஆசிரியர் வேறு பாடசாலைக்கு செல்வதாலும் தொடர்ச்சியாக ஒருவரால் அன்றி அடுத்தடுத்த நபர்களால் நூலகம் செயற்பட்டுவருகின்றது. நேர்த்தியான முறையில் நூலச் செயற்பாடுகளை பட்டியலாக்க, பகுப்பாக்க முறைகளில் முன்னெடுப்பதில் நூலக நடைமுறைகள் பின்பற்றப்படுவதுவும் குறைவாகவே காணப்படுகின்றது.

விதப்புரைகள்

மாணவர்களால் தொலைந்த, சேதமாக்கப்பட்ட புத்தகங்களை மீள் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்தலுடன் நூலகத்திற்கு புதிதாக நூல்கள் கொள்வனவு செய்து வழங்குதல், மாணவர்களுக்குப் பொருத்தமான நூல்களைக் கொள்வனவு செய்தல், நூலகங்களில் ஆசிரியர்களின் தொழில் முன்னேற்றத்துக்கான நூல்களையும் கொள்வனவு செய்து வழங்கல். நாளாந்தம் பத்திரிகையை நூலகத்திற்கு வாங்குவதற்காக பாடசாலைக்கு கிடைக்கும் வருவாய்களிலிருந்து நிதி உதவியை

வழங்கல். மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை தூண்டுவதற்கான விழிப்புணர்வு செயற்பாடுகள் ஏற்பாடு செய்யப்படுவதுடன் அதிபர், நூலகப் பொறுப்பாளர்களுடன் மாதத்திற்கொருமுறையாவது கூட்டங்களை நடாத்த ஆவணை செய்ய வேண்டும்.

5.3 மாணவர்களின் சுயகற்றலிற்கும், பாடசாலை நூலகங்களின் வினைத்திறனற் செயற்பாடுகளுக்கும் இடையிலான தொடர்பினை மதிப்பீடு செய்தல்.

முடிவுகள்

பாடசாலை நூலகத்தினால் நன்மைகள் கிடைக்காததினால் மாணவர்கள் நூலகத்திற்குச் செல்ல ஈடுபாடு காட்டவில்லை. நூலகத்தில் வசதிகள் இல்லாமையால் மாணவர்கள் புத்தகங்களை ஆர்வமாக வாசிக்கவில்லை. மாணவர்களின் கற்றலுக்கும் வாசிப்புக்கும் நூலகம் மகிழ்ச்சியை தரவில்லை. நூலகப் பொறுப்பாளர்களின் ஒத்துழைப்பின்மையால் மாணவர்கள் நூலகத்தில் நேரத்தை செலவிட விரும்பவில்லை. நூலகத்தில் காணப்படும் நூல்கள் சிறப்பானதாகவும், போதியளவிலும் காணப்படாததினால் மாணவர்களுக்கு பூரண திருப்தி ஏற்படவில்லை. நூலகத்தினால் தற்போதைய உலக விடயங்களை அறிய முடியாததினால் மாணவர்களுக்கு நூலகத்தின்பால் தூண்டுதல் ஏற்படவில்லை

விதப்புரைகள்

கலை, இலக்கியம், பொது அறிவு போன்றவை தொடர்பாக நூலகத்தைப் பயன்படுத்தி தேடித் தொகுப்பைப் பெற வழிகாட்டல், கதைகள் வரலாறுகள் என்பனவற்றில் ஆர்வத்தை தூண்டலுக்கான புத்தகங்களைக் காட்டி கலந்துரையாடலை மேற்கொள்ளல். மாணவர்களுக்கு நூலகத்தைப் பயன்படுத்தி செய்யக்கூடிய பாடரீதியான ஒப்படைகளை வழங்கல். புத்தகங்கள் குறைவாகக் காணப்படும் நூலகங்களில் அங்குள்ள புத்தகங்களை அறிந்து அதற்கான வினாக்களை மாணவர்களுக்கு வழங்கி நூலகத்தைப் பயன்படுத்த வழிகாட்டல். தேடல் உள்ள மாணவர் சமூகத்தை உருவாக்கும் வகையில் பாட விடயங்களுடன் மேலதிக விடயங்களையும், நாளாந்த நடைமுறைகள் தொடர்பாகவும் வினாக்களை கொடுத்தும் அதிகளவு மாணவர்கள் நூலகத்தைப் பயன்படுத்துவதனைப் ஊக்கப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

5.4 பாடசாலை நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகளினைச் சீர்செய்து சிரே்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றலை ஏற்படுத்த தேவையான வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகள்

முடிவுகள்

மாணவர்கள் நூலகத்திற்குரிய தளபாடங்கள், புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றவற்றை பயன்படுத்தும்போது உரிய முறையில் கையாளவில்லை. (நூலகத்தில் காணப்படுபவை ஒழுங்கீனமாக உள்ளது. போதியளவில் எதுவும் இல்லை) மாணவர்கள் நூலகத்திலிருந்து எடுத்துச்சென்ற புத்தகங்களை உரிய வேளையில் ஒப்படைப்பதில்லை. (மாணவர்கள் புத்தகங்களை உரிய நேரத்தில் மீளச்செலுத்துவதில் ஆசிரியர் கவனம் கொள்ளாமை. மீளச்செலுத்துவதற்கு தாமதத்தாலும் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை) மாணவர்கள் பாடசாலை நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகள் மாணவர்களில் நடத்தை மாற்றங்களை ஏற்படுத்துகின்றது என்பதை ஏற்றுக்கொண்டார்கள். நூலகங்கள்

வினைத்திறனாக செயற்படும்போது மாணவர்கள் நூலகங்களை பயன்படுத்தும் அளவு அதிகரிக்கும் என்பதை ஏற்றுக்கொண்டார்கள்.

விதப்புரைகள்

நூலகப் பொறுப்பாளர்கள் நூலகங்களை வினைத்திறனாக செயற்படுத்துவதற்கு ஏற்ற வகையில் அவர்களது வருடாந்த, நாளாந்த செயற்திட்டங்களை உருவாக்கி, ஒழுங்கமைத்து நடைமுறைப்படுத்தி மாணவர்கள் நூலகத்தை ஆர்வத்துடன் பயன்படுத்தும் மனப்பாங்கை ஏற்படுத்த வேண்டும். நூலகத்தில் மாணவர்களை அங்கத்தவர்களாக பதிவு செய்து புத்தகப் பரிமாற்றம் உரியமுறையில், உரிய வேளையில் பொருத்தமான பதிவுகளுடன் நடைபெறுவதை உறுதிப்படுத்துதல். வலயக் கல்வி அலுவலகத்தால் நூலகங்கள் செயற்படுவதை கண்காணிக், ஆலோசனைகளை வழங்க ஒருவரை நியமித்தல். வெளிநாடுகளில் பணிபுரியும் பழைய மாணவர்களிடம் நூலகத்திற்கான நிதி உதவிகளைப் பெறல் தீர்வுகளும் ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன.

மாணவர்கள் தமது சுயகற்றலுக்கு பாடசாலை நூலகத்தை பயன்படுத்துவதில் பாடசாலை நூலகங்கள் வினைத்திறனற்றுச் செயற்பாடுன்றன என்ற நிலையும் இதன் இவ்வாய்வு ஊடாக கண்டறியப்பட்டது.



மூலம் : மாணவர்களிடம் பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்டது.

உசாத்துணை

1. அருள்மொழி, செ. 2008. கல்வி ஆய்வு முறைகள், எவகிறீன் அச்சகம், மட்டக்களப்பு.
2. அந்தோணி ஜோசப், 2003. கல்வி சார் வளப்பகிர்வுகளின் பகுப்பாய்வு, கல்வி முதுமாணி யாழ்ப்பாணம்.
3. அப்துல் கரீம் முகம்மது பரீட், 2011. தமிழ் இலக்கிய நயப் பாடத்தில் உயர் அடைவை பெற்றுக் கொள்வதில் உள்ள பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகளும், கல்வி முதுமாணி பட்டைக்கற்கை ஆய்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.
4. அஸினா, மு. இ. 2016. தரம் - 5 இல் கல்வி பயிலும் மாணவர்களது மொழித்திறனில் ஒன்றான வாசிப்புத் திறனை மேம்படுத்தல், கல்வி முதுமாணி பட்டைக்கற்கை ஆய்வு, கிழக்குப்பல்கலைக்கழகம், வந்தாறுமூலை.
5. உதயகுமார், க. 2011. மாணவர்களிடையே செய்யுள் இலக்கியம் கற்றலை மேம்படுத்தல், கல்வி முதுமாணி.
6. கருணாநிதி, மு. 2005. வாசிப்புப் பழக்கத்தின் இன்றியமையாமை, அகவிழி சஞ்சிகை, ரெக்னோபிரிண்ட், கொழும்பு.
7. கருணாநிதி, மா. கற்றல் கற்பித்தல் மேம்பாட்டிற்கான வழிமுறைகள், சேமமடுப் பதிப்பகம், கொழும்பு.
8. கலாமணி, த. 2009, சுயகற்றல் திறன்களை மேம்படுத்தல், சேமமடுப் பதிப்பகம், கொழும்பு.
9. கிறிஸ்ரி டிலானி, 2014. மாணவர்களின் வாசிப்பு ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள், கல்வி முதுமாணி பட்டைக்கற்கை ஆய்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.
10. கேசவன், து. 2015. அறிவுசார் சமூகமும் வாசிப்புக் கலாசாரமும், ஆசிரியம் சேமமடு பொத்தகசாலை, கொழும்பு – 11.

11. சந்திரசேகரம், சோ. 2009. சமகால கல்வி முறைகள் ஒரு விரிநிலை நோக்கு, சேமமடுப்பதிப்பகம், கொழும்பு.
12. சபா.ஜெயராஜா, 1990 (*ILEA*). மாணவர்களின் அடைவுகள் பற்றிய மீளாய்வு, அகவிழி டொரிங்டன் அவனியு கொழும்பு 7.
13. Baughman, J.C. 2000, School Libraries and MCAS Scores, the Graduate school of Library and Information Science Simmons College, Boston Massachusetts – Http://www.doe.mass.edu/dedoscfacxts - 96html.
14. Chang, L.Y. 2007. Students' Satisfaction with the Library, Familial Reading Environments and Reading Attitudes in structural Equation Modeling Analyses, Doctoral Student of Institute of Education, Taiwan.
15. Coker, E. 2015, Certified teacher, Librarians, Library Quality and student Achievement in Washington State Public Schools, Washington Library Media Association. Http://www.k12.wa.us/assesment/statetetesting/default.asp
16. Comprehensive Centre. 2011. Impact of school libraries on student achievements. New York – Http://www.nysl.nysed.Gov/libdev/nyla/nycc - School library.
17. Lance, K.C. Marcia, J 2000. How to School Librarians Help Kids Achieve Standards. – The Second Colorado Study – Http://www/LRS.Org
18. Lance, K.C. 2005. Powerful Libraries make Powerful Learners. Illinos School Library Media Association. http:www.researchgate.net---/264971826-
19. Lance, K.C. 2010. Increased Library Staff Links to Higher CSAP Scores, Library Research Service, University of Denver – Http://www/LRS.Org
20. Lance, K.C & Hofschire, L. 2012. Change in School Librarian Staffing Linked with Change in CSAP Reading Performance, 2005 to 2011, University of Denver, Colombo – Http://www/LRS.Org.
21. Lance, K.C & bill , S. 2012. How Pennsylvania School Libraries Pay off: Investments in Student Achievement and Academic Standers. Http://paschodlibraryproject.Org/research.
22. Smith, G. E. 2001. Taxes School Libraries: Standers, Resources, Services, and Students' Performance, Taxes State Library and Archives Commission Austin. http:www.tsl.State.Tx.us/Id/School/Libs/Standerds html.
23. Shrestha, N. 2008. A Study on Students use of Library Resource and self Efficacy, tribhuban university, Nepal – www.chapin Hall.org.

நிகழ்நிலைக் கற்பித்தலினால் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

சங்கர் மீருஜா
கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
meerujasangar673@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

நிகழ்நிலைக் கற்பித்தலினால் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்னும் தலைப்பில் இவ்வாய்வு இடம்பெற்றுள்ளது. இவ்வாய்வானது இடர் காலத்தின்போதும் கற்றல் கற்பித்தலை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்நிலைக் கற்பித்தல் முறையினை ஆரம்பப்பிரிவில் நடைமுறைப்படுத்துவதில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்களை இனங்கண்டு அதனை மேம்படுத்துவதற்கான விதப்புரைகளை முன்மொழிவதனை பிரதான நோக்காகக் கொண்டு மட்டக்களப்பு கல்வி வலயத்தின் ஏறாவூர்பற்று ஒன்று கோட்டத்திற்குட்பட்ட ஆரம்பபிரிவை உள்ளடக்கிய பாடசாலைகளை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேசப் பாடசாலைகளிலிருந்து நோக்க மாதிரித் தெரிவின் அடிப்படையில் 09 பாடசாலைகளும், அப்பாடசாலைகளில் ஆரம்ப பிரிவிற்கு கற்பிக்கும் ஆசிரியர்களிலிருந்து 2:1 எனும் விகிதத்தில் 32 ஆசிரியர்களும், ஆரம்பபிரிவில் கல்வி கற்கும் மாணவர்களிலிருந்து படையாக்கப்பட்ட மாதிரித் தெரிவின் அடிப்படையில் 220 மாணவர்களும், மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களிலிருந்து 3:1 என்னும் விகிதத்தில் 73 பெற்றோர்களும் நிகழ்நிலைக் கற்பித்தலினால் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்களை இனங்கண்டு நிவர்த்தி செய்யும் வகையில் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மாதிரிகளிடமிருந்து தேவையான தரவுகளைப் பெறுவதற்காக வினாக்கொத்துக்கள், நேர்காணல் படிவம் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகள் யாவும் அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணைகள், வரைபடங்கள் என்பவற்றில் குறித்துக்காட்டப்பட்டுள்ளன. தரவுகளின் பகுப்பாய்விலிருந்து பெறப்பட்ட ஆய்வு முடிவுகளாக நிகழ்நிலைக் கற்பித்தலை மேற்கொள்ளக்கூடிய வகையில் ஆசிரியர்கள் வாண்மைத்திறன் அற்றவர்களாகக் காணப்படுகின்றமை, இவர்களுக்குப் போதுமான பயிற்சிகள் வழங்கப்படுவதில்லை, இவர்களை மேற்பார்வை செய்கின்றமை குறைவாகக் காணப்படுகின்றமை, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடம் நிகழ்நிலைக் கற்பித்தலில் ஈடுபடக்கூடிய சாதனங்கள் இல்லாத நிலை காணப்படுகின்றமை, நிகழ்நிலைக்கேற்ற வகையில் கற்பித்தல் முறைகளை மாற்றிக் கற்பிக்காத நிலை காணப்படுகின்றமை, மாணவர் பங்களிப்பு குறைவாக காணப்படுகின்றமை, பெற்றோர் பங்களிப்பு குறைவாகக் காணப்படுகின்றமை போன்ற பல பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளன. இதனால் மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தலை தொடர்ச்சியாக வழங்குவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன என்பன கண்டறியப்பட்டதுடன் அவற்றிற்கான விதப்புரைகளை முன்வைப்பது அவசியமானது.

திறவுச் சொற்கள்: நிகழ்நிலை, கற்பித்தல், ஆரம்பபிரிவு, ஆசிரியர்கள்

1.0 அறிமுகம்

1.1 ஆய்வு அறிமுகம்

இன்றைய காலகட்டத்தில் கல்வித் துறையில் உள்ளோர் அனைவருக்கும் ஆய்வானது கல்வி செயற்பாட்டை வினைத்திறனாக்குவதற்கு இன்றியமையாததாக காணப்படுகின்றது. தற்போதைய பாடசாலை கல்வி முறையானது ஆசிரியர் மைய கல்வி முறையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்கு மாற்றப்பட்டு இன்று அது நிகழ்நிலைக் கல்வி முறைக்கு மாற்றப்பட்டுள்ளது. கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் முழுக்க முழுக்க ஆசிரியர்களின் பங்களிப்புடனானது என்ற நிலையிலிருந்து ஆசிரியர்களின் உதவியோடு மாணவர்கள் அவர்களாகவே முயற்சி செய்து கற்றுக் கொள்ளுதல் என்றதொரு நிலை நிகழ்நிலைக் கற்பித்தல் முறையின் மூலம் உருவாக்கப்பட்டது. இன்றைய நவீன கல்வி முறையானது தொழில்நுட்பங்களினை மையமாகக் கொண்டிருப்பதுடன் அங்கு மாணவர்களது தேவை, விருப்பு, வெறுப்பு, வயது, ஆற்றல் என்பவற்றின் அடிப்படையில் அமைய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கற்பித்தல் முறை தொழில்நுட்பங்களை முதன்மைப்படுத்துகின்றது. இங்கு மாணவர்கள் கற்பதற்கு ஆசிரியர் வசதியளிப்பவராக இருப்பார். இந்த நன்மைகள் இருந்தபோதிலும், நிகழ்நிலைக் கற்றல் என்பது சவாலானதானதாகவே காணப்படுகின்றது.

தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு கல்வி முறை அமைந்திருப்பதால் அதற்கேற்ப ஆசிரியர்கள் பொறுப்புக்களும் கடமைகளும் இன்று எண்ணிக்கையில் பெருகி விரிவடைந்துள்ளது. நிகழ்நிலை கற்பித்தல் வகுப்புக்களை மேற்பார்வையிடுதல், கற்றலுக்கேற்ப நிகழ்நிலையில் வகுப்பறைச் சூழ்நிலையைத் தோற்றுவித்தல், நிகழ்நிலை கற்றலுக்கு மாணவர்களை ஊக்குவித்தல், நிகழ்நிலையில் பாடப்பொருள் விவரங்களை தெளிவாக அறிமுகப்படுத்தல், செயல்பாடுகளை திட்டமிடல், கற்றலில் எழும் இடர்பாடுகளை களைதல், மாணவரது கல்வி முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தல், வழிகாட்டல் ஆலோசனைச் சேவைகளை வழங்கல் போன்ற பல்வேறு பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

ஆகவே மட்டக்களப்பு கல்வி வலயத்தில் ஏறாவூர்பற்று ஒன்று கோட்டத்தில் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கற்றல் கற்பித்தல் திறனை மேம்படுத்துவதில் பாரிய சவால்கள் உள்ளன. நிகழ்நிலைக் கற்பித்தலினால் ஆரம்பபிரிவு ஆசிரியர்கள் பல சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அந்தவகையில் நிகழ்நிலைக் கற்பித்தலினால் ஆரம்பபிரிவு ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள் எனும் தலைப்பில் மட்டக்களப்பு கல்வி வலயத்தின் ஏறாவூர்பற்று ஒன்று கோட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஆரம்ப வகுப்பு மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

1.2 ஆய்வுப்பிரச்சினை

மட்டக்களப்பு கல்வி வலய ஏறாவூப்பற்று - 1 கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளை மையமாக கொண்டு நிகழ்நிலைக் கற்பித்தலினால் ஆரம்பபிரிவு ஆசிரியர்கள் எதிர்நோக்குகின்ற சவால்களை ஆராய்வதாக இந்த ஆய்வு அமைகின்றது.

மனித வாழ்வின் அடிப்படையாக ஆரம்பக் கல்வியானது அமைகின்றது. ஆரம்பக் கல்வியானது சிறந்த முறையில் வழங்கப்பட்டாலேதான் அம்மாணவனால் தனது உயர் கல்வியை சிறந்த முறையில் முன்னெடுக்க முடியும். ஆனால் பெருந்தொற்றின் காரணமாக கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் முடக்கப்பட்டன. ஆகவே ஆய்வுப் பிரதேசத்தில் ஆரம்பபிரிவிற்கான நிகழ்நிலைக் கற்பித்தல் சார்ந்து பல்வேறு பிரச்சினைகள் இனங்காணப்பட்டது. இதனை ரஜனி.மா(2020) கொவிட் பெருந்தொற்றின் தாக்கம் காரணமாக கற்றல் கற்பித்தல் நிலைமைகளில் ஏற்பட்ட சடுதியான மாற்றங்கள் காரணமாக ஆரம்ப மற்றும் இடைநிலைப் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் அவர்கள் முன்னெப்போதும் அனுபவித்திராத புதிய கற்றல் கற்பித்தல் சூழமைவினுள் வலிந்து தள்ளப்பட்டுள்ளனர். பயிற்சியின்மை, நிகழ்நிலைக் கற்பித்தல் தொடர்பான போதிய அனுபவமின்மை, தயார்படுத்தலுக்கான போதிய அவகாசமின்மை, தொழிநுட்ப அறிவிலான போதாமைகள், இணைய வசதிகளின்மை, இணைய வழங்கல்களைப் பெற்றுக் கொள்வதற்கான பொருளாதார பிரச்சினைகள், வீட்டில் இணையவழிக்கற்பித்தலில் ஈடுபடுவதற்கான பொருத்தமான சூழல் இல்லாமை போன்ற பல்வேறு சவால்களை ஆசிரியர்கள் எதிர்நோக்கியுள்ளனர் என தனது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.

ஆய்வுப்பிரச்சினை கூற்று

மட்டக்களப்பு கல்வி வலயத்தின் ஏறாவூர் பற்று ஒன்று கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் ஆரம்ப வகுப்பிற்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் நிகழ்நிலை கற்பித்தலை நடைமுறைப்படுத்தி

அக்கற்பித்தல் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதில் பல்வேறு வகையான சவால்களை எதிர் நோக்குகின்றனர்.

1.3 பொது நோக்கம்

இடர் காலத்தின்போதும் கற்றல் கற்பித்தலை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்நிலைக் கற்பித்தல் முறையினை ஆரம்பப்பிரிவில் நடைமுறைப்படுத்துவதில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்களை இனங்கண்டு அதற்கான தீர்வினை முன்வைத்தல்.

1.3.1 சிறப்பு நோக்கங்கள்

1. நிகழ்நிலைக் கற்பித்தல் முறையில் ஆசிரியர்கள் ஈடுபடுகின்றார்களா என்பதனை கண்டறிதல்.

2. நிகழ்நிலைக் கற்பித்தலில் ஆசிரியர் பயன்படுத்தும் கற்பித்தல் முறைகளை இனங்காணல்.

3. நிகழ்நிலைக் கற்பித்தலில் ஆசிரியர் மாணவர் இடைத்தொடர்பை பகுப்பாய்வு செய்தல்.

4. நிகழ்நிலைக் கற்பித்தலை மேற்கொள்வதனூடாக ஆசிரியர் எதிர்கொள்ளும் சவால்களை மதிப்பீடு செய்தல்.

5. நிகழ்நிலைக் கற்பித்தலினால் ஏற்படுகின்ற சவால்களுக்கான தீர்வாலோசணைகளை முன்வைத்தல்.

2.0 இலக்கிய மீளாய்வு

Fullan, Quinn, Drummy, Gardner, 2020 என்பவர்களின் கருத்தின்படி கொவிட் தொற்றினைத் தொடர்ந்து ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே உலகலாவிய ரீதியில் முறைமைத் தலைவர்கள் (system leaders), கல்வியலாளர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் வியத்தகுந்த வகையில் மாற்றங்களுக்கு ஈடு கொடுத்து நிகழ்நிலைக் கற்றலை நோக்கி நகர்வதற்கு முனைப்புக் கொண்டனர். இதனடியாக நேரடிப் பிரசன்னத்தில் இடம்பெற்றுக் கொண்டிருந்த கல்விச் செயற்பாடுகள் அத்தனையும் நோய்த்தொற்றை தவிர்க்கும் வகையில் நிகழ்நிலைக் கல்விச் செயற்பாடுகளாக இடம்பெற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

Dubey and Singh 2020 கருத்தின்படி கொரோனா தொற்றின் போது ஒட்டுமொத்த ஆசிரியர்களும் நிகழ்நிலைக் கல்வியைப் பற்றிய நேர்மறையான கருத்தைக் கொண்டுள்ளனர் என்றும் இளம் ஆசிரியர்கள் நிகழ்நிலைக் கற்பித்தலில் மிகவும் தீவிரமாக ஈடுபடுகின்றனர் என்றும் குறிப்பிடுகின்றனர். மேலும் நிகழ்நிலைக் கற்பித்தல் ஆசிரியர்களின் அறிவை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அவர்களின் தொழில்நுட்ப திறன்களையும் மேம்படுத்துகின்றதென்று குறிப்பிட்டாலும் இது ஆசிரியர்களது வேலை நேரத்தை அதிகரிப்பதோடு, ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான இடைவெளியை அதிகரிக்கின்றது என்று குறிப்பிடுகின்றனர்.

Sangeetha and tendon,2020 கருத்தின் படி வழக்கமான கற்பித்தலிலிருந்து நிகழ்நிலைக் கற்பித்தலுக்கு மாறுவதில் ஆசிரியர்களின் கண்ணோட்டத்தில் பல்வேறு சிக்கல்களைக்

குறிப்பிடுகின்றனர். அதாவது மாணவர்களை ஈடுபடுத்தல், ஆன்லைன் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் பங்கேற்க அவர்களை ஊக்கவித்தல் மற்றும் கற்பித்தலுக்கான தரமான உள்ளடக்கத்தை உருவாக்குதல், செயலிகளைத் தரவிறக்குவதில் சிக்கல்கள், பயன்பாட்டை நிறுவுவதில் சிரமங்கள், மோசமான இணைய இணைப்பு, உள்நுழைய கடவுச்சொல் சிக்கல்கள், செவிக்கு புலப்படாத குரல் மற்றும் தெளிவற்ற வீடியோ தொடர்பு போன்ற பல தொழிநுட்ப சவால்கள் உள்ளன என்கின்றனர்.

Sareen and Nangia, 2020 கருத்தின்படி சில ஆசிரியர்கள் நிகழ்நிலையில் கற்பிப்பதில் நம்பிக்கை மற்றும் ஊக்கமளிக்கும் முன்னோக்கைக் கொண்டிருந்தாலும் போதிய பயிற்சி மற்றும் நிகழ்நிலையில் கற்பிப்பதில் திறமை இல்லாததால் வழக்கமான வகுப்பறைக் கற்பித்தலில் சிறப்பாகக் கற்பிக்க முடியும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

3.0 ஆய்வு முறையியல்

ஆய்வு முறையியல் சிறப்பானதாக காணப்படும் பட்சத்திலேயே தீர்வுகள் நம்பகத்தன்மையாக அமையும். இவ்வாய்வில் எண், அளவு ரீதியான முறையியல்களும், பண்பு ரீதியான முறையியல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எண் ரீதியான முறையியலினுள் எண்கள், அட்டவணைகள், வரைபடங்கள், மாணவர் தொகை, விகிதங்கள் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் புறவயத்தன்மையாக ஆய்வு கொண்டு செல்லப்படுகின்றது.

ஆய்வு தொடர்பான கோட்பாட்டு ரீதியான உறுதிப்படுத்தலுடன் தொடர்பு கொண்டதாக பண்பு ரீதியான முறையியல் காணப்படுகின்றது. இங்கு சம்மந்தப்பட்ட பாடசாலைகளில் ஆசிரியர்கள், அதிபர்களிடத்தில் வினாக்கொத்து மூலமாகவும், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களிடத்தில் நேர்காணல் மூலமாகவும் பெறப்பட்ட தகவல்கள், அபிப்பிராயங்கள், எண்ணங்கள், வெளிப்பாடுகள் போன்ற அகவய உணர்வுகளும் ஆய்வில் கருத்திற் கொள்ளப்படுகின்றன.

இதன்படி அளவுரீதியான, பண்புரீதியான விடயங்களை அடிப்படையாக கொண்டு இவ்வாய்வு அமைவதால் இவ்வாய்வில் கலப்பு ஆய்வு வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு வினாக்கொத்து மற்றும் நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவுகள் அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் அமைவதால் இது ஒரு அளவை நிலை ஆய்வாக அமைந்துள்ளது.

3.1 மாதிரித் தெரிவு

இதனடிப்படையில் இவ்வாய்வானது ஏறாவூர்ப்பற்று - 1 கல்விக்கோட்டத்திலுள்ள பாடசாலைகளை மையமாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏறாவூர்ப்பற்று - 1 கோட்டத்தில் 1 1AB பாடசாலை, 4 1C பாடசாலைகள், 3 வகை II பாடசாலைகள், 2 வகை III பாடசாலைகள் என மொத்தமாக 10 பாடசாலைகள் காணப்படுகின்றன. ஆய்வின் பொருத்தப்பாடு கருதி ஏறாவூர்பற்று - 1 கோட்டத்திலுள்ள ஆரம்பபிரிவை உள்ளடக்கிய 09 பாடசாலைகள் நோக்க மாதிரி அடிப்படையில் ஆய்வினை மேற்கொள்ளும் பொருட்டு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஆய்வுக்குத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஆரம்ப பிரிவிற்கு கற்பிக்கும் ஆசிரியர்களிலிருந்து 2:1 எனும் விகிதத்தில் 32 ஆசிரியர்களும், ஆரம்பப் பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களின் தொகை 1,174 ஆகும். இம்மாணவர்களின் பல்லினத் தன்னை கொண்ட குடித்தொகை காணப்படுகின்றமையால், படையாக்கப்பட்ட மாதிரியின் அடிப்படையில் படையாக்கப்பட்டு ஆய்வுக்காக 220 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். மாதிரியாக தெரிவு செய்யப்பட்ட 220 மாணவர்களிலிருந்து 3:1 என்ற விகித அடிப்படையில் 73 பெற்றோர் ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறான மாதிரிகளின் அடிப்படையில் இவ்வாய்வானது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

4.0 தரவுப் பகுப்பாய்வுகள்

4.1 நிகழ்நிலைக் கற்பித்தல் முறையில் ஆசிரியர்கள் ஈடுபடுதல்

நிகழ்நிலைக் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றீர்களா என்பதனை அறியும் பொருட்டு ஆசிரியர்களிடமும் வினவப்பட்டது. 25 சதவீதமான ஆசிரியர்கள் ஆம் எனக் குறிப்பிட்டனர். காணப்படுகின்றது. 50 சதவீதமான ஆசிரியர்கள் ஓரளவு எனக் குறிப்பிட்டனர். 25 சதவீதமான ஆசிரியர்கள் இல்வை எனக் குறிப்பிட்டனர். இதன் அடிப்படையில் நோக்குகின்ற போது அதிகளவான ஆசிரியர்கள் நிகழ்நிலைக் கற்பித்தலில் ஈடுபடாததையே அறிய முடிகின்றது.



உரு 4.1: ஆசிரியர்கள் நிகழ்நிலைக் கற்பித்தலில் ஈடுபடாமைக்கான காரணங்கள் பற்றிய ஆசிரியர்களின் கருத்து.

உரு 4.1 இன்படி அதற்கான காரணத்தை வினவிய போது 42 சதவீதமான ஆசிரியர்கள் ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கு பொருத்தமற்ற கற்பித்தல் முறையாகக் காணப்படுகின்றதனைக் குறிப்பிட்டுள்ளனர். இதனைத்தவிர வேறு காரணங்களாக தகவல் தொழில்நுட்ப அறிவு போதாமை, இணைய இணைப்புச் சிக்கல்கள், நிகழ்நிலைக் கற்பித்தலுக்கான சாதனங்கள் இல்லாமை என்பனவற்றைக் குறிப்பிட்டுள்ளனர். அந்தவகையில் அதிகமானோர்(42%) ஆரம்பபிரிவு மாணவர்களுக்கு பொருத்தமற்ற கற்பித்தல் முறையாக காணப்படுகின்றதனையே காரணங்காட்டியுள்ளனர்.

4.2 நிகழ்நிலைக் கற்பித்தலில் ஆசிரியர் பயன்படுத்தும் கற்பித்தல் முறைகளை இனங்காணல்

ஆசிரியர்களிடம் நிகழ்நிலை கற்பித்தலில் எவ்வாறான கற்பித்தல் முறைகளை மேற்கொள்கீன்றார்கள்? எனும் வினாவை வினாவிய போது அதற்கு அவர்கள் அளித்த பதில்களை கீழ்வரும் உருவின் மூலம் அறியலாம்.



உரு 4.2 நிகழ்நிலைக் கற்பித்தலில் பயன்படுத்தும் கற்பித்தல் முறைகள் தொடர்பான ஆசிரியர்களின் கருத்து

உரு 4.2 இன்படி அடிப்படையில் பார்க்கின்றபோது மாணவர்களுக்கு ஆசிரியர்கள் அதிகளவில் பாரம்பரிய கற்பித்தல் முறையான விரிவுரை முறை, வினாவிடை முறை போன்றவற்றை பயன்படுத்தியே கற்பிக்கின்றனர் என்பது தெளிவாகின்றது.

4.3 நிகழ்நிலை கற்பித்தலில் ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையிலான இடைவினை



உரு 4.3 நிகழ்நிலைக் கற்பித்திலில் ஆசிரியர் மாணவர் இடைத்தொடர்பை இனங்காணல்

உரு 4.3 இன்படி நோக்குகின்ற போது நிகழ்நிலைக் கற்பித்தலின் போது ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு இடையிலான இடைத்தொடர்பானது குறைவான அளவிலேயே காணப்படுகின்றதனை வெளிக்காட்டுகின்றது.

4.4 நிகழ்நிலைக் கற்பித்தலில் ஆசிரியர் எதிர்நோக்கும் சவால்கள்



உரு 4.4 நிகழ்நிலைக் கற்பித்தலின் போது ஆசிரியர் எதிர் நோக்கும் சவால்கள் தொடர்பான ஆசிரியர்களின் கருத்து

உரு 4.5இன்படி நோக்குகின்ற போது ஆய்வுப் பிரதேச பாடசாலையின் ஆசிரியர்கள் இவ்வாறான சவால்களை நிகழ்நிலைக் கற்பித்தலின் போது எதிர்கொள்கின்றனர் என்பது தெளிவாகுகின்றது.

4.5 நிகழ்நிலை கற்பித்தல் வெற்றியளிப்பதற்கான வழிகாட்டல் ஆலோசனைகள்



உரு 4.5 நிகழ்நிலைக் கற்பித்தல் வெற்றியளிப்பதற்கு ஆசிரியர்கள் முன்வைத்த கருத்துக்கள்

உரு 4.5 இன்படி நோக்குகின்ற போது இவ்வாறான செயற்பாடுகள் திறம்பட மேற்கொள்ளப்படுகின்ற போது ஆய்வுப் பிரதேசத்தில் நிகழ்நிலைக் கற்பித்தலை திறம்பட மேற்கொள்ள முடியும்.

5.0 முடிவுகளும் விதப்புரைகளும்.

5.1 நிகழ்நிலைக் கற்பித்தல் முறையில் ஆசிரியர்கள் ஈடுபடுகின்றார்களா என்பதனை கண்டறிதல்.

முடிவுகள்

- சிறந்த கற்பித்தல் முறையாக 78%மான அதிபர்களும், 93.8%மான ஆசிரியர்களும் வகுப்பறை மையக் கற்பித்தலை கருதுகின்றனர்.
- ஆய்வுக்குற்பட்ட பாடசாலையில் 25%மான ஆசிரியர்கள் நிகழ்நிலைக் கற்பித்தலில் ஈடுபடாமை கண்டறியப்பட்டுள்ளது. 75%மான ஆசிரியர்கள் மரபுரீதியான கற்பித்தலில் தங்கியிருக்கும் நிலை காணப்படுகின்றது.
- நிகழ்நிலை கற்பித்தல் தொடர்பாக 75%மான ஆசிரியர்கள் போதுமான அளவு விளக்கத்தைக் கொண்டிராத நிலை காணப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.
- நிகழ்நிலை கற்பித்தல் தொடர்பில் மிகவும் 25%மான ஆசிரியர்களே அறிந்துள்ளனர்.
- ஆய்விற்குற்பட்ட பாடசாலைகளில் நிகழ்நிலை கற்பித்தலை நடைமுறைப்படுத்துவதற்கான நோக்கங்கள் பற்றி அறிந்துள்ள போதிலும் அதனை அடையக்கூடிய வகையில் ஓரளவிலேயே பாடசாலைகள் காணப்படுகின்றன.
- நிகழ்நிலை கற்பித்தலில் ஆசிரியர்கள் வளவாளர்களாக செயற்பட வேண்டும். ஆய்வுக்குட்பட்ட பாடசாலைகளில் ஆசிரியர்கள் வளவாளர்களாகச் செயற்படுவது 22% எனும் அடிப்படையில் குறைவான நிலையிலுள்ளது.

விதப்புரைகள்

- இன்றைய தொழில்நுட்ப உலகில் பல்வேறு துறைகளிலும் மாற்றங்கள் இடம்பெற்ற வண்ணமுள்ளன. இதில் கல்வியும் விதிவிலக்கல்ல. எனவே ஒவ்வொருவரும் தமது தேவையை பூர்த்தி செய்யும் வகையிலான கல்வியை வழங்குவது அவசியமாகும். இடர்கால சூழல்களில் மாணவர்களது கல்விச் செயற்பாடுகள் தடைபடாது தொடர்வதற்கு நிகழ்நிலைக் கற்பித்தல் முறை துணை நிற்கின்றது. இன்று ஆசிரியரின் வகிபாகமானது ஆசிரியர் மையத்திலிருந்து மாணவர் மையத்திற்கு மாற்றமடைந்து அது இன்று நிகழ்நிலை நோக்கியதாக காணப்படுகின்றது. ஆகவே கால மாற்றத்திற்கேற்ப கற்றல் கற்பித்தலில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பில் பூரண விளக்கத்தினை ஆசிரியர் மத்தியிலும் மாணவர்கள் மத்தியிலும் ஏற்படுத்துவது அவசியமாகும்.
- இன்று உலகமே தொழில்நுட்ப கற்றல் கற்பித்தலுக்கு முன்னேறிக் கொண்டு செல்கின்றது. ஆகவே எமது மாணவர்களும் அது நோக்கி முன்னேறிச் செல்லுதல் வேண்டும். அப்போதுதான் தொழில்நுட்ப உலகிற்கேற்ற மாணவர் சமூதாயத்தை உருவாக்க முடியும். இதன் முக்கிய பங்காளிகளாக ஆசிரியர்களே காணப்படுகின்றனர். ஆகவே பயிற்சி செயலமர்வுகள் மூலம் அது தொடர்பான பூரண விளக்கத்தினை ஆசிரியர்களுக்கு வழங்குவதுடன் ஆசிரியர்கள் மூலமாக மாணவர்களுக்கு நிகழ்நிலை

கல்வி தொடர்பான விளக்கத்தினை ஏற்படுத்த வேண்டும். இதற்கு ஆசிரியர்கள் ஒத்தாசை நல்க வேண்டும்.

- நிகழ்நிலை கற்பித்தலின் மூலம் மாணவர்களிடத்தில் புதிய விடயங்களைத் தேடும் ஆற்றல், சுயமாக கற்றலில் ஈடுபடக்கூடிய திறன், ஆளுமை விருத்தி, தனியாள் வேறுபாடுகள் இனங்காணப்பட்டு அதற்கேற்ப இடம் பெறுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. அத்துடன் பிள்ளைகள் மனனம் செய்யும் கல்வி முறையிலிருந்து விடுபட்டு செயல்படுபவர்களாக மாற்றமடைய இந்நிகழ்நிலைக் கற்பித்தலின் பயன் உணர்ந்து செயற்பட வேண்டும்.

5.2 நிகழ்நிலையில் ஆசிரியர்களது கற்பித்தல் முறைகளை இனங்காணல்

முடிவுகள்

- ஆய்விற்குற்பட்ட பாடசாலை ஆசிரியர்களில் 56%மானோர் நிகழ்நிலைக் கற்பித்தலுக்காக Whatsapp செயலியை பயன்படுத்துகின்றனர். 31%மானோர் நிகழ்நிலைக் கற்பித்தலுக்காக Zoom செயலியை பயன்படுத்துகின்றனர். 13%மானோர் நிகழ்நிலைக் கற்பித்தலுக்காக Viber செயலியை பயன்படுத்துகின்றனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது.
- 66%மான ஆசிரியர்கள் பழைய கற்பித்தல் முறைகளான விரிவுரை முறையிலேயே நிகழ்நிலையில் கற்பித்தலை மேற்கொள்கின்றார்கள்.
- ஆசிரியர்கள் கோப்புக்களை பகிர்வதன் மூலம் நிகழ்நிலைக் கற்பித்தலை நடாத்துகின்ற தன்மையானது ஆய்வுப் பிரதேசப் பாடசாலைகளில் 100%மாகக் காணப்படுகின்றது.
- ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கு பொருத்தமற்ற கற்பித்தல் முறையினை மேற்கொள்ளுதல்.

விதப்புரைகள்

- நிகழ்நிலைக் கற்பித்தலை மேற்கொள்வதற்காக பல்வேறு செயலிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறான செயலிகளை பொருத்தப்பாடு கருதி பயன்படுத்தி கற்பித்தலை மேற்கொள்ளலாம்.
- நிகழ்நிலைக் கற்பித்தலுக்கான புதிய மற்றும் வினைத்திறனான கற்பித்தல் முறைகளினை (குழுமுறைக் கற்பித்தல்) மேற்கொள்ளுதல் வேண்டும்.
- நிகழ்நிலைச் செயலிகளில் பல்வேறு நுட்பங்கள் காணப்படுகின்றன. அவற்றை பயன்படுத்தி கற்பித்தலினை உயிரோட்டமானதாக மாற்றலாம்.
- நிகழ்நிலை கற்பித்தல் சார்ந்த பயிற்சிகள் ஆசிரியர்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.

5.3 நிகழ்நிலை கற்பித்தலில் ஆசிரியருக்கும் மாணவர்களுக்குமான இடைவினை

முடிவுகள்

- ஆய்வுப் பிரதேசத்தில் 31%மான ஆசிரியர்களின் கருத்தின்படி மாணவர்கள் விருப்புடன் நிகழ்நிலைக் கற்றல் கற்பித்தலில் ஈடுபடுதல் ஓரளனவானதாகவே காணப்படுகின்றது.
- மாணவர்களின் மந்தமான வரவு காரணமாக ஆசிரியர்கள் கற்பிக்கும் போது கற்றலில் ஓரளவாகவே கவனத்தை செலுத்துகின்றனர்.
- 50%மான ஆசிரியர்களின் கருத்தின் படி மாணவர்கள் சந்தேகங்களை கேட்பதற்கான சந்தர்ப்பங்களை ஆசிரியர்கள் வழங்குகின்ற போதிலும் அதனை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்வது குறைவானதாகவே காணப்படுகின்றது.
- நிகழ்நிலைக் கற்பித்தலின் போது மாணவர்கள் வீடியோவை முடக்கி வகுப்புக்களில் இருப்பதன் காரணமாக யார் வகுப்பில் உள்ளார்கள் என்பதனை ஆசிரியரால் இனங்காண்பது என்பது கடினமானதாகும். இதனால் மாணவர்கள் தொடர்பில் ஆசிரியரினால் தனிக்கவனம் செலுத்தப்படுவது குறைவான நிலையில் காணப்படுகின்றது.

விதப்புரைகள்

1. நிகழ்நிலை கற்பித்தலில் ஆசிரியர்கள் ஒரு வசதியளிப்பவராக காணப்படுவதுடன் மாணவர்களின் செயல்பாடுகளே இங்கு முக்கியத்துவம் பெறுகின்றதாக காணப்பட வேண்டும். மாணவர்கள் தானாக முன்வந்து செயல்படுவதற்கான ஊக்குவிப்புக்களை ஆசிரியர்கள் வழங்குதல் வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களை நிகழ்நிலையில் ஆசிரியர்கள் வழங்கும் போது அவற்றை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இங்கு மாணவர்களின் தேடலே முக்கியமானதாக காணப்படும். ஆகவே மாணவர்கள் முன்வந்து செயற்படும் நிலையை மாணவர்களிடத்தில் ஏற்படுத்துவதன் மூலமே ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வினை ஏற்படுத்த முடியும்.
2. மாணவர்களின் கூச்சசுபாவங்களை அகற்றி கேள்விகளைக் கேட்க முன்வருதலை ஏற்படுத்துவதுடன் அனைத்து மாணவர்களுக்கும் சந்தர்ப்பங்களை தனித்தனியாகவும் வழங்க வேண்டும். அத்துடன் முன்வந்து செயற்பட்ட மாணவர்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்க வேண்டும். அதன்படி மீளவலியுறுத்தல் செயற்பாடுகளை ஏற்படுத்த வேண்டும்.

5.4 நிகழ்நிலை கற்பித்தல் முறையை நடைமுறைப்படுத்துவதிலுள்ள சவால்கள்

முடிவுகள்

- நிகழ்நிலைக் கற்றல் கற்பித்தல் சிறந்த முறையில் இடம்பெற வேண்டுமாயின் அங்கு மாணவரின் வரவு இன்றியமையாததாகும். இந்தவகையில் நோக்குகின்ற போது 88%மான ஆசிரியர்களின் கருத்தின் படி நிகழ்நிலைக் கற்பித்தலின் போது மாணவர்களின் வரவு குறைவான நிலையில் காணப்படுகின்றது.
- இன்றைய விஞ்ஞான தொழில்நுட்ப உலகில் மாணவர்கள் சுய கற்றலில் ஈடுபடுவது அவசியமாகும். ஆய்வுக்குட்பட்ட பிரதேசத்தில் 78%மான ஆசிரியர்களின் கருத்தின் படி மாணவர்கள் சுய கற்றலில் ஈடுபடுவதில் அக்கறையற்றவர்களாக காணப்படுகின்றனர்.

- நிகழ்நிலைக் கற்றல் கற்பித்தல் செயல்பாட்டின் போது மாணவர்களிடமிருந்து பின்னூட்டல் பெறுவது என்பது பின் தங்கிய நிலையில் காணப்படுகின்றது.
- நிகழ்நிலைக் கற்பித்தலின் போது மதிப்பீடுகளை மேற்கொள்வதில் ஆசிரியர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

விதப்புரைகள்

- மாணவர்களின் வரவு தொடர்பில் அதிபரின் துணையுடன் அடிக்கடி பெற்றோர்களைத் தொடர்புக்கொண்டு ஆசிரியர்கள் கலந்துரையாடுதல் வேண்டும்.
- மாணவர்கள் சுய கற்றலில் ஈடுபடும் வகையில் பாடசாலைகளில் காணப்படும் வழிகாட்டல் ஆலோசனைப் பிரிவின் உதவியுடன் மாணவர்களுக்கான வழிகாட்டல்களை ஏற்படுத்த வேண்டும். அத்துடன் அனைத்து பாடசாலைகளிலும் வழிகாட்டல் ஆலோசனைப் பிரிவை அமைப்பதுடன் அதனைச் சிறந்த வகையில் செயற்படுத்த வேண்டும்.
- நிகழ்நிலைக் கற்றல் கற்பித்தலுக்கேற்ற வகையில் ஆசிரியர்கள் பாடக்குறிப்பினைத் தயாரிப்பதற்கும் அவற்றை சிறந்த முறையில் கொண்டு செல்வதற்கும் ஏற்ற வகையிலான பயிற்சிகள் மற்றும் ஆலோசணைகளை அதிபர் பெற்றுக் கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாது பாடக்குறிப்பிற்கு ஏற்ற வகையில் பாடங்களை திட்டமிட்டபடி கற்பிக்கின்றனரா என்பதை நிகழ்நிலை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறும் வேளைகளில் அதிபர் சென்று மேற்பார்வை மேற்கொள்வதன் மூலம் கண்டு கொள்ள வேண்டும்.

5.5 நிகழ்நிலை கற்பித்தல் வெற்றியளிப்பதற்கான வழிகாட்டல் ஆலோசனைகள்

முடிவுகள்

- ஆய்வுக்குற்பட்ட பாடசாலைகளில் ஓரளவே நிகழ்நிலைக் கற்பித்தலை வளப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- நிகழ்நிலைக் கற்றல் கற்பித்தலில் பங்குபற்றாத மாணவர்களுக்கான வேறு வழியில் கற்பித்தல் செயற்பாட்டினை முன்னெடுப்பது தொடர்பில் ஆசிரியர்கள் அக்கறையற்றவர்களாக இருக்கின்றனர்.

விதப்புரைகள்

- நிகழ்நிலைக் கற்பித்தல் சார்ந்து ஆசிரியர்களுக்கு நடாத்தப்படும் வாண்மை விருத்திக் கருத்தரங்குகளில் ஆசிரியரின் வரவு கட்டாயமாக்கப்பட வேண்டும்.
- ஆசிரியர்களின் வினைத்திறனான கற்பித்தலில் தேவையான வளங்களை பெற்றுக்கொள்ள அதிபர்கள் தமது ஒத்துழைப்பினை வழங்க வேண்டும்.

உசாத்துணை

1. அருள்மொழி. செ, 2016 கல்வி ஆய்வு முறைகள், சத்தியா அருள்மொழி, 515 14A, திருகோணமலை வீதி மட்டக்களப்பு.
2. இராமசந்திரன் நிர்மலன், (2020), இலங்கையில் இணையக் கற்றலிலுள்ள சவால்கள். Retrieved from: http://thinakkural.lk/article/5882
3. Ministry Of Education. (2020). preparing institutions to prevent of spreading COVID - 19 (Circular Number: 2020/15). Isurupaya, Srilanka: Ministry of education. Retrieved June 11, 2020, from http://moe.gov.lk/web/images/circulars/2020/S/1589277734-2020-15s.pdf
4. Adnan, M., & Anwar, K, (2020), Online learning amid the COVID-19 pandemic: Students' perspectives. Journal pedagogical Sociology and psychology.
5. Basilaia, G., & Kvavadze, D. (2020). Transition to Online Education in Schools during a SARS-CoV-2 Coronavirus (COVID-19) Pandemic in Georgia. Pedagogical Research, 5(4), em0060. https://doi.org/10.29333/pr/7937
6. Cheng, Xiaoqiao, Challenges of 'School's Out, But Class's on' to School Education: Practical Exploration of Chinese Schools during the COVID-19 Pandemic (March 31, 2020). Sci Insigt Edu Front 2020; 5(2):501-516.. Available at SSRN: https://ssrn.com/abstract=3565605 or http://dx.doi.org/10.2139/ssrn.3565605
7. Examining K-12 teachers' feelings, experiences and perspectives regarding online teaching during the early stage of the COVID-19 pandemic Yunjo An, Regina Kaplan-Rakowski, LeaAnne Daughrity Show authors Educational Technology Research and Development volume69, pages 2589–2613(2021) Citethisarticle https://link.springer.com/article/10.1007/s11423-021-10008-5
8. Fullan, M., Quinn, J., Drummy, M., Gardner, M. (2020), "Education Reimagined; The Future of Learning". A collaborative position paper between New Pedagogies for Deep Learning and Microsoft Education. http://aka.ms/HybridLearningPaper
9. Gamage, S. (2020, May 15). What did we learn about distant education during the lockdown? Retrieved June 16, 2020, from http://www.ft.lk/columns/What-did-we-learn-about-distant-education-during-the-lockdown/4-700217
10. Halupa, C. (2015). (PDF) Pedagogy, Andragogy, and Heutagogy – Research Gate.
11. Retrieved June12,2020, from https://www.researchgate.net/publication/297767648_Pedagogy Andragogy_and_Heutagogy

திருகோணமலை - மட்டக்களப்பு இயேசு சபை ஆயர்களும், அவர்கள் சேவைக்காலத்தில் எதிர்நோக்கிய சவால்களும்

தனுகா யோகநாதன்[1], நிலாந்தினி செந்தூரன்[2]
[1,2]வரலாற்றுத்துறை, கலைகலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
[1]jesusthanu8@gmail.com , [2]nilanthinic@esn.ac.lk

ஆய்வுச் சுருக்கம்

போர்த்துக்கேயர் காலத்தில் அறிமுகமான கத்தோலிக்கம் பிரித்தானியர் காலத்தில் வேகமாக வளர்ச்சி கண்டு, நிறுவன அடிப்படையில் மறைமாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஆயர்கள் தலைமையில் செயற்படத் தொடங்கியது. இம்மறைமாவட்டங்களில் ஒன்றான திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்களின் பணி கிழக்குப் பிரதேச மக்களின் சமுக, பொருளாதார நிலைகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தாலும், அவர்களின் சேவைக்காலம் பல சவால்கள் நிறைந்ததாகவே காணப்பட்டமையை சமகால சூழலும் அவர்களது குறிப்புக்களும் உறுதிப்படுத்துகின்றன. வெளிநாட்டு ஆயர்களான இவர்கள் சுதேசிகளின் கடுமையான எதிர்ப்புக்களின் மத்தியில், மொழிப் பிரச்சினையால் நேரடியாக அவர்களோடு உரையாடல்களை மேற்கொள்ள முடியாத நிலையில் சவால்களினூடாகவே பல சேவைகளை முன்னெடுத்தனர். குறிப்பாக சீரற்ற போக்குவரத்து வசதி, காலநிலை மாற்றம், மக்களின் இறுக்கமான வாழ்வியலுடன் இணைந்த சாதிக்கட்டமைப்பு போன்ற பல சவால்களுக்கு மத்தியில் சேவைகளை முன்னெடுத்தனர். எனவே ஆய்வின் வரையறை கருதி, இயேசு சபை ஆயர்களான சாள்ஸ் லவிஞ் (Charles Lavinge), கஸ்டன் றொபிசெ(Gaston Robichez), கிளனி(Glennie) ஆகியோரது சேவைக்காலத்தில் எதிர்நோக்கிய சவால்களே ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. இவர்களுடைய காலத்தில் கிழக்கிலங்கையில் இறுக்கமாகக் காணப்பட்ட சாதிமுறையுடன் இணைந்த சமூகக் கட்டமைப்பு நலிவுறத் தொடங்கியது. அத்தோடு முறையான திருமண தொடர்பு, பதிவு முறைகள், புனர்வாழ்வு, அரச வேலை வாய்ப்புக்கள், கல்வி, பாடசாலைகள், ஆதரவற்ற இல்லங்கள், வீடுகள் போன்றவற்றை அமைத்து திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட இயேசு சபை ஆயர்கள் சவால்களுக்கு மத்தியில் சேவைகளை ஆற்றியுள்ளார்கள். இன்று கிழக்கிலங்கையில் கிறிஸ்தவ சமயம் தனித்துவமான கலாச்சார பண்பாட்டம்சங்களோடு கட்டமைக்கப்பட்ட நிறுவனமாக மட்டக்களப்பு, திருகோணமலை என இரு மறைமாவட்டங்களாகப் பிரிந்து செயற்படுவதற்கு இவ்வாயர்களது காத்திரமான பங்களிப்பே சான்றாகின்றது.

திறவுச் சொற்கள்: மறைமாவட்டம், அப்போஸ்தலிக்கம், திருச்சபை, ஆயர்கள்

1.0 அறிமுகம்

இலங்கையில் கத்தோலிக்க சமயமானது, காலனித்துவ ஆட்சியின் போது அறிமுகப்படுத்தப்பட்டது. போர்த்துக்கேயரான மோனிஸ் பரேட்டோ(Monis Barretto) என்பவரது தலைமையில் வந்த குழு கி.பி 1549ஆம் ஆண்டு மட்டக்களப்பை அடைந்தபோது, அக்குழுவினருடன் வந்த பிரான்சிஸ்கன் சபையினரே கரையோரப் பகுதிகளில் கிறிஸ்தவத்தை பரப்பினர். போர்த்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்கம் பல இடங்களில் பரப்பப்பட்டாலும், அவர்களுக்கு பின் இலங்கையின் கரையோரப் பகுதிகளை கைப்பற்றிய ஒல்லாந்தர்கள் அங்குள்ள கத்தோலிக்கர்களுக்கு எதிராக செயற்படத் தொடங்கினார்கள்.(1658) ஒல்லாந்தர்களுக்கு பின்னர் பிரித்தானியர் ஆட்சியின் போது சமய சுதந்திரம் வழங்கப்பட்டதால் கத்தோலிக்க சமயத்திற்கு எதிரான அடக்கு முறைகள் நிறுத்தப்பட்டு, கத்தோலிக்கத் திருச்சபை உறுதியாக நிலை நிறுத்தப்பட்டது.

பிரித்தானியரின் ஆட்சிக் காலத்திலிருந்தே இலங்கையில் கத்தோலிக்க திருச்சபையானது, நிறுவன அமைப்பில் செயற்படத் தொடங்கியது. இதனடிப்படையில், 1847இல் இலங்கை கத்தோலிக்கத் திருச்சபை கொழும்பு, யாழ்ப்பாணம் எனும் மறைமாவட்டங்களாக பிரிக்கப்பட்டு, அதனை கண்காணிப்பதற்கு ஆயர்களும் நியமிக்கப்பட்டார்கள். இதில் கிழக்கு மாகாணம் யாழ்ப்பாணத்தின் கீழ் ஆரம்ப கட்டங்களில் இயங்கத் தொடங்கியது. பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து பிரிந்து 1893இல் கிழக்கு மாகாணப் பகுதிகளை உள்ளடக்கியதாக திருகோணமலை மறைமாவட்டம் நிறுவப்பட்டது. 1967 இல் திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டம் என மறுபெயரிடப்பட்டது.

2012.07.03 அன்று திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டம் பிரிக்கப்பட்டு இவ்விரு மாவட்டங்களும் தனித்தனி மறைமாவட்டங்களாக உருவாகி தற்போது வரை இயங்கிக் கொண்டு வருகின்றது. திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டம் தனித்தனியே பிரிக்கப்படும் வரையிலும் ஐந்து ஆயர்கள் இதில் பணியாற்றியுள்ளனர். இவர்களுள் இயேசு சபை ஆயர்களின் பணிகளை மையப்படுத்தியதாக, "திருகோணமலை - மட்டக்களப்பு இயேசு சபை ஆயர்களும், அவர்கள் சேவைக்காலத்தில் எதிர்நோக்கிய சவால்களும்" எனும் தலைப்பில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

1.2 ஆய்வின் நோக்கம்

திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் பணியாற்றிய ஆயர்களில் இயேசு சபை ஆயர்களின் சேவைக்காலத்தில் எதிர்நோக்கிய சவால்களை இனங்காணல் இவ்வாய்வின் பிரதான நோக்கமாக அமைகின்றது.

1.3 ஆய்வுப்பரப்பும், வரையறையும்

திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தை மாத்திரம் உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. இம்மறைமாவட்டத்தின் முழு வரலாற்றையும் உள்ளடக்காமல் இம்மறைமாவட்டத்தில் பணியாற்றிய இயேசு சபை ஆயர்களின் சேவைக்காலத்தில் எதிர்நோக்கிய சவால்கள் மாத்திரமே ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன. குறிப்பாக ஆயர் சாள்ஸ் லவிஞ், ஆயர் கஸ்டன் றொபிசெ, ஆயர் இக்னேசியஸ் கிளனி ஆகியோரை மையப்படுத்தியதாகவே அமைகின்றது.

1.4 ஆய்வு அணுகுமுறை

ஒரு பொருளின் தோற்றத்தினையும், வளர்ச்சியையும் முறையாக விளக்கும் நோக்கில் கிடைத்துள்ள தகவல்களை பயன்படுத்திக் கொண்டு, படிப்படியாக அதன் பழைய நிலையை ஆராய்ந்து கண்டறிதல் வரலாற்று அணுகு முறை ஆகும். இதனடிப்படையில் திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் இயேசு சபை ஆயர்களின் சேவைக் காலத்தில் எதிர்நோக்கிய சவால்களை வரலாற்று அணுகுமுறையில் ஆராய்வதாக அமைகின்றது.

1.5 இலக்கிய மீளாய்வு

John W Lange மற்றும் Guy F. Rajendram ஆகியோர் எழுதிய "History of Trincomalee-Batticaloa Diocese (1895 - 1967)" எனும் நூலில் இலங்கையில் பணிபுரிந்த வெளிநாட்டு ஆயர்கள் பற்றிய குறிப்புகளும், துணை ஆயரான கஸ்டன் றொபிசெ என்பவர் பற்றிய தகவல்களும் கூறப்பட்டுள்ளது.

Charles Reichard S.J எழுதிய "CODEX HISTORICUS of Trinco - Batticaloa From 1895-1926" என்ற நூலில் இக்காலப்பகுதியில் பணியாற்றிய ஆயர்களின் சேவைகள் பற்றிய தகவல்களும், அவர்கள் காலத்தில் அமைக்கப்பட்ட பாடசாலைகள் பற்றிய தகவல்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

Perniola.V எழுதிய "The Catholic Church of Srilanka - Volume III" எனும் நூலில் 1850-1855 வரையான காலப்பகுதியில் கொழும்பு, யாழ்ப்பாண மறைமாவட்டங்கள் பற்றியும், யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் கீழ் கிழக்கு கரையோரப் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தமை பற்றியும் தகவல்கள் காணப்படுவதோடு, இந்நூலாசிரியரால் எழுதப்பட்ட "The Catholic Church of Sri Lanka - Volume X" எனும் நூலில் 1893-1923 வரையான காலப்பகுதியில் திருகோணமலை-மட்டக்களப்பு மறைமாவட்டத்தினுடைய வரலாற்று தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மத்தியு.எஸ்.ஏ.ஐ என்பவர் எழுதிய "கிழக்கு மாகாணத்தில் கிறிஸ்தவர் ஆற்றிய கல்விப் பணி" எனும் நூலில் இயேசு சபை துறவிகளின் காலத்திலும், சுதேச குருக்களின் காலத்திலும் கிழக்கு மாகாணத்தில் ஆற்றப்பட்ட கல்விப்பணி பற்றி விரிவான முறையில் கூறப்பட்டுள்ளதோடு, இவரால் எழுதப்பட்ட மற்றுமொரு நூலான "மட்டக்களப்பு தரும் வரலாறு" எனும் நூலில் யாழ்பாணத்திலிருந்து திருகோணமலை மறைமாவட்டம் பிரிக்கப்பட்ட சுருக்கச் செய்தியும், மட்டக்களப்பு புனித மரியாள் இணைப் பேராலயம் பற்றிய சுருக்கமான குறிப்புக்களும் காணப்படுகின்றன.

2. திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் தோற்றமும், வளர்ச்சியும்

இலங்கையில் 15ஆம் நூற்றாண்டில் வருகை தந்த போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை கைப்பற்றி தமது ஆட்சியை மட்டுமல்லாது, கத்தோலிக்க சமயத்தினையும் நிலைநிறுத்திக் கொண்டார்கள். கிழக்கு கரையோரப் பிரதேசங்களான திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் மோனிஸ் பரெட்டோ (Monis Barretto) தலைமையில் வந்த குழு 1549ஆம் ஆண்டு மட்டக்களப்பை அடைந்த போது இராணுவத்துடன் வந்த பிரான்சிஸ்கன் சபைக் குருக்களால் பல மக்கள் கத்தோலிக்கத்திற்கு மாற்றப்பட்டனர்.

1549-1552இற்கு இடைப்பட்ட காலத்தில் திருகோணமலையில் அரசாட்சி சம்மந்தமாக குழப்ப நிலைகள் ஏற்பட்டபோது திருகோணமலையில் அரச குடும்பத்தை சேர்ந்த வன்னிய இளவரசன் தனது சித்தப்பா மற்றும் 40சேவகர்களுடனும் மீன்பிடி கடற்கரையில் தஞ்சமடைய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இத்தருணத்தில் அங்கே என்றிக்குவேஸ் எனும் இயேசு சபையைச் சேர்ந்த குருவானவர் இளவரசரை சந்தித்து கிறிஸ்தவத்தை போதித்து இளவரசருக்கு திருமுழுக்கு அளித்து, டொன் அலொன்சா எனும் பெயரை இட்டனர். பின்னர் பரவர் இனக் கிறிஸ்தவர்கள், போர்த்துக்கேய மாலுமிகளின் உதவியுடன் ஆயிரம் பேரைக் கொண்ட படையை உருவாக்கி இளவரசரும், அவருடன் வந்த வன்னிய சேவகர்களும் மீண்டும் திருகோணமலையை கைப்பற்ற உதவி செய்த இளவரசரின் சித்தப்பாவை ஆட்சிப் பொறுப்பில் விட்டனர். பரவர் இன கிறிஸ்தவர்கள் திருகோணமலையில் தங்கி திருகோணமலை கொட்டியாரத்திலும் முதல் கிறிஸ்தவ சமயத்தை உருவாக்கினர் என திரு. வேன் அ லங்கே குறிப்பிட்டுளார் (John W Lange & Guy Rajendram, 2007: 2-3).

17ஆம் நூற்றாண்டில் ஒல்லாந்தரின் வருகையுடன் கத்தோலிக்க சமயத்திற்கெதிராக பல தடைகள் விதிக்கப்பட்டன. இக்காலத்தில் இரகசியமான முறையில் ஒரற்றோரின் சபைக் குருக்களால் பாதுகாக்கப்பட்டு வந்த கத்தோலிக்கமானது பிரித்தானியரின் வருகையின் பின்னர்

சுதந்திரமான முறையில் பரவத்தொடங்கியது. இவர்களுடைய காலத்திலேயே கத்தோலிக்க திருச்சபை நிறுவன அமைப்பில் செயற்படத் தொடங்கியது. மேற்றாசனங்கள்(Vicariate) எனும் அமைப்பு முறை உருவாக்கப்பட்டு, யாழ்ப்பாண மேற்றாசனத்திலிருந்து திருகோணமலை, மட்டக்களப்பு, தம்மன்கடுவ ஆகிய பிரதேசங்கள் பிரிக்கப்பட்டு திருகோணமலை மறைமாவட்டம் எனும் புதிய மறைமாவட்டம் தோற்றம் பெற்றது.(Pilendran.G;2020;68)

கிழக்கு மாகாணத்தில் மறைமாவட்டம் தனியாக உருவாக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து 1892 ஆம் ஆண்டு கண்டி ஆயர் சலேஸ்கி(Zaleski) உரோமுக்கு எழுதிய கடிதத்தினூடாக அறிய முடிகின்றது. அதன் முக்கிய பகுதிகள் மேல்வருமாறு கூறப்பட்டுள்ளது.

'…The conversion of the Muslims is out of the question for the present. As for the Tamils, who are idolaters, their conversion is undoubtedly more difficult than that of the Sinhalese in the province of Galle…' '…In the territory of the future diocese of Trincomalee we have six missionaries while the Protestants have 17, cheiefly Wesleyans.' (V.Perniola; 2006;6)

திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது இயேசு சபையைச் சேர்ந்த ஆயர்களே இதனை பொறுப்பேற்று பணியாற்றினர். ஆயர் சாள்ஸ் லவிஞ்(Charles Lavinge), ஆயர் கஸ்டன் ரொபிசே(Gaston Robichez) ஆகியோர் பிரான்ஸிலிருந்தும், ஆயர் இக்னேசியஸ் கிளனி(Glennie) மெக்சிகோவிலிருந்தும் வரவழைக்கப்பட்டு சேவையாற்றியுள்ளனர். ஆயர் லியோ இராஜேந்திரம் அன்ரனி(Leo Rajendram Antony) இம்மறைமாவட்டத்தை பொறுப்பேற்றதிலிருந்து இயேசு சபை ஆயர்களுக்குப் பதிலாக சுதேச ஆயர்களின் வரலாறு ஆரம்பமாகியது. இவருக்கு பின் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை(Joseph Kingsly Swampillai) திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் இறுதி ஆயராவார். இவருக்கு பின் இம்மறைமாவட்டம் திருகோணமலை, மட்டக்களப்பு என தனித்தனி மறைமாவட்டங்களாக உருவாகி, திருகோணமலை, மட்டக்களபிற்கு முறையே நோயல் இம்மானுவேல்(Noel Immanuel), ஜோசப் பொன்னையா(Joseph Ponnaiah) என இவ்விரு ஆயர்களும் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

3. மறைமாவட்டத்தில் பணியாற்றிய இயேசு சபை ஆயர்கள்

3.1 ஆயர் சாள்ஸ் லவிஞ்

3.1.1 பிறப்பும் இளமைக் காலமும்

இவர் பிரான்சிலுள்ள மார்வெஜோல்ஸில் பிறந்தார்(6/1/1840). இவர் தனது ஆரம்பக்கல்வியை கிறிஸ்டியன் பிரதர்ஸ் பள்ளியிலும், உயர்கல்வியை மெனி கல்லூரியிலும் கற்று முடித்த பின் மார்வெஜோல்ஸில் குருமடத்தில் சேர்ந்து ஒரு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் தனது முதல் வார்த்தைப்பாட்டை எடுத்துக் கொண்டதன் பின் மொண்டெளபளின் சிறிய செமினரியின் கல்வித் தலைவராக நியமிக்கப்பட்டார். அதன்பின் புனித. சைரின் இராணுவப் பாடசாலையில் ஆயத்த வகுப்பில் கணிதம், இயற்பியல் ஆகிய பாடங்களை கற்பித்தார். 1898 நவம்பர் 13 இல்

திருவிதாங்கூர் மாநிலத்தின் புதிய ஆயராக நியமிக்கப்பட்டார். பாப்பரசர் பதின்மூன்றாம் லியோ, சாள்ஸ் லவிஞ்சே ஆயரை திருகோணமலை எனும் புதிய மறைமாவட்டத்திற்கு ஆயராக நியமித்தார்.(V.Perniola;2006;166) இலங்கையின் அப்போஸ்தலிக்க பிரதிநிதியான சலேஸ்கியின் பரிந்துரையின் பெயரில் ஆயர் சாள்ஸ் லவிஞ் இலங்கைக்கு வந்து திருகோணமலைக்குச் சென்றார்.(1898) அங்கு 'Papal Bull' தமிழிலும், சிங்களத்திலும் வாசிக்கப்பட்டதன் பின்னர் திருகோணமலை மறைமாவட்டத்தை பொறுப்பேற்றுக் கொண்டார். (Charles Reichard; 1946; 14)

3.1.2 இவரால் ஆற்றப்பட்ட பணிகள்

சமூக பணிகள் : இவர் பொறுப்பேற்ற காலத்தில் இங்கு இறுக்கமான சாதிக்கட்டமைப்புடன் பெண் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. மாறாக அவர்கள் சிறு வயதிலே இல்லத்தரசிகளாக்கப்பட்டனர். சமகாலத்தில் அவர்களுக்கான கல்வியை வழங்குவதில் ஆயர் சாள்ஸ் லவிஞ் அதிக கவனம் செலுத்தினார். மட்டக்களப்பு சிசிலியா பெண்கள் கல்லூரியில் ஆசிரியர் பற்றாக்குறையினால் முற்னேற்றத்தை இழந்தபோது இந்தியாவில் இருந்து இரண்டு அருட்சகோதரிகளையும், மூன்று ஆசிரியர்களையும் வரவழைத்து பாடசாலையை அவர்களிடம் பொறுப்பளித்தார். திருகோணமலை புனித மரியாள் பாடசாலையும், மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் பாடசாலையையும் ஆயரின் அனுமதியுடன் கார்மேல் கன்னியர் சபை பொறுப்பேற்றுக் கொண்டது.(1920) புனித அகுஸ்தீன் பயிற்சி கல்லூரி, நாவற்குடா பாடசாலை, உப்போடை கத்தோலிக்க பயிற்சிபெறும் ஆசிரியர் பாடசாலை ஆதரவற்ற ஆண்கள் இல்லம், புனித மரியாள் ஆண்கள் பாடசாலை ஆகியன அமைக்கப்பட்டு துறவற சபைகளிடம் ஒப்படைக்கப்பட்டன. இவர் இயேசு சபைத் துறவிகளிடம் 'Batticaloa shall have a school next to none' என கூறியதிலிருந்து கல்விக்கு கொடுத்த முக்கியத்துவத்தை அறியமுடிகின்றது. இளவயதுத் திருமணம், சாதி, அடிமைத்தன வாழ்க்கை போன்றவற்றிலிருந்து விடுவித்து கிறிஸ்தவ சமயப்போதனைகளினூடாக எதிர்ப்புகளுக்கு மத்தியில் பெண்களுக்கு சிறந்த எதிர்காலத்தை அமைத்துக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.(Charles Reichard; 1946; 47)

மட்டக்களப்பில் கடும் புயல் வீசப்பட்ட போது (1907) தங்களது உடமைகள், வாழ்வாதாரங்களை இழந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு இயேசுசபைத் துறவிகள் தம்மாலான உதவிகளை வழங்கியதோடு, அரச அதிகாரிகளுடன் பேசி அரச உதவிகள் பலவற்றையும் இம்மக்களுக்கு பெற்றுக் கொடுத்தார்கள். மேலும் பாரிய வெள்ளத்தினால் மட்டக்களப்பு மக்கள் பாதிக்கப்பட்ட வேளையில் (1914) இயேசு சபை துறவிகளே சாதி, மதம் பாராமல் அனைவருக்கும் உதவி செய்ததோடு கொலரா கொள்ளை நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இயேசுசபைத் துறவிகளே அவர்களுக்கு உணவு, உடை, மருந்து வகைகளைக் கொடுத்து இறந்தோரையும் அடக்கம் செய்தனர். (Dominic saminathan; 2012; 99)

சமயப்பணி : வெளிநாட்டு குருக்களை வரவழைத்து சுதேச குருக்களை உருவாக்கும் நோக்கில் மட்டக்களப்பில் சிறிய குருமடம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.(1902.11.4) இவருடைய காலத்தில் பல ஆலயங்களும் கட்டப்பட்டன. (அருளானந்தம்; 2012; 99) 1900ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தை கொலரா நோய் பாதித்தபோது இந்நோயிலிருந்து விடுபடுவதற்காக லூர்து

அன்னை திருத்தலம் அமைப்பதாக வைத்த நேர்த்தியின்படி திருகோணமலையில் பாலையூற்று காட்டுப்பகுதியில் அன்னைக்கு ஒரு திருத்தலம் அமைக்கப்பட்டது. தாண்டவன்வெளி ஆலயம், புளியடிகுடாவில் உள்ள புனித செபஸ்தியார் ஆலயம், வாகரை புனித பேதுரு ஆலயம், நாவற்குடா சிற்றாலயம் என்பன இவரது காலத்தில் அமைக்கப்பட்டன.

1895 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 4000 கத்தோலிக்க மக்களும், 10 ஆலயங்களும், 20 ஆலயங்களும், 750 மாணவர்களும் இருந்தனர். 1896 ஆம் ஆண்டு கத்தோலிக்க மக்களின் எண்ணிக்கை 6690ஆக உயர்வடைந்தது. 1911ஆம் ஆண்டு அரச கணக்கெடுப்பின் போது, 190367 ஆகவும் 1921களின் போது 201057 ஆகவும் உயர்வடைந்திருந்தது. இதன்படி, மட்டக்களப்பு மாவட்டத்தில் 158750ஆகவும், திருகோணமலை மாவட்டத்தில் 34112ஆகவும், தம்மன்கடுவ மாவட்டத்தில் 8236ஆகவும் மொத்தமாக 201057 கத்தோலிக்கர்கள் வாழ்ந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. (Perniola.V, 2006: 6)

3.1.2 சவால்கள்

ஆயர் சாள்ஸ் லவிஞ் ஆண்டகை இம்மறைமாவட்டத்தை பொறுப்பேற்ற போது அவர் எதிர்நோக்கிய பாரிய சவாலாக சாதிப் பிரச்சினை காணப்பட்டது. 1895இல் இயேசுசபை குருக்கள் மட்டக்களப்பிற்கு வந்த போது மீனவர் சமூகத்திற்கென புனித அந்தோனியார் ஆலயமும், வெள்ளாளர், பறங்கியர், சிலை அலங்காரம் செய்வோருக்கென புனித மரியாள் ஆலயமும் இருந்தது. இவ்விரு ஆலய மக்களிடையேயும் அடிக்கடி பல பிரச்சினைகள் ஏற்பட்டுக் கொண்டது. இவ்வாறு காணப்பட்ட சாதிப் பாகுபாடுகளை ஆயரும், இயேசு சபைத் துறவிகளும் இணைந்து மக்கள் மத்தியில் ஒற்றுமையை வளர்க்க முயற்சிகளை மேற்கொண்டனர்.(Charles Reichard; 1946; 15) இது தற்காலத்தில் சாதிமுறை கட்டமைப்பின் இறுக்கமான நிலை குறைக்கப்பட்டமைக்கு அடிப்படையாயிருந்தது.

வெஸ்லியன் சபையினரின் மறைபரப்பு கொள்கையானது திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்திற்கு ஒரு முக்கிய பிரச்சினையாகவும், இப்பிரிவினை சபையினர்களுடன் போட்டி போட்டுக் கொண்டு கத்தோலிக்க சமயத்தை இன்னும் அதிகமாக பரப்ப வேண்டிய நிலையும் காணப்பட்டது. அதேபோன்று இவரது காலத்தில் போக்குவரத்து வசதி என்பது மிகக் குறைந்தளவிலேயே காணப்பட்டது. ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்ல வேண்டுமாயின் அதிக நேரங்களை செலவு செய்யவேண்டியிருந்தது. ஆயர் இலங்கையின் கொழும்பை அடைந்ததும் கண்டிக்கு சென்று அங்கிருந்து மாத்தளை வந்தார். பின் மாத்திளையிலிருந்து மாட்டு வண்டியில் இரண்டு நாட்கள் பயணம் செய்து மார்கழி மாதம் 22 ஆம் திகதி திருகோணமலையை வந்தடைந்தார்.(எழுவான் மலர் குழு;2012;06)

மறைமாவட்டத்தின் ஆரம்ப கால மக்கள் மக்கள் திருமணமாகாமல் கூடி வாழும் வாழ்க்கை முறைக்கு பழக்கப்பட்டிருந்தனர். மீனவர் சமூகத்தில் ஆண்கள் திருமணத்திற்கு முன்பாகவே உறவு கொள்ளும் பழக்கமுடையவர்களாகவும், கத்தோலிக்க மக்கள் எதிரிகளுக்கு சூனியம் செய்யும் பழக்கத்தையும், பலிகொடுக்கும் பழக்கத்தையும் உடையவர்களாகவும் காணப்பட்டனர். இவர்களை இதிலிருந்து மீட்டு கல்வியை வழங்கி கிறிஸ்தவ பண்புகளுக்குள் உள்வாங்கி அவர்களை மனம் மாற்றினர். சமுக கட்டமைப்பு ரீதியான எதிர்ப்புக்களை தாண்டி பணியாற்றிய

இவரது சேவையே இன்று பல மாற்றங்களை எம்மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. (Dominic Saminathan; 1988; 21)

இம்மறைமாவட்டத்திலுள்ள இந்துக்களை மதமாற்றுவதென்பது காலி மாகாணத்திலுள்ள சிங்களவரை மதமாற்றுவதை விட கடினமானதாக காணப்பட்டது. ஆயினும் இந்தியாவிலும், யாழ்ப்பாணத்திலுமுள்ள இந்துக்களை மதமாற்றுவதை விட கடினமானதாக இல்லை. இங்கு பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட சமுக வர்க்கத்தினரே கத்தோலிக்கத்தை ஏற்றுக் கொண்டனர் (Perniola.V, 2006: 6)

இவ்வாயருடைய காலத்தில் 1900ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் கொலரா எனும் நோய்க் பரவ ஆரம்பித்தது. இதனால் பல குழந்தைகள் இறந்தது மட்டுமின்றி பல மக்களும் பாதிக்கப்பட்டனர். இந்நோயின் தாக்கத்திலிருந்து மக்களை பாதுகாப்பதும், இதற்கிடையே தமது மறைபரப்பு பணியை முன்னெடுத்துச் செல்வதும் இவர் எதிர்நோக்கிய பாரிய சவாலாகும்.

இறுதிக்காலம்: திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் முதல் ஆயராக பொறுப்பேற்ற ஆயர் சாள்ஸ் லவிஞ் சுமார் 20 வருடங்கள் மறைமாவட்டத்தின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் சவால்களுக்கு மத்தியிலும் சிறப்பான பணியாற்றி 1913ஆம் ஆண்டு ஆடி மாதம் 11ஆம் திகதி அன்று தனது 73வயதில் இறைபதம் அடைந்தார்.(Charles Reichard; 1946;72)

3.2 ஆயர் கஸ்டன் றொபிசெ

3.2.1 பிறப்பும் இளமைக் காலமும்

கஸ்டன் றொபிசெ 1866.11.21 திகதியன்று வடக்கு பிரான்சில் உள்ள ஏர்சுர்லாலிசில் பிறந்தார். இவர் தமது 17ஆவது வயதில் அராசிலுள்ள (1883) செமினரியில் சேர்ந்து பின் மூன்று வருடங்கள் கழித்து (1886) ஹாலந்திலுள்ள கோமாரட்டில் இயேசு சபையில் சேர்ந்து பெல்ஜியத்தில் உள்ள எக்ஹனில் குருவாக நியமிக்கப்பட்டார். இவர் திருகோணமலை மறை மாவட்டத்தில் 29 வருடங்கள் அப்போஸ்தலிக்க பிரதிநிதியாகவும், பத்து வருடங்கள் மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க நிர்வாகியாகவும் பணியாற்றினார். 1909இல் பெல்ஜியத்திலிருந்து இலங்கையில் பணி புரிய அனுப்பப்பட்டார். ஆயர் சாள்ஸ் லவிஞ் இறந்ததன் பின் கொழும்பு மறைமாவட்ட ஆயர் அன்ரனி கௌடேட், யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் ஹென்றி யூலியன், கண்டி மறைமாவட்ட ஆயர் பீட்பெத்மேயர் ஆகியோர் முன்னிலையில் திருகோணமலை மறைமாவட்டத்தின் புதிய ஆயராக நியமிக்கப்பட்டார். (V.Perniola; 2006;435)

3.2.2 இவரால் ஆற்றப்பட்ட பணிகள்

சமயப் பணி : திருகோணமலை கத்தோலிக்கர்களின் எண்ணிக்கையும், ஆலயங்கள், பாடசாலைகள் ஆகியவற்றின் எண்ணிக்கையும் அதிகரித்ததால் திருகோணமலை பேராலய பங்கை இரண்டாக பிரிக்க ஆயர் தீர்மானித்தார். இதன் அடிப்படையில் திருகோணமலை பேராலய பங்கு எனவும் சின்னக்கடை பங்கு எனவும் இரு பங்குகள் உருவாக்கப்பட்டன. மேலும் யாத்திரிகன்(The Pilgrim) எனும் பத்திரிகையை ஆயரின் அனுமதியுடன் வெளியிடப்பட்டது. இவருடைய காலத்தில் அமெரிக்காவில் நியூ ஒலியன்ஸ் துறவற சபைகள் இங்கு வந்து

பணியாற்றினர். அன்றிலிருந்து அமெரிக்க இயேசு சபை துறவிகளால் இம்மறைமாவட்டத்தின் மறைபரப்பு பணி ஆரம்பமானது. மட்டக்களப்பில் முதன்முறையாக மரியாயின் சேனை(Legion of Mary) உருவாக்கப்பட்டு திருமணம் முடிக்காது கூடி வாழ்ந்த குடும்பங்களை சீரமைத்து திருச்சபை அரச சட்டப்படி முறையான குடும்பங்களாக மாற்றினார்(1917) (எழுவான் மலர்க் குழு 2012:07).

குறிப்பாக ஆயர் கஸ்டன் றொபிசெவினுடைய காலத்தில், இவரின்கீழ் மறைமாவட்டத்தில் பணியாற்றிய துறவிகள் தொடர்பான தகவல்களை 1914ஆம் ஆண்டிற்கான இலங்கை நீலப் புத்தக அறிக்கையிலிருந்து அறியமுடிகின்றது. மொத்தமாக 24 துறவற சபைகள் இயங்கியுள்ளன. அவர்களுள் 5 துறவிகள் ஐரோப்பாவிலிருந்தும், 10 கன்னியர்களில் 8 பேர் ஐரோப்பாவிலிருந்தும், 2 பேர் சுதேசிகளாகவும் காணப்பட்டனர். இக்காலகட்டத்தில் 10,032 பேர் கத்தோலிக்கர்களாக இருந்துள்ளனர் என்ற தகவலையும் அறியமுடிகின்றது (The Ceylon Blue Book 1914:12).

1923ஆம் ஆண்டிற்கான இலங்கை நீலப் புத்தகக் குறிப்பின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் புனித அந்தோனியார் ஆலயம், புனித மரியாள் ஆலயம், புனித செபஸ்தியார் ஆலயம், கல்லாறு புனித மரியாள் ஆலயம், கல்முனை திரு இருதயநாதர் ஆலயம், கோரகல்லிமடு புனித பிரான்சிஸ் சேவியர் ஆலயம், நாவற்குடா லூர்து அன்னை ஆலயம், புல்லுமலை ஜெபமாலை அன்னை ஆலயம், சொறிக்கல்முனை திருச்சிலுவை ஆலயம், தன்னாமுனை புனித சூசையப்பர் ஆலயம், வாகரை பேதுரு ஆலயம், வந்தாறுமூலை புனித பேதுரு பவுல் ஆலயம், வீச்சுக்கல்முனை அன்னம்மாள் ஆலயம், கல்குடா இயேசு ஆலயம் ஆகியவையும், திருகோணமலை மாவட்டத்தில் மாங்கேனி புனித யோவான் ஆலயம், மூதூர் புனித அந்தோனியார் ஆலயம், நிலாவெளி புனித சூசையப்பர் ஆலயம், பச்சனூர் திரு இருதயநாதர் ஆலயம், வேல்வெரி புனித ஜேம்ஸ் ஆலயம், திருகோணமலை புனித மரியாள் ஆலயம் போன்ற ஆலயங்கள் சமகாலத்தில் இயங்கிக் கொண்டிருந்தமையை அறியமுடிகின்றது (The Ceylon Blue Book 1923:L15).

கல்விப்பணி : பாங்ளூரிலிருந்து கார்மேல் சபை சகோதரிகளால் 1922இல் திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட பாடசாலைகள் பொறுப்பேற்று நடாத்தப்பட்டது. ஆயர் கல்லடியில் ஒரு காணியை வாங்கி அவ்விடத்தில் பிரான்சிஸ்கன் சபை சகோதரிகள் பராமரிப்பில் பாடசாலைகளையும், தையல் பயிற்சி நிலையத்தையும் அமைத்தார். கல்முனை பாடசாலையை பொறுப்பெடுத்து நடத்த கார்மேல் சபை துறவிகளை ஆயர் வரவழைத்தார். இம்மறைமாவட்டத்தின் கல்வி வளர்ச்சியை முன்னெடுத்துச் சென்ற புனித வளனார் சபை சகோதரர்களுக்கு புனித அகுஸ்தினார் ஆசிரியர் பயிற்சிப் பாடசாலை பொறுப்பாக வழங்கப்பட்டது. பிரான்ஸ் நாட்டு கத்தோலிக்க மக்களிடம் உதவிகளைப் பெற்று கத்தோலிக்க ஆசிரியர்களுக்கும், மறைபோதகர்களுக்கும் பயிற்சியளித்தார்.

3.2.3 சவால்கள்

ஆயர் றொபிசே கஸ்டன் இம்மறைமாவட்டத்தை பொறுப்பேற்றதிலிருந்து சவால்களின் மத்தியில் பணிகளை நிறைவேற்றினர். இவரது காலத்தில் தாழங்குடா கிராமத்தின் சாதிச் சண்டைகள் நீதிமன்றம் வரை சென்று 16 பேர் ஆறு மாத காலம் சிறை தண்டனைக்கு உள்ளாகினர். சமகாலத்தில் சாதி முறையின் தீய விளைவுகளை இல்லாதொழிப்பது பெரும் சவாலாகவே காணப்பட்டது.

1919ஆம் ஆண்டு அரசாங்க அறிக்கையின்படி கத்தோலிக்கர்கள் குறைவாக உள்ள பகுதிகளில் காணப்படும் பாடசாலைகள் மூடப்பட்டு புதிய பாடசாலைகளை ஆரம்பிக்க அரசுக்கு அதிகாரம் இல்லை என்றும் இப்புதிய பாடசாலைகளில் சமயம் ஒரு பாடமாக கற்பிக்க வேண்டிய அவசியமும் இல்லை என்றும் ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. இது இலங்கையிலுள்ள ஆயர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அத்தோடு முதலாம் உலக மகா யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் பிரான்ஸ் நாட்டிலிருந்து எந்தவொரு குருக்களும், துறவிகளும் இலங்கைக்கு பணியாற்ற வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் பல துறவற மடங்கள் மூடப்பட்டதோடு, மக்கள் மத்தியில் பணியாற்றக் கூடிய சுதேச குருக்கள், துறவிகள் இன்மையால் இயேசு சபையினரால் அமைக்கப்பட்ட பாடசாலைகள், ஆதரவற்ற இல்லங்கள், ஆலயங்களை கொண்டு நடத்துவது கடினமாயிருந்தது.(Charles Reichard; 1946;10)

மேலும் இம்மறைமாவட்டத்தில் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டதால் கிராமப்புற கத்தோலிக்க பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களையும், ஆயிரம் மறைபோதகர்களையும் சம்பளம் கொடுத்து பராமரிக்கும் நிலை காணப்பட்டது. இவற்றை எதிர்கொண்டு இப்பிரதேசங்களை மேம்படுத்துவது பாரிய சவாலாகவே காணப்பட்டது.

இறுதிக்காலம் : ஆயர் றொபிசே கஸ்டன் தனது 79 ஆவது வயதில் 1946 அன்று மாசி மாதம் 12ஆம் திகதி இறைபதம் அடைந்தார். இவரது பூதவுடலானது மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்தில் புதைக்கப்பட்டுள்ளது. 29 வருடங்கள் பல தடைகளையும், சவால்களையும் தாண்டி இவரால் சமூக, சமய நலன்கருதி ஆற்றப்பட்ட பணிகள் இம்மறை மாவட்ட வரலாற்றில் மறக்க முடியாததொன்றாக கருதப்படுகின்றது (Charles Reichard 1946:10).

3.3 ஆயர் இக்னேசியஸ் கிளனி

3.3.1 பிறப்பும், ஆயராக நியமனமும்

ஆயர் ரொபிசே கஸ்டனின் மறைவைத் தொடர்ந்து இம்மறைமாவட்ட ஆயராக இக்னேசியஸ் கிளனி நியமிக்கப்பட்டார். இவர் நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் கண்டி குருமடத்தில் அதிபராகக் கடமையாற்றினார். இவர் 1947ஆம் ஆண்டு றாஞ்சி மறைமாவட்ட புதிய ஆயர் ஒஸ்கா சேவ்றின், பெங்களூர் ஆயர் தோமஸ் பொதுக்குமரி, கண்டி ஆயர் றெக்னோ ஆகியோர் முன்னிலையில் திருகோணமலையில் ஆயராக அபிஷேகம் செய்யப்பட்டார்(Dominic Saminathan 1988: 47).

3.3.2 இவரால் ஆற்றப்பட்ட பணிகள்

சமுகப்பணி: மட்டக்களப்பில் முதியவர்களுக்கான இல்லம் ஆரம்பிக்கப்பட்டமை. நாடோடிகளாக திரிந்த குறவர்களை அலிகம்பையில் குடியேற்றியமை அத்தோடு சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் பல உதவிகளை வழங்கினார். கத்தோலிக்க மக்கள் தமக்குரிய தகுந்த வாழ்க்கை துணையைத் தேடிக்கொள்ள மறைமாவட்டத்தில் திருமண தகவல் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. ஆயர் கிளனி மறைமாவட்டத்தில் சமூகப் பணிக்காக ஒரு ஆணைக்குழு ஒன்றை ஆரம்பித்தார். கத்தோலிக்கருக்கு மட்டுமல்லாது ஏனைய மதத்தவரையும் மதித்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த ஆயரால் ஆற்றப்பட்ட சேவை தற்காலத்தினருக்கு முன்னுதாரணமாய் அமைகின்றது.

சமயப் பணி : பாத்திமா மாதாவின் திருயாத்திரை கிழக்குக்கரைப் பிரதேசங்களில் பவனியாக எடுத்துச் செல்லப்பட்டது. கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மூன்று கோட்டங்களையும் இணைத்து திருகோணமலை மறைக்கோட்டமாக உருவாக்கியமை. திருவழிபாடு, திருவழிபாட்டு சங்கீதம், கிறிஸ்தவ கலை போன்ற விடயங்களை கவனிப்பதற்காக இம்மறைமாவட்டத்தில் குழு ஒன்றை நியமித்தார். தனது முழு முற்சியினால் பல எதிர்ப்பின் மத்தியிலும் திருகோணமலை மறைமாவட்டத்தை திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டம் என மறுபெயரிட முன்னின்று செயற்பட்டார் (அருளானந்தம் 2012: 151).

கல்விப்பணி : அமெரிக்காவின் நியு ஒலியன்ஸ் மாகாணம் திருகோணமலை பேராலய வளவினுள் புனித வளனார் கல்லூரி பெருப்பிக்கப்பட்டது. இம்மறைமாவட்ட சிங்கள மக்களுக்காக 1952இல் புனித அந்தோனியார் சிங்கள கலவன் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. திருகோணமலை, மூதூர், மட்டக்களப்பு, கல்முனை ஆகிய இடங்களில் மத்திய பாடசாலைகள் உருவாக்கப்பட்டது. கத்தோலிக்க மாணவர்களுக்கான மறைக்கல்வி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. மறைக்கல்வி பணியை முன்னேற்றுவதற்காக நிரந்தர மறையாசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு பயிற்சித் திட்டம் இங்கு உருவாக்கப்பட்டது.

3.3.3 சவால்கள்

ஆயர் இக்னேசியஸ் கிளனி அவர்களுக்கும் தன்னுடைய சேவைக்கால சவால்களை கல்வி, சமயம் அரசியல் சார்பாக எதிர் நோக்கினார். அவ்வகையில் திருகோணமலை பேராலய வலயத்தினுள் அமைந்துள்ள புனித வளனார் கல்லூரியை அமைப்பதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அதை அமைப்பதற்கான இடவசதி போதாமையால் அக்கல்லூரியின் வளர்ச்சி பின்தங்கியது. இதை நிவர்த்தி செய்வதற்காக பல சிரமங்களுக்கு மத்தியில் நியுஒலியன்ஸ் மாகாணம் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவியது. இன்று இக்கல்லூரியின் முன்னேற்றத்தில் ஆயரின் பங்களிப்பு இன்றியமையாததாகும் (நேர்காணல்: ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாமிப்பிள்ளை; முன்னாள் ஆயர்; திருகோணமலை)

இவரது காலத்தில் இலங்கை மண்ணிற்கு மறைப்பரப்பு குருக்கள் மேலும் வருவதை தடை செய்யும் சட்டம் 1955 இல் அரசாங்கத்தினால் அமுல் செய்யப்பட்டது. 1959 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் அரசாங்கம் தேசியமயமாக்கல் சம்மந்தமாக தமது கொள்கையை வகுத்தது.

பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட இரண்டாவது சட்டத்திற்கமைய, கத்தோலிக்க பாடசாலைகளும், அதன் காணி மற்றும் சொத்துக்களும் அரசுடமையாக்கப்பட்டது. கத்தோலிக்க பாடசாலை ஆசிரியர்களுக்கு வேறு பாடசாலைக்கான இடமாற்றம் கல்வி திணைக்களத்தால் எழுத்து மூலம் வழங்கப்பட்டது. இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள் நிரந்தரமாக கத்தோலிக்க பாடசாலையிலிருந்து விலக்கப்பட்டனர். மேலும் 1966இல் இலங்கை அரசு ஞாயிறு தினத்தை வேலை நாட்களாக மாற்றியமைத்து பௌத்தர்களின் பாரம்பரியப்படி பூரணை தினங்களை விடுமுறை நாட்களாக அறிவித்தது. இதனால் இலங்கையின் அனைத்து ஆயர்களும் ஒன்று கூடி திட்டத்தை வகுத்தனர். இதன்படி, திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, மூதூர் ஆகிய இடங்களில் மத்திய பாடசாலைகளை உருவாக்கி, அவற்றை தனியார் பாடசாலைகளாக மாற்ற தமது விருப்பத்தை தெரிவித்தனர்.

1958 வைகாசி, ஆனி மாதங்களில் இலங்கை முழுவதும் தமிழ் - சிங்கள இன கலவரம் ஏற்பட்டக் கொண்டது. இக்கலவரம் மூலமாக பலர் கொல்லப்பட்டதோடு பல சொத்துக்களுக்கும் சேதங்கள் ஏற்பட்டன. இவற்றிற்கு மத்தியில் மறைபரப்பு பணியில் ஈடுபடுவதில் பல சிக்கல்கள் ஏற்பட்டது. 1964 இல் கிழக்குக் கரையில் ஏற்பட்ட சூறாவளியினால் திருகோணமலையை சுற்றியுள்ள பகுதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இதனால் மக்கள் தங்களது உடமைகளையும் சொத்துக்களையும் இழந்தனர். கத்தோலிக்க ஆலயங்கள் சூறாவளி புயலினால் பெரிதும் பாதிப்புக்குள்ளாயின. நிதிப் பற்றாக்குறை காணப்பட்ட போதிலும் மக்களின் நலன் கருதி ஆலயங்கள், வீடுகள் என்பவற்றை புனரமைத்து கொடுத்து சாவல்களைத் தாண்டி சேவையாற்றியுள்ளனர்.(நேர்காணல்: ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாமிப்பிள்ளை; முன்னாள் ஆயர்; திருகோணமலை)

இறுதிக் காலம் : ஆரம்ப காலகட்டங்களில் திருப்பலி சடங்குகள் இலத்தின் மொழியிலேயே நிறைவேற்றப்பட்டன. பிற்பட்ட காலங்களில் இவை சுதேச மொழிகளில் மாற்றப்பட்டமையால் தமிழ் மொழியில் தமது பணியை தொடர முடியாமல் 1974 மாசி மாதம் 17ஆம் நாள் அன்று ஆயர் கிளனி இராஜினாமா செய்து அமெரிக்கா சென்றார். இவர் தமிழ் மொழியில் தொடர்ந்தும் தமது பணிகளை ஆற்றமுடியாததனால் இராஜினாமா செய்து சென்றிருந்தாலும் கூட இம்மறைமாவட்டத்தில் மறக்கமுடியாத பணிகளை புரிந்து விட்டு சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இவர் 1993.04.27 அன்று அமெரிக்காவில் தனது 86 ஆவது வயதில் இறைபதம் எய்தினார். (Dominic Saminathan: 1988; 73)

4. முடிவுரை

போர்த்துக்கேயரின் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கத்தோலிக்கமானது, பிரித்தானியர் காலத்தில் நிறுவனப்படுத்தப்பட்ட வகையில் செயற்படத் தொடங்கியது. கிழக்குப் பிரதேசங்களை மையமாகக் கொண்ட திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் இயேசு சபையைச் சேர்ந்த வெளிநாட்டு ஆயர்கள் தமது வாழ்விடத்தை விட்டு இலங்கைக்கு வந்து சுதேச மொழிகள், மக்களின் வாழ்வியல் பற்றி அறிந்து கொள்ள முடியாத நிலையில் இனக்கலவரங்கள், கொள்ளை நோய்கள், இயற்கை அழிவுகள் மத்தியிலும் தங்களால் முடிந்த வரையிலும் சவால்களுக்கு மத்தியிலும், பல சேவைகளைப் புரிந்துள்ளார்கள். இம்மக்களிடையே

சாதிமுறை, இன, மத வேறுபாடுகளை இல்லாதொழித்து பல அர்ப்பணிப்பான சேவைகளை ஆற்றியுள்ளனர். மக்களை வழிப்படுத்தி சமயப் போதனைகளினூடாக தங்களது பணிகளை முன்னெடுத்திருந்தனர். இதற்கு எடுத்துக்காட்டாக குறவர் சமூகத்திரைக் குறிப்பிடலாம். இம்மக்களை ஆன்மீகத் தேவைகளுக்காக மட்டுமன்றி அவர்களுக்கு கல்வி, அடிப்படை வசதிகள் என்பவற்றை வழங்கி இம்மறைமாவட்ட வளர்ச்சிக்கும், விருத்திக்கும், சேவை புரிந்துள்ளனர். இன்றைய இயேசு சபையின் வளர்ச்சிக்கு அடித்தளமிட்டவர்களில் இம்மூவரது பங்களிப்பும் தனித்துவமானதாக அமைகின்றது.

உசாத்துணை

1. The Ceylon Blue Book, 1914, Government Printer, Ceylon.
2. The Ceylon Blue Book, 1923, Government Printer, Ceylon.
3. Dominic Saminathan, (1988), Lay Ministries in the Diocese of Trincomalee-Batticaloa with Specific Reference to Catechists in Pastoral care, (Unpublished doctoral dissertation), Pontifical Lateran University.
4. Perniola.V, (2006), The Catholic Church of Sri Lanka, Volume III, Tisara Prakasakayo Ltd.
5. John W Lange & Guy F. Rajendram, (2008), History of Trincomalee- Batticaloa Diocese (1895 - 1967), Guy F..Rajendram.
6. Charles Reichard S.J, (1947), “CODEX HISTORICUS of Trinco - Batticaloa from 1895-1926”, Bishop of Trincomalee.
7. Gnanamuthu Pilendran,(2020), Pioneers and Predecessors, Bishop’s house, Jaffna
8. Gnanamuthu Pilendran, (2020), The Establishment of the Jaffna Vicariate 1796-1857, S.Godage & Brothers(PVT)Ltd.
9. எழுவான், (2012), மட்டக்களப்பு மறைமாவட்டம்.

நேர்காணல்கள்

1. பொன்னையா ஜோசப் - மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்
2. ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை - ஓய்வு பெற்ற முன்னால் ஆயர்
3. நோயல் இம்மானுவேல் - திருகோணமலை மறைமாவட்ட ஆயர்
4. சுரேந்திரராஜா - அருட்தந்தை
5. சாமிநாதன் - அருட்தந்தை
6. நவரெத்தினம் - அருட்தந்தை
7. ரவிசங்கர்.ஞா - ஆசிரியர், மட்டக்களப்பு, வயது 42
8. கத்தரினா.இ - இல்லத்தரசி, மட்டக்களப்பு, வயது – 94
9. அன்னலட்சுமி.அ - இல்லத்தரசி, திருகோணமலை, வயது - 81
10. பிரான்சிஸ்.ஞா - ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர், திருகோணமலை, வயது – 74

நவீன வானியல் துறையில் ஈழத் தமிழரின் முதல் வழிகாட்டி பேராசிரியர் அலன் ஆபிரகாம்

ரமேஷ் பென் டில்கரன்
வரலாற்றுத்துறை, கலைப் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
dilharanben@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

19 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க மிஷனரியினரால் யாழ்ப்பாணத்தின் வட்டுக்கோட்டையினைத் தலைமையிடமாகக் கொண்டு வளர்ந்தெடுக்கப்பட்ட வானியல் ஆய்வுத் துறை மரபில் உதித்த ஈழத் தமிழரின் முதல் நவீன வானியல் விஞ்ஞானியாக பேராசிரியர் அலன் ஆபிரகாம் (சுப்ரமணியர் அம்பலவாணர்) விளங்குகின்றார். 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்த இவர் வானியல் ஆராய்ச்சித் துறையில் ஆர்வம் மிகுந்தவராகவும் அதன் முன்னேற்றத்திற்காக தமது வாழ்வினை அர்ப்பணித்தவராகவும் வானியல் ஆய்வில் உலகளாவிய அங்கீகாரம் பெற்ற முதல் இலங்கைத் தமிழர் என்ற பெருமையினை அடைந்தவராகவும் விளங்குகின்றார். சோதிடம் என்னும் போலி அறிவியலிற்குள் வானியல் அறிவு முடங்கிப் போயிருந்த யாழ்ப்பாண தமிழ் சமுதாயத்தில் இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் சோதிடத்தினை விடுத்து வானியல் அறிவின் மேன்மையினை யாழ் மக்களுக்கு எடுத்துரைக்கும் முயற்சியில் ஈடுபட்டவராக பத்திரிகை வாயிலாக பல்வேறு வானியல் கட்டுரைகள்இ மற்றும் சொற்பொழிவுகள் போன்பவற்றை மேற்கொண்டும் இவை தவிர தாமே வானியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வெற்றி கண்டவராக அலன் ஆபிரகாம் விளங்குகின்றார். இவரது சாதனையின் உச்சமாகவும் சர்வதேச ரீதியில் இவருக்கு பெரும் புகழை ஈட்டித் தந்த நிகழ்வாகஇ ஹெலி வால் வெள்ளி தொடர்பான இவரது கணிப்பு விளங்குகின்றது. மேற்கத்தேய நாடுகளில் அதி நவீன தொழில்நுட்பம் நிறைந்த வானியல் ஆய்வுக் கூடங்களில் முன்னெடுக்கப்பட்டு வந்த வானியல் ஆராய்ச்சியை வசதி வாய்ப்பு பெரிதும் இல்லாத யாழ்ப்பாணத்தின் ஓர் சிறிய கிராமத்தில் சிறியதொர் தொலை நோக்கியின் உதவி கொண்டு வெற்றுக் கண்களையும் மற்றும் கணித சமன்பாடுகளையும் பயன்படுத்தி வானியல் ஆராய்ச்சியினை முன்னெடுத்து இறுதியில் பிரித்தானிய வானியல் ஆராய்ச்சி கழகமே போற்றும் சர்வதேச வானியல் அறிஞராக எழுச்சி பெற்றமை பிரம்மிக்கத்தக்க சாதனையாகும். அந்த வகையிலே யாழ்ப்பாண மக்களிடையே ஏற்பட்ட நவீன அறிவியல் மரபில் எவ்வகையில் அலன் ஆபிரகாம் ஓர் முன்னோடியாக விளங்குகின்றார் என்பதனையும் நவீன வானியல் துறையில் அலன் ஆபிரகாமின் செயற்பாடுகளும் அவர் அடைந்த சாதனைகள் எத்தகையது என்பதனை ஆராய்வதாகவும் இக்கட்டுரை அமையும்.

திறவுச் சொற்கள்: வானசாஸ்திரம், வானியல், அலன் ஆபிரகாம், யாழ்ப்பாணம், அமெரிக்கமிஷன்

அறிமுகம்

வானியல் என்பது ஆச்சரியம்மிக்கதும், மனித கற்பனைக்கு அப்பாற்பட்டதுமான பரந்து விரிந்த இப்பிரபஞ்சம் பற்றியும் அதில் விரவிக் கிடக்கும் எண்ணிலடங்காத வான் பொருட்களைப் பற்றி ஆராயும் ஓர் உன்னதமான அறிவியல் துறையாகும். உலகில் தோன்றிய மிகப் பழமையான அறிவியல் துறைகளுள் ஒன்றாக விளங்கும் இத்துறை பண்டைய காலம் முதல் உலகின் பல்வேறு கலாச்சாரங்களிலும், நாகரிகங்களிலும் வாழ்ந்த மக்கள் மத்தியில் வான சாஸ்திரம் என்ற பெயரில் பயிலப்பட்டு வந்துள்ளது. ஆரம்ப காலத்தில் நட்சத்திரங்கள் மற்றும் கோள்களின் நிலைகளினை அடிப்படையாகக் கொண்டு திசையினை அறியவும், முன்கூட்டியே பருவமாற்றங்களை கணிப்பதிலும். காலநேரங்களை கண்டறிவதிலும் பெரிதும் பயன்பட்டு வந்த இவ் அறிவியல் துறையானது பண்டைய கிரேக்கத்திலும், இந்தியாவிலும் சிறந்த நிலையில் காணப்பட்டுள்ளது. அவதானிப்பினையும், கணிதத்தையும் அடிப்படையாகக் கொண்ட இவ் வானியல் துறையானது காலப்போக்கில் சமய, பண்பாட்டு கருத்துக்களால் உள்வாங்கப்பட்டு படிப்படியாக அறிவியல் தன்மையை இழந்து சமயத் துறையின் ஓர் உட்பிரிவாகவும், தனி மனித வாழ்வை எதிர்வு கூறும் சோதிடம் எனும் நம்பிக்கை சார்ந்த ஓர் கலைத் துறையாகவும் மாற்றம் கண்டது.

இத்தகைய பின்னணியில் மத்திய காலத்தின் இறுதியில் ஐரோப்பாவில் ஏற்பட்ட அறிவியல் மறுமலர்ச்சியின் மூலம் நவீன வானியல் துறையாக புத்தெழுச்சி பெற்றது. அதுவரை உலகம் முழுவதும் உண்மை என நம்பப்பட்டு வந்த புவிமையக் கொள்கைக்கு (Geo- centric

Theory) மாறாக சூரிய மையக் கொள்கையை (Helio centric Theory) நிறுவிய கொப்பனில்கஸ் மற்றும் அவரது கொள்கைகளை ஏற்று அதனை விருத்தி செய்த வானியல் அறிஞர்களான கெப்லர் மற்றும் கலிலியோ கலிலி போன்ற வானியல் அறிஞர்களின் உதவியுடன் வானியல் துறையானது சமயத்துறையிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்டு தனிப்பெரும் விஞ்ஞானத் துறையாக வளர்த்தெடுக்கப்பட்டது. முழுமையான விஞ்ஞானப் பண்புகளைக் கொண்ட இவ் வானியல் மரபு கொப்பனிக்கசின் வானியல் அல்லது நவீன வானியல் (Modern Astronomy) என்ற பெயரால் அழைக்கப்பட்டது. அதே போல பழமையான நம்பிக்கை சார்ந்த கருத்துக்களைக் கொண்ட சோதிட மரபானது Astrology என்ற பெயரால் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்துள்ளது(Sen, S.N., 1971:59). இவற்றிற்கு இடையில் நடைபெற்ற நட்சத்திர போரில் மேற்குலக நாடுகளின் பின்னணியில் நவீன வானியல் துறையானது வெற்றிகண்டது. ஆயினும் இலங்கை, இந்தியா போன்ற கீழைத் தேச நாடுகளைப் பொறுத்த வரையில் நவீன வானியல் துறையும் அதன் முன்னேற்றகரமான கோட்பாட்டுகளும், அதன் விளக்கங்களும், இத்துறையில் நிகழ்த்தப்பட்ட பிரம்மிப்பூட்டும் நவீன கண்டுபிடிப்புக்கள் என்பன தொடர்பாக அறியப்படாத நிலைமையே 19 ஆம் நூற்றாண்டில் அமெரிக்கமிஷனரிகள் வரும் வரை காணப்பட்டது.

19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழ் மக்களிடம் பழைமையான வானியல் முறைகளே பயிலப்பட்டு வந்துள்ளது. சூரிய மையக் கொள்கையினையம் அறிவியலையும் அடிப்படையாகக் கொண்ட நவீன வான சாஸ்திர முறை பற்றி மக்கள் அறியாதவர்களாக காணப்பட்டனர். இத்தகைய நிலையில் அமெரிக்க மிஷனரியினர் தமது கிறிஸ்தவ சமயத்தை பரப்பும் ஓர் ஊடகமாக நவீன வானியலைப் பயன்படுத்தினர். இதற்கு காரணம் நவீன வானியல் மூலம் சுதேச வானியலான சோதிட நம்பிக்கை என்பவற்றிலுள்ள குறைகளை எடுத்துக் காட்டுவதன் மூலம் இந்து சமயத்தை வலுவிழக்கச் செய்வதால் காணப்பட்டது. இத்தகைய பின்னணியில் வட்டுக்கோட்டையில் 1823 இல் ஸ்தாபிக்கப்பட்ட செமினரியினை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்க மிஷனரியினர் போதித்த நவீன வானியல் அறிவானது 20 ஆம் நூற்றாண்டில் சர்வதேச புகழ் பெற்ற அலன் ஆபிரகாம் என்ற வானியல் விஞ்ஞானி தோன்றக் காரணமாய் அமைந்தது.

நவீன வானியல் துறையில் ஈழத் தமிழரின் முதல் வழிகாட்டி பேராசிரியர் அலன் ஆபிரகாம் எனும் போது அலன் ஆபிரகாமிற்கு முன்வரை வானியல் அறிவு எத்தகையது , அதற்கு முன்னர் தமிழ் மக்களின் வானியல் அறிஞர்கள் இருந்ததில்லையா? போன்ற கேள்விகள் எழுகின்றது. வரலாற்று ரீதியாக ஆராய்ந்தால் 16 ஆம் நூற்றாண்டு முதல் தொடர்ச்சியான வானியல் சாஸ்திர மரபு யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தமை புலப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த வானியல் சாஸ்திரிகள் அமெரிக்க மிஷனரியினர் வருவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வானியல் நிகழ்வுகளின் நேரத்தை துல்லியமாகக் கணிக்க அறிந்திருந்தனர். வாக்கிய பஞ்சாங்க முறை யாழ்ப்பாண மக்களிடையே பிரபல்யம் பெற்று விளங்கியிருந்தது. இப்படியாக யாழ்ப்பாண அரச காலம் முதல் யாழ் மக்களிடையே வானியல் சார்ந்த பாரம்பரியம் இருந்து வந்த போதும் 20 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அலன் ஆபிரகாமினை எவ்வாறு நாம் யாழ்ப்பாண தமிழ் மக்களின் முதல் வானியல் விஞ்ஞானி எனக் கூற முடியும் என்ற பிரச்சனை எழுகின்றது அத்தகைய

பெருமைக்கு அலன் ஆபிரகாம் தகுதியானவரா? வானியல் துறையில் அவர் நிகழ்த்திய சாதனை யாது? 21 ஆம் நூற்றாண்டிலும் அவரை நினைவுபடுத்த வேண்டிய அவசியம் யாது போன்ற கேள்விகளுக்கான விடைகளை தர்க்கரீதியானதும், விமர்சனப் பூர்வமாகவும் வரலாற்று ரீதியிலும் ஆராய்வதாக இவ்வாய்வு அமையப் பெறுகின்றது.

இலக்கிய மீளாய்வு

1. உதய தாரகை என்ற பத்திரிகையானது 1841 முதல் அமெரிக்கமிஷனரியினரால் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வந்துள்ளது. இதில் வான சாஸ்திரம் தொடர்பாக அமெரிக்க மிஷனயினர் எழுதிய பல்வேறு கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இவை அமெரிக்கமிஷனரியினர் வான சாஸ்திரத்திற்கு ஆற்றிய பணிகளை அறிவதற்கு உதவும் ஆய்வு மூலாதாரமாக அமைகின்றது.

2. A special supplement of the Jaffna College என்ற தலைப்பில் 1985 வெளிவந்த சஞ்சிகையில், Allen Abraham and the Halley's comet என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரையானது. யாழ்ப்பாணக் கல்லூரியில் நீண்ட காலம் கணிதம் மற்றும் விஞ்ஞான ஆசிரியராக பணியாற்றிய அலன் ஆபிரகாம் வான சாஸ்திரத்தில் புரிந்த சாதனைகள் தொடர்பான தகவல்களும். மேலும் அலன் ஆபிரகாம் வான சாஸ்திரம் தொடர்பாக எழுதிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளமை ஆய்விற்கு உபயோகமாகவுள்ளது.

3. ஜெபநேசன் அவர்களால் 1994 இல் எழுதப்பட்ட யாழ்ப்பாணத்து கிறிஸ்தவ கவிஞர்களும், கீர்த்தனைகளும் என்ற நூலில் அலன் ஆபிரகாமின் வாழ்க்கை வரலாறு மிகச் சுருக்கமாக கொடுக்கப்பட்டுள்ளது இதில் அவரது வானியல் சாதனை பற்றிய விளக்கங்கள் இடம்பெறாத போதும் அலன் ஆபிரகாமின் ஆரம்ப வாழ்க்கை பற்றிய வரலாற்றுத் தகவல்களை அறிய உதவுகின்றது.

ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது வரலாற்று அணுகுமுறையிறைப்படையில் அமைகின்றது. இது முதலாம், இரண்டாம் தரச்சான்றுகளை கால வரிசையில் பயன்படுத்தி அமைகின்றது. மேலும் இங்கு |வரலாற்றுத் தரவுகளை விமர்சன ரீதியாகவும் , மதக் கண்ணோட்டத்திற்கு மாறாக அறிவியல் கண்ணோட்டத்துடனும் அனுகப்படுகின்றது.

பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

ஈழத்தமிழரின் விஞ்ஞான ரீதியிலான வானியல் ஆராய்ச்சி துறையின் முன்னோடியாக விளங்குகின்ற அலன் ஆபிரகாம் அம்பலவாணர் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள காரைதீவு (தற்போது காரைநகர்) பகுதியில் 1865ஆம் ஆண்டு சுப்ரமணியம் , பார்வதி தம்பதியினருக்கு மூத்த புதல்வராகப் பிறந்தார். இவருடைய இயற்பெயர் சுப்ரமணியர் அம்பலவாணர். இவருக்கு இரு சகோதரர்களும், ஒரு சகோதரியும் இருந்தனர். 1876இல் யாழ்ப்பாணத்தில் பரவிய கொலரா

பெருந்தொற்றின் காரணமாக தமது பதினாறாவது வயதிலேயே தமது பெற்றோரை இழந்த இவர் சிறிய தந்தையான கந்தப்பர் சரவணமுத்து என்பவரின் பராமரிப்பில் வளர்ந்தார் (Visuvanathan 1985:7).

அக்காலத்தில் காரைதீவில் தரமான பாடசாலைகள் காணப்படவில்லை. இதன் காரணமாக திருமதி சீதை நாகமுத்து என்பவரின் திண்ணைப் பள்ளியில் ஆரம்ப கல்வியை பயின்ற இவர் பின்னர் காரைநகரைச் சேர்ந்த கார்த்திகேச ஐயர் என்ற பிராமணரிடம் தமிழ் இலக்கியம் பயின்றார். கல்வியில் மிகுந்த ஆர்வம் கொண்ட அலன் ஆபிரகாமிற்கு 1881[இல்] தெல்லிப்பளையில் அமெரிக்க மிஷனரியினரால் நடாத்தப்படும் ஆசிரிய பயற்சிக் கலாசாலையில் (Aid Tranning school) சேரும் வாய்ப்புக் கிடைத்தது. அங்கு பயிற்சி பெறும் காலத்திலேயே கிறிஸ்தவராக மதம் மாறி அலன் ஆபிரகாம் அம்பலவாணர் என்ற பெயரைச் சூடிக்கொண்டார். 1883[இல்] தெல்லிப்பளையில் ஆசிரிய பயிற்சி முடித்துக் கொண்டு தமது பட்டப் படிப்பிற்காக யாழ்ப்பாணக் கல்லூரியில் இணைந்து கொண்டார் அலன் ஆபிரகாம். அக்காலத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியானது இந்தியாவின் கல்கத்தா பல்கலைகழகத்துடன் இணைந்திருந்ததுடன் உலகத் தரம்வாய்ந்த பட்டப் படிப்பினை வழங்கி வந்தது. இங்கு அலன் ஆபிரகாம் 1884 முதல் 1888 வரை 5 வருட பட்டப் படிப்பினை மேற்கொண்டு முதலாம் தரத்தில் சித்தி பெற்றார். அதனைத் தொடர்ந்து தெல்லிப்பளை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். பின்னர் 1891[இல்] யாழ்ப்பாண கல்லூரியின் தமிழ் துறை பேராசிரியராக நியமிக்கப்பட்டார். யாழ்ப்பாணக் கல்லூரியின் பேராசிரியராக இருந்து கொண்டே கல்கத்தா பல்கலைகழகத்தின் பட்டப் படிப்பினையும் பூர்த்தி செய்து F.A (First Arts) பட்டமும் அதனைத் தொடர்ந்து B.A பட்டமும் பெற்றார். இது அக்காலத்தில் மிக உயரிய தகைமையாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது. பின்னர் அதே பல்கலைகழகத்தின் வெளிவாரி மாணவராக இணைந்து ஆங்கிலம், மெய்யியல், கணிதம் ஆகிய பாடங்களில் இளங்கலைப் பட்டம் பெற்றார். இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணக் கல்லூரியின் கணிதப் பேராசிரியராக இவர் கடமையாற்றினார் (Kadirgamar 1985:7).

வட்டுக்கோட்டை அமெரிக்க மிஷனரியினர் போதித்த நவீன வான சாஸ்திரத்தினால் செல்வாக்குப் பெற்றிருந்த இவரிடம் இயல்பாகவே வானியல் ஆராய்ச்சித் துறையில் ஆர்வம் அதிகமாகக் காணப்பட்டது. S.W.Howland மற்றும் W.E.Hitchcock போன்ற அமெரிக்க அறிஞரிடம் வானியலை திறம்பட கற்ற இவர் பின்னர் வானியல் மேல் கொண்ட பெரும் ஆர்வத்தால் சுயமாகவே அதனை விருந்தி செய்து தமது வாழ்வின் பெரும் பகுதியினை வானியல் ஆராய்ச்சிக்காகவே செலவிட்டார்.

ஹெலியின் வால் வெள்ளி (Halley's comet)

அலன் ஆபிரகாமிற்கு வானியல் துறையில் ஈடற்ற சர்வதேச புகழை ஈட்டித் தந்த நிகழ்வாக 1910 [இல்] இடம்பெற்ற ஹேலியின் வால் வெள்ளி (Halley's comet) பற்றிய அவரது சாதனைக்குரிய கணிப்பு விளங்குகின்றது. இவ் வரலாற்று பின்னணியை விளங்கிக் கொள்வதற்கு

முதலில் வால் வெள்ளிகள் என்றால் என்ன? இவை எவ்வாறு தோன்றுகின்றது? அவற்றின் வருகையினை முன்னரே கணிக்க முடியுமா? போன்ற கேள்விகளுக்கு இங்கு விடையளிக்வேண்டியுள்ளது. வால் வெள்ளியென்பது பனியினாலும் தூசுகளினாலும் நிரம்பப் பெற்ற ஓர் வான் பொருளாகும். பனிப் பந்து போன்ற அமைப்பைக் கொண்ட இவை கோள்களைப் போல் அல்லாது வேறுபட்ட சுற்றுப் பாதையில் சூரியனைச் சுற்றி வருகின்றன. இவை சூரியனின் வெப்பத்தின் காரணமாக தீப்பந்து நீண்டதோர் வால் கொண்டு பறந்தாற்போல காட்சி அளிப்பவையாகக் காணப்படுகின்றன. இதனால் கூந்தல் நட்சத்திரம் என்ற பொருள் தரும் வகையில் comet என்ற இலத்தீன் பெயரைப் பெற்றது. தமிழில் இதனை தூமகேது, வால் வெள்ளி மற்றும் வால் நட்சத்திரம் எனவும் அழைப்பர்.

காலத்துக்கு காலம் வானத்தில் தோன்றும் வால் வெள்ளி நிகழ்வுகள் பூமிக்கு பெரும் ஆபத்தினைக் கொண்டு வரும் அறிகுறி என நெடுங்காலமாக உலக மக்கள் நம்பி வந்துள்ளனர். வால் வெள்ளி என்பது பஞ்சம் முதலான கொடுமைகளின் தூதன் என மக்கள் கருதி அந்நிகழ்வுகளின் போது பெரும் அச்சம் கொண்டனர் (Arnold 1861:68). ‘‘அந்தோ வால் வெள்ளி தோன்றிற்றே, இதன் தோற்றத்தால் பூலோகம் அக்கினிக்கிரையாவது திட்டமே திட்டம்” எனக் கூறி ஆற்றில் விழுந்து இறந்த மூதாட்டி பற்றி இந்து இதிகாசத்தில் கூறப்படுகின்றது (Arnold 1861:69). வால் நட்சத்திரத்தின் ஆபத்திலிருந்து பாதுகாக்க கத்தோலிக்க தேவாலயங்களில் பிரார்த்தனைகள் நிகழ்த்துவதற்கு போப் கட்டளையிட்ட சம்பவங்கள் வரலாற்றில் இடம்பெற்றுள்ளது (Arnold 1861:71). இத்தகைய நிலையில் அச்சமூட்டக் கூடிய வால் நட்சத்திரங்களை ஆராய்வதும், அதன் வருகையினை முன்கூட்டியே கணிப்பதும் தொடர்பாக ஐரோப்பிய வானியல் அறிஞர்களிடையே போட்டி நிலவியது. பலர் இதில் வெற்றியும் ஈட்டினர். இதன் மூலமாக வால் நட்சத்திரம் தொடர்பாக நிலவி வந்த பல குருட்டு (அடிப்படையற்ற) நம்பிக்கைகள் தகர்க்கப்பட்டது. மக்கள் எண்ணியது போல வால் வெள்ளி கொடுமையின் தூதன் அல்ல அவற்றின் நிகழ்வுகள் தெய்வீகம் பொருந்தியவையும் அல்ல மாறாக அவை இயற்கையானவை, சாதாரண விண் பொருட்களவை, அவற்றின் வருகை தெய்வத்தின் சித்தத்தால் அல்ல மாறாக மனிதனின் அறிவால் கணிக்க முடியும் என்ற உண்மையினை அவ்வறிஞர்கள் உலகத்திற்கு எடுத்துக் கூறத் தவறவில்லை அத்தகைய வானியல் அறிஞர்களில் ஒருவராக விளங்கியவர் எட்மன் ஹேலி.

17ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் வாழ்ந்த எட்மன் ஹேலி (Edmund Halley) என்ற வானியலாளர் இத்தகைய வால் நட்சத்திரம் பற்றிய ஓர் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இதற்காக வரலாற்று ஆவணங்கள் துல்லியமாக பதிவு செய்யப்பட்டிருந்த வால் நட்சத்திர நிகழ்வுகளில் இருபது நிகழ்வுகளை தமது ஆய்விற்கு எடுத்துக் கொண்டார். இவ் ஆய்வின் முடிவில் ஆச்சரியம் மிக்க ஓர் உண்மையினை அவர் கண்டுபிடித்தார் அது என்னவெனில் 1531 , 1607 மற்றும் 1682இல் வருகைதந்த வால் நட்சத்திரங்களுக்கிடையே ஓர் வித ஒற்றுமைத் தன்மை இருப்பதனையும் அவை ஒரே சீரான கால இடைவேளையில் பூமியில் தென்படுகின்றது என்பதனையும் அவை ஏறத்தாள ஒரேவிதமான சுற்றுப் பாதையினையும் கொண்டிருப்பதனையும் கண்டார். இதன் அடிப்படையில் இவை வெவ்வேறானவை அல்ல மாறாக இவை அனைத்தும்

வெவ்வேறு காலப்பகுதியில் தோன்றிய ஓர் வால்வெள்ளியே என்ற முடிவுக்கு வந்தார். மேலும் இவ் வால்வெள்ளியானது ஒவ்வொரு 75 அல்லது 76 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூமிக்கருகே தோன்றும் என்பதனையும் கணித்து உலகிற்கு வெளிப்படுத்தினார். இவர் கூறியவாறே இறுதியாக 1658இல் தோன்றிய அவ் வால்வெள்ளி 76 ஆண்டுகள் கழித்து 1758இல் தோன்றியது. தமது கணிப்பு உண்மை என்பது நிரூபிக்கப்படுவதற்கு முன்னரே எட்மன் இறந்துவிட்ட போதும் அவரது சக வானியலாளர்கள் எட்மன் ஹெலியின் சாதனையை நினைவு கூரும் வண்ணம் இதற்கு ஹெலியின் வால் வெள்ளி (Halley's comet) என்று பெயரிட்டனர் (Eliezer 1985:5). இத்தகைய ஹேலியின் வால் வெள்ளியானது யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் வானியல் பெருமையினை உலகிற்கு பறைசாற்றவிருக்கின்றது என்பதனை அப்பொழுது ஒருவரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

75 முதல் 76 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூமிக்கருகில் தென்படும் ஹேலியின் வால் வெள்ளியானது 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப பகுதியான 1910இல் ஏற்படவிருந்த நிலையில் அவ்வால் வெள்ளி சரியாக எந்த நேரத்தில் தோன்றும் என்பதனை துல்லியமாகக் கணிப்பது தொடர்பில் உலக அறிஞர்களிடையே பெரும் போட்டி நிலவியது. உலகம் முழுவதிலும் இருந்த புலமை வாய்ந்த மேலைத்தேய வானியல் துறை அறிஞர் பலர் ஹேலிஸ் வால் வெற்றி பற்றி ஆராய்ந்து அது பூமிக்கு அருகில் எப்பொழுது தோன்றும் என்ற தமது கணிப்பினை வெளிப்படுத்தினர்.

பிரம்மாண்டமான நவீன ஆய்வுக்கூடங்கள், பெருமதிப்புமிக்க தொலைநோக்கி போன்ற வசதிகளை பெற்றிருந்த மேலைத் தேசத்து விஞ்ஞானிகளுடன் எந்தவித வசதி வாய்ப்புமில்லாத யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியின் சிறிய ஆய்வு கூடத்தில் அமெரிக்க மிஷனரியினர் பயன்படுத்திய 5 அடி நீளம் கொண்ட சாதாரணமான ஓர் தொலைகாட்டியின் உதவி கொண்டு தமது வெற்றுக் கண்களையும், கணித சமன்பாடுகளினையும் மூலதனமாகக் கொண்டு இம் முயற்ச்சியில் ஈடுபட்டார் அலன் ஆபிரகாம். தம்முடைய பெரு முயற்ச்சியால் ஹேலிஸ் வால்வெள்ளி பூமியினை நெருங்கும் நேரம் தொடர்பாகவும், அது எப்பொழுது மக்களது வெற்றுக் கண்களுக்கு தோன்றும் என்பதனைக் கணித்தார். இவரது கணிப்பின்ப்படி வால் வெள்ளியானது 1910 மே மாதம்- 19ஆம் திகதி காலை 9 தொடக்கம் 10 மணி வரை பூமிக்கு மிக அருகில் வரும் எனவும் அதனை வெற்றுக் கண்களால் பார்க்க முடியும் எனவும் எதிர்வு கூறப்பட்டது. ஆயினும் ஐரோப்பிய அறிஞர்களது கணிப்புக்களுடன் அலன் ஆபிரகாமின் கணிப்பு பொருந்தாது போனமையினால் அவை மக்களின் கவனத்தை பெரிதும் ஈர்க்கவில்லை.

இத்தகைய நிலையில் ஹெலியின் வால் வெள்ளி பூமியை நெருங்கி வந்து கொண்டிருந்தது. 1909 September 11இல் heidelbergi சேர்ந்த Dr wolf என்பவரால் முதலில் புகைப்படமாக அடையாளம் காணப்பட்டதனைத் தொடர்ந்து 1909 September 19 சிக்காகோவைச் சேர்ந்த பேராசிரியர் Burnham தொலைநோக்கியூடாக இதனை அடையாளம் கண்டார்இ இறுதியாக அவ்வால் வெள்ளியானது 1910 April 14இல் பூமியினை நெருங்கி வெற்றுக் கண்களால் பார்க்க முடிந்தது. இந்நிலையில் வால் வெள்ளியின் தோற்றம் தொடர்பான

மேலைத்தேய அறிஞர்களின் கணிப்புக்கள் யாவற்றிலும் அலன் ஆபிரகாமின் கணிப்பே மிகச் சரியாக அமைந்தது (Kadirgamar 1985:2). வால் வெள்ளியை முதன் முதலில் வெற்றுக் கண்ணால் கண்டவராக தமது கணிப்பு துல்லியமானது என்பதனை உணர்ந்த அலன் ஆபிரகாம் காலம் தாழ்த்தாது கொழும்பிலுள்ள அச்சகத்தினைத் தொடர்பு கொண்டு வால் வெள்ளியின் கண்டுபிடிப்பையும், வானத்தின் எப்பகுதியில் அதனைக் கண்டுகொள்ளமுடியும் என்ற தகவலையம் வழங்கினார். அதன் மூலம் ஹேலி வால்வெள்ளி குறித்த அலன் ஆபிரகாமின் கணிப்பு வெளி உலகிற்கு புலப்பட்டது.

1910 April 14 இலங்கை மக்கள் இவ்வால் வெள்ளியை கண்ட பொழுது அது பற்றி அதுவரை கொண்டிருந்த அச்சத்தை மறந்தவர்களாக அலன் ஆபிரகாமின் அசாத்திய சாதனையால் அகமகிழ்ந்தனர் யாழ்ப்பாண மக்கள். இதனைத் தொடர்ந்து April 18ஆம் திகதி இந்தியாவின் பம்பாய்ஈ கொடைக்கானல் பகுதிகளிலும், 25 இலண்டனிலும் இதனை வெற்றுக் கண்களால் பார்க்க முடிந்தது (Eliezer 1985:5).

ஹேலி கொமட் பூமியை கடந்த பின்னர் அதனது பயணப்பாதை குறித்து கணிப்பதிலும் மேலைத்தேய அறிஞர்களிடையே போட்டி நிலவியது பலரும் தம்முடைய கணிப்புக்களை வெளியிட்டனர். இது பற்றி முனைப்புடன் ஆராய்ந்த அலன் ஆபிரகாம் குறித்த வால் வெள்ளியானது மே மாதம் முதல் கிழமை அளவில் வீனஸ் கிரகத்திற்கு மிக நெருக்கமாக கடந்து செல்லும் எனவும் அப்பொழுது வீனஸ் கிரகத்தின் ஈர்ப்பு சக்தியால் தாக்கம் பெற்று அதன் பயண வேகம் மாற்றமடையும் என்பதனையும் தெரிவித்தார். இதேவேளை ஏனைய உலக அறிஞர்கள் இத்தகைய வால்வெள்ளியின் பயணவேக மாற்றத்தை கணக்கிலெடுக்காது கணித்த நிலையில் அலன் ஆபிரகாமின் கணிப்பே மீண்டும் துல்லியமானதாக அமைந்தது.

உலகரங்கில் அலன் ஆபிரகாமின் சாதனை பேசப்படவே ஹேலி வால்வெள்ளி பற்றிய அலன் ஆபிரகாமின் கணிப்பு பற்றிய தரவுகள் அனைத்தினையும் பெற்றுக் கொண்ட பிரித்தானிய வானியல் ஆராய்ச்சிக் கழகம் (Royal Astronomical Society) இவரது சாதனைகளை ஏற்று அங்கீகரித்ததுடன்இ அலன் ஆபிரகாமின் திறமையினைப் பாராட்டி தமது கழகத்தின் அங்கத்தவராக ஏற்று Fellow of the Royal Astronomical Society என்ற உயரிய சான்றிதழை வழங்கி கௌரவித்தது. அவ்வாறு 1912ஆம் வருடத்தில் அங்கத்துவம் வழங்கப்பட்ட அறிஞர்ககளுள் முதல் பெயராக அலன் ஆபிரகாம் அம்பலவாணரின் பெயர் இடம் பெற்றது விசேடமானதாகும். அந்த வகையில் வானியல் துறையில் இவரது மிகச் சிறந்த பங்களிப்பாகவும்இ சர்வதேச ரீதியில் இவருக்கு பெரும் புகழைத் தேடித்தந்ததாகவும், இங்கிலாந்தின் உயரிய வானியல் கழகத்தின் அங்கத்துவம் கிடைப்பதற்கும் ஏதுவாக அமைந்தது ஹேலி என்னும் வால் வெள்ளி பற்றிய அலன் ஆபிரகாமின் துல்லியமான கணிப்பாகும். அன்று முதல் ஹேலியின் வால்வெள்ளி அலன் ஆபிரகாமின் சாதனையினையும் தாங்கியவகையில் 76 வருடத்திற்கொரு முறை அவரை நினைவுபடுத்தும் சின்னமாக மாறிற்று.

அலனின் மறைவின் பின் 1985இல் ஹேலியின் மீள் வருகை

இறுதியாக ஹேலி வால் வெள்ளியானது 1985 முதல் 1986இல் பூமியை தரிசித்தது. இதனை 1985 நொவம்பர் 11ஆம் திகதி இலங்கை மக்கள் கண்டனர். 1986 மார்ச் வரை இதனை உலகின் பல பாகங்களிலுமுள்ள மக்கள் அவதானித்தனர். முதன் முதலில் விண்கலத்தில் இருந்தபடி மிக அருகாமையில் அவதானிக்கப்பட்ட தருணமாக இது வரலாற்றில் இடம் பிடித்துக் கொண்டது. இத்தருணத்தில் முன்னதாக 1910இல் இவ்வால் வெள்ளியின் வருகையினை சரியாக கணித்த அலன் ஆபிரகாம் தொடர்பாக மக்களது மனநிலை பற்றி சம கால ஆவணங்களில் (1985) உள்ள குறிப்புக்களை பார்க்கலாம்.

1985இல் ஹேலி வால் வெள்ளி நிகழ்வின்போது அலன் ஆபிரகாம் தொடர்பான மக்களின் மனநிலை எத்தகையதாக காணப்பட்டது? யாழ்ப்பாண மக்கள் எத்தகைய உணர்வினை வெளிப்படுத்தினார்கள். உண்மையில் அலன் ஆபிரகாமை அவர்கள் நினைத்து பார்த்ததனரா? நம் மத்தியில் வாழ்ந்த ஒரு விஞ்ஞானி படைத்த மாபெரும் சாதனை என்று அதனை குறித்து பெருமை கொள்ளவில்லையா? போன்ற விடயங்களை பின்வரும் சமகால குறிப்புகள் விளக்கம் கொடுப்பனவையாக உள்ளன.

இது தொடர்பாக அப்போதய யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கதிர்காமர் குறிப்பிடும் போது

”ஹேலி வால் வெள்ளியின் வருகை பற்றி முக்கியத்துவம் கொடுத்து பேசும் எமது செய்தி ஊடகங்கள் அலன் ஆபிரகாமினை மறந்து விட்டது போல் தோன்றுவது மிகவும் கவலைக்குரியது ”என தம் கவலையை வெளிப்படுத்தினார்.

அடுத்ததாக ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த La Trobe பல்கலைக்கழக பேராசிரியர் C.J. Eliezer குறிப்பிடும் போது

“ஹேலி வால்வெள்ளி மீண்டும் எம்மை சந்திக்கவிருக்கின்றது. இம்முறை 1910இல் இருந்தவாறு மிக பிரகாசமாக நம் கண்களுக்கு தோன்றப் போவதில்லை என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. இவ் வால் வெள்ளியை 1986 மார்ச் மாதத்தின் இறுதிப் பகுதியில் வெற்றுக் கண்களால் பார்க்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாம் அதனை கண்ணுற்று அதிசயிக்கும் தருணத்தில் நம் பேராசிரியர் அலன் ஆபிரகாமின் உன்னதமான வாழ்வினையும் அவரது பணியினையும் நினைவு கூறுவோம்” என குறிப்பிட்டார் (Kadirgamar 1985:6).

மேலும் யாழ்ப்பாணக் கல்லூரி விஞ்ஞானத் துறை தலைவராக பணியாற்றிய T. விஸ்வனாதன் குறிப்பிடும் போது “இவ்வருடத்தின் (1985) நொவம்பர் மாதம் 11ஆம் திகதி ஹேலி வால் வெள்ளியானது மீண்டும் இலங்கையில் தோன்றவிருக்கின்றது. அடுத்த வருடம் (1986) மார்ச் மாதம் இதனை தெளிவாக காண முடியும். இலங்கையில் இவ்வால் வெள்ளியினை உரிய காலத்தில் அவதானிப்பதற்கான ஆயத்தங்கள் Dr Cyril ponnamperama என்பவரின் தலமையின் கீழ் இடம்பெற்று வருகின்றது. இறுதியாக 1910இல் இவ்வால் வெள்ளியின் தோற்றுகை குறித்து

சரியாக கணித்தவர் அலன் ஆபிரகாம் என்று தெரிந்தவர்கள் பலரும் கூட தற்பொழுது மீண்டும் அவ்வால் வெள்ளி வரவிருக்கும் தருணத்தில் அலன் ஆபிரகாமை நினைவு கூர்வதிலோ அல்லது இத்தனை காலம் அவர் ஆற்றிய சேவைகளை கொண்டாடுவதிலோ அக்கறை செலுத்தவில்லை" எனக் குறிப்பிடுகின்றார். "ஹேலி வால்வெள்ளியால் புகழ் படைத்த மிகத் தாழ்மையான கணித பேராசிரியரான அலன் ஆபிரகாமினை யாழ்ப்பாண தென்னிந்திய திருச்சபை, யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்ப்பாணத்தின் மக்கள் மட்டுமன்றி மொத்த இலங்கை மக்களும் நினைவில் வைத்திருக்க கடமைப்பட்டவர்களாக உள்ளனர்" எனக் விஸ்வநாதன் மேலும் குறிப்பிடுகின்றார் (visuvanathan 1985:11).

எவ்வாறாயினும் காரைநகரைச் சேர்ந்த மக்கள் அலன் ஆபிரகாம் மீது தாம் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தவும், இச் சிறிய தீவின் புகழை மேன்மைப்படுத்தும் வகையிலும் அவர் ஆற்றிய சேவையினை உணர்த்தும் வகையிலும், அலன் ஆபிரகாம் அம்பலவானர் சங்கம் ஒன்றினை நிறுவியுள்ளதுடன், அவ்வூரிலுள்ள அலன் ஒழுங்கையின் முடிவில் ஓர் நினைவு தூபியினை அமைப்பதற்கான முயற்ச்சியினை முன்னெடுத்தனர். ஆயினும் இம் முயற்சி இன்று வரை கைகூடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. Helly's Comet என்ற தலைப்பில் ஓர் விசேட சஞ்சிகையினை வெளியிட்டு அலன் ஆபிரகாமை கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் யாழ்ப்பாணக் கல்லூரி சமூகத்தினரும் இவரை நினைவு கூரும் முகமாக 1985 இல் Allen Abraham and Helly's Comet என்ற தலைப்பில் விசேட தொகுப்பொன்றினை வெளியிட்டு அலன் ஆபிரகாமினை கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறு எட்மன் ஹேலி என்பவர் வால் நட்சத்திரத்திரம் இயற்கையாக தனக்குரிய சுற்றுப்பாதையில் நகரும் ஓர் வான் பொருள் என்பதனையும் அதன் வருகையினைக் கணிக்க முடியும் என நிரூபித்து அதுவரை ஐரோப்பிய மக்களிடையே வால் வெள்ளி தொடர்பாக காணப்பட்ட மூட நம்பிக்கைகளை விலக்கினாரோ அதற்கு ஒப்பான சாதனையாகவே அலன் ஆபிரகாமின் சாதனையும் அமைந்தது. அச்சமூட்டும் மூட நம்பிக்கைகளிலிருந்து விஞ்ஞானத்தின் ஒளியில் பயணிப்பதற்கு வழிகாட்டியாக அலன் ஆபிரகாம் யாழ்ப்பாணத் தமிழரின் முதல் விஞ்ஞான வழிகாட்டியாக விளங்கினார் என்பதனை நாம் நினைவில் கொள்ளல் வேண்டும்.

எனவே 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாண மண்ணில் வாழ்ந்த சர்வதேச புகழ் வாய்ந்த வானியல் அறிஞராக அலன் ஆபிரகாம் விளங்கினார். தாம் வாழ்ந்த காலத்திலேயே புகழின் உச்சம் பெற்ற அலன் தமது வாழ்வில் மிக எளிமையுள்ளவராகவே வாழ்ந்தார் என்பதனை அவரது வாழ்க்கைக் குறிப்புகளினூடாக அறியமுடிகின்றது. யாழ்ப்பாணக் கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றிய போது தினமும் காரைநகரிலிருந்து மாட்டு வண்டியில் அதிகாலை 4.30 க்கு புறப்பட்டு 7.30 க்கு யாழ்ப்பாணக் கல்லூரிக்கு வந்து சேர்வார். பணியாற்றி முடிந்த பின் 2.30 க்கு புறப்பட்டு 4.30க்கு காரைநகரை அடைவார். வேட்டியும், கோட்டும் இவரது உடைகளாகக் காணப்பட்டன. எப்பொழுதும் உற்சாகமாகவும் அனைவருடனும் அன்பாக பழகும் சுபாவமும் கொண்டவர். மாணவர்களுடன் சுற்றுலா செல்லுகையில் அவர் எழுதிய கவிதை நகைச்சுவை தழும்பப் பெற்றது. இதனைக் கல்லூரி மிசலனியில் காணலாம். 1986ஆம் முதல்

1922 வரை யாழ்ப்பாணக் கல்லூரியில் பணியாற்றிய அலன் ஆபிரகாம் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு தமது 52 ஆவது வயதில் இறந்தார். யாழ்ப்பாணக் கல்லூரியில் அலன் ஆபிரகாம் விட்டுச் சென்ற இடத்தினை யார் நிரப்புவார் என்ற கேள்வி எழுந்த போது அப்போதய அதிபர் "யாருமில்லை" என்று பதிலளித்தார். அலன் ஆபிரகாம் இறந்து சரியாக ஓர் நூற்றாண்டு கழிந்து விட்ட இன்றைய காலகட்டத்திலும் அலன் ஆபிரகாமின் விட்டுச் சென்ற வானியல் ஆய்வுக்குரிய இடத்தினை நிரப்புவார் ஒருவருமில்லை.

நூற்றாண்டுகளுக்கு ஒரு முறை அரிதாக தோன்றும் வால்வெள்ளிகள் போலவே அறிஞர்கள் தோன்றுவர் அப்படி எம்மத்தியில் தோன்றிய ஓர் உன்னதமான வானியல் அறிஞர் அலன் ஆபிரகாம். யாழ்ப்பாணத்தின் முதல் வானியல் விஞ்ஞானி இவர் என்றால் அதனை மறக்க முடியாது. யாழ்ப்பாணத்தின் அறிவியல் துறை வளர்ச்சியின் முன்னோடிகளில் அவருக்கு முக்கிய இடமுண்டு. அலன் ஆபிரகாம் தான் வாழ்ந்த காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் எழுச்சி பெற்றிருந்த கல்விச் சமூகத்தில் வானியல் துறையினைப் பிரபலப்படுத்தினார் என்பது மறுக்க முடியாத உண்மை. மாணவர் மத்தியில் வானியல் துறை தொடர்பான ஆர்வத்தினை ஏற்படுத்தும் பொருட்டு ஆக்கபூர்வமான பல முயற்சிகளை முன்னெடுத்தார். வானியல் ஆய்வு தொடர்பாக இவர் எழுதிய ஆக்கங்கள் உதய தாரகை மற்றும், யாழ்ப்பாணக் கல்லூரி மிஷலனியில் வெளிவந்துள்ளன. இவற்றில் முக்கியம் வாய்ந்தவையாக,

1. வானாதிசயங்கள் - உதய தாரகையில் 1903 - 02-05 முதல் தொடராக வெளிவந்தது.
2. Tropical Heavens - 1925இல் யாழ்ப்பாணக் கல்லூரி மிஷலனியில் வெளிவந்தது
3. 1910இல் வெளிவந்த அமெரிக்க மிஷலனியில் அலன் ஆபிரகாமின் கட்டுரைகள் முக்கிய இடத்தினைப் பிடித்தன அவையாவன
    1. Comets and their influence on the earth (March 1910 volume XX)
    2. The comet visit and after - (June 1910 volume XY No.2)
4. இவருடைய சொந்த கையெழுத்தில் எழுதப்பட்டு கிடைக்கப்பெற்ற கட்டுரைகளாக

On the place of Astronomy in Elementary School Education" ,

The stars போன்றன விளங்குகின்றன.

முடிவுரை

ஆகவே இவ்வாய்வினூடாக யாழ்ப்பாண சமுதாயத்தில் தோன்றிய முதல் நவீன வானியல் விஞ்ஞானியான அலன் ஆபிரகாமின் வாழ்வும் , சாதனைகளும் வெளிக்கொணரப்பட்டுள்ளது. 21ஆம் நூற்றாண்டு தமிழ்மக்கள் முன்னுதாரணமாக கொள்ள வேண்டி அறிவியல் முன்னோடியாக அவன் ஆபிரகாம் வாங்குகின்றார். சாதிப்பதற்கு வசதி வாய்ப்பு தேவையில்லை ஆர்வமும், கடுமையான முயற்சி என்பவை இருந்தால் போதுமானது என்பது இவரின் சாதனையால் வெளிப்படுகின்றது. வானியல் துறையில் சிறந்து விளங்கிய அலன் ஆபிரகாம் சிறந்த ஆய்வு கூடங்களோ, தொழில் நுட்ப கருவிகளோ இல்லாத இடத்திலிருந்து நிகழ்த்திய சாதனைகள் அதிசயிக்கத்தக்கவை. 1910 இல் ஹேலி வால்வெள்ளியின் வருகையினை முன்கூட்டியே சரியாக கவனித்தவர் அவர். இவ் வால் வெள்ளியானது 76 ஆண்டுக்கு ஒரு முறை அலன் ஆபிரகாமின்

பெயரை எமக்கு ஞாபகம் ஊட்டிக் கொண்டே இருக்கும். இன்று யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தினரால் இயற்பியல் துறையில் சிறந்த மாணவருக்கு வருடாந்தம் வழங்கப்படும் தங்கப்பதக்கம் அலன் ஆபிரகாமின் பெயரால் வழங்கப்பட்டு வருவது இதற்கு சான்று.இதன் காரணமாகவே தான் சர்வதேச தரம்வாய்ந்த பிரித்தானியாவின் வானியல் கழகமாகிய RAS 1921 இல் பட்டியலிட்ட 759 வானியல் அறிஞர்களுள் அலன் ஆபிரகாமின் பெயர் முதலாவது இடத்தினை பிடித்தது. இக் கழகத்தின் அங்கத்தவராகவும் அலன் ஆபிரகாம் இணைத்துக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அறிவியலுக்கு புறம்பான சோதிடம் போன்ற நம்பிக்கைகளிலும், வானியல் நிகழ்வுகளுக்கு காரணம் இயற்கைக்கு மீறிய தெய்வீக நிகழ்வுகளே என்றெண்ணிவந்த மக்களிடையே வாழ்ந்த அலன் ஆபிரகாம் இயற்கைக்குட்பட்டு இயற்கை விதிகளால் கணிக்கக் கூடிய சமயக் கலப்பற்ற தூய அறிவியல் பூர்வமான வானியலை நேசித்த ஒருவராக விளங்குகின்றார். எவ்வழியிலும் முன்னேற்றம் தராத ஆதாரமும், அடிப்படையற்ற பழமை வாத குருட்டு நம்பிக்கைகளிலிருந்து மீண்டு உலகினை வளர்ச்சிப்பாதையில் இட்டுச் செல்லும் விஞ்ஞான பாதையின் தொடக்கப் புள்ளியாக இவரது செயற்பாடுகள் அமைந்தது. தமிழ்ச் சமூகம் முன்னேற்றம் தராத மூட நம்பிக்கைகளுள் முடங்கிக் கிடக்காது, அறிவியல் சிந்தனையை தன்னுள் உள்வாங்குவதனூடாக மேன்மையடைய வேண்டும் என்பதே இவ்வாய்வின் வெளிப்பாடாக அமைகின்றது.

உசாத்துணை

1. Abharam, A.,(1985) ," The place of Astronomy in Elementary School Education", A Special supplement of the Jaffna College Miscellany, Jaffna College Vaddukoddai.
2. Eliezer,C.J.,(1985), "Professor Allen Abraham & Halley|s comet", A Special supplement of the Jaffna College Miscellany, Jaffna College Vaddukoddai.
3. Kadirgamar,A., (1985), "Allen Abraham of Jaffna College returns to our ken with The Halley|s comet",A Special supplement of the Jaffna College Miscellany, Jaffna College Vaddukoddai.
4. Visuvanathan, T.,(1985), "Allen Abharam Ambalavanar the Astronomer of Helley's Comet Fame", A Special supplement of the Jaffna College Miscellany, Jaffna College Vaddukoddai.
5. யெபநேசன்.எஸ்.,(1994), யாழ்ப்பாணத்து கிறிஸ்தவ கவிஞர்களும், கீர்த்தனைகளும்,அமெரிக்கமிஷன் அச்சகம்,யாழ்ப்பாணம்.
6. Royal Astronomical society, (1911),Vol: LXXIL , November 10, NO 1.
7. Arnold, J.R., (1861- 69) ,Compend of Astonomy, Ripley and strong Printers, Jaffna.

நாயக்க மன்னர்களில் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் - ஓர் வரலாற்று ஆய்வு

தனுஷா மோகனதாசன்[1], நிலாந்தினி செந்தூரன்[2]
[1,2]வரலாற்றுத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[1]ushamohan121@gmail.com, [2]nilanthinic@esn.ac.lk

ஆய்வுச் சுருக்கம்

இலங்கை அரசியல் வரலாற்றில் நாயக்கர்களுடைய தொடர்பு நீண்ட காலம் இடம்பெற்றது. அதிலும் குறிப்பாக கண்டி இராசதானியை மையப்படுத்திய வகையில் நாயக்க மன்னர்களின் ஆட்சி 1739 – 1815 ஆம் ஆண்டு வரை நடைபெற்றது. அந்தவகையில் கண்டி இராசதானியின் இறுதி மன்னனான ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனுடைய ஆட்சிக்கால முக்கியத்துவத்தினை ஆராய்வதும், நாயக்க வம்ச ஆட்சியாளர்களான ஸ்ரீ விஜய இராஜசிங்கன்(1739-1747), கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்(1747-1782), ராஜாதி இராஜசிங்கன்(1782-1798) போன்றவர்களிலிருந்து ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் தனித்துவம் பெறுகின்றானா? அவ்வாறெனின் அதற்கான காரணம் என்ன என்பதை ஆராயும் முகமாக நாயக்க மன்னர்களில் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் - ஓர் வரலாற்று ஆய்வு என்ற தலைப்பின் ஊடாக விக்கிரம இராஜசிங்கனின் வரலாற்றை வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். வரலாற்று அணுகுமுறையினூடாக மன்னனது வரலாறு ஆராயப்பட்டுள்ளது. ஆய்வின் வரையறை கருதி கண்டி இராசதானியில் நாயக்கர் மன்னர்களுள் விக்கிரம இராஜசிங்கனின் ஆட்சிக்காலத்தினை(1798-1815) மையப்படுத்தியதாக அமைகின்றது. இவன் நாயக்க மன்னனாகக் காணப்பட்ட போதிலும் சிங்கள மக்களுடைய ஆதரவைப் பெற்று பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கி ஆட்சியை மேற்கொண்டதோடு தமிழுக்கும் தன்னுடைய ஆதரவை வழங்கினான். இருந்தபோதிலும் பிற்பட்ட காலங்களில் இம்மன்னனுடைய ஆட்சியானது சவால்கள் நிறைந்ததாகக் காணப்பட்டது. குறிப்பாக மன்னனது ஆட்சியால் அதிருப்தியுற்ற மக்கள், மன்னனுக்கு எதிராக பௌத்த பிக்குகளின் கிளர்ச்சி, பிரதானிகளுடைய சதித்திட்ட முயற்சிகள் மற்றும் பிரித்தானியருடைய இராஜதந்திர செயற்பாடுகள் போன்றவற்றால் மன்னனின் ஆட்சி மட்டும் முடிவுறுத்தப்படவில்லை. மாறாக அதுவரை காலமும் அன்னியராட்சிக்கு உட்படாமல் தனித்துவமான இராசதானியாக விளங்கிய கண்டி இராசதானியின் வரலாற்றிலும் கறைபடிந்த வரலாற்றுச் சம்பவமாகப் பதியப்பட்டு, முழு இலங்கையும் தொடர்ச்சியாக பிரித்தானியரின் ஆதிபத்தியத்திற்கு வழிவகுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது(1815-1948).

திறவுச் சொற்கள் : ஆட்சியாளர்கள், ஆங்கிலேயர், பிரதானிகள், இராசதானி, கிளர்ச்சி

1.0 அறிமுகம்

இலங்கை வரலாற்றில் தனித்துவமான புவியியல் அம்சங்களைக் கொண்ட இராசதானியாகக் கண்டி இராசதானி காணப்பட்டது. இதனால்தான் 1815 வரை காலனித்துவ ஆதிக்கத்திற்கு உட்படாது சுதந்திரமான இராச்சியமாக விளங்கியது. கண்டி அரசை விடுத்து இலங்கை வரலாற்றினை முழுமைப்படுத்தி விட முடியாது. அந்தவகையில் கண்டியை ஆட்சி செய்த நாயக்க மன்னர்களான ஸ்ரீ விஜய இராஜசிங்கன், கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன், ராஜாதி இராஜசிங்கன், ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் போன்றோரது ஆட்சிக்காலம் குறித்து சூளவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக கண்டியை ஆட்சி செய்த இறுதி நாயக்க மன்னனாக ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் காணப்படுகின்றான்.

இளமைக்காலம் தொடக்கம் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டு இறக்கும் வரையான இவனது காலப்பகுதிக்குள் பல்வேறு வரலாற்றுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இவற்றினை வரலாற்று ரீதியாக ஆவணப்படுத்த முற்படும் போது பல சிக்கல்கள் எழுகின்றன. அதாவது இம்மன்னன் தொடர்பான வாய்மொழிப் பாடல்களிலும், திரைப்படங்கள் மற்றும் நாடகங்களிலும் மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. உதாரணமாக இவனைச் சிலர் நல்லாட்சியாளனாகவும், சிலர் கொடூரமான ஆட்சியாளனாகவும் சித்தரிக்கின்றனர். எனவே கண்டி இராசதானியின் நாயக்க மன்னர்களில் இறுதி மன்னனான விக்கிரம இராஜசிங்கனின் ஆட்சிக்காலம் வரலாற்று அணுகுறையில் ஆராயப்படுகின்றது.

1.1 ஆய்வின் நோக்கம்

இலங்கையை ஆட்சி செய்த நாயக்க அரசர்களுள் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் ஆட்சிக்காலத்தை வரலாற்றுச் சான்றுகளினூடாக நடுநிலையான முறையில் ஆராய்வதே பிரதான நோக்கமாகும்.

1.2 ஆய்வுப் பரப்பு

கண்டி இராசதானியை மையப்படுத்தியதான இவ்வாய்வு, 1798 ஆம் ஆண்டு தொடக்கம் 1815ஆம் ஆண்டு வரையான மன்னனின் ஆட்சிக்காலப் பகுதியை அடிப்படையாகக் கொண்டமைகின்றது. குறிப்பாக ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் ஆட்சிக்காலமே இங்கு ஆய்வுக்குரிய பரப்பாக அமைகின்றது.

1.3 ஆய்வு முறையியல்

ஒரு பொருளின் தோற்றத்தினையும் வளர்ச்சியையும் முறையாக விளக்கும் நோக்கில் கிடைத்துள்ள தகவல்களினூடாக உண்மைத்தன்மையை வெளிப்படுத்துவதே வரலாற்று ஆய்வாகும். அந்தவகையில் "நாயக்க மன்னர்களில் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் - ஓர் வரலாற்று ஆய்வு" என்ற ஆய்வு நிலையானது வரலாற்றியல் அணுகுமுறையோடு, நாயக்க மன்னர்களுள் ஒப்பிட்டு ஆராய்வதால் இங்கு ஒப்பியல் அணுகுமுறையும் பயன்படுத்தப்படுகின்றது.

இவ்வாய்வின் முதன் நிலைத்தரவுகளாக சூளவம்சம், ஜோன் டொய்லியின் நாட்குறிப்பேடு, கண்டி அரசன் தெருக்கூத்து போன்றனவும், இரண்டாம் நிலைத்தரவுகளாக புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், ஆய்வுக் கட்டுரைகள், திரைப்படங்கள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

1.4 இலக்கிய மீளாய்வு

ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் பற்றிய தகவல்களை நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், இதழ்கள் உள்ளிட்ட ஆவணங்களில் இருந்து பெற்றுக் கொள்ள முடிகின்றது.

வில்ஹெல்ம் கைகர் (Wilhelm Geiger) என்பவரால் எழுதப்பட்ட (1998) Culavamsa Part II என்ற நூலில் ராஜாதி இராஜசிங்கனுக்குப் பின் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் கண்டியின் மன்னனான வரலாறு கூறப்பட்டுள்ளது.

சாரல்நாடன் என்பவரால் எழுதப்பட்ட (2005) கண்டிராசன் கதை என்ற நூலில் கண்டி மன்னர்கள், கண்டி அரசர்களுக்கு இந்தியாவுடனான தொடர்புகள், நாயக்க மன்னர்கள், கண்டியை ஆண்ட இறுதி மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் வரலாறு என்பன கூறப்பட்டுள்ளது.

கார்மேகம்.எஸ்.எம் என்பவரால் எழுதப்பட்ட (2004) கண்டி மன்னர்கள் என்ற நூலில் கண்டியை ஆட்சி செய்த தமிழ் மன்னர்கள், அவர்களுடைய ஆட்சிக்கால முக்கியத்துவம், சிறுவன் கண்ணுசாமி, அவனது ஆட்சிக்கால சிறப்புக்கள் என்பன கூறப்பட்டுள்ளது. அவரால் எழுதப்பட்ட (2002) மற்றுமொரு நூலான ஈழத்தமிழர் எழுச்சி என்ற நூலில் அந்நியர் வருகை, நாயக்கர் ஆதிக்கம், கண்டி மன்னன் கண்ணுசாமி, கண்டி ஒப்பந்தம், வேலூரில் மன்னன் சிறை வைக்கப்பட்ட வரலாறு என்பன கூறப்பட்டுள்ளது.

புஞ்சிபண்டார டோலாபிஹில்லா (Punchibandara Dolapihilla) என்பவரால் எழுதப்பட்ட (1959) In The Days of Sri Wickramarajasingha என்ற நூல் விக்கிரம இராஜசிங்கனின் வாழ்க்கையில் நடைபெற்ற வரலாற்றுச் சம்பவங்களைப் பிரதிபலிப்பதாகக் காணப்படுகின்றது.

கணநாத் ஒபேசேகரா (Gananath Obeyesekere) என்பவரால் எழுதப்பட்ட (2017) The Doomed King: A Requiem for Sri Vikrama Rajasinha என்ற நூலில் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் பற்றிய விமர்சன ரீதியான விடயங்கள் ஆராயப்பட்டுள்ளது.

முருகு தயாநிதி என்பவரால் எழுதப்பட்ட கண்டிராஜன் ஒப்பாரி என்ற நூலில் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் பற்றிய புதிய விடயங்கள் வாய்மொழிக் கதைகள் ஊடாகப் பெறப்பட்ட தகவல்களின் மூலம் அறியமுடிகின்றது. இந்நூலில் கண்டிராஜனின் முறைகேடான பெண்ணாசையும் அது நிறைவேறாத நிலையில் அவன் செய்த கொடூர செயலையும் விபரிக்கின்றது.

சந்திரசேகரம்.சி என்பவரால் எழுதப்பட்ட (2020) இலங்கைத் தமிழ் நாட்டார் கதைகள் என்ற வாய்மொழிக் கதைகளை உள்ளடக்கிய நூலில் விக்கிரம இராஜசிங்கன் பெண்ணாசை கொண்டதால் ஏற்பட்ட தீயவிளைவுகளையும், இறுதியில் ஆங்கிலேயரால் மன்னன் கைது செய்யப்பட்ட கதையையும் விபரிக்கின்றது.

2. கண்டி இராசதானியை ஆட்சி செய்த நாயக்க மன்னர்கள்

கண்டி இராச்சியம் என்பது இயற்கையான பாதுகாப்பு நிறைந்த பிரதேசத்தில் அமைந்துள்ள ஓர் ஆட்சி மையமாகும். மத்திய மலைநாட்டில் அமைந்துள்ள கண்டி நகரை அடிப்படையாகக் கொண்டு இவ்விராச்சியம் தோற்றம் பெற்றது. இவ்விராச்சியத்தை சிங்கள மன்னர்களைத் தொடர்ந்து நாயக்க வம்சாவழியினர் ஆட்சி செய்தனர். அவ்நாயக்க ஆட்சியாளர்களாக ஸ்ரீ விஜய இராஜசிங்கன் (1739-1747), கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் (1747-1782), இராஜாதி இராஜசிங்கன் (1782-1798), ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் (1798-1815) போன்றோர் ஆட்சி செய்தனர்.

மன்னர் பெயர்	ஆட்சிக் காலம்	உறவுமுறை
ஸ்ரீ விஜய இராஜசிங்கன்	1739 - 1747	நரேந்திரசிங்கனின் மைத்துனன்
கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்	1747 - 1782	விஜய இராஜசிங்கனின் மனைவியின் சகோதரன்
ஸ்ரீ இராஜாதி இராஜசிங்கன்	1782 - 1798	கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனின் சகோதரன்
ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்	1798 - 1815	இராஜாதி இராஜசிங்கனின் மருமகன்

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது.

ஸ்ரீ விஜய இராஜசிங்கன் (1739-1747) : ஸ்ரீ விக்கிரம நரேந்திரசிங்கனது மரணத்துக்குப் பின்னர் ராணி உடுமலா தேவியின் சகோதரர் ஸ்ரீ விஜய இராஜசிங்கன் அரியணை ஏறினார். இவர் கண்டியின் முதல் நாயக்க மன்னராவார். இவரைப் பற்றிய குறிப்புக்கள் சூளவம்சத்தில் 98வது அத்தியாயத்தில் (Chapter XCVIII) குறிப்பிடப்படுகின்றது (Wilhelm Geiger, 1998:246). 'இவன் நாயக்கர்களின் ஆட்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்' என்று வரலாறுகள் குறிப்பிடுமளவிற்கு மக்களின் நன்மதிப்பைப் பெற்றான் (கார்மேகம், 2004:65). இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலான உறவைப் பலப்படுத்துவதில் திருமணங்கள் முக்கிய பங்கு வகித்தன. அந்தவகையில் ஸ்ரீ விஜய இராஜசிங்கன் மதுரையைச் சேர்ந்த இளவரசியை திருமணம் செய்துகொண்டான் (குணராசா, 2008:167). இதன் பயனாகக் கண்டியில் தமிழரது செல்வாக்குப் அதிகரித்தது. அதுமட்டுமன்றி பௌத்த சமயத்துக்கும் தொண்டாற்றினான். ஸ்ரீ விஜய இராஜசிங்கன் 1747 ஆகஸ்ட் 11 இல் இறந்தான். எனினும் தனது வாரிசாக கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனைத் தெரிவு செய்திருந்தமையால் அடுத்து மன்னனான கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டான்.

கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் (1747-1782) : ஸ்ரீ விஜய இராஜசிங்கன் இறந்ததும் அவனது மைத்துனனும் பட்டத்துராணியின் தம்பியுமான நாயக்கன் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் என்ற பெயரில் 16 வயதில் அரசுரிமை பெற்றான். 18 வயது பூர்த்தியாகும் வரை காத்திருந்து 1750 ஜனவரி 31இல் மன்னரானான். இவனைப் பற்றிய குறிப்புக்கள் சூளவம்சத்தில் 100வது அத்தியாயத்தில் (Chapter C) கூறப்படுகின்றது (Wilhelm Geiger, 1998:274). நாயக்க மன்னர்களில் நீண்டகாலம் ஆட்சி புரிந்த மன்னன் என்னும் சிறப்புக்குரியவனாகத் திகழ்ந்தான். இவனது ஆட்சியின் ஆரம்ப காலத்தில் கண்டி முழுவதும் நாயக்கர்களின் செல்வாக்கு அதிகரித்திருந்தது. அதற்குக் காரணம் அவருடைய தந்தை நரேனப்ப நாயக்கர் ஆவார். கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் நடுக்காட்டுச் சாமியாரின் மகளை திருமணம் செய்து கொண்டார் (இளையதம்பி, 1969:230).

மன்னன் புத்தமத வளர்ச்சிக்குத் தொண்டாற்றினான். சங்க ராஜா, உபசங்க ராஜா என்ற பதவிகளை விகாரைகளில் அறிமுகம் செய்தார். மல்வத்தை, அஸ்கிரியாவில் அதன் பிரிவுகளை அமைத்தான். மன்னன் புத்தமதத்தைப் பேணினாலும் விபூதி அணியும் பழக்கத்தை விடாமல் கைக்கொண்டு வந்தார். இதைத் தமது வெறுப்புக்குப் பிரதான காரணமாகக் கொண்ட பிரதானிகள் மன்னனைப் புத்த ஆலயங்களில் வைத்துக் கொல்வதற்கான சதி முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். இந்தச் சதிக்கு காரணமாக இருந்த நான்கு பிரதானிகளும் சிரச்சேதம் செய்யப்பட்டனர். அவர்களது நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டு கோபால முதலியாருக்கு வழங்கப்பட்டதாக 1960ல் எழுதப்பட்ட ''கெடபெறிய'' என்னும் சாசனம் குறிப்பிடுகின்றது (அந்தனி ஜீவா, 2002:41).

ஆங்கிலேயர்கள் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனை 'சுதந்திர இறையாண்மை கொண்டவர் என்றும், எவருடனும் பேச்சுவார்த்தை நடத்தும் உரிமை உடையவர்' என்று புகழ்ந்தனர் (கார்மேகம், 2004:67). நாயக்க வம்சத்தில் இவனது ஆட்சியே நீடித்த வரலாறு கொண்டது. இவருடைய

மரணத்தின் பின்னர் அவரது சகோதரன் ராஜாதி இராஜசிங்கன் என்ற பெயரில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டான்.

ராஜாதி இராஜசிங்கன் (1782-1798) : கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனுக்குப் பின் ராஜாதி இராஜசிங்கன் மன்னனானான். இவன் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனின் சகோதரன் ஆவான். இவருடைய ஆட்சி 16 ஆண்டுகள் நடைபெற்றது. இவரைப் பற்றிய குறிப்புக்கள் சூளவம்சத்தில் 101வது அத்தியாயத்தில் (Chapter CI) கூறப்படுகின்றது (Wilhelm Geiger, 1998:300). பிரித்தானியரின் உதவியைப் பெற ராஜாதி இராஜாசிங்கன் அவசரப்படவில்லை. பொய்ட்(Poit) கண்டியில் இருந்தபோதே டச்சுத் தூதுவர்கள் கண்டிக்கு வந்து மன்னனைச் சந்தித்தார். தனது ஆதரவை பெற இரு ஐரோப்பிய பேரரசுகளும் போட்டி போடுவது பேரம் பேசுவதற்கு மன்னனுக்கு வசதியாக இருந்தது. அதற்கான யோசனைகள் நடந்துகொண்டிருந்தபோது சுகயீனம் மன்னனை ஆட்கொண்டதால் 1798ஆம் ஆண்டு யூலை 16ஆம் திகதி மன்னன் இறந்தார். இவனைத் தொடர்ந்து 1798 - 1815ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி, ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் ஆட்சிக்காலமாக அமைகின்றது.

3. கண்டி இராசதானியும் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனும்

3.1 இளமைக்காலம்

தென்னிந்தியாவில் மதுரை வெள்ளிக்குறிச்சி என்ற ஊரில் வசித்த ஸ்ரீ வெங்கட பெருமாள் மற்றும் ஸ்ரீ சும்மாளுக்கும் 1780ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தான். இவனுடைய இளமைப் பெயர் கண்ணுசாமி, இவனது தந்தை தஞ்சாவூர் ஆறுவீட்டு அரச பரம்பரையைச் சேர்ந்தவராவார். வெங்கட பெருமாள் இராமேஸ்வரம் கோவிலில் தலைமை அர்ச்சகராகக் கடமையாற்றினார். இவனுக்கு இரு சகோதரிகள் இருந்தனர் (கார்மேகம், 2002:29).

கண்ணுசாமி பிறக்கும் முன்பே வெங்கட பெருமாள் இறந்துவிட்டார். குடும்பத்தினரிடையே ஏற்பட்ட வாரிசுரிமைப் போட்டி காரணமாக மதுரையிலிருந்து புலம்பெயர்ந்து புதுக்கோட்டை மகாராஜாவின் பாதுகாப்பில் பூலான்பட்டிப் பகுதியில் கண்ணுச்சாமியும் அவனது தாயாரும் வாழ்ந்து வந்தனர் (மேலது:30). இவர்கள் தெலுங்கு வம்சாவளியைச் சேர்ந்தவர்களாகவும், இந்து மதத்தைக் கடைப்பிடிப்பவர்களாகவும் இருந்தனர். இவன் இலங்கையை ஆட்சி செய்த ராஜாதி இராஜசிங்கனின் மருமகன் ஆவான். ராஜாதி இராஜசிங்கனின் ராணி உபேந்திரா அம்மாவின் அழைப்பினை ஏற்று சுப்பம்மாளும், மகன் கண்ணுசாமியும் இலங்கை வந்தனர்.

கண்ணுசாமியை இலங்கைக்கு அழைத்து வரும் போது அவனுக்கு ஏழு வயதாகும். இளைஞனான கண்ணுசாமிக்குக் கேளிக்கைகளிலும், சுகபோகத்திலும் அதிக நாட்டமிருந்தது. கண்ணுச்சாமி மல்வத்து தேரோவிடம் சிங்களம், தமிழ், பௌத்த நூல்கள் போன்றவற்றைக் கற்றான். இவன் 18 வயதில் ஹங்குராங்கேட்டாவிலுள்ள அரசு கருவூலத்தின் பொறுப்பாளராக இருந்தான்.

3.2 கண்டி மன்னனாதல்

ராஜாதி இராஜசிங்கனின் மரணத்திற்குப் பின்னர் அரசாட்சியைக் கைப்பற்றிக் கொள்ளத் தருணம் பார்த்திருந்த மந்திரிகளில் ஒருவரான பிலிமத்தலாவ அரசாட்சியை தனது கட்டுப்பாட்டில்

வைத்திருக்கும் நோக்கில் மன்னரின் மரணத்திற்குப் பின்னர் முத்துசாமிக்குப் பதிலாக மன்னரின் இரண்டாவது மனைவியின் சகோதரியின் மகனான கண்ணுசாமியை அரசனாகத் தேர்ந்தெடுத்தார். இதனைத் தொடர்ந்து கண்ணுசாமிக்குப் பட்டாபிஷேகம் செய்யப்பட்டது. மன்னருக்கு முடிசூட்டும் நிகழ்வு அரச மரபுகளின் படி அனைத்து சடங்குகளுடன் நடைபெற்றது. இளவரசர் கண்ணுசாமி "ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்" என்ற பெயருடன் 1798ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார் (அந்தனி ஜீவா, 2002:48).

விக்கிரம இராஜசிங்கனை அரசனாக்கியதால் நாயக்கர் வம்சத்திலே பிளவுகள் ஏற்பட்டது. நாயக்கப் பிரதானிகள் சிலர் முத்துசாமியின் சார்பில் கண்டி இராச்சியத்தில் தலையிடுமாறு ஆங்கிலேயரிடம் சரணடைந்தனர். இதேபோன்று புத்திசாமி, கந்தசாமி ஆகிய இருவரும் கொழும்பில் காவலில் வைக்கப்பட்டனர். இன்னொரு சகோதரரான சின்னச்சாமி தூத்துக்குடிக்குத் தப்பிச்சென்று அங்கு ஆங்கிலேயரிடம் சரணடைந்தான் (மேலது:48). இவ்வாறு கண்டி இராச்சியத்துக்கு நாயக்க சகோதரர்கள் மத்தியில் போட்டி ஏற்பட்ட அதே நேரத்தில் பிலிமத்தலாவ ஆட்சியைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டார். எனினும் நாளடைவில் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் தனது அதிகாரத்தைப் பலப்படுத்தி ஆட்சியை உறுதிப்படுத்திக் கொண்டார். இவரைப் பற்றிய குறிப்புக்கள் சூளவம்சத்தில் 101வது அத்தியாயத்தில் (Chapter CI) கூறப்படுகின்றது (Wilhelm Geiger, 1998:302).

3.3 விக்கிரம இராஜசிங்கனும் அவனது ஆட்சிக்காலத்தில் எதிர் கொண்ட சவால்களும்

நாயக்க வம்ச ஆட்சியாளர்கள் குறித்து சூளவம்சத்தில் குறிப்பிடுகின்ற விடயங்களை ஆராய்கின்ற போது நாயக்க வம்ச மன்னர்களான ஸ்ரீ விஜய இராஜசிங்கன், கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன், ராஜாதி இராஜசிங்கன் போன்றோரது காலத்தில் முடி யாருக்குரியது என்று சரியான முறையில் கணிப்பிட்டு சீரான ஆட்சி நடைபெற்றது. ஆனால் நாயக்க மன்னர்களில் இறுதி மன்னான ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் முடிக்குரிய மன்னன் அல்லாமல் ஆட்சிப் பொறுப்பை ஏற்று 17 ஆண்டுகள் பல சவால்களுக்கு மத்தியில் ஆட்சியை மேற்கொண்டான் என்று சூளவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விக்கிரம இராஜசிங்கனின் ஆட்சிக்காலம் ஏனைய மன்னர்களோடு ஒப்பிடுகின்றபோது சவால்கள் நிறைந்ததாகக் காணப்பட்டது. ஏனெனில் கண்டிப் பிரதானிகளின் எதிர்ப்புக்கள் மற்றும் பிரித்தானியர்களது இராஜதந்திர சூழ்ச்சிக்கும் இடையில் தனது ஆட்சியை முன்னெடுக்க வேண்டியிருந்தது. குறிப்பாக முடிக்குடிய இளவரசன் அல்லாதவனாகக் காணப்பட்டமையால் சிங்கள, பௌத்த மக்களுடைய ஆதரவைப் பெறுவது பெரிய சவாலாகக் காணப்பட்டது.

முடிக்குரிய இளவரசனான முத்துசாமி ஆங்கிலேயருடன் இணைந்து விக்கிரம இராஜசிங்கனின் ஆட்சியை கவிழ்க்கும் முயற்சிகளை மேற்கொண்டமை இவன் ஆட்சிக் காலத்தில் எதிர்கொண்ட சவாலாகக் காணப்பட்டது (குலரத்தினம், 1966:52).

மேலும் இவனது ஆட்சியில் தனது எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்ள முடியாத பிலிமத்தலாவ ஆங்கிலேயர்களுடன் இணைந்து விக்கிரம இராஜசிங்கனின் ஆட்சிக்கெதிரான முயற்சிகளை மேற்கொண்டார். அதாவது பிலிமத்தலாவ தனது மகளை விக்கிரம

இராஜசிங்கனுக்கு விவாகம் செய்து கொடுப்பதன் மூலம் ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ளலாம் என எதிர்பார்த்தார். ஆனால் அத்திட்டம் நிறைவேறவில்லை. மேலும் மன்னன் தனது நாயக்க வம்சத்தவரிடையே அந்தரங்க அலுவல்களைப் பேசி வந்தமை பிலிமத்தலாவைக்குக் கசப்பை ஏற்படுத்தியது. ஆகையால் ஆங்கிலேயருடன் இணைந்து மன்னனுக்கு எதிரான சதித்திட்டங்களை மேற்கொண்டான். அதாவது மக்களை மன்னனுக்கு எதிராகத் தூண்டி விட்டமை, மன்னனை கொலை செய்யும் வியூகங்களை வகுத்தமை போன்ற காரணங்கள் மன்னனின் ஆட்சிக்கு மிகப் பெரிய சவாலாக அமைந்தது (Punchibandara Dolapihilla, 1959:320-325).

மேலும் மன்னனுக்கு எதிராகச் செயற்பட்ட எகலப்பொல ஆங்கிலேயர் பக்கம் இணைந்து கொண்டமையால் எகலப்பொலவின் மனைவி, பிள்ளைகளைக் கொடூரமாகக் கொலை செய்தான். இதன் விளைவாக மக்கள் மற்றும் பௌத்த பிக்குகள் மன்னனுக்கு எதிராகக் கிளர்ச்சிகளை மேற்கொண்டார்கள். அதுமட்டுமன்றி மன்னன் பௌத்த குருமாரையும் கொலை செய்வித்தான். இதனால் பௌத்த குருமார்களின் ஆதரவையும் மன்னன் இழந்தான். இக்காரணங்களால் பொதுமக்கள் மன்னன் மீது ஆத்திரமடைந்து ஆங்கிலேயப் பிரதேசங்களுக்குச் சென்று ஆங்கிலேயப் படையுடன் இணைந்து கொண்டனர். இச்செயற்பாடுகள் மன்னனது ஆட்சிக்கு சவாலாக அமைந்தது (குலரத்தினம், 1966:61).

அடுத்து கண்டி இராச்சியத்தினை கைப்பற்றும் நோக்கில் ஜோன் டொய்லி மேற்கொண்ட இராஜதந்திர நடவடிக்கைகள் விக்கிரம இராஜசிங்கனுடைய ஆட்சிக்குச் சவாலாக அமைந்தது (D'Oyly, 1833:224). அதாவது பிரதானிகள், பௌத்த பிக்குகளை ஆங்கிலேயர்கள் தம்வசப்படுத்துதல், இனவாதக் கருத்துக்களைப் பரப்புதல், மக்களை மன்னனுக்கு எதிராகத் திசைதிருப்புதல், விக்கிரம இராஜசிங்கனுக்கு எதிரானவர்களுக்கு அடைக்கலம் வழங்குதல், சிற்றரசுகளை மன்னனுக்கு எதிராக தூண்டுதல் போன்ற செயற்பாடுகள் இவனது ஆட்சிக்கு மிகப் பெரிய சவால்களாக அமைந்தன (சரவணன், 2021:42).

மன்னால் வழங்கப்பட்ட தண்டனைகள் : மன்னனால் வழங்கப்பட்ட தண்டனைகள் குறித்த செய்திகள் கண்டி மன்னர்கள் என்ற நூலில் கூறப்பட்டுள்ளது. எதிரிகளைச் சரியான முறையில் இனங்கண்டு அவர்களைத் தண்டிப்பதில் மன்னன் தீவிரமாகச் செயற்பட்டான். தன்னைக் காட்டிக்கொடுக்க முனைந்தவர்களையும் கொடூரமாகத் தண்டிக்கச் செய்தான். இதனால் காலப்போக்கில் பொதுமக்கள் மத்தியில் இவன் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டான். இதற்கு சிறந்த எடுத்துக்காட்டுக்களாக மேல்வருவனவற்றைக் குறிப்பிடலாம். கண்டிக்கு வர்த்தக நோக்கில் வந்தவர்களை ஊனப்படுத்தியமை, பிலிமத்தலாவ மற்றும் ரத்வத்தே விஜேயவர்தன, செனவிரத்ன, பண்டித அபயகோன், முதியன்சே ஆகியோரின் தலைகள் துண்டித்தமை, எகலப்பொலவின் பிள்ளைகளது தலைகள் துண்டிக்கப்பட்டு உரலில் இட்டு இடிக்கப்பட்டமை, எகலப்பொலவின் மனைவியை போகம்பர வாவியில் மூழ்கடித்துக் கொலை செய்தமை, பௌத்த பிக்குகள் கொலை செய்யப்பட்டமை போன்ற கொடூர தண்டனைகளை வழங்கினான் (கார்மேகம், 2004:104-107).

எனவே மன்னால் வழங்கப்பட்ட கொடூரமான தண்டனைகளால் விரக்தியுற்ற மக்கள், பௌத்த பிக்குகள் மன்னனுக்கு எதிராக கிளர்ச்சி செய்தமை, கண்டி இராச்சியத்தினதும் வீழ்ச்சிக்கு முதன்மைக் காரணமாகக் காணப்பட்டது. இதனைவிட மன்னனுக்கு எதிராக பிரதானிகளுடைய சதித்திட்ட முயற்சிகள் மற்றும் பிரித்தானியருடைய இராஜதந்திர செயற்பாடுகளும் மன்னனின் துர்நடத்தைச் செயற்பாடுகளும் வீழ்ச்சிக்குரிய காரணங்களாகக் அமைந்தன. இச்செயற்பாடுகள் மன்னனது ஆட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டதோடு மட்டுமல்லாது அதுவரை காலமும் அன்னியராட்சிக்கு உட்படாமல் தனித்துவமான இராசதானியாகக் காணப்பட்ட கண்டி இராசதானியின் வீழ்ச்சிக்கும் தொடர்ச்சியான பிரித்தானியரின் ஆதியத்தியத்திற்கும் வழிவகுத்திருந்தது (1815-1948).

ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் கைது செய்யப்பட்டு நாடுகடத்தப்படல் : விக்கிரம இராஜசிங்கனின் ஆட்சி பலவீனமடைந்ததைத் தொடர்ந்து எகலப்பொல வழங்கிய இரகசியத் தகவல்களைக் கொண்டு இறுதி ஆக்கிரமிப்பு நிகழ்ந்தது. மன்னனுக்கு உறுதுணையாக இருந்த பிரதானிகள் ஒருவர் பின் ஒருவராக ஆங்கிலேயர் பக்கம் சேர்ந்து கொண்டனர். ஆகையால் ஆங்கிலேயர்கள் இலகுவாகக் கண்டியை அடைந்தனர் (14.02.1815).

சூழ்நிலை தனக்கு எதிராக இருந்ததை உணர்ந்து கொண்ட மன்னன் தலைநகரை விட்டு 'மெதமகாநுவர' என்ற இடத்துக்கு ஓடினான் (தாய்வீடு, டிசம்பர் 2021:13). தலைமறைவான மன்னன் பற்றி கிடைத்த உளவுத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மன்னனைச் சிறை வைக்க டொய்லி தலைமையிலான படை நான்கு பக்கத்தாலும் சென்றது. மன்னனைக் கைது செய்ய முயன்றவர்கள் அத்துமீறிய வெறுப்புணர்ச்சியைக் காட்டினர். அவரையும், அவருடன் இருந்த ராணிகளையும் நிர்வாணமாக்கிட முயற்சித்தனர். மனிதாபிமானமற்ற முறையில் இராணி ரங்கம்மாள் காதிலிருந்த வைரத்தோடுகளைப் பறித்தபோது சிந்திய இரத்தம் அவள் அணிந்திருந்த ரவிக்கையில் படிந்தது. இவ்வாடை இரத்தக்கறையுடன் இன்றும் கொழும்பு நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சான்று இராணிக்கு நடைபெற்ற கொடூர சம்பவத்தை நினைவூட்டுவதாகவுள்ளது (மேலது:13).

மன்னன் அரச பதவியிலிருந்து நீக்கப்பட்டமையால் நாயக்க வம்சம் சிம்மாசனம் ஏறும் உரிமையை இழந்தது. மலைநாட்டு முடியாட்சியும் முடிவடைந்தது. கண்டி கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து கண்டி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது (கலைக்கேசரி, 2011:16). இவ்வொப்பந்தமானது 12 பிரமாணங்களைக் கொண்டமைந்தது. இவ்வுடன்படிக்கை பல வழிகளிலும் ஆங்கிலேயருக்கும், கண்டியருக்கும் இடையில் அந்நியோன்னிய நட்பை உண்டாக்கக் கூடியதாய் விளங்கியது (D'Oyly, 1833:283).

ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனையும் அவனது குடும்பத்தினரையும் சிலகாலம் கொழும்பில் தங்க வைத்தனர். பின்னர் 1816ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் திகதி மன்னரும், அவரது குடும்பத்தினரும் 'கார்ன்வாலிஸ்' (Cornwallis) கப்பலில் சென்னைக்கு அனுப்பப்பட்டு சென்னையிலிருந்து வேலூருக்குப் பல்லக்குகளில் கொண்டு செல்லப்பட்டனர். வேலூரில் திப்புசுல்தானின் மைந்தன் இருந்த அரண்மனையில் அவர்களைத் தங்கச் செய்தார்கள். கண்டியில் மிகப் பெரிய

அரண்மனையில் 17 ஆண்டுகள் ஆட்சி நடாத்திய விக்கிரம இராஜசிங்கனும் அவனது குடும்பமும் வேலூர் கோட்டையில் 17 ஆண்டுகள் சிறை வாசத்தை அனுபவித்தார்கள் (நெடுமாறன், 2014:34).

விக்கிரம இராஜசிங்கன் நீர் வீக்க நோயினால் 30 ஜனவரி 1832 இல் 52 வயதில் காலமானார். மன்னனின் நான்கு ராணிகளும் அடுத்தடுத்த ஆண்டுகளில் இறந்தனர் (நெடுமாறன், 2014:34). இம்மன்னனுடைய கல்லறை வேலூர் சித்தூர் சாலையில் பாலாற்றின் தென்கரையில் பழைய பாலத்திற்கு மேற்கில் அமைந்துள்ளது.

3.4 நாயக்க மன்னர்களில் விக்கிரம இராஜசிங்கன்

ஸ்ரீ விஜய இராஜசிங்கன், கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன், ராஜாதி இராஜசிங்கன் போன்று ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் முடிக்குரிய மன்னனாகக் காணப்படவில்லை. ஆகையால் ஏனைய நாயக்க மன்னர்களுக்கு பிரதானிகளுடைய ஆதரவு கிடைத்ததைப் போல் விக்கிரம இராஜசிங்கனுக்குக் கிடைக்கவில்லை. அதுமட்டுமன்றி பிலிமத்தலாவையால் விக்கிரம இராஜசிங்கன் பொம்மை அரசனாக நியமிக்கப்பட்டமை மற்றும் நாயக்கர்களிடையே ஏற்பட்ட பிளவு போன்றவற்றைக் குறிப்பிட முடியும். இவ்வாறான பல சவால்களுக்கு மத்தியிலும் 17 ஆண்டுகள் சிறப்பான ஆட்சி செய்தமையால் ஏனைய நாயக்க மன்னர்களை விட இவன் தனித்துவம் வாய்ந்தவனாகக் காணப்படுகின்றான்.

4. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் - ஓர் விமர்சன பார்வை

மன்னன் விக்கிரம இராஜசிங்கனைப் பற்றிய விமர்சனப் பார்வையை திரைப்படங்கள், நாடகங்கள், இலக்கியங்கள், வாய்மொழிக் கதைகள் போன்றவற்றினூடாக அறியலாம்.

திரைப்படங்கள் - ‘எகலப்பொல குமாரிஹாமி’ திரைப்படத்தில் மன்னன் நாட்டு மக்களது நன்மைகளைக் கருத்தில் கொள்ளாது பெண்கள், மது பாவனை, கேளிக்கைகளில் அதிக நாட்டம் கொண்டிருந்தான் எனப் படக் காட்சிகளில் சித்தரிக்கப்பட்டது. விக்கிரம இராஜசிங்கனை பௌத்த சிங்கள மக்களுக்கு எதிரியாகவும் சித்தரித்துள்ளனர். சிங்கள இனவெறியையும், பௌத்த மதவெறியையும் நிலைக்க வைப்பதற்காக இப்படம் வெளியிடப்பட்டுள்ளதாக விமர்சனக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ‘ஸ்ரீ விக்கிரம The last king’ என்ற திரைப்படத்தில் குமாரஹாமியின் பிள்ளைகளுக்கு நேர்ந்த கொடூரம் பற்றியும், குமாரஹாமியின் இரண்டாவது மகனான மத்தும பண்டாராவின் வீர செயற்பாடுகளை முதன்மைப்படுத்தியும் இத்திரைப்படம் உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கையின் இறுதி சிங்கள மன்னன் என்ற கருத்தை நிராகரித்து தமிழ் பேசும் மன்னராக ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் உண்மை வரலாற்றை வெளிப்படுத்துவதாக ‘கிரிவெசபுர’ என்ற திரைப்படம் இருந்தது. இலங்கையை இறுதியாக ஆண்டது தமிழ் மன்னன் என்று சித்தரித்து சில காட்சிகள் வெளியாகின. இதனால் இலங்கை அரசு தமிழ் மன்னன் இலங்கையை ஆண்டதாகச் சித்தரிக்கும் இத்திரைப்படத்தை வெளிவர விடாமல் தடைசெய்தது.

நாடகங்கள் - மன்னனின் வாழ்க்கை வரலாறு சிங்கள, தமிழ் மொழிகளில் நாடகங்களாக வெளிவந்துள்ளன. இவற்றில் பெண்ணை வருத்துவதால் அந்த நாடே அழிந்துவிடும் என்ற

கருத்தை வெளிப்படுத்துவதாக கண்டி அரசன் மற்றும் கண்டிராஜன் ஒப்பாரியும் காணப்படுகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக கண்டி அரசன் நாடகத்தில்,

> ‘‘தேவபூசையை மறந்தான் தாசி மையலில் நிறைந்தான் மேவரும் வரிகதித்தான் பாவம் பாராத் தீங்கிழைத்தான்’’
>
> ‘‘கரும்பும் தேனும் கனியும் ரசமும் கற்கண்டுப் பாகும் எப்படிச் சுவை விரும்பி இவளைச் சுகித்திடா விடில் வீணே போகுமே மனமனலாக வேகுமே’’ எனக் கூறப்பட்டுள்ளது (மிக்கோர்சிங்கம், 1978:13,37).

மேலும் கண்டிராஜன் தெருக்கூத்தில் எகலப்பொலவின் குழந்தைகளைக் கொலை செய்த பின்னர் அவர்களின் தலைகளை உரலிலிட்டு உலக்கையால் இடிக்குமாறு எகலப்பொலவின் மனைவிக்கு உத்தரவிட்டதாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இலக்கியங்கள் - சூளவம்சத்தில் ராஜாதி இராஜசிங்கனுக்குப் பின் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் மன்னனானான் என்றும் அவன் கெட்டவர்களுடன் இணைந்து மக்களுக்கும், சமயத்துக்கும் தீங்கு செய்தான் என்றும், கொடூரமான தண்டனைகளை வழங்கினான் என்றும் அதன் காரணமாக ஆங்கிலேயரால் கொழும்பில் சிறை வைக்கப்பட்டு இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டான் எனவும் கூறப்பட்டுள்ளது (Wilhelm Geiger, 1998:302).

“Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society of Great Britain and Ireland” மற்றும் “Deportation of Sri Vikrama Rajasingha Ceylon Literary Review 3 (II) 1936 & 3 (12) 1936” (P.E.E.Fernando) போன்ற ஆய்விதழ்களில் மன்னன் கைது செய்யப்பட்டு நாடுகடத்தப்பட்டமை குறித்த செய்திகள் கூறப்பட்டுள்ளது. எஸ்.எம்.கார்மேகம் என்பவரால் எழுதப்பட்ட ‘‘கண்டி மன்னர்கள்’’ என்ற நூலில் மன்னனின் சித்திரவதைகளுக்கு மகுடம் வைத்தது போன்ற சம்பவமாக எகலபொலவின் மனைவி, மக்களுக்கு நேர்ந்த கொடுமை சித்தரிக்கப்பட்டுள்ளது. அதாவது எகலப்பொலவின் பிள்ளைகளைக் கொலை செய்து அவர்களின் தலைகளை குமாரஹாமியைக் கொண்டு உரலில் இடிக்கச் செய்தமை போன்ற கொடூர செயல் மன்னனின் அழிவுக்கு மூலகாரணமாகியது என இந்நூலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (கார்மேகம், 2004:125).

ஒபேசேகரா தனது “The Doomed King” நூலில் 185வது பக்கத்தில் குமாரிஹாமியும் குழந்தைகளும் விக்கிரம இராஜசிங்கனால் கொடூரமாகக் கொல்லப்பட்டமை ஒரு புனைகதையென்றே குறிப்பிடுகின்றார். அதாவது ஆங்கிலேயரால் கண்டி மீது ஆக்கிரமிப்பு மேற்கொள்வதற்கு நியாயமான காரணமொன்றை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். தனது கருத்தை வலுப்படுத்துவதற்கான உறுதியான ஆதாரங்களையும் எடுத்துக்காட்டுகாட்டியுள்ளார் (Obeyesekere, 2017:185-190).

வாய்மொழிக் கதைகள் - ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனுடைய வரலாறானது வாய்மொழிக் கதைகள் மூலமாக பல கோணங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் சின்னத்தம்பி சந்திரசேகரம் என்பவரால் எழுதப்பட்ட ‘‘இலங்கைத் தமிழ் நாட்டார் கதைகள்’’ என்ற இலக்கியத்தின் மூலமாக விக்கிரம இராஜசிங்கன் பற்றிய வாய்மொழிச் செய்திகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இச்செய்திகள் கண்டி அரசன், கண்டிராசன் ஊஞ்சல் என்பவற்றில் வரும் செய்திகளுடன் மிக

நெருக்கமானதாகக் காணப்படுகின்றது. உதாரணமாக ஆங்கிலேயரை எதிர்த்து நின்ற ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் பெண்ணாசை கொண்டதனால் ஏற்பட்ட தீய விளைவுகளையும் இறுதியில் விக்கிரம இராஜசிங்கன் அவனது தளபதி ஆலப்பிள்ளையால் ஆங்கிலேயரிடம் காட்டிக் கொடுக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டதையும் இவ்வாய்மொழிக் கதை விபரிக்கின்றது (சந்திரசேகரம், 2020:49). இதனைவிட முருகு தயாநிதி என்பவரால் எழுதப்பட்ட வாய்மொழி இலக்கியமான ''கண்டிராஜன் ஒப்பாரியில்'' மன்னன் செய்த கொடூரச் செயலைப் பிரதானமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

5. முடிவுரை

நாயக்க ஆட்சியாளர்களுள் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் ஆட்சிக்காலம் தனித்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. இவன் நாயக்க மன்னனாக இருந்த போதிலும் பௌத்த மக்களுக்குப் பல சேவைகளை ஆற்றியுள்ளான் என்பது சிறப்புக்குரிய அம்சமாகும். விக்கிரம இராஜசிங்கன் பலம் பொருந்திய மன்னனாகக் கருதப்பட்டாலும் அவனது இறுதிக்காலம் அவனுடைய பலவீனத்தைப் பறைசாற்றுவதாகக் காணப்படுகின்றது. சிங்கள பிரதானிகளுடைய உட்பூசல்கள் காரணமாக மக்களுடைய ஆதரவை இறுதி வரை கட்டியெழுப்ப முடியவில்லை. சிங்களப் பிரதானிகள் பௌத்த மக்கள் மத்தியில் இவனையொரு கொடுங்கோலனாகச் சித்தரித்தமையானது இவனது இராஜதந்திர நகர்வில் தோல்வியை எடுத்துக்காட்டுகின்றது. ஒருசாரார் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனைக் கொடூரமான ஆட்சியாளனாகவும், இன்னொருசாரார் கண்டி இராச்சியத்தினுடைய சிறந்த தலைவனாகவும் சித்தரிகின்றனர். பொதுவான கண்ணோட்டத்தில் மதிப்பீடு செய்கின்ற போது நாயக்க வம்சாவழியைச் சேர்ந்த அரசர்களுள் தனித்துவம் வாய்ந்தவனாகவும், வரலாற்று ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தவனுமாகிய ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனது சமகால சூழலே மன்னனைப் பிழையான மனிதனாகச் சித்தரித்து மன்னனுடைய வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது எனலாம்.

உசாத்துணை

1. D'Oyly,J., (1833). A Sketch of the Constitution of the Kandyan Kingdom. Transactions of the Royal Asiatic Society of Great Britain and Ireland.
2. Geiger Wilhelm., (1998). Culavamsa – Part II. Asian Educational Services: Madras.
3. Punchibandara Dolapihilla., (1959). In The Days of Sri Wickramarajasingha. Saman Press: Maharagama.
4. அந்தனி ஜீவா., (2002). கண்டி மாவட்டத் தமிழர்களின் வரலாற்றுப் பதிவுகள். விக்ரம் பிரிண்டர்ஸ்: கொழும்பு.
5. இளையதம்பி,மு., (1959). இலங்கை சரித்திரம் 1500-1948. ஸ்ரீ லங்கா அச்சகம்.
6. கார்மேகம்,எஸ்.எம்., (2004). கண்டி மன்னர்கள். கார்சன்ஸ் பதிப்பகம்: சென்னை.
7. குணராசா,க., (2008). சூளவம்சம் கூறும் இலங்கை வரலாறு. கமலம் பதிப்பகம்: யாழ்ப்பாணம்.
8. குலரத்தினம்,க.சி., (2008). நோத் முதல் கோபல்லாவ வரை இலங்கையின் அரசியல் வரலாறு (1978-1947). குமரன் புத்தக இல்லம்: கொழும்பு.
9. சந்திரசேகரன்,சி., (2020). இலங்கை தமிழ் நாட்டார் கதைகள். குமரன் புத்தக இல்லம்: கொழும்பு.
10. சரவணன்,என்., (2021). அறிந்தவர்களும் அறியாதவையும். குமரன் புத்தக இல்லம்: கொழும்பு.
11. சாரல்நாடன்., (2005). கண்டிராசன் கதை. சாரல் வெளியீட்டகம்: கொட்டகலை.
12. நிக்கலஸ்,வி.இ., (1966). இலங்கை சரித்திரம் பிரித்தானியர் காலம் 1796-1948. ஆசிர்வாதம் அச்சகம்: யாழ்ப்பாணம்.
13. நெடுமாறன்,ப., (2014). இலங்கை தமிழர் வரலாறு. தினத்தந்தி வெளியீடு: சென்னை.
14. மதுரா,ம., (2011). இலங்கையின் முடியாட்சியில் கண்டி ராஜ்யம். கலைக்கேசரி.
15. வன்னியாராச்சி,எச்., (2021 டிசம்பர்). கடைசி அரசிக்கு நேர்ந்த கதி. தாய்வீடு.

மந்துவில் கிராமம் - ஒரு வரலாற்று நோக்கு

கமலநாதன் நிரோஜினி[1], சி.கி.சிவகணேசன்[2]
[1,2]வரலாற்றுத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
[1]nirojiny41@gmail.com, [2]Shivahaneshank@esn.ac.lk

ஆய்வுச் சுருக்கம்

தென்னாசியாவில் இலங்கையானது நீண்ட தொடர்ச்சியான வரலாற்றுப் பாரம்பரியங்களைக் கொண்ட நாடாக விளங்குகின்றது. அந்தவகையில் வட இலங்கையில் அமைந்துள்ள மந்துவில் கிராமம் தொன்மையும், தொடர்ச்சியுமான வரலாற்றைக் கொண்டுள்ளமையை நிரூபிக்கும் வகையில் ஏராளமான தொல்லியற் சின்னங்கள் காணப்படுகின்றன. எனினும் அங்கு விரிவான அகழ்வாய்வுகள் நடைபெற்றிருக்காமை குறிப்பிடத்தக்கது. மந்துவில் கிராமத்தின் தொல்லியல் எச்சங்களை அடையாளம் காண்பதனூடாகவும், பண்பாட்டுப் பாரம்பரியங்களை இனங்காண்பதுடன் இக்கிராமத்தின் வரலாற்றை வெளிக்கொண்டுவருவதற்கு முன்னோடியாக அமையும். இங்கு வரலாற்றாய்வாளர்களால் ஆய்வு செய்யப்பட்டு கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல் மரபுரிமைச் சின்னங்களான பெருங்கற்கால சின்னங்களான மட்பாண்ட கலவோடுகள், ஈமத்தாழிகள், நடுகற்கள் போன்றனவும் மற்றும் தமிழ் பிராமி சாசனம், நாணயங்கள், புராதன குளங்கள், புராதன கட்டிடங்கள், தொன்மையான ஐயனார் வழிபாட்டிற்கான தொல்லியல் சான்றுகள், சங்கிலியன் கோட்டை என்பனவும் இவ்வாய்வில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட முதலாம் பராக்கிரமபாகுவின் நாணயமும் அத்தோடு மந்துவில் கிராமத்தின் சமூக, பொருளாதார முக்கியத்துவமும் இக்கிராமத்தின் வரலாற்றுத் தொன்மையை எடுத்துக்காட்டுபவையாக அமைகின்றன. மந்துவில் கிராமத்தில் ஆதிக்குடியிருப்பு மையங்கள் இருந்தமைக்கான சான்றாதாரங்கள் காணப்படுகின்றன. இவற்றை அடையாளப்படுத்தி, ஆவணப்படுத்துவதன் மூலம் குறித்த கிராமத்தின் தொன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். இவ்வாய்வின் மூலம் எதிர்காலத்தில் மந்துவில் கிராமத்தின் தொன்மை வரலாறானது வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்பட உதவியாக இருக்கும்.

திறவுச் சொற்கள்: மந்துவில் தொல்லியற் சின்னங்கள், பெருங்கற்காலம், பண்பாடு

1. ஆய்வின் அறிமுகம்

உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு இடங்களும் தனித்துவமான தொல்லியல் மற்றும் வரலாற்று அம்சங்களைக் கொண்டுள்ளன. அந்த அடிப்படையில் வட இலங்கையில் காணப்படுகின்ற தொன்மை மிக்க கிராமங்களில் ஒன்றாக மந்துவில் கிராமம் காணப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவில் அமைந்திருக்கும் மந்துவில் கிராமமானது சிறப்பான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததொரு கிராமமாகும். இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முற்பட்டதான வரலாறுகளுடன் தொடர்புபட்டதாகவும் அதாவது பெருங்கற்காலப் பண்பாட்டின் தாக்கங்கள் செல்வாக்குச் செலுத்திய இடமாகவும், யாழ்ப்பாண அரசகால வரலாற்றோடு தொடர்புபடுத்திக் கூறப்படும் கிராமமாகவும், இலங்கையில் ஐரோப்பியர் ஆட்சி இடம்பெற்ற காலத்தில் அவர்களுடைய ஆளுகைக்குட்பட்ட கிராமமாகவும் மந்துவில் கிராமமானது விளங்குகின்றது. ஆகவே வரலாற்றுத் தொன்மை கொண்டதாக விளங்கும் மந்துவில் கிராமம் பற்றியதாக இவ்வாய்வு அமைகின்றது.

2. ஆய்வு முறையியல்

இவ்வாய்வின் பிரதான நோக்கமாக மந்துவில் கிராமத்தின் வரலாற்றை வெளிப்படுத்துவதை பிரதான நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு கட்டமைக்கப்படுகின்றது.

ஆய்வுப் பிரதேசமாக மந்துவில் கிராமம் காணப்படுகின்றது. மந்துவில் கிராமமானது யாழ் மாவட்டத்தில் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, யாழ்ப்பாணம், தீவகம் என்னும் பிரதேச செயலக பிரிவுகள் காணப்படுகின்றன. இவற்றுள் தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ளதே மந்துவில் கிராமமாகும். இவ்வாய்வில் மந்துவில் கிராமத்தின் அனைத்துக் கிராம சேவையாளர் பிரிவும் ஆய்வுக்குட்படுத்தப்படுகிறது.

3. இலக்கிய மீளாய்வு

புஷ்பரட்ணம்.ப, (2017), "இலங்கைத் தமிழர் ஒரு சுருக்க வரலாறு" என்ற இலக்கியத்தில் இலங்கையின் பூர்வீக மக்களும் பண்பாடும் என்ற பகுதியில் பூர்வீக மக்கள் யார்?, தொல்லியல் சான்றுகளின் ஆதாரங்கள் மூலம் பூர்வீக மக்கள் எந்த எந்த இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டனர். மற்றும் கற்காலம் பற்றிக் குறிப்பிடும் போது நுண்கற்கால மக்கள், பெருங்கற்கால மக்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு பெருங்கற்காலப் பரவல் வட இலங்கையில் எவ்வாறு காணப்பட்டது, அவை பற்றிய ஆய்வுகள் எந்த எந்த இடங்களில் மேற்கொள்ளப்பட்டன, இலங்கையின் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள், பெருங்கற்காலப் பண்பாடும் சமகாலத் தமிழரும் போன்ற விடயங்கள் விரிவாக குறிப்பிடப்பட்டிருப்பதனால் மந்துவில் கிராமத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டுப் பரம்பல் காணப்பட்டது என்ற விடயத்தினை அறிந்து கொள்வதற்கு இவ்வாய்விற்கு பேருதவியாக அமைகின்றது.

கமலநாதன்.சி.கா, (2012), "வரணியின் மரபுரிமைகள் பாகம்-1" எனும் இலக்கியத்தில் வரலாற்று வளர்ச்சியில் வரணி, வரணியில் கிடைத்த தொல்லியல் சான்றுகளின் முக்கியத்துவம் போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. மந்துவில் கிராமமானது வரணிப் பிரதேசத்திற்கு அருகில் அமைத்திருப்பதனால் மந்துவில் கிராமத்தினை உள்ளடக்கியதான விடயங்கள் காணப்படுகின்றமையானது மந்துவில் கிராமத்தில் காணப்பட்ட தொல்லியல் மரபுரிமைச் சின்னங்கள் என்பவற்றில் பெருங்கற்காலச் சின்னங்கள், தமிழ் பிராமி சாசனங்கள், நாணயங்கள், பழைய கட்டடங்கள், புராதன கோயில்கள், யாழ்ப்பாண அரச காலச் சின்னங்கள் போன்றவற்றினைப் பற்றி குறிப்பிடுவதனால் இவ்வாய்விற்குத் துணைபுரிகின்றது.

வேலுப்பிள்ளை.க, (1918), யாழ்ப்பாண வைபவ கௌமுகி (History of Jaffna) எனும் இலக்கியத்தில் யாழ்ப்பாணத்தின் புராதன காலம் தொடர்பான வரலாறுகளை தொடர்ச்சியாகக் கூறுவதனால் தென்மராட்சியின் வரலாறு, மந்துவில் கிராமம் யாழ்ப்பாண அரசு காலத்தில் பெற்றுக்கொண்ட முக்கியத்துவம், ஐரோப்பியர் காலத்தில் தென்மராட்சிப் பிரிவில் இருந்த கிராமங்கள் பெற்றுக் கொண்ட முக்கியத்துவம், யாழ்ப்பாணத்தில் ஆரம்பகாலத்தில் இருந்த சாதிக்கட்டமைப்புகள், சாதிக்கட்டமைப்புகளை அடிப்படையாகக் கொண்ட தொழில் முறைகள் போன்ற விடயங்கள் இவ்வாய்விற்கு பேருதவியாக அமைகின்றது.

புஷ்பரட்ணம்.ப, (2012), "யாழ்ப்பாணம் ஓர் அறிமுகம்: தென்மராட்சியின் தொன்மையும் பெருமையும்" என்ற தலைப்பில் கலைக்கேசரி இதழில் வெளிவந்த கட்டுரையில் தென்மராட்சி மக்களின் தனித்துவமாகப் பின்பற்றப்பட்ட சமய முறை, மந்துவில் கிராமத்தில் இயற்றாலைக் கோட்டையிலிருந்த ஆலயம் பற்றிக் கூறுவதனால் இவ்வாய்விற்கு மந்துவில் கிராமங்களின் சமய நிலை தொடர்பாக விரிவாக அறிவதற்குத் துணைபுரிகின்றது.

புஷ்பரட்ணம்.ப, (2012), "தென்மராட்சியில் சங்ககால நடுகல் வழிபாடு" என்ற தலைப்பில் யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி நூற்றாண்டு விழா தாமோதரன் இதழில் வெளிவந்த கட்டுரையில் தென்மராட்சியில் மந்துவில் கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்டதான பெருங்கற்காலச் சின்னங்கள், நடுகல் வழிபாட்டு முறைகள், தழிழ் பிராமி சாசனம், உரோம நாணயங்கள், புராதன

கால கோயில்கள், சங்கிலியன் கோட்டை போன்றவற்றைக் குறிப்பிட்டதோடு, மந்துவில் கிராமத்தில் ஆரம்பகாலத்தில் காணப்பட்ட சமய நிலையினையும் குறிப்பிட்டுள்ளார் இதனால் இவ்வாய்விற்கு மந்துவில் கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல் மரபுரிமைச் சின்னங்கள் தொடர்பாகவும், மந்துவில் கிராமத்தின் சமய நிலை தொடர்பாகவும் இவ்வாய்வுக்கு தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

4. மந்துவில் கிராமத்தில் காணப்படும் தொல்லியல் மரபுரிமைச் சின்னங்கள்

4.1. மந்துவில் கிராமத்தின் தொன்மை வரலாறு

தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள மருத நிலம் சார்ந்து காணப்படும் கிராமமே மந்துவில் கிராமமாகும். கொடிகாமத்திற்கு வடமேற்கே அமைந்துள்ள ஆய்வுப்பிரதேசமானது ‘‘மந்துவில்’’ என்ற இடப்பெயரினைப் பெறுவதற்கான காரணத்தை ஆராயுமிடத்து, மந்து+வில்=மந்துவில் என்று பிரிந்து மந்து என்பதற்கு பல்வேறு பொருள் விளக்கம் கொடுக்கப்படுகின்றது. மந்து மருவி மந்தி ஆயிற்றெனக் கொண்டு, மந்திகள் நிறைந்த காட்டுப்பகுதியே மந்திவில் என வழங்கிய பின் மந்துவில் என்று அழைத்தனர் என்கின்றனர். அவ்வாறு கூறுவதற்கேற்ப இங்கு பண்டை நாளில் பெருங்காடுகளும் இருந்திருக்கின்றன. இப்பின்னணியில் மந்துவிலுக்குச் சிங்கள மூலம் விளக்கம் கொடுத்துள்ளார் யாழ்ப்பாண வைபவ கௌமுகி ஆசிரியர். வந்துரா என்பது சிங்களத்தில் மந்தியாகும். எனவே ‘‘வந்துராவில’’ என்பதன் தமிழ் மொழி பெயர்ப்பே ‘‘மந்துவில்’’ என வழங்கி, அது மந்துவில் என்று அழைக்கப்பட்டது என்கின்றார் (பாலசுந்தரம்,1989:58).

மந்து ஒருவகைச்செடி ஆகும். இப்பின்னணியிலும் இதற்கு காவிளா, மந்துச்செடி என்பவற்றைப் புகையிலைப்பயிர் செய்கை தொடங்குமுன் நிலத்தினுட் பசளையாகப் புதைக்கும் வழக்கமுண்டு. வடமராட்சிப் பகுதியினர் இங்கு வந்து மந்துச்செடி ஏற்றிச் செல்லும் வழக்கம் இருந்திருக்கின்றது. எனவே மந்துச்செடிகள் பெரிதும் காணப்பட்ட இடம் மந்துவில் எனப் பெயர் பெற்றதென்றும் கூறுகின்றனர்(பாலசுந்தரம்,1989:58). ஒருசிலர் மந்தை+வில் எனப்பிரித்தும் பொருள் கூறுகின்றனர். மந்தைகள் பெரிதும் வளர்க்கப்பட்ட இடம் என்ற அடிப்படையில் இப்பெயர் தோன்றியது என்றும் கருதப்படுகின்றது. ஹோர்பரோ (Hoursburgh,1916:55) இதற்கு ‘‘மண்டுவில்’’ (Pond of mandu tree- Cycas Circinals) என இதற்கு விளக்கம் கொடுத்துள்ளமையும் நோக்கத்தக்கது. இவ்வாறாக பல காரணங்களைக் குறிப்பிட்டு மந்துவில் எனும் பெயர் இவ்வாய்வுப்பிரதேசத்திற்கு வந்ததென வரலாற்றாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர் (பாலசுந்தரம்,1989:58).

நிலவளம், நீர்வளம் நிறைந்து காணப்படும் இக்கிராமம் வரணி கோயிற்பற்று நிர்வாகத்தின் கீழ் உள்ளது. சுமார் மூன்று சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட இக்கிராமம் ஆரம்ப காலத்தலிருந்து ஒரு கிராம அலுவலர் பிரிவாக தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவன் கீழ் நிர்வாகம் நடைபெற்று வந்தது. பின்பு 1990 ஆம் ஆண்டிலிருந்து இக்கிராமம் மந்துவில் கிழக்கு, மந்துவில் மேற்கு, மந்துவில் வடக்கு என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு வடக்கே வரணியையும், கிழக்கே கொடிகாமத்தையும், மேற்கே சரசாலையையும், தெற்கே மீசாலையையும்

எல்லையாகக் கொண்டு நீர்வாகம் அமுலாக்கப்பட்டுவருகின்றது. அத்தோடு இது ஒரு விவசாயக் கிராமமாகவும், சமூக, பொருளாதர, கல்வி வளர்ச்சியும் வரலாறு கண்டதாகவும் அமைந்துள்ளது.

எந்தவொரு கிராமமாக இருந்தாலும் அதன் முக்கியத்துவம் ஒரு தனிச்சிறப்பில் மட்டும் முழுமையாகத் தங்கியிருப்பதில்லை. அதன் இயற்கை வளம், இட அமைவு, போக்குவரத்து, கல்வி வசதிகள், அயலூர் தொடர்புகள், மக்களின் பண்பாடான வாழ்வுடன் சேர்ந்து உழைக்கும் திறன் என்பன ஒருங்கு சேரும் பொழுது தான் ஒரு கிராமம் நல்ல முறையில் வளர்ச்சியடைய முடிகிறது. அவ்வாறு சகல வதிகளும் ஒருங்கே அமைந்ததாகவும் எல்லாக் கிராமமும் அமைவதில்லை. இத்தன்மையில் வைத்து நோக்கும் போது மந்துவில் கிராமம் ஓரளவு இயற்கை வளமும் உள்ளது. ஏனைய துறைகளிலும் படிப்படியாக வளர்ந்து கொண்டு வருவதற்குரிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. குடா நாட்டில் காணப்படும் சுண்ணாம்புக் கற்பாறைகள் அதிகமாக இக்கிராமத்திலே காணப்படுவதுடன், மக்களுக்கு வருமானத்தைக்கொடுக்கும் முறையில் தொழில் வாய்ப்பையும் கொடுக்கின்றது. இவ்விடத்தில் செம்மையான சிவந்த மண்ணைக் கொண்டதும் வாழைத்தோட்டங்கள், உப உணவுப் பயிர்நிலங்கள் நிறையவுள்ள பகுதியாக அமைந்துள்ளது. இவ்விடத்தைச் செம்பாடு என அழைப்பர். மேற்கு எல்லைப் புறமாக அமைந்த பகுதி உவர்த்தன்மை கொண்ட தாழ்நிலப் பிரதேசமாக அமைந்துள்ளதுடன் அவை கால்நடைகளுக்கு நல்ல மேய்ச்சல் நிலமாகவும் அமைந்து பயன்தருகின்றன. ஏனைய நிலங்கள் அனைத்தும் மக்கள் முயற்சியினால் தென்னஞ் சோலைகளாகவும், பனந்தோப்புகளாகவும், மா, பலா, கமுகு நிறைந்து காணப்படும் நிலமாகவும் காட்சியளிக்கின்றது.

4.2. தொல்லியல் மரபுரிமைச் சின்னங்கள்

4.2.1. பெருங்கற்காலச் சின்னங்கள்

4.2.1.1. மட்பாண்டங்கள் அல்லது கலவோடுகள்

தற்போது மந்துவிலூடாக வரணியில் இருந்து குடத்தனைக்குச் செல்லும் வீதியிலே, மாசேரிப் பகுதியில் நுளம்பாய்க் குளத்திற்கு மேற்காக உள்ள பிரதேசத்திலே ஆய்வு மேற்கொள்ளப்பட்டபோது பல அரிய தொல்லியற்சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவ்வேளை பல வேலைப்பாடு கொண்ட மட்பாண்ட விளிம்புகளுடன் கீச்சுக் கிட்டங்கள்(கழிவிரும்பு) மணிகள், சிப்பிகள், கண்ணாடிப் பொருட்கள் என்பனவும் இருக்கக் காணப்பட்டன. ஓர் இடம் தெரிவு செய்யப்பட்டு தொல்லியலாய்வு முறையில் நான்கடி ஆழத்திற்கு மண் அகழ்ந்தெடுக்கப்பட்டபோதும் துரவுப் பகுதியிற் கிடைத்தது போன்ற செறிவானசான்றுகள் இதில் கிடைக்கவில்லை. இந்த ஆய்வுக் குழியில் இருவகையான கலாசாரப் படைகளை இனம்காண முடிந்தது. ஒரு படை மிகவும் கறுப்புநிற மண்ணும், மற்றைய படை ஓரளவு கறுப்புநிற மண்ணையும் கொண்டது. இரண்டாவது கலாசாரப் படையில் அலங்காரத் தன்மை கொண்ட கறுப்புச் சிவப்புநிற மட்பாண்ட ஓடுகளும், சீனமட்பாண்டங்களும் கலந்து காணப்பட்டன. இங்கு கிடைத்து மட்பாண்ட ஓடுகளின் விளிம்பு, வடிவமைப்பு, அலங்காரத் தன்மை என்பன சுந்தரோடை, பூநகரி போன்ற இடங்களிற் கிடைத்த மட்பாண்ட ஓடுகளை ஒத்துள்ளன. சில மட்பாண்ட ஓடுகள் தடித்த விளிம்புகள், வட்டில்களுடைய அமைப்பைத் துல்லியமாகக் காட்டுகின்றன. ஆயினும் பெருங்கற்காலப் பண்பாட்டிற்கேயுரிய கறுப்புச் சிவப்புநிற மட்பாண்ட

ஓடுகள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. ஆயினும் துரவுப் பகுதியின் உள்ளே 4 அடி ஆழம் அளவில் குடைந்து ஆய்வு செய்தபோது பல மட்பாண்ட ஓடுகள் கிடைத்திருந்தன (கமலநாதன்,2012:77).

4.2.2. ஈமச்சின்னங்கள்

பெருங்கற்காலப் பண்பாட்டில் இடுகாடும். தாழியடக்கமும் முக்கிய ஓர் அம்சமாகும். வரணிப்பகுதியிலும் தொன்மையான இடுகாடொன்று இருந்ததென்பது 25 வருடங்களுக்கு முன் உறுதியாகியது. தற்போது வரணி வைத்தியசாலையின் முன்னுள்ள பத்து வீட்டுக் குடியேற்றத் திட்டப் பிரதேசமே அதுவாகும். அங்கே தற்போதுள்ள உரக்களஞ்சியக் கட்டடத்தொகுதிக்கான அடித்தளம் 1972ஆம் ஆண்டில் வெட்டப்பட்டபோது நிலத்தில் 6 அடி ஆழத்திற்குக் கீழே பெரும் மயில் அல்லது புறா வடிவத்தாழி ஒன்று கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அப்போதைய வடமராட்சி நிருபர் ஜோ.ஜெயக்குமார் அதைப் பற்றியும் அதற்குள் இருந்த பொருட்களைப் பற்றியும் விபரங்களை வெளியிட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது. ஆயினும் அத்தாழி இன்று இல்லை. இவ்விடத்தில் மூடியுடன் கூடிய ஈமத்தாழி இருந்தமையினை உறுதிப்படுத்தியுள்ளனர் ஆய்வாளர்கள். அண்மைக்காலத்தில் இப்பிரதேசத்திற் குடியிருந்த மக்கள் நீர்த்தேவைக்காகத் துரவு வெட்டியபோது முன்பெடுத்தது போன்ற ஒரு தாழியைக் கண்டெடுத்ததாக அப்பகுதி மக்கள் கூறுகின்றார்கள். அதை எங்கே யாரிடம் கொடுத்தார்கள் என்பதை அறியமுடியவில்லை. கண்டெடுத்தது உண்மையென ஊரிலுள்ள பலர் கூறுகின்றனர்(கமலநாதன்,2012:80).

4.2.3. நடுகற்கள்

தமிழகத்தின் தொடக்க கால வழிபாட்டுக்குரிய சின்னங்களின் ஒன்றாக நடுகல் வழிபாடு கருதப்படுகின்றது. இதன் தோற்றம் கி.மு. 1000ஆம் ஆண்டு தொன்மை வாய்ந்த பெருங்கற்காலப் பண்பாட்டு ஈமச்சின்னங்களில் காணப்படுகின்றது. இதற்குத் தமிழகத்தில் கொடுமணல் என்ற இடத்தில் கற்பதுக்கை என அழைக்கப்படும் பெருங்கற்கால ஈமை சின்னங்களில் கண்டுபிடிக்கப்பட்ட நெடிய கற்கள் சிறந்த சான்றாகும். இவற்றின் வளர்ச்சி நிலையே சங்க இலக்கியத்தில் விபரிக்கப்படும் நெடுநிலை நடுகல்லு (Menhir) எனத் தொல்லியலாளர்கள் கருதுகின்றனர் (இராசன்:9-10). சங்க காலத்தில் போர் வீரர்கள், தியாகிகள் இறந்த போது அவர்களுக்கு நினைவுக் கற்கள் எழுப்பி அக்கற்களின் இறந்துபட்டவரின் உருவம் அமைத்து அவன் பெருமைகளை எழுதி வைக்கும் மரபு காணப்பட்டது.

அண்மையில் இயற்றாலை என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சில சான்றுகள் சங்க காலத் தமிழகத்தை ஒத்த நடுகல் வழிபாடு சம காலத்தில் ஈழத்திலும் இருந்துள்ளதைக் கோடிட்டுக் காட்டுகின்றன. மந்துவில் கிராமத்தின் மேற்கெல்லையில் அமைந்துள்ளது. இங்கு நடுகற்கள் காணப்படும் மையத்தினைச் சுற்றி மூன்று பக்கங்களிலும் புராதன கட்டடங்கள் இருந்ததற்கான செங்கற்கள் பொளிந்த முருகைக்கற்கள் பரந்த அளவில் மண்ணில் புதையுண்டு காணப்படுகின்றன. இவை ஒரு கோட்டையின் அழிபாடாக இருக்கலாமெனக் கருதி இவ்விடம் இயற்றாலைக் கோட்டை எனவும், இங்குள்ள ஆலயம் கோட்டை வாசம் பிள்ளையார் எனவும் அழைக்கப்படுகிறது. தற்போது இதன் ஒரு பகுதி காடாகவும், இன்னொரு பகுதி பயிர்ச் செய்கை

நிலமாகவும் உள்ளது. காடாக உள்ள மேற்குப் பகுதியில் வட்டமாக வளர்ந்துள்ள மரங்களுக்குக் கீழே செங்கல் மேடை அமைக்கப்பட்டு அதன் மேல் பதினான்கு கற்கள் நாட்டப்பட்டு ஐயனார் ஆலயம் எனவும் அழைத்துக் கொள்வதுண்டு. இங்குள்ள பதினான்கு கற்களும் நாச்சிமார், ஐயனார், விநாயகர், நாதம்பிரான், காளி, அண்ணமார், வைரவர், காளகண்டன், முனி, ஊத்தைக்குடியன், காளமுனி ஆகிய தெய்வங்களின் பெயரில் தற்போது வழிபடப்பட்டு வருகிறது (புஷ்பரட்ணம்,2013:51).

4.3. தமிழ்ப் பிராமி சாசனம்

இலங்கைத் தமிழரின் ஆதிகால, இடைக்கால வரலாற்றை மீளாய்வு செய்வதில் சாசனங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஆய்வுப் பிரதேசமான மந்துவில் கிராமத்தில் தமிழ் பிராமி எழுத்துக்கள் பொறித்த மட்பாண்டங்களும் காணப்பட்டன. இலங்கையின் ஏனைய பிராந்தியங்களைப் போல் கல்வெட்டுக்கள் வட இலங்கையில் காணப்படாததற்கு எழுத்துப் பொறிப்பதற்கு எற்ற கல்வகை இல்லாமை காரணமாக இருப்பினும் அங்கு வாழ்ந்த மக்கள் எழுத்து முறையை நன்கு அறிந்திருந்தனர் என்பதற்கு மந்துவிலில் கிடைத்த பிராமிச் சாசனங்கள் சிறந்த எடுத்துக்காட்டாகும். குறிப்பாக இங்கு கிடைத்த மட்பாண்டம் ஒன்றின் விளிம்பில் ‘‘இ’’என்ற தமிழ் பிராமி எழுத்துக் காணப்பட்டது. இதனை ஆராய்ந்த பேராசிரியர்.ப.புஷ்பரட்ணம் இதன் காலத்தை வரிவடிவ வளர்ச்சியில் கி.பி 1 ஆம் நூற்றாண்டு எனக் கூறமுடியும் எனக் கூறியுள்ளார் (புஷ்ரட்ணம்,2012:52).

நடுகல் வழிபாட்டு எச்சங்கள் காணப்படும் இடத்தில் 3 செங்கற்களில் இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முற்பட்டதெனக் கூறக்கூடிய பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன. அவற்றுள் 9x12 அங்குல நீள அகலமுடைய இரு செங்கற்களில் முறையே இரு எழுத்துக்களும் 4x4 அங்குல நீள அகலம் கொண்ட முதலாவது செங்கல்லில் ஒரு எழுத்தும் உள்ளன. முதலாவது செங்கல்லில் உள்ள எழுத்துக்களை மய அல்லது மாய எனவும் மாயவள் என்ற பெயர் கொண்ட ஆண் பெண் தெய்வங்களுடன் தொடர்புபடுத்திப் பார்க்க இடமுண்டு. மற்றைய செங்கல்லிலுள்ள சொல்லின் பொருள் விளங்கவில்லை. ஆனால் அதில் தமிழ் பிராமிக்கேயுரிய ‘‘ற’’ என்ற எழுத்துப் பயன்படுத்தப்பட்டுள்ளமை சிறப்பான அம்சமாகும். மூன்றாவது செங்கல்லில் ‘‘க’’ என்ற தனி எழுத்து மட்டும் காணப்படுகின்றது. மேற்படி இடத்திலிருந்து மேலும் பிராமி எழுத்துப் பொறித்த செங்கல் ஒன்று திருமதி கிருஸ்ணகுமார் அவர்களால் 1995 இல் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆலயத்தின் அமைப்பையும், சுற்றாடலில் பெறப்பட்ட சான்றுகளையும் வைத்து நோக்கும் போது இங்கு பெறப்பட்ட பிராமி எழுத்துக்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளன. இவ்வெழுத்துக்கள் இங்குள்ள ஆலயத்தோடு தொடர்புடையதாக இருப்பின் இங்குள்ள கற்கள் சங்ககால நடுகல் வழிபாட்டு மரபிருந்ததற்கு சிறந்த சான்றாகும். இருப்பினும் பிராமி எழுத்தும், புராதன மட்பாண்டங்களும் இங்கு கண்டு பிடிக்கப்பட்டதிலிருந்து இவ்விடம் பண்டைய காலத்தில் இந்திய, உரோம நாடுகளுடன் தொடர்புடைய வர்த்தகத் துறைமுகமாக இருந்ததெனக் கூறலாம். எதிர்காலத்தில் இங்கு மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் மேலும் பல புதிய தகவல்களைத் தரலாம்(புஷ்பரட்ணம் 1993:93).

4.4 நாணயங்கள்

4.4.1. உரோம நாணயங்கள்

1990 ஆம் ஆண்டுகளில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் அதிபராக இருந்த அமரர்.பாலச்சந்திரன் அவர்கள் தென்மராட்சியில் அவர் சேகரித்த பண்டைய நாணயங்கள் சிலவற்றை புஷ்பரட்ணம் ஆசிரியர் அவர்களின் ஆய்வுக்கு கொடுத்திருந்தார். அவரது தொல்லியல் ஆய்வில் பல்வேறு கால கட்டத்தைச் சேர்ந்த வட இந்திய, தென்னிந்திய, தமிழக, உரோம நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும் அவற்றுள் உரோம நாணயங்கள் முக்கியமானவைகள் (புஷ்பரட்ணம்,2013:215).

கி.பி. 1ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க நாட்டவரான தொலமி தனது நூலில் தென்மராட்சிக்கு உட்பட்ட வட இலங்கையை நாகடிப (நாகதீவு) எனக் கூறுகின்றார். இதேகாலப் பகுதியைச் சேர்ந்த பெரிப்புலஸ் என்ற நூல் வட இலங்கைக்கும் மேற்காசிய நாடுகளுக்குமான வணிக உறவு பற்றிக் கூறும்போது ஆரம்ப காலங்களில் உரோம வணிகர் இலங்கைக்கு வராமலே தமக்குத் தேவையான இலங்கைப் பொருட்களைத் தென்னிந்தியத் துறைமுகங்களில் பெற்றதாகவும், கி.பி. 1 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் அவர்கள் நேரடியாக இலங்கைக்குச் சென்று வணிகத்தில் ஈடுபட்டதாகவும் கூறுகிறது. அது உண்மை என்பதைத் தென்மராட்சியில் கிடைத்த உரோம நாணயங்கள் உறுதிப்படுத்துகின்றன. இந்நாணயங்கள் தென்மராட்சியில் கண்ணாடிப்பிட்டி, வரணி, கச்சாய் முதலிய இடங்களில் கண்டு பிடிக்கப்பட்டாலும் மந்துவில் கிராமம் இயற்றாலைப் பகுதியில் கிடைத்த பல நூற்றுக்கணக்கான நாணயங்கள் இங்கு சிறப்பாக குறிப்பிடத்தக்கது(புஷ்பரட்ணம்,2013:215).

இயற்றாலைப் பகுதியில் 20 ஏக்கருக்கு மேற்பட்ட பிரதேசத்தில் அழிவடைந்த மிகப்பெரிய கட்டிடங்களின் சிதைவுகள் காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இற்றைக்கு 80 ஆண்டுகளுக்கு முன்னர் இவ்விடத்தின் வரலாற்றுச் சிறப்பை நேரில் பார்வையிடச் சென்ற சுவாமி ஞானப்பிரகாசர் தான் அவ்விடத்திற்குச் சென்ற போது அங்கிருந்த கட்டிடங்களை மக்கள் இடித்து அக்கற்களை வண்டில் வண்டிலாகப் பிற ஊர்களுக்கு எடுத்துச் சென்றதாக தனது யாழ்ப்பாண விமர்சனம் என்ற நூலில் குறிப்பிடுகின்றார் (புஷ்பரட்ணம்,2013:216).

அண்மையில் இக்கட்டிட அழிபாடுகள் காணப்பட்ட இடம் பயிர்ச் செய்கைக்காக திருத்தப்பட்ட போது இயற்றாலையைச் சேர்ந்த திரு.சிற்றம்பலம் என்பவர் 700 உரோம நாணயங்கள் கொண்ட மண் பானையொன்றைக் கண்டுபிடித்தார். இந்நாணயங்கள் மண்பானை ஒன்றில் காணப்பட்டதால் இவை பிற்காலத்தில் பிற இடத்திலிருந்து கொண்டுவரப்பட்டு பாதுகாக்கப்பட்டிருக்கலாமென வாதிட இடமுண்டு. ஆனால் இந்நாணய மட்பானை கண்டெடுக்கப்பட்ட இடத்திலும் அதன் சுற்றாடலிலும் புஷ்பரட்ணம் தலைமையில் ஆய்வை மேற்கொண்ட போது அவ்விடங்களில் புராதன குடியிருப்புக்கள் இருந்தமைக்கான பலவகைத் தொல்லியல் சின்னங்களுடன் உரோமர்கால நாணயங்களும், பிற்காலப் பாண்டிய, சோழ நாணயங்களுடன் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் கால நாணயங்கள் கண்டு பிடித்தனர். அவற்றை நோக்கும் போது ஏறத்தாழ 2000 ஆம் ஆண்டுகளுக்கு மேல் மக்கள் வாழ்ந்து வந்திருக்கலாம் என்பது தெரிகிறது (புஷ்பரட்ணம்,2013:215).

4.4.2. பொலன்னறுவைக்கால நாணயம்

மந்துவில் கிராமத்தில் கிழக்குப்பகுதியில் ஆய்வாளனினால் கண்டு பிடிக்கப்பட்டதே இந்த நாணயம். நாணயம் கண்டெடுக்கப்பட்ட உடனே புகைப்படம் எடுத்து எனது நண்பர் ஒருவருடாக ப.புஷ்பரட்ணம் அவர்களுக்கு அனுப்பி யாருடைய நாணயம் என்ற தகவலைப் பெற்றுக் கொண்டேன்.

அவருடைய தகவலின்படி இலங்கையில் பொலனநறுவை இராசதானி காலத்தில் ஆட்சி செய்த சிங்கள மன்னர்களில் தலைசிறந்த மன்னனான 1 ஆம் பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயமாகும். இது ஒரு செப்பு நாணயமாகும்.

நாணயத்தில் முன் பக்கம், பின் பக்கம் போன்றவற்றில் காணப்படும் குறியீடுகளைப் பற்றி குறிப்பிட்டிருந்தார். நாணயத்தின் பின்பக்கத்தில் குந்தி இருக்கும் நிலையில் அரசனுடைய உருவமும், இடது கையில் கலசமும் வலது கையில் வச்சிராயுதமும் காணப்படுகின்றது. இடது கையிற்கு கீழே தேவநாகரி எழுத்தில் ஸ்ரீ பராக்கிரமபாகு என்ற பெயர் வடமொழியில் எழுதப்பட்டுள்ளது. இந்த நாணயத்தின் முன் பக்கத்திலும், நாணயத்தின் பின் பக்கத்திலும் நாணய விளிம்பையொட்டி சிறு புள்ளிகள் காணப்படுகின்றன.

பொதுவாக சிங்கள மன்னர்கள் கல்வெட்டுக்களை சிங்கள மொழியில் தான் வெளியிடுவார்கள் ஆனால் சோழர்களைப்போல் கடல்சார்ந்த வர்த்தகத்தில் வடமொழி வணிக நோக்கத்திற்காக அதை பல நாட்டவர்களுக்கும் வடமொழி பரீட்சையமாக இருந்ததனால் சிங்கள மொழியில் கல்வெட்டை வெளியிட்ட மன்னர்கள் நாணயங்களை வடமொழியில் வெளியிட்டனர் என்பதனை கண்டெடுக்கப்பட்ட நாணயம் உறுதிப்படுத்துகின்றது.

மந்துவில் கிராமமானது போர்த்துக்கேயர் கால ஆவணங்களிலிருந்தும், யாழ்ப்பாண அரசு கால இலக்கியங்களிலிருந்தும் முள்ளியான் ஊடாக கடல்சார் வர்த்தகத்தில் ஒரு முக்கிய மையமாக இருந்தமை தெரிய வருகின்றது. போர்த்துக்கேய ஆவணங்கள் யாழ்ப்பாண அரசின் கடைசி மன்னன் சங்கிலியனுடைய படைகள், ஆயுதங்கள் நிலை கொண்ட இடங்களாக மந்துவிலையும், மட்டுவிலையும் குறிப்பிடுகின்றது. இவ்வாறான ஆதாரங்களை வைத்துப் பார்க்கும் போது முதலாம் பராக்கிரமபாகு காலத்து உள்நாட்டு வாணிபத்தில் மந்துவில் ஓர் முக்கிய வணிக மையமாக இருந்ததென்று கருதலாம்.

4.5. புராதன குளங்கள்

முற்காலத்தில் நமது முன்னோர்கள் நீரூற்றுகளிலிருந்து நீர் வீணாவதைத் தடுக்க குட்டைகளை உருவாக்கினர். அதிலிருந்து நீரை குடிநீராகவும், விவசாயத்திற்கும் பயன்படுத்தினர். நாளடைவில் குட்டை விரிவடைந்து குளமாக மாறியது. இவை பொதுவாக அரசர்கள் காலத்தில் கட்டப்பட்டவைகளாகவே உள்ளன.

மந்துவில் உட்பட வரணிப் பகுதியிலுள்ள குளங்களின் எண்ணிக்கைபோன்று யாழ்ப்பாணத்தில் எங்கும் காணமுடியாதெனத் திடமாகக் கூறலாம். அவ்வளவிற்கு ஒவ்வொரு பகுதியிலுமே எண்ணற்ற குளங்கள் இருக்கின்றன. இவையாவும் பிற்காலத்தில் வெட்டப்பட்டவை அல்ல. மிகப்

புராதன காலத்தில் இருந்தே தொடர்ந்து வருவதைத் தோம்புகளூடாக அறியமுடிகிறது. கால் நடைகளுக்காகவும், பயிர்ச்செய்கைக்காகவும், பிறநீர்த்தேவைக்காகவும் அவை பயன்படுத்தப்படுகின்றன. ஊர் மக்களுடைய கூட்டுமுயற்சியாவே இவை ஆழமாக்கப்பட்டன. பல குளங்கள் எந்தக் கோடைகாலத்திலும் நீர்வற்றாத இயல்புடையவையாக காணப்படுகின்றன. மாரிகாலத்திற் குடியிருப்பில் ஏற்படும் வெள்ளத்தைத் தொண்டமானாறு உப்பாற்றுடன் சேர்க்கக்கூடிய வகையில் வாய்க்கால் வசதிகளைக் கொண்டனவாகவும் உள்ளன. ஒவ்வொரு ஆலயத்திற்கும் அருகிலும் ஒவ்வொரு குளம் உண்டு. அவை சமூகத்தில் மிகவும் முக்கியத்துவம் பெற்றவை. இங்கு காணப்படும் குளங்களினுடைய பெயர்கள் தூய திராவிடப் பெயர்களைக் கொண்டிருப்பதைக் காணலாம். சில குளங்கள் வரலாற்றுச்சிறப்புக் கொண்டவை.

4.6. புராதன கட்டிடங்கள்

4.6.1. வேரக்காட்டுத் திட்டி

மந்துவில் கிராமத்தின் மேற்குப் பக்கமாகவுள்ள பகுதியானது மிகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக விளங்குகின்றது. இப்பகுதியானது 4 ஏக்கர் நிலப்பகுதியைக் கொண்டதாகும். அப்பகுதியினை திரிவேரபுரம் என்று அழைக்கப்படுகின்றது. அக்காணியினை திரிவேரபுரம் என்று அழைக்கப்படும் காரணத்தினால் இந்தியாவிலுள்ள திரிவேரபுரம் என்னும் கோயிலுக்கும், இப்பகுதிக்கும் ஏதோரு வகையில் தொடர்பு இருக்கின்றது என்று கூறப்படுகின்றது. அதுமட்டுமல்லாது அப்பகுதியில் வாழ்ந்து வரும் இரத்தினசிங்கம் அவர்களின் மூதாதையார் ஆந்திரா மாநிலத்தினைச் சேர்ந்தவர்கள் என்றும் சொல்லப்படுகின்றது.

புராதன காலத்தில் இப்பகுதியில் அரசன், அரசி வாழ்ந்ததாக வாய்மொழிக் கதைகள் மூலம் கூறுகின்றனர். இதனை உறுதிப்படுத்தும் வகையில் நிலத்தின் ஒருபகுதியில் பாதுகாப்பு அரண்போன்ற வடிவமைப்பில் கற்கள் அடுக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. அத்தோடு இப்பகுதியில் ஒரு குளம் காணப்படுகின்றது. அக்குளமானது ராணி குளித்த குளம் என்ற காரணத்தினால் இராசாத்தி குளம் என்று அழைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

4.6.2. கோட்டைவாசம் பிள்ளையார் ஆலயம்

ஆகம மரபு சார்ந்த ஆலயங்கள் இலங்கையிலும், தமிழகத்திலும் 6 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே தோற்றம் பெற்றன. இதற்கு முற்பட்ட கால ஆலயங்கள் கிராமிய ஆலயங்கள் அல்லது ஆகம மரபு சாராத ஆலயங்களென அழைக்கப்பட்டன. தென்மராட்சியில் இம்மரபு சார்ந்த ஆலயங்கள் பல தற்காலத்தில் காணப்பட்டாலும் மந்துவில் கிராமத்தில் இயற்றாலைப் பகுதியில் அமைந்துள்ள ஆலயம் மிகத் தொன்மையானதென்பதற்கு நம்பகரமான சான்றுகள் காணப்படுகின்றன. தற்போது அவ்விடத்தில் புதிய ஆலயம் கட்டப்பட்டாலும் 1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் அவ்விடத்தில் இவ்வாலயம் காணப்பட்டது. சிறிய காடுகளுக்கு மத்தியில் வட்டமாக அமைக்கப்பட்ட நிலப்பரப்பில் ஏழு தெய்வங்கள் வைக்கப்பட்ட நிலையில் ஏழு கன்னிமார் ஆலயமாக வழிபடப்பட்டது. அத்தெய்வங்கள் இயற்கையான கற்களைக் கொண்டு அடையாளப்படுத்தியிருந்தாலும் இரு தெய்வங்களின் உருவம் இயற்கையான கற்களில் மனித உருவில் வடிவமைக்கப்பட்ட நிலையிலேயே காணப்பட்டன. இந்த ஆலயமிருந்த இடத்தில்

புராதன குடியிருப்புகளுக்குரிய சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் தெய்வ உருவங்கள் வைக்கப்பட்ட செங்கட்டியால் அமைந்த மேடையிலுள்ள சில செங்கற்களில் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன. இவற்றின் மூலம் சங்க காலத்திற்குச் சமமான காலத்தில் மந்துவில் கிராமத்திலும் கிராமிய வழிபாட்டு மரபு இருந்துள்ளதென்பது தெரியவருகின்றது (புஷ்பரட்ணம்,2013:218).

4.6.3. கேலம் இராஜராஜேஸ்வரி அம்பாள் கோயில்

மந்துவிலில் டச்சு வீதியின் மேற்காக வயல் ஓரத்தில் உள்ள பிரசித்தி பெற்ற அம்மன் ஆலயமே இதுவாகும். குறிப்பாகக் கூறின் தாளையடிப் பிள்ளையார் ஆலயத்திற்கு நேரெதிரே தென்மேற்காக ¼ மைலுக்கு சற்றுக் குறைவான தூரத்திலுள்ளது. ‘‘கேலம்’’ என்பதன் பொருள் விளையாட்டு, அல்லது மகளிர் விளையாட்டு எனப் பொருள்படும். ஆகவே மகளிர் விளையாடும் இடத்திற்கே இப்பெயர் உண்டாகியது எனலாம். இப்பெயர் மிகவும் பழைய காலத்திலிருந்து வருகிறது. ‘‘இராஜராஜேஸ்வரி’’ என்பது எமக்கு சோழர்கால சமய நிலையை நோக்க வைக்கின்றது. சோழர்களே சிறப்பாக இராஜராஜேஸ்வரன் என சிவனையும் இராஜராஜேஸ்வரி என அம்பாளையும் அழைத்ததையும் பல கல்வெட்டுக்களினூடாக அறியலாம். சோழராட்சி மந்துவிலில் இருந்தததற்கு பல சான்றுகளை நாம் காணமுடிகின்றது. எனவே அக்காலத்தில் இவ்வாலயம் சிறப்புப்பெற்றிருந்ததா? என எண்ணத்தோன்றுகிறது. சோழரது காலத்தில் இவ்வாலயம் சிறப்புப் பெற்றிருந்ததா? என்ற வகையில் இவ்வாலயச் சூழலும் அங்குள்ள பழைய விக்கிரக்களும் ஆய்வுக்குட்படுத்துவதன் மூலம் அறியமுடியும் (கமலநாதன்,2012:184)

4.6.4. புளியந்திடல் கந்தசாமியார் ஆலயம்

கேலம் இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்திற்கு நேரே மேற்காக வயல் வெளிகளால் சூழப்பட்ட மிக உயர்ந்த திடல் பிரதேசத்தில் உள்ள முருகன் ஆலயமே இதுவாகும். புளியம் மரங்கள் அமைந்த திடல் பிரதேசத்தில் அமைந்தமையினால் இப்பெயர் அமைந்தது எனக்கருதலாம். ‘‘புளியந்திடல்’’ என்பது நைனைநாகபூஷணி வரலாற்றில் வரும் தீவுப்பகுதியில் உள்ள ஒரேயொரு முருகன் ஆலயம் என்பது குறிப்படத்தக்கது. மேலும், இவ்வாலயம் பழமையானது என்பதனை இவ்வாலயப்பகுதியில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகள் உணர்த்தி நிற்கின்றன. இதனுடைய ஆரம்ப வரலாறும் தெளிவாக அறியமுடியவில்லை. எனினும் கண்டெடுக்கப்பட்ட பொருட்களும், அயல்பிரதேச வரலாற்று முக்கியத்துவமும் ஓரளவு சிலதகவல்களைத் தருகின்றன (கமலநாதன்,2012:185-186).

4.7. யாழ்ப்பாண அரசு காலத்துச் சின்னங்கள்

4.7.1. சங்கிலியன் கோட்டை

13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை வட இலங்கையில் ஒரு மன்னன் ஆளுகைக்கு உட்பட்ட ஒரு பலமான அரசாக யாழ்ப்பாண அரசு காணப்பட்டது. இவ்வரசின் ஆதிக்கத்தின் கீழ் தென்மராட்சியும் உட்பட்டிருந்தது. தென்மராட்சி என்ற ஊரில் இயற்றாலை என்ற குறிச்சி காணப்படுகின்றது. அக்குறிச்சியில் முன்பொரு

காலத்தில் 20 ஏக்கருக்கு மேற்பட்ட பிரதேசத்தில் அழிவடைந்த மிகப்பெரிய கட்டிடத்தின் சிதைவுகள் காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இற்றைக்கு 80 ஆண்டுகளுக்கு முன்னர் இவ்விடத்தின் வரலாற்றுச் சிறப்பை நேரில் பார்வையிடச் சென்ற சுவாமி ஞானப்பிரகாசர் தான் அவ்விடத்திற்குச் சென்ற போது அங்கிருந்த கட்டடங்களை மக்கள் இடித்து அக்கற்களை வண்டில் வண்டிலாகப் பிற ஊர்களுக்கு எடுத்துச் சென்றதாக தனது யாழ்ப்பாண விமர்சனம் என்ற நூழில் குறிப்பிடுகின்றார். இப்பிரதேச மக்களிடையே இக்கட்டட அழிபாடுகளைச் சங்கிலியன் கோட்டையென அழைக்கும் மரபு நீண்டகாலமாக இருந்து வருகின்றது. இதனால் இக்கோட்டையை யாழ்ப்பாணத்தில் பிற்காலத்தில் ஆட்சிபுரிந்த சங்கிலி மன்னனே கி.பி 14-15 ஆம் நூற்றாண்டளவில் கட்டியிருக்க வேண்டும் என நம்புகின்றனர். இதற்கு இக்கட்டட அழிபாடுகளுக்கு அருகில் உள்ள பழமையான ஆலயம் கோட்டைவாசல் பிள்ளையார் என அழைக்கப்படுவதை மேலும் ஒரு ஆதாரமாகச் சுட்டிக்காட்டுகின்றனர் (புஷ்பரட்ணம்,2013:216).

4.8. ஐரோப்பியர் காலச் சின்னங்கள்

4.8.1. யா/மந்துவில் றோமன் கத்தோலிக்கத் தமிழ் கலவன் பாடசாலை

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் முக்கியமாக ஐரோப்பியர் வருகையால் அவர்களது மதத்தோடு இணைந்த வகையில் கல்வியும் வருகை கண்டது. ஏனைய மத நிறுவனங்களிலும் பார்க்க அதிக கல்விக் கூடங்களை வட பகுதியில் அமைத்து அறிவுப்பயிரை வளர்த்தவை கத்தோலிக்க கிறிஸ்தவ மதங்களே ஆவார்கள். அந்தவகையில் மந்துவில் கிராமத்திலும் ஐரோப்பியரால் நிறுவப்பட்ட பாடசாலை இன்றுவரை இக்கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கு பேரும்பங்காற்றி வருகின்றது.

அதனடிப்படையில் மந்துவில் கிராமத்தில் தோற்றம் பெற்றதே மந்துவில் றோமன் கத்தோலிக்கத் தமிழ் கலவன் பாடசாலை ஆகும். இப்பாடசாலை கத்தோலிக்க மதப்பின்னணியில் புகழ் பெற்ற கிறிஸ்தவ பாதிரியார் சுவாமி ஞானப்பிரகாசம் அவர்களால் எடுக்கப்பட்ட முயற்சி கை கூடியதன் விளைவாக உருவாகியது.

மந்துவில் கிராமத்தைச் சேர்ந்த திரு.கருவலர் என்பவரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் 1926ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் சிறிய ஒரு ஓலைக் கொட்டிலில் 01 – 05 வரையான வகுப்புக்கள் 14 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்தில் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களே அதிபராக விளங்கினார்.

4.8.2. டச்சு வீதி

ஒல்லாந்தர் காலத்திலே வலிகாமத்திலும், வடமராட்சியிலும், தென்மராட்சியிலும் அமைந்து காணப்பட்ட பெருந்தெருக்களுடனான வாணிபப் போக்குவரத்து நடவடிக்கைள் மூலம் அக்காலப் பொருளாதாரம் சிறப்பாக வளர்ச்சி கண்டது.

இன்று இந்த டச்சுவீதிகள் முக்கிய தொல்லியல் பண்பாட்டுச் சின்னமாக விளங்குகின்றன. ஒல்லாந்தர் ஆட்சியில் வடஇலங்கை மற்றும் கரையோரப்பிரதேசங்கள் பல்வேறுதுறைகளிலும்

பல்வேறு விளைவுகளைச் சந்தித்திருந்தன. அவ்விளைவுகள் டச்சு வீதிகளுடன் நேரடியாகத் தொடர்புபட்ட வகையில் விளங்கியிருந்தமையைக் காணலாம் (கிருஸ்ணராசா,2012:33).

இதனடிப்படையில் அமைந்ததே மந்துவில் கிராமத்தில் காணப்படும் டச்சு வீதியாகும். இந்த வீதியானது ஆரம்பத்தில் மண் வீதியாகவே காணப்பட்டது. ஒல்லாந்தர் காலத்தில் சுவாமி ஞானப்பிரகாசரின் முயற்சியினால் பெருந்தெருவாக அமைக்கப்பட்டதே டச்சு வீதியாகும். இந்த டச்சு வீதியானது வடமராட்சி, வலிகாமம், தீவகம் போன்ற பிரதேசங்களுக்கு இலகுவாகச் செல்லக் கூடிய வகையில் அமைந்திருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. இந்த டச்சு வீதியானது 7கிலோமீற்றர் நீளத்தினைக் கொண்டமைந்ததாகக் காணப்படுகின்றது. இவ்வீதியானது தென்மராட்சியின் முக்கிய கிராமங்களை ஊடறுத்துச் செல்கின்றது. அதாவது, சாவகச்சேரியில் தொடங்கி மீசாலையூடாக மந்துவில் நோக்கிச் சென்று இயற்றாலை வரணி வரை செல்கின்றது.

5. முடிவுரை

ஒரு நகர நாகரிகத்திற்கு வித்திட்ட பெருங்கற்கால மக்கள் வாழ்ந்த பிரதேசங்களில் ஒன்றாக மந்துவில் கிராமம் காணப்படுகின்றது. இலங்கையின் நாகரிக வரலாறானது தென் இந்தியாவைப் போன்றே பெருங்கற்காலப் பண்பாட்டு வழிவந்த சமுதாயத்தின் மூலம் இலங்கைத்தீவு முழுவதும் ஒரு நிலையான சமூக கட்டமைப்பு உடைய நாகரிக வரலாறு வளர்ச்சி அடைந்ததாக தொல்லியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அதனடிப்படையில் பெருங்கற்காலத்தை சுட்டி நிற்கின்ற பெருங்கற்காலச் சின்னங்களான கலவோடுகள், ஈமச்சின்னங்கள் போன்றனவும் தமிழ் பிராமி சாசனம் மற்றும் குளம், வயல், நடுகல் வழிபாடு என்பன மந்துவில் கிராமத்தில் காணப்படுகின்றமை இதற்குச் சான்றாகும்.

இவ்வாய்வில் கிடைக்கப்பெற்ற தொல்லியற் சின்னங்களின் அடிப்படையில் மந்துவில் கிராமத்தில் வாழ்ந்த ஆதிகால மக்கள் நிலையான குடியிருப்பு, சமய வழிபாடுகள், சமூக நிலை, கலை என வரலாற்றுப் பண்பாடுகளைப் பிரதிபலிப்பனவாக உள்ளன. மேலும் மந்துவில் கிராமத்தில் மக்கள் வாழ்ந்த காலம், மக்கள் சமூகம், அவர்களது சமய வழிபாடுகள், தொழில்நுட்ப அறிவு, கலை, வாழ்க்கை முறை என்பவற்றை அறிந்து கொள்ள முடிகின்றது. இதிலிருந்து இக்கிராமத்தின் தொன்மையான வரலாற்றினை அறிய முடிகின்றது.

கி.மு 3ஆம் நூற்றாண்டில் இலங்கையில் பௌத்தமதம் பரவ முன்னர் இங்கு வாழ்ந்த மக்களும் பண்பாடும் தென்னிந்தியாவின் தென்பகுதியில் இருந்து ஏற்பட்டன என்பதனை அண்மைக் காலமாக மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் கண்டுபிடிப்புக்கள் உறுதி செய்கின்றன. இவ்வாறு மந்துவில் கிராமத்தின் பூர்வீகம் தொடர்பாகப் பல்வேறு நிகழ்வுகள் சான்று பூர்வமாக உறுதி செய்கின்றதோடு ஆதிகாலம் தொடக்கம் தமிழகப் பண்பாட்டின் செல்வாக்கிற்கு உட்பட்ட கிராமமாக இக்கிராமம் அமைந்துள்ளது.

பின்னிணைப்புகள்



பல வேலைப்பாடு கொண்ட மட்பாண்ட விளிம்புகளுடன் கீச்சுக் கிட்டங்கள்(கழிவிரும்பு).

இயற்றாலையில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது நடுகல்.

உரோம நாணயம்

ஆய்வாளனினால் கண்டு பிடிக்கப்பட்ட 1ஆம் பராக்கிரமபாகுவின் நாணயம்.

பிரம்படிக்குளம்

வேரக்காட்டுத்திட்டி

கோட்டை வாசம் பிள்ளையார் ஆலயம்

கேலம் இராஜேஸ்வரி அம்பாள் ஆலயம்

தமிழ புளியந்திடல கந்தசாமியார ஆலயம்

யா/மந்துவில் றோமன் கத்தோலிக்கத் கலவன் பாடசாலை

டச்சு வீதி

உசாத்துணை

1. ஜம்புலிங்கம் பிள்ளை, 1939, கைலாயமாலை,(தொ,த), வல்வை வரலாற்று ஆவணக்காப்பகம், கனடா.
2. சபாநாதன்.குல, 1953, வைபவமாலை, (தொ,த), இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், சென்னை.
3. கமலநாதன்.சி.கா., 2012, வரணியின் மரபுரிமைகள் பாகம் - 1, புராதன குருநாதர் கோயில், வரணி.
4. கிருஷ்ணராஜா.செ., 2005, இலங்கை வரலாறு பாகம்-2 கி.பி 1505-கி.பி 1796 வரை, பிறை நிலா வெளியீடு.
5. கிருஷ்ணராசா.செ., 2012, இலங்கைப் பண்பாட்டுப் பரிணாமத்தின் அடிப்படைகள் பாகம்-1 (கி.பி 1500 ஆண்டுகள் வரை), AB Creator & Publishers, கொழும்பு.
6. புஷ்பரட்ணம்.ப., 1993, வட இலங்கையில் சிங்கை நகர் (இடம்-காலம்-பெயர்க்காரணம்) மீள்பரசீரனை, மணிவிழாச் சபை வெளியீடு.
7. புஸ்பரட்ணம்.ப., 2001, இலங்கைத் தமிழரின் பண்டைய கால நாணயங்கள், பவானி பதிப்பகம், யாழ்ப்பாணம்.
8. புஷ்பரட்ணம்.ப., 2001, பண்டைய இலங்கையில் தமிழும், தமிழரும், கொழும்பு தமிழ்ச் சங்கம், இலங்கை.
9. புஷ்பரட்ணம்.ப., 2002, தொல்லியல் நோக்கில் ஈழத்தமிழரின் பண்டையகால மதமும் கலையும், குமரன் புத்தக இல்லம்.

ஐரோப்பியர் கால கல்லறைகளும் கல்வெட்டுக்களும் - ஆவணப்படுத்தல் (ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தை மையப்படுத்தியது)

சந்தியோமயர் சதீஸ்குமார்[1], சி.கி.சிவகணேசன்[2]
[1,2]வரலாற்றுத்துறை, கலை கலாசார பீடம் கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[1]ksathees63@gmail.com, [2]shivahaneshank@esn.ac.lk

ஆய்வுச் சுருக்கம்

வட இலங்கையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல துறைமுக பிரதேசங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஊர்காவற்றுறை துறைமுக பிரதேசமும் ஒன்றாகும். இத்துறைமுகத்தோடு வர்த்தகம், பண்பாடு மற்றும் அரசியல் தொடர்புகளை காலத்துக்கு காலம் பல உள்நாட்டு, வெளிநாட்டு அரசுகள் ஏற்படுத்தியிருந்தன. அவ்வகையில், கி.பி.16 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் அதிகாரம் செலுத்திய ஐரோப்பிய ஆட்சியாளர்களும் அத்தகைய தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களின் தொடர்பினால் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் .விளைந்ததே கல்லறைகள் மற்றும் நினைவுச்சின்னங்களாகும். மக்கள் மத்தியில் பெருங்கற்கால பண்பாடு நிலவிய காலம் முதல் பிண அடக்கம் தொடர்பான பல்வேறு நம்பிக்கைகள், அடையாளங்கள் இருந்து வருகின்றன. அவ்வகையில் இறந்தவர்களை அடக்கம் செய்யும் முறை இப்பிராந்திய மக்கள் மத்தியில் முக்கிய பண்பாட்டுக் கூறாக வளர்ச்சி பெற்றிருந்ததனை நடுகற்கள், கட்டிடங்கள் மற்றும் அடையாளச்சின்னங்கள் போன்றன உறுதிப்படுத்துகின்றன. இத்தகைய பண்பாட்டுக்கூறுகளை ஐரோப்பியர் தமது ஆட்சிக்காலத்திலும் தொடர்ந்தனர். பாதுகாத்தனர். அவ்வாறு ஊர்காவற்றறை பிராந்தியத்தில் அமைக்கப்பட்ட சவ அடக்க ஞாபகச்சின்னங்களான, கல்லறைகள், கல்வெட்டுகள், அடையாளச்சின்னங்கள் தொடர்பிலான மரபுரிமைச் சின்னங்கள் பற்றியதாக இவ்வாய்வு தொடுக்கப்படுகின்றது.

திறவுச் சொற்கள்: பெருங்கற்காலப்பண்பாடு, மரபுரிமைச்சின்னங்கள், நடுகற்கள்

1. அறிமுகம்

தென்னாசிய நாடுகளுள் இலங்கைக்கு நீண்டதும் தொடர்ச்சியானதுமான வரலாறு காணப்படுகிறது. அவற்றில் வட புலத்திலும் ஒழுங்கமைக்கப்பட்ட இராசதானிகள் இருந்ததனை இலங்கையின் பிரதான வரலாற்று நூல்களும் ஏனைய இலக்கிய - தொல்பொருள் மூலாதாரங்களும் சான்று பகர்கின்றன. யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தீவகப் பகுதியில் முக்கிய தளங்களுள் ஒன்றாக ஊர்காவற்றுறை விளங்குகிறது. இத்துறைமுக நகரானது ராஜரட்டை ஆட்சிக் காலப்பகுதி முதல் வர்த்தக கேந்திர மத்திய நிலையமாகக் காணப்பட்டதோடு, ஐரோப்பிய காலனித்துவக் காலப் பகுதியிலும் தீவகத்தின் முக்கிய பிராந்தியமாக நிலைத்திருந்தது. இப்பிராந்தியத்தில் ஆதி முதல் நவீன காலம் வரை மனிதப் பண்பாட்டுக் கோலங்களை வெளிக்காட்டும் தொல்லியல் சின்னங்கள் காணப்படுகின்றன. இவ்வகையில் ஊர்காற்றுறை ஆய்வு பிரதேசமும் தொல்லியல் மற்றும் மரபுரிமைச் சின்னங்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் ஆய்வின் சுருக்கம் கருதி, ஐரோப்பியர் கால பிண அடக்க சின்னங்கள் முக்கிய கருப்பொருளாக்கப்பட்டுள்ளன.

2. ஆய்வு முறையியல்

இப்பிராந்தியத்தில் காணப்படும் ஐரோப்பியர் கால கல்லறைகள் மற்றும் ஞாபகச்சின்னங்களை அடையாளப்படுத்தி, ஒப்பியல் ஆய்வு முறையில் ஆராய்தல்.

3. இலக்கிய மீளாய்வு

Penry Lewis , J, C.M.G, 1913, List of inscriptions on Tomb stones and monuments in Ceylon எனும் நூலின் அடிப்படையில் இலங்கையில் காணக்கூடிய மேல் நாட்டவர்களது நினைவுக்கற்கள் சார்ந்த பெயர் விபரங்கள், அமைந்துள்ள இடங்கள், அவர்களது பதவி விபரங்கள் (மி'னரிகள், இராணுவத் தளபதிகள்) அவர்களது ஆண்டு, தகுதிநிலை போன்ற அம்சங்களைக் நூல்

கொண்டுள்ளது. இந்நூல் எமது ஆய்வுக்குத் தேவையான அடிப்படை தகவல்களைக் கொண்டுள்ளது.

Joel Gazis- Sax,1995, 1996, A Brief History of Cemeteries (htt;//WWW, alsirat, com/ Silence /history, html) இவ்வலைத்தளம் ஆய்வுக்குத் தேவையான பல தகவல்களைக் கொண்டுள்ளது. அதாவது மேலைத்தேய சேமக்காலைகளின் வளர்ச்சியும் அவற்றின் சிந்தனைகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. மற்றும் கிரேக்க, உரோம சிந்தனைகளும், தற்கால நினைவுக்கல் சிந்தனைகளையும் கொண்டுள்ளன.

தியாகு விவிலிய களஞ்சியம்,பாகம் - II, 1992, இந்நூல் நினைவுக்கல் தொடர்பான பல விபரங்களைத் தருகிறது. BALDAEUS. P 1672, Ture and Exact Description of the GREAT ISLAND OF CEYLON இந்நூலானது கத்தோலிக்க தேவாலயங்களையும் அவை சார்ந்த கட்டிட வடிவமைப்புக்களையும் ஒல்லாந்து கால புரட்டஸ்தாந்து மத தேவாலயங்களாக (Reformed church) மாற்றியமைப்பதற்குரிய திட்டப் படங்கள், கோவிற்பற்று அடிப்படையில் மக்கள் தொகை, தேவாலய நிர்வாக நடவடிக்கைகள், மிசனரிமார்களது தகவல்கள், சேமக்காலைகள் போன்ற விடயங்களின் ஒரு திரட்டு நூலாக உள்ளதால் ஆய்வுக்குப் பயன்படுகிறது.

http://www.though.com/photo-gallery.of.cemetery-symbolism- விதை ஒன்று வளர்கிறது, Newtestament of our Lord and Savior Jesus Christ, Humanities History Culture இந்நூல்களிலிருந்து கிறிஸ்தவ சேமக்காலைகளில் பயன்படுத்தும் குறியீடுகளும் அவற்றிற்கான அர்த்தங்களும் அதன் தத்துவங்களையும் விளக்கங்களையும் அறிய முடிகின்றது இவற்றை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் சேமக்காலைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள குறியீடுகளுக்குரிய அர்த்தங்களைக் கொண்டுள்ளது.

4. ஐரோப்பியர் காலக் கல்லறைகளும் கல்வெட்டுக்களும்

1. நினைவுக் கற்களின் வளர்ச்சி நிலை

நினைவுக் கற்கள் என்பது மயானத்தில் இறந்த ஒருவரை அடக்கம் செய்த பின்பு, அவரை நினைவுபடுத்துவதற்கு, அலங்கார வேலைப்பாடுகள் நிறைந்த பல்வேறு அளவுகளில் வடிவமைக்கப்படும் நினைவுச் சின்னங்களாகும். இத்தகைய நினைவுக் கற்கள் பண்டைய கால வரலாற்றை ஆராய்வதற்கு ஆதாரமாகின்றன. இப்பிரதேசத்தில் இம்மரபுகள் இன்றுவரை பேணப்பட்டு வருகின்றன. ஆரம்ப காலத்தில் நினைவுக் கற்கள் மரபானது மண், கல் குவியல்களாகவும் தனிக் கற்களாகவும் காணப்பட்டன. பின்னைய நாட்களில் இந்நிலை மாறி, அலங்கார வடிவமுடைய கல்லறைகளாகவும் கல்வெட்டுக்களாகவும் வளர்ச்சி பெறத்தொடங்கிற்று.

இலங்கையின் வடக்கு முதல் தெற்கு வரையாக பல இடங்களின் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் அடிப்படையில் மனித இனத்தின் பரிணாமம் பெருங் கற்காலப் பண்பாட்டின்

அடிப்படையில் வளர்ச்சி பெறத்தொடங்கிற்று என்பது குறிப்பிடத்தக்கது. இறப்பின் பின்பும் ஆத்மாக்களை திருப்திபடுத்தும் வகையில் நினைவுச்சின்னங்களை உருவாக்கும் மரபு மக்கள் மத்தியில் இருந்து வந்தது.

விஜயன் வருகையோடு வரலாறு ஆரம்பிப்பதாகக் கூறும் பாளி இலக்கியங்கள், அந்நிகழவுக்கு முன்பே இயக்கர், நாகர் எனும் இனங்கள் இருந்ததாகவும் கூறுகின்றன. அவ்வகையில் வட பகுதியிலும் நாகர் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்ததாக கூறப்படும் பெருங் கற்காலப் பண்பாடு, தீவகப் பகுதியிலும் காணப்பட்டதாகப் பேராசிரியர்களான ரகுபதி, புஸ்பரட்ணம், கிருஸ்ணராசா போன்றோர் குறிப்பிட்டுள்ளனர். குறிப்பாக ஊர்காவற்றுறை - சாட்டி எனும் இடத்தில் பெருங் கற்கால பண்பாட்டுக்குரிய ஈமத்தாழிகளின் மட்பாண்ட ஓடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன (கிருஸ்ணராஜா,2012). இறந்தவர்களின் புதைகுழிகளில் மனித எலும்புக் கூடுகள், மட்பாண்டங்கள் (கறுப்பு, சிவப்புநிற மட்பாண்டம்), மிருக எலும்புக் கூடுகள், மணிகள், பயன்படுத்திய பொருட்கள் என்பவற்றை அடக்கம் செய்தனர் (கிருஷ்ணராஜா,2005).

புராதன கால நினைவு கற்கள், கல்லறைகளின் கட்டிடக் கலையை ஆராய முற்படும் போது கி.மு 4000 நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட எகிப்தியருடைய பிரமிட்.∴ கூர்முகிக் கோபுரங்களே துணைபுரிகின்றன. கிரேக்க நாகரிகம் நிலை பெறுவதற்கு முன்னரும் பின்னரும் மேற்காசியாவில் பல்வேறு வடிவங்களில் ஞாபகார்த்தமாகப் பல நினைவுக்கற்கள் படைக்கப்பட்டன. உரோம நாகரிகக் காலப் பகுதிகளில் பல்வேறு அலங்கார அம்சங்களைக் கொண்ட ஞாபகார்த்த நினைவுக் கற்கள் தோன்றியிருந்தன. இவற்றை உரோமப் பேரரசர்களை அடக்கம் செய்த பிணக்குழிகளில் காணலாம். சீனா, ஜப்பான் போன்ற நாடுகளிலும் காலத்தால் முந்திய, அதிக வேலைப்பாடுகளுடைய, அலங்காரமுடைய நினைவுக்கல் மற்றும் கல்லறைகள் உருவாக்கப்பட்டன. தென்னிந்தியாவில் சோழர் காலத்திலும் தமிழ் வளர்த்த சங்க காலத்திலும் இத்தகைய மரபு காணப்பட்டது (கேசவராஜ், 2008).

கி.பி பதினாறாம் நூற்றாண்டில் ஏற்பட்ட ஐரோப்பியர் வருகையுடன் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்கள், பிரித்தானியர் ஆகியோர் நினைவு சின்னங்களை பாதுகாப்பதிலும் அமைப்பதிலும் கவனம் செலுத்தியிருந்தனர். அவர்கள் வீரமரணங்கள் மற்றும் இயற்கை மரணம் அடைந்த படைத்தளபதிகள் மற்றும் வீரர்களை கோட்டைகளுக்குள் அடக்கம் செய்தனர். அவ்வாறு அடக்கம் செய்த இடங்கிளில் கல்லறைகள், கல்வெட்டுக்களை வடிவமைத்தனர். இத்தகைய நினைவு சின்னங்களில் கலை அம்சங்களை புகுத்தினர். அதில் பெயர், பிறப்பு, இறப்பு நிகழ்ந்த இடம், காலம் மற்றும் விக்கிரகங்கள் சார்ந்த நினைவுக் கற்களையும் விக்ரகங்கள் சாராத நினைவுக் கற்களையும் கட்டிடக்கலை அம்சங்களில் இணைத்தனர்.

2. கல்லறைகளும் கல்வெட்டுக்களும் - ஊர்காவற்றுறை பழைய சேமக்காலைக் கல்லறை

பழைய இறங்குதுறையென நம்பப்படும் துறைமுகத்திற்கும் நவீன துறைமுகத்திற்குமிடைப்பட்ட பகுதியில் ஊர்காவற்றுறைச் சந்தைக்கு வடக்கே, பொலீஸ் நிலையத்திலிருந்து வடமேற்கே 200 மீற்றர் தூரத்தில் கடற்றைக்கு மிக அண்மித்ததாக இக்கல்லறை காணப்படுகின்றது. இக்கல்லறை அலெக்ஸ் பிரான்ஸிஸ் குரூஸ் என்பவருடையது எனக் கூறப்படுகிறது. இப்பகுதி ‘பழைய

சேமக்காலை' என அழைக்கப்படுகிறது. 1827 இல் இறந்த அலெக்ஸ் பிரான்சிஸ் குரூஸ் என்பவருடையது எனப் பேராசிரியர் புஸ்பரட்ணம் கூறுகிறார்

இவர் ஐரோப்பியராக இருப்பினும் அவர் இந்தியாவின் நாகப்பட்டினத்தில் இருந்து வந்திருக்கிறார். இன்று மன்னார் கத்தோலிக்கர்கள் மத்தியில் குரூஸ் என்பது பொதுப்பெயராக பயன்பாட்டிலுள்ளதைக்காணலாம். இக்கல்லறையானது கடந்த காலங்களில் ஏற்பட்ட போர் அல்லது கொள்ளை நோயினால் பாதிக்கப்பட்டு பலியானவர்களை புதைத்த இடமாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. பிற்பட்ட காலத்தில் இப்பகுதிகள் துப்பரவு செய்யப்பட்ட போது தொகுதியாக புதைக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான எலும்புக்கூடுகளைக் கண்டதாக ஊர் மக்கள் கூறுகின்றனர்.

நீள் சதுரக் கூண்டு போல் கட்டப்பட்ட இக்கல்லறை மூன்று அடுக்கில் கற்பீடங்களைக் கொண்டு அதன் மீது மேற்கட்டுமானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நீள்சதுர நிலைக்குத்தான கல்லறையின் நான்கு பக்கங்களின் ஒரு புறத்தில் செவ்வக வடிவ நிலைக்குத்து நிலையில் தனியாக எழுதிய கல்வெட்டு ஒன்று வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலமே கல்லறையின் முகப் பகுதியை கண்டு கொள்ள முடியும். இதற்கு அருகாமையில் தீபம் ஏற்றக்கூடிய வகையிலும், அவை காற்றில் அணையாதபடி பாதுகாக்கும் மாடம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு அருகாமையில் சதுர நன்னீர்க் கிணறு ஒன்றும், நீர்த்தொட்டியும் காணப்படுகின்றன (குலசிங்கம்,2021).

இக்கட்டுமானமானது சுற்றிவர முக்கோண வடிவில் குழிவுகளைக் கொண்டுள்ளது. கல்லறைப் பகுதியில் கல்வெட்டு பொருத்தப்பட்ட பகுதியின் இருபுறமும் இரண்டு சிறு முக்கோணக் குழிவுகள் உள்ளன. இம்முக்கோணப் பகுதியானது முக்கோண வடிவில் கற்களை வெட்டி வெளியேற்றியது போன்ற தோற்றத்தை தருகின்றது. கல்லறைக் கட்டுமானம் நிற்கும் முதலாவது கற்பீடத்திலும் முக்கோண குழிவு உள்ளது. இவை தவிர கல்லறையின் ஏனைய சுற்றுப் பகுதிகளிலும் முக்கோண குழிவுகள் உள்ளன. அத்துடன் கல்வெட்டுப் பொருத்தப்பட்ட முன் பகுதியில் கல்வெட்டின் மேலாக மற்றொரு குழிவு உள்ளது.

இது சதுரமாகத் தென்படுகிறது. இது முக்கோண குழிவுகளை விட சற்றுப் பெருத்த குழிவாக உள்ளது. பௌதீகக் காரணிகளால் இவை உடைந்து பெரிதாகி இருக்கக் கூடிய வாய்ப்புகளும் உள்ளதால், இது சதுரக் குழிவாகியிருக்கலாம். அல்லது கல்லறையின் முகப் பகுதியாதலால் சதுரக்குழி அல்லது சற்றுப் பெரியகுழி நடுவில் போடப்பட்டு இருக்கலாம். சடங்கு சார்ந்து மலர்கள், விளக்குகள், மெழுகுவர்த்திகள் போன்றவற்றால் அஞ்சலி செலுத்துவதற்காக இக்குழிவுகள் இடப்பட்டு இருக்கலாம். இக்கல்லறையானது ஒரு மதிப்புக்குரிய கிறிஸ்தவ குருவினுடையது என்பதற்கான சாத்தியப்பாடுகளைக் கொண்டுள்ளது என்கிறார் பேராசிரியர் புஸ்பரட்டினம்.

கரம்பன் கல்லறைகள் : இக்கல்லறைகள் ஊர்காவற்றுறையில் கரம்பன் கிழக்குப் பகுதியில் காணப்படும் சேமக்காலையில் அமைந்துள்ளன. இங்கு அதிகமாக பிரித்தானிய காலத்தினைச் சேர்ந்த கல்லறைகளும் கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. பெரும்பாலான கல்லறைகளில் நினைவுக் கற்றூண்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளன. காலத்தால் முந்திய கட்டிட மரபினை கொண்டு, கல்லறைகள் முருகைக்கல், செங்கற்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளன.

இங்கு காணப்படும் காலத்தால் முந்திய அடையாளம் காணப்பட்டுள்ள கல்லறை சிதைவடைந்து காணப்படுவதோடு, அடக்கம் செய்யப்பட்ட மேற்பகுதியில் சதுர மேடையும் அதன் மேற்பகுதியில் சிறிய சதுர மேடையும் அதன் மேல் சிலுவைக் குறியீடும் காணப்படுகிறது. சிலுவையில் கொடியலங்காரம் வரையப்பட்டுள்ளதோடு மூலமாக சீமேந்தினை பயன்படுத்தியுள்ளனர்.

ஞானப்பிரகாசம் எனும் கற்குறிப்புகளைத் தாங்கிய கல்லறை அழிந்து காணப்படுகின்றது. ஆனால் மேற்பகுதியில் தூண்களில் தாங்கப்பட்ட தளத்தின் மீது அலங்காரத் தூண்கள் கொண்ட அமைப்புக் காணப்படுகிறது. இதன் மேற்பகுதி உடைந்து காணப்படுவதால் சிறிய கட்டிட அலங்காரங்கள் கட்டப்பட்டு இருக்கலாம் என ஊகிக்க முடிகிறது. மாபிள் கல்லில் கற்குறிப்பு காணப்படுகிறது. அருட்பிரகாசம் கல்லறையாகக் கொள்ளப்படும் இக்கல்லறை சிறிது அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றது. ஒன்றன் மீது ஒன்று வைக்கப்பட்ட கல் மேடையின் மீது கல்வெட்டுத் தாங்கிய உயரமான கல் காணப்படுவதோடு அதன்மீது சிறிதளவான சிலுவைக் குறியீடும் அதனைச் சுற்றி வளையமும் காணப்படுகின்றது.

சூசைப்பிள்ளை என்பவரின் கல்லறை முற்றாக அழிந்துள்ள நிலையில் சிறிய கட்டிடப் பகுதி எஞ்சியுள்ளது. ஒன்றின் மீது ஒன்று அமைக்கப்பட்ட கல் மேடையில் மூன்றாவது கல் மேடையில் தனி மாபில் கல்லில் கல்வெட்டுக் குறிப்பு காணப்படுவதோடு அதன் மேல் காணப்படும் பீட அமைப்பின் தூணில், சிலுவைக் குறியீடு ஒன்று காணப்படுகிறது. திமிங்குப்பிள்ளை எனப் பெயர் குறிப்பிடப்படும் இன்னொரு கல்லறை சிறிது அழிவடைந்து காணப்படுகிறது. தலைப்பக்க மேற்பகுதியில் பெரிதான சதுர மேடை வடிவில் கல் காணப்படுகிறது. இதன் முகப்பகுதியில் தனிக் கல்லால் இணைக்கப்பட்ட கற்குறிப்புக் காணப்படுகிறது. மேற்புறத்தில் நான்கு பக்கமும் அலங்காரங்கல் காணப்படுவதோடு அதன் மேல் சிலுவைக் குறியீடுகள் காணப்படுகிறன்றன.

இச்சேமக்காலையில் அருட்சகோதரி கரோலா என்பவருடைய கல்லறை காணப்படுகின்றது. இவர் இந்தியாவின் குயிலோன் மாநிலத்தில் இருந்து திருச்சிலுவை கன்னியர் சமூகத்தில் ஒருவராக யாழ்ப்பாணத்திலும் பின்னர் ஊர்காவற்றுறையிலும் பணியாற்றுவதற்கு வந்தவர் ஆவார். கிறிஸ்தவ மதத்திற்காக தன்னை அர்ப்பணித்து ஊர்காவற்றுறையில் மரித்த இவரை இங்கு அடக்கம் செய்தனர் (அலைமொழி-2:2015). இவரது கல்லறையின் மேலாக பெரிய சிலுவை அடையாளம் நீளமாக கிடத்தி வைக்கப்பட்டது போல் வெட்டப்பட்டுள்ளதோடு, தலைப் பக்கமாக சிறிய கல் மேடையில் கல்வெட்டு இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் சேமக்காலையில் ஒரு ஆண்டில் மரித்த இருவரின் மற்றொரு கல்லறை காணப்படுகின்றது. ஒருவர் வஸ்தியாம் எனவும் மற்றவர் சவரிமுத்து எனவும் குறிபபிடப்பட்டுள்ளது. கல்லறை அமைப்பில் ஒற்றுமைகள் காணப்படுகின்ற போதிலும் ஒருகுறிப்பு ஆங்கிலத்திலும் மற்றையது தமிழிலும் குறிக்கப்பட்டுள்ளது. சபரிமுத்தினுடைய கல்லறை நிலத்திலிருந்து உயர்ந்த கல்லறை மீது சவப்பேழை போன்று கட்டப்பட்டு, அதன் மீது சிலுவை அடையாளம் காணப்படுகின்றது. மற்றையது இரண்டு கல்லறையும் ஒரே மாதிரி அமைக்கப்பட்டுள்ளன. கல்லறையின் தலைப்பகுதியில் கட்டப்பட்ட உயர்ந்த கட்டிடத்தின் மேலாக சிலுவை அடையாளம் இரண்டு கல்லறைகளிலும் காணப்படுகிறது.

இங்கு காணப்படும் மற்றொரு கல்லறை திமிங்குப்பிள்ளை என்பவருடையது எனக்கருதப்படுகின்றது. இக்கல்லறையின் பெரும்பாலான பகுதிகள் அழிந்து முருகைக் கற்கள் வெளியே தெரிகிறன்றன. கல்லறையின் மேற்பகுதியில் சிலுவை அடையாளம் அமைக்கப்பட்டுள்ளது. மற்றையது கல்லறையின் தலைப்பக்கத்திற்கு அருகில் சற்று அகலமான கட்டடம் எழுப்பப்பட்டுள்ளது. இக்கட்டடத்துடன் சீமேந்துக்கற்களைக்கொண்டு அமைக்கப்பட்டிருக்கின்றது. கட்டிடத்தில் மேற்பகுதியில் அலங்கார குறியீடுகள் சிவைந்து காணப்படுகின்றன.

மற்றொரு கல்லறை சந்தியாப்பிள்ளை எனபவருடையது என அடையாளம் காணப்ப்டடுள்ளது. இக்கல்லறையானது இங்கு காணப்படும் கட்டிட, அலங்கார அமைப்பிலேயே மிகவும் அழகான, வேறுபட்ட அமைப்பை உடையதாக காணப்படுகிறது. இதே போன்ற கல்லறை அமைப்பு ஊருண்டி என்ற இடத்திலுள்ள சேமக்காலையில் காணப்படுகிறது. கல்லறைப் பகுதி முழுமையாக அழிவுற்று காணப்படுகின்றது. இரண்டடுக்கு மேடையின் மேலே நீளமான தளம் அமைக்கப்பட்டு தளத்தில் கீழ்ப்பகுதி அலங்கார வளைந்த தூண் அமைப்புக்கள், திராட்சைக் கொடிகள் இன்னும் சில அலங்காரங்கள் காணப்படுகின்றன. ஆனால் அவை அழிந்துள்ளன.

அந்தோனிப்பிள்ளை என்பரது கல்லறை எனக்கருதப்படும் இக்கல்லறை அமைப்பானது மிகவும் அழகான தூண் அமைப்பு, வில்வளைவு, கொடியலங்காரம், தேவதூதர், தேவாலய முகப்பு போன்றவற்றைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. கல்லறைப் பகுதி அழிவடைந்துள்ளதோடு அக்கட்டிடப் பகுதி மட்டும் எஞ்சியுள்ளது. நடுவில் இரண்டடுக்கு கல் மேடையும், இரு பக்கமும் தூண்களால் தாங்கப்பட்ட தளத்தின் மீது வேலைப்பாடுகளும் இடம்பெற்றுள்ளன. மத்தியில் பெரிய வளைவும் இரு புறமும் சிறிய வளைவும் கொண்டு மேலே செல்லும் நான்கு தூண்களின் இறுதியில் தேவதூதர் சிலைகளும் காணப்படுவதோடு, தேவதூதர்கள் மத்தியில் தேவாலயக் கூண்டும் அதன் மேற்பகுதியில் சிலுவை அடையாளமும் இருந்ததற்கான அடையாளம் காணப்படுகிறது.

ஏக ஆண்டில் இறந்த வீரசிங்கம், பெஞ்சமின் என்னும் இருவரின் கல்லறைகள் காணப்படுகின்றது. ஒரே ஆண்டில் இறப்பு கல்லறை காணப்பட்டாலும் கட்டிட அமைப்பில் வேறுபாடு காணப்படுகிறது. இதனால் சமூகத்தில் பெஞ்சமின் உயர்ந்தவராகவும் வீரசிங்கம் சாதாரண ஒருவராகவும் வாழ்ந்துள்ளார்கள் எனக் கூறலாம். பெஞ்சமின் கல்லறைக்கு அருகில் சிறிய அகலத்தில் உயரமாக எழுப்பப்பட்ட தூண்னமைப்பு கூராக்கப்பட்டுள்ளதோடு, மத்திய பகுதியில் சிலுவை அடையாளம், கொடி அலங்காரம் என்பன காணப்படுகிறது. வீரசிங்கம் கல்லறைக்கு அருகில் கல்மேடையின் மீது வைக்கப்பட்ட சிலுவை அடையாளம் காணப்படுகிறது. இச்சிலுவை அடையாளம் தற்காலத்தில் புனரமைப்பு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் ஒரே ஆண்டில் இறந்த சபரிமுத்து, சூசைப்பிள்ளை ஆகியோரின் கல்லறைகள் காணப்படுகின்றன. இவ்விரண்டு கல்லறைகளின் நினைவுத் தூண்கள் அமைப்பில் ஒற்றுமை காணப்பட்டாலும் கல்லறையின் சமாதி அமைப்பில் வேறுபாடு காணப்படுகின்றது. சபரிமுத்தினுடைய கல்லறை முழுவதும் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டுள்ளது. ஒன்றின் மீது ஒன்று வைக்கப்பட்ட மூன்றடுக்கு கல்மேடையின் மீது சிலுவைக் குறியீடு காணப்படுகிறது.

ஆனால் தற்போது சிலுவை அடையாளம் இல்லை. சூசைப்பிள்ளை கல்லறை சவப்பேழை போன்று அமைக்கப்பட்டு அதன் மேல் சிலுவை பொறிக்கப்பட்டுள்ளது. ஒன்றன் மீது ஒன்று வைக்கப்பட்ட மூன்றடுக்கு கல்மேடை மீது சிலுவை அடையாளம் காணப்படுகிறது. இரு கல்லறைக்கும் இடையில் பெரிதான வேறுபாடுகள் இல்லை.

3. கல்வெட்டுக்கள்

பழைய சேமக்காலைக் கல்வெட்டு : இக்கல்வெட்டு ஊர்காவற்றுறையில் காணப்படுகின்றது. இத்தமிழ்க் கல்வெட்டினை இக்கிராமவாசியான பே.அல்பிரட் என்பவர் பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்களுக்கு அடையாளம் காட்டினார். இக்கல்வெட்டானது இறந்தவர் ஆரியர் என பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அவரது கிறிஸ்தவ விசுவாசம், சமயகுரு நிலை, ஒரு வெளிநாட்டுக் கிறிஸ்தவர் என்பதைச் சுட்டிக்காட்டக் குறிப்பிடப்பட்டு இருக்கலாம் என சொல்லப்படுகிறது. இக்கல்வெட்டில், தமிழில் ஓலைச்சுவடிகள் எழுதும் போது தவிர்க்கப்படும் முற்றுப்புள்ளி போன்ற குறியீடுகள் தவிர்க்கப்பட்டுளளமை குறிப்பிடத்தக்கது.

கரம்பன் கல்வெட்டுக்கள் : ஞானப்பிரகாசம் தொடர்பான குறிப்பினைத் தாங்கிய இக்கல்வெட்டு மாபிள் கல்லில் தனியாக எழுதப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது. இதில் அழியா அன்பின் ஞாபகம் எனும் எழுத்துக்களோடு ஆண், பெண் பெயர்கள் மற்றும் ஜனனம், மரணம் என்பவற்றின் ஆண்டுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஜ.ஞானப்பிரகாசம் அவருடைய மனைவி சூசனும் சி.வெகின் அவருடைய மனைவி சந்தனமும் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, ஜனனம் அடைந்த திகதி 20.10.20 மரணமடைந்த திகதி 24.5.40 எனும் ஒரு பிறப்புக்குரிய ஆண்டு மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன.

அருட்பிரகாசம் கற்குறிப்புகள் இது தனியான மாபிள் கல்லில் எழுதி பொருத்தப்பட்டுள்ளது. இதில் அழியா அன்பின் ஞாபகம் எனும் வசனத்துடன் இறந்தவரின் பெயர், பிறந்த, இறந்த திகதிகள் காணப்படுகின்றன. இது மாமனாருக்கு மருமகன் அமைத்ததாக கல்லறை குறிப்பு வெளிப்படுத்துகிறது. தி.அருட்பிரகாசம் ஜயா 15.11.1893 இல் பிறந்ததாகவும் 21.12.1925 இறந்ததாகவும் இக்கல்வெட்டு கூறுகிறது. சூசைப்பிள்ளை தொடர்பாக கூறும் கற்பொறிப்புக் கல்வெட்டான இது தனி மாபிள் கல்லில் பொறிக்கப்பட்ட பின்பாக கல்லறை தூணுடன் இணைக்கப்பட்டுள்ளது. இப்பொறிப்பில் சூசைப்பிள்ளையினுடைய பெயர், பிறப்பு (7.7.1891) இறப்பு (8.7.1927) என்பன ஆங்கிலத்தில் குறிக்கப்பட்டுள்ளதோடு அதில் சிறிய சிலுவையும் வெட்டப்பட்டுள்ளது.

திமிங்குப்பிள்ளை கற்குறிப்பாக இனங் காணப்படும் இக்கல்வெட்டில் தமிழ், ஆங்கில மொழி இணைந்ததாக தனி மாபிள் கல்லில் பொறித்து கல்லறையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இவரது பெயர் தமிழ், ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு இறந்த திகதி ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனைவிட பிறப்பு குறிப்பிடப்படாமல் இறந்த ஆண்டு (6.6.1928) மற்றும் அவருடைய வயது 94 என ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அருட்சகோதரி கரோலாவினுடைய கற்பொறிப்பானது தனியான கல்லில் எழுதப்பட்டு, கல்லறைத் தூணுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதில் இவருடைய பிறப்பு, இறப்பு விடயங்களோடு திருச்சிலுவை கன்னியர்களில் ஒருவர் என்பதையும் காட்டுகிறது. இவை அனைத்தும் ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

மேலும் சவரிமுத்து கல்லறையிலும் வஸ்தியாம் கல்லறையிலும் கற்குறிப்புக்கள் காணப்படுகின்றன. இரண்டு கல்வெட்டுகளும் ஒரேயாண்டில் பொறிக்கப்பட்டுள்ளன. தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. சவரிமுத்துவை இனங்காட்டும் கற்குறிப்பில் மேற்புறம் தூண் அமைப்பிலும் கீழ்புறம் தனி மாபிள் கல்லிலும் பொறிக்கப்பட்டுள்ளதோடு பெயர், பிறப்பு இறப்பு, இடம் என்பன குறிக்கப்பட்டுள்ளது. வஸ்தியாமுடைய கல்வெட்டில் மேல், கீழ்ப் புறங்களில் தூண் அமைப்பிலேயே கற்குறிப்பு காணப்படுவதோடு பெயர், பிறப்பு, இறப்பு விடயங்கள் என்பன காணப்படுகிறது.

முற்றொரு கல்வெட்டில்,திமிங்குப்பிள்ளை தொடர்பான கல்வெட்டு கல்லறையின் முகப்பகுதியில் சிறிதாக வெட்டப்பட்ட சிலுவை அடையாளத்தின் கீழ் பெயர், பிறப்பு, இறப்பு விடயங்கள் பொறிக்கப்பட்டுள்ளதோடு விறிசிற் எனும் பெண்ணுடைய பெயரும் குறிக்கப்பட்டுள்ளது. மேலும் R.I.P எனும் ஆங்கில எழுத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளதோடு சீமேந்திணை மூலப்பொருளாக பயன்படுத்தியுள்ளனர். இங்கு காணப்படும் மற்றொரு கற்குறிப்பு சந்தியாப்பிள்ளை எனபவரைப்பற்றியதாகும். இக்கல்வெட்டில் அழியா அன்பின் ஞாபகம் எனும் வசனத்தை தாங்கியவாறு பெயர், பிறப்பு, இறப்பு விடயங்களை வெளிப்படுத்துவதோடு, சிறிய சிலுவை அடையாளமும் லூர்த்துமரியை எனும் பெண்ணினுடைய பெயரும் காணப்படுகிறது. தனி மாபிள் கல்லில் பொறிக்கப்பட்டு கல்லறைத்தூண் அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

அந்தோனியாப்பிள்ளை, வீரசிங்கம் மற்றும் பெஞ்சமின் தொடர்பான கல்வெட்டுக்குறிப்புகளும் காணப்படுகின்றன. இக்கல்வெட்டு பொறிப்புகள் சிதைவடைந்துள்ளன. பெஞ்சமின் எனும் பெயர்கள் கற்பொறிப்புகளில் காணப்படுகின்றது. வீரசிங்கத்தினுடைய கல்வெட்டில் அன்பின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டதாக பெயர், பிறப்பு, இறப்பு விடயங்களும் காணப்படுகின்றன. பெஞ்சமீனை காட்டும் கல்வெட்டில் பெயர் மற்றும் இறப்பு விடயங்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளதோடு, இரண்டு கல்வெட்டுக்களும் சீமேந்தில் வெட்டப்பட்டுள்ளன.

சபரிமுத்து, சூசைப்பிள்ளை பெயர்களைக் குறிப்பிடும் இக்கல்வெட்டுக்களானது ஒன்று சீமேந்திதிலும் மற்றையது மாபிள் கல்லிலும் பதிக்கப்பட்டுள்ளது. சூசைப்பிள்ளையினுடைய கல்வெட்டு கற்பொறிப்பில் பெயர், பிறப்பு, இறப்பு விடயத்தோடு பிலோமினா என்னும் பெண்ணுடைய பெயரும் குறிப்பிடப்படுகிறது. சபரிமுத்தினுடய பொறிப்பில் பெயர், பிறப்பு, இறப்பு விடயத்தோடு இராசையா என்பவர்களது சகோதரர்களால் கட்டிக்கொடுக்கப்பட்டது என்ற விடயமும் குறிப்பிடப்படுகிறது.

கரம்பனில் காணப்படும் சேமக்காலையில் கூடுதலானவை பிரித்தானிய கால கல்லறைகள் கற்பொறிப்புக்கள் காணப்பட்டாலும் அவை இனங்காண முடியாத அளவிற்கு அழிந்துள்ளன. அதே சமயம் தெளிவில்லாத கற்குறிப்புகளையும் கொண்டு காணப்படுகிறது. பென்ட்ரி லியோஸ் என்பவர் தனது நூலில் 1828 ஆம் ஆண்டு இறந்த ஜான் ராபின் எனும் சிறு குழந்தையை இச்சேமக்காலையிலே அடக்கம் செய்தனர் எனக் குறிப்பிட்டு இருந்தார். இருப்பினும் அக்கல்லறையைக் கண்டு கொள்ள முடியவில்லை.

கல்லறைகள், கல்வெட்டுக்களின் தற்கால நிலை

இலங்கை வரலாற்றில் அரசியல், பொருளாதாரம், சமூகம் என பல்துறைகளிலும் ஐரோப்பியர் ஆட்சிக்காலம் தாக்கம் செலுத்தியிருந்தது. குறிப்பாக இத்துறைகளில் ஆங்கிலேயர் ஆட்சிக்கால செல்வாக்கானது மிகையானது. சுதேச பிண அடக்க முறைகளை கைவிட்ட அவர்கள் கல்லறைகள், கல்வெட்டுக்கள், மதச்சின்னங்களை கொண்ட மேற்கத்தய முறைகளைப் புகுத்தியிருந்தனர். இம்மரபுரிமைச்சின்னங்களின் ஊடாக சமகால வரலாறு, பண்பாட்டு தொடர்பிலான அமசங்களையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

ஊர்காவற்றுறை பிராந்தியத்தில் முக்கியத்துவம் வாய்ந்த தொல்லியல்ச் சின்னங்கள் காணப்படுகின்றன. ஆனால் அவற்றினை பாதுகாத்து எதிர்காலச்சந்ததிக் கொடுக்க கூடிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை. பெறுமதி வாய்ந்த இம்மூலங்கள் அழிவடைந்த கொண்டிருக்கின்றன. பாதுகாக்க வேண்டியது அவசியமாகின்றது.

ஐரோப்பியர்களின் கலை, கட்டிடக்கலை மற்றும் பண்பாட்டம்சங்களை வெளிக்கொணரும; முக்கியத்துவம் வாய்ந்த ஆதாரங்களாக இவை காணப்படுகின்றன. இதன் மூலம் சுற்றுலாத்துறையை ஊக்குவித்து வருமானத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.

முடிவுரை

தென்னாசிய நாடுகளில் தொடர்ச்சியானதும் நீண்டதுமான வரலாற்றைக் கொண்ட நாடாக இலங்கை காணப்படுகிறது. இலங்கையின் அமைவிடம், பொருளாதார வளங்கள், துறைமுகங்கள் போன்ற காரணங்களால் இலங்கைக்கு பல்வேறு நாட்டவர்கள் தங்களுடைய வேறுபட்ட நோக்கங்களுக்காக வந்து சென்றுள்ளனர். இலங்கையின் முக்கியத்துவம் அறிந்து கீழைத்தேயம் வந்தவர்களாக போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் குறிப்பிடப்படுகின்றனர். காலனித்துவ ஆதிக்ககாரர்களான இவர்கள் மாறிமாறி தொடராக சுமார் 500 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். அவர்களின் ஆதிக்கம் ஒழிந்திருந்தாலும் அரசியல், பொருளாதார, சமய, கலாசார அம்சங்கள் இன்றுவரை நிலைத்து இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

உசாத்துணை

1. PHILLIPUS BALDAEUS, 1960, **A True and Exact Description of the GREAT ISLAND Of CEYLON**, Saman Press, Maharaina.
2. அர்னால்டு, ஜே..ஆர்., 1994, **பாவலர் சரித்திரத் தீபகம்**, ஏசியன் எடியுகேசனல் சேர்வீஸஸ், மெட்ராஸ்.
3. அருந்தவராஜா, க., 2014, **வரலாற்றுக் கட்டுரைகளின் தொகுப்பு**இ அஞ்சு வெளியீடு, நல்லூர்.
4. அருளானந்தம், ச.இ 2014, **கரம்பொன் தனிநாயகம்**, அருள் வெளியீட்டகம், திருகோணமலை.
5. இராசநாயகம், செ., 2003, **யாழ்ப்பாணச் சரித்திரம்**, ஏசியன் எடியுகேசனல் சேர்வீஸஸ், சென்னை.
6. இராஜேஸ்வரன், எஸ், ரீஇ பீ., 2001, **யாழ்ப்பாணக் குடாநாட்டினதும் அதன் அயலில் அமைந்துள்ள தீவுகளின் தோற்றம்**, உயர்கலைக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
7. ஏகநாயகவல்லி, சி., 2003, **ஈழ வரலாற்றுப் பதிவுகள்**, ஆரோவெப் பப்ளிசேர்ஸ், கனடா.
8. Raymond Rajabalan, S., 2017, **A HISTORICAL RECORD OF KAYTS ISLAND (OORKAVALTHURAI)**, Canada.
9. **அலைமொழி (இதழ் 3)**, 2011 (மு. ப), 2017 (இ. ப), தீவகம் வடக்கு பிரதேச கலாச்சாரப் பேரவை பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

மட்டக்களப்பு சைவத் தமிழ் அறிஞர் வித்துவான் ச.பூபாலபிள்ளை ஓர் ஆய்வு

ருஜானி நிமலேஸ்வரன்
nrujani@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

பிரித்தானியராட்சிக் காலமானது நாட்டில் சமூக மற்றும் பண்பாட்டுத்துறையில் மாற்றங்கள் பலவற்றினைக் கொண்டமைந்தது. இத்தகைய சமூகச் சூழல் சில சுதேச இந்துக்களிடையே தமிழையும், இந்து சமயத்தையும், பண்பாட்டையும் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வினைத் தூண்டியது. மொழி, சமயம், பண்பாடு முதலியவற்றில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியதில் தனிமனித ஆளுமைகளின் பங்களிப்பு மிக முக்கியமானதாக அமைந்துள்ளமையினைக் காணலாம். இதனடிப்படையில் வித்துவான் ச.பூபாலப்பிள்ளை அவர்களின் மறுமலர்ச்சிச் செயற்பாடுகளை வெளிக்கொணர்வதனை முக்கிய நோக்காகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது விபரண ஆய்வு முறை, வரலாற்று ஆய்வு முறை முதலிய ஆய்வு முறையியல்களினூடாக நிகழ்த்தப்பட்டுள்ளது. வித்துவான் ச.பூபாலபிள்ளை அவர்களின் இலக்கியங்கள் இவ்வாய்விற்காக மூலங்களாக பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில் வித்துவான் ச.பூலபிள்ளை இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பின் மிக மூத்த தமிழறிஞரும், எழுத்தாளரும், புலவரும் ஆவார். ஆங்கில மொழியினைக் கற்று அம்மொழி மூலமாகவே பூபாலபிள்ளை தொழில் பார்த்த போதிலும் சைவத்தின் மீதும் தமிழ்மொழி மீதும் இயல்பாகவே பற்றுடையவராக காணப்பட்டார். மட்டக்களப்புப் பிரதேசமும் மக்களும் சிறப்புற தனது ஆளுமைகளை முற்றாக பயன்படுத்திப் பல செயற்பாடுகளில் ஈடுபட்டார். கிறிஸ்தவ சமய மதமாற்றமும் ஆங்கில மொழி மேகமும் நடைப்பெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் பூபாலபிள்ளை அவர்கள் தமது சுதேச சமயத்தினையும் மொழியினையும் பாதுகாப்பதற்கும் வளர்ப்பதற்கும் இலக்கியங்களை கருவியாகப் பயன்படுத்தியமையினைக் காணலாம். ஆழ்ந்த தமிழ்மொழியறிவும், இலக்கிய ஆர்வமும், ஆய்வுக் கண்ணோட்டத்தில் ஒருங்கிணைந்த விளைவே இவரது இலக்கியங்களாகும். இவரது ஆளுமையில் தமிழும் சமயமும் இரண்டு எனினும் ஒன்றினது வளர்ச்சி மற்றையதன் வளர்ச்சிக்கு உறுதுணையாகியது. இவரது தனிமனித ஆளுமையினால் சமய, கல்வி, சமூகச் செயற்பாடுகளின் மூலம் மட்டக்களப்புப் பண்பாட்டில் மறுமலர்ச்சி ஏற்படுத்தப்பட்டமையினைக் காணக்கூடியதாகவுள்ளது. இதனடிப்படையில் வித்துவான் ச.பூபாலபிள்ளை அவர்களின் வாழ்க்கை முறையினையும், அவர் மேற்கொண்ட பணிகளையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

திறவுச் சொற்கள்: மட்டக்களப்பு, பண்பாடு, வித்துவான் ச.பூபாலப்பிள்ளை, இலக்கியங்கள்

அறிமுகம்

மட்டக்களப்பில் ஒல்லாந்தரது ஆட்சியைத் தொடர்ந்து கிழக்கிந்திய கம்பனி என்ற பெயரில் இங்கு வந்த பிரித்தானியர்கள் 1802 இல் தடம் பதித்தனர். பிரித்தானியர் இம்மக்களின் நன்மதிப்பைப் பெற்று தமதாட்சிக்கு வலுவூட்டும் எண்ணத்துடன் பொது வழிபாடுகளுக்கு எதிராக ஒல்லாந்தர் விதித்த சட்டங்களை நீக்கிச் சமய சுயாதீனக் கொள்கைகளைக் கடைபிடித்தனர். அரசாங்க சமயமென்று கிறிஸ்தவம் பிரகடனப்படுத்தப்படவில்லை. எல்லோருக்கும் வழிபாட்டுச் சுதந்திரங்கள் கிடைத்தன. மதமாற்றத்திற்கு சிறந்த கருவி கல்வியே என்பதை உணர்ந்த பிரித்தானியர்கள் பல பிரதேசங்களிலும் ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவி தங்கள் நாகரிகத்தையும் சமயத்தையும் பரப்பினார்கள். கல்வியினூடாக அவர்கள் மேற்கொண்ட மதமாற்றச் செயற்பாடுகள் படித்த மத்தியதர இந்துக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தின. பண்டைய கலாசாரத்தின் பெருமையை அதன் தற்கால தேவையை உணரவைத்தன.

19 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட யாழ்ப்பாண உறவும் மட்டக்களப்பு இந்துக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுவதற்குக் காரணமாகியது. குறிப்பாக 1880 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆறுமுகநாவலரின் மாணவ பரம்பரையினர் மட்டக்களப்புக்கு வருகை தந்தனர். இதனால் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாண மக்கள் மத்தியில் தோன்றிய சைவத் தமிழ் எழுச்சி அந்நூற்றாண்டின் பிற்பகுதியில் மட்டக்களப்பிலும் பரவத் தொடங்கியது. இதன் காரணமாக படித்த, சமய உணர்வுள்ள ஆளுமைகள் இக்காலத்தில் தோற்றம் பெற்றனர். இவர்களுள் வித்துவான் ச.பூபாலபிள்ளை, வித்துவான் அ.சரவணமுத்தன், சைவப்புலவர் கா.அருணாசலதேசிகர், சுவாமி விபுலானந்தர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, பண்டிதர்

செ.பூபாலபிள்ளை, வி.சீ.கந்தையா, சித்தானைக்குட்டி சுவாமிகள் என்போர் முக்கிய இடம்பெறுகின்றனர்.

மட்டக்களப்பு புளியந்தீவு சிங்களவாடியில் வாழ்ந்த திரு சதாசிவம்பிள்ளை, வள்ளிப்பிள்ளை என்பவர்களுக்கு 1856 இல் பிறந்தவரே வித்துவான் ச.பூபாலபிள்ளையாவார் (கந்தையா,2002). பூபாலபிள்ளை அவர்களின் தந்தை யாழ்ப்பாணட் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர். தாயார் மட்டக்களப்பு புளியந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நாவலரின் முதுமைக் காலத்திலும், விபுலானந்தரின் இளமைக்காலத்திலும் வாழ்ந்த இவரை நாவலர் மரபின் தொடர்ச்சியாகவும் விபுலானந்தர் மரபின் ஆரம்பமாகவும் காணலாம் என்கிறார் சி.மௌனகுரு (மௌனகுரு,2003). இவரது எழுத்துக்களில் நாவலரின் சைவ சமயச் சிந்தனைகளின் தாக்கத்தையும், விபுலானந்தரின் சமயச் சிந்தனைகளையும் காணமுடியும்.

தமிழ்மொழி மூலமான ஆரம்பக் கல்வியைக் கற்ற பூபாலபிள்ளை, ஆங்கில மொழி மூலமான இடைநிலைக் கல்விக்காக புளியந்தீவில் அமைந்துள்ள மெதடிஸ்த பாடசாலையில் சேர்க்கப்பட்டார். ஆங்கிலம், தமிழ், கணிதம் ஆகியவற்றிலே மிகுந்த பாண்டித்தியம் பெற்ற இவர் அரசினர் சேவைப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்து எழுதுவினைஞர் பதவியைப் பெற்றார். முப்பது வருடங்கள் அரச பதவியில் சேவையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவரது தொழில் திறமையும், கடமையுணர்ச்சியும் அனைவராலும் பாராட்டப்பெற்றது.

தருக்கம், நிகண்டு முதலான கருவி நூல்களையும், நன்னூல், தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களையும், சங்க இலக்கியங்களையும், புராண இதிகாசங்களையும், சித்தாந்த சாத்திரங்களையும் முறையே கற்றார். இலக்கண இலக்கியத் துறையில் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அதன்விளைவாக பல கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். இவரது திறமையைப் பாராட்டி பொதுமக்கள் பல சங்கங்கள் அமைத்து, விழா எடுத்து வித்துவான் என்ற கலைப்பட்டத்தினை சூட்டினர்.

இவர் வாழ்ந்த காலச்சூழல் தொடர்பாக புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். ‘‘அது மட்டக்களப்பில் தமிழறிஞர் என்போர் மருந்துக்குங் கிடையாத காலம். கிராமங்களில் அங்கங்கே பாரதம் மாத்திரம் படிக்கும் வழக்கம் இருந்தது. வில்லிப்புத்தூரார் பாரதம் முழுவதையும் வாய்ப்பாடமாகச் சொல்லவல்ல பலர் கிராமங்களில் காணப்பட்டனர். இலக்கண அறிவுமில்லை. பிறவூர்த் தொடர்புமில்லை. இதனால் இவர்களைப் புலவர் வரிசையிற் சேர்ப்பாருமில்லை. நாட்டின் இருள் சூழ்ந்த இந்நிலைமையை நமது இளைஞர் பூபாலபிள்ளை உணர்ச்சிக் கண்கொண்டு நோக்குகின்றார். தமிழை முறையாகக் கற்றுத் தமது தாயகத்தின் தமிழ்மொழி பரப்பவேண்டுமென்று எண்ணினார். தமது உத்தியோகக் கடமைகளை நேர்த்தியாகப் புரிந்து கொண்டு ஓய்வு நேரம் முழுவதையும் தமிழ் படிப்பதிற் கழிக்கலானார்.’’(பெரியதம்பிப்பிள்ளை,1999). இக்கூற்றானது கற்றவர்கள் மிகக் குறைவாக உள்ள காலப்பகுதியில் பூபாலப்பிள்ளை அவர்களின் தமிழ் மற்றும் சமயப் பற்றினை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இந்து சமயம் பல்வேறு சவால்களை எதிர்கொண்ட காலப்பகுதியில் அச்சவால்களினின்று இந்து சமயத்தை விடுவித்து, இந்து சமய மறுமலர்ச்சிக்கு வித்துவான் ச.பூபாலபிள்ளை சிறப்பான பங்களிப்பினை நல்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆய்வு நோக்கம்

பிரித்தானியராட்சிக் காலத்தில் தமிழையும் சைவசமயத்தையும் வளர்த்த தனிமனித ஆளுமைகளில் வித்துவான் ச.பூபாலபிள்ளை அவர்களின் செயற்பாடுகளை வெளிக்கொணர்வதை முக்கிய நோக்காகக் கொண்டு நிமழ்த்தப்பட்டுள்ளது.

ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது விபரண ஆய்வு முறை, வரலாற்று ஆய்வு முறை முதலிய ஆய்வு முறையியல்களின் ஊடாக நிகழ்த்தப்பட்டுள்ளது.

இலக்கியங்கள்

பிரித்தானியராட்சியில் சமய சுதந்திரம் வழங்கப்பட்டமையினால் சமய உண்மைகளை மக்களுக்கு எடுத்து விளக்கும் நோக்கில் இலக்கியங்களை எழுதுவதற்கான வாய்ப்பு காணப்பட்டது. பூபாலபிள்ளை அவர்கள் இந்து சமயத்தையும் மொழியையும் பாதுகாப்பதற்கும் வளர்ப்பதற்கும் பல இலக்கியங்களை எழுதியுள்ளார். இவரால் இயற்றப்பட்ட தனிப் பாடல்களும், தோத்திர நூல்களும் பலவாகும். இவரது முதாலவது இலக்கியம் 1882இல் வெளியிடப்பட்ட பெரியதுறைத் திருமுருகர் பதிகம் என்னும் தோத்திர நூலாகும் (செபரத்தினம்,க,2002). இது பெரியதுறை என்னும் தலத்திலுள்ள முருகப் பெருமான் மீது பாடப்பட்டதாகும். ஆலய வழிபாட்டின் முக்கியத்துவத்தை மக்களுக்கு எடுத்துரைத்து அவர்களை சமய வாழ்வில் ஈடுபடுத்தலே இந்நூலின் நோக்கமாக அமைந்தது.

மேலும் மட்டக்களப்பு புளியநகர் ஆனைப்பந்திச் சித்திவிக்னேஸ்வரர் பதிகம் (1905), கணேசர் கலிவெண்பா (1922), சிவதோத்திரம் (1906), யாழ்ப்பாணத்து அரசடி விநாயகர் அகவல் (1920), சிவமாலை (1921), கண்டிநகர் கதிரேசர் பதிகம், மட்டுநகர் கொத்துக்குளத்து மகாமாரியம்மன் அந்தாதி (1922), நல்லிசை நாற்பது (1919), கண்டிநகர் செல்வ விநாயகர் பதிகம் போன்ற இலக்கியங்களை படைத்துள்ளார்.

இப்பிரபந்தங்களனைத்தும் 1882 தொடக்கம் 1921 இற்கு இடைப்பட்ட காலத்தில் இயற்றப்பட்டவையாகும். மேற்குறிப்பிட்ட பத்துப் பிரபந்தங்களையும் இணைத்துத் தோத்திரக்கோவை முதற்பாகம் என்ற பெயரில் திருமயிலாப்பூர் சே.வே.ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள் 1923இல் சென்னையில் அச்சிட்டு வெளியிட்டார்.இந்நிகழ்வானது வித்துவான் ச. பூபாலபிள்ளை அவர்களின் ஆளுமை தமிழகத்தாராலும் போற்றப்பட்டமைக்குச் சான்றாகின்றது. வித்துவான் ச.பூபாலபிள்ளையின் இலக்கியங்கள் தொடர்பாக சே.வே.ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள் மேல்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“வித்துவான் ச. பூபாலபிள்ளை அவர்கள் காலத்திற்குகாலம் இயற்றிய பிரபந்தங்கள் பலவாகும். அவற்றுள் இருபது பிரபந்தங்கள் தெய்வதோத்திரங்களாகும். அவை அந்தாதிகள், கலப்பகம், பிள்ளைக்கவி, இணைமணி, மும்மணி, நான்மணிமாலைகளுமாகும்”(ஜம்புலிங்கம்பிள்ளை,1923)

மேற்குறித்த பிரபந்தங்களோடு இவர் இயற்றிய சமயப் பெருநூல்களான சீமந்தினி புராணம், விநாயக மான்மியம் முதலியனவும் குறிப்பிடத்தக்கவையாகும்.. இதில் 800 விருத்தப் பாக்களைக் கொண்ட சீமந்தினி புராணம் சோமவார விரத மகிமையை மக்களுக்கு எடுத்துக் கூறுகின்றது. இந்நூல் வல்லவை இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச.வைத்திலிங்க பிள்ளையவர்களால் ஆராயப்பட்டு சென்னை ஸ்ரீ பத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற் பதிப்பித்து வெளியிடப்பட்டது.

அகவற் பாவினால் அமைந்த விநாயகர் மான்மியம் புராணக் கதையம்சங்களையும், விநாயகரது திருஅவதாரங்களையும் எடுத்துரைக்கின்றது. விநாயகரின் கதையினைக் கூறும் இம்மான்மியம் உபசனா காண்டம், இலீலா காண்டம் என இரண்டு காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. விநாயக வழிபாட்டின் முக்கியத்துவம் இந்நூலின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. வித்துவான் ஸ்ரீ கலியாணசுந்தர முதலியார், சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர் போன்றோர் இந்நூலுக்குச் சிறப்புப் பாயிரம் அளித்துச் சிறப்பித்துள்ளனர். பேராசிரியர் சி.மௌனகுரு “முருக வழிபாடும் அம்மன் வழிபாடும் நிறைந்த ஒரு பிரதேசத்தில் விநாயக வழிபாட்டை பரவலாக்கும் முயற்சி”(மௌனகுரு,2003) என இந்நூலின் தோற்றத்திற்கான காரணத்தைக் குறிப்பிட்டிருப்பது இங்கே சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

மேலும் இலக்கியம், இலக்கணம் சம்மந்தமான பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை மதுரை தமிழ்ச் சங்கத்து செந்தமிழ் பத்திரிக்கையில் வெளியிட்டுள்ளார். இதனால் விளைவால் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டித பரீட்சைக் குழுவில் நிரந்தர அங்கத்தவராக விளங்கினார். நோயில்லா வாழ்வு, குவனி, பரீஸை, இலக்கண விளக்க மங்கல வாழ்த்து, அறஞ்செய விரும்பு, முப்பொருளாராய்ச்சி போன்ற தலைப்புக்களில் இவரது கட்டுரைகள் அமைந்திருந்தன. சமய முன்னேற்றம் கருதி வெளியிடப்பட்ட இக்கட்டுரைகள் சமய தத்துவக் கருத்துக்களுடன் சீர்திருத்தக் கருத்துக்களையும் கொண்டமைந்தன.

சைவசித்தாந்தம் குறிப்பிடும் பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மையினை விளக்கி முப்பொருளாராய்ச்சி என்ற கட்டுரையினை எழுதியுள்ளார். சைவசித்தாந்த கருத்துக்களில் தெளிவில்லாத சிலர் பிரசங்கம் எனும் பெயரில் மாறுபாடாக கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பினர். இதையறிந்த வித்துவான் பூபாலபிள்ளை மக்கள் மனம் தெளிவடையுமாறு முப்பொருளையும் அதன் இலட்சணங்களையும் கூறி, அவற்றைப் படித்துத் தெளியும் வழிகளையும் தர்க்கரீதியாக எழுதியுள்ளார்.

இக்கட்டுரையானது காண்டல் கருதல், உரையாகிய அளவை பிராமாணங்களை கூறிநிற்கின்றது. சைவசித்தாந்தத்தின் உயிர்நிலையாக விளங்கும் சற்காரியவாதத்தினை இக்கட்டுரையில் தெளிவுபடுத்தியுள்ளார். மேலும் இக்கட்டுரையில் வேதம், ஆகமம், உபநிடதம், தேவார திருவாசகம், பதினான்கு மெய்கண்ட சாத்திரங்கள் தொடர்பாகவும் விளக்கியுள்ளமையினைக் காணலாம். மேலும் பதியின் எண்குணங்கள், ஐந்தொழில்கள், பசுவின் நித்தியத்தன்மை, ஆன்மாவின் இயல்புகள், ஆன்மாக்களின் வகைகள், மூவகை மலங்கள், அவற்றின் இயல்புகள்,

இருவினைஒப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் போன்றவற்றை மிகச் சிறப்பாக விளக்கியுள்ளமையினைக் காணலாம்.

முப்பொருளாராய்ச்சி எனும் கட்டுரை பின்னர் நூல் வடிவமாக்கப்பட்டதாக அறியப்படுகிறது. தமிழ் வராலாறு நூன்முகத்தில் ‘‘முப்பொருளியல் தேறக் கற்கு முறைமையை முப்பொருளாராய்ச்சி என்னும் நூலில் விரித்திருக்கின்றாம். ஆண்டு கண்டு தெளிக’’(வாமன்,2012) என இவர் குறிப்பிடுவதிலிருந்து இது தெரிய வருகின்றது. சைவசித்தாந்த தத்துவத்தில் பூபாலபிள்ளை அவ்களின் புலமைக்கு இது தக்க சான்றாக அமைகின்றது.

இவரது முப்பொருளாராய்ச்சிக் கட்டுரையில் கல்வியின் சிறப்பினை மிக ஆழமாக எடுத்தியம்பியுள்ளார். அதாவது ‘இந்நிலவுலகின் கண்ணே செறிந்துள்ள உயிர் வருக்கங்களுள் ஐம்புலவுணர்வோடு நன்மை தீமைகளைப் பகுத்துணரவல்ல மனவுணச்சியுமுடையராய் முதன்மைபெறு மக்கள் நன்குறுதற்கு வேண்டப்படுஞ் சவிகற்பஞானத்தைப் பயக்கும் வியஞ்சகஞானகாணமாய் விளங்குவது கல்வியாம்’ என்கிறார். மேலும் இக்கட்டுரையில் நல்லாசிரியர், நல்மாணாக்கர் என்போருக்கான இயல்புகளையும் வரையறுத்துக் கூறியுள்ளார். கல்வியின் நோக்கம் பொருள் உத்தியோகம் என அமைதல் கூடாது. மாறாக கல்வியினால் தமிழ், சமய இலக்கியங்களைக் கற்று, அதனடிப்படையில் சைவானுட்டபனங்களை பயிலுவதோடு, அவற்றை கடைபிடித்து ஒழுக வேண்டுமென வலியுறுத்துகின்றார். இவருடைய கல்விக் கோட்பாடு சமய நோக்கில் காணப்பட்டமைக்கு இது தக்க சான்றாகும்.

இவர் தனது முப்பொருளாராய்ச்சிக்கு கட்டுரையில் அன்றைய காலச்சூழல் தொடர்பாகவும், அக்கால கல்வி நிலை தொடர்பாகவும் விளக்கியுள்ளளார். சைவசமயத்தினைச் சார்ந்த மக்கள் தங்கள் பிள்ளைகளை அரச உத்தியோகத்திற்கு ஆசையுற்று, ஆங்கிலம் கற்க சைவப்பாடசாலைகளை தவிர்த்து கிறிஸ்தவபள்ளிகளுக்கு அனுப்பி விடுகின்றார்கள். அவ்வாறு சென்று கல்வி கற்பதனால் தமிழையும் சமய அனுட்டானங்களையும் புறக்கணித்து விடுகின்றார்கள். இவ்வுண்மையைச் சிந்தித்து செயற்படுமாறு கூறுகின்றார்.

இவரது அறஞ் செய விரும்பு எனும் கட்டுரையானது, அறம் என்பதற்கான விளக்கத்தினை மிகச் செம்மையாக தெளிவுபடுத்துகின்றார். அறமென்பது ஒருவருக்கு தருமம் செய்வதை மட்டும் குறிப்பதல்ல. அவ்வாறு குறிப்பது பலபயிர் தோட்டத்தை வாழைத்தோட்டம் என குறிப்பதுக்கு ஒப்பாகும் என்கிறார். சமய கருத்துக்களை மிக எளிமையான விளக்கங்களினூடாக மக்கள் மனதினை சென்றடையச் செய்துள்ளமைக்கு இது சிறந்த எடுத்துக்காட்டாகும். அறம் இரு வகைப்படும் எனவும், அறத்திற்கு அங்கமாக எட்டுக் குணங்கள் உண்டு எனவும் தெளிவுபடுத்தி ஆசாரத்தால் அறமும் அறத்தினால் அன்பும் பக்தியும் அவற்றால் ஞானமும் ஞானத்தினால் வீடுபேறும் உண்டாகும் எனக் கூறியுள்ளார்.

இந்துப்பண்பாட்டம்சங்களில் ஒன்றாக தலைசிறந்து விளங்கும் கொடையின் சிறப்பினையும் தனது கட்டுரைகளில் அழகுறக் கூறியுள்ளார். வலிது சென்று கொடுக்குங் கொடையே தலைப்பட்டது. அழைத்துக் கொடுப்பது இடைப்பட்டது. கேட்டபின் கொடுப்பது கடைப்பட்டது. காத்தபின் கொடுப்பதாற் பயனே இல்லை என்ற ஆழமான சிந்தனையினை மிக எளிதாக கூறியுள்ளார். மேலும் கொடை கொடுப்பவனின் இலக்கணம், ஏற்பனிலக்கணம், கொடைப்பொருள் ஒழுக்கம்,

கொடைக்குரிய இடம், கொடைக்குரிய காலம் போன்ற பல்வேறு விடயங்களை தனது அறஞ்செய விரும்பு எனும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இவர் தனது கட்டுரைகளில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, வாக்குண்டாம், மூதுரை, நல்வழி, நன்னெறி முதலிய நீதிநூல்களின் சிறப்பினை எடுத்துக் கூறி அவற்றை மாணவர்கள் கற்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளார். அத்துடன் இந்துமக்கள் அனைவரும் தீட்சை பெறவேண்டும் எனவும், பஞ்சாக்கர, அட்டாக்கர மந்திர செபவனுட்டானங்களையும், தேவார திருவாசகங்களையும் முறைப்படி பயில வேண்டும் என்கிறார். இவரது கட்டுரையில் பல இந்து இலக்கியங்களை மக்களுக்கு அறிமுகம் செய்கின்றார். அவையாவன குமரகுருபரமுனிவர், சிவப்பிரகாசமுனிவர், சிவஞானயோகிகள், கச்சியப்பமுனிவர் செய்த பிரபந்தங்கள், கந்தபுராணம், பெரியபுராணம், கோயிற்புராணம், காஞ்சிப்புராணம், திருவிளையாடற்புராணம், பாகவதம், இராமாயணம், பாரதம் எனப் பலவாகும். சமய நெருக்கடி நிறைந்த காலப்பகுதியில் மக்கள் மத்தியில் சமயசார்பான விடயங்களை தனது கட்டுரைகளின் வாயிலாக கொண்டு சேர்த்த பெருமைக்குரியவராவார்.

தமிழ்ப்பணி.

இவரது ஆளுமையினை பறைசாற்றும் மற்றுமொரு நூல் தமிழ் வரலாறு என்பதாகும். 'தமிழ் வரலாறு' தமிழியல் சார்ந்த ஆரம்பகால ஈழத்து ஆய்வு நூல்களிலே முக்கியமானது. வித்துவான் பூபாலபிள்ளை தமிழுக்கு ஆற்றிய தொண்டுகளில் இது பிரதானமானது இந்நூல் தமிழ்மொழி, இலக்கியங்கள், தமிழ்ப் புலவர்களின் வரலாறு என்பவற்றை எடுத்துரைக்கின்றது. இந்நாலின் இலக்கியவியல் எனும் பகுதியில் திருமுறைகள், புராணங்கள், இதிகாசங்கள், திருப்புகழ், ஆத்திசூடி எனப் பல இந்து இலக்கியங்களை பயன்படுத்தியுள்ளமை இந்து சமயத்தினையும் தமிழையும் ஒன்றாக ஆதரித்தமைக்கு சான்றாகும். சிறந்த சொற்பொழிவாளராகவும், கண்டன வீரராயும், சமயநூற் களஞ்சியமாகவும், புலவராயும், ஆராய்ச்சியாளராகவும் திகழ்ந்த இவர் சிறந்த உரையாசிரியருமாவார். புலவர்மணி சு.நவநீத கிருஸ்ணபாரதியார் அவர்கள் இயற்றிய உலகியல் விளக்கம் எனும் நூலுக்கு உரையெழுதியுள்ளார். இந்நூல் சுவாமி விபுலானந்தரால் பதிப்பித்து வெளியிடப்பட்ட சிறப்பக்குரியது.

அரச பதவியில் இருந்த காலத்திலும், ஓய்வு பெற்ற பின்னரும் மட்டக்களப்புப் பிரதேச இளைஞர்களுக்கு இலவச வகுப்புக்களை நடாத்தி தமிழறிவையும், சமய அறிவையும் குருகுல முறையிற் வழங்கியதில் பூபாலப்பிள்ளையின் தொண்டு சிறப்பிடம் பெறுகின்றது. இலக்கண, இலக்கிய அறிவையும், சமய தத்துவ சாஸ்திர அறிவையும் பெற்றுக் கொள்ள எவ்வகையான வாய்ப்புக்களும் இல்லாதிருந்த காலப்பகுதியில் பூபாலப்பிள்ளை நடத்திய வகுப்புக்கள் தமிழ் இளைஞர்களுக்கு வரப் பிரசாதமாக அமைந்ததாக க.செபரத்தினம் குறிப்பிட்டுள்ளார்(செபரத்தினம்,2002). இந்துக்களிடையே இந்துப்பண்பாட்டம்சங்கள் பேணப்பட கல்வி அவசியமென்பதனை வலியுறுத்தினார். மதுரைத் தழிழ்ச் சங்க ஆண்டு விழாக்களிற் பங்கு கொண்டு, இவர் ஆற்றிய சொற்பொழிவுகள் இவரது ஆளுமைக்குச் சான்றுகளாக அமைகின்றன. இவர் இலங்கையில் மட்டுமன்றி தமிழகத்திலும் சொற்பொழிவாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்து சமயத்தினுடைய அடிப்படை உண்மைகளை சாதாரண மக்களும்

விளங்கிக் கொள்ளும் வகையில் இவரது சொற்பொழிவுகளமைந்தன. இவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் சங்கங்கள் அமைத்து சைவத்தையும் தமிழையும் வளர்க்கத் தொடங்கினார்கள்.

நிறைவுரை

யாழ்ப்பாணத்துப் பேரறிஞர்களாலும் இந்தியத் தமிழகத்தராலும் ஒருங்கே போற்றப்பட்ட பெருமைக்குரியவராவார். மட்டக்களப்பில் கற்றவர்கள் மிகக் குறைவாகக் காணப்பட்ட காலப்பகுதியில் வித்துவான் பூபாலபிள்ளை அவர்களின் பணிகள் போற்றத்தக்க வகையில் அமைந்திருந்தமையினைக் காணக்கூடியதாகவுள்ளது. மட்டக்களப்பில் கோயில்களை மையமாக் கொண்டு பிரபந்த வடிவங்கள் எழுந்திராத சூழலில் வித்துவான் ச.பூபாலபிள்ளை அவர்களின் படைப்புக்கள் இலக்கியத் துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தன. அந்நியரின் ஆட்சியினால் இந்துசமய அடிப்படைகளை மறந்திருந்த மக்களுக்கு அவற்றை விளக்கும் நோக்குடன் சமய உண்மைகளை எடுத்தியம்பும் வகையில் இவரது பிரபந்தங்கள் அமைந்திருந்தன.

வித்துவான் ச.பூபாலபிள்ளையின் புலமையும் ஆராய்ச்சியும் பல்துறை சார்ந்தவையாக அமைந்த போதிலும் படைப்புக்களுள் பெரும்பாலானவை இந்துசமயச் சார்பானவையாகும். பாவகைகளையும் பாவினங்களையும் கையாண்டு இவர் படைத்துள்ள இந்துசமய இலக்கியங்கள் யாவும் இந்துசமய வளர்ச்சிக்கு உதவியதோடு, தமிழ்மொழியின் வளர்ச்சிக்கம் பெரும் பங்காற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்துசமயத்தினையும், தமிழ்மொழியினையும், இந்துப்பண்பாட்டம்சங்களினையும் பேணிக்கொள்வது அன்றைய காலத்தின் தேவையென்பதனை தனது இலக்கியங்கள் மட்டும் கட்டுரைகளின் ஆக்கங்கள், சொற்பொழிவுகள் வாயிலாக வலியுறுத்தினார். அந்தவகையில் சைவசமயக் கோட்பாடுகளை மீண்டும் நிலைநிறுத்துவதில் இவரது பணி குறிப்பிடத்தக்கதாகும்.

1915ஆம் ஆண்டில் அரசினர் பணியிலிருந்து இளைப்பாறிய பின்னர் மட்டக்களப்பு மக்களுக்கு தமிழ்ப் பணியும் சைவப் பணியும் ஆற்றி 1921ஆம் ஆண்டில் இறையடி சேர்ந்தார். இவரது தனிமனித ஆளுமையினால் சமய, கல்வி, சமூகச் செயற்பாடுகளின் மூலம் மட்டக்களப்பு இந்துப் பண்பாட்டில் மறுமலர்ச்சி ஏற்படுத்தப்பட்டமையினைக் காணக்கூடியதாகவுள்ளது.

யாழ்ப்பாணத்துப் பேரறிஞர்களும், இந்தியத் தமிழகத்தாரும் ஒருமுகமாய் மதித்துப் போற்றிய மட்டக்களப்பின் முதற்புலவர் இவர் என்றால் அது மிகையாகாது. மட்டக்களப்பின் பெருஞ்சிறப்பு வெளிவர இவரே முதற்காரணகர்த்தாவாகும். இவரது இலக்கியப் படைப்புக்களனைத்தும் இன்றைய தலைமுறையினரால் பாதுகாத்துப் போற்றப்படவேண்டியது அவசியமாகும்.

உசாத்துணை

1. கந்தையா,வி.சீ. (2002) மட்டக்களப்புத் தமிழகம். பிரான்ஸ்: எக்ஸில்
2. மௌனகுரு,சி. (2003) வித்துவான் ச.பூபாலபிள்ளை அறிமுகமும் ஆய்வும். ஈழத்து மரபுவழித் தமிழ் புலமையாளர்கள். திருகோணமலை: கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சு
3. செபரத்தினம்,க. (2002) ஈழத்துத் தமிழ்ச் சான்றோர். சென்னை: மணிமேகலை பிரசுரம்
4. சிவசுப்பிரமணியம்,வ. (1993) விபுலானந்த தரிசனம். மட்டக்களப்பு: சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபை
5. பெரியதம்பிப்பிள்ளை,ஏ. (1999) புலவர்மணிகட்டுரைகள். திருகோணமலை: கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு

6. வாமன்,நா. (2012) பிரித்தபனியராட்சிக் கால மட்டக்களப்பிற் சைவசமய மறுமலர்ச்சி, பிரித்தபனியராட்சியும் நவீனமயமாக்கலும். கொழும்பு: இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
7. ஜம்புலிங்கம்பிள்ளை,சே.வெ. (1923) தோத்திரக்கோவை. சென்னை: கம்மர்ஸியல் பிரஸ்

கொவிட்-19 பெருந்தொற்றுநோயின் போதான குடும்ப வன்முறை மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருளாதாரக் காரணிகள்: யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வரணிக் கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு

ஞா.சார்த்திகா
சமூகவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
sarthisarthi1995@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

வெளிவரும் தரவுகள் மற்றும் அறிக்கைகள் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான அனைத்து வகையான வன்முறைகளையும் காட்டுகின்றன, குறிப்பாக குடும்பவன்முறை கொவிட்-19 பெருந்தொற்றின்போது தீவிரமடைந்துள்ளது. கொவிட-19 பெருந்தொற்றின்போது குடும்பவன்முறையுடன் தொடர்புடைய காரணிகளைக் கண்டறிவது இந்த ஆய்வின் பிரதான நோக்கம் ஆகும். இந்த ஆய்வில் கலப்புமுறை ஆய்வு வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது. நேர்காணல் மேற்கொள்பவரால் நிர்வகிக்கப்படும் வினாக்கொத்து, பிரதான தகவல் தருநருடனான நேர்காணல் மற்றும் விடய ஆய்வுகள் என்பவற்றின் மூலம் முதலாம்நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. ஆய்வில் அனைத்து 57 பெண்களும் உள்வாங்கப்பட்டனர். கணியம்சார் தரவுகள் SPSS version 21 இனைப் பயன்படுத்தி விபரணப்புள்ளிவிபரவியல் முறைகள் மூலம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. விடய ஆய்வுகள் மற்றும் பிரதான தகவல் தருநருடனான நேர்காணல் என்பவற்றின் மூலம் சேகரிக்கப்பட்ட பண்புசார் தரவுகள் கருப்பொருள் உள்ளடக்கப் பகுப்பாய்விற்கும் உட்படுத்தப்பட்டன. பதிலளித்தவர்களில் பெரும்பாலானோரின் முதன்மையான மதமாக இந்துமதம் (84.21%) காணப்பட்டதுடன் பதிலளித்தவர்களில் 38.60 % ஆனோர் 20-30 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் முடிவுகள் காட்டுகின்றன. ஏறத்தாழ, 71.93% ஆன பெண்கள் இரண்டாம்நிலைக் கல்வித் தகுதிகளைப் பூர்த்திசெய்துள்ளனர். கூலி வேலை (26.32%) பல பெண்களின் முதன்மை வாழ்வாதாரமாகக் காணப்பட்டது. கடன் பிரச்சினைகள் (21.05%), வேலையின்மை (13.60%), குறைவான வருமானம் (23.68%) மற்றும் வேலைக்கு ஒழுங்காகப் போக இயலாமை (16.67%), போன்றன குடும்ப வன்முறையை எதிர்கொண்ட பெண்களின் பிரதானமான பொருளாதாரப் பிரச்சினைகளாகும் என்றும் முடிவுகள் குறிப்பிடுகின்றன. அத்துடன் குடும்ப அங்கத்தவர்களிடையேயான முரண்பாடு (21.11%), வறுமை (18.89%), மது மற்றும் போதைப்பொருள் பாவனை(18.15%), பிள்ளைகளின் பிரச்சினை (13.36%), சந்தேகம் (1.85%), கல்வித்தரம் குறைவு (11.85%) மற்றும் புரிந்துணர்வின்மை (14.81%) என்பன பெண்களின் குறிப்பிடத்தக்க சமூகப் பிரச்சினைகளாக இருந்தன எனவும் முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. எனவே, கொவிட்19 பெருந்தொற்றின்போது அதிகமான பெண்கள் சமூக மற்றும் பொருளாதாரக் காரணிகளால் குடும்ப வன்முறையை எதிர்கொண்டனர் என்பது ஆய்வின் பிரதான முடிவாகும்.

திறவுச் சொற்கள்: குடும்ப வன்முறை, கொவிட்-19, சமூகப் பிரச்சினை, பெண், பொருளாதாரப் பிரச்சினை

1. ஆய்வு அறிமுகம்

உலகளாவிய ரீதியில், குடும்ப வன்முறையானது கொவிட்-19 க்கு ஒரு "நிழல் பெருந்தொற்றாக" (Shadow pandemic) அதிகளவில் பார்க்கப்படுகின்றது(United Nation Women, 2020). குடும்ப வன்முறை என்பது உடலியல், பாலியல், உளவியல் அல்லது நிதி சார்ந்து குடும்பங்களுக்குள் இருக்கும் வன்முறை நடத்தைகளைக் குறிக்கும் ஒரு பரந்த சொல் ஆகும்(Peterman et al, 2020). இலங்கையின் 2005 ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க குடும்ப வன்முறைச் செயல் தடுப்புச் சட்டத்தின்படி (No. 34 of 2005) "வீட்டின் அல்லது வெளிப்புறச் சூழலுக்குள் சம்பந்தப்பட்ட நபரால் செய்யப்பட்ட அல்லது ஏற்பட்ட எந்தவொரு உணர்ச்சி ரீதியான துஷ்பிரயோகம், பாதிக்கப்பட்ட நபருக்கும் தொடர்புடைய நபருக்கும் இடையிலான தனிப்பட்ட உறவின் காரணமாக ஏற்படும். உணர்ச்சி ரீதியான துஷ்பிரயோகம் என்பது கொடூரமான, மனிதாபிமானமற்ற, இழிவான அல்லது அவமானகரமான நடத்தையின் ஒரு வடிவமாகும்"(Prevention of the Domestic Violence Act, 2005). குடும்ப வன்முறையானது தொற்றுநோய்கள் உட்பட்ட நெருக்கடி காலங்களில் அதிகரிக்கிறது(Sety et al, 2014).

வெளிவரும் தரவுகளான ஊடக அறிக்கைகள் மற்றும் முன்னறிவிப்புச் சான்றுகள், கொவிட் 19 பெருந்தொற்றின்போது குடும்ப வன்முறைகள் அதிகரித்துள்ளதாகக் குறிப்பிடுகின்றன(Sharma et al, 2020; United Nation Women, 2020). உதாரணமாக, கொவிட்-19 காலப்பகுதியில், கனடா (33%), அவுஸ்திரேலியா (40%), சீனா, ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா, பிரான்ஸ், ஆர்ஜன்ரீனா, சைப்பிரஸ் மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகள் அதிகளவில் குடும்ப வன்முறையை எதிர்கொண்ட நாடுகளாகக் காணப்படுகின்றன(Bagheri Lankarani et al, 2022).

இலங்கையில் 2019ஆம் ஆண்டில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பெண்களின் நலவாழ்வு கணக்கெடுப்பின்படி, 51.6% ஆன இலங்கைப் பெண்களின் சனத்தொகையில், அவர்களில் 20.4% ஆனவர்கள் குடும்பவன்முறைக்கு உள்ளாகியுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது(Department of Census and Statistics in Sri Lanka, 2019). துரதிஷ்டவசமாக இந்த எண்ணிக்கை பொதுமுடக்கத்தின்போது அதிகரித்திருந்தது(Gamage, 2021). கொவிட் 19 காலப்பகுதியில் குடும்ப வன்முறைக்கான பொருளாதாரக் காரணங்களாக நிதிப் பிரச்சினை மற்றும் வேலையின்மை என்பன பிரதான காரணங்களாகக் காணப்பட்டது. அத்துடன் சமூகக் காரணங்களாக, மது அருந்துதல், புகையிலை மெல்லுதல் மற்றும் வெளியில் நடமாடுதல் குறைவாக இருத்தல் என்பன காரணமாக குடும்ப வன்முறை அதிகரித்தது. அத்துடன் பெருந்தொற்று நிலைமைகள் மற்றும் வீட்டில் தனிமைப்படுத்தல் காரணமாக நீண்டநேரம் ஒன்றாக இருப்பது குடும்பங்களில் அழுத்தங்களை ஏற்படுத்தியது. பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன் இல்லாமை மற்றும் தவிர்ப்பு உத்திகளைப் பயன்படுத்தல் என்பன குடும்ப வன்முறை அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது(Bagheri Lankarani et al, 2022). கொவிட்-19 காலப்பகுதியில் குடும்ப வன்முறையால் குடும்பத்தில் ஏற்பட்ட பாதிப்புக்களாக, பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுதல், குடும்ப நடைமுறைகளில் மாற்றம் ஏற்படுதல், பயம் மற்றும் பாதுகாப்பின்மை மற்றும் பெற்றோரின் மன அழுத்தம் போன்றன அடையாளப்படுத்தப்பட்டன(Kustar and Kaosaar, 2021). குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 2016ஆம் ஆண்டு 335 குடும்ப வன்முறைச் சம்பவங்களும், 2017ஆம் ஆண்டு 227 குடும்ப வன்முறைச் சம்பவங்களும், 2018ஆம் ஆண்டு 246 குடும்ப வன்முறைச் சம்பவங்களும் பதிவாகியுள்ளன. உடலியல் ரீதியான குடும்ப வன்முறைச் சம்பவங்கள் அதிகளவில் பதிவுசெய்யப்பட்டுள்ளது(யாழ்ப்பாண மாவட்டச் செயலக அறிக்கை, 2019). ஆய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள தென்மராட்சிப் பிரதேச செயலகர் பிரிவில் உள்ள வரணிக் கிராமத்தில் கொவிட் 19 காலப்பகுதியில் 57 குடும்ப வன்முறைச்சம்பவங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன(வரணிப் பிரதேச கிராம சேவகர் அறிக்கை, 2022). ஆய்வுப் பிரதேசத்தில் மக்கள் கொவிட் 19 முடக்க காலப்பகுதியில் கணவனின் மதுப்பாவனை, போதைப்பொருள் பாவனை, சிறைவாச உணர்வு, வெளியில் செல்ல முடியாமை, வேலையின்மை மற்றும் வருமானமின்மை காரணமாக வறுமை நிலையை எதிர்கொண்டனர். இதனால் கடனை மீளச்செலுத்த முடியாத தன்மை காரணமாக குடும்பங்களில் கருத்து முரண்பாடு ஏற்பட்டு வன்முறை அதிகரித்தது. எனவே குறித்த பிரதேசத்தில் கொவிட் 19 காலத்தில் குடும்ப வன்முறையுடன் தொடர்புபட்ட முக்கியமான காரணங்களாக சமூக மற்றும்

பொருளாதாரப் பிரச்சினைகள் ஆய்வுப் பிரச்சினையாக இனங்காணப்பட்டுள்ளதால் குறித்த ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2. ஆய்வு நோக்கங்கள்

பொது நோக்கம்

கொவிட் 19 காலப்பகுதியில் குடும்ப வன்முறை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட காரணங்களை இனங்காணலும் குடும்பத்தில் ஏற்பட்ட பாதிப்புக்களை மதிப்பிடுதலும்.

சிறப்பு நோக்கங்கள்

- கொவிட் 19 காலப்பகுதியில் குடும்ப வன்முறைக்கான சமூகக் காரணங்களை இனங்காணல்.
- கொவிட் 19 காலப்பகுதியில் குடும்ப வன்முறைக்கான பொருளாதாரக் காரணங்களை இனங்காணல்.
- கொவிட் 19 காலப்பகுதியில் குடும்ப வன்முறையினால் குடும்பத்தில் ஏற்பட்ட பாதிப்புக்களை மதிப்பிடல்.

3. ஆய்வு முறையியல்

3.1 ஆய்வுப் பிரதேசம்

இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தென்மராட்சி பிரதேச செயலகர் பிரிவானது 60 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. 2019 டிசம்பர் 31 தென்மராட்சி பிரதேச செயலகக் கணக்கெடுப்பின்படி 72,143 சனத்தொகையினையும் 22,942 குடும்பங்களையும் தென்மராட்சி பிரதேச செயலகம் கொண்டுள்ளது(தென்மராட்சிப் பிரதேச செயலர் அறிக்கை, 2020). இதனடிப்படையில் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட வரணிப் பிரதேசம் ஆய்வுப் பிரதேசமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

3.2 ஆய்வு வடிவம்

சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த ஆய்வில் கலப்புமுறை (mixed method) ஆய்வு வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

3.3 மாதிரியும் மாதிரிப் பருமனும்

கொவிட் 19 காலப்பகுதியில் வரணிப் பிரதேசத்தில் குடும்ப வன்முறையினால் பாதிக்கப்பட்ட 57 பெண்கள் இனங்காணப்பட்டுள்ளனர்(வரணிப் பிரதேச கிராம சேவகர் அறிக்கை 2022). எனவே குடும்ப வன்முறைக்குட்பட்ட <u>அனைத்து ஆய்வுக் குடித்தொகையும் ஆய்விற்கான மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.</u>

3.4 தரவுசேகரிப்புக் கருவிகள்

முதன்நிலைத் தரவுசேகரிப்புக் கருவிகள் :

1. விடய ஆய்வு

ஆய்வுப் பிரதேசத்தில் 10 விடய ஆய்வுகள் குடும்ப வன்முறைக்குட்பட்ட திருமணமான பெண்களிடம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2. பிரதான தகவல் வழங்குநருடனான நேர்காணல்

கொவிட்-19 காலப்பகுதியில் குடும்ப வன்முறை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட காரணங்கள் தொடர்பான விடயங்களுக்கான பிரதான தகவல் தருநருடனான ஆழமான நேர்காணல் வரணிப் பிரதேச கிராம சேவகரிடம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3. நேர்காணலை அடிப்படையாகக் கொண்ட வினாக்கொத்து

ஆய்வுப் பிரதேசத்தைச் சேர்ந்த 57 குடும்ப வன்முறைக்குட்பட்ட பெண்களிடம் வினாக்கொத்து மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. நாவற்குழி கிராமத்திலுள்ள வீட்டு வன்முறைக்குட்பட்ட பெண்களிடம் வினாக்கொத்தானது பூர்வாங்க ஆய்வு(Pilot study) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரண்டாம்நிலைத் தரவுசேகரிப்புக் கருவிகள் : கிராமசேவகர் தரவுகள், யாழ்ப்பாண மாவட்ட செயலகத் தரவுகள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் இணையத்தளத் தரவுகள் போன்றவற்றிலிருந்து இரண்டாம் நிலைத்தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

4. பெறுபேறுகளும் கலந்தாராய்தலும்

வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்ட கணியம்சார் தரவுகள் விபரணப் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு முறையில் சமூக விஞ்ஞானங்களுக்கான புள்ளிவிபரவியல் மென்பொதி (SPSS) உதவியுடன் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் பண்புசார் தரவுகள் கருப்பொருள் உள்ளடக்கப் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டும் முடிவுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

4.1 கொவிட்-19 காலப்பகுதியில் குடும்ப வன்முறைக்குட்பட்ட பெண்களின் சமூக மற்றும் குடித்தொகைக் குணவியல்புகள்

அட்டவணை 01: சமூக மற்றும் குடித்தொகைக் குணவியல்புகள்

சமூக மற்றும் குடித்தொகைப் பண்புகள்		எண்ணிக்கை	வீதம்(%)
வயது (வருடங்கள்)	20-30	22	38.60
	31-40	15	26.32
	41-50	10	17.54
	51-60	6	10.53
	60 வயதிற்கு மேல்	4	7.01
	மொத்தம்	57	100.0
மதம்	இந்து மதம்	48	84.21
	கிறிஸ்தவ மதம்	9	15.79
	மொத்தம்	57	100.0
கல்விநிலை	1-5 (ஆரம்பக்கல்வி)	9	15.79
	6-11 (இடைநிலைக்கல்வி)	41	71.93
	க.பொ.த உயர்தரம்	7	12.28
	மொத்தம்	57	100.0
தொழில்	சுயதொழில்	3	5.26
	கூலி	15	26.32
	வீட்டுவேலை	2	3.51
	அரச தொழில்	2	3.51

	தனியார் தொழில்	5	8.77
	வியாபாரம்	3	5.26
	தொழிலின்மை	27	47.37
	மொத்தம்	57	100.0
குடும்பத்தின் மொத்த மாத வருமானம் (ரூபாவில்)	≤ 15000	13	22.81
	15001-20000	24	42.11
	20001-25000	8	14.04
	25001-30000	7	12.27
	30000 க்கு மேல்	5	8.77
	மொத்தம்	57	100.0

(மூலம்: களஆய்வு, வினாக்கொத்து 2022)

அட்டவணை 01 இன்படி கொவிட்-19 காலப்பகுதியில் 20-30 வயதிற்கிடைப்பட்ட பெண்களே அதிகளவில் (38.60%) குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டுள்ளனர். குடும்ப வன்முறைக்குட்பட்ட பெண்களில் பெரும்பான்மையானோர் (84.21%) இந்து மதத்தினைச் பின்பற்றுபவர்களாகக் காணப்பட்டதுடன் அதிகளவிலானோர் (71.93%) இடைநிலைக் கல்வியினைப் பெற்றவர்களாகக் காணப்பட்டனர். அதிகளவிலான பெண்கள் தொழிலற்றுக் காணப்பட்டதுடன் தொழில் செய்பவர்களில் பெரும்பான்மையானோர் (26.32%) கூலித்தொழில் செய்பவர்களாகக் காணப்பட்டனர். பெரும்பாலான பெண்கள் (64.92%) 20000க்குக் குறைவான மாதாந்த வருமானம் பெற்றுக்கொள்ளும் பெண்களாகக் காணப்பட்டனர்.

4.2 பொருளாதார குடும்ப வன்முறை வடிவங்கள்

அட்டவணை 02: பொருளாதார வன்முறையின் வடிவங்கள் (பல்தெரிவுகள்)

மாறிகள்	எண்ணிக்கை	வீதம்(%)
அன்றாட செலவுக்குத் தேவையான பணத்தினைத் தரமறுத்தல்	35	43.75
சீதனம் கேட்டல்	24	30.00
வேலைக்குப்போக அனுமதியாமை	2	2.50
வேலையைக் கட்டாயமாக இடைநிறுத்துதல்	2	2.50
கடனாளியாக்குதல்	17	21.25
மொத்தம்	80	100.0

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து - 2022)

அட்டவணை 02 இல் கொவிட்-19 காலப்பகுதியில் குடும்ப வன்முறைக்குட்பட்ட பெண்களில் 43.75% ஆனவர்கள் அன்றாடச் செலவுக்குத் தேவையான பணத்தினைத் தரமறுத்தல் எனும் பொருளாதார வன்முறை வடிவத்தினை அதிகளவில் எதிர்கொண்டனர்.

இதனைப் பண்புசார் தரவுகள் வலுச்சேர்க்கின்றன. *''நாட்டில கொவிட் வந்ததில இருந்து இவர் ஒழுங்கான தொழில் ஒன்றுக்கும் போனதில்ல. நாளுக்குநாள் பொருளுகளின்ர விலையும் கூடிக்கொண்டு போகுது, ஒழுங்கா வீட்டுக்குச் சாமான் வாங்கிப் போடுறதுமில்ல, தேவையான சாமான்கள் வாங்க என்ர கையில ஒரு ரூபா காசும் தாறதுமில்லை''(மூலம்: விடய ஆய்வு 03)*

''மாதக் கணக்கில கடையில சாமான் வாங்குறது, மாதம் முடிய மொத்தமா காசக் குடுக்கிறது, கொவிட் வந்ததில இருந்து உழைப்புகளும் மட்டு. இந்த மனுசனால நான் கடனாளியாப் போயிட்டன். இனி எப்பிடி கடன் கட்டப்போறனோ தெரியல''(மூலம்: விடய ஆய்வு 06).

4.3 உடலியல்சார் குடும்ப வன்முறை வடிவங்கள்

அட்டவணை 03: உடலியல் வன்முறையின் வடிவங்கள் (பல்தெரிவுகள்)

மாறிகள்	எண்ணிக்கை	வீதம்(%)
அடித்தல்	53	34.19
பொருட்களால் வீசுதல்	27	17.42
தள்ளிவிடல்	34	21.94
ஆயுதங்களைப் பயன்படுத்துதல்	13	8.39
முடியை இழுத்தல்	12	7.74
கழுத்தை நெரித்தல்	2	1.29
கை, காலை முறுக்குதல்	14	9.03
மொத்தம்	155	100.0

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து - 2022)

அட்டவணை 03 இல் கொரோனா காலப்பகுதியில் அதிகமான (34.19%) பெண்கள் அடித்தல் எனும் உடலியல் வன்முறை வடிவத்தினை அதிகளவில் எதிர்கொண்டனர்.

இதனைப் பண்புசார் தரவுகள் வலுப்படுத்துகின்றன. *''எப்ப லொக்டவுண் போட்டாங்களோ அப்ப இருந்து எனக்கு ஒரே சித்திரவதை தான், அவருக்கு என்ன பிரச்சனை எண்டாலும், யாரோட பிரச்சனை எண்டாலும் குடிச்சிட்டு வந்து என்னட்டத்தான் காட்டுவார். நிண்ட நிலையில கன்னத்தைப் பொத்தி அடிப்பார். தூசணத்தால அறம்புறமா பேசுவார். நான் அனுபவிக்காத கொடுமையே இல்ல''(மூலம்: விடய ஆய்வு 01).*

4.4 பாலியல்சார் குடும்ப வன்முறை வடிவங்கள்

அட்டவணை 04: பாலியல் வன்முறையின் வடிவங்கள் (பல்தெரிவுகள்)

மாறிகள்	எண்ணிக்கை	வீதம்(%)
வார்த்தைகள் மூலமான துஷ்பிரயோகம் (தகாத வார்த்தைப் பிரயோகம்)	57	61.86
பாலியல் துஷ்பிரயோகம்	24	26.19
பாலியல் உறவிற்குக் கட்டாயப்படுத்தல்	7	7.61
அதிகமான பிள்ளைகள் பெறுவதற்கு நிர்ப்பந்தித்தல்	4	4.34
மொத்தம்	92	100.0

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து - 2022)

அட்டவணை 04 இனூடாக கொவிட்19 காலப்பகுதியில் குடும்ப வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்கள் வார்த்தைகள் மூலமான துஷ்பிரயோகம் எனும் பாலியல் வன்முறை வடிவத்தினையே அதிகளவில் (61.96%) எதிர்கொண்டனர்.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் பண்புசார் தரவுகள் காணப்படுகின்றது. *''கொவிட் 19 காலப்பகுதியில் அரசாங்கம் பொது முடக்கத்தினை அறிவித்ததன் காரணமாக கணவன் மனைவி*

வீட்டிலேயே அதிக நேரம் செலவழித்தனர். இதனால் சிறைவாச உணர்வு காரணமாக கருத்து முரண்பாடுகள் அதிகரிக்கும்போது பாலியல் ரீதியான வார்த்தைகளைப் பயன்படுத்துதல், கட்டாயப் பாலியல் உறவுகொள்ளுதல், நோய்வாய்ப்பட்ட காலத்தில் உடலுறவில் ஈடுபடுதல், ஒரு நாளில் பல தடவைகள் உடலுறவில் ஈடுபட வற்புறுத்தல், பிள்ளைகள் வீட்டில் இருக்கின்ற நேரத்தில் பாலியல் உறவிற்கு கட்டாயப்படுத்துதல் போன்ற பாலியல் வன்முறைகளை எதிர்கொள்கின்றனர்''(மூலம்: பிரதான தகவல் தருநருடனான நேர்காணல் 01).

''கொரோனாக் காலம் மனசில விரக்தி நிலையை உருவாக்கினதால அதைக் குறைக்கிறதுக்கு உறவுக்கு கேட்பார். அவற்ற ஆசையளுக்கெல்லாம் நேர காலம் பாராமல் உடன்படோணும். இல்லை எண்டால் என்னைத் தப்பா பேசுவார்''(மூலம்: விடய ஆய்வு 03).

''கொழும்பில தங்கி நிண்டு வேலை செய்தவர். கொரோனாவால போக வழியில்லை. வீட்டில நிண்டு ஒரே சண்டை போடுவார். பிள்ளைகள் நிக்குது எண்டும் பாராமல் உடன அவற்ற ஆசையளைத் தீர்க்குறதுக்கு நான் ஒத்துப் போகோனும் இல்லாட்டி சண்டைதான். கலியாணம் கட்டின காலம் முதல் இவ்வளவு காலமும் இதத்தான் ஒழுங்காச் செய்தவர்''(மூலம்: விடய ஆய்வு 06).

4.5 கொவிட்-19 காலப்பகுதியில் பெண்கள் குடும்ப வன்முறைக்கு பலியாகுவதற்கான பிரதான கராணங்கள்

அட்டவணை 05: குடும்ப வன்முறைக்கு பலியாகுவதற்கான காரணங்கள் (பல்தெரிவுகள்)

மாறிகள்	எண்ணிக்கை	வீதம்(%)
பொருளாதார ரீதியாக வன்முறைக்கு உட்படுத்துபவரில் தங்கியிருத்தல்	52	32.91
பெண்களின் வறுமை அபாயம்	24	15.19
பெண்களின் இயல்பான பாதிப்புறுநிலை	57	36.08
பாரம்பரிய பால்நிலை எதிர்பார்ப்புக்கள்	25	15.82
மொத்தம்	158	100.0

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து - 2022)

அட்டவணை 05 இனூடாக கொவிட்-19 காலத்தில் அதிகளவான பெண்கள் (36.08%) இயல்பான பாதிப்புறுநிலை காரணமாக குடும்ப வன்முறையினை எதிர்கொண்டனர். குறைவான பெண்கள் (15.19%) வறுமை அபாயம் காரணமாக குடும்ப வன்முறையினை எதிர்கொண்டனர்.

இதனைப் பண்புசார் தரவு உறுதிப்படுத்துகின்றது. *''வரணிப் பிரதேச்தில் அதிகளவான குடும்பப் பெண்கள் கணவனின் வருமானத்தில் குடும்பத்தைக் கொண்டு நடாத்துபவர்களாகக் காணப்படுகின்றனர். எனவே பெண்கள் ஆண் அங்கத்தவர்களில் சார்ந்து இருப்பவர்களாகக் காணப்படுவதனால் பொதுவாகக் குடும்பத்தலைவர்கள் பெண்களை பலவீனமாகக் கருதுவது கொவிட் காலத்தில் வன்முறையை அதிகரிக்கச் செய்தது''(மூலம்: பிரதான தகவல் தருநருடனான நேர்காணல் 01).*

4.6 கொவிட்-19 காலப்பகுதியில் பொருளாதாரக் காரணங்களால் குடும்ப வன்முறையினை எதிர்கொள்ளல்

அட்டவணை 06: குடும்ப வன்முறைக்கான பொருளாதாரக் காரணிகள்

மாறிகள்	எண்ணிக்கை	வீதம்(%)
கடன்சுமை	48	21.05
வேலையின்மை	31	13.60
கணவன் பொருளாதார ரீதியாகப் பெற்றோரில் தங்கியிருத்தல்	17	7.46
வருமானம் குறைவு	54	23.68
வேலை செய்யும் இடங்களில் பிரச்சினை	13	5.70
வேலைக்கு ஒழுங்காகப் போகாமை	38	16.67
வருமானத்தைப் பெற்றோருக்குக் கொடுத்தல்	4	1.75
நகை அடகு வைத்தல்	23	10.09
மொத்தம்	228	100.0

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து - 2022)

அட்டவணை 06 இன் படி கொவிட்-19 காலத்தில் அதிகளவான பெண்கள் (23.68%) வருமானம் குறைவு காரணமாக குடும்ப வன்றையினை எதிர்கொண்டதுடன் மிகக் குறைவான பெண்கள் (1.75%) வருமானத்தைப் பெற்றோருக்குக் கொடுத்தல் காரணமாக குடும்ப வன்முறையினை எதிர்கொண்டனர்.

இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் பண்புசார் தரவுகள் காணப்படுகின்றது. *''கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக குறிப்பாக கிராமப்பகுதிகளில் வறுமை, கடன் பிரச்சனை, நுண்நிதிக் கடன்கள், போன்றவற்றால் அதிகமான குடும்ப வன்முறைகள் இடம்பெறுகின்றன. வறுமை காரணமாக மனைவி மற்றும் பிள்ளைகளின் நகைகளை அடகு வைக்கும்போது வீட்டிலுள்ளவர்களிடையே வன்முறைகள் இடம்பெறுகின்றன''(மூலம்:- பிரதான தகவல் தருநருடனான நேர்காணல் 01).*

''வேலைக்கு ஒழுங்காகப் போக மாட்டார். கொரோனா வரும் தான் வெளில போகல, வீட்டில வருமானம் தாற ஏதாவது தொழிலைச் செய்வம் எண்டு சொல்லிக்கொண்டு வீட்டுத் தொழிலுகளிலும் ஊக்கமில்லாமல் இருப்பார். மூண்டு நேரமும் சாப்பாடு போட்டால் காணும், எதால வந்தது எப்பிடி வந்தது எண்டு ஒண்டும் கேட்க மாட்டார். இதால எனக்கும் அவருக்கும் சண்டை வந்துகொண்டே இருக்கும்''(மூலம்: விடய ஆய்வு 03).

''கொரோனா வாறதுக்கு முன்னம் லோனை எடுத்துப்போட்டு ஒழுங்கா வேலைக்கும் போறேல, ஒழுங்கா லோனும் கட்டுறேல, லோன்காரர் வீடு தேடி வந்தால் நிக்கவும் மாட்டார், இரவிலதான் வீட்டுக்கு வருவார், கடன் கதை சொன்னால் நெடுகச் சண்டை தான் வாறது''(மூலம்: விடய ஆய்வுல் 01).

எனவே Bagheri Lankarani et al, (2022) என்பவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கொவிட் 19 காலப்பகுதியில் குடும்ப வன்முறைக்கான பொருளாதாரக் காரணங்களாக நிதிப் பிரச்சினை

மற்றும் வேலையின்மை என்பன பிரதான காரணங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளமையானது குறித்த ஆய்வின் பொருளாதாரக் காரணிகளுடன் ஒத்துப்போவதாகக் காணப்படுகின்றது.

4.7 கொவிட்-19 காலப்பகுதியில் சமூகக் காரணங்களால் குடும்ப வன்முறையினை எதிர்கொள்ளல்

அட்டவணை 07: குடும்ப வன்முறைக்கான சமூகக் காரணிகள்

மாறிகள்	எண்ணிக்கை	வீதம்(%)
பெற்றோர் அனுமதியற்ற திருமணம்	7	2.59
குடும்ப உறுப்பினர்களிடையே முரண்பாடு	57	21.11
வறுமை	51	18.89
திருமணத்திற்கு அப்பாலான உறவு	12	4.44
மது மற்றும் போதைப்பொருள் பாவனை	49	18.15
குறைவான கல்வித்தரம்	32	11.85
இளமையாக இருத்தல்	15	5.66
கணவனின் பொறுமையின்மை	2	0.74
சந்தேகம்	5	1.85
பிள்ளைகளது பிரச்சினைகள்	40	14.82
மொத்தம்	270	100.0

(மூலம்:- கள ஆய்வு, வினாக்கொத்து - 2022)

அட்டவணை 07 இன்படி கொவிட்-19 காலப்பகுதியில் குடும்ப உறுப்பினர்களிடையே முரண்பாடு காரணமாக அதிகளவிலான (21.11%) குடும்ப வன்முறைகள் இடம்பெற்றன.

இதனைப் பண்புசார் தரவுகள் வலுப்படுத்துகின்றன. *''கொவிட் 19 காலப்பகுதியில் அதிகமாகப் போதைப்பொருள் பாவனை மற்றும் தொலைபேசிப் பாவனை என்பவற்றால் வீட்டுவன்முறைகள் அதிகமாக இடம்பெறுகின்றது. மனைவி கேள்வி கேட்டால் பிரச்சினை வருகின்றது. மேலும் வேறொரு பெண்ணுடன் திருமணத்திற்கு அப்பாலான உறவு வைத்திருக்கின்றமை, மனைவியைத் தாக்கும் வகையில் இன்னொரு பெண்ணுடன் தொலைபேசியில் உரையாடல் போன்றனவற்றாலும் குடும்ப வன்முறை இடம்பெறுகின்றது''(மூலம்: பிரதான தகவல் தருநருடனான நேர்காணல் 01).*

''மாமின்ர கதையளைக் கேட்டுட்டு வந்து நான் சரியில்லையாம், வீட்டில நான் பொறுப்பு இல்லையாம், பிள்ளைகள் ஏதாவது குழப்படி விட்டால் என்னோடதான் கத்துவார். அதுகளுக்கு பள்ளிக்கூடங்கள் எல்லாம் லீவு, படிக்கிறதுக்கும் இடங்கள் இல்லை. ஆதனால சண்டை வந்திடும். இதெல்லாம் மாமி தான் எடுத்துக்குடுக்கிறது''(மூலம்: விடய ஆய்வு 09).

''நானும் என்ர மனுசனும் விரும்பித்தான் கட்டினாங்கள், அதுவும் இந்த கொரோனா நேரத்தில விரும்பிக் கட்டினம், கட்டினாப் பிறகுதான் விளங்கினது ஏன் அவசரப்பட்டுக் கட்டினம் எண்டு. வீட்டுக்காரரும் ஏற்றுக்கொள்ளாமல் உழைப்பும் இல்லாமல் நிறையக் கஸ்டப்பட்டம். ரெண்டு மாதத்துக்கிடையில எங்கட குடும்பத்துக்க சண்டை வந்திட்டுது''(விடய ஆய்வு 10).

ஆகவே Bagheri Lankarani et al, (2022) போன்றோரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் சமூகக் காரணமான, மது அருந்துதல் குறித்த ஆய்வுப் பிரதேசத்துடன் ஒத்துப்போவதாகக் காணப்படுகின்றது. மேலும், புகையிலை மெல்லுதல் மற்றும் வெளியில் நடமாடுதல் குறைவாக

இருத்தல் என்பன காரணமாக குடும்ப வன்முறை அதிகரித்ததுடன் வீட்டில் தனிமைப்படுத்தலினால் குடும்பங்களில் அழுத்தங்களை ஏற்படுத்தியது எனக் குறிப்பிடப்பட்டுள்ளமையானது குறித்த ஆய்விலிருந்து வேறுபட்டு அமைகின்றது.

4.8 கொவிட்-19 காலப்பகுதியில் குடும்ப வன்முறையினால் குடும்பத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கள்

அட்டவணை 08: குடும்பத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கள் (பல் தெரிவுகள்)

மாறிகள்	எண்ணிக்கை	வீதம்(%)
மன அழுத்தம்	57	40.43
குடும்ப உறவுகளின் பிரிவு	5	3.55
நோய்வாய்ப்படல்	37	26.24
குடும்ப முன்னேற்றம் தடைப்படல்	21	14.89
கருக்கலைப்பு	1	0.71
தற்கொலை முயற்சி	4	2.84
தனிமை நிலைக்குள்ளாதல்	14	9.93
பிள்ளைகள் பாடசாலைக் கல்வியிலிருந்து இடைவிலகுதல்	2	1.41
மொத்தம்	141	100.0

(மூலம்:- கள ஆய்வு, வினாக்கொத்து - 2022)

அட்டவணை 08 இன் ஊடாக, கொவிட்-19 காலப்பகுதியில் குடும்ப வன்முறை காரணமாக பெண்கள் அதிகளவில் (40.43%) மனஅழுத்தத்திற்கு உட்பட்டனர். அத்துடன் குடும்ப உறவுகளில் பிரிவு, நோய் வாய்ப்படல், குடும்ப முன்னேற்றம் தடைப்படல், தனிமை நிலைக்குள்ளாகுதல், கருக்கலைப்புக்கள் மற்றும் தற்கொலை முயற்சி, போன்ற பாதிப்புக்களையும் எதிர்கொண்டனர்.

இதனை பண்புசார்ந்த தரவுகள் உறுதிப்படுத்துகின்றன. *''கொவிட் காலப்பகுதியில் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண் உடலியல் ரீதியாக அடி வாங்குதல் காரணமாக அதிகளவில் மன அழுத்தத்திற்கு உட்படுகின்றனர். அத்துடன் கணவன் சண்டையிட்டு குடும்பத்தைப் பிரிந்து வாழ்கின்ற சம்பவங்களும் நிகழ்கின்றன. இதனால் நிறைய குடும்பப் பெண்கள் தனிமை நிலைக்கு உள்ளாகியுதுடன் சிலர் தற்கொலை முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர்''(மூலம்: பிரதான தகவல் தருநருடனான நேர்காணல் 01).*

''என்ர மனுசன் பலசரக்குக்கடை வைத்திருந்தவர், நல்லாத்தான் குடும்பம் போய்க் கொண்டிருந்தது. திடீரென அவருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு போக முன்னர் இறந்துட்டார். அவர் போனதில இருந்து எனக்கு ஒரே மனதில தாக்கம். ஒரு குடும்பத்தில ஒருத்தர்ற்ற இழப்பு யாராலும் ஈடுசெய்ய முடியாது எண்டது என்ர அனுபவம் சொல்லுது''(மூலம்: விடய ஆய்வு 03).

எனவே Kustar and Kaosaar, (2021) போன்றவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கொவிட்-19 காலப்பகுதியில் குடும்ப வன்முறையால் குடும்பத்தில் ஏற்பட்ட பாதிப்புக்களாக, பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுதல், குடும்ப நடைமுறைகளில் மாற்றம் ஏற்படுதல், பயம் மற்றும் பாதுகாப்பின்மை மற்றும் பெற்றோரின் மன அழுத்தம் போன்றன

அடையாளப்படுத்தப்பட்டுள்ளமையானது குறித்த ஆய்வுடன் ஒத்துப்போவதாகக் காணப்படுகின்றது.

4.9 கொவிட்-19 காலப்பகுதியில் குடும்ப வன்முறையினால் குடும்பத்தில் ஏற்பட்ட பண்பாட்டுத் தாக்கங்கள்

அட்டவணை 09: குடும்ப வன்முறையால் குடும்பத்தில் ஏற்பட்ட பண்பாட்டுத் தாக்கங்கள் (பல் தெரிவுகள்)

மாறிகள்	எண்ணிக்கை	வீதம்(%)
வழிபாட்டு இடங்களுக்குச் செல்ல முடியாமை	7	4.67
மங்கல நிகழ்வுகளுக்குச் செல்ல முடியாமை	13	8.66
குடும்ப வன்முறை குறித்த சட்டம் பற்றிய தெளிவின்மை	54	36.00
போசாக்கான உணவைப் பெற்றுக்கொள்ள முடியாமை	45	30.00
குடும்ப நெறிமுறைகளைப் பின்பற்ற முடியாமை	27	18.00
திருமணச் சட்டத்தை மீறுதல்	4	2.67
மொத்தம்	150	100.0

(மூலம்:- கள ஆய்வு, வினாக்கொத்து – 2022)

அட்டவணை 09 இன்படி கொவிட்-19 காலப்பகுதியில் குடும்ப வன்முறை காரணமாக பெண்கள் அதிகளவில் (36%) குடும்ப வன்முறை குறித்த சட்டம் பற்றி தெளிவான அறிவைக் கொண்டிருக்கவில்லை. அத்துடன் மிகக் குறைவானோர் (2.67%) திருமணச் சட்டத்தை மீறுபவர்களாகவும் காணப்பட்டனர்.

இக்கணியம்சார் தரவினை வலுப்படுத்தும் வகையில் பண்புசார் தரவு அமைகின்றது. *''இப்பிரதேசமானது ஒரு கிராமப்பகுதியாகக் காணப்படுவதனால் அதிகளவான குடும்பப் பெண்களுக்கு குடும்ப வன்முறைக்கு எதிராகச் சட்டம் உள்ளது என்பது தொடர்பான அறிவு காணப்படவில்லை. இதனால் கணவன் வன்முறைக்கு உட்படுத்தும்போது அதனை அனுபவிப்பவர்களாகக் காணப்படுகின்றனர். கொவிட் பொதுமுடக்கமானது இன்னும் அவர்களை வன்முறைக்கு உட்படுத்த காரணமாய் அமைந்நது''(மூலம்: பிரதான தகவல் தருநருடனான நேர்காணல் 01).*

விமர்சனப் பெண்ணியக் கோட்பாடானது, ஒரு ஆண் ஆதிக்கச் சமூகத்தில் பெண் ஒரு பொருளாக அல்லது பண்டமாக கருதப்படுகின்றாள். பெண்கள் சமூகத்தால் தங்கள் கணவரின் சொத்து என வரலாற்று ரீதியாகப் பார்க்கப்பட்டனர். கொவிட் 19 காலப்பகுதியில் பெண்கள் நிதி ரீதியாகத் தங்கள் கணவன்மார்களைச் சார்ந்து இருக்கின்றனர். குழந்தை வளர்ப்புக்குத் தங்கள் கணவனின் வருமானத்தை நம்பியுள்ளனர். மேலும் பெரும்பாலான வாழ்க்கைத் துணைவர்கள் கூலித்தொழிலை மேற்கொள்பவர்கள். அதனால் இந்தச் சூழ்நிலை குடும்பத்தில் பெண்களுக்கெதிரான ஆதிக்கத்தை உருவாக்கியது. அந்தவகையில் வரணிப் பிரதேச குடும்ப உறவுகளில் ஆண்கள் தங்கள் ஆதிக்கத்தைக் காட்டுவதனால் விமர்சனப் பெண்ணியக் கோட்பாடானது பிரயோகப்படுத்தப்பட்டுள்ளது.

முடிவுரை

பெண்களுக்கெதிரான குடும்ப வன்முறை குறித்த பல்வேறு சட்டங்கள் நடைமுறையில் காணப்படுகின்றபோதும் தென்மராட்சி பிரதேச செயலகர் பிரிவிற்குட்பட்ட வரணிப் பிரதேச திருமணமான பெண்கள் கொவிட்-19 காலப்பகுதியில் பல்வேறு சமூக மற்றும் பொருளாதாரக் காரணங்களினால் குடும்ப வன்முறையினை எதிர்கொண்டனர். அந்தவகையில் குடும்ப வன்முறைக்குட்பட்ட பெண்கள் கடன்சுமை, வேலையின்மை, பொருளாதார ரீதியாகப் பெற்றோரில் தங்கியிருத்தல், வருமானம் குறைவு, வேலை செய்யும் இடங்களில் பிரச்சினைகளை எதிர்கொள்ளல் போன்ற முக்கியமான பொருளாதாரக் காரணங்களினாலும் பெற்றோர் அனுமதியற்ற திருமணம், குடும்ப உறுப்பினர்களிடையே முரண்பாடு, கணவனின் பொறுமையின்மை, மது மற்றும் போதைப்பொருள் பாவனை, பரஸ்பர புரிந்துணர்வின்மை, கல்வித்தரம் குறைவாக இருத்தல் போன்ற முக்கியமான சமூகக் காரணங்களினாலும் குடும்ப வன்முறையினை எதிர்கொண்டனர். மேலும் கொவிட்-19 பொதுமுடக்கத்தால் பல குடும்ப உறுப்பினர்கள் மன அழுத்தத்திற்கும் உட்பட்டனர். அத்துடன் குடும்ப அங்கத்தவர்களுக்கு குடும்ப வன்முறை குறித்த சட்டம் தொடர்பான அறிவின்மை காரணமான அதிகளவில் பண்பாட்டுத் தாக்கத்தினை எதிர்கொண்டனர். எனவே, வரணிப் பிரதேசத்தை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட தரவு சேகரிப்பின் மூலம் பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில் மேற்கண்ட பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளதுடன் அதன் தீவிரத்தன்மையும் அறியப்பட்டுள்ளது. அந்தவகையில் குடும்ப வன்முறையினைக் குறைப்பதற்கான தீர்வுகளாக,

1. சிறு வயதிலிருந்தே பாடசாலை, உயர்கல்வி என அனைத்து மட்டங்களிலும் பால்நிலை சமத்துவம் மற்றும் ஒப்புரவுக் கல்வியினைக் கற்பித்து பால்நிலை சமத்துவத்தினை ஏற்படுத்துதல் வேண்டும்.
2. கொவிட்-19 காலப்பகுதியில் வீட்டுவன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களையும், குடும்பவன்முறைக்குக் காரணமானவர்களையும் இனங்கண்டு குடும்பநல ஆலோசனைகளை வழங்குதல் வேண்டும்.
3. கொவிட்-19 காலப்பகுதியில் குடும்ப வன்முறைக்கு காரணமானவர்களுக்கு கடுமையான சட்ட நடவடிக்கைகளையும் தண்டனைகளையும் அமுல்ப்படுத்துதல் வேண்டும்.
4. கொவிட்-19 காலங்களில் குடும்பப் பொருளாதாரப் பிரச்சினை வீட்டுவன்முறை ஏற்படக் காரணமாக அமைவதனால் குடும்பப் பொருளாதாரத்தினை உயர்த்துவதற்கு ஏற்ப வழிவகைகளைச் செய்தல் வேண்டும்.
5. குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உள ஆற்றுப்படுத்தல் பயிற்சிகள், தற்துணிவுகளையும் வளர்க்கும் பயிற்சிகள் மற்றும் பால்நிலைப் பயிற்சிகள் போன்ற பயிற்சிகள் சரியான முறையில் வழங்கப்பட வேண்டும்.

References

1. Bagheri Lankarani, K. Hemyari, C. Honarvar, B. Khaksar, E. Shaygani, F. Haghigh, M. R. and Shaygani, M. R. (2022) Domestic violence and associated factors during COVID-19 epidemic: an online population-based study in Iran, BMC Public Health. Available at: https://doi.org (Accessed: 27 September 2022).
2. Department of Census and Statistics in Sri Lanka. (2019). Available at: https://www.statistics.gov.lk (Accessed: 26 September 2022).

3. Gamage, M. and Tummodara, R. (2021) A study on the rise of Domestic Violencee against women in Sri Lanka during the lockdown. Sri Lanka.
4. Kustar, D. and Kaosaar, L.K. (2021) The Impact of the COVID-19 Pandemic on Families: Young People's Experiences in Estonia. Available at: https://doi.org (Accessed: 27 September 2022).
5. Peterman, A. Potts, A. Donnell, M. Thompson, K. Shah, N. Oertelt Prigione, S. and Gelder, N. (2020) Pandemics and Violence against Women and Children, Centter for Global Development. Available at: https://www.cgdev.org (Accessed: 27 September 2022).
6. Prevention of Domestic Violence Act. (2005) Parliament of the Democratic Socialist Republic of SriLanka. Available at: https://www.refworld.org (Accessed: 26 September 2022).
7. Sety, M. James, K. and Breckenridge, I. (2014) Understanding the risk of domestic violence during and post natural disasters: Literatute review. *Issues of Gender and Sexual Orientation in Humanitarian Emergencies*, 99-111. Available at: https://scholar.google.com (Accessed: 26 September 2022).
8. Sharma, A. and Borah, S.B. (2020) COVID-19 and domestic violence: an indirect path to social and economic crisis, *Journal of family violence*, 1-7. Available at: https://scholar.google.com (Accessed: 27 September 2022).
9. United Nation Women. (2020) Impact of COVID-19 on violence against women and girls and service provision: UN women rapid assessment and findings. Available at: https://scholar.google.com (Accessed: 26 September 2022).
10. United Nation Women. (2020) The Shadow Pandemic: Violence Against Women during COVID-19. Available at: https://www.unwomen.org (Accessed: 26 September 2022).
11. கிராம சேவகர் அறிக்கை. (2022) கிராம சேவகர் பிரிவு, வரணி, யாழ்ப்பாணம்.
12. தென்மராட்சிப் பிரதேச செயலகம். (2020) தென்மராட்சிப் பிரதேச செயலகர் ஆண்டறிக்கை. சாவகச்சேரி: தென்மராட்சிப் பிரதேச செயலகம். யாழ்ப்பாணம்.
13. யாழ்ப்பாண மாவட்ட செயலக அறிக்கை. (2019) மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

கோறளைப்பற்று பிரதேச செயலகப்பிரிவில் வாழ்கின்ற மாற்றுத்திறனாளர்களின் சமூக ஓரங்கட்டப்படுதலை மையப்படுத்திய ஓர் சமூகவியல் ஆய்வு

துரைராசா யுஜந்தன்
சமூக விஞ்ஞானங்கள் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
thuraiyujanthan@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இவ்வுலகில் மனிதப் படைப்பு என்பது புனிதமானதும், மதிக்கப்படக் கூடியதாகவும் காணப்படுகின்றது. இவ்வுலகில் பிறக்கின்ற நபர்கள் இயற்கையாக அல்லது செயற்கையாக நிகழ்கின்ற ஆபத்துக்களுக்கு உள்ளாகி அங்கவீனமுடையவர்களாகவும் மாறுகின்றனர். இருப்பினும் அவ்வாறானவர்களிடத்தில் மாற்றுத்திறன்கள், ஆற்றல்கள், ஆளுமைகள் மறைந்து காணப்படுகின்றன. இவ்வாறு காணப்படும் ஆற்றல்கள், திறன்கள் அடையாளம் காணப்பட்டு அவை வலுப்படுத்தப்படுகின்ற போது அத்தகைய விசேட தேவையுடையவர்கள் சாதனையாளர்களாகவும், வெற்றியாளர்களாகவும், ஆளுமையுள்ளவர்களாகவும் மாறுகின்றனர். (செல்வநாயகம். இ, இரவீந்திரன். ஆ, - 2007) இவ்வாறான மாற்றுத்திறனாளர்கள் சமூகத்தின் மத்தியிலிருந்து ஓரங்கட்டப்படாது அவர்களை மனிதாபிமானத்துடன் அணுகப்படுவதும், அவர்களின் உரிமைகள் மதிக்கப்படுவதும் அவசியமானதாகக் கருதப்படுகின்றது. இத்தகையதொரு சூழ்நிலைகளில் மாற்றுத்திறனாளர்கள் சமூகப் பிறழ்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு புறக்கணிக்கப்படுகின்றமையை ஆய்வுப் பிரதேசத்தில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இந்தவகையில் இவ்வாய்வின் பிரச்சினையாக "மாற்றுத்திறனாளர்கள் ஓரங்கட்டப்படுதலுக்கு உள்ளாக்கப்படுதல்" எனும் அடிப்படையில் தரரீதியான மற்றும் எண் ரீதியான முறைமையியல்களுக்கூடாக, மாற்றுத்திறனாளர்கள் சமூகத்தில் ஓரங்கட்டப்படுவதற்கான காரணங்களை கண்டறிவதோடு அதனால் ஏற்படும் சமூகப் பொருளாதார தாக்கங்களை கண்டறியும் நோக்கோடு நோக்க மாதிரியை பயன்படுத்தி வினாக்கொத்து, தனியாள் விடய ஆய்வு, நேரடி அவதானிப்பு போன்ற முறைகள் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகள் அனைத்தும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு, விகிதாசாரங்கள், புள்ளிவிபரங்கள், போன்றவையும் வட்ட வரைபுகள், சட்ட வரைபுகள் போன்றவை குறித்துக் காட்டப்பட்டு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வறுமை, பாடசாலைக் கல்வி, சமூக அடக்குமுறை, தனிமனித உறவு என்பவற்றின் நிமித்தம் இவர்கள் ஓரங்கட்டப்படுவதோடு சுகாதாரப் பாதுகாப்பு, ஆதரவின்மை, சேவைகளுக்கான தடைகள், பெற்றோர்களின் பங்களிப்புக்குறைவு, என்பவற்றுக்கு மாற்றுத்திறனாளர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களிலும், புறக்கணிப்படும் நிலைக்கு ஆளாக்கப்படுபவர்களாகக் காணப்படும் நிலையினையும் இவ்வாய்வின் மூலம் கண்டுகொள்ள முடிந்தது.

திறவுச் சொற்கள்: மாற்றுத்திறனாளர்கள், ஓரங்கட்டப்படுதல், சார்ந்திருத்தல், களங்கம், மனிதாபிமானம்

1. ஆய்வு அறிமுகம்.

உடல் ஊனமுறுதல் என்பது ஆரம்ப காலம் முதல் இன்று வரை தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருந்து வருகின்றது. பண்டைய காலத்தில் உடல் ஊனமுற்றவர்கள் நாட்டுக்கு நாடு பல்வேறு விதமாக நோக்கப்பட்டு நடத்தப்பட்டு வந்தார்கள். எனினும் அக்காலத்தில் ஒட்டுமொத்தமாக இவர்களின் நிலை மிகவும் பரிதாபத்துக்கு உரியதொன்றாகக் காணப்பட்டது. இதன் காரணமாக இவர்கள் உடல் ஊனமுற்றவர்களை சமூகத்தில் சுமைகள் எனவும், வாழத் தகுதியற்றவர்கள் எனவும் கருதினர். இதன் காரணமாக "உடல் ஊனமுற்ற ஒருவர் கருவறையிலிருந்து வெளிவந்த உடனேயே அதனை கல்லறைக்கு அனுப்பவும் யுத்த சூழ்நிலைக்கு முகங்கொடுத்த பண்டைய கிரேக்க நாட்டவர்கள் தயங்கவில்லை" என கிரேக்கர்கள் பற்றிய செய்திகளில் கூறப்படுகின்றது. இதன் அடிப்படையில் எமது நாட்டைப் பொறுத்தவரையில் இவர்கள் பயனற்றவர்களாகவும், சமூகத்தின் சுமைகளாகவும், எப்போதும் மற்றவர்களின் தயவில் வாழ வேண்டிய பரிதாபத்துக்குரியவர்களாகவும் நோக்கப்பட்டனர்.

சமூகத்தில் ஒவ்வொரு மக்களுக்கும் உரிய சமூகமயமாதற் செயற்பாடு வினைத்திறனுடையதாக அமைகின்ற போதுதான் தனிநபர் உரிமையையும், சுதந்திரத்தையும் நிலைநிறுத்திக் கொள்ள முடியும். அதே போன்று இவை மறுக்கப்படுகின்ற போது அங்கு ஓரங்கட்டப்படுகின்ற நிலமைக்கு ஆளாக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஏனைய மனிதர்களை விட மாற்றுத்திறனாளிகள் உடல், உள ரீதியான விதத்தில் வேறுபட்டுக் காணப்படுவதனால் அவர்கள் எந்தவித தடைகளுமின்றி சமூக செயற்பாட்டில் முழுமையாக பங்கு கொள்ள வைக்கின்றமை மிக முக்கியமானதொரு விடயமாகும். இத்தகைய சந்தர்ப்பத்தில் தான் சமூக செயற்பாட்டில்

சமூகத்தில் காணப்படுகின்ற பொதுச்சட்டங்கள் மாற்றுத் திறனாளிகளின் தேவைகள் நோக்கங்களுக்கு ஏற்றதாக அமைகின்றதா என்பது கேள்விக்குரிய விடயமாகும். இதனால் எல்லோருக்கும் பொதுவான சட்டங்கள் அமைவது சாத்தியமா? என்ற கேள்விகளும் மாற்றுத் திறனாளிகள் பற்றிய அக்கறை உடையவர்களுக்கு ஏற்படலாம்.

இதன்படி இவ்வாய்வின் சுருக்கமானது சமூகத்தில் மாற்றுத்திறனாளர்களின் உடலியல், உளவியல் சார்ந்த பிரச்சினைகளை தீர்மானிக்கின்ற காரணிகளாக குடும்பச் சூழல், கல்விச்சூழல், நண்பர்கள், பருவநிலை, சமூகச்சூழல், இடமாற்றம், தொழில், மதம், சம்பிரதாயம், கடமை, தேவை, நோக்கம் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன. இவை மறுக்கப்படுகின்ற போது மாற்றுத்திறனாளர்கள் சமூகத்தில் ஓரங்கட்டப்படும் நிலைக்குத் தள்ளப்படுகின்றானர். இதனாலேயே மேற்கூறப்பட்ட காரணிகள் விசேட தேவையுடைய மாற்றுத்திறனாளிகள் மத்தியில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. இத்தகைய விடயங்கள் மூலமாக எத்தகைய பாதிப்பினை மாற்றுத்திறனாளிகள் எதிர்நோக்குகின்றனர் என்பதை இயல்பான மனித சமூகத்திற்கும், மாற்றுத்திறன் உடைய சமூகத்திற்கும் எவ்வாறு புரிய வைக்கலாம், இதற்கான சரியான வழிமுறைகள் என்ன, என்பதனை சமூக ஆய்வு முறை கொண்டு கோறளைப்பற்று பிரதேச செயலகத்தினை ஆய்வுக்களமாகக் கொண்டு அங்குள்ள மாற்றுத் திறனாளிகள் ஓரங்கட்டப்படும் நிலைகளை இவ்வாய்வின் மூலமாக வெளிப்படுத்த முடிந்தது.

இதனடிப்படையில் கோறளைப்பற்று பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 12 கிராம சேவகர் பிரிவுகள் காணப்படுகின்றது. இங்கு விசேட தேவையுடைய மாற்றுத்திறனாளிகள் 634 பேர் காணப்படுகின்றனர். இத்தகைய மாற்றுத்திறனாளிகள் சமூகத்தில் எவ்வாறு இனங்காணப்படுகின்றார்கள் என்றால் தங்களுடைய நாளாந்த செயற்பாடுகளை, தமது அடிப்படை தேவைகளை தங்களால் பூர்த்தி செய்து கொள்ள முடியாமல் ஏனையோர்களின் உதவியினை நாடி நிற்கின்றவர்களாக இவர்கள் இனங்காணப்படுகின்றனர். குறிப்பாக கண் பார்வையற்றவர்கள், செவிப்புலனற்றவர்கள், மனவளர்ச்சி குன்றியவர்கள், ஆரோக்கியக் குறைபாடுகள் என பல்வேறுபட்ட குறைபாடுகளுடன் இவ் ஆய்வுப் பிரதேசத்தில் விசேட தேவையுடையவர்கள் அடையாளம் காணப்பட்டு நோக்கப்படுகின்றனர்.

குறிப்பாக இவ்வாய்வுப் பிரதேசத்தில் பல்வேறு விதமான மாற்றுத்திறனாளிகள் காணப்படுகிறார்கள். இவர்கள் இயலாமை உடையவர்களாகக் காணப்படுவதனால் பல்வேறு வழிகளிலும் சமூகத்தில் ஓரங்கட்டப்படுதலுக்கு உள்ளாகின்றமையையும், சமூகப் பொருளாதார ரீதியாக மாற்றுத் திறனாளிகள் புறக்கணிக்கப்படுகின்றதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. குறிப்பாக வறுமை, பாடசாலைக் கல்வி, சமூக அடக்குமுறை, தனிமனித உறவு என்பவற்றின் நிமித்தம் இவர்கள் ஓரங்கட்டப்படுவதோடு சுகாதாரப் பாதுகாப்பு, ஆதரவின்மை, சேவைகளுக்கான தடைகள், பெற்றோர்களின் பங்களிப்புக்குறைவு, சமூக சமத்துவமின்மை, குறைந்த கட்டுப்பாடுடைய சூழல் என்பவற்றுக்கும் மாற்றுத்திறனாளிகள் முகங்கொடுக்கும் தடைகளுடன் பயணிப்பவனவாக அமைந்தது.

இத்தகையதொரு சூழ்நிலைகளில் மாற்றுத்திறனாளிகள் சமூகப் பிறழ்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு புறக்கணிக்கப்படுகின்றமையை ஆய்வுப் பிரதேசத்தில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இதனால் சமூகத்தில் காணப்படுகின்ற எத்தகைய நபர்களாக இருந்தாலும் ஓரங்கட்டலுக்கு

உள்ளாக்கப்படுதல் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகக் காணப்பட்டது. ஒரு ஆய்வாளன் என்ற அடிப்படையில் இத்தகையதொரு சூழ்நிலையில் உள்ள பகுதியில் காணப்படுகின்ற போது இவை தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். எனவே தான் இத்தகைய நிலையில் மாற்றுத்திறனாளிகள் ஓரங்கட்டப்படுதலுக்கான வழிமுறைகளை கண்டறிவதற்கான ஒரு ஆய்வாக இது அமைந்துள்ளது.

2. ஆய்வுப் பிரச்சினை (Research Problem)

இவ் ஆய்வுக்குரிய ஆய்வுப் பிரச்சினையாக "கோறளைப்பற்று பிரதேச செயலகப்பிரிவில் வாழுகின்ற மாற்றுத்திறனாளிகள் ஓரங்கட்டப்படுதலுக்கு உள்ளாகுதல்." இங்கு மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளுகின்ற முக்கிய பிரச்சினையாக "மாற்றுத்திறனாளர்கள் ஓரங்கட்டப்படுதலுக்கு உள்ளாக்கப்படுகின்ற" நிலைமை முன்வைக்கப்படுகின்றது. அதாவது இவ் ஆய்வுப் பிரதேசத்தில் வாழுகின்ற மாற்றுத்திறனாளிகள் இயலாமை உடையவர்களாகக் காணப்படுவதனால் பல்வேறு வழிகளிலும் சமூகத்தில் ஓரங்கட்டப்படுதலுக்கு உள்ளாகின்றமையையும், சமூகப் பொருளாதார ரீதியாக மாற்றுத் திறனாளிகள் புறக்கணிக்கப்படுகின்றதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. குறிப்பாக வறுமை, பாடசாலைக் கல்வி, சமூக அடக்குமுறை, தனிமனித உறவு என்பவற்றின் நிமித்தம் இவர்கள் ஓரங்கட்டப்படுவதோடு சுகாதாரப் பாதுகாப்பு, ஆதரவின்மை, சேவைகளுக்கான தடைகள், பெற்றோர்களின் பங்களிப்புக்குறைவு, சமூக சமத்துவமின்மை, குறைந்த கட்டுப்பாடுடைய சூழல் என்பவற்றுக்கு மாற்றுத்திறனாளிகள் பல்வேறு சந்தர்ப்பங்களிலும், புறக்கணிப்படும் நிலைக்கு ஆளாக்கப்படுபவர்களாகக் காணப்பட்டனர்.

3. ஆய்வுக் கருதுகோள் (Research Hypothesis)

இத்தகைய ஆய்வின் கருதுகோளாக "கோறளைப்பற்று பிரதேச செயலகப்பிரிவில் காணப்படுகின்ற சமூகப், பொருளாதார ரீதியான வறுமையே மாற்றுத்திறனாளிகள் சமூகத்தில் ஓரங்கட்டலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்." என முன்வைக்கலாம். குறிப்பாக இங்கு மாற்றுத்திறனாளிகள் ஓரங்கட்டப்படுவதற்கான ஒரு கருதுகோளாக சமூகப் பொருளாதார ரீதியான வறுமையே முக்கிய காரணம் என்ற கருதுகோளைக் குறிப்பிடலாம்.

4.ஆய்வின் நோக்கம் (Objective Of the Research)

"மாற்றுத்திறனாளர்கள் சமூகத்தில் ஓரங்கட்டப்படுவதற்கான காரணங்களை கண்டறிவதோடு, அதனால் ஏற்படும் சமூகப் பொருளாதார தாக்கங்களை கண்டறிதலும்."

4.1 உப நோக்கங்கள்

1.மாற்றுத்திறனாளர்கள் ஓரங்கட்டப்படுவதற்கான காரணங்களை இனங்காணுதல்.

2.ஆய்வுப் பிரதேசத்தில் மாற்றுத்திறனாளர்களின் சமூக நிலைமைகளை விபரித்தல்.

3.மாற்றுத்திறனாளர்களின் சமூகப் பொருளாதார பங்களிப்புக்கான வாய்ப்புக்களை பரிசீலனை செய்தல்.

4.மாற்றுத்திறனாளர்களின் செயற்பாடுகளை சமூக மேம்பாட்டுக்கு உதவும் வகையில் பரிந்துரைகளை முன்வைத்தல்.

5.ஆய்வு வினாக்கள் (Research Question)

1. மாற்றுத்திறனாளிகள் ஏன் ஓரங்கட்டப்படுகின்றனர், அதற்கான காரணங்கள் என்ன?
2. சமூகத்தில் மாற்றுத்திறனாளிகளின் செயற்பாடு, வகிபங்கு எத்தகையது?
3. சமூகத்தில் வறுமையை ஏற்படுத்தும் சமூகப், பொருளாதாரக் காரணியின் பங்கு எத்தகையது?
4. மாற்றுத்திறனாளிகள் தொடர்பான சமூகத்தின் பங்களிப்பு, செயற்பாடு எத்தகையது?

6. ஆய்வுக் கோட்பாடு (Research Theory)

கோட்பாடு என்பது ஆய்வுச் செயற்பாட்டில் முடிவைப் பெற்றுக்கொள்ள உதவுவதோடு இடைத் தொடர்பு கொண்ட மாறிகளின் விசாரணையை ஒழுங்குபடுத்தவும் உதவுகின்றது. இங்கு சமூகத்தோற்றப்பாடுகள் தொடர்பாகக் காணப்படக்கூடிய பல்வேறு விடயங்களை ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட வகையில் ஒரு சுருங்கிய வடிவில் ஒரு தொகுதியாக அணுகி விளக்கமளித்தல் கோட்பாடு எனக் குறிப்பிடப்படுகின்றது. வேறுவகையில் கூறின் குறித்த தோற்றப்பாடு தொடர்பாக அவதானித்த விடயம் அல்லது உண்மை எவ்வாறு நிகழ்கின்றது எனும் விளக்கங்களை உள்ளடக்கிய ஒரு சட்டகம் கோட்பாடு என அழைக்கப்படுகின்றது.

அந்தவகையில் இவ்வாய்வில் ஏர்வின் கொப்மனின் (Erving goffman) சமூகவடு (stigma) எனும் கோட்பாடு அடிப்படையாகக் கைக்கொள்ளப்பட்டது. இக் கோட்பாட்டில் அவர் வடு (களங்கம்) எனும் எண்ணக்கருவை அறிமுகப்படுத்தினார். இவ்வெண்ணக்கருவை அவர் அங்கவீனத்தால் பாதிக்கப்பட்ட, வடுவுக்குள்ளாக்கப்பட்ட ஒருவரது நெருங்கிய உறவுகளுக்கு பரவுகின்ற ஒரு சமூகவடு என வரையறை செய்கின்றார். (Goffman 1963, page30). அதாவது அங்கவீனர்களை பராமரிக்கின்ற குடும்ப உறுப்பினர்கள் பராமரிப்பாளர்களுக்கு அனுபவ ரீதியாக ஏற்படுகின்ற சமூக ரீதியான அந்தஸ்த்து சார்ந்த அசௌகரியங்கள், அவமானங்கள் என்பன இதனுள் உள்ளடங்குகின்றன. அதாவது சமூக ரீதியான அசமத்துவம் என்பதை அங்கவீனத்திற்குரிய நபர்கள் மட்டுமன்றி அவர்களைச் சார்ந்த உறவுகளையும் பாதிக்கின்ற ஒரு விடமாகக் கருதப்படுகின்றது. குடும்ப ரீதியில் முழுக்குடும்ப உறுப்பினர்களதும் வாழ்க்கைச் சந்தர்ப்பங்களால் பாதிக்கப்படக் கூடிய விடயமாகக் காணப்படுகின்றது. கொப்மனினுடைய கோட்பாடானது அங்கவீனத்திற்கும், அசமத்துவத்திற்கும் இடையிலான தொடர்புகளை அங்கவீனர்களை மையப்படுத்தியதோடு மட்டுமன்றி அவர்கள் எவ்வாறு சமூகத்தில் ஓரங்கட்டப்படுகின்றனர் என்பதைப் பற்றியும் தெளிவுபடுத்தியுள்ளார்.

குறிப்பாக இவர்களைப் பராமரிப்பவர்கள், அவர்களைச் சார்ந்துள்ளவர்கள் எதிர்கொள்கின்ற சிக்கல்கள் தொடர்பாகவும் கலந்துடையாடுவதாக இது அமைந்துள்ளது. வடு காரணமாக சமூகத்தில் உள்ள விசேட தேவையுடையவர்கள் எவ்வாறான ஏற்றத்தாழ்வுகளுக்கு உள்ளாகி

அவர்கள் ஓரங்கட்டப்படும் நிலைக்கு தள்ளப்படும் தன்மையானது இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். இந்தவகையில் தான் ஆய்வுப் பிரதேசமான வாழைச்சேனைப் பிரதேசத்தில் மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளுகின்ற சவால்கள், பிரச்சனைகளைக் கண்டறிதல், மற்றும் இவற்றின் மூலமாக ஓரங்கட்டப்படுகின்ற தன்மையினைக் கண்டறியும் சந்தர்ப்பங்களை விளங்கிக்கொள்ளும் நோக்கில் இத்தகைய கொப்மனின் சமூகவடு பற்றிய கோட்பாடானது இவ்வாய்வுக்குரிய கோட்பாடாக முன்வைக்கப்பட்டதாகும். (Goffman.e, 1963).

7. ஆய்வு முறைமையியல் (Research Methodology)

இவ்வாய்வில் தரரீதியான மற்றும் எண் ரீதியான முறைமையியல்களும், இரண்டும் சேர்ந்த ஒப்பீட்டு ஆய்வு முறைமையியல் என மூன்று வகையாக நோக்கப்படுகின்றது.

8. தரவு சேகரிப்பு முறை

குறிப்பாக முதல்நிலைத் தரவுகளான நேர்காணல், அவதானம், நேர்நிலைக் கள ஆய்வு, பிரதேச செயலாளர், கிராம சேவை உத்தியோகத்தர், ஊர்மக்கள், பெரியவர்கள் போன்றவர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வினாக்கொத்துக்களை தயாரித்து வழங்குவதன் மூலமும் தேவையான தரவுகள் இம்முறையில் பெறப்பட்டது. ஆய்வு விடயம் சம்பந்தமான நூல்கள், அறிக்கைகள், சஞ்சிகைகள், ஒலிநாடாக்கள், வீடியோக்கள், கட்டுரைகள், நாட்குறிப்புக்கள், பிரதேச செயலகத்தின் மூலவளத்திரட்டு, இணையம் போன்ற அனைத்து இரண்டாம் நிலைத்தரவுகளும் இங்கு பயன்படுத்தப்பட்டது. குறிப்பாக மாற்றுத்திறனாளிகள் சார்ந்த தெளிவான விளக்கங்கள், விடயங்கள் என்பவற்றை புள்ளிவிபரக்கணிப்பு, புத்தகங்கள், இணையங்களின் மூலங்கள் ஊடாக ஆதாரம் காட்டப்பட்டுள்ளது.

9. மாதிரி எடுப்பு முறை. (Research sample)

கோறளைப்பற்று பிரதேச செயலகப்பிரிவில் 12 கிராமசேவகர் பிரிவுகள் காணப்படுகின்றது. இவற்றில் ஒட்டுமொத்தமாக 634 மாற்றுத்திறனாளிகள் உள்ளனர். இவற்றில் ஆய்வுக்காக 3 கிராம சேவகர் பிரிவுகளை 25மூ வீதத்தின் அடிப்படையில் தெரிவு செய்ததோடு, அந்த 3 கிராமங்களில் காணப்பட்ட மொத்த மாற்றுத்திறனாளிகள் 322 இல் இருந்து 25மூ மானவர்கள் குறிப்பாக 80 மாற்றுத்திறனாளிகள் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆகவே 3 கிராம சேவகர் பிரிவுகளிலுமிருந்து 80 மாற்றுத்திறனாளிகள் ஆய்வுக்கான மாதிரிகளாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இவர்கள் வெவ்வேறு குறைபாடுகளைக் கொண்டவர்களில் இருந்து நோக்க மாதிரியாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அட்டவணை :1.1 ஆய்வுக்காக தெரிவு செய்த மாதிரிகள்

D.S. Division	Vision impared (01 eye)	Vision impared (both eyes)	Amputee hand (01 hand)	Amputee hand(both hand)	Ambutee leg (01 leg)	Amputee leg (both legs)	Speech impared	Hearing impared	Def &dum	slow learner	C P	MR	Spinal cord injury	Stroke	multiple disability	Total
Kannaki puram	4	1	5	3	3	2	1	3	2	1	1	1	1	1	1	30
kalmadu	2	1	3	2	4	3	2	2	1	2	2	1	1	1	1	28
kinniyadi	1	1	2	1	2	2	3	1	2	1	2	1	1	1	1	22
totel	7	3	10	6	9	7	6	6	5	4	5	3	3	3	3	80

10.தரவுப் பகுப்பாய்வும், கலந்துரையாடல்களும்

10.1 மாற்றுத்திறனாளர்களின் அடிப்படை நிலைமைகள்

மாற்றுத்திறனாளர்களின் அடிப்படை நிலமைகளை வலுவிழத்தல் வகைகளின் அடிப்படையில் பார்க்கின்ற போது 80 (100 வீதம்) மாற்றுத் திறனாளர்களில் 11% வீதமானோர் பார்வைக் குறைபாடு உடையவர்களாகவும், 9% மானவர்கள் கைகள் துண்டிக்கப்பட்டும் காணப்படுகின்றனர். இவற்றுடன் 25% வீதமானோர் கால்கள் துண்டிக்கப்பட்டவர்களாகவும், 10% வீதமானவர்கள் பேசும் இயலுமை அற்றவர்களாகவும் உள்ளனர். மேலும் கேட்டல் தன்மை இயலாமையுடன் 6% வீதமானோரும், மனநோய் உடையவர்களாக 13% வீதமானோரும் காணப்படுகின்ற அதே சந்தர்ப்பத்தில் 8% வீதமானோர் வலிப்பினைக் கொண்டும், 5% வீதமதனோர் பக்கவாதமுடையவர்களாகவும், இவற்றை விட ஏனைய 14% வீதமானோர் பல வலுவிழப்புக்களைக் கொண்டும் காணப்படுகின்றனர். இதன் அடிப்படையில் தரவுப் பகுப்பாய்வில் இருந்து அதிகமானோர் கால்கள் (ஒருகால், இரு கால்கள்) துண்டிக்கப்பட்டவர்களே உள்ளனர் என்ற முடிவு பெறப்பட்டுள்ளது. இத்தகைய மாற்றுத்திறனாளர்களின் வலுவிழத்தல் நிலையானது இவர்கள் ஓரங்கட்டப்படுவதற்கு மிக முக்கியமான காரணியாக அமைகின்றது எனலாம். இவற்றை தரவுப் பகுப்பாய்வின் மூலம் பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் பின்வரும் வரைபடம் விளக்குகின்றது.

வரைபடம்: 1.1 மாற்றுத்திறனாளர்களின் வலுவிழத்தல் வகைப்பாடு.



(மூலம்: கள ஆய்வு 2020)

10.2 மாற்றுத்திறனாளர்களின் பொருளாதார நிலைமைகள்.

ஆய்வுப் பிரதேசத்திற்குற்பட்ட மாற்றுத்திறனாளர்களின் பொருளாதார நிலை தொடர்பாக ஆராய்கின்ற போது நாளாந்த வருமானத்தைப் பெறும் வேலை, வியாபாரம், சுயதொழில், அரசாங்க வேலை போன்ற தொழில் நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபடுபவர்களாகக் காணப்படுவதுடன் குறிப்பிட்ட எண்ணிக்கையிலானோர் தொழிலில் ஈடுபடாதவர்களாகவும் காணப்படுகின்றனர். தொழில் புரிபவர்கள் தங்களது வருமானத்தை மாத வருமானமாகவும், நாளாந்த வருமானமாகவும் பெற்றுக் கொள்வதுடன் தொழில் ரீதியாக பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றனர்.

மாற்றுத்திறனாளர்கள் பொருளாதார நடவடிக்கையின் பொருட்டு ஈடுபடும் தொழில்கள் தொடர்பாக பெற்றுக் கொண்ட தரவுப் பகுப்பாய்வின் மூலம் பெறப்பட்ட முடிவுகள் வெளிப்படுத்தி நிற்கிறது.

வரைபடம்: 1.2 மாற்றுத்திறனாளர்களின் தொழில் பற்றிய விபரம்.



(மூலம்: கள ஆய்வு 2020)

இப்பிரதேசத்தில் காணப்படும் 80 மாற்றுத்திறனாளர்களில் தொழிலில் ஈடுபடுவோர் 29 (36%) பேரும், தொழிலில் ஈடுபடாதோர் 51 (44%) பேராகவும் காணப்படுகின்றனர். இவ்வாறு ஆய்வுப் பிரதேசத்தில் தொழிலில் ஈடுபடும் 29 (36%) பேரில், (100%) 41% வீதமானோர் நாளாந்த வருமானத்தைப் பெறும் கூலித் தொழிலும், 17% வீதமானோர் வியாபாரத் தொழிலிலும், 10% வீதமானோர் அரச தொழிலிலும் ஈடுபடுவதுடன், 31% சுயதொழிலில் ஈடுபடுபவர்களாகவும் உள்ளனர். தொழிலில் ஈடுபடாத 51 பேரும் (44%) வீதமானோர் எந்தவித தொழிலிலும் ஈடுபடாது தொழிலற்றவர்களாகக் காணப்படுகின்றனர். தொழில் புரிபவர்களில் மாத வருமானத்தைப் பெற்றுக் கொள்பவர்களாக 32% வீதமானவர்களும், நாளாந்த வருமானத்தைப் பெற்றுக் கொள்பவர்களாக 68% வீதமானவர்களும் உள்ளனர்.

வரைபடம்: 1.3 மாற்றுத்திறனாளர்களின் வருமானம் பற்றிய விபரம்.



(மூலம்: கள ஆய்வு 2020)

தொழில் புரிகின்ற 29 பேரில் ரூபா 5000 வருமானத்தைப் பெறுபவர்களாக 4 நபர்களும், ரூபா 5000-10000 வருமானத்தைப் பெறுபவர்களாக 7 பேரும், ரூபா 10000-15000 வருமானத்தைப் பெறுபவர்களாகப் 6 பேரும், ரூபா 20000-25000 வருமானத்தைப் பெறுபவர்கள் 7 பேரும் காணப்படுகின்றனர். இதன் அடிப்படையில் ரூபா 15000-20000 வரையான வருமானத்தைப் பெறுபவர்களே அதிகமாக உள்ளமையை இனங்காண முடிகிறது. தொழிலின் மூலம் வருமானத்தைப் பெற்றுக் கொள்பவர்களில் 18 நபர்கள் பெறும் வருமானம் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதியதாக இருக்கவில்லை. ஏனைய 11 நபர்களில் 6 பேரைத் தவிர ஏனையோருக்கு அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பெறும் வருமானம் போதியதாக இருப்பினும் இவ்வருமானம் அவர்களின் வாழ்வாதாரங்களில் ஸ்திரமான நீண்டகால அடித்தளத்திற்கு போதியதாக இருக்கவில்லை என்ற முடிவினைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது.

10.3 மாற்றுத்திறனாளர்களும் கல்வியும்.

ஆய்வுப் பிரதேசத்திலுள்ள மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்காக சமூக பொருளாதார சூழல் அபிவிருத்தி நிறுவனம் (SEED) நடாத்தி வருகின்ற "வலுவூட்டல் வழாகம்" எனும் விசேட பாடசாலை, மாற்றுத் திறனாளர்களுக்கு கல்வியை வழங்கி அவர்களுக்குரிய விசேட திறமைகளை விருத்தி செய்வதற்குரிய களமாக அமைகின்ற போதிலும் இங்கு கல்வியை முழுமையாகப் பூர்த்தி செய்பவர்கள் குறைவாகவே காணப்படுகின்றனர். இத்துடன் இங்கு கல்வி கற்று இடை விலகியவர்களே அதிகம் காணப்படுகின்றனர். இங்கு கல்வி கற்று தமது திறமைகளின் ஊடாக தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டவர்களாக 10 நபர்கள் காணப்படுகின்றனர். ஆனால் சிலர் தமது திறமைகளை வெளிக்காட்டியும் அதற்குரிய தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலே காணப்படுகின்றனர். இதற்குக் காரணம் தொழில் மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான ஆர்வம் பெற்றோர்களுக்கும், பிள்ளைகளுக்கும் குறைவாக இருப்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது.

ஆய்வுப் பிரதேசத்தின் கல்வி நிலை தொடர்பாக ஆராய்கின்ற போது 80 மாற்றுத் திறனாளர்களில் அதிகளவான எண்ணிக்கையிலானோர் தரம் 6-10 வரை மட்டுமே கல்வி கற்றவர்களாக உள்ளதுடன் தரம் 11, 12 வரையில் கல்வி கற்றவர்களாகவும், ஒரு சிலர் உயர்தரத்திற்கு முயற்சித்தவர்களாகவும் காணப்படுகின்றனர். இவை பற்றிய விபரங்களை தரவுப் பகுப்பாய்வின் முடிவுகளின் அடிப்படையில் பின்வரும் அட்டவணை, வரைபடம் விபரிக்கின்றது.

அட்டவணை: 1.2 மாற்றுத்திறனாளர்களின் கல்வி நிலை.

கல்வி நிலை	எண்ணிக்கை	வீதம்
தரம் 5 வரை	23	29%
தரம் 6-10 வரை	29	36%
தரம் 11	15	19%
தரம 12	13	16%

(மூலம்: கள ஆய்வு 2020)

வரைபடம்: 1.4 மாற்றுத்திறனாளர்களின் கல்வி நிலை.



(மூலம்: கள ஆய்வு 2020)

இங்கு தரம் 5 வரை கல்வி கற்றவர்கள் 29% வீதமானவர்களும், தரம் 6-10 வரை கல்வி கற்றவர்கள் 36% வீதமானவர்களும், தரம் 11 இல் 19% வீதமானவர்களும், தரம் 12 இல் 16% வீதமானவர்களும் கல்வியினைக் கற்றவர்களாகக் காணப்படுவதனை தரவுப்பகுப்பாய்வின் முடிவுகள் எடுத்தியம்புகின்றது.

10.4 மாற்றுத்திறனுடைய பிள்ளைகளுக்கான வளர்ச்சியில் பெற்றோர்களின் பங்களிப்புக்கள்.

பெற்றோர்களின் பங்களிப்பு என்பது மாற்றுத்திறனுடைய பிள்ளைகளுக்கு அவசியமானதாகக் காணப்படுகின்றது. குறிப்பாக இவ் ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படுகின்ற மாற்றுத்திறனுடைய பிள்ளைகளுக்கான குடும்ப அரவணைப்பு, பாசம், சுதந்திரம் என்பன மறுக்கப்படும் நிலையிலேயே காணப்படுவதனை அவதானிக்க முடிந்தது. குடும்பத்தில் தாயினுடைய அன்பு என்பது ஏனைய சாதாரண பிள்ளைகளின் அன்பை விட குறைவானதாகவே காணப்பட்டது. அதாவது ஏனையவர்களிடம், சமூகத்தவர்களிடம் இப் பிள்ளைகளை வெளிப்படுத்துவதில் தயக்கம் உடையவர்களாகவே காணப்படுகின்றனர். இப் பிள்ளைகளை முன்வைத்து சேவைகளை, உதவிகளைப் பெற்றுக் கொள்கின்ற ஆர்வம் இந்த பிள்ளைகளைப் பராமரிப்பதில் குறைவானதாகவே உள்ளது என்பதனை ஆய்வுக்காக வழங்கப்பட்ட தரவுகளில் இருந்து விளங்கிக் கொள்ள முடிகிறது. இதற்குக் காரணம் குடும்பத்தில் தந்தை வேலைக்குச் செல்வதால் தாய் வீட்டு வேலைகளையும் ஏனைய பிள்ளைகளையும் பராமரிப்பதனாலும் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதனாலும் இப் பிள்ளைகளைப் பராமரிப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

வரைபடம்: 1.5 மாற்றுத்திறனுடைய பிள்ளைகளுக்கான வளர்ச்சியில் பெற்றோர்களின் பங்களிப்புக்கள்.



(மூலம்: கள ஆய்வு 2020)

இங்கு பெற்றோர்களின் பங்களிப்பானது மிக நன்று என 44 நபர்களும் 55% வீதமானவர்களும், நன்று என 23 நபர்களும் 29% வீதமானவர்களும், ஓரளவு என 9 நபர்களும் 11% வீதமானவர்களும், குறைவு என 4 நபர்களும் 5% வீதமானவர்களும் பதிலளித்துள்ளமை குறிப்பிடத்தக்கன. இங்கு மிக நன்று என கூடுதலான மாற்றுத்திறனாளிகள் பதில்களை முன்வைத்தமையால் பெற்றோர்களின் பங்களிப்பானது போதியளவாகக் காணப்படுகின்றது. ஆனால் குறைவு என பதிலளித்தவர்கள் தொடர்பான கவனம் என்பது இங்கு முக்கியமானதாகும்.

11.5 மாற்றுத்திறனாளர்களும் சுகாதார மருத்துவ நிலைகளும்.

குறிப்பாக இங்கு காணப்படுகின்ற வைத்தியசாலையானது பிரதான வீதியில் அமைந்திருப்பதனால் போக்குவரத்து வசதியற்ற மாற்றுத்திறனாளர்கள் மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தூர இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலையும் காணப்படுகின்றது. இவர்கள் போக்குவரத்தை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்வதனாலும், பொருளாதார பலம் அற்றவர்களாக இருப்பதனாலும் தூர இடங்களுக்குச் சென்று மருத்துவ வசதிகளைப் பெறுவதில் சில மாற்றுத் திறனாளிகள் ஆர்வம் காட்டாதவர்களாக உள்ளனர். இதனால் தமது வலுவிழப்பு நிலையிலிருந்து சற்றேனும் மீள முடியாதுள்ளனர். இதனால் அவர்கள் தம் வலுவிழப்பு நிலையுடன் சமூகத்தில் இன்னல்களை அனுபவித்தவாறு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்பதனை அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. மாற்றுத்திறனாளர்களுக்கு சுகாதார, மருத்துவ வசதிகள் என்பது மிகவும் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. இவ் வசதிகள் கிடைக்கப் பெற்றாலே அவர்கள் சமூகத்தில் தமது தேவைகளை நிறைவேற்றி சமூக செயற்பாடுகளில் பங்குகொள்ள முடியும். இன்றைய உலகில் சுகாதார மருத்துவத் துறையானது உயர்வடைந்து காணப்படுகின்ற போதிலும் சுகாதார மருத்துவ வசதிகள் சமூகத்தில் உள்ள அனைத்து நிலைகளிலும் உள்ள மக்களுக்கும் கிடைப்பதில்லை.

அதிலும் குறிப்பாக மாற்றுத்திறனாளர்களுக்குக் கிடைப்பது என்பது அரிதாகவே உள்ளது. இருப்பினும் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் மாற்றுத் திறனாளர்களுக்கான விசேட செயற்திட்டங்களினூடான சிறந்த மருத்துவ வசதிகள் கிடைக்கப் பெறுகின்றன. இதனால் அங்குள்ள மாற்றுத் திறனாளர்கள் பயனடையும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. ஆனால் இத்தகைய நிலை அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் குறைவாகவே காணப்படுகின்றது. இதிலும் நகர்ப் பிரதேசத்தில் வாழுகின்ற மாற்றுத்திறனாளிகளை விட கிராம பிரதேசங்களில் வாழுகின்ற மாற்றுத்திறனாளர்களே சுகாதார மருத்துவ வசதிகள் இன்மையால் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். எனவே சுகாதார மருத்துவ வசதிகள் இவ் ஆய்வுப் பிரதேசத்திலுள்ள மாற்றுத் திறனாளர்களுக்குப் போதியளவு கிடைக்கப் பெறாமையானது அவர்கள் சமூக ரீதியில் ஓரங்கட்டப்படுவதற்கு மிக முக்கியமான காரணியாக விளங்குகின்றது.

11.6 மாற்றுத்திறனாளர்களின் போசாக்கு நிலை.

ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்ட மாற்றுத் திறனாளர்களிடம் போசாக்கு நிலை பற்றி வினவிய போது உங்களுக்குரிய போசாக்கான உணவுகளைப் பெற்றுக் கொள்கிறீர்களா? என்ற

வினாவிற்கு சிலர் ஆம் என்ற பதிலையும், சிலர் இல்லை என்ற பதிலையும் அளித்தனர். மாற்றுத் திறனாளர்களுக்குரிய நாளாந்த உணவுகளில் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய போசாக்கான உணவு என்பது மிகவும் முக்கியத்துவம் உடையதாகக் காணப்படுகின்றது. ஆரோக்கியமாக வாழும் வாழ்க்கையானது மாற்றுத்திறனாளர்களின் முன்னேற்றத்திற்கு அடிப்படைக் காரணியாக அமைகின்றது. போதியளவு போசாக்கான உணவுகள் கிடைக்கப் பெறாமையானது மாற்றுத் திறனாளர்களின் ஆரோக்கியமான வாழ்க்கைக்குத் தடையாக அமைகின்றது. அந்தவகையில் போசாக்கு நிலை தொடர்பாக மாற்றுத் திறனாளர்களிடம் வினவிய போது நன்று என 21 நபர்களும் 26% வீதமானவர்களும், குறைவு என 27 நபர்களும் 34% வீதமானவர்களும், மிகக் குறைவு என 10 நபர்களும் 12% வீதமானவர்களும் பதிலளித்துள்ளனர். இங்கு குறைவு என பதிலளித்தவர்களின் எண்ணிக்கையே அதிகமாகக் காணப்படுகின்றது. இதற்கான காரணமாக வறுமை, தொழில் வாய்ப்பின்மை போன்ற காரணங்களையே இவர்கள் முன்வைத்தனர். இதன் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுப் பகுப்பாய்வின் முடிவுகளை பின்வரும் வரைபடம் எடுத்துயம்புகின்றது.

வரைபடம்: 1.7 மாற்றுத்திறனாளர்களின் போசாக்கு நிலை.



(மூலம்: கள ஆய்வு 2020)

இத்தரவுகளின் அடிப்படையில் மாற்றுத் திறனாளர்களுக்கான போசாக்கு நிலை குறைவடைகின்ற போது அவர்களின் ஆரோக்கியத்திலும் குறைபாடுகள் ஏற்படுகின்றது. ஆய்வுப் பிரதேசத்திலுள்ள வ. கண்ணையா (கண்ணகிபுரம்) என்பவர் கூறியதாவது "நாங்கள் ஒரே வீட்டில் வசிக்கின்றோம். குடும்பத்திலுள்ள ஏனையவர்களைப் பராமரிப்பதற்குப் போதியளவு வருமானம் இன்மையினால் என்னை எவ்வாறு கவனிப்பார்கள் என்று பதிலளித்தார்." இதன் அடிப்படையில் இங்கு போசாக்கு நிலையானது குறைவான அளவிலேயே செயற்படுத்தப்படுவதனை தரவுப் பகுப்பாய்வின் முடிவுகள் மூலம் அறிய முடிகிறது.

13. முடிவுரை

மாற்றுத் திறனாளர்கள் என்பவர்கள் விசேட தேவையுடையவர்களாக சமூக வாழ்க்கையில் காணப்படுவது தவிர்க்க முடியாத ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. அங்கவீனர்களாகப் பிறக்கும் மாற்றுத்திறனாளர்கள் தங்களின் அங்கவீனத் தன்மைகளைக் குறித்து எதுவித புரிந்துணர்வும் இல்லாதவர்களாய் தமது வாழ்வைக் கழித்து வருகின்றனர். எவ்வளவுதான் கஸ்டங்கள், கவலைகள், வேதனைகள், சோதனைகள் வந்தாலும் இவை தொடர்பான புரிந்துணர்வுடனும், விளங்கிக் கொள்ள முடியாதவர்களாகவும் பல்வேறு அனுபவங்களைக் கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். இந்தவகையில் ‘‘கோறளைப்பற்று பிரதேச செயலகப்பிரிவில் வாழுகின்ற மாற்றுத்திறனாளிகளின் ஓரங்கட்டலை மையப்படுத்திய ஓர் சமூகவியல் ஆய்வு.’’ எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் ஆய்வுப் பிரச்சினையாக மாற்றுத்திறனாளர்கள் பொருளாதார ரீதியாக வறுமையானவர்களாக இருப்பதுடன் அவர்கள் சமூகத்தவர்களால் குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டு ஓரங்கட்டப்படுகின்றனர். இதனால் உடலியல், உளவியல் ரீதியாகப் பாதிப்படைந்து அவர்கள் தமது மேம்பாட்டுக்குத் தேவையான செயற்பாடுகளில் ஈடுபடாமல் விலகியுள்ளனர். இதனால் அவர்களின் முன்னேற்றம் பாதிப்படைந்துள்ளது என்பதனை மையமாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மாற்றுத் திறனாளர்கள் சமூகத்தில் ஓரங்கட்டப்படுவதற்கு அவர்களது பொருளாதார ரீதியான வறுமை நிலையே அடிப்படையாக அமைந்துள்ளது. இதனால் இவர்கள் சமூகத்தில் பொருளாதாரம், தொழில் வாய்ப்புக்கள், கல்வி, தேவைகள், சமூக அந்தஸ்து போன்றவற்றை பூரணமாக பெற்றுக் கொள்ள முடியாது பின்னடைபவர்களாக உள்ளனர்.

குறிப்பாக மாற்றுத் திறனாளர்கள் உடல், உள இயலாமையைக் கொண்டிருப்பதால் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர் கொள்பவர்களாகக் காணப்படுகின்றனர். இதனால் சாதாரணமான தொழில்களிலே ஈடுபடுகின்றனர். இதனால் இவர்களிடம் பொருளாதார பற்றாக்குறை ஏற்பட்டு வறுமையான வாழ்க்கையினை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவற்றுடன் இவர்கள் கல்வியறிவு குறைவானவர்களாகவும், தமது வலுவிழப்பு நிலை காரணமாக கல்வியினைப் பெற்றுக் கொள்வதில் பல இடர்பாடுகளை எதிர்கொள்பவர்களாகவும் உள்ளனர். அதாவது விசேட கல்வியினை பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் குறைவானதாக இருத்தல், பொருளாதார பற்றாக்குறை, பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வியில் ஆர்வமற்றவர்களாக இருத்தல், பெற்றோர் தமது பிள்ளைகளை குடும்பத்திற்கு வெளிப்படுத்த விரும்பாமை போன்ற இன்னோரன்ன காரணங்களால் கல்வியைத் தொடர முடியாதவர்களாகக் காணப்படுகின்றனர். இவற்றுடன் மாற்றுத் திறனாளர்கள் போக்குவரத்து, தொடர்பாடல், சுகாதார மருத்துவம், உரிமைகள், தேவைகள் என்ற அடிப்படையில் பல்வேறுபட்ட சவால்களுக்கு முகங்கொடுத்து இவர்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாது சமூகத்தவர்களால் பாகுபடுத்தப்பட்டு ஓரங்கட்டப்பட்டு தமது வாழ்க்கையில் மேம்பாடடைய முடியாதவர்களாக உள்ளனர். இதனடிப்படையில் மாற்றுத் திறனாளர்களின் பொருளாதாரம், வலுவிழப்பு நிலை இதனால் இவர்களின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்படல், சமூகப் பாகுபாடு, அந்தஸ்து குறைவடைந்து இருத்தல் என்ற அடிப்படையில் சமூகத்தில் மாற்றுத் திறனாளிகள் புறக்கணிக்கப்பட்டு ஓரங்கட்டப்படுதலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

குறிப்பாக மாற்றுத்திறனாளர்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் குறைபாடுகளைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். இத்தகைய குறைபாடுகளை நாம் ஏளனமாகவோ அல்லது அந்த குறைபாட்டை காரணம் காட்டி அவர்களின் இயலாமையைக் குறை சொல்லுவதோ அவர்களைச் சுற்றியுள்ள ஒவ்வொருவரினதும் எண்ணங்களாகக் காணப்படுகின்றது. இவ்வாறு விசேட திறமையுடைய மாற்றுத் திறனாளர்கள் அங்கவீனர்களாகக் காணப்படுகின்றார்கள் அல்லது குறைபாடுடையவர்களாகக் காணப்படுகின்றனர் என்பதற்கு எதிராக விசேட திறமைகளைக் கொண்டவர்கள் என்ற எண்ணம் வர வேண்டும். குறிப்பாக மாற்றுத் திறனாளர்களின் ஒவ்வொரு குறைபாடுகளும் ஒவ்வொரு திறமைகளாக மதிக்கப்பட வேண்டும். மாற்றுத் திறனாளர்கள் பிறப்பது என்பது யாரிடம் குறைகளாகக் காணப்படுகின்றது என்பதை விட எவ்வாறு இவர்களை சரியாகப் பராமரிப்பது என்பது தொடர்பான அக்கறை எங்கள் ஒவ்வொருவரிடமும் காணப்படுவது அவசியமாகும்.

மாற்றுத்திறனாளர்களை பாதுகாப்பது என்பது பெற்றோர்கள், பாதுகாவலர்களுக்கு மட்டுமன்றி அவர்களைச் சுற்றியுள்ள ஒவ்வொருவரினதும் கடமைகளாகக் காணப்படுகின்றது. மாற்றுத் திறனாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு உடல், உள ரீதியாகவோ பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்பவர்களாகக் காணப்படுகின்றனர். இவை மாத்திரமின்றி சமூக மட்டத்தில் உரிய அந்தஸ்து வழங்கப்படாமை, தமக்குரிய பங்களிப்புக்கள் செயற்படுத்தப்படாமை, பராமரிப்பதில் ஏற்படும் குறைபாடுகள் போன்றவற்றினால் மாற்றுத் திறனாளர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு ஆளாகின்றனர். அத்தோடு மாற்றுத்திறனாளர்கள் இத்தகைய பிரச்சினைகள் நிமித்தம் சமூக மட்டத்தில் ஓரங்கட்டலுக்கு உட்படுதலானது அவர்களை மேலும் வலுவிழப்பு நிலைக்கு உள்ளாக்கப்படுவதனையே அவதானிக்க முடிகின்றது.

ஆகவே இத்தகைய ஓரங்கட்டப்படும் நிலைக்கு மாற்றுத்திறனாளர்களை தடுத்து நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை சமூகத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பினர்களும் மேற்கொள்ள வேண்டிய விடயங்களாகக் காணப்படுகின்றது. தமக்காக, தமது குடும்பத்திற்காக வாழுகின்ற நிலைமைகளில் இருந்து ஒவ்வொரு சமூகத்தவர்களும் மாற்றுத் திறனாளர்களுக்கென உரிய சந்தர்ப்பங்களை வழங்கி அவர்களுக்கு சமூகத்தில் கொடுக்க வேண்டிய அந்தஸ்தினை கொடுப்பதற்கு அக்கறை செலுத்த வேண்டும்.

ஆய்வுப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் மாற்றுத்திறனாளர்கள் ஓரங்கட்டப்படுவதற்கான மிக முக்கியமான காரணியாக பொருளாதார ரீதியாக தொழிலின்மையால் ஏற்படும் வறுமை நிலையே என்பது அடிப்படையாக அமைகின்றது. இத்தகைய வறுமை நிலையிலிருந்து, வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாற்றுத் திறனாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளுவதன் மூலம் இவர்கள் ஓரங்கட்டப்படுவதற்கான சூழ்நிலைகளை ஓரளவேனும் குறைக்க முடியும். தனியே குடும்பம் மாத்திரம் முயற்சி செய்யாமல், சமூகத்தவர்களும் இணைந்து மாற்றுத்திறனாளர்களின் வறுமை நிலைக்கு உதவி செய்வதன் மூலம் அவர்கள் ஓரங்கட்டப்படுவதனை குறைப்பதற்கு முயற்சி செய்ய முடியும். இங்கு ஆய்வுப் பிரதேசத்தில் முற்றுமுழுதாகவே மாற்றுத் திறனாளர்க்ள ஓரங்கட்டப்படுதலைக் குறைக்க முடியாது. படிப்படியாகவே அவர்கள் ஓரங்கட்டப்படுவதனைக் குறைக்க முடியும்.

ஆகவே மாற்றுத்திறனாளர்கள் ஓரங்கட்டப்படும் சந்தர்ப்பங்களையும், சவால்களையும் இனங்கண்டு அவற்றினை வெற்றி கொள்ள உதவக்கூடிய இளம் பராயத்தினர், உறவினர்கள், சமூக அங்கத்தவர்கள், நலன்விரும்பிகள் போன்ற அனைவரினதும் தலையாய பொறுப்பும், கடைமையாகவும் காணப்படுவதோடு முடியுமானவரை தமது முழுப் பங்களிப்பினையும் இவர்களுக்கு வழங்குதல் வேண்டும். இதன் மூலமே மாற்றுத் திறனாளர்களைக் குடும்பத்திலும், சமூகத்திலும் மதிப்புக்குரியவர்களாகவும், சமூக சொத்துக்களாகவும் பேணிக் காக்க முடியும். இதனூடாகவே சமூக, பொருளாதார, கலாசார மற்றும் பண்பாட்டு அடிப்படையில் மாற்றுத் திறனாளர்களைச் சமுதாய நலன் நோக்கில் பாதுகாப்பதுடன் சமூக அபிவிருத்தி மற்றும் வளர்ச்சிக்கும் மாற்றுத் திறனாளர்களைத் துணை புரிய வைக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆகவே மாற்றுத் திறனாளர்களைக் பாதுகாப்போம், எதிர்கால சமூகத்தை மீட்டெடுப்போம்.

உசாத்துணை

1. இராசேந்திரன்.ஈ, (2008), ‘‘சமூகப்பிரச்சினைகள்’’, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், பக்கம்(12-20).
2. கணேசன்.பி.சி, (1992), ‘‘எண்ணங்களை மேம்படுத்துங்கள்’’, கண்ணதாசன் சாலை, தியாகராஜநகர். (பக்கம்:13-28).
3. கிருபாகரன்.சா, (2000), ‘‘சமூக ஆராய்ச்சி முறைகள்’’, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
4. கெலெண்டர்.எ, மென்டிஸ்.ப, நெல்சன்.கு, (1998), ‘‘ஊனமுற்ற ஆட்களின் புனர்வாழ்வு சமுதாயத்தில் சரிசமமான வாழ்க்கைக்கான வாய்ப்புக்களை திட்டமிடும் கைநூல்’’, சௌக்கிய அமைச்சு, பக்கம்(3).
5. கோபாலக்கிருஸ்னண்.என், (1993), ‘‘மனோநலம் ஒரு பார்வை’’, பூம்புகார் பதிப்பகம். (பக்கம்:75-82).
6. சண்முகலிங்கம்.என், (1997), ‘‘மானுடம்’’, சமூகவியல் ஏடு, யாழ் பல்கலைக்கழகம். (பக்கம்: 7-46).
7. சந்திரசேகரம்.ப, (2004), ‘‘அகவிழி, செவித்திறன் குறைவானோருக்கு கற்பித்தல்’’, பக்கம்(19-20).
8. சிவசண்முகராசா.சே, (1998), ‘‘உளநெருக்கீடும் மனநலனும்’’, பாரதிப் பதிப்பகம், பக்கம்(33-34).
9. Asif.A,(2006), “Empowerment” volume 1, Issue 2, cha -Le Disability Resource center, Newsletheor, page (9-15)
10. Anthony giddings, (1993), “sociology”, 2nd edition, polity pressin association with black well publishers.(page:564-617).
11. Badrinath. M, (2003), “just people nothing special nothing unusual, A field workers Introduction to disability, Rights and community besed Rehabilitation”, Bfe, page(1-21)
12. Baskaran .N, (2005), “A newsletter of Actionail India Volume 15”, Actionail International India, page(18-19)
13. Croft .A, (2010), “Consortuim for Research of Educational Access Transitionsand equity, Including Disabled Children in learning challenge in Developing countries, center for International Education”, page(36-39)
14. Finsterbush.k, (1992), “Annual Editions Sociology”, the Dushkin puplishing group Inc,page (101-104)
15. John Farely.E, (1995), “Mijority- Minoroty Relations, third edition”, Prentice-Hall Inc, page(404-407)
16. A collection of case studies ; tracking improvements in the lives of persons with Disabilities “Socio- economic empowerment of conflict affected communities in the Eastern provinces of srilanka (EU-ACAP), page (1-32)
17. Annual performance Reports and Account District secretarist batticaloa, (2019)
18. Disability Handlicap and society, special issue- Rescarching Disability”, (1992), Disability Handicap & society Hansard, page(5-19)
19. Department Circulars and Guidelines , Department of social service Eastern province. (2019).
20. International Day of person with Disabilities 03-12-2018 Empowerment of person with Disabilities”, (2018), Ministry of social servies and social Welfare National secretariat for persons With Disabilities & National council for person With Disabilities, page (1-21).

நவீனமயமாதல் செயன்முறையும் சுதேசிய பழங்குடிகளின் வாழ்வியல் மாற்றங்களும் - அளிக்கம்பை மற்றும் காஞ்சிரங்குடா பிரதேசத்தை மையப்படுத்திய சமூக மானிடவியல் ஒப்பீட்டாய்வு

சு.சதுர்சிகா[1], கு.விக்னேஸ்வரன்[2]
[1,2] சமூக விஞ்ஞானங்கள் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[1]sathu19960810@gmail.com, [2]vigneswarang@esn.ac.lk

ஆய்வுச் சுருக்கம்

இருபதாம் நூற்றாண்டில் அனைத்து உலகையும் மாற்றியமைத்த ஒரு எண்ணக்கருவாக நவீனமயமாக்கல் விளங்குகின்றன. அந்தவகையில் "நவீனமயமாதல் செயன்முறையும் சுதேசிய பழங்குடிகளின் வாழ்வியல் மாற்றங்களும் - அளிக்கம்பை மற்றும் காஞ்சிரங்குடா பிரதேசத்தை மையப்படுத்திய சமூக மானிடவியல் ஆய்வு" என்ற தலைப்பில் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் பிரதான நோக்கம் சமூக பொருளாதார மாற்றங்களானது வனக்குறவர்களது அடையாளத்துவம், சுதேசியத்தன்மை என்பவற்றில் ஏற்படுத்திய தாக்கத்தினை அறிந்து கொள்வதோடு அவை அவர்களது வாழ்வியல் அந்தஸ்த்தில் ஏற்படுத்தும் தாக்கங்களை விபரிப்பதாகும்நவீனமயமாக்கலானது சமூகத்தின் அனைத்துக் கூறுகளிலும் தாக்கங்களை ஏற்படுத்தியது என்றவகையில் அளிக்கம்பையிலும் காஞ்சிரங்குடாவிலும் வனக்குறவர் சமூகமும் இவ்வாறாக நவீனமயமாதல் என்ற பிடியில் சிக்குண்டுள்ளது. இதனால் அவர்கள் தங்களது வாழ்வியல் அம்சங்களை மாற்றிக்கொள்வதற்காக சமூக பொருளாதார ரீதியில் முன்னேற்றங்களை ஏற்படுத்திக்கொண்டுள்ளனர். இதன் விளைவாக அவர்களது சுதேசிய தன்மை, அடையாளம் என்பன மருவிச் சென்று அழிவடையும் தருவாயில் உள்ளது. ஆகவே இவர்களது சமூகத்தில் மாற்றங்கள் ஏற்பட்டாலும் கூட அவர்களுக்கென்றே உரித்தான பாரம்பரிய அம்சங்களை தொடர்ந்தும் பேணி பாதுகாத்துக்கொள்வதற்கான தீர்வு மற்றும் ஆலோசனைகளை அறிவதையும் நோக்காகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது அளிக்கம்பை மற்றும் காஞ்சிரங்குடா பகுதிவாழ் ஒட்டுமொத்த வனக்குறவர் சமூகத்தையும் மையப்படுத்தியதாக உள்ளது. இவ்வாய்வானது பண்பு ரீதியான விவரணப் பகுப்பாய்வு முறையினை பெருமளவில் தழுவி நிற்பதுடன் ஆய்வுக்கான முதலாம் நிலைத்தரவுகள் களஆய்வின் மூலம் பெறப்பட்டது. இவ்வாய்விற்கான மாதிரிகளாக இரு பிரதேசத்திலும் எழுமாற்றாக குடும்பங்கள் பாடசாலை மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். இவ்வாய்வில் பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் அளிக்கம்பை பிரதேசத்தில் அதிகளவிலான சமூக பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டுள்ளபோது காஞ்சிரங்குடா பிரதேசத்தில் அது ஒப்பீட்டளவில் குறைவாக காணப்படுகின்றது. இருப்பினும் இவ் இரு பிரதேசங்களிலும் வனக்குறவர் சமூகத்திற்குரிய தனித்துவ அம்சங்கள் இழக்கப்பட்டுள்ளமையை அறிய முடிந்தது. இதனடிப்படையில் இவ் ஆய்வின் முடிவாக "வனக்குறவர் சமூகத்தில் ஏற்பட்டுள்ள சமூக பொருளாதார மாற்றங்களானது நன்மையளித்தாலும் அவர்களது தனித்துவம் சுதேசிய அடையாளம் என்பவற்றை இழக்கச் செய்துள்ளது" என்ற முடிவுக்கு வரக்கூடியதாக உள்ளது.

திறவுச் சொற்கள்: வனக்குறவர், நவீனமயமாதல், சமூகமாற்றம், சுதேசிய அடையாளம், அந்தஸ்து

1. ஆய்வு அறிமுகம்

பழங்குடியினர் என வகைப்படுத்தப்பட்ட மக்கள் தனக்கென தனிப்பட்ட நாகரிகம், தொன்மையான கலாசாரம், மொழி, பழக்கவழக்கங்கள் என்று காலம் காலமாக பின்பற்றி அதை சார்ந்து தங்களின் வாழ்க்கை தரத்தை அமைத்து வாழ்ந்து வருபவர்கள். மலைவாழ் மக்கள், ஆதிவாசிகள் என வகைப்படுத்தப்பட்டு அவர்கள் தங்களுக்குரிய நிலத்தில் தங்களின் வாழ்வாதாரத்தை அமைத்துக்கொண்டு சவாலான ஒரு இயற்கைச் சூழலில் வாழ தங்களை பழக்கப்படுத்திக் கொண்டுள்ளனர்.

உலகம் முழுக்க மொத்தம் 370 மில்லியன் பழங்குடி மக்கள் வாழ்வதாக அறியப்படுகின்றது. இந்தியாவில் மட்டும் 645 வகை பழங்குடியினர் வாழ்வதாகவும் அதில் தமிழகத்தில் மட்டும் 36 வகை பழங்குடியினர் வாழ்வதாகவும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. பழங்குடி இனத்துள் ஓர் இனமான குறவர்கள் ஆரம்ப காலங்களில் இந்தியாவிலே வாழ்ந்து வந்தனர். மலைக் காடுகளில் தமது வாழ்விடங்களை அமைத்துக் கொண்டு தனக்கென தனியான கலாசாரம் பாரம்பரியங்களை பேணி வந்துள்ளனர். குறவர்கள் என்பவர்கள் பண்டைக்கால தமிழ்ச் சமூகத்தை சேர்ந்தவர்கள். குறவர்கள் வேடர்கள் எனவும் வேடுவர் எனவும் மறுபெயர் கொண்டு அழைப்பர். இவர்களிலிருந்து வேறுபட்டவர்கள் நரிக்குறவர்கள் சமுதாயத்தினர் ஆவர். தமிழகத்தில் குறிப்பிடத்தக்க மக்கள்

தொகை கொண்ட பகுதி தமிழ்நாடு, கேரளா போன்ற மாநிலங்களில் இவ்வாறான குறவர் பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கையில் வாழும் பழங்குடியினர் முற்றிலும் வேறுபட்டவர்களாகவும் வித்தியாசமான பழக்கவழக்கங்களை பின்பற்றுபவர்களாகவும் வித்தியாசமான பழக்கவழக்கங்களை உடையோர்களாகவும் பழங்குடி என்ற சமூக அமைப்பினர் வாழ்ந்து வருகின்றனர். (vijayathilaka, 1977). இவர்களை வேடுவர்கள், மராட்டியர்கள், குறவர்கள் என வேறுபட்ட பெயர்கள் கொண்டு அழைக்கின்றனர். இத்தகைய வம்சாவழியினர் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்தவர்கள் என்றும் இந்தியாவே இவர்களது பிறப்பிடம் எனவும் பல ஆண்டுகளுக்கு முன் இலங்கையை வந்தடைந்தனர் எனவும் கூறப்படுகின்றது (சீனிவாச சர்மா, 1977).

இலங்கையில் 2017ஆம் ஆண்டு கணிப்பீட்டின்படி சுமார் 4000 வனக்குறவர் மக்கள் கூட்டத்தினர் வாழ்வாதாகக் கூறப்படுகின்றது. இவர்கள் நாட்டின் வடமத்திய மாகாணத்தில் அனுராதபுரம், கலாவேவா, தம்புத்தேகம, பொலன்நறுவை, விஜிதபுர,மன்னம்பிட்டிய போன்ற பகுதிகளிலுள்ள காடுகளில் வசித்து வந்துள்ளதுடன் நாடோடி வாழ்க்கை வாழும் இச் சமூகத்தினர் நாடுமுழுவதும் சுற்றி திரிந்து தத்தமது வாழ்வாதாரத்தை நடாத்தி வந்துள்ளனர். 1950 களின் பின் காடுகளில் வாழ்ந்த இவர்களுக்கு பல்வேறு குடியேற்றத்திட்டங்கள் அமைத்துக் கொடுத்த போதிலும் உள்ளூர் மக்களால் விரட்டியடிக்கப்பட்டனர். இவர்களில் ஒரு பகுதியினர் கிழக்கு மாகாணத்தின் காட்டுப்பகுதியில் வந்து குடியேறியதாக கூறப்படுகின்றது. அவர்களில் ஒரு பகுதியினரே ஆய்வுக்குட்படுத்தப்படும் அளிக்கம்பை மற்றும் காஞ்சிரங்குடா ஸ்ரீ வள்ளிபுர வனக்குறவர் சமூகத்தினராவர்.

அளிக்கம்பையில் வசிக்கின்ற வனக்குறவர்கள் 1942 ஆம் ஆண்டளவில் குடியேறியதாக அறிய முடிகின்றது. இவர்கள் கல்லோயா நீர்ப்பாசனத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டமையினால் நீர்ப்பாசன வசதி ஏற்ப்படுத்தப்பட்டமை, கிழக்கு மாகாணத்தில் காடுகள் வெகுவாக அழிக்கப்பட்டமை, விவசாயக் காணிகள் உருவாக்கப்பட்டமை, மந்தை வளர்ப்பு, சேனைப்பயிர்ச் செய்கை, வேட்டையாடுதல் போன்ற தொழில்கள் குறைந்தமை இம்மக்கள் காட்டுப் பிரதேசங்களை நோக்கி குடிபெயர்ந்தனர். இறுதியாக புளியம்பிட்டியில் வசித்து வந்த இவர்கள் 1942 ஆம் ஆண்டளவில் காடடர்ந்து காணப்பட்ட அளிக்கம்பை பிரதேசத்தில் குடியேறினர் என அறிய முடிகின்றது (குகபாலன் 2000). 1990 ஆம் ஆண்டுகளில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிகழ்ந்த வன்செயல்களின் தொடர்ச்சியாக அளிக்கம்பையில் வாழ்ந்து வந்த குறவர் சமூகம் பெருமளவில் பாதிக்கப்பட்டு உடைமைகளை இழந்து, பல உயிர்களை இழந்தும் புதிய இடங்களைத் தேடிப் புறப்பட்டனர். இதன் காரணமாக திருக்கோவில் பிரதேசத்திலுள்ள காஞ்சிரங்குடா எனும் இடத்திற்கும் இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர். 1981 ஆம் ஆண்டு அளிக்கம்பை கிராமத்தில் தேவ கிராமம் எனும் மாதிரி கிராமம் அமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

அவர்களது சமூக பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் மற்றும் அந்தஸ்து அடையாளத்துவம் என்பன எவ்வாறு காணப்படுகின்றது. அதாவது அளிக்கம்பை மற்றும் காஞ்சிரங்குடா பகுதிவாழ் வனக்குறவர்கள் தமது சமூக பொருளாதார தேவைகளின் பொருட்டு அந்தஸ்து அடையாளத்துவம் என்பவற்றை எவ்வாறு மாற்றிக் கொண்டுள்ளனர் அது அவர்களது வாழ்க்கை

கோலங்களை எவ்வாறு மாற்றியமைத்துள்ளது என்பதுடன் அவர்களது சுதேசியத் தன்மையும் இதனால் எவ்வாறான மாற்றங்களுக்கு உள்ளாகியது என்பது பற்றியே இவ்வாய்வு அமைகின்றது.

2. ஆய்வுப் பிரச்சினை

ஜிப்சி எனும் இனத்தை சேர்ந்த இவர்கள் வனக்குறவர்களாக அளிக்கம்பை மற்றும் காஞ்சிரங்குடா பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். தெலுங்கு மொழியை தாய்மொழியாகக் கொண்ட தனித்த கலாசாரம், பாரம்பரியம், பழக்கவழக்கங்களை பின்பற்றுகின்ற ஒரு சமூக அமைப்பாகும். இவ்வாறு வாழ்ந்துவரும் வனக்குறவர்கள் நவீனமயமாதலினால் பல்வேறு சமூக பொருளாதார மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளனர். இச் சமூக பொருளாதார மாற்றங்களானது அளிக்கம்பை மற்றும் காஞ்சிரங்குடா பகுதிகளில் எவ்வாறான தாக்கத்தை செலுத்தியுள்ளது என்பதை நோக்குவதுடன் இவை வனக்குறவர்களது சுதேசியதன்மை, அடையாளத்துவம் என்பவற்றை எந்தளவிற்கு பாதித்துள்ளது என்பதை ஆராய்வது இவ் ஆய்வுப் பிரச்சினையாக உள்ளது.

அதாவது சமூக பொருளதார மாற்றங்களானது அளிக்கம்பை பிரதேசத்தில் அதிகளவான தாக்கத்தை ஏற்படுத்திய போதும் காஞ்சிரங்குடா பிரதேசத்தில் பெரிதளவில் மாற்றம் ஏற்படாதிருப்பினும் இரு பிரதேசங்களிலும் சுதேசிய தன்மை, அடையாளம் என்பன அழிவடைந்துகொண்டு வருவதை ஒப்பிட்டு இனங்காணுவதாக இவ் ஆய்வின் பிரச்சினை அமைகின்றது.

3. ஆய்வின் நோக்கம்

ஆய்வுப்பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள சமூக பொருளாதார மாற்றங்களானது வனக்குறவர்களது அடையாளத்துவம், சுதேசியத்தன்மை என்பவற்றில் ஏற்படுத்திய தாக்கத்தினை அறிந்து கொள்வதோடு அவர்களின் வாழ்வியல் அந்தஸ்த்து நிலைமாற்றங்கள் பற்றி விபரிப்பதே பிரதான நோக்கமாகும்.

இவ்வாய்வின் உப நோக்கங்களா பின்வருவன அமைந்துள்ளன.

- ✓ அளிக்கம்பை பகுதியில் ஏற்பட்டுள்ள சமூக பொருளாதார மாற்றங்களை இனங்காணல்.
- ✓ வனக்குறவர் சமூகம் என்பதற்குரிய சமூக அடையாளத்துவத்தினை அறிதல்.
- ✓ சமூக பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தத் தூண்டும் உள்ளார்ந்த மற்றும் வெளிவாரியான காரணிகள் பற்றி அறிதல்.
- ✓ அக் காரணிகள் அந்தஸ்து அடையாளத்துவத்தில் ஏற்படுத்திய தாக்கங்களை இனங்காணல்.
- ✓ அளிக்கம்பை பகுதியில் இதுவரை ஏற்படுள்ள மாற்றங்களை காஞ்சிரங்குடா பகுதியுடன் ஒப்பிட்டு ஆராய்தல்.

4. ஆய்வுக் கோட்பாடு

ஆய்வினைச் செய்து விளக்கம் கொடுக்கவும், முடிவு எடுக்கவும், அதனைத் தொகுக்கவும், ஆவணப்படுத்தப்படவும் வேண்டும். இதற்கு கோட்பாட்டின் அடிப்படை அவசியமாகும். அந்தவகையில் இவ் ஆய்வுக்கான கோட்பாடுகளாக நவீனமயமாதல் கோட்பாடு (Modernization

Theory) மற்றும் சமூகமாற்றக் கோட்பாடு (Social Change Theory) என்பன பயன்படுத்தப்படுகின்றது.

4.1நவீனமயமாதல் கோட்பாடு

சமூகங்களுக்குள் நவீனமயமாக்கல் செயல்முறையை விளக்க நவீனமயமாக்கல் கோட்பாடு பயன்படுத்தப்படுகிறது. நவீனமயமாக்கல் கோட்பாடு ஜேர்மன் சமூகவியலாளர் Max Weber (1864-1920) கருத்துக்களிலிருந்து உருவானது

நவீனமயமாக்கல் கோட்பாடு சமூக முன்னேற்றத்திற்கும் சமூகங்களின் வளர்ச்சிக்கும் பங்களிக்கும் சமூக மாறிகளை அடையாளம் காண முயற்சிப்பதோடு சமூக பரிணாமத்தின் செயல்முறையை விளக்க முயல்கிறது. நவீனமயமாக்கல் என்பது ‘‘நவீனத்திற்கு முந்தைய’’ அல்லது ‘‘பாரம்பரிய’’ என்பதிலிருந்து ‘‘நவீன’’ சமுதாயத்திற்கு முற்போக்கான மாற்றத்தின் மாதிரியைக் குறிக்கிறது. நவீனமயமாக்கல் கோட்பாடு பாரம்பரிய சமூகங்கள் மேலும் நவீன நடைமுறைகளைப் பின்பற்றும்போது வளரும் என்று கூறுகிறது.

4.2 சமூகமாற்றக் கோட்பாடு

சமூக மாற்றத்தை விளக்கும் பல்வேறு கோட்பாட்டு வடிவங்களுள் இவ் ஆய்வுக்காக கலாசார இடைவினைக் கோட்பாடானது பயன்படுத்தப்படுகின்றது. இரண்டு சமூகங்கள் இடைவினை கொள்ளும் போது கலாசார மாற்றம் ஏற்படுகின்றது. இதற்கு காரணம் இரண்டு புறமும் உள்ள புதிய விடயங்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றதலாகும். சில செயற்பாடுகள் தமது சமூக தொடர்புகளின் வீச்சை ஏற்படுத்தலாம். இதன்மூலம் புது நிறுவனம் தோற்றமடையலாம். இவை எளிய சமூகங்களுக்கும் தேக்கநிலை சமூகங்களுக்குமே பொருந்தும். மேலும் இக் கொள்கை சிக்கலான சமூகங்களின் மாற்றத்திற்கான சிந்தனையையும் காட்டுகின்றது. அதாவது சிக்கலான கலாசார மாற்றத்தை ஏற்படுத்தும் எனலாம்.

5. ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது பண்பு ரீதியான விவரணப் பகுப்பாய்வு முறையினை பெருமளவில் தழுவி நிற்பதுடன் ஆய்வுக்கான முதலாம் நிலைத்தரவுகள் களஆய்வின் மூலம் பெறப்பட்டது. இரு பிரதேசத்திலும் மொத்தமாக 100 மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து முறை மூலம் தரவுகள் பெறப்பட்டன. அந்தவகையில் அளிக்கம்பை பிரதேசத்தில் 50 குடும்பங்களும் காஞ்சிரங்குடா பிரதேசத்திலிருந்து 20 குடும்பங்களுமாக மொத்தம் 70 குடும்பங்களும், மாணவர்கள் என்ற அடிப்படையில் அளிக்கம்பை பிரதேசத்தில் 20 மாணவர்களும் காஞ்சிரங்குடா பிரதேசத்தில் 10 மாணவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். நேர்காணல் முறையின் அடிப்படையில் அளிக்கம்பை கிராமவாசிகள் 10 பேரிடமும் காஞ்சிரங்குடா கிராமவாசிகள் 10 பேரிடமும், இரு கிராம பாடசாலை அதிபர்களிடமும், திருக்கோவில் வலயக்கல்வி பணிப்பாளர் அவர்களிடமும், காஞ்சிரங்குடா பாடசாலை ஆசிரியர் ஒருவரிடமும், இரண்டு கிராமங்களின் கிராம சேவக அதிகாரிகளிடமும், அளிக்கம்பை புனித சவேரியார் தேவாலய பாதிரியாரிடமும் கலந்துரையாடப்பட்டு தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் அளிக்கம்பை

கிராமத்தில் மூத்த உறுப்பினர்கள் 8 பேரை உள்ளடக்கியதாக குழு கலந்துரையாடலும் மேற்கொள்ளப்பட்டு தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகள் பிரதேச செயலக ஆண்டறிக்கை, நூலக ஆவணங்கள், முன்னைய ஆய்வுக் கட்டுரைகள், புத்தகங்கள், இணையத்தள கட்டுரைகள் என்பன பயன்படுத்தப்பட்டு பெறப்பட்ட தகவல்கள் அறிவியல் நெறிமுறைகளினூடாக பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு விபரண ரீதியாக முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

6. ஆய்வுப் பிரதேச சமூக அமைப்பு

இங்கு ஆய்வுப் பிரதேசங்களாக அம்பாரை மாவட்டத்தின் இரு வேறுபட்ட பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட அளிக்கம்பை மற்றும் காஞ்சிரங்குடா பிரதேசங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. அளிக்கம்பை பிரதேசத்தில் மொத்தமாக 353 குடும்பங்களில் 1174 நபர்கள் வசிக்கின்றனர். இவர்களில் 571 ஆண்களும் 603 பெண்களும் அடங்குகின்றனர். (ஆலையடிவேம்பு பிரதேச செயலக புள்ளிவிபரவியல் திரட்டு, 2021). அளிக்கம்பை பிரதேசத்தில் ஒரு பாடசாலை காணப்படுகின்றது. இங்கு ஆரம்பப் பிரிவ முதல் சாதாரணதரம் வரை கற்பிக்கப்படுகின்றது. மொத்தமாக 218 மாணவர்களே இங்கு கல்வி கற்கின்றனர். இப் பாடசாலையில் 15 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். இங்குள்ள குடும்பங்களில் அநேகமானோர் விவசாயத்தையே மேற்கொள்கின்றனர். அத்துடன் மேட்டுநிலப்பயிர்ச்செய்கை மற்றும் கால்நடை வளர்ப்பையும் பிரதான தொழிலாகக் கொண்டுள்ளனர். அரச தொழில் புரிபவர்களாக 3 பேர் காணப்படுகின்றனர்.

காஞ்சிரங்குடா பிரதேசத்தில் மொத்தமாக 165 குடும்பங்களில் 514 நபர்கள் வசிக்கின்றனர். இவர்களில் 261 ஆண்களும் 253 பெண்களும் அடங்குகின்றனர். (திருக்கோவில் பிரதேச செயலக புள்ளிவிபரவியல் திரட்டு, 2021). காஞ்சிரங்குடா பிரதேசத்தில் ஒரு பாடசாலை காணப்படுகின்றது. இப்பாடசாலையிலே இங்குள்ள மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். அந்தவகையில் 123 மாணவர்களே இங்கு பாடசாலை செல்கின்றனர். (திருக்கோவில் பிரதேச செயலக புள்ளிவிபரவியல் திரட்டு, 2021). தொழில் பற்றி பார்க்கும்போது அநேகமானோர் அயல் பிரதேசங்களுக்கு கூலி வேலைக்கே செல்கின்றனர். அத்துடன் மீன்பிடி, கால்நடைவளர்ப்பு, விவசாயம் என பல தொழில்களையும் மேற்கொள்கின்றனர்.

வனக்குறவர்களது குடியிருப்புக்களானது ஓலைக்குடிசைகளாகவே காணப்பட்டன. தத்தமது வசதிகளுக்கேற்ப குடிசைகளை அமைத்து வாழ்ந்து வருபவர்களாக உள்ளனர். உணவுப் பழக்கவழக்கங்களில் பெரும்பாலும் நாவற்பழம், உடும்பு இறைச்சி, தேன், கிழங்கு வகைகள், குரக்கன் தானியங்கள் போண்றவற்றை பயன்படுத்துகின்றனர். சிறுவர் முதல் பெரியோர் வரை வெற்றிலை உண்ணும் பழக்கமுடையவர்கள். அவர்கள் சிறுவயது முதலே மது அருந்துபவர்களாகவும் ஆண்கள் பெண்கள் என்ற வேறுபாடில்லாமல் கூடியிருந்து மது அருந்துபவர்களாக காணப்படுகின்றனர்.

உடையமைப்பை பொறுத்தவரை ஆண்கள் அதிகமாக இடுப்பிலிருந்து முழங்காலிற்கு மேல் வரை ஒரு சீலைத்துண்டை கட்டிக்கொள்வர். பெண்கள் சீலை அணிவர். கால் விரல்களில் மோதிரம் அணிவர். வனக்குறவர் இனக்குழுமத்தின் கலை, கலாசார, உடையமைப்பு போன்றன

திராவிட இனமக்களின் சாயலை நன்கு கொண்டுள்ளதை அவதானிக்க முடியும். பழங்கால் பெண்கள் வேட்டையாடிக் கிடைத்த மிருகங்களின் தோலினால் செய்யப்பட்ட உடைகள் அணிந்துள்ளனர். மயில், குயில், காட்டுக்கோழி போன்றவற்றின் இறகுகளையும் முற்காலத்தில் அணிந்து அலங்காரம் செய்துள்ளனர். மருதானி, காவிக்காய் போன்ற நிறமூட்டும் இலை மற்றும் பழங்களை அலங்காரப் பொருட்களாகப் பயன்படுத்தினர்.

இவ்வாறான நிலை அனைத்தும் தற்போது இவ்விரு கிராம மக்களிடையே மருவி வருகின்றது. அயல்சமூக பண்பாட்டுக்கு உட்பட்டவர்களாக அவர்களது பண்பாட்டு பாரம்பரிய அம்சங்களே தற்போது இவ்விரு கிராமங்களிலும் பின்பற்றப்படுகின்றது.

அளிக்கம்பை சமூகத்தவரிடம் தனிக்குடும்ப அமைப்பு முறை காணப்படுகின்றது. இவர்களிடத்தே 15-18 வயது வரை மிகவும் கூடியளவில் திருமணம் முடிப்பவர்களாகக் காணப்படுகின்றனர். இங்கு தாபலோர், துகுடோர் என இரு குழுக்கள் காணப்படுகின்றனர். இவ்விரு குழுக்களும் தாங்கள் சார்ந்த குழுவுக்குள் விவாகம் செய்ய மாட்டார்கள். அவ்வாறு செய்வது இச்சமூகத்தினால் தடைசெய்யப்பட்டுள்ளது. குழு உறுப்பினர்கள் யாவரும் சகோதரர்கள் என்ற நிலைக்குட்பட்டவர்கள். எனவே விவாகம் செய்யும் போது மாற்றுக் குழுவிலிருந்தே துணையினைத் தேடிக்கொள்வர். இவர்களின் குலவழக்கப்படி ஆணுக்கோ பெண்ணுக்கோ சீதனம் பணமாக வழங்குவது கிடையாது. சீதனம், நன்கொடை என்பன வாழ்வாதாரத்துடன் தொடர்புடையதாக இருக்கின்றதேயொழிய தகுதிக்கேற்ப சீதனம் என்பது இங்கு வழக்கில்லை. திருமணத்தின்போது மணமகனிற்கு பாம்புப்பெட்டி, பாம்பு, சிறிய குடில், சட்டி, ஈட்டி, வேட்டை நாய்கள் என்பன வழங்கப்படுகின்றன. திருமணச் செலவினை ஆண், பெண் வீட்டார் இருவருமே சமமாக பகிர்ந்து கொள்வர்.

திருமண முறையினைப் பொறுத்தவரை மிகவும் வித்தியாசமாக கவர்ச்சியானதுமான சடங்கு முறையாக காணப்படுகின்றது. விவாகத்திற்கான நிச்சயதார்த்தம் நடைபெற்ற பின்னர் விவாகத்திற்கு முன்னர் கணவனாக வருபவர் தனக்கு மனைவியாக வருபவரின் தாய்க்குப் பால்க் காசாக ரூபா 7.50 சதம் கொடுக்க வேண்டும் என்ற நியதியுண்டு. அதாவது அந்தப் பெண்ணைப் பெற்று பால் கொடுத்து வளர்த்ததற்காகவே இது வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இரு குடும்பங்களிடையே விவாகம் செய்து கொள்ளும் போது குடும்ப அங்கத்தவர்கள், குழுத்தலைவர், மற்றும் தம்மினப் பெரியோர்கள் முன்னிலையிலேயே நிச்சயதார்த்தம் செய்யப்படும். அப்போது மாப்பிளை வீட்டார் வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் போன்றவற்றுடன் மதுபானமும் கொண்டு சென்று பரிமாறப்பட்ட பின்னர் விவாகநாளைத் தீர்மானிப்பர். விவாகம் போன்ற மங்களகரமான நிகழ்வுகளிலும் மதுபானம் பரிமாற்றப்படுவது சாதாரண வழக்கமேயாகும். விவாகம் நடந்த பின்னர் மணமக்கள் அடுத்துவரும் ஐந்து நாட்கள் குடிசை கட்டி தனித்து விடப்படுவர். மணமகளுக்கு அவரது நெருங்கிய பெண் உறவினர்கள் காவல் காப்பர். இதனைத் தொடர்ந்து அடுத்தநாள் மணமக்களை தனிக்குடிலில் வாழ அனுமதிப்பர். பொதுவாக விவாக நிகழ்வென்றால் வனக்குறவர் சமூகம் குதூகலத்தில் ஆழ்ந்திருப்பர். விவாகச் சடங்கு நடைபெறும் ஐந்து நாட்களும் உறவினர்களைச் சேர்த்து சமைத்து உண்ணும் வழக்கமும் இவர்களிடம் காணப்படுகின்றது.

இவ்வாறான முறைகள் ஆரம்பகால வனக்குற சமூகத்தவரிடமே காணக்கூடியதாக உள்ளது. தற்போதைய சமூகத்தில் இவ்வாறான குடும்ப அமைப்பையோ திருமண முறையையோ அவதானிக்க முடிவதில்லை. அவர்கள் அநேகமானோர் கிறிஸ்தவர்களாகையால் கிறிஸ்தவ முறைப்படியே திருமண முறை காணப்படுகின்றது.

வனக் குறவர்களின் தாய் மொழி தெலுங்கு ஆகும் . ஆயினும் நீண்ட காலமாக வெவ்வேறு சமூகங்களுடன் வாழ்ந்து வருவதனால் மொழிச்சிதைவு ஏற்பட வாய்ப்புண்டு. பெரும்பாலான சொற்கள் தூய தெலுங்குக்குரியவை. இலக்கணம், வசன அமைப்பு தெலுங்கு மொழிக்கு உரியவை. இம் மொழியோடு கன்னட, மலையாளம், தமிழ், சிங்கள, ஆங்கிலச் சொற்களும் கலந்துள்ளன. தமிழ், சிங்கள கலப்பினை அவதானிக்கும் போது இவர்கள் சிங்கள, தமிழ் பிரதேச மக்களோடு தொடர்பு கொண்டிருத்தலை காட்டுகின்றது. அதாவது பேசப்படும் பாணி தற்கால தெலுங்கு மொழியிலிருந்து முற்றிலும் வேறுபட்டு இலங்கையில் பெரும்பான்மையோரால் பேசப்படுகின்ற சிங்கள, தமிழ் மொழிப் பாணியுடன் ஒத்துள்ளன. தெலுங்கு மொழி பேசும் குறவர் 14 ஆம், 15 ஆம் நூற்றாண்டுகளில் இருந்து இலங்கையில் குடியேறி இருக்கலாம். இக்கால கட்டத்தில் தோன்றிய விஜய நகர, நாயக்க அரசுகள் இலங்கையில் தமிழ், சிங்கள அரசுகளுடன் அரசியல், வர்த்தக, கலாசாரத் தொடர்புகள் கொண்டிருந்தமைக்கு போதிய சான்றுகள் உண்டு. இக் காலகட்டத்தில்தான் வணிகர் படை எடுப்பாளர், கலைஞர் எனப் பல பிரிவினர் இலங்கையில் குடியேறினர். இவ்வாறு குடியேறிய பிரிவினரில் ஒரு பிரிவினராக வனக் குறவர்களை கருதலாம். இவர்களுடைய மொழிக்கு எழுத்து வடிவம் என்பது இல்லை என்றே கூறப்படுகின்றது. அந்தவகையில் தமது சமூகத்துடன் தொடர்பாடலை மேற்கொள்ளும் போது தெலுங்கு மொழியிலும் கற்றல் நடவடிக்கைகள் மற்றும் ஏனைய சமூகத்தவருடன் தொடர்புகளுக்காக தமிழ் மொழியினையும் பயன்படுத்துகின்றனர்.

இவ்வாறான ஒரு சமூக கட்டமைப்பைக் கொண்ட வனக்குறவர்கள் வாழும் அளிக்கம்பை மற்றும் காஞ்சிரங்குடா பிரதேசங்களே ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

7. நவீனமயமாதலும் சமூகமாற்றமும்

ஆய்வுப் பிரதேசங்களான அளிக்கம்பை மற்றும் காஞ்சிரங்குடா பிரதேசங்களில் வாழும் வனக்குறவர் இனத்தைச் சேர்ந்த மக்கள் ஏனைய இனக்குழுக்களிலிருந்து வேறுபட்ட வாழ்க்கையை வாழ்ந்து வந்தவர்களேயாவர். தற்போதைய நவீனமயமாக்கலானது அவர்களது வாழ்வியலிலும் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளமையும் அதிலும் அளிக்கம்பை பிரதேசத்தில் அதிகளிவிலான மாற்றம் ஏற்பட்டுள்ள வேளை காஞ்சிரங்குடா பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள சமூக பொருளாதார மாற்றங்கள் சற்று சிறிதளவாக இருப்பினும் அவர்களுக்கென உரித்தான தனித்துவம் சுதேசிய அடையாளம் என்பவற்றிலிருந்து இரு சமூகத்தினரும் மாற்றமடைந்து வருகின்றனர். அவ்வாறான மாற்றங்களை ஆய்வினை மேற்கொண்டு கலந்துரையாடியதன் மூலம் கண்டுகொள்ளக்கூடியதாக இருந்தது.

7.1 சமூக மாற்றம்

நவீனமயமாதல் பெருமளவில் தாக்கம் செலுத்தியுள்ளமையினால் வனக்குறவர்களது சமூக அமைப்பும் பாரியளவில் மாற்றமடைந்துள்ளமையைக் காணலாம். ஆரம்பகாலங்களில்

கூட்டுக்குடும்பமாக ஓலைக் குடிசைகளில் வாழ்ந்து வந்தவர்கள் தற்போது தனிக்குடும்பங்களாக தனித்தனியே சொத்துக்களை சேர்த்து வாழ்ந்து வருகின்றனர். அநேகமானவர்கள் தமது சொந்த உழைப்பில் கல்வீடுகளை கட்டிக்கொண்டுள்ளதை அளிக்கம்பை பிரதேசத்தில் காணமுடிகின்றது. காஞ்சிரங்குடா பகுதியில் கல்வீடுகள் குறைவீடுகளாகவே காணப்படுவதுடன் அங்கு குடிசை வீடுகளிலே அதிகமானோர் வாழ்கின்றனர். அத்துடன் தந்தைவழி முறையைப் பின்பற்றி வந்த வனக்குறவர்கள் தற்போது தாய்வழி முறையைப் பின்பற்றுகின்றமையும் காணலாம்.

7.2 வனக்குறவர்களது பெயர்கள்

ஆரம்பகாலங்களில் வனக்குறவர்கள் தங்களது பெயர்களை பரம்பரை பரம்பரையாக வைத்து வந்தார்கள். அவர்களுக்கென ஒரு குறியீட்டுப் பெயர் அவர்களது பெயர்களுக்குப் பின்னால் காணப்படும். அது தலைமுறை தலைமுறையாக இடப்பட்டு வந்தது. ஆனால் தற்போதைய நவீன யுகத்தில் வழமை போன்று எம்மவர்கள் பயன்படுத்தும் பெயர்களையே இவ் வனக்குறவர் சமூகத்தினரும் பயன்படுத்துகின்றனர். அதிலும் கிறிஸ்தவ சமயப்பெயர்களே அதிகம் பயன்படுத்துகின்றனர். ஆனால் அவர்கள் பரம்பரையாக அழைத்து வந்த பெயர்களானது அவர்களுக்கான தனித்துவமான அடையாளமாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தற்போது அளிக்கம்பை மற்றும் காஞ்சிரங்குடா பகுதிகளில் இவ்வாறான பரம்பரை பெயரைப் பயன்படுத்தும் வழக்கம் இல்லாமல் போயுள்ளதுடன் பெயர்களை வைத்து அவர்கள் யார் என்பதை அடையாளம் காணமுடியாதளவு மாற்றம் கண்டுள்ளர் எனலாம்.

7.3 தலைமைத்துவம்

பழங்குடிகளான வனக்குறவர் சமூகத்துக்கென தலைவர் ஒருவர் காணப்பட்டார். அதாவது அவர்களது சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகள், தகராறுகள் என்பவற்றை குழுவாக இணைந்து அவர்களுக்குள்ளே தீர்த்து வைக்கும் முறையொன்று காணப்பட்டது. தற்போதைய நவீனமயமாக்கல் சூழலானது அவர்களையும் இக் குழுத்தலைவர் முறையிலிருந்து விடுபட்டு பொலிஸ்நிலையம், நீதிமன்றம் போன்றவற்றை நாடச் செய்துள்ளது. அளிக்கம்பை பிரதேசத்தில் காணப்படும் தேவாயத்திற்கும் அங்குள்ள பாதிரியார்களின் அறப்போதனைகளுக்கும் கட்டுப்பட்டு இவ்வனக்குறவர் சமூகம் வாழ்ந்து வருகின்றது. காஞ்சிரங்குடா பகுதியில் அடிக்கடி பிரச்சினைகள் ஏற்படுவதாக அறிய முடிந்தது. இருப்பினும் கிராம அதிகாரி மூலம் சில பிரச்சினைகள் தீர்க்கப்பட்டும் உள்ளன. ஆனால் இக் குழுத் தலைவர் முறை இன்றைய வனக்குறவர் சமூகத்தில் இல்லாதொழிந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

7.4 பொருளாதார ரீதியான மாற்றம்

முன்னைய காலங்களில் சொந்த நிலம், இருப்பிடம் இல்லாத நாடோடிகளாக அங்குமிங்கும் அலைந்து திரிந்து வாழ்ந்து அளிக்கம்பை மற்றும் காஞ்சிரங்குடா பகுதிகளில் வந்து குடியேறியவர்கள் தற்போது பொருளாதர ரீதியில் பாரிய மாற்றம் கண்டுள்ளனர். ஆரம்ப காலங்களிலே வேட்டையாடல், பாம்பாட்டுதல், சாஸ்திரம் சொல்லுதல், குரங்கு வளர்த்தல் போன்றவற்றினை தொழில்களாக மேற்கொண்டு வந்தனர். அதன் மூலம் கிடைக்கும் சிறிய வருவாயைக் கொண்டே பிழைப்பை நடாத்தி வந்த இவர்கள் தற்போது அரச தொழில் புரியும் வரை உயர்ந்துள்ளமையைக் காணலாம்.

அளிக்கம்பை பிரதேசத்தில் தற்போது வாழ்ந்து வரும் வனக்குறவர்கள் ஆரம்பகாலங்களில் செய்து வந்த தமது பாரம்பரிய தொழில்களை கைவிட்ட நிலையில் தற்போதைய தலைமுறையினர் அதிகளவில் கல்வியில் ஈடுபாடுடையவர்களாக திகழ்கின்றனர். அத்துடன் சொந்த வயல்காணி, இயந்திரங்கள் என பொருளாதார ரீதியில் உயர்வடைந்துள்ளமையைக் காணலாம். காஞ்சிரங்குடா பிரதேசத்திலும் இவ்வாறே சிறிது சிறிதாக மாற்றம் ஏற்பட்டு வருகின்றது. ஆனாலும் பொருளாதார ரீதியில் சற்று பின்தங்கிய நிலையிலேயே காஞ்சிரங்குடா பகுதி காணப்படுகின்றது. பொருளாதாரம் உயர்வடைய தொழிலே பிரதான காரணியாகக் காணப்படுகின்ற நிலையில் தமக்கான அடையாளமாக காணப்பட்டுவந்த தொழில்களிலிருந்து விலகிச் செல்கின்கின்ற வேளை காஞ்சிரங்குடா பகுதியில் ஒருசிலர் தற்போதும் தமது பாரம்பரிய தொழில்களை புரிவதனை அவதானிக்க முடிகின்றது. (வேட்டையாடல், சாஸ்திரம் சொல்லுதல்). இருப்பினும் வேட்டையாடலின் போது செய்து வந்த சடங்குமுறைகள் தற்போது மருவி வந்துள்ளமையை காணலாம்.

7.5 கலாசார பண்பாட்டு அம்சங்கள்

கலாசாரம் என்னும் பொழுது திருமணம், பிறப்பு, இறப்பு, ருதுவாதல், காதுகுத்தல் போன்றவற்றிற்காக மேற்கொள்ளப்பட்டு வந்த சம்பிரதாய முறைகள் யாவும் தற்போது இல்லாமல் யோயுள்ளது. அதாவது திருமணச் சடங்கானது தற்போது கிறிஸ்தவ முறைப்படியே இடம்பெறுகின்றது. இறப்புச் சடங்கும் அவ்வாறே கிறிஸ்தவ மத போதனைகளின்படியே நடைபெறுவதை காணலாம். பிறப்புச் சடங்கை பொறுத்தவரை தற்போது வைத்தியசாலைகளிலே பிறப்பு நடைபெறுகின்றது. ஆரம்ப காலங்களில் குடிசை வீடுகளிலே பிறப்புச் சடங்கு இடம்பெற்றதுடன் கர்ப்பணிப் பெண்ணுக்கு புலிப்பல்லை அரைத்து அதன் சாற்றைக் கொடுப்பதாகவும் அது பிரசவ வலியை குறைப்பதற்காகக் கொடுக்கப்படுவதாகவும் வழக்கம் இருந்தது. தற்போதைய காலத்தில் அவையெல்லாம் மாற்றமடைந்துள்ளமையை காணலாம். இவ்வாறே அனைத்து சடங்கு பண்பாட்டு அம்சங்களும் மாற்றமடைந்துள்ளமையைக் காணலாம்.

சமயம் மற்றும் வழிபாட்டு முறைகள் பற்றி நோக்கும் போது வனக்குறவர்கள் ஆரம்ப காலங்களில் இந்துக் கடவுளையே (முருகன், வள்ளி) வழிபட்டு வந்ததுடன் இயற்கை மீது அதிக நம்பிக்கையும் கொண்டிருந்தனர். அத்துடன் பல்வேறு சடங்கு சம்பிரதாயங்களை கூட்டமாக இணைந்து செய்து வந்துள்ளனர். தற்போது அவர்களிடத்தே இது தொடர்பில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. அனைவரும் கிறிஸ்தவ கடவுளான யேசுநாதரையே வழிபடுகின்றனர். கிறிஸ்தவ சடங்குகளையே தற்போது மேற்கொள்கின்றனர் அதாவது நவீனமயமாக்கலால் உட்புகுந்த கிறிஸ்தவ சமய போதனைகள், நம்பிக்கைகள் அனைத்தும் இவ் வனக்குறவர் சமூகத்தினரிடையே மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளமையினால் அவர்களது தனித்துவமான சமய வழிபாட்டு சடங்குமுறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது.

7.6 கல்வி

கல்வியானது வனக்குறவர்களது வாழ்வியலில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்திய ஒன்றாகும். காடுகளிலே அலைந்து திரிந்து வாழ்க்கையை ஓட்டிச் சென்றவர்கள் இன்று படித்து பட்டம் முடிக்கும் வரை உயர்ந்துள்ளனர் எனலாம். அளிக்கம்பை பகுதியிலுள்ள தேவாலயம் மற்றும்

பாடசாலை இதற்கு பாரிய பங்களிப்பு செய்கின்றது. அளிக்கம்பை பிரதேசத்தை பொறுத்த மட்டில் கல்வியில் மாணவர்களின் ஈடுபாடு அதிகரிக்க அங்குள்ள தேவாலயமே அதிக பங்களிப்பினை செய்கின்றது. தற்போது "Supplememtary Education & Multi Talents Investment-2021" எனும் செயற்றிட்டானது புனித சவேரியார் தேவாலயத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட வருகின்றது. இச் செயற்றிட்டமானது கல்வியின் மூலம் இயலாமைக்கான சுவர்களை உடைத்தல் என்ற நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு அங்குள்ள மாணவர்களிடையே செயற்படுத்தப்படுகின்றது. அங்குள்ள பிள்ளைகளில் அதிக அக்கறை கொண்டு அவர்களை நன்னடத்தை கொண்டவர்களாக உருவாக்குவதில் தேவலயத்திற்கு பாரிய பங்கு உண்டு.

காஞ்சிரங்குடா பகுதியிலும் இவ்வாறு கல்வியில் சிறிதளவு மாற்றம் ஏற்பட்டுள்ளமையை அவதானிக்கலாம். ஆனாலும் அளிக்கம்பை பிரதேசத்தில் மாணவர்களுக்கு கொடுக்கப்படும் ஊக்கமும் பயிற்சியும் காஞ்சிரங்குடா பகுதியில் இல்லை என்றே கூறலாம். காஞ்சிரங்குடா பகுதியிலும் இவ்வாறு தேவாலயத்தின் பங்களிப்பு ஊக்கப்படுத்தல் செயற்பாடு என்பன காணப்படுமிடத்து இவ்வாறானதொரு மாற்றத்தை அங்கும் ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும். இருப்பினும் ஆரம்ப காலத்தை விட அவர்கள் கல்வி ரீதியில் சற்று முன்னேற்றமடைந்த சமூகமாக காணப்படுவதை ஆய்வின் மூலம் அறிய முடிந்தது. இம்மாற்றங்களானது வனக்குறவர்களது அடையாளத்தையே முற்றாக மாற்றியமைத்துள்ளது.

அந்தவகையில் நோக்கும் போது ஏனைய சமூகத்தவர்களைப் போல தாமும் தமது அடையாளம் சுதேசிய தன்மை என்பவற்றை மாற்றியமைத்து வாழ்வதற்கே தற்போதைய வனக்குறவர் சமூகம் விரும்புவதனை அவதானிக்க முடிந்தது. அதாவது தமது சூழலுக்குள்ளே மாத்திரம் இருப்பதனால் இன்றைய நவீன காலத்தில் அவர்களுக்கான தேவைகள் விருப்பங்கள் என்பவற்றை நிறைவேற்ற முடியாது போவதாக அவர்கள் கவலை கொள்கின்றனர்.

இருப்பினும் இவ்வாறான மாற்றங்களினால் அளிக்கம்பை மற்றும் காஞ்சிரங்குடா வனக்குறவர் சமூகம் முன்னேற்றம் கண்டாலும் அவர்களது தனித்தன்மை சுதேசிய அடையாளம் என்பன பெருமளவு அழிவடைந்து சென்றுள்ளமையும் காணக்கூடியதாக உள்ளது.

8. முடிவுரை

ஆய்வுப்பிரதேசங்களான அளிக்கம்பை மற்றும் காஞ்சிரங்குடா வாழ் வனக்குறவர்களது வாழ்வியல் அம்சங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமையை அவதானிக்கலாம். அதாவது சமூக பொருளாதார பண்பாட்டியல் அம்சங்களில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களானது வனக்குறவர்களது தனித்துவம், அடையாளத்துவம் என்பவற்றில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளமையை ஆய்வின் மூலம் அறிய முடிந்தது.

ஏனைய மக்களைப் போல தாங்களும் நாகரிகத்துக்குள் உட்பட்டு தமக்கான ஒரு அடையாளத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக இம்மக்கள் தமது வாழ்விலும் மாற்றம் வேண்டும் என்கின்றனர். நவீனமயமாக்கலானது சமூகங்களில் முன்னேற்றத்தை ஏற்படுத்திய அதேவேளை ஆய்வுப் பிரதேசத்தில் உள்ளார்ந்த ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதாவது மக்கள் அந்தஸ்துக்காக மாற்றத்தை ஏற்படுத்த முற்பட்ட போதும்

அவர்களுக்கென்று உரித்தாக தனித்துவம், சுதேசிய அடையாளம் என்பவற்றை இழக்க வேண்டிய நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. வனக்குறவர்களுக்கென்றே உரிய மொழி, திருமண முறை, குடும்பம், இறப்புச் சடங்கு, தொழில், சமய சடங்கு முறைகள், அவர்களுடைய தோற்றம், ஆடை, அணிகலன்கள் என அனைத்து அம்சங்களிலும் இச் சமூக பொருளாதார மாற்றம் எதிர்மறைத் தாக்கத்தினை உண்டுபண்ணியுள்ளமையை தரவுப்பகுப்பாய்வு எடுத்துக் காட்டுகின்றது.

இரு சமூகங்களிலும் எற்பட்டுள்ள மாற்றங்களை நோக்குமிடத்து அளிக்கம்பை பிரதேசத்திலே அதிகளவான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. இதற்கு பிரதான காரணி அங்குள்ள மக்கள் தொழில் ரீதியாக அதிகளவு பொருளாதார வளங்களைத் தேடிக் கொண்டுள்ளமையும் கல்வியில் அதிகளவு ஈடுபாடு காட்டுகின்றமையும் என அய்விலிருந்து தெரிய வந்தது. ஆனால் காஞ்சிரங்குடா பிரதேசத்தில் சமூக பொருளாதார ரீதியில் ஏற்பட்டள்ள மாற்றங்கள் சற்றுகுறைவாகவே உள்ளது. காரணம் அவர்களை ஊக்கப்படுத்தி முன்னெற்ற எவ்வித அமைப்புக்களும் காணப்படவில்லை. அளிக்கம்பை பிரதேசத்தில் தேவாயலமானது இதில் முக்கிய பங்காற்றுகின்றது. இச் சமூக பொருளாதார மாற்றங்களானது குறைவாகக் காணப்படினும் காஞ்சிரங்குடா பிரதேச வனக்குறவர்களும் தங்களது தேவைகளின் பொருட்டு தமக்கான தனித்தன்மையை இழந்து வருகின்றனர் என்பதை ஆய்வுகள் வெளிப்படுத்தியது.

இவ் நவீனமயமாக்கலானது பொருளாதார ரீதியில் ஓரளவு மாற்றத்தை ஏற்படுத்தினாலும் அவர்களது பண்பாடு தனித்துவம் சுதேசிய அடையாளம் என்பனவற்றில் எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை தெரியவருகின்றது. இவ்வாறு ஏற்பட்டள்ள சமூக மாற்றமானது தற்போதைய தலைமுறையினர் விரும்பி ஏற்றுக்கொள்ளும் அதேவேளை சமூகத்தில் உள்ள மூத்த தலைமுறையினரும் காலத்திற்கேற்ப அதனை ஏற்றுக்கொண்டு வாழ்வதை காண முடிந்தது.

காலம் மாறமாற மாற்றங்கள் ஏற்படுவது நியதியே. இத்தகைய மாற்றமானது அளிக்கம்பை மற்றும் காஞ்சிரங்குடா சமூகத்தினரிடையே காணப்படுகின்றது. இதன்படி மாற்றமானது நல்ல விடயங்களை ஏற்படுத்துமாயின் அது வரவேற்கத்தக்கது. ஆனால் மாற்றத்தினால் ஓர் இனத்தவர் கடைப்பிடித்துவந்த பண்பாடு, விழுமிய அம்சங்களை இல்லாது செய்யுமிடத்து அது கவலைக்குரிய விடயமாகும். இவ்வாறானதொரு மாற்றமே ஆய்வுப் பிரதேசங்களான அளிக்கம்பை மற்றும் காஞ்சிரங்குடா பிரதேசங்களில் ஏற்பட்டள்ளது எனலாம்.

உசாத்துணை

1. Vidyarthi.P & Rai.K. (1976). *The Tribal Culture of India*. NewDelhi: Publishing Company.
2. அகத்தியலிங்கம்.ச. (1972). *தமிழகப் பழங்குடிமக்கள்.* ஆராய்ச்சி மாணவர் வெளியீடு, மொழியியல்துறை.
3. குகபாலன்,கா. (2000). *இலங்கையில் பழங்குடிகள்* (1st ed.). கொழும்பு 06: பரணன் அசோசியேட்ஸ் பிறைவேற் லிமிடெட்.
4. சனாதனன்.தா & அகிலன்.பா. (1980-1999). *இலங்கைச் சமூகத்தையும் பண்பாட்டையும் வாசித்தல்.* யாழ்ப்பாணம்:கரிகணன் பிறின்டேர்ஸ்.
5. மரியசூசை.அ. (2011). *இந்தியப்பழங்குடிப் பண்பாடும் தமிழ்ப்பண்பாடும்.* சென்னை-600014.அகமது வணிக வளாகம்.
6. Riswan M., Rameez A., & Lumna N. (2017). Social, Economic and Cultural Challenges Confronting Gypsies in Aligambai Village, Sri Lanka. E-Proceeding (Vol.I), South Eastern University Arts Research Session.

7. F.Ilma, A.S.Shafira banu, S.M.M.mazahir, M.N.S.Sumeira, A.A.S.Hairiya & M.S.F.Afra. (2020). Role of Religious Places in Social Renovation: A Study Focusing on the Aligambai Area *7th International Symposium*, FIA, SEUSL.
8. Chandra Sarkar.B. (2017). Imapct of modernization in economy of tribal people living in dooars. *International Journal of Research in Geography*, Vol-3.(4,2017), 21-26
9. முனைவர்.செந்தில்.கு. (2018). சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், 128. Doi: ISSN: 2454-3993
10. அருண்.வி.ஜெ. (2019-06-09). *பழங்குடியின மக்களின் வாழ்வியல் மாற்றங்கள்.* தினதந்தி.
11. சந்திரகுமார்.சு. (2020). *International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR)*
12. ரேகா.இரா. (2020). சமுதாய மொழியியல் நோக்கில் காட்டுநாயக்கன் பழங்குடியினர்- ஓர் ஆய்வு. மதுரை: 625 021, மொழியியல் துறை.

இளவயதுத் திருமணத்திற்கான காரணங்களும், அதன் தாக்கங்களும்: இலங்கையின் கிழக்கு மாகாண முஸ்லிம்களை மையப்படுத்திய ஒரு சமூகவியல் ஆய்வு

இக்பால் சௌஜான்[1]*, ராஸிக் அஹ்மட் சர்ஜுன்[2], கன்சூல் கரீம் பாத்திமா நஸ்மா[3]
[1,2,3] இஸ்லாமியக் கற்கைகள் துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்
*savjaniqbal@seu.ac.lk

ஆய்வுச் சுருக்கம்

பல்வேறு சமூக, பொருளாதார, கலாசாரக் காரணிகளுக்காக பெண்களின் திருமண வயது முற்படுத்தப்படுகிறது. இலங்கையில் பெண்களின் திருமண வயது ஒரு சர்ச்சைக்குரிய தலைப்பாக தொடர்ந்தும் இருந்துவருகிறது. இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் இளவயதுத் திருமண நடைமுறை அதிகரித்து வருவதும், இதனால் பாடசாலைகளில் மாணவர்களின் இடைவிலகல் அதிகரித்துள்ளதுடன், சிறுவர்களுக்கு எதிரான பல்வேறு வன்முறைகளுக்கும் இது வித்திட்டுள்ளது என்பதை பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. இப்பின்னணியில் இலங்கையின் கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு மத்தியில் இடம்பெறும் இளவயதுத் திருமணங்களுக்கான காரணங்களை அடையாளப்படுத்துவதுடன், குறித்த திருமணம் பெண்களின் வாழ்வில் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது என்பதையும் கண்டறிய இவ்வாய்வு முயற்சித்துள்ளது. இது ஒரு சமூகவியல் கலப்பு ஆய்வாக இருப்பதுடன், ஆய்வுக்கான தரவுகள் எழுமாறு அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 240 நபர்களிடம் வினாக்கொத்து மூலம் திரட்டப்பட்டதுடன், இளவயதில் திருமணம் மேற்கொண்டு விவாகரத்துப் பெற்ற 15 பெண்களிடம் கட்டமைக்கப்படாத நேர்காணலும் மேற்கொள்ளப்பட்டது. இவற்றிற்கு மேலதிகமாக, தேசிய மற்றும் சர்வதேச அறிக்கைகள், ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள், இணைய வெளியீடுகள் போன்றன வாசிப்புக்குட்படுத்தப்பட்டன. ஆய்வின் கண்டறிதல்களுக்கு அமைய குறித்த ஆய்வுப் பிரதேசப் பெண்களின் இளவயது திருமணத்திற்கான காரணங்களில் பெற்றோர் இளவயதிலேயே திருமணம் முடித்திருத்தல், பெற்றோரின் திடீர் மரணம், சீதனம், வறுமை, குடும்பத்தில் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படல், பெற்றோரின் வற்புறுத்தல் மற்றும் கற்றலில் ஆர்வமின்மை போன்ற காரணிகள் அதிகளவில் செல்வாக்குச் செலுத்தியுள்ளதுடன், குறித்த திருமணத்தின் மூலம் சிசு மரணம், கருச்சிதைவு, மனஅழுத்தம், வாழ்க்கையில் விரக்தி போன்ற சவால்களை பெண்கள் எதிர்நோக்கி வருவதும் கண்டறியப்பட்டது. இவ்வாய்வின் முடிவு எதிர்கால ஆய்வாளர்களுக்கும், கொள்கைவகுப்பாளர்களுக்கும் சிறந்த ஒரு தொடக்கப்புள்ளியாக அமையும் என்பது ஆய்வாளர்களின் உயர்ந்த எதிர்பார்ப்பாகும்.

திறவுச் சொற்கள்: கிழக்கு மாகாணம், இளவயதுத் திருமணம், பெண்கள், சிறுவர்கள், தாக்கங்கள்

1. ஆய்வுப் பின்னணி

சமூகத்தினதும், தனிமனிதனினதும் நல்வாழ்வுக்காக திருமணம் எனும் நிறுவனமயப்படுத்தப்பட்ட நடைமுறை இடம்பெற்று வருகின்றது (Narayanan, 2017). திருமணம் என்பது சமூக, சட்ட, உறவுமுறை சார்ந்த விடயங்களுடன் நேரடியாகத் தொடர்புபடும் ஒன்றாகும் (Scott, 2000). குடும்பம், பாலுறவு, இனப்பெருக்கம், பொருளாதாரப் பாதுகாப்பு போன்ற பல காரணங்களுக்காக திருமணம் மேற்கொள்ளப்படுகின்றது (Zahidlawassociates, 2019). மனித இனத்தைப் பொறுத்தவரை திருமணம் என்பது ஒரு இயற்கை உணர்வாக காணப்படுகின்ற போதிலும், அதில் பல்வேறு பண்பாட்டுக் கலாசார சமூக நெறிமுறைகள் காலம் காலமாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன. இதற்கு இலங்கையும் விதிவிலக்கானதல்ல. இலங்கை பல்லின கலாசார பாரம்பரிய அம்சங்களைப் பின்பற்றும் மக்களைக் கொண்ட ஒரு ஒற்றையாட்சி நாடாகும். இங்கு சிங்களவர்கள், இலங்கைத் தமிழர்கள், இந்தியத் தமிழர்கள், முஸ்லிம்கள் (மூர்), மலாய் வம்சத்தினர் என தனியான மத, கலாசார, பாரம்பரிய, வழக்காறுகளைப் பின்பற்றும் மக்கள் ஒன்றாக வாழ்ந்து வருகின்றனர். இதன் காரணமாக இவர்களின் திருமணம் சமய, பாரம்பரிய, வழக்காற்றுக் காரணிகளின் செல்வாக்கிற்குட்பட்டு நடைபெற்று வருகின்றது. இதற்கு இங்குள்ள வழக்காற்றுச் சட்டங்கள் சான்று கூறுகின்றன.

இளவயதுத் திருமணம் என்பது 18 வயதுக்குக் குறைந்த ஆண் மற்றும் பெண் சிறுவர்கள் முறையான திருமண ஒப்பந்தத்தின் கீழோ அல்லது முறையற்ற திருமண ஒப்பந்தத்தின் கீழோ ஒன்றாக இணைந்து வாழ்வதைக் குறிக்கின்றது (UNICEF: South Asia, 2017), மேலும், சிறுவர் திருமணம் என்பது, திருமண வயதை அடையாத (18 வயதை அடையாத) ஆண், பெண் இரு

பாலினருக்கும் இடையில் நடத்தப்படும் ஒரு திருமணம் ஆகும் (Quentin Wodon ect. al, 2007). ஒரு திருமணத்தின் சட்ட அந்தஸ்தையும், அதன் வலிதான தன்மையையும் தீர்மானிப்பதில் திருமண ஒப்பந்ததில் இணையும் தம்பதிகளின் வயது பிரதான இடத்தைப் பெறுகிறது. திருமணத்திற்கான குறைந்த வயதெல்லையை தெளிவாக வரையறுக்க முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் தவறியுள்ளமையே இலங்கையில் இது ஒரு சர்சைக்குரிய தலைப்பாக மாற்றமடையக் காரணமாகும் (Amarasuriya, 2013).

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் திருமணத்தில் இணையும் தம்பதிகளின் வயதைக் கொண்டு திருமணத்தின் சட்ட ஏற்புடைமை தீர்மானிக்கப்படுவது போன்று இஸ்லாமிய சட்டவியலை (ஷரீஅத் சட்டம்) பின்பற்றும் ஒரு சில நாடுகளில் தம்பதியினரின் முதிர்ச்சியடைதலை (சின்னுத் தம்மீஸ்) கொண்டு தீர்மானிக்கப்படுகிறது. இவ்வாறு தீர்மானிப்பது ஒப்பீட்டளவில் மிகக் குறைவாகும். உலகில் திருமண வயது சட்ட, வழக்காற்று மற்றும் சமய நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு மாறுபடுகின்றது. அந்தவகையில் இந்திய நாட்டுச் சட்டப்படி பெண்ணுக்கு 18வயதும், ஆணுக்கு 21வயதுமாகும். குறித்த திருமண வயதை பூர்த்தி செய்யாத நிலையில் நிகழ்த்தப்படும் திருமணங்கள் சிறுவர் திருமணத் தடுப்புச் சட்டத்தின் (The Child Marriage Restraint Act- 1929) கீழ் தண்டனைக்குறிய குற்றமாகும் (Graner & Elvira, 2020). ஆப்கானிஸ்தானின் திருமண வயதெல்லையாக ஆணுக்கு 18, பெண்ணுக்கு 16வயதுமாகும். பங்களாதேஸ் மற்றும் நேபாளம் போன்ற நாடுகளில் ஆணுக்கு 21வயதும், பெண்ணுக்கு 18வயதுமாகும், பூட்டான் மற்றும் மாலைத்தீவு போன்ற நாடுகளில் ஆண், பெண் இருவரும் 18வயதை பூர்த்தி செய்திருப்பது அவசியமாகும். பாகிஸ்தானில் ஆணுக்கு 18உம், பெண்ணுக்கு 16வயதுமாகும் (United Nations Statistics Division, 2011). இதேபோன்று இலங்கையில் ஆண், பெண் இருவரும் 18வயதை பூர்த்தி செய்திருப்பதை பொதுத் திருமணக் கட்டளைச் சட்டம் (General Marriage Ordinance- 1907) தேவைப்பாடாக கொண்டுள்ளது. இருப்பினும் குறித்த சட்டப்பிரயோகத்திலிருந்து இலங்கை முஸ்லிம்கள் விதிவிலக்குப் பெறுகின்றனர் காரணம் இவர்களுக்கென தனியான திருமணச் சட்டம் காணப்படுகின்றமையாகும்.

சிறுவர் உரிமைகளுக்கான சமவாயத்தில் (The Child Rights Convention- CRC) சிறுவர்கள் பருவ வயதை அடையும் வயதெல்லை தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. அதாவது, “18 வயதுக்கும் குறைந்த ஏதேனும் ஒரு மனிதன் சிறுவனாவான்” என இதன் உறுப்புரை-01 குறிப்பிடுகின்றது (Tahera, 2015). குறித்த இச்சமவாயத்தை இலங்கை உட்பட உலகின் 194 நாடுகள் ஏற்றுக் கொண்டு கையொப்பம் இட்டுள்ளதுடன், அனைத்து உறுப்பு நாடுகளும் திருமணத்திற்கான மிகக் குறைந்த வயதெல்லையையும் வரையறை செய்துள்ளது (Tahera, 2015). இதற்கு மாற்றமாக ஆசிய நாடுகளில் இளவயதுத் திருமணம் தொடர்ந்தும் அதிகரித்துச் செல்வதாக ஐக்கிய நாடுகள் சபையின் பன்நாட்டுச் சிறுவர்களுக்கான அவசர உதவி நிறுவனம் (UNICEF) தெரிவிக்கின்றது. இவ்வாறு அதிகரித்துச் செல்வதற்கான பிரதான காரணங்களாக திருமணச் சட்டவயதெல்லைக் கட்டுப்பாட்டை உறுப்பு நாடுகள் முறையாக நடைமுறைப்படுத்த தவறியுள்ளமையும், சில நாடுகளில் நடைமுறையில் உள்ள தனியார் சட்டங்களாகும் என குறித்த நிறுவனம் குறிப்பிடுகின்றது (UNICEF: South Asia, 2017). மேலும், இது தொடர்பில்

இலங்கையின் நிலை குறித்து ஹிறுனிக்கா பிரேமசந்திர பாராளுமன்ற உறுப்பினர்கள் முன் குறிப்பிடும்போது முஸ்லிம் திருமண விவாகரத்துச் சட்டத்தில் (MMDA) திருமணத்திற்கான குறைந்த வயதெல்லை வரையறுக்கப்படாமை இலங்கையில் இளவயதுத் திருமணங்கள் அதிகரித்துச் செல்வதற்கான காரணமாகும் எனச் சுட்டிக்காட்டி இருந்தமை (BBCNews, 2013) இங்கு குறிப்பிடத்தக்கது.

UNICEF இன் அறிக்கையின் படி, ஒவ்வொரு வருடமும் உலகில் சுமார் 12 மில்லியன் பெண்கள் 18வயதுக்கு முன்பே திருமணம் புரிவதாகவும், 2 விநாடிகளுக்கு ஒரு இளவயதுத் திருமணம் உலகில் இடம்பெறுவதாகவும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டுகின்றது (PlanInternational, 2021). மேலும், சர்வதேச பெண்கள் உரிமைகளுக்கான ஆய்வு மையத்தின் (ICRW) அறிக்கையின் படி உலகின் பல பாகங்களிலும் வருடந்தோரும் 15 மில்லியன் பெண்கள் 18 வயதாவதற்கு முன்பே திருமணம் புரிவதாக குறிப்பிடுகின்றது (ரஸ்மி, 2017). பொதுவாக ஐந்து காரணங்களுக்கான உலகில் இளவயதுத் திருமணம் இடம்பெறுவதாக UNICEF தெரிவிக்கின்றது. அவை இளவயது மனைவிகள் கணவனுக்கு மிகவும் கீழ்படிந்து நடப்பவர்களாக காணப்படுகின்றமை, சிறுவர் பாதுகாப்புச் சட்டங்கள் முறையாக நடைமுறைப்படுத்தப்படாமை, இளவயதுத் திருமணம் பெண் பிள்ளைகளை பாலியல் துஷ்பிரயோகங்களில் இருந்து பாதுகாக்கும் என பெற்றோர் நம்புகின்றமை, வயது கூடிய பெண்களை விடவும் இளம் சிறுவர்களுக்கு வரதட்சனை குறைவாக வழங்கப்படுகின்றமை, பெண்கள் மற்றும் ஆண்களுக்கிடையே பால்நிலை சமத்துவமின்மை (International, 2021). போன்ற பல்வேறு காரணிகள் இளவயதுத் திருமணத்திற்கு வாய்ப்பாக அமைந்துள்ளன. இப்பின்னணியில் இலங்கையின் கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு மத்தியில் இளவயதுத் திருமணம் இடம்பெறுவதற்கான காரணங்களை அடையாளப்படுத்துவதுடன், குறித்த திருமணம் பெண்களின் வாழ்வில் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது என்தை கண்டறிவதை இவ்வாய்வு நோக்கமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

2. ஆய்வுப் பிரச்சினை

இளவயதுத் திருமணம் ஆண், பெண் சிறுவர்களின் வாழ்வில் பல எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றது. குறித்த இந்நடைமுறை மூலம் பெண் குழந்தைகள் பாலியல் சுகாதார மற்றும் நல்வாழ்வு பற்றிய தீர்மானங்கள் எடுக்கும் உரிமையை தடைப்படுவதுடன், சிறுவர்கள் கல்வியிலிருந்து தூரப்படுத்தி ஒரு நெருக்கடியான வாழ்க்கைக்குள் தள்ளுவதன் மூலம் சிறுவர்களுக்கு எதிரான வன்முறை, துஷ்பிரயோகங்கள், உடல், உளவியல் பாதிப்புகள் மற்றும் இளவயது மரணம் போன்ற ஆபத்துக்களுக்கு வித்திட்டுள்ளது (PlanInternational, 2021). இவை பொதுவாக உலகளாவிய ரீதியில் அடையாளப்படுத்தப்பட்ட பாதிப்புக்களாக காணப்படுகின்றன. இலங்கையிலும் அண்மைக்காலமாக இளவயதுத் திருமணத்திற்கான அறிகுறியான பாடசாலைகளில் பெண் மாணவிகளின் இடைவிலகல் அதிரித்துள்ளதுடன், கோவிட் பொது முடக்கம் மற்றும் இலங்கையின் பொருளாதார நெருக்கடியும் வலுச் சேர்த்துள்ளது. குறிப்பாக இந்நடைமுறை இலங்கையின் ஏனைய இனக்குழுக்களை விடவும் முஸ்லிம்களுக்கு மத்தியில் அதிகரித்துவருவதும், இளவயதில் திருமணங்கள் நடைபெறுவதும் அது பதிவாளரின்

உதவியுடன் காலதாமதமாக சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுவதும் ஆய்வாளர்களின் அவதானத்திற்கு உட்படுத்தப்பட்டது. இப்பின்னணியை அடிப்படையாகக் கொண்டே இவ்வாய்வு இலங்கையின் கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு மத்தியில் இளவயதுத் திருமணத்திற்கான காரணங்களை அடையாளம் காண்பதுடன், குறித்த திருமணத்தால் பெண்கள் எதிர்நோக்கும் சவால்களை கண்டறிய முயற்சித்துள்ளது.

3. ஆய்வு நோக்கங்கள்

1. இலங்கையின் கிழக்குமாகாண முஸ்லிம்களுக்கு மத்தியில் இளவயதுத் திருமணத்திற்கான காரணங்கள் அடையாளம் காணல்
2. இளவயதுத் திருமணத்தினால் ஏற்படுத்தும் தாக்கங்களை இணங்காணல்

5. ஆய்வு முறையியல்

இவ்வாய்வு சமூகவியல் ஆய்வாக காணப்படுவதுடன், இதில் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

5.1 ஆய்வு மாதிரி

ஆய்வு மாதிரிகள் எழுமாற்று அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டதுடன், தரவு திரட்டலின் போது ஆய்வு மாதிரிகள் திருமணம் புரியும் போது 18 வயதுக்கும் உட்பட்டவர்களா என்பது கவனத்திற் கொள்ளப்பட்டது. இதற்கமைய 240 ஆய்வுமாதிரிகளிடம் வினாக்கொத்து மூலம் தரவுகள் பெறப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட ஆய்வு மாதிரிகளின் விபரங்கள் பின்வரும் அட்டவணையில் அவதானிக்க முடியும்.

இல	மாவட்டம்	எண்ணிக்கை	சதவீதம்
01	மட்டக்களப்பு	81	34%
02	அம்பாறை	100	42%
03	திருகோணாமலை	59	24%
	மொத்தம்	**240**	**100**

தரவு திரட்டலின் போது பால்நிலை சமத்துவத்தை கருத்தில் கொண்டு 1: 2 (ஒரு ஆணுக்கு இரண்டு பெண்கள்) என்ற அடிப்படையில் வினாக்கொத்துகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

5.2 தரவுத் திரட்டு முறைகள்

பிரதான தரவுத் திரட்டு நுட்பமாக வினாக்கொத்து பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக ஆய்வாளர்களால் சுயமாக தயாரிக்கப்பட்ட மூன்று பகுதிகளைக் கொண்ட வினாக்கொத்து பயன்படுத்தப்பட்டது. குறித்த வினாக்கொத்தின் முதல் பகுதி ஆய்வுமாதிரிகளின் சுயவபரங்கள் வினவப்பட்டது. இரண்டாம் பகுதி இளவயதில் திருமணம் மேற்கொண்டமைக்கான காரணி, திருமணத்திற்காக சம்மதம் பெறப்பட்டமையுடன் தொடர்புடைய வினாக்களை உள்ளடங்கியதாக கட்டமைக்கப்பட்டது. மூன்றாவது பகுதி குறித்த திருமண வாழ்க்கையில் ஆய்வுமாதிரிகளின் திருப்தி நிலை மற்றும் தனிப்பட்ட அபிப்பிராயங்கள் போன்றன வினவப்பட்டன. இவ்வாறு மொத்தமாக 24 வினாக்களை உள்ளடக்கியதாக வினாக்கொத்து கட்டமைக்கப்பட்டது.

இவற்றிற்கு மேலதிகமாக, வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட தரவுகளின் உண்மைத் தன்மையை பரிசோதிக்கும் வகையில் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட 10 பெண்களுடன்

கட்டமைக்கப்படாத நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது. இதற்கான ஆய்வுமாதிரித் தெரிவின் போது இளவயதில் திருமணம் மேற்கொண்டு விவாகரத்துப் பெற்ற பெண்களுக்கு முதலிடம் வழங்கப்பட்டது.

5.3 தரவுப் பகுப்பாய்வு

வினாக்கொத்து மூலம் திரட்டப்பட்ட அளவுசார்ந்த தரவுகள் Ms-Excell (Version-2016) மென்பொருளின் துணையுடன் பகுப்பாய்வு செய்யப்பட்டு, பெறுபேறுகள் வரைபுகளில் விபரிக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவுகள் கருப்பொருள் மையப்பகுப்பாய்வு மூலமும் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டது. மேலும், ஆய்வின் கோட்பாட்டுப் பகுதியைக் கட்டமைப்பதற்கும், இளவயதுத் திருமண நடைமுறையின் போக்கினை விளங்கிக் கொள்வதற்கும் என இரண்டாம் நிலைத்தரவுகள் பரந்த வாசிப்புக்குட்படுத்தப்பட்டன. ஆய்வின் பெறுபேறுகள் வரைகலை விளக்கங்களிலும், எழுத்துக்களிலும் விபரிக்கப்பட்டுள்ளன.

6. சமூகவியல் நோக்கில் இளவயதுத் திருமணம்

இளவயதுத் திருமணம் உலகில் இடம்பெறுவதற்கான பல்வேறு சமூகவியல் காரணங்கள் சமூகவியல் ஆய்வாளர்களால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றை நோக்குவாம்.

Jack Goody (1990)ஆம் ஆண்டு மேற்கொண்ட ஆய்வில், இளவயது மணப்பெண்களை திருமணம் முடிப்பதற்கு அதிகம் விரும்பப்படுவதற்கான காரணங்களாக முதல் கரு உண்டாவதற்கு நீண்ட காலம் தேவைப்படுகின்றமை, கணவனுக்கு அதிகம் கீழ்படிந்து நடப்பதுடன் கட்டுப்பட்டு நடக்கின்றமை, புதிய குடும்ப சூழலை ஏற்றுக் கொள்வதற்கும் பழக்கப்படுவதற்கும் போதுமான கால அவகாசம் உள்ளமை போன்றவற்றைச் சுட்டிக்காட்டுகின்றார் (Goody, 1990). Relatedly, Dixon (1971) வரலாற்று ரீதியாக சீனா, இந்தியா, ஜப்பான் மற்றும் அரேபியா போன்ற நாடுகளில் இளவயதுத் திருமணம் புதிதாக திருமணமான தம்பதியினருக்கு பொருளாதார மற்றும் சமூக ஆதரவை வழங்குவதன் மூலம் வம்சாவளியின் பரவல் மற்றும் பரம்பரையை வலுப்படுத்துவதற்கும், குழந்தைகள் உற்பத்தியை உறுதிப்படுத்துவதற்கான காரணமாகும் (Wahhaj & Zaki, 2015). Moghadam (2004), பெண்களின் கௌரவம், அவர்கள் சார்ந்துள்ள குடும்பத்தின் கௌரவம், கன்னித்தன்மை போன்றவற்றைப் பாதுகாப்பதற்காகவும், அவ்வாறு கன்னித்தன்மையை இளவயதுப் பெண்கள் பாதுகாக்கின்றமையால் அவர்களைத் திருமணம் செய்து கொள்வதில் ஆண்கள் அதிகம் நாட்டம் கொண்டுள்ளார்கள் எனத் தனது ஆய்வில் சுட்டிக்காட்டுகின்றார். Kandiyoti (1988) குறிப்பிடுவதாவது இளவயதத் திருமணம் என்பது பரம்பரிய ஆணாதிக்கத்தின் அல்லது தந்தை குடும்பத்தலைவனாக உள்ள (classic patriarchy) ஒரு குடும்பத்தின் வெளிப்பாடாகும். அதாவது ஒரு பெண் கணவனின் பொருப்பில் அல்லது அவளின் உடன்பிறந்த ககோதரர்களின் பேச்சுக்குக் கட்டுப்பட்டு திருமண வாழ்வை அமைந்துக் கொள்வதன் மூலம் அது சமூகத்தில் பிரதிபழித்தது எனக் குறிப்பிடுகின்றார். இவ்வாறு பாரம்பரிய ஆய்வாளர்கள் பல காரணங்களை இளவயதத் திருமணத்திற்கு குறிப்பிட்டு இருப்பினும் நவீன உலகில் இதற்கு மாற்றமான பல ஆய்வின் முடிவுகள் பெறப்பட்டுள்ளது.

Cristina Bicchieri, Ting Jiang Jan & Willem Lindemans (2014) போன்ற ஆய்வாளர்கள் இளவயதத் திருமணத்திற்கான காரணங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றனர்.

1. **சமரசம் (Conciliation):** கணவன் மற்றும் மனைவியின் குடும்பத்தாரை ஒன்றாக இணைத்து சமாதானத்தை ஏற்படுத்தல்
2. **கல்வியின் தேவை (Why-Educate):** பெற்றோர் சிறுவர்களின் வளர்ப்பதற்கு போதிய வருமானம் அற்றவர்களாக இருப்பதுடன், திருமணத்தின் மூலம் பெண்களின் செலவுகளைக் குறைப்பதற்கான ஒரு வழியாக காண்கின்றனர். மேலும், வீட்டின் அருகில் பாடசாலைகள் எதுவும் இன்மை மற்றும் பெண்களுக்கு தொழில் வாய்ப்புக்களும் குறைவாக காணப்படுகின்றமை
3. **சீதனம் மற்றும் மணக்கொடை (Dowry):** பெண் வீட்டார் கணவனுக்கு வயதான பெண்ணைத் திருமணம் முடித்துவைக்கின்ற சந்தர்ப்பத்தில் அதிக தொகை பணம் செலுத்துவதுடன், கணவனிடமிருந்து குறைந்த தொகையே மனக்கொடையாக பெண் பெற்றுக் கொள்ளும் நிலை காணப்படுகின்றது. இந்நடைமுறைப் பிரச்சினையைத் தவிர்ப்பதற்காக இளவயதிலேயே பெற்றோர் தங்கள் பிள்ளைகளைத் திருமணம் முடித்து வைக்கின்றனர்.
4. **பாதுகாத்தல் (Safeguard):** சமூகத்தில் நல்ல மணமகன் அறிதாகக் காணப்படுவதால் பெண்ணை நன்றாக பார்த்துக் கொள்ளும் ஒரு மணமகன் கிடைக்கின்ற போது பெண்கள் திருமனம் முடித்து வைக்கப்படுகின்றனர்.
5. **கற்பொழுக்கம் (Chastity):** பெற்றோர் தங்கள் பிள்ளை கற்புள்ளவளாக இருப்பதையே அதிகம் விரும்புகின்றனர். வயது முதிர்கின்ற போது பெண்கள் காதல் மற்றும் பிற ஆண்களுடனான தொடர்பு போன்றவற்றின் காரணமாக முறையான திருமணத்திற்கு வெளியே தங்களின் கற்பினை இழக்கக் கூடும் என்ற அச்சத்தின் காரணமாக திருமணம் முடித்துவைக்கப்படுகின்றனர். இவற்றை இன்னும் சில உபபிரிவுகளாக பிரிக்க முடியும்.
6. **ஒத்துப்போதல் (Conformity):** சமூகத்தில் உள்ள பெண்கள் இளவயதிலயே திருமணம் முடிக்கின்றார்கள் என்ற மனப்பதிவு, அதனால் தங்கள் பிள்ளையையும் இளவயதில் திருமணம் முடித்து வைக்க நாடுகின்றமை
7. **வழக்காறு (Tradition):** இளவயதுத் திருமணம் என்பது மக்களின் வழக்காறு, பாரம்பரியம் மற்றும் கலாசார நடைமுறையின் ஒரு பகுதியாகும்
8. **வீட்டுமனைவி (Housewife):** பெண்கள் நல்ல மனைவியாகவும், நல்ல தாயாகவும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றார்கள் மாறாக அவர்களின் நலன் மற்றும் தனிப்பட்டவளர்ச்சி போன்றவற்றிக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை
9. **இளவயதுத் திருமணத்தின் தீங்குகள் பற்றி அறியாமை (Ignorance-about-Harm):** இளவயதுத் திருமணத்தால் சிறுவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் பொதுமக்கள் பராமுகமாக இருத்தல்

10. **பணிவு (Docility)**: பொதுவாக சிறுவர்கள் தங்கள் சொந்த நலன்களைப் பாதுகாப்பதற்காக முற்சித்தல் குறைவாகும்
11. **சட்டம் (Law):** சிறுவர் திருமணத்தை தடுக்கக்கூடிய சட்டங்கள் இயற்றப்படாமை, சட்ட காணப்படுகின்ற போதிலும் அவை செயற்பாட்டு ரீதியாக நடைமுறைப் படுத்தப்பட்டாமை
12. **ஜுலியட் (Juliet):** சிறுவர்கள் தாமாக காதல் மற்றும் திருமணத்தின் மீது விருப்பம் கொள்வதும் அதில் ஈடுபடுவதும் காரணமாக அமைந்துள்ளது.

இக்காரணங்களை Jain & Kurz, 2007; Loaiza & Wong, 2012; UNICEF, 2001; Verma, Sinha, & Khanna, 2013 போன்றோர் தமது ஆய்விலும், அறிக்கைகளிலும் ஏற்று உறுதிப்படுத்தியுள்ளனர். இக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஆய்வாளர்களால் பின்வரும் ஆய்வுக் கருதுகோள்கள் உருவாக்கப்பட்டன.

7. ஆய்வின் கருதுகோள்கள்

H_1- ஆய்வுப்பிரதேச முஸ்லிம்களுக்கு மத்தியில் இளவயதுத் திருமணத்திற்கான காரணங்களாக போர்ச் சூழல், பால்நிலை வேறுபாடு, பாடசாலை இடைவிலகல், பெற்றோரின் மரணம், சமூகத்தில் முதிர்க்கன்னிகள் அதிகரித்தல், சீதனம், வழக்காறு மற்றும் பெற்றோர் இளவயதிளையே திருமணம் புரிந்திருத்தல் போன்ற காரணங்கள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

H_2- இளவயதுத் திருமணத்தால் பெண்கள் பல்வேறு உடலியல், உளவியல், பொருளாதார மற்றும் சமூகம் சார் தாக்கங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

8. பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

ஆய்வின் பெறுபேறுகளும் கலந்துரையாடலும் எனும் இப்பகுதி மூன்று பிரதான தலைப்புக்களின் கீழ் முன்வைக்கப்பட்டுள்ளது. இதில் முதல் பகுதி ஆய்வுமாதிரிகளின் விபரங்கள் விபரிக்கப்பட்டுள்ளதுடன், இரண்டாம் பகுதியில் இளவயதுத் திருமணத்திற்கான சமூகப், பொருளாதார மற்றும் கலாசாரக் காரணிகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. இருதியாக மூன்றாம் பகுதிகளில் இளவயதுத் திருமணம் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

8.1. ஆய்வுமாதிரிகளின் விபரங்கள்

ஆய்வுமாதிரிகளின் சுயவிபரங்கள் இப்பகுதியில் ஆய்வுமாதிரிகளின் பால்நிலை, திருமணம் மேற்கொள்ளும் போதான வயது, கல்வி நிலை, சமூக நிலை மற்றும் வருமான நிலை போன்றன பிரதான அம்சங்களாகும். இவற்றை பின்வரும் பகுப்பாய்வு அட்டவணையில் அவதானிக்க முடியும்.

விபரங்கள்	**எண்ணிக்கை**	**சதவீதம்**
திருமணம் மேற்கொள்ளும் போது வயது		
▪ 10-15	68	28.1%
▪ 16-20	110	45.5%
▪ 21-25	52	21.5%
▪ 26-30	9	3.7%
மொத்தம்	**240**	**93.3%**
பால்நிலை		
▪ ஆண்	44	18.2%
▪ பெண்	196	81%
மொத்தம்	**240**	**99.2%**
சமூக நிலை		
▪ கணவன் மனைவி ஒன்றாக வாழ்பவர்கள்	77	31.8%
▪ விவாகரத்துப் பெற்றவர்கள்	114	46.8%
▪ பிரிந்து தனித்தனியாக வாழ்பவர்கள்	49	20.6%
மொத்தம்	**240**	**99.2%**
கல்வித் தகைமை		
▪ கல்விகற்றதில்லை	40	16.5%
▪ ஆரம்ப நிலை கல்வி	63	26%
▪ இரண்டாம் நிலை கல்வி	39	16.1%
▪ க.பொ.த. உயர் தரம்	50	20.7%
▪ தொழில்தகைமை	36	14.9%
▪ பட்டப்படிப்பு	12	5%
மொத்தம்	**240**	**99.2%**

அட்டவணை 1: சமூக-ஆய்வுமாதிரிகளின் விவரங்கள்

- **பால் நிலை**

ஆய்வுமாதிரிகளின் பால்நிலையை ஆய்வுக்குட்படுத்திய போது, ஆய்வுமாதிரிகளில் 18.2% பங்குபற்றுனர்கள் ஆண்களாகவும், 81% பங்குபற்றுனர்கள் பெண்களாகவும் காணப்படுகின்றமை கண்டறியப்பட்டது. ஒப்பீட்டளவில் ஆண்களைவிடவும் பெண்களே அதிகம் இளவயதுத் திருமணம் மேற்கொள்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

- **ஆய்வுமாதிரிகள் திருமண உறவில் இணையும்போதான வயது**

திருமண உறவில் இணையும் போது ஆய்வுமாதிரிகளின் வயதை ஆய்வுக்குட்படுத்திய போது பெரும்பாலான பங்குபற்றுனர்கள் (45.5%) 16 வயதுக்கும் 20 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக காணப்படுவதுடன், இதற்கு அடுத்த (28.1%) நிலையில் 10- 15 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்

காணப்படுகின்றனர். இது இலங்கைப் பொதுத் திருமணச் சட்டத்தில் வரையறை செய்யப்பட்டுள்ள வயதிற்கும், உலக நாடுகள் வரையறை செய்துள்ள திருமண வயதுக்கும் நேர்மாற்றமானதாகும். இதன் மூலம் ஆய்வுமாதிரிகளில் அதிகமானவர்கள் 18வயதுக்கு முன் திருமண வாழ்வில் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

- **கல்வி நிலை**

ஆய்வுமாதிரிகளின் கல்விநிலையை ஆய்வுக்குட்படுத்திய போது பெரும்பாலானவர்கள் (26%) ஆரம்ப நிலை (1-5 வரையான வகுப்புகளை) பூர்த்தி செய்தவர்கள் காணப்படுவதுடன், இதற்கு அடுத்த நிலைகளில் (20.7%) க.பொ.த.உயர்தரம் வரை கல்வியைப் பூர்த்தி செய்தவர்களும், கல்வியறிவு அற்றவர்கள் (16.5%) காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் இளவயதுத் திருமணம் புரிந்தவர்களில் மிகக் குறைந்த வீதத்தினரே தொழிற்கல்வி (14.9%) மற்றும் பட்டப்படிப்பு (5%) வரை கல்வியைப் பெற்றுக் கொண்டவர்களாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

- **சமூக நிலை**

ஆய்வுமாதிரிகளின் சமூக நிலையை ஆய்வுக்குட்படுத்திய போது 46.8% ஆய்வுமாதிரிகள் விவாகரத்துப் பெற்றவர்களாகவும், 31.8% மாதிரிகள் கணவன் மனைவியாக ஒன்றாக வாழ்பவர்களாகவும், 20.6% பங்குபற்றுனர்கள் கணவனை விட்டும் தனியாக பிரிந்து வாழ்பவர்களாக காணப்படுகின்றனர். பொதுவாக நோக்குகின்ற போது கணவன் மனைவியாக இணைந்து வாழ்பவர்களை விடவும், பிரிந்து வாழ்பவர்களே அதிகமாக (67.4%) காணப்படுகின்றனர். ஒப்பீட்டளவில் மிகவும் குறைந்த எண்ணிக்கையான (31.8%) பங்குபற்றுனர்களே கணவன் மனைவியாக இணைந்து வாழ்பவர்களாக உள்ளனர்.

- **பொருளாதார நிலை**

ஆய்வுமாதிரிகளின் வருமான நிலையை ஆய்வுக்குட்படுத்திய போது அவர்களின் அதிகமானவர்கள் (45.5%) குறைந்த வருமானத்தை உடைய குடும்பங்களாக உள்ளனர். இதற்கு அடுத்த நிலையில் (38%) நடுத்தர வருமானத்தை உடைய குடும்பங்களாகவும், 12.8% குடும்பங்கள் ஓரளவு சிறந்த வருமானத்தை உடைய குடும்பங்களாகவும் உள்ளமை கண்டறியப்பட்டது.

8.2. இளவயதுத் திருமணத்திற்கான காரணங்கள்

ஆய்வுப்பிரதேசத்தில் இளவயதுத் திருமணங்கள் இடம்பெறுவதற்கான காரணங்களைத் பகுப்பாய்வுக்குட்படுத்திய போது கீழே அட்டவணையில் உள்ள காரணிகளே இளவயதுத் திருமணத்திற்கு காரணமாக அமைந்துள்ளமை கண்டறியப்பட்டது. இக்காரணிகளை சற்று விரிவாக தனித்தனியே நோக்குவது பொருத்தமாக அமையும்.



8.2.1. இளவயதுத் திருமணத்திற்கான சமூகக் காரணிகள்



இளவயதுத் திருமணம் புரிந்த அனுபவமுடைய ஆண், பெண்களிடம் வழங்கப்பட்ட வினாக்கொத்தினை பகுப்பாய்வுக்குட்படுத்தி பெறப்பட்ட பெறுபேறுகளை மேலே வரைபடத்தில் அவதானிக்க முடியும். இதற்கமைய ஆய்வுப்பிரதேசத்தில் இளவயதுத் திருமணத்தில் செல்வாக்குச் செலுத்தும் பொருளாதார மற்றும் கலாசாரக் காரணிகளை விடவும் அதிகமானவை சமூகம் சார்ந்த காரணிகளாகவே உள்ளமையை அடையாளப்படுத்த முடிந்தது. சமூகக் காரணிகளில் குறிப்பாக பெற்றோர்கள் இளவயதில் திருமணம் மேற்கொண்டுள்ளமை (17%), பெற்றோரின் மரணம் (15%) மற்றும் சீதனம் (15%) ஆகிய காரணங்களுக்காகவே அதிகமான திருமணங்கள் இடம்பெற்றுள்ளன.

பெற்றோர்கள் இளவயதில் திருமணம் மேற்கொண்ட அனுபவம் காணப்படுகின்றமையானது, தங்களில் பிள்ளைகளின் வாழ்க்கைக்கு அது பாதகமாக அமையாது என்ற மனநிலையில் உள்ளமை எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட பெற்றோர்களுடன் மேற்கொண்ட நேர்காணலின்

போது அறிய முடிந்தது. இம்மனோநிலைக்குக் காரணம் இளவயதுத் திருமணத்தால் ஏற்படும் பாதகமான விளைவுகள் தொடர்பில் விழிப்புணர்வின்மையாகும். மேலும் இக்காரணத்தைக் குறிப்பிட்டவர்களில் அதிகமானவர்கள் கல்வியறிவு அற்றவர்களாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. பொதுவாக கிழக்கிலங்கையில் 1950 காலப்பகுதிகளில் இந்நடைமுறை தாராளமாகவும், பரவலாகவும் பின்பற்றப்பட்டுள்ளதுடன், பின்னரான காலப்பகுதியில் நவீனத்துவ சிந்தனை கொண்ட கல்வியறிவுடைய ஒரு சமூகத்தின் தோற்றத்தால் பெண்களும் கல்வி கற்கவேண்டும் என்ற சிந்தனை வலுப்பெற்று, இளவயதுத் திருமண நடைமுறை சமூகத்தில் மறைந்துச் சென்றது. இருப்பினும் இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் இடம்பெற்ற போர் காலப்பகுதியில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கைச் சேர்ந்த பெற்றோர் தமது பிள்ளைகளை குறிப்பாக பெண் பிள்ளைகளை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதனை தவிர்க்கும் பொருட்டு அவர்களை இளவயதில் திருமணம் செய்து கொடுக்கும் நடைமுறை மீளவும் சமூகத்தில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது (Wijeyesekera, 2011). இலங்கை சிவில் யுத்ததிற்குப் பின்னரான காலப்பகுதியில் பெண்கள் மீண்டும் பாரம்பரிய வாழ்க்கையை நோக்கி உள்ளிழுக்கப்பட்டு குடும்ப வாழ்க்கையுடன் தங்களது வாழ்க்கையைச் சுருக்கிக் கொண்டுள்ளமை இவ்வாய்வின் கண்டறிதல் உறுதி செய்கின்றது.

இளவயதுத் திருமணத்திற்கான சமூகக் காரணிகளில் இரண்டாவது காரணி பெற்றோரின் மரணமாகும். குறிப்பாக பெற்றோரின் பிரிவு ஆண்பிள்ளைகளை விடவும் பெண்பிள்ளைகளையே அதிகம் பாதிப்பதாக அமைந்துள்ளது. குறிப்பாக ஒரு குடும்பத்தில் தாயோ, தந்தையோ இருவரில் எவர் மரணித்தாலும் முதலில் பாதிப்பது பெண்பிள்ளையாகும். காரணம் பெண் பிள்ளைகள் தங்களது காப்புத் தேவையை பூர்த்தி செய்ய முடியாது தவிப்பதாகும். தாய், தந்தையரின் இடைவெளியை உற்றார் உறவினர்களால் கூட நிரப்ப முடியாத நிலை ஏற்படுகின்றது. இதற்கான மாற்றுத் தீர்வாகவே பெண்பிள்ளைகளின் வயது, கல்வி போன்றன கவனத்தில் கொள்ளப்படாது திருமண முடித்து வைக்கப்படுகின்றனர். இவ்வாறு பெற்றோரின் மரணத்தை திருமணத்திற்கான காரணமாகக் குறிப்பிட்ட பெண்களில் அதிகமானவர்கள் உயர்தரம் வரை மாத்திரமே கல்வி கற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் பெண்களே இக்குறித்த காரணத்திற்காக அதிகம் திருமணம் மேற்கொண்டுள்ளனர். இவ்வாறு திருமணம் மேற்கொண்டவர்களில் அதிகமானவர்கள் குறித்த திருமணத்தில் விவாகரத்து மேற்கொண்டு மீள்விவாகம் ஒன்றில் இணைந்தவர்களாக உள்ளமையையும் அறிந்து கொள்ள முடிந்தது.

மூன்றாவது முக்கிய காரணங்களில் ஒன்றே வரதட்சனை நடைமுறையாகும். இலங்கையில் சீதன நடைமுறையினால் தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலேயே பெண்கள் பெருமளவில் பாதிக்கப்படுவதாக பெண்ணுரிமைச் செயற்பாட்டாளர்கள் கூறுகின்றனர் (Saadiya Fowzer, 2013). தமிழர் பிரதேசங்களில் சில வழக்காறு சட்டங்கள் மூலமாக சீதனம் வாங்கும் நடைமுறை சட்ட அங்கீகாரத்துடன் இடம்பெற்று வருகின்றது. இது தொடர்பில் குறித்த சட்டத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும் என்ற கோஷங்கள் வலுப் பெற்றுள்ளன. ஆய்வுப் பிரதேச பெற்றோர்களின் மனப்பதிவில் சீதனம் கொடுத்து பிள்ளையைத் திருமணம் செய்துவைக்க வேண்டும் என்பது எழுதப்படாத விதியாகவே இருந்து வருகின்றது. சமூக

அடுக்குகளில் உயர் மட்டத்தில் உள்ளவர்கள் தங்களின் பொருளாதாரத்தை வாரி இரைத்து பிள்ளைகளுக்கு திருமணம் முடித்து வைக்கின்றனர். மறுபுறம் சமூகத்தில் பல பொருளாதாரச் சுமைகளுக்கு மத்தியில் பிள்ளையை திருமணம் செய்து வைக்க எண்ணும் பெற்றோர் பயன்படுத்தும் ஒரு மாற்றுவழியாக இளவயதுத் திருமணம் காணப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் பன்நாட்டுச் சிறுவர்களுக்கான அவசர உதவி நிறுவனம் அடையாளப்படுத்தியுள்ள சிறுவர் திருமணத்திற்கான காரணங்களில் வரதட்சனையும் ஒன்றாகும். அக்காரணத்துடன் குறித்த இச்சமூகவியல் காரணமும் இயைந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு வரதட்சனைக்காக திருமணம் மேற்கொண்டவர்களில் அதிகமானவர்கள் வறுமைக் கோட்டின் கீழ் அல்லது நடுத்தர வருமானத்தை உடைய குடும்பங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவைகளுக்கு அடுத்த நிலையில் வழக்காறு (13%) காணப்படுகின்றது. 2013ஆம் ஆண்டு யுனிசெப், இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட 10 மாவட்டங்களில் மேற்கொண்ட ஆய்வில் இளவயதுத் திருமண நடைமுறை என்பது ஒரு வழக்காற்று நடைமுறை அல்ல என்பதை உறுதிப்படுத்தியுள்ளது (Amarasuriya, 2013). இருப்பினும் ஆய்வுப்பிரதேசத்தின் சில பெண்கள், இது ஒரு வழக்காற்று நடைமுறையாக இடம்பெற்று வருகின்றது எனவே இதனை மேற்கொள்வது தவறுகள் ஏதும் இல்லை என்ற மனோநிலையில் காணப்படுகின்றனர். மேலும் இவ்வாறு வழக்காற்றை ஒரு காரணமாகக் குறிப்பிட்ட பெரும்பாலான பெண்களின் பெற்றோர்கள் இளவயதில் திருமணம் மேற்கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு அடுத்த நியில் பெற்றோர்களுக்கிடையிலான மணமுறிவு (11%) மற்றும் சமூகத்தில்



முதிர்கன்னிகளின் எண்ணிக்கை அதிகரித்தல் (11%) போன்றனவும் காணப்படுகின்றன. இவ்வாறான காரணங்களைக் குறிப்பிட்டவர்களில் அதிகமானவர்கள் பின்தங்கிய கிராமப்புறங்களில் வாழ்பவர்களாகவும், கல்வியறிவு குறைவானவர்களாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் இவர்கள் பொருளாதார நிலையில் நடுத்தர மற்றும் குறைந்த வருமானத்தைப் பெறும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாவர். **8.2..2. பொருளாதாரக் காரணிகள்**

பொருளாதாரக் காரணிகளில் வறுமை பிரதான இடத்தைப் பிடித்துள்ளது. ஆய்வுமாதிரிகளில் அதிகமானவர்கள் (35%) வறுமையின் காரணமாகவே திருமணம் மேற்கொண்டுள்ளனர். மேலும் இவ்வாறு திருமணம் மேற்கொண்டவர்களில் அதிகமானவர்கள் குறைந்த மற்றும் நடுத்தர வருமானத்தை உடைய குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவும் உள்ளமை கண்டறியப்பட்டது.

ஹரியானா சேத்தி (2021) மேற்கொண்ட ஆய்வில், பொதுவாக இலங்கையில் இளவயதுத் திருமணத்திற்கு பிரதான காரணமாக வறுமை மற்றும் கல்வியறிவின்மை காணப்படுவதாக குறிப்பிடுகின்றார் (Sethi, 2021). மேலும் இது தொடர்பில் எழுமாறாக தெரிவு செய்த பெற்றோர்களிடம் மேற்கொண்ட நேர்காணலின் போது அறியக்கிடைத்த விடயம் 20 அல்லது 25 வயதில் பெண்களை திருமணம் முடித்து வைக்கின்ற போது வரதட்சனையாக மணமகனின் வீட்டார் வீடு, காணி மற்றும் வாகனம் எதிர்பார்ப்பதாகவும், 20வயதுக்கும் குறைவான வயதில் பெண்களை மணமுடித்து வைக்கின்ற சமயத்தில் இவ்வாறு வரதட்சனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதுமில்லை, திருமணம் முறையாக பதிவு செய்யப்படுவதுமில்லை என்பது அறியக்கிடைத்தது. வறுமையில் வாழும் பெற்றோர் தங்களது சுமையை குறைப்பதற்கான ஒரு மாற்று வழியாக இளவயதுத் திருமணத்தை கருதுகின்றனர். ஆய்வுப்பிரதேசத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளில் நன்கு வசதிபடைத்த நபர்கள் இளவயதுடையப் பெண்களை சொந்த செலவில் திருமணம் செய்து கொள்வதாகவும் பொதுமக்களிடம் மேற்கொண்ட நேர்காணலின் போது அறியக்கிடைத்தது. சமூகத்தில் வறுமை நிலை நீக்கப்படுகின்ற சமயத்தில் இளவயதுத் திருமண நடைமுறையை பூச்சியத்திற்குக் கொண்டுவரும் வாய்ப்பு உள்ளது.

இதற்கு அடுத்த நிலையில் குடும்பத்தில் அதிகமான பெண்கள் காணப்படுகின்ற சமயத்திலும் (21%) இக்குறித்த திருமணம் இடம்பெறுகின்றது. குறுகிய வயது இடைவெளியில் பிறந்த பெண்பிள்ளைகள் அல்லது குடும்பத்தில் 3ற்கும் மேற்பட்ட எண்ணிக்கையான பெண்பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களிலும் இந்நடைமுறை காணப்படுகின்றது. இவ்வாறான குடும்பங்களில் பெண்பிள்ளைகள் பாடசாலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டு திருமணம் முடித்து வைக்கப்படுவதாக நேர்காணலின் போது அறியக்கிடைத்தது. இதற்கு அடுத்த நிலைகளில் (18%) பெற்றோர் குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகளை நிறைவுசெய்வதற்காக வெளிநாடு நோக்கி செல்லல் காணப்படுகின்றது. இதுவும் வறுமையுடன் தொடர்புடைய ஒரு காரணமாகும். வெளிநாடுகளுக்கு தொழிலுக்காக செல்வோரின் குடும்பப் பின்னணி இதற்கு காரணமாக அமைந்துள்ளது. சில குடும்பங்களில் தாயும், தந்தையும் வெளிநாடு செல்கின்ற போது தமது பிள்ளையின் பாதுகாப்பிற்காக திருமண வயதை அடைவதற்கு முன் திருமணம் முடித்து வைக்கின்றனர். மற்றும் சில ஆய்வுமாதிரிகளின் குடும்பங்களில் பெண் பிள்ளைக்கு திருமணம் முடித்து வைத்த பின் மாப்பிள்ளையின் நெருக்கடி காரணமாக இருப்பதற்கு இடமின்றி வெளிநாடு நோக்கி பயணிப்போராகவும் காணப்படுகின்றனர். இருப்பினும் இது நேரடியாக இளவயதுத் திருமணத்திற்கான காரணமாக இல்லாவிடினும் குடும்பத்தின் வருமான நிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணமாக அமைந்துள்ளது எனக் குறிப்பிட முடியும்.

இதற்கு அடுத்த நிலையில் பெண் குடும்பத்தை தலைமை தாங்கும் நிலை (14%) மற்றும் பொருளாதாரத்தின் மீதான அதீத பற்று (12%) போன்ற காரணங்கள் காணப்படுகின்றன. கணவனின் மரணம் மற்றும் விவாகரத்து காரணமாக கணவனை இழந்த குடும்பங்களிலேயே இந்நிலை அதிகம் காணப்படுகின்றது. பொதுவாக பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களில் பிள்ளைகள் முறையாக கல்வியைப் பெற்றுக் கொள்ளாது இடைவிலகுவதும், பின் உரிய வயதை அடைவதற்கு முன் திருமணம் புரிவதும் இயல்பாக இடம்பெறும் ஒரு செயற்பாடாக அமைந்துள்ளது. ஆய்வுப்பிரதேசத்திலும் இந்நிலை தாராளமாக இடம்பெறுகின்றது. சமூகத்தில்

ஒரு பெண், ஆண் துணையின்றி தான் வாழ்வதோ அல்லது தனது பெண் பிள்ளைகளை வளர்ப்பதோ சாத்தியமற்ற ஒன்றாகும். காரணம் சமூகம் இவ்வாறான பெண்களை வேற்றுக் கண்கொண்டு பார்ப்பதும், குறித்த பெண்ணின் நடத்தையை சந்தேகப்படுவதும் வாடிக்கையாக இடம்பெறும் ஒன்றாகும். இதற்கு அஞ்சியே பல தாய்மார்கள் தங்கள் பிள்ளையின் எதிர்காலத்திற்காகவும், குடும்பத்தை ஒரு ஆண் தலைமை தாங்க வேண்டும் என்பதற்காகவும் இவ்வாறு தங்கள் பிள்ளைகளை இளவயதில் திருமணம் முடித்து வைக்கின்றனர். மேலும் ஒரு சில குடும்பங்களில் பெண்பிள்ளைகள் உறவினர்களால் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுவதாகவும், அதிலிருந்து காத்துக் கொள்வதற்காகவும் இவ்வாறு திருமணம் முடித்து வைக்கப்படுவதாகவும் நேர்காணலின் மூலம் அறிய முடிந்தது. வசதிபடைத்த ஒரு ஆண்மகன் திருணத்திற்காக பிள்ளையை கேட்கின்ற போது, வசதி படைத்த குடும்பத்தில் திருமணம் செய்து வைத்தால் பிள்ளை வசதியாக வாழும் என்ற எண்ணத்தில் பெற்றோர் பிள்ளையை பாடசாலையிலிருந்து இடைவிலக்கி திருமணம் செய்து வைக்கின்றனர். இவ்வாறான காரணங்களைக் குறிப்பிட்ட பெண்களில் அதிகமானவர்கள் குறித்த திருணமத்தில் விவாகரத்துப் பெற்று பெற்றோருடன் வாழ்பவர்களாகவும், மீள்விவாகம் மேற்கொண்டவர்களாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

8.2.3. கலாசாரக் காரணிகள்



இளவயதுத் திருமணத்தில் செல்வாக்குச் செலுத்தும் கலாசாரக் காரணிகளை ஆய்வுக்குட்படுத்திய போது மேலே வரைபில் காட்டப்பட்டுள்ள காரணங்கள் அடையாளம் காணப்பட்டன. இடம்பெற்ற திருமணங்களில் அதிகமானவை (28%) பெற்றோரின் வற்புறுத்தலினால் இடம்பெற்றதாகக் காணப்படுகின்றன. பாடசாலைக் கல்வியைத் தொடரும் பெண்களிடம் திருமணம் பற்றிய முழுமையான அறிவோ, ஈடுபாடோ காணப்படாத நிலையில் குறித்த பெண் பிள்ளைகளிடம் திருமணத்திற்கான அனுமதி கேட்கப்படுகின்றபோது பிள்ளைகள் மறுக்கின்றனர். இதனால் பெற்றோர் பிள்ளையை கடுமையான வார்த்தைகளைக் கொண்டு ஏசுதல், நிந்தித்தல் மற்றும் சிலபோது வார்த்தைகள் எல்லை தாண்டி உடலில் காயங்கள் ஏற்படும் அளவுக்கு அடிப்பதும் உண்டு. பொதுவாக இந்நிலை சமூகத்தில் அந்தஸ்தும், பொருளாதார ரீதியாக உயர் வருமானத்தையும் உடைய குடும்பங்களிலேயே இடம்பெற்றுள்ளன. மேலும் இவ்வாறான காரணங்களைக் குறிப்பிட்டவர்களில் அதிகமானவர்கள் நகர் புறங்களை

அண்மித்து வாழ்பவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதற்கு மேலதிகமாக, பொதுவாக ஆய்வுப்பிரதேசத்தில் இடம்பெறும் அநேகமான திருமணங்கள் பெற்றோரின் வற்புறுத்தலின் நிமிர்த்தம் இடம்பெற்றுள்ளன. வுற்புறுத்தலுக்கு மேலதிகமாக பிள்ளைகளுக்கு திட்டுதல், அடித்தல், சூடுவைத்தல் போன்ற பல வகையான வன்முறைகளும் இடம்பெற்றுள்ளமையை அறிய முடிந்தது. உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனத்தினத்தின் உறுப்புரை- 16 திருமண உரிமை பற்றி குறிப்பிடுகையில், "திருமணத்தில் இணையும் தம்பதியினரின் முழுமையான சம்மதத்துடன் இணைதல் வேண்டும்" (Nations, 2022). சம்மதம் பெறப்படாது அல்லது வலுக்கட்டாயமாக சம்மதம் பெறப்படுமாயின் அவை மனித உரிமை மீறலாகவே கணக்கிடப்படுகின்றது.

இதற்கு அடுத்த நிலையில் (25%) ஆண்- பெண் தொடர்பு காணப்படுகின்றது. சமூக ஊடகங்களின் செல்வாக்கு காரணமாகவும், சமூக வலையதளங்களில் ஆண்- பெண் நட்பு காரணமாகவும் இளவதில் திருமணங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் குறிப்பிட்ட சில திருமணங்கள் பெற்றோரின் சம்மதமின்றி இடம்பெற்றுள்ளன. இவ்வாறு திருமணம் முடித்தவர்களில் ஒப்பீட்டளவில் ஆண்கள் அதிகமாகும். திருமணத்தின் பின் குடும்பத்திற்காக வேலைகள் மேற்கொள்ள வேண்டி உள்ளதால் கல்வி இடையில் கைவிடப்பட்டு, கூழி வேலைகளில் சிறுவர்கள் ஈடுபடுகின்றமை அறிய முடிந்தது. மேலும் இவ்வாறு காதல் வயப்பட்டு இடம்பெறும் இளவயதுத் திருமணங்கள் எதிர்காலத்தில் அதிகரித்துச் செல்லும் நிலை காணப்படுகின்றது. இவ்வாறு திருமணம் மேற்கொண்டவர்களில் அதிகமானவர்கள் கிராமப்புறங்களில் வசிப்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு அடுத்ததாக கற்றலில் ஆர்வமின்மை (18) செல்வாக்குச் செலுத்தியுள்ளது. பெண்பிள்ளைகள் கற்றலில் சற்று பின்தங்கியவர்களாக பெற்றோர்களால் அடையாளம் காணப்படுகின்ற போது அவர்கள் உடனடியாக திருமணம் முடித்து வைக்கப்படுகின்றனர். இது ஒரு புறம் பெண்களின் கல்விக்குத் தடையாக அமையும் காரணியாக அமைந்துள்ளதுடன், பெண்பிள்ளைகளின் கல்வி உரிமைக்கு எதிரான ஒரு செயற்பாடாகவும் காணப்படுகின்றது. மறுபுறம் இடைவிலகல் அதிகரித்துள்ள பிரதேசங்களில் இளவயதுத் திருமண நடைமுறை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு அடுத்த நிலையில் (15%) துஷ்பிரயோகத்திற்கு உள்ளாதல் காணப்படுகின்றது. சில ஆய்வுமாதிரிகள் குடும்ப உறுப்பினர்களால் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளதுடன், மற்றும் சிலர் பிரத்தியோக வகுப்புகளிலும், பாடசாலைகளில் ஆசிரியருடனான தொடர்பை பெற்றோர் சந்தேகித்து வலுக்கட்டாயமாக திருமணம் புரிந்து வைத்துள்ளனர். மொத்தமாக பார்க்கின்ற போது இது தொடர்பில் பெற்றோருக்கு விழிப்புணர்வு வழங்க வேண்டிய தேவை உள்ளமை அறிய முடிந்தது. இன்று சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளைத் தடுப்பதற்காக அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில், பெற்றோர் இது பற்றிய விழிப்புணர்வின்றி சட்டரீதியான கற்பழிப்புக்கு (Statutory rape) வழியேற்படுத்திக் கொடுத்துள்ளனர் என்பதே உண்மையாகும்.

8.3. இளவயதுத் திருமணத்தின் தாக்கங்கள்

இளவயதுத் திருமணம் இடம்பெறுவதால் பல தாக்கங்கள் ஏற்படுகின்றன. ஆய்வுப்பிரதேசத்தில் அடையாளப்படுத்தப்பட்ட தாக்கங்கள் கீழேயுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளது.



குறித்த திருமணம் இடம்பெறுவதால் உடலியல், உளவியல், சமூகம் சார்ந்த மற்றும் பொருளாதாரம் சார்ந்த பல தாக்கங்கள் இடம்பெறுகின்றன. இவற்றை சற்று விரிவாக நோக்குவோம்.

இளவயதில் திருமணம் புரிந்த தனிநபர்களிடம் வழங்கப்பட்ட வினாக்கொத்து மற்றும் நேர்காணலின் போது ஆய்வுமாதிரிகளின் அனுபவத்தின் வாயிலான பெற்றுக் கொண்ட தாக்கங்களையும், எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட நபர்களிடம் வழங்கப்பட்ட வினாக்கொத்தில் அடையாளப்படுத்தப்பட்ட தாக்கங்களையும் உள்ளடக்கியதாக மேலே உள்ள வரைபடம் குறித்து நிற்கின்றது. இவற்றை தனித்தனி தலைப்புக்களின் கீழ் சற்று விரிவாக ஆராய்வது பொருத்தமாக அமையும்.

இளவயதில் பெண்கள் திருமணம் புரிவதால் எதிர்நோக்கும் முதல் பிரச்சினை சிசு மரணம் மற்றும் கருச் சிதைவாகும். இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நிர்ணயத்தின் (UNFPA Sri Lanka) அறிக்கையின் படி, இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் கட்டிளமைப் பருவத்தினர் கருத்தரித்தல் 10.2% அதிகரித்து காணப்படுவதாகவும், இது இலங்கையின் மேல்மாகணத்துடன் ஒப்பிடும் போது 4.1% குறைவாகக் காணப்படுவதாகவும் குறித்த அறிக்கை தெரிவிக்கின்றது (Rajeevan, 2018). இவற்றிற்கு மேலதிகமாக கணவனின் ஆலோசனைக்கு இணங்க சட்டத்திற்கு முரணான கருக்கலைப்புக்களும் இடம்பெற்றுள்ளன. இதற்கு குறித்த பெண் இணங்க மறுக்கின்ற போது கணவனினால் வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர் (நேர்காணல்). அமெரிக்க கர்ப்ப சங்கம் (America Pregnancy Association) ஒரு பெண் 15வயதுக்கு முன் கருத்தரிப்பதால் எதிர்நோக்கும் சவால்களை அடையாளப்படுத்தியுள்ளது. அவற்றில்: குறைப் பிரசவம் அல்லது நிறை குறைந்த சிசுவைப் பெற்றெடுத்தல், இரத்தச் சோகை (குறைந்த இரும்புச்சத்து), உயர் குருதி அழுத்தம், குழந்தை இறந்து பிறத்தல், பெண்ணின் இடுப்புப் பகுதியை விட குழந்தையின் தலை பெரியதாக இருப்பதால் பிரசவத்தின் போது அதிக வழியை உணர்தல். இளவயதில் கர்ப்பம் தரித்த பெண்களில் பெரும்பாலானவர்கள் இயற்கையான பிள்ளைப் பேறு முறைக்கு மாற்றமாக அறுவை

சிகிச்சை மூலமே பிள்ளையை பெற்றுக் கொள்கின்றனர். இதற்குக் காரணம் குறித்த பெண்களின் பிள்ளைப் பெறும் இடுப்பு வாயல் குறுகியதாகவும், குழந்தையின் தலை மற்றும் உடல்பகுதி பெரிதாகவும் இருப்பதாகும். இது சிலபோது தாயின் மரணத்திற்கும் காரணமாக அமைந்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கைக்கு அமைய வருடம்தோறும் 16மில்லியன் இளம் வயதுப் பெண்கள் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்வதாகவும், இதன் போது இடம்பெறும் மரணத்தில் அதிகமானவை 15 மற்றும் 19வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்பதும் குறித்த ஆய்வறிக்கை சுட்டிக்காட்டப்படுகின்றது (Montazeri, 2016). UNICEF நிறுவனம் 2015இல் மேற்கொண்ட ஆய்வில் 50,000 பெண்கள் பிள்ளைப்பேறின் போது உயிரிழப்பதாகவும், இவர்களின் பெரும்பாலானவர்கள் குறைந்த மற்றும் நடுத்தர வருமானத்தையுடைய பெண் சிறார்களாகும் என கண்டறியப்பட்டது (Tahera, 2015).

இவ்வாறு திருமணமான பெண்கள் பாலியல் துஷ்பிரயோகம், வீட்டு வன்முறைக்கு இலகுவில் உட்படுத்தப்படல், கணவனின் தாயினால் துன்புறுத்தப்படல் போன்றவற்றிற்கு உள்ளாகின்றனர் (Sethi, 2021). உலகில் உள்ள பெண்களில் 50% மேற்பட்டவர்கள் உடல் ரீதியாக அல்லது பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட அனுபவம் உடையவர்களாக உள்ளனர். அதிலும் 18 வயதில் திருமணம் முடித்தவர்களை விடவும் 15 வயதில் திருமணம் முடித்தவர்களே அதிகமாகும் என World Vision தெரிவிக்கின்றது (Sethi, 2021). மேலும் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகளை மூடி மறைப்பதற்கான ஒரு வழிமுறையாக இளவயதுத் திருமணம் காணப்படுவதாக குறித்த நிறுவனம் குறிப்பிடுகின்றது.

இளவயதில் திருமணம் புரிதல், இளவயதில் கருத்தரித்தல், கருச்சிதைவு போன்ற நிலைகளுக்கு பெண் உள்ளாகின்ற போது மன அழுத்தம், திருமண வாழ்விலும் கணவனின் மீதும் வெறுப்பு, விரக்தி, பயம், கணவனால் வலுக்காட்டாயமாக வன்புணரப்படல் போன்ற உளவியல் சார்ந்த பிரச்சினைகளுக்கு வழிசமைத்துள்ளது. இதனால் மன உளைச்சல், தேவையற்ற சிந்தனை, முறையற்ற பாலியல் இச்சை, பயம், கணவனை விட்டு ஒதுங்குதல், முரண்பட்ட மனநிலை, மன அழுத்தம் போன்ற உளவியல் பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றனர்.

இளவயதில் திருமணம் மேற்கொள்வதால் பெண்கள் எதிர்நோக்கும் சமூகம் சார்ந்த சவால்களை ஆய்வுக்குட்படுத்தியபோது பெரும்பாலான பெண்கள் சமூக அந்தஸ்து குறைவு, தாழ்வு மனப்பாங்கு, தெடர்ந்தும் கல்விகற்க முடியாத நிலை, சில பெண்கள் முறையற்ற ஆண்களுடனான தொடர்பின் மீது ஆர்வம் போன்ற தாக்கங்கங்களை ஏற்படுத்தியுள்ளது. பெரும்பாலான குடும்பங்களில் கணவன் குடும்பத்தின் பொருளாதாரத் தேவைக்காக வெளிநாடு செல்வதும், பெண்கள் அந்நிய ஆண்களுடன் தொடர்பு கொண்டு தமது பாலியல் தேவைகளை நிறைவு செய்து கொள்வதும், கணவன் பிள்ளைகளை விட்டுவிட்டு பிற ஆண்களை திருமணம் புரிவதும் பாரிய ஒரு சமூகப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளதாக எழுமாறாகப் பொதுமக்களுடன் மேற்கொண்ட நேர்காணலின் போது அறிய முடிந்தது. மேலும் இவ்வாறான குடும்ப சூழலில் வளரும் குழந்தைகளும் விலகல் நடத்தையை உடைய குழந்தைகளாகவும், கல்வியில் ஆர்வமற்ற குழந்தைகளாக வளர்வதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது (நேர்காணல்).

இளவயதில் திருமணம் முடித்த பெண்களில் பெரும்பாலானவர்கள் கணவனை விட்டும் பிரிந்து வாழ்வதால் போதிய வருமானமின்மை, தொழில் நிமித்தம் வெளிநாடு நோக்கி பயணமாதல் போன்ற சமூகப் பிரச்சினைகளுக்கு வழி ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக வறுமை, பட்டினி, தொழிலின்மை போன்றன பிரதான பிரச்சினைகளாக உள்ளன. ஓரளவு வருமானத்தை உடைய குடும்பங்களில் உறவினர்களின் உதவி கிடைக்கப் பெறுகின்றமை அறியமுடிந்தது. வறுமையில் வாடும் குடும்பங்களிலும், நடுத்தர வருமானத்தை உடைய குடும்பங்களிலும் விவாகரத்தின் பின் பெண்கள் கூழி வேலை, நாட் கூழிக்கு வேலைக்குச் சென்று குடும்பத்தை பராமரிக்கும் நிலை காணப்படுகின்றது. மேலும் வேலைத்தளங்களில் தொழில் வழங்குனர்களினால் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படும் நிலையும் காணப்படுகின்றது (நேர்காணல்).

2004 ஆம் ஆண்டு சாவித்திரி குணசேகரவினால் மேற்கொண்ட ஆய்வில் "18 வயதுக்கு குறைந்த இலங்கைப் பெண்கள் உடல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் திருமணத்திற்கும், கருவை சுமப்பதற்கும் பொருத்தமாற்றவர்கள்" என்று குறிப்பிடுகின்றார் (இஸ்லாமிய சிந்தனை, 2017). மேலும் இளவயதுத் திருமணத்தினால் சுகாதார பிரச்சினைகள் ஏற்படுவதோடு, உயர் கல்வியை பெறுவதற்கான வாய்ப்புகளும் மறுக்கப்படுகின்றன. வறுமை, பாலியல் நெறிபிறழ்வு போன்ற காரணங்களால் இளவயது திருமணங்களை ஆதரிக்க முடியாத நிலை காணப்படுவதாக குறித்த ஆய்வில் சுட்டிக்காட்டியுள்ளார். இப்பின்னணியில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் இளவயதுத் திருமண நடைமுறையை மையப்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

9. முடிவுரை

உலக நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் இளவயதுத் திருமணம் குறைவாக காணப்படுகின்ற போதிலும், இலங்கையில் முஸ்லிம்களின் மத்தியில் இளவயது திருமணம் அதிகரித்து வருகின்ற ஒரு போக்கு காணப்படுகின்றது. இப்பின்னணியில், இளவயதுத் திருமணத்திற்கான காரணங்களும், அதன் தாக்கங்களும்: இலங்கையின் கிழக்கு மாகாண முஸ்லிம்களை மையப்படுத்திய ஒரு சமூகவியல் ஆய்வு எனும் தலைப்பில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் மூலம் பெறப்பட்ட தரவுகளுக்கு அமைவாக பெண்களின் இளவயது திருமணத்திற்கான காரணங்களில் சமூக, பொருளாதார மற்றும் கலாசாரக் காரணிகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளமை கண்டறியப்பட்டது. அதிலும் குறிப்பாக பெற்றோர் இளவயதிலேயே திருமணம் முடித்திருத்தல், சீதனம், வறுமை, கற்றலில் ஆர்வமின்மை, குடும்பத்தில் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகமாக காணப்படல், வழக்காற்று நடைமுறை, பெற்றோரின் வற்புறுத்தல் மற்றும் கற்றலில் ஆர்வமின்மை போன்றன அதிகம் செல்வாக்குச் செலுத்திய காரணிகளாக காணப்படுகின்றன. மேலும் ஆய்வாளர்களால் உருவாக்கப்பட்ட இரு கருதுகோள்களும் ஆய்வின் கண்டறிதல்கள் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றன. மேலும் இளவயது திருமணத்தின் மூலம் ஏற்பட்ட பாதிப்புகளில் உடலியல் மற்றும் உளவியல் தாக்கங்களே அதிகம் எனவும் கண்டறியப்பட்டது. அத்துடன் இளவயது திருமணம் பற்றிய விழிப்புணர்வு ஆய்வுமாதிரிகளிடமும், ஆய்வுமாதிரிகளின் பெற்றோர்களிடமும் காணப்படவில்லை. எனவே ஆய்வுப்பிரதேச முஸ்லிம் பெண்களுக்கு இளவயதுத் திருமணம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் குறித்த திருமணத்தால்

பெண்கள் எதிர்நோக்கும் உடலியல், உளவியல், சமூகம் மற்றும் பொருளாதாரம் சார்ந்த சவால்களை இழிவளவாக்க முடியும் என்பதே இவ் ஆய்வின் முடிவாகும்.

உசாத்துணை

1. Ahmed Abdus Saleh Saleheen, Sharmin Afrin, Samia Kabir, Md. Jakaria Habib, Maliha Afroj Zinnna, Md. Islamil Hossain, Iqramul Haq and Ashis Talukder. (2021). Sociodemographic factors and early marriage among women in Bangladesh, Ghana and Iraq: An illustration from Multiple Indicator Cluster Survey. *Heliyon*, 07111.
2. Amarasuriya, S. G. (2013). *Emerging Concerns And Case Studies On Child Marriage In Sri Lanka.* Sri Lanka: UNICEF or the Government of Sri Lanka.
3. Andrea Melnikas. J, Sigma Ainul, Iqbal Ehsan, Eashita Haque and Sajeda Amin. (2020). Child marriage practices among the Rohingya in Bangladesh. *Melnikas et al. Conflict and Health*, 1-12.
4. Aslihan Öztürk, Hande Albayrak, Kasım Karataş, and Harun Aslan. (2021). Dynamics of Child Marriages among Syrian and Afghan Refugees in Turkey. *Atatürk Üniversitesi Sosyal Bilimler Enstitüsü Dergisi*, 25 (1) , 251-269.
5. BBCNews. (2013, September 08). *https://www.bbc.com/tamil/sri_lanka/2013/09/130908_teenmomsinsl*. Retrieved from இலங்கையில் அதிகரிக்கும் இளவயது திருமணங்கள்: https://www.bbc.com/tamil/sri_lanka/2013/09/130908_teenmomsinsl
6. Bjorn H. Nordtveit . (2016). *Schools as protection?: Reinventing edication in contexts of adversity* . Switzerland : Springer International Publishing .
7. Graner, Elvira (2020), "Governing Child Marriage in India: The Protracted Reform Process", in Samita Sen, Anindita Ghosh (ed.), *Love, Labour and Law: Early and Child Marriage in India*, SAGE Publishing, p. 63, ISBN 978-93-81345-60-3,
8. Hoko Horii. (2021). Child Marriage as a 'Solution' to Modern Youth in Bali. *Progress in Development Studies*, 1-14.
9. Hilma, L.F, M.M Siyana, M.F.M Hifra, F Rakshana. (2018). Early Marriage And Its Impact On Muslim Women (Based On Sambunagar & Aalangulam Areas) . *5th International Sysmposium 2018: Sustainable Development through Arabic and Islamic Studies* (pp. 190-198). Oluvil: SEUSL.
10. International, P. (2021, Febrary 21). *plan-international.org*. Retrieved from Child Marriage: https://plan-international.org/sexual-health/child-marriage-early-forced?gclid=CjwKCAiAl-6PBhBCEiwAc2GOVKhvcApHiNqXiUJLWdK3w6qvRou9Zi7tM4hm46zbvwwrM3hzlUQWkBoCClgQAvD_BwE
11. Irini Ibrahim, F. H. (2012). The Child Bride: Rights under the Civil and Shariah Law. *Procedia - Social and Behavioral Sciences*, 51 – 58.
12. Jahar Bhowmik, Raaj Kishore Biswas, and Sorif Hossain. (2021). Child Marriage and Adolescent Motherhood: A Nationwide Vulnerability for Women in Bangladesh. *International Journal of Environmental Research and Public Health*, 4030.
13. Masruroh, B. Verawati. (2019). Community Empowerment as an Effort to Prevent Child Marriage. *Journal of Midwifery*, 69-86.
14. Mohammed Subhan Hussain Sheikh. (2018). Islamic Law on Child Marriages. *NILS UK Law Review*, 164-167.
15. Muliani Ratnaningsih, Heribertus Rinto Wibowo, Nicholas J Goodwin, Ade Ayu Kartika Sari Rezki, Ridwan R, Ratnakanya Nitya Hadyani, Emilie Minnick, Derry Fahrizal Ulum, Tanti Kosmiyati Kostaman and Sitti Nur Faizah. (2012). Child Marriage Acceptability Index (CMAI): South and Central Sulawesi, Indonesia. *Research Square*, 387-395.
16. Master of Nursing, U. M. (2021). Sexual experiences of girls engaged in child marriage: A review of qualitative. *Indonesian Journal of Medicine and Health*, 79-91.
17. Narayanan. A. S. (2017, December 23). *timesofindia.indiatimes.com*. Retrieved from Benefits of Love Marriage: https://timesofindia.indiatimes.com/astrology/others/benefits-of-love-marriage/articleshow/68205887.cms
18. Nations, U. (2022, Febrary 4). *www.un.org*. Retrieved from Universal Declaration of Human Rights: https://www.un.org/en/about-us/universal-declaration-of-human-rights
19. Nazir Ullah, Saidatul Nadia Binti Abd Aziz, and Rao Qasim Idrees. (2021). Child Marriages: International Laws and Islamic Laws Perspective. *Journal of Educational and Social Research*, 60-70.

20. Neetu A. John, Jeffrey Edmeades, Lydia Murithi & Iman Barre. (2018). Child marriage and relationship quality in Ethiopia. *Culture, Health & Sexuality: An International Journal for Research, Intervention and Care*, 1-15.
21. Nilla Sari Dewi Iustitiani, Clara R.P. Ajisuksmo. (2018). Supporting Factors and Consequences of Child Marriage. *ANIMA Indonesian Psychological Journal*, 100-111.
22. Nyazee, I. A. (2006). *Islamic Jurisprudence.* New Delhi: ADMA Publishers & Distributors.
23. Quentin Wodon, C. M. (2007). *Economic Impacts Of Child Marriage: Global Synthesis Report.* Washington, DC: International Center for Research on Women (ICRW).
24. Rajeevan, G. S. (2018, May 30). *atlascorps.org*. Retrieved from Child Marriages In Srilanka: https://atlascorps.org/child-marriages-srilanka/#:~:text=Impacts%20of%20Child%20Marriages%3A&text=Early%20marriage%20leads%20to%20early,marriage%20repeatedly%20experience%20domestic%20violence.
25. Saadiya Fowzer, M. &. (2013). Dowry System And Its Practice Among The Sri Lankan Muslim Community: With Special Reference to the Ampara District. *Kalam, Research Journal of Faculty of Arts and Culture, 6: 216-224.*, 216-224.
26. Scott, E. S. (2000). Social Norms and the Legal Regulation of Marriage. *Virginia Law Review*, *86*(8), 1901–1970. https://doi.org/10.2307/1073833
27. Sethi, H. (2021, October 22). *borgenproject.org*. Retrieved from REFORMS REGARDING CHILD MARRIAGE IN SRI LANKA : https://borgenproject.org/child-marriage-in-sri-lanka/#:~:text=In%20Sri%20Lanka%2C%20poverty%20and,mostly%20within%20some%20Muslim%20communities.
28. Simin Montazeri,MaryamGharacheh,Nooredin Mohammadi, Javad Alaghband Rad, andHassan Eftekhar Ardabili. (2016). Determinants of Early Marriage from Married Girls' Perspectives in Iranian Setting: A Qualitative Study. *Hindawi Publishing Corporation Journal of Environmental and Public Health Volume 2016, Article ID 8615929, 8 pages*, 8-16.
29. Tahera Ahmed . (2015). Child Marriage: A Discussion Paper. *Bangladesh Journal of Bioethics 2015; 6(2):8-14*, 8-14.
30. UNICEF: South Asia. (2017, October 21). *www.unicef.org*. Retrieved from Child marriage: https://www.unicef.org/rosa/what-we-do/child-protection/child-marriage
31. United Nations Statistics Division (DYB 2011: http://unstats.un.org/unsd/demographic/products/dyb/dyb2011 /notes/notes24.pdf
32. Wijeyesekera, R. (2011). Assessing the validity of child marriages contracted during the war: a challenge in post-war sri lanka.
33. Wahhaj, Zaki (2015): A theory of child marriage, School of Economics Discussion Papers, No. 1520, University of Kent, School of Economics, Canterbury
34. ZahidLawAssociates. (2019, April 08). *zahidlaw.com*. Retrieved from Purposes of the marriage: Islamic Perspective: https://zahidlaw.com/purposes-of-the-marriage-islamic-perspective

சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் தொழில்சார் சுகாதார ஆபத்துக்கள்: வவுனியா மாவட்டத்தின் நகரசபை மற்றும் பிரதேச சபைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு மருத்துவ சமூகவியல் ஆய்வு

பா.பிரசாந்தி[1], சி.சிவகாந்தன்[2]
[1,2]சமூகவியல்துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
[1]pirashanthi97@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தொழில்சார் சுகாதாரப் பாதிப்புகளை அதிகளவில் எதிர்கொள்கின்றனர். நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்ட இந்த ஆய்வில் கலப்புமுறை ஆய்வு வடிவத்தை பயன்படுத்தி வவுனியா மாவட்டத்தின் வவுனியா நகரசபை, வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபை, நெளுக்குளம் பிரதேசசபை, ஈரட்டை பிரதேசசபை மற்றும் நெடுங்கேணி பிரதேசசபை என அனைத்துச் சமூகக் குடித்தொகையும் சேர்ந்த 96 சுத்திகரிப்புத் தொழிலாளர்களை அடிப்படையாகக் கொண்டு குறித்த ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது. நேர்காணல் மூலமான வினாக்கொத்து, விடய ஆய்வு, நேரடி அவதானம் மற்றும் நேர்காணல் மூலம் முதலாம்நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. ஆய்வின் அனைத்துச் செயன்முறைகளிலும் ஆய்வு ஒழுக்கவியல் முழுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்ட கணியம்சார் தரவுகள் விவரணப்புள்ளி விபரவியல் பகுப்பாய்வுக்குட்பட்டது. விடய ஆய்வு மற்றும் பிரதான தகவல் வழங்குனருடனான நேர்காணல் மூலமாக பெறப்பட்ட பண்புசார் தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்வுக்குட்பட்டது. வவுனியா நகரசபை மற்றும் பிரதேச சபைகளில் பணிபுரிகின்ற மொத்த ஆய்வு குடித்தொகையினரையும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளதால் இந்த ஆய்வில் எந்தவித மாதிரித் தெரிவும் பயன்படுத்தப்படவில்லை. ஆய்வு முடிவுகளின்படி 62.5% சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தொழில்சார் சுகாதார ஆபத்துக்களை எதிர்கொள்கின்றார்கள். மேலும் தொழில்சார் சுகாதார பாதிப்புகளுக்களால் பாதிக்கப்பட்ட சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு எந்தவித நட்டஈடும் மற்றும் விடுமுறை ஓய்வு வழங்கப்பட்டிருக்கவில்லை. குடும்பத்தில் பொருளாதார பிரச்சினை காரணமாக தொழில்சார் ஆரோக்கிய பாதிப்பை எதிர்கொண்டாலும் விடுமுறை எடுக்காமல் தொடர்ச்சியாக சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடுகின்றார்கள். தொழில்சார் சுகாதார ஆபத்துக்களால் பாதிக்கப்பட்ட சுத்திகரிப்புத் தொழிலாளர்களில் 38.2%மானோர் அரசாங்க வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுள்ளனர். அதிலும் பாரதூரமான சுகாதாரப் பிரச்சினைகளுக்கு மட்டுமே வைத்தியரை நாடிச்செல்கிறார்கள். மேலும் 36.2% தங்களுக்குத்தாங்களே சுயமாகச் சிகிச்சை முறைமையை பின்பற்றுகின்றாரகள். இதனால் சாதாரணமாக தொழிலிடத்தில் ஏற்படும் காயங்களுக்கு சரியான சிகிச்சை முறைமை மற்றும் ஓய்வின்றி தம்முடைய சுத்திகரிப்பு தொழிலில் ஈடுபட்டு தொடர்ச்சியாக சுகாதார ஆபத்துக்களை எதிர்கொள்கின்றார்கள். மேலும் பெரும்பாலான சுத்திகிப்புத் தொழிலாளர்கள் தங்களின் நோயைப் புறக்கணித்தாலும், தங்களின் ஊதியத்தை இழக்கவோ அல்லது வேலையை இழக்கவோ விரும்பாததால் தகுந்த சிகிச்சைகளின்றி தொடர்ந்து வேலை செய்தனர். மேலும் ஆரோக்கியமான வாழ்க்கைப்பாணியினைப் பொறுத்தவரையில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களில் அதிகமானோர் (79.2%) மதுபானம் அருந்துபவர்களாக காணப்பட்டுள்ளனர். அத்துடன் பிரதானமான முடிவாக சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடுவதற்கான தனியாள் பாதுகாப்புக் கருவிகளின் கிடைப்பனவில் காணப்படுகின்ற பிரச்சினைகள், தனியாள் பாதுகாப்புக் கருவிகளின் குறைவான தரம் மற்றும் கிடைப்பதற்கு நீண்ட காலம் செல்லுதல் போன்றவற்றினால் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தொழில்சார் சுகாதார ஆபத்துக்களை எதிர்கொள்கின்றார்கள். அத்துடன் சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு தொழில்சார் சுகாதார பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கான முற்பாதுகாப்பு பயிற்சி விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டாலும் அதில் எந்தவித பிரயோசனமும் இல்லை. சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு தனியாள் பாதுகாப்பு கருவிகளை வழங்குவதன் மூலமும் அவர்களுக்கு சுத்திகரிப்புத் தொழில்சார் ஆபத்துக்களிருந்து தடுத்தல் தொடர்பான விழிப்புணர்வுகளை தொடர்ச்சியாக வழங்குவதன் மூலமும் சுத்திகரிப்புத் தொழிலாளர்களை தொழில்சார் சுகாதார ஆபத்துகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.

திறவுச் சொற்கள்: ஆண்கள், சுகாதார நடத்தை, சுத்திகரிப்புத் தொழில், தசைகூட்டு நோய்கள், தனியாள் பாதுகாப்புக் கருவிகள்

1. ஆய்வுப் பின்புலம்

தொழில்சார் ஆரோக்கியப் பாதிப்புக்கள் என்பவை தொழிலிடத்தில் ஏற்படும் நோய்கள் அல்லது விபத்துக்களின் அபாயங்கள் ஆகும் (சர்வதேச தொழிலாளர் சம்மேளனம், 2008). அந்தவகையில் கழிவு என்பது வைத்திருப்பவர்கள் நிராகரிக்கும், நிராகரிக்க விரும்பும் எந்தவொரு பொருளையும் குறிக்கின்றது (Emma selin, 2013). அவற்றினை உரிய முறையில் அகற்றுவதில் கழிவு மேலாண்மை அவசியமாகின்றது. கழிவு மேலாண்மை என்பது கழிவகற்றல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல், சேகரித்து அகற்றும் செயற்பாடு ஆகும் (OECD, 2012). இன்றைய உலகில் காணப்படும் பாரிய பிரச்சினைகளில் கழிவகற்றலும் ஒன்றாகும். 1.3 பில்லியன் தொன் கழிவுகள் ஒவ்வொரு வருடமும் வெளியிடப்படுவதாக உலகவங்கி அறிக்கை தெரிவிக்கின்றது (WHO, 2012). இலங்கையில் நகரப்பகுதிகளிருந்து சுமார் 80%-85% ஆன திண்மக்கழிவுகள் வெளியேற்றப்படுகின்றது (Perera, 2003). எனவே திண்மக்கழிவுகளை அகற்றும் பணியைச் செய்யும் தொழிலாளர்களாக சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் உள்ளனர். இந்த சுத்திகரிப்புத்

தொழிலாளர்களில் பணி நிலைமைகள் கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக மாறாமல் உள்ளது. எனவே சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் நீண்ட காலத்திற்கு சுத்திகரிப்பு வேலையை செய்வதால் வெவ்வேறு தொழில் தொடர்பான நோய்களினால் பாதிக்கப்பட்டு சுகாதார ரீதியான பிரச்சினைகளை எதிர்கொள்ள காரணமாகவுள்ளது (Tiwari, 2008).

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் உள்ள சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் அவலநிலை குறித்த அறிக்கையானது, மனிதாபிமானமற்ற சூழலைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மாற்றத்தை ஏற்படுத்தவும், சர்வதேச தொழிலாளர் அமைப்பு, உலக வங்கி மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றால் கூட்டாக இணைந்து எழுதப்பட்டுள்ளது. இது இன்றுவரை உலகளாவிய ரீதியில் மிக விரிவான பிரச்சினைகளில் வளர்ந்து வரும் பிரச்சினையாக சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் மீதான தொழில்நிலைசார் ஆரோக்கியம் காணப்படுகின்றது (WHO, 2019). இலங்கையில் உள்ள விளிம்புநிலை சமூகங்களில் ஒன்றாக சுத்திகரிப்புத் தொழிலாளர்களை அடையாளம் காணலாம் (Supun Lahiru Prakash, 2017). சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் எந்தவொரு பாதுகாப்பு உபகரணமும், சட்ட உரிமைகளும் இல்லாமல் தங்கள் வேலையைச் செய்கிறார்கள் (WHO, 2019).

கழிவு பொருட்களின் அபாயகரமான வெளிப்பாடு மற்றும் வவுனியா மாவட்ட சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் தொழில்சார் சுகாதாரப் பிரச்சினைகளினால் அதிகளவில் கைகளிலும் கால்களிலும் வெட்டுக்காயங்களால் பாதிக்கப்படுகின்றார்கள். அதிகளவில் பாரம் தூக்கி வேலை செய்வதனால் தலைக்கூட்டு நோய்களால் பாதிக்கப்படுகின்றார்கள். தொழில்சார் ஆரோக்கியப் பாதிப்புக்களுக்கு எந்தவித நஷ்டஈடும், விடுமுறை ஓய்வும் வழங்கப்படுவதில்லை. சுத்திகரிப்பு மட்டுமே அவர்களின் வாழ்வாதாரமாக இருப்பதால் பொருளாதாரப்பிரச்சினை காரணமாக தொடர்ச்சியாக சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடுகின்றார்கள். தொழில்சார் ஆபத்துக்களுக்கு மருத்துவமனையை நாடிச்சென்று சிகிச்சை பெறுவதுமில்லை. நோயின் தீவிரத்தன்மையிலே ஆரோக்கியத்தை நாடிச்செல்கிறார்கள். தனியாள் பாதுகாப்புக் கருவிகளிலுள்ள பிரச்சினைகளால் அதிகளவில் தொழில்சார் சுகாதாரப் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றார்கள்.

வவுனியாவில் 2019ம் ஆண்டு மாடுகள் அறுக்கப்பட்டு கழிவுகளைக் கொட்டும் குழிக்குள் இறங்கி 04 சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் மரணமடைந்தமை என்பது தொழில்சார் சுகாதாரப் பிரச்சினையை பொறுத்தவரைக்கும் குறிப்பிட்டு கூறவேண்டிய விடயம் (வவுனியா உள்ளூராட்சி சபை, 2020). வவுனியா நகரசபையில் 68 சுத்திகரிப்புத் தொழிலாளர்களும், பிரதேச சபைகளைப் பொறுத்தமட்டில் நெளுக்குளம் பிரதேசசபையில் 11 பேரும், வெங்கலச் செட்டிக்குளம் பிரதேசசபையில் 10 பேரும், இரட்டை சிங்கள பிரதேசசபையில் 08 பேரும் மற்றும் நெடுங்கேணி பிரதேசசபையில் 07 பேரும் என மொத்தமாக 104 பேர் தற்போது கடமையில் உள்ளனர். இந்த சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு சுகாதாரப் பாதுகாப்பிற்காக முகக்கவசம், சவர்க்காரம், கையுறை, தலைக்கவசம், மழைக்கான பாதுகாப்பு அங்கி என்பன வழங்கப்பட்டாலும் அவர்கள் நடைமுறையில் முற்பாதுகாப்பு நடவடிக்கைகளை கடைபிடிக்காததாலும் அதிகளவு ஆரோக்கியம்சார் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் (வவுனியா உள்ளூராட்சி சபை, 2020). ஆகவே வவுனியா மாவட்ட நகரசபை, பிரதேசசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் ஆரோக்கியம் குறித்து ஆய்வு செய்யவேண்டியது அவசியமாகின்ற நிலையில் COVID-19 பெருந்தொற்றின் சூழ்நிலையில் வவுனியா நகரசபை மற்றும் அனைத்து பிரதேசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் தொழில்சார் சுகாதாரப் பாதிப்புக்கள் எவ்வாறு உள்ளது என்பதனை மதிப்பிடுவதாக குறித்த ஆய்வு அமைந்துள்ளது.

ஆய்வு வினாக்கள்

1. ஏன் சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு தொழில்சார் ஆரோக்கியப் பாதிப்பிலிருந்து முற்பாதுகாப்பு செய்வதற்கான விதிமுறைகள் சட்டமாக இருக்கின்ற போதிலும் ஆரோக்கியம்சார் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள்?

2. சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு தனியாள் சுகாதாரப் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டும் அவர்கள் தொழில்சார் ஆபத்துக்களை எதிர்கொள்வது ஏன்?
3. COVID-19 பெருந்தொற்றுக் காலத்தில் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் ஆரோக்கியத்தில் எவ்வாறான பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளார்கள்?
4. சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் ஆரோக்கியத்தில் சமூகக் குடித்தொகை மற்றும் சூழல் காரணிகள் எவ்வெவ்வழிகளில் செல்வாக்குச் செலுத்துகிறது?

ஆய்வின் நோக்கம்

பொது நோக்கம்

சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் தொழில்சார் சுகாதாரப் பாதிப்புக்களை மதிப்பிடுதல்.

சிறப்பு நோக்கங்கள்

- சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் தொழில்நிலைசார் ஆரோக்கியத்தில் செல்வாக்குச் செலுத்தும் சமூகக் குடித்தொகை மற்றும் சூழல் காரணிகளை இனங்காணல்.
- சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் தொழில்சார் சுகாதாரப் பாதிப்புக்களை மதிப்பிடுதல்.
- COVID – 19 பெருந்தொற்றுக் காலத்தில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் ஆரோக்கியத்தில் ஏற்படுத்திய பாதிப்புக்களை மதிப்பிடுதல்.
- சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் தொழில்சார் சுகாதாரப் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கான தனியாள் சுகாதார முற்பாதுகாப்பு நடவடிக்கைகளை இனங்காணல்.

2. ஆய்வு முறையியல்

2.1 ஆய்வு வடிவம்

நிறுவனத்தை அடிப்படையாகக் கொண்ட குறித்த ஆய்வில் கலப்பு முறை ஆய்வு வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

2.2 ஆய்விற்க்கான ஒழுங்கமைப்பு (Study setting)

குறித்த ஆய்விற்காக வவுனியா மாவட்டத்தில் உள்ள வவுனியா நகரசபை, பிரதேசசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

அட்டவணை: 2.1 வவுனியா மாவட்டத்தின் உள்ளூராட்சி அமைப்புக்கள்

உள்ளூராட்சிசபைகள்		ஆண்	பெண்	மொத்தம்
நகரசபை	வவுனியா நகரசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்கள்	62	06	68
பிரதேச சபைகள்	நெளுக்குளம் பிரதேசசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்கள்	11	-	11
	வெங்கலச் செட்டிகுளம் பிரதேசசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்கள்	10	-	10
	இரட்டை சிங்கள பிரதேசசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்கள்	08	-	08
	நெடுங்கேணி பிரதேசசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்கள்	06	01	07
மொத்தம்				104

(மூலம்: வவுனியா உள்ளூராட்சி சபை, 2020)

2.3 தரவு சேகரிப்புக் கருவிகள்

நிறுவனத்தை அடிப்படையாக கொண்ட குறிப்பிட்ட ஆய்வானது கலப்புமுறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதலாம்நிலைத் தரவுகள் - பிரதான தகவல் தருனருடனான நேர்காணல், நேர்காணலை அடிப்படையாகக் கொண்ட வினாக்கொத்து, நேரடி அவதானம் மற்றும் காண்பியல் தரவுகள்

இரண்டாம்நிலைத் தரவுகள் - சஞ்சிகைகள், கட்டுரைகள், பத்திரிகைகள், நூல்கள், துண்டுப்பிரசுரங்கள், ஆண்டறிக்கைகள், ஆக்கங்கள் மற்றும் இணைத்தளம்

2.4 ஆய்வில் உள்வாங்கப்படுதலுக்கான தகுதிவிதிகள்

வவுனியா மாவட்டத்தின் நகரசபை, பிரதேசசபைகளில் பணிபுரிகின்ற அனைத்து நிரந்தர, தற்காலிக சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

2.5 ஆய்விலிருந்து விலக்கப்படுத்தலுக்கான தகுதிவிதிகள்

சுத்திகரிப்புத் தொழிலாளர்களில் தரவுசேகரிப்பு காலப்பகுதியில் COVID - 19 தொற்றுடையவர்கள், தனிமைப்படுத்தப்பட்டுள்ளோர்கள் மற்றும் தீவிரமான உளநோய்களால் பாதிக்கப்பட்டோர் ஆய்விலிருந்து விலக்கப்பட்டுள்ளனர்.

2.6 மாதிரி நுட்பமும் மாதிரித் தெரிவுப்பருமனும்

N -Total number of subjects to be studied
Z - 1.96 (type 1 error=0.05)
P - Prevalence is 50%
D - Margin of error of 5%
N=1.96*1.9650 (100-50/52)
N=384.16
But non – responsive sample =10%
Sample Size=384.x16*100/90
= 426.84
= 427

ஆய்வுக்குடித்தொகையின் பருமன் தேவைப்படும் ஆய்வு மாதிரியைவிட குறைவாக காணப்படுவதால் ஆய்வின் அனைத்துக் குடித்தொகையும் (96) ஆய்வுக்குட்படுத்தப்பட்டது.

2.5 ஆய்வு ஒழுக்கவியல்

ஆய்வின் அனைத்து செயன்முறைகளிலும் ஆய்வு ஒழுக்கவியல் முழுமையாக கடைப்பிடிக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தரவுகளின் இரகசியத்தன்மையும் ஆள்சாரா தொடர்பும் பேணப்பட்டது. ஆய்விற்கு உட்படுத்திய வவுனியா நகரசபை, பிரதேசசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்களிடம் அறிந்தளிக்கப்பட்ட வினாக்கொத்து மூலம் அனுமதியைப் பெற்ற பின்னரே ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்விற்குட்படுத்தப்படுபவர்களின் பங்குபற்றல் சுதந்திரமானதும், தற்காலிகமானதும் ஆகும். இங்கு எவ்விதமான நிர்ப்பந்தமும் காணப்படவில்லை. ஆய்வுச் செயன்முறையின் எந்த நேரத்திலும் எச்சந்தர்ப்பத்திலும் ஆய்வுக்குட்படுத்தப்படுபவர் விலகிச் செல்வதற்கு பூரண சுதந்திரம் வழங்கப்பட்டது.

மேலும் குறித்த பகுதியில் சேகரிக்கப்பட்ட தரவுகள், வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட விடயங்கள் வேறு ஆய்விற்கோ ஏனைய செயற்பாடுகளுக்கோ பயன்படுத்தப்படமாட்டாது. ஆய்விற்கு உட்படுத்துபவரின் பெயர், தரவுகளின் விபரங்கள் என்பன இரகசியமான முறையில் பேணப்படுகின்றது. பெறப்பட்ட தரவுகளும், தகவல்களும் உபயோகத்தின் பின் பொருத்தமான முறையில் அழிக்கப்பட்டது. ஆய்வில் பங்குபற்றியவர்களின் பங்குபற்றல் சுதந்திரமானது. ஆய்வின் பின் வினாக்கொத்துக்கள் சமூகவியல் துறையில் ஒப்படைக்கப்பட்டது. இலத்திரனியல் தரவுகள் கடவுச்சொல் மூலம் பாதுகாக்கப்பட்டுள்ளது.

2.6 ஆய்வு மட்டுப்பாடு

வவுனியா மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து சமூக குடித்தொகையும் ஆய்வுக்குட்படுத்த வேண்டிய நிலையில் ஒவ்வொரு பிரதேசசபை மற்றும் நகரசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்களான 96 பேரையும் அடையாளங்கண்டு ஆய்வுக்கு உட்படுத்துவற்கு காலதாமதமானது. அதிலும் குறிப்பாக இரட்டை பிரதேசசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் சிங்கள மொழியினை பேசுபவர்களாக இருப்பதனால் அவர்கள் அனைவரையும் ஆய்வுக்குட்படுத்தி தகவல்களை திரட்டுவது மட்டுபாடாக அமைந்தது.
நாட்டின் அசாதாரண சூழ்நிலை (ஊரடங்கு, போராட்டங்கள்) காரணமாக அனைத்து பிரதேசசபைகளிலுமுள்ள சுத்திகரிப்புத் தொழிலாளர்களை ஆய்வுக்குட்படுத்துவது கடினமாக இருந்தது.

3. முடிவுகள் மற்றும் கலந்தாராய்வு

வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்ட கணியம்சார் தரவுகள் சமூக விஞ்ஞானங்களுக்கான புள்ளிவிபரவியல் மென்பொதியின் (SPSS) உதவியுடன் விவரணப்புள்ளிவிபரவியல் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டது. விடய ஆய்வு, பிரதான தகவல் வழங்குனருடனான நேர்காணல் மூலமாக பெறப்பட்ட பண்புசார் தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டன.

3.1 சமூக மற்றும் குடித்தொகைக் குணவியல்புகள்

சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் தொழில்சார் சுகாதார ஆபத்துக்கள் எனும் ஆய்வில் பங்குபற்றிய வவுனியா பிரதேசசபை, நகரசபையில் பணிபுரிகின்ற சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் சமூக மற்றும் குடித்தொகைக் காரணிகள் அட்டவணை 3.1 இல் காட்டப்பட்டுள்ளது.

கீழ்வரும் அட்டவணை 3.1 இன் அடிப்படையில் குறித்த ஆய்வில் இருந்து வவுனியா நகரசபை மற்றும் பிரதேசசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதிகளின் அடிப்படையில் குறித்த ஆய்வின் இடைவெளியாக மாத வருமானத்தில் சற்று வித்தியாசமான நிலை காணப்படுகின்றது. மேலும் இவர்களுடைய மாத வருமானம் 20001-40000 வரை 82%ஆனோர் பெறுவதுடன் பெரும்பாலான சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் நுண்கடன் பெற்றவர்களாகவும் குறித்த மாதச்சம்பளத்தில் கடன்தொகை அறவிட்டு சம்பளம் பெறுபவர்களாகவும் உள்ளார்கள்.

அட்டவணை 3.1 : **சமூக மற்றும் குடித்தொகைக் காரணிகள்**

சமூக மற்றும் குடித்தொகைக் காரணிகள் (n=96)		**எண்ணிக்கை**	**வீதம் (%)**
வயது (வருடங்களில்)	21-30	18	18.8
	31-40	31	32.3
	41-50	37	38.5
	51-60	10	10.4
	மொத்தம்	96	100.0

பால்நிலை	ஆண்	91	94.8
	பெண்	5	5.2
	மொத்தம்	96	100
குடியியல் அந்தஸ்து	திருமணமாகாதவர்	21	15.2
	திருமணமானவர்	75	84.8
	மொத்தம்	96	100
சமயம்	இந்து	57	59.4
	கிறிஸ்தவம்	35	36.5
	பௌத்தம்	4	4.1
	மொத்தம்	96	100
கல்வி நிலை	ஆரம்பக் கல்வி	12	12.5
	இடைநிலைக் கல்வி	78	81.3
	கா. பொ. த. உயர்தரம்	6	6.2
	மொத்தம்	96	100
மாத ஊழிய வருமானம் (இலங்கை ரூபாவில்)	20001- 40000	79	82.3
	40001-60000	16	16.7
	60001-80000	1	1.0
	மொத்தம்	96	100

(மூலம்: களஆய்வு, வினாக்கொத்து, 2022)

கணியம்சார் தரவுகளுக்கு வலுச்சேர்க்கின்ற வகையில் பண்புசார் தரவுகளும் அமையப்பெற்றுள்ளன.

"எனக்கும் 40000 ரூபாய் சம்பளம் வாறது. அதுல எடுத்த கடன்கள் எல்லாம் கழிச்சு 16000ரூபாய் மிச்சம் வரும். இந்த சம்பளம் காணாதுதான்" (மூலம் : விடய ஆய்வு -10).

"*எனக்கு சம்பளம் 35000 ரூபாய். Bank lone எல்லாம் கழிச்சு 24000ரூபாய் வாறது"* (மூலம்: விடய ஆய்வு - 03).

இதனை Mudalige, (2000) எனும் ஆய்வாளரது ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் ஒப்பிட்டுநோக்குகையில் இலங்கையில் கொழும்பு நகரசபையில் பணிபுரிகின்ற சுத்திகரிப்புத் தொழிலாளர்களில் ஆய்வு மாதிரி ஆண் தொழிலாளர்களைக் கொண்டிருந்தது. வயது 30-39 (14%), 40-49(65%) மற்றும் 50-59(21%), என அனைத்து தொழிலாளர்களும் பள்ளிப்படிப்பைப் பெற்றிருந்தனர். பெரும்பான்மையானவர்கள் 9ஆம் ஆண்டு வரை படித்தவர்கள். எந்த ஒரு தொழிலாளியும் உயர்ந்தரக் கல்வியைப் பெறவில்லை. மாதச்சம்பளம் ரூ.12,000 முதல் ரூ.18,000 வரை இருந்தது. ஆய்வுக்குட்படுத்திய மாதிரிகளின் முடிவுகளின் அடிப்படையில் பார்க்கின்றபோது கல்வித்தகைமை என்பது தரம் - 8க்கு மேற்பட்டவர்களே சுத்திகரிப்புத் தொழிலுக்கு தகுதியானவர்களாக காணப்படுகிறார்கள். இங்கு இடைநிலை கல்வித்தகைமையினை உடையவர்கள்தான் அதிகளவில் (81%) பணிபுரிகின்றார்கள். இதனை நேர்காணலில் தரம்-8 வரை படித்தவர்களை சுத்திகரிப்புத் தொழிலாளர்களையே வேலைக்கு எடுப்பதாக கூறப்படுவதிலிருந்து உடன்பட்டாலும் கா.பொ.த உயர்தரம் வரை கல்வி கற்றவர்களும் (6.3%) அதேநேரத்தில் 5.2% ஆன பெண் சுத்திகரிப்புத் தொழிலாளர்களும் வேலை செய்கின்ற நிலையில் வவுனியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது சற்று வேறுபட்டு காணப்படுகின்றது. மேலும் வவுனியா உள்ளூராட்சி சபையின் கீழ் பணிபுரிகின்ற அனைத்து சமூகக் குடித்தொகையினரும் ஆய்வுக்குட்டுப்படுத்திய நிலையில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களில் 41-50 வயதுக்குட்பட்டோர் தான் அதிகளவில் (38.5%) பணியாற்றுகிறார்கள். அதேசமயம் 31-40 வயதுக்குட்பட்டோர் (32.3%) ஆனோரும், 51-60 வயதுக்குட்பட்டவர்களில் 10 பேரும் வேலை செய்கின்றார்கள். அதாவது குறித்த ஆய்வின் முடிவுகளின்படி ஓய்வு காலம் வரும்வரை வேலை செய்பவர்களாக காணப்படுகின்றார்கள்.

அட்டவணை 3.2 : தொழில்சார் ஆரோக்கியக் காரணிகள்

		எண்ணிக்கை	வீதம் (%)
சுத்திகரிப்புத் தொழில் செய்யும் வருடங்கள்	≤ 5	36	37.5
	6 – 10	34	35.4
	11 - 15	15	15.5
	16 – 20	5	5.3
	21 – 25	2	2.1
	25ற்கு மேல்	4	4.2
	மொத்தம்	96	100.0
சுத்திகரிப்புத் தொழில் திருப்தி மட்டம்	திருப்தி	69	71.9
	திருப்தியுமில்லை அதிருப்தியுமில்லை	16	16.6
	திருப்தியின்மை	11	11.5
	மொத்தம்	96	100
திருப்தியடையவில்லை எனில் காரணம்	குறைந்த வருமானம்	13	46.4
	மோசமான வேலை நிலைமைகள்	2	7.1
	கௌரவக்குறைபாடு	4	14.3
	உடல்நலக் காப்பறுதி இல்லாமை	4	14.3
	விடுமுறை இன்மை	5	17.9
	மொத்தம்	28	100

(மூலம்: களஆய்வு, வினாக்கொத்து, 2022)

அட்டவணை 3.2 இன் படி Vegini and Sivakanthan, (2020) குறித்த ஆய்வாளர்களது யாழ்ப்பாண மாநகரசபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் ஆரோக்கியம் குறித்த ஆய்வு முடிவுகளோடு ஒப்பிடும்போது சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் மத்தியில் தொழில்நிலைசார் ஆரோக்கியப் பாதிப்புக்களால் பாதிக்கப்பட்டோர் 59.7% ஆனவர்கள் தாம் தொழில் நிமிர்த்தம் ஏற்படும் நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். மேலும் 40.3% ஆனவர்கள் தாம் எவ்வித நோய்களாலும் பாதிக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து சுத்திகரிப்புத் தொழிலாளர்களையும் ஆய்வுக்குட்படுத்திய நிலையில் 62.5% ஆனவர்கள் தொழில்சார் சுகாதார ஆபத்துக்களை எதிர்கொள்வதாக குறிப்பிட்ட அதேவேளை 37.5% ஆனவர்கள் எதிர்கொள்ளவில்லை. மேலும் சுத்திகரிப்புத் தொழிலில் இருக்கும்போது காயங்கள் ஏற்பட்டுள்ளதாக 30.9% ஆனவர்கள் கூறியுள்ளமை குறித்த ஆய்வுடன் ஒத்துப்போகின்றது.

அதாவது தொடர்ச்சியாக சுத்தகரிப்புத் தொழிலில் ஈடுபடுவதனால் தீராத ஆரோக்கியப் பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். அதேசமயம் ஆரோக்கியம்சார் பிரச்சினைகள் ஏற்படுகின்றபோது விடுமுறை ஓய்வு இல்லாது தொடர்ச்சியாக வேலை செய்வதால் அதிகளவான தொழில்சார் ஆரோக்கியப் பிரச்சினைக்குள்ளாகின்றார்கள். கணியம்சார் தரவுகளுக்கு வலுச்சேர்க்கின்ற வகையில் பண்புசார் தரவுகள் அமையப்பெற்றுள்ளன.

"*எனக்கு கை முறிஞ்ச நேரம் குறிப்பிட்டளவு ஓய்வும் அதற்கு உரிய சிகிச்சையும் வழங்கி இருந்தால் எனது கை இவ்வாறு பாதித்திருக்காது. என் குடும்ப சூழ்நிலை காரணமாக வருத்தத்துடன் வேலைக்குச் சென்று என்கையை இழந்திடேன்*" (மூலம்: விடய ஆய்வு - 03).

"*நான் கால்ல ஊசி குத்துபட்ட நேரம் இரண்டு நாள் மட்டும் தான் லீவு தந்தாங்க அதுவும் மருத்துவ சான்றிதழ் எல்லாம் கொண்டு அலைஞ்சு திரிஞ்ச பிறகுதான் தந்தவங்க. இருந்தாலும் அந்த லீவு காணாது. ஒரு கிழமையாவது லீவெடுத்து அதற்குரிய மருத்துவம் சரியா பார்த்திருந்தால் நான் இப்பயும் நடக்க கஷ்டபட்டிருக்கமாட்டன்*" (மூலம்: விடய ஆய்வு - 06)

இதனை சுகாதார நம்பிக்கை மாதிரி (Health Belief Model) என்ற கோட்பாட்டு அடிப்படையில் பார்த்தோமானால், இது ஒரு நோய் அல்லது நோயைப் பெறுவதற்கான அபாயத்தைப் பற்றிய ஒரு நபரின் அகநிலை உணர்வைக் குறிக்கிறது. ஒரு நோய் அல்லது நோய்க்கான தனிப்பட்ட பாதிப்பு குறித்த ஒரு நபரின் உணர்வுகளில் பரந்த மாறுபாடு உள்ளது. இது ஒரு நோய் அல்லது நோயின் தீவிரத்தன்மையைப் பற்றிய ஒரு நபரின் உணர்வுகளைக் குறிக்கிறது (நோய் அல்லது நோய்க்கு சிகிச்சை அளிக்காமல் விட்டுவிடுவது). அதாவது ஒரு நபர் நோயின் தீவிரத்தன்மை உணர்வுகளில் பரவலாக மாறுபடுகின்றார். சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் நோயின் தீவிரத்தை மதிப்பிடும்போது மருத்துவ விளைவுகளாக இறப்பு, இயலாமை ஏற்பட்டுள்ளது. மருத்துவ சான்றிதழ் கொடுத்தால் மட்டுமே விடுமுறையை பெறமுடியும், இல்லாவிடில் அவர்களினுடைய சம்பளம் வெட்டுப்பட்டுவிடும். இதனால் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் நோய் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்திலும்கூட விடுமுறை எடுக்காது தொடர்ச்சியாக வேலை செய்கின்றார்கள். அவர்கள் நோய் அல்லது நோய்க்கு சிகிச்சை அளிக்காமல் விடுவதால் இறப்பு, இயலாமையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மற்றும் சமூக விளைவுகளாக குடும்ப வாழ்க்கை, சமூக உறவுகள் என்பன பாதிக்கப்பட்டுள்ளது.

தினமும் அனைத்து இடங்களிலும் தொழில் புரிவோர்களான சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் இயல்பாகவே இடர்சமூக குழுக்களாக ஆரோக்கியம்சார் பிரச்சினையை எதிர்கொள்கின்றார்கள்.

ஆபத்து, நிச்சயமற்றதன்மை, இடர் சமூகம், இடர் கோட்பாட்டின் வெளிப்பாடு என்பன குறித்த சமூகவியல் சிந்தனையில் மூன்று வெவ்வேறு நீரோடைகளில் அமைந்துள்ளது. நவீனமயமாக்கலின் பின்னணியில் ஆபத்து மற்றும் நிச்சயமற்றதன்மை குறித்த ஒரு நீரோட்டம் ஆபத்து குறித்த உடல்நலம், இடர் மற்றும் சமூகத்தின் வழக்கமான வடிவத்தில் மாற்றத்தை உள்ளடக்கியது. அதாவது நிச்சயமற்றதன்மை மற்றும் ஆபத்து உள்ளிட்ட குறைபாடுகளால் சுத்திகரிப்புத் தொழிலாளர்களைப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

அடிக்கடி காயங்கள் ஏற்படுவதாக 30.9% ஆனோர் குறிப்பிட்டுள்ள அதேவேளை பாரிய அளவிலான தொழில்சார் ஆபத்துக்களில் கை முறிவு, கால் முறிவில் இருந்து இறப்பு வரையான ஆபத்துக்களை எதிர்கொண்டுள்ளனர் (வவுனியா நகரசபை – 04பேர் இறப்பு, செட்டிக்குளம் பிரதேச சபை – 01நபர் இறப்பு). அத்துடன் ஆரோக்கியப் பாதிப்புகளுக்கு எந்தவித நஷ்ட ஈடுகளும் வழங்கப்பட்டதில்லை.

''நீர்த் தாங்கி துப்புரவு இல்லாமல் இருந்த காரணத்தினால் அதை துப்பரவு செய்ய போன நேரம் நிலத்தில் பாசி இருந்ததை நான் கவனிக்காமல் பாசியில் வழுக்கி விழுந்துவிட்டேன். அதுக்குப் பிறகு எனக்கு ஒரு கை ஓரளவு உயரத்துக்கு மேல் உயர்த்த ஏலாம போய்ட்டு முழங்கைக்கு மேலே உயர்த்தினால் கை வீங்கி கொள்ளும் இருந்த போதிலும் எந்த ஒரு லீவும் தராததால் அந்த வருத்தத்துடன் வேலை செய்ததால் எனக்கு இப்ப முழங்கை உயரத்திற்கு மேல உயர்த்த முடியாம இருக்கு, அதற்குரிய எந்த நட்ட ஈடும் வழங்ககேல்ல'' (மூலம்: விடய ஆய்வு- 01).

போன்ற பண்புசார் தரவுகள் தொடர்ச்சியான சுத்தகரிப்புத் தொழிலால் ஆரோக்கியப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்ற சுத்திகரிப்புத் தொழிலாளர்களது தீராத மனக்குறைகளாக உள்ளதனை குறித்த ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்துகின்றன.

3.3 தசைக்கூட்டு நோய்கள்

அட்டவணை 3.3 : தசைக்கூட்டு நோய்களின் வகைகள் (ஒன்றுக்கு மேற்பட்ட தெரிவுகள்)

	எண்ணிக்கை	**வீதம் (%)**
தோள்பட்டை வலி	72	20.8%
முழங்கால் வலி	74	21.4%
மூட்டு வலி	65	18.8%
கழுத்து வலி	65	18.8%
முதுகு வலி	70	20.2%
மொத்தம்	46	100.0%

(மூலம்: களஆய்வு, வினாக்கொத்து, 2022)

அட்டவணை 3.3 இன் படி முழங்கால் வலி 21.4%, தோள்பட்டை வலி 20.8% முதுகு வலி 20.2%, மூட்டு வலி மற்றும் கழுத்து வலி 18.8% என்பன எதிர்கொள்வதாக குறிப்பிடுகிறார்கள். கணியம்சார் தரவுகளுக்கு வலுச்சேர்கின்ற வகையில் பண்புசார் தரவுகளும் அமைகின்றன.

"*நாங்க தினமும் கழிவுகள் தூக்குற அளவு வந்து கிட்டத்தட்ட 30 கிலோவுக்கு மேல, இத 7அடி உயரத்துக்கு மேல்தான் தூக்கி எறிவதால் எங்கள் எல்லாருக்கும் முழங்கால் வலி, கழுத்து வலி, தோள்பட்டை வலி, மூட்டு வலி, முதுகு வலி இருக்கு***"** (மூலம்: விடய ஆய்வு - 06).

"அதிகமா வேலை செஞ்சா பாரங்கள் எல்லாம் தூக்கி வேலை செஞ்சா கை, கால், மூட்டு வலி, முழங்கால் வலி எல்லாம் வாறது. சரியா உடம்பு நோகும், நாரி நோகும்" (மூலம்: விடயஆய்வு-08).

"இந்த வேலைக்கு வந்தா பிறகு அடிக்கடி காய்ச்சல் வரும் தலைவலி, முழங்கால் வலி, மூட்டு வலியெல்லாம் வரும். பாரங்கள் தூக்கினா நாரி நோகும். கழுத்து வலி இருந்ததிட்டு வாறது. முதுகுவலி எல்லாம் வரும். சரியா உடம்பு ஏலாம இருக்கும்" (மூலம்: விடயஆய்வு-10).

அதேசமயம் திண்மக்கழிவுகளை அகற்றும் போது தொழில்சார் சுகாதாரப் பாதிப்புகளை எதிர்கொண்டவர்களாக 69.8%ஆனோர் காணப்படுகின்றார்கள்.

அட்டணை 3.4 : தொழில்சார் ஆரோக்கிய பாதிப்புக்கு சுகாதாரப் பாதுகாப்பை நாடிச்செல்லல்

	எண்ணிக்கை	**வீதம்(%)**
தமக்குத் தாமே சுயமான சிகிச்சைமுறை	51	36.2%
ஆயள்வேதம்	13	9.3%
மருந்துக்கடை	23	16.3%
மருத்துவமனை	54	38.2%
மொத்தம்	141	100.0%

(மூலம்: களஆய்வு, வினாக்கொத்து, 2022)

அட்டவணை 3.4 இன் படி தொழில்சார் சுகாதார ஆபத்துக்களால் பாதிக்கப்பட்ட சுத்திகரிப்புத் தொழிலாளர்களில் 38.2%ஆனோர் அரசாங்க வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுள்ளனர். அதிலும் பாரதூரமான சுகாதாரப் பிரச்சினைகளுக்கு மட்டுமே வைத்தியரை நாடிச்செல்கிறார்கள். மேலும் 36.2%ஆனோர் தங்களுக்குத் தாங்களே சுயமாக சிகிச்சை எடுத்துக்கொள்ளும் முறைமையை பின்பற்றுகின்றார்கள். இதனால் சாதாரணமாக தொழிலிடத்தில் ஏற்படும் காயங்களுக்குச் சரியான சிகிச்சை முறைமை மற்றும் ஓய்வின்றி தம்முடைய சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபட்டு தொடர்ச்சியாக சுகாதார ஆபத்துக்களை எதிர்கொள்கின்றார்கள்.

இதனை சுகாதார நம்பிக்கை மாதிரி (Health Belief Model) என்ற கோட்பாட்டு அடிப்படையில் பார்த்தால், உணரப்பட்ட தடைகள் என்பது சுகாதார செயலைச் செய்வதற்குத் தடைகளாகும். குறித்த நபரின் உணர்வுகளைக் குறிக்கிறது. ஒரு நபரின் தடைகள் அல்லது தடைகள் பற்றிய உணர்வுகளில் அதிகளவான மாறுபாடு உள்ளது, இத்தகைய உணர்வு மருத்துவத்திற்கான செலவு அல்லது அதனால் அடையும் பயனுக்கு காரணமாகின்றது. சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தைகளானவை விலை உயர்ந்தவை, ஆபத்தானவை, விரும்பத்தகாதவை, நேரம் செலவாகும் அல்லது சிரமமானதாக இருக்கலாம் என்ற கருத்துக்களை நினைத்துக்கொண்டு அதற்கு எதிரான செயல்களில் தங்களின் செயல்திறனை மேற்கொள்கிறார்கள். அதாவது குறித்த ஆய்வினூடாக ஒப்பிடும்போது தொழில்சார் ஆரோக்கிய பாதிப்புக்கு உள்ளாகும் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் மருந்துகளின் விலை, அதற்கான செலவு என்பவற்றால் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தை குறைவாகவுள்ளது. எனவே தமக்குத் தாமே சுயமான சிகிச்சையில் ஈடுபடுகின்றனர், இதனால் பக்க விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

3.4 வாழ்க்கைப்பாணியும் சுகாதார நடத்தையும்

ஆரோக்கியமான வாழ்க்கைப்பாணியினைப் பொறுத்தவரையில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களில் அதிகமானோர் (79.2%) மதுபானம் அருந்துபவர்களாகக் காணப்பட்டுள்ளனர். Mudalige and Dharmathilake, (2000) எனும் ஆய்வாளர்களது ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் இலங்கையில் கொழும்பு நகரசபையில் பணிபுரிகின்ற சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் மத்தியில் மது அருந்துதல் மற்றும் புகைத்தல் ஆகியவை பிரதானமாக இருந்தன. இவை அவர்களிடையே அடையாளம் காணப்பட்ட உள - சமூக பிரச்சனைகள் ஆகும். பெரும்பாலான ஊழியர்கள் மது அருந்துகின்ற பழக்கம் அதிகரிப்பதை ஒப்புக்கொண்டனர். அத்துடன் தற்போதைய வேலையில் சேர்ந்த பிறகு இந்தப் பழக்கங்களைத் தொடங்குவதாக குறிப்பிட்டுள்ளனர். குப்பையின் விரும்பத்தகாத தன்மை, நாற்றம் மற்றும் வேலையின் சோர்வுத்தன்மை காரணமாக, மதுவை பயன்படுத்துவதனூடாக வேலையை அதிகளவில் செய்கின்றனர்.

இதனை ஒப்பிட்டு பார்க்கின்றபோது குறித்த ஆய்வில் பெரும்பாலான சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தங்களின் நோயைப் புறக்கணித்ததாலும், தங்களின் ஊதியத்தை இழக்கவோ அல்லது வேலையை இழக்கவோ விரும்பாததால், தகுந்த சிகிச்சையின்றி தொடர்ந்து வேலை செய்தனர். அசுத்தமான கழிவுநீரைச் சுத்தம் செய்யும் அசுத்தமான பணியைச் சமாளிக்கவும், அவர்களின் உடல்நலப் பிரச்சினைகளை மறக்க ஒரு முறையாகவும் மது அருந்துவது பரவலாக இருந்தது. வவுனியா நகரசபை, பிரதேசசபைகளில் வேலை செய்கின்ற சுத்திகரிப்புத் தொழிலாளர்களில் மது அருந்துபவர்களாக 79.2% ஆனோர் காணப்பட்டார்கள். 5உ்5 வருடத்திற்குள்ளும் மது அருந்துபவர்களாக 52.6% ஆனோர் காணப்பட்டார்கள். மேலும் 25 வருடங்களாக மது அருந்துபவராக ஒருவர் காணப்படுகின்றார். ஆய்வுக்குட்படுத்தியவர்களில் மது அருந்துவதால் பாதிப்படைந்தவர்களாக இரண்டுபேர் அடையாளங் காணப்பட்டார்கள். அதாவது 25 வருடங்களாக குடித்ததாகவும் அதில் ஒரு தடவை (2013) போத்தல் கள்ளு குடித்து வைத்தியாசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். கணியம்சார் தரவுகளுக்கு வலுச்சேர்கின்ற வகையில் பண்புசார் தரவுகளும் அமையப்பெற்றுள்ளன.

"நான் தொடர்ச்சியாக ஒரு இருபது வருஷத்துக்கிட்ட குடித்துக் கொண்டு தான் இருந்தேன். 2013 போத்தல் கள்ளு குடிச்சு மரணம்வரை போய் பின்னர் கிளிநொச்சி ஹாஸ்பிட்டல்ல சிகிச்சை பெற்று வந்தேன்" (மூலம்: விடய ஆய்வு-03).

அதேசமயம் புகைபிடிப்பவர்களாக 42.7% ஆனோரும் வெற்றிலை, பாக்கு சப்புபவர்களாக 34.4% ஆனோரும் காணப்படுகின்றனர்.

"இங்க வாய்ப்புண் அப்படியெல்லாம் வந்துட்டு. எங்கட தொழிலாளிகளை பொறுத்தவரைக்கும் கூடுதலா வெற்றிலை, பாக்கு போடுவாங்க. வெற்றிலையால வாய்ப்புண் பிரச்சினை வரும்" (மூலம்: விடய ஆய்வு: 07).

இவ்வாறான சுத்திகரிப்புத் தொழிலாளர்களது வாழ்க்கைப்பாணியினால் ஆரோக்கியம்சார் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள்.

அட்டவணை 3.5 : தனியாள் பாதுகாப்புக்கருவிகள் பாவித்தல் (ஒன்றுக்குமேற்பட்ட தெரிவு)

		எண்ணிக்கை	வீதம் (%)
தனியாள் பாதுகாப்புக்கருவிகள்	கையுறை	95	24.9
	முகக்கவசம்	89	23.3
	சீருடை	76	19.9
	பாதுகாப்பான காலணி	85	22.3
	தலைக்கவசம்	37	9.7
	மொத்தம்	382	100.0
தனியாள் பாதுகாப்புக்கருவிகளை அணிந்து வேலை செய்தல்	ஆம்	74	76.1
	இல்லை	22	23.9
	மொத்தம்	96	100.0
தனியாள் பாதுகாப்புக்கருவிகளை அணியாமைக்கான காரணம்	அசௌகரியம்	18	18.8
	அலட்சியம்	1	1.0
	மொத்தம்	19	19.8

(மூலம்: களஆய்வு, வினாக்கொத்து, 2022)

அட்டவணை 3.5 இன் படி தனியாள் பாதுகாப்பு உபகரணங்கள் தொடர்பான சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் மனப்பதிவுகளை பார்க்கின்றபோது, Mudalige and Dharmathilake, (2000) எனும் ஆய்வாளர்களது ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் ஒப்பிட்டு நோக்குகையில் இலங்கையில் கொழும்பு நகரசபையில் பணிபுரிகின்ற சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் ஊசி குத்துதல், காயங்கள், வெட்டுக்கள் மற்றும் நச்சுகளின் வெளிப்பாடு என்பன பெரும் சுகாதார விளைவுகளாக இருந்தன. அத்துடன் அவர்கள் பாதுகாப்பு உபகரணங்களின் தரம், கிடைப்பனவில் திருப்தியில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். வவுனியா சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் தொழில்சார் ஆபத்துக்கள் என்ற ஆய்வில் குறித்த ஆய்வு அமைவிடத்திலும் அதே பிரச்சினையை எதிர்கொள்வதோடு சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடுவதற்கான தனியாள் பாதுகாப்புக் கருவிகளின் கிடைப்பனவில் காணப்படுகின்ற பிரச்சினைகள், தனியாள் பாதுகாப்புக் கருவிகளின் குறைவான தரம் மற்றும் கிடைப்பதற்கு நீண்டகாலம் செல்லுதல் என்ற அடிப்படையில் உடன்படுகின்றது. இதனைப் பண்புசார் தரவுகள் உறுதிப்படுத்துகின்றன.

"கையுறைகள் ஒரு தடவை பாவித்த பின் கிழிஞ்சிரும். அத்துடன் சில கையுறைகளை போட்டு வேலை செய்வது கடினம். கூடுதலான சந்தர்ப்பங்களில் நாம் கையுறை இன்றியே வேலை செய்து வருகிறோம்" (மூலம்: விடய ஆய்வு - 01).

மூன்று நான்கு விதங்களில் கையுறைகள் தருவார்கள் அதனை பாவிப்பதும் கடினம். சில உறைகள் உடன் கிழிந்துவிடும். சிலநேரம் காட்போட் மட்டைகளை வைத்து குப்பைகளை அள்ளி இருக்கிறோம்" (மூலம்: விடய ஆய்வு - 02).

''இப்ப எங்களுக்கு ஒரு ரெண்டு வருஷமா தம்பூட்ஸ் தரவே இல்ல. ஹெல்மெட் முதல் தந்தவங்கதான். இப்ப ஒரு 5வருசத்துக்கிட்ட தரேல்ல. அதைவிட கைக்குளோஸ் தருவாங்கள்தான், அது பாவிச்சு நல்லா கிழிஞ்சா பிறகுதான் வேற கைக்குளோஸ் தருவாங்க'' (மூலம்: விடய ஆய்வு - 03).

''மழைக்கான பாதுகாப்பு அங்கி சரியில்லை. பெரிய மழை பெய்ற நேரம் பாவிக்கேக்க தண்ணி உள்ள போய்விடும். நோமல் மழைகளுக்கு பாவிக்கலாம்'' (மூலம்: விடய ஆய்வு - 04).

''மழைகோட் குளிருக்கு போடுற மாதிரிதான் தருவாங்க. அதால மழையில நனைஞ்சா காய்ச்சல், சளி அப்பிடி ஏதும் வாறதுதான். மழைக்கு பாவிக்கிற மாரி நல்ல கோட் தரவில்லை. நாங்கள் கேட்டாலும் அதற்கு சரியான பதில் சொல்லமாட்டாங்கள்'' (மூலம்: விடய ஆய்வு - 06).

''மழை நேரத்தில வேலை செய்வது சரியான கஸ்டம். முழங்கால் மட்டும் சப்பாத்துக்குள்ள எல்லாம் தண்ணி போய்விடும். கால் எல்லாம் அவிஞ்சிடும். நடக்கவே இயலாது. தண்ணிபட்டா கால் எரியும்'' (மூலம்: விடய ஆய்வு - 10).

சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடுவதற்கான வவுனியா நகரசபை மற்றும் பிரதேச சபைகளில் வழங்கப்படுகின்ற தனியாள் பாதுகாப்புக் கருவிகளின் கிடைப்பனவில் காணப்படுகின்ற பிரச்சினைகள், தனியாள் பாதுகாப்புக் கருவிகளின் குறைவான தரம் மற்றும் கிடைப்பதற்கு நீண்டகாலம் செல்லுதல் போன்றவற்றினால் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தொழில்சார் சுகாதார ஆபத்துக்களை எதிர்கொள்கின்றார்கள். கையுறை - ஒரு தடவை பாவித்த உடனே கிழிந்து விடும் நிலையில் உள்ளது, சில கையுறைகள் மற்றும் பாதுகாப்பான காலணி (தம்பூட்ஸ்) போன்றவற்றில் மழைகாலத்தில் தண்ணீர் அதற்குள் வந்து கைபுண் மற்றும் கைகளில் நோய் தொற்று ஏற்பட காரணமாக அமைகின்றது. அத்துடன் கையுறைகள், காலணி வழங்குவதற்கு ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது வருடக்கணக்காக ஆகின்ற தன்மை காணப்படுகின்றது. தலைக்கவசங்கள் வழங்க நீண்டகாலம் செல்கிறது. மற்றும் முகக்கசவசங்கள் கொரோனாவின் தீவிரத்தன்மையான காலப்பகுதியில் மட்டுமே வழங்கப்பட்டது. எனவே இவ்வாறான தொழில்சார் ஆபத்துக்களை உடையவர்களாக நகரசபை மற்றும் பிரதேசசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் காணப்படுகின்றார்கள்.

4. முடிவுரை

ஆய்வு முடிவுகளின்படி சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் 62.5% ஆனோர் தொழில்சார் சுகாதார ஆபத்துக்களை எதிர்கொள்கின்றார்கள். தொழில்சார் ஆரோக்கியப் பாதிப்புகளுக்கு எந்தவித நஷ்டஈடு மற்றும் விடுமுறை ஓய்வு வழங்கப்படுவதில்லை. பொருளாதாரப்பிரச்சினை காரணமாக தொடர்ச்சியாக சுத்திகரிப்புத் தொழிலில் இடுபடுகின்றார்கள். தொழில்சார் சுகாதார ஆபத்துக்களால் பாதிக்கப்பட்ட சுத்திகரிப்புத் தொழிலாளர்களில் 38.2%ஆனோர் அரசாங்க வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுள்ளனர். அதிலும் பாரதூரமான சுகாதாரப் பிரச்சினைகளுக்கு மட்டுமே வைத்தியரை நாடிச்செல்கிறார்கள். குறிப்பாக 36.2%ஆனோர் தங்களுக்குத் தாங்களே சுயமாக சிகிச்சை எடுத்துக்கொள்ளும் முறைமையை பின்பற்றுகின்றார்கள். மேலும் 18.8%ஆன சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் எந்தவித சிகிச்சையையும் நாடிச்செல்லவில்லை. இதனால் சாதாரணமாக தொழிலிடத்தில் ஏற்படும் காயங்களுக்கு சரியான சிகிச்சை முறைமை மற்றும் ஓய்வின்றி தம்முடைய சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபட்டு தொடர்ச்சியாக சுகாதார ஆபத்துக்களை எதிர்கொள்கின்றார்கள்.அதேசமயம் சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடுவதற்கான தனியாள் பாதுகாப்புக் கருவிகளின் கிடைப்பனவில் காணப்படுகின்ற பிரச்சினைகள், தனியாள் பாதுகாப்புக் கருவிகளின் குறைவான தரம் மற்றும் கிடைப்பதற்கு நீண்ட காலம் செல்லுதல் போன்றவற்றினால் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தொழில்சார் சுகாதார ஆபத்துக்களை அதிகளவில் எதிர்கொள்கின்றார்கள். சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு தொழில்சார் சுகாதாரப் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கான முற்பாதுகாப்பு பயிற்சி விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டாலும் அதில் எந்தவித பிரயோசனமும் இல்லை. சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் விலைமதிப்பற்ற பொது சேவையை வழங்குகிறார்கள்.

அனைத்து மக்களது அன்றாட வாழ்க்கைக்கும், சுற்றுச்சூழலுக்கும் இவர்களின் பணி இன்றியமையாதது. தரமான தனியாள் பாதுகாப்புக்கருவிகளை வழங்குவதோடு அதனை தொடர்ச்சியாகப் பாவிப்பதனை உறுதிப்படுத்த வேண்டும். சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் உடல்நலம், பாதுகாப்பு மற்றும் சமூககௌரவத்தை மேம்படுத்துவதற்கும், பங்களிப்பதோடு சரியான தொழில்சார் சுகாதார விழிப்புணர்வுகளை அரசநிறுவனங்கள் செயல்படுத்த வேண்டும்.

உசாத்துணை

1. Arnold S. M, Wickrematilake M. S. K, Fernando R. M. S. D, Sampath H. M. R. C, Karunapema R. P. P, Mahesh P. K. B, Munasinghe P. M, Denawaka C. J, (2019). Occupational hazards in medium and large scale industrial sectors in Sri Lanka: experience of a developing country, Quarantine Unit, Ministry of Health, Colombo 10, Sri Lanka.
2. Durairaj Rajan,(2016). Health problems among sanitary workers a comparative study, Univertsity of Africa, India.
3. Erwin Martinez Faller, Nataman Bin Miskam, Adrian Pereira,(2018), Ann Glob Health, Exploratory Study on Occupational Health Hazards among Health Care Workers in the Philippines.
4. Girish Degavia, Takala Uturac, (2021). Occupational hazards and its relation with health-seeking and practicing behaviors among sanitary workers in Southern, International Journal of Africa Nursing Sciences, Ethiopia.
5. Girish Degavi, Chala Wata Dereso, Sanjay Shinde, Shiferaw Gelchu Adola, (2021). Prevention of Occupational Hazards Among Sanitary Workers: Knowledge, Attitude, and Practice Survey in Bulehora, Ethiopia, Risk Management and Healthcare Policy, West Guji Zone, Oromia, Ethiopia.
6. Hemali HarishOzaa, Madison Gabrilla Lee, Sophie Boisson, Frank Pega, Katr Medlicott, Thomas Clasena, (2022). Occupational health outcomes among sanitation workers: A systematic review and meta-analysis, Department of Enviroment, climate change and health, world hearth organation, Geneva, Switzerland.
7. Shengling Z, Yu Li, Yipeng Zhang, Zhi-Nan Lu, Yu Hao,(2020). Does sanitation infrastructure in rural areas affect migrant workers' health? Empirical evidence from China, Environmental Geoche ministry and Health, China.
8. Tiwari R, (2008). Occupational health hazards in sewage and sanitary workers, Occupational Medicine Division, Naional Institute of Occupational Health, Meghani Nagar, Ahmedabad, India.
9. Vegini.G, Sivakanthan.S, (2022), Causes And Impact of Occupational Health Hazards Among The Sanitary Workers: A Sociological Study Based On The Jaffna Municipal Council, University of South Easten, SEUSL Internotinal Symposium, 10th Internotinal Symposium, Sri Lanka.

மீனவர்களின் தொழில்சார் ஆரோக்கியம், வாழ்க்கைப்பாணி மற்றும் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தை: குச்சவெளி பிரதேச செயலகத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு

சா.மதுஷா[1], சி.சிவகாந்தன்[2]
[1,2]சமூகவியல்துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
[1]mathusanthalingam@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

தொழில்சார் ஆரோக்கிய பாதிப்புக்கள் மற்றும் அதிக இடர்நடத்தைகளை எதிர்கொள்ளும் சமூகக்குழுக்களாக மீனவர்கள் காணப்படுகின்றனர். இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் வசிக்கும் மீனவர்களின் வாழ்வாதாரமாக ஆழ்கடல் மீன்பிடி காணப்படுவதால் மீன்பிடிசார்ந்த ஆபத்துக்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த ஆய்வானது பண்புசார் மற்றும் கணியம்சார் ஆய்வு வடிவத்தை பயன்படுத்தி திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேசசெயலகப்பிரிவிற்குட்பட்ட மீனவ கிராமங்களினை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீனவர்களின் தொழில்சார் சுகாதாரப் பாதிப்புக்கள், வாழ்க்கைப்பாணி மற்றும் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை மதிப்பிடுதலே ஆய்வின் பிரதான நோக்கமாகும். ஆய்வின் அனைத்துக் கட்டங்களிலும் ஆய்வு ஒழுக்கவியல் ஆய்வாளரால் பின்பற்றப்பட்டது.வினாக்கொத்து, விடய ஆய்வுகள், நேர்காணல்கள் மற்றும் இலக்குக் குழுக்கலந்துரையாடல் மூலம் ஆய்வுக்கான முதலாம்நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. அடுக்கமைக்கப்பட்ட எழுமாற்று மாதிரி மூலம் ஆய்வுக்கான மாதிரி தெரிவுசெய்யப்பட்டது. அவற்றுள் ஆழ்கடல் மீன்பிடியினை மேற்கொள்பவர்கள் ஆரோக்கிய பாதிப்புக்கள் அதிகம் எதிர்கொள்வதனால் 211 பேர் ஆய்வுக்கான மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டனர். வினாக்கொத்து மூலம் சேகரிக்கப்பட்ட கணியம்சார் தரவுகள் SPSS உதவியுடன் விபரண புள்ளிவிபரவியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டதுடன் மாறிகளுக்கு இடையிலான தொடர்புகளினை விபரிப்பதற்காக கைவர்க்கச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. பண்புசார் தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. மீனவர்களில் 40.8% ஆனோர் 42-53 வயதுப்பிரிவினராகவும், 53.6% ஆனோர் இடைநிலைக் கல்வியினைக் கற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இனத்தின் அடிப்படையில் தமிழர்கள் அதிகமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களாகக் காணப்படுகின்றனர். ஆழ்கடல் மீன்பிடியினை மேற்கொள்ளும் மீனவர்களில் பெரும்பாலானவர்களிடம் தொழில்சார் பாதிப்புக்கள் காணப்படுகின்றன. தொழில்சார் ஆரோக்கிய பாதிப்புக்களில் தசைக்கூட்டுப்பாதிப்பு, ஒவ்வாமை அதிகரிப்பு, கண்பார்வைக் குறைபாடு மற்றும் கால்வாதப்பிடிப்பு போன்ற பாதிப்புக்களினை எதிர்கொள்கின்றனர். இவற்றில் அதிகமான மீனவர்கள் தசைக்கூட்டுப் பாதிப்பிற்கு 38.5% உள்ளாகின்றனர். சமூகக் குடித்தொகைக் காரணிகளான வயது ($p<0.000$) மற்றும் கல்விநிலை ($p<0.000$) மீனவர்களின் தொழில்சார் பாதிப்புக்களில் புள்ளிவிபரவியல் ரீதியாக மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது. அத்துடன் மீனவர்களின் ஆரோக்கியமற்ற உணவுப்பழக்கவழக்கங்கள், மதுபானம் மற்றும் புகைத்தல் போன்ற இடர்நடத்தைகளால் ஆரோக்கியம் சார்ந்த பிரச்சினைகளினை எதிர்கொள்கின்றனர். மீனவர்களின் ஆரோக்கியத்தினை நாடிச்செல்லும் நடத்தையில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளாக நோயின் தன்மை, நோயின் தீவிரத்தன்மை, நோயினைத் தாங்கிக்கொள்ளும் தன்மை, தனிப்பட்ட சுகாதார நம்பிக்கைகள் மற்றும் சுகாதாரவசதிகளின் கிடைப்பனவு போன்ற காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. சமூகக் குடித்தொகைக் காரணிகளான வயது ($p<0.008$) மற்றும் குடியியல் அந்தஸ்து ($p<0.001$) மீனவர்களின் ஆரோக்கியத்தினை நாடிச்செல்லும் நடத்தையில் புள்ளிவிபரவியல் ரீதியாக மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது. தொழில்சார் ஆரோக்கியப் பாதிப்புக்களிலிருந்து தடுப்பதற்கு சுகாதாரக்கல்வி, தனியாள் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தொற்றா நோய்களுக்கான தொடர்ச்சியான பரிசோதனைகள் முதலானவற்றை வழங்குவதன் மூலம் மீனவர்களின் நல்வாழ்வு மற்றும் சிறந்த ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தை என்பவற்றை மேம்படுத்த முடியும் என்பதை ஆய்வு வலுவாகப் பரிந்துரைக்கின்றது.

திறவுச் சொற்கள்: ஆழ்கடல் மீன்பிடி, இடர்நடத்தை, தொற்றா நோய்கள், நோய்நிலை அனுபவம், வயது

1. ஆய்வு அறிமுகம்

மீனவர்கள் சமூகத்தில் முக்கியமான சமூகக்குழுக்களாகவும் நாட்டின் பொருளாதாரத்தை ஈட்டித்தரும் தொழிலாளர்களாகவும் காணப்படுகின்றனர். மீனவர்கள் மீன்பிடித்தல், மீன்களை சந்தைப்படுத்தல், மீன்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல், அளவுக்கதிகமாக சிறிய மீன்கள் பிடிபடும் காலக்கட்டத்தில் அவற்றைப் பதனிட்டுப் பாதுகாத்து வைத்தல் முதலான செயற்பாடுகளில் மீனவர்கள் ஈடுபடுகின்றனர். அபிவிருத்தி அடைந்த நாடுகளை விட அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் அதிகமான மக்களின் வாழ்வாதாரமாக மீன்பிடித்தொழிலானது காணப்படுகின்றது(Ghosh et al, 2015). மீன்பிடித்தொழிலானது மிகவும் தொழில்சார் ஆரோக்கிய இடர்களைக்கொண்ட தொழில்களில் ஒன்றாகும். தொழில்சார் ஆரோக்கியப்பாதிப்பினாலும், மீனவர்களின் இடர்நடத்தைகளினாலும் மீனவர்கள் பல்வேறு ஆரோக்கியம் சார்ந்த பிரச்சினைகளினை எதிர்கொள்கின்றனர் (Shibaji Mandal et al, 2017).

மீனவர்கள் பெரும்பாலானோர் மீன்பிடித்தொழிலில் ஈடுபடும்போது பெரும்பாலும் தொழில்சார் பாதிப்புக்களை எதிர்கொள்வதனாலும், மீனவர்களது நீண்டநேர வேலையின் காரணமாகவும், ஆரோக்கியமற்ற உணவுப்பழக்கத்தினாலும், மீன்பிடிசார்ந்த வேலைகளினாலும் ஆரோக்கியம் சார்ந்த பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதாகக் குறிப்பிடப்படுகின்றது(FAO,2022). அத்தோடு மீனவர்களுக்கு ஏற்படுகின்ற சுகாதாரப் பிரச்சினைகளிலும் அவர்களது ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தைகளில் வயது, கல்விநிலை, தொழில், வருமானம், குடியியல் அந்தஸ்து மற்றும் இனம் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன. தொழில்சார் ஆரோக்கிய பாதிப்பினாலும், நீண்டகால நோய்களால் பாதிக்கப்படுவதனாலும் மீனவர்கள் மத்தியில் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையானது அதிகளவில் காணப்படுகின்றது. மருந்துகளை உட்கொள்ளுதல், மருத்துவரை அணுகல், பாதுகாப்பான உணவுப்பழக்கம், சுயமாக சிகிச்சை எடுத்துக்கொள்ளல் மற்றும் வீட்டுவைத்தியம் போன்ற நடத்தை செயற்பாடுகள் காணப்படுகின்றதோடு மீனவர்களின் ஆரோக்கியத்தினை மேம்படுத்துவதாகவும் அமைகின்றது(Neethiselvan et.al, 2021).

மீனவர்கள் மீன்பிடித்தொழிலை வாழ்நாள் முழுவதும் மேற்கொள்வதால் தொழில்சார் ஆபத்தானதாக இருக்கின்றது. மீனவர்கள் தங்களுடைய ஆரோக்கியத்தில் அதிகளவு கவனம் செலுத்துவது என்பது குறைவாகவே காணப்படுகின்றது. மீனவர்கள் தொழில்நிலைசார் ஆரோக்கிய பாதிப்பினாலும், நீண்டகால நோய்களால் பாதிக்கப்படுவதனாலும் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையானது அதிகளவில் காணப்படுகின்றது. அந்தவகையில், சுகாதாரப் பராமரிப்பு, சுகாதார மறுசீரமைப்பு, உணவுமுறை, உடற்செயற்பாடு, மருத்துவர் அணுகல் மற்றும் சிகிச்சைகளைப் பின்பற்றுதல் போன்ற நடத்தைச் செயற்பாடுகள் காணப்படுகின்றதோடு மீனவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதாகவும் அமைகின்றது (Harshani et al, (2017).

பொருளாதாரத்தை ஈட்டிக்கொடுக்கும் முக்கியமான சமூகக்குழுவாக மீனவர்கள் காணப்படுகின்றனர். மீன்பிடித்தல் ஆபத்து, அனுபவம், மீன்பிடித்தல் குறித்த அறிவு மற்றும் செய்பவர்களின் வயது என்பன மீனவர்களின் ஆரோக்கியப் பாதிப்பில் செல்வாக்குச்செலுத்தும் காரணிகளாக அமைகின்றன. உடல் உழைப்பு மற்றும் கடின, நீண்டநேர வேலையினையும் கொண்டிருக்கும் மீனவர்கள் தங்களது ஆரோக்கியத்தினைப் பாதுகாத்துக்கொள்வது குறைவாகவே உள்ளது. இதனால் பல்வேறு ஆரோக்கியம் சார்ந்த பிரச்சினைகளினை எதிர்கொள்வதாக உள்ளது. மீனவர்களின் தொழில்சார் ஆரோக்கியம், வாழ்க்கைப்பாணி மற்றும் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தைகள் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை அறிய வேண்டியுள்ளது. குச்சவெளி பிரதேசசெயலகப்பிரிவிற்குட்பட்ட மீனவர்கள் அதிக வெப்பம் மற்றும் அதிக குளிர் என காலநிலைக்கு ஏற்றவாறு மாறிக்கொண்டிருக்கின்ற சூழலில் தங்களை சுகாதாரப் பிரச்சினைகளிலிருந்து பாதுகாத்துக்கொள்கின்றார்களா? மற்றும் தொழில் சூழலில் எவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுகின்றது என்பதனை அறிய வேண்டியுள்ளது. மீனவர்களுடைய சுகாதாரப் பிரச்சினைகள் மற்றும் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தைகள் மற்றும் காரணிகள் என்பன சமூகக் குடித்தொகைக் காரணிகளில் தங்கியுள்ளன. மீனவர்களுடைய ஆரோக்கியத்தின் மீது கவனம் செலுத்தாவிடின் நாட்டினுடைய பொருளாதார விருத்திக்கும் மீன்பிடித்தொழிலும் பாதிப்படைய கூடியதாக இருக்கும். திருகோணமலை மாவட்ட குச்சவெளி பிரதேசசெயலகப்பிரிவான ஆய்வுப்பிரதேசத்தில் மீனவர்களின் ஆரோக்கியமானது சவால் நிறைந்ததாக இருப்பதால் அவர்களது ஆரோக்கியம் குறித்து கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஆய்வுப்பிரதேசத்துக்குட்பட்ட மீனவர்கள் தொழில்சார் ஆரோக்கியப் பாதிப்பு அதிகமாக எதிர்கொள்வதனால் ஆரோக்கியம் தொடர்பாக அதிகம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது(மீன்பிடித்துறைத் திணைக்களம்-திருகோணமலை, 2020). மீனவர்களின் ஆரோக்கியம் தொடர்பாக எந்தவொரு ஆய்வும் இப்பிரதேசத்தில் இடம்பெறாத நிலையில் ஆய்வானது திருகோணமலை மாவட்ட குச்சவெளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட மீனவர்கள் மத்தியில் தொழில்சார் சுகாதாரப் பாதிப்புக்கள் மற்றும் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தைகள் தொடர்பான காரணிகளினை உட்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2. ஆய்வு வினாக்கள்

1. மீனவர்களின் தொழில்சார் ஆரோக்கியப் பாதிப்பில் தாக்கம் செலுத்தும் காரணிகள் எவை?

2. ஆரோக்கியமான வாழ்க்கைப்பாணி மற்றும் அதிக இடர்நடத்தைகள் மீனவர்களின் மத்தியில் எவ்வாறு உள்ளது?
3. மீனவர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் எவை?

3. ஆய்வின் பிரதான நோக்கம்

மீனவர்களின் தொழில்சார் ஆரோக்கியப் பாதிப்பு, வாழ்க்கைப்பாணி மற்றும் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளுக்கும் அதனுடன் தொடர்புடைய சமூகக் குடித்தொகைக் காரணிகளுக்கும் இடையிலான தொடர்பினை மதிப்பிடுதல்.

4. இலக்கிய மீளாய்வு

FAO (Food and Agriculture Organization, 2022) இனால் மீனவர்களின் தொழில்சார் ஆரோக்கிய பாதிப்புக்கள் தொடர்பாக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அந்தவகையில் மீனவர்கள் தொழில்சார் ஆரோக்கிய ஆபத்துக்களுக்கு ஆளாகின்றார்கள். மீன்பிடிக்க கடலில் நீண்ட நேரம் வேலை செய்தல், கடினமான வானிலையில் வேலை செய்ய வேண்டும், கணரக வாகன மற்றும் உபகரணங்களை உபயோகித்தல் போன்றவற்றினால் ஆபத்துக்களுக்கு ஆளாகின்றார்கள். சில நேரங்களில் ஆபத்தான சூழ்நிலைகளினை கையாளுகின்ற போதும் மீனவர்கள் ஆபத்துக்களினையும் பாதிப்புக்களினையும் எதிர்கொள்கின்றனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

Shibaji Mandal et al, (2017) இல் மேற்கொள்ளப்பட்ட பங்களாதேஷின் கடலோர மீனவர் சமூகத்தின் தொழில்சார் சுகாதார மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஆய்வில் மீனவர்களுக்கு மீன்பிடித்தொழிலில் ஈடுபடும்போது தொழில்நிலைசார் ஆரோக்கிய பாதிப்புக்கள் ஏற்படுவதாக குறிப்பிடுகின்றனர். உடல்நலப் பாதிப்பில் அதிகமானோரில் 75% வீதமானோர் கடல் அலைகளினால் அடிக்கடி தலைச்சுற்றலை எதிர்கொள்வதாகவும் 70% வீதமானோர் வாந்தி எடுப்பதாகவும், சுகயீனமடைவதாகவும் குறிப்பிடப்படுகின்றது. அதுமட்டுமல்லாது பார்வைக் குறைபாடு, பார்வை உணர்திறன் குறைவடைவதாகவும் முன்வைக்கப்படுகின்றது. ஆய்வின் பாதிப்புக்களினை அடிப்படையில் இந்த ஆய்வின் கருத்துக்களோடு ஒத்துப்போவதாக அமைகின்றது. அந்தவகையில் மீனவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளில் அடிக்கடி சுகயீனமடைதல், தலைசுற்றல் போன்ற ஆரோக்கியம் சார்ந்த பிரச்சினைகள் Shibaji Mandal et al, (2017) என்னும் ஆய்வுடன் ஒத்துப்போவதாக அமைகின்றது. Harshani et al, (2017) என்பவர்களுடைய ஆய்வில் மீனவர்களினுடைய ஆரோக்கியம் சார்ந்த பிரச்சினைகளில் தொழில்சார் ஆரோக்கிய பாதிப்புக்களில் 70% வீதமானோர் உயர் இரத்த அழுத்தத்திற்கு ஆளாகுவதாக குறிப்பிடப்பட்டுள்ளமையானது குறித்த ஆய்வுடன் வேறுபட்டதாக அமைகின்றது.

Amit Bhondve et al, (2013) எனும் ஆய்வாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்தியாவின் மும்பை கடலோரப்பகுதி மீனவர்களிடையே 81.6% வீதமானோரிடம் மது மற்றும் புகைத்தல் நுகர்வானது அதிகமாக காணப்படுவதாகவும் போதைப்பொருள் பயன்பாட்டினை அதிகரித்துக் கொள்வதாகவும் குறிப்பிடப்படுகின்றது. ஆய்வாளர்களின் கருத்துக்களானது இந்த ஆய்வோடு ஒத்துப்போவதாக அமைகின்றது. ஏனெனில் ஆய்வுப்பிரதேசத்தில் 90.4% ஆனோர் மத்தியில் மது மற்றும் புகைத்தல் பாவிப்பதனை ஆய்வினுடாக முன்வைக்கப்படுகின்றது.

Harshani et al, (2017) ஆய்வாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட இலங்கையின் புத்தள மாவட்ட கரையோர மீனவர்களிடையே ஆரோக்கியம்சார் நடத்தை காரணிகளில் தீவிர தொற்றுநோய் மற்றும் தொற்றா நோய்களின் தாக்கத்திற்காகவும் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தைகள் அதிகமாக காணப்படுகின்றதாக முன்வைக்கப்படுகின்றது.

5. ஆய்வு முறையியல்

திருகோணமலை நகரின் வடக்குப் பகுதியில் 504.25 சதுரகிலோமீற்றர் பரப்பளவில் உள்ள குச்சவெளி பிரதேச செயலகப்பிரிவில் பெரும்பான்மையினர் மீன்பிடித்தொழிலை மேற்கொள்கின்றனர். சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வில் கலப்பு முறையினைப் பயன்படுத்தி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. குச்சவெளி பிரதேச செயலகப்பிரிவில் 3703 மீனவர்கள் காணப்படுகின்றனர்(Population Distribution By Occupation, Kucheveli-2021). அடுக்கமைக்கப்பட்ட எழுமாற்று மாதிரி எடுப்பு முறையினை பயன்படுத்தி ஆய்வுக்கான மாதிரித் தெரிவுமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீனவர்களில் ஆரோக்கியம் சார்ந்த பாதிப்புக்கள் ஆழ்கடல் மீன்பிடியினை மேற்கொள்பவர்கள் மத்தியில் அதிகம் காணப்படுவதனால் அவற்றில் 211 பேர் ஆய்வு மாதிரியாக தெரிவுசெய்யப்பட்டனர். முதலாம் நிலைத்தரவுகள் நேர்காணலை அடிப்படையாகக் கொண்ட வினாக்கொத்து, விடய ஆய்வு, பிரதான தகவல் வழங்குனருடனான நேர்காணல் என்பவற்றின் மூலமாகவும் இலக்கிய மீளாய்வு, பிரதேசசெயலகத் தரவுகள், திருகோணமலை மாவட்ட செயலகத் தரவுகள், ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் இணையத்தளம் போன்றவற்றினூடாகவும் இரண்டாம் நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

ஆய்வுச்செயன்முறையின் அனைத்துக் கட்டங்களிலும் ஆய்வு ஒழுக்கவியல் பின்பற்றப்பட்டுள்ளது. மீன்பிடித்துறை அதிகாரியிடம்(திருகோணமலை) அனுமதி மற்றும் பிரதேசசெயலகத் தலைமை அதிகாரியிடம் (குச்சவெளி) அனுமதி பெற்றதன் பின்னரே ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வில் பங்குபற்றியவர்களிடமிருந்து அறிந்து அளிக்கப்பட்ட எழுத்து மூலமான ஒப்புதல் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே தரவுகள் சேகரிக்கப்பட்டன.

6. பெறுபேறுகளும் கலந்தாராய்தலும்

ஆய்வின்போது வினாக்கொத்து மூலமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணியம்சார் தரவுகள் விபரணப் புள்ளிவிபரவியல் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இவை விபரணப்புள்ளிவிபரவியல் மூலமான சமூக விஞ்ஞானங்களுக்கான புள்ளிவிபரவியல் மென்பொதி (SPSS) மூலமாக தரவுப்பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மாறிகளுக்கு இடையிலான இணைவினை மதிப்பிடுவதற்காக கைவர்க்கச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. விடய ஆய்வு, நேர்காணல் மற்றும் குவிமையக்குழுக்கலந்துரையாடல் மூலமாகப் பெறப்பட்ட பண்புசார் தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்வின் அடிப்படையிலும் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

மீனவர்களின் சமூக குடித்தொகைக் காரணிகள்

மீனவர்களின் தொழில்சார் ஆரோக்கியம், வாழ்க்கைப்பாணி மற்றும் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தை எனும் ஆய்வில் பங்குபற்றிய மீனவர்களது சமூக மற்றும் குடித்தொகைக் காரணிகள் அட்டவணை 6.1 இல் காட்டப்பட்டுள்ளது.

கீழ்வரும் அட்டவணை 6.1 இன் அடிப்படையில் ஒப்பீட்டளவில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்கள் 42-53 (40.8%) வயதுப்பிரிவினரே அதிகம் காணப்படுவதோடு பெரும்பாலானோர் திருமணமானவர்களாகவே (75.4%) காணப்படுகின்றனர். மீனவர்களில் பெரும்பாலானோர் இடைநிலைக்கல்விநிலையினை (53.6%) பெற்றுக்கொண்டவர்களாக உள்ளனர்.

அட்டவணை 6.1: சமூகக் குடித்தொகை காரணிகள்

சமூகக் குடித்தொகைக் காரணிகள்	n=211	எண்ணிக்கை	வீதம்(%)
வயது(வருடங்களில்)	18-29	30	14.2
	30-41	54	25.6
	42-53	86	40.8
	54-65	33	15.6
	66-77	8	3.8
	மொத்தம்	211	100
கல்விநிலை	பாடசாலை செல்லவில்லை	13	6.2
	ஆரம்பநிலைக் கல்வி	57	27.0
	இடைநிலைக் கல்வி	113	53.6
	உயர்தரம்	27	12.7
	தொழில்நுட்பக்கல்வி	1	0.5
	மொத்தம்	211	100
மதம்	இந்துமதம்	114	54.0
	கிறிஸ்தவம்	34	16.1
	இஸ்லாம்	63	29.9
	மொத்தம்	211	100
குடியியல் அந்தஸ்து	திருமணமானவர்	159	75.4
	திருமணமாகாதவர்	37	17.5
	விவாகரத்து	4	1.9
	பிரிந்து வாழ்தல்	2	0.9
	தபுதாரன்	9	4.3
	மொத்தம்	211	100
இனக்குழு	தமிழர்	148	70.1
	முஸ்லீம்	63	29.9
	மொத்தம்	211	100
மாத ஊழியவருமானம் (SLR)	≤30000	87	41.2
	30001-60000	108	51.2
	60001-90000	14	6.6
	> 90000	2	0.9
	மொத்தம்	211	100

(மூலம்- கள ஆய்வு வினாக்கொத்து-2022)

மீனவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்களாக (70.1%) உள்ளனர். மீனவர்களில் பெரும்பான்மையானவர்கள் 51.2% மொத்த மாதாந்த ஊழிய வருமானமாக 30001-60000 ரூபாவினைப் பெற்றுள்ளனர். மேலும் 7.5% ஆனவர்கள் மட்டுமே மொத்த மாதாந்த ஊழிய வருமானம் 60000 ரூபாவிற்கு மேற்பட்டுக் காணப்படுகின்றது.

அட்டவணை 6.2: மீன்பிடித்தொழிலில் தொழில்சார் ஆரோக்கிய பாதிப்புக்கள்(பல்தெரிவுகள்)

தொழில்சார் ஆரோக்கிய பாதிப்புக்கள்	எண்ணிக்கை	வீதம்(%)
கடலினுள் விபத்து	17	6.7
தசைக்கூட்டுப்பாதிப்பு	97	38.5
ஓவ்வாமை அதிகரிப்பு	71	28.2
காது கேட்கும் திறன் குறைபாடு	20	7.9
கண்பார்வை குறைபாடு	16	6.3
மன அழுத்தம்	13	5.2
தலைவலி	2	0.8
கால்வாத குணம் / உளைச்சல்	16	6.4
மொத்தம்	**252**	**100.0**

(மூலம்- கள ஆய்வு வினாக்கொத்து-2022)

அட்டவணை 6.2 இன் அடிப்படையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களில் அதிகளவானோர் தொழில்சார் ஆரோக்கிய பாதிப்புக்களில் தசைக்கூட்டுபாதிப்பு(38.5%) வீதமானோரும் ஒவ்வாமை அதிகரிப்பும்(28.2%) ஏற்படுவதாக குறிப்பிடுகின்றனர். மேலும் கண்பார்வை குறைபாடு(6.3%), மன அழுத்தம்(5.2%) மற்றும் கால்வாத பிடிப்பு(6.4%) போன்றனவும் ஏற்படுவதாக ஆய்வினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பண்புசார் தரவுகளின் மூலமாகவும் மீனவர்களுக்கான தொழில்சார் ஆரோக்கிய பாதிப்புக்களாக பெரும்பாலானோருக்கு கால்வாதப் பிடிப்பு, அடிக்கடி முதுகுவலி மற்றும் தலைவலி என்பன ஏற்படுவதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

“இராக்கடலுக்கு போறதாலயும், குளிரும் என்டதால கால்பிடிப்பு, கால் உளைச்சல் அதிகமா இருக்குது. காலின்ட தசையெல்லாம் இறுகிப்போன மாதிரி இருக்கிறது. கொஞ்ச நேரத்துக்கு கால் அசைக்கேலாம கஷ்டப்படுவன். தொடர்ந்து மூணு நாலு நாள் போனன் என்டா உடம்பெல்லாம் ஏலாம வந்திடும். பொறவு ஒரு கிழமைக்கு தொழிலுக்கு போக ஏலாமக் கிடப்பன். பொறவு மெல்லமா மெல்லமா தொழில் பாட்ட பாக்குறது…”(விடய ஆய்வு- 01).

“மழை என்டும் சில நேரம் பாக்காம தொழிலுக்குப் போறது தான். கடல்ல இறங்கினா சரி அதோட முதுகுவலி, வாதகுணம், முள்ளந்தண்டு நோவுறது எல்லாம் வந்திடும். இத பாத்துட்டு கொண்டிருந்தா தொழில பாக்கேலாமப் போயிடும். அதோட இந்த கடல் குளிர் காற்றுக்கு வாதப்பிடிப்பு, கால் இழுக்கிற, விறைக்கிற மாதிரி இருக்கும்….”(நேர்காணல்- 02).

Harshani et al, (2017) ஆய்வாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் மீனவர்கள் அதிக நேரம் தொழிலில் ஈடுபடுவதனால் 70% வீதமானோர் உயர் இரத்த அழுத்தம் மற்றும் பாரியளவு விபத்துக்களால் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் அளவிலான காயங்கள் ஏற்படுவதாகவும் குறிப்பிடுகின்ற வேளையில் இந்த ஆய்வில் உட்படுத்தப்பட்ட மீனவர்களுக்கு உயர் இரத்த அழுத்தம் அதிகம் ஏற்படுவதாக குறிப்பிடவில்லை என்பது ஆய்வோடு வேறுபடுவதுடன் ஆபத்தான வேலைகளில் காயங்கள் 83.4% வீதமானோருக்கு ஏற்படுகின்றதானது மேற்குறித்த ஆய்வுடன் ஒத்துப்போகின்றது. மற்றும் ஆய்வில் மீனவர்களுக்கான தொழில்சார் பாதிப்புக்களில் மேலதிகமாக மன அழுத்தம் (5.2%), தலைவலி (0.8%) மற்றும் கால்வாத குணம்/உளைச்சல் (6.4%) இனால் பாதிக்கப்படுவதாக பண்புசார் மற்றும் கணியம்சார் தரவுகளினடியாக நிரூபிக்கப்படுகின்றன. இருப்பினும் Shibaji Mandal et al,(2017) என்னும் ஆய்வாளர்களின் ஆய்வோடு நோக்கும்போது ஆய்வில் மீனவர்களுக்கு அதிகமாக தலைசுற்றல்(75%)மற்றும் அடிக்கடி சுகயீனம்(70%) அடைவதாகவும் ஆய்வினுடைய கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றது. ஆய்வானது இந்த ஆய்வோடு ஒத்துப்போவதாக அமைந்தாலும் Harshani et al, (2017) ஆய்வுடன் வேறுபட்டதாக அமைகின்றது.

அட்டவணை 6.3: மீனவர்கள் மதுபானம் பாவித்தல்

மீனவர்கள் மதுபானம் பாவித்தல்	எண்ணிக்கை	வீதம் (%)
ஆம்	199	90.4
இல்லை	12	9.6
மொத்தம்	**211**	**100.0**

(மூலம்- கள ஆய்வு வினாக்கொத்து-2022)

அட்டவணை 6.3 இன் அடிப்படையில் ஆய்வுக்குட்பட்ட பிரதேசத்தில் மீனவர்களில் பெரும்பாலானோர் 90.4% வீதமானோர் மதுபானம் அருந்துவதாகவும் 9.6% வீதமானோர் மதுபானம் அருந்துவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளதனை காட்டுகின்றது. பண்புசார் தரவுகளின் மூலமாகவும் மீனவர்கள் தொழில் கூடுதலாக நடக்கின்ற காலக்கட்டங்களில் மதுப்பாவனை அதிகமாக இருக்கின்றதோடு, அதனையே தங்கள் வாழ்க்கைப் போக்கில் பழக்கமாக்கிக்கொள்கின்றார்கள் என்பது புலனாகின்றது.

''கள்ளு, சாராயம், பியர் எல்லாம் குடிக்கிறனான் தான். ஒரு பதினைஞ்சி வருஷமா குடிச்சிட்டுத்தான் இருக்கிறன். எனக்கு வருத்தம் எல்லாம் வராது. தொழில் போனா அந்த களைப்புல குடிப்பன். எப்படி பார்த்தாலும் பியர் தான் கூட அடிக்கிறனான். பொறவு தொழில் காராக்களோட, என்ட கூட்டாளிமாரோட கடற்கரையில குடிப்பன். எல்லாம் அப்படியோ பழகிட்டு. மனுஷி ஏசுர தான். இருந்தாலும் பழக்கமாகிட்டு விடேலாம கிடக்கு...''(விடய ஆய்வு-01).

''எனக்கு தொழிலுக்குப் போய் வந்தா கொஞ்சம் உடம்பு களைப்பா இருக்கிறது. அதால பியர், 1/4 போத்தல் சாராயம் வாங்கி குடிக்கிறனான். இனி தொழில் காசு கொஞ்சம் அதிகமாகவும் கிடைச்சுதுன்னா தொழில் காராக்களோட, ப்ரண்ட்ஸ் ஓட சேர்ந்து குடிக்கிறது தான். இந்த கொரோனா நோய் வந்தததுக்கு பொறவு அவ்வளவு பெருசா குடி பக்கம் இறங்குறேல்ல. இப்ப எல்லாம் குடிக்கிறத்த கொஞ்சம் குறைச்சிட்டன் (விடய ஆய்வு- 02).

''குடிக்கிற பழக்கம் இருந்தது. தொழிலுக்கு போன புதுசுல உடம்பு களைப்புக்கு குடிச்சனான்.இப்ப குடிக்கிறேல்ல விட்டுட்டன். குடிக்கிற பழக்கத்த விட்டதுக்கு காரணமே அல்சர் குணமாக்கிட்டு வயுற்றுல. உறைப்பு சாப்பாடுகள் வாய்ல எடுக்கேலாம இருக்கு. அதால குடிக்கிறேல்ல, விட்டுட்டன் (குவிமையக் குழுக்கலந்துரையாடல்-1).

மீனவர்களினுடைய வாழ்க்கைப்பாணியில் மதுப்பாவனை மற்றும் புகைத்தல் பழக்கமானது காணப்படுகின்றது. இவ் பழக்கமானது அவர்களுடைய ஆரோக்கியத்தினை பாதிப்பதாக அமைகின்றது. மீனவர்களுடைய வாழ்க்கையானது அவர்களுடைய தொழிலோடு சம்பந்தப்படுத்தியதாக அமைந்துள்ளது. அந்தவகையில் ஆரோக்கிய வாழ்க்கைமுறை கோட்பாடு(Health Life Style Theory) பொருத்தப்பாடாக அமைகின்றது. தொழிலோடு சம்பந்தமான தனித்துவமாக வாழ்க்கைமுறையினை கொண்டிருக்கும் மீனவர்கள் உடல் உழைப்பு அதிகமாக இருப்பதனால் உடல் களைப்பிற்காக மது மற்றும் புகைத்தல் பாவனையினை தங்களது வாழ்க்கை முறையில் அதிகரித்துக் கொள்கின்றார்கள். இதனால் உடல் நலப் பிரச்சினைகளுக்கு ஆளாகின்றார்கள். மது மற்றும் புத்தல் பழக்கத்தினால் நாள்பட்ட உடல் பிரச்சினைகளில் இதயநோய், இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கு பங்களிப்பதோடு, ஆரோக்கியமற்ற வாழ்க்கையினை வாழ வழிவகுப்பதாக இக்கோட்பாட்டின் கருத்துக்களினூடாக முன்வைக்கப்படுகின்றதோடு, இந்த ஆய்வின் கருத்துக்களுக்கு பொருத்தப்பாடாகவும் அமைகின்றது.

Shibaji Mandal et al, (2017) ஆய்வாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பெரும்பான்மையான மீனவர்களிடையே மது மற்றும் புகைத்தல் நுகர்வானது 81.6% வீதமானோரிடம் அதிகமாகக் காணப்படுவதாகவும், மேலும் அதன் பயன்பாட்டினை தங்களிடையே அதிகரித்துக் கொள்வதாகவும் குறிப்பிடப்பட்டதில், இந்த ஆய்வில் மீனவர்களிடையே

மதுப்பாவனையானது 90.4% வீதமாக காணப்படுகின்றதானது மேற்குறித்த ஆய்வோடு ஒத்துப்போனாலும் ஆய்வின் தரவினை விட மிக அதிகமாகவே ஆய்விலே மதுப்பாவனையின் வீதமானது காணப்படுகின்றது. இதனால் மீனவர்கள் மத்தியில் சுகாதாரப் பிரச்சினைகள் அதிகமாக காணப்படுகின்றது. அந்தவகையில் வயிறு எரிவு, தலைவலி, வாந்திபேதி மற்றும் கை, கால் நடுக்கம் என்பன ஏற்படுகின்றததனை ஆய்வின் முடிவுகள் வெளிப்படுகின்றன.

மீனவர்கள் மத்தியில் மதுப்பாவனை பாவிப்பதனால் ஏற்படுவதனால் சுகாதார பிரச்சினைகளும் உள்ளமையினையும் மற்றும் மதுப்பாவனை தற்பொழுதும் உள்ளமையினை தரவுகளினூடாக உறுதிப்படுத்தப்படுகின்றது.

அட்டவணை 6.4: மீனவர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் (பல் தெரிவுகள்)

ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்	எண்ணிக்கை	வீதம்(%)
தொற்றுநோய்கள்	54	6.5
தொற்றாநோய்கள்	80	9.6
நோயின் தீவிரத்தன்மை	190	22.7
நோய்குறித்த அறிவு	103	12.3
சுகாதார வசதி	24	2.9
நோயினைத் தாங்கிக்கொள்ளும் தன்மை	102	12.2
நோய் தொடர்பான களங்கம்	53	6.3
தனிப்பட்ட சுகாதார நம்பிக்கைகள்	159	19.0
நோய்க்கான செலவினைச் செலுத்தும் இயலுமை	71	8.5
மொத்தம்	**836**	**100.0**

(மூலம்- கள ஆய்வு வினாக்கொத்து-2022)

அட்டவணை 6.4 இன் அடிப்படையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பிரதேசங்களின் மீனவர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளில் அதிகமானோர் நோயின் தீவிரத்தன்மையினாலும்(22.7%) நோய் குறித்த அறிவு(12.3%), நோயினை தாங்கிக்கொள்ளும் தன்மை(12.2%), தனிப்பட்ட சுகாதார நம்பிக்கைகள்(19.0%),நோய் தொடர்பான களங்கம்(6.3%), நோய்க்கான செலவினை தாங்கும் இயலுமை(8.5%), சுகாதார வசதி(2.9%) மற்றும் நோயின் வகை(தொற்றுநோய்(6.5%) மற்றும் தொற்றாநோய்(9.6%) என்பன செல்வாக்கு செலுத்துகின்றது.

பண்புசார் தரவுகளின் மூலமாகவும் மீனவர்களின் ஆரேக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தைகளாக, தனிப்பட்ட சுகாதார நம்பிக்கைகள், கை வைத்தியம் மற்றும் சுய பராமரிப்பு என்பன ல்வாக்கு செலுத்துவதனை காணககூடியதாக உள்ளது.

“எனக்கு இடது பக்கம் கிட்னி பிரச்சினை இருக்கு. அடிக்கடி பாத்ரூம் போனா கடுப்பு, கால்வலி, வகுத்துவலி, தலைக்குத்து எல்லாம் வாறது. டவுன் ஆஸ்பத்திரிக்கு மருந்து செய்யிற. இருந்தாலும் என்ட மகனுக்கும் மனுஷிக்கும் திருப்தியில்ல என்டு டவுன்ல ப்ரைவைட்டா மருந்துகள் எடுத்துக்கொண்டு வாறது. என்னத்த சொல்லுற, எல்லாம் கடவுள் மேல பாரத்த போட்டுட்டு இருக்கிறன்…”(விடய ஆய்வு-04).

“நான் என்னோட வருத்ததுக்கெல்லாம் ஆஸ்பத்திரிய நாடிக்கொண்டு நிக்கிறேல்ல. பொஞ்சாதி தொல்லை பண்ணிக்கொண்டு இருந்தா நெஞ்சடைப்புக்கு கிளினிக்குக்கு போறது. தொழில் கொஞ்சம் நல்லா போச்சு என்டு சொன்னா, சீசன் டைமுகளுல ஆஸ்பத்திரிக்கெல்லாம் போயிக்கொண்டு இருக்க மாட்டன். மனுஷி வீட்ல செஞ்சி தார்ற கை மருந்துகள சாப்பிட்டுக்கொள்ளுறது..”(விடய ஆய்வு-07).

‘‘எனக்கு தேமல் இருக்கு. அதால கீறிம் ஒன்னு மாமாட மகள் பாவிக்கிறது. அதததான் நானும் பாவிச்சிட்டு வாறன். இன்னு வரைக்கும் பிரச்சினை என்டு ஒன்னு இல்ல. ஆஸ்பத்திரி போயிட்டு மருந்து எல்லாம் செஞ்சிக்கிட்டு நிக்கிறேல்ல. வேற மருந்துகள தந்து நோயையும் கூட்டி விட்டுருவாங்க என்டு பயம். அதால இதுக்கெல்லாம் போறேல்ல…’’(நேர்காணல்-05).

‘‘நான் சின்னச் சின்ன உடம்பு வலி வந்தா தாங்கிக்கொள்ளுவன். அதிகமா முடியாமப் போனா மருந்துகள் செய்வன். எங்கட ஊர் ஆஸ்பத்திரிக்கு போமாட்டன். மருந்துகள் ப்ரைவைட்ரா வாங்கி எடுத்துப்போடுவன். சுகமாகும் என்ட நம்பிக்கை தான் (குவிமையக் குழுக்கலந்துரையாடல்-1).

மீனவர்கள் தங்களுடைய ஆரோக்கியத்தை நாடும் நடத்தையில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளினை ஆராய ஆரோக்கியத்தை நாடும் நடத்தை மாதிரியானது பிரயோகிக்கப்பட்டு உள்ளது. இது பரந்த கோட்பாட்டியல் சார் எண்ணக்கருவாகும். சிறந்த ஆரோக்கியம் மற்றும் நோய்களுக்கான பிரச்சினையினை தீர்த்தல் என்பவற்றினை உள்ளடக்கிய இம்மாதிரியானது, ஆரோக்கியத்தை நாடும் நடத்தையை தீர்மானிக்கும் காரணிகளை காண்பதற்கான ஆய்வில் பொருத்தமான கோட்பாட்டியல் சார் எண்ணக்கருவாக ஆரோக்கியத்தை நாடும் நடத்தை(Health Seeking Behaviour Model) காணப்படுகின்றது. ஆரோக்கிய பராமரிப்புக்களை வழிகளைக் கொண்ட அணுகுமுறையானது நோய் அறிகுறி வெளிப்பாடுகள், வைத்தியரை நாடல் போன்றவற்றை உள்ளடக்கிய இந்த எண்ணக்கருவானது மீனவர்களின் ஆரோக்கியத்தை நாடிச் செல்லும் நடத்தைகளுக்கும் பொருத்தப்பாடாக அமைகின்றது. மீனவர்களும் ஆரோக்கியத்தை நாடும் நடத்தை குறித்த வெளிப்பாட்டில் தொழில், கல்வியறிவு, பண அந்தஸ்து மற்றும் நோயினை குணப்படுத்துவதற்கான தளத்தினை நாடல் போன்றவற்றின் அடிப்படையில் மீனவர்களின் ஆரோக்கியத்தை நாடும் நடத்தை அமைந்துள்ளது. ஆகவே ஆரோக்கியத்தை நாடும் நடத்தை(Health Seeking Behaviour Model) கோட்பாட்டு எண்ணக்கருவானது இந்த ஆய்வின் மீனவர்களின் ஆரோக்கியத்தை நாடும் நடத்தைக்கு பொருத்தப்பாடாக அமைகின்றது.

Neethiselvan, et al, (2021) இல் ஆய்வாளர்களினால் மீனவர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தை தொடர்பான ஆய்வில் மீனவர்கள் இரவு முழுவதும் மீன்பிடித்தொழிலை மேற்கொள்வதனால் பெரும்பான்மையோர் ஆரோக்கியம் சார்ந்த பிரச்சினைகளினை எதிர்கொள்வதனால் மீனவர்களில் பெரும்பான்மையோர் அரச மருத்துவமனைகளினை நாடுவதாகவும், தனியார் மருத்துவமனையினை 1/3 பங்கினர் செல்வதாகவும், அதிலும் சிலர் மருந்தககங்களில் மருந்துகளை வாங்கி குடிப்பவர்களாகவும் ஆரோக்கியம் சார்ந்த நடத்தையானது காணப்படுகின்றது. மேற்குறித்த ஆய்வு விடயங்களானது இந்த ஆய்வுடன் ஒத்துப்போகின்றது. மீனவர்கள் தங்களுடைய ஆரோக்கியம் சார்ந்த பிரச்சினைகளுக்கு 76.1% வீதமானோர் அரச மருத்துவமனை நாடுவதாகவும் 23.9% வீதமானோர் தனியார் மருத்துவமனை நாடுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது. இருப்பினும் பண்புசார் தரவுகளினை அடிப்படையில் தனியார் மருந்துகளை அதிகம் நாடுவதாகவும் மற்றும் தாங்களாகவே சுயமாக மருந்துகளை செய்து கொள்ளுதல் மற்றும் பெற்றுக் கொள்வதாகவும் ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்துகின்றன.

அட்டவணை 6.5: சமூக குடித்தொகைக் காரணிகளுக்கும் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளுக்கு இடையிலான இடைத்தொடர்பு – கைவர்க்கச் சோதனை

சமூகக் குடித்தொகைக் காரணிகள்	X^2	Df	p Value
வயது	59.718	36	= 0.008
மதம்	18.999	18	0.392

கல்வி	65.519	36	= 0.002
இனம்	19.877	9	= 0.019
குடியியல் அந்தஸ்து	67.716	36	= 0.001
மாத ஊழிய வருமானம்	46.585	27	= 0.011

(மூலம்- கள ஆய்வு வினாக்கொத்து-2022)

அட்டவணை 6.5 இன்படி சமூக குடித்தொகை காரணிகளுக்கும் மீனவர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தைக்கும் இடையிலான இணைவுத்தொடர்பு காட்டப்படுகின்றது. அந்தவகையில் வயது(p=0.008) ஆகவும் கல்விநிலை(p=0.002) ஆகவும் இனத்துவம்(p=0.019) ஆகவும் குடியியல் அந்தஸ்து(p=0.001) ஆகவும் மாத ஊழிய வருமானம்(p=0.011) ஆகவும் உள்ள புள்ளிவிபரவியலானது சமூகக் குடித்தொகை காரணிகளுக்கும் மீனவர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தைக்கும் குறிப்பிடத்தக்க தொடர்பை காட்டுகின்றது. மதம் (p=0.392) ஆனது இணைவுத்தொடர்பு கொண்டிருக்கவில்லை.

பண்புசார் தரவுகளின் மூலமாகவும் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தை காரணிகளில் குடியியல் அந்தஸ்து மற்றும் கல்விநிலை போன்ற காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

''எங்களப் போல மீன்பிடித்தொழிலாளருக்கு அரசாங்க வேலையாக்கள மாதிரி வருமானம் சொன்ன மாதிரி மாதத்துக்கு மாதம் ஒரே மாதிரி சம்பளம் வாறல்ல. அதால வருத்தம் வந்தாலும் வருமானத்துக்கு ஏத்த மாதிரி மருந்துகள செய்து கொள்ளுறது. சில நேரம் மகன் ப்ரைவைட்டா மருந்தெடுக்கக் கூட்டிட்டு போவார். இல்லாட்டி வீட்டு கைவைத்தியம் தான். வருமானம் தங்கினா வாழ்ற காலம் முழுக்க ப்ரைவைட்டுக்கு தான் மருந்து செய்வனே தவிர ஆஸ்பத்திரிப் பக்கம் போமாட்டன் (விடய ஆய்வு-04).

''இரவுல கடல்ல நிக்கும்போது இல்லாட்டி கடலிலையோ வீட்டிலையோ எனக்கு நித்திரை கொள்ளும் போது மூச்சு திணருறது. கலியாணம் கட்ட முதல் இருந்தது. பொறவு இடையில இல்லாம இருந்தது. பொறவு இப்ப வயசும் போக அதுவும் கொஞ்சம் கொஞ்சமா வாற மாதிரி கிடக்கு மருந்துகள பாத்து செய்ய சொல்லுவாங்க. நான் செய்யிறேல்ல…''(நேர்காணல்-02).

''நான் கூட ஆஸ்பத்திரி மருந்துகள நாடுறதில்ல. இந்த வயசில அலைஞ்சி திரியயேலாது. வீட்ல மனுஷிட கைமருந்துகள செய்வன். அதுவும் இல்லாட்டி பிரைவட் மருந்துக்கு போறனான்..''(குவிமையக் குழுக்கலந்துரையாடல்-1).

இவற்றினை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது, மீனவர்களின் ஆரோக்கியத்தை நாடும் நடத்தையில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளுக்கும் சமூகக் குடித்தொகைக் காரணிகளான, வயது, கல்விநிலை மற்றும் குடியியல் அந்தஸ்து என்பன குறிப்பிடத்தக்க நெருங்கிய தொடர்பைக் காட்டுகின்றது.

முடிவுரை

மீன்பிடித்தொழிலானது தொழில்சார் சுகாதார ஆபத்துக்களை அதிகம் கொண்ட தொழில்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. மீனவர்களுக்கு தொழில்சார் சுகாதாரப் பாதுகாப்புக் குறைவாகவே காணப்படுகின்றது. இதனால் தொழில்சார் சுகாதார ஆபத்துக்களை அதிகம் எதிர்கொள்கின்றனர். மேலும் மீனவர்கள் மத்தியில் இடர்நடத்தைகளும் அதிகமாக காணப்படுகின்றன. இதனால் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையானது அதிகம் காணப்படுகின்றது. அவர்களுக்கான ஆரோக்கியத்துக்கு பாதுகாப்பு வழங்க வேண்டியது அவசியமாக உள்ளது. மீனவர்களின்

தொழில்சார் ஆரோக்கியம், வாழ்க்கைப்பாணி மற்றும் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தை தொடர்பாக இலங்கையின் ஏனைய மீனவக்கிராமங்களிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு மீனவர்களின் தொழில்சார் சுகாதாரப் பாதுகாப்புக்கான செயற்திட்டங்கள் ஆரம்பிக்ககப்பட வேண்டும் என்பதனையும் ஆய்வு வலியுறுத்துகின்றது.

References

1. Annual Report of Population Distribution By Occupation, Kucheveli-(2021). Kucheveli,Trincomalee.
2. Amit Bhondve. (2013) Assessment of Addictions among Fishermen in Southern-East Costal Area of Mumbai, India. IOSR Journal of Dental and Medical Sciences 6 (6):71:79. Available at : https://doi.org (Accessed: 12 october 2022).
3. FAO. (2022) *Fishing Safaty.* Food and Agriculture Organization of the United Nations. Available at : https://www.fao.org/fishing-safety/risk-manafement/occupational-hazards/en/ https://www.fao.org (Accessed: 12 october 2022).
4. Ghosh, Subrata, K., Ahmmed. Mira, K, Ahmed, Istiaque, S, Ahsan., Khabirul, M. and Kamal, M. (2015) Study on the socio-economic conditions of the fishermen in Teknaf. Available at : https://doi.org (Accessed: 11 october 2022).
5. Harshani. S and Abeysena. C. (2017) Selected non-communicable diseases and risk conditions among fishermen in Divisional Secretariat Division of Kalpitiya. *Journal of the College of Community Physicians of Sri Lanka*, *22*(1), 20. Available at: https://doi.org/10.4038/jccpsl.v22i1.8083 (Accessed: 12 october 2022).
6. Neethiselvan, R. S. and P. S. (2021) Assessment of health seeking behaviour among fishermen community in Puducherry. *International Journal Of Community Medicine And Public Health*, *8*(2), 732. Available at : https://doi.org/10.18203/2394-6040.ijcmph20210230 (Accessed: 11 october 2022).
7. Shibaji Mandal1, I. H. (2017) Occupational Health Hazard and Safety Assessment of Fishermen Community in Coastal Zone of Bangladesh. *International Journal of Health Economics and Policy*, *2*(2), 63-71. Available at: https://doi.org/10.11648/j.hep.20170202.14 (Accessed: 11 october 2022).

ஆற்றுகைப் பண்பும் காட்சி நிலையும்: பாரதியின் குயில் பாட்டினை மையமாகக் கொண்ட ஓர் ஆய்வு

கு.ரவிச்சந்திரன்[1], கா.அற்புதன்[2]
[1,2] நுண்கலைத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
[1]ravichandrank@esn.ac.lk, [2]atputhan1902@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இவ்வாய்வானது பாரதியின் குயில் பாட்டில் ஆற்றுகைப் பண்பும் காட்சி நிலையையும் மையமாக கொண்டதாகும். தற்கால நாடக சூழலில் ஆற்றுகை என்ற சொல்லுக்கு வலுவான முக்கியத்துவம் கொடுப்பதனை காணமுடிகின்றது. அந்தவகையில் நாடக ஆற்றுகையாளர்கள், பரிசோதகர்கள், பயிற்றுவிப்பாளர்கள் ஆகியோர் மிக முக்கியத்துவம் கொடுப்பதனை அறியமுடிகின்றது. இவர்கள் ஒரு ஆற்றுகையை உருவாக்குவதற்கு பல வழிகளை கையாளுகின்றனர். பாடலூடாக சிறுகதையூடாக கவிதையூடாக இன்னும் பலவழிகள் ஊடாக மேற்கொள்கின்றனர். அந்தவகையில் பாரதியின் குயில்பாட்டு சிறந்த ஆற்றுகை அம்சங்களை கொண்ட ஒரு கவிதையாக காணப்படுகின்றது. அந்தவகையில், இவ்வாய்வானது குயில்பாட்டில் ஆற்றுகை அம்சங்களை எவ்வாறு கொண்டுள்ளது என்பதை ஆராய்வதுடன் அதனை ஒரு ஆற்றுகை வடிவமாக மேற்கொள்வதற்குரிய வழிமுறைகளையும் உற்று நோக்குவதாக அமைகின்றது. ஒரு ஆற்றுகையில் எவ்வாறான அம்சங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் அந்த அம்சங்களுடைய வகிபங்கு என்ன என்பதனையும் இவ் ஆய்வு உற்று நோக்குகின்றது. இவ் ஆய்வானது ஆற்றுகைக் கோட்பாடுகள் (performance theory) ஆற்றுகைப் பயிற்சிகள், ஆற்றுகைக் கூறுகள், ஆற்றுகை உருவாக்கம் (dramatic composition), ஆற்றுகை அணுகுமுறைகள், (Collaboration) போன்ற விடயங்களை ஆராய்வதாக அமைகின்றது. இவ்வாய்வில் பாரதியின் குயில் பாட்டு கவிதைப் பிரதி முதலாம் நிலைத் தரவாக அமைவதுடன் இதனோடு தொடர்புடைய இணையம், வெளியீடுகள், சஞ்சிகைகள், புத்தகங்கள், பத்திரிகைகள் இரண்டாம் நிலைத் தரவாக அமைகின்றது.

திறவுச் சொற்கள்: ஆற்றுகை, குயில் பாட்டு, கவிதை, காட்சி. நுட்பங்கள்

1. அறிமுகம்

கவிதைகள் இலக்கிய ரீதியாக பல ஆய்வுகள் இடம்பெற்ற போதிலும் ஆற்றுகை ரீதியாக மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. ஆகவே இவ் ஆய்வானது ஆற்றுகைத் தன்மைகள் காட்சி நிலைகள் ரீதியாக ஒரு கவிதையினை ஆய்வு செய்வதாகும். பாரதியினுடைய குயில் பாட்டு எனும் கவிதையானது ஆய்விற்காக தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் அதில் இருக்கின்ற ஆற்றுகைத் தன்மைகளையும், காட்சி நிலைகளையும் ஆய்வு செய்து அதன் ஊடாக புதிய ஆற்றுகை நுணுக்கங்களையும் நுட்பங்களையும் உட்புகுத்தி ஒரு ஆற்றுகையினை உருவாக்குவதாக ஆய்வு அமைகின்றது.

இவ் ஆய்வானது கவிதை ஊடாக ஒரு ஆற்றுகையினை உருவாக்குவதனை விளங்கிக் கொள்வதாக அமைகின்றது. கவிதைகள் தனித்துவமான சிறப்புப் பண்புகளையும், ஒலி அலை அதிர்வுகளையும் கொண்டு கருத்தினை வெளிப்படுத்துவதாகும்.(STEIN, 2010) சொல்லாடல் ஆற்றுகையில் ஓர் அம்சமாக விளங்குவதுடன் அழகியல் தன்மைகளையும் காட்சித் தன்மைகளையும் ஆயுதமாக உட்கொண்டுள்ளது. சொற்கள் ஊடாக கோர்க்கப்படுகின்ற கவிதைகள் ஆற்றுகைக் கவிதைகளாக (performance poetry) உருப்பெறுவதனை சமகாலச் சூழலில் காணமுடிகின்றது. இதே போன்றுதான் பாரதியினுடைய குயில்ப் பாட்டுக் கவிதையானது ஆற்றுகைத் தன்மைகளையும் கட்டமைப்புக்களையும் காட்சி நிலைகளையும் கொண்டு காணப்படுகின்றது.

கவிதைச் சொல்லாடலானது புராதன கிரேக்கத்தில் இருந்து தோன்றுகின்றது. “கிரேக்கப் பாடல் வரிகளின் வடிவமானது சீர்ப்பிரமானங்களையும் சரணங்களையும் உணர்வு ரீதியாக வெளிப்படுத்துவதாகும். (Lynch 2014) கவிதையானது அதன் வாசகர்களுக்கு அழகியல் வாக்கு வன்மையாலும் இலக்கியக் கலவையாலும் இணைகின்றது. ஆற்றுகையில் உடலின் பங்கு,

அசைவுகள் செய்கைகள் நிலைகள் சைகைகள் முக்கியம் பெறுகின்றன. அது மாத்திரமின்றி நாடக (dramatic) அம்சங்களோடு இசை, பாடல், ஆகியவற்றின் பங்கு முக்கியம் பெறுகின்றது.

பாரதியின் குயில் பாட்டு ஒரு அருமையான காதல் காவியமாகும். இக் குயில் பாட்டினூடாக பாரதியினுடைய கற்பனைத் திறனை சிறப்பாக புரிந்து கொள்ள முடியும். காதல் பற்றி நான்குக்கு மேற்பட்ட கவிதைகளான கண்ணன் தன் காதலன் கண்ணம்மா என் காதலி, கண்ணன் என் கந்தன், குயில் பாட்டு போன்ற கவிதைகளை எழுதியிருக்கின்றார். ஆனால் குயில் பாட்டு மிகவும் விசித்திரமானது. இதில் வெளிப்படையாகவே ஆற்றுகைத் தன்மை இளையோடி இருப்பதனை கண்டு கொள்ளமுடிகின்றது. பகுதிகளாக பிரித்து அதனைக் கற்கின்றவர்களுக்கு புலக்காட்சியை இலகுவாக தருகின்ற தன்மையினை இக்கவிதையில் காணமுடிகின்றது. குயில் பாட்டில் கவிஞர் வருகை குயில் பாட்டு குயிலின் காதல் கதை, குயிலும் குரங்கும் குயிலும் மாடும் நான்காம் நாள், பூர்வ ஜென்ம கதை கூறல் என பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

இதில் "காதல் காதல் காதல் காதல் இல்லையேல் சாதல் சாதல்" என்கின்ற கவிதை வரியானது கவிதைக்கு உச்ச நாடியாக காணப்படுகின்றமையும் கவிதைக்கு பின்னணி வரிகளாகவும் அமைந்துள்ளமை முக்கியமானதாகும். உலகப் பேரிலக்கியமான ரோமியோ ஜிலியட் என்கின்ற ஆங்கில காதல் கதையை ஒத்த ஒரு காதல் காவியமாக குயில் பாட்டு காணப்படுகின்றது.

ஸேக்பியருடைய வாசகமான 'the course of true love never run smooth' அதாவது உண்மைக் காதல் எப்போதும் நேரடியாகச் செல்லாது என்பதைப் போன்றே பாரதியின் குயில் பாட்டும் ஒரு காதல் காவியமாக அமைந்து விடுகின்றது. கவிஞனின் கற்பனை ஆற்றலால் ஒரு படைப்பு உருவாக்கப்படும் போது கவிஞன் உள்ளத்திலே உறைந்து கிடக்கும் அதற்கு காரணமாக அமையலாம். குயில் ஒன்றின் இன்னிசையைக் கேட்ட புலவன் உள்ளத்தில் என்றோ ஆளப் புதைந்த உணர்வலை மேற்கிளம்புகின்றது. அது கற்பனையாக படர்கின்றது. தொடர் கதையாக எழுகின்றது. "பாரதியின் குயில் பாட்டின் உருவாக்கத்திற்கு ஆங்கிலக் கவிஞன் ஹிட்சின் வானம் பாடி என்ற கவிதை காரணமாக அமைந்தது என்று கூறப்படுகின்றது." (கலாநிதி மனோன் மணி சன்முகதாஸ், பக் 21)

குயில் பாட்டு

ஒரு நாள் காலை நேரம் ஒரு மாஞ்சோலை அந்த இடத்திற்கு பாரதி வருகின்றான். அவர் வந்த நாள் அந்த சோலைக்கு வேடர்கள் வராத நாள் அன்று பேடைக் குயில் ஒன்று மாமரத்தின் வான் கிளையில் வீற்றிருந்து பாடுகின்றது. அதை ஆண்குயில் எல்லாம் கேட்டு உள்ளத்தில் காதல் அனல் பெருக்கின்றன. இவ்வாறு கதை தொடர்ந்து செல்ல குயில் இவ்வாறு பாடுகின்றது.

"குக்குக்கூ குக்குக்கூ குக்குக்கூ
குக்குக்கூ குக்குக்கூ குக்குக்கூ"
இதனை பாரதி
"காதல் காதல் காதல்
காதல் போயின் சாதல் சாதல் சாதல்" என விளிக்கின்றார்.

தொடர்ந்து பாரதிக்கும் குயிலுக்குமான உரையாடல் இடம்பெறுகின்றது. காதல் கதையை பாரதி கேட்கின்றார். இருந்தும் குயில் மறுக்கின்றது. இது ஆற்றுகைத் தன்மை உடைய உரையாடலாக மேலெழுகின்றது. தொடரந்து இரண்டாம் நாள் குரங்குடன் காதல் நாடகம், மூன்றாம் நாள், மாட்டுடன் காதல் நாடகம் நான்காம் நாள் மாட்டுடன் காதல் நாடகம் தொடர்ந்து முன்னைய ஜென்மக் கதையினைக் கூறுதல் என்று பல களங்களைக் கொண்டு கவிதை அமர்ந்திருக்கின்றது. ஆற்றுகைத் தன்மைக்கு வலுச்சேர்க்கின்றது.

3. ஆய்வுப் பிரச்சினை

கவிதைகளை அடிப்படையாகக் கொண்டு ஆற்றுகைகளை உருவாக்குவது சமகாலத்து உத்திகளில் ஒன்றாக காணப்படுகின்ற அதே வேளை இலங்கைத் தமிழ் நாடக அரங்கில் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. ஏனெனில் இதனுடைய ஆற்றுகை நுட்பங்களை, நுணுக்கங்களை, பயிற்சிகளை விளங்கிக் கொள்வதில் உள்ள சிக்கலாகும். கவிதை வரிகளை ஆற்றுகைக்கு கொண்டுவரும் போது பார்வையாளருடைய பங்கு முக்கியம் பெறுகின்றது. இதனூடாக இன்னொரு வடிவத்தினை கவிதை பெறுகின்றது. ஆகவே இவ் ஆய்வானது செயற்திற பயிற்சிகள் நுட்பங்கள் அணுகுமுறைகள் காட்சி நிலைகள் போன்றவற்றை உருவாக்குவதாகும்.

4. ஆய்வு நோக்கம்

1. ஆற்றுகை நுட்பங்களை கவிதையில் பிரயோகித்தல். (dramatic performance techniques)
2. கவிதையில் முக்கிய ஆற்றுகைக் காரணிகளை ஆராய்தல்.
3. கவிதையில் காட்சி நிலையையும் அழகியல் தன்மையினையும் பார்வையாளர்களின் கட்புலத்துக்கு கொண்டுவரல்.
4. இலக்கிய ஆய்வுக்கப்பால் ஆற்றுகை ஆய்வினை மேற்கொள்ளல்

5. ஆய்வின் கருதுகோள்

குறிப்பிட்ட ஆற்றுகை அம்சங்கள், நுட்பங்களை பிரயோகிப்பதனால் நேரடிக் காட்சிக்கு ஒரு கவிதையினை கொண்டுவர முடியும்.

கவிதையில் கவிஞனின் கற்பனைகளை காட்சி ஊடாக வெளிப்படுத்தும் போது அதன் தன்மை மாறுவதன் ஊடாக கவிதைக்கான புது வடிவத்தினை ஆற்றுகை ஊடாக பெறமுடியும்.

6. ஆய்வின் முக்கியத்துவம்

இவ் ஆய்வானது கவிதைகள், சொல்லாடல்களைக் கொண்டு ஆற்றுகைகளை உருவாக்க உறுதுணையாக அமையும்.

தொடர்ந்து ஆற்றுகை நுட்பங்களை கொண்டு கவிதைகளை ஆற்றுகையாக மீள் உருவாக்கம் செய்தல்.

புதுக் கவிதைகளை படைக்கும் கவிஞர்கள் ஆற்றுகை நோக்கில் கவிதைகளை படைக்க உதவும்.

7. இலக்கிய ஆய்வு

Finnegan (1977) கூற்றின் படி ஆற்றுகையானது மிகவும் தனித்துவமானதும். நுட்பமானதுமாக வாய்மொழி இலக்கியங்களில் (oral literature) காணப்படுகிறது. அவர் குறிப்பிடுவதாவது. கவிதையானது அதனுடைய தொடர் நிலையினை ஆற்றுகையூடாக அடைகின்றது. ஆற்றுகையில் முக்கியமான ஒரு சில அம்சங்களில் ஆற்றுகையாளனுடைய ஆளுமை, சாமர்த்தியம், அதேபோன்று பார்வையாளருடைய பங்குநிலை, கட்டமைப்பு என்பன வாய்மொழி கலை வடிவத்தில் செல்வாக்கு செலுத்துகின்றது.

இவ் ஆய்வானது எவ்வாறு ஆற்றுகை நுட்பங்கள் நுணுக்கங்கள், அம்சங்கள் கவிதையின் விபரிப்பை மேம்படுத்துகின்றது. என்பதோடு அழகியல் பெறுமானம் (aesthetic value) மற்றும் ஆற்றுகையினுடைய தரம் (quality of performance) என்பவற்றை ஆய்வதாக அமைகின்றது.

Wanjiku and karegamutahi (1998) ஆகியோரின் கருத்துப்படி ஆற்றுகை மிகவும் அர்த்தமுடையதாக வாய்மொழி இலக்கியங்களில் காணப்படுகின்றது. இவர்கள் கலாசார சூழலினை ஆற்றுகையினை விளங்கிக் கொள்வதனுடாக அறியமுற்படுகின்றனர்.

okpewho(1979) கவியினை ஆற்றுகையாக மேற்கொள்ளும் போது ஆற்றுகையாளனையும் பார்வையாளனையும் கூடுதலான உள்ளுணர்வுக்கு கொண்டு வருகின்றது. இங்கு மீண்டும் செய்தல் புதிய பரிணாமத்துக்கூடாக புதிய அனுபவங்களை வாசயகர்களுக்கு அல்லது பார்வையாளர்களுக்கு கொடுக்கின்றது.

pfeiletr(2003) கூற்றின்படி கவியினை பரிமாற்ற முறைக்கு(mode of transmission) ஏற்ப வகைப்படுத்த முடியும் என்கிறார். அதாவது the pagers (கவிஞன்) இங்கு யாரால் கவிதை எழுதப்படுகிறதோ அவரையே குறிக்கின்றது. இந்தக் கவிதை முற்றிலும் அதனுடைய வாசகர்களுக்கு பரிமாற்றப்படுகின்றது.

the stagers இது எழுதப்பட்ட கவிதையினை ஆற்றுகை செய்பவர்களை குறிக்கின்றது. இவர்கள் சொல்லாடல்களை காட்சியூடாக கொண்டுவந்து ஆற்றுகைகளை மேற்கொள்பவர்களாக இருப்பர். Recites chants அல்லது singing ஊடாக தமது உடல் அசைவுகளை வெளிக்கொணவர்.

இவ் ஆய்வானது (theory) கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆற்றுகைக் கோட்பாட்டினை கவிதையில் பிரயோகிப்பதோடு ஆற்றுகை நுட்பங்களையும் நுணுக்கங்களையும் பகுப்பாய்வு செய்வதாகும்.

Richard schechner (2003) அவருடைய ஆற்றுகைக் கோட்பாடு இங்கு பரிசோதிக்கப்படுகின்றது. இவருடைய கூற்றின்படி செயல்திறன் மாதிரி நாடகப் பிரதிக்கு அப்பால் ஆற்றுகைப் பிரதி முக்கியமானதாகவும் அங்கு ஆற்றுகை அழகியல் உட்படுத்தப்படும் என விளக்குகின்றார். ஆற்றுகை எனும் போது அது திரவம் போன்றது. அதனை பயன்படுத்துபவர்கள் எவ்வாறான பாத்திரங்களை பயன்படுத்துகிறர்களோ அதற்கேற்ப அதன் தன்மை மாறுபடும்.

Richard schechner (2003) ஆற்றுகை எனும் சொல்லானது பரந்துபட்டது என்கின்றார். அதாவது மனித செயற்பாடுகள்: அன்றாட வாழ்க்கை, விளையாட்டு, நிகழ்வுகள், சடங்குகள் போன்றவற்றை

உதாரணமாக்குகின்றார். ஆற்றுகையானது தெரிந்து செய்கின்ற செயற்பாடுகள், இடம், பார்வையாளர்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றது என்கிறார். இருந்தாலும் ஆற்றுகை வடிவமானது அரங்கச் செயல்களில் இருந்து மாறுபடுவதாக குறிப்பிடுகின்றார். நாடகம் நடிகனால் மேடையில் நிகழ்த்தப்படுகின்றது. (ப.13)

Schechner ஆற்றுகை அம்சங்களாக ஆற்றுகையாளன் காட்சி (scenery), உடை (costume) ஒளி அமைப்பு, சத்தம்(sound), இசை மேடைப் பொருட்கள் போன்ற இன்னும் பலவற்றை குறிப்பிடுகின்றார். இவ் ஆய்வானது மேற்குறிப்பிட்ட அம்சங்கள் ஊடாக ஆற்றுகை வடிவத்தினை கவியூடாக பெறுவதாகும்.

Elirozik(2010) கருத்துப்படி ஆற்றுகையாளனுடைய உடலானது Non verbal acts, symbolic non verbal acts, hand gestures, உருவக ரீதியான பாத்திரம் ஊடாக ஆற்றுகையினை நகர்த்தி செல்லமுடியும் என்கிறார். ஆகவே இங்கு செயற்பாட்டின் ஊடாக கவிதையினை இரசிப்பாகும்.

8. ஆற்றுகைப் பண்பும் காட்சி நிலையும்

ஒரு ஆற்றுகையில் பல்வேறுபட்ட அம்சங்கள் முக்கியம் பெறுகின்றன. ஆற்கை அம்சங்கள் வலுப்பெறும்போதே ஒரு சிறந்த ஆற்றுகை வெளிக்கொணரப்படுகின்றது. அந்தவகையில் ஆற்றுகைக்கு கரு முக்கியமானதாகும். அந்தக் கருவானது, நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆற்றுகையில் வெளிப்படமுடியும் என்று கூறப்படுகின்றது. கதை எனும் போது ஒரு ஆற்றுகையில் தற்காலச்சூழலில் அதனுடைய தன்மை மாறுபட்டுச் செல்கின்றமையினை உணர முடிகின்றது. ஒரு ஆற்றுகையில் பல கதைகளை கொண்டு நிகழ்த்துகின்ற தன்மையினையும் பார்க்கமுடிகின்றது.

காலம். இடம். செயல் என்பன ஆற்றுகைக்கு இன்றியமையாததாகும். மேற்கூறப்பட்ட விடையங்களை தெளிவாக பார்வையாளர்களுக்கு கொடுக்கும் போது, அதனைப் புரிந்து கொள்ளுகின்ற நிலையினை பார்வையாளர்கள் பெறுகின்றனர். ஆற்றுகைக் காட்சி எனும் போது ஆற்றுகைக்கு வலுச் சேர்க்கும் ஒன்றாக காணப்படுகின்றது. இந்தக் காட்சிகள் மாறுகின்ற போது ஆற்றுகைத் தன்மையும் மாறுவதன் ஊடாக ஒரு ஆரோக்கியமான ஆற்றுகையை பெறமுடிகின்றது.

ஆற்றுகையில் உரையாடல் என்பது ஆற்றுகைக்கு வலுச் சேர்க்கும் ஒன்றாக காணப்படுகின்றது. ஆற்றுகையாளனுடைய உடல் மொழி உரையாடல் ஆற்றுகையை பரிணாமம் அடையச் செய்வதாக காணப்படுகின்றது. புத்தாக்கம் ஆற்றுகையில் முக்கிய வகிபங்கு பெறுகின்றது. ஒரு ஆற்றுகையாளன் புத்தாக்கம் ஊடாகவே புதிய படைப்பினை உருவாக்குகின்றான். அது மாத்திரமின்றி பாத்திரங்கள் ஆற்றுகையில் முக்கியம் பெறுகின்றன. பெயர் குறிப்பிடப்பட்ட பாத்திரங்களாகவோ அல்லது பெயர் குறிப்பிடப்படாத பொது பாத்திரங்களாகவோ ஒரு ஆற்றுகையினை உருவாக்க முடியும்.

Dean & Carra (1974) கருத்துப்படி The aim of technique is to make an idea or subject matter simpler, more powerful, more convincing, and more moving, as well as to communicate its

mood to the audience or listener by combining and expressing the elements of art that will organize and express its inherent mood qualities.

ஆற்றுகையானது கதை, கதை ஊடாக காட்சி, காட்சி ஊடாக உரையாடல், உரையாடல் ஊடாக செய்கை, செய்கை ஊடாக கருத்தை தெளிவு படுத்துவது முக்கியமானதாகும். ஆற்றுகையானது சைகைகள் அசைவுகளின் வெளிப்பாட்டு வடிவமாகும். weistein (2010) இது உடல் சொல் (physical text p.7) என அழைக்கப்படுகின்றது. ஆத மாத்திரமின்றி குரல், ஓசை, வாய்மொழி இல்லாத குறிப்புக்கள் ஆகியன ஆற்றுகையினை வெளிப்படுத்துவதில் பங்குவகிக்கின்றன. இவை அனைத்தும் பார்வையாளர்களுக்கு ஆற்றுகை பற்றிய விபரிப்பை கொடுக்க உதவி புரிகின்றன.

கவிதையினை ஆற்றுகை செய்யும் போது ஆற்றுகையாளன் நேடிக் காட்சி ஊடாக சொல்லாடல்களை விபரிக்கின்றான். இந்தச் சொல்லாடல்கள் ஆற்றுகையில் இன்னொரு பிரதிநித்துவமாக விளங்குகின்றது. schechner (1983) கூற்றுப்படி ஆற்றுகை செய்கையை குறிப்பதாக விளக்குகின்றார். அதாவது ஆற்றுகையினுடைய அர்த்தம் ஏதோ ஒன்றை மேற்கொள்ளுதல் என்கின்றார். ஆற்றுகை எனும் சொல்லானது கலை நயமான (artistic events) அதாவது the performance of a play, நடனம், கவிதை என பலவற்றை குறிப்பிடுகின்றார். ஆனால் நவீனம் உள்ளடக்குவதாவது பரந்த எல்லை கொண்ட செயற்பாடுகள் என்கின்றார். இது செயற்பாடுகளின் ஒத்திகைக் காட்சி அதே போன்று முன் தீர்மானிக்கப்பட்ட பழக்கவழக்கங்களினுடைய வடிவம், இலக்கியம், சமூகத் தொடர்பாடல் போன்றன உள்ளடக்கப்படுகின்றது.

woolger & picker(2009) கூற்றில் ஆற்றுகையானது பதிலளிக்கும் சொல்லாக பல ஆற்றுகைக் கோட்பாட்டாளர்கள் கூறுவதை வரையறுக்கின்றனர். ஏனெனில் பல தரப்பட்ட வகையில் வேறுபட்ட துறைகளிலும் இது பயன்படுத்தப்படுவதாக கூறுகின்றனர்.

ஆற்றுகை அம்சங்கள்

Raymond Williams (2008) கருத்துப்படி நாடகமானது நான்கு வகை அம்சங்களை கொண்டதாக விளக்குகின்றார். உரை (including singing dialog) அசைவுகள் (including gesticulation, dance, physical enactment) design (including scene, scenery, costume,and effects lighting) sound (including music, sound effect) இவை அனைத்திலும் ஆற்றுகை வெளிப்பாடு இருந்தாலும் இலக்கியங்களில் இவைகளில் மாறுபாடு உண்டு என விளக்குகின்றார்.

Langhan (1983) அவர்களின் கருத்துப்படி நாடகத்தில் இரண்டு அம்சங்களை வரவேற்கின்றார். இலக்கியம் சார்ந்தும் நாடம் சார்ந்தும் வரையறுக்கின்றார். இலக்கியத்தினை இலக்கியரீதியில் வாசிப்பதாலோ ஆய்வு செய்வதாலோ அதனுடைய ஆற்றுகைத் தன்மையினை கண்டுபிடிக்க முடியாது. ஆற்றுகைத் தன்மை நோக்கில் வாசிப்பதனூடாக ஒரு இலக்கியத்தினை அல்லது கவிதையினை பாடலினை வாசிக்கும் போதுதான் அதனை ஆற்றுகைத் தன்மைக்கு கொண்டுவர

முடியும். ஆகவே குயில் பாட்டில் மேற் கூறப்பட்ட பல அம்சங்கள் ஆற்றுகைத் தன்மையாக விபரிக்க பயன்படுத்தப்படுகின்றன.

Klich and Scheer (2012) முக்கிய ஆற்றுகைப் பண்புகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றார். ஆற்றுகை உடலினை (performance body) கையாளுதல். இடத்தினைக் (space) கையாளுதல் ஆற்றுகையாளனுக்கும் பார்வையாளனுக்குமான உறவு நிலையினை விஸ்தரித்தல்.

ஆற்றுகையாளன் - நடிகன் ஒரு நடிகன் அல்லது ஆற்றுகையாளன் ஒரு பாத்திரத்தினை ஆற்றுகை செய்யும் ஒரு இடத்தில் அல்லது அரங்கில் மேற்கொள்கின்றார். இவரே நாடக ஆற்றுகைக்கும் அதனுடைய விஸ்தரிப்புக்கும் பொறுப்பானவர்களாவர்.

பார்வையாளர்கள் - அரங்க வடிவத்தினுடைய செயல் திறனுடைய விளங்கிக் கொள்வதானால் பார்வையாளனுடைய அடிப்படை உளவியலை புரிந்து கொள்வது முக்கியமானதாகும். அரங்க வடிவமானது ஆற்றுகையாளனதும் பார்வையாளனதும் சிந்தனைகளின் தொடர்பாடலாகும். காட்சி தனிக்கை சொல்லாடல் தொடர்பாடல் சிந்தனை வெளிப்பாடு என்பன உடலில் வெளிப்படல் என்பது பார்வையாளனுக்கு ஒரு அனுபவத்தினையும் விபரிப்பினையும் தனக்குள்ளே தூண்டுவதாக குயில்பாட்டு அமைகின்றது.

Vocal skills - குரல் நான்கு வகை கூறுகளைக் கொண்டதாக யனயஅ (1986) விளக்குகிறார். அதாவது (quality, pitch, strength and tempo) இந்த நான்கு அம்சங்களை பயன்படுத்தும் போது மாறுபாடுகளை ஆற்றுகையில் உருவாக்க முடியும் என்கின்றார். ஒலி ஓசை ஊடாக உணர்வு நிலைகளில் அசைவுகளை மேற்கொள்ள முடியும் இத்தன்மை பாரதியின் குயில் பாட்டில் ஆராயப்படுகின்றது.

Stage setting - இது artistic and creative process சொல்லை காட்சி நிலையாக மாற்ற உதவுகின்றது. bracklt and Ball (2014) கூற்றில் மேடை அமைப்பு பல வகையில் துணை புரிகின்றது. இது இடத்திற்கான (floor plan) திட்டத்தினையும் அசைவு composition பாத்திரப் பண்பு போன்ற பலவற்றுக்கும் வாய்ப்பளிக்கின்றது. அது மாத்திரமின்றி உணர்வு சூழல் போன்றவற்றை உருவாக்குகின்றது.

ஒளி அமைப்பு பல ஆய்வுகள் ஒளி அமைப்பு பற்றிக் கூறுகின்றது. Wolf and Block (ப.105) கூற்றில் atmosphere intenensity> colour> distribution and moments ஊடாக வெளிப்படுத்துவதாக அமைகின்றது. Domsa Asomsa (2006) நான்கு வகையாக ஒளி அமைப்பை வரையறுக்கின்றார். ஆற்றுகையின் தகைமையினை அளவிடுவது உளவியலை பார்வையாளனுக்கு மாற்றத்தினை கொண்டு வருவது selective visuality composition, மனநிலைக்கு வலுவூட்டல் என்கின்றார்.

sound and music - Archor,Gendiriaqn and Hood அவர்களின் கூற்றுப்படி நான்கு வகையாக விளக்குகின்றார். framing effect - பார்வையாளருக்கு ஆரம்ப முடிவைக் கூறல், underscoring

இது பின்னணி இசைக்கு மிகவும் துணை புரிகின்றது. transitional sound இது காட்சி மாற்றத்திற்கு அல்லது அசைவுக்கு துணைபுரிகின்றது. அது மாத்திரமின்றி இடத்தினையும் காலத்தினையும் மாற்றுவற்கு உதவுகின்றது. அதே போன்று specific cues ஆகவும் பயன்படுத்தப் படுகின்றது.

குயில் பாட்டில் ஆற்றுகை பண்பும் காட்சி நிலையும்

குயில் பாட்டானது தெளிவான கருவினைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளதுடன் ஆற்றுகைக்கு முக்கியமான காலம், இடம், செயல் என்பன முற்று முழுதாக மேற்கிளம்புகின்றது. **காலம்**- ஒரு நாள் காலை நேரம் செந்தமிழ் புதுவை திருநகரில் மேற்கே ஒரு மாஞ்சேலை என கவி ஆரம்பிப்பது காலத்தினை குறிக்கும் ஒரு உதாரணமாகக் கொள்ளலாம். **இடம்**- ஒரு செயலினை செய்வதற்கு உகந்ததாக இருத்தல் வேண்டும் இங்கு principle of organization of the space கவிதையில் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. அதாவது set, props and levels பாட்டில் பின்னிக் கிடக்கின்றது. **செயல்-** செயலின் முக்கிய அம்சங்களான action, gesture, position இடம் பெறுகின்றன. இவை single or multiples ஆகவே அமையலாம். ஆகவே இதனை இங்கு காணமுடிகிறது.

காட்சி - குயில் பாட்டில் நான்கிற்கு மேற்பட்ட காட்சிகளை கவிஞர் விளக்குகிறார். காட்சிகள் ஆற்றுகைக்கு மிக முக்கிய பங்கினைக் கொடுக்கின்றது. 1ம் நாள், 2ம் நாள், 3ம் நாள், 4ம் நாள் என காட்சிகள் நீண்டு செல்கின்றமையினை காணமுடிகின்றது. **உரையாடல்-** இங்கு கவிஞருக்கும் குயிலுக்குமான உரையாடல், குயிலுக்கும் குரங்குக்குமான உரையாடல், மாட்டுக்கும் குயிலுக்குமான உரையாடல், என உரையாடல்கள் நீண்டு செல்வதனைக்காணலாம். **படைப்பாற்றல்-** *குக்குக்கூ குக்குக்கூ குக்குக்கூ குக்குக்கூ குக்குக்கூ குக்குக்கூ"* இதனை பாரதி *"காதல் காதல் காதல் காதல் போயின் சாதல் சாதல் சாதல்"* என விளிக்கின்றமையினை குறிப்பிடலாம்.

பாத்திரங்கள்- பாரதி உட்பட பல பாத்திங்கள் குயில் பாட்டில் முக்கியம் பெறுகின்றது. குயில், மாடு, குரங்கு, இளவரசன் போன்ற இன்னும் சில பாத்திரங்களைக் குறிப்பிடலாம். **கதை சொல்லுதல்-(the arc extend story)-** கதை செல்லும் முறையினை அழகாக பாரதி கொணர்ந்து இருக்கின்றார். அதனை உரையாடலுடாக, காட்சியுடாக, பாடலூடாக, மேலும் action, gesture, movements and positions ஊடாக நோக்கலாம். அத்தோடு **Genre/style** எனும் போது Tragicomedy style இல் அமையப்பெற்றுள்ளமையினை காணமுடிகிறது.

Plot- the basic story line of the play அதாவது ஒழுங்கமைப்பு என குறிப்பிடலாம். What is happening, how is it happening? என்ற வினாக்களோடு தெபடர்புபட்டவையாகும். இவை குயில் பாட்டில் சிறந்து விளங்குவதனைக் காணமுடிகின்றது. **Scenograph**y-The term Scenography is always referred to the performance of the space and design that include all the visual elements of theatre: sets, lights, props, performance space, etc. It emphasizes on the actor's physical

behavior in the space and their eventual interactions with these elements. மேற்குறிப்பிட்ட விடங்களை பயன்படுத்தும் தன்மையில் கவிதை அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது

அதே போன்று **Variation, movements, reaction, imagination, interpretation, symbols** என ஆற்றுகைக்கு தேவையான பல விடங்கள் பாரதியின் குயில் பாட்டில் பொதிந்துள்ளமையினைக் காணமுடிகின்றது. தொடர்ந்து **structure of the play**- rising action, turning point, falling action and conflict, suspense போன்றவற்றினையும் **technical elements** என்று சொல்லப்படுகின்ற scenery, costume, props, sound, light, makeup போன்றவற்றினையும் குயில் பாட்டில் ஊட்புகுத்ததும் வகையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து **performance and performer elements** - **acting**-action/gesture, **character motivation**- reason for character, **character analysis-** character's behavior போன்று **empathy**- the capacity to relate to the feeling of another போன்ற ஆற்றுகை அம்சங்களையும் குயில் பாட்டில் காணமுடிகின்றது.

முடிவுரை

இவ் ஆய்வானது குயில் பாட்டில் ஆற்றுகைப் பண்பையும் காட்சி நிலையையும் ஆற்றுகை அம்சங்கள் ஊடாகவும் நுட்பங்கள் ஊடாகவும் நுணுக்கங்கள் ஊடாகவும் சொல்லாடல்களை காட்சி நிலைக்கு கொண்டு வந்து புதிய பிரதிநித்துவத்தினை கவிதைக்கு வழங்குவது மாத்திரமின்றி பார்வையாளர்களுக்கும் புதிய அனுபவத்தினை கொடுப்பதாக அமைகின்றது. மேற்கூறப்பட்ட அம்சங்கள் கவிதையில் பிரயோகிக்கின்ற போது அது ஒரு ஆற்றுகைக்கான முழு வடிவத்தினை பெறுவதற்கான உத்திகளை இவ் ஆய்வில் அணுக முடிகிறது. பாரதியின் குயில் பாட்டு அடிப்படையில் ஆற்றுகைத் தன்மை கொண்டதாகவே காணப்படுகின்றது. ஆற்றுகைப் பண்பும் காட்சி நிலையும் குயில் பாட்டில் புதைந்து கிடக்கின்றது. எனவே இவ் ஆய்வானது வரிகளிலுள்ள கவிதைகளை உடல் ஊடாகவும் இடம் ஊடாகவும் காட்சி ஊடாகவும் உரையாடல் ஊடாகவும் செய்கை ஊடாகவும் பாடல் ஊடாகவும் மேடை அமைப்பு ஊடாகவும் மேலும் பல அம்சங்கள் ஊடாகவும் வெளிக்கொணர்வதாக அமைகின்றது.

உசாத்துணை

1. Pfeiler, M. (2003). Sound of Poetry: Contemporary American Performance Poets. Gunter: Nar Verlong
2. Schechner, R. (2003). *Performance Theory* (3rd ed.), London, UK & New York, USA: Routledge
3. Stein, D. J. (2010). *Poetry Into Song: Performance and Analysis of Lieder*. UK: Oxford University Press.
4. Asomba, Domba (2006). *Fundamentals of Stage Lighting*. Enugu,Nigeria ABIC Books and Equip. Ltd.
5. Bresler L., Latta M.M & Weinstein S. (2010). 'A Unified Poet Alliance.' The personal and social outcomes of youth spoken word poetry programing. International Journal of Education & Arts, 11(2), 25
6. Schechner, R. (1985). *Between Theater and Anthropology*. Philadelphia, USA : University of Pennsylvania Press
7. Rozik, E. (2010). *Generating Theatre Meaning: A Theory and Methodology of Performance Analysis*. Brighton, UK: Sussex Academic Press.
8. Okpewho, I. (1990). *The Oral Performance in Africa*. Ibadan, NIGERIA: Spectrum Books Limited.
9. Dean,A & Carra,L.(1974). Fundamemtals of play directing, New York: Holt. Rinehart
10. மனோன் மணி சன்முகதாஸ்.(2009). பாரதியின் கன்னிக்குயிலின் இன்னிசைப் பாட்டு, கொழும்பு-சென்னை: குமரன் புத்தக இல்லம்

தமிழர் பாரம்பரிய தோல்வாத்தியங்களான மத்தளம், பறை, உடுக்கை உருவாக்க முறைமையும் அதன் தொழிநுட்பங்களும் - ஓர் ஆய்வு

கு.ரவிச்சந்திரன்,[1] சு.சஞ்சீபன்,[2]
[1,2]நுண்கலைத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
[1]ravichandrank@esn.ac.lk, [2]sanseepan567@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

மனித சமூகத்தில் காணப்படுகின்ற இசைக் கருவிகளுள் தோல்வாத்தியங்கள் மிகத் தொன்மையானது. உலகில் எல்லாச் சமூகங்களிலும் காணப்படும் ஒன்றாகவும் இது காணப்படுகின்றது. மிருகங்களின் தோல், மரக்குற்றி போன்ற பொருட்களை இணைத்து வெவ்வேறு வடிவங்களில் இத்தோல்வாத்தியங்கள் உருவாக்கப்படுகின்றன. உலகில் பண்டைய காலத்தில் இருந்து சமகாலம் வரை பல சமூக, இனக்குழுமங்களால் பயன்படுத்தப்படும் பொதுவான இசைக் கருவிகளாகத் தோல் வாத்தியங்கள் காணப்படுகின்றன. இவை இடத்திற்கு இடம், சமூகத்திற்குச் சமூகம் அதன் அமைப்பிலும் அதன் இசை வெளிப்படுத்துகை முறையிலும் வேறுபாடுகள் உடையனவாகக் காணப்படுகின்றன. தமிழர் வாழும் பிரதேசங்களில் அதிகளவான தோல்வாத்தியங்கள் சடங்குகளை மையமாகக் கொண்டும், ஆற்றுகைகளை மையமாகக் கொண்டும், பொழுதுபோக்கு நிகழ்வுகளை மையமாகக் கொண்டும் பயில்நிலையில் இன்றுவரை பயன்பாட்டில் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். உள்நாட்டு யுத்தம் மற்றும் சமூக பண்பாட்டு ஊடாட்டங்களின் தாக்கம், நகர மயமாக்கம், புதிய தொழிநுட்ப கருவிகளின் வருகை போன்ற பிற காரணிகளின் தாக்கம் ஓர் பாரம்பரிய தொழில்முறையான தோல்வாத்திய கருவிகளின் உருவாக்கச் செயற்பாட்டில் மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது என்ற கருதுகோளை அடிப்படையாகக் கொண்டு ஓர் பண்புசார் ஆய்வாக இதனை மேற்கொண்டும் விபரண முறையியலும் அமையப்பெற்று ஓர் பங்குபற்றுதல் முறையினூடாக விபரிக்கப்படுகின்றது. ஆய்வினூடாக நீண்டகால, குறுகியகால நோக்கங்கள் நிறைவேற்றப்படுகின்றது. ஆரம்ப காலத்தில் இருந்து தற்காலம் வரை தோல் வாத்திய உற்பத்தி தொழில்நுட்பமானது எவ்வாறு காணப்பட்டது என்பதனை கண்டுகொள்வதும், பாரம்பரியமான முறையில் அமைந்த பட்டறை முறைமையின் மூலம் அதன் உருவாக்கமுறையை கண்டுகொள்ளுதலும், தோல்வாத்தியங்கள் உருவாக்கப்படும் முறை தொடர்பான நுணுக்கங்களைக் கண்டுகொள்வதும் அதனை பிறர் அறியச் செய்வதும் இவ்வாய்வின் ஊடாக நிறைவேற்றப்படுகின்றது. இத்தகைய பயிற்சிகளையும் நுட்பங்களையும் கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலக பிரிவில் உள்ள குடும்பிமலைப் பிரதேசத்தில் வசிக்கும் தொழில்முறைக் கலைஞர் பொன்னுச்சாமி சுந்தரமூர்த்தி அவர்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இப் ஆய்வின் ஊடாக தோல் வாத்திய உற்பத்தி தொழில்நுட்பங்கனான குத்தி கடைதல், தோல் பதப்படுத்தல், வார் வெட்டி உருவாக்குதல், முத்திரை கட்டுதல், இவை அனைத்தையும் இணைத்து குத்தியில் ஏற்றுதல் போன்ற தொழிநுட்பமுறைமையான பல நுணுக்கங்களைக் கொண்டு மத்தளம், பறை, உடுக்கை போன்ற தோல் வாத்தியங்களின் பாரம்பரியமான உருவாக்க தொழிநுட்பத்தை மீண்டும் இச்சமூகத்திற்கு அறிமுகப்படுத்தும் நோக்குடன் இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டது.

திறவுச் சொற்கள்: தோல்வாத்தியம், பட்டறை முறை, பங்குபற்றுதல், தொழில்முனைவு, முத்திரைக்கட்டு.

ஆய்வு அறிமுகம்

மனித வாழ்வியலோடு மிக நெருங்கிய தொடர்புடையதோர் அம்சமாக இசை காணப்படுகின்றது. இசையினை அழகுபடுத்த பயன்படுத்தப்படுபவைகளே வாத்தியங்களாகும். வாத்தியங்கள் பல வகைப்பட்டனவாக காணப்பட்டாலும் இவைகளில் மிகத் தொண்மையானதும் அனைத்து சமூகங்களின் தனித்துவங்களை வெளிப்படுத்துவதாகவும் அமைவது தோல்வாத்தியங்களாகும். இவ்வாய்வானது எமது பாரம்பரிய முறைமையில் அமையப்பெற்ற தோல்வாத்திய உருவாக்கம் அதுசார் தொழிநுட்பம் சார்ந்ததாக அமைகின்றன. தோல்வாத்திய உற்பத்தி அணுகுமுறைமையானது பல்வேறு காரணங்களினால் மருகிச் செல்லும் நிலை காணப்படுகின்றது. இவை மீண்டும் புத்துருவாக்கம் பெறுவதும் அதன் தொழிநுட்பத்தை தொழில்முனைவாக கையாள்வதும் அவசியமாகின்றது. எமது சமூக்தில் காணப்படுகின்றதான தோல்வாத்தியங்களின் பாரம்பரிய உற்பத்தி தொழில்நுட்பங்களை மீண்டும் இச்சமூகத்திற்கு அறிமுகம் செய்வதாகவும் இவ்வாய்வு முன்னெடுக்கின்றது.

தோல்வாத்தியங்களின் உருவாக்க முறைமை பாரம்பரிய தொழில்நுட்பங்களை உள்ளடக்கியதோர் உருவாக்கச் செய்முறையாக காணப்படுகின்றது. தோல்கள் தெரிவு செய்வதிலும், மரங்களை தெரிவு செய்வதிலும், அதனை உருவாக்கும் விதங்களிலும் ஓர் தொடர்ச்சியான செயற்பாடுகள் மிக நுணுக்கமானதாக காணப்படுகின்றன. இத்தகைய நுணுக்கங்களையும் தோல்வாத்திய வடிவமைப்பு அணுகுமுறைகளையும் கற்றுக்கொண்டு

அதனை எல்லா தொழில்முனைவாளர்களிடமும் அறிமுகம் செய்வதும், அதன் உற்பத்தி நுணுக்கங்களை அதன் வடிவமைப்பு உத்திகளையும் பிறருக்கு அறிமுகப்படுத்தி சுய உற்பத்தி முறையில் தோல் வாத்தியம் உருவாக்கும் திறனை வளப்படுத்துவது இவ்வாய்வின் ஊடாக முன்னெடுக்கப்பட்டது.

ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது பண்புசார் முறையில் விபரண ஆய்வாக அமைகிறது. இதற்காக ஆய்வாளர் ஆய்வுக்களத்திற்கு சென்று ஆய்வாளருடன் நேரடிக் கலந்துரையாடல்கள் மூலமாக தரவுகள் திரட்டப்பட்டு ஆய்வுத் தலைப்புடன் தொடர்வுடைய ஒவ்வொரு செயற்பாடுகளும் செய்முறை ரீதியான பயிற்சிகளை பெற்று அதனை ஆய்வுக் களத்தில் இருந்து கற்று அதில் தேர்ச்சி பெற்று அதன் கண்டுபிடிப்புக்கள் முன்வைக்கப்படுகின்றது. ஆய்வுக்கான கண்டுபிடிப்புக் கருவியாக ஆழ்ந்த உரையாடல் (In-deph Interview) பயன்படுத்தப்பட்டு பங்குபற்றுதல் முறையினூடாக விபரிக்கப்படுகின்றது.

ஆய்வுப் பரப்பு

ஆய்வானது இலங்கையின் கிழக்கு மாகாணத்திலே மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட குடும்பிமலை பிரதேசத்தினை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வுப் பிரச்சினை

தமிழ் சமூகப் பாரம்பரியத்தில் தோல் வாத்தியங்களை உற்பத்தி செய்வதற்குப் பாரம்பரிய முறையில் ஓர் உற்பத்தித் தொழில்நுட்பமானது வேரூன்றிக் காணப்பட்டது. அது எமது சமூகத்தில் ஓர் தொழில்முறையாகவும், தொழில்முனைவாகவும் காணப்பட்டன. அதனை எம்மவரே ஆரம்பத்தில் இருந்து மேற்கொண்டு வந்தனர். ஆனால் இன்றைய சூழலில் நவீன தொழில்நுட்ப உற்பத்திக் கருவிகளின் வருகையானது எமது இப்பாரம்பரிய உற்பத்தித் தொழில் முறைமையினை மருக செய்துள்ளது என்பதே இவ்வாய்வின் ஆய்வுப் பிரச்சினையாக அமைந்துள்ளது.

மேலும் நவீன தொழிநுட்ப அணுகுமுறைக் ஊடாக உற்பத்தி செய்யப்படும் தோல்வாத்திய கருவிகள் எழுப்பும் ஓசைகள் எமது இசை மரபுக்கு பெர்ருத்தமானதாக அமையவில்லை

ஆய்வு கருதுகோள்

இன்றைய சூழலில் நவீன வாத்தியங்களின் வருகையும், நவீன தொழில்நுட்ப உற்பத்திக் கருவிகளின் வருகையும் பாரம்பரிய தோல் வாத்திய உற்பத்தி முறைமையினை மாற்றி அமைக்கத் தூண்டியுள்ளது. சமூகத்தில் பாரம்பரியமாக தோல் வாத்தியங்களை உற்பத்தி செய்வதற்கு, பாரம்பரிய முறையில் ஓர் உற்பத்தித் தொழில்நுட்பமானது காணப்பட்டது. அதனையும் அதன் தொழில்நுட்பங்களையும் அறிந்து தொழிற்படுகின்ற வேளை இவ்வுருவாக்கத் தொழில்நுட்பம் மற்றும் இவ்வாத்தியங்களின் தன்மைகளில் மாற்றங்கள் ஏற்படாமல் வைத்துக் கொள்ள முடியும்.

ஆய்வின் நோக்கம்

ஆய்வானது பல்வேறு நோக்கங்களை அடிப்படையகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. பாரம்பரிய தோல் வாத்திய உருவாக்கத்தின் தொழில்நுட்ப உத்திகளை இளைய சந்ததியினருக்கு தெளிவு படுத்தலை நோக்கமாகக் கொண்டு ஆய்வானது ஆராயப்படுகின்றது. ஆய்வானது ஆய்வு செயற்பாட்டுக்காக் மாத்திரம் அமையாமல் அதனை அடுத்த தலைமுறையினருக்கு அறியச் செய்து அவர்களையும் அதன் நுட்பங்களையும் அறிந்து செயலாற்றக் கூடியவர்களாக தொழிற்பட வைப்பது ஆய்வின் நோக்கமாகும்.

பாரம்பரிய தோல் வாத்தியங்களின் உற்பத்திச் செயற்பாடுகள் மருகிப் போகாமல் சமூகத்தில் தொடர்ந்து நிலைநிறுத்திக் கொள்ளல் என்பது மிகப் பிரதானமான நோக்கமாக அமைகிறது. தமிழர் வாழும் பிரதேசங்களிலே தோல் வாத்தியங்களின் தேவைப்பாட்டினையும் பயன்பாட்டினையும் அதிகரிக்கச் செய்கின்றவேளை இவை மருகிப் போகாமல் தொடர்முறையாகச் செயல் நிலைப்படுத்தப்பட்டு பேணப்படும்.

பாரம்பரிய தோல் வாத்தியங்களின் தேவைப்பாடும், அதுசார்ந்த கலை வெளிப்பாடுகளும், அதன் தொழில்முனைவுக்கான முன்னெடுப்புக்களையும், தேவைகளையும் பாடசாலைகளை மையமாகக் கொண்டு அதிகரிக்கச் செய்வதன் மூலமாக் தோல் வாத்தியங்களின் இயங்கு நிலையானது தொடர்ந்து சமூகங்களில் பயில்முறையில் பேணப்படடுவதனை உறுதி செய்தல்.

பாரம்பரியமான தோல் வாத்தியங்களான மத்தளம், பறை, உடுக்கை போன்ற வாத்தியங்களின் பாரம்பரிய உருவாக்க முறையில் இருந்து மாற்றம் பெற்றுள்ளது. அதனை மீண்டும் கொண்டுவருதல் என்பது மிக முக்கியமானதாகும். அதாவது புதிய தொழில்நுட்ப சாதனங்களின் வருகையும் புதிய தொழில்நுட்ப உத்தி முறைமைகளும் பாரம்பரிய பட்டறை முறைமையினை இல்லாது செய்துள்ளது. இதனை மீண்டும் எதிர்கால தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்துவதனையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஆய்வுச் செயற்பாடானது பாரம்பரிய தொழில்முறை தொழில்நுட்பங்களை உள்ளடக்கியனவாக காணப்படுகின்ற அதேவேளை தோல்வாத்திய உற்பத்தித் தொழிற்ப் பாரம்பரியத்தை மீண்டும் எதிர்கால சந்ததியினருக்கு அறியச்செய்யும் தொடர்முறையான செயற்பாடாக விளங்குகின்றது.

ஆய்வுப் பிரதேசம்

பொதுவாக ஆய்வுகளில் ஆய்விற்குரிய பிரதேசத்தினை வரையறுத்தல் என்பது மிக முக்கியமானதாகும். ஒரு ஆய்வானது ஆய்வுக்களத்தினை அடிப்படையாகக் கொண்டே நகர்த்திச் செல்லப்படுகின்றது. ஆய்விற்குரிய ஆய்வுப்பிரதேசமானது இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகப்பிரிவில் அமைந்துள்ள குடும்பிமலைப் பிரதேசமாகும். இக் கிராமத்திற்கு குடும்பிமலை எனும் பெயரானது அங்குள்ள மலைகளை மையமாகக் கொண்டே சூட்டப்பட்டது. அந்தவகையினிலே கிராமத்தின் மத்தியில் இருக்கின்ற மலையின் தோற்றத்திற்கு அமைவாக குடும்பிமலை எனப் பெயர்வரக் காரணமாயிற்று.

இலக்கிய மீளாய்வு

கோ.கண்ணன் அவர்களின் "பண்டைத்தமிழரின் ஒலி உணர்வும் இசை உணர்வும்" எனும் நூலில் வாத்தியங்களின் வகைப்பாடுகள் சார்ந்தும் அதன் தன்மைகள் தொடர்பார்பாகவும் விளக்கப்பட்டிருந்தது. அந்தவகையிலே எமது ஆய்வானது தோல்வாத்தியம் சார்ந்தது என்பதனால் அத் தோல்வாத்தியங்கள் தொடர்பான விடயதானங்களை இந் நூலில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. இது இவ்வாய்வினை முன்னெடுத்துச் செல்வதற்குப் பெரிதும் துணைபுரிகின்றது. இருந்தும் இவ்வாய்வு பரப்புக்குள் செல்வாக்குச் செலுத்தவில்லை.

வெற்றிச் செல்வனின் "இசையியல்" எனும் நூலில் பொதுவான வாத்தியங்கள் தொடர்பான விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு வாத்தியங்களும் அதன் தன்மைகள் தொடர்பாகவும் விளக்கப்பட்டிருந்தது. இது இவ்வாய்வினை முன்னெடுத்துச் செல்வதற்குப் பெரிதும் துணைபுரிகின்றது. இவ்வாய்வு இன்னுமொரு வழிமுறைக்கூடாக பார்க்கப்படுகின்றது.

சி.மௌனகுரு அவர்களின் "ஈழத்து தமிழ் நாடக அரங்கு" எனும் நூலில் பறை வாத்தியத்தின் தொழிற்பாடும் அதன் அது பறையர் சமூகத்தில் பறைமேளக் கூத்து ஆற்றுகையில் பயன்படும் விதம் மற்றும் அதில் பயன்படுத்தப்படுகின்றதான பறைகளின் வகைகளும் அதன் ஆற்றுகை முறைமைகளும் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வாய்வு இன்னுமொரு வழிமுறைக்கூடாக பார்க்கப்படுகின்றது.

மு.வளர்மதி அவர்களின் "பறை தமிழ் கலைவரலாற்றின் முகம்" எனும் நூலில் பறையின் ஆரம்பகால வராலாற்று வளர்ச்சிப்பாங்கினையும், அதன் பாவனை முறைகள் மற்றும் அதற்கு சமூகத்தில் உள்ள இடம், அதனை பாவனையில் சமூகத்தில் பயன்படுத்திக்கெள்வோர் போன்ற பல்வேறு விடயதானங்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. இவ்வாய்வு இன்னுமொரு வழிமுறைக்கூடாக பார்க்கப்படுகின்றது.

எஸ்.கே.சிவபாலனின் "தமிழிசை மரபு" எனும் நூலில் தமிழிசை மரபுகள் சார்ந்தும், வாத்தியங்கள் தொடர்பான விளக்கங்கள் மற்றும் அதன் பயன்பாட்டுக் காலப்பகுதிகள் தொடர்பான வரலாற்றுப் பின்னணியினை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. இவ்வாய்வு இன்னுமொரு வழிமுறைக்கூடாக பார்க்கப்படுகின்றது.

இவ்வாறாக இந்நூல்களில் வாத்தியங்கள் தொடர்பான விளக்கங்கள் மற்றும் அதன் வரலாற்றுப் பின்னணிகள் அதன் பாவனை முறைமைகள் மற்றும் அதனை பயன்படுத்தும் இசைக்கும் சமூகங்கள் தொடர்பான விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றது. எனது ஆய்வில் தொழில்நுட்பக் கலைஞரான பொ.சுந்தரமூர்த்தி அவர்களினால் பாரம்பரியமான கடைச்சல் பட்டறை முறைமையின் மூலமாக மத்தளம், பறை, உடுக்கை தோல்வாத்தியங்கள் உருவாக்கப்படுகின்ற முறைகள் மற்றும் அதனோடு தொடர்புடைய இப்பாரம்பரிய தோல்வாத்தியங்களின் உருவாக்கத் தொழில்நுட்ப அணுகுமுறைகள் தொடர்பாக ஆராய்கின்றதாக அமைகின்றது.

அவர் மத்தளம் வாசித்த கூத்துக்கள்	விற்பனை செய்யும் வாத்தியப் பொருட்கள்
• பவளக்கொடி வடமோடிக் கூத்து • குருக்கேத்திரன் போர் • 14ஆம் போர் • மயில் இராவணன் தென்மோடிக் கூத்து	• மத்தளம் • பறை • உடுக்கை • சவணிக்கை • தவில்

தோல் வாத்தியங்களை உருவாக்கும் தொழில்முறைக் கலைஞரும் அவரது ஆளுமைகளும்

குடும்பிமலை பிரதேசத்தில் வசித்து வரும் ஓர் பெரும் ஆளுமையே பொன்னுச்சாமி சுந்தரமூர்த்தி அவர்களாவார். இவரை அனைவரும் **மூர்த்தி அண்ணாவியார்** என்றே கூறுவர். 1956ஆம் ஆண்டு மாணிக்கர் பொன்னுச்சாமி, முத்துவேல் நாகம்மா ஆகியோருக்கு மகனாக பிறந்தார். இவர் ஆரம்ப கல்வியை கிரான் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி பயின்றார்.

விவசாய குடும்ப பின்னணியைக் கொண்டு வாழ்ந்து வந்த சுந்தரமூர்த்தி அண்ணாவியார் தனது சிறுவயது முதல் கலைகளின் மீது ஆர்வம் கொண்டவராக காணப்பட்டார். இவர் சிறுவயதில் ஊரில் அரங்கேற்றப்படும் கூத்துக்களை பார்ப்பதிலும் கேட்பதிலும் அதிகம் ஆர்வம் காட்டினார். இதன் காரணமாக அக் கலைச் செயற்பாட்டில் ஆர்வம் கொண்டு அதன் மீது தனது நாட்டத்தினை காட்டினார். இவர் தச்சுத் தொழிலின் மீதான சிறப்புத் தேர்ச்சியின் காரணமாக ஆர்வத்தோடு இணைந்து செயலாற்றும் கூத்திற்குரிய மிகப் பிரதானமான இசைக் கருவியான மத்தளத்தினை உருவாக்கும் நுட்பங்களையும் படிப்படியாக கற்கத் தொடங்கிய பின்னர் வாத்தியங்களை உருவாக்கும் தொழில்நுட்பத்தைச் சிறந்த முறையில் அறிந்து கொண்டார். மூர்த்தியரின் பட்டறை முறை என்றுதான் பிரதேசவாசிகள் கதைப்பர்.(சுப்பிரமணியம்.க : கிரான்)

ஆரம்பத்தில் தங்களின் தேவைக்கே வாத்தியங்களை உருவாக்கிய மூர்த்தி அவர்கள் பின்னர் அதனை தொழிலாகவும் ஆரம்பிக்கத் தொடங்கினார். இதன் பின்னராக கூத்துக்களில் இசைக்கப்படும் மத்தளத்தின் மீது ஆர்வம் கொண்டு அதனை சிறப்பாக உருவாக்கிய மூர்த்தி

அண்ணாவியார் அதன் பின்னரான காலப்பகுதியில் அனைத்து வகையான தோல் கருவிகளையும் உருவாக்கும் முயற்சியில் அதிக ஆர்வத்தோடு ஈடுபட ஆரம்பித்தார்.

இவர் ஆரம்பத்தில் வாத்தியங்களை உருவாக்குவதற்கான நுட்பங்களையும் கருவிகளையும் தான் தேர்ச்சி பெற்ற தச்சுத்தொழின் வாயிலாக பெற்றுக் கொண்ட நுட்பங்களைச் சிறந்த முறையில் தனக்கு சாதகமாக்கிக் கொண்டு பட்டறை வாத்திய உருவாக்க முறையின் மூலம் ஆரம்ப காலம் தொடக்கம் இன்று வரையான காலப்பகுதி வரை பல வாத்தியங்ளை உருவாக்கி கலைஞர்களுக்கு விற்பனை செய்து வருகின்றார்.

பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்

கடைச்சல் பட்டறையும் தோல்வாத்திய உருவாக்க தொழிநுட்பமும்

ஆய்வுடன் தொடர்புடையதான இத்தோல்வாத்தியங்களை உருவாக்கும் இடமான இக்கடைச்சல் பட்டறையானது மிக மிக பிரதான அம்சமாக விளங்குகின்றது. கடைச்சல் பட்டறை என்பது

தச்சன் பட்டறையுடன் தொடர்புடையதான ஓர் பொருள் உற்பத்தி செய்யப்படுகின்றதான ஒரு தொழில் முறையான இடமாக காணப்படுகின்றது. இதன் மூலமாக வாத்தியங்களின் உடல் பகுதியாக காணப்படுகின்ற மரத்தாலான பகுதிகளைக் கடைந்து அதனை வாத்தியத்தின் வடிவத்திற்கு ஏற்ப மாற்றுவதற்குப் பயன்படும் கைத்தொழில் முறைமையாகவும் மனித வலுவை பயன்படுத்தி இயக்கும் இயந்திரமாகவும் கடைச்சல் பட்டறை காணப்படுகின்றது. இதன் வடிவமானது மாட்டு வண்டியின் சில்லினைப் போன்ற வடிவம் கொண்டது.

இதனை நிரந்தரமான மரத்தில் பொருத்தப்பட்டுக் காணப்படும். சில்லின் மத்தியில் காணப்படும் கைபிடியின் மறு முனையானது மரத்தில் சற்று துவாரம் ஒன்று இடப்பட்டு அதனுள் பொருத்தப்பட்டிருக்கும். சில்லின் மேல் வளைவான பரப்பில் கயிறு போடும் அளவு ஒரு சிறு இடைவெளி காணப்படும். அப்பகுதியில் கயிறு போடப்பட்டு சில்லுக்கு நேராக 3 மீட்டர் இடைவெளி தூரத்தில் மரக்குற்றியை இறுக்கியவாறு மரத்தாலான இரு கூர்மையான முனைகள் கொண்ட பகுதிகளுடன் இணைக்கப்பட்டுக் குத்தியின் மேற்பரப்பில் இக் கயிறு போடப்பட்டிருக்கும். இப் மரத்தாலான இரும்பு முனைகளைக் கொண்ட பகுதியானது வாத்தியங்களின் நீளங்களுக்கு ஏற்ப மாற்றம் செய்யக் கூடிய தன்மை கொண்டதாகக் காணப்படும். பின்னராக சில்லு பகுதியில் அதனை சுழலச் செய்வதற்காக ஒரு கைப்பிடி சில்லின் மத்தியில் இணைக்கப்பட்டிருக்கும். இப்பகுதியினைப் பிடித்து சுழற்றுகின்ற போது குத்தியும் சுழல ஆரம்பிக்கும்.

தொடுக்கப்பட்ட கயிற்றின் உதவியுடன் கூர் முனையில் இறுக்கப்பட்டிருக்கும் குற்றியின் மேல் கயிறு சுழலத் தொடங்கும் போது குத்தியானது சுழலத் தொடங்கும். அப்போது கடைச்சல் உளியினை கொண்டு அதனை கடையத் தொடங்குவர். இக் கடைச்சலில் வைக்கப்பட்டிருக்கும் குற்றியானது நன்றாக நீரில் இழகவைத்திருக்கு வேண்டும். கடைச்சலில் கடையும் பொழுது அளவுத் திட்டங்களைக் கருத்தில் கொள்ளல் அவசியமானதாகும். மத்தளமானது 2 ½ சாண் நீளம் உடையதாக காணப்படும். மத்தளத்தின் வாய் பகுதியானது அதன் உள்ளிடை 6 அங்குலமாகவும் அதன் வெளியிடை 7 அங்குலமாகவும் காணப்படும். அதனைப் போன்று உடுக்கையானது 7 அங்குலம் நீளமும் 5 அங்குலம் அகலமும் கொண்டதாகக் காணப்படும். பறையானது 1 ½ அடி நீளமும் அதன் உள்ளிடை 14 அங்குலமும் உடையதாகக் காணப்படும்.

கடைச்சல் பட்டறையின் மாதிரித் தோற்றம்



தோல்வாத்தியங்களுக்கான மரக்குற்றிகளை தயார்ப்படுத்தல்

மத்தளம் தயாரிப்பதற்குப் **பலா, முதிரை, வேம்பு, கித்துள், பனைமரம், வாகை, மஞ்சவண்மை மரம்** போன்ற மரங்களைப் பயன்படுத்துவதாகவும் இதில் அதிகம் பலா மரவே பயன்படுத்தப்படுவதாகவும் அறியமுடிகின்றது. மற்றும் ஒதியை மரமும் பயன்படுத்தலாம் இருந்தாலும் ஒதியை சுருங்கும் தன்மை கொண்டமைந்ததனால் மத்தளத்தின் முத்திரை கட்டுக்கள் தொய்வுநிலை ஏற்படும் என்ற காரணத்தினால் அதனை பயன்படுத்துவது குறைவாகும். அத்தோடு மரம் அதிகம் வண்டுகளின் தாக்கத்திற்கு உட்படுவதனால் அதன் பாவனைக் காலமானது குறைவாகக் காணப்படும் என்பதனாலும் இதனை அதிகம் பயன்படுத்துவதில்லை.

மரத்தெரிவின் போது மரத்தின் நடுவே இத்துப்போன நிலையில் மரக்குடல் பகுதி காணப்படும் மரங்களை தெரிவு செய்வதில்லை மாறாக சோத்தி(வைரம்) நிறைந்த மரங்களை தெரிவு செய்வதே சிறந்ததாகும். இதற்கு மூலகாரணம் சோத்தி(வைரம்) அல்லாத மரத்தின் நடுப்பகுதியில் உள்ள குடல் பகுதியானது இத்துப்போன நிலையில் காணப்பட்டால் அது தாளம் எழ தடையாக இருக்கும் அதேவேளை தாளம் சமநிலையாகாத தன்மை காணப்படும். அத்தோடு மரம் நன்றாகக் காய்ந்த மரமாக இருத்தல் வேண்டும். (தகவல்:பொ.சுந்தரமூர்த்தி)

தோல் தயார்ப்படுத்தும் நுட்பங்களும் அதனை மத்தளத்தில் பொருத்துதலும்

தோல்கள் அனைத்து வாத்தியங்களிலும் எழுப்பப்படும் சத்தத்தின் தன்மைக்கு ஏற்ப மாறுபடும் தன்மை கொண்டனவாக காணப்படும். தோலினை தெரிவு செய்தல் மற்றும் வாத்தியங்களின் அளவுகளிலும், அதன் தன்மையினை வெளிப்படுத்தும் தோல்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தல் மிக மிக முக்கியமான ஒன்றாகும்.

மத்தளத்திற்கு ஆரம்பத்தில் குரங்குத் தோல்கள் பயன்படுத்தியதாகவும் பின்னரான காலப்பகுதியில் குரங்குத் தோல்களைப் பெறுவது கடினம் என்பதனால் அதற்குப் பின்னரான காலப்பகுதிகளில் **மான், மரை, ஆடு** போன்ற விலங்குகளின் தோல்கள் பயன்படுத்தப்படுகின்றது. அடிதோல் என்பது மத்தளத்தின் இரண்டு பக்கங்களும் உள்ள அடிக்கும் நாதம் எழும் பகுதிகளில் பொருத்தப்படும் தோலாகும். அடிதோல் பொருத்தப்படும் இரு பக்கங்களையும் “ஜில் பக்கம்”, “வம்” பக்கம் என்று அழைக்கப்படுகின்றது

“ஜில்” பக்கம் என்பது மெல்லிய தோலினை உடையதாகவும், உச்ச ஒலியினை எழுப்புவதாகவும் அமையும். உச்ச ஒலியினை எழுப்புவதனால் உச்சப் பக்கம் என்று அழைக்கப்படுகின்றது. இதற்கு ஆட்டுத்தோலினையே பயன்படுத்துவர். ‘வம்’ என்பது சற்று கனமான தோலாக காணப்படும். இது தாளப் பக்கம் என்று அழைக்கப்படும். தாளப்பகுதி அளவான நாதம் எழும்

பக்கமாகும்(தொப்பை). இதற்கு **மான், மரைத்** தோல்கள் பயன்படுத்துவர். காரணம் மான், மரைத் தோல்கள் சற்றுக் கனமானதாகும். (தகவல்:பொ.சுந்தரமூர்த்தி)

தோல் சேகரித்தலும், காயவைத்தலும், பதப்படுத்தலும்

தோல் வாத்தியங்களுக்கு பிரதானமாக தேவைப்படுவது தோல் ஆகும். இத்தோல்கள் என்பது ஆரம்பகாலங்களில் வேட்டையாடுதலின் மூலமாக அதிகம் கிடைக்கப்பெற்று வந்துள்ளது. இதனால் தோலுக்கான குறைபாடுகள் அன்றைய சூழலில் இடம்பெறவில்லை. இருப்பினும் இன்றைய சூழ்நிலையில் மிருகவதை சார்ந்த சட்டங்களும் அதன் நடவடிக்கைகளும் காரணமாகவும் காடுகள் அழிப்புக் காரணமாகவும் வேட்டையாடுதல் நடவடிக்கைகள் குறைந்து கொண்டு செல்வதனால் தோல்களினை சேகரித்தல் என்பது சிரமமானதாகவே இருக்கின்றது. இருப்பினும் பண்டிகைக் காலங்களிலும் ஒரு சில இடங்களில் சில நேரங்களில் கிடைக்கப்பெறும் தோல்களினையே இன்றைய சூழலில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. மற்றும் ஆட்டுத்தோல்களினை இறைச்சி கடைகளிலும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது.

அத்தோடு இவ்வாறாக கிடைக்கப்பெறும் தோல்களினை காயவைத்தல் என்பது முக்கியமான விடயதானமாகும். தோல்களை உரிய பதநிலைக்கு காயவைத்து எடுக்கினற வேளையிலே வாத்தியங்களுக்கு உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள முடியும். அந்தவகையிலே தோல்களினை நிலத்தில் இழுத்தும் காயவைக்க முடியும். அவ்வாறு காயவைத்தால் மிருகங்களின் இரைக்கு ஆளாகிவிடும் எனும் காரணத்தினால் பெரிய அடி உள்ள மரங்களிலே தோலினை நன்றாக அனைத்து பக்கங்களும் இழுத்து சுற்றி ஆணி அடித்து விடப்படும்.

காய வைக்கின்ற பொழுது முடி இருக்கும் பகுதி மரத்தோடு இருக்குமாறும் தோலின் உட்பகுதி வெளிப்புறமாகவும் இருத்தல் வேண்டும். காரணம் என்னவெனில் இவ்வாறாக மரங்களில் காய வைக்கின்ற பொழுது மிருகங்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வதோடு மாத்திரம் அல்லாமல் மழைக் காலங்களிலும் கூட நீர் தேங்கி நிற்காத தன்மை காணப்படும். நிலத்தில் காயவைக்கும் போது நீர் தேங்கி நிற்கும் அதனால் துர்நாற்றம் ஏற்படும் என்பதனாலே மரத்தில் காயவைக்கப்படுகின்றது. மற்றும் தோலில் சுருக்கங்கள் ஏற்படாமலும் காணப்படும். பின்னர் தோலினை தயார்படுத்தல் வேண்டும்.

காய்ந்த தோலினை எடுத்து அதில் உள்ள கத்தியினால் முடிகளை அகற்றுதல் வேண்டும். அத்தோடு மற்றுமோல் வழிவயையும் உள்ளது. தோலின் மேல் சுண்ணாம்பினை நன்கு பூசி அதனை நிலத்தில் விரித்து அதற்கு மேல் ஈரமான மணலை தூவிவிட்டு இரண்டு நாட்களின் பின் எடுக்கும் பொழுது முடிகள் நன்றாக உதிர்ந்து தோல் நல்ல வெள்ளை நிறத்தில் தோற்றம் அளிக்கும். அதுமட்டுமன்றி தோல் மென்மையாகவும் காணப்படும். இதன் பின்னராகத் தோலினை நீரினுள் மூன்று தொடக்கம் நான்கு மணித்தியாலங்கள் வைத்து இதன் பின்னரே முத்திரைக்கட்டுடன் இணைத்துக் கட்டுதல் வேண்டும்.

தோலில் இருந்து வார் உருவாக்கல்.

வார் எனப்படுவது முத்திரை கட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் தோல் ஆகும். மொத்தத்தில் இது அடித்து ஓசை எழுப்பப்படும் பகுதிகளை ஒன்றுக்கொன்று தொடர்பு ஏற்பட வைக்கும் பகுதி ஆகும். முதலில் மிருகங்களில் இருந்து எடுக்கப்படும் காயாத தோலினை சதைகள் இல்லாதவாறு நன்றாக அகற்றி எடுத்தல் வேண்டும். பின்னர் அதனை நன்றாக சுத்தம் செய்ததன் பின்னராக அதனை காயவைப்பதற்கு முன்னர் அதனை ஒரே அளவுக்கு நீளமான துண்டுகளாக வட்ட வடிவில் வெட்டி எடுத்து அதன் இரு முனைகளையும் இழுத்து இறுக்கமாக இரண்டு மரங்களிலோ, கட்டைகளிலோ நீளமாகக் கட்டுதல் வேண்டும். கட்டும் பொழுது அது காய்ந்து நீளமான கயிறு போன்ற வடிவத்தில் பலமானதாக கிடைக்கும். இறுக்கமாகக் கட்டாவிட்டாலும் அது சுருங்கிப்போகும். இதற்கு அதிகளவில் பலமான தோல் வேண்டும் என்பதனால் **மான், மரை** போன்ற விலங்குத் தோல்களை அதிகளவில் பயன்படுத்துகின்றனர். (தகவல்:பொ.சுந்தரமூர்த்தி)

வார்கள் கட்டப்படும் மாதிரி வடிவம்

தோல்

வாத்தியங்களுக்கான முத்திரைகட்டுதல் செய்முறை நுணுக்கங்கள்

மத்தளத்தின் மிகப் பிரதானமான பகுதி முத்திரை கட்டுப்பகுதியாகும். முத்திரைக்கட்டும் தொப்பைப் பகுதிக்கும் அதிகளவாக மான் தோலினையும் மாட்டுத்தோலினையும் பயன்படுத்துகின்றனர். ஆனால் இன்று மான் தோலானது கிடைப்பது அரிது என்பதால் மாட்டுத் தோலினையே இன்று அதிகளவில் பயன்படுத்துகின்றனர். மத்தள குற்றியின் வாயின் அளவிற்கு ஏற்ப தோலினை அதன்மேல் வைத்து இறுக்கமாக கீழ் இழுத்து சுற்றி மூன்று நாட்கள் கட்டி அதனை நன்றாக வெயிலில் காயவைத்து, அதன் பின்னராக அதனை அவிழ்த்து எடுக்கும் போது நன்றாகக் காய்ந்து அது மத்தள வாய் பகுதியைப் போன்ற அளவுடைய வட்டவடிவமாக அமைந்து காணப்படும்.

அதன் பின்னர் சரியாக விளிம்பின் சற்று கீழ் சற்று சரித்தவாறு முத்திரை பின்னுதலுக்கான துவாரங்கள் சுற்றிவர இரு தொப்பைப் பகுதிகளிலும் வெட்டுதல் வேண்டும். இதன் பின்னராக காய வைத்து எடுக்கப்பட்ட வார்களை மத்தள குற்றியின் வாய் விளிம்புப் பகுதியின் சுற்றளவுக்கு ஏற்ப மூன்று சுற்றுகளாகச் சுற்றி வளையம் போல் எடுத்தல் வேண்டும். .

வளைவாக சேர்த்து எடுக்கப்பட்ட வளையத்தினை முத்திரை பின்னுவதற்காக போடப்பட்ட துவாரத்தின் மேலாக வைத்து ஒரே அளவான இரண்டு வார்களை ஒரே அளவாக இரண்டாக மடித்து கொள்ளல் வேண்டும். பின்னர் தொப்பையில் வெட்டப்பட்ட துவாரங்களில் முதல் மூன்று

துவாரங்களிலும் நான்கு முனைகளையும் வார் வளையத்தின் மேலாக விட்டு பின்னுதல் வேண்டும். சுற்றி வர மேலும் கீழுமாக வார் பிரளாது பின்னும் பொழுது வார் மடிபடாமல் நேர்த்தியாக அமைதல் வேண்டும். பின் மத்தள வாயின் அளவுக்கு சற்று உட்புறமாக தொப்பையின் மத்தியில் கவராயம் வைத்து வட்டமிட்டு அதன் நடுப்பகுதி அடித்தோல் கட்டுவதற்காக வட்டவடிவமாக வெட்டுதல் வேண்டும். இவ்வாறான தொடர் செயற்பாடே முத்திரைக்கட்டுப் பகுதியாகும். (தகவல்:பொ.சுந்தரமூர்த்தி)

மத்தளம் உருவாக்கும் முறை

முதலாவதாக மத்தளத்திற்கான குற்றிகளை தெரிவு செய்தல் வேண்டும். குற்றிக்கான "மரங்களை தெரிவு செய்யும் பொழுது காட்டுப்பகுதியில் உள்ள மரங்களை விட ஊரில் வெட்டப்படும் மரங்களே சிறந்ததாகும். காரணம் அதிக வகையான ஒலிகள் கிடைக்கும் இடம் என்பதனால் சத்தங்களை அதிகம் உள்வாங்கு என்பதனால்" ஆகும்.

மேற்கூறப்பட்டது போன்று கடைச்சலில் குற்றி போடப்பட்டு கடைச்சலின் போது அதன் தடிப்பு எவ்வளவு சிறிதாக உள்ளதோ அதே அளவிற்கு மத்தளத்தில் இருந்து எழும் ஒலியும் அதிகமாகவும் சீராகவும் அமையும். அந்தவகையிலே மத்தளத்தின் வாய் பகுதியானது அதன் உள்ளிடை 6 அங்குலமாகவும் அதன் வெளியிடை 7 அங்குலமாகவும் காணப்படும். உருவாக்கப்பட்ட குற்றிக்கு வர்ணத்தினை பூசி அதனை வெயிலில் வைத்து நன்றாக காயவிடுதல் வேண்டும். (தகவல்: சுந்தரமூர்த்தி)

பிற்பாடு தேர்ந்தெடுக்கப்பட்ட தோலினைக் குற்றியின் வாயின் மேல் வைத்து இறுக்கமாக கீழ் இழுத்துக் கட்டி வெயிலில் வைக்க வேண்டும். இது முத்திரை கட்டுக்காக தயாரிக்கப்படும் தொப்பைப் பகுதியாகும். பின்னர் இரண்டு மூன்று நாட்களின் பின்னர் நன்றாக இறுகியதன் பிற்பாடு அது வட்ட வடிவமாக கிடைக்கப்பெறும். பின்னர் அதனை எடுத்து வாய் விளிம்பிற்குச் சற்று கீழ் இறக்கி வார் பின்னுவதற்கான துவாரங்களை சம அளவில வெட்டுதல் வேண்டும். பின்னர் மத்தள வாய் விளிம்பின் சுற்றளவிற்கு ஏற்ப மூன்று வார்களை ஒன்றாக வளைத்து வட்ட வடிவமாக எடுத்து பின்னுவதற்காக வெட்டப்பட்ட துவாரங்களுக்கு மேலாக இவ் வார் வளையங்களை வைத்து சுற்றளவுக்கு ஏற்ப இரண்டு பெரிய வார்களை இரண்டாக சம அளவில் மடித்து அதனை மூன்று துவாரங்களில் நான்கு முனைகளையும் உள்விடவேண்டும்.

முதல் துவாரத்தில் ஒரு முனையும் இரண்டாவது துவாரத்தில் இரண்டு முனைகளையும் மூன்றாவது துவாரத்தில் ஒரு முனையையும் விட்டு சுற்றி வைக்கப்பட்ட வார் வளையத்தையும் தொப்பையையும் சேர்த்து மேலும் கீழுமாக பின்னுதல் வேண்டும். பின்னும் பொழுது வார்கள் ஒரே நேராக செல்லுதல் வேண்டும். இவ்வாறாக சுற்றிவர பின்னி இறுதியில் முடிவடையும் போது அது உட்புறமாக முடிவடைதல் வேண்டும். இறுதியில் காணப்படும் நான்கு வார் முனைகளிலும் சிறு துவாரம் இட்டு ஒன்றின் ஒன்று உள்விட்டு வார்களை பின்னிவிடுதல் அவசியமாகும்.

இதற்குப் பிற்பாடு முத்திரை கட்டு போடப்பட்ட தொப்பையின் மையத்தில் இருந்து மத்தள வாயின் விளிம்பிற்குச் சற்று உட்புறமாக வட்டமிட்டு அதனை வெட்டி அகற்றி அடித்தோலினை இணைப்பதற்கு தயாராகல் வேண்டும்.

பிற்பாடு தாளப்பகுதியில் மான்தோலினை வைத்து சாதாரணமாக அதன் சுற்றளவுக்கு ஏற்றாற் போன்று அருகருகே இரண்டு துவாரங்களை சுற்றிவர இட்டு ஆண்முடிச்சினை வாரினால் போடுதல் வேண்டும். முத்திரை கட்டப்பட்ட தொப்பையையும் அடித்தோலினையும் இணைத்துக் கட்டும் பொழுது தோலினை சற்று இறுக்கமாகக் கட்டுதல் வேண்டும். உச்சப்பகுதியில் ஆட்டுத்தோலினை வைத்து கட்டும் போது நீளமான வாரினைக் கொண்டு பின்னிப் பின்னிக் கட்டுதல் வேண்டும்.

இவ்வாறாக தொப்பைப் பகுதியோடு அடித்தோலினை வைத்துக் கட்டியதன் பிற்பாடு மத்தள குற்றியின் இரு வாய்களிலும் முத்திரை கட்டப்பட்ட தொப்பையை வைத்து குத்தூசியினால் முத்திரை வளையத்திற்கு உட்புறமாக முத்திரை கட்டில் வெட்டப்பட்ட துவாரங்களினை அடிப்படையாகக் கொண்டு நான்கு துவாரங்களுக்கு ஒரு கயிறு இடைவெளி என்ற கணக்கில் சுற்றிவர குத்தூசியை பயன்படுத்தி இரண்டு முத்திரை கட்டுக்களிலும் துளையிட்டு லோன் கயிறு அல்லது வாரினை பயன்படுத்தி ஒரு முனையினை தொடர்ச்சியாக மேலும் கீழுமாக கோர்த்து பின்னர் ஒவ்வொன்றாக இழுத்து இறுக்கி இறுதியாக இரண்டு பக்கமும் கயிற்றின் முனையினை இறுக்கமாகக் கட்டி இடுப்பில் கட்டுவதற்கு அளவாக கயிற்றினை எடுத்தல் வேண்டும். இவ்வாறாக கோர்த்து எடுக்கப்படும் பொழுது முழுமையான மத்தளம் தயாராகும்.

பறை தயாரிக்கும் முறை

பறையானது இருபக்கம் தோலினால் போர்க்கப்பட்ட ஓர் தோல் வாத்தியமாகும். இதன் உடல் பகுதியானது மரத்தினால் ஆக்கப்பட்டடிருக்கும். அந்தவகையினிலே பறை உற்பத்திக்கான மரங்களாக பலா, வேம்பு போன்றவை பயன்படுத்தப்படுகின்றன. பின்னர் குற்றியின் பட்டைகளை அகற்றி அதனை தண்ணீரில் ஊறவைத்து பின்னர் அதனைக் கடைச்சலில் இட்டு கடைவதோடு மாத்திரம் அல்லாது மிக அகலமானது என்பதனால் குத்துளியினை பயன்படுத்தியும் இதன்

உட்புறமானது கடையப்படுகின்றது. கடைச்சலின் போது பறைக்குற்றியின் தடிப்பமானது மிக சிறிதாக காணப்படுதல் வேண்டும். இதில் அளவுத்திட்டமானது அவசியமாகும். பறையானது 1 ½ அடி நீளமும் அதன் உள்ளிடை 14 அங்குலமும் உடையதாக காணப்படும். பின்னர் மணற் கடதாசியினைக் கொண்டு இதனை மேற்புறம் மற்றும் உட்புறமாக சீராக்கியதன் பின்னர் வர்ணங்கள் பூசி வெயிலில் காயவைக்கப்படும். (தகவல்:பொ.சுந்தரமூர்த்தி)

பின்னர் பறைத்தோலினை தயார்படுத்தல் வேண்டும். இத் தோலானது சற்று மத்தளத்தினை விட பெரிதாகவே காணப்படும். அத்தோடு சற்று கடினமாகவும் காணப்படும். பறைக்குரிய தோலினை பார்க்கும் போது செம்மறியாட்டுத் தோலினையே அதிகம் பயன்படுத்துவர். இன்று செம்மறி ஆட்டுத்தோல் கிடைப்பது அரிது என்பதனால் **மாடு, மரை, ஆடு** போன்றவற்றின் தோல்களையுமே பயன்படுத்துகின்றனர். இத்தோலினை எடுத்து நன்றாக அதன் முடிகளை அகற்றியதன் பின்னராக தண்ணீரில் நன்றாக இடுதல் வேண்டும்.

மத்தளத்திற்கு முத்திரைக் கட்டுப்போன்று பறைக்கு பறை வளையம் செய்யப்படும். அந்தவகையிலே பறைக்கான வளையமானது மோதிரக்கேணி கொடி மற்றும் கோமரசுக் கொடி என்பன பயன்படுத்தப்படுகின்றது.

பின்னர் வெயிலில் காயவைத்த தோலினை எடுத்து பறைக்குற்றியின் வாயில் வைத்து பறை வளையத்தினை அதன் மேல் வைத்து கீழ் நோக்கியும் அழுத்தல் வேண்டும். மோதிரக்கண்ணிக்கொடி மற்றும் கோமரசுக்கொடி ஆகியவற்றில் இருந்து வளைத்தெடுக்கப்பட்ட வளையத்தின் இரு முனைகளையும் ஒன்றாக இணைத்து சிறு ஆணியின் மூலமாக பொருத்துதல் வேண்டும். பின்னர் கீழ் புறமாக காணப்படும் தோலினை பறை வளையத்தினை சுற்றி பனிச்சங்காய், கடுக்காய், சோறு போன்றவற்றை ஒன்றாக சேர்த்து அரைக்கும் போது வரும் மைபோன்ற பசையினைப் பயன்படுத்தி பறைவளையத்திலும் தோலிலும் பூசி தோலினை நன்றாக பறை வளையத்திற்கும் தோலிற்கும் இடையே நன்றாக உள்ளனுப்புதல் வேண்டும்.

பின்னர் இதனைப் போன்று இரு மருங்கிலும் செய்ததன் பின் தோலானது பறை வளையத்துடன் இணைக்கப்பட்டுவிடும். பின்னர் அதனைக் கழற்றி வெயிலில் உலர வைத்து பின்னர் அதனை குற்றியின் இரு வாயிலும் வைத்து கயிற்றினை அதாவது சாரணர்கள் பயன்படுத்தும் கயிறினை எடுத்து ஒரு முனையினை கொண்டு வளைத்து வர பறை வளையத்திற்கு மேல் பக்கமாகக் குத்து ஊசியினைக் கொண்டு துளையிட்டு மேலும் கீழுமாக இட்டு நன்றாக இறுக்குதல் வேண்டும். அப்போது கயிறுகளினை இரண்டு இரண்டாக இழுத்து கட்டுதலோ அல்லது இரண்டிற்கு ஒரு சிறு வளையமோ இடப்படும். காரணம் அதனை இறுக்கும் பொழுது தோலானது நன்றாக இறுக்கமடையும். பின்னர் தோலினைச் சற்று நெருப்பில் காட்டி எடுக்கப்படும்.

உடுக்கை தயாரிக்கும் முறை

உடுக்கையானது ஆகமம் சாராத சடங்குக் கோவில்களிலே அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. இதன் உடற் பகுதியானது மரத்தினால் ஆக்கப்பட்டிருக்கும். உடுக்கை தயாரிப்புக்கு அதிகமாக **பலா** மரங்களே பயன்படுத்தப்படுகின்றது. இம் மரங்களின் குடல்பகுதியானது இத்து போன

நிலையில் காணப்படுதல் சிறந்தது அல்ல. பலாக்குற்றி சற்று பாரம் குறைவென்பதனால் கைகளிலே ஏந்தி வாசிப்பது இலகுவானதாகும்.

உடுக்கையானது சற்று வித்தியாசமான ஒலியினை தரும் ஓர் இசைக்கருவியாகும். இதன் ஓசையில் அதிகமான அதிர்வுகளின் வீச்சுக்கள் காணப்படும். இதன் அடிக்கும் இரு பகுதிகளில் கட்டப்படும் தோல் **"விளாஸ;"** என்று கூறப்படும். இது மிருகங்களின் சிறுநீரகப்பையினுடைய மேற்புற தோலினையே குறிக்கின்றது. குறிப்பாக **மாடு, மான், மரை** போன்றவற்றின் விளாஸ்கள் அதிகமாக பயன்படுத்தப்பட்டது. தற்போதான காலப்பகுதியில் மான், மரை என்பன கிடைப்பது கடினம் என்பதினால் மாட்டின் விளாஸ் அதிகமாக பயன்படுத்தப்படுகின்றது. மற்றும் அடைசல் மானின் தாடையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மாட்டின் விளாஸினை விட மான், மரையின் விளாஸினிலே ஒலி அதிகம் ஏற்படுகின்றது. இருந்தும் இன்றைய சூழலில் தோல்கள் கிடைப்பது அரிது என்பதனால் குடைச்சீலைத் துணிகளின் பயன்பாடும் காணப்படுகின்றது.

ஒலிகளை அதிகம் உள்வாங்கும் மரத்திலான வாத்தியங்களிலே அதிகமான சீரான நாதங்கள் பிறக்கும். குற்றியைத் தெரிவு செய்து எடுத்ததன் பின்னராக மேற்பட்டைகளை அகற்றி அவற்றை தண்ணீரில் இளகவைத்தல் வேண்டும். அதன் பின்னராக அதனை எடுத்து கடைச்சலுக்கு கொண்டு சென்று குற்றியினை ஆப்புகள் அடித்து இறுக்கியதன் பின்னராக ஒருவர் கடைச்சலைச் சுழலச்செய்ய மற்றவர் கடைச்சல் உளியை கொண்டு அதன் மேற்பரப்பினை சீர்செய்ததன் பின்னராக நடுப்பகுதியை கடைந்து எடுப்பார். எடுக்கும் பொழுது நடுப்பகுதியில் வரும் துளையான இரண்டு பக்கங்களும் சம அளவில் துவாரங்கள் அமையப்பெறல் வேண்டும். கடையும் போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம் யாதெனில் கடைச்சலின் போது அதன் தடிப்பு எவ்வளவு சிறிதாக உள்ளதோ அதே அளவிற்கு உடுக்கையில் இருந்து எழும் ஒலியும் அதிகமாகவும் சீராகவும் அமையும்.

அத்தோடு குற்றியின் மேற்பரப்பில் துளைகள் விழாதவாறும் பார்த்துக்கொள்ள வேண்டும். கடைச்சலில் குத்துளி பயன்பாடு குறைவாக காணப்படும். மாறாக கடைச்சல் உளியினையே அதிகம் பயன்படுத்துவர். பின்னர் இதனை அதன் வடிவத்திற்கு கடையும் பொழுது இதற்கு குற்றியின் மத்தியில் துவாரம் காணப்படும். அதற்கு ஒரு சிறு கட்டையினை பயன்படுத்தி அதிலே கூர்முனைகளை பொருத்தி அதன் உட்புறமானது கடையப்படும். பின்னர் மத்தியில் வைத்த சிறு கட்டையானது எடுக்கப்பட்டதும் உடுக்கையின் நடுவே துவாரம் காணப்படும். இக் கடைச்சலின் போது அதன் அளவுத்திட்டங்கள் மிக அவசியமாகும். அந்தவகையிலே உடுக்கையானது 7 அங்குலம் நீளமும் 5 அங்குலம் அகலமும் கொண்டதாகக் காணப்படும்.
(தகவல்:பொ.சுந்தரமூர்த்தி)

பின்னர் கடைச்சலில் இருந்து கடையப்பட்ட உடுக்கை தோற்றத்திலான குற்றியை எடுத்து நிறம் பூசியதன் பின்னர் உடுக்கை மேல் வளையமானது உருவாக்கப்படும். இது உடுக்கை வாயின் உட்புறத்தில் பொருத்தக் கூடியவாறும் வளைவான பகுதி சற்று வெளிப்புறமாகவும் வந்து வளைவாக காணப்படும். பின்னர் விளாசினை எடுத்து அந்த உடுக்கை வளையத்துடன் இறுக வைத்து அதனை வளையத்தின் பின்புறத்தில் பனிச்சங்காய், கடுக்காய், சோறு போன்றவற்றை ஒன்றாக சேர்த்து அரைக்கும் போது வரும் மைபோன்ற பசையினைப் பயன்படுத்தி ஒட்டப்படும்.

இவ்வாறாக இரண்டு பக்கங்களும் விளாசினை வைத்து பொருத்தியதன் பின்னர் அறுகோண வடிவில் இரண்டு பக்கங்களும் ஒரே நேராக உடுக்கை வளையத்தில் எட்டுத் துவாரங்கள் இடப்பட்டு மெல்லிய லோன் கயிற்றினை இரண்டு பக்கமாகவும் தொடுத்து கட்டப்படும். தொடுக்கும் பொழுது ஒரு முனையினையே தொடர்ச்சியாக துளைகளில் இட்டு சுற்றி வர போடப்பட்டு வரும். பின்னர் இரண்டு முனைகளையும் நன்றாக இறுகக் கட்டியதன் பின்னர் அதன் நடுப்பகுதியில் அனைத்து கயிறுகளையும் சுற்றித் துணியினால் கட்டப்படும். அத்தோடு இரு விளாசின் மேலும் தங்கூசி கட்டப்பட்டிருக்கும். காரணம் நாதத்தினை அதிரச் செய்வதற்காகும்.

முடிவுரை

தோல் வாத்தியங்களின் உற்பத்தி தொழிநுட்பங்களானது எமது பாரம்பரிய தொழில்முறையானது. மிகவும் நுணுக்கமானதும் சிறப்பான அணுகுமுறைகள் மூலமாக முழுமையாக மனித வலுவை பயன்படுத்தி தொழிற்படுகின்றதான தொழில்முறையாக காணப்படுகின்றது. இது முழுமையாக சூழலில் இருந்து கிடைக்கப்பெறும் வளங்களைக் கொண்டே உருவாக்கப்படுகின்றது. இது செலவீனங்கள் அற்றதான முறையில் எமக்கான முறைகளை கொண்டு செயற்படுகின்ற ஒன்றாகும்.

தோல்வாத்தியங்கள் மற்றும் அதன் இசை உருவாக்கத்தில் தோல் வாத்திய இசைக் கலைஞர்களின் அறிவுத் திறனானது மிகவும் நுட்பமானது. சாதாரணமாக பார்க்கும் போது தமிழர் பாரம்பரிய தோல் வாத்தியக் கருவிகள் யாவும் ஏதோ ஒரு மரக்குற்றியில் தோல் போர்க்கப்பட்ட வாத்தியங்களாக காட்சியளித்தாலும் இவற்றின் அமைப்பு முறைகள் மிக நுணுக்கம் வாய்ந்தவை. மரக்குற்றிகளின் தெரிவில், தோல்களின் தெரிவில், வார்களின் தெரிவில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டு இக் கருவிகள் தயாரிக்கப்படுகின்றது.

பல நூறுவருட அனுபவமும் பல மணித்தியால உழைப்பும் இவற்றை உருவாக்குவதில் துணைபுரிகின்றன. இவ்வாறான பாரம்பரியமான முறைகளின் மூலம் உருவாக்கப்படுகின்றதான வாத்தியங்கள் பலமும் உறுதியும் வாய்ந்தனவாகவும் விலைகள் குறைவானதாகவும் காணப்படுகினறது. இருப்பினும் இன்றைய சூழலில் தொழிநுட்ப சாதனங்களின் உதவியுடன் உருவாக்கப்பட்டு ஆடம்பர கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றதான வாத்தியங்கள் பெறுமதி

அதிகமாகவும் பாவனைக்காலங்கள் குறைவானதாகவும் காணப்படுகின்ற அதேவேளை வாத்தியத்தின் தன்மையிலும் ஒலி எழுப்பப்படும் விதத்திலும் அதன் தன்மை மாறுபட்டதாகக் காணப்படுகின்றது.

மற்றும் இவ்வாய்வினை மேலும் சிறப்பிக்கவும் தெளிவுபடுத்தவும் இளம் சந்ததியினர் பண்பாட்டு நுட்பங்களை விளங்கிக் கொள்ளவும் ஏற்ற வகையில் சிறந்த தெளிவூட்டல்களின் மூலமாக தெளிவூட்டப்பட்டுத் தோல்வாத்தியங்களின் கலை நுட்பம் தொடர்பாகவும் தோல்வாத்திய உற்பத்தி கலைஞர்கள் தொடர்பாகவும் அனைவரும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் அமைந்திருக்கின்றது. இவற்றின் வாயிலாக ஆய்வின் நோக்கங்களும், கருதுகோள்களும் சிறந்த முறையில் அடையாளப்பட்டுள்ளமையானது இவ்வாய்வு முழுமையடைந்துள்ளமையை உறுதிப்படுத்தியுள்ளது. இவ்வாய்வானது ஒரு சமூக கலை கலாச்சார பண்பாடுகளில் இருந்து கொண்டு அச் சமூகத்தின் கலை கலைச்சார பண்பாடுகளையும் தோல் வாத்தியங்கள் உற்பத்தி தொழிநுட்பங்கள் தொடர்பான தெளிவினையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது என்பதே ஆய்வாளரின் கருத்தாகும்.

பாரம்பரிய கலைஞர்களை இக்கைத்தொழில் நடவடிக்கைகளில் நாட்டங்களைக் கொண்டுவரவும் அதுசார்ந்த தொழிநுட்பங்களைக் கற்றுத் தேர்ச்சி பெறுவதற்கும் இவ்வாய்வானது வழிவகுத்து உள்ளது. பாரம்பரியத்தில் நீண்டகாலமாக இத்தொழில்முறை ஒன்று மருகிப்போய் இருந்ததும் அது பல நுட்பங்களைக் கொண்டிருந்ததும் மீண்டும் இவ்வாய்வினூடாக அவை மீள் எழுச்சி பெறுவதும் இவ்வாய்வின் ஊடாக கொண்டுவரப்பட்டுள்ளது.

உசாத்துணை

1. (மௌனகுரு.சி, (மீ.பதி.) (2008), ஈழத்து தமிழ் நாடக அரங்கு)
2. (வெற்றிச் செல்வன், இசையியல், மாணிக்கவாசகர் பதிப்பகம்.)
3. (கண்ணன்.கோ,பண்டைத் தமிழரின் ஒலி உணர்வும் இசை உணர்வும்.)
4. http://www.tamillexicon.com/pezhai/?story_id=49&story=பாரம்பரிய-இசைக்கருவிகள்
5. http://www.tamilmurasuaustralia.com
6. https://ta.m.wikipedia.org/wiki/பட்டறை
7. https://roar.media/tamil/main/arts-culture/traditional-tamil-musical-instruments
8. http://tamizarvaralaru.blogspot.com/2013/11/blog-post_16.html?m=1
9. https://reliefweb.int/map/sri-lanka/sri-lanka-koralai-pattu-south-kiran-ds-division-batticaloa-district-status-idp
10. http://www.tamillexicon.com/pezhai/?story_id=49&story=பாரம்பரிய-இசைக்கருவிகள்

நேர்காணல்

1. பொன்னுச்சாமி சுந்தரமூரத்தி, வாத்திய உருவாக்கத் தொழிநுட்ப கலைஞர்.
2. சுந்தரமூர்த்தி தச்சனானந்தமூர்த்தி வாத்திய உருவாக்கத் தொழிநுட்ப கலைஞர்.

சி.மௌனகுருவின் நாடகங்களிலும் ஆற்றுகைகளிலும் பௌராணிகத் தொன்மங்கள்

செ.வெவோகா,[1] சாந்தி கேசவன்*[2]
[1,2]இந்துநாகரிகத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
*kesavans@esn.ac.lk

ஆய்வுச் சுருக்கம்

சி.மௌனகுரு அவர்களின் நாடகங்களிலும் ஆற்றுகைகளிலும் காணப்படுகின்ற பௌராணிகத் தொன்மங்கள் பற்றியது இவ்வாய்வின் தலைப்பாகும். இவரது நாடகங்கள் எனும் போது ஆற்றுகைக்குட்படுத்தப்படாத நாடகங்களினையும் குறிப்பதாகும். ஏனெனில் நாடகங்கள் அனைத்தும் ஆற்றுகைக்குள் எடுத்துக் கொள்ளமுடியாது. அனைத்து நாடகங்களும் ஆற்றுகைப்படுத்தப்படுவதும் இல்லை. அந்தவகையில் இவரது நாடகங்கள் ஆற்றுகைக்குட்பட்டும், ஆற்றுப்படுத்தப்படாது எழுத்துப் பிரதிகளாகவும் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். பௌராணிகத் தாக்கம் தமிழ்நாட்டிலுள்ள பல எழுத்தாளர்களிடமும் நாடக ஆசிரியர்களிடமும் காணப்படுகின்றது. பௌராணிகம் என்பது எங்கள் மத்தியில் உள்ள புராண, இதிகாச, நாடோடிக் கதைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட ஐதீகங்கள் ஆகும். ஐதீகங்கள் என்பது உண்மையல்லவாயினும் அதற்குள் உண்மை தேடுபவர்களும் உண்டு. அந்த ஐதீகங்களை வைத்துக் கொண்டு பலர் அப்படியே நாடகம் செய்துள்ளனர். சிலர் அதனை வைத்துக்கொண்டு அதற்குப் புதிய விளக்கம் அளித்து நாடகம் செய்துள்ளனர். சிலர் அதனை வைத்து புதிய விளக்கம் அளிப்பதுடன் சமகாலப் பிரச்சினைகளை அதனூடாகக் கொண்டு வந்துள்ளனர். சி.மௌனகுரு அவர்களது நாடகங்கள் மூன்றாம் வகைக்குரியன. இவர் பௌராணிகக் கதைகளை எடுத்து சமகாலப் பிரச்சினைகளைக் கொண்டுவந்துள்ளார். அந்தவகையில் இவர் பெண்ணடக்குமுறை, வர்க்க அடக்குமுறை, சாதியடக்கு முறை, தொழிலாளர் அடக்குமுறை, இன அடக்குமுறை, சூழல் பாதுகாப்பு போன்ற சமகால பிரச்சினைகளைத் தமது நாடகங்களில் கொண்டு வருகின்றார். ஆனால் அவற்றிற்கு அவர் பௌராணிகத் தொன்மங்களையே துணையாகக் கொள்கின்றார். இவ்வாய்வினூடாக நாடகங்கள் மற்றும் ஆற்றுகைகளின் ஊடாக பௌராணிக மரபினை எடுத்துரைத்து தொன்மவியல் பற்றிய அறிவினையூட்டல். நாடகத்துறைக்குரிய பேராசிரியராக இருப்பினும் பௌராணிகக் கதைகள் ஊடாக தனது நாடகத்தில் சமூகவியல் கருத்துக்களை எடுத்துரைக்கும் முறை, மௌனகுரு அவர்களின் நாடகங்கள், ஆற்றுகைகள் என்பவற்றினூடாகத் தொன்மங்களை கையாழ்வதன் மூலம் சமூகத்திற்கு எடுத்துரைக்கும் விடையங்கள் என்பவற்றை அறிவதனை நோக்காகக் கொண்டு ஆராயப்படுகின்றது. இவ்வாய்விற்கான தரவுகள் செவ்விகாண்பதன் மூலமும் அவரது ஆசான், மாணவர்கள், நண்பர்கள் போன்றோரது செவ்வி மூலமும் பெற்றுக்கொள்ளப்பட்டன. அத்துடன் மௌனகுரு எழுதிய நூல்கள், நாடக நூல்கள், நாடகப் பிரதிகள் (scripts), ஆற்றுகை பிரதிகள் (scrips), நாடகம், ஆற்றுகை வீடியோக்கள், மௌனகுரு பற்றிய ஏனையவர்கள் எழுதிய நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் குறித்த தலைப்புடன் தொடர்புள்ள இலக்கியங்கள் என்பவற்றில் இருந்து இவ்வாய்விற்கான தரவுகள் பெறப்பட்டன. இவ்வாய்வானது, பகுப்பாய்வு, வரலாற்றாய்வு, விவரண ஆய்வு, முருவியல் ஆய்வு போன்ற ஆய்வுமுறையியல்கள் பயன்படுத்தப்பட்டு ஆராயப்படுகின்றது. இவ்வாய்வினூடாக மௌனகுருவின் நாடகங்கள் ஆற்றுகைகள் என்பவற்றில் பௌராணிகத் தொன்மங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன. அவற்றினூடாக எத்தகைய கருத்துக்கள் சமூகத்திற்கும், மக்களிற்கும் விளக்கப்படுகின்றன. இதற்கு அவரால் மேற்கொள்ளப்படுகின்ற உத்திகள், கோட்பாடுகள், என்பன போன்றனவற்றையும் தொன்மங்களினை மறுவாசிப்பிற்குட்படுத்தல், புதிய முறையில் விளக்கத்தினைக் கொடுத்து வியாக்கியானப்படுத்தல், நவீனகால சமூகத்திற்கு விளங்கும் வகையில் மொழிநடையினை இலகுவாகக் கைக்கொள்ளல், தொன்மத்தின் மரபுகளை புதிய முறையில் அணுகுதல் மற்றும் இவற்றின் மரபுரீதியிலான வழக்கங்களை மாற்றி அமைத்தல் போன்ற இன்னோரன்ன விடயங்களினை எடுத்துரைப்பதாகவும் காணப்படுகின்றது. இவ்விடையங்களை ஆராய்வதாகவும் அவர் ஏன் இம்முடிவிற்கு வந்தார் என்பதையும் ஆராய்வதாகவும் ஏனைய இது போன்ற நாடகங்களுடன் ஒப்பிட்டு ஆராய்வதாகவும் இவ்வாய்வு அமையும்.

திறவுச் சொற்கள்: சி.மௌனகுரு, பௌராணிகம், தொன்மங்கள், ஆற்றுகைகள், நாடகங்கள்

அறிமுகம்

தொன்மங்கள் என்பது **"பழைமை"** என்று பொருள்படும். இலக்கியங்களில் பழைமையான கருத்துகளைப் பயன்படுத்துவது அல்லது எடுத்தாள்வது தொன்மங்கள் ஆகும். பழமை என்பதை வடமொழியில் **"புராணம்"** என்றும் ஆங்கில மொழியில் **"மித்"** (Myth) என்றும் அழைக்கப்படுகிறது. இது Mithos என்னும் கிரேக்கச் சொல்லில் இருந்து எடுத்தாளப்பட்டதாகும். இதற்கு, உண்மையான அல்லது கற்பனையான கதை அல்லது உட்கரு என்று பொருள்படும். தொன்மங்கள் ஒரு சமூகத்தினை இனத்தினை அல்லது ஓர் இனக்குழுமத்தினை அறிந்து கொள்ள அவற்றின் பண்பாடு நடத்தை உளவியல்களைப் புரிந்து கொள்ள அச்சமூகத்தின் இனத்தின் அல்லது இனக்குழுமத்தில் ஆழமாக வேரூன்றியுள்ள தொன்மங்கள் (Myths) உதவுகின்றன. தொன்மம் என்பதற்கு இயற்கை அல்லது வரலாற்றுக்கூறு தொடர்பான செய்திகளை உட்கொண்டதும் இயற்கையிகந்த செயல் நிகழ்ச்சி பற்றியதுமான பொய்யான புனைந்துரை என்று வரைவிலக்கணம் தரப்படுகின்றது. பொய்யான புனைந்துரையாயினும் அதற்குள் அச்சமூகத்தின் வரலாறு இயற்கை பற்றிய அச்சமூகத்தின் நோக்கு என்பன ஆழமாகப் புதைந்து கிடக்கும்.

இப்புனைந்துரைகள் அரசர் பற்றியும் இருக்கும் தெய்வம் பற்றியும் இருக்கும். அரசர் பற்றி வருவனவற்றை பழமரபுக் கதைகள் (Legends) என்றும் தெய்வம் பற்றியுள்ளவற்றை தொன்மங்கள் என்றும் குறிப்பிடுவர். இத்தொன்மங்கள் மிகப் பழமையானவை சமூகத்தின் அடிமனதில் ஆழப்பதிந்தவை. ஆச்சமூகத்தை உள்நின்றியக்கும் சக்திவாய்ந்தவை. உண்மையைவிடத் தொன்மம் சக்தி வாய்ந்தது. (myth Is Powerful Than truth) என்பர் தொன்மத்துக்காக உயிரைக் கூடக் கொடுப்பர். இத் தொன்மங்கள் வாய்மொழியாகவும் வழக்கிலிருக்கும் (மௌனகுரு.சி, www.maddunews.com, (நேரம் 12:48:00).).

சமூகத்தில் ஆழமாக வேரூன்றியதாகவும் காலந்தோறும் புதிய புதிய விடயங்களை வழங்கும் ஊற்றுக்கண்ணாகவும் விளங்குவது மகாபாரதம், இராமாயணம், புராணங்கள், சமூக வழக்காற்றியல்கள் என்பனவாகும். கற்றோர் புகழும் இவற்றுடன் ஒப்பிடும்போது. சாதாரண அடித்தட்டு மக்களிடம் நெருங்கும் தன்மையினை அழுத்தமாக, மகாபாரதம், இராமாயணம் மற்றும் சமூகவழக்காற்றியல்கள் போன்ற தொன்மங்கள் பெற்றிருக்கின்றன எனலாம். தமிழகத்தின் கதை தழுவிய நிகழ்த்துக் கலைகளை மொத்தமாய் நோக்கும் போது மேற்குறித்த கருத்து வலுப்பெறுகிறது. தமிழின் மரபார்ந்த கூத்து வடிவங்களில் மிகுதியானவை. மகாபாரதம், இராமாயணம் மற்றும் அதன் கிளைக் கதைகளே ஆகும். இவை மட்டுமன்றி தமிழ் நாடக உலகில் இருபெரும் போக்குகளைக் கிளர்த்திய தவத்திரு. சங்கரதாச சுவாமிகளும், பம்மல் சம்பந்த முதலியாரும் மகாபாரதம், இராமாயணம் மற்றும் கிளைக் கதைகளை நாடகப்பாடங்களாக ஆக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

நாடக வழக்காற்றியலில் தொடர்ந்து ஐதிகங்களை மையப்படுத்தினர். ஐதிகங்கள் பொதுவாக சாதாரண மக்களின் வாழ்வில் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஏனெனில் இது மக்களை நல்வழிப்படுத்துவதற்கும், பக்தியை ஊட்டல், மனிதப் பண்பை ஊட்டல் போன்ற பல்வேறு விடயங்களிற்காக கொணரப்பட்டது. இவ் மீள வலியுறுத்தபடுவதன் மூலம் அடுத்து வரும் தலைமுறைகளையும் வழிப்படுத்த எடுத்துச் செல்லும் போக்கும் காணப்படுகின்றது. அது வழிபாட்டிற்கும் மையப்படுத்தப்படுகின்றது. நாடகங்கள், ஆற்றுகைகள் ஊடாகவும் மையப்படுத்தப்படுகின்றது. எடுத்துக்காட்டாக சடங்குகளை எடுத்து நோக்கின், தமிழ்நாட்டில் இன்று வரை நிறைய சடங்குகள் பின்பற்றப்பட்டு கொண்டிருக்கின்றன. ஆனால் இங்கோ சடங்குகள் சமஸ்கிருத மயமாக்கலிற்குட்படுத்தப்படுவதன் காரணமாக சடங்குகளின் செல்வாக்கு அருகிச் செல்வதனையும் காணலாம்.

இத்தகைய தொன்மங்கள் ஆரம்பகாலம் முதலாக இன்றுவரை இலக்கிய ஆசிரியர்கள், இலக்கியங்களில் கையாளப்பட்டுள்ளதனைக் காணலாம். சங்க இலக்கியங்கள், சங்கமருவிய இலக்கியங்கள், பக்தி இலக்கியம், சிறுகதை இலக்கியங்கள், கவிதை இலக்கியங்கள் எனப் பல்வேறு துறைசார் இலக்கியங்களிலும் தொன்மங்கள் அப்படியேயும், கட்டவிழ்க்கப்பட்டும், மறுவாசிப்பிற்குட்படுத்தியும், தொன்மங்களை ஆய்விற்குட்படுத்தும் பாங்கிலும் இலக்கியங்களில் கையாளப்படுகின்றன. அந்தவகையில், இவ்வாறு ஒவ்வொரு ஆசிரியர்களும் தமது எழுத்துக்களிற்கு தொன்மங்களை துணையாகக் கொண்டும், அதனூடாகப் புதிய கருத்துக்களை சமூகத்திற்கு எடுத்துக் காட்டுவதும், தொன்மங்களினை மீட்டுருவாக்கம் செய்வதும் போன்றே சி.மௌனகுரு அவர்களும் தனது சார்வாகன் நாவலில் மகாபாரதத் தொன்மத்தினைக் கையாள்கின்றார். அதுமட்டுமன்றி தனது நாடகங்களிலும் ஆற்றுகைகளிலும் தொன்மங்களைக் கையாண்டுள்ள விதத்தினை ஆராய்வதாக இவ் ஆய்வு காணப்படுகின்றது.

சுவாமி விபுலானந்தருக்குப் பின் மட்டக்களப்பில் புலமைத்துவம் வாய்ந்தவரான சி.மௌனகுரு அவர்களது நாடகங்களிலும் ஆற்றுகைகளிலும் காணப்படும் பௌராணிகத் தொன்மங்களினை எடுத்துரைப்பதாகவும், அவற்றினூடாக ஆசிரியர் சமூகத்திற்கு எடுத்துரைக்கும் கருத்துக்களையும், அவற்றிற்கு எத்தகைய உத்திகளைக் கையாழ்கின்றார் போன்ற விடையங்களை ஆராய்வதாகவும் இவ்வாய்வு அமைகின்றது.

ஆய்வு முறையியல்

பகுப்பாய்வு, வரலாற்றாய்வு, விவரண ஆய்வு, முருவியல் ஆய்வு

மதிப்பீடு

தமிழ் நவீன நாடகத்தில் தொன்மங்கள் பல கேள்விக்குள்ளாகியிருக்கின்றன. மறுவாசிப்புச் செய்யப்படுகின்றன. மரபு மறுவாசிப்பில் ஒரு பகுதியாய் மகாபாரதம் மற்றும் மகாபாரதக் கிளைக்கதைகள் முன்வைத்துப் பேசப்படுகின்றன. வெகு மக்களிடையே மகாபாரதம் பெற்றிருக்கும் அழுத்தமான தாக்கம். இத்தேர்வுக்கு முதன்மையான காரணியாகின்றது. தமிழ் நவீன நாடகங்கள் மகாபாரத மறுவாசிப்பில் குறிப்பிடத்தக்க உடைப்புகளைச் செய்திருக்கின்றன. அவற்றுள்ளும் பெண் நிலைவாத நோக்கு முனைப்பாய் முதன்மை பெற்றிருப்பதை அவதானிக்க முடிகிறது. மகாபாரதத்தில் தான் எத்தனை மனிதர்கள், எத்தனை குணாதிசயங்கள் எல்லாக் காலத்துக்கும் பொருந்துவது போல அது அமைந்திருப்பதுதான் அதன் மகா குணாதிசயம், இன்றைய நடப்புகள் அன்றும் நடந்தன போல இருப்பது தான் மகாபாரதம் எனக்குள் ஏற்படுத்தும் வியப்பு, மகாபாரதம் வியாசரின் கதை அன்று அது ஒரு சமூகம் உருவாக்கிய கதை, சமூகக் கதை ஒன்றுக்கு வியாசரின் வியாக்கியானமே வியாசர் மகாபாரதம், மகாபாரதத்தை நாம் நமக்கு ஏற்ப வியாக்கியானிக்கலாம். பயனும் பெறலாம் என்பார் கலாநிதி சி.மௌனகுரு **(வனவாசத்தின் பின், முன்னுரை)**. தமிழ் நவீன நாடகம் அதைச் செய்கிறது. மேலும் செய்ய வேண்டும்.

தொன்மங்களுக்கு என ஒரு அரசியல் காணப்படுகின்றது. அதாவது பாரதக்கதை, இராமாயணக் கதையை ஏன்கூத்தில் தொடர்ந்து வைத்திருக்கிறார்கள், பாரதக் கதையை ஏன் இன்று வரை அனைவரும் பின்பற்றி வருகிறார்கள் என நோக்கின், சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்கள் தமது கருத்துக்களை மக்கள் மயப்படுத்துவதற்கு இந்தப் பாரத இராமாயண தொன்மங்களினை செய்கின்றனர். இது இரண்டு வகையாக பிரிக்கலாம். அவையாவன,

1. மக்கள் சார்ந்த கலை வெளிப்பாடு

2. சடங்கு ஊடாக

என்று பிரித்து நோக்குகின்றனர். **(தகவல்,சந்திரகுமார்)**

இவ்வாறு நடக்கின்ற ஆற்றுகைகள் தமிழ்நாட்டில் அதிகமாக காணப்படுகின்றன. தெருக்கூத்து, தாலாட்டு பாடல், நடன முறை, கோலாட்டம், குதிரையாட்டம் என அனைத்து வகைகளும் காணப்படுகின்றன. சாதாரண மக்களிற்கு இதன் அரசியல் தெரியாது. "சாதாரண மக்களை இந்த சிந்தனைக்குள் வைத்திருப்பதே" இதன் நோக்கமாகும். இவ்வாறு தொடர்ச்சியாக வைத்திருப்பதனால் உள்ளூர் மக்கள் தங்களுடைய அனேக கருத்துக்களை அடுத்த தலைமுறையினருக்கும் கடத்துகின்றனர்.

உதாரணமாக :- இரணியனது கதையை எடுத்துக்கொள்ளலாம். இரணியன், பிரகலாதனை மையமாகக் கொண்டு ஆரியர்களால் திட்டமிட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். அதாவது, தந்தையை வணங்க சொல்வது ஒன்றும் தவறில்லையே. மாதா, பிதா, குருவின் பின்தானே தெய்வம், அவ்வாறிருக்க தந்தையை மகன் வணங்குவது எந்த விதத்தில் தவறான செயலாக இங்கு கருதப்படுகிறதோ தெரியவில்லை. பிரகலாதனை "ஓம் நமோ நாராயணா" என திட்டமிட்டு சொல்ல வைத்து இரணியன் ஆரியர்களால் திட்டமிட்டு கொல்லப்படுவதாகவே அமைகின்றது. அதாவது தமிழ் பண்பாட்டிற்குள் தங்களுடைய ஒரு மதக் கடவுள் வழிபாட்டை தமிழ் கடவுள் ஒன்றை இல்லாமல் செய்து தமது வழிபாட்டை உட்புகுத்துவதற்கு இவ்வாறான உத்திகளைக் கையாண்டுள்ளனர் என்றே கூறலாம்.

இதனையே ஸ்ரீனிவாசன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார், **"சமஸ்கிருத மயமாக்கல் என்றால் என்னவெனில் தன்னை உயர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களைப் போல சாதாரண மக்களும் தாமும் அவர்கள் போல் வாழ்ந்தால் உயர்ந்தவர்களாகிவிடுவோம் என்ற ஒரு மாயை"** என்று குறிப்பிடுகிறார். இதுபோன்று பல்வேறு தொன்மக் கதைகள் இலங்கையிலும் இந்தியாவிலும் உண்டு. ஒவ்வொரு இடங்களிலும் இராமாயண மகாபாரதத்தினை அடிப்படையாகக் கொண்ட கிளைக் கதைகளை தொன்மங்களாகக் கொண்டு ஆற்றுகைகள் இடம்பெறுகின்றன.

எடுத்துக்காட்டாக, ராம நாடகம், பீஷ்மர் அம்புப் படுக்கை போன்றன குறிப்பிடத்தக்கது. ஆனால் இவை அதற்குள் உள்ள சாதியம், பெண்ணடிமைத்தனம் என்பவற்றை வெளிப்படுத்துவதில்லை. நாம் அனைவரும் இதிகாசம், புராணம், வழக்காற்றியல் என்பன கூறுவனவற்றை அப்படியே

எடுத்துக்கொள்கிறோம், அதற்கு உள்நோக்கி குறித்த பாத்திரத்தினை உள்வாங்கி அதற்குள் இருக்கும் நியாயப்பாடு என்ன?, என்ன அரசியல் பின்பற்றப்பட்டுள்ளது, இன்னொரு சமூகம் எவ்வாறு அதனைப் பார்க்கின்றது என்பதனை நாம் அறிவதில்லை. எடுத்துக்காட்டாக, ராவணன் தொன்மத்தினை எடுத்தால், ராவணன் இதிகாசங்களில் கொடூரமானவனாகவும் பெண்ணைக் கடத்திய துஷ்டனாகவே வர்ணிக்கப்படுகின்றான். ஆனால் மாறாக நாம் அவனை ஒரு மருத்துவனாக, கல்வியில் சிறந்தவனாக, அரசனாக, உலகிலேயே முதன் முதலில் புஷ்பக விமானம் எனும் விமானத்தைக் கண்டுபிடித்தவனாக, ஒரு சிவபக்தனாக அவனை போற்ற வேண்டும்.

நாம் தமிழர்கள் என கூறிக்கொண்டு இராவணனை போற்றாதவிடத்து இன்று சிங்கள மக்கள் போற்றுகின்றார்கள், அவனை வழிபடுகின்றார்கள். ஒரு ஆரிய மயமாக்கம் ராமனை கடவுளாக உருவகிப்பதற்கு ஒரு கதையை பின்னியிருக்கின்றது என்றே கூறலாம். ஒரு அண்ணனாக இருந்து கொண்டு நோக்கின், தனது தங்கைக்கு முலையையும் மார்பை அறுத்துக் கொடூரமான செயலை செய்தவர்களை கண்டு எந்த அண்ணன்தான் துடிக்காமலும் அதற்குப் பழிவாங்காமலும் இருப்பான். இங்குதான் சமஸ்கிருத மயமாக்கம் வெற்றி பெறுகின்றது. எங்களை நாங்களே எதிரியாகப் பாவிக்கும் அளவிற்கு சமஸ்கிருத மயமாக்கமம் எம்மை ஆழ்த்தியுள்ளது என்றே கூறலாம். இரணியனின் இறந்த நாளை நாம் அனைவரும் தீபாவளியாக கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இந்நிலையில்தான் மாற்றுக் கருத்துக்களை மையப்படுத்தி கட்டவிழ்த்து, பின்நவீனத்துவ கருத்துக்கள், பின் காலனித்துவகருத்துக்கள், காலனித்துவ நீக்க கருத்துக்களை உள்வாங்கி தொன்மங்கள் எவ்வாறு கட்டவிழ்க்கின்கிறது. கட்டவிழ்த்தல் என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர் பூக்கோ என்பவராவார்.

தமிழ் நவீன நாடகங்களைப் பொறுத்தவரையில் இதிகாச, புராண, மரபுத் தமிழிலக்கிய மறுவாசிப்பு என்பதற்கு வலுவான தொடர்ச்சி உண்டு எனலாம். உண்மையில் இந்த மறுவாசிப்பு என்பது தனித்த ஒன்றாக நிகழவில்லை மாறாக தமிழக அரசியற் சூழலில் ஒரு பகுதியாகவே நிகழ்ந்தது. இன்றைய புராண இதிகாச, மரபு தமிழிலக்கிய மறுவாசிப்பிற்கு வித்திட்டவர் ஈ.வெ.ராமசாமிப் பெரியார் ஆவார். அவருடைய எதிர்நிலை நோக்கும் பார்வையும் பல புனிதங்களைக் கேள்விக்கு உள்ளாக்கின. புராண, இதிகாசங்களின் மீதான பக்திப்படுகை மிகுந்த அதிர்ச்சியை அடைந்தன எனலாம். அவருடைய கேள்விகள் பலவற்றைத் தர்க்க நியாயங்களுடன் நாடகங்கள் முன்வைத்தன (எடுத்துக்காட்டு - கீமாயணம்).

சமூக நல்லிணக்கத்திற்கான ஒரு நியாயத்தை, வித்தியாசங்களை, ஒரு வாழ்வியலோடு இணைந்ததை, அனைவரும் ஏற்றுக் கொள்கின்ற பேசுகின்ற இலக்கியங்கள் நாடகங்கள்தான். இது மிக முக்கியமான இடத்தினை பெறுகின்றது. இவ்வாறு தொன்மங்களை சமகால நடைமுறைக்கு ஏற்றவாறு மையப்படுத்தி எழுதுகின்ற வழக்கமாக காணப்படுகின்றது. மகாபாரத கதைகள் எல்லாம் தமிழ்நாட்டில் திட்டமிட்டு பரப்பி கதைகள் என ஓர் ஆய்வு குறிப்பிடுகிறது. அதிலே, “இவ்வாறு அதிகாரத்திற்கு எதிரான சண்டையை பிடிப்பதற்கு சண்டை நுட்பம், போர் தொடர்பான உத்தி, அதில் பயன்படுத்தப்பட்ட மூலோபாயங்கள், மக்கள் மத்தியில் பரப்புவதற்காக திரௌபதி அம்மன் கோயில்களை உருவாக்கி பாரதக் கதைகளைப் பகலில் படித்தும் இரவில் கூத்தாடக ஆடியும் காட்டப்பட்டுள்ளது.” **(தகவல், சந்திரகுமார்)**

பிற்காலத்தில் படைப்பாளிகள் தொன்மக் கதைகளை கட்டவிழ்த்து புதிய முறையில் நாடகங்கள், ஆற்றுகைகள் எழுதுகிறார்கள், மற்றும் அரங்கேற்றுகிறார்கள். அவர்களுள் மௌனகுருவும் ஒருவராவார். எடுத்துக்காட்டாக இராவணேசனைக் குறிப்பிடலாம். கிரேக்கத் துன்பியல் நாயகனை எடுத்து, அதாவது துன்பியல் நாயகன் என்றால் தன்னில் உள்ள குறைபாடு காரணமாக தன்னை இழக்கின்றவன் என்ற பண்பினை இந்த நாடகத்தில் பயன்படுத்தியுள்ளார். அத்துடன் அங்கதன், “ராமனின் கால் தொழுது வாழ்” என்று உரைப்பது ஒருவனின் தன்மானத்தை எடைபோட்டு பார்க்கின்ற விடயமாகவும் இங்கு காணப்படுகின்றது. அத்துடன் பெண்கள் தொடர்பான பெண்ணியவாதம், போரால் இரண்டு தரப்பிற்கும் இழப்பு தானே என மண்டோதரி ஊடாக நியாயம் கேட்டல், சண்டைகளால் சாதாரண மக்கள் தானே அளிக்கப்படுகின்றனர் போன்ற பல்வேறு விடயங்கள் அந்நாடகத்தின் ஊடாக பேசப்படுகின்றது. ஒரு தொன்மக் கதை சம காலத்திற்கு ஏற்றவாறு ஒரு விமர்சன தன்மையுடன் பார்க்கும் போக்கு மிக முக்கியம் இந்தப் பண்பு மௌனகுருவின் நாடகத்தில் உள்ளது.

இளைய பத்மநாதனின் கந்தன் கருணை நாடகத்தையும் குறிப்பிடலாம். "முருகனே சாதிக்கு ஆதரவாக உள்ளாரா?" என்று வினாக்கள் எழுப்புவதன் மூலம் சாதியத்திற்கு எதிரான நாடகமாக இது தோற்றம் பெற்றுள்ளது என்பதனை அறியலாம். அத்துடன் நிலாந்தனின் "நவீன பத்மாசூரன்" நாடகத்தினையும் குறிப்பிடலாம். இந்நாடகமும் சமகால அரசியல், பண்பாடு, கலாசாரம், பெண்ணிலைவாதம் போன்றவற்றை நோக்காகக் கொண்டு எழுதப்பட்டதாக அமைந்துள்ளது.

இதுபோல் மௌனகுருவின் நாடகங்களிலும் பெண்ணியம் தொடர்பான கருத்துக்கள் முன்வைக்கப்படுவதுடன் பெண்ணியத்தை முன்னிறுத்தித் தனிநாடகம் மேடையேறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

1986 சக்திபிறக்கிறது பெண்ணிய அரசியல் பேசியது. முதன்முறையாக 1986 இல் மார்ச் எட்டாம் திகதியை யாழ்ப்பாணப் பெண்கள் ஆய்வு வட்டம் நினைவுகூர்ந்து கொண்டாடிய காலத்தில் யாழ்பல்கலைக்கழக மாணவர்களும் வெளியிலிருந்த முற்போக்கான பெண்களும் முன்னணியில் நின்று இதனைக் கொண்டாடிய காலமாகும். அடக்கப்பட்ட பெண்களின் வீறார்ந்த விடுதலையை சக்தி பிறக்குது நாடகம் பேசியது. சக்திபிறக்குது நாடகத்தின் இறுதிக்காட்சி பெண்கள் ஆண் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று கழிக்கூத்தாடும் காட்சி, அதில் பின்வரும் பாடலை அவர் எழுதியிருந்தார்.

பெண்கள் ஓர் அணியிலே வந்தனர்
எல்லோரும் ஒன்று திரண்டனர்
தம்முடைய தலைவிதியைத் தாமே திருத்திட
வன்மமோ டின்றிவர் எழுந்தனர்

தமிழ் மக்களுக்கான தேசிய அரங்கினை கட்டமைக்கும் பிரயத்தனம் இராவணேசன் மூலம் பேராசிரியர் மௌனகுரு அவர்களில் தென்பட்டது. இவருக்கு பாரம்பரிய அரங்க வடிவங்களில் இருந்த ஆழமான பரிட்சயம் சர்வதேச ரீதியில் நாடகத்தில் சமகாலத்தில் ஏற்பட்ட மாற்றங்ளை உள்வாங்கி நாடகம் தயாரிக்கக் கூடிய திறன் என்பன அவரை இம்முயற்சிக்கு தூண்டியது. இங்கு நாட்டார் வழக்காக இருந்த வடமோடிக் கூத்து வடிவத்தை புதிய அரங்கச் சூழலின் தேவைக்கு ஏற்ப மாற்றங்களுக்குட்படுத்தி கட்டமைப்பதற்கான பிரயத்தனத்தையே காண்கின்றோம். இக்கட்டுரையின் அடுத்த நிலையில் இராவணேசன் நாடகத்தில் கலையுருவாக்கத்தில் நடந்தேறியது என்ன என்பதனை நோக்குவோம்.

இராவணேசனின் கலையுருவாக்கத்தில் பாத்திர உருவாக்கம், பாத்திரங்களுக்கிடையேயான ஊடாட்டம் பாத்திரங்களுக்கு இடையேயான மோதல் (முரண்பாடு) என்பன சிறப்பான முறையில் கட்டமைக்கப்பட்டு இருந்தன. சீதையை இராவணன் சிறை பிடிப்பதும் சிறையில் இருக்கும் சீதையை இராமன் மீட்க எடுக்கும் பிரயத்தனங்களும் அப்பிரயத்தனத்தின் விளைவாக ஏற்பட்ட யுத்த நிகழ்வுகளுமே நாடக இயக்கமாக அமைந்திருந்தன. **(ஆய்வாரள் அவதானம்)**

அரசியல் என்பதன் அர்த்தம் மிகப்பரந்தது. 1968 இலிருந்து எனது நாடகங்களும் ஆற்றுகைகளும் அரசியலே பேசின என நான் நினைக்கிறேன். **(தகவல், மௌனகுரு.சி)** அரசியல் இல்லாமல், அரசியல் பார்வை இல்லாமல் எதுவும் இல்லை மனிதர் அடிபடையில் அரசியல் பிராணி என்றார் அரிஸ்டோட்டில். அரசியல் மிருகமாக மனிதர் இருப்பது இயற்கையின் நியதி. அறச்சீற்றமும், வெளிப்பாட்டுத்திறனும் மிகுந்த எவரும் அரசியல் பிராணிகளாகவேயிருப்பர். முக்கியமாக கலைஞர்கள் இதற்கு விதிவிலக்கல்ல. கலைஞர்கள் நுண்ணுணர்வு மிக்கவர்கள். மற்றவர்களுக்குத் தெரியாத ஒன்று இவர்களுக்குத் தெரிந்துவிடும் எந்தக்கலைஞனது கலைப்படைப்பையும் அடியில் கூர்ந்து நோக்கினால் ஒரு அரசியல் ஓடிக்கொண்டேயிருக்கும். சில வேளைகளில் வெளிப்படையாக சில வேளைகளில் மறைவாக அல்லது பூடகமாக இவரது முதல் நாடகம் இவ்வகையிலே அமைந்த சங்காரம் ஆகும். 1968 இல் மேடையேறிய சங்காரம் தமிழர் மத்தியில் வேரூன்றிப்போன சாதி, அரசியல் பேசியது, அத்தோடு தேசிய ரீதியான இனப்பிரச்சனை உலகரீதியான மதப்பிரச்சனை, நிறப்பிரச்சனை என்பன பற்றியும் பேசியது.

இதுபற்றி பின்னாளில் எழுதிய பேரா.சிவத்தம்பி,

"அரங்கு அரசியல் பேசுகிறது"

எனக்குறிப்பிட்டமை ஞாபகம் வருகிறது எனக் குறிப்பிட்டார். 1982 இல் இவர் யாழ்ப்பாணத்தில் சங்காரம் போட்டபோது அது பிரதானமாக வர்க்க அரசியல் பேசியது. தேசிய சர்வதேசிய அரசியலையும் அது பேசியது. வர்க்கப் போராட்டத்தில் வர்க்க அரக்கன் ஒழிக்கப்படல் மூலமே சமூகவிடுதலை சாத்தியமென்று அது பேசியது. அன்று என்னை வழி நடத்திய அன்றைய அரசியல் சித்தாந்தங்களின் தாக்கம் அது **(தகவல். மௌனகுரு.சி).**

இம் முரண்நிலையூடாக இராவணன் என்னும் பாத்திரத்தினை முதன்மைப்படுத்தி சகல பாத்திரங்களினதும் குணாம்ச வளர்ச்சியும் சிறப்பான முறையில் வளர்த்தெடுக்கப்பட்டிருந்தது. யுத்தத்தில் எவ்வாறாயினும் வெற்றி கொள்ள வேண்டும் என்னும் போர்க்குணம் கொண்ட இராவணனின் உணர்வுநிலை. அதே நேரம் மகன், சகோதரனின் இழப்புக்காக வருந்துதல், இருந்தும் சோகத்தால் துவண்டு போகாத மனைவியின் வார்த்தையைக் கேட்டு எதையும் செயற்படுத்த வேண்டும் என்னும் ஆர்வம், தனது வெற்றியிலும் புகழிலும் உள்ள பேர்அவா என இங்கு இராவணனின் குணாம்சங்கள் வளர்த்தெடுக்கப்படுகின்றன. அது போன்று தந்தையின் தோல்வி தனக்கு ஏற்பட்ட தோல்வியாகக் கருதி தனது உயிரையே விடத் தயாராக இருக்கும் மகன் இந்திரஜித்து, செஞ்சோற்றுக் கடனுக்காக நல்னுயிர் களம் விட்ட தம்பி கும்பகர்ணன் என சகல பாத்திரங்களினதும் குணாம்ச வளர்ச்சியையும் சிறப்பாகக் காணக்கூடியதாக இருந்தது. **(பார்த்தீபராஜா.கி, 2003)**

ஆட்டத்தில் வடமோடிக் கூத்தின் ஆட்டக் கோலங்கள் பல பயன்படுத்தப்பட்டதுடன், பாடலில் இக் கூத்து வடிவத்தின் பல பாவகைகள் சேர்க்கப்பட்டன. ஆடலில் காணப்பட்ட துல்லியம், நேர்த்தி, உறுப்பமைதி என்பனவற்றையும் பாடலில் காணப்பட்ட மென்மை, கனிவு, இனிமை, உறுதி, குரல் வேறுபாடு சொற்பொருள் அழுத்தம், தெளிவு என்பனவற்றையும் பாரம்பரிய கூத்து வடிவங்களில் காண முடியாதபடி ஒழுங்கமைத்திருந்தார் நெறியாளர், இங்கு இவையிரண்டும் பாத்திரங்களின் உணர்வு வெளிப்பாட்டை வெளிப்படுத்தும் விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. **(தகவல், ரவிகுமார்)**

நாடகமும் ஆற்றுகையும் ஒரு உணர்வு சம்பந்தப்பட்ட, ஒரு அழகியல் சம்பந்தப்பட்ட விடயமாகும். அந்த அழகியல் உணர்வு என்றும் ஒரே மாதிரி காணப்படாது. மாறிக் கொண்டேதான் இருக்கும். அதே போன்று காலத்துக்கு ஏற்றாற்போல் ஒரு படைப்பாளி திரும்பத் திரும்ப ஒரு படைப்பினை உருவாக்கம் செய்யும் போதும் அல்லது மேடையேற்றும் போதும் புதிதாக மாற்றங்களையும் புதிய உத்திகளையும் கையாளுவது கட்டாயமான ஒரு விடயமாகும். படைப்பாளிக்கு என ஒரு style காணப்படும் அந்த style ஒவ்வொரு தடவையும் மாறும் அத்தகையதே ஒவ்வொரு காலத்தின்போது மௌனகுருவின் நாடகங்கள் ஒவ்வொரு விதமான உத்திகளையும் கருத்துக்களையும் வெளிப்படுத்தி நிற்கின்றதனைக் காணமுடிகின்றது. அதாவது பாரம்பரிய நாடக்கூறுகளை நவீனப்படுத்தி ஆராய்வதாக இவரது நாடகம் காணப்படுகின்றது. **(தகவல், ரவிகுமார்)**

தொன்மத்தினை ஆராய்ந்து, பகுப்பாய்வு செய்து, வியாக்கியானம் செய்து, சமூக கருத்தையேற்றி செயற்பட வேண்டும். அந்த வகையில் மௌனகுரு அவர்கள் தனது நாடகங்களில் தொன்மங்களை வியாக்கியானப்படுத்துவது முக்கியமான ஒரு அம்சமாக குறிப்பிடப்பட வேண்டியதாகும். எங்களையே துன்பப்படுத்துகின்ற, எங்களையே அடிமைப்படுத்துகின்ற, எமது சூழலை நிலைகுலைய வைக்கும் கதைகளை எம்மால் நேசிக்க முடியாது. அதற்குள் ஊறியுள்ள மக்கள் இதை எதிர்ப்பார்கள். அத்துடன் பன்மைத்துவத்தை எற்பவர்கள் அதை ஏற்றுக் கொள்வார்கள். அரங்க சமூகத்தில் உள்ள ஆற்றுகைகளை உள்வாங்கி அவற்றை அனைவரும் அறியும் வண்ணம் நவீனப்படுத்தி ஆற்றுகை செய்தல் அடிப்புற பண்பாட்டு வெளியில் பரவலாக்கம் செய்தல் வேண்டும் என திரு.சந்திரகுமார் குறிப்பிடுகிறார். **(தகவல், சந்திரகுமார்)**

மௌனகுரு அவர்கள் எதையும் ஒரு தத்துவப் பின்னணி இன்றியோ ஒரு விவாத அடிப்படை இன்றியோ தொன்மங்களை தனது நாடகங்களில் விருப்பத்திற்கேற்ப மாற்றாது பயன்படுத்துகின்றார். அதற்கு பெரிய வரலாற்றுக் காரணமும் உண்டு. வலுவான பின்புலமும் உண்டு. சார்வாகன் என்ற நூலில் சார்வாகன் கதாபாத்திரத்தை அந்த அடிப்படையிலேயே அவர் கட்டமைத்து இருக்கின்றார். **(தகவல், க.மோகனதாசன்)**

இளைய பத்மநாதனின் ‘‘மீண்டும் இராமாயணம் மீண்டும் பாரதம்’’ குறிப்பிடத்தக்க நாடகம் ஆகும். இராமாயணக் கதை நடத்த வந்த கூத்துக் குழுவினரிடம் பார்வையாளர்கள் எவ்வளவு நாளைக்குத்தான் புராணக் கதைகளை ஆடுவீங்க? எங்க கதையை ஆடுங்க’’ என்று கூற நாடகத்திற்குள் நாடகமாக துகிலுரிதலும் கிருஷ்ணன் தூதும் நடக்கின்றன. இராவணனாக நடித்தவர் துச்சாதன வேடத்தையும் சீதையாக நடித்தவர் திரௌபதி வேடத்தையும் ஏற்பது என்ற முடிவில் ஒரு சிறு குழப்பமேற்பட்டு.

இராவணன் துச்சாதனன் ஆகலாம்
வேஷம் பொருந்தும்
ஆனால் சீதை பாஞ்சாலியாக முடியாது

ஏன் முடியாது
இரண்டும் தலைவிரிகோலம்தான்
இரண்டுக்கும் ஒரே வேஷம்தான்

சீதையாக நான் நடிக்க வந்தேன்
துகில் உரியும் காட்சியில்
என்னால் நடிக்க முடியாது.

கேட்டா துகில் உரிவது
போய்நில் அந்தப் பக்கம்
இன்னும் எத்தனை பாஞ்சாலிகள் வேண்டும்
கொண்டுவா பெண்களை

என்று உரையாடல் நீள்கிறது. இராவணனையும் துச்சாதனனையும் இணை நிலையாகக் கொள்ளும் வெகுசன மனோபாவம் சீதையையும் பாஞ்சாலியையும் அவ்வாறு கொள்ளாமல் எதிர்நிலை முரணாகக் கொள்கிறது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இளையபத்மநாதனின் இந்நாடகத்தில் துகிலுரியும் காட்சி, மனித உரிமைகள் பறிக்கப்படுவதைக் குறித்து நிற்கிறது. பெண்ணை மானபங்கம் செய்தல் என்ற இரண்டாம் நோக்கிலிருந்து இது புதிய, முற்றிலும் மாறுபட்ட நோக்கு என்பதைக் குறிப்பிட வேண்டும்.

குடி உரிமை, வாக்கு உரிமை, மொழி உரிமை, மத உரிமை, கல்வி உரிமை, தொழில் உரிமை நில உரிமை, மனித உரிமை என்பன பாஞ்சாலி துகிலுரியப்படும் போது துச்சாதனர்களால் உச்சரிக்கப்படும் வார்த்தைகள் ஆகும். மகாபாரதத்தின் பாஞ்சாலிசபதம், மகாகவி பாரதியால் சுதந்திரப் போராட்டக் குறியீடாய் பயன்படுத்தப்பட்டதைப் போல, குறிப்பிட்டதொரு தேசிய இனத்தின் வாழ்வுரிமைகள் அனைத்தும் பறிக்கப்படுதலைக் குறிக்க இப்பகுதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

1990 - களில் எழுதப்பட்ட கலாநிதி. சி.மௌனகுருவின் ‘‘வனவாசத்தின் பின்’’ என்ற நாடகப் பிரதி, துகிலுரியும் காட்சியினைப் புதுமாதிரியாகச் சித்திரிக்கிறது. அதாவது கண்ணன் அல்லது கிருஷ்ணன் என்ற இதிகாசப் பாத்திரம், மக்கள் திரளைக் குறிப்பதாக மறுவாசிப்புச் செய்யப்பட்டுள்ளது. தனி நபர்களால் வரலாறு மாற்றப்படுவதில்லை மாறாக மக்கள் திரளின் ஒருங்கிணைந்த செய்கையே வரலாற்றைப் புரட்டிப் போடுகிறது என்ற சமூக சிந்தனை இவ்வாறான துகிலுரியப்படுதலை இப்படிச் சித்திரிக்கின்றது. மறுவாசிப்புக்குப் பலம் சேர்த்து நிற்கிறது. வனவாசத்தின் பின், பாஞ்சாலி துகிலுரியப்படுதலை இவ்வாறு சித்திரிக்கின்றது,

துச்சாதனன் ஒரு தரம் கண்ணா! கண்ணா! என்று அலறுபவர்களைப் பார்க்கிறான். மீண்டும் பாஞ்சாலியின் அருகில் சென்று கீழே தள்ளி, மேலே தூக்கி நிறுத்தி துகிலினை வேகமாக வெறியுடன் உரிவதுபோலப் பாவனை தொடங்குகின்றான்.

மக்கள் மத்தியிலிருந்து நிறுத்து நிறுத்து! விடோம்! துகிலுரிய விடோம்” என்ற சத்தங்கள் எழுகின்றன.

பார்வையாளர்கட்குள் இருந்து சேலைகள் மேடைக்குள் எறியப்படுகின்றன……

மேற்குறித்த பகுதி, நெட்டை மரங்களென நின்றிருந்ததாக பாரதி சித்திரித்த மக்கள் வெகுண்டெழுந்து பாஞ்சாலிக்கு உதவியதாகச் சித்திரிக்கிறது. இவ்வாறான சித்திரிப்பு மிக முக்கியமான தெய்வீகத் தன்மைகள் கலைக்கப்பட்ட சித்திரிப்பாக ஆகின்றது எனலாம். **(பார்த்தீபராஜா.கி, 2003)**

மகாபாரதக் கிளைக்கதைகளில் ஒன்றான நளாயினிக் கதை தமிழ் நவீன நாடகத்தில் மிக நுட்பமாகக் கையாளப்பட்டிருக்கிறது. எம்.எஸ்.காந்திமேரியின் ''நளாயினி என்ற ஒருத்தி…..தீ'' என்ற நாடகப் பிரதி நளாயினி கதையினை விரிவாகப் பேசுகின்றது. மௌத்கல்யரிஷியின் துன்புறுத்தல்களில் மனம் கோணாது சேவை செய்யும் நளாயினி, ரிஷியைத் தாசி வீட்டுக்கும் கூடத்தூக்கிச் செல்கிறாள். என்னை விடப் புகழ் பெற்ற உன்னைச் சோதிக்கவே இதைச் செய்தேன் என ரிஷி கூறும் பொழுது நளாயினி வெடிக்கிறாள்.

> **"தங்களின் சரிபாதியான நான் புகழ்பெறக் கூடாதா? யாரும் என்னைப் பாராட்டக் கூடாதா? ஆணும் பெண்ணும் சமம் என்று சொல்கிறார்களே, ரிஷியான தாங்கள். கூட பெண்ணைச் சமமாக நடத்தமாட்டீர்களா?"**

என்று கேள்விகளை அடுக்குகிறாள். சூரியன் உதித்தால் தான் மாண்டுபோவோம் என்ற நிலையில் மௌத்கல்யரிஷி நளாயினியினது கற்புத்திறத்தால் சூரியனை உதிக்கவிடாமற் செய்ய வேண்ட.

> **"மௌத்கல்யரிஷியே, வெட்கமாக இல்லை. பெண்ணிடம் காப்பாற்றச் சொல்லிக் கெஞ்சுகிறாய். எப்போதும் பெண்ணை இழிவாகவே பேசுவாயே! அந்தப் பெண்ணால் காப்பாற்றப்பட்டால் அது இழுக்கில்லை?"**

என்று குமுறுகிறாள். ஒருவரின் சுயநலத்திற்காக உலகம் இருளில் மூழ்கக் கூடாது என்று சூரியனை விரைந்து வருமாறு அழைக்கின்றாள். சூரியன் மேலே வர வர ரிஷியின் ஒலம் எழுந்து அடங்குகிறது.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என கணவன்மாரது வேலை நாயாக மனைவி இருந்தால் அவளுக்கு **கற்புக்கரசி** என்ற பட்டம் கிடைக்கின்றது. எந்தக் கணவனுக்காக ஓடி ஓடிப் பணிவிடை செய்தாளோ, எந்தக் கணவனுக்காக தாசி வீட்டிற்கு கூடை சுமந்தாளோ அந்தக் கணவனின் ஆண்திமிரை அழித்தொழிப்பில் அடக்குகின்றாள் நளாயினி. இவ்வாறான பெண்ணிலைவாத நோக்குகள் மகாபாரத மறுவாசிப்பில் புதியகாணுவுகளைத் திறந்துவிட்டுள்ளன என்பது கண்கூடு, **(ஆய்வாளர் அவதானம்)**

இது போன்றே சரிபாதி எனும் நாடகமும், மௌனகுரு அவர்களால் பெண்கள் ஆண்களின் சரிபாதி என்ற விடையத்தினை எடுத்துரைத்து பெண்கள் இல்லையேல் ஆண்களால் எதுவும் செய்முடியாது என்பதனுடன் அர்த்தநாதீஸ்வரத் தொன்மத்தினையும் எடுத்துரைப்பதனைக் காணலாம். அது போன்று சக்தி பிறக்குது நாடகத்தில் சாக்தத் தொன்மம் கையாளப்பட்டு பெண்கள் விடுதலை பற்றியும் சமூகத்தில் பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகள் பற்றியும் பேசுவதாக அமைகின்றது. **(ஆய்வாளர் அவதானம்)**

ஆற்றுகைகளை எடுத்து நோக்கினோமானால், ஆற்றுகைகளிலும் உள்ள தொன்மங்களினைச் சற்று மாற்றி அமைத்து அதற்கு ஒரு அழகினைக் கொடுக்கும் விதத்தில் மௌனகுரு அவர்களால் செய்யப்பட்டுள்ளதை காணலாம். அதாவது உணர்வுகளை வெளிப்படுத்த ஒவ்வொரு விதமான இசை கருவிகளை பயன்படுத்தியுள்ளதனைக் குறிப்பிடலாம். எடுத்துக்காட்டாக, உடுக்கு, பறை, சங்கு, புல்லாங்குழல், ரபான் என்பனவற்றுடன் மேலைத்தேச இசைக்கருவிகள் சிலவற்றினையும் பயன்படுத்துகின்றார். அத்துடன் இசைகளை விட்டுவிட்டு இசைப்பதன் ஊடாக உணர்வுகளை வெளிப்படுத்துகின்றார். அடுத்து தட்டிகளை அல்லது ஸ்கிரீன்களை மாற்றுதல் மற்றும் அபினயித்தல் என்பவற்றின் ஊடாக அவர் சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளதனை காணலாம். **(ஆய்வாளர் அவதானம்)**

ஆற்றுக்கலைகளிலும் சரி நாடகங்களிலும் சரி கலைஞர்களின் ஒப்பனையானது எந் நிகழ்விற்குரியதோ அந்நிகழ்விற்கென பாரம்பரிய உடைகளை புதிய முறையில் (புத்துருக் கொடுத்து நவீனத்துவம் கலந்து) வடிவமைத்து அணிவதுடன், குறித்த பாத்திரங்களிற்கேற்ற ஒப்பனைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. பாத்திரங்களின் ஆடை, அலங்காரம்

மோடிப்படுத்தப்பட்டதாக அமைந்திருந்தது. எடுத்துக்காட்டாக சங்காரத்தில் அரக்கர்களாக வந்தவர்கள் கொம்புகள் வைத்து கருமையாக தோற்றத்துடன் அதற்கேற்றாற்போல் ஆடையணிந்து, கொடூர தோற்றத்துடன் காட்சியளிக்கின்றனர். நம்மைப்பிடித்த பிசாசுகள் நாடகத்தில் வரும் பிசாசுகளும் கிட்டத்தட்ட இதே ஒப்பனைகளைக் கொண்டவர்களே. இவர்கள் என்னோக்கில் எமலோகத்தில் பணிபுரியும் பணியாட்களை நினைவுபடுத்துகின்றன. **(ஆய்வாளர் அவதானம்)** பாத்திரங்களின் இயல்பு, உணர்வு நிலை, என்பனவற்றை சிறப்பாக வெளிக்காட்டியது. நாடக ஓட்டத்தின் தொடர்ச்சியைப் பேணுவதிலும் நாடக கதை விபரிப்பை இலகுபடுத்தவும், பாத்திரங்களின் குறித்த கணப்பொழுதிலான உணர்வு நிலையினை வெளிப்படுத்தவும் எடுத்துரைஞரின் பங்களிப்பு காரணமாக அமைந்திருந்தது. மேடையில் பின்னணியில் இருந்த மேற்கத்திய வாத்தியங்களுடன் இணைந்த தமிழ் கலாசாரப் பாரம்பரியத்தில் முக்கியமான வாத்தியங்களாக பயன்படுத்தப்படும் மத்தளம், சல்லரி, பறை என்பன தளர்ச்சியற்ற நாடக இயக்கத்திற்கு மிகுந்த பங்காற்றியது. இது போன்றே சங்காரம் நாடகத்திற்கான ஆடை, ஒப்பனைகளும் இவ்வாறே அமைந்திருந்தன. ஒரு நரகலோகத்தில் பணிபுரியும் நரகர்களை நினைவுபடுத்துவது போன்று அமைந்திருந்ததனையும் காணலாம். **(தகவல், அம்மன்கிளி முருகதாஸ்)**

இவர் தனது நாடகங்களிலும் ஆற்றுகைகளிலும் சாதியடக்குமுறை, ஏற்றத்தாழ்வு, பெண்ணியல்வாதம் போன்ற சமூகப்பிரச்சினைகளை ஆழமானதொரு படைப்பாகக் கொடுக்கும் போது அனைவரும் அறிந்துகொள்வர். இலக்கியமாக (வாசிப்பாக) பார்ப்பதை விட கலையாககப் பார்க்கும் போது கண், செவி இரண்டின் மூலமும் உள்வாங்கிக் கொள்ளப்படுகின்றது. இதனூடாக மனதில் ஆழமான பாதிப்பினையும் ஏற்படுத்துகின்றது. இதற்காக மௌனகுரு அவர்கள் பாத்திர உருவாக்கம், பாத்திர வடிவமைப்பு, ஆடை, ஒப்பனை, இசைக் கருவிகள், தாளக்கட்டுக்கள், ஆட்ட முறைகள் என்பன பாரம்பரிய முறையிலும் நவீன முறையிலும் மேற்கொள்ளப்பட்டு ஒரு புதிய முறை மேடையேற்றங்களைச் செய்வதன் மூலம் அனைவரும் ஈர்க்கப்படுகின்றனர்.

தொன்மங்களின் தொடர்ச்சி தொன்மம் என்பது அப்படியே இருக்கக் கூடாது. அது தொடர்ச்சியாக பேணப்படும் போதுதான் நிலைத்து நிற்கும். அதாவது பேண்தகு நிலையில் இருக்கும் என குறிப்பிடுகிறார். ஆகவே தொன்மத்தைப் பாதுகாப்பதற்கும், அதனது தொடர்ச்சியை பேணுவதற்கும், தொன்மங்கள் வாயிலாக பண்பாடுகளையும், பாரம்பரியம், வரலாறு போன்ற விடயங்களை நிலை நிறுத்துவதற்கும் அவர் நாடகங்களை பயன்படுத்துகிறார். **(ஆய்வாளர் அவதானம்)**

இவ்வாறு இவர் தொன்மங்களை வியாக்கியானப்படுத்துவது ஒரு படைப்பாளியாக ஒரு கலைஞனிற்கான ஆக்க முயற்சிகளில் அவருக்கான சுதந்திரம் காணப்படுகின்றது. இவர் தொன்மங்களை வெறுமனே ஒரு நாடகத்திற்காகவும் ஆற்றுகைக்காகவும் மட்டுமன்றி சமூக நெறிப்படுத்தலிற்கும், சமகாலச் சூழ்நிலையை எடுத்துரைப்பதற்கும், பெண்ணிலைவாதக் கருத்துக்களை எடுத்துரைப்பதாகவும் அமைத்துள்ளார் என்பது கண்கூடு. ஆற்றுகைகளிலும் அரசியல்கள் சில காணப்படுகின்றன. உன்னித்து நோக்குவோர் கண்ணகிகுளிர்த்தி, கிழக்கிசை, லயம், வானவில்லின் வர்ணங்கள், மண்நோக்கிய வேர்களும் விண்ணோக்கிய கிளைகளும். தமிழிசை யாத்திரை எனும் ஆற்றுகைகளுக்குள்ளும் ஓர் அடிமட்ட மக்கள் அரசியல் உட்பொதிந்திருப்பதைக் காணலாம். **(ஆய்வாளர் அவதானம்)**

கண்ணகி குளிர்த்தி ஆகமம் சாரா கோவிலான கண்ணகி கோவில்களில் கிராமப்புற இசைஞர்களினால் பாடப்பட்டு வந்த ஓர் கிராமிய இசையாகும். ஆகமம்சார் மேலாதிக்கம் நிறைந்த இந்து மதத்திற்கெதிரான மக்கள் பக்தி இசையாலான குளிர்த்தி இசையை அதனைச் செம்மைப்படுத்தல் மூலம் அதனை மரபார்ந்த செந்நெறி இசைக்குச் சமாந்திரமாக வைக்க எடுத்துக்கொண்ட முயற்சியே அது.

கிழக்கிசையும் இவ்வாறே. சாதாரண கிராமியமக்ககள் மத்தியில், விழிம்பு நிலைத் தமிழர் மத்தியில் பயில் நிலையிலுள்ள பறை உடுக்கு, சவணிக்கை போன்ற வாத்தியங்களையும் பாடல்களையும் அழகுறச் செம்மைப்படுத்திக் கூறவந்த ஆற்றுகை அது. அதன் பின்னால் ஒரு மக்கள் அரசியல் இருக்கிறது. அத்தோடு கிழக்கிசை என்பது ஒரு அரசியல் அடையாளமும் கூட. கிழக்கிசையின் அடிப்படையிலிருந்து அதனை ஈழத் தமிழிசையாக. மன்னார், முல்லைத்தீவு யாழ்ப்பாணம், வவுனியா, மலைநாடு ஆகிய அனைத்துப் பிரதேசங்களிலும் வழக்கிலுள்ள இசைகளையும் இவற்றில் தந்துள்ளார். **(ஆய்வாளர் அவதானம்)**

மௌனகுரு அவர்கள் பௌராணிகத் தொன்மங்களை அடிப்படையாகக் கொண்டு நாடகங்கள் ஆற்றுகைகளை தொன்மங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொண்டுள்ளதனை இவற்றின் மூலம் அறிந்து கொள்ள முடிவதுடன் இவர் இந்துத் தொன்மங்களைப் போன்று, கிறிஸ்தவத் தொன்மங்களையும் (பராபஸ் நாடகம்), இஸ்லாமியத் தொன்மங்களையும் பயன்படுத்தி இவ்வாறு நாடகங்களையும் ஆற்றுகைகளையும் மேற்கொண்டுள்ளமையும் இங்கு நோக்கத்தக்கது. இருப்பினும் இந்துத் தொன்மங்களையே அதிகமாகக் கையாண்டு தனது படைப்புக்களை மேற்கொண்டுள்ளார் என்பது கண்கூடு.

நிறைவுரை

நாடகம் என்பது அவைக்காற்றுக் கலைகளில் ஒன்றாகும். இது பார்ப்போனின் சராசரி அறிவிற்கு அக்கலை விளங்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். ஒரு நாடகம் எழுதப்படுவதாலோ அல்லது பாடப்படுவதாலோ, நாடகம் ஆகாது என மௌனகுரு அவர்கள் குறிப்பிடுவார். அத்தகைய நாடகங்களிற்கும் ஆற்றுகைகளிற்குள்ளும் தொன்மங்களை உட்புகுத்துவதன் மூலம் மக்களிடையே உறைந்துகிடக்கின்ற தொன்மங்களினூடாக சமூகத்திற்கு நற்கருத்துக்களையும் வழிப்படுத்தல்களையும் மேற்கொள்கின்றார்.

ஆக்க இலக்கியங்கள் அல்லது படைப்பு இலக்கியங்கள் அல்லது படைப்பாக்க இலக்கியங்கள் என்பவற்றில் தொன்மக்கதைகளை மையப்படுத்தி நாடகம் எழுதுவது இன்றைய சமகாலத் தேவையாகும். பொதுவாக தொன்மங்கள் ஒரு சமூகத்தினுடைய அதிகார வர்க்கங்களினுடைய கதையம்சங்களை மக்கள் மத்தியில் பரப்புகின்ற ஒரு கருத்தாக் நிலையை கொண்டுவருகின்ற போது பன்மைத்துவமாக இருக்கின்ற வழிபாட்டுமுறைகள், பன்மைத்துவமாகக் காணப்படும் கடவுள் நம்பிக்கைகள், பன்மைத்துவமாக இருக்கின்ற வழிபாட்டு உத்திகள், பழக்கவழக்கங்கள், நடைமுறைகள் அனைத்தும் பாதிக்கப்படும். இந் நிலையில் இவ்வாறான தொன்மக்கருத்துக்களினூடாக மாற்றுக் கருத்துக்களைக் கொண்டு வந்து செயற்படுத்தப்படும் போது அது நாடகம் வழியாக மக்கள் மத்தியிலே சென்று அந்த மக்களுடைய உண்மையான பன்மைத்துவமான, களவெளியில் உள்ள வழிபாட்டு முறையினை அழிப்பதனைத் தடுக்கும்.

அதேநேரம் ஒரு புதிய ஆற்றுகை முறையும் புதிய சமய நாடக அரங்க செயன்முறையையும், இலக்கியம் படிபவர்களிற்கும், நாடகம் படிப்பவர்களிற்கும், சமயம் படிபவர்களிற்கும், மானிடவியலாளர்களிற்கும் தேவையான ஒன்றாகவும் இது விளங்குகின்றது. ஆகவே இந்தப் புதிய செயற்பாடானது புலமையாளர்கள், பேராசிரியர்கள், புத்திஜீவிகளின் மத்தியில் செயல்படுத்தப்படும். அதே போன்றே இந் நாடகச் செயற்பாடுகளும் ஒரு வழிபாட்டிற்குள் இருக்கின்ற விடயங்களை அவ்வாறே எடுத்துக்கூறுவதுடன் அதற்கப்பால், அதிலுள்ள கருத்தியல் சிந்தனைகளை வெளிப்பாடுகளை ஒரு கல்வி சார்ந்த அனைத்து மனிதனையும் இணைக்கக்கூடிய தன்மையினைக் கொடுப்பதாலும் இவ்வாறான விடயங்கள் அவசியமாகும்.

கலைத்துவமும் சமூகப் பயன்பாடும் நிரம்பிய நல்ல நாடகம் போடுவதென்பது கடினமானதொன்று. சமுகப்பயன்பாடு என்று நாடகக்கலையை விட்டுவிடக்கூடாது. நாடகக் கலை என்று சமூகப் பயன்பாட்டை விட்டுவிடக்கூடாது இரண்டும் சமாந்திரமாகச் செல்ல வேண்டும். அளவறிந்து உருவையும் உள்ளடக்கத்தையும் கலந்து அருமையான கலையாக்கல் அதனைக் கையாளும் கலைஞர்களின் நாடகக்கலை சமூகம் பற்றிய அறிவுகளில் தங்கியுள்ளது. அழகியல் கூடி நாடகம் உருவச்சிறப்பு மாத்திரமுள்ளதாக இருந்துவிடக்கூடாது.. அதே வேளை உட்பொருள் மாத்திரம் கதித்து நாடகம் தன் உருவச்சிறப்பை இழந்துவிடவும் கூடாது அளவறிந்து சமமாக இதனைக் குழைத்து எடுக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றார். **(தகவல், மௌனகுரு.சி).**

மட்டக்களப்புப் பிரதேசம் பல சாதிகளையும், சாதிகளிற்குரிய வழிபாட்டு முறைகளையும் கொண்டு காணப்படுவதுடன் இவர்களது சமூகத்தில் காணப்படும் சடங்குகள், வழிபாட்டுமுறைகள், பழக்கவழக்கங்கள், சமூகக் கட்டுப்பாடுகள் என அனைத்திலும் பல்வேறுபட்ட தொன்மங்கள் காணப்படுகின்றன. இவற்றில் சமயத் தொன்மங்கள், மானிடவியல் தொன்மங்கள், சமூகவழக்காற்றியல் தொன்மங்கள் என்பன மலிந்து காணப்படுகின்றன. இத்தகைய ஒரு சூழலில் கூத்துக்கலைக்குப் பெயர்போன சீலாமுனைக் கிராமத்தில் கூத்துப் பார்க்கும் போதே பிறந்ததினாலோ, அல்லது கூத்துக்களினூடே வளர்ந்ததினாலோ இவர் கூத்தின் மீது மிகுந்த ஆர்வம் உடையவராகக் காணப்படுகின்றார். கூத்துக்கள் அனைத்தும் தொன்மங்களை அடிப்படையாகக் கொண்டன. தொன்மத்தினூடே பிறந்து வளர்ந்ததினால் இவரிற்குத் தொன்மங்களை தனது நாடகத்திலும், ஆற்றுகைகளிலும் பயன்படுத்துகின்றார். இவர்

ஆழ்ந்த வாசகர். இவர் மகாபாரதம் மீது மிகுந்த நாட்டம் கொண்டவர். அத்துடன் இவரது சூழலும் மகாபாரத்துடன் தொடர்புபட்ட கூத்துக்களை ஆடும் கலைஞகள் வாழுமிடமாகும். எதையும் ஆய்வுநோக்கில் நோக்குகின்ற தன்மை கொண்டவர். இதனால் இவரர் வாசிப்பும், இதிகாச நாட்டமும், கூத்துப் பிணைப்பும் இணைந்து இவரைத் தொன்மங்களின்பால் ஈர்த்தது என்றே கூறலாம்.

உசாத்துணை

1. இராமச்சந்திரன்.க, (2007), இருபதாம் நூற்றாண்டு தமிழ்க் கவிதைகளில் புராண மரபுக் கூறுகள். சரவணா வெளியீடு, சென்னை-94, பக்.57.
2. கதிர்.மகாதேவன், (2008), தொன்மம், செல்லப்பா பதிப்பகம், மதுரை-1, பக்..30.
3. செல்வகுமாரி.ஜெ, (2013), பெண்ணியம் பேசுகிறாள், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை.
4. தோம்சன் ஜோர்ச், (1981) கேசவன்.சோ, மனிதசாரம், சென்னை, பக் - 68.
5. பக்தவக்சல பாரதி, (1992), பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் தமிழ் ஆய்வகம், சிதம்பரம். (பக் - 489 - 533).
6. பக்தவக்சல பாரதி, (2002), தமிழர்மானிடவியல், மெய்யப்பன் தமிழ் ஆய்வகம், சிதம்பரம்.
7. பஞ்சாங்கம்.க, (2005) தொன்மத் திறனாய்வு, அன்னம், தஞ்சாவூர்.
8. பாக்யமேரி, (2008), வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட், சென்னை-98. பக். ப.251, பன்னாட்டுத் தரப்புத்தக எண்:81-234-1346-7.
9. நடராசன்.தி.சு, (2008), திறனாய்வுக்கலை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட்,சென்னை-98, பக். ப.191. பன்னாட்டுத் தரப்புத்தக எண்:81-234-0485-9.
10. நிர்மலாராணி.வீ, (2003), பெண்ணியத் திறனாய்வு-காவ்யா, சென்னை.
11. வைரமுத்து, (2013), திருத்தி எழுதிய தீர்ப்புகள், சூர்யா லிட்ரேச்சர் லிமிபுட்டர் சென்னை.
12. மௌகுரு.சி, மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப் பண்பாடு,
13. மௌகுரு.சி, (1998), மட்டக்களப்பு தரபுவழி நாடகங்கள், விபுலம் வெளியீடு.
14. மௌனகுரு.சி, (1998), மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள், விபுலம் வெளியீடு.
15. மௌனகுரு.சி, (1993), சங்காரம், (தமிழ் நாடகங்கள்), ஆசிய கலைக்களகப் பேரவை, சவுத் ஏசியன் புக்ஸ்.
16. மௌனகுரு.சி, (1960), (1998), இராவணேசன், (தமிழ் நாடகம்), விபுலம் வெளியீடு.
17. மௌனகுரு.சி, கூத்தயாத்திரை
18. மௌனகுரு.சி, (1997), சக்தி பிறக்குது, (தமிழ் நாடகங்கள்), பெண் கல்வி ஆய்வு நிறுவனம்.
19. மௌனகுரு.சி, காண்டவதகனம்
20. மௌனகுரு.சி, வனவாசத்தின் பின்
21. மௌனகுரு.சி, வன்மத்தின் இரத்தவாடை (தற்போது எழுதி வைத்துள்ள நாடகம்).
22. மௌனகுரு.சி, சார்வாகன், (நாவல்),
23. மௌனகுரு.சி, (2015), மெனகுருவின் நாடகங்ள், குமரன் புத்தக இல்லம்.
24. மௌனகுரு.சி, (2021), கூத்தயாத்திரை, குமரன் புத்தக இல்லம்.
25. தவராஜா.வெ. (தொகுப்பாளர்), (2003), மௌனம், பேராசிரியர் மௌனகுருவின் மணிவிழாச் சிறப்புமலர்.
26. மௌகுரு.சி, (1987), மௌனகுருவின் மூன்று நாடகங்கள், School of Drama and Theater, திருநெல்வெலி, யாழ்ப்பாணம்.
27. Broclett.G.Oscar, (1964),The Theater and Introduction, page – 04.
28. Broclett.G.Oscar, (1971), History of Theater, USA, page – 02.
29. Harrison Jone Ellen, (1951), Anciant Art and Ritual, Britain.

❖ இதழ்கள்

1. மகுடம் - 1 (06.01.2017)
2. மகுடம் - 2 (06.01.2017)

❖ Scrips

1. இராவணேசன் நாடகம் (1964)
2. இராவணேசன் (1998)
3. இராவணெசன் (2014)
4. கர்ணன் போர்
5. கண்ணகி குளிர்த்திப் பாடல்கள்
6. கிழக்கிசை
7. கிழக்கின் ஆடலும் பாடலும்
8. தமிழிசை

9. மக்கழிசை
10. நொண்டி நாடகம்
11. வாலிவதை நாடகம்

❖ இணையத்தளங்கள்

1. தமிழி இணையவழிக் கருத்தரங்கு, 142, ஆபிரகாம் பண்டிதரின் கர்ணாமிர்த சாகரத்தில் சிலப்பதிகாரத்தின் தாக்கம்.
2. நடுகல் கூறும் தமிழரின் வாழ்வு நெறிகள். பார்த்த நாள் 2022.01.21.
3. www.Youtube.com, பேராசியர் மௌனகுருவுடனான ஓர் நேர்னாணல், நாட்டுக்கூத்து, பகுதி - 1.
4. www.Youtube.com, இலங்கைத் தமிழர் நாடகமும் சமகாலப் போக்கும், இணையவழிக் கருத்தரங்கு.
5. www.Youtube.com, பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியர்.சி.மௌனகுரு, கூத்துப் பற்றிய கலந்துரையாடல். பகுதி - 1.
6. www.Youtube.com, பேராசிரியர் சி.மௌனகுருவின் மழை நாட்டிய நாடகம்.

செவ்வி காணல்

பெயர்	வயது	பதவி	திகதி
திரு.செ.ராஜீவ்	31	நாடக ஆசிரியர், கதிரேசன் மத்திய கல்லூரி, வருகைதரு விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்.	27.06.2022
திரு.ஞானசேகரன்	32	நாடக ஆசிரியர்	27.06.2022
திரு.கேதீஸ்வரன்	34	விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்.	27.06.2022
பேராசிரியர்.அம்மன்கிளி முருகதாஸ்	66	ஓய்வு நில விரிவுரையாளர், வருகைதரு விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்.	27.06.2022
திரு.சோ.தேவராஜா		ஊதவி நீதிபதி, மல்லாகம், யாழ்ப்பாணம்.	25.06.2022
பேராசிரியர்.அ.சண்முகதாஸ்	83	ஓய்வுநிலை பேராசிரியர்	30.06.2022
திரு.செந்தூரன்	34	சிரேஸ்ட விரிவுரையாளர், விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவனம்.	25.06.2022
திரு.கு.ரவிகுமார்	46	சிரேஸ்ட விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம	23.06.2022
திரு.சு.சந்திரகுமார்	43	சிரேஸ்ட விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம	23.06.2022
திரு.வ.குணபாலசிங்கம்	44	சிரேஸ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறைத் தலைவர், கிழக்குப் பல்கலைக்கழகம	23.06.2022
பேராசிரியர்.திரு.சந்திரசேகரம்	48	சிரேஸ்ட விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்.	23.06.2022
திரு.க.மோகனதாசன்	43	சிரேஸ்ட விரிவுரையாளர், விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவனம்.	22.06.2022

Cooking as a public performance - A study based on "Ezhuththaani" play.

R.Sulaxshana
Department of fine arts, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka
rajendransulaxshana@gmail.com

Abstract

This paper discusses the importance of recalling and reviving our own local food preparations and cooking practices through Ezhuththaani play. Because of the Colonizing of our mind there is a myth surrounding with us that we couldn't product anything for us by ourselves. In this way we purposefully omit ourselves from creation and production. Throughout this life time practices we depend on others to fulfill our own needs until now. In this consumer culture we often consuming but we couldn't manufacture anything because of the colonization of our mind. Multinational companies cunningly grownup their business through persuasion that consumer couldn't manufacturing. And also alienate ourselves from organic tastes, and addict to some kind of artificial tastes. Among these long term process, they had made our own food pattern and food culture forgettable. However in this critical period we must recall our own food preparations to protect our lives. In this way this paper argues that the importance's of local food culture through Ezhuththaani play. Here we recall our food pattern and the culture through performing cooking as a public performance.

Key words: Cooking as a public performance, consumer culture, manufacturer, colonizing

Introduction

"Who has a body gained may, long the gift retains, if food digested well, in measure due he eat again." (Thirukkural – 943) (அற்றால் அளவறிந்து உண்க அ.ஃதுடம்பு / பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு. பொருட்பால்- மருந்து) This Thirukkural verse; explains that the importance of food and digestion. Food is one of the essential needs of creatures of the world. Especially when we talk about human, can identify that the interrelation between human and food, through their histories.

Especially when we talk about food, food chain is another important part to discuss here. Food chain refers to the order of events in an ecosystem, where one living organism eats another organism, and later that organism is consumed by another larger organism.[1] Through this food pattern of organisms, we specify human as an omnivore. As omnivores, human hunting and seeking food for their life time to save their own lives and surroundings. Through these lifelong practices human trying to satisfy themselves and their own families. Among this human satisfaction most of time food sovereignty is demolished by human sometimes intentionally. Throughout these critical practices the order of ecosystem, almost distressed.

And also industrialized food manufacturing and distributing is another major impact in ecosystem. At the same time industrialized food manufacturing creates elusions by advertisements to increasing consumers, especially children. In this progress human as a consumer "when they trying to consuming foods or any another needs; there is no any question about consuming or manufacturing" if any question resided against to industrialized food manufacturing; we will return to our own ecofriendly food culture, here we have to discuss another major issue is "why we need food and what type of food we need". Lack of this critical thinking, simply we addicted to fast food or Jung food culture.

These fast-food cultures simply throw out our own eco- friendly food pattern. In this case Covid pandemic have provided better opportunity to re- union and re -think with our eco system,

[1] https://byjus.com/biology/overview-of-food-chain.

through our own eco-friendly- food pattern. In this way "Ezhuththaani", plays a major roll to connect with eco-friendly – food pattern through our local food preparation. And this research work is conducting performance-based research methodology.

Literature review

cooking as a public performance - A study based on Ezhuththaani play, the research article which is discuss about the crucial of recalling and reviving our own food pattern through performing. There are several articles, talk shows and research articles identify some common issues of food and digestion. And also, some of that talking about the importance of food or cooking. But Ezhuththaani play which is not only talk about the importance of recalling and reviving our own local food pattern, but also through the performance it helps to derive and establish our own cooking practices and nutrients. Eco feminism by Maria mies and Vandana Siva in 1993, which was published by zed books Ltd. which is deeply analyzed inter relationship between economic system and rape of earth. Vandana Siva and Maria mies explain the connection between economic and destroyment of earth or nature. Ecofeminism explains how both financial and environmental crises are sex- gendered. Here Ezhuththaani play, expound the crucial part of local food culture through performance.

The plot of "Ezhuththani" play

Before presenting cooking as a performance a study based on Ezhuththani play, its story and the process of the production will be briefly outlined to familiarize to the reader with the concept of the play. Ezhuththani play which was facilitated by S. Jeyasankar. And were performed by 'Suriya women's development group (cultural group) Batticaloa. The plot of this play is "let's unite with our environment through eco-friendly planting and reviving our own food pattern". Through this play have been remembering and recovering eco-friendly leafs and some dishes like "Surakkai pongal'' and "kool" (Pulp) that have been used for cooking in Batticaloa for more than two decades. And also, the performers have brought those practices to their practical life too.

"Seed is the source of life. And the first link in the food chain. Control over seed means, control over our lives, our food and our freedom" by Vandana Shiva, eco feminist. In this way we clearly identify that how globalization and colonization rob eco - friendly systems and cunningly introduce corporate friendly culture. However, as a human being we must protect our mother earth through reviving eco -friendly system. Thus S. Jeyasankar and Suriya cultural group discuss and implement some regular but obliterated cooking recipes as a performance through Ezhuththaani.

Before discussing about the performance of "Ezhuththaani" It's better to discuss why the facilitator and the all team decided to perform such a play. சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலைய கலாசார குழுவினராகிய நாங்கள் ஒவ்வொரு வருடமும் தற்போதைய சூழலில் மக்கள் மத்தியில் கொண்டு சென்று விழிப்படைய செய்ய வைக்க வேண்டிய விடயங்களை உள்ளடக்கியதாக நாடக அளிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். ஆனால் தற்போது இவ்வருடம் நாங்கள் சொல்லுகின்ற கருத்துக்களை முறைமைகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதோடு மட்டுமல்லாமல் நாங்களும் அவ்விடயங்களை புதிதாக தேடி கற்று கொள்ள வேண்டிய நிலமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளோம். அந்த வகையில் நாங்கள் தற்பொழுது பாரம்பரிய உணவு முறைகள் சார்ந்து தேடுவதோடு மட்டுமல்லாமல் நாங்கள் அதை செய்வதற்கான முறைமைகளை அறிந்து மக்கள் மத்தியில் கொண்டு சென்று அது சார்ந்த தெளிவையும் அதன் முக்கியத்துவம் தேவை போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக மற்றவர்களுக்கு அளிக்கைகள் செய்வதோடு மட்டுமல்லாமல் அதாவது ஊருக்கு தான்

உபதேசமடி பெண்ணே உனக்கு இல்லை என்ற பழமொழிக்கு ஏற்றால் போல் இல்லாமல் ஊருக்கு உபதேசம் செய்வதை விட்டு விட்டு நான் அப்பாரம்பரியத்தை கற்று பழகி அதனுடன் இணைந்து எனது உறவுகளையும் இணைந்து வாழ வைப்பதற்கான உத்திகளை முறைமைகளை கற்று எனது வாழ்க்கையை எனது சுற்றத்தார் வாழ்க்கையை வளமானதாக ஆக்கப் போகின்றேன்.[2]

நான் எனது சந்ததிக்கு ஆரோக்கியமான அனைவராலும் விரும்பப்படுகின்ற ஒரு சூழலை உருவாக்கி வைக்க வேண்டி பாரிய பொறுப்பு என்னிடம் உள்ளது. அதற்கான அரிச்சுவடியை நான் இவ் அளிக்கையில் தொடங்குகின்றேன்.[3] It means that why they choose a concept like this to performing and also as a Suriya cultural group all years they perform several drama to advising people. But this time this is not for advising people as well as a performer she returns to their own food pattern, and identify some leafs and its importance and cooking methods to yield to younger generation and re link with their own life style.

According to Kalyani, it is clear to seem obvious purpose of the drama. This performance is not only a performance for audience reflection but also, it's given a space to spectators to realize and re- link to eco- friendly system through cooking (Ezuththaani).

Process and the performance

Ezhuththaani interacted to the society with their own local food pattern. They aim to full fill the plot through the performance and trying to re connected with our local food pattern through the play. According to the purpose the facilitator and the performers were discussed about some leafs which were used to cooking moreover two decades in Batticola. And also, they identify some dishes which were delicious and flourish in their society. First of all, they clearly identify what they going to perform. And they decided to talk with their families especially with their elder generation. After that next day they discuss with their colleagues, facilitator about the things identify by themselves. In that period, they let to known there are lot of varieties to cooking some dishes especially "surakkai pongal" and "kool".

The facilitator explains that "kool" (pulp) is famous recipe among Jaffna Tamils, and also in Batticaloa they also have all the ingredients to cook "kool" but they are not familiar with kool. Kool is not only one of the recipes its process of cooking all together people, it gives space to share their verities of cooking experience and recall the stories. Among these practices the facilitator identifies that, how the cooking basically interacts with the society. After several days of discussion, the facilitator and the performer's decided to perform cooking as a performance.

Of this discussion the performers and the facilitator referred some literatures, articles, poems to clarify themselves among Tamils cooking histories. In that process they had known some cooking histories and the practices. Through the discussion of the performer's families, performers identify some traditional practices to protect their gardens and the paddy fields. One of that is "kaadu katti" or "Ammachi mundam" the person who announce that some social events or some social gatherings. Ammachi mundam is a kind of local version of comic characters. And also the person who hold long and strong stick, which is call "velaikaran kambu".

[2] Kalyani, the vision of the drama. p. 1

[3] pp. 1

With this all clarification the team decided that two narrators had been performed as a "kadukatti" they introduce themselves to the audience as a kadukatti and why they are there. After that they had been sung a song which is related with the play. The song was a collective work done by the performers. Five ladies perform all over the play.

the first portion of the drama refer the surakkai pongal and the second portion refers the importance of "ezhuththaani leaf, ponnavari leaf, leaf of kundumani, nayuruvi, ezhicheviki, naththaisuri, kuppaimeni leaves and how to cook and fry, and the medicinal quality of the leaves, And the last portion of the performance refers the dishes "kool".

All over the performance the performers interact with the society (audience) through some riddles, songs, some questions to engage with the performance. Through the readings performers identify one of the songs sung by "Navalioor Somasundharapulavar" and they decided to sung that particular lyric on their performance. "Ezhuththani" play had been performed by the performances at, Suriya cultural offices premises, in Batticoloa justice walk and Mamangam temple premises.

When they perform in Mamangam temple premises the children trying to catch the answers for the riddles through engaging with the play. Especially the facilitator initiated the play not to perform in the stage only it can also perform in outdoor.

Cooking as a regular practice.

Food is the essential part of our life time. There fore we earn money. And we are trying to satisfaction ourselves. In ancient time's human eats fruits and after that when they know to hunting, they eat meats. When they discovered fire, they are trying to roast meat. Through these practices humans discovered some things which were used for cooking. And also, they practice to eat the foods which were from their surroundings only. This particular period, each human is seeking food for themselves. When they trying to seeking food more and more to satisfy themselves and the surroundings.

Through all these practices human industrialized the food. Multinational companies cunningly introduce their products to world. When multinational companies introduce the products, money is the only thing they need. So, they are trying to manufacture instead of water some drinks, some cookies for proteins and minerals milk powder instead of milk. All these practices of multinational companies simply oppressed people to their life satisfaction.

In that way most of multinational companies were tried to convinced whole world just saying "we save people from poverty." But they dumped healthy food, and the nature.

Among this bitter truth if we talk about cooking, our society and the cultures practices also purposefully pushed women to cooking. Through our culture practices women must be cooked for their families in normal life. If it is a function or ritual celebrations there is no need to cook by women, men priories themselves on those items. So here we clearly specify that how men dominated in women. However, when cooking as industrialized, men easily got the priority as a chef or cook.

However, in some rural areas we seem that some ladies selling foods such as string hoppers, hoppers, pittu for their income. But it's so rare to seems that women as an industrialized cook. Apart from all these things, in these regular practices (cooking as a regular practices) women need to play a roll of cook in the home. All the time as a mother, as women she needs to serve

their families. In this cause a long period of time she needs to spend in kitchen. But there is no validity for her work; we never consider that the mother's cooking as a work. And also, we simply ignore that, by saying that she is doing all these things with love. And it's her duty too. There is no point behind this. However, women always have been straggling with these practices.

Cooking as a performance

We often watch some TV shows**, which** were shows recipes of dishes, desserts, curries, drinks and foods. And also, some TV channels telecast cooking programs and cooking game shows. Such as "Cooku with Comali", "Master chef".

It defines that, when cooking as became professional filed, media concern with that how popularized the media channel through the cookery shows. So, they create some content and concept to who is finding enjoyment and sometimes hilarious too.

Apart from this here we talk about some deferent cooking performance. Covid pandemic and the economic crisis of Sri Lanka pushed people to re think about the economic system, to run their lives. In this particular period, we should try to cultivate our own food by organic way. Because Sri Lankan government banned all fertilizers and announced to people 100% natural cultivation is possible in Sri Lanka. Indeed, it's possible, but government cunningly cheating people to cover up their corruptions, through announced such a statement. However organic farming is all ways good practice not only for human but also the nature and the world. Throughout all these things if we decided to live peaceful and healthy life, without blessings of nature it's not possible. In this way the whole team decided to perform such a play like Ezhuththani.

Here performers perform through cooking, and also, they interact with people and the spectators were easily interacting with the performance. As a researcher in my point of view I think cooking is so familiar with the people so when cooking as a performance, people easily involved with that. And also, this production can perform all the premises, so people could easily interact with the play. And one more point this play talk about familiar dishes and the recipes in Batticaloa surroundings. So, people recall from their memories and discuss the recipes with the performers. In that way we can defined that the cooking as a performance is slide different from other plays and TV shows. There is a communication process always in there, between the performers and spectators in this play. Throughout performance the spectators get chance to reviving through recall the recipes from their memories.

Sharing experience of performance.

"Ezhuththaani play is a collective play. Which is expound the importance of recalling our own local food pattern behind the reason, the facilitator and our team decided to known about the local curry preparations which were unknown to younger generation among us. And we mainly discussed that why we were needed to select such a concept. Because of the colonization and Globalization, multinational companies and modern science, persuasion that our own organic items are un- nutrition and un – healthy. In this way almost our society alienate from local food preparations and organic taste. And also, from our childhood we addicted to artificial taste and the colour. Through the colour and taste multinational companies cunningly retains their financial states. But this bitter truth isn't known by the poor people who are the consumers.

Further this crucial reason we unanimously decided to perform such a play." said by the performers.

On the basis of the person who saw the performance of Ezhuththaani, and the person who participate and discussed some points of local food in Tamil literature history with the performers and the person who support to the performers, here I may reveal some points through my experience. In this critical era almost our education system and our life style are traveling in two different contradiction paths. In this critical period, we should realize the truth and we trying to re- designed our whole system. In this way whole team decided to perform such a play like Ezhuththaani. This performance doesn't only give a chance to show their acting skills, also its give space to re-collect and reviving leafs and food which are surrounding us. In this way the play strengthens the whole public, by passing the message "let's reunion with our local food pattern to rebuilt eco – friendly life style" through the drama. And it chooses its performance as a cooking. Cooking is an art, which is more powerful tool to connect with whole public so easily. And it gives space to recall their own cooking practices and memories. In our traditional there is space in cooking to gather a society. So here the facilitator and the team decide and perform such a play, reveal the importance of studying our own environment, to interact with the society. Thus, the facilitator and the team performed such a play like Ezhuththaani as cooking as a public performance.

Conclusion

In conclusion, consumer culture disempowers human and because multinational companies know that most of people would suffer in consumer culture they continue to advance their tyrannical deeds. However, people empower themselves through recalling and reviving their own food culture to survey them lives. That's what the play done. Here the whole team derived they can basically connect with people through the performance. But they decided that, their performance must be cooking. So, they discuss about local food culture and the food preparations among the Batticaloa surroundings. Through the discussion they know the typical types of some dishes and them reviving through their performance. In this critical period Ezhuththani play empower the people through performing cooking as a public performance.

References

1. Jeyasankar. S 2022. Ezhuththani – collective drama script, Suriya women development group, Batticaloa.
2. Kalyani.S 2019. 08.18 The vision of the drama, Suriya women development group, Batticaloa.
3. Maria Mies & Vandana Siva, 1993 Ecofeminism, Zed Ltd, 7 Cynthia Street, London N1 9JF, UK.
4. Radhika kapur, March2018, Food and Nutrition. https://www.researchgate.net/publication/323745769_Food_and_Nutrition
5. **https://thirukkural133.wordpress.com/contents/**
6. **https://thirukkural133.wordpress.com/contents/**

வவுனியாப்பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் பற்றிக் (Batik) உற்பத்தியினைப் பயிலுவதன் ஊடாக அதன் அழகியல் வடிவமைப்புக்களில் தமிழர் மரபுசார் வடிவமைப்புக்களை வெளிப்படுத்தல்

சதாசிவம் மகிலினி[1], துஷ்யந்தி சத்தியஜித்[2]
[1,2] நுண்கலைத்துறை, கலைகலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
[1]makilini96@gmail.com, [2]sathiyajitht@esn.ac.lk

ஆய்வுச் சுருக்கம்

இலங்கையில் தனித்துவ ஆடைவடிவமைப்புடன் கூடிய தொழிலாக பற்றிக் உற்பத்தி இடம்பெற்று வருகின்றது. பெரும்பான்மையாக சிங்கள மக்களிடையே பற்றிக் பண்பாடு அதிக தாக்கம் செலுத்திய போதிலும் வடமாகணத்தில் தமிழ் மக்களிடையே சுயகைத்தொழில் முயற்சியாக இது இடம்பெற்று வருகின்றது. வடமாகாணத்தில் அமைந்துள்ள வவுனியா மாவட்டத்தில் அதிகளவாக தமிழ் மக்கள் சுய கைத்தொழில் முயற்சியாக பற்றிக் உற்பத்தியில் ஈடுபட்டு வருமானம் ஈட்டி வருகின்றனர். இங்கு பெரும்பாலும் பொதுவாக காணப்படும் மலர் அலங்கார வடிவங்களே பயன்பாட்டில் உள்ளன. இது இப்பிரதேசத்தில் இவ் உற்பத்திக்கான நுகர்வுத்தன்மையினை குறைத்துள்ளமை புரிதலுக்குரியது. எனவே தமிழர் மரபுசார் விடயங்கள் அலங்கார வடிவங்களாக மிகக் குறைவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளமையினால் தமிழ் மக்களிடையே பற்றிக் ஆடைகளுக்கான நுகர்வுத்தன்மை ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்படுகின்றமை தெளிவாகிறது. இதுவே ஆய்வின் பிரச்சினையாக அமைந்துள்ளது. அதனால் தமிழ் மக்களிடையே உற்பத்தியையும், நுகர்வினையும் அதிகரிக்கும் நோக்கிலும் பற்றிக்கில் தமிழர் மரபுசார் அலங்காரங்களை வெளிப்படுத்துவதையும் நோக்காகக்கொண்டு பற்றிக் உற்பத்தியாளர்களுக்கு ஆய்வாளரால் தமிழர் மரபுசார் அலங்காரங்கள் வரைந்து முன்வைக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் பற்றிக் உற்பத்தியாளர்கள் இவ்வாறான வடிவமைப்புக்களை முன்னெடுப்பதன்மூலம் பிரதேசம் சார் உற்பத்திகளை தனித்துவ அடையாளங்களுடன் வெளிக் கொண்டுவருதல், உற்பத்தியை அதிகரித்து கேள்வியைச் கூட்டி நுகர்வினை அதிகரித்தல், பிரதேசம்சார் உற்பத்திகளை சமூகத்திற்கு வெளியேயும் பரவலாக்கம் செய்தல் என்பவற்றை பிரதான நோக்கங்களாக கொண்டு இவ் ஆய்வு அமைந்துள்ளது.

திறவுச்சொற்கள்: சுயதொழில், உற்பத்தி அதிகரிப்பு, பண்பாடுசார் வடிவங்கள், புதியவடிவமைப்புக்கள், அலங்காரங்கள்

அறிமுகம்

ஐரோப்பிய வரலாற்றுக் காலகட்டத்தின் ஆரம்பகாலமாக கருதப்படும் எகிப்தில் தோற்றம் பெற்ற கலையாக பற்றிக் (Batik) உற்பத்தி கருதப்படுகின்றது. “Batik” என்பது இரண்டு ஜாவானீஸ் செற்களின் கலவையாகும். “Amba” என்பது எழுத்து மற்றும் “Titik” என்ற சொல் சிறிய புள்ளிகளை உருவாக்கல் எனப் பொருள்படும். (Evi Steelyana, 2012, BINUS University)

கி.மு 4ம் நூற்றாண்டைச் சேர்ந்த கைத்தறி ஆடைகளில் இன்டிக்கோ நீல நிறப் பின்னணியில் வெள்ளை நிற அலங்கார வடிவமைப்புடன் கூடிய ஆடைகள் பயன்பாட்டில் இருந்துள்ளதை அக்கால ஓவியங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. எகிப்தியர்கள் ஏனைய நாடுகளுடனான வர்த்தகத் தொடர்பின் மூலமாக இத்தொழில் நுட்பம் ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் பரவலாக்கம் செய்யப்பட்டிருக்கலாம் என கருதப்படுகின்றது. ஒல்லாந்தக் காலனித்துவ வாதிகளினால் இந்தோனேசியாவில் தோற்றுவிக்கப்பட்டு 19ம் நூற்றாண்டுகளில் இலங்கைக்கு பற்றிக் நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கையில் பல பிரதேசங்களில் வாழும் மக்கள் பற்றிக் வடிவமைப்பினை சுயதொழில் முயற்சியாக மேற்கொண்டு வருகின்றனர்.

தேசிய அருங்கலைகள் பேரவை ஊடாக மரபு ரீதியான கைப்பணி பொருட்கள் அவற்றின் நிலையான இருப்புக்களை வளர்த்து பேணிப்பாதுகாத்தல் எனும் நோக்கத்தின் அடிப்படையில் முப்பத்தாறுவகையான கைப்பணி வகுதிகளில் (23வது வகுதியாக) பற்றிக் சார்ந்த ஆக்கங்கள் இணைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் தனித்துவ ஆடை அலங்கார வடிவமைப்புக்களுடன் கூடிய தொழிலாக பற்றிக் உற்பத்தி இடம்பெற்றுவருவதுடன் மரபுரீதியாக பேணப்பட்டுவருகின்றது.

வடமாகாணத்தில் அமைந்துள்ள வவுனியா மாவட்டமானது பல்வேறு பிரதேசங்களை இணைக்கும் மையமாகக் காணப்படுவதால் எதிர்காலத்தில் சுற்றுலா வர்த்தக மையங்களில் ஒன்றாக அமையவுள்ளது. இங்கு பல்லின மக்கள் வாழ்கின்ற போதிலும் அதிகளவில் தமிழ் மக்கள் பற்றிக் உற்பத்தியில் ஈடுபட்டுவருவதை காணமுடிகின்றது. அதனடிப்படையில் கடந்த சில வருடங்களாக பற்றிக் உற்பத்தியில் ஈடுபட்டுவரும் வவுனியா பிரதேச எல்லைக்குட்பட்ட மக்களின் பிரதேசம்சார் உற்பத்திகளையும், வடிவமைப்புக்களையும் அதிகரிக்கும் வகையிலும் தமிழர் பண்பாட்டை வெளிப்படுத்துவதாக இவ்வாய்வானது அமையவுள்ளது.

ஆய்வுப் பிரச்சினை

இலங்கையில் தனித்துவ ஆடை அலங்கார வடிவமைப்புக்களுடன் கூடிய தொழிலாக பற்றிக் உற்பத்தி இடம்பெறுகின்றது. இவ் பற்றிக் உற்பத்தியில் வவுனியாப்பிரதேச தமிழ் மக்கள் சுயதொழில் முயற்சியாக ஈடுபட்டுவருகின்றனர். இவர்களின் வடிவமைப்புக்களில் பெரும்பாண்மை இனத்தவரை கவரும் அலங்காரங்கள் அதிகம் காணப்படுவதுடன் தமிழர் மரபு சார்ந்த அலங்கார வடிவமைப்புக்கள் அரிதாகவே காணப்படுகின்றன. இதனால் இப் பிரதேசத்தில் இவ் ஆடைகளுக்கான கேள்வி குறைவாகவே காணப்படுகின்றமை நோக்கத்தக்கது. இதுவே ஆய்வின் பிரச்சனையாக அமைகின்றது.

ஆய்வின் நோக்கம்

தமிழர் மரபு சார்ந்த அலங்கார வடிவங்களை இணைத்து உற்பத்திகளை வெளிக் கொண்டு வருதல். எதிர்காலத்தில் பிரதேசம் சார்ந்த உற்பத்திகளை சமூகத்திற்கு வெளியேயும் பரவலாக்கம் செய்தல்.

ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது விபரண ஆய்வு, வரலாற்றாய்வு, கள ஆய்வு என்னும் ஆய்வு முறையியல்கள் ஊடாக ஆராயப்பட்டுள்ளது.

தரவு சேகரித்தல்

இவ்வாய்விற்கான முதலாம் நிலைத் தரவுகள் வவுனியா பிரதேசத்தில் பற்றிக் உற்பத்தியில் ஈடுபட்டுவரும் கிராமங்களான மரக்காரம்பளை மற்றும் ஸ்ரீராமபுர பற்றிக் உற்பத்தியாளர்களுடனான பயிற்சி அனுபவம், நேரடி அவதானிப்பு, நேர்காணல் மற்றும் கலந்துரையாடல் மூலம் பெற்ற தரவுகள்.
இரண்டாம் நிலைத் தரவு - அலுவலக பதிவேடுகள், நூல்கள், இலத்திரனியல் நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், அறிக்கைகள், இணையத் தளங்கள் போன்றவற்றில் இருந்து பெற்ற தரவுகள் மற்றும் புகைப்படங்கள் பெறப்பட்டுள்ளது.

பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

வவுனியாப் பிரதேச பற்றிக் உற்பத்திசார் முன்னெடுப்புக்கள்



வவுனியா பிரதேச செயலகங்கள்	பற்றிக் உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை
வவுனியா	40
வவுனியா தெற்கு	10
வவுனியா வடக்கு	2
வெங்கலச்செட்டிகுளம்	1
மொத்தம்	53

(என்.எம்.முனாசீர், வயது 29, தேசிய அருங்கலைகள் பேரவை)

வடமாகாணத்தில் அமைந்துள்ள வவுனியா மாவட்டமானது பல்லின பண்பாட்டு அம்சங்களை கொண்டுள்ளது. பல இன, மத, சாதி ரீதியான வேறுபாடுகள் இன்றி அனைவரும் ஒன்றாக இணைந்து வாழும் பிரதேசமாகதிகழ்கின்றது. இவர்களில் பெரும்பான்மையாக தமிழ் மக்கள் காணப்படுகின்றனர். 2010 சனத்தொகை கணக்கெடுப்பின்படி வவுனியா பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கிராமங்களில் 1,27,386 நபர்கள் தமிழ் இனத்தவராகவும், 1,091 நபர்கள் சிங்களவர்களாகவும் காணப்படுகின்றனர். (Statistical Hand book, 2021, vavuniya)

இங்குள்ள சிங்கள மக்களிடம் பாரம்பரியமாக பற்றிக் காணப்படுகின்றது. தமது அன்றாட வாழ்வியல் செயற்பாடுகளின் போது பற்றிக் ஆடைகளை அணிகின்றார்கள். ஆனால் பற்றிக் வடிவமைப்புக்களை மேற்கொள்பவர்கள் குறைந்தளவிலே காணப்படுகின்றனர். ஆரம்பத்தில் பருத்தி ஆடைகளை அணிந்த தமிழ் சமூகத்தினர் பிற்பட்ட காலங்களில் கால மாற்றத்திற்கு ஏற்ற ஆடைகளை அணிகின்றனர். யுத்தகாலத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் இருந்து வவுனியாவில் குடியேறிய தமிழ் மக்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுக்க பல்வேறு சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் அதிகளவான பெண்சுயதொழில் முயற்சியாளர்கள் பற்றிக் வடிவமைப்பில் ஈடுபட்டு வருமானம் ஈட்டிவருகின்றனர்.

இவ்வாறான சுயதொழில் முயற்சியாளர்களை இனங்கண்டு அவர்களுக்கான தொழில் ஊக்குவிப்புக்களையும், தொழில் வழிகாட்டல் செயற்பாடுகளையும் வவுனியா மாவட்டச் செயலகம் மற்றும் வவுனியா பிரதேச செயலகம் இணைந்து செய்து வருகின்றது. (வாசுகி.சி, வவுனியா. வயது 38, பிரதேச செயலகம், வவுனியா) ஆரம்பத்தில் ஒரு சில நபர்கள் மட்டும் ஈடுபட்டு வருகையில் கடந்தவருடக் கணக்கெடுப்பின்படி வவுனியா மாவடத்தில் ஐம்பத்தி மூன்று நபர்கள் பற்றிக் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில் வவுனியாப் பிரதேசத்தில் மாத்திரம் நாற்பது நபர்கள் பற்றிக் வடிவமைப்பில் தொழில் ரீதியாக ஈடுபட்டுவருகின்றனர்.

இவர்களில் அதிகமானவர்கள் மரக்காரம்பளை கிராம சேவகர் பிரிவு, காத்தார்சின்னக்குளம் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் வாழும் பெண் சுயதொழில் முயற்சியாளர்களாவர். தனித்தனியாகவும், குடும்பத்துடன் இணைந்தும், குழுவாகவும் கைப்பணி உற்பத்திகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களை இனங்கண்டு குழுவாக தொடர்ந்து செயற்படுவதற்காக பற்றிக் உற்பத்திக்கான பொதுக்கட்டிடம் அனைத்து தொழில் நுட்பவசதிகளுடன் கூடியதாக அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அனைவரது வீடுகளிலும் பற்றிக் உற்பத்திக்கான தொழில்நுட்ப வசதி காணப்படாததால் பொதுகட்டத்தில் உற்பத்திகளை மேற்கொள்ள வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. (நிவேஜா.க, வயது 31, பிரதேசசெயலகம், வவுனியா)

தேசிய அருங்கலைகள் பேரவையில் மரபுசார் உற்பத்திகளில் பற்றிக் உற்பத்தியும் ஒன்றாக காணப்படுகின்றது. இதன் மூலம் பற்றிக் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திக்கான மூலப் பொருட்களை NCC Bank மூலமாக பெற்றுக்கொள்வதற்கான சில வழிமுறைகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. பற்றிக் உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்தல், பரவலாக்கம் மற்றும் காட்சிப்படுத்தலை மேற்கொள்ளும் நோக்கில் வருடா வருடம் மாவட்டங்களுக்கிடையிலான கண்காட்சியுடன் கூடிய நடமாடும் சந்தைகள் அமைக்கப்படுகின்றது. இதில் தரமான உற்பத்தி, மரபுகளை வெளிப்படுத்தல் எனும் நோக்கங்களின் அடிப்படைகளில் சில்ப அபிமானி விருது வழங்கப்படுகின்றது. இவ்வாறு பற்றிக் உற்பத்தியாளர்களுக்கு அரசு, அரசு சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக பல்வேறு செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றது. எதிர்காலத்தில் பொருளாதார வர்த்தக மையங்களில் ஒன்றாக வவுனியா மாவட்டம் அமையவுள்ளதால் உற்பத்திகளை பிரதேசம் சார்ந்து முன்னெடுப்பதற்கான பல திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

சிங்களவர்களினுடைய விருப்பிற்குரிய அலங்கார வடிவங்கள் இங்கு அதிகளவில் பயன்பாட்டில் உள்ளன. ஆய்வுப் பிரதேசத்தில் பற்றிக்கிற்கான கேள்வியும், நுகர்வுத்தன்மையும் ஒப்பீட்டளவில் குறைவாக காணப்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைகின்றது. பிரதேசம்சார் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கிலும் தமிழ் மக்கள் மத்தியில் பற்றிக்கிற்கான கேள்வியை அதிகரித்து நுகர்வினைத்தூண்டும் நோக்கிலும் இவ் ஆய்வானது முன்னெடுக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் பற்றிக்கில் பயன்படுத்தக் கூடியவாறான சில தமிழர் மரபுசார் அலங்காரங்கள் வரைந்து ஆய்வுடன் இணைக்கப்பட்டுள்ளது. இது எதிர்காலத்தில் தமிழர் மரபுசார் வடிவங்களை பயன்படுத்தி உற்பத்திகளில் ஈடுபடுபவர்களுக்கு துணைபுரியும் எனும் நோக்கில் ஆய்வாளரினால் முன்வைக்கப்பட்டுள்ளன.

தமிழர் மரபுசார் அலங்காரங்களை வரைந்து வெளிப்படுத்தல்

உலகில் தொன்மை வரலாற்றினை கொண்டதாக தமிழர் கலாச்சார, பண்பாட்டம்சங்கள் காணப்படுகின்றது. பண்டைக்காலம் முதல் தொன்று தொட்டு மக்கள் பயன்படுத்தி வந்த கலை, கலச்சார, பண்பாட்டம்சங்களை கொண்டு தனித்தன்மை பெற்று மிளிர்கின்றது. அவ்வகையில் தமிழர் வரலாற்றுக்காலம் முதல் பல்வேறு கலைவடிவங்களும், பண்பாட்டுடன் இணைந்த அலங்கார வடிவங்களும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. அவ்வாறான சில அலங்காரங்களை இனங்கண்டு பிரதேசம் சார் பற்றிக் வடிவமைப்பினை வெளிப்படுத்தும் நோக்கில் சில

அலங்காரங்கள் ஆய்வளரினால் முன்வைக்கப்பட்டுள்ளன. (இவ் அலங்கார வடிவங்கள் பின்னிணைப்பில் இணைக்கப்பட்டுள்ளன.)

சங்கிலித் தூக்கு விளக்கு அலங்காரம்

இந்து ஆலயங்களில் வழிபாட்டின் போது பயன்படுத்தப்படும் சங்கிலி தூக்கு விளக்கு பல்வேறு அலங்கார வடிவமைப்புக்களில் காணப்படுகின்றது. இதில் மயில் அலங்காரமுடைய தூக்கு விளக்கினை பயன்படுத்தி பற்றிக் ஆடைகளில் கலைசார் அழகியல் நோக்கில் வரையப்பட்டுள்ளது. இவற்றை பெண்கள் அணியும் புடவை கரைகளிலும், முந்தானைகளில் பயன்படுத்த முடியும். வர்ண துணிகளான மஞ்சள் நிறத்தில் கறுப்பு ரேகை அல்லது சிவப்பு ரேகை பயன்படுத்தும் போது தமிழர் கலாச்சார வர்ணங்களுடன் அழகுடன் தோற்றமளிக்கும்.

யாழ் அலங்காரம்

பண்டைய தமிழர் இசைக்கருவிகளில் மிகச்சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். ஈழத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த தமிழரே யாழ் இசைக்கருவி மீட்பதில் திறமை உடையவர்களாக விளங்கிவந்துள்ளனர். இன்று இவ் இசைக்கருவியின் பயன்பாடு அரிதாகியுள்ளதால் அதை பற்றிக் ஆடைகளில் கொண்டு வருவதன் மூலம் பயன்பாட்டினை மீட்டெடுக்க முடியும். இவ் அலங்காரத்தினை புடவை முந்தானை, ஆண்களுக்கான சாறம், படுக்கை விரிப்பு யன்னலிற்கிடும் திரை போன்றவற்றிற்கு பற்றிக் வடிவமைப்புக்களில் பயன்படுத்த முடியும்.

வரத்தி அலங்காரம்

மட்டக்களப்பு மரபுவழி நாடகங்களில் வீரர்கள், தலையாரிமார்கள் பயன்படுத்தும் அணிகலன். இவை வர்ணக்கடதாசி, சேலைகள், மணிகள் கொண்டு அலங்கரிக்கப்பட்டிருக்கும். (மௌனகுரு.சி, 2014, பக் - 375) தமிழர் பாரம்பரியங்களை வெளிப்படுத்தும் வகையில் ஆண்கள் அணியும் மேல் ஆடைகளில் அலங்காரமாக பயன்படுத்தி வயைப்பட்டுள்ளது. வர்ண துணிகள் பயன்படுத்தி உற்பத்தி செய்வதன் மூலம் பயன்பாட்டையும், அதிக நுகர்வையும் பெற்றுக்கொள்ள முடியும்.

கட்டாளி அலங்காரம்

வடமோடி நாடகங்களில் பயன்படுத்தப்படும் கட்டாளி என்பது சிறிய வகை கத்தியாகும். இதில் கிளி, புலி, யாளி போன்ற அலங்காரங்கள் பயன்படுத்தப்படும். (மௌனகுரு.சி, 2014, பக் - 379) யாளி பொதுவாக ஆலய அலங்கரிப்புக்களிலும் பயன்படுத்தப்படுகின்றது. இதனை சாறம், பெண்களின் சட்டைதுணி அலங்காரங்களிலும் பயன்படுத்த முடியும்.

ஏகாவடம், தோடு அலங்காரம்

சரிகை வேலைப்பாடு கொண்டு இருபுறமும் தொடை வரைக்கும் தொங்கக் கூடியதாக கழுத்தை சுற்றி அணியும் சால்வை ஏகாவடம் எனப்படும். (மௌனகுரு.சி, 2014, பக் 367)கழுத்தில் அலங்காரமாக பெண்பிள்ளைகள் அணியும் சட்டையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மற்றும் ஒரு அலங்காரமாக பெண்களால் அதிகம் விரும்பப்படும் காதணி அலங்காரம் வரையப்பட்டுள்ளது. (மௌனகுரு.சி, 2014, பக் 369)

கூத்து முகக்கலை அலங்காரம்

தமிழர் பாரம்பரிய ஆடல் வகையாக கூத்துக்கள் காணப்படுகின்றது. இவற்றை முன்னெடுத்து செல்லும் வயிில் பற்றிக் துணியில் வடிவமைக்க முகக்கலை அலங்காரம் வரையப்பட்டுள்ளது. இதன் அழகியலை வெளிப்படுத்தும் வகையில் நீலநிறப்பின்னணி வரையப்பட்டுள்ளது. இவ்வாறான வடிவமைப்புக்கள் பொதுவாக பற்றிக் சுவர் அலங்காரம், புடவை அலங்காரங்கள் போன்றவற்றில் பயன்படுத்த முடியும். மற்றும் பற்றிக் துணி பயன்படுத்தி பெண்களுக்கான கைப்பைகளில் வடிவமைக்க முடியும்.

வன்னியர் (போர்வீரர்கள்) அலங்காரம்

பற்றிக் பிரதேசம் சார் முன்னெடுப்பாக வன்னி மக்களின் வீரத்தை பறைசாற்றும் வகையில் இவ் அலங்காரங்கள் குறியீட்டு முறையில் அலங்கரிக்கப்பட்டுள்ளது. பண்டார வன்னியன் வாளுடன் நிற்பது போன்று வவுனியா மத்தியில் சிலை வைக்கப்பட்டுள்ளது. அதன் பிரதி பலிப்பாக இவ் அடையாளத்தை குறியீட்டு முறையில் வரையப்பட்டுள்ளது. பொதுவாக தமிழ் மக்கள் இவ்வாறான வடிவமைப்புக்களை பிரதேசம் சார் விடயங்களுக்காக அதிகம் நுகர வாய்ப்புள்ளது. ஆண்களிற்கான சாரம், சாறியின் கரைகள் அலங்கரிக்க இவ் முறை அலங்காரங்கள் பயன்படுத்தலாம். புலம்பெயர் மக்கள் மத்தியில் இவ்வகை வடிவமைப்புக்களுக்கு கேள்வி அதிகமுள்ளதால் விற்பனை செய்து வருமானத்தை ஈட்டமுடியும்.

கொம்பறைகள்.

வன்னி மக்கள் மருத நில மண்ணில் பெரும்போக விளைச்சலில் கிடைக்கும் நெற்களை கொம்பறைகளில் பதப்படுத்தி வைத்து வந்துள்ளனர். நெற்களஞ்சிய சாலைகள் அதிகம் காணப்பட்டதால் மேலதிக நெல்லை வருடக்கணக்கில் இம்முறையில் பதப்படுத்தப்பட்டு வந்துள்ளது. (பிரதீபன்.வீ, 2018, பக் 112) இதனை இன்று ஒரு சில இடங்களில் மட்டும் காண முடிகின்றது. பிரதேச மரபு, பாரம்பரியத்தை முன்னெடுப்பதில் கொம்பறைகளும் பங்காற்றுகின்றன. இதனை பற்றிக் ஆடை அலங்காரங்களில் கடற்கரை ஆடைகளில் பயன்படுத்துதல், சிறுமிகளின் ஆடை வடிவமைப்புக்களில் பயன்படுத்தும் நேக்கில் வரையப்பட்டுள்ளது.

கரகம்

தமிழ் மக்களுடைய பாரம்பரிய ஆடற் கலைகளுள் கரகாட்டம் பழமையும் சிறப்பும் உடையது. கரகாட்டம் எனப்படுவது அலங்கரிக்கப்பட்ட செம்பு அல்லது பித்தளை குடத்தை தலையில் வைத்துக்கொண்டு வாத்திய இசைக்கு ஏற்ப குடம் கீழே விழாதவாறு பெண்கள் மற்றும் ஆண்கள் ஆடும் ஆட்டம் கரகாட்டம் எனப்படும். தமிழர் மரபுக் கலைகளுள் ஒன்றாக கரகம் காணப்படுவதால் கரகக் கலைஞர்களை ஆட்ட கோலத்தில் பற்றிக் சேலை அலங்காரமாக வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது. இலங்கை தமிழர் பற்றிக் வடிவமைப்பில் இவ்வலங்காரங்களை முதன்மைப்படுத்தும் போது பிரதேச வடிவமைப்பில் தனித்துவத்தை பெறமுடியும்.

காவடி ஆட்டம்

காவடி என்னும் பொருளை தோளில் வைத்துக் கொண்டு ஆடுவது காவடியாட்டமாகும். தமிழர் மரபுவழி பேணப்பட்டுவரும் ஒரு ஆடற்கலையாக காவடி காணப்படுகின்றது. இதனை பற்றிக் வடிவமைப்பில் காவடிகலைஞர்களுக்கான இடுப்பில் சுற்றும் துணி மற்றும் பெண்களின் சேலை அலங்காரங்களில் வடிவமைத்து விற்பனை செய்யும் போது அதிக நுகர்வினைப் பெறமுடியும்.

கூத்துக்கலை

ஈழத்தமிழ் மக்களிடையே காணப்படும் பாரம்பரிய கூத்துக்களாக வடமோடி, தென்மோடி காணப்படுகின்றது. அதில் வடமோடிக் கூத்தில் அரச பாத்திரங்களில் பயன்படுத்தப்படும் ஆடை, அணிகலனுடன் கூடிய பாத்திரத்தினை பற்றிக் வடிவமைப்பிற்காக ஆய்வாளரால் தெரிவு செய்யப்பட்டு துணியில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான அலங்காரங்களை சுவரில் தொங்கவிடும் அலங்காரங்களாகவும், சேலை முந்தானை அலங்காரங்களாகவும் பயன்படுத்த முடியும். அதன் பாரம்பரிய அழகியல் தன்மை மாறாது உருவங்களை வெளிக் கொண்டு வரும் போது பிரதேச தனித்துவ ஆடை அலங்காரமாக காணப்படும்.

பற்றிக் உற்பத்தி செயன்முறைக்கு தேவையான பொருட்களும் அவற்றின் வகைகளும்.

- **துணி** – பருத்தி, பட்டு, பப்ளீன், கேம்பிரிக், வோயில்ஸ்
- **மெழுகு** – தேன் மெழுகு (Bees Wax), மரக்கறி மெழுகு (Vegetable Wax), பரப்பின் மெழுகு (Paraffin Wax)
- **சாயம் (Dyes)** - நப்தோல் சாயங்கள் (Napthol Dyes), வாட் சாயங்கள் (Vat Dyes), ரெமாசோல் சாயங்கள் (Remasol Dyes), புரோசியன் சாயங்கள் (Procion Dyes)
- **உபகரணங்கள்** - Wajan – மெழுகு சூடாக்கும் பாத்திரம், Tjanting / Canting - மூங்கில் கைபிடியுடன் கூடிய புனல், Tjaps – மரம் அல்லது உலோகத்தால் செய்யப்பட்ட அச்சு முத்திரை, Brush – மரக்கைபிடியுடன் கூடிய தும்பினை உடைய தூரிகை, மரச்சட்டம் / தறி, தொட்டிகள் / பாத்திரம் (Karal Kay Howard, 1968, Oklahoma state university, p.no 9-21)

பற்றிக் உற்பத்திப் படிமுறைகள்

1. துணியை நன்றாக நீரில் கழுவி சுத்தம் செய்தல்

பற்றிக் உற்பத்திக்காக தெரிவு செய்யப்பட்ட துணியினை முதலில் நன்றாக கழுவி காயவிடுதல் வேண்டும். நெசவின் போது பயன்படுத்தப்படும் அமில, காரக்கரைசல்கள், மாப்பொருட்கள் மற்றும் பருத்தி பஞ்சின் இழைகள் அல்லது பிற பொருட்கள் படிந்திருந்தால் அவற்றை நீக்குதல் அவசியமாகும். (சித்திரா.செ, வயது 39, சமயபுரம்)

2. துணியை தேவையான அளவில் வெட்டி எடுத்தல் செயன்முறை

நன்றாக உலர்ந்த துணியினை வடிவமைப்பிற்கு ஏற்ற வகையில் அளந்து வெட்டி எடுத்தல் வேண்டும்.

3. துணியில் அலங்காரங்களை வரைதல் செயன்முறை

தேவையான அளவில் வெட்டி எடுக்கப்பட்ட துணியில் அதன் வடிவமைப்பிற்கு ஏற்ப பகுதிகளை பிரித்து அளவு முறைக்கேற்ப அலங்காரங்களை தெளிவாக வரைதல் வேண்டும். (சுகுணலதா.த, வயது 46, காத்தார்சின்னக்குளம்)

4. மெழுகை சூடாக்கல் செயன்முறை

மெழுகினை திண்ம நிலையில் கடைகளில் பெற்று தேவைக்கேற்ற அளவு எடுத்து வஜனில் அல்லது உலோக பாத்திரத்தில் இட்டு சூடாக்கி திரவநிலைக்கு கொண்டுவருதல் வேண்டும். (சண்முகம் சுந்தரி, வயது 39, சமயபுரம்)

5. துணியில் மெழுகிடல் செயன்முறை

உருகிய நிலையில் காணப்படும் மெழுகினை பற்றிக் வடிவமைப்பிற்கான உபகரணங்களை பயன்படுத்தி அலங்காரத்தின் மீது மெழுகிடவேண்டிய பகுதிகளை நிரப்புதல். அதன் பின்னர் சாயமிடவேண்டிய பகுதிகள் தவிர ஏனைய பகுதிகளை தூரிகை பயன்படுத்தி அடைத்தல்.

6. மெழுகிடப்பட்ட துணியைக்காஸ்ரிக் சோடாவில் ஊறவைக்கும் செயன்முறை

ஒரு பாத்திரத்தில் நீரினைத்தேவையான அளவில் எடுத்துக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக ஆய்வின் போது 7 ½ மீற்றர் துணிக்கு 30 லீற்றர் நீர் பயன்படுத்தப்பட்டது. அதில் இடுவதற்கு 500 கிராம் (12 தேக்கறண்டி) நெப்தோலும், ஆறு தேக்கரண்டி காஸ்ரிக் சோடா பயன்படுத்தப்பட்டது. காஸ்ரிக் சோடா, நெப்தோலை முதலில் தனித்தனி பாத்திரத்தில் இட்டு சிறிது குளிர் நீர் சேர்த்து கரைத்தெடுத்தல் வேண்டும். பின்பு நீர் உள்ள பாத்திரத்தில் இரண்டையும் இட்டு நன்றாக கரைத்தல் வேண்டும். அதனுள் மெழுகிடப்பட்ட துணிகள் நன்றாக நனையும்படி ஊறவைத்தல் வேண்டும். 10 தொடக்கம் 15 நிமிடங்கள் ஊறவைத்த பின்பு துணிகளை எடுத்து நிழலில் நீர்வடியவிடவேண்டும். (சித்திரா.செ, வயது 39, சமயபுரம்) இரசாயன பதார்த்தங்கள் பயன்படுத்தும் போது கையுறை அணிதல் அவசியம். அவ்வாறு அணியாதவிடத்து அரிப்பு, தோல் நோய்களை உண்டாக்க வாய்ப்புள்ளது. சிறியவர்கள், கர்ப்பிணி பெண்கள் இவற்றை கையாள்வதை தவிர்தல் வேண்டும்.

7. நீரில் சாயக்கரைசலை கரைத்து, துணிகளை சாயத்தில் ஊறவைத்தல் (20–25 நிமிடங்கள்)

கறுப்பு நிற சாயத்தூளினை ஒரு பாத்திரத்தில் அளந்து எடுத்தல். 7 ½ மீற்றர் துணிக்கு ஆறு தேக்கறண்டி அளவில் எடுத்து சிறிது நீர் சேர்த்து நன்றாக கரைத்தல் வேண்டும். இன்னொரு பெரிய பாத்திரத்தில் அரைவாசிக்கு மேல் நீர் நிறப்பி எடுத்து அதற்குள் சிறிது உப்பு சேர்த்து, சாயக்கரைசலை ஊற்றி நன்றாக கரைத்து விடுதல் வேண்டும். (சண்முகம் சுந்தரி, வயது 39, சமயபுரம்) கரைந்த சாயக்கரைசலுக்குள் நெப்தோலில் ஊறி நீர் வடிந்த துணிகளை இட்டு 20 முதல் 25 நிமிடம் ஊறவைத்தல் வேண்டும். (ஜெகதீஸ்வரி.லி, வயது 39, சமயபுரம்)

அலங்காரங்களில் சாயம் சேரும் வகையில் குறித்த நேரத்திற்கு ஒருமுறை அழுத்தி புரட்டிவிடுதல் வேண்டும். ஊறியதும் துணிகளை எடுத்து நிழலில் நீர்வடியப் போடுதல் வேண்டும்.

8. மெழுகு நீக்கல் செயன்முறை (கொதிநீரில் அவித்து மெழுகை பிரித்தெடுத்தல்)

சாயமிடப்பட்ட துணிகளை மெழுகு நீக்குவதற்காக ஒரு பாத்திரத்தில் நீர் இட்டு கொதிக்க வைத்தல் வேண்டும். ஒரு மூடி வைன்ஸ்பிறிட் இட்டு நீர் நன்றாக கொதிநிலைக்கு வந்ததும் ஒவ்வொரு துணிகளாக நீரில் இட்டு மெழுகு நன்றாக நீங்கும் வரையில் இரு தடி கொண்டு சலவை செய்தல் வேண்டும். நீருக்கு மேல் மெழுகு மிதந்து வரும் போது அதனை ஒரு சிறு பாத்திரம் கொண்டு வடித்தெடுத்து பாத்திரம் ஒன்றில் சேகரித்தல் வேண்டும். நன்றாக மெழுகு நீக்கப்பட்ட துணிகளை இன்னொரு பாத்திரத்தில் இட்டு சலவை செய்தல் வேண்டும். (சண்முகம் சுந்தரி, வயது 39, சமயபுரம்)

9. நன்றாக துணிகளை சலவை தூளில் கழுவுதல்

ஒரு பாத்திரம் நிறைய நீரினை (7 ½ மீற்றர் துணிக்கு 25 லீட்டர்) எடுத்து 10 கிராம் சலவைத்தூளை இட்டு மெழுகு நீங்கும் வகையில் சலவைசெய்தல் வேண்டும். ஒவ்வொரு துணியாக மெழுகு நீங்கியதும் சலவைசெய்து எடுத்து காயவிடுதல் வேண்டும்.

10. வடிவமைக்கப்பட்ட துணிகளை காற்றில் உலரவைத்தல்

சலவை செய்த துணிகளை நன்றாக காற்றில் உலரவைக்க வேண்டும். வெயிலில் காயவைத்தால் துணிகள் சுட்டு நிறம் பாதிக்கப்பட்டுவிடும். அதனால் நிழலில் உலர்த்துதல் அவசியமானது. (சண்முகம் சுந்தரி, வயது 39, சமயபுரம்)

11. அயனிட்டு முழுமைப்படுத்தப்பட்ட வடிவமைப்புக்கள்

உலர்தப்பட்ட துணிகளை கடதாசி வைத்து அயன் பண்ணுவதன் மூலம் பற்றிக் வடிவமைப்பு முழுமை பெறும். பற்றிக்கில் வரைந்த வடிவமைப்பை பார்வையிட முடியும்.

அனைத்து ஆடைகளில் இருந்து பற்றிக் ஆடைகளை தனியாக இனம்காண மெழுகு மூலம் உருவாகும் வெடிப்பு போன்ற அமைப்பே துணைபுரிகின்றது. துணியை கட்டுப்படுத்துவதற்கு பதிலாக சாயங்களை எதிர்க்க மெழுகு பயன்படுத்தப்படுகின்றது. நீண்ட ஒரு செயன்முறை மூலம் பற்றிக் உற்பத்திகளை மேற்கொள்வதால் இவ் வடிவமைப்புக்களுக்கான பெறுமதி சாதாரண துணிகளை விட சற்று உயர்வாகவே உள்ளது. படைப்பாளர்களின் உழைப்பிற்கும், திறனை பிரயோகிக்கும் முறைக்கும் ஏற்ப வடிவமைப்பின் தரங்கள் தீர்மானிக்கப்படுகின்றன.

முடிவுரை

சுயகைத்தொழில்கள் கிராம பொருளாதாரத்தில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றன. இன்று பல்வேறு உற்பத்திகள் மூலம் பாரம்பரிய கைத்தொழில்கள் பாதிக்கப்பட்ட போதிலும் அதன் நிலைத்திருப்பை மீண்டும் வலியுறுத்தும் வண்ணம் பல்வேறு செயற்பாட்டாளர்கள் ஆர்வம்காட்டி வருகின்றனர். அவ்வகையில் பற்றிக் வடிவமைப்புக் கலையானது தேசிய கலாச்சாரத்தில் பங்களிப்புச் செய்துவரும் ஆடை வடிவமைப்புக் கலையாக காணப்படுகின்றது. இலங்கையின்

பல்வேறு பிரதேசங்களில் பற்றிக் வடிவமைப்புக்கள் இடம்பெற்ற போதிலும் வடக்கு, கிழக்கில் யுத்தத்திற்கு பின்னரான காலகட்டத்தில் தமது சுயதொழில் முயற்சியாக பற்றிக் வடிவமைப்புக்களில் பெண்கள் செயற்பட்டு வருமானம் ஈட்டிவருகின்றனர். அவர்களிற்கு பற்றிக் உற்பத்தி பயிற்சிகளும், மேலதிக தொழில்நுட்ப வசதிகளும் செய்து கொடுக்கப்பட்ட போதிலும் பொதுவான வடிவமைப்புக்களையும், நவீன அலங்காரங்களையும் வடிவமைத்துவருகின்றனர். இவர்களின் வடிவமைப்புக்களில் தமிழர் மரபு சார்ந்த அலங்கார வடிவமைப்புக்கள் அரிதாகவே காணப்படுகின்றது. இதுவே ஆய்வின் பிரச்சனையாக அமைகின்றது.

அதற்கு தீர்வுகாணும் ஒரு முயற்சியாக ஆய்வாளரால் தமிழர் மரபுசார்ந்த அலங்காரங்கள் பற்றிக்கில் வடிவமைக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டது. இதனை பார்த்த உற்பத்தியாளர்கள் வரவேற்கத்தக்க விடயம் என குறிப்பிட்டனர். தமது உற்பத்தி செயற்பாடுகள் எதிர்காலத்தில் தமிழர் மரபுசார் விடயங்களை பிரதிபலிக்கும் வகையில் நாம் செயற்பட வேண்டும் என்ற பல மாற்றுக் கருத்துக்களை முன்வைத்தனர். எனவே ஆய்வாளரால் தெரிவு செய்யப்பட்ட ஆய்வுப் பிரச்சனைக்கான தீர்வாக மக்கள் மத்தியில் ஏற்பட்ட மாற்றங்கள் பெரும் வெற்றியாக திகழ்கின்றது.

வெறுமனே வருமான நோக்கம் மட்டுமன்றி கால சூழலுக்கு தகுந்த ஆரோக்கியமான வாழ்வுக்கும், எதிர்கால தலைமுறையினருக்கும் எமது பாரம்பரிய அலங்கார நுட்பங்களை பற்றிக் ஆடைகள் மூலம் உருவாக்கி எமக்கான அடையாளத்தை நிலைநிறுத்துவது அவசியமானதாகும். அந்தவகையில் பற்றிக் வடிவமைப்பில் தமிழர் மரபுசார் வடிவமைப்புக்களை வெளிப்படுத்தி உற்பத்தியை அதிகரிப்பதுடன், மக்கள் மத்தியில் அதனை பரவலாக்கம் செய்து நுகர்வின் கேள்வியினையும், விற்பனையினையும் அதிகரித்து சர்வதேச சந்தைகளில் பற்றிக் உற்பத்திக்கான சந்தைவாய்ப்பினை பெறுவதுடன், ஏற்றுமதியினூடாக புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியில் நுகர்வினை அதிகரித்து நாட்டிற்கான அந்நிய செலாவணியை பெற்றுக் கொடுத்தலையும் நோக்கமாகக் கொண்டு இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆகவே தொடர்ந்து இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற சமூக பெறுமானத்தை ஏற்படுத்தி எமது பிரதேசத்தில் இவ் உற்பத்தியை வெளிக்கொணரும் வகையிலும் அதற்கு வலுச்சேர்க்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நோக்கிலும் இவ் ஆய்வானது சிறந்த முறையில் தனது இலக்கை அடைந்துள்ளது. எதிர்காலத்தில் இப்பிரதேச பற்றிக் உற்பத்திகளில் தமிழர் மரபுசார் அலங்கார வடிவமைப்புக்களை இணைத்து உற்பத்திகளை முன்னெடுப்பதற்கான ஒரு உந்துசக்தியை வழங்கியுள்ளதுடன் உற்பத்தி சார்ந்து பெரும் மாற்றத்தையும் ஏற்படுத்துவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

உசாத்துணை

1. மௌனகுரு.சி, 2014, “மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்”, குமரன் அச்சகம், கொழும்பு, பக் - 375
2. வீரசிங்கம் பிரதீபன், 2018, “வவுனியம்”, பிரதேச கலாச்சார பேரவை. வவுனியா.
3. Evi Steelyana, 2012, “Batik A Beautiful Cultural Heritage That Preserve Cultural And Support Economic Development In Indonesia”, BINUS University, Jakarta Barat. Vol.3

4. Karal Kay Howard, 1968, "A Study Of Batik Printing On Natural Fiber Fabrics And Their Derivatives", submitted to the Oklahoma state university, p.no – 6 – 41

அறிக்கைகள்

1. "Statistical Hand book", 2021,District planning secretariat, District secretariat, vavuniya.
2. தேசிய அருங்கலைகள் பேரவை , 2021, மாவட்ட செயலகம், வவுனியா.

இணையத்தளங்கள்

1. https://en.m.wikipedia.org/wiki/Batik_industry_in_Sri_Lanka,2022/05/04, 6.54AM.
2. https://en.m.wikipedia.org/wiki/Batik,2022/05/04, 7.08 AM.
3. https://noorarfa.com/the-types-of-batik/2022/05/17, 1.11 PM.
4. https://mybatik.org.my/batik/batikhistory/, 2022/06/18, 7.17 AM.

நேர்காணல்கள்

1. நிவேஜா.க, தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை, அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேசசெயலகம், வவுனியா. வயது 31. 06.16.2022, 1.29 p.m
2. என்.எம்.முனாசீர், தேசிய அருங்கலைப் பேரவை அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்ட செயலகம், வவுனியா. வயது 29. 13.12.2021, 1.05 a.m.
3. வாசுகி.சி, சிறுதொழில் துறை அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், வவுனியா. வயது 38. 1.12.2021, 11.05 a.m
4. சுகுணலதா.த, காத்தார் சின்னக்குளம், வவுனியா, வயது 46. 06.12.2021, 2.00 p.m
5. சத்தியம்மாள், பெரியார்குளம், வவுனியா. வயது 60. 06.12.2021, 2.00 p.m
6. ஜெகதீஸ்வரி.லி, சமயபுரம், வவுனியா, வயது 39. 04.05.2022, 9.00 a.m
7. சித்திரா.செ, சமயபுரம், வவுனியா, வயது 39. 04.05.2022, 9.30 a.m
8. சண்முகம் சுந்தரி, சமயபுரம், வவுனியா, வயது 39. 04.05.2022, 10.00 a.m

பின்னிணைப்பு

இற்றைவரை ஆய்வுப்பிரதேசத்தில் பற்றிக்கில் இடம்பெறும் அலங்கார வடிவங்கள்

தமிழர் மரபுசார் அலங்காரங்கள்

குத்துவிளக்கு

மகர யாழ்

குத்துவிளக்குமுடி

வரத்தி

ஏகாவடம், தோடு

கட்டாளி

கூத்து முகக்கலை

வன்னியர் (போர் வீரர்)

உடுக்கு, அம்மனைக்காய்

பனைசார் அலங்காரங்கள்

தென்னோலைகள், கிடுகு கொம்பறைகள்

கூத்து

காவடி

கரகம்

அலங்காரங்கள்

பற்றிக் உற்பத்திப் படிமுறைகள்

(1)

(2)

(3)

(4)

(5)

(6)

(7)

(8)

(9)

(10)

(11)

பெரியதம்பிரான் சடங்காற்றுகையில் ஏற்பட்ட மாற்றங்கள்: மட்டக்களப்பு ஏறாவூர்ப் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

சு.சந்திரகுமார்[1*], கு.மதுசாந்[2]
[1,2]நுண்கலைத்துறை, கிழக்குப்பல்கலைக்கழம், இலங்கை,
[*]srckumar20yahoo.com

ஆய்வுச் சுருக்கம்

பண்டைய சமூகங்கள் தோற்றம் பெற்ற காலம் முதலே சமூகக் குழுமங்களும் தோன்றியிருக்கின்றன. இதன் வழித் தோன்றலாக சடங்காற்றுகையில் உள்ள வழிபாட்டு மரபுகளும் நடைமுறையில் இருந்தே வந்துள்ளன. மட்டக்களப்பில் குறிப்பாக ஏறாவூர்ப் பிரதேசத்தில் பெரியதம்பிரான் கோயில் சடங்காற்றுகை நிலவியமைக்கான சான்றுகள் பல காணப்படுகின்றன. இன்றைய நிலையில் இவ்வாறான வழிபாட்டு முறைகள் ஏனைய வழிபாட்டு நுட்பங்களையும் தன்னுள் உட்புகுத்தி பரவலடைந்து வருகின்றன. சாதிக்கொரு கோயில் என்ற மரபின் அடிப்படையில் அமையப்பெற்ற பெரியதம்பிரான் கோயில்களை மையமாகக் கொண்ட இனக் குழுக்கள் தங்களுடைய அடையாளத்தை உயர்த்தப்பட்டோர் எனப்படுகின்றவர்களின் பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், நடைமுறைகளைத் தமதாக்கிக் கொள்வதன்மூலம் அழிக்கின்றனர். குறிப்பாக, தாமும் அவர்களைப் போலவே உயர் பண்புடையவர்களாகச் சமூகத்தில் மதிக்கப்படுவோம் என்ற நிலையற்ற மேன்நிலையாக்கத்தினுள் உட்புகுத்தப்படுகின்றனர். இது இந்துத்துவ வர்ணாசிரம தர்மப் பின்புலத்தில் எளிய சாதியினர் என ஊர்களின் வெளிப்புறத்தே ஒதுக்கப்பட்டு விலங்குகளிலும் கேடாக அடக்கி ஒடுக்கப்பட்ட இனக் குழுமங்களைத் தமக்கான பண்பாட்டை அடகு வைத்துத் தமது மரபுகளில் குறிப்பிடப்பட்டவைகளுக்குப் புறம்பாகச் செயற்படுகின்ற நிலையுடன் தமக்குள்ளே தம்மை இரண்டாம் தரப்பினராக்க முயற்சிக்கும் போக்கை ஏற்படுத்தும். ஏறாவூர் பெரியதம்பிரான் கோயில் சடங்காற்றுகை மரபானது வண்ணார் சமூகக் குழுமத்தின் விடியலுக்காய், உள ஆற்றுப்படுத்தலுக்காய் தனித்துவமான பண்புகளைக் கொண்டு இருக்கின்றது. இதற்குப் பல ஆதாரங்களைக் கொண்டு விளக்கியுள்ளதோடு, பெரியதம்பிரான் கோயில் சடங்காற்றுகை மாறுதல்களையும் மேன்நிலையாக்க முயற்சிகளையும் இன்றும் மேற்கொண்டு வருகின்றமையும் அதற்கான காரணங்களையும் மட்டக்களப்பு ஏறாவூர்ப் பிரதேசங்களில் அமைந்துள்ள பெரியதம்பிரான் கோயில்களை மையமாகக் கொண்டு விளக்கியுள்ளது. அத்தோடு, அதிலிருந்து விடுபடுவதற்கான நடைமுறைசார் கருத்துகள் பற்றியும் வியாக்கியானிக்கப்படுகின்றது. இவ்வாய்வு சலவைத்தொழில் சமூகத்தின் மத்தியில் உள்ள பெரியதம்பிரான் கோயில் சடங்கில் ஏற்பட்ட மாற்றங்களையும், அதற்கான காரணங்களையும் கண்டறிதலாகும். மாற்றங்கள், அதற்கான காரணங்கள், இதனால் அவர்களது வாழ்வியலில் ஏற்பட்ட தாக்கங்கள் பற்றியதாக இவ்வாய்வு அமைகின்றது. இது நேர்காணல், கள ஆய்வு முறையுடன் தகவல்கள் சேகரிக்கப்பட்டு விபரண முறையில் பகுக்கப்படுகின்றது.

திறவுச் சொற்கள்: பெரியதம்பிரான், வண்ணார் சமூகக்குழுமம், நிலையற்ற மேனிலையாக்கம், பண்பாட்டை அடகுவைத்தல், அடையாள அழிப்பு

ஆய்வு முறையியல்

இவ்வாய்வில் விளக்கமுறையியல் (Exploratory Method), பண்புசார் ஆய்வு முறையியல் (Qualitative research design) எனும் ஆய்வு நுணுக்கம் பின்பற்றப்பட்டு ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது. அத்துடன், வரலாற்று ஆய்வுமுறையியலும் கையாளப்படுகின்றது. கள ஆய்வு, நேர்காணல், நேரடி அவதானம் முதலான முறையியல் பயன்படுத்தப்படுகின்றன. படிமுறை வளர்ச்சியினுடனான வளர்ந்து வந்திருக்கின்ற பத்தசி வழிபாட்டு முறைமைகளை அணுகுவதற்கு வரலாற்று ஆய்வு முறையியல் பயன்படுத்தப்பட்டு, அதனூடாகப் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. அத்துடன், கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு ஏறாவூர்ப் பிரதேசத்தில் பெரியதம்பிரான் சடங்காற்றுகையின் தோற்றம், வளர்ச்சியைக் கண்டறிவதற்கு வரலாற்று முறையியல் பயன்படுத்தப்பட்டது.

ஆய்வு நோக்கம்

வண்ணார் சமூகக் குழுமத்தினரால் பேணிப் பாதுகாத்து வருகின்ற பெரியதம்பிரான் சடங்காற்றுகை மரபுகளில் ஏற்பட்ட மாறுதல்களைக் கண்டறிதல்.

இலக்கிய மீளாய்வு

பேராசிரியர். இரா.வை. கனகரத்தினத்தின் ‘‘ஈழத்து நாட்டார் வழிபாடு’’ எனும் நூலில் நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டில் பெரியதம்பிரான் வழிபாடு ஓர் அறிமுகம் என்ற தலைப்பில் ஆரம்ப காலங்களிலிருந்து மனித வாழ்வில் சமய வழிபாட்டு முறைகள் இருந்தமையினையும், அதன் வழி தமிழ் மக்களிடம் வழிபாடு இரு வகைகளில் அமைந்துள்ளது என்பதனையும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், அதனை விதிமுறைகளுக்கு உட்படாத வழிபாடு, விதிமுறைகளுக்கு உட்பட்ட வழிபாடு என்பதனையும், கிராமிய வழிபாட்டுமுறை சங்க காலம் முதல் இருந்து வந்தது என்பதனைவும் கூறுகிறார். மேலும் பெரியதம்பிரான் தோற்றம், நீலாசோதையன் தோற்றம், பெரியதம்பிரான் நீலாசோதையன் ஆகியோர் பாண்டிய நாட்டிற்குப் புறப்படல், நீலாசோதையன் - பார்ப்பனன் முதலியோரது நிலை, ஆலய அமைப்பு முறை, பத்தசிகள், மட்டக்களப்புப் பிரதேசத்தில் அமைந்த ஆலயங்கள், ஆலய அமைவிடங்கள், பெரியதம்பிரான் வடிவம், பெரியதம்பிரான் பரத்துவம், கட்டாடித் தெய்வம், பூசாரியார் கோலம், பெரியதம்பிரான் வேள்விச் சடங்குகள், கதவு திறத்தல், மடைகட்டுதல், பொங்கல், நோர்ப்புச் சடங்கு, தெய்வமாட்டல் என்பன பற்றிய விடயங்களையும் வெளிப்படுத்தியுள்ளார். இங்கு வழிபாட்டு நிலைமையே அதிகம் கூறப்படுகின்றது.

வெல்லவூக் கோபாலின் ‘‘மட்டக்களப்பு வரலாறு ஓர் அறிமுகம்’’ என்ற நூல் மட்டக்களப்பு எல்லைகளும், நில அமைப்பும், பூர்வக் குடிகளும் நில அமைப்பும், ஏனைய பிரதான சமூகங்கள் என்ற பிரிவினுள் வண்ணார் சமூகம் பற்றிய தகவல்களும் வெளிப்படுத்தப்படுகின்றன.

எ.விஜயரெட்ணம் (விஜய்) எழுதிய மட்டக்களப்பு வரலாறு பூர்வீகக் குடிகளும் குமார தெய்வ வழிபாடும் பண்பாட்டு வரலாற்றின் அடியாக ஓர் உசாவல் என்ற நூலில் 23, 30, 31 ஆகிய பக்கங்களில் - மட்டக்களப்பு வரலாறு என்ற தலைப்பில் வரலாற்று மூலங்கள், வரலாற்றின் பருமட்டான வரைபு, மட்டக்களப்பின் பூர்வீகக் குடிகள், மட்டக்களப்பில் நிகழ்ந்த குடியேற்றங்கள் என்பன பற்றிச் சுருக்கமாக விபரிக்கப்பட்டுள்ளன.

வடிவேல் இன்பமோகனின் ‘‘கிழக்கிலங்கைச் சடங்குகள்’’ எனும் நூலில் கிழக்கிலங்கைச் சடங்குகள், சடங்கு நிகழ்த்துகையில் கலைக் கூறுகள், சடங்குகளில் அழகியல் கூறுகள், இலங்கைத் தமிழர்களின் ஆரம்பக் கலைகளின் கூறுகள் ஆகியவற்றைத் தாங்கிய சடங்குகளின் ஒரு பகுதியாக கிழக்கிலங்கைச் சடங்குகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. சடங்குகள் கலைக்குரிய கூறுகளைக் கொண்டுள்ளதால் அவற்றின்மூலம் பெறப்படும் அனுபவம் அழகியல் அனுபவமாகக் கொள்ளப்பட வேண்டும் என்கின்றார். இதனடிப்படையில் சடங்கை ரசிக்கும் சுவைஞனுக்குத் தேவையான அடிப்படைத் திறன்கள், அழகியல் அனுபவத்தை வழங்கும் காரணிகள், சடங்கின்மூலம் பெறப்படும் அழகியல் அனுபவமான கதாசிஸ், அரிஸ்ரோட்டில் கூறும் கதாசிஸ், அரிஸ்ரோட்டில் கூறும் கதாசிசைச் சடங்கோடு ஒப்பிட்டுப் பார்த்தல், தெய்வமாக ஆடுவோர் பார்வையாளர்களுக்குக் கதாசிஸ் தோன்றுமாறு செய்யப்படும் முறை, பார்வையாளரின் உணர்ச்சி வெளிக்கொணர்கை, சடங்குகள் மூலம் பெறப்படும் மகிழ்வளிப்பு, அனுபவம், சடங்கு மூலம் பெறப்படும் அழகியல் அனுபவம், கலை அனுபவத்திலிருந்து வேறுபடும் விதம் என்பன பற்றி விரிவாக விளக்கியுள்ளார்.

சி.மௌனகுருவின் ‘அரங்கியல்’ எனும் நூலில் பகுதி மூன்று ‘‘பாண்டிருப்பு திரௌபதையம்மன் கோயில் பாரதச்சடங்கு ஒரு நாடகநிலை நோக்கு’’ என்கின்ற தலைப்பில் சடங்கில் நாடகம் காணப்படும் விதம் தொடர்பாக விளக்கியுள்ளார்.

இவ்வாய்வாளர்கள் ஒவ்வொருவரும் தத்தமது ஆய்வுப் பொருண்மைக்கும், நோக்கத்திற்கும், கருதுகோளுக்கும், ஆய்வுப் பிரச்சினைக்கும் அமைய ஆய்வு செய்துள்ளனர். இவ்வாய்வில்

பெரியதம்பிரான் சடங்காற்றுகை வெளியில் அதிகார ஆதிக்கம், மேனிலையாக்கம் ஏற்படுத்திய பண்பாட்டு, வழிபாட்டு மாற்றங்கள், அதனால் ஏற்பட்ட தாக்கங்கள், அதன் ஆபத்துக்கள் என்பன ஆராயப்பட்டுள்ளன.

சடங்காற்றுகை மரபுகளின் தொன்ம உருவாக்கம்

மனித சமுதாயத்தின் கடந்த காலப் பண்பாடுகளின் தொடர்ச்சியாகப் பின்பற்றப்பட்டு வருகின்ற முறைமை மரபு எனலாம். இதனை எழுத்துச் சான்றுகள் இல்லாத நிலையில் புராணக் கதைகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், பழமொழிகள் போன்றவற்றின் மூலம் அறிந்து கொள்ளலாம். ஆரம்பகால மக்கள் தங்கள் வாழ்க்கையில் வேட்டையாடுதலையும் விவசாயத்தையுமே மூலத்தொழிலாகக் கொண்டிருந்தார்கள். இத்தொழிலை மேற்கொள்ளும்போது தனியாகவும், குழுவாகவும் இணைந்து தமது களைப்பைப் போக்குவதற்காக ஆடுவதும் பாடுவதும் உண்டு. அப்போது அவர்களின் கலைத் திறமைகள் வெளிப்படுகின்றன. தனது வலிமை, சிந்தனைகளுக்கு மீறிய இயற்கை நிகழ்வுகளை மனிதர் வணங்கத் தொடங்கினர். சூரியன், நெருப்பு, மழை, விலங்குகள் முதலான இயற்கை வழிபாடுகளையும் வழிபட்டனர். இவ்வகையில் இயற்கை மீதான மனிதரின் அச்ச உணர்வே வழிபாட்டைத் தொடக்குகின்றது. தன்னைவிட வலிமை வாய்ந்த, தன்னால் செய்யமுடியாத செயல்களைச் செய்கின்ற இயற்கையை வழிபடத்தொடங்கினர்.

இவ்வகையில், முன்னோரின் வழிபாடு ஒருவித ஆச்சரியமும், பாதுகாப்பும், குற்ற உணர்வும் அதிலிருந்து விடுபடவும் என வழிபாடு நீள்கிறது. அதன் வழி தேவையான, விருப்பமான பொருட்களைப் படைப்பதன்மூலம் அந்தத் தெய்வதைச் சாந்தப்படுத்த, குற்ற உணர்விலிருந்து விடுபட, மகிழ்ச்சிப்படுத்த 'படையல்' தொடங்குகிறது. அம்மனிதர்கள் மரத்தில் தெய்வமாகவோ, பேயாகவோ குடிகொள்வதாக நினைத்து வணங்கிவந்ததன் ஊடாக வழிபாட்டு மரபு ஆரம்பமாகின்றது. அந்த தெய்வம் சமூகத்தின் ஓர் அங்கமாக இருக்கின்றது. இதனால் சாமியைத் தொட்டு வழிபடவும் பூசை செய்யவும் அவர்களால் முடிந்தது. அத்தெய்வத்தின் வரலாறு பற்றி ஒரு பாடல் இருக்கும் அல்லது ஒரு கதை இருக்கும். அதைத் தெரிந்து கொள்ள படிக்கவோ, படித்துச்சொல்லத் தனியாக ஓர் ஆளோ தேவையில்லை. அனுபவமே இங்கு தொழில்படும்.

உள்ளூர் வழிபாட்டு மரபில் பெரிய கட்டிடம், கோபுரம், கும்பாபிஷேகம் என்பன இல்லை. இது நடுகல்லாகவோ, களிமண்ணாகவோ, கும்பமாகவோ கீற்றுக் கொட்டகையில் இருந்தது. பக்தியின் உச்சம் பெரும் அமைதியுடன், கடும் தியான நிலையில் இருக்கவில்லை. பெரும் ஆரவாரத்துடன் உடுக்கை, பறை அடித்து ஆடுதலும் ஆட்டம், பக்தியின் உச்சத்தில் மது, மாமிசம் பரிமாறலும் காணப்படும். இவ்வாறு வாழ்வின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி, தம்முள் ஒருவராய் கொண்டாடும் படியாக இருந்த தெய்வம் எப்படி ஒரு நிறுவனமாக, அதிகார மையமாக மாறுகின்றது. இன்றைய பார்ப்பனிய மரபு தொடக்க காலச் சடங்குவழிக் கோயில்களை மாற்றத்திற்குக் கொண்டுவந்தது எவ்வாறு? எனும் வினா முக்கியமானது. ....

பார்ப்பனியம் தம் வழிபாட்டு முறைக்குள் ஓர் இனக்குழுமத்தின் மரபுவழித் தெய்வங்களை 'மேல்நிலையாக்கம்' செய்ததன் மூலம் அவர்களை ஏற்றத்தாழ்வுடன் செயற்படுவது அறிதலுக்குரியது. அவ்வாறு மேல்நிலையாக்கம் செய்ய உடன்படாத மரபுகளினதும்

சமூகத்தினதும் நிலை என்ன என்பதைப் பெரியதம்பிரான் சடங்கு மாற்றம் என்கின்ற இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றது.

ஏறாவூர்ப் பிரதேச பெரியதம்பிரான் சடங்காற்றுகை மரபின் மாற்றமும் மேல்நிலையாக்கமும் என்கின்ற விடயப் பொருளை அறிவதற்கு அதிகார மையம், மேன்நிலையாக்கம், பார்ப்பனியம் என்கின்ற சொற்பதங்களின் புரிதல் அவசியமாகும்.

மாற்றங்களும் அதற்கான காரணங்களும்

கிழக்கிலங்கையில் பத்தசி முறைப்படி நடைபெற்ற வழிபாட்டு மரபுகள் வெவ்வேறு காரணங்களால் மாற்றமடைந்து அதன் தன்மைகளையும், அதனை முன்னெடுத்த சமூகங்களின் அடையாளங்களையும் இழக்கும் போக்கு நிலவுகின்றது. இதற்குரிய சமஸ்கிருதவயமாக்கல், நவீனமயமாக்கல் போன்றவற்றாலும், தம்மை உயர்ந்தவர்கள் என்பவர்களாலும் ஏற்பட்டது. ஓரங்கட்டப்பட்ட மக்களை இவ்வதிகார மையம் பாதித்தது. அதனால் தம் அடையாளத்தை இழந்து அவர்களது வழிபாட்டு மரபுகளே மேலானது எனப் பின்பற்றும் போக்கு நிலவுகின்றது. இதனையே ஏறாவூர் பிரதேச பெரியதம்பிரான் கோயில் சடங்குகளில் காணலாம். இதற்கான காரணங்களைப் பின்வருமாறு ஆராயலாம்.

அதிகாரமையம்

அதிகாரமையம் என்பது பிறரது வாழ்வையும் பிற நிகழ்வுகளையும் கட்டுப்படுத்தக் கூடியதாகும். ஓர் அமைப்பின் செயல்பாட்டு நிர்வகிப்புக்கென இருக்கும் அமைப்புரீதியான கட்டமைப்பு, நடைமுறைகள், நெறிமுறைகள், கட்டுப்பாடுகள் முதலியன இவற்றின் சேர்க்கை எனலாம். இது பெரும்பாலும் அந்த அமைப்புக்குள்ளான அனைத்து நிகழ்முறைகளையும் செயல்படுத்துவதற்கு வழிகாட்டும் நிர்ணயப்படுத்தப்பட்ட நடைமுறைகள், அதிகாரங்களின் முறையான பகுப்பு, அதிகார அடுக்குவரிசை, தேவைகளை எதிர்நோக்கி செயல்திறனை மேம்படுத்த முற்படும் உறவுகள் ஆகியவற்றால் குறிக்கப்படும். மரபுவழியாக இவ்வதிகாரக் கொள்கையை உருவாக்கவில்லை. மாறாக அதனைச் செயல்படுத்துகிறது. இதனை மட்டக்களப்பு பெரியதம்பிரான் கோயில் வாயிலாக அறியமுடியும்.

“இந்த பெரியதம்பிரான் என்றது சலவைத்தொழிலாளிட குல தெய்வம். இங்கு கோயில் கட்டுவதனூடாகவும், ஐயரின் உருவாக்கத்தினூடாகவும் ஆக்கிரமிப்பு நிடைபெறுகின்றது. காரணம் மற்றக் கோயில் ஊடாக புறக்கணிப்பு நடந்தனாலும், வேற சாதியாக்கள் இன்னும் ஒரு கோயிலுக்குப் போக ஏலா. நாங்க என்னென்டா வெளிய நிண்டு பூச பாக்க வேண்டி வரும். பிறகு நாங்க பிரச்சினப்பட்டு இதெல்லாம் தேவையில்ல எண்டு சொல்லி வெளியில வந்த பிறகு இப்ப நாங்க எங்கட கோயிலுப் போய் சாமி தூக்குறது” (நேர்காணல்: சிவமூர்த்தி.கோ) எனும் கூற்று கவனத்திற்குரியது. இவர்கள் ஏனைய சாதியினரின் கோயிலுக்குப் போவது அதிகாரத்தால் மறுக்கப்படுகின்றது. இதனால், தம்மை உயர்சாதி என்போரின் வழிபாட்டு முறைகளைப் பின்பற்றுகின்றனர்.

மையத்தில் இருந்தே சட்டம், கொள்கை, கட்டுப்பாடுகள் என்பன உருவாகுகின்றன. அவற்றை அமுல்படுத்த அதிகாரத்துவத்தை உருவாக்குகிறது. நடைமுறையில், கொள்கையின் பொருள்

விளக்கம், அமுல்ப்படுத்தல் போன்றன செல்வாக்கிற்கு இட்டுச்செல்லக்கூடும். ஆனாலும், அது கட்டாயமல்ல. ஆரம்ப அதிகாரத்தில் மதகுருமாரின் தாக்கம் இருந்தது. ஆதிகால சமதர்மச் சமுதாயங்களில் இருந்து சமூக வர்க்கங்கள், சொத்துரிமைகளாகப் பிரிவடைந்த, நாகரிக சமுதாயமாக மாறி வரலாற்று உருமாற்றம் நிகழ்ந்தது. இந்த உருமாற்றத்தில் சமுதாயத்தில் இருந்து ஓர் அரசு வலுவானது. இதனால், அதிகாரம் பெருகிய முறையில் மையம் கொள்ளச் செய்யப்பட்டு, அதன்மூலம் அதிகாரம் பரவலாக்கப்பட்டது. நாகரிக சமுதாயத்தில், மற்றவர்களை வேலை செய்ய நிர்ப்பந்திப்பது அரசு அதிகாரிகளுக்கு மட்டுமே சட்டரீதியான உரிமையுடையதாக்கியது. எனவே, அதிகாரத்துவம் சமூக ஒழுங்கிற்கு வழிவகுக்கும் வரை சிக்கலாகவே இருக்கும்.

அதிகாரத்துவம் என்னும் ஒரு சமூகத் தட்டு தனித்துவமானதொரு ஆளும் வர்க்கமாக இயலுமா? இயலாதா? என்பதைக் கொண்டது. இது பெருமளவில், நிலவும் சொத்துடைமை உறவுகள், செல்வத்தின் உற்பத்தி வழிமுறைகள் ஆகியவற்றைச் சார்ந்ததாய் உள்ளது. இந்நடைமுறையை ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச சமூக அமைப்புகளை அவதானிப்பதன் மூலம் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

மார்க்சிய சோசலிச தத்துவத்தின் மையமாக இருப்பது தொழிலாளர்கள் தங்களைச் சுய நிர்வாகம் செய்து கொள்வது என்கிற சிந்தனையாகும். மனிதர்களிடையே உள்ள அறநெறியும் சுய ஒழுங்கும் அதிகாரத்துவ கண்காணிப்பு, கட்டுப்பாட்டை அவசியமில்லாமல் ஆக்கும். நலன்களிடையே உண்டாகும் மோதல்களில் சட்டங்களின் அடிப்படையில் மத்தியஸ்தம் செய்வதற்கு அதிகாரத்துவங்கள் எழுகின்றன. ஆனால், அந்த நலன்களின் மோதல்களே காணாமல் போனால் அதிகாரத்துவங்களும் அவசியமற்றது. இவ்வதிகாரத்துவத்தினை மட்டக்களப்பு பெரிய தம்பிரான் கோயில்களின் வாயிலாக அறியலாம். பெரியதம்பிரானின் சமூக, வாழ்வியல் அடையாளம் உடைக்கப்பட்டு காணாமலாக்கப்பட்டுள்ளது.

மேனிலையாக்கம்

தனி நபர்களும் குழுக்களும் சமூகத்தில் வசிக்கும் இடம் அல்லது அந்தஸ்தில் ஏற்படும் மாற்றத்தைச் சமூக அசைவியக்கம் என்பர். சமூகம் வரன்முறை அமைப்புடையதாகவும் உயர்வு தாழ்வு பேதம் உடையதாகவும் உள்ளது. சமூகத்தின் கீழ் நிலையில் இருந்து உயர்வடைவதை நோக்கிய மாற்றத்தைக் கூட்டாக ஒரு குறித்த சமூகம் பெறுதல் இயலும். இவ்வித மாற்றம் சமூகத்தின் பல்வேறு குழுக்களின் சார்புநிலை மையத்தில் மாற்றத்தை உண்டாக்கும். இதன் பிரதான உந்து சக்தி மேனிலையாக்கமாகும். மேல்நிலையாக்கம் சமூக அசைவியக்கத்தின் பண்பாட்டு மாற்றத்தையே குறிக்கின்றது. தாழ் நிலையில் உள்ள இனக்குழு அல்லது சாதி தன்னிலும் மேல்நிலையில் உள்ள உயர் சமூகக் குழுவினரின் பழக்கவழக்கங்கள், சடங்குகள், நம்பிக்கைகள், மத வழிபாட்டு முறைகள், சிந்தனைப் போக்குகள் ஆகியவற்றை கடைப்பிடித்தலே மேனிலையாக்கமாகும். மேல்நிலைப் பண்பாட்டை சமஸ்கிருதம் என்கின்ற சொல் குறிக்கின்றதா? என்பது பற்றிய கருத்தாக்கக் கட்டவிழ்ப்பு அவசியம். பிராமணர் சமூகமும் வடமொழிசார் பண்பாடும் இந்துமதப் பாரம்பரியத்தில் மேல்நிலைப் பண்பாட்டைச் சுட்டி நின்றதால் மேனிலையாக்கத்தை விளக்குவதற்குப் பொருத்தமாய் அமைந்தது. மேனிலையாக்கத்தால் மட்டக்களப்பு பெரியதம்பிரான் கோயில்களும், அதன் வழிபாட்டு முறைகளும் உருமறைப்பும்

பெயர் மாற்றமும் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, வெளிப்படையாகப் பெரியதம்பிரான் என்கின்ற பெயரினை அக்கோயில்கள் கொண்டிருப்பதினால் கோயிலை நோக்கி வருபவர்கள் குறைவதினாலும், இக்கோயில் வண்ணார் சாதியினரின் கோயில் என்று தெரிந்து விடுமோ? என்ற அச்சத்தினாலும் தமது பாரம்பரிய அடையாளத்தையே மாற்றியமைத்துள்ளனர். இது அவர்களது தாழ்வு மனப்பாங்கைக் காட்டுகின்றது. இதனை நீக்கும் பொருட்டு மற்றைய சாதியினரைப்போல தாமும் தம்மை உயர்ந்தோர் என்போரின் பண்பாட்டைப் பின்பற்றி வாழவேண்டும் என்ற மனநிலைக்குச் செல்கின்றனர்.

ஆனால், பெரியதம்பிரான் கோயில் பூசைகள் அனைத்தும் பெரியதம்பிரானுக்கும் நீலாசோதையனுக்குமே நடைபெறுவது வழக்கம். இன்று இது மாற்றமடைந்துள்ளது. குறிப்பாக, ‘‘தாழங்குடால ரெண்டு பெரியதம்பிரான் கோயில் இருக்கு. அங்கு தக்க யாகேஸ்வரன் என்டு சொல்லி பெயர் மாத்தி வைச்சிருக்காங்க. அரசடியிலையும் முதல் இப்பிடித்தான் பெயரை மாத்தி வைச்சிருந்தாங்க. நான் அங்க பூச செய்யப்போன காலத்துல எனக்கு தக்கயாகேஸ்வரனுக்கு செய்யத்தெரியாது. தக்கயாகேஸ்வரன் என்டா சிவபெருமான்ட மருமகன். அவர் செய்த யாகத்துல பிறந்தவர் தான் பெரியதம்பிரான் என்டெல்லாம் செய்யப்பட்டது. நான் 2007ஆம் ஆண்டு இருந்து பூசை செய்யுறன். அங்க அவர சிவன் எண்டுதான் சொல்லுவாங்க. ஏன் எண்டா அவர்ட கொள்கை எல்லாம் சிவன், வடிவம் வந்து விஸ்ணுடது. உன்ன விட ஒரு பெரிய சிவன் உருவாக்குவன் எண்டுதானே யாகம் செய்தவரு. கடைசிக் கட்டத்துல தான் யாகம் அழிக்கப்பட்டது’’ (நேர்காணல்: சிவமூர்த்தி.கோ) எனும் பெரியதம்பிரான் கோயில் பூசாரி பிராமணரைப் போல் பூநூல் அணிந்து அதற்கேற்ப பூசை செய்கின்றார். இது தமது அடையாளத்தைத் தாமே மாற்றும் நிலையினை எடுத்துக்காட்டுகின்றது.

சமூக அந்தஸ்தில் கீழ்ப்பட்ட சாதியாக இருந்து பொருளியல் அல்லது அரசியல் பலம் காரணமாக சமூகத் தரத்தில் உயர்ந்து, அச்சமூகக் குழுவின் குல தெய்வங்களும் வணக்க முறைகளும் மாற்றம் பெற்று உயர் நெறி எனும் மாய இடத்தைத் தேடிக் கொள்கின்றது. அப்போலி உயர் அந்தஸ்திற்குப் பொருத்தமான பண்பாட்டை அச்சமூகக்குழு தழுவிக்கொள்கின்றது. உயர்த்தப்பட்ட சாதியினர், சமூகத்தின் மேன்நிலையில் கருதப்படுவர். தமது பண்பாட்டை உயர்ந்ததாகவும், மேன்மையுடையதாகவும் கருதுவர். சமூகத்தின் கீழ் நிலையில் உள்ளோர் இந்தப் பண்பாட்டை ஏக்கத்துடன் பார்ப்பதுண்டு. இதை தமதாக்கிக்கொள்ளும் ஆவல் சமூக அந்தஸ்து வரும்போது அவர்களுடையதாக்கப்படும். இது ஒரு கௌரவப் பிரச்சினையுமாகும். தாழ்த்தப்பட்டோர் உயர்த்தப்பட்டோருடைய பண்பாட்டை, பழக்கவழக்கத்தைப் பின்பற்றிக் கொள்ளவும் தமதாக்கிக் கொள்ளவும் முனையும் பொழுது அதற்கெதிரான வன்முறைகளும் ஏற்படுவதுண்டு. இத்தகைய தடைகளையும் மீறி மேல்நிலையாக்கம் என்பது சமூகத்தில் ஏற்பட்டு வந்துள்ளது (சண்முகலிங்கம்.க. 2021, தாய்வீடு). அவ்வாறு தடைகளை நீக்கி இன்னுமோர் கட்டமைக்கப்பட்ட, உயர்த்தப்பட்ட மனநிலையைக் கொண்டோரின் பண்பாட்டு நடைமுறைகளைக் காவிக் கொண்டாலும் சமூக மாற்றம் (புரட்சி) நடைபெற்று ஏற்கனவே கட்டமைக்கப்பட்டிருக்கின்ற கட்டுமைகள் அனைத்தும் அழிவடைந்து மீளவும் சமூகநீதியுடன் பல்பரிமாண நோக்கில் கட்டப்படுகின்ற கட்டமைப்புகள் துளிர்க்காத வரை புலித்தோல் போர்த்திய மான் போலவே இந்த மேனிலையாக்கம் அமையும்.

ஆரம்பத்தில், பிராமணிய மதத்தில் சடங்குகளும் வேள்விகளும் பலியிடுவதும் ஆரம்பமாகியது. அரசர்கள் பல வேள்விகளில் ஈடுபட்டனர். அந்த ஒவ்வொரு வேள்வியிலும் பல நூறு மாடுகள், குதிரைகள் ஆகியன பலியிடப்பட்டன. பல நூறு ஏக்கர் நிலங்களும் பல மாடுகளும் பார்ப்பனர்களுக்குப் பரிசாக காணிக்கையாகக் கொடுக்கப்பட்டன. மக்களும் வேள்விகளிலும் சடங்குகளிலும் ஈடுபட வற்புறுத்தப்பட்டனர், அவர்களும் தங்களால் இயன்றதை பார்ப்பனர்களுக்குக் காணிக்கையாக அளித்தனர். இவ்வாறு இங்கு மதமானது செலவு மிக்கதாக மாறியது. ஒரு கால கட்டத்தில் விவசாயம் செய்வதற்குக் கூட காளைகள், மாடுகள் இல்லாத அளவிற்கு அழிக்கப்பட்டன. இதுவே பார்ப்பனியத்தின் சிந்தனை. இவ்வாறான அதிகாரமைய மேனிலையாக்க பார்ப்பனியமுறை சமூக அமைப்பில் அல்லது வழிபாட்டு முறையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

உள்ளகக் காலனியமுறையானது ஆகமமுறைப்படி கோயில்களை அமைத்து உற்சவம் என மாற்றி இவ்வாறான நடைமுறைகளைக் கொண்டு வருவதும் அவையே உயர்ந்தது, மேலானது, சிறந்தது என்கின்ற எண்ணத்தைக் கொடுப்பதுமாகும். இந்நிலையில் சாதாரண பன்மைத்துவ வழிபாட்டு முறையிலுள்ள இனக்குழுக்கள் சமூகங்கள் மத்தியில் பெருமிதமாக்கிக் கொள்ளும். ஒருவித மாயையினை ஏற்படுத்தும். இதனால் பார்ப்பனிய மேல்நிலையாக்க மனநிலையில் இருக்கின்ற சிலர் நடைமுறைப்படுத்துவர். ஆகம முறையில் கோயில் கட்டுவர், பூணூல் போடுவர். இவ்வாறான மனநிலை திட்டமிட்டு திணிக்கப்படுகின்றது. “இரணியனின் மகன் பிரகலாதனைப் பார்ப்பனியர்கள் தன் பக்கம் எடுப்பதற்காக தகப்பனுக்கும் மகனுக்கும் முரண்பாட்டைக் கொண்டு வருகின்றனர். தமிழ் மன்னன் இரணியனின் ஆட்சியைக் குழப்புவதற்காகத் திட்டமும் தீட்டுவர்” இது அனைத்தும் பார்ப்பானின் சூழ்ச்சி என்பர். அவர்கள் என்றோ ஒரு நாள் தமிழர்களின் வழிபாட்டுமுறையினை சிதைக்க எண்ணி திட்டம் தீட்டியவைகளின் பாதிப்பினால் தான் இன்றைய இருபத்தியோராம் நூற்றாண்டிலும் எமது கோயில் சடங்குகள் மாற்றப்படுவதும் அதில் இருந்து வெளிவருவதற்காக நாம் போராடுவதும்.

ஆகம முறைசாராத வழிபாட்டில் தமிழில் மந்திரம் சொல்லி பூசை செய்யும் முறை முக்கியமானது. இம்முறைமை எம்மிடம் இருந்தும் நாம் பிராமணியத்தை நோக்கியும் தள்ளப்படுவது இரட்டைத்தன்மை எனலாம். ஹோமிபாபா என்கின்ற பின்காலனித்துவச் சிந்தனையாளர் இதனை இரட்டைத் தன்மை என்கிறார். பிரான்ஸ் பனான் கறுப்புத்தோல் வெள்ளை முகமூடி என்கின்றார். ஆபிரிக்கர்கள் ஆங்கிலேயரைப் போல தன்னை அடையாளப்படுத்த எத்தணித்ததே இந்தக் கருத்தியல். இதேபோன்ற மனப்பான்மைதான் சமஸ்கிருதமயமாக்கம். தங்களை உயர்ந்தவர் என்று சொல்லிக் கொண்டு வாழ்பவர்களின் ஊடாக அவர்களாலே ஓரம் கட்டப்படுகின்றவர்கள் என்று சொல்லப்படுகின்றவர்களின் சாதியினரின் வாழ்வியலை உள்வாங்கி அதேபோன்ற நடைமுறையைத் தாங்களும் பின்பற்றுதல் வேண்டும் என்று நினைக்கின்றனர். அதற்காகவே அவர்களின் வழிபாட்டு முறையைப் பின்பற்றுகின்றனர். இதனால், சுற்றுச்சூழலில் இருக்கின்ற பண்பாட்டில் இருந்து விலகிச்செல்வார்கள். உதாரணமாக வண்ணார் சமூகத்தில் உள்ள வழிபாட்டு முறையின் பரம்பரைத் தன்மையில் தெய்வமாக வழிபடுவதற்கு மாறாகவும், உறவுச் சொல்லைப் பயன்படுத்தி வழிபட்ட – அதன் பக்தி நெறிக்கு மாறாகவும் தங்களை உயர் அந்தஸ்து

உடையவர்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கும் பார்ப்பனிய சிந்தனை மரபுக்குள் புகுந்து அதனையே பரவலாக்குவர். அவ்வாறு அவர்கள் மாற முடியாது. எப்பொழுதும் பன்மைப் பண்பாட்டு நிராகரிப்பு மேல்நிலையாக்கத்தினால் ஊடுருவப்படுகின்றது.

பெரியதம்பிரான் மரபு மாற்றம்

பெரியம்பிரான் சடங்காற்றுகை மரபு முன்னைய காலங்களில் இருந்ததைப் போல் இல்லாமல் மேற்கூறிய அதிகார மையத்தினாலும் மேன்நிலையாக்கத்தின் தன்மையினாலும் சிதைவடைந்து பார்ப்பனிய கட்டுக்கோப்பிற்குள் சென்று தமது சுயத்தை அழித்துப் பரவலடைந்து கொண்டிருக்கின்றது. குறிப்பாக பெரியதம்பிரான் சடங்காற்றுகை என்பது ஏனைய கோயில்களைப்போல் இல்லாமல் தனது தோற்றத்தில் இருந்து அங்கே நடைபெறுகின்ற சடங்காற்றுகை முறையில் தனித்துவமான மரபைப் பின்பற்றி வருகின்றனர். இருப்பினும் அதன் மரபு மாறுதல்களுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொண்டிருப்பது கவனத்திற்குரியது. அவ்வாறான மாற்றங்கள் எவை? என்பதை அணுகுவது சமகாலத்தேவையாகும்.

முன்னைய காலங்களில் பெரியதம்பிரான் ஆலயங்கள் கொட்டில்களாகவும், கட்டடங்களாகவும் அமைந்திருந்தன. அவை ஓட்டினாலும் கிடுகுகளினாலும் வேயப்பட்டிருந்தன. ஓலைக் கொட்டில்கள் சிறு அமைப்புடையன. இறையகம் மாத்திரம் உடையது. கட்டடங்கள் ஓட்டினால் வேயப்பட்டிருந்தன. இறையகத்தையும் முன் மண்டபத்தையும் கொண்டிருக்கின்றது. ஓலை வேய்ந்த கோயில்களில் பரிபால தேவர்களுக்கான பீடங்கள் இல்லை. அவை வேள்விகளின் போது சிறு பந்தலாக அமைக்கப்படுபவை. முன்னைய கொட்டில்களாக அமைந்த ஆலயங்களிலோ கட்டடங்களாக அமைந்த ஆலயங்களிலோ படிம முறையில் அமைந்த விக்கிரகங்கள் இல்லை. சூலமும் சில ஆலயங்களில் உருவங்கள் இல்லாமலுமே இருந்தன. ஆனால் இன்று பெரியதம்பிரான் கோயில்களை அவதானித்தால் கட்டடங்களாக அமைந்த கோயில்களில் பரிபால தேவர்களின் கோயில்கள் சில தனிப்பீடங்களாகவும், சில சிறிய பீடத்தையும் அதன் மேல் வளைந்த கூரையையும் அல்லது விமானத்தையும் கொண்டிருக்கின்றன. வந்தாறுமூலை, ஏறாவூர், கோட்டமுனை, தாளங்குடா பெரியதம்பிரான் கோயில்களை உதாரணமாகக் குறிப்பிடலாம். பெரியதம்பிரானுக்கும் நீலாசோதையனுக்கும் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பெரியதம்பிரானின் பரிவார தேவர்களாக வீரபத்திரர், கட்டாடிமார், முதலியார், நரசிம்மர், காளி, பேச்சியம்மன், நாககன்னி, நாகதம்பிரான், முருகையன், வயிரவர், வதனார் முதலான தெய்வங்களும் அமைந்துள்ளன.

“ஆரம்பத்துல குடில்கள் இருந்தது பிறகு வசதி வாய்ப்புக்கள் வார சந்தர்ப்பத்தில அவங்க கல்லால கோயில் கட்டினாங்க கட்டி கொஞ்ச நாளையில மடாலயமும் கட்டினாங்க. இது பண்டிக இல்லாம பிளேட் போட்டு இருந்திச்சி பண்டிக கட்டின கோயில் என்டா முதல் முதல் வந்தாறுமூலைதான்” (நேர்காணல்: சிவமூர்த்தி.கோ). பெரியதம்பிரான் பத்தசி பொதுவாக தமிழ் மொழியில் அமையப் பெற்றிருக்கும். இதில் சடங்குப் பூசைகளின் இறுதி நாள் செயன்முறைகள், மந்திரங்களையே தொகுத்தெழுதியிருப்பர். பெரியதம்பிரான் பத்தசிமுறை, கட்டாடி முதலிமார் பத்தசி முறை என்று இரு வழிமுறைகளிலே பூசை செய்யப்படல் வேண்டும் என்று

கூறப்பட்டுள்ளது. அதேவேளை இன்றைய பெரியதம்பிரான் கோயில்களில் பத்தசி முறைப்படி தமிழ் முறையிலும், ஆகம முறைப்படி சமஸ்கிருதத்திலும் கும்பாபிசேகம் செய்யப்பட்ட கோயில்களில் பூசைகள் நடைபெறுகின்றமை சுட்டிக் காட்டப்பட வேண்டியது. ‘‘வந்தாறுமூலை பெரியதம்பிரான் கோயில் கும்பாபிசேக நேரத்துல நான் அங்கால பூசை செய்வன் இங்கல பிராமணி பூசை செய்வார் ஆனா உள் பூசைகள் எல்லாம் நான் தான் செய்யுது” (நேர்காணல்: சிவமூர்த்தி.கோ).

பரம்பரை வழித்தோன்றல் ஒருவரால் அல்லது முறையாகப் பெரியதம்பிரான் கோயில் பூசகரிடம் பயின்ற ஒருவராலேயே இச்சடங்கினை வரமுறைப்படி செய்ய முடியும். இன்றைய காலங்களில் பத்தசிக்கேற்ற முறைப்படி நேர்த்தியாக சடங்காற்றுகை செய்வது என்பது கேள்விக் குறியே. பத்தசி முறைமையில் இருந்து பழக்க முறைப்படியே செய்யும் போக்கு விஸ்திரம் பெற்றிருப்பதினை அவதானிக்க முடிகின்றது.

காரணம் பரம்பரை வழி வந்தவர்கள் தமது பாரம்பரியத்தை விடுத்து பார்ப்பனிய முறைமையை விரும்புவதால் இருக்கின்ற மரபு இல்லாமல் செய்யப்பட்டு புதிதானதோர் மரபு புகுத்தப்படுகின்றது.

‘‘நான் என்ட மகன யாழ்ப்பாணம் குருக்கள் மடம் அனுப்பி படிக்க வைச்சனான். ஏன் என்டா பரவலாகவேனும். ஏன் என்டா நிறைய இடத்துல நாங்க தல குனிஞ்சிருக்கிறம். இந்த சாதி என்ட படியா” (நேர்காணல்: சிவமூர்த்தி.கோ).

கட்டாடி முதலிமார் பத்ததிக்கமைய வேள்வி செய்யும் ஆலயங்களில் பூசகர் தீட்சை பெற்றிருப்பதோடு, விபூதி நெற்றியில் பூசி கையில் பிரம்பும், சிலம்பும் வைத்திருப்பார். சிவப்பு நிறச்சட்டை முடிவில் போட்டு குறுக்காக கவாயும் அணிந்திருப்பார். ஆனால், இன்று பூசாரிமார்களின் கோலம் பிராமணர்களைப் போல் மாறி விட்டது.

‘‘எங்கட சித்தப்பா பூணுல் போட்டிருந்தவரு. மாமா பூணுல் போட்டிருந்தவரு இவங்க என்னன்டா சடங்கு முடிய கழட்டிப் போடுவாங்க. யாக பூச செய்யுற காலத்துல பூணுல் போடுவாங்க பிறகு கழட்டிப் போட்டு மீனும் சாப்பிடுவாரு, மச்சமும் எடுப்பாரு, தண்ணியும் அடிப்பாரு. இந்தக் காலத்துல நாங்க தான் பூணுல் போட்டு இதெல்லாம் இல்லாம இருக்கம்’’ (நேர்காணல்: சிவமூர்த்தி.கோ).

‘‘திருக்கதவு திறக்குறத்துக்கு முதல் என்ன செய்வாங்க என்டு சொன்னா அடையாளம் எடுத்து வருவாங்க. முந்தியெல்லாம் ஒரு வீட்டுல இருந்து தான் எடுத்து வாறது. இப்ப அதெல்லாம் மருவி அதுக்கென்டு சொல்லி ஒரு இடங்கள உருவாக்கிப் போட்டாங்க” (நேர்காணல்: சிவமூர்த்தி.கோ).

பொதுவாக பெரியதம்பிரான் கோயில்களில் தீ மிதிப்பது என்பது இல்லாத ஒன்று. ஆனால் ஏறாவூர் பற்றில் அமைந்துள்ள வந்தாறுமூலை பெரியதம்பிரான் கோயில்களில் மாத்திரம் தீ மிதிக்கப்படுகின்ற வழக்கம் இருந்து வருகின்றது. தீ மிதிக்குறத்துக்கு எரிக்கல வெட்டுதல் என்று சொல்லி ஒரு நிகழ்வு செய்யுறம். இது பத்ததில இல்ல ஆனா செய்யுறம். தீ மூட்டனும் என்டு சொன்னா எரிக்கல இல்லாட்டி வீரக்கம்பம் வெட்டனும் என்டு சொல்லுவாங்க. இத நான்

சேர்த்துக் கொண்டது. தெய்வம் ஆட்டிக் கொண்டு போய் கம்பு வெட்டி அத வைச்சிக் கொண்டுதான் தீ மூட்டுனாங்க" (நேர்காணல்: சிவமூர்த்தி.கோ).

புராணக்கதைகளில் கூறப்படுகின்ற மரபுசார் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இச்சமூகக் குழுமம், பெரியதம்பிரான் சார்ந்து கூறுகின்ற ஒரு தனித்துவமான கதையை புறக்கணித்து செயற்படுகின்ற போக்கே இன்று இருந்து வருகின்றது என்பது பரிதாபமான ஒன்றாகும். "தென் திசையில் இருந்து இலங்கை வந்த பார்ப்பனன் வண்ணான் நாட்டை ஆள்வதைக் கண்டு சகித்துக்கொள்ள முடியாதவனாகி ஆத்திரமுற்று அவர்களை அழிக்கக் காளி முதலான தேவதைகள் பலவற்றை அனுப்பி வைத்தான். பெரியதம்பிரானும் நீலாசோதையனும் இவற்றுடன் நீண்டநாள் போர் செய்தனர். பிராமணன் இவர்களை வெல்லும் பொருட்டு பல்லாயிரக்கணக்கான துர்தேவதைகளை அனுப்பி வைத்தான். பெரியதம்பிரான் இவற்றோடு நீண்டநாள் போர் செய்த போதும் இறுதியில் அவற்றை வெல்வது எனக்கருதி பதினான்கு ககலைகளோடு சேர்ந்து கொண்டார். ஆனால் நீலாசோதையன் மாத்திரம் அத்தேவதைகளோடு அஞ்சாது தொடர்ந்து நான்கு நாட்கள் போர் செய்து வந்தான். ஈற்றில் நீலாசோதையனும் ஒருமுடிவுக்கு வந்தான். இத் தேவதைகள் தாமாகப் போருக்கு வரவில்லை யாரோ ஏவி விட்டிருக்கின்றார்கள் எனக் கூறப்படுகின்றது.

அத்துடன், இவர்களுக்கு பின்னால் இருக்கும் சூத்திரதாரர்களைக் கண்டுபிடித்துக் கொலைசெய்தால் இத்தேவதைகளை இலகுவில் அடக்கி விடலாம் எனக் கருதினார். இதனை தந்திரம் மூலமாக வெல்லக் கருதினார். ஆதலால் போர் செய்து கொண்டிருந்த நீலாசோதையன் தோற்பதைப் போல போர் செய்வதை நிறுத்தி விட்டுப் பின் நோக்கி ஓடத் தொடங்கினான். தேவதைகளோடு சேர்ந்து பிராமணனும் நீலாசோதையனைத் துரத்திச் சென்றனர். முள்ளடவி நிறைந்த கானகத்தில் உள்ள குளத்தைத் தாண்டி ஓடும் போது ஒரு வண்ணானைக் கண்டான். அப்போது நீலாசோதையன் என்னைக் கொல்லப் பேய்களோடும் காளிகளோடும் சேர்ந்து பார்ப்பனனும் துரத்தி வருகின்றான். நீ என்னைக் காப்பாற்று உன் துணி கொண்டு என்னை மூடி விடு என்றான். வண்ணானும் அவ்வாறே செய்தான். இதனால் திடீர் என்று சோதையனைக் காணாது துரத்தி வந்த தேவதைகளும் பார்ப்பானும் திகைத்து நின்று விட்டு அங்கு நின்ற வண்ணானிடம் இவ் வழியால் ஓடிப்போனவனைக் கண்டாயா என கேட்டதும் ஆம் ஒரு வழியைக் காட்டி இந்தப்பக்கம் ஓடிப் போகின்றான் என்றான். இதனை உண்மையென நம்பி பார்ப்பானும் தேவதைகளும் அவன் காட்டிய வழியே ஓடத் தொடங்குகின்றனர். பார்ப்பானும் தேவதைகளும் போனவுடன் தனது சாலைத் திறந்து நடந்தவற்றை விபரமாகக் கூறினான். நீலாசோதையன் அவற்றைப் பின் தொடர்ந்து சென்று பார்ப்பான் அறியாதவாறு அவனை நெருங்கித் தனது தண்டாயுதத்தால் அடித்தான். அவன் மூச்சுத்திணறி அசைவற்று வீழ்ந்தான். பின் வழி காட்டலின்றி நின்ற பேய், காளி என்பவற்றைப் பிடித்துக் கொண்டு பெரியதம்பிரான் முன் நிறுத்தினான். பார்ப்பனனிடம் இருந்து நாட்டைக் காப்பாற்றியமையிட்டு பெரியதம்பிரான் மகிழ்ச்சி கொண்டு, நீலாசோதையனைப் பாராட்டினார். நீலாசோதையனை என்றும் தனக்குச் சமனாகக் கருதி முதன் மந்திரியாக வைத்திருந்து நாட்டை சீருடனும் சிறப்புடனும் ஆட்சி செய்து வந்தார் (கனகரத்தினம்.இரா.வை: 2016: 130). இவ்வாறு பெரியதம்பிரானுக்கு ஜென்மப் பகையாளியாகக் கொள்ளப்படுகின்ற பிராமணனைக் கொண்டு பூசை செய்வதும், அவர்களைப் போல்

கட்டாடிமார்கள் வேடம் பூணுவதும் அதிகார மைய மேல்நிலையாக்க பார்ப்பனிய மற்றம் என்பது புலனாகின்றது.

இவ்வாறான மாற்றங்களை மட்டக்களப்பு ஏறாவூர்பற்று பிரதேசங்களில் உள்ள பெரியதம்பிரான் கோயில்களில் வெளிப்படையாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. மேலும் ஆழமான தேடலுக்குட்படுகின்ற வேளை இன்னும் புதுவிதமான மரபு மாற்றங்களை இனங்கண்டு கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இனக்குழும அடையாளச் சிதைப்பு

சடங்குகளின் அடிப்படை நோக்கம் மனிதனை ஆசுவாசப்படுத்துவதாகும். தத்தமது தேவைகளை நிறைவேற்றும் வண்ணம் நம்பிக்கையின் அடியாக மனிதனால் உருவாக்கப்பட்ட சடங்காற்றுகை மரபு பக்தி உணர்வுடன் செய்விக்கப்படுகின்றன. இதனால் சடங்குகளில் ஆத்மார்தமாக பங்கு கொள்கின்றவர்கள் உள ஆறுதல் அடைகின்றனர். இது சடங்கிற்கே உரித்தான தனித்துவமான பண்பு. இதுவே கடவுளின் (இயற்கையின்) சக்தியை பிரம்மிக்க வைக்கும் ஒரு விடயமாகும். அவ்வாறு சடங்காற்றுகை மரபில் வெளிப்படுகின்ற முழுமையினையும் ஒருவன் பெற வேண்டுமாயின் அவன் அச்சமூகத்தின் நம்பிக்கை, ஐதிகம், மரபுகள், பழக்கவழக்கங்கள், பண்பாடு போன்றவற்றுடன் தன்னை ஒன்றிணைத்துக் கொள்ள வேண்டியது கட்டாயமானது.

மட்டக்களப்பு ஏறாவூர் பற்றுப் பிரதேசத்தை பொறுத்தளவில் ஆகம வழிபாடு, சடங்கு வழிபாடு என இரு பிரதான வழிபாட்டு முறைகள் காணப்பட்ட போதிலும், சடங்கு வழிபாட்டு முறைமையே மக்களின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்திருக்கின்றது. அந்தவகையில் உயர்த்தப்பட்ட சாதியினரின் அடக்கு முறைகளுக்கும், புறக்கணிப்புகளுக்கும் உட்பட்டிருந்த சமூகக் குழுக்கள் இவ் இழிவான பிடிமாணங்களில் இருந்து மீண்டெழுந்து தமக்குள் ஒன்றிணைந்து உருவாக்கிய சடங்கு கோயில் மரபுகளே பெரியதம்பிரான் கோயில்கள். மட்டக்களப்பில் குறிப்பாக ஏறாவூர் பற்றுப் பிரதேசத்தில் பெரியதம்பிரான் கோயில் சடங்காற்றுகை நிலவியமைக்கான சான்றுகள் பல காணப்படுகின்றன. இன்றைய நிலையில் இவ்வாறான வழிபாட்டு முறைகள் ஏனைய வழிபாட்டு நுட்பங்களையும் தன்னுள் உட்புகுத்தி பரவலடைந்து வருகின்றன.

சாதிக்கொரு கோயில் என்ற மரபின் அடிப்படையில் அமையப்பெற்ற பெரியதம்பிரான் கோயில்களை மையமாகக் கொண்ட இனக் குழுக்கள் தன்னுடைய அடையாளத்தை அழித்து உயர்த்தப்பட்டோர் எனப்படுகின்றவர்களின் பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் நடைமுறைகளை தமதாக்கிக் கொள்வதன் மூலம் தாமும் அவர்களைப் போலவே உயர் பண்புடையவர்களாக சமூகத்தில் மதிக்கப்படுவோம் என்ற நிலையற்ற மேன்நிலையாக்கத்தின் மூலம் இந்துத்துவ வர்ணாசிரம தர்மப் பின்புலத்தில் இழிய சாதியினர் என ஊர்களின் வெளிப்புறத்தே ஒதுக்கப்பட்டு விலங்குகளிலும் கேடாக அடக்கி ஒடுக்கப்பட்ட இனக் குழுமங்கள் தமக்கான பண்பாட்டை அடகு வைத்துத் தமது மரபுகளில் குறிப்பிடப்பட்டவைகளுக்குப் புறம்பாக செயற்படுகின்ற நிலை தமக்குள்ளே தம்மை இரண்டாம் தரப்பினராக்கவும் முயற்சிக்கும்.

பார்ப்பனிய மேல்நிலையாக்கச் செயற்பாடுகளால் உருமறைப்பும், பெயர் மாற்றமும் செய்து பாரம்பரிய மரபில் இருந்து பிசக வைக்கின்ற நிலையை உருவாக்கி விடுதலை என்ற பேரினில்

மேலும் அடக்கி ஆளுவதற்கு முயற்சிக்கும் நிலை விரிவாகின்றது. ஏறாவூர்ப் பற்று பெரியதம்பிரான் கோயில்கள் இவ்வாறான முறைமையிலே சிக்குண்டுள்ளது.

"தென்னிந்தியாவில் இருந்து இலங்கை வந்த பார்ப்பனன் வண்ணான் நாட்டை ஆளுவதைக் கண்டு கோபமுற்று அவர்களின் ஆட்சியை சீர்குலைப்பதற்காக சூழ்ச்சிகள் செய்தது" தொடர்பாய் வரலாற்றுக் கதைகள் கூறப்பட்டு வருகின்றன. இந்நிலையில் பெரியதம்பிரானுக்கு பிராமணிகள் ஜென்மத்துப் பகைவர்கள் என்பர்.

இவ்வாறு இருக்க இன்றைய நவநாகரிக காலத்தில் ஆகமமுறைப்படி பிராமணர்களைக் கொண்டு பூசை புணஸ்காரங்கள் செய்வதனால் சமூகத்தில் நன் மதிப்பும் ஏனைய உயர்த்தப்பட்ட சாதிய மனநிலையினைக் கொண்டவர்களைப்போல் வாழ வழிவகுக்கும் என்கின்ற காலனிய மேல்நிலையாக்கக் கருத்துருவாக்கத்தின் போர்வையில் மூழ்கிப் பாரம்பரியப் பண்பாட்டு மரபுளைச் சிதைத்து சமூகத்தின் தனித்துவமான சுயகௌரவத்தை இழந்து நிர்க்கதியில் நிர்க்கின்ற சமூகமாக வண்ணார் சமூகத்தை மையப்படுத்திய பெரியதம்பிரான் கோயில் காணப்படுவது பெரிதும் வேதனைக்குரியதே. சுய சிந்தனையுடன் செயற்பட்டு, சொந்தப் பண்பாட்டு வாழ்வியலில் இருந்து அந்நியப்படாது செயற்படுவது அவசியம். ஒருமைப் பண்பாட்டு வெளிக்குள் தள்ளப்படுவோமானால், பன்மைத்துவ வழிபாட்டை வலுவிழக்கச் செய்துவிடுவோம்.

முடிவுரை

மாற்றம் மட்டும் மாறாதது, ஏனைய அனைத்தும் மாறும் எனும் மானிடவியல் கருத்தாக்கம் நிலவினாலும், ஒரு சமூகத்திற்கான வளர்ச்சி மையமாற்றமாக அமைவது காலத்தின் தேவையாகும். பெரியதம்பிரானை வழிபடும் மக்களது வழிபாட்டு முறையும், அதிலுள்ள சடங்கு முறைகளும் சமஸ்கிருத மயமாக்கலால் பெரும் தாக்கத்திற்கு உள்ளாகி இளைஞர்கள் மத்தியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பத்தசி முறைப்படி சடங்கு வழிபாட்டைச் செய்வதன் மூலமே மட்டக்களப்பு ஏறாவூர்ப் பிரதேசத்தில் உள்ள பெரியதம்பிரான் கோயில்களில் பண்டைய மரபுகள் அழிக்கப்பட்டு, பார்ப்பனியமயமாதலுக்கு உட்படுத்தப்படுகின்ற போக்கு நிலவுகின்றது. இதிலிருந்து விடுபட்டுச் சுயமாகச் செயற்பட்டு இனக்குழு அடையாளத்துடன் வாழ்வது சமகாலத் தேவையாகும்.

உசாத்துணை

1. கனகரத்தினம்.இரா.வை. (2016). ஈழத்து நாட்டார் வழிபாடு, தமிழ்த்துறை பேராதனைப் பல்கலைக்கழகம்.
2. இன்பமோகன்.வ. (2012). கிழக்கிலங்கைச் சடங்குகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை.
3. வெல்லவூர்க் கோபால். (2005). மட்டக்களப்பு வரலாறு – ஓர் அறிமுகம், ஆதவன் அச்சகம், மட்டக்கப்பு, இலங்கை.
4. விஜயரெட்ண.எ. (2013). மட்டக்களப்பு வரலாறு (பூர்வீகக் குடிகளும் குமார தெய்வ வழிபாடும்), எழுநா ஊடக நிறுவனம், மட்டக்களப்பு.
5. மௌனகுரு.சி. (2014). மட்டக்களப்பு மரவுவழி நாடகங்கள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை.
6. பக்தவத்சல பாரதி. (1990). பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
7. மௌனகுரு.சி. (2003). அரங்கியல், பூபாலசிங்கம் புத்தகசாலை, கொழும்பு.

நேர்காணல்

1. சிவமூர்த்தி.கோ. கொம்மாதுறை, வந்தாறுமூலை, அரசயடி ஆகிய பெரியதம்பிரான் கோயில் பூசகர், 14.06.2022.
2. நிறோசன்.ம, ஏறாவூர்-05, பெரியதம்பிரான் கோயில் பூசகர், 12.06.2022.

3. மயில்வாகனம்.செ, ஏறாவூர் பெரியதம்பிரான் கோயில் பூசகர், 15.06.2022.
4. சின்னத்தம்பி.க, சித்தாண்டி பெரியதம்பிரான் கோயில் பூசகர், 17.06.2022.
5. சுஜே.சு, கொம்மாதுறை பெரியதம்பிரான் கோயில் உப பூசகர், 14.06.2022.

வலையொளி

1. தாய்வீடு (Thaividu) (2021), மேல்நிலையாக்கம் - க.சண்முகலிங்கம், Viewed 27.06.2022, https://www.youtube.com/watch?v=w8cMEGYAt1U.

இந்துப் பாரம்பரியத்தில் ஓலைச்சுவடி - ஆரையம்பதி பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

வரதராசா வஷ்மியா[1], சாந்தி கேசவன்[2]
[1,2]இந்துநாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[1]vasmiya1234@gmail.com, [2]kesavans@esn.ac.lk

ஆய்வுச் சுருக்கம்

உலகில் மிகப் பழமையான பாரம்பரியம் இந்துப் பாரம்பரியம் ஆகும். இவற்றை அறிந்து கொள்வதற்காக பல தொல்லியல் ஆதாரங்கள் உண்டு அவற்றில் ஓலைச்சுவடியும் ஒன்றாகும். மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பழந்தமிழ் கிராமமான ஆரையம்பதி கிராமத்திலுள்ள பாரம்பரியத்தை அறிந்து கொள்வதற்காக பல தொல்லியல் ஆவணங்கள் உள்ளன. இவ்வாய்வானது ஆரையம்பதி மக்களை நேர்காணல் கண்டு அவர்களின் ஓலைச்சுவடி பாவனையும் அக்கிராமத்தில் பண்டைய மக்கள் ஓலைச்சுவடிகளைப் பயன்படுத்திய விதத்தினையும் மற்றும் இந்துப் பாரம்பரியம் மாறாமல் பின்பற்றும் பழம்பெரும் கிராமமான ஆரையம்பதி கிராமத்தின் சிறப்பு, அங்குள்ள சுவடிகள் பற்றியும், சுவடிகளில் உள்ள விடயங்கள் பற்றியும் எடுத்துக் காட்டுதல், ஓலைச்சுவடியின் புனிதத்தன்மையை வெளிக்கொண்டு வருதல், ஆரையம்பதி கிராமத்தில் மறைந்துள்ள பல விடயங்களை எடுத்துக்காட்டுதல், இது வரை காலமும் ஓலைச்சுவடி பற்றி அறியாத பல தகவல்களை வெளிக்கொணர்தல், ஓலைச்சுவடிப் பாதுகாப்பு பற்றிய தகவல்களை வெளிப்படுத்தல், ஆவணக் காப்பகங்களின் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தல், ஓலைச்சுவடி அழிவடைவதற்கான காரணத்தை கண்டறிதல் போன்றவை ஆய்வின் பிரதான நோக்கங்களாகும். ஆரையம்பதி கிராமத்திலுள்ள சோதிடர்கள், வைத்தியர்கள் போன்றவர்களை சந்தித்து அவர்களின் மருத்துவம் மற்றும் சோதிட சுவடிகளையும் மற்றும் குறிப்புகளையும் ஆய்வு செய்து ஆய்விற்கான தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளது. அவர்களுடன் உரையாடி சுவடிகளின் புகைப்படங்களும் பெறப்பட்டது. இவ்வாய்விற்காக வரலாற்றாய்வு, விபரண ஆய்வு, பகுப்பாய்வு போன்ற ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் ஆரையம்பதி கிராமத்தில் மறைந்து உள்ள சுவடிகளையும், ஆரையம்பதி சமூகத்திலுள்ள மக்கள் மத்தியில் ஓலைச்சுவடிகள் பற்றிய சிந்தனைகள் எவ்வாறான நிலையில் காணப்படுகின்றது என்பதையும், இன்றைய காலத்தில் ஓலைச்சுவடிகள் அழிவடைவதற்கு காரணம் சமூகத்தின் மத்தியில் காணப்படும் அறியாமையே என்பதையும், ஓலைச்சுவடி பாதுகாக்கவேண்டிய ஒன்று இதை ஒவ்வறு சமூகத்தினரும் உணர்ந்து பாதுகாக்கவேண்டும். பாரம்பரிய மருத்துவம், சோதிடம், மாந்திரீகம் மற்றும் அக்கால மக்கள் பின்பற்றி வந்த வாழ்வியல் நடைமுறைகள் என்பவற்றை இவ்வாய்வின் ஊடாக அறிந்து கொள்ள முடிந்தது. இவ்வாய்வு ஓலைச்சுவடிகளின் மகத்துவத்தை அறியவும் பிற்காலத்தில் இது போன்ற ஆய்வுகளை மேற்கொள்ளவும் வழிவகுக்கும் எனலாம்.

திறவுச் சொற்கள்: ஓலைச்சுவடி, ஆரையம்பதி, மருத்துவம், சோதிடம், மாந்திரீகம்

01. ஓலைச் சுவடியின் தோற்றமும் வளர்ச்சிப்போக்கும்

இந்துமக்கள் காலகாலமாக பின்பற்றி வரும் நடைமுறைகலே இந்துப்பாரம்பரியமாகும் இதற்குள் பூசை முறைகள், கலைகள், வழிபாடு, விரதம், பண்டிகைகள், மருத்துவம், கல்வி, உணவுப் பழுக்கவழக்கம், ஆடை அமைப்புகள் போன்ற பல விடயங்கள் உள்ளன. பாரம்பரிய விடயங்களை தெரிந்து கொள்வதற்காகவும் அவற்றை எவ்வாறான முறையில் கடைப்பிடித்துள்ளனர் என்று அறிந்து கொள்வதற்காகவும் பல தொல்லியல் ஆதாரங்கள் உண்டு அவற்றில் ஒன்று தான் ஓலைச்சுவடி.

ஓலைச்சுவடியின் தோற்றம்

மனித இனம் தோன்றி அவர்களின் பரிணாம வளர்ச்சியின் காரணமாக உருவாகிய மொழியின் தொடக்கத்தில் தன் கருத்தைச் சொல்ல உணர்ச்சியால் ஒலியை எழுப்பி கைகளால் அசைவை காட்டிச் சித்திரத்தால் சித்திரித்து அதனையே கருத்திற்கு அடையாளமாக்கி அதன் பின்பு சொற்களைத் தனித்தனியே சொல்லத் தொடங்கி மொழியை உருவாக்கினர். வேதகாலத்தில் ஒருவர் கற்ற கல்வியை நேரிடையாகப் பிறருக்கு சொல்லிக் கொடுத்தனர் இதனை **'சுருதி'** என்று வழங்குவர். தனக்குத் தெரிந்தவற்றை அழியாமல் பதிவுசெய்து பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் எப்போது தோன்றியதோ அப்போது தான் எழுத்துவடிவம் தோன்றியது எனலாம். எழுத்துக்கள் கோடுகளாக, குறியீடுகளாக, படங்களாக இருந்து பின் படிப்படியாக வளர்ந்து

தற்போதைய எழுத்து வடிவமாக மாறின என்பதற்குப் பானை ஓடுகள், கல்வெட்டுகள், செப்பேடுகள் போன்றவை சான்றுகளாக உள்ளன (சம்பந்தன் 1959:8).

எகிப்தியர், கிரேக்கர், ரோமர், யூதர் முதலிய இனத்தவர் பண்டைக் காலத்தில் பேபரைஸ் தாளையும் விலங்குகளின் தோல்களையும் எழுதப்படு பொருளாகப் பயன்படுத்திய காலத்தில் நமது நாட்டவர் பனையோலையினால் செய்யப்பட்ட ஓலைச்சுவடிகளில் நூல்களை எழுதி வந்தனர். பனையோலையில் எப்பொழுது முதல் எழுதப்பட்டது என்று கூற இயலாது. பனையோலைகளில் எழுதுவதற்கு எளிமையாக இருப்பதாலும் அவற்றைச் சரியான முறையில் பராமரித்து வந்தால் நீண்ட நாட்கள் அழியாமல் இருக்கும் தன்மை கொண்டதாலும் பனையோலைகள் பயன்படுத்தப்பட்டன. தென் கிழக்காசிய நாடுகள் பலவோலையைப் பயன்படுத்தியிருப்பினும் அவற்றைப் பயன்படுத்தும் முறை தென்னிந்தியாவிலிருந்து பரவியிருக்கலாம் என்று கூறுகின்றனர் (நாகராசன் 1989: 48).

ஓலைச்சுவடி செய்வதற்காகப் பயன்படும் பனை மரங்கள்

பனைமரங்களில் பல வகைகள் இருப்பினும் அவற்றுள் ஒரு சில பனைமரங்களின் ஓலைகள் எழுதுவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை சீதாளப் பனை, நாட்டுப்பனை, லோந்தர் பனை ஆகும்.

ஓலைச்சுவடி செய்யும் முறை

பனை மரத்தில் உள்ள ஓலைகளில் நீண்ட நாட்கள் அழியாமல் இருக்கக் கூடியவை. அதிக முற்றலும் அதிக இளமையதும் இல்லாமல் நடுநிலையில் உள்ளவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றைத் தனித்தனியாகப் பிரித்து நரம்பு நீக்கித் தனக்குத் தேவையான அளவு நறுக்கி எடுப்பர்.

சுவடியில் எழுதும் முறை

பனை ஓலைகளில் எழுதுவதற்கு இளமை முதலே ஓலையை இடக்கையில் பிடித்து வலக்கையால் எழுத்தாணியைக் கொண்டு எழுதிப் பழகுவர் எழுத்தாணியைப் பிடித்து எழுதும் போது ஓலையைத் தான் நகர்த்துவர் எழுத்தாணியை பிடித்த இடத்தில் இருந்தவாறே எழுதுவர்.

எழுத்தாணி

ஓலைகளில் எழுதுவதற்குப் பயன்பட்ட எழுதுபொருள் **'எழுத்தாணி'** எனப்பட்டது. ஓலைகளில் எழுத்தாணி கொண்டு கீறி எழுதும் முறை மிகப்பழமையானது இதற்குப் பயன்பட்ட எழுத்தாணிகள் **எலும்பு, தந்தம், பித்தளை, செம்பு, இரும்பு, தங்கம்** போன்றவற்றினால் செய்யப் பட்டிருந்தன. சுவடிகளில் எழுதப் பயன்பட்ட எழுத்தாணிகள் பல வகைப்படும். அவை குண்டெழுத்தாணி, வாரெழுத்தாணி, மடக்கெழுத்தாணி, அலகெழுத்தாணி, கணையெழுத்தாணி, மடிப்பெழுத்தாணி மற்றும் தேரெழுத்தாணி என்பனவாகும்.

சுவடிகளின் வடிவமைப்பு

சுவடிகளின் வடிவமைப்பு என்பது சுவடிகளின் புறவடிவங்களைச் சுட்டிக் கூறுவதாக அமைந்துள்ளது. நமக்குக் கிடைக்கக்கூடிய சுவடிகள் பல வடிவங்களில் காணப்படுகின்றன

அவற்றில் சிறிய சுவடிகள், பெரிய சுவடிகள், பம்பர வடிவச் சுவடிகள், சிவலிங்க வடிவச் சுவடிகள் என்று சுவடியின் வடிவத்தை கூறலாம்.

02 ஆரையம்பதியில் சேகரிக்கப்பட்ட ஓலைச்சுவடிகளும் அதன் வகைகளும்

பண்டைய காலம் தொடக்கம் இன்று வரை பாரம்பரியம்சங்கள் மாறாமல் அனைத்து விடயங்களையும் சரியாக கடைப்பிடிக்கும் மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களில் ஒன்று தான் ஆரையம்பதி கிராமமாகும். இங்கு இன்று வரை பல தொல்பொருள் சின்னங்கள் காணப்படுகின்றன அவற்றில் ஒன்று தான் ஓலைச்சுவடி. தங்களுக்கு தெரிந்த பல விடயங்களை ஓலைச்சுவடியில் குறித்துவைத்துள்ளனர். இவ்வாறு குறித்துவைத்த ஓலைச்சுவடிகளில் பல அழிந்துபோய் விட்டபோதிலும் தற்போதும் ஆரையம்பதியில் சில ஓலைச்சுவடிகள் உள்ளன. அந்தவகையில் என்னால் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் படி கிடைக்கப்பற் ஓலைச்சுவடிகளை கொண்டு மேல் வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன (ஆய்வாளர் அவதானம்).

1. **மருத்துவம்**
2. **மாந்திரீகம்**
3. **சோதிடம்**
4. **சூடாமணி நிகண்டு**
5. **விறலி விடுதூது**
6. **திருக்கல்யாண ஏடு**
7. **சிங்கள மொழி ஓலைச்சுவடி**
8. **அம்மாணை**
9. **பிள்ளையார் காப்பேடு**
10. **குளுத்தி ஏடு**
11. **பத்ததிகள்**
12. **அகத்தியர் ஆருடம்**
13. **கண்ணகியம்மன் சிலம்பு**

இதில் மருத்துவம், சோதிடம், மாந்திரீகம் போன்ற ஓலைச்சுவடிகள் அதிகளவாகக் காணப்படுகின்றன. இங்கு உள்ள ஓலைச்சுவடி ஒன்றில் மெய்யெழுத்துக்கள் காணப்படுகின்றன. எழுதியவரின் பெயர் மற்றும் இடம், ஆண்டும் என்பவும் குறிப்பிடப்பட்டுள்ளன (சபாரத்தினம் 2014:194-224).

மருத்துவம்

பூர்வீக மக்கள் இயற்கையோடிணைந்து வாழ்ந்த காலத்தில் அவர்களுக்கு நோய் ஏற்பட்டபோதெல்லாம் இயற்கையை மீறிய சக்திகள் அல்லது தீய ஆவிகளே அந்நோய்களுக்குக் காரணி என நம்பினர் (சிவசண்முகராஜா 1993:1-3). அந்நோய்களைப் போக்க அவர்களுடன் மந்திரவாதிகளும் மருத்துவர்களும் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை மானிடவியல் ஆய்வாளர்கள் நிறுவியிருக்கிறார்கள். ஆரையம்பதியில் உள்ள மருத்துவ ஓலைச்சுவடியில் பல வகையான நோய்களும் அதை தீர்த்துவைக்கும் மருத்துவ முறைகளும் கூறப்பட்டுள்ளன.

மருத்துவ ஓலைச்சுவடி - 1

முதலாவது மருத்துவ சுவடியை ஆய்வு செய்யும் போது அதில் **சன்னிக்கு எண்ணை, வாதத்திற்கு எண்ணைய் குளிகை** என பல உபதலைப்புகளில் மருத்துவக்குறிப்புகள் உண்டு. **330** பக்கங்கள் காணப்படுகின்ற இவ் ஏட்டில் எழுத்துக்கள் மிக தெளிவாக உள்ளன. **1748 ஆம் ஆண்டு தை மாதம் 23ஆம் திகதி** எழுதப்பட்டுள்ளது (வ.நாராயணன்) காப்பு மட்டை வலிமையான கருங்காலி மரத்தால் செய்யப்பட்ட சிதைவடையாத ஓலைச்சுவடியாகும். தீராத

தலை வலிக்கு புகை தயாரிக்கும் முறை, அதன் பயன்பாடு போன்ற விடயங்களும் கூறப்பட்டுள்ளன. இந்த மருத்துவ ஏடானது தற்போது மூ.அருளம்பலம் ஜயாவிடம் காணப்படுகின்றது. இவருக்கு முதல் இந்த ஓலைச்சுவடி அருளம்பலம் ஜயாவின் தந்தை பாதுகாத்துள்ளார் மூன்று தலைமுறையாக இச் சுவடிகளைப் பாதுகாத்து வந்துள்ளனர்.

மருத்துவ ஓலைச்சுவடி – 2

இரண்டாவது மருத்துவ ஓலைச்சுவடி 27 ஆம் பக்கத்தில் இருந்தே உள்ளது இறுதி பெரும் பகுதிகள் இல்லை 136 பக்கங்களை கொண்டே காணப்படுகின்றது. கடினமான இலக்கணம் தழுவிய மொழிநடைத் தொடராக எழுதப்பட்டுள்ளது. (அகராதி மற்றும் நிகண்டு அகியவற்றின் உதவியுடனேயே பொருள் அறிய முடியும்) 17ம் நூற்றாண்டுக்குரிய மொழி நடையாகும். எழுதியவரின் பெயர், ஆண்டு, இடம் போன்ற ஏனைய விபரங்களை அறிய முடியவில்லை.

தாது புஷ்டிக்கு மதன சிந்தாமணி லேகியம், மதன சஞ்சீவி லேகியம், பூரண மதனவல்லாதி, மதனக காமேசு லேகியம், மதன காமரசக் குளிகை, மதனப் பால், சொர்ண பற்பக் குளிகை, கேத்திர லோகத்தைலம், வேறு குளிர்ச்சி தைலம் தயாரிக்கும் முறை, பயன்படுத்தும் முறைகளும், பத்திய முறைகளும் விளக்கப்பட்டுள்ளன (இவை அனைத்தும் ஆண்மை குறைபாட்டினை போக்கும் நாட்டு மருத்துவம்) (சத்தியா 2017). இவ்வோலைச்சுவடி இ.கிருஷ்னபிள்ளை ஜயாவிடம் இருந்து பெறப்பட்டது. இவர் 55 ஆண்டுகளாக ஓலைச்சுவடிகளை பாதுகாக்கின்றார்.

மருத்துவ ஓலைச்சுவடி - 3

மூன்றாவது மருத்துவ ஓலைச்சுவடி 12ஆம் பக்கத்திலிருந்தே உள்ளது. முன் பின் ஒற்றைகள் இல்லை கடைசி ஒற்றையில் மந்திரம் குறிப்பிடப்பட்டுள்ளது. 1757ஆம் ஆண்டு கன்னன்குடா பிரதேசத்தை சேர்ந்த ஒருவரால் எழுதப்பட்டுள்ளது ஆனால் எழுதியவரின் விபரம் குறிப்பிடப்படவில்லை. வாதத்திற்கு எண்ணை, கிரந்திக்கு எண்ணை, சன்னிக்கு எண்ணை, சொரி சிரங்கிற்கு எண்ணை முதலான பல்வேறு வியாதிகளுக்கு பற்பம், குழம்பு, குளிகை, மருந்துகள் கூறப்பட்டுள்ளது. சகல வாயுத்தொல்லைகளுக்கும் சூரணம், புழுவெட்டினால் மயிருதிர மருந்து, வாந்தி பேதிக்கு மாத்திரை, பவழச் சுண்ணம் தயாரித்தல், பயன்பாடு பற்றியும் கூறப்பட்டள்ளன. இவ் ஓலைச்சுவடியும் மூ.அருளம்பலம் ஜயாவிடம் இருந்தே பெறப்பட்டது.

விச வைத்தியம்

எம்மைச் சூழவுள்ள இடங்களில் எத்தனையோ விஷ காரணிகள் இருக்கின்றன. அதனால் ஏற்படும் விபத்துகளுக்கு கூறப்பட்டுள்ள வைத்திய முறையே விச வைத்தியமாகும். இவ் வைத்திய முறையில் விஷ ஜந்துக்கள் எம்மை தீண்டினால் என்ன செய்ய வேண்டும் என்றும் அவற்றில் இருந்து எம்மை பாதுகாத்து கொள்ளும் வழி முறைகளும் கூறப்பட்டுள்ளன. இவ் விச வைத்திய ஓலைச்சுவடியானது க.ராஜரத்னம் ஜயாவிடம் இருந்தே பெறப்பட்டது. இவரின் தந்தை இவ் ஓலைச்சுவடிகளை கொண்டு வைத்தியம் செய்துள்ளார். தற்போது யாரும் இதை பயன்படுத்துவது இல்லை.

சோதிட ஓலைச்சுவடி – 1

முதலாவது சோதிட ஓலைச்சுவடியானது முகூர்த்தச் சோதிடம். இரத்தினசேகரம், சரசோதிமாலை ஆகிய நூல்களில் வரும் விடயங்களும் உள்ளடங்குகின்றன. எந்த நபர், எந்த நேரம், என்ன செய்ய வேண்டும் என்பதை சோதிட ரீதியாகக் கூறுவதாகும். இங்கு வார நாட்களில் எந்த நாள் கீழ் நோக்கிய நாள், எந்த நாள் மேல் நோக்கிய நாள் என்பதும் சொல்லப்பட்டுள்ளது. 20பக்கங்களை கொண்ட இவ் ஏட்டை 1771 ஆம் ஆண்டு கன்னங்குடாவை சேர்ந்தவர் எழுதியுள்ளார் (சி.சீனிப்போடி).

இதில் பயிர் நடுவதற்குரிய நாள், வேளாண்மை விதைப்பதற்கு நாள், பசளையிட நாள், அறுவடை செய்ய நாள் என விவசாயத்துக்குரிய நாள்களும் அதனுடன் மாட்டிற்கு குறி சுட, வீடு கட்ட, வளவில் குடில் அமைக்க என்று வாழ்வியல் விடயங்களுக்கும் நாள்கள், முகூர்த்தங்கள் சொல்லப்பட்டுள்ளன (சிவசுப்பிரமணியம் 2004:279). இவ்வோலைச்சுவடி சி.கமலநாதனிடம் இருந்து பெறப்பட்டது.

சோதிட ஓலைச்சுவடி – 2

இரண்டாவது சோதிட ஓலைச்சுவடி ஜாதக அலங்காரம். கணித ரீதியாக ஜாதகம் கணித்தல் மற்றும் நாள் பார்த்தல் என்பன விரிவாகச் சொல்லப்படுகின்றது. 120 பக்கங்களை கொண்ட இவ் ஏட்டை 1754 ஆம் ஆண்டு மட்டக்களப்பு கன்னங்குடா பிரதேசத்தை சேர்ந்தவர் எழுதியுள்ளார் (வ.வி.கணபதிப்பிள்ளை). வாழ்க்கையைப் பற்றிய கல்வி, திருமணம், பொருளாதார நிலை போன்ற எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளலாம் செவ்வாய் தோசம், ஏழரை சனி, கிரகங்களின் பலன் ஆகியவற்றை பற்றி அறிந்து கொள்ளலாம் (சிவராசா 1980:6-7). இவ்வோலைச்சுவடி சா.சோமசுந்தரரிடம் இருந்து பெறப்பட்டது. சுமார் 80 – 90 ஆண்டுகளாக இவ் ஓலைச்சுவடியை பாதுகாத்துள்ளார்.

சூடாமணி நிகண்டு

சூடாமணி நிகண்டு மூலமும் உரையும் எனும் சுவடி 1860 ஆம் ஆண்டு ஆவணி 14 ஆம் திகதி எழுதப்பட்டுள்ளது (இராமசாமி கவிராயர் அவர்களால் பார்வையிடப்பட்டு பாக்குப்பேட்டை பரமானந்த முதலியார், குமாரமதுரை முதலியார், ஆற்காடு முனியப்ப முதலியார் ஆகியோரது வேதாந்த விளக்க அச்சகத்தில் அச்சிட்ட நூலைப் பார்த்து எழுதியது.).

தெய்வப்பெயர்த் தொகுதி, விலங்கின்பெயர்த் தொகுதி, மரப்பெயர்த் தொகுதி, இடப்பெயர்த் தொகுதி, பல்பொருள்பெயர்த் தொகுதி, செயற்கை வடிவப் பெயர்த்தொகுதி, பண்பு பற்றியப் பெயர்த்தொகுதி முதலான உபதலைப்புக்கள் உண்டு (இளஞ்சேரனார் 1999:101-107). எழுத்துக்களுக்கு குத்துவைத்து எழுதப்பட்டுள்ளது. 476 பக்கங்களைக் கொண்ட இவ்வேட்டில் சில பக்கங்கள் சிதைவடைந்துள்ளன. இவ் ஓலைச்சுவடி மூ.அருளம்பலம் ஜயாவிடம் இருந்து பெறப்பட்டது.

விறலி விடு தூது

இது ஒரு இலக்கிய வகையாகும். உலா, அம்மானை, தூது முதலிய இலக்கியவகைகள் தமிழுக்குரியவை (தூது இலக்கியம் என்பது பொதுவாக காதலன் காதலிக்கு தூது அனுப்புவது, செய்தி அனுப்புவது முதலானவை தூது இலக்கியம் எனப்படும்). இதை 1840 ஆம் ஆண்டு ஆடி மாதம் சனிக்கிழமை எழுதினார் (க.வேலாப்போடி). இவர் ஈச்சந்தீவு பிரதேசத்தை சேர்ந்தவர். இவ்வோலைச்சுவடி மூ.அருளம்பலம் ஜயாவிடம் இருந்து பெறப்பட்டது.

அகத்தியர் ஆரூடம்

அகத்தியர் இயற்றியனத்த நொண்டிச் சிந்து சண்ட மாரூத ஆரூட விளக்கம், இதில் நோய்களும், வைத்திய முறைகளும் சிந்துப்பாமூலம் கூறப்பட்டுள்ளது. 1751 ஆம் ஆண்டு எழுதப்பட்டுள்ளது எழுதியவரின் பெயர் குறிப்பிடப்படவில்லை சில பக்கங்கள் சிதைவடைந்த நிலையில் 201 பக்கங்கள் காணப்படுகின்றன. இவ் ஓலைச்சுவடி மூ.அருளம்பலம் ஜயாவிடம் இருந்து பெறப்பட்டது.

திருக்கல்யாண ஏடுகள்

தெய்வத் திருமணங்கள் என்பவை இறைவன் மற்றும் இறைவிக்கு நடக்கும் திருமணங்களாகும். இந்து சமயத் தெய்வங்களுக்குத் திருமணங்கள் நடந்திருக்கின்றன. இந்து சமயத்தில் தெய்வத் திருமணங்கள் விழாவாகக் கொண்டாடப்படுகின்றன. தெய்வானை திருக்கல்யாணம், வள்ளி திருக்கல்யாணம், பார்வதி அம்மன் கல்யாணம் போன்றவை ஏட்டுவடிவில் உள்ளன அவை முருகன் ஆலயம் உட்பட ஏனைய ஆலயங்களிலும் சூரன் போர், கந்தசஷ்டி விரத காலத்திலும் அத்தோடு வைகுண்ட ஏகாதசி முதலான சில விரதங்களிலும், அம்மன் விரத காலங்களிலும், துன்பம், துயரம், தொற்றுநோய், வரட்சி ஏற்படும் காலங்களிலும் இவ்வேடு படிக்கப்படும். தற்போது இவ் வழக்கம் காணப்படுவது இல்லை. 1736 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டம் திருக்கோவில் (முன்னைய காலங்களில் மட்டக்களப்புடன் இணைக்கப்பட்டிருந்தது) பிரதேசத்தை சேர்ந்தவரால் எழுதப்பட்டுள்ளது (கண்ணாப்போடி, கந்தப்போ). இவவோலைச்சுவடி மூ.அருளம்பலம் ஜயாவிடம் இருந்து பெறப்பட்டது.

அம்மானை

இந்துக்களின் வழிபாட்டு முறைகளில் அம்மானை பாடுதலும் வழக்கமான ஒரு நிகழ்வாகும். அம்மானை பாடுதல் மூலம் வரலாற்றுச் சம்பவங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. இந்த ஏட்டில் கஞ்சன் அம்மானை, வள்ளியம்மானை, பாரத அம்மானை என்பன அமைந்துள்ளன **(தகவல் - துரைபவளசிங்கம் வயது 70.)** 1708 ஆம் ஆண்டு எழுதப்பட்ட இவ் ஏட்டில் 235 பக்கங்கள் காணப்படுகின்றன. எழுதியவரின் பெயர், இடம் அறியப்படவில்லை. இவ்வோலைச்சுவடி மூ.அருளம்பலம் ஜயாவிடம் இருந்து பெறப்பட்டது.

மாந்திரீக ஏடு - 1

தெய்வசங்கல்பம், சக்தி உபாசனை, பிணி நீக்குதல், உயிர்களுக்குச் செய்யும் மந்திரங்கள், சடப் பொருள்களுக்கான மந்திரங்கள், மந்திரங்களின் அமைப்பு அவைகளுக்கான யந்திரங்கள் பற்றிக் கூறுகின்றன. கடினமான மொழி நடையில் அமைந்துள்ளது. எழுதியவர் மற்றும் ஆண்டு, இடம் என்பன அறியமுடியவில்லை. கண்ணூறு கழித்தலுக்கான மந்திரம் அதன் செயற்பாடு

மற்றும் வளவு காவல் பண்ணல், அம்மண் நோய் பார்த்தல் போன்ற விடயங்களும் கூறப்பட்டுள்ளது. திருவாசி மந்திரமும் காணப்படுகின்றது. இவ் ஓலைச்சுவடியும் சோ.கமலநாதனிடம் இருந்து பெறப்பட்டது.

மாந்திரீக ஏடு – 2

ஆகமம் சார வழிபாட்டு முறைகள், அக்கினி கட்டல், உரு எழுப்புதல் மற்றும் கட்டுதல், கும்பம் வைத்தல், காவடி எடுத்தல் **(முள்ளுக் குத்தும் போது),** கலிப்பு செய்தல், வீரகம்பம் வெட்டுதல் போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. எழுதியவரின் பெயர் மற்றும் ஆண்டு இடம் என்பன அறிய முடியவில்லை. இவ் ஓலைச்சுவடியும் சோ.கமலநாதனிடம் இருந்து பெறப்பட்டது.

சிங்கள மொழி ஓலைச் சுவடி

சிங்கள மொழியில் உள்ள இந்த ஓலைச் சுவடியானது மாந்திரீக ஓலைச்சுவடிளாக இருக்கலாம் **(ஆய்வாலர் அவதானம்)** எழுதியவரின் பெயர் இடம் மற்றும் ஆண்டு என்பன அறிய முடியவில்லை தெளிவாக என்ன விடயம் கூறப்பட்டுள்ளது என்றும் அறிய முடியவில்லை பல சக்கரங்கள் மற்றும் எந்திரங்கள் வரையப்பட்டுள்ளன சிங்கள மொழியில் உள்ள இந்த ஓலைச் சுவடியில் பல ஓலைகள் அழிந்து விட்டது.

ஆரையம்பதி கிராமத்தில் இந்துப் பாரம்பரியம் மாறாமல் இன்றும் பல பாரம்பரிய விடையங்களை கடைப்பிடிக்கின்றனர் அதை ஓலைச்சுவடிப் பாவனை மூலம் அறிந்து கொள்ளலாம். இங்கு வாழ்ந்த மக்களிடம் ஓலைச்சுவடிப் பாவனை அதிகமாகக் காணப்பட்டுள்ளது. பண்டைய ஆரையம்பதி கிராமத்தில் காணப்பட்ட ஓலைச்சுவடிகள் பல இன்று இல்லை அவை அழிந்து விட்டது. ஒரு சிலர் மட்டுமே இன்றும் ஓலைச்சுவடிகளைப் பாதுகாப்பாக வைத்துள்ளனர் காரணம் பரம்பரையாக ஏதோ ஒரு வகையில் அதைப் பயன்படுத்தி வருகின்றனர். ஒருசிலர் மட்டுமே பரம்பரையாகப் பாதுகாத்து வரவேண்டம் என்று அதன் மகத்துவத்தை உணர்ந்து பாதுகாத்து வருகின்றனர். அந்தவகையில் ஆரையம்பதி கிரமத்தில் உள்ள ஓலைச்சுவடிகள் எவ்வாறான முறையில் பாதிப்படைகின்றன என்றும் பாதுகாக்கின்றனர் என்றும் அடுத்ததாக நோக்கினால்.

04 ஓலைச்சுவடிகளை பாதிக்கும் காரணிகளும் பாதுகாப்பு முறைகளும்

ஒரு நாட்டின் அறிவியல், கலை, கலாச்சாரம் மற்றும் வரலாறு பற்றிய தகவல்களின் உள்ளடக்கம், புகழ் பெற்ற கடந்த காலத்தின் சித்தரிப்பு, நமது நாகரிகத்தின் முந்தைய மரபுகள் மற்றும் கதைகளை பிரதிபலிக்கும் வகையில் தொல்பொருட்கள் காணப்படுகின்றன. இதில் ஓலைச்சுவடிகள் முதன்மையானதாக உள்ளது. இவை கலாச்சார பாரம்பரியத்தை உருவாக்குகின்றன. இந்த மகத்துவமான ஓலைச்சுவடியை பாதிக்கும் காரணிகளில் இருந்து பாதுகாப்பது முக்கியமான செயலாகும்.

பழங்காலத்தில் உருவாக்கப்பட்ட சுவடிகள் ஒரு காலத்திற்குப் பிறகு பாதுகாப்பின்றி பாதிப்படைய தொடங்கின. அவ்வாறு சுவடிகளை பாதிக்கும் காரணங்களை இரண்டு வகைகளில் அடக்கலாம். இயற்கை பாதிப்பு, செயற்கை பாதிப்பு என்பனவாகும்.

இயற்கை பாதிப்பு

சுவடிகளுக்கு இயற்கையாக நிகழ்ந்த பாதிப்புகளை இயற்கை பாதிப்பு எனக்கூறலாம். பொதுவாக ஓலைச் சுவடிகள் குறைந்த வாழ்நாள் கொண்டவை. கறையான், இராமபாணம், ஈரப்பதம், புகை, நெருப்பு ஆகியவற்றால் விரைவில் பாதிக்கக்கூடியவை. காற்று, மழை, வெயில், தீ ஆகிய இயற்கைச் சீற்றத்தில் சிக்கி பாதிப்படையக் கூடிய தன்மை கொண்டவை (இளங்குமரன் 1990:34). கறையான் முதலிய பூச்சுகளின் அரிப்பும், துளைப்பும் மற்றும் ஏடுகள் நாட்பட நாட்பட மட்கி மடிந்து பாதிப்படைவது மற்றொரு வகையாகும்.

செயற்கை பாதிப்பு

தமிழ்ச் சுவடிகள் இயற்கை அழிவுகளைவிடச் செயற்கை அழிவுகளாலேயே மிகுதியாக அழிந்தன என்று கூறலாம். இவ்வழிவுக்கு மன்னரிடையே நிகழ்ந்த போர், அரசியல் மாற்றம், மக்களின் குடிப்பெயர்ச்சி, வெளிநாட்டினருக்கு விற்றல், தீயிலிடுதல், நீரில் எறிதல், கவனமின்மை, பராமரிப்பின்மை, அந்நியர்களால் ஏற்பட்ட அழிவுகள், மூடநம்பிக்கை போன்ற காரணங்களாக அமைகின்றன.

ஓலைச்சுவடிகளை பாதுகாக்கும் முறை

பனை ஓலை இயல்பிலேயே உடையக்கூடியது மற்றும் பல்வேறு வகையான சிதைவுகளுக்கு ஆளாகிறது இதனால் பாதுகாப்பது பெறும் சவாலாக அமைகின்றது. லிக்னின் உள்ளடக்கம் பனை ஓலையில் உள்ளார்ந்த சிதைவு, தளர்வான நெகிழ்வுத்தன்மைக்கு வழிவகுக்கும் எனவே காலப்போக்கில் உடையக்கூடிய தன்மைக்கு ஆளாகிறது. தற்போது பாதுகாக்கப்பட்டு வருகின்ற பாதுகாப்பு முறைகளை இரண்டு வகைகளாகப் பகுக்கலாம். அவை பழங்காலப் பாதுகாப்பு முறை, தற்காலப் பாதுகாப்பு முறை என்பனவாகும்.

பழங்காலப் பாதுகாப்பு முறை

பழங்காலப் பாதுகாப்பு முறை என்பது அறிவியல் கண்டுபிடிப்பிற்கு முன்பே இயற்கையாகக் கிடைக்கக்கூடிய பொருள்களைக் கொண்டு காலங்காலமாகப் பாதுகாத்து வந்த முறையாகும். இம்முறையில் மஞ்சள், வேப்ப எண்ணெய், கோவையிலைச்சாறு, மணப்பொருள் முடுச்சு வைப்பு முறை போன்ற பல பாதுகாப்பு முறைகள் பழங்கால மக்களால் கையாளப்பட்டுள்ளன. இந்த பாதுகாப்பு முறை இன்று வரை சில இடங்களில் கையாளப்படுகின்றது.

தற்காலப் பாதுகாப்பு முறை

தற்காலப் பாதுகாப்பு முறை என்பது அறிவியல் வளர்ச்சியின் காரணமாகத் தயாரிக்கப்பட்ட இரசாயனப் பொருட்கள், அறிவியல் கண்டுபிடிப்புகளால் உருவான கருவிகள் போன்றவற்றைக் கொண்டு பாதுகாப்பதாகும். இம்முறையில் இரசாயனப் பொருட்களைக் கொண்டு பாதுகாத்தல், குளிர்சாதன அறையில் வைத்துப் பாதுகாத்தல், அறிவியல் கருவிகளைக் கொண்டு பாதுகாத்தல் போன்ற பல பாதுகாப்பு முறைகள் கையாளப்படுகின்றன.

சுவடிகள் பாதுகாப்பில் பழங்காலப் பாதுகாப்பு முறை, தற்காலப் பாதுகாப்பு முறை ஆகிய இரண்டு வகைகளில் தற்கால பாதுகாப்பு முறை எளிமையானதாக இருக்கின்றது. ஆனால் பக்கவிளைவுகளை உண்டாக்கக் கூடியது. சுவடிகளை விரைவில் அழியும் நிலைக்குக் கொண்டு செல்லக் கூடியது. ஆனால் பழங்காலப் பாதுகாப்பு முறை சற்று கடினமானதாக இருப்பினும் சுவடிகளை நீண்ட நாட்கள் பாதுகாப்பதுடன் பக்க விளைவுகளை ஏற்படுத்துவதில்லை. எனவே சுவடிகளை அழியாமல் பாதுகாக்கப் பயன்படும் பழங்காலப் பாதுகாப்பு முறையே சிறந்த பாதுகாப்பு முறையாகும்.

ஒவ்வொரு நாட்டிலும் ஓலைச்சுவடியின் மகத்துவத்தை உணர்ந்து பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இதனால் பல காப்பகங்களும் தோன்றலாகின. இலங்கையில் தேசிய ஆவணக் காப்பகத் திணைக்களம் அக்டோபர் 1 ஆம் திகதி 1966 ஆம் ஆண்டு கொழும்பு சுதந்திர சதுக்கத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் பிறகு இலங்கையில் சில இடங்களில் ஆவணக் காப்பகங்கள் உருவாக்கப்பட்டது. அந்த வகையில் தமிழ் ஆவண காப்பகங்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மலையகம், மட்டக்களப்பு பேன்ற இடங்களில் காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆவணகாப்பகமானது அரசடியில் உள்ள நூலகக்கட்டிடம் ஒன்றில் 2005ஆல் ஆண்டு இருந்து இயங்கிவருகின்றது. இங்கு ஆரம்பத்தில் நூல்கள் மாத்திரம் சேகரித்துக் கொண்டிருந்த நிலையில் 2020ஆம் ஆண்டிலிருந்து ஓலைச்சுவடிகளையும் சேகரிக்கப்பட்டு வருவதாக அறியப்படுகிறது. அத்துடன் இதுவரையான காலப்பகுதியில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகளும் சேகரிக்கப்பட்டு இங்கு வைக்கப்பட்டுள்ளது.

காலத்தின் தேவையினையும் இன்றைய காலகட்டத்தில் ஆரம்பம் தொடக்கம் இன்று வரை மனித முக்கியத்துவத்தினையும் கருத்திற் கொண்டு வாழ்வின் பண்பாடுகள், கலாசாரங்கள், பாரம்பரியங்கள் எவ்வகையில் மக்களோடு ஒன்றித்து காணப்பட்டன என்பதற்கு நம்பகரமானதோர் அம்சமாக காணப்படுவது தொல்லியல் சான்றாகும். ஒவ்வொரு பிரதேசமும் தனது பண்பாடுகள், வரலாற்று பாரம்பரியங்கள் மற்றும் கலாசார விழுமியங்களை நுணுக்கமாகவும், ஆழமாகவும் பதிவு செய்ய வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளது.

இன்று எம் பாரம்பரியங்கள் சிதைக்கப்படும் ஒரு கால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் உண்மையான உறுதியான எமக்கான பாரம்பரியங்களை தெரிந்து கொள்ள அதற்கான களத்தை உருமாக்க வேண்டியது மிக மிக அவசியமான ஒன்றாக காணப்படுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டே இவ் ஆய்வானது அமைந்துள்ளது.

ஆரையம்பதி பிரதேசத்தில் காணப்படும் தொல்லியல் சின்னங்களில் ஒன்றான ஓலைச்சுவடிகளை பற்றி ஆய்வு செய்வதன் மூலம் குறிப்பிட்ட ஆய்வு பிரதேசத்திற்கு உட்பட்ட எம் இனத்தின் பாரம்பரியத்தையும், வரலாற்றினையும் கூறும் எமது மூதாதையர்களின் வாழ்வோடு இணைந்ததானப் பண்பாட்டு விடயங்கள், வரலாற்று மரபுகள், கலைப் பொக்கிஷங்கள், வியத்தகு மருத்துவ முறைகள் போன்றவற்றை வெளிக்கொணர முடிந்தது.

பாரம்பரிய விடயங்கள் அழிவடையும் இக்காலத்தில் அதைப் பாதுகாத்து அதில் கூறப்பட்ட விடயங்களையும் அறிந்து வைத்து கொள்வது சிறப்பானதாகும். மக்கள் மத்தியில் காணப்படும் மூட நம்பிக்கைகள், பழக்கவளக்கங்கள் என்பவற்றை போக்கி ஒவ்வொருவருக்கும்

ஓலைச்சுவடியின் சிறப்பினை எடுத்து காட்டி இவை அழிக்கப்படும் பொருள் இல்லை பாதுகாக்க வேண்டிய பொருள் என்பதை உணர்த்தும் வகையில் இவ்வாய்வு அமைந்துள்ளது.

இக்காலத்தில் சுவடிகள் முழுமையாக அழிந்து விட்டது என்று எண்ணிக்கொண்டு உள்ளனர் ஆனால் அது உண்மையில்லை சுவடிகள் மறைக்கப்பட்டுள்ளது. அவற்றை வெளிக்கொணர்வதற்காக இது போன்ற பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஓலைச்சுவடிகளை அழிவடையாமல் பாதுகாப்பது சமூகத்தில் உள்ள ஒவ்வறுவரதும் கடமையாகும். ஆகவே பாரம்பரிய தொல்லியல் பொருட்களில் ஒன்றான ஓலைச்சுவடிகளை பற்றியும், அதை பாதிக்கும் காரணிகளும் பாதுகாப்பு முறைகளும், எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது பற்றியும், ஓலைச்சுவடிக்கு ஏற்படும் அழிவு, அதிலிருந்து பாதுகாப்பதற்கான வழிகள் என்பனவும், ஆரையம்பதி கிராமத்தின் சிறப்பு, மற்றும் இங்குள்ள ஓலைச்சுவடிகள் அவற்றின் பாவனை என்பதையும் இவ் ஆய்வு செய்வதன் வாயிலாக மெய்ப்பிக்கின்றேன்.

உசாத்துணை

1. இலட்சுமணன்.சி.,(2011) சுவடிப்பதிப்பாசிரியர்கள், உலகத் தமிழாராச்சி நிறுவனம்
2. உத்திராடன்.கோ., (2019) சுவடியியல், மதுரைக் குமரன் அச்சகம்
3. கமலநாதன்.சா., (2002) பாரத அம்மானை, இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்
4. கமலநாதன்.சா.இ., (2005) மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், குமரன் புத்தக இல்லம்
5. கலாஸ்ரீதர்.த., (2017) சுவடிப்பதிப்பாசிரியர்களின்வரலாறும் பதிப்புப் பணியும், ஓலைச்சுவடித்துறை தமிழ்ப் பல்கலைக்கழகம்.
6. கிருட்டினமூர்த்தி.சா., (2002) சுவடிபதிப்பு திறன் தொகுதி – 2, தமிழாராய்ச்சி நிறுவனம்., சென்னை
7. சம்பந்தன்.மா.சு., (1980) அச்சும் பதிப்பும், தமிழர் பதிப்பகம் லிங்கச் செட்டித் தெரு., சென்னை.
8. சாமிநானதயர்.உ.வே., (1950) எண் சரித்திரம், கபீர் அச்சுக் கூடம்., சென்னை
9. சபாரெத்தினம்.க., (2014) ஆரையம்பதி மண், ஆதவன் அச்சகம் அரசடி
10. சப்பிரதீபக்க.வி., விறலி விடு தூது , சௌத் இந்தியன் பிரஸ் காரைக்குடி
11. சிவசண்முகராஜா.சே., (1993) ஈழத்துச் சித்த மருத்துவ நூல்கள், சித்தமருத்துவ வளர்ச்சி கழகம்., இலங்கை.
12. சிவசுப்பிரமணியம்.வ., (2004) மட்டக்களப்பு நாட்டாரியல்
13. சௌந்திரபாண்டியன்.சு., (2000) வைத்திய சாத்திரம், அரசின் கீழ்த்திசை சுவடிகள் நூலகம்., சென்னை.
14. தில்லைநாதன்., (2015) மட்டக்களப்பு தமிழர் பண்பாட்டுமரபுகள், 65 நல்லையா விதி மட்டக்களப்பு.
15. நடராசா.f.x.c., (1998) மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவை.
16. பரமசிவம்.த.கோ., (1989) சுவடிப்பதிப்பு நெறிமுறைகள். சர்பாய் சானடோரியம் அச்சகம்.
17. பொன்னம்பலம்.க.சீ., பிள்ளையார் பெருங்கதை சரீரம் ஸ்ரீலங்கா தேசிய மன்றம்
18. மகாதேவன்.எஸ்., (2003) ஆரேக்கியம் தரும் ஆயுர்வேதம் சுந்தர தெரு, தியாகராய நகர், சென்னை
19. மாறன்.ம., (2014) தமிழ் ஆய்வுக்கட்டுரை தஞ்சாவூர் மகாராஜ சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம்

இணையத்தள முகவரிகள்

1. https://www.seithipunal.com/spiritual/what-is-jothidam-how-it-create
சோதிடம் பற்றிய அறிமுகம் 2022.04.09 09.30
2. https://vedicfastro.blogspot.com/2020/10/blog-post.html?m=1
சோதிடக் கருத்துக்கள் 2022.04.10 09.30
3. https://updatetamil.com/tag/%E0%AE%B5%E0%AF%86%E0%AE%B1%E0%AF%8D%E0%AE%B1%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%88-%E0%AE%9C%E0%AF%8B%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%9F%E0%AE%AE%E0%AF%8D/
4. ஓலைச்சுவடி பற்றிய அறிமுகம் 2022.04.11 10.30
5. https://www.penmai.com/community/threads/%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%B5%E0%AE%9A%E0%AE%BE%E0%AE%AF%E0%AE%AE%E0%AF%8D-%E0%AE%9A%E0%AF%86%E0%AE%AF%E0%AF%8D%E0%AE%AF-%E0%AE%8F%E0%AE%B1%E0%AF%8D%E0%AE%B1-%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%B3%E0%AF%8D.128956/
6. விவசாயம் செய்வதற்கு நாள் பார்க்கும் முறை 2022.04.12 01.30

நேர்காணல்

பெயர்	வயது	தொழில்	காலம்
மூ.அருளம்பலம்	77	கலைஞ்னர்	2022.04.05
வ.செல்ராசா	80	வைத்தியர்	2022.04.09
பெ.சற்குணம்	80	இல்லை	2022.04.10
க.மணியம்	77	வைத்தியர்	2022.05.06
இ.கிருஷ்னபிள்ளை	67	சோதிடர்	2022.05.07
க.சஜந்திரராசா	58	பூசகர்	2022.05.08

பின்னிணைப்பு

படம் 1

படம் 2

படம் 3

படம் 4

படம் 5

படம் 6

படம் 7

படம் 8

கதிரவெளி வதனமார் வழிபாட்டு முறைகளும், சமூக வழமைகளும்

உ. ஜீவதர்சன்
இந்துநாகரிகத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
u.jeevatharsan861@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

மனித சமூகம் தனது ஆற்றலுக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று உள்ளது என்பதனை என்று உணரத்தலைப்பட்டதோ அன்றே வழிபாடுகள் தோற்றம் பெறத் தொடங்கின. இவ்வகையில் உலகின் பல பாகங்களிலும் பல்வேறு வகையான வழிபாடுகள் தோற்றம் பெற்றது. அந்த வகையில் இந்துசமய மரபில் இந்தியாவிலும், இலங்கையிலும் பல்வேறு வழிபாடுகள் தோற்றம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அவ்வடிப்படையில், இலங்கையில் நிலவுகின்ற மரபுரீதியான வழிபாட்டு முறைகளில் ஒன்றாக வதனமார் வழிபாடு காணப்படுகின்றது. இவ்வாய்வானது, தொழில் விருத்தியை நோக்கமாகக் கொண்டு ஆற்றப்படுகின்ற வழிபாட்டுச் சடங்காக வதனமார் வழிபாட்டினை அடையாளப்படுத்துதல், ஆய்வுப் பிரதேசமான கதிரவெளிப் பகுதியில் நிலவுகின்ற வதனமார் வழிபாட்டு முறைகளை அடையாளப்படுத்துதல், அத்தகைய வதனமார் வழிபாட்டின் சமூக வழமைகளை வெளிக்கொணர்தல் போன்ற விடயங்களை நோக்கமாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வானது ஆய்வுப் பிரதேசத்தில் அமையப்பெற்ற கதிரவெளி வதனமார் தாய்க்கோயிலில் நடைபெறும் சடங்கு முறைகளையும் அவற்றில் இடம்பெறும் பிரதான விடயங்களையும் தெளிவுபடுத்தும் வகையில் விபரண ஆய்வு, வரலாற்று ஆய்வு போன்ற ஆய்வு முறையியல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இலங்கையில் பல்வேறு இடங்களில் காணப்படுகின்ற வதனமார் வழிபாட்டுச் சடங்குகளில் இருந்து கதிரவெளி வதனமார் வழிபாடானது தனித்துவம் பெற்று விளங்குகின்றது. இத்தகைய தனித்துவத்தின் தன்மை எத்தகையது என்பதை அறிந்து வெளிப்படுத்துவதுடன் அவ்விடயத்தை வெளிப்படுத்த ஏற்ற வகையில் ஒப்பீட்டாய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. வதனமார் வழிபாட்டு முறைகள் கதிரவெளிப் பகுதியில் வாழும் மக்களின் சமூக வாழ்வியலில் சமய நம்பிக்கைகள், வாழ்வாதார தொழில் நடவடிக்கைகள், பழக்கவழக்கங்கள், கலைகள் உள்ளிட்ட இதர வாழ்வியல் அம்சங்களில் பிரதிபலிக்கின்றது. இவ்வழிபாட்டு முறையின் நீட்சி சமூக வாழ்வியலுக்கும் வழிபாட்டிற்கும் இடையிலான பிணைப்பைக் காட்டுகின்றது. சுருங்கக் கூறின் வதனமார் வழிபாட்டு முறையியலினூடாக சமூக வாழ்வியல் அம்சங்கள் பிரதிபலிக்குமாற்றினைத் தெளிவுபடுத்தும் வகையில் இவ்வாய்வு அமைகின்றது.

திறவுச் சொற்கள்: வதனமார் வழிபாடு, வாழ்வியல், சமூக வழமைகள், பூசாரிமார், போடிமார்

அறிமுகம்

ஆகமம் சாரா வழிபாட்டு நெறிகளுளொன்று வதனமார் வழிபாடாகும். இது மரபுரீதியான வழிபாடு சார்ந்தது ஆகும். ஈழத்துச் சைவ சமயிகளால் வழிபடப்படும் சிறப்பான வழிபாடுகளுள் இந்நெறியுமொன்று. ஈழநாட்டின் மருதநிலப் பிரதேசங்களிலும், முல்லைநிலப் பிரதேசங்களிலும் வாழும் மக்களால் நன்கு போற்றப்படும் தெய்வம் இதுவாகும். குறிப்பாக முன்பு வன்னிப் பிரதேசங்கள் என்று கருதப்பட்ட வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு முதலான வன்னிமைகளில் வாழும் மக்களால் இத் தெய்வம் நன்கு போற்றப்பட்டது. இன்றும் போற்றி வருகின்றனர். (கனகரத்தினம். இரா.வை, 1996, இளங்கதிர், ப.85)

மந்தை வளர்ப்புத் தொழில் புரிவோர்களிடம் வதனமார் வழிபாடு காணப்படுகின்றது. குறிப்பாக எருமையின மந்தை வளர்ப்போரிடமே இவ்வழிபாடு நடைபெறுகின்றது. இதனைவிட வதனமார் வயல் தெய்வமாகவும் வணங்கப்படுகின்றது. வதனமார் என்னும் கூட்டத்தினர் மனிதராக வாழ்ந்து தமது வீர சாதனைகளால் தெய்வங்களாக மாறியவர்கள் எனக் கருதஇடமுண்டு. இவர்கள் பற்றி அறிந்து கொள்வதற்கு மரபு வழியான செய்திகளும், சடங்கு முறைகளும் யானைகட்டும் அகவல், வதனமார் ஊர் சுற்றும் காவியம், குழுமாடு கட்டும் அகவல், குழுமாடு கட்டும் காவியம், தேன் வெட்டும் காவியம் என்னும் வதனமார் பற்றிய பாடல்களும் உதவியாக உள்ளன. (மகேஸ்வரலிங்கம். க., 1996, ப.63)

பிரதேசத்திற்குப் பிரதேசம் தனித்துவமான கலாசார அடையாளம் உண்டு. அந்த அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேசத்தின் தனித்துவமான அடையாளங்களில் ஒன்றாக வழிபாட்டுச் சடங்குகள் காணப்படுகின்றன. வாகரைப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட ஒரு

பகுதியான கதிரவெளிப் பகுதியில் வதனமார் சடங்கு மிகவும் சிறப்பான அம்சங்களோடு தனித்துவம் பெற்றுக் காணப்படுகின்றது. கதிரவெளிப் பிரதேசமானது வரலாற்றுப் பழமைமிக்கதும், மரபு சார்ந்ததுமான கிராமமாகக் காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் வதனமார் சடங்கானது பரம்பரை பரம்பரையாக நீண்டகாலமாக மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பலரையும் இணைத்து சுதந்திரமான சூழலில் உறவுகளோடு உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளவும், சமூக நிலவரங்களைப் பேசிக் கலந்துறவாடி வெளிப்படுத்தக் கூடிய சடங்கு வகைகளுள் வதனமார் வழிபாட்டுச் சடங்கு தனித்துவமுடையதாக விளங்குகின்றது. விவசாயம் செழிக்கவும், கால்நடைகள் பெருக வேண்டியும் இவைகளை எவ்விதமான நோய் நொடிகளிலிருந்து பாதுகாக்க வேண்டியும் செய்யப்படுகின்ற சடங்கு முறையாக வதனமார் சடங்கு விளங்குகின்றது. மக்களின் வாழ்வாதாரத்தோடு இணைந்து காணப்படுவதனால், வாழ்வியலை வெளிப்படுத்தும் வழிபாட்டு முறைகளுள் ஒன்றாக வதனமார் வழிபாடு காணப்படுகின்றது.

கிராமியத் தெய்வ வழிபாடுகளும் அதன் தொன்மையும் இன்றளவில் அதன் முக்கியத்துவங்களும் மக்கள் மத்தியில் கேள்விக்குட்பட்டதாகவே உள்ளது. அந்தவகையில் வதனமார் வழிபாட்டினை அதன் பாரம்பரியம் சிதையவிடாமல் கைக்கொள்வதும் அதனை அகலப் பார்வைகொண்டு நோக்குதலும் காலத்தின் தேவையாகவே உள்ளது. அந்த வகையில் இவ்வாய்வானது மட்டக்களப்பு மாவட்டத்தின் கதிரவெளியில் நிலவுகின்ற வதனமார் வழிபாடு, வதனமார் வழிபாட்டு முறையினூடாக வெளிப்படும் சமூக வழமைகளை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

ஆய்வு முறையியல்

ஆய்வினை வழிநடாத்திச் செல்கின்ற ஒரு வழிகாட்டியே ஆய்வு முறையியல் ஆகும். இவ்வாய்விற்காக வரலாற்று ஆய்வு, விவரண ஆய்வு, ஒப்பீட்டாய்வு மற்றும் பகுப்பாய்வு போன்ற ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பண்பு ரீதியான முறையியல் மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் வதனமார் வழிபாடு நிகழ்த்தப்படுகின்ற பல்வேறு முறைகளை அடையாளப்படுத்துவதுடன் ஆய்வுப் பிரதேசத்தில் அமையப்பெற்ற கதிரவெளி வதனமார் தாய்க்கோயிலில் நடைபெறும் சடங்கு முறைகளையும் அவற்றில் இடம்பெறும் பிரதான விடயங்களையும் தெளிவுபடுத்தும் வகையில் விபரண ஆய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. வதனமார் வழிபாட்டின் வரலாற்றுரீதியான விடயங்களை வெளிப்படுத்த வரலாற்று ஆய்வுமுறை பயன்படுத்தப்பட்டுள்ள அதேவேளை வதனமார் வழிபாட்டினூடாக வெளிப்படும் பல்வேறுபட்ட விடயங்களை பல்வேறு கோணத்தில் வெளிப்படுத்த பகுப்பாய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இலங்கையில் பல்வேறு இடங்களில் காணப்படுகின்ற வதனமார் வழிபாட்டுச் சடங்குகளில் இருந்து கதிரவெளி வதனமார் வழிபாடானது தனித்துவம் பெற்று விளங்குகின்றது. இத்தகைய தனித்துவத்தின் தன்மையை வெளிப்படுத்த ஏற்ற வகையில் ஒப்பீட்டாய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

சூழலும் வழிபாட்டு மரபுகளும்

குறித்த சூழலுக்கும் அப்பகுதியில் நிலவுகின்ற வழிபாட்டுக்கும் தொடர்பிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. ஆரம்ப காலத்திலிருந்து நிலம் ஒரு பெரும் சொத்தாக அமைந்திருந்து உயிர் வாழ்வதற்குரிய இடமாகவும், உண்டு உயிர் வாழ்வதற்கு வேண்டிய பொருட்களை வழங்கும் கருவூலமாகவும் விளங்கியமை குறிப்பிடத்தக்கது. சங்க காலத்தில் நிலங்கள் வகுக்கப்பட்டமையும் அவற்றிற்குரிய தெய்வங்களும் குறித்துரைக்கப்படுகின்றமையை பல்வேறு நூல்களில் காணமுடிகின்றது. அந்தவகையில் தொல்காப்பியத்தில்,

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே. (தொல்.அகத்: 5)

என்றவாறு விளக்கிக் காட்டப்படுகின்றது.

அக்காலத்தில் ஒவ்வோர் நிலத்திற்கும் ஏற்றமாதிரியான தொழில்களும் மேற்கொள்ளப்பட்டன. அந்தவகையில் கால்நடை வளர்ப்பு என்பது சமூகத்தின் ஓர் சீவனோபாயத் தொழிலாகும். சங்க காலத்தில் முல்லைநிலம் ஆயர்களுக்குரிய நிலப்பகுதியாக அமைந்திருந்தது. அவர்கள் கால்நடைகளைக் காப்பதற்காக திருமாலை வழிபட்டனர் (பக்தவத்சல பாரதி, 2014:96) சங்ககாலத்தில் ஐவகை நிலங்கள் பற்றி குறிப்பிடப்படுகின்றது. அத்தகைய நிலத்துக்கேற்றமாதிரியான சூழல் அமைப்பும், சூழலமைப்புக்கு ஏற்றமாதிரியான குடும்பப் பின்னணியும், குடும்பப் பின்னணிக்கு ஏற்றமாதிரியான தொழில்களும், தொழிலுக்கு ஏற்றமாதிரியான வழிபாட்டு முறை என்றவாறான ஓர் இடைத்தொடர்பு நிலவியிருந்தமை அவதானிக்கத்தக்கது. அந்தவகையில் முல்லைநிலத்துக்குரியதாக திருமால் வழிபாடு காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. வதனமார் வாழ்ந்ததாகக் கூறப்படும் அயோத்தி, காசி ஆகியவற்றின் சூழலமைப்பு, சமூக அமைப்பு ஆகியவை இவ்விடத்தில் ஆராயத்தக்கது.

அதேபோன்று இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த வதனமாரின் பயணமும் புல்வெளி, அடர்ந்த காடுகளை அண்டியே நடைபெற்றது. இவர்கள் திருகோணமலைக்கு வந்து, இதே புவியியல் அமைப்புள்ள கந்தளாய், தம்பலகாமம், வாகரை முதலிய இடங்களின் வழியாக மண்முனை, கரவாகுப் பற்றுக்களைக் கடந்து பானமை வரை சென்றனர். பின்னர் திரும்பி திருக்கோவில், தம்பிலுவில், வீரமுனை, காரைதீவு முதலிய இடங்களைக் கடந்து மண்டூருக்கு அருகாமையில் உள்ள நாதனைவெளி எனுமிடத்தில் தங்கி வாழ்ந்தனர் (செல்வராசகோபால், 2000:.62).

இவர்களின் இந்த நெடும் பயணத்தில் எங்கெங்கு குழுமாடுகள் வாழ்கின்றன, அவைகளை மந்தைகளாக வளர்க்கத் தக்க நீர், புல் ஆகிய வசதிகள் உண்டா என ஆராய்ந்து வந்தனர். இப்படிப்பட்ட இடங்கள் தென்படும்போது தம்முடன் வந்தவர்களை ஆங்காங்கு குடியமர்த்தியும் சென்றனர். இவ்வாறுதான் வதனமாரின் இடைவிட்ட குடியேற்றம் அமைந்தது (மேலது, ப.13)

இவ்வடிப்படையில் கதிரவெளியின் நிலவமைப்பு, சூழலமைப்பு போன்றவை பற்றி அறிவது அவசியம்.

அந்தவகையில் கதிரவெளிப் பகுதியின் நிலவமைப்பானது காடும் காடுசார்ந்த இடமும், வயலும் வயல்சார்ந்த இடமும், கடலும் கடல்சார்ந்த நிலமுமாகக் காணப்படுகின்றது. இவற்றில் காடுசார்ந்த பகுதி அதிகமாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் நிலத்துக்கேற்றமாதிரியான சூழல் அமைப்பும், சூழலமைப்புக்கு ஏற்றமாதிரியான குடும்பப் பின்னணியும், குடும்பப் பின்னணிக்கு ஏற்றமாதிரியான வகையில் பெரும்பாலான மக்களின் தொழில்களாக விவசாயம், கால்நடை வளர்த்தல் போன்றவை காணப்படுவதும் தொழிலுக்கு ஏற்றமாதிரியான வழிபாட்டு முறை என்றவாறு கால்நடை வளர்த்தல் மற்றும் விவசாயத்துடன் தொடர்புடைய வதனமார், வன்னித்தம்பிரான் வழிபாடு என்றவாறு ஓர் இடைத்தொடர்பு காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிரதேச வரலாற்றுப் பாரம்பரியம்

மட்டக்களப்பின் சமூகநிலை அதன் புறவழித் தாக்கங்களினூடே காலத்துக்குக் காலம் சிற்சில மாற்றங்களை உள்வாங்க நேர்ந்தாலும் பொதுவாக அவை சமதளத்தே எழுப்பப்பட்டனவாகும். அதன் உறுதிமிக்க அத்திவாரம் மரபுவழி எனும் பாரம்பரிய சிறப்புத்தன்மையை, தளம்பாமல் கொண்டிருக்கும் இறுக்கத்தை இன்னும் காணவே செய்கின்றோம்.

மட்டக்களப்புத் தமிழகத்தின் வாகரைப் பிரதேசத்திலுள்ளடங்குகின்ற பண்டைய கிராமங்களாகக் கொள்ளப்படும் பனிச்சங்கேணி, கதிரவெளி, வெருகல் என்பவை சுமார் 1600 ஆண்டுகளுக்கு முற்பட்ட மட்டக்களப்பின் வரலாற்றோடு இணைக்கத்தக்கவை. மட்டக்களப்பில் நிலைகொண்டிருந்த ஆதிச் சமூகங்களில் ஒன்றான திமிலருக்கும் அப்போது கலிங்கத்திலிருந்து இங்கு வந்த குக மரபினருக்கும் ஏற்பட்ட மேலாதிக்கப் போட்டி திமிலரை வெருகலுக்கப்பால் இட்டுச்செல்ல வைத்தது. எனினும் இம்மக்கள் வெருகல் கங்கையின் இருகரையிலும் பரவி மீன்பிடி, மந்தை வளர்ப்பு, பயிர்ச்செய்கை ஆகிய தொழில்களில் ஈடுபடவே செய்தனர். இவர்களோடு கூடவே இங்கு தனிச்சமூகமாக வாழ்ந்த இன்னுமோர் ஆதிக்கக் குடியினரான வேடரும் இங்கு விரிவுபடலாயினர். இவ்விரு சமூகங்களுடன் முற்குகரும் இப்பகுதியின் ஆதிக்குடிகள் என்பது வரலாற்றில் நிலை நிறுத்தப்படுவதாகும் (வெல்லவூர்க் கோபால், 2005:179-180).

இதனடிப்படையில் பார்க்கின்றபோது இப்பிரதேசத்தே இன்று நிலைபதிகளாகிவிட்ட ஏனைய சமூகங்கள் மிகப் பிற்பட்ட காலத்தவையாகவே அடையாளப்படுத்தப்படுகின்றன. தொடக்க காலத்தே இங்கு வாழ்ந்தவர்களாக கருதப்படும் முற்குகரும் காலப்போக்கில் மட்டக்களப்பின் உள்பகுதி நோக்கி (தெற்கு) நகர்ந்திருப்பர் என்றே கருதவேண்டியுள்ளது. இடைப்பட்ட நீண்டகாலத்தே இங்கு வேடுவர் சமூகமும் திமிலர் சமூகமும் விரிவாக்கம் பெற்றே வந்திருப்பர். இதனூடே அவர்கள் சார்ந்த தொழில்களான வேட்டையாடல், மந்தைவளர்ப்பு, சேனைப்பயிர், மீன்பிடி, விவசாயம் போன்றவையும் விரிவுபட்டேயிருக்கும் (மேலது :180).

அக்காலத்தே இப்பகுதியில் மக்கள் பரவலாக வாழ்ந்து விவசாயத்தை சிறப்பாக மேற்கொண்டிருப்பர் என்பதை இதன்மூலம் உறுதி செய்யமுடியும். காலப்போக்கில்

இம்மக்களிடையே ஏற்பட்ட தொழில் மாற்றங்கள் மற்றும் சமூக உள்வாங்கல்கள் மட்டக்களப்பின் ஏனைய சமூகங்களுக்குள் நிகழ்ந்ததான ஒரு மாற்றத்தை இப்பகுதியிலும் ஏற்படுத்தியிருப்பதை அவதானிக்கமுடியும். வெள்வேடர் அல்லது வேடவேளாளர் எனும் வேளாண்தொழிலோடு ஒட்டிய ஒரு வளர்ச்சியுற்ற சமூக அமைப்பு சமூக ஆய்வில் நம் கவனத்தை ஈர்க்கின்றது. (மேலது, பக்.180-181) வாகரைப் பிரதேசம் தனது சமூகக் கட்டமைப்பில் நீண்டகாலமாக கரையார், திமிலர், வேடவேளாளர் (வெள்வேடர்) வேடர் என்ற ஒன்றுபட்ட முக்கிய சமூகத் தளத்தைப் பேணிவரும் தன்மையானது இப்பிரதேச சிறப்பியல்பின் வெளிப்பாடாகவே கருதப்படும்.

மக்களின் சீவனோபாயமும் வழிபாடும்

இயற்கையோடு இயைந்த இன்ப வாழ்வு வாழ்ந்தவர்கள் நம் முன்னோர். அவர்கள் தங்கள் வாழ்க்கைக்கு அடித்தளமாக இயற்கை அமைந்திருப்பதை உணர்ந்து இயற்கையைப் போற்றி வாழ்ந்தனர் (பாலசுப்பிரமணியன், 1990:22). ஒரு இடத்தின் தொழில் வாய்ப்புகளையோ அல்லது தேவையையோ நிர்ணயிப்பதில் சில அடிப்படைத் தத்துவங்கள் இருப்பதைக் காணலாம். அவற்றுள் முக்கியமானது புவியியற் தத்துவம். நீர், நிலம், பருவ காலம், பயண வசதி என்பனவற்றின் வழங்கல் வசதிகளை இந்தப் புவியியல் அமைப்பு உள்ளடக்கும். இவ்வித புவியியல் சார்ந்த அதாவது அதில் முற்றும் தங்கியுள்ள தொழிற் துறைகளே கதிரவெளிப்பகுதி மக்களின் சீவனோபாயத்திற்கு ஆதாரமாக உள்ளன.

அதேபோன்று கதிரவெளிப் பகுதியில் வாழும் மக்களில் பெரும்பாலானோரின் தொழில் விவசாயம் இதற்கு வாய்ப்பாக இங்கு சிற்றாறுகளும், குளங்களும் காணப்படுகின்றன. அதிகமான வயல்கள் மழைநீரை நம்பி செய்யப்படுகின்றது. வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்று இத்தகைய மானாவாரி செய்கைக்கு நீர் வழங்குகின்றது. விவசாயத்தின் ஓர் பிரிவாக கால்நடை வளர்ப்பும் மக்களின் சீவனோபாயத் தொழிலாக அமைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. காடும் காடுசார்ந்த நிலத்தில் பட்டிகள் அமைக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இப் பகுதியில், வயற் செய்கையும் அதற்கு மிகவும் உதவி செய்யும் பசுக்கள், எருமைகள் போன்ற கால்நடைகளை வளர்க்கும் கால்நடை வளர்ப்புத் தொழிலும் இணைந்து நடைபெறுவது வழக்கம். கால்நடை வளர்ப்புத் தொழிலுக்கு ஏற்ற மாதிரியான வதனமார் வழிபாடு இங்கு பிரசித்தமாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

வதனமார் வழிபாட்டில் பங்குபெறும் மரபுவழியான சமூகத்தவர்கள்

ஓர் இடத்தில் பவ்வேறு சமூகப்பகுதியினர் காணப்பட்டாலும் குறிப்பிட்ட வழிபாட்டுச் சடங்குகளில் சில சமூகத்தவர்கள் பிரதானமாகப் பங்கெடுத்துக் கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் கதிரவெளியில் அமைவுபெற்றுக் காணப்படும் வழிபாட்டு நடைமுறைகளில் ஓர் கூட்டுத் தன்மையினையும், முறையானதும் தொடர்ச்சியானதுமான ஓர் முறையியலை வெளிப்படுத்தும் வகையில் கதிரவெளியின் சமூகப்பின்னணி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அதாவது பாரம்பரிய நடைமுறைகளைக்கொண்ட சமுதாயங்களில் சமூகப்பகுதியினருக்கிடையில் காணப்படும் ஒன்றையொன்று தொடுத்தாற்போன்று ஒருவித பிணைப்பினை இங்கு கண்டுகொள்ள முடிகின்றது. வதனமார் வழிபாட்டில் பங்குபெறும் மரபுவழியான சமூகத்தவர்களை பின்வருமாறு காணலாம்.

வதனமார் சடங்கை நிகழ்த்துவிக்கும் சமூகம்

கதிரவெளிப் பகுதியில் நீண்ட காலமாக வழிபாட்டுச் சடங்குகள் வழக்கிலிருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் கதிரவெளியில் ஒரு சமூகத்தின் பல்வேறு பகுதியினைச் சேர்ந்தவர்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. போடிமார்கள் என்று சொல்லப்படுகின்ற ஒரு பகுதியினரே இச் சடங்குகளின் போது ஏற்படுகின்ற செலவுகளுக்கான பெரும் பொறுப்பை ஏற்று இதற்குத் தலைமை தாங்கி செயல்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இங்கு போடிமார்கள் என்பவர்கள் பொதுவாக எல்லா இடங்களிலும் குறிப்பிடுவதைப் போன்று பெருமளவிலான கால்நடைகள் வைத்திருப்பவர்களையோ பல ஏக்கர் வயல் நிலங்களுக்குச் சொந்தக்காரர்களையோ குறிப்பதல்ல. அவர்கள் ஒரு பரம்பரைத் தொடர்ச்சியை காண்பிப்பவர்களாக உள்ளனர். அதாவது நான்கு பரம்பரையான குடும்பங்களின் பிரதிநிதிகளாக இவர்கள் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. குளக்கோட்டன் மன்னன் விதித்த நியமப்படி இவர்களில் நான்கு பகுதியினர் உள்ளடங்குவர் (தகவல்: சு.தர்மரெத்தினம், வயது - 68, விவசாயி - முன்னாள் போடி, கதிரவெளி). இதேபோன்றதொரு முறைமை வெருகலம்பதி சித்திர வேலாயுதர் கோயில் கங்காண முறையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அதாவது முதன்மைக் கங்காணம், உதவிக் கங்காணம், உண்டியற் கங்காணம், கோயில் விதானை என்று நான்கு பகுதியினர் அமைந்திருப்பது போன்று கதிரவெளிப் பகுதியில் உள்ள சடங்காலயங்களினுடைய நடைமுறைகளில் நான்கு போடிமார்களினுடைய செல்வாக்கு உள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு நான்கு நான்காக வகுத்த இவ்விடயம் ஏதோ ஒரு முறையியலை வெளிப்படுத்துவதாகவும் ஒருவித பண்பாட்டை வெளிப்படுத்துவதாகவும் எண்ணத் தோன்றுகின்றது.

வதனமார் சடங்கில் நான்கு போடிமார்களும் பல்வேறு நிகழ்வுகளில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் சடங்குக்கான நாள் தீர்மானிப்பது தொடக்கம் தெளிவு மடை வைத்து சடங்கு நிறைவடையும் வரை இவர்களுடைய ஈடுபாடு காணப்படுகின்றமை கவனிக்கத்தக்கது.

வதனமார் சடங்கை நிகழ்த்தும் சமூகம்

தென்னிந்தியாவில் கிராமியப் பூசாரிமார் காணப்படுவது போல இலங்கையிலும் இப்பூசாரிமார் முறை பெரிதும் காணப்படுகின்றது எனலாம். கிராமியத் தெய்வங்களுக்குப் பூசை செய்வோர் ‘‘பூசாரி’’ என்றே பெரிதும் அழைக்கப்படுகின்றனர். இப்பெயரை அடிப்படையாகக் கொண்ட பெயர்களும் பிரதேசத்திற்குப் பிரதேசம் அழைக்கப்பட்டு வருவதையும் நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. இப் பூசாரி கிராம மக்களிடையே நன்மதிப்பைப் பெற்றவராக இருப்பார். அவர் பரம்பரை பரம்பரையாக வருபவர் (மனோகரன், 2018:10).

குளக்கோட்டன் விதித்த விதிமுறைக்கு அமைவாகவே கதிரவெளியைச் சேர்ந்த பூசாரிமார்களால் இன்றுவரை வதனமார் சடங்கு இயற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆரம்பகாலத்தில் வதனமார் சடங்கு செய்து வழிபாடாற்றுவதற்கு பூசாரி குடியினர் வரவழைக்கப்பட்டனர். (தகவல்: வ. தேவராசா, வயது-70, பூசகர், கதிரவெளி) எனும் தகவல் வதனமார் வழிபாடாற்றும்

சமூகத்தின் வரவைக் குறிப்பிடுகின்றது. மட்டக்களப்பு மான்மியம் போன்றவை குறிப்பிடும் மருமக்கள் தாயமுறை இப்பகுதி மக்களிடம் செல்வாக்குப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பூசைமுறை உரித்து கூட மருமக்களுக்கு (தனது சகோதரியின் மகன்மார்களுக்கு) உரித்தானதாக இப்பகுதியில் வழங்கி வருகின்றது. வதனமார் வழிபாட்டுச் சடங்குகளில் சடங்கிற்கான தீர்மானம் எடுப்பது முதல் தெளிவுமடை வைத்து நிறைவடையும் வரை பூசகர்களின் வகிபாகம் குறிப்பிடத்தக்கவொன்றாகும்.

தொழும்பாளர்கள்

கதிரவெளியில் நடைபெறும் வழிபாட்டுச் சடங்குகளில் குறித்த சடங்குகளை நிகழ்த்துவிக்கும் சமூகப் பகுதியினர், சடங்குகளை நிகழ்த்தும் சமூகப் பகுதியினர் காணப்படுவதனைப் போன்று இச்சடங்குக்கான கருமங்களை நிறைவேற்றும் வகையில் ஒரு சமூகத்தின் வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் காணப்படுவதும் அவர்கள் தத்தமது கடமைகளைச் செய்து வருவதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். அந்த வகையில் நீண்ட காலமாக பல்வேறு சமூகப் பகுதியினர் இச்சடங்குகளைச் செய்வதில் செயற்பாட்டு ரீதியாக பங்கு கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. அவ்வடிப்படையில் இத்தொழும்பாளர் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் குளக்கோட்ட மன்னன் வகுத்த விதிமுறைகளின்படி செயற்படுவது குறிப்பிடத்தக்கது (தகவல்: க. பரசுராமன், வயது - 80, விவசாயி, புச்சாக்கேணி).

குளக்கோட்ட மன்னன் கோணேஸ்வரர் கோயில் தொண்டுகள் செய்வதற்கு பல குடிமக்களை வரவழைத்து குடிகளை வகுத்து நிர்ணயித்தமையை போன்றதொரு செயற்பாடாகவே இங்குள்ள வழிபாட்டுச் சடங்குகளில் பல்வேறு சமூகப் பகுதியினருக்கு கருமங்கள் விதித்ததாக குறிப்பிடுவதோடு அதன்படி தமது கடமைகளைச் செய்து வருகின்றமை அவதானிக்கத்தக்கது.

அந்த வகையில் பச்சைப்பெட்டி கட்டுதல் நிகழ்விலும் வெவ்வேறு சமூகப் பகுதியினர் ஈடுபடுகின்றனர். அதேபோன்று வதனமார் வழிபாட்டுச் சடங்கில் நோற்புச் செயற்பாடுகளில் ஒரு சமூகப் பகுதியினரின் வகிபங்கு குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் பெட்டகம் நோற்பு வாடிக்குகொண்டு சென்ற நாளிலிருந்து அங்கு நோற்புக்காரர்களால் சடங்கினை செவ்வனே நிகழ்த்துவதற்கு பேருதவியாக சைவஉணவு சமைத்து வழங்கும் கருமத்தைச் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது. அதேபோன்று பெருஞ் சடங்கில் மடை பரவுதல் செயற்பாடுகளின் போதும் மடை வைப்பதற்குத் தேவையான வெற்றிலை, பாக்கு, பழவர்க்கங்கள் போன்றவற்றை, ஏற்ற வகையில் தயார்படுத்தி தூய்மைப்படுத்திக் கொடுத்தல் போன்றவற்றை செய்து கொடுப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இளந்தாரிமார்கள்

வதனமார் வழிபாட்டுச் சடங்கில் காட்டில் கட்டாக்காலிகளாகக் காணப்படும் எருமை மாடுகளை பிடிப்பவர்களாக இளந்தாரிமார்கள் என்பவர்கள் காணப்படுகின்றனர். அதாவது வதனமார் தொடர்பான பௌராணிகக் கதைகள் மற்றும் இலக்கியங்கள் குறிப்பிடுகின்ற அடிப்படையில், வதனமார் எவ்வாறு மாடு பிடித்தார்களோ அதே நிலையில் அவர்கள் செய்த செயற்பாடுகளையே இவர்களும் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கதிரவெளி பகுதியின் சமூக கட்டமைப்பு கருத்திற் கொள்ளும் வகையில் 12 குடிகள் காணப்படுகின்ற நிலையில் அவர்களிலிருந்து 12 பேர் இளந்தாரிகளாகச் செல்வது ஆரம்பகால வழக்கம். 12 இளந்தாரிமார்களுக்கும் உரிய வகையில் செய்ய வேண்டிய கடமைகளை செய்து இடுப்பில் கருப்பு பட்டணிந்து மாடு பிடிக்க வழியனுப்பி வைப்பது வழக்கம் (தகவல்: வ. தேவராசா, வயது-70, பூசகர், கதிரவெளி). தற்காலத்தில் 12 பிரதான இளந்தாரிகளுடன் இன்னும் பலர் இளந்தாரிகளாகச் செல்வது குறிப்பிடத்தக்கது. இத்தகைய நடைமுறை ஒரு சமூகத்தின் பன்னிரெண்டு பகுதிகளையும் இணைக்கும் வகையில் வதனமார் வழிபாடு காணப்படுவதனை குறிப்பிடலாம்.

இவர்கள் பெரும்பாலும் மாடுவளர்ப்புத் தொழிலில் ஈடுபடும், தொழில் சார்ந்த சமூகப் பிரிவினராகவும் அடையாளம் காணக்கூடியதாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. மாடுகளை பிடிப்பதற்கு, மாடு வளர்ப்பு தொழிலில் பரீச்சயமான இவர்களால் இக்கருமத்தை இலகுவாக செய்யக்கூடியதாக இருக்கும் என்பதால் இவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. இவர்கள், மாடு பிடிப்பதற்கு ஏற்ற வகையில் கொம்புக்கயிறு திரித்தல், கொம்புக்கயிறு வைத்தல், காலுக்கு சுருக்குக் கயிறு வைத்தல், மாட்டின் அடி பார்த்து அதற்கேற்ற வகையில் செயற்படுதல் போன்றவற்றை திறம்பட செய்வதில் இளந்தாரிமார்கள் முக்கியத்துவம் பெறுகின்றனர். (தகவல்: சுந்தரலிங்கம். ச., வயது - 59, விவசாயி (இளந்தாரிக்குச் செல்பவர்), புச்சாக்கேணி) அதேபோன்று இளந்தாரிமார்களுக்குச் செல்வோர் பல்வேறு வயது மட்டங்களைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ்வாறு செல்லும்போது புதிதாக ஒரு சிலரை இணைத்துக் கொண்டு செல்வதும் அவர்களுக்கு மேற்குறிப்பிட்ட மாடு பிடித்தலில் உள்ள முறைகளைப் பயிற்றுவிப்பதும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக கொம்புக்கயிறு திரித்தல் பற்றிய விடயமானது மாடுபிடிக்கச் செல்கின்ற வேளையில் காட்டிலேயே பயிற்றுவிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (தகவல்: சிவலிங்கம், செ., வயது - 89, விவசாயி, புச்சாக்கேணி) இவ்விடயம் தாங்கள் அறிந்த விடயங்களை தமது அடுத்து வருகின்ற சந்ததியினருக்கு பயிற்றுவிப்பதனை வெளிப்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

பண்பாட்டு அம்சங்கள்

பண்பாடு என்பது பொதுவாக மனித செயற்பாட்டுக் கோலங்களைக் குறிப்பதாகும். அதாவது மனிதர்களின் நடவடிக்கைகளைக் குறிக்கின்றது எனலாம். மானிடவியலாளர், பண்பாடு என்பது நுகர் பொருள்களை மட்டுமல்லாது அவற்றை உருவாக்குவனவும், அவற்றுக்கு பொருள் கொடுப்பனவுமான வழிமுறைகளையும், அவற்றில் பொதிந்துள்ள சமூகத் தொடர்புகள், செயல்முறைகள் என்பவற்றைக் குறிப்பதாகக் கூறுகின்றார்கள். அவர்களைப் பொறுத்தவரை பண்பாடு என்பது கலை, அறிவியல், நெறிமுறைகள் போன்ற அனைத்தையும் உள்ளடக்கியது. அந்தவகையில் ஆய்வுப் பிரதேச மக்களிடையே பல்வேறு பண்பாட்டு அம்சங்களை கண்டுகொள்ள முடிகின்றது.

சடங்குகளின் ஊடாக நம்பிக்கை

மனிதன் எப்போது தோன்றினானோ அப்போதே நம்பிக்கையும் தோற்றம் கொண்டுவிட்டது எனக் கருதலாம். மனிதனின் தன்னல உணர்வும், சமுதாய உணர்வும் நம்பிக்கைகளை

வளர்த்தெடுக்கும் காரணிகளாக உள்ளன. ‘‘நம்பிக்கை’’ என்பது ஒன்றின் உண்மைத் தன்மையை ஏற்றுக் கொள்வதாகும். நம்பிக்கையின் அடிப்படை அகமனம் (Sub conscious) எனலாம். இதனால் தான் நம்பிக்கைகளைப் பொதுவாக ‘‘உள உருவாக்கம்’’ (Mental creation) எனக் குறிப்பிடுவர்.

ஆய்வுப் பிரதேச மக்களின் சமய வாழ்வில், சடங்குகள் மிகுந்த முக்கியத்துவமுடையதாக விளங்குகின்றன. சடங்குகளே இம் மக்களின் பாரம்பரிய சமய வழிபாட்டின் எச்சங்களாகத் தொடர்கின்றன. வாழ்வியல் தேவைகளை, குறிப்பாக பொருளாதாரத் தேவையைப் பூர்த்தி செய்த தெய்வங்களுக்கு உரிய காலப்பகுதியில் சடங்கு செய்தல் இக்கிராமத்தில் இன்றுவரை தொடர்கின்றது. இவ்வாறு சடங்குகளைச் செய்வதன் மூலமே தமது தேவைகளை நிறைவேற்ற முடியும் என நம்பிக்கை கொண்டனர். அவ்வாறு தவறும் பட்சத்தில் கால்நடைகள் பாதிக்கப்படுதல், விவசாய உற்பத்திகள் குறைவடைதல் போன்றவை ஏற்படலாம் என்று நம்புகின்றனர். இதனால் தடைகள் இல்லாமல் சடங்குகளைச் செய்யலாயினர். அந்தவகையில் இக்கிராம மக்களின் இறைநம்பிக்கை காணப்படுகின்றது. இறைவனையே தம் வாழ்வின் முன்னோடி எனக்கருதி வழிபடலாயினர். எனவே இம்மக்களது சடங்குகள் நம்பிக்கையை அடித்தளமாக கொண்டே நடைபெறுகின்றது. வதனமார் வழிபாட்டு முறைகளினை மையப்படுத்திய வகையில் பல்வேறு நம்பிக்கைகள் காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றமை குறிப்பிடத்தக்கது.

வதனமார் வழிபாடும் கலையம்சங்களும்

பாரம்பரிய வழிபாட்டு முறைகள் மக்களின் வாழ்வியல் கூறுகளுடன் நெருங்கிய தொடர்புடையவை. அந்தவகையில் கிராமிய வழிபாட்டில் கலைகளின் செல்வாக்கை குறைத்து மதிப்பிட முடியாத அளவிற்கு அதன் தன்மை காணப்படுகின்றது. வதனமார் வழிபாட்டில் பல்வேறு கலையம்சங்களைக் கண்டுகொள்ள முடிகின்றது. அவ்வடிப்படையில் தெய்வமாடுதல், இசைக்கருவிகளின் பாவனை மற்றும் குரவையிடுதல் மற்றும் இதர அம்சங்களை அவதானிக்க முடிகின்றது.

தெய்வமாடுதல்

சங்கத் தமிழ்ப் பாடல்களிலும், அகம் புறமாகிய இருதிணைத் துறைகளிலும் கட்டுவிச்சி, வேலன் வெறியாட்டு எனும் இரு சங்கதிகள் சொல்லப்படுகின்றன. இவ்வாறு பண்டைக்காலமிருந்து தமிழரின் வாழ்க்கையுடன் கலந்துகொண்ட இத்தகைய நம்பிக்கைகள் இன்றும் வேறு வடிவில் நாட்டுப்புற மக்களின் வாழ்க்கையின் நம்பிக்கையாக வளர்ந்து வருகின்றன. இயற்கைச் சமய வழிபாட்டு முறையின் அடிப்படையாக வழிபாட்டை நடாத்தும் சமூகத்தைச் சேர்ந்த சிலர் தெய்வ இயல்பு பெற்று இவ் ஆடல் இடம்பெற்றிருக்கின்றது. இதனை கிராமியச் சடங்குகளில் அவதானிக்க முடியும் இவ் ஆடலை தெய்வமேறிய நடனம், உருவாடல், அனுபூதியாட்டம், உட்புகுந்த நடனம் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது (ஜெயராசா, 2000:68).

இவ்வாடலானது தெய்வீகப்பாங்கும், கலைப்பாங்கும் கலந்த நடனமாகவே அமைகின்றது. இத்தகைய கலையாடலானது வதனமார் சடங்கில் தொன்று தொட்டு இடம்பெற்று வந்துள்ளது.

இவ் வழிபாட்டில் பறை இசைப்பவர்கள் பறையினை இசைக்க, சொர்ணாளி வாசிப்பவர் அதனை வாசிக்க இவ் இசைகளுக்கு மத்தியில் பாடல்களைப் பாடுபவர்கள் வதனமார் காவியம், வதனமார் அகவல் போன்ற பாடல்களை பக்தியுடன் பாட உருவேறியாடுதல் இடம்பெறும். பறை இசைப்பவர், பறையினை பல்வேறு தாளக்கட்டுக்களில் இசைக்க, அவ் இசைக்கேற்ப சுவாதியம்மன் ஆடுவது தெய்வீகத்தன்மையுடன் இணைந்த கலை வடிவத்தை வெளிப்படுத்துவதனைக் காணலாம்.

இசை

வதனமார் வழிபாட்டில் இசை முக்கியத்துவமுடையதாகக் காணப்படுகின்றது. அதாவது இரண்டுவிதங்களில் இதனை அவதானிக்கலாம். ஒன்று வழிபாட்டில் பாடப்படும் பாடல்கள், மற்றையது வழிபாட்டில் இசைக்கருவிகள் மூலமாக தோற்றுவிக்கப்படுவது ஆகும். அந்த வகையில் வழிபாட்டில் பாடப்படும் பாடல்கள் என்று நோக்கும் போது வதனமார் யானைகட்டு அகவல், வதனமார் ஊர்சுற்றுக் காவியம், வதனமார் குழுமாடுகட்டு அகவல், வதனமார் குழுமாடுகட்டுக் காவியம், வதனமார் தேன்வெட்டுக் காவியம் மற்றும் வாழிப்பாடல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இத்தகைய பாடல்களைப் பாடுவோர் ஓர் பொதுவான கிராமியப் பாங்கில் பாடுவது குறிப்பிடத்தக்கது. வெறுமனே பாடல்களைப் பாடுவது மாத்திரமின்றி பக்திச் செழுமையினையும் இசைநயத்தையும் காணக் கூடியவையாக இருப்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். தெய்வங்கள் ஆடும்போது அதாவது வதனமார் ஆடும்போது ஓர் பொதுவான தன்மையில் பறை இசைக்கப்படுவதும் சுவாதியம்மன் உருக்கொண்டு ஆடும்போது வெவ்வேறு விதமான தாளக்கட்டுக்களில் பறை இசைக்கப்படுகின்றமையும் அவற்றிற்கேற்ப அத்தெய்வம் வெவ்வேறு விதங்களில் ஆடுவது ஓர் பிரம்மிப்பை ஏற்படுத்தும் வகையில் அமைவது குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் பூசகரின் வீட்டிலிருந்து பெட்டகம் எடுத்துச் செல்லல், விளக்கு நீரெடுக்க (கடல்நீர்) கடலுக்குச் செல்லல், நெல்லுக் குற்றுதல், கன்னிக்கால் மற்றும் இராசகால் வெட்டுதல், இளந்தாரிமார்கள் குழுமாடு பிடிக்கச் செல்லல், சிலைகுழல் நீராட்டல் போன்றவற்றில் மேற்குறித்த இசைக்கருவிகள் இசைக்கப்படுவதோடு நோற்பு வாடிக்கு (கதிரவெளி பத்தினியம்மன் ஆலயத்தில் அமைக்கப்படும் கூடாரம்) போடிமார்கள் வருதல், இளந்தாரிமார்கள் வருதல் போன்ற செய்திகளை வெளிப்படுத்தும் வகையிலும் இவ்விசைக்கருவிகள் இசைக்கப்படுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

குரவையிடல்

ஆலய விழாக்களிலும் மற்றும் மங்கள நிகழ்ச்சிகளிலும் குரவை இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. பெண்கள் தமது நாவினை வாயுள் சுருட்டி வளைத்து மேல் அண்ணத்துடன் நுனி நாவை வைத்து எழுப்பப்படும் ஒலி குரவையாகும். குரவை தொடர்பாக சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவை, குரவைக் கூத்து என்று சொல்லப்படுகிறது. முருகன், வள்ளி திருமணச் சடங்கு, ஓர் வைபவ விழாவாக ஆலயங்களில் நடைபெறுவதுண்டு. அப்போது குரவை முக்கியமாக இடம்பெறும். ஆதலால் அதனை குரவைத் திருவிழா என அழைப்பதும்

குறிப்பிடத்தக்கது. வதனமார் வழிபாட்டுச் சடங்கின்போது சில குறிப்பிடத்தக்க நிகழ்வுகளில் குரவையிடுதலை அவதானிக்க முடியும். குறிப்பாக கதிரவெளி வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து நோற்பு நடைபெறும் இடத்திற்கு பச்சைப்பெட்டி எடுத்து வரும்போது குரவையிடுவது குறிப்பிடத்தக்கது.

வதனமார் வழிபாட்டிற்கும் சமூகத்துக்கும் இடையிலான தொடர்பு

வதனமார் சடங்கிற்கும் சமூகத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு இருப்பதனைக் காணக்கூடியதாகவுள்ளது. இப்பிரதேச மக்களிடையே இச் சடங்குமுறை சில நம்பிக்கைகளையும், கட்டுப்பாடுகளையும், பண்பாட்டு விழுமியங்களையும் தோற்றுவித்துள்ளது. இப்பிரதேச மக்களது வாழ்க்கைச் சடங்குகள் மிகத்தொன்மையானது என்பதுடன் மிகப்பழமையான வழிபாட்டு மரபுகளை இன்றுவரை பேணிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான வழிபாட்டுச் சடங்காகவே வதனமார் சடங்கு அமைகின்றது.

அதேபோன்று நம்பிக்கை மற்றும் பிடிவாதம் போன்ற ஆணிவேரிலிருந்தே ஒவ்வொரு புராதன வழிபாட்டு முறையும் தளிர் விடுகின்றன. இப்பிரதேச மக்களைப் பொறுத்தவரையிலும் அவர்களது நம்பிக்கைகள் யாவும் இவ்வழிபாட்டில் இடைவிடாது தொடருகின்றன. இச்சடங்கு நடைபெறும் காலங்களில் இப்பகுதி மக்கள் தங்களின் வீடுகள் போன்றவற்றைச் சுத்தமாக வைத்திருப்பர் அத்தோடு இக்காலத்தில் வீடுகளில் வைரவர் மடை, பேச்சியம்மன், ஏனைய அம்மன் கலைகள் (மாரி, காளி, கன்னிமார்) போன்றவற்றுக்குரிய மடை மற்றும் பள்ளையம் போன்றவற்றைச் செய்விக்கமாட்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அதுமாத்திரமின்றி இப்பகுதி மக்களின் பிரதான தொழில்களாக விவசாயமும் (நெல் வேளாண்மை, கால்நடை வளர்ப்பு) மீன்பிடித்தொழிலும் காணப்படுகின்றது. இதில் அனேகமானோர் விவசாயத்தையே நம்பியுள்ளனர். அவற்றிலும் எருமை மாடுகளையும், பசுக்களையும் அதிகமானோர் வளர்த்து வருகின்றனர். இவ்வாறு மாடு வளர்ப்போர் தங்களின் கால்நடைகளுக்கு எவ்வித நோய்வராமலும் அவை காணாமல் போனால் அவை மீண்டும் கிடைக்கவும் காட்டு விலங்குகளிடமிருந்து கால்நடைகளைப் பாதுகாக்கவும் இவை காட்டுப்பகுதிகளில் மேயவிடப்படுவதனால் அவற்றைப் பராமரிப்போர் காட்டுவழிப் பிரயாணம் செல்லும்போது காட்டு விலங்குகளிருந்து தங்களைக் காக்கவும் கால்நடைகளின் மேய்ச்சலுக்குத் தேவையான புல்வளர்ச்சிக்குரிய மழைவளத்தை வேண்டியும் நெற்செய்கை நிலங்கள் பெருவிளைச்சலைத் தரவும் இவையாவற்றுக்கும் மேலாக இப்பகுதி மக்கள் நோய்நொடியின்றி, உணவுற்பத்தி நிறைந்து செழிப்புடன் வாழ வேண்டியும் நேர்த்திகளையும் வேண்டுதல்களையும் செய்வதன் மூலம் சமூகத்துக்கும் வதனமார் வழிபாட்டிற்கும் மிக நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது.

வதனமார் சடங்கின்போது நிகழும் ஒவ்வொரு நிகழ்விலும் மக்கள் ஈடுபடுவதன் மூலம் சடங்கிற்கும் சமூகத்துக்கும் இடையிலான இடையூடாட்டம் மேலோங்குவதனைக் காணலாம். இளந்தாரிமார் மாடு பிடிக்கச் செல்வதிலிருந்து பச்சைப்பெட்டி எடுத்தல், கள்ளமடை வைத்தல், மாடுபிடித்துக் கட்டுதல், சிலைகுழல் நீராட்டல் போன்ற பிரதானமான நிகழ்வுகளில் சமூகத்தவரின் பங்குபற்றல் மிக நெருக்கமாக இருப்பதனைக் காணலாம்.

முடிவுரை

உள்ளூர் கால்நடைகள் பாதுகாக்கப்பட வேண்டியும் அதனூடாக உற்பத்திகள் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியமாகக் கருதப்படுகின்ற இக்காலத்தில் கால்நடைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்யப்படுகின்ற சடங்குகள், வழிபாடுகள் முன்மாதிரியானவையாகும். இப்பிரதேச மக்களது வழிபாட்டுச் சடங்குகள் மிகத்தொன்மையானது. வதனமார் வழிபாடானது ஆய்வுப் பிரதேச மக்களைப் பொறுத்த மட்டில் வெறுமனே சமயம் சார்ந்த வழிபாடாக அமையாது பிரதேச மக்களின் சமூக, பொருளாதார வாழ்வியலைப் பறைசாற்றும் ஒன்றாகக் காணப்படுகின்றது. குளக்கோட்ட மன்னன் மற்றும் குளக்கோட்டன் கல்வெட்டு தொடர்பான மரபின் நீட்சி, இச்சடங்கின் நிலைத்திருப்பில் செல்வாக்குச் செலுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. நிகழ்த்துவோர், நிகழ்த்துவிப்போர், தொழும்பாளர்கள் என்கின்ற ஓர் சமூகக் கட்டமைப்பின் ஊடாக வழிபாடு நடைபெறுகின்றது. சில சமூகப் பகுதியினர் முன்னிலைப்படுத்தப்படுகின்ற அதேவேளை ஏனைய மக்கள் மிக காத்திரமாக இணைந்து செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. சமய அடிப்படையில் நம்பிக்கை, பழக்கவழக்கங்கள், நெறிமுறைகள் மற்றும் கலைகள் போன்றவற்றினையும் வெளிப்படுத்துகின்றது. மக்களின் வாழ்க்கை முறைக்கும் வதனமார் வழிபாட்டுக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. கதிரவெளியில் வாழ்கின்ற சமூகத்தின் பல்வேறு பகுதியினரும் வழிபாட்டில் தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றமை வழிபாட்டினுடைய சமூக முக்கியத்துவத்தையும், தேவையையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றது எனலாம். எனவே வதனமார் வழிபாட்டு முறைகளானது சமூக வாழ்வியல் அம்சங்களினைப் பிரதிபலிக்கின்றமையினாலேயே இன்றும் காலவெள்ளத்தால் அள்ளுண்டு போகாமல், நாகரிக மோகத்தால் அழிவுறாது நிலைத்திருப்பதற்கு காரணமென்பது மனமேற்கத்தக்கது.

உசாத்துணை

1. கனகரத்தினம், இரா.வை., (1996), வதனமார் வழிபாடு, இளங்கதிர், தமிழ்ச் சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை.
2. கணபதிப்பிள்ளை. சி., (பதிப்பாசிரியர்), (1971), ‘‘மகாமாரித் தேவி திவ்ய கரணி’’, விவேகானந்த அச்சகம், யாழ்ப்பாணம்.
3. குணபாலசிங்கம், வ., (2021), இலங்கையில் சிறுதெய்வ வழிபாடு: இந்து பௌத்த சமயமரபுகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பியல் நோக்கு, சர்வதேச தமிழ் ஆய்விதழ் - தொகுதி-3, வெளியீடு - 4, பக். 99 - 107
4. குணபாலசிங்கம், வ., (2022), மட்டக்களப்பு தேசத்து வழிபாட்டு மரபுகளில் பத்ததிகள்: கன்னன்குடா கண்ணகையம்மன் பத்ததியை அடிப்படையாகக் கொண்ட சிறப்பாய்வு, முதலாவது உலக இந்து மாநாடு, இந்துக்கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, ப.16
5. குணபாலசிங்கம், வ., ‘‘மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆகமம் சார்ந்த ஆகமம் சாராத சக்தி வழிபாடு - ஓர் ஒப்பீட்டாய்வு’’, (2008), முதுதத்துவமாணிப்பட்ட ஆய்வேடு, பட்டப்படிப்புக்கள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
6. குணபாலசிங்கம், வ., ‘‘இலங்கையில் முருக வழிபாடு - கிழக்கிலங்கையில் முருக வழிபாட்டு முறைமைகள் பற்றிய சிறப்பாய்வு’’, (2015), கலாநிதிப்பட்ட ஆய்வேடு பட்டப்படிப்புக்கள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
7. சிவரெத்தினம், சு., 2008, சடங்கினூடாக மட்டக்களப்பு, விபுலம் பதிப்பகம், மட்டக்களப்பு
8. செல்வராசகோபால், க.தா., நடேசானந்தம், மு., (2000), **“வதனமார் வழிபாடு ஒரு மதிப்பீடு”**, கனடிய ஜீவா பதிப்பகத்தின் நிழல் வெளியீடு, கனடா.
9. பக்தவத்சலபாரதி., 2014, **“இலக்கிய மானிடவியல்”**, அடையாளம் வெளியீடு, இந்தியா.
10. பாலசுப்பிரமணியன். சி., 1990, **“வாழ்வியல்நெறிகள்”**, நறுமலர்ப் பதிப்பகம், சென்னை.
11. மகேஸ்வரலிங்கம், க., 1996, **“மட்டக்களப்பு சிறுதெய்வ வழிபாடு ஓர் அறிமுகம்”**, தில்லை வெளியீடு, மகிழடித்தீவு, மட்டக்களப்பு.
12. மனோகரன், மு., 2018, **“கிராமிய வழிபாடு”**, லங்கா புத்தகசாலை, கொழும்பு.
13. மௌனகுரு. சி.,(பதிப்பாசிரியர்) (2003), ‘‘மட்டக்களப்பு தமிழகத்தில் இந்துப்பண்பாடு’’, இரண்டாம் உலக இந்துமாநாடு - மட்டக்களப்பு பிரதேசக் கிளை, மட்டக்களப்பு.

14. வெல்லவூர்க் கோபால்., (2005), **"மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம்"**, மனுவேதா வெளியீடு, மட்டக்களப்பு.
15. ஜெயராசா, சபா., 2000, **"ஈழத்தமிழர் கிராமிய நடனங்கள்"**, போஸ்கோ பதிப்பகம், நல்லூர்.

நேர்காணலின் போது தகவல் வழங்கியோர் விபரம்

பெயர், வயது, தொழில், விலாசம், சந்தித்த தினம் எனும் ஒழுங்கில் காணப்படுகின்றது.

1. சிவலிங்கம், செ., வயது - 89, விவசாயி, புச்சாக்கேணி, காலம்: 2022.03.19
2. சுந்தரலிங்கம். ச., வயது - 59, விவசாயி (இளந்தாரிக்குச் செல்பவர்), புச்சாக்கேணி, காலம்: 2022.06.03
3. தர்மரெத்தினம், சு., வயது - 68, விவசாயி (முன்னாள் போடி), கதிரவெளி, காலம்: 2022.03.24
4. தேவராசா., வை, வயது - 70, பூசகர் (கதிரவெளி பத்தினி அம்மன் கோயில் மற்றும் வதனமார் சடங்கு நிகழ்த்துபவர்), கதிரவெளி, காலம்: 2022.03.15
5. பரசுராமன். க., வயது - 80, விவசாயி, புச்சாக்கேணி, காலம்: 2022.04.12

கதிரவெளிப் பெரியசுவாமி கோயில் வழிபாட்டு மரபுகளும், மாற்றங்களும்

அ.தனோஜன்
இந்துநாகரிகத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
thanujanthano@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

நீண்ட கால வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட இந்து சமய வளர்ச்சியில் சடங்குகள் காத்திரமான பங்கு வகிக்கின்றது. இத்தகைய சடங்குகளுள் உள்ளூர்ச் சமூகங்களின் கடவுள் நம்பிக்கைகளுடன் சம்மந்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் சடங்குகள் இன்றைய காலத்தில் பல்வேறு வகைகளில் முக்கியம் பெற்றவையாக விளங்கி வருகின்றன. அந்த வகையில் **கதிரவெளிப் பெரியசுவாமி கோயில் வழிபாட்டு மரபுகளும், மாற்றங்களும்** என்னும் இவ்வாய்வானது காலங்காலமாக இடம் பெற்று வந்த வழிபாட்டு சடங்குகள் பற்றியும் அவை தொடர்பான மாற்றங்கள் பற்றியும் வெளிப்படுத்துவதாக அமைகிறது. இவ்வாய்வில் பெரியசுவாமியின் தோற்றம் பற்றிய மரபுவழிக் கதைகள், சடங்கினுடைய தோற்றம் அதன் கலைக்கூறுகள் இதனை முன்னின்று நடாத்தும் சமூகங்கள் அவர்களது சமய கலாசார பண்பாட்டம்சங்கள், கோயில் வளர்ச்சி படி நிலைகள், மக்களின் வாழ்வியல் அம்சங்கள், மரபுவழி மாற்றங்கள் என்பன சிறப்பிடம் பெறுகின்றன. இவையனைத்தும் வெளிக்கொண்டுவரப்படாமையினால் இவற்றினை வெளிக்கொண்டு வருவதே எனது ஆய்வு பிரச்சினையாக கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்குரிய மூலங்களாக கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் கள ஆய்வு, பங்குபற்றுதல், அவதானம் மற்றும் நேர்காணல் போன்றவற்றின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாய்வு பெரியசுவாமி வழிபாட்டை மையப்படுத்தியதாக அமைந்தாலும் சடங்கு தொடர்பான பூரண விளக்கங்கள், விதிமுறைகள், பயன்கள் தொடர்பாகவும் விளக்கமளிக்கின்றன. மேலும் நூலாசிரியர், காலச்சூழல், நூலின் கட்டமைப்பு என்பவற்றுடன் சமுதாய மக்களின் பண்பாட்டு ரீதியான சடங்குகள், பழக்கவழக்கங்கள், வழிபாட்டு முறைகள், கிராம அமைப்பு, மற்றும் சாதி முறைமை, சடங்கின் தற்கால போக்குகள் என்பன இவ்வாய்வை வலுப்படுத்துகின்றன. இவ்வாய்வில் கூறப்பட்டுள்ள கருத்தியல்களின் மூலமாக இன்றைய சமூதாயத் தேவைகள், எதிர்பார்ப்புக்கள் என்பவற்றிற்கேற்ப செயற்பட வேண்டிய முறைகளை இந்து சமய சடங்குகளின் ஊடாக இவ்வாய்வு எடுத்துக் கூறுகின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்நூல் தொடர்பாக இந்து மக்கள் அறிந்து கொள்வதற்கு சமய சீர்திருத்தச் செயற்பாடுகள் அவசியமாகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

திறவுச் சொற்கள் : கதிரவெளி, பெரியசுவாமி வழிபாடு, பூர்வீக குடிகள், போடிமார், பெட்டகம்

வழிபாட்டின் மரபும் மாற்றமும்

அறிமுகம்

கிழக்கிலங்கை மக்களின் சமய வாழ்வில் சடங்குகள் மிகவும் பிரசித்தம் வாய்ந்தவையாக இன்றும் நடைபெற்று வருகின்றன. இப்பிரசித்தத்திற்குப் பல்வேறு விடயங்கள் காரணிகளாக அமைகின்றன. அவற்றுள் மனிதர்கள் இந்த பூமியில் மனஅழுத்தங்கள் நீங்கி, மனமகிழ்ச்சியுடனும், நோய் நொடிகளின்றி ஆரோக்கியத்துடனும் ஒன்றுகூடி வாழ்தலுக்கான பக்திமயமான கொண்டாட்டமாகச் சடங்குகள் விளங்கி வருவது முக்கியமானதாக அவதானிக்கப்படுகின்றது.

சடங்குகளே இவர்களின் பாரம் பரிய சமய வழிபாட்டின் எச்சங்களாகத் தொடர்கின்றன. வாழ்வியல் தேவைகளை குறிப்பாக பொருளாதார தேவையைப் பூர்த்தி செய்வதற்கு இயற்கையில் தங்கி வாழும் கிழக்கிலங்கை மக்கள் தங்களின் தேவைகள் பலவற்றையும் பூர்த்தி செய்த தெய்வங்களுக்கு ஆண்டுக்கொரு தடவை சடங்கு செய்தல் கிழக்கிலங்கையில் இன்று வரை தொடர்கிறது.

இச் சடங்குகளில் மரபும் நம்பிக்கையும் பிரிக்க முடியாதவாறு ஒன்றுடன் ஒன்று இணைந்து விளங்குகின்றன. மரபு நம்பிக்கையின் அடியாகவே தோற்றம் பெறுகின்றது. தொடக்க காலத்திலிருந்தே ஒவ்வொருவரும் தாம் செய்யும் செயல்கள் முழுமையடையவும் தமது வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருப்பதற்காகவும் சில நம்பிக்கைகளின் வெளிப்பாடாக மரபு வழிப்பட்ட சடங்குகளையும் நடைமுறைகளையும் மேற்கொண்டு வந்தனர். இவ்வாறு காலம் காலமாக நம்பிக்கையின் அடியாக மக்கள் செய்துவந்த இன்றும் செய்து வருகின்ற சில நடை

முறைகளை மரபு என்பர். இம்மரபுகள் என்றும் மக்களிடையே ஏற்றுக்கொள்ளப்பட்டும் பேணப்பட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றன. இம்மரபுகளுள் சில காலத் தேவைக்கேற்பவும் மக்களின் வாழ்க்கையின் முக்கியத்துவத்துக்கேற்பவும் நிலைபெற்றும் சில வழக்கொழிந்தும் மாற்றங்களுக்கு உட்பட்டுப்போயுள்ளன (சுகந்தி, 1962:67).

இவ்வாறு மரபுகள் வழக்கொழிந்து மாற்றங்களுக்கு உட்பட்ட கோயில்களில் ஒன்றாக கதிரவெளிப் பெரியசுவாமி கோயில் அமைகின்றது. ஆரம்ப காலங்களில் சடங்கு முறைகளாக வழிபடப்பட்டு வந்த முறை மாற்றப்பட்டு தற்போது திருவிழாக்கோலமாக பூசைகள் இடம் பெற்று வருகின்றது. இதன் மாற்றத்திற்கு பின்னால் ஓர் வரலாற்று பின்புலம் அமைகின்றது. அவற்றின் பின்னணியை அறிந்தால் தான் மரபுகளினால் ஏற்பட்ட மாற்றம் பற்றி அறிந்து கொள்ள முடியும்.

ஆய்வு முறையியல்

இவ்வாய்வின் முறையியலை பொறுத்து வரலாற்று ஆய்வு, விபரண ஆய்வு, பகுப்பாய்வு போன்ற ஆய்வு முறையியல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதாவது பெரியசுவாமி பற்றிய ஐதீக கதைகள் தொடர்பாக அறிவதற்கு வரலாற்று ஆய்வு முறையினையும் பெரியசுவாமி கோயிலில் இடம் பெறும் சடங்கு சம்மந்தமாகவும் அவற்றின் விரிவாக்கம் தொடர்பாக ஆராய்வதற்கு விபரண ஆய்வு முறையியலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு பெரியசுவாமி வழிபாட்டின் ஊடாக வெளிப்படும் விடயங்களை பல கோணத்தில் வெளிப்படுத்த பகுப்பாய்வு முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மரபின் மாற்றம் பற்றிய நோக்கு

மட்டக்களப்பு தமிழகத்தின் முக்கிய பகுதியாக விளங்குகின்ற வாகரைப் பிரதேசம் நீர்வளம், நிலவளம், வனவளம் என நெய்தல் மருதம் முல்லைப் பண்போடு கூடியதான மக்களை கொண்டிலங்கும் வளம் நிறைந்த வாழ்விடமாகும். இதன் பண்டைய கிராமங்களாகக் கொள்ளப்படும் பனிச்சங்கேணி, கதிரவெளி, வெருகல் என்பவை சுமார் 1600 ஆண்டுகளுக்கு முற்பட்ட மட்டக்களப்பின் வரலாற்றோடு இணைக்கத்தக்கவை. இவற்றுள் பூர்வீக தன்மை கொண்டதாகவும், தனித்துவமானதோர் வரலாற்று பின்னனியை கொண்ட ஓர் இடமாக கதிரவெளி கிராமம் அமைந்திருக்கின்றது.

இக் கிராமத்தை பொறுத்த வரையில் பாரம்பரிய முறையிலான பல சடங்குகள் இடம் பெற்று வருகின்றன. அவற்றுள் வீரபத்திரர், வைரவர், நாகதம்பிரான், பெரியசுவாமி, வதனமார், கண்ணகியம்மன், பத்தினியம்மன் போன்ற சடங்குகள் இடம் பெற்று வருகின்றது. இவற்றிலே ஐதீகங்கள், நம்பிக்கைகள் என்பவற்றின் அடித்தளத்தில் இருந்து உருவாக்கப்பட்ட சடங்கு முறைகளில் பெரியசுவாமி வழிபாட்டு சடங்கு முறைமையானது பிரசித்தமும், பூர்வீகத் தன்மையும் கொண்டமைந்த ஓர் சடங்கு முறையாக இடம்பெற்று வருகின்றது. இச் சடங்கு ஆகமம் சாரா வழிபாட்டு முறைகளில் உயிரோட்டமுடைய சடங்காக வழிபடப்பட்டு வருகின்றது.

இச் சடங்கானது கதிரவெளி கிராமத்தில், மகாவலி கங்கையும் கடலும் சங்கமிக்கும் முகத்துவாரமாக அமையப்பெற்றுள்ள புனித சோலை என்று அழைக்கப்படும் இடத்தில் பெரிய சுவாமிக்கான சடங்கு சிறப்பான முறையில் போடிமார்களினாலும் கப்புவன்மார்களினாலும்

வருடத்திற்கு ஒரு முறை நடத்தப்பட்டு வந்தது. அதற்கு பிற்பட்ட காலங்களில் இச் சடங்கு இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெற்று வந்தது. அதாவது போடிமார்களின் தலைமையில் பெரியசுவாமி சடங்கும் வதனமார் சடங்கும் நடை பெற்று வந்ததினால் இவ்விரண்டு சடங்குகளையும் ஒரே வருடத்தில் செய்வதற்குரிய வசதி வாய்ப்புக்கள் போடிமார்களிடம் காணப்படாததன் காரணத்தினால் வதனமார் சடங்கு ஒரு வருடத்திலும் பெரியசுவாமிக்கான சடங்கு ஒரு வருடத்திலுமாக இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை இச் சடங்குகள் நடாத்தப்பட்டு வந்தன.

இவ்வாறு நடைபெற்று வரும் சடங்குகளில் கப்புவர்களே இச் சடங்கிற்கான பூசை முறைகளை செய்து வருவார்கள். இப் பூர்வீக குடிகளான கப்புவன்மார்கள் எங்கு குடியிருக்கின்றார்களோ அங்கே பூசைக்குரிய பொருட்கள் அடங்கிய பெட்டகமும் இருக்கும். இப் பெட்டகத்தை அடிப்படையாக கொண்டே பிற்பட்ட காலங்களில் பெரியசுவாமிக்கான கோயில் அமைப்பு வளர்ச்சியடைந்துள்ளது. அந்த வகையில் இப் பெட்டகத்தின் வளர்ச்சி நிலையினை நோக்குவோமானால்.

- தரையில்
- பந்தல்
- கிடுகுகளினால் பின்னப்பட்ட கூடாரம்
- தென்னை ஓலைகளினால் வேய்ந்த கூடாரம்
- கற்களினால் கட்டப்பட்ட மடாலயம்
- ஆலயம்

இப் படி நிலைகளின் அடிப்படையிலே இவ் ஆலயம் வளர்ச்சியடைந்து வந்தது. அதாவது பூர்வீக குடிகள் வேடர்முனையில் வாழ்ந்த காலத்தில் பெரியசுவாமிக்கான பெட்டகத்தினை பூர்வீக குடிகளான கப்புவன்மார்களே பாதுகாத்து வந்தனர். இவர்கள் ஆரம்ப காலத்தில் பெட்டகத்தினை தரைகளிலே வைத்து வழிபட்டு வந்தனர். இவ்வாறு வழிபட்டப்பட்டு வந்த காலங்களில் வேடர்முனையில் ஏற்பட்ட பாரிய நோய் காரணமாக கப்புவன்மார்கள் வேடர்முனையில் இருந்து மடுஅடிக்கு(நாகபுரம்) இடம் பெயர தொடங்கினார்கள். அவ்வாறு மடுஅடியில் வசித்து வந்த காலத்தில் பெரிய சுவாமிக்குரிய பெட்டகத்தினை கிடுகுகளினால் பின்னப்பட்ட கூடாரத்துக்குள் வைத்தே வழிபட்டு வந்தனர். இவ்வாறாக தங்களுடைய வழிபாட்டையும் வாழ்கையேயும் நடத்தி வந்த பூர்வீக குடிகள் மெல்ல மெல்ல தங்களுடைய வேடுவ தொழிலோடு சேனை பயிர் செய்வதற்கு தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். இதனால் சேனைப் பயிருக்கு ஏற்ற ஓர் இடமான கடற்கரை ஓரத்தினை தெரிவு செய்து இடம்பெயர தொடங்கினார்கள்.

இவ்வாறு இவர்கள் சேனைப்பயிர் செய்வதற்காக குடிபெயர்ந்த இடம் தான் பால்சேனை கிராமம். இக் கிராமம் கலை, கலாசார, பண்பாட்டுப் பின்னணிகளையும் சமய வழிபாட்டு நடைமுறைகள் மற்றும் சடங்குகள், நம்பிக்கைகள், உணவு முறைகள், பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறைகள் முதலியவற்றை தன்னகத்தே கொண்டு விளங்கும் ஓர் கிராமமாகும்.

இக் கிராமத்தின் தோற்றம் தொடர்பாக இரண்டு விதமான கருத்துக்கள் கூறப்படுகின்றன. அதாவது சேனைப்பயிர் செய்கைக்காக கடற்கரையோரமாக குடியேறிய பூர்வீக குடிகள் சேனைப்பயிர் செய்வதற்கான நீர் இல்லாததினால் நிலத்தை தோண்டுவதற்கு தீர்மானித்தார்கள். இத் தீர்மானத்திற்கு இணங்க நிலம் தோண்டப்பட்டது. தோண்டப்பட்ட நிலங்களெல்லாம் பார்கள் அதீகமாக வந்ததினாலும் இக் கிராமத்தில் பரந்துபட்ட முறையில் சேனைப்பயிர்ச் செய்கை இடம் பெற்றதினாலும் இக் கிராமத்தினை பார்சேனை என்று அழைத்ததாகவும் பிற்பட்ட காலங்களில் இப் பெயர் திரிபடைந்து பால்சேனை என்று அழைத்ததாகவும் கூறப்படுகிறது. (நேர்காணல் :- டெயக்குமார்,கா., வயது -46, போடி, கதிரவெளி.)

இதே போன்று இக் கிராமத்தின் பெயர் பற்றி இன்னுமொரு விடயம் கூறப்படுகிறது. அதாவது சேனைப்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் பொழுது பயிர்கள் நடல், அறுவடை செய்தல் போன்றவற்றுக்கிடையில் வேறு தொழில்களிலும் நாட்டம் கொண்டனர். அவ் வேளையில் தான் இவர்கள் மாடுகளை வளர்ப்பதற்கு ஆயத்தமானார்கள். இதனால் தமது வருமானத்தினை மேம்படுத்தவும் தமது உணவுத் தேவைக்காகவும் பால், தயிர் போன்றவற்றையும் பயன்படுத்தினர். அதன் பின்பு சேனைப்பயிர்ச் செய்கையுடன் மாடு வளர்ப்பையும் மேற்கொண்டு வந்ததினால் பொருளாதாரத்தில் சிறந்த வருமானத்தை பெற்றுக்கொள்ள முடிந்தது. இதனால் சேனைப்பயிர் செய்கையினையும் மாடு வளர்ப்பினால் பால் உற்பத்தி செய்யப்பட்டமையாலும் இவ்விரு தொழில்களையும் முன்னுரிமைப்படுத்தி இக்கிராமத்திற்கு பால்சேனை என்னும் இவ்வழகிய பெயரை வைத்ததாகக் கூறப்படுகின்றது. எனினும் இன்றளவும் இக் கிராமத்திற்கு பால்சேனை என்ற பெயரே இருந்து வருகின்றது (தயாழினி, 2011:15-16).

இக் கிராமமானது இரண்டு விதமான பெயர்களால் அழைக்கப்பட்டு இருந்தாலும் பொதுவாக கடற்கரை சார்ந்த நிலங்களை குறிப்பிட்ட அளவு தோண்டும் போது பார்க்கற்கள் வெளிப்படுவது குறிப்பிடத்தக்க ஒன்று. இதனால் தான் பார்சேனை என்று நிலவி பால்சேனை என்று திரிபுற்றிருக்கலாம் என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது. அதே போன்று பால் உற்பத்தி நடைபெற்று வந்ததினால் பால்சேனை என்னும் பெயர் வந்தது எனும் கருத்தை நோக்கும் போது இப் பகுதியில் பால் உற்பத்தி ஆரம்ப காலத்தில் நடைமுறையில் இருந்ததா?, இக் கிராமம் பால் உற்பத்தி சார்ந்த இடமாக இவர்கள் குறிப்பிடும் காரண பெயரும் எவ்வகையில் சாத்தியமானது என்பது ஆய்வுக்குரியது.

இவ்வாறு தங்களுடைய வாழ்கையையும், தொழில்களையும் நடத்தி வந்த பூர்வீக குடிகள் தங்களுடைய குல தெய்வமான பெரியசுவாமிக்குரிய பெட்டகத்தினை பாதுகாப்பாக வைப்பதற்குரிய இடத்தினை தேர்ந்தெடுக்க போடிமார்களை அழைத்தார்கள். இதற்கமைய பெரியசுவாமி கடல் மார்க்கமாக வந்ததினால் கடலை அண்டியதாக ஒரு பனிச்ச மரத்தடிக்கு கீழே போடிமார்களினால் பெட்டகத்திற்கான கூடாரம் அமைக்கப்பட்டது. இக் கூடாரம் தென்னை ஓலைகளினால் வேய்ந்து அதற்குள்ளேயை பெட்டகத்தினை வைத்து ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் பூசை செய்து வந்தார்கள். இதன் பிறகு சடங்கு நடை பெறும் நாட்களில் பெட்டகத்தினை மேள தாளங்களுடன் வண்டில்கள் மூலம் சடங்கு நடை பெறும் கதிரவெளி புனிதசோலை முகத்துவாரத்திற்கு எடுத்துச் செல்வார்கள். சடங்குகள் முடிந்த பிற்பாடு

பெட்டகத்தினை மீண்டும் பெட்டகம் இருந்த இடத்திற்கு எடுத்து செல்வார்கள். இவ்வாறு ஒவ்வொரு வருடமும் இவ் முறை இடம் பெற்று வந்தது.

காலப்போக்கில் பெட்டகம் இருந்த கூடாரம் இயற்கையின் சீற்றத்தினால் ஓலைகளெல்லாம் பாதிப்படைந்தது. இதனை கருத்தில் கொண்ட கதிரவெளிப் போடிமார்கள் பெரியசுவாமி சடங்குகளின் போது நேர்த்திக்காக கொடுக்கப்படும் கால்நடைகளை ஏலத்தில் விற்று அப் பணத்தினைக் கொண்டு அவ்விடத்திலே கற்களினால் மடாலயம் ஒன்று அமைத்து அதில் பெட்டகத்தினை வைத்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வெற்றிலை, பாக்கு வைத்து கப்புவரினால் வழிபடப்பட்டு வந்தது. இவ் முறை தொடர்ந்து செயற்படுத்துவதற்காக போடிமார்களினால் திருப்பணி மன்றம் உருவாக்கப்பட்டது. இவ் மன்றம் தொடர்ந்து இயங்கி வரும் காலங்களில் இப் பெட்டகத்துடன் ஓர் சிலையையும் வைக்க தீர்மானித்தார்கள். இதற்கமைய விஷ்ணுவின் முகத்தை தெளிவுபடுத்தும் வண்ணம் ஓர் சிலையினை பெட்டகத்துடன் வைத்து வழிபடத் தொடங்கினார்கள்.

இதற்கமைய சடங்குகளும் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை இடம் பெற்று வந்தது. இதன் பின்னர் 1990ஆம் ஆண்டு ஏற்பட்ட பாரிய யுத்தத்தினால் சடங்கு நடத்தப்படும் புனித சோலைக்குள் எவருமே செல்ல அனுமதிக்கப்படவில்லை. இதனால் பெட்டகம் வைத்திருக்கும் இடத்தில் சிறிய பூசையினை செய்ய திருப்பணி மன்றத்தினால் தீர்மானம் எடுக்கப்பட்டது. இதற்கான பூசை ஏற்பாடுகள் போடிமார்களினால் செய்யப்பட்டு பூசை வழிபாடுகளும் இடம் பெற்றது. இதன் தாக்கம் தான் பெட்டகம் இருந்த இடத்திலே ஆலயம் உருவாக வித்திட்டது. (நேர்காணல் - டெயக்குமார்.கா., வயது – 46, போடி, கதிரவெளி, 20.05.2022)

இதன் பின் யுத்த நிலைமைகள் வழமைக்கு வந்ததன் பொருட்டு பெரியசுவாமிக்கான சடங்கினை செய்வதற்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் போது போடிமார்களுக்கும் பூர்வீக குடிகளான வேட வேளார்களுக்கும் இடையில் சடங்கு தொடர்பான கலந்துரையாடல் இடம் பெற்றது. இக்கலந்துரையாடலின் போது இவ்விரு சமூகங்களுக்கும் இடையில் சில ஏற்ற தாழ்வுகள் ஏற்பட்டதால் சடங்கினை நடாத்துவதில் ஒரு சில பிரச்சனைகள் ஏற்பட்டது. இப்பிரச்சினைகளினால் இரு சமூகங்களுக்கும் இடையில் பாரிய பிரிவினை ஏற்பட்டது. இப்பிரிவினையால் பாரம்பரியமாக நடாத்தப்பட்டு வந்த பெரியசுவாமிக்கான சடங்கு முறைகள் இற்றை வரையில் கைவிடப்பட்ட நிலையிலேயை காணப்படுகின்றது.

இப்பிரிவினையின் பின் பூர்வீக குடிகளான கப்புவன்மார்கள் ஒன்று சேர்ந்து பாரம்பரியமாக நடாத்தப்பட்டு வந்த பெரியசுவாமிக்கான சடங்கு நடைபெறும் அதே பூர்வ திதியில் பெட்டமாலில் உள்ள விஷ்ணு சிலைக்கு பூசை வழிபாடுகளை மேற்கொண்டு வந்தனர். இவ் முறையானது பிற்பட்ட காலங்களில் பால்சேனை சமூகத்தினரால் பெரும் பூசை முறையாக பெரிதளவில் பின்பற்றப்பட்டு வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இதன் பின்னர் 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி பேரலையினால் கரையோரத்தை அண்டிய பிரதேசங்களில் பாரிய சேதம் ஏற்பட்டது. இவற்றுள் பெரிய சுவாமிக்கான மடாலயமும் பாதிப்படைந்தது.

இதன் காரணமாக கப்புவன்மார்களும், பால்சேனை மக்களும் இணைந்து பெட்டகம் இருந்த அதே இடத்தில் பெரியசுவாமிக்கான ஆலயம் ஒன்றினை அமைக்க தீர்மானித்தார்கள். இதற்கான

நிதி உதவியினை FCE நிறுவனத்திடம் பெற்று ஆலயத்தின் கருவறை, அர்த்த மண்டபம், வசந்த மண்டபம், பரிவாரத் தெய்வங்களுக்கான சிறு மண்டபங்கள் என அனைத்தும் உள்ளடங்கிய வண்ணம் பெரியசுவாமி ஆலயம் 2007ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டு கருவறையில் பெரியசுவாமி (கிருஸ்ணர்) எழுந்தருளச் செய்யப்பட்டார் (தயாழினி, 2011:15-16).

இதற்கு முற்பட்ட காலத்தில் தரைகளிலும், கிடுகுகளினால் பின்னப்பட்ட கூடாரத்திலும் அதன் பின் தென்னை ஓலைகளினால் வேயப்பட்ட பந்தல்களிலும் பின்னர் மடாலயம் போலும் இன்று ஆலயம் போன்றதொரு அமைப்பில் பிரதிஸ்டை செய்யப்பட்டு அடியவர்களுக்கு அருள்பாலித்து கொண்டிருக்கிறார். இவ்வாறான ஓர் வரலாற்றுப் பின்னணியின் அடிப்படையில் தான் பால்சேனையில் அமைந்துள்ள பெரியசுவாமிக்கான ஆலயம் அமையப் பெற்றுள்ளது.

பெட்டக அமைப்புக்களின் மூலம் மாற்றமடையப்பட்டு ஆலயமாக வளர்ச்சியடைந்த பால்சேனை ஸ்ரீ பெரியசுவாமி ஆலயம் பாரம்பரிய முறைகளில் இருந்து சமூக மாற்றங்களினால் ஒவ்வொரு வருடமும் வருடாந்த மஹோற்சவங்களாக வழிபடப்பட்டு வருகின்றது. மஹோற்சவங்களினால் வழிபடப்பட்டு வந்தாலும் மரபுவழியாக பேணப்பட்டு வந்த சடங்கு முறைகளையும் வழக்கொழிந்து போய்விடாமல் பின்பற்றி வருகின்றனர். இருந்தும் பாரம்பரியமாக நடத்தப்பட்டு வந்த சடங்குகள் இற்றை வரைக்கும் நடத்தப்படுவதில்லை. இதனால் சில உயிர்ப்புடனான சடங்கு முறைகள் அருகி வருகின்றன.

பால்சேனை ஸ்ரீ பெரியசுவாமி ஆலயம்

“குபேரபுரியால் ஈழமண்திருநாட்டில் ஆவீனப் பால்சொரியப் பூவீனம் தேன் சொரியக் கட்டித்தயிரும் கன்னலும் கதலியும் தெங்கும் செந்நெல்லும் செறிந்து சிறப்பாக விளையும் பொண்மண்ணாம் மட்டுமாநகரின் கிழக்கே கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலத்தின் கண்ணே எழுந்தருளியிருக்கும் பேரொளியே பால்சேனை ஸ்ரீ பெரியசுவாமி ஆலயம்.”

இக்கிராமத்தில் தற்பொழுது ஆறு இந்து ஆலயங்கள் காணப்படுகின்றன. அதில் வரலாற்று சிறப்புமிக்க ஒரு ஆலயமாக பெரியசுவாமி ஆலயம் விளங்குகிறது. இவ்வாலயத்தின் அற்புதங்களை பின்வருமாறு எடுத்துரைக்கின்றனர்,

“பாம்பணைமேல் பள்ளி கொள்ளும் பச்சைமாலே

பால்சேனை தணிலுறையும் பெரியசுவாமி

கோவிந்த னென்னு சொல்லி கோடி மக்கள் வேண்டிநிற்பர்

கொடுமை செய்வினை

அகல கோமகனே ஓடி வருவாய்”

இவ்வாறு நம்பிக்கையுடன் வழிபடுவோரை எம் பெருமான் கைவிடாமல் நற்செயல், நற்செய்தி கொடுத்து ஆனந்தத்தில் ஆழ்த்துவார். இதனாலே பல மாவட்டங்களில் இருந்து இவ்வாலயத்திற்கு வருகை தந்து பெரியசுவாமியின் அருளைப் பெற்று செல்கின்றனர். “வேண்டுவோர் வேண்டுவன கொடுக்கும்” இச்சந்நிதியில் நம்பிக்கையுடன் துதித்தால் நாளும்

பொழுதும் இனிதாய் அமையும். பெரியசுவாமி வழிவந்த மரபுவழிக் கதைகளில் ஆலயத்தின் முன்பக்க தோற்றத்தில் சிவனும் கிருஸ்ணரும் படகில் வந்ததை அரிகர (சிவன், கிருஸ்ணர்) வடிவமாக செதுக்கப்பட்டுள்ளதுடன் ஆலயத்தின் உட்ச் சுவர்களெல்லாம் கப்பல் வடிவ ஓவியங்களும் வரையப்பட்டுள்ளதை காண முடிகின்றது (குவெந்தினி, 2011:1-18).

விசேட கிரியைகள்

பொதுவாக கிரியைகள் ஆகமம் சார்ந்த முறையிலும் ஆகமம் சாரா முறையிலும் இடம் பெறும். இவ்வாலயத்தில் கிரியைகள் ஆகமம் சாராத முறையிலே இடம் பெறுகின்றது. இவ்வாலயத்தில் வெள்ளிக்கிழமைகளில் ஒரு வேளைப் பூசையும் புதுவருட பிறப்பு, பொங்கல், தீபாவளி, திருக்கார்த்திகை போன்ற பண்டிகை நாட்களில் ஒரு வேளை விசேட பூசையும் இடம் பெறுகிறது. இங்கு பூசை நிகழும் போது பெரியசுவாமியின் துணைத் தெய்வங்கள் தெய்வமாடுவார்கள். இதில் அடியவர்களுக்கு திருவாக்கு கூறல், பக்தர்களின் நோய்கள் தீர்க்கப்படல், நேர்த்திக் கடன் கொடுத்தல் போன்ற நிகழ்வுகள் இடம் பெற்று வருகின்றது.

இவ்வாலயத்தில் இற்றை வரைக்கும் பூர்வீக குடிகளான வேட வேளார்களே பூசை செய்து வருகின்றனர். தற்போது இவ்வாலயத்தின் பிரதான பூசகர் க.இராசரெட்ணம் அவர்களும் துணைப்பூசகராக மு.வேலுப்பிள்ளை அவர்களும் பூசை செய்கின்றனர். இவர்களுக்கு பின் இவர்களின் மருமகன்மார்களே பூசை செய்ய தகுதி உடையவர்களாவர்.

பால்சேனை ஸ்ரீ பெரியசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவ திருவிழா

கொடித்தம்பம் நிறுவிய ஆலயங்களில் வருடத்திற்கு ஒரு மஹோற்சவ திருவிழா நடைபெறுவது வழமை. கொடித்தம்பம் இல்லாத ஆலயங்களில் மஹோற்சவத்திற்கு பதிலாக அலங்கார உற்சவமும் இடம் பெறுகிறது. மகா + உற்சவம் = மஹோற்சவம் எனப்படுகிறது. மகா என்பது மேலானது என்றும் உற்சவம் என்பது உத்தமயாகம் என்றும் பொருள்படும். இது ஆன்மாக்களை உய்விக்கும் பொருட்டு ஐந்தொழில்களை குறிக்கும் என்பர்.

இதனடிப்படையில் கிழக்கிலங்கையின் மீன்பாடும் தேன் நாடாம் மட்டுமாநகரின் பால்சேனை கிராமத்தில் எழுந்தருளி அடியார்களுக்கெல்லாம் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் பால்சேனை ஸ்ரீ பெரியசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோசவத் திருவிழா ஒவ்வொரு வருடமும் ஆனி மாதத்தில் நடை பெறும். அதாவது பாரம்பரியமாக நடைபெற்று வந்த பெரியசுவாமிக்கான சடங்கு நடைபெறாததினால் அச் சடங்கு நடைபெறும் அதே ஆனி மாத பூர்வ திதியில் இங்கு திருவிழா நடைபெற்று வருகிறது. இதனால் பாரம்பரிய முறைகளும் பண்பாட்டு மரபுகளும் மருவி போய்விடக்கூடாது என்பதற்காக வருடந்தோறும் நடைபெறுகின்ற மஹோற்சவ திருவிழாக்களில் பாரம்பரியமாக நடைபெற்று வந்த சடங்கு முறைகளையும் புதிய மாற்றங்களுடன் சில வழிபாட்டு முறைகளையும் இணைத்தவாறு பெரியசுவாமிக்கான திருவிழா இடம்பெற்று வருகிறது.

வருடா வருடம் நடைபெறும் உற்சவ நாட்களில் இயற்கைகளினாலோ, மனிதர்களினாலோ எந்தவொரு பாதகமான விளைவுகளும் ஏற்படக்கூடாது என்பதற்காகவும் மஹோற்சவத்தினை சிறப்பாக நடத்துவதற்காகவும் கொடியேற்றத்திற்கு முதல் நாள் ஆலயத்தில் முறை இருப்பார்கள். (முறை என்பது பேச்சு வழக்கு சொல்) முறை இருக்கும் அன்றிரவு

பெரியசுவாமியின் துணைத்தெய்வங்கள் தெய்வமாடப்பட்டு கப்புவன்மார்களுக்கும் ஊர் மக்களுக்கும் ஆசி வழங்கி ‘‘சந்தோசம்’’ என்ற திருவாக்கு கூறப்படும். இதன் பிறகே மறு நாள் கொடியேற்றல் வைபவம் மற்றும் பூசை வழிபாடுகளுடனும் மேள தாளங்கள் ஒலிக்க கொடிக்கம்பத்தில் கொடி ஏற்றப்படும். இதன் பின்னர் ஒவ்வொரு ஊர் மக்களினாலும் பெரியசுவாமிக்கான விழாக்கள் எடுக்கப்பட்டு பூசைகளும் சிறப்பாக இடம் பெறும். விழாக்காலங்களின் போது தெய்வம் ஆடப்படுவதில்லை என்றும் பூசை வழிபாடுகள் மட்டுமே இடம் பெறுகின்றன.

இவ் முறை இருத்தல் சடங்கானது மரபின் அடிப்படையாக வந்த ஓர் மாற்றமாக கொள்ளப்படுகிறது. அதாவது பாரம்பரியமாக நடைபெற்று வந்த பெரியசுவாமிக்கான சடங்கு முறையானது இடம் பெறுவதற்கு முதல் நாள் கப்புவன்மார்களும், போடிமார்களும், ஊர் மக்களும் இணைந்து பெரியசுவாமிக்கான பெட்டகத்தினை நோர்ப்பு நோர்க்கும் இடத்திற்கு மேள தாளங்களுடன் எடுத்துக் கொண்டு செல்வார்கள். பெட்டகத்தை எடுத்து வந்த அன்றிரவு பெரியசுவாமியின் திருக்காட்சி இடம் பெற்று பெரியசுவாமி கப்புவன்மார்களில் வந்திறங்கி தெய்வமாடப்பட்டு தெய்வத்தினால் திருவாக்கு கூறியதன் பின்னரே மறு நாள் சடங்குகள் இடம் பெறும். இப் பாரம்பரியமான முறைமையை தொடர்ந்து பேணும் வகையிலே இன்றும் பெரியசுவாமி ஆலயத்தில் முறை இருக்கும் சடங்கை பின்பற்றி வருகின்றனர்.

குறிப்பு :- பால்சேனை பெரியசுவாமி ஆலயத்தில் பெரியசுவாமி தெய்வமாடுவதில்லை என்றும் அதன் துணைத்தெய்வங்கள் மட்டுமே தெய்வமாடப்படுவதாக கூறப்படுகின்றது. பெரியசுவாமியின் திருக்காட்சிகள், தெய்வமாடும் முறைமைகள் அனைத்தும் பாரம்பரியமாக சடங்கு நடைபெறும் கதிரவெளி புனித சோலையில் மட்டுமே இடம் பெறுவதாக கூறப்படுகிறது. (நேர்காணல் :- இராசரெட்ணம்,க., வயது – 88, பிரதம பூசகர், பால்சேனை, 20.06.2022)

உற்சவ கால நிகழ்வுகளும் உபயகாரர்களும்

பெரியசுவாமி ஆலய வருடாந்த திருவிழாக்கள் தொடர்ந்து நான்கு நாட்கள் மட்டுமே நடைபெறுகின்றன. இதில் கொடியேற்றல், பட்டெடுத்தல், காவடி எடுத்தல், பால்குட பவனி, பூசை வழிபாடுகள், சுவாமி வீதி வலம் வருதல், கற்பூர விளக்கெடுத்தல், கலை நிகழ்வுகள் உள்ளிட்ட பல நிகழ்வுகள் உற்சவ நாட்களில் நடைபெறும். திருவிழாவின் தொடக்க நாளின் உபயகாரர்களாக ஆலய பரிபாலன சபையினரும், இரண்டாம் நாள் கண்டலடி வாழ் மக்களும், மூன்றாம் நாள் அம்மந்தனாவெளி வாழ் மக்களும், நான்காம் நாள் பால்சேனை நாகபுர வாழ் மக்களும் இணைந்து இத் திருவிழாவை சிறப்பாக செய்து முடிப்பர். இறுதி நாள் தீர்த்தோற்சவத்துடன் திருவிழா இனிதே நிறைவு பெறும்.

கொடியேற்றல்

பெரியசுவாமி வழிபாட்டில் கொடியேற்றுவது ஒரு முக்கிய நிகழ்வாக கொள்ளப்படுகிறது. கொடித்தம்பமானது கொடிமரம், கொடிச்சீலை, தெப்பைக் கயிறு, மஞ்சட் கயிறு எனப் பல பாகங்களாகக் காணப்பட்டு மேற்கூறப்பட்ட கொடித்தம்பத்தின் ஒவ்வொரு உறுப்புக்களும் ஒவ்வொரு தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகிறது. அந்த வகையில் கொடி மரம் - பதி, கொடிச்சீலை – பசு, இரண்டையும் இணைக்கும் மஞ்சட் கயிறு திருவருட் சக்தி,

தெப்பை கயிறு – பாசம் என்பவற்றின் தத்துவத்தை அடிப்படையாக கொண்டு கொடியேற்றப்படுகிறது.

கப்புவர்களினால் கொடிகம்பத்தை சுற்றி மடை வைக்கப்பட்டு பூசை வழிபாடுகளும் தீப ஆராதனைகளும் கொடித்தம்பத்திற்கு காட்டப்பட்டு மேளதாளங்கள் ஒலிக்க பிரதான பூசகரால் கொடித்தம்பத்தில் கொடி ஏற்றப்படும். கொடியேற்றத்தன்று யாகசாலையில் கும்பங்கள் வைத்து ஓமகுண்டத்தில் அக்கினியை வளர்த்து தினமும் இராப்பகலாக ஆகுதிகள் வழங்கி பூசை செய்யப்படும். (ஆய்வாளர் அவதானம், பால்சேனை, 21.06.2022.)

இக் கொடியேற்றல் முறையானது பாரம்பரியமாக நடைபெற்று வந்த பெரியசுவாமிக்கான சடங்கு முறைகளில் இருந்து மரபுவழியாக வந்தவையாக காணப்படுகிறது. அதாவது சடங்குகளில் கப்புவர்களினால் வெட்டப்பட்ட கொடிமரமானது மடை வைக்கும் பந்தலுக்கு முன்பாக தெய்வங்கள் சுற்றி ஆடுவதற்காக பாதையை விட்டு நிறுத்தி நாட்டுவது வழக்கம். இக் கம்பத்தில் ஏற்றப்படும் கொடியில் இரண்டு மனிதர்கள் சித்தரிக்கப்பட்டிருப்பர். இவ்வாறு நாட்டப்பட்ட கொடிமரத்திற்கு மடை வைத்து கப்புவரும் போடிமாரும் பக்திபூர்வமாக அமைதியாக நின்று கொடியினை ஏற்றி வைப்பார்கள். அதே முறைமையே இன்றும் பெரியசுவாமி ஆலயத்தில் பின்பற்றப்பட்டு வருவதனை காணமுடிகிறது.

பட்டெடுத்தல் வைபவம்

பால்குடபவனி

காவடி எடுக்கும் வைபவம்

சுவாமி வீதி வலம் வருதல்

பெரியசுவாமி உற்சவ திருவிழாக்களில் முக்கிய ஓர் நிகழ்வாக சுவாமி வீதி வலம் வருதல் இடம் பெறுகிறது. இந் நிகழ்வு கருவறையில் இருக்கும் மூலவருக்கான சிறப்பு பூசை இடம் பெற்ற பின்னரே மூலவர் அறையில் இருக்கும் சுவாமியின் உருவச்சிலையை கொண்டு உள்வீதி, வெளிவீதி சுற்றி வலம் வருகின்றனர். அதாவது ஒவ்வொரு உற்சவ நாட்களிலும் இரண்டு தடவைகள் சுவாமி வீதி வலம் வருகின்றது. அதாவது பெரிய சுவாமி வீதி வலம் வருவதற்கு முன் பெரிய சுவாமியின் துணைத்தெய்வங்கள் வீதியை காவல் பண்ணுவதற்காக வீதி வலம் வருவதாகவும் அதன் பிறகே பெரியசுவாமி வீதிவலம் வருவதாக கூறப்படுகிறது. இதனாலே இரு தடவைகள் வீதி வலம் வருகின்றனர். (ஆய்வாளர் அவதானம், பால்சேனை, 22.06.2022)

இவ் முறை மரபுவழியாக வந்த சடங்கில் பின்பற்றப்பட்ட மரபின் தொடர்ச்சியை காட்டுவதாக அமைகிறது. அதாவது சடங்கின் போது பெரியசுவாமி வீதியில் வந்து ஆடுவதற்கு முன் வீதியை காவல் செய்யும் முகமாக துணைத்தெய்வங்கள் ஆடுவது வழக்கம். இவ்முறையினை அடிப்படையாக கொண்டே முதலில் துணைத்தெய்வங்கள் வீதி வலம் வந்து காவல் செய்வதாகவும் பின்னர் பெரியசுவாமிகள் வீதி வலம் வருவதாகவும் கூறப்படுகிறது. இதனாலே இவ்வாலயத்தில் இரண்டு தடவைகள் சுவாமி வீதி வலம் வருவதாக கூறப்படுகிறது. (நேர்காணல் :- இராசரெட்ணம்,க., வயது – 88, பிரதம பூசகர், பால்சேனை, 22.06.2022)

இவ்வாறு கொடியேற்றத்துடன் ஆரம்பமான மஹோற்சவ திருவிழா இறுதி நாளான தீர்த்தோற்சவத்துடன் பெரியசுவாமிக்கான பூசை வழிபாடுகள் இடம் பெற்று கொடிக்கம்பத்தில் ஏற்றப்பட்ட கொடி இறக்கப்பட்டதுடன் விழாக்கள் இனிதே நிறைவு பெறுகின்றது. மூன்றாம் நாள் சுவாமியின் கதவு திறக்கப்பட்டு பூசை வழிபாடுகள் இடம் பெறுகின்றது. இவ் முறைகளிலே ஒவ்வொரு வருடங்களிலும் உற்சவங்கள் இடம் பெற்று வருகின்றது. இதன் பின்னர் வழமை போன்று ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளும் தெய்வம் ஆடப்பட்டு பூசை நிகழ்வுகளும், நேர்த்தி கடன்களும் இடம் பெற்று வருகிறது.

பெரியசுவாமி கோயிலில் இசையின் முக்கியத்துவம்.

ஆலய வழிபாடுகளில் இசை முக்கிய பங்கு வகிக்கின்றது. இசை பொதுவாக சடங்குகளை இயக்குவதிலும் சடங்கிற்கு மீள் புத்துயிர்ப்பு கொடுப்பதிலும் பெரும்பங்காற்றுகிறது. தெய்வங்களை குளிரச் செய்வதிலும் மகிழ செய்வதிலும் இசையின் ஆற்றல் அளப்பரியது. மக்களை ஒன்றிணைத்து ரசிக்க வைக்கும் எந்த ஒரு படைப்பாக இருக்கட்டும் இசையின் தலையீடு இன்றி வசம் ஆக்க முடியாது என்னும் அளவிற்கு இசையானது முக்கியம் பெறுகிறது. பெரியசுவாமி சடங்கின் உயிர்த்துடிப்பு இசை என்று சொல்லுமளவிற்கு இசையானது இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றது.

ஒவ்வொரு ஆலயத்திலும் அந்த ஆலயத்திற்கென்று நிர்ணயம் செய்யப்பட்ட மேளக் குழுவைக் கோயில் மேளம் என்றும் உள்ளூர் மேளம் என்றும் கூறுவர். பெரியசுவாமி சடங்கில் மேளமே இசைக்கப்படுகின்றது. இச்சடங்கின் ஆடலையும் பாடலையும் தீர்மானிப்பதில் மேளம் முக்கிய பங்கு வகிக்கின்றது. அதாவது ஒவ்வொரு வகையான ஆடலுக்கும் ஒவ்வொரு வகையான இசை கொடுக்கப்படுகின்றது.

மேள இசைகளுடனே ஆரம்ப காலத்தில் பெட்டகம் எடுத்து வருதலிருந்து இறுதிப் பூசை முடிந்து பெட்டகம் மீண்டும் பூசகரின் வீட்டிற்கு கொண்டு செல்லுதல் வரைக்குமாக இசையானது பிரதானமாகின்றது. பெரியசுவாமி ஆலயத்தில் கொடியேற்றல், தெய்வமாடல், பட்டெடுத்தல் போன்ற நிகழ்வுகளுடன் இசையானது இசைக்கப்படுகிறது. இவ் இசையானது இச்சடங்கின் உயிர் துடிப்பாக விளங்குகிறது. சடங்கில் இசையானது மேலைத்தேய வடிவமாகவோ அல்லது கீழைத்தேய கர்நாடக இசைக்கு உட்பட்டதாகவோ அமைந்தவை அல்ல மாறாக அதன் தனித்துவமான கிராமிய தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடையது.

இங்கு மேளம் இதமான வடிவமாகவும், சத்தமான இசையை தோற்றுவிக்கக் கூடிய வகையிலும் இசைக்கப்படுகிறது. இங்கு ஒவ்வொரு தெய்வங்களுக்கும் ஒவ்வொரு விதமான ஆடல் வகைகளும் அதற்கு ஏற்றால் போல் மேளங்களின் இசைகளும் அமையப்பெறுகின்றது. இவை பிரம்மாண்டமாகவும், தனித்துவமான இசைவடிவமாகவும் காணப்படுகின்றது. (நேர்காணல் :- இராசரெட்ணம்,க., வயது – 88, பிரதம பூசகர், பால்சேனை, 22.06.2022)

பெரியசுவாமி சடங்கின் சமகாலப் போக்கு

சமூகமானது இன்றைய உலகமயமாக்கல் சூழலில் பல மாற்றங்களைக் கொண்டமைந்துள்ளது. சூழலில் நாம் இயந்திரங்களாகவும் கடனாளிகளாகவும் சமூகம் பற்றிச் சிந்திக்காதவர்களாகவும்

சுயநலம் கொண்டவர்களாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் எம் சமூகத்தை எமக்கு தெரியாமலேயே நவீனத்தின் காலணித்துவத்திற்குள் சிக்கி எதிர்காலத் திட்டத்தினைக் கட்டமைத்துக் கொண்டு இருக்கிறோம். இன்று நம்மில் பலர் மனநலம் பாதிக்கப்பட்டவர்களாகவும் உடலின் எடையைவிட நோயின் பாரத்தினை விருப்புடனே முதுகில் சுமந்து கொண்டு சமூகத்தினை வெறுத்தும் விலகி வாழ முடியாதவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

தன்னிகரில்லா வாழ்க்கை முறையினையும் எமக்கேயான சிந்தனை வட்டங்களையும் இழந்து இன்று நாங்கள் யாரிலும் தங்கி வாழாது சுதந்திரமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று நாம் பெருமிதத்துடன் கூறிக்கொண்டாலும் சுயநலம் என்னும் ஒன்று எம்மைப்பற்றி பிடித்து தனக்கு தனக்கு என்று நாம் தனிமையைத் தேடிச் சென்று கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு நாள் பொழுதும் தொடங்கி முடியும் வரை நாம் சிந்திக்கும் ஒரே விடயம் நாளை என்ன செய்ய வேண்டும் என்று தீர்மானிப்பது சிந்தனையில் பொதுநலம் சார் சிந்தனைப் போக்குகள் குறைவாகவே காணப்படுகிறது. எதிர்காலத்தை நோக்கியதான முன்னேற்றப் பாதைகளை நாம் வடிவமைத்துக் கொண்டாலும் எதிர்கால இருப்புக்காக நாம் எப்படி எம்மைத் தயார்படுத்திக் கொள்கிறோம் என்பதில் நாம் இன்னும் விழிப்பற்றவர்களாகவே இருக்கிறோம்.

நாம் மேல்நாட்டு காலணித்துவச் சிந்தனைக்குள் சிக்குண்டவர்களாகவும் அதிலிருந்து விலக முடியாதவர்களாகவும் வாழ்ந்து வருகிறோம் எம்மை கட்டமைத்த காலணித்துவ சிந்தனைகள் நகர்ப்புறப் பண்பாட்டுத் தாக்கங்களும் எம் வாழ்க்கையில் பாரிய தாக்கத்தினையும் அதனோடு இணைந்த மாற்றத்தினையும் ஏற்படுத்தியேதான் சென்றுள்ளது. அவற்றிலிருந்து மீள முடியாதவர்களாக சிக்கித்தவிக்கும் மனிதர்கள் இன்று தொழில்நுட்ப வசதிகளும் இயந்திரமயமாக்கலினாலும் ஒருவர் மற்றவர்களின் முகம் பார்த்து பேச கூட நேரம் அற்றவர்களாக மற்றவரின் சுக துக்கங்களில் பங்கு கொள்ள விரும்பாதவர்களாகவும் வாழ்ந்து கொண்டு வருகின்றனர். சிந்தித்துச் செயற்படாது சொல்வதைச் செய்து கொண்டு போகும் இயந்திரங்களாக நாம் வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உறவுகளோடு உறவுகளாக மனம் விட்டுப் பேசிச் சிரித்து அழுது உரக்கக் கத்தி சத்தம் போட்டு கதறி கொண்டாடி சந்தோஷமாக வாழ்ந்த வாழ்க்கையை இழந்து கொண்டு செல்கின்ற இவ்வாறான சந்தர்ப்பத்தில் ஊரையும் உறவுகளையும் ஒன்றிணைக்கும் சக்திகளாக சடங்குகளும், நம்பிக்கைகளும் விளங்குகின்றன.

இவ்வகையில் பெரியசுவாமி சடங்கானது மரபுகளினாலும், நம்பிக்கைகளினாலும் கட்டியெழுப்பப்பட்ட ஒரு வழிபாடாகும். இவ் வழிபாட்டின் தாற்பரியங்கள் தெரியாமல் காலணித்துவ சிந்தனையில் சிக்கிக்கொண்டிருக்கும் சமூகங்களுக்கு சடங்கின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்த வேண்டியது அவசியமாகும். அப்போதுதான் பாரம்பரியமான மரபுகளும், நம்பிக்கைகளும் உயிர்த்துடிப்புடன் செயற்பட வழி வகுக்கும். அத்தோடு கிராமிய வழிபாட்டு மரபுகள் கால சூழ்நிலைக்கு ஏற்ப சில மாற்றங்களையும் உள்வாங்கி வருகின்றது. இதனால் கிராமிய வழிபாட்டின் தொன்மையினை வெளிப்படுத்த சமய சீர்திருத்த செயற்பாடுகள் அவசியமாகின்றது.

முடிவுரை

எனவே இவ்வாய்வுக் கட்டுரையினை முழுமையாக நோக்கின் இப் பிரதேசத்தில் சமூக, அரசியல், பொருளாதார வரலாற்றுப் பின்னணி மாற்றங்களாலும், வளர்ச்சி நிலைகளாலும் தோன்றி நின்று நிலவும் வழிபாடுகளில் சடங்குகள், மரபு நம்பிக்கைகள், கலைகள் அனைத்தும் இப் பிரதேசத்து மக்களின் வாழ்வு நிலையைப் பிரதிபலிப்பனவாக உள்ளன. இவற்றுள் சில சமூக மாற்ற நிலைகளுக்கு ஏற்ப மக்கள் மத்தியில் முதன்மையிழந்து போயினும், மக்களின் நம்பிக்கை, தேவைகளின் முக்கியத்துவத்துக்கேற்ப சில இன்றும் நின்று நிலவி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

அத்தோடு மக்களின் நம்பிக்கை, தேவைகளின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப மரபுகளும், வழிபாட்டு சடங்கு முறைகளும் பால்சேனை பெரியசுவாமி ஆலயத்தில் சில சடங்குகள் இன்று நின்று நிலவி வந்தாலும். இச் சம்பிரதாயங்களும், சடங்குகளும் பாரம்பரியமாக நடைபெற்று வந்த கதிரவெளி புனித சோலை வனத்தில் இடம் பெறுவதில்லை. அதாவது காலணித்துவ சிந்தனையின் தாக்கத்தினால் சிக்குண்டிருக்கும் இளந்தலைமுறையினரைக் கொண்ட சமூகங்கள் இச் சடங்கின் தேவைகளையும் அதன் தாற்பரியங்களையும் விளங்கிக் கொள்ளாமல் இருப்பதினால் பல மாற்றங்களை உள்நுழைத்து விட்டனர். இவ் மாற்றங்கள் பிற்பட்ட காலங்களில் (சமஸ்கிருதமயமாதலுக்கு) ஆகமம் சார்ந்த வழிபாட்டிற்கு இட்டுச் செல்லுமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. என்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

உசாத்துணை

1. இன்பமோகன்,வ., (2012), கிழக்கிலங்கைச் சடங்குகள் சமயம், கலை,அழகியல்'', குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை.
2. குணபாலசிங்கம்,வ., (2008), ''மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆகமம் சார்ந்த ஆகமம் சாராத சக்தி வழிபாடு - ஓர் ஒப்பீட்டாய்வு'', முதுதத்துவமாணிப்பட்ட ஆய்வேடு, பட்டப்படிப்புக்கள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
3. குணபாலசிங்கம்,வ., (2021), ''இலங்கையில் சிறுதெய்வ வழிபாடு: இந்து பௌத்த சமயமரபுகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பியல் நோக்கு'', சர்வதேச தமிழ் ஆய்விதழ் - தொகுதி – 3, வெளியீடு – 4, பக். 99 – 107.
4. குணபாலசிங்கம்,வ., (2022), ''மட்டக்களப்பு தேசத்து வழிபாட்டு மரபுகளில் பத்ததிகள்'', கன்னன்குடா கண்ணகையம்மன் பத்ததியை அடிப்படையாகக் கொண்ட சிறப்பாய்வு, முதலாவது இந்து மாநாடு, இந்துக்கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, ப.16.
5. குணபாலசிங்கம்,வ., (2015), ''இலங்கையில் முருக வழிபாடு – கிழக்கிலங்கையில் முருக வழிபாட்டு முறைமைகள் பற்றிய சிறப்பாய்வு'', பட்டப்படிப்புக்கள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
6. சண்முகசுந்தரம்,சு., (1999), ''நாட்டுபுறத் தெய்வங்கள்'', தன்னளே பதிப்பகம், பெங்களூர்.
7. சந்திரசேகரம்,சி., (2020), ''இலங்கை தமிழ் நாட்டார் கதைகள்'', குமரன் புத்தக இல்லம்.
8. சுகந்தி,சு., (2006), ''மட்டக்களப்பு மாவட்டத்துக் கிராமிய வழிபாட்டுச் சடங்குகளும் அவை தொடர்பான பாடல்களும்'', இலண்டன் தமிழ் இந்து மன்றம்.
9. பக்தவத்சல பாரதி., (1990), ''பண்பாட்டு மானிடவியல்'', மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
10. மகேஸ்வரலிங்கம்,க., (1996), ''மட்டக்களப்பு சிறுதெய்வ வழிபாடு ஓர் அறிமுகம்'', தில்லை வெளியீடு, மகிழடித்தீவு மட்டக்களப்பு.

சஞ்சிகைகள்

- ''கதிராழி'', (2010), மட்/கதிரவெளி விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்.
- ''பாலருவி'', (2011), மட்/ககு/பால்சேனை அ.த.க பாடசாலை, கதிரவெளி.

நேர்காணலின் போது தகவல் வழங்கியோர் விபரம்

(பெயர், வயது, தொழில், விலாசம், சந்தித்த தினம் என்னும் ஒழுங்கில்)

1. இராசரெட்ணம்,க., 88, பால்சேனை பெரியசுவாமி ஆலய பிரதம பூசகர், பால்சேனை, 20.05.2022.

2. உதயன்,த., 49, பால்சேனை மகா வித்தியாலய ஆசிரியர் (பெரியசுவாமி கோயில் செயலாளர்), பால்சேனை, 20.05.2022.
3. செல்லத்தம்பி,க., 72, விவசாயம் (அண்ணாவியார்), கதிரவெளி, 16.05.2022.
4. டெயக்குமார்,கா., 46, விவசாயம் (போடி), கதிரவெளி, 20.05.2022.
5. தர்மரெட்ணம்,சு., 68, விவசாயம் (போடி), கதிரவெளி, 09.05.2022.
6. நாகரெட்ணம்,க., 51, விவசாயம் (பெரியசுவாமி கோயில் உப தலைர்), பால்சேனை, 19.05.2022.

பத்தாசிசார் வழிபாட்டுப் பாடல்கள் பிரதிபலிக்கும் இந்துசமயப் பண்பாட்டம்சங்கள்

கிருபைரெத்தினம் சர்வேஸ்வரன்
இந்துநாகரிகத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
sarwesh1177@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இலக்கியங்கள் சமூகத்தின் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடிகள் என்று அடையாளப்படுத்தப்படுகின்றன. அதன்படியே பத்தாசிசார் சடங்குப் பாடல்களிலும் தமிழ்ச் சமுதாயத்தின் பல்வேறுபட்ட பண்பாட்டம்சங்கள் விளக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். சங்ககால, சங்கமருவிய கால இலக்கியங்களில் எவ்வாறு அக்கால பழந்தமிழர்களின் வாழ்வியல் அம்சங்கள் பேசுபொருளாக்கப்பட்டிருந்தனவோ அதனைப் போன்றே சடங்குப்பாடல்களிலும் கிராமிய நாட்டுப்புற மக்களது வாழ்வியல் அம்சங்கள் சிறப்புற விளக்கப்பட்டுள்ளன. மருத்துவம், கலை, வழிபாடு, நம்பிக்கைகள், தத்துவம், பக்தி, மற்றும் அறிவியல் போன்ற பல்வேறுபட்ட பண்பாட்டியல் கூறுகளைச் சடங்குப் பாடல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. அவ்வாறான சடங்குப் பாடல்களின் பண்பாட்டம்சங்களை மையப்படுத்தியதாகவே இவ்வாய்வு அமைகின்றது. இவ்வாறான சடங்குப் பாடல்களினுள் அம்மானை, அகவல், காவியம், கும்மி, தாலாட்டு, ஊஞ்சல், குளிர்த்தி, போன்ற பல்வேறு வகையான பாடல் வகைகள் காணப்படுகின்றன. அவை இந்துசமயத்தவர்களினால் வணங்கப்படுகின்ற பல்வேறுவகையான தெய்வங்களுக்காகப் பாடப்பட்டவையாக அமைந்துள்ளன. அத்தகைய சடங்குப் பாடல்களில் முக்கியமானவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு நகர்த்தி செல்லப்படுகின்றது. இவ்வாய்வின் எல்லை மட்டக்களப்புப் பிரதேச சடங்குக் கோயில்களுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கான முதன்மை மூலங்களாக சடங்குக் கோயில்களில் களஆய்வு செய்து பெறப்பட்ட தகவல்களும், கோயிற் பூசகர்களைச் செவ்வி கண்டு பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளும் பயன்படுத்தப்பட்டன. துணை மூலங்களாகச் சடங்குப் பாடல்கள் தொடர்பாக வெளிவந்த நூல்களும், அவை தொடர்பான பழமையான ஏடுகளும், எடுத்தாளப்பட்டன. கோயில்களிலும், கோயிற் பூசகர்களிடமும் தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு களஆய்வு முறையும், இலக்கியங்களை ஆய்வு செய்வதற்கு விவரண ஆய்வு முறையும், சங்க இலக்கியங்களுடன் சடங்குப் பாடல்களை ஒப்பிட்டு நோக்குவதற்கு ஒப்பியல் ஆய்வு முறையும் ஆய்வு முறையியல்களாகப் பயன்படுத்தப்பட்டன. சங்க கால மற்றும் அறநூற்கால இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு பழந்தமிழர்களின் பண்பாட்டியல் கூறுகள் விளக்கப்படுகின்ற தற்காலத்தில் பாமர மக்களின் பக்தியின் வெளிப்பாடாகத் தோன்றிய சடங்குப் பாடல்களில் இழையோடியுள்ள தமிழர்களின் பண்பாட்டம்சங்களை அடையாளப்படுத்தும் நோக்குடன் இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது.

திறவுச் சொற்கள்: சடங்குப் பாடல், பத்தாசி, கோயில், பூசை

அறிமுகம்

சடங்குகளானவை மனித வாழ்வோடு நெருங்கிய தொடர்புடையன. வேட்டை மற்றும் நாடோடிச் சமூகம், பழங்குடிச் சமூகம், ஊரிருக்கைச் சமூகம் என்பவை மனித சமூக உருவாக்கத்தின் படிநிலைகளாகும். ஒவ்வொரு சமூகமும் ஒவ்வொரு வகையான நம்பிக்கைகளின் அடிப்படையில் பிறக்கின்றன. இவ்வாறு உருவாகின்ற நம்பிக்கைகள் புறச்சூழல்களை எதிர்கொள்வதற்கான எதிர்விளைவுகளாக அமைகின்றன. தாம் கொண்ட நம்பிக்கைகளை நிகழ்த்திக் காட்டுவதற்கான கருவியாக சடங்குகளைக் கொள்கின்றன. அதாவது, மக்கள் தங்களுடைய இருப்பை நிலைப்படுத்திக் கொள்ள சடங்குகளை நிகழ்த்துகின்றனர். இச்சடங்குகள் உடல்மொழியாகவும், வாய்மொழியாகவும் வெளிப்படுகின்றன. அவையே சடங்குப் பாடல்களாக உருக் கொள்கின்றன.'' **(அரசு,வீ., 2009: ப. 5)**

உயிர்கள் அனைத்தையும் காத்தருளும் அறநெறியினை இறைநெறி என்பர். இத்தகைய இறைநெறி ஆறாம், ஏழாம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் பக்திநெறி இயக்கமாகத் தோன்றி வளர்ந்ததைச் சான்றுகளின் வழி அறிய முடிகின்றது. உலக உயிர்கள் யாவும் இறைவனோடு இணைந்து ஒன்றிலிருந்து ஒன்றினைப் பிரிக்க முடியாதவாறு படைக்கப்பட்டுள்ளன. இதனால் இறைநெறி என்பது மனித வாழ்க்கையின் ஓர் அங்கமாக உருப்பெற்றது. இறைநெறியின் வழி பிறந்த சடங்குப் பாடல்களும் மனித வாழ்வின் பல்வேறு அம்சங்களையும் வரலாற்று குறிப்புகளையும்

பிரதிபலிக்கும் வகையில் தோற்றம் பெற்றன. குறிப்பாக, அந்தந்தப் பிரதேச ஆலயங்களின் சடங்குப் பாடல்கள் குறித்த அப்பிரதேசத்தின் சிறப்பினையும், அப்பிரதேச மக்களின் வாழ்வியல் அம்சங்களையும் அடையாளப்படுத்தும் சான்றுகளாக அமைகின்றன. இதனடிப்படையில் நோக்குகின்ற போது மட்டக்களப்பு பிரதேசத்திற்குட்பட்ட ஆலயச் சடங்குப் பாடல்களும் இத்தன்மையதே என்பதனை அவதானிக்க முடியும். அந்தவகையில், இச்சடங்குப் பாடல்கள் பல்வேறு பொருண்மைகளை உள்ளடக்கியவாறு படைக்கப்பட்டுள்ளன. அவற்றை ஆராயும் வகையில் இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகின்றது.

பெருமை பேசல் :

பழங்காலந் தொட்டே கவிபாட விழைந்த கவிஞர்கள் தெய்வங்களையும், மன்னர்களையும் புகழ்ந்து பாடி பல்வேறு நன்மைகளை அடைந்தார்கள். சங்ககாலத்தில் தோன்றிய ஆற்றுப்படை இலக்கியங்கள் பொருள் தருபவனைப் பெருமைப்பட பாடுவதாக அமைந்திருக்கும். இதே சாயலில் பின்வந்த கால இலக்கியங்களிலும் இப்பாங்கு வெளிப்பட்டது. அந்தவகையில், மட்டக்களப்புப் பிரதேச ஆலயச் சடங்குப் பாடல்களிலும் இத்தன்மையினை மிகுதியாகக் காணமுடியும். சடங்குப் பாடல்களில் பெருமை பேசல் முன்று அம்சங்களின் வாயிலாக விளக்கப்படுகின்றது. அவை,

- **குலப் பெருமை பேசல்**
- **ஊரின் பெருமை பேசல்**
- **இறைவனின் பெருமை பேசல்**
- **ஆலய பெருமை பேசல்** என்பனவாகும்.

குலப்பெருமை பேசல் :

குலம், கோத்திரம், வருணம் தொடர்பான கருத்துக்கள் புராதன காலந்தொட்டே சமூகத்தினிடையே நடைமுறையிலுள்ளன. குறிப்பிட்ட குலங்களில் தோன்றிய புலவர்கள் மறைமுகமாகவும், நேரடியாகவும் தம்குலம் சார்ந்த பெருமைகளைத் தம் கவிகளில் பதிவிடுவதை அன்றும், இன்றும் வழக்கமாய் கொண்டுள்ளார்கள். அந்தவகையில், சடங்குப் பாடல்களும் சில குலம் சார்ந்த வழிபாடுகளினூடாக மேலெழுகின்ற போது அக்குலப்பெருமையை சுமந்த வண்ணமே தோற்றம் பெறுகின்றன.

"ஓங்குபுகழ் கண்ணாளர் உறுதுணையாய் லோகமெங்கும்
தீங்ககற்றும் காளிக்கா தேவியரே தெள்ளமுதே" (காளியம்மன் பத்ததி)

இப்பாடலில் கண்ணாளர் என்று குறிப்பிடப்படுபவரகள் வெண்கல உலோகத்தை உருக்கி வார்த்துத் தொழில் புரியும் குலத்தவர்கள் ஆவார்.

"சீர்வாழி மறைவாழி சீர்சைவ மதம் வாழி
ஊர்வாழி உலகுபுகழ் கம்மியரும் வாழியவே" (காளியம்மன் பத்ததி)

"உலகுபுகழ் கம்மாளர் குலமாளும் தாயே" (அடையல் பத்ததி, ஒப்புக்கொடுக்கும் பாடல்)

இப்பாடல்களில் சுட்டப்படும் கம்மியர் என்ற குலம் நகைத்தொழில் உட்பட சிற்பத் தொழில் , தச்சுத் தொழில், கொல்லன் தொழில், மற்றும் கண்ணாரத் தொழில், ஆகிய தொழில்களைச் செய்பவர்களை ஒருங்கே குறித்து நிற்கின்றது.

ஊரின் பெருமை பேசல் :

இலக்கியங்களில் எவ்வாறு குலப்பெருமை பேசப்படுகின்றதோ அவ்வாறே ஊரின் பெருமைகளும் பேசப்படுவது வழக்காகின்றது. அந்தவகையில், மட்டக்களப்புப் பிரதேச ஆலயச் சடங்குப் பாடல்களிலும் மட்டக்களப்பின் பாற்பட்ட பல்வேறு ஊர்களின் பெருமை பேசப்படுவதை அவதானிக்க முடியும்.

"உலகுபுகழ் ஆரையம்பதி மேவி வந்தாய்..."

"சிங்கார நகரான ஆரையூர் பதியில் வளர்..."

"இயல் பெரிய ஆரையூர் பதிக்கென்றும் மங்களம்"

- (காளியம்மன் ஒப்புக்கொடுக்கும் பாடல்)

"அரியட் சரத்தி திரி ஓங்காரி
அபிராமி மகமாரியான கெம்பீரி
திரிபர சதானந்தி முனைத்தீவு நகர் செழிக்க வரு
அம்மை வடபத்திரகாளி." **- (காளியம்மன் காவியம்)**

"தாழைநகர் வந்த நீ கம்பையில் வளர்ந்த நீ
கரகமதெடுத்த நீ குழையது பிடித்த நீ..." **- (மாரியம்மன் காவியம்)**

தெய்வத்தின் பெருமை பேசல் :

இறைவன் மீது கொள்கின்ற காதல் பக்தி எனப்படும். அப்பக்தி மேலீட்டால் பல்வேறு வகையான பிரயத்தனங்களை மேற்கொள்கின்றார்கள் பக்தர்கள். இறைவனின் அன்பை வேண்டிய பக்தர்களில் சிலர் தம் கற்பனை ஆற்றலினாலும், புலமையினாலும் இறைவனது நாமங்களையும், அவனது வீரதீரச் செயல்களையும் மற்றும் சிறப்புக்களையும் பெருமைபடப் பாடி இறைவன் மீதான அன்பை வெளிப்படுத்துகிறார்கள். அவர்களின் இப்பக்தி வெளிப்பாடு இறைவன் மீது நம்பிக்கையற்றவர்களுக்கும் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.

"...முன்னமே வந்தநீ முப்புரம் எரித்த நீ
மூவர்தொழு மூர்த்தி நீ மூவுலகை ஆண்ட நீ
பன்னுமறை வேதம் நீ
புன்னை நிழல் வந்த நீ
பங்கயச் செல்வி நீ பாரளந்தவளும் நீ..."

(நேர்காணல்: க.புஸ்பாகரன் ஐயா, வயது-36, தாழங்குடா சந்திமகமாரியம்மன் ஆலய நித்ய குரு)

"...பூவையர்கள் மலர் சொரிந்தே கவரி வீச
வாரணத்தேவர் வழு வீரர் புடைசூழ
வாசுகி தன்னை வடமாகவே பூட்டி

காரணமதான பொற்தேர் மீதில் ஏறிவரு...
ஆரையூராச்சி காமாட்சியானவளே" **(மேலது)**

"ஆயிரம் கண்ணி நீ அகிலம் முழு ஆளு நீ..." **(மேலது)**

ஆகிய பாடல்களில் மாரியம்மனின் பெருமை பேசப்படுகின்றது. அதாவது முப்புரங்களை எரித்தவளாகவும், மும்மூர்த்திகளாகிய அரி, அரன், அயன் ஆகியோர்களும் தொழுதேற்றுபவளாகவும், மூவுலகை ஆளுபவளாகவும்(விண், மண், பாதாளம்) இங்கே மாரியம்மன் சிறப்பிக்கப்படுகிறார்.

ஆலயத்தின் பெருமை பேசல் :

சமூகத்தில் சீர்குலைவுகள் அதிகரித்த போது சீர்திருத்தவாதிகள் தோன்றி ஆலய வழிபாட்டிற்கும், ஆன்மீக நெறிக்கும் முதன்மை அளித்து மக்களை ஆற்றுப்படுத்த விளைந்தார்கள். அதன்படி, தலமகிமைகளை எடுத்துக் கூறுகின்ற தலபுராணங்களும், பாடல்களும் தோன்றின. இவ்வாறு தோன்றிய தலபுராணங்கள் பிற்காலத்தில் அனைத்து கோயில்களுக்கும் தல வரலாறு தோன்றுவதற்கும் முன்னோடியாய் அமைந்தன. சடங்குப் பாடல்களிலும் இத்தன்மையைக் காணமுடிகின்றது.

"தேனாறு ஓடிடும் சீர்சைவ நாட்டினில்
தேங்கனி தொங்கிடும் ஈழக்கிழக்கில்
ஆற்று நதியாடு ஆரூர்ப் பதியில்
ஆதிபராசக்தி கோவில் கொண்டாள்..."
(பெ.கொ.ந : அ.தட்சணாமூர்த்தி, தாழங்குடா மாரியம்மன் ஆலய போசகர்)

"பொன்வேய்ந்த கோபுரம் தான் விளங்கும் - அங்கே
பொற்பிரகாசமும் தான் விளங்கும்
அன்பால் அமைவிட்ட ஆலயம் அங்குண்டு
ஆதிசக்தி அங்கு ஆள்கிறாளே..." **(மேலது)**

"அற்புத ஆலயம் தன்னில் உறைந்திடும்..." **(மேலது)**

மேற்குறித்த காளியம்மன் கும்மிப் பாடல்களிலே முதலாவதாக ஊர் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து அங்கு அமைவிடம் கொண்டுள்ள இறைவியின் நாமம் குறிப்பிடப்பட்டு தொடர்ச்சியாக ஆலயத்தினுடைய சிறப்பு பேசப்பட்டுள்ளமையினைக் காணலாம்.

கோரிக்கைகளை முன்வைத்தல் :

பொதுவாகவே பெரும்பாலான சமயம் சார் செந்நெறி இலக்கியங்கள் முன்வைக்கும் கோரிக்கைகளாக முக்தி, துறவறம், பிறவாமை மற்றும் மறுஉலகம் போன்றவை அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக,

"பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்

உன்னை என்றும் மறவாமை வேண்டும்...”

என்ற பெரியபுராணப் பாடலைக் குறிப்பிடலாம். இப்பாடல் பிறவாமை வேண்டும், அவ்வாறு பிறப்பெடுத்தால் உன்னை மறவாத வாழ்வு வேண்டும் என்ற கோரிக்கையை இறைவனிடம் முன்வைப்பதாக அமைந்துள்ளது.

நாட்டுப்புற மக்கள் என்றும் இயற்கை வளத்தோடும், குடும்பத்தோடும் இணைந்த வாழ்க்கை முறையையே நேசிப்பவர்கள். ஆதலால் அவர்களால் மேற்குறித்த கோரிக்கைகள் முன்வைக்கப்படுவது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. மாறாக வளம் செழிக்க வேண்டும், உயிர்கள் இன்பமாக வாழ வேண்டும் என்ற கோரிக்கைகளே வெளிப்பட்டு நிற்கின்றன. இவ்வளம் குறித்த வேண்டுதல்களையே சடங்குப் பாடல்களும் எடுத்தியம்புகின்றன. அந்தவகையில்,

“உன்னையே உறவாய் கொண்டேன் உடலுயிர் உனக்கே ஈந்தேன்
எம்மையே ஆண்டு கொண்டாய் இனி எமக்கு உறவு நீயே
எம்மையே தள்ளல் வேண்டாம் ஏழை நாம் கேட்கும் யாவும்
முன்னமே தந்து எம்மை முதன்மையாய் வாழ வைப்பாய்...” (அடையல் பத்ததி – வழங்கியவர்: எஸ்.காந்தன் ஐயா – பெரியபோரதீவு)

என்ற பாடல் உன்னைத் தவிர வேறு உறவு யாரும் இல்லை என்று கூறி, எம்மைக் காத்து எம் வாழ்வை செழிப்படைய வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பதாக அமைந்துள்ளது.

வரலாற்றைப் பிரதிபலிக்கின்ற சடங்குப் பாடல்கள் :

யதார்த்த உலகில் நிகழ்ந்த வரலாறுகள் வாய்மொழி மூலமாகவும், இலக்கியங்கள் மூலமாகவும் பேசப்படுகின்றன. வாய்மொழி வழியாகவும், இலக்கிய வழியாகவும் பெற்றுக் கொண்ட செய்திகள் காலப்போக்கில் அனைத்து மக்களும் விளங்கிக் கொள்ளும் படி பாடல்களாக தோற்றம் பெற்றன. வாய்மொழிக் கதை மரபோடு வடமொழி இலக்கியப் பதினெண் மகாபுராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள புராணக் கதைகளையும், அம்மகா புராணங்களைத் தழுவி தமிழில் தோன்றிய தமிழ்ப் புராணக் கதைகளையும் சடங்குப் பாடல்களிலே கண்டு கொள்ள முடியும். இத்தகைய பாடல்களின் தன்மையினை மட்டக்களப்புப் பிரதேச கோயில்களின் சடங்குப் பாடல்களிலும் காணமுடிகின்றது.

மட்டக்களப்பு பிராந்தியம் கண்டி இராசதானிக் காலத்தில் (1469 - 1815) கண்டி இராச்சியத்தின் கீழே நிர்வகிக்கப்பட்டிருந்தது. அக்காரணத்தினால் கண்டியை ஆண்ட மன்னர்கள் பற்றிய செய்திகள் மட்டக்களப்பிலே பாடப்படுகின்ற கோயிற் சடங்குப் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

“ஈசனுடன் நாலுமறை வேதநூல் வாழி
இந்துமதி ஒத்தழகு ஈசுபரி வாழி
வீசு புகளுறு ராச சிங்கனும் வாழி...” (மாரியம்மன் காவியம், வழங்: திரு.இ.விஜயகுமார்)

என்றமைந்த மாரியம்மன் காவியத்தின் வாழிப் பாடல் கண்டியை ஆண்ட இராஜசிங்க மன்னன் பற்றிய செய்தியைப் பதிவு செய்கின்றது. இராஜசிங்கன் என்ற பெயரைத் தாங்கிய பல மன்னர்கள் கண்டியை ஆண்டிருந்தார்கள். இவர்களில் எவ் இராஜசிங்கனை இங்கு குறிப்பிட்டுள்ளார்கள் என்பது ஆய்விற்குரியதாகும். இதேபோல காளியம்மனுக்குரிய அடையல் பத்ததியும் மாந்தையை(மன்னார்) ஆண்ட உறுதரராசன் ஒரு குலத்திற்காக தெய்வத்தினால் பலியெடுக்கப்பட்ட செய்தியைப் பதிவு செய்கின்றது.

"அடையல் உறை அறுகோணமதில் ஆடினாயே ...
உறுதரராசன் அவன் உயிர் வாங்கினாயே
உலகுபுகழ் கம்மாளர் குலமாளும் தாயே..." (காளியம்மன் காவியம், வழங்: அ.கிருபைரெத்தினம்)

இதைவிட, சேரன்செங்குட்டுவனோடு நட்புறவு கொண்டிருந்த இலங்கை மன்னான கஜபாகு மன்னன் சேரனின் அழைப்பை ஏற்று கேரளம் சென்ற போது அங்கு சேரமன்னால் பத்தினி தெய்வமான கண்ணகிக்கு விழாவெடுக்கப்பட்ட போது. அவ்விழாவிலே கலந்து கொண்ட கஜபாகு மன்னன் அப்பத்தினி தெய்வ வழிபாட்டை இலங்கைக்கு கொண்டு வந்த செய்தி பற்றிய குறிப்பும் ஆரையூர் கோயிற் சடங்குப் பாடல்களிலே இடம்பெற்றுள்ளது.

"கஜபாகு மன்னனுடன் இலங்கை வந்து - இங்கே
கண்டிநகர் பெரஹராவில் வந்தவளே தாயே" (கண்ணகியம்மன் காவியம்)

என்ற வரி கண்ணகி வழிபாடு இலங்கைக்கு வந்த செய்தி பற்றி எடுத்துரைக்கின்றது.

"நின்றளவி லனுமனுஞ் சிறிவால அனுமனும்
நீலஅனு மனும்வீர அனமனும் குன்றினில்
இலங்கைதக னஞ்செய்த அனுமனுஞ் சேரவே..." (கணபதிப்பிள்ளை,சி, 1970, ப. 146)

என்ற ஐயனார் காவியப் பாடலில் அனுமான் இலங்கை வந்து இலங்கையைத் தீக்கிரையாக்கிய இராமாயண இதிகாசக் கதைக் குறிப்பு எடுத்தாளப்பட்டுள்ளது.

மேலும்,

"சீர்கொண்ட மண்னேறு முனையிலே – அன்று
சிறப்புடன் சிராம்பிகட்டி அமர்ந்தவள்
பேர்கொண்ட உன் மக்கள் வினைகளை - போக்க
விரும்புடனே விரைந்து ஓடி வந்தவள்" (நல்லலிங்கம். 2008)

என்ற வரிகள் கண்ணகி வழிபாடு ஆரையம்பதி மண்ணில் எவ்விதம் வந்தது என்ற செய்தியை எடுத்துரைக்கின்றன.

தொழிலைப் பிரதிபலிக்கின்ற சடங்குப் பாடல்கள் :

மட்டக்களப்புப் பிரதேசம் பல்வேறுபட்ட தொழில்களைச் செய்கின்ற பல சமூகங்கள் வாழ்கின்ற பிரதேசமாகும். இங்கு தொழிலை அடிப்படையாகக் கொண்ட சமூகப் பிரிவுகளும், அப்பிரிவுகளைச் சார்ந்த தெய்வ வழிபாடுகளும் அதிகம் விரவிக் காணப்படுகின்றன. அதன்படி,

விவசாயிகள்,

மீனவர்கள்,

நகைத் தொழிலாளர்கள்,

ஓலை இழைப்பவர்கள்,

குயவர்கள்,

தச்சர்கள்,

சிகை அலங்காரம் செய்பவர்கள்

எனப் பல்வேறுபட்ட தொழில்களைச் செய்கின்ற சமூகத்தவர்கள் மட்டக்களப்பிலே பாரம்பரியம் வழுவாது வாழ்கின்றமையினை அவதானிக்க முடியும். இவ்வாறான பாரம்பரிய தொழில்களைச் செய்பவர்களுக்கென்று பாரம்பரிய குல வணக்க வழிபாடுகளும், குலதெய்வச் சடங்குகளும் காணப்படுகின்றன. மட்டக்களப்புப் பிரதேசத்தில் காணப்படுகின்ற இந்துசமய கோயில்களும் குலத்தொழிலின் பாற்பட்டவைகளாகும். அக்காரணத்தினால் அங்கு நிகழ்கின்ற வழிபாடுகளில் அவரவர்களின் தொழில் சார்ந்த சிறப்பம்சங்கள் இழையோடிக் காணப்படுகின்றன. உதாரணமாக, நகைத்தொழிலாளர்கள், தச்சர்கள், சிற்பி, கண்ணார், கொல்லன் போன்ற தொழிலாளர்கள் தங்களைப் பஞ்ச கம்மாளர்கள் என்றும், விஸ்வப்பிரம்ம குலத்தில் பிறந்தவர்கள் என்றும் அடையாளப்படுத்துவதுடன் அவர்களின் தொழிலுக்கு முக்கியமான கருவியாக பயன்படுகின்ற பட்டறை எனும் கருவியை அவர்தம் ஆலயங்களின் கருவறையில் காளி தேவியுடன் சேர்த்து பிரதிஷ்டை செய்து வழிபடுகின்றமையைக் குறிப்பிடலாம். இவ்வைந்து கம்மாளர்களும், தங்களுடைய விஸ்வகர்ம புராணத்தின் அடிப்படையிலும், தம் வழக்காறுகளின் அடிப்படையிலும் தங்களுடைய குல தெய்வமாக காளி தேவியைக் கொள்கின்றமையை அவதானிக்க முடியும்.

அவர்களது வழிபாடுகள் செய்யப்படுகின்ற காளி அம்மன் ஆலயங்கள் மட்டக்களப்பு பிரதேசத்தில் அதிகமாகக் காணப்படுகின்றன. அங்கு பாடப்படுகின்ற சடங்குப் பாடல்களில் அவர்களுடைய தொழில் பற்றிய சிந்தனைகளும், குலம் சார்ந்த கருத்துக்களும் குறிப்பிடப்பட்டுள்ளமையைக் கண்டு கொள்ள முடியும்.

“கண்ணாரோ சிற்பர்களோ கட்டாண்மைத் தட்டாரோ

சொன்னாரோ உன் புதுமை சிவலோக மாதாவே…”

ஆராரோ ஆரிரரோ……. ஆராரோ ஆரிரரோ…….. ஆராரோ ஆரிரரோ ஆராரோ ஆரிரரோ……

“பட்டறையில் பள்ளி கொள்ளும் பத்திரையே பார்வதியே

பைங்கிளியே கண்ணுறங்காய் பார்வதியே கண்ணுறங்காய்…” (அடையல் பத்ததி – காளியம்மன் கண்ணுறங்கல், வழங்கியவர் - கி.சர்வேஸ்வரன், பூசகர், ஆரையம்பதி)

மேற்குறித்த பாடலிலே கண்ணார், சிற்பி, தட்டார்(நகைத் தொழிலாளர்) எனும் தொழிலாளர்கள் குறிப்பிடப்படுவதுடன். பட்டறை எனும் அவர்களுடைய தொழிற்கருவியும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளமையினைக் காணலாம்.

அதேபோன்று செங்குந்தர்கள் என்று அழைக்கப்படும் கைக்கோளர்களும், அவர்களுடைய சமூகக் கோயிலிலே அவர்களுடைய தொழில் சார்ந்த வழிபாடுகளை மேற்கொள்கின்றார்கள். அவர்களால் பாடப்படுகின்ற சடங்குப் பாடல்களிலும், அவர்களின் தொழில்முறை சார்ந்த சிந்தனைகள் இழையோடிக் காணப்படுகின்றன.

"செங்குந்தர் குலம் வாழி சீர்சைவ மதம்வாழி

மங்காத புகழ் படைத்த மாரியம்மன் தாள் வாழி..." (மாரியம்மன் பத்ததி, வழங்கியவர்-யசோதரர், உதவிப் பூசகர், ஆரையம்பதி)

என்றமைந்த சடங்குப் பாடல்கள் அவர்தம் தொழிலை அடையாளப்படுத்தியிருப்பதனைக் காணலாம்.

இதேபோன்று நதிக்கரை ஓரங்களை அண்டிவாழும் மீனவர்களின் தொழில்சார்ந்த வழிபாட்டுடன் தொடர்புடைய தெய்வமாக கடல்நாச்சியம்மன் காணப்படுகின்றார். மட்டக்களப்புப் பிரதேசத்தில் கடல்நாச்சியம்மனுக்கென்று தனியான ஆலயங்களும், வழிபாடுகளும் காணப்படுகின்ற போதிலும் பிறதெய்வங்களின் வழிபாட்டிலும் முக்கிய தெய்வமாக வணங்கப்படுகின்ற நிலை காணப்படுகின்றது. அதாவது தீர்த்தமாடுதல்(மஞ்சள் குளித்தல்) சடங்கில் அனைவராலும் வணங்கப்படுகின்ற தெய்வமாக கடல்நாச்சியம்மன் காணப்படுகின்றார். அதன்படி மட்டக்களப்புப் பிரதேசக் கோயில்களில் நிகழ்த்தப்படும் தீர்த்தமாடுதல் சடங்கில் பாடப்படுகின்ற கடல்நாச்சியம்மன் காவியத்தில் இடம்பெறும் பின்வரும் வரிகள் மீன்பிடித்தொழில் செய்பவர்களை அடையாளப்படுத்துகின்றன.

"திருமருவு கயிலயங் கிரியிலே அன்று
தேவர்மலை அரசனிட தேவியென வந்த
வருணகுல வள்ளிமகள் ஆய்வரும்
திரைசேர்
மடந்தையென வருலோக மாதாவின் மீது..." (கடல்நாச்சியம்மன் காவியம், வழங் : ம.விஜயன், காளிகோயில் பூசகர்)

தொல்காப்பியம் குறிப்பிடும் ஐவகை நிலங்களுள் நெய்தல் நிலமும் ஒன்றாகும். இந்நெய்தல் கடலும் கடல் சார்ந்த பிரதேசமாகும். இப்பிரதேசத்திற்குரிய கடவுளாக வருணண் போற்றப்படுகின்றார். மேற்கண்ட பாடலில் வருகின்ற 'வருணகுலம்' என்ற சொற்றொடர் கடல்சார்ந்து வாழ்கின்ற மீனவக் குலத்தைப் பிரதிபலிப்பதோடு, **'வருணகுல வள்ளிமகள்', 'திரைசேர் மடந்தை'** ஆகிய சொற்றொடர்கள் கடலில் வீற்றிருப்பவள் என்ற பொருளில் வருகின்றன. இங்கு குறிப்பிடப்படும் திரை என்பது கடலலையை குறிக்கின்றது.

வணிகம், விவசாயம் போன்ற தொழில்களைச் செய்பவர்களும் மட்டக்களப்புப் பிரதேச ஆலயச் சடங்குப் பாடல்களில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

“மறையவணி இராசனென

வணிகர் வேளாளர்...” (நாகதம்பிரான் காவியம், வழங் : சுவிதன் - பண்டாரியாவெளி)

அதேபோன்று ஆடைச் சலவை செய்யும் தொழில் செய்பவர்களின் குல தெய்வமாகப் பெரியதம்பிரான் வணங்கப்படுகின்றார். மாரியம்மனுடைய உற்பத்தி வரலாற்றில் இச்சலவைத் தொழில் செய்பவர்களின் வண்ணார் சேரிசென்று மாரியம்மாள் அங்கே நீராடி மாத்துடுத்து தண்ணீரும் சோறும் அருந்தினார் என்ற குறிப்பு காணப்படுகின்றது. இதனடிப்படையில் அத்தொழிலாளர்களின் வழிபடு தெய்வமாக மாரியம்மனும் விளங்குகின்றார். இதன்படி மட்டக்களப்புப் பிரதேசத்தில் இத்தொழிலை மேற்கொள்பவர்கள் வழிபடுகின்ற ஆலயமாக பல மாரியம்மன் ஆலயங்கள் காணப்படுகின்றன. அக்கோயிலிலே கட்டாடி முதலியார் எனும் அவர்களின் குல முதல்வருக்கு பந்தலிட்டு சடங்கு நிகழ்த்துகின்ற முறை அத்தொழிலை அடையாளப்படுத்துவதாக அமைந்துள்ளது.

நம்பிக்கையைப் பிரதிபலிக்கின்ற சடங்குப் பாடல்கள் :

நம்பிக்கை என்பது ஒரு சமுதாயத்தின் பண்பாட்டு மரபினை அறிவிக்கக் கூடியது. ஒரு தனிநபரோ, சமுதாயமோ நிகழ்த்துகை மீது கொள்கின்ற உறுதிப்பாடு நம்பிக்கை எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. சில நம்பிக்கைகள் நிகழக்கூடியவையாகவும், சில யதார்த்தத்திற்கு அப்பாற்பட்டவையாகவும் அமைந்திருக்கும். நாட்டுப்புற மக்களது நம்பிக்கைகள் அவர்களின் சக்திக்கு அப்பாற்பட்ட காரியங்களை நிறைவேற்றுதல் தொடர்பாகவும், அதை நிறைவேற்றுபவர் தொடர்பாகவும் அமைந்திருக்கும்.

பலி மீதான நம்பிக்கைகள் :

மனிதனுக்குள் இருக்கும் மிருக குணத்தை மிருகத்தின் ரூபங்கொண்டு பலியிடுதல் எனும் தத்துவார்த்தத்தின் அடிப்படையில் வினைகளைத் தீர்த்துக் கொள்ள பதிலீடான பரிகாரச் செயன்முறையாகவும் பலியிடுதல் கொள்ளப்படுகின்றது.

“ஆட்டுப் பலி அருந்தும் அண்டரெண்ட மாகாளி...” (காளியம்மன் அகவல்)

“பலியாடு கோழிகளை வயிரவ சுவாமி

பிளந்துதிரமே தான் குடிப்பார் வயிரவ சுவாமி...” (வயிரவர் தாலாட்டு)

எனும் சடங்குப் பாடல்கள் வரிகள் பலியிடுதல் மீதான நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகளைப் பிரதிபலித்துக் காட்டுகின்றன.

“குழந்தைக்குப் பதிலாக காடேறி அம்மா

குக்குடத்தை நான் அளித்தேன் காடேறி அம்மா” (காடேறியம்மன் தாலாட்டு)

என்ற காடேறியம்மன் தாலாட்டு வரிகள் குழந்தையைப் பாதிக்கும் தெய்வமாக கருதப்படும் காடேறியம்மனுக்கு அக்குழந்தைக்குப் பதிலாக குக்குடம் எனும் கோழியை வழங்கும் பதிலீட்டுப் பலி முறையை படம்பிடித்துக் காட்டுகின்றன. அக்குழந்தையை

அத்துர்தேவதையின் பாதிப்பிலிருந்து விடுபட வைப்பதற்கு கோழி பதிலீடாகப் பயன்படும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இச் சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன.

நேர்த்திக்கடன் வழிபாடுகள் :

குறிப்பிட்ட ஒரு தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காக இறைவனிடம் கடுமையான ஒரு வேண்டுதலை முன்வைத்து அக்குறிப்பிட்ட தேவை நிறைவேறியதன் பின்னர் அவ்வேண்டுதலை நிறைவேற்றுதல் நேர்த்திக்கடன் எனக் கொள்ளப்படுகின்றது. இம்மரபு பின்பற்றப்பட்டு வந்ததற்கான சான்றுகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. நேர்த்திக்கடன் செய்வதன் அவசியத்தை சிலப்பதிகாரத்தில்,

"மறவர் குடியில் வழிப்பறிக் கொள்ளையால் செல்வம் பெறுகவில்லை. அறநெறியில் வாழுங் குடியினர் போலச் சினங்குறைந்து செருக்கின்றி வாழ்கின்றனர். கொற்றவை வழிபாடு செய்யாத காரணத்தினால் இந்நிலை உண்டாயிற்று. மேலும் மானை வாகனமாகக் கொண்ட கொற்றவை தான்பெற வேண்டிய கடனைப் பெற்றால் தான் மறவர்களுக்கு வில்லாள் உண்டாகும் வெற்றியைத் தருவாள்" (வேட்டுவ வரி: பாடல் வரி : 10 -15)

என தெய்வத்திற்கு செலுத்தும் நேர்த்திக்கடனின் அவசியத்தை வேட்டுவ வரி உணர்த்துகின்றது.

இது இறைவனுக்கும் பக்தனுக்கும் இடையிலான ஓர் உடன்படிக்கை போன்றதாகும். 'இறைவா தாங்கள் எனக்கு இதனை நிறைவேற்றித் தந்தால் நான் தங்களுக்கு இதனைச் செய்வேன்' என்ற உடன்படிக்கையின் அடிப்படையில் இந்நேர்த்திக் கடன்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வேண்டுவதனால் குறித்த தேவையை இறைவன் விரைவாக ஈடேற்றித் தருவான் என்று மக்கள் நம்புகின்றார்கள்.

"உன்னையே உறவாய் கொண்டேன்
உடலுயிர் உனக்கே ஈந்தேன்
என்னையே ஆண்டு கொண்டாய்
இனி எனக்கு உறவும் நீயே
என்னையே தள்ளல் வேண்டாம்
ஏழை நான் கேட்கும் யாவும்
முன்னமே தந்து என்னை
முதன்மையாய் வாழ வைப்பாய்..." - காளியம்மன் கவச துதி (காளியம்மயன் அடையல் பத்ததி)

என்றமைந்த பாடல் வேண்டுதல் உடன்படிக்கையின் பாற்பட்டதாகும். இதேபோல மடிப்பிச்சை எடுத்தல், காவடி எடுத்தல், அலகு குத்துதல், தீச்சட்டி எடுத்தல், அங்கப்பிரதிஸ்டனம் செய்தல், அடி அளித்தல் போன்றவை தாம் வேண்டிய வேண்டுதல்களுக்குரிய நேர்த்திக்

கடன்களாக நாட்டுப்புற மக்களால் பின்பற்றப்படுகின்றன. இதே நடைமுறைகள் மட்டக்களப்புப் பிரதேச மக்களாலும் மேற்கொள்ளப்படுகின்றன.

தாயத்து அணிதல் :

துஷ்ட தேவதைகளின் பாதிப்புகளிலிருந்தும், நோய்களிலிருந்தும் பாதுகாப்பு பெறும் பொருட்டு தங்கம், வெள்ளி, செப்பு, வங்கம்(ஈயம்) முதலிய உலோகங்களில் தகடுகளையும், அட்சர கூடுகளையும் செய்து மந்திர உச்சாடனத்தோடு உடலிலே அணிந்து கொள்ளுதல் தாயத்து அணிதல் என அறியப்படுகின்றது. இவ்வாறு தாயத்து அணிதல் துர்தேவதைகளையும், நோய்களையும் தம்மிடமிருந்து விலக்கி வைக்கும் என்று மக்கள் நம்புகின்றார்கள். இந்நம்பிக்கை நாட்டுப்புற மக்கள் மத்தியில் இன்றும் வழக்கிலுள்ளது.

"பிணமொடு ஊத்தை உடன்படத் தின்னும்
பிள்ளைகொள்ளி பிணங்காட்டு மகாளி
ஊத்த குடியன் உதிரமா காளி
உடல்விட்டு விலக தகடொடு கூடு
தந்திர யந்திரம் தாவித்து இட்டேன்" (தகடுகட்டும் பாட்டும் முறையும் - மந்திர ஏடு, வழங்கியவர்- அ.கிருபைரெத்தினம், பூசகர், ஆரையம்பதி.)

இவ்வுரை நடையிலமைந்த பாடலைப் பாடியே பூசகர்கள் தாயத்துக்களை முறைப்படி தயாரித்து மக்களுக்கு அணிவிக்கிறார்கள். (ஆய்வாளர் அவதானம்.

தீ மிதித்தல் :

நீளமான குழியில் கொள்ளிகளை இட்டு பயபக்தியாலும், மந்திரங்களைச் சேர்த்தபடி தீயை மூட்டி தனலாக்கி, அத்தனலின் மீது நடந்து செல்லல் தீமிதித்தல் எனக் கொள்ளப்படுகின்றது. இவ்வாறு தீயில் இறங்குதல் தம்மிலுள்ள தீய வினைகளையும், நோய்களையும் எரிக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் ஆலயங்களில் இத்தீமிதப்புச் சடங்கு நிகழ்த்தப்பட்டு வருகின்றது. திரௌபதியம்மன் யாகத் தீயில் உதித்தவர்(யக்ஞசயனி), சீதாதேவியார் தன் கற்பை நிருபிக்க தீயில் இறங்கி மீண்டார், தக்கன் மகள் தாட்சாயினி யாக குண்டத்தில் தன்னுடைய உயிரைத் தியாகித்தவர் போன்ற புராண இதிகாசக் குறிப்புகளைத் தழுவி இத்தீமித்தல் வழிபாடு அரங்கேற்றப்படுகின்றது.

குற்றங்களையும், மாசுக்களையும் நீக்கவல்ல சக்திகளாக நீரும் அக்கினியும் கொள்ளப்படுகின்றன. நீர் தான் அசுத்தத்தை ஏற்று பிறரைத் தூய்மைப்படுத்துகின்றது. அக்கினி தானும் அசுத்தப்படாது பிறரது அசுத்தத்தையும் நீக்குகின்றது. இதன்படி தீமிதித்தல் வழிபாடு தம்மைப் புனிதமாக்கும் என்று நாட்டுப்புற மக்கள் நம்புகின்றார்கள்.

"அக்கினியல் தான் பிறந்தாய் திரௌபதை தாயே
அமர்ந்தருள வேண்டுமம்மா திரௌபதை தாயே"

“ இந்தனம் இட்டெரித்தேன் திரௌபதித் தாயே
இருந்துதருள வேணுமம்மா திரௌபதித் தாயே”

(திரௌபதையம்மன் தாலாட்டு)

என்றமைந்த தாலாட்டுப் பாடல்கள் தீமித்தல் சடங்கின் போது திரௌபதை அம்மனுக்குப் பாடப்படுகின்றன. இப்பாடல்களில் வரும் **‘அமர்ந்தருள வேண்டுமம்மா’** என்ற வரிகள் அக்கினி தன்னுடைய அகோரத்தை விட்டு தணிந்தருள வேண்டுமென்று வேண்டப்படுவதாகவும், **‘இருந்தருள வேணுமம்மா’** என்ற வரிகள் அக்கினியில் அம்மன் குடியிருக்க வேண்டும் என்றும் வேண்டப்படுவதாக அமைகின்றன.

படையல் படைத்தல் :

தெய்வங்களுக்கும் முன்னோர்களுக்கும் பழந்தமிழர்கள் உணவுகளைப் படைக்கும் வழக்கத்தை கொண்டிருந்தார்கள். இதனை,

“புனவன் துடவை பொன் போல் சிறுதிணை
கடிஉண் கடவுட்கு இட்ட செழுங்குரல்
அறியாது உண்ட மஞ்ஞை” (குறுந்தொகை: 105)

என்ற குறுந்தொகைப் பாடல் வரிகள் சுட்டி நிற்கின்றன. அதாவது இறைவனுக்கு படைப்பதற்காக எடுத்து வைக்கப்பட்ட சிறுதிணை பற்றிய செய்தியை எடுத்துரைக்கின்றன. இம்முறையைத் தழுவி இன்றும் தமிழ் மக்கள் இறைவனுக்குப் படையல் இடும் வழக்கத்தைப் பேணி வருகின்றார்கள்.

இதேபோன்று, சிலப்பதிகாரத்திலும் படையல் படைத்தல் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றிருப்பதை அவதானிக்க முடிகின்றது. அந்தவகையில்,

“கடுஞ்சூல் மகளிர் கைதொழுது
பெருந்தோட் சாலினி மடுப்ப...” (மதுரைக் காஞ்சி : 608 – 610)

என்ற வரிகள் மதுரை நகரில் சூல்கொண்ட மகளிர் யாழ், சிறுபறை முதலிய இசைக் கருவிகள் முழங்க படையல் பொருட்களை ஏந்திச் சென்று தேவராட்டியுடன் சேர்ந்து தெய்வத்திற்கு படையல் செய்து வழிபட்ட குறிப்பு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தெய்வங்களுக்கென்றும் பிரியமான உணவுப் பண்டங்களை சுத்தமாக முறைப்படி சமைத்து அதை இறைவனுக்கும், முன்னோர்களுக்கும் படையலிடுகின்றார்கள். இது பற்றிய குறிப்புகளை மட்டக்களப்புப் பிரதேசச் சடங்குப் பாடல்களிலும் காண முடிகின்றது.

“பாலாலே பள்ளயந்தான் ஆதிசக்தி நாக கன்னி
பக்குவமாய் ஏற்றிடம்மா ஆதிசக்தி நாக கன்னி”

(நாககன்னி தாலாட்டு, வழங்: விஜயகுமார்)

"ஆனதின்னி கஞ்சாவாம் பள்ளயப் பேச்சி
அருந்திட வேணுமம்மா பள்ளயப் பேச்சி..." (பேச்சியம்மன் தாலாட்டு, வழங்: மேலது)

"அள்ளி அமுதை அருந்த வெண்ணிப்
படைப்பி லிருக்கும் பலகார முண்டு
வாழைப் பழத்தை வாரி விழுங்கி
கஞ்சா மதுவைக் கன்னி யருந்திக்
கள்ளுடன் சாராயம் கனவெறி யாகி..." (பேச்சியம்மன் அகவல், வழங்: புஸ்பன், பேச்சியம்மன் ஆலயப் பூசகர், ஆரையம்பதி))

"அப்பமும் அவலும் ஆலங்காயும்
செப்பிய மாங்கனி திகழ்தட்டு ரொட்டியும்
தேங்கதலிப் பழம் செப்பிய பலாப்பழம்
அத்தனை யெல்லா மருந்திய வயிரவா..." (வயிரவர் அகவல், வழங்: ராசா, ஆலையடி ஆதிவைரவர் ஆலய தலைவர்)

"பாலாலே பொங்கலிட்டு பரிவாய் அமுதளிப்போம்
காத்திடுவாய் எங்குலத்தை காளிக்கா தேவியரே
பட்டாலைக்குள்ளே அம்மா பழம் பாக்கு வெத்திலையும்
கட்டாய் மடை தருவோம் காளிக்கா தேவியரே" (காளியம்மன் கண்ணுறங்கல் - அடையல் பத்ததி, வழங்: அ.வடிவேல், காளிகோயில் நிர்வாக வபை உறுப்பினர்)

"குலவு வெள்ளிலை செங்கரும்பினொடு பூசுமடல்
குங்கிலிய தீபமொடு செங்கமல மலரும்
இலகுமகில் சந்தனங் கஸ்தூரி கற்பூர
மிளநீ ருடன் மடைக ளேற்றுக் காத்தவனே..." (வயிரவர் காவியம், வழங்: ராசா, ஆலையடி ஆதிவைரவர் ஆலய தலைவர்)

போன்ற சடங்குப் பாடல்கள் படையல் படைத்தல் பற்றிப் பேசுகின்றன.

ஆற்றுப்படுத்தல் :

ஆற்றுப்படுத்தல் என்பது 'வழிப்படுத்தல்' என்று பொருள் கொள்ளப்படுகின்றது. அதாவது, பரிசில் பெற்ற ஒருவன் பரிசில் பெறாத ஒருவனைப் பரிசில் வழங்கியவன்பால் வழிப்படுத்தலாகும். வழிப்படுத்தலை எடுத்துரைக்கும் பாடல்கள் ஆற்றுப்படைப் பாடல்களாகும். சங்க இலக்கியங்களில் பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை, திருமுருகாற்றுப்படை போன்றன ஆற்றுப்படை நூல்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில், மட்டக்களப்புப் பிரதேச சடங்குப் பாடல்களிலும் ஆற்றுப்படை அமைப்பிலான பாடல்களின் இருப்பினையும் காணமுடிகின்றது.

"நாதனார் நான்முகன் கட்டளை இருந்தாலும்
நாடுமோ உனையன்றி நம்பினபேர்க்கு
வேதனைகள் முடுகுமோ? நோய்பிணிகள் அணுகுமோ?
வேறுமொரு துட்டப் பசாசு வினை வருகுமோ?
பாதமே கெதியென்று நம்பினபேர்க்கு
பயமுண்டோ செத்தபிணம் மற்றுயிர் கொல்லாதோ
நீதியே உன்னை நினைப்பவர் தமக்கு" (மாரியம்மன் பத்ததி, வழங்: ராசா, ஆலையடி ஆதிவைரவர் ஆலய தலைவர்)

என்ற மாரியம்மன் காவியப்பாடல் வரிகள் துன்புற்று இருக்கின்ற ஒருவரை துன்பம் தீர்க்கின்ற மார்க்கத்தை நோக்கி ஆற்றுப்படுத்துவதாய் அமைந்துள்ளது. படைத்தவனான நான்முகனது கட்டளை இருந்தால் கூட அவரது கட்டளைகளையும் விட காக்கின்ற சக்தியாக மாரியம்மன் விளங்குகின்றாள் என்றும், அவரை நம்பினால் துன்பம் அகன்று இறந்த ஒருவர் கூட மற்றுயிர் கொள்வார் என்ற நம்பிக்கையை விதைத்து துன்பமுற்றவரை மாரியம்மனிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

அறிவியலைப் பிரதிபலிக்கின்ற சடங்குப் பாடல்கள் :

ஒரு விடயத்தை அறிவைக் கொண்டு ஆராயும் செயல் அறிவியல் ஆகும். அந்தவகையில், அறிவியலின் பகுதிகளாக வானியல், சோதிடவியல், கணிதவியல், மருத்துவம் போன்றன கொள்ளப்படுகின்றன. புராதன மக்களின் வாய்மொழி இலக்கியங்களில் ஒன்றான சடங்குப் பாடல்களிலும் அம்மக்களின் அறிவு முதிர்ச்சிக்கேற்ற அறிவியல் சிந்தனைகள் எடுத்தாளப்பட்டுள்ளன.

சடங்குப் பாடல்களில் வானியல் சிந்தனைகள் :

"ஒன்பது கிரகம் அதை ஆளும் நாயகி நீ
உற்ற நவகோணமதில் ஆடும் பைரவி நீ
ஒளிநிறை சூரியன் சந்திரன் யாவும் நீ..." (காளியம்மன் அடையல்பத்ததி)

எனவரும் காளியம்மன் காவியம் கிரகங்கள், சூரியன் மற்றும் சந்திரன் முதலான அண்டவியல் சிந்தனைகளை எடுத்துரைத்துகின்றது.

"ஈரேழு லோகமெல்லாம் ஈடேற்றும் ஆதிசிவன்..."

"சந்திரரை சூரியரை தானவரை வானவரை
இந்திரரை தேவர்களை ஈரேழு உலகமதை..." (நல்லலிங்கம், 2008)

எனும் பாடல் வரிகள் ஈரேழு பதினான்கு லோகங்கள் பற்றிய செய்தியைக் குறிப்பிடுகின்றன. அதாவது, மனிதர்கள் வாழும் பூமிக்குக் கீழே ஆறு உலகங்களும், பூமி ஏழாவது உலகம் என்றும், பூமிக்கு மேலே ஏழு உலகங்கள் உண்டு என்றும் கூறப்பட்டு வருகின்ற அண்டவியல் பற்றிய புராணச் செய்தியைத் தெளிவுபடுத்துகின்றன.

சடங்குப் பாடல்களில் மருத்துவம் :

மருத்துவம் என்பது நோயையும், நோயைத் தணித்தலையும் அடிப்படையாகக் கொண்டது. அதன்படி பாமர மக்கள் நோய்களுக்கான அடிப்படையான விஞ்ஞான விளக்கத்தை அறியாத காலத்தில் அந்நோய்களை தெய்வங்களின் தண்டணைகளாகவும், துஷ்ட சக்திகளின் பாதிப்புக்களாகவும் கருதினார்கள். அப்பாங்கிலேயே அந்நோய்களைக் குணமாக்குவதற்கான வழிபாடுகளையும் கட்டமைத்தார்கள். இதனடிப்படையை வெளிக்காட்டுவதாக சடங்குப் பாடல்களில் சில குறிப்புகள் காணப்படுகின்றன.

"மகாதேவனார் முத்துமாலைதனை கையேந்தி
இந்த நல்ல முத்தருமை யானறிய வேண்டுமென்று
ஆதிசிவன் மேனியிலே அள்ளி யிட்டாய் முத்ததனை
காலகண்டன் மேனியிலே கனமுத்துமே பரந்து
வருத்த மிகவாகி வன் நெருப்பாய் நின்றதுவே
பொறுக்க அரிதாகையினால் போதமுடன் ஆதிசிவன்..." (மாரியம்மன் அகவல், ஆய்வாளர் அவதானம்)

என்ற மாரியம்மன் அகவல் அக்காலத்தில் தீர்க்கமுடியாதிருந்த அம்மை நோயை குறிப்பிடுகின்றது. அம்மை நோயினால் ஏற்படும் உடல் எரிவு **'வன் நெருப்பாய் நின்றதுவே'** என்ற பாடல் வரியினூடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு, அம்மை நோயைப் பற்றிக் குறிப்பிடும் அகவல் அந்நோய்கான தீர்வினையும் ஒருசேர குறிப்பிடுகின்றது.

"பத்திரத்தை தான் பரப்பி
படுக்கையாய் தான் விரித்து
பாலகனை அதில் கிடத்தி
பாடுமையா தாலாட்டை..." (மாரியம்மன் அகவல், ஆய்வாளர் அவதானம்)

எனும் வரிகள் அம்மை நோய்க்கான சிறந்த மூலிகையாக வேப்பிலையைக் குறிப்பிட்டுச் செல்கின்றன. இந்தியாவில் அம்மை நோய்க்கான தடுப்பூசி கண்டுபிடிக்கப்படும் வரை இம்மருத்துவ முறையே அம்மை நோய்க்கான மருத்துவமாக விளங்கியது. தற்காலம் வரையிலும் கூட அம்மை நோய் இந்துசமய மக்களால் தெய்வ பாவத்தால் வந்த நோயாகவே கொள்ளப்படுவதுடன், அந்நோயைத் தீர்ப்பதற்கான வழியாகவும் மேற்கண்ட முறையே மரபுவழியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமை நோக்கத்தக்கது.

சடங்குப் பாடல்களில் சோதிடவியல் :

சோதிடம் என்பதன் பொருள் ‘‘ஒளிதரும் நட்சத்திரங்களின் தூதுச் செய்தி’’ என்பதாகும். இந்துசமய மரபிலும் பழந்தமிழர் வாழ்விலும் காலக்கணிப்பீடும் காலத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்வியற் செயற்பாடுகளும் சோதிடவியலின் பாற்பட்டது. இருபத்தேழு நட்சத்திரங்கள், சூரியன், சந்திரன் மற்றும் ஒன்பது கோள்கள் என்பனவற்றின் இயக்கத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் பூமியின் இயற்கை அம்சங்களையும், பூமியில் வாழ்கின்ற உயிர்களையும் நேரடியாகப் பாதிக்கும் தன்மை கொண்டவை. உதாரணமாகக் பூரணைத் திதியில் கடலின் சீற்றம் அதிகமாகக் காணப்படுதலைக் குறிப்பிடலாம். இத்தகைய வானியல் மாற்றங்களை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீடுகள் சோதிடவியலில் காத்திரமான பங்களிப்பை வகிக்கின்றன.

தமிழ் மக்களது வாழ்வியற் சடங்குகளும், ஆலயச் சடங்குகளும் திதி நிர்ணயத்தோடு சம்பந்தங் கொண்டவை. எத்தகு சடங்குகளை எத்தகு காலப்பகுதியினுள் செய்ய வேண்டுமென்று தமிழர்களின் பஞ்சாங்கம் குறிப்பிடுகின்றது. பஞ்சாங்கம் என்பது யோகம், கரணம், திதி, நாள் நட்சத்திரம் எனும் ஐந்து அங்கங்களைக் கொண்டதாகும். இவ்வைந்தும் சரியாக பொருந்தியிருக்கின்ற வேளையிலே சுப கருமங்களை முன்னெடுக்கின்ற வழக்கம் சங்ககாலம் தொட்டே மக்களின் நிகழ்நிலையில் காணப்பட்டிருந்தது.

அதன்படியே மட்டக்களப்பு பிரதேச ஆலயங்களில் நிகழ்த்தப்படுகின்ற வழிபாட்டுச் சடங்குகள் பஞ்சாங்க கணிப்புடன் காலநேரம் குறிக்கப்பட்டு நிகழ்த்தப்படுகின்றன. கிழக்கிலங்கையிலும் குறிப்பாக, மட்டக்களப்பின் பல பிரதேசத்திலும் மேற்கொள்ளப்படுகின்ற கண்ணகியம்மன் வழிபாடுகள் வைகாசி மாதத்தில் இடம்பெறுவதோடு வைகாசித் திங்களைத் திதியாகக் கொண்டு குளிர்த்தியாடும் வழக்கத்தைக் கொண்டுள்ளன.

“வைகாசி திங்கள் வருவேன்...” (நல்லலிங்கம், 2008)

என்று கண்ணகியம்மன் குறிப்பிட்டதாக குறிப்பிடுகின்ற கண்ணகியம்மன் வழக்குரையை அடிப்படையாகக் கொண்டு குறித்த கால திதியில் கிழக்கிலங்கையில் கண்ணகியம்மன் வழிபாடு மேற்கொள்ளப்படுகின்றது. வைகாசி திங்கள் என்று குறிப்பிடப்பட்ட குறிப்பை அடிப்படையாகக் கொண்டு சில கண்ணகியம்மன் ஆலயங்களில் வைகாசி மாதத்தில் வருகின்ற முதல் திங்கட் கிழமையிலும் சில ஆலயங்களில் வைகாசி மாத பூரணை திதியிலும் கண்ணகியம்மனுக்கான குளிர்த்தி வழிபாட்டை மேற்கொள்கின்றனர்.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைவுபெற்றுள்ள மாரியம்மன் சடங்குகள் ஆனிப் பூரணையைத் திருக்குளிர்த்தியாகக் கொண்டும் காளியம்மன் ஆலயச் சடங்கு ஆடிஅமாவசை அடுத்து வருகின்ற முன்நிலவு பின்னிருண்டு திதியிலும் பலிகொடுக்கும் சடங்கோடும் நிகழ்த்தப்படுகின்றன.

கணிதவியல் :

எண்கணிதத்தை அடிப்படையாகக் கொண்டது கணிதவியல். இது மனித வாழ்வியலோடு ஒட்டியதோடு, அதன் உதவியின்றி எதுவும் நடைபெறாது. இதனாலேயே திருவள்ளுவரும்,

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு" (குறள்: 392)

என்றும், எண் - கணக்கு பற்றி,

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"

என்று ஔவையாரும் கணிதவியலின் சிறப்பினை எடுத்துரைத்துள்ளனர்.

இத்தகு கணிதவியல் சிந்தனையானது பழங்காலந் தொட்டு மக்கள் வாழ்வியலில் வழக்கிலிருந்து வந்துள்ளது. அந்தவகையில், சங்க இலக்கியங்களில் எண்கணிதம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, பரிபாடலிலே,

"நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும்
மைஇல் கமலமும் வெள்ளமும்" (பரி : 2.13 – 14)

என்ற பாடல்வரிகள் எண்கணிதம் பற்றிக் கூறுகின்றது. இதில் வருகின்ற ஆம்பல் என்பது பழந்தமிழர் கணக்கிட்ட ஆயிரம் கோடி என்ற பேரியல் எண் வெள்ளம் கோடி கோடியைக் குறிக்கின்றது. கேடியை விடவும் பெரிய எண்களுக்கும் தமிழில் பெயர் இருப்பது தமிழரின் தனிச் சிறப்பினையே எடுத்துரைக்கின்றது. இக்கணிதவியல் சார்ந்த குறிப்புகளும் சடங்குப் பாடல்களில் ஆங்காங்கு பொதிந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. அந்தவகையில்,

"ஈரேழு லோகமெல்லாம் ஈடேற்றும் ஆதிசிவன்..." (கையேடு குறிப்பு: வழங்: செல்வநாயகி,க,.)

"பன்னிரெண்டாயிரம் பரிகலம் சூழவும்
முன்னிரெண்டாயிரம் தேர்ப்படை நீளவும்..."
(காளியம்மன் அடையல் பத்ததி, வழங்: கயசீலன், காளிகோயில் உதவிப் பூசகர்)

"பன்னிரெண்டாயிரம் கோடிபரிகலமோடே
பரியேறி பெருபூசை கொள்பபா..." (மேலது)

போன்றவற்றில் கணிதவியல் குறிப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

பொது நலன் வேண்டல் :

தன்னைப் போன்றே சக உயிர்களையும் எண்ணுதல் சமத்துவமாகும். உலகிலுள்ள அனைத்துயிர்களும், அனைத்து சமூகமும் ஒரே தன்மையில் நோக்கப்படுதல் சமத்துவத்திற்கு உறுதியளிக்கக் கூடியதாகும். கனியன் பூங்குன்றனாரது 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற

பாடல் வரிகளிற்கேற்ப உலகப் பொதுமையைப் எடுத்துரைக்கின்ற போக்கினையும் சடங்குப் பாடல்களிலும் கண்டு கொள்ள முடிகின்றது. அந்தவகையில் மட்டக்களப்பு பிரதேச ஆலயங்களில் பாடப்படுகின்ற சடங்குப் பாடல்களிலும் இத்தன்மையினை அவதானிக்க முடியும்.

"உலகு உள்ளோர் பிணி நோய்கள் தீர மங்கலமே..." (காளியம்மன் அடையல் பத்ததி)

"எண்திசை மன்னர்கள் செங்கோல் அரசும்
இப்புவியில் உள்ளவரும் வாழி
சங்கைபெறு சர்வநில அரசுகளும் வாழி..." (காளியம்மன் அடையல் பத்ததி)

"சீர்வாழி மறைவாழி சீர்சைவ மதம் வாழி
ஊர்வாழி உலகுநிறை மாந்தர்களும் வாழி" (காளியம்மன் கண்ணுறங்கல் - அடையல் பத்ததி)
"வேதவிதி யாகம புராணமிக வாழி
மேதினியில் உள்ளவர்கள் யாவரும் வாழி" (மேலது)

போன்ற சடங்குப் பாடல்கள் உலகிற்கும், உலக மக்களுக்கும் நன்மை வேண்டி பொதுமையில் நின்று பாடப்பட்டவைகளாக அமைந்துள்ளன.

ஜீவகாருண்யத்தைப் பிரதிபலிக்கின்ற சடங்குப் பாடல்கள் :

உயிர்கள் மீது கொள்கின்ற கருணை ஜீவகாருண்யமாகின்றது. அதன்படி சடங்குப் பாடல்களிலும் பிற உயிர்களின் நன்மையை வேண்டிய வேண்டுதல்கள் இடம்பெறுகின்றமையைக் காணமுடிகின்றது.

"நாட்டின் நோய் மாற்றி நன்றாய் கிருபை செய்து
மாட்டின் நோய் மாற்றும் மடை மயிலே கண்வளர்வாய்" (காளியம்மன் கண்ணுறங்கல் - அடையல் பத்ததி)
"ஏரான கஜமுகன் பரமசிறி குயில்கள்
எங்கும் உலா வரும் உயிரினங்கள் வாழி" (காளியம்மன் ஒப்புக் கொடுக்கும் பாடல் - அடையல் பத்ததி)
"ஆலயம் தொழுதேவு தேவாதி வாழ்க
வறிய மனுவோர் மாடு, கன்றுகளும் வாழ்க" (காளியம்மன் ஒப்புக் கொடுக்கும் பாடல் - அடையல் பத்ததி) என்றவாறு ஜீவகாருண்ய குறிப்புகள் மட்டக்களப்புப் பிரதேச ஆலயச் சடங்குப் பாடல்களில் இழையோடிக் காணப்படுகின்றன.

முடிவுரை

பத்ததிகள் எனும் சடங்கிலக்கண நூல்கள் காலம் காலமாக நடைபெற்றுவரும் கையளித்தல் பாரம்பரியம் மூலமும், இயற்கை அனர்த்தங்கள் மூலமும் அழிவைச் சந்தித்துவருகின்றன. இவற்றை

விரும்பிக் கற்கின்ற இளைய சமுதாயமும் மிகக் குறைவு. நாகரிகமடைந்து வரும் மக்களின் மனதிலும் பத்ததிகள் கீழ்மட்டக் எண்ணோட்டத்திலேயே எடுத்தாழப்படுகின்றன. ஆயினும், செம்மை பொருந்திய ஆகமம்சார் இலக்கியங்களுடன் சீர்தூக்கிப் பார்க்கும் அளவிற்கான தகுதியைப் பத்ததிகள் பெற்றிருக்கின்றமையும் மறுப்பதற்கில்லை. பத்ததிகளில் பன்முகப்பட்ட பண்பாட்டம்சங்கள் காணப்படுகின்ற போதிலும் அவற்றினை அடியொற்றிய சடங்குப் பாடல்களில் காணப்படும் பண்பாட்டம்சங்களை மையப்படுத்தியே இவ்வாய்வு கட்டமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறான பத்ததிசார் பாடல்களில் காணப்படும் பக்தி, கருணை, சமத்துவம் போன்ற இன்னோரன்ன பண்பாட்டம்சங்கள் இங்கே தெளிவுற விளக்கப்பட்டுள்ளன. இப்பண்பாட்டம்சங்களை விளக்குவதன் ஊடாக பத்ததிசார் சடங்குப் பாடல்கள் ஆய்வுப் புலக் களத்திற்கு வெளிக்கொண்டு வரப்படுவதுடன் அவற்றின் சிறப்புக்கள் நாகரிகமடைந்து வரும் சமுதாயத்திற்கு புலப்படுத்தப்படும் என்று கருதப்படுகின்றது.

உசாத்துணை

1. கணபதிப்பிள்ளை,ச., (1971), ‘‘மகாமாரித் தேவி திவ்விய காரணி’’, விவேகானந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.
2. பொன்னம்பலம்,சி,க.,(2008), ‘‘சரீரம் - நிஷப்தம்’’, ஸ்ரீமஹாவிஸ்ணு தேவஸ்தானம், தாழங்குடா.
3. புலியூர் தேசிகன்., (2017), ‘‘தொல்காப்பியம் - முழுவதும்’’, பாரிநிலையம், சென்னை.
4. இரகுநாதன்,ம., குமரன்,ஈ., (2020), ‘‘பன்முக நோக்கில் சங்க இலக்கியம்- ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு’’, தமிழ்த்துறை, யாழ்ப்பபாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
5. இரகுநாதன்,ம., குமரன்,ஈ., அருந்தாகரன்., (2020), ‘‘வரலாற்றுப் போக்கில் தமிழியல் ஆய்வுகள்’’, தமிழ்த்துறை , யாழ்ப்பபாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
6. கிராமிய கோயிற் பத்ததிகள் (காளியம்மன் பத்ததி, அடையல் பத்ததி, கும்பப் பத்ததி)
7. ஏடுகள் (பூசகர் மந்திர ஏடுகள்)

செவ்வி கண்டோர் விபரம்

1. திரு.விஸ்வபிரம்மஸ்ரீ,கி.சர்வேஸ்வரன் ஐயா, வயது – 26, பூசகர், ஆரையம்பதி – 03.
2. திருமதி.பொ.புஸ்பராணி, வயது – 52, மருத்துவிச்சி, முனைத்தீவு.
3. திரு.அ.கிருபைரெத்தினம், வயது – 52, நகைத் தொழிலாளி, ஆரையம்பதி – 02.
4. திரு.இ. விஜயகுமார், வயது – 54, கோயிற் தலைவர், களுவாஞ்சிக்குடி.
5. திரு.அ. தட்சணாமூர்த்தி, வயது – 48, கோயிற் தலைவர், தாழங்குடா.
6. திரு.ஆ.கார்த்திகேசு ஐயா, வயது – 68, ஆயுர்வேத வைத்தியர், பூசகர்,வவுணதீவு.
7. திரு.ம.ராசா, வயது – 40, ஆலையடி ஆதிவைரவர் ஆலய தலைவர், ஆரையம்பதி – 03.
8. செல்வன். ம.சுவிதன், வயது – 25, செயலாளர், பண்டாரியாவெளி.
9. திரு.எஸ்.காந்தன் ஐயா, வயது – 62, பூசகர், பெரியபோரதீவு.
10. திரு.ப.யசோதரர், வயது – 31, உதவிப் பூசகர், ஆரையம்பதி - 1

மட்டக்களப்பு இந்துக்களின் வழிபாட்டில் குலக்குறியம்

கோ.ஆரணி[1] & ந.சுபராஜ்[2]
[1]இந்துநாகரிகத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[2]இந்துநாகரிகம், மொழித்துறை, கலை கலாசார பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[1]aarani525@gmail.com, [2]subaraj84@seu.ac.lk

ஆய்வுச் சுருக்கம்

மட்டக்களப்புத் தமிழகம் பல்லினப் பண்பாட்டையும், பல்லின மக்களின் வாழ்க்கை முறைகளையும் கொண்ட பிரதேசமாகும். இந்துப்பண்பாட்டு மரபின் தனித்துவத்திற்கு இம்மாவட்டமெங்கும் நிறைந்துள்ள சிறியளவும், பெரியளவுமாகிய கோயில்களே சான்று பகிர்கின்றன. பண்பாட்டு வேர்கள் ஆழமாகப் புதைந்து போயிருக்கும் இப்பிரதேசத்தின் இந்து வழிபாட்டம்சங்களை பல்வேறு கட்டமைப்பில் வகைப்படுத்த முடியும். அவற்றில் ஒன்றாக குலக்குறி வழிபாடு காணப்படுகின்றது. குலக்குறியியம் மனித வாழ்க்கை முறையோடு காலங்காலமாகப் பரிணாமம் அடைந்து வரக்கூடிய ஒரு அடையாளம் அல்லது குறியீடு சார்ந்த வடிவமாகும். குலக்குறி என்பது "டோட்டம்" (Totem) எனவும்இ குலக்குறியியம் என்பது "டோட்டமிசம்" (Totemism) எனவும் அழைக்கப்படுகின்றன. இதில் விலங்கையோ பறவையையோ ஒரு பொருளையோ தங்களது குலக்குழு முழுமைக்கும் வழிகாட்டியாக, வணக்கத்திற்குரியதாக, மூதாதையர்களாகக் காண்பர். மட்டக்களப்பு மாவட்டத்தில் குலக்குறி சார்ந்த வழிபாடுகளையும் தெய்வங்களையும் அடையாளங் காணல், அவற்றிலுள்ள குலக்குறி வழிபாட்டிற்கான பண்புகளை விபரித்தல், அவற்றின் இன்றைய நிலைமைகள் பற்றி விளக்குதல் போன்றன இவ்வாய்வின் நோக்கங்களாகக் காணப்படுகின்றன. மட்டக்களப்பில் தனித்துமான வழிபாடாக விளங்கும் ஆகமம் சாரா வழிபாட்டின் ஒரு அங்கமாக குலக்குறி வழிபாடு காணப்படுகின்றது. இருப்பினும் குலக்குறி வழிபாட்டின் தன்மைகளைத் தழுவியே ஆகமம் சாரா வழிபாடுகள் இங்கு நடைபெறுகின்றது எனும் புரிதல் இப்பிரதேச மக்களிடம் காணப்படுகின்றனவா? என்பது ஆய்வுப்பிரச்சினையாக உள்ளது. குலக்குறி வழிபாட்டின் தனித்துவமான இயல்புகளையும் சிறப்புக்களையும் மட்டக்களப்பு மாவட்ட ஆகமம் சாரா வழிபாடுகளில் ஒன்றான ஆண் தெய்வ வழிபாடுகள் குலக்ககுறி வழிபாட்டின் மரபினை பேணி நிற்கின்றன எனும் கருதுகோளினை முன்வைத்து இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் புராதன குலக்குறி வழிபாட்டு நெறிகளில் குமார தெய்வம், வதனமார், வைரவர் போன்ற தெய்வங்களுக்கான சடங்குகள் முக்கியம் பெறுகின்றன. இவ்வகையில் மட்டக்களப்பு மாவட்ட ஆகமம்சாரா வழிபாட்டின் தன்மைகளைக் கொண்ட குலக்குறி வழிபாட்டு நெறிகள் இப்பிரதேச மக்களின் வாழ்வில் பாரியளவில் தாக்கத்தைச் செலுத்துகின்றன.

திறவுச் சொற்கள்: குலக்குறி, மட்டக்களப்பு, ஆகமம்சாரா வழிபாடு, ஆண் தெய்வங்கள், அடையாளம்

ஆய்வு அறிமுகம்

மட்டக்களப்பு மாவட்டச் சமூக வரலாற்றியலுடன் தொடர்பான வகையில் ஆகமம் சார் வழிபாட்டு முறை, ஆகமம் சாரா வழிபாட்டு முறை என்பன முதன்மை பெறுகின்றன. இப்பிரதேசத்தில் தனித்துவம் குன்றாத வகையில் இன்னும் மக்கள் தங்கள் சமூக மானிடத்தேவைகளை நிறைவேற்றிக் கொள்கின்ற ஓர் இடமாகவே ஆலயங்கள் விளங்குகின்றன. தற்கால சமூக கலாசார மாற்றம், சமஸ்கிருதமயமாக்கல், நவீன நாகரிகத்தின் மோகம் என மாறிக்கொண்டு வரும் இக்காலத்தில் இப்பிரதேச இந்துக்களின் மரபார்ந்த பண்பாட்டம்சங்களை வெளிக்கொணர்ந்து ஆத்மார்த்தமான வழிபாட்டு முறைகளைப் பேண வேண்டிய நிலை இருக்கின்றது. அவ்வாறான வழிபாடுகளில் குலக்குறி வழிபாடுகள் முக்கியம் பெறுகின்றன.

மட்டக்களப்பு சமூகக் கட்டமைப்பில் சாதி, குடிகள் போன்ற அடுக்கமைவுகள் காணப்படுகின்றன. இத்தகைய குழுக்கள் தங்களுக்கென தனித்துவமான வழிபாட்டு முறைகளை காலங்காலமாக பேணி வருகின்றன. மட்டக்களப்பு மக்களின் இத்தகைய வழிபாடு ஒட்டுமொத்தமாக ஆகமம்சாரா வழிபாடு, ஆகமம் சார்ந்த வழிபாடு எனும் கண்ணோட்டத்தில் இதுவரை ஆராயப்பட்டனவே தவிர இவை குலக்குறிய கோட்பாட்டின் கீழ் இயங்குபவை எனும் ஆய்வுத்தளத்தில் வைத்து நோக்கப்படவில்லை. மட்டக்களப்பு மாவட்ட வழிபாட்டின் தனித்துவம் ஆகமம்சாரா வழிபாட்டில் உள்ளது என்பதில் மாற்றுக் கருத்தில்லை. இருப்பினும் குலக்குறியியம் எனும் கோட்பாட்டின் இயல்புகளை பிரதிபலிக்கும் வழிபாட்டு நெறிகளாகவும் அவை உள்ளன. அவற்றினை எடுத்துக் காட்டும் வகையில் இவ்வாய்வு அமைகின்றது.

இலக்கிய மீளாய்வு

மட்டக்களப்பில் புராதன குலக்குறி வழிபாட்டு நெறிகளில் குமார தெய்வச் சடங்கும், வதனமார் சடங்கும் முக்கியம் பெறுகின்றன. இவை பற்றிய பல்வேறு விடயங்கள் நாடகக் கண்ணோட்டத்தில் பேராசிரியர். சி. மௌனகுரு அவர்களால் அரங்கு ஓர் அறிமுகம் (2014) என்னும் நூலில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இது வதனமார் வழிபாடு பற்றிய அடிப்படை அம்சங்களை புரிந்து கொள்ள வழிவகுக்கின்றன.

இதே போன்று ''மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப் பண்பாடு'' என்னும் நூலில் மட்டக்களப்புத் தமிழகத்தில் வதனமார் வழிபாட்டு முறை என்ற கட்டுரை (பக் - 67) சு.சிவரெத்தினத்தினால் எழுதப்பட்டது. இதில் வெல்லாவெளி மாரியம்மன் கோயிலில் உள்ள வதனமார் சடங்கு பற்றி விளக்கிச் சென்றுள்ளார். மாடுகளை நோய்களிலிருந்து காத்தல், பூசாரி தலைமையில் சடங்கு மேற்கொள்ளும் முறை, பூசைப்பெட்டி, ஆயுதப்பெட்டி, பாற்குடம் எடுக்கும் முறை எனப் பல அம்சங்களை எடுத்துக் காட்டியுள்ளார்

இதே போன்று மட்டக்களப்புத் தமிழகத்தில் குமார தெய்வச் சடங்கு பற்றி கு.ரவிச்சந்திரன் (பக் - 70) எடுத்துக் காட்டும் கட்டுரையில் ஐந்து நாட்கள் கொண்ட சடங்கு, அவை செய்யப்படும் முறை என்பன பற்றிக் கூறுகிறார். மேலும் தேன் எடுக்கும் நிகழ்வு, யானை கட்டும் நிகழ்வு, கரடித் தெய்வம், கன்னிமார் சடங்கு எனப்பல விடயங்கள் பற்றி எடுத்துக்காட்டுகிறார். இவை குமார தெய்வ வழிபாடு புராதன வழிபாட்டம்சம் கொண்ட சடங்கு என்பதனையும், சமூகத்துடன் இதன் முக்கியத்துவம் எவ்வாறு அமைந்து விடுகின்றது என்பது தொடர்பாகவும் அறிய முடிகிறது.

குமார தெய்வ வழிபாட்டின் முக்கியத்துவம் தொடர்பாக பேராசிரியர். சி.மௌனகுருவின் ''மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்'' என்னும் (2014) நூலில் மட்டக்களப்பில் புராதன வழிபாட்டில் குமார தெய்வம், வதனமார் என்பன பெறும் முக்கியத்துவம் பற்றிக் கூறியுள்ளார் (பக் 55) இதில் குறிப்பிட்ட சாதியினருக்குரிய தெய்வமாக வதனமார் வழிபடப்பட்டதாக கூறுகின்றார். இவை ஆய்வில் புராதன வழிபாடுகள் குறித்த சாதியினரால் மேற்கொள்ளப்பட்ட வழிபாடாக அமைந்துள்ளமை என்பதனை அறிந்து அதன் சமூகவியல் முக்கியத்துவம் இன்றும் காணப்படுகின்றனவா? என்பதனை எடுத்துச் செல்ல உதவுகின்றது.

ஆய்வு முறையியல்

குலக்குறி வழிபாட்டில் முக்கியம் பெறும் வேடுவ சமூகம், நிலவுடமைக்காரர்களின் பாதுகாப்பு, கால்நடைகளை பாதுகாத்தல், நோய் நொடிகளிலிருந்து மக்களை காத்தல், இறந்த முன்னோர்கள் வழிபாடு, சமூகவியல் ஒருங்கிணைப்பு, கூட்டு வாழ்க்கை என இந்துப் பாரம்பரிய பண்பாட்டு கட்டமைப்புச் சூழலை சடங்குகள் மூலம் அறிந்து கொள்ள கோயில் திருவிழாக் காலங்களில் சடங்கில் பங்கு கொள்வது அவசியமானதாகும். எனவே அங்குள்ள இடத்திற்கு நேரடியாகச் சென்று தரவுகள் பெறப்பட்டுள்ளன. இவை யாவும் இவ்வாய்வின் முதனிலைத் தரவுகளாக (Primary Data) அமையும். இவ்வழிபாடுகள் நடைபெறும் இடங்களுக்கு சென்று சடங்கில் பங்கு கொள்வதன் மூலமும், அது தொடர்பாக அங்குள்ள ஆலய பூசகர்கள், கோயில் தலைவர்கள் காலங்காலமாக அங்கு வாழ்கின்ற மக்கள் போன்றவர்களிடம் கலந்துரையாடி, அவர்களின் கருத்துக்களை கேட்டறிதல், சான்றுகளை ஆவணப்படுத்தல், புகைப்படம் எடுத்தல் போன்ற செயற்பாட்டில் ஈடுபடுவதன் மூலம் தரவுகள் பெறப்பட்டுள்ளன.

அத்தோடு இவ்வழிபாடுகள் தொடர்பாக வெளிவந்த இலக்கியத் தரவுகளும் இணைய வழித் தரவுகளும் இரண்டாம் நிலைத் தரவுகளாக (Secondary Data) அமையும். இங்கு வரலாற்றியல் ஆய்வு, விபரண ஆய்வு மற்றும் ஒப்பியல் ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வின் மூலம் சமூகத்துடன் இச்சடங்கு எந்தளவிற்கு முக்கியத்துவம் கொண்டு தற்காலத்தில் விளங்குகிறது என பகுப்பாய்வும் செய்யப்பட்டுள்ளது.

பண்புசார் ஆய்வாக (qualitative research) அமையும் இவ்வாய்வில் மாதிரிகள் (Sample) தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்குடபடுத்தப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்ட பிரதேச செயலக பிரிவுகளில் கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் பிரிவு, கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு, போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவு, மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுகள் ஆய்வு எல்லைகளாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இப்பிரதேசங்களிலுள்ள குலக்குறி வழிபாட்டிற்குரிய தெய்வங்களில் ஆண் தெய்வங்களே ஆய்வுக்குரியனவாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் 25% மான குலக்குறி வழிபாட்டிடங்களே ஆய்வு மாதிரிகளாக கொள்ளப்படுகின்றன.

கலந்துரையாடலும் பகுப்பாய்வும்

குலக்குறி பற்றிய விளக்கம்

பல மானிடவியளாலர்கள் குறிக்குறி தொடர்பாக பல கருத்துக்களை முன்வைத்துள்ளனர். **மக்லீனன்**, ‘‘குலக்குறி அமைப்புடைய சமுதாய நிலையே தொடக்க காலச் சமுதாய முறை என்றும், இந்நிலையைக் கடந்த பின்னரே இன்றுள்ள அனைத்து வகையான சமுதாயங்களும் வளர்ந்துள்ளன’’ என்று கருதுகிறார். (பக்தவக்சலபாரதி, 1990: 512) ‘‘இயற்கைப்பொருள் வணக்கத்தில் இருந்து குலக்குறி தோன்றியது. அவற்றினூடு வணங்கப்பட்ட தாவரம், விலங்கு, இயற்கைப்பொருள் ஆகியவை முதலில் தனிமனிதனுக்கும் பின்னர் குடும்பத்தினருக்கும் வழங்கப்பட்டது’’ என்பார் **ஆல்பரி**. (பக்தவக்சலபாரதி, 1990: 515) ‘‘உலகின் பல்வேறு சூழல்களில் வாழ்ந்த மனிதக் குழுவினர் அவரவர் இயற்கைச் சூழல்களில் காணப்பட்டவற்றுள் சிறப்பானதொன்று வாழ்வுக்கு முதன்மையானது எனக் கருதியதால், அதனை அவர் தம் குலக்குறியாகக் ஏற்றுக்கொண்டனர்’’ என்கிறார் **ஆண்ட்ரூஸ் லாங்** (பக்தவக்சலபாரதி, 1990: 518).

அதாவது, தனிமனிதனோ, குழுக்களோ தனக்கு சமமான தன் கூட்டத்து மக்களுள் ஒருவராகக் கருதி ஒரு விலங்கையோ, பறவையையோ, தாவர வகையையோ அணுகி நடந்து கொள்வானேயானால் அது நிச்சயம் குலக்குறிப் பண்பாட்டிற்கே உரிய இயல்புகளில் ஒன்றாகும்.

ஆண் தெய்வ வழிபாட்டில் குலக்குறி

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்துக்களின் வழிபாட்டின் தனித்துவம் ஆகமம்சாரா வழிபாட்டு நெறிகளிலேயே வெளிப்படுகின்றன. இவ்வழிபாட்டில் ஆண் தெய்வ வழிபாடு, பெண் தெய்வ வழிபாடு என இரு நிலைகள் உண்டு. இவற்றில் வைரவர், வதனமார், குமார தெய்வம், நாகதம்பிரான், பெரிய தம்பிரான், பெரியசாமி போன்றவை ஆண் தெய்வ வழிபாட்டிற்குரியன. இதுபோல் கண்ணகி, திரௌபதை, காளி, கடலாச்சி, பேச்சி போன்றன கிராமிய பெண் தெய்வங்களாகும். இவற்றில் ஆண் தெய்வ வழிபாட்டில் குலக்குறி வழிபாட்டிற்கான இலக்கணங்களை இவ்வாய்வு மேற் கொள்கின்றது.

வைரவ வழிபாடு

வைரவ வழிபாடு ஆகமம் சார்ந்த வழிபாட்டு முறையிலும், ஆகமம்சாரா வழிபாட்டு முறையிலும் செல்வாக்கு செலுத்தி வருகின்றது. ஆனாலும் மட்டக்களப்பில் வைரவர் வழிபாடு ஆகமம்சாராத

முறையில் தான் அதிகமாக மேற்கொள்ளப்படுகின்றது. ஆகமம் சாரா வழிபாட்டில் அவருக்கு உருவங்களை வைத்து வழிபடுகின்ற முறை காணப்படுகின்றது. ஆகமம்சாரா வழிபாட்டில் உருவம் இல்லாமல் அவருக்கு உரித்தான தனிப்பட்ட குறியீடு காணப்படுகின்றது.

மட்டக்களப்பில் வைரவருக்குரிய முதன்மையான குலக்குறி அடையாளம் ‘‘திரிசூலம்’’ ஆகும். இதுவே வைரவருக்கான குறியீடாக அமைகின்றது. திரிசூலத்தினை அடிப்படையாகக் கொண்டு வைரவர் வழிபாடு இங்கு மேற்கொள்ளப்படுகின்றது. அத்தோடு வைரவர் வழிபாட்டினை குறியீட்டினடிப்படையில் மட்டக்களப்பில் பல்வேறு இடங்களில் காணமுடிகின்றது.

மட்டக்களப்புப் பிரதேசங்களில் இடம் பெறும் வைரவர் வழிபாட்டினை பொதுவாக மூன்று வகைப்படுத்தலாம்.

1. வீடுகளில் இடம்பெறும் வைரவர் வழிபாடு
2. பயிர்ச்செய்கை நிலங்களில் வயல்வெளிகளில் வைரவர் வழிபாடு
3. ஆலயங்களில் வைரவருக்குரிய வழிபாடு

வைரவ வழிபாட்டில் குலக்குறியமாக திரிசூலம் காணப்படுகின்ற போதிலும் சில இடங்களில் சிற்சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. அதற்கமைய வைரவர் வழிபாட்டின் குலக்ககுறிக்குரிய தன்மைகளை மேல்வரும் 06 விதங்களில் நோக்கமுடியும்.

1) திரிசூலம் அல்லது இரட்டைதிரிசூலம்
2) திரிசூலத்துடன் தென்னம்பாளை அல்லது கமுகம்பாளை
3) கல்
4) செவ்விளநீர்
5) திரிசூலமும் பொல்லும்
6) கள்ளிச் செடி

இங்கு குழுக்களுக்குரிய குலக்குறி எண்ணற்ற இயற்கைப் பொருட்களோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. இதனால் திரிசூலம் முதன்மைக்குறியாகவும் தென்னம்பாளை, கமுகம்பாளை, கல், செவ்விளநீர் துணைக்குறிகளாகவும் உள்ளன.

மட்டக்களப்பில் வீட்டுச்சடங்கினை எடுத்து நோக்குகையில் அவர்கள் வைரவருக்கு பந்தல் அமைத்து வழிபாடு செய்கின்ற மரபு உள்ளது. இம்மரபில் குடும்பம் குடும்பமாகச் சேர்ந்து குழுவாகச் செய்யப்படுகின்றது. அதாவது வீட்டில் ஒரு வைரவர் பந்தல் இருந்தால் காலம் காலமாக குறிப்பிட்ட குழுவின் பரம்பரை தான் செய்து கொண்டிருக்கும். இதில் வருடத்திற்கு ஒரு முறை வைரவருக்குச் செய்தல் இடம்பெறும். (மகேஸ்வரலிங்கம். க., 1996: 55) வீட்டில் வைரவருக்குச் செய்யும் போது சிலை வைக்கப்படுவதில்லை. ‘‘திரிசூலம்’’ அடையாளப்பொருளாக வைக்கப்படும். (மகேஸ்வரலிங்கம். க., 1996: 56) இம்முத்தலைச் சூலம் மும்மூர்த்தி தத்துவத்தைக் குறிக்கின்றது. மட்டக்களப்பில் சூலத்தை கோயில்களில் அமைந்துள்ள மரங்களாகிய வேம்பு, அரசு, நாவல், ஆல், புளி, மருது போன்றவற்றில் குத்தி வழிபட்டனர். அதுவே பின்னர் புளியடிவைரவர், வேம்படிவைரவர் என்ற பெயரையும் பெற்றது.

வீடுகளில் வைரவருக்குச் செய்யும் பூசை முறையானது ‘‘வைரவருக்குச் செய்தல்’’ என அழைக்கப்படும். (சுகந்தி சுப்ரமணியம், 2006: 49) குறிப்பிட்ட ஒரு நாளில் பந்தல் அமைத்து தென்னம்பாளையும், இளநீரும் வைக்கப்படும். அரிசிமாவினால் கஞ்சா ரொட்டியும் மொந்தன் வாழைப்பழ மடையும் பரவப்படும்.

இங்கு மொந்தன் வாழைப்பழம் முக்கியமானது. சில இடங்களில் ரொட்டி, வெண்பொங்கல், சக்கரைப் பொங்கல், பஞ்சாமிர்தம், துள்ளுமா, வடை என்பன படைக்கப்படும். (சுகந்தி சுப்ரமணியம், 2006: 51)

கமுகம்பாளை, தென்னம்பாளை, தாமரைப்பூ என்பவற்றை மடையில் வைத்து அலங்காரம் செய்து வைரவர் அகவல்/காவியம் பாடப்படும். (மகேஸ்வரலிங்கம். க., 1996: 56) வருடாவருடம் வீட்டில் செய்யப்படும் வைரவர் பூசையினை செய்யாவிட்டால் அந்த குடும்பத்திற்கு பாதகமான விளைவுகள் ஏற்படும் என்பதனால் அதனை தவறாது பின்பற்றி வருகின்றனர். இது பயஉணர்வு, நம்பிக்கை என்பவற்றின் வெளிப்பாட்டுத் தன்மை ஆகும். பூசாரியே படையல்களைப் படைத்து பூசையினை மேற்கொள்வார். பூசாரி தன்னை பூசை செய்வதற்குரியவராக மாற்றிக் கொள்வார்.

குறித்த பரம்பரையினைச் சேர்ந்த ஒருவரே வைரவருக்கு சடங்கினை நிகழ்த்துவார். அந்த நபரில் சடங்கின் போது வைரவர் வந்திறங்குவார். இது ‘‘வைரவர் கலை’’ என அழைக்கப்படும். (மகேஸ்வரலிங்கம். க., 1996: 59) குலக்குறிக்கும் குலத்தின் உறுப்பினருக்கும் இடையிலான நெருங்கிய உறவுடன் தம்மை குலக்குறிக்குச் சமமானவர்களாகவும் அடையாளம் காணுகின்றனர். அத்தகைய வைரவர் கலையினை எல்லோராலும் செய்ய முடியாது. குறிப்பிட்ட ஒரு நபரால் தான் செய்ய முடியும். அவர் இறந்தால் அவருடைய பரம்பரையினைச் சேர்ந்த மற்றுமொருவரால் நிகழ்த்தப்படும். பந்தல் அமைத்து வழிபாடு செய்வதில் அதற்கு அதிக மதிப்பு கொடுக்கப்படுவது மாத்திரமன்றி அது அச்சத்திற்குரிய பொருளாகவும் பார்க்கப்படுகின்றது.

வயல்பகுதிகளில் இடம் பெறும் வைரவர் வழிபாட்டினை நோக்குகையில் கதிர் கண்ட சடங்கு, புதிர்ச் சடங்கு, களவெட்டிச் சடங்கு என ஒரு போகத்திற்கு குறைந்தது மூன்று முறை அல்லது இரண்டு முறை வைரவர் வழிபாடு நிகழ்த்தப்படுகின்றது. (மகேஸ்வரலிங்கம். க., 1996: 53) இங்கு பந்தல் அமைத்து வைரவர் வழிபாடு இடம்பெறும். வேளாண்மைச் சமுதாய குழுவினரிடையில் தொழில் சார் நம்பிக்கையில் குலக்குறியத்திற்கு பங்களிப்புண்டு. மானுட வாழ்க்கையின் உளவியல் நடத்தையின் மனம் சார்ந்த பழக்கங்களைக் கொண்டது குலக்குறிய வடிவமாகும். அனேகமாக வயல்வெளிகளில் வைரவருக்கு கஞ்சா ரொட்டி, கள்ளு, சாராயம் வைக்கப்படுகின்றன. உதாணமாக அரசடித்தீவு, பண்டாரியாவெளி, கடுக்காமுனை, கன்னங்குடா, பெரியநீலாவணை போன்ற இடங்களில் இவ்வழமையைக் காணலாம்.

வைரவர் வழிபாட்டில் ஒரு விலங்கு அல்லது ஒரு செடி இயற்கைப்பொருள் குலக்குறியாக அமையும் சந்தர்ப்பத்தினை கன்னங்குடா பிரதேசத்தில் காணலாம். இங்கு கள்ளிச்செடி குலக்குறியாக அமைந்துள்ளது. கள்ளிச் செடிக்கு பட்டு கட்டப்பட்டு செங்கல்லினால் சுற்றி வளைத்து திறந்த வெளியில் வைரவருக்குரிய குறியாக வைக்கப்பட்டுள்ளது. சடங்கு நேரத்தில் பந்தல் அமைத்து மடை வைத்து வழிபாடு இடம்பெறும்.

கோயிலை காவல் செய்வதோடு சமூகத்தையும் காவல் செய்வதால் மட்டக்களப்பு மக்களிடையே வைரவரின் வாகனமான ‘சுவானம்’ எனப்படும் நாயும் வணங்கப்படத்தக்கதாகவே கருதப்படுகின்றது. எனவே வைரவரை குறிக்கும் சூலம், அதனை கொண்டுள்ள மரம், நாய் அம்மக்களின் குலக்குறிகளாக உள்ளன.

கோயிலில் ஆகமம் சார்ந்து வழிபடப்படுகின்ற போது குலக்குறியின் தன்மையைப் பெறவில்லை. வீடுகளில் தான் அது குலக்குறி தன்மை கொண்டதாக இருக்கின்றது. ஆகமம் சாரா வழிபாட்டில் வைரவரை வழிபடும் இடத்தை ‘‘வைரவர் பந்தலடி’’ என அழைப்பர். வைரவர் பந்தலானது

இயற்கையோடிணைந்து உருவாக்கப்பட்ட ஒன்றாக உள்ளது. வீட்டின் வெளிவாசலில் இது அமைக்கப்படும்.

பந்தல் அமைக்கும் முறை 02 வகைப்படும்.

1. நிரந்தரமாக அமைக்கும் பந்தல்
2. நிரந்தரமல்லாத பந்தல்

நிரந்தரமாக அமைக்கும் பந்தலினை பலமான மரத்தினைக் கொண்டு வடிவமைப்பார்கள். தினந்தோறும் திரிசூலத்திற்கு பூக்கள் வைத்து வணங்குவர். நிரந்தரமில்லாத பந்தலை பூவரசங்கம்பினைக் கொண்டு தட்டு வடிவிலமைத்து தென்னம் குருத்துக்களால் சுற்றி வளைத்து அலங்கரிப்பர்.

குமார வழிபாடு

குமார வழிபாடு பண்டைய மக்களால் வழிபடப்பட்ட தெய்வங்களுள் ஒன்றாகும். இத் தெய்வத்திற்கு ஆண்டுக்கொருமுறை சடங்கு நடைபெறும். குமார வழிபாட்டின் குலக்குறிக்கான தன்மைகளை 05 விதங்களில் நோக்கமுடியும்

1) பந்தல் அமைத்து வாழைக்காய் மடை குலக்குறி (கிரான்)
2) வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் (மடைப்பொருள்) எனும் இயற்கைசார்ந்த குலக்குறி (முறுத்தானை)
3) காட்டுக்கு மத்தியில் மரத்தினை குறியாக வழிபடல் (பண்டைக்காலம்-முறுத்தானை)
4) பீட வடிவம் (நீலாவணை)
5) முகக்களை (சூரியனைப் போன்ற வடிவத்தில் முறுக்கு மீசை வடித்தினால் செய்யப்பட்ட வடிவம்இ கிரான்)

குமார வழிபாட்டிற்குரிய சடங்கானது தனிப்பட்ட இல்லங்களிலும்இ சில இடங்களில் ஊர் சேர்ந்தும் செய்யப்பட்டு வருகின்றது. (மௌனகுரு.சி., 2003:81) குமார தெய்வத்திற்கு நிரந்தரமான கோயில் இல்லை. தற்காலிகமாக கோயில் அமைத்துச் செய்யப்படும். முன்பு இச்சடங்கு நடந்த இடங்களில் பிற்பட்ட காலங்களில் குடியேறியவர்களும் இவ்வழிபாட்டை செய்து வந்தமையைக் காணமுடிகின்றது. குமார வழிபாட்டில் மன்றாட்டு முறையே காணப்படும். இத்தெய்வம் ஏனைய தெய்வங்கள் போல கட்டுக் கூறுவதுமுண்டு. 3 நாட்கள், 5 நாட்கள், 7 நாட்கள் என பூசை நடைபெறும். இடத்துக்கிடம் பூசை நடைபெறும் நாட்களின் எண்ணிக்கை மாறுபடுகின்றது.

வருடாந்த சடங்கிற்கென ஒரு நிலப்பகுதி வருடந்தோறும் தெரிவு செய்யப்படும். தெரிவு செய்த நிலப்பகுதியினை துப்புரவு செய்து பந்தல் அமைக்கப்படும். பந்தல் அமைப்பதற்கென துண்டு போடப்படும். துண்டின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு எந்தெந்த இடத்தில் எந்தெந்தப் பந்தல்கள் போட வேண்டும் என்றும், எந்தெந்த இடங்களில் எந்தெந்த தெய்வங்களை வைக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்படும். (மௌனகுரு.சி., 2003:82) இச்சடங்கு நடைபெறும் இடத்தில் முக்கோணமான வடிவில் பந்தல் அமைக்கப்படும். ஆலாத்தித் தெய்வம் வருகையின் பின் வேறு பல தெய்வங்களும் கப்புகனாரில் வெளிப்படும். மூன்று பக்கங்களும் இயற்கைப்பொருட்கள் கொண்டு அலங்கரிக்கப்பட்டிருக்கும். பந்தலிலுள்ள நிலத்தில் வெள்ளைச்சீலை விரித்து அதில் மடை வைப்பர்.

குலக்குறியம் என அழைக்கப்படும் இயற்கைப்பொருள் அல்லது விலங்குகள் என்பவற்றோடு வேடுவச்சமூகக் குழுக்களுக்கு பல வழிகளில் உறவுகள் உள்ளன. அவ்வகையில் குமாரவழிபாட்டில்

குலக்குறி வணக்கத்துக்குரிய உறவு முறையாக வெளிப்படுவதைக் காணமுடிகின்றது. இவர்களது முன்னோர்கள் வணங்கிய தெய்வங்கள் அனைத்தும் கப்புகனாரின் மேல் பல வடிவங்களில் வெளிப்படுவதாகக் கூறுகின்றனர். இவையே ''வேட கலைத் தெய்வங்கள்'' ஆகும். அவற்றுள் குமாரரின் வடிவங்களாக குமாரதெய்வம், கொழும்புக்குமாரர், கண்டிக்குமாரர், அழகுகுமாரர், காலிகுமாரர் என உருமாற்றம் பெறுகின்றது.

பயங்கரமான தெய்வங்களும் கப்புகனாரின் மேல் வெளிப்பட்டு நிற்கும். நீலிக்கூட்டம் எனப்படும் மாந்தி, ராஜிகராஜா, ராஜபணிக்கா போன்ற சிலவற்றை கூறலாம். (மௌனகுரு.சி., 2003:83) குழந்தைகளின் நோயோடு தொடர்புபட்ட இவை பறவை வடிவில் வருவதாகவும் அத்தெய்வங்கள் பறவைகள் எனவும் நம்புகின்றனர். இவ்வாறான பயங்கர நோயினை தரும் தெய்வங்களை கட்டுப்படுத்தும் தன்மை குமாரதெய்வத்திற்கு உண்டு.

குமார வழிபாட்டில் ''கழுமரம்'' முக்கிய துணைக்குலக்குறியினுள் ஒன்றாகும். திருக்கொன்றை, வேப்பமரத்தினை வெட்டி எடுத்து கழுமரம் உருவாக்கப்படும். வெட்டபட்ட மரக்குற்றியானது மேல் நோக்கிய முனையில் கூராக அமைக்கப்படும். குமாரதெய்வத்திற்கு வழிபாடியற்றுபவரால் தான் கழுவடிவம் செய்யப்படும். குறிப்பிட்ட காலத்தின் பின்னர் பாதிப்படைந்த கழுமரத்தினை நீக்கி புதிதாக மரம் தெரிவு செய்யப்பட்டு கப்புகனாரால் நடப்படுகின்றது.

குமார தெய்வவழிபாட்டில் ஒவ்வொரு குமாரருக்கும் வேறு வேறு விதமான துணிபோடப்பட்டிருக்கும். குமார தெய்வவழிபாட்டில் புள்ளிக்காரன் என அழைக்கப்படும் தெய்வத்திற்கு புள்ளி வைக்கப்பட்ட துணியினைப் பயன்படுத்துவர். புள்ளிக்காரனுக்கு தெய்வமாடுபவர் புள்ளியாலான சீலையினையே உடுத்தியிருப்பார். அக்குழுவினைச் சேர்ந்த மக்களால் ''லேஞ்சி'' என அழைக்கப்படுகின்றது. (மௌனகுரு.சி., 2003:83) குமார வழிபாட்டில் தெய்வமேறி ஆடுவோர் அம்பு, வில், ஈட்டி என்பவற்றினைக் கொண்டு பந்தலடியில் ஆடுவர். அம்மக்களின் வாழ்வியல் நெறிகளூடாக குலக்குறிகள் இணைவுறுகின்றன. விலங்குஇ வேட்டையாடுதல் எனும் அம்சங்கள் தொடர்புற்று குலக்குறி வடிவம் அம்மக்களோடு பின்னிப் பிணைவதனைக் காணலாம்.

பெரியதம்பிரான்

பெரியதம்பிரான் ஆகமம்சாராத வழிபாட்டு முறைகளில் காணப்படும் ஒரு அரசர் ஆவார். இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரியதம்பிரான் வழிபாடு ஆங்காங்கே காணப்படுகின்றது. மட்டக்களப்பு வழிபாட்டு மரபில் பெரியதம்பிரானுக்குரிய குலக்குறி அடையாளம் ''சூலம்'' ஆகும். பெரியதம்பிரான் வழிபாட்டிடம் பந்தலினால் அமைத்தும் சில இடங்களில் ஓலைக் கொட்டில்களாகவும் வேயப்பட்டுள்ளன. பின்னர் ஓட்டினாலும் கிடுகுகளினாலும் வேயப்பட்டு கட்டிடங்களாக அமைக்கப்பட்டுள்ளன. (குணசிங்கம், க., 2022) ஓலை வேய்ந்த கோயில்களில் பரிவார தெய்வங்களுக்கு பந்தல் அமைத்து வழிபாடு செய்யப்படும். மட்டக்களப்புப் பிரதேசத்தில் அமைந்த பெரியதம்பிரான் ஆலயங்களில் அதிகளவாக சூலம் தான் அடையாளப் பொருளாக உள்ளது.

பெரியதம்பிரான் போற்றப்படும் குறியீட்டுவடிவத்தினை 4 விதங்களில் நோக்க முடியும்.

1. சூல வடிவம்
2. பீட வடிவம்
3. முகக்களை வடிவம்

4. சுதையில் செய்த வடிவம்

முகக்களை வடிவம் மரத்தில் செய்யப்பட்டு முறுக்கிய மீசை, சுருட்டை முடியுடன் கம்பீரமாக காணப்படுகின்றார். சில இடங்களில் அமைக்கப்பட்டுள்ள சுதைவடிவங்களில் இரண்டு கைகள் கொண்டு நிற்கும் நிலையில் அமைக்கப்பட்டுள்ளார். எனவே பெரியதம்பிரானின் முதன்மைக் குலக்குறியியத் தன்மையினை சூலம் பெறுகின்றது.

சலவைத் தொழில் செய்வோருக்குரிய வழிபாடாக பெரியதம்பிரான் விளங்குகின்றார். இவர்கள் பெரியதம்பிரானை பாதுகாப்பவன், துணைவன் என நம்புவர். பெரியதம்பிரான் வேள்வியில் பூசாரி அல்லது கட்டாடி தேவாதிகள் மற்றும் பானை எடுப்போர் ஆகியோர் முக்கியத்துவம் பெறுகின்றனர். குறிப்பிட்ட குழுவினைச் சேர்ந்த நபர்களாலேயே இச்சடங்கு மேற்கொள்ளப்படுகின்றது. (குணசிங்கம், க., 2022)

பெரியதம்பிரான் வழிபாட்டில் குலக்குறியத்திற்கான பல பண்புகளைக் அடையாளங் காணலாம். வருடாந்தச் சடங்கின் போது முதன் முதலில் வேள்வி நடைபெறும் இடத்தினை சுத்தம் செய்து கதவு திறக்கப்படும். ஆதி காலத்தில் பல்லியிடம் கட்டளை கேட்டுப் பொங்கல் பொங்கும் முறை காணப்பட்டது. காலப்போக்கில் அம்முறை அருகி விட்டது. குலக்குறி வழிபாட்டில் ‘‘பல்லி சகுனம் எழுப்புதல்’’ என்பது குறியீட்டின் தன்மை ஆகும். பூசாரியார் பெரியதம்பிரான் பத்ததிக்கமைவாக பூசையைச் செய்வார்.

பெரியதம்பிரான் வேள்விச்சடங்கு ஆரம்பிக்கும் காலத்தில் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் உள்ள கோயில்களில் கொடியேற்றம் நடைபெறாது. பெரியதம்பிரான் பூசாரிமார்கள் தெய்வங்களைக் கொடிக்கம்பத்தில் கட்டிப் போடுவார்கள் என்ற பயம் ஏனைய கோயில்களில் உண்டு. பெரியதம்பிரான் சடங்கினை பிராமணர்களோ வேறு குலத்தினைச் சேர்ந்தவர்களோ செய்ய அனுமதியில்லை. (கோபாலப்பிள்ளை, க., 2022) காரணம் பெரியதம்பிரானின் எதிரிகளாக பிராமணர்கள் கருதப்படுகின்றார்கள். குலக்குறியின் மீதான வியப்பினையும் அச்ச உணர்வினையும் இது வெளிப்படுத்துகின்றது.

வதனமார் வழிபாடு

மட்டக்களப்பு மக்களின் வாழ்வியலில் கால்நடை வளர்ப்புஇ விவசாயத்தோடு தொடர்புபட்ட தெய்வமாக வதனமார் முக்கியத்துவம் பெறுகின்றார். இதனால் ‘‘பட்டிக்காரன்’’ எனச் சிறப்பாக அழைக்கப்படுகின்றார். விவசாயப் பின்னணியில் மாடுகளுக்கு மதிப்பளித்து இயற்றப்படும் வழிபாடு இதுவாகும்.

இந்தியப் பழங்குடிகளில் பல குலக்குறி பண்பாட்டின் அடிப்படையில் அமைந்த ஒழுங்கமைதியினைப் பெற்றுள்ளன. அவை விலங்குகளையும் தாவர வகைகளையும் தமது புனிதப்பொருட்களாக ஏற்றுக் கொண்டு அணுகும் வழக்கத்தைக் கொண்டிருக்கின்றன. மேலும் அவ்வகை விலங்குகளைக் கொல்வதையோஇ உண்பதையோ தவிர்ப்பது மற்றும் தாவரங்களை அழித்தல் சேதம் விளைவித்தல் போன்ற செயற்பாடுகளை தடைசெய்யும் விலக்கல் கொள்கைகளையும் அவை கடைப்பிடித்து வருகின்றன என D.N மஜும்தார் கூறுகின்றார். பக்தவக்சலபாரதி, 1990: 501) மஜும்தாரின் கருத்துப்படி வதனமார் வழிபாட்டில் மாடுகள் புனிதப்பொருளாகவும் கொல்லப்படத்தகாததாகவும் கருதப்படுகின்றமை கவனிக்கத்தக்கது.

மட்டக்களப்பில் கால்நடை வளர்ப்பவர்களுக்குரிய காவற்காரனாக வதனமார் விளங்குகின்றான். வதனமாருக்குரிய குலக்குறி அடையாளம் ‘‘வெளுக்கயிறு’’ ஆகும். வதனமார் எனும் கூட்டத்தினர்

மனிதர்களாக வாழ்ந்து தெய்வங்களாக மாறியவர்கள் எனும் கருத்தினடிப்படையில் குலக்குறியினின்று வெளிப்பட்டு பாதுகாப்பினை அளிக்கும் முன்னோராக இருக்கின்றனர். இதில் குலக்குறியாகிய 'வெளுக்கயிறு' குறிப்பிட்ட குழுவோடு தொடர்புறுகின்றது. அதாவது கால்நடை மற்றும் விவசாயத்தினை செய்யும் குழுவினர் இணைந்து வழிபாடியற்றுவதால் வெளுக்கயிறு குழுக்குலக்குறிய முறையின் தன்மையினைப் பெறுகின்றது.

வதனமார் வழிபாட்டின் குறியீட்டு வணக்கமுறையில் குலக்குறி மையத்தினை 03 விதங்களில் நோக்கலாம்.

1. இயற்கையோடிணைந்த காட்டின் மத்தியில் வதனமார் வழிபாடு இடம்பெறும்.
2. வயல்வெளிகளில் வதனமார் வழிபாடு.
3. வைரவர், குமாரர், காளி, மாரி போன்ற வழிபாடுளில் வதனமாருக்கு பந்தல் அமைக்கப்பட்டு வழிபாடு இடம்பெறும்.

இந்த வழிபாடு ஆதிகாலத்தில் பட்டி அமைந்துள்ள இடத்தில் காடுகளுக்கு மத்தியில் நடைபெறும். அத்தருணம் பட்டியின் சொந்தக்காரப் போடிமார் குடும்பமும் பட்டிக்காரர் குடும்பமும் குழுவாகச் சேர்ந்து வழிபாடு இயற்றுவர். குழுமாடுகள் காட்டில் திரிந்து தன்னிச்சையாய் வளர்ந்ததால் அவை நல்ல தேகாரோக்கியமும்இ திடகாத்திரமும் உள்ளவைகளாகவும் இருக்கும். இவற்றை உழுதொழில் செய்வதற்குப் பயன்படுத்துவர். (ஈழத்துப் பூராடனார்., 2000: 31)

வதனமார் வழிபாட்டில் குழுமாடு பிடித்தல் முக்கிய நிகழ்வாகும். பந்தலில் இருக்கும் வெளுக்கயிற்றை எடுத்துக் கொண்டு காட்டுக்குச் சென்று குழுமாடுகளை தேடிப் பிடித்து வெளுக்கயிற்றினை மாட்டின் கழுத்தினை நோக்கியவாறு வீசி பிடித்து அடக்குவர். இவ்வாறு காடுகளில் புகுந்து குழு மாடுகளைப் பிடித்து அடக்கும் போது மனனஞ் செய்து வைத்திருக்கும் மந்திரப் பாடல் வரிகளையும் தமக்குள்ளே உச்சரித்துக் கொண்டு செயல்படுவர். பிடிக்கப்பட்ட குழுமாட்டினை வதனமாருக்கு உரியது என கூறி பட்டியில் உள்ள ஏனைய மாடுகளுடன் இணைத்து விடுவர். அது ஒரு வீர விளையாட்டோடு தொடர்புபட்ட சடங்குமுறை ஆகும். குழுமாடு பிடிக்கச் செல்வோர் ''இளந்தாரிமார் கூட்டம்'' என அழைக்கப்படுகின்றார்கள். (ஈழத்துப் பூராடனார், 2000: 32)

வைரவர், குமாரர், காளி, மாரி போன்ற ஆலய வழிபாடுகளில் வதனமாருக்குப் பந்தல் அமைக்கப்பட்டும் வழிபாடு இடம்பெறும். அவ்வேளை பூசாரி மீது வதனமார் வந்து முற்படுவார். அப்போது அவர்கள் பந்தலில் இருக்கும் கயிற்றை எடுத்துக் கொண்டு ஆடுவதுடன் ''ஹாய்'' எனச் சத்தமிட்டு மாடுகளை விரட்டுவது போல் அபிநயித்து ஆடுவர். வயல்வெளிகளில் நேர்த்தியாக ''பூமடை'' வைக்கப்படும். வயலில் நெல் விதைப்பதற்கு முன்னரும்இ வயல் வெட்டி முடிவடைந்த பின்னரும் இம்மடை வைக்கப்படும். பூமடையில் வெற்றிலை, பாக்கு, பழம் என்பன சாதாரணமாக வைக்கப்படும். வைரவர், காளி, வீரபத்திரர், வதனமார் ஆகியோருக்கு மடை வைக்கப்படும். வைரவர்இ குமாரர், காளி, மாரி போன்ற கோயில் வழிபாடுகளில் காவல்தெய்வமாக வதனமார் வழிபடப்படுகின்றார்.

பண்டைக்காலத்தில் மட்டக்களப்பு பிரதேசத்தில் பட்டிக்காரர்கள் அவர்களின் காட்டின் மத்தியில் தனிமை வாழ்க்கையில் வதனமார் வழிபாடு பற்றிய நம்பிக்கைகளில் நிலைத்து நின்றதுடன் வருடாவருடம் வதனமார் சடங்கினை செய்வதுடன் வதனமார் காவியங்களை மனனஞ் செய்து வைத்து இரவில் பாடித் தமது மனப்பயங்களை அகற்றியும் வாழ்ந்து வந்தனர். காட்டுவெளியின் மத்தியில் பட்டிகள் அமைக்கப்பட்டிருக்கும். பலம் வாய்ந்த கருங்காலி, திருக்கொன்றை, முதிரை முதலிய மரங்களைக்

வெட்டி வந்து நட்டு எதுவும் நுழையாது வட்டமாக வேலியடைத்து அதனுள் மாடுகள் அடைக்கப்பட்டிருக்கும்.

அதிகாலையில் பாலினை கறந்த பின்னர் மேய வெளியே விட்டு மாலையானதும் அவற்றை ஒன்று திரட்டி மீண்டும் அடைக்கப்படும். உள்ளே இருக்கும் மாடுகள் வெளியே வராது இருக்கவும் உள்ளே கொடிய மிருகங்கள் உட்செல்லாமல் இருப்பதற்கும் வதனமாரை நோக்கி மந்திரம் சொல்லப்படும். அவ்வேளை மூன்று தடவை நிலத்தில் காலால் கோடிட்டு மறித்து ஆணை செய்யப்படும். (ஈழத்துப் பூராடனார், 2000: 33) இங்கு குலக்குறி ஒரு பாதுகாவலனாக உறவினனாக உதவியாளனாக மூதாதையாக காட்டுப்பகுதியில் வாழ்ந்த குழுவினரால் நோக்கப்படுகின்றது. குலக்குறியியம் சார்ந்த சடங்குகளை நிகழ்த்தி சமயப் பண்புக்கூறுகளில் மந்திரத்தோடு தொடர்புடையதாக குலக்குறிய வழிபாடு காணப்படுகின்றது.

முன்னடித் தம்பிரான்

வதனமாரில் ஒருவர் முன்னடித் தம்பிரான் ஆவார். முன்னடித் தம்பிரானுக்குரிய குலக்குறி அடையாளம் ‘‘மாடு’’ ஆகும். குலக்குறி மையம் ‘‘பட்டி’’ ஆகும். இங்கு மாட்டினைப் பட்டியினுள் அழைத்து வழிபாடு நடைபெறும். ஏனைய சடங்கு முறைகளை விட வித்தியாசமானதாக காணப்படுகின்றது. குறிப்பிட்ட குழுவினை சேர்ந்தோரால் குறிக்கு சடங்கு நிகழ்த்தப்படும் குழுமுறைக் குலக்குறியாகும்.

இத்தெய்வத்திற்கு இரண்டு முறைகளில் சடங்கு நடாத்தப்படும்.

1. பட்டிகளுக்கு அருகில் உள்ள காட்டில் நடைபெறும்
2. வயல்வெளியின் மத்தியில் பட்டி அமைக்கப்பட்டு வழிபாடு இடம்பெறும்

வைரவர் பந்தலை விட பெரிதாக பந்தலினை அமைத்து இலைகுழைகளினால் அலங்கரித்து செய்யப்படும். இதில் பச்சை அரிசியினையும் பாலினையும் சேர்த்து பொங்கல் செய்வர். அதில் வேறெந்தப் பொருளும் சேர்க்கப்படமாட்டாது. (ஈழத்துப் பூராடனார், 2000: 34) அகப்பையினை பயன்படுத்தாமல் பொங்கலைப் பொங்க வேண்டும். வாழைப்பழத்தினை குலையோடு பந்தலில் வைத்து வெற்றிலை, பாக்கு, பூக்கள் என்பவற்றினையும் மடையில் வைத்து வழிபாட்டினை ஆரம்பிப்பர்.

ஆண்டு தோறும் பட்டிக்காரர்களால் இரண்டு தடவை நிகழ்த்தப்படுகின்றது.

1. இளங்கன்று பால்
2. முதியான் கன்று பால்

மாடு முதற் கன்று ஈன்றதும் இளங்கன்று பால் எடுத்து பொங்கல் செய்யப்படும். இளங்கன்று வளர்ந்த பிற்பாடு அதன் பாலை எடுத்து சடங்கு செய்வர். இது முதியான கன்று பால் எனப்படும். இரு தடவை செய்ய முடியாதவர்கள் ஒரு தடவை மாத்திரம் செய்யும் சந்தர்ப்பங்களும் உண்டு. (ஈழத்துப் பூராடனார், 2000: 34) பந்தல் போட்டு அப்பந்தலில் முக்காலி கட்டி அம்முக்காலியிலும் பொங்கல், பழம் படைக்கப்படும். இச்சடங்கானது முறையாக பூசாரியினால் செய்யப்பட்டால் முன்னடித்தம்பிரான் பூசாரியினுள் வெளிப்படுவார்.

பொங்கலை படைத்து விட்டு காட்டிலேயே அதனை விட்டு வருவர். அதனை வீட்டிற்கு எடுத்து வரமாட்டார்கள். பின்னர் படைத்த பொங்கலை காட்டிற்குச் சென்று தான் உண்ண வேண்டும் என்ற கட்டுப்பாட்டினை விதித்துள்ளனர். குறிப்பாக வீட்டிலுள்ள பெண்கள்இ குழந்தைகள் இப்பொங்கலை

உண்ணக்கூடாது. (ஈழத்துப் பூராடனார், 2000: 34) குலக்குறி மீதான பயத்தினையும் மதிப்பினையும் இவ்வழமைகள் எடுத்துக் காட்டுகின்றன.

பிள்ளையார் வழிபாடு

மட்டக்களப்புப் பிரதேச மக்கள் மத்தியில் பிள்யொருக்குரிய அடையாளப்படுத்தப்பட்ட குறியீடு ‘‘கல்’’ ஆகும். குலக்குறி பொதுவாக தாவரமாகவோ விலங்காகவோ இயற்கைப்பொருளாகவோ இருக்கும். பிள்ளையாருக்குரிய குலக்குறியீடு இயற்கைப்பொருளாக அமைந்துள்ளது.

பிள்ளையார் வழிபாட்டில் குறியீட்டு வணக்கமுறையில் குலக்குறி மையத்தினை 04 விதமாக நோக்கலாம்.

1. தெருக்கள்
2. குளக்கரை
3. ஆற்றங்கரை
4. மரநிழல்

பிள்ளையார் வழிபாடு பொதுவாக ஆகமம்சார்ந்த வழிபாடாகவே அமைந்திருக்கும். இருப்பினும் மட்டக்களப்பு மக்கள் தாம் வாழும் இடங்களிலெல்லாம் பிள்ளையாரின் ஏதோவொரு அடையாளம் இருக்க வேண்டுமென விரும்புகின்றனர். இங்கு பயத்தின் அடிப்படையில் விநாயகர் வழிபாடு இடம் பெறவில்லை. அவர்களின் மிகுந்த விருப்பத்துடன் விநாயகர் இங்கு மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு இயற்கையோடிணைந்த இருப்பிடங்கள் அதிகளவில் பிள்ளையாரின் குலக்குறி மையமாக அமைகின்றது.

பிள்ளையாருக்குரிய குறியீட்டின் வடிவங்களை 03 ஆக நோக்க முடியும்

1. வடிவற்ற கல்
2. ஓவியமாக வரையப்பட்ட கல் வடிவம்
3. செதுக்கப்பட்ட கல் வடிவம்

விவசாயம் மற்றும் பயிர்ச்செய்கையின் போது பசுஞ்சாணிப்பிள்ளையார் வைத்துஇ அறுகுசாத்தி வழிபடும் பழக்கமும் அல்லது அரைத்த மஞ்சளால் பிள்ளையார் செய்து வைத்துப் பூசிக்கும் வழக்கமும் இவர்களிடையே காணப்பட்டது. (சதாசிவம், ச., 2022) கும்பம் வைத்து விநாயகரை ஆவாகித்து வழிபடுதலும் உண்டு. அறுகம்புல், மந்தாரைப்பூவும் தாழம்பூ, துளசி என்வற்றையும் இட்டு வழிபாடியற்றுவர். விவசாயத்திலும் சேனைப் பயிர்ச்செய்கையிலும் குலக்குறி முக்கியம் பெறுகின்றது. குறிப்பிட்ட குழுவினைச் சேர்ந்தோர் விளைச்சல் நன்றாக அமைய வேண்டும் எனும் நோக்கில் வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் வைத்து பொங்கல் படைத்து வழிபடுவார்கள்.

நாகதம்பிரான் வழிபாடு

இந்துக்களின் ஆகமம் மற்றும் புராணங்களில் நாகதம்பிரான் எனும் தெய்வம் பற்றிய குறிப்புகளும் அவருக்குரிய வழிபாடுகளும் உள்ளன. அவர் பற்றிய உருவ வர்ணனைகளைப் புராணங்களில் காணலாம். ஆனால் மட்டகளப்புத் தேசத்தில் நாகதம்பிரான் குலக்குறிய வழிபாட்டிற்குரிய பண்புகளைக் கொண்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. குலக்குறி வழிபாட்டில் ஒரு விலங்கு முக்கியம் பெறும் எனும் அடிப்படையில் இங்கு பாம்பு குலக்குறியாக வழிபடப்படுகின்றது.

இங்கு இடம்பெறும் நாக வழிபாட்டில் குலக்குறி மையங்கள்

1. வயல்நிலங்கள்
2. மரத்தடி (அரசு, வேம்பு)

3. குளக்கரை

நாக வழிபாட்டில் குலக் குறியின் தன்மைகளை 3 இடங்களில் காணலாம்.

1. பாம்பு வடிவம் செதுக்கப்பட்ட கற்கள்
2. உலோகம்இ மரத்தினால் செய்யப்பட்ட வடிவம்
3. வரையப்பட்ட பாம்பு உருவம்

நாக வழிபாட்டில் பாம்புக் குறியானது விலங்கினைச் சார்ந்ததாக உள்ளது. மட்டக்களப்பு வாழ் பிரதேச மக்களின் வயல் நிலங்களை சீவனோபாயமாகக் கொண்டுள்ள தொழில் முறையில் நாகவழிபாடு முக்கிய சடங்காக உள்ளது. வேளாண்மைச் செய்கையில் நாகதம்பிரானுக்கு பொங்கல் வழிபாடு நடைபெறும். ஏர்நாள்இ நெல் விதைத்தல் போன்ற சந்தர்ப்பங்களில் நாகதம்பிரானுக்கு பொங்கல் பொங்குவர். அது மாத்திரமன்றி வயல் வெட்டுவதற்கு முன்னர் கதிர்களை கையால் வெட்டி வெயிலில் உலர வைத்து பொங்கல் பொங்கி நாகதம்பிரானுக்கு படைக்கப்படும். (சதாசிவம், ச., 2022) வயல்வெளிகளில் பாம்பு தீண்டாமலிருக்கவும் தீண்டினாலும் உயிர் ஆபத்து ஏற்படாமலிருக்கவும் பயிர்களுக்கு கிருமித்தாக்கம் ஏற்படாமல் இருக்கவும் நாகத்தை வழிபடுகின்றனர். இக்குலக்குறியை கொல்லவோ உண்ணவோ தடை விதிக்கப்பட்டிருக்கும்.

மரத்தடி, புற்றடி போன்ற இடங்களில் நாகதம்பிரானுக்கு வழிபாட்டின் போது வெண்பொங்கல், பால், பழம் கரைத்து வார்த்து, முட்டை முதலிய நைவேத்தியப்பொருட்கள் வைக்கப்பட்டு சடங்கு நிகழ்த்தப்படும். ஆனால் கோயில்களில் பூசாரியார் பால், பழத்தினை கரைத்து வைக்கும் போது வாய்க்கு சீலை கட்டப்பட்டு மறைப்பான இடத்தில் செய்யப்படும். பூசாரியின் மூச்சுக்காற்றும் ஏனையோரின் பார்வையும் படாவண்ணமே பத்தியமான முறையில் செய்ய வேண்டும். (கோபாலப்பிள்ளை, க., 2022) குறையேற்பட்டால் உயிர் ஆபத்து ஏற்படும் என்பது மக்களின் நம்பிக்கை. இது குலக்குறியின் மீதான வியப்பையும் அச்ச உணர்வின் வெளிப்பாட்டையும் காட்டி நிற்கின்றன.

பெரியசாமி வழிபாடு

பெரியசாமி வழிபாடு மட்டக்களப்பில் காணப்படுகின்ற ஆகமம் சாரா வழிபாட்டு முறைகளில் ஒன்றாகும். கருங்காலிப்பொல், மரத்தினால் செய்யப்பட்ட வாள், ஈட்டி, வெளுக்கயிறு, முகக்களை என்பன பெட்டகத்தினுள் குறியீடுகளாக வைக்கப்பட்டுள்ளன. பெரியசாமிக்கு கோயில் இல்லை, குலக்குறி மையம் வனங்கள் ஆகும். பெரியசாமி கப்பலில் வந்து இறங்கிய தெய்வம் என்ற நம்பிக்கை இப்பிரதேச மக்களிடம் காணப்படுகின்றது. . வருடத்திற்கொருமுறை வழிபாடு இடம்பெறுகின்றது. மரத்தடியின் கீழ் பந்தல் அமைத்து வழிபாடு செய்யப்படுகின்றது. பிற்பட்ட காலத்தில் இரண்டு வருடத்திற்கு ஒருமுறை நடைபெறுகின்றது. (கோபாலப்பிள்ளை, க., 2022) கப்புகன்மார் வம்சாவெளியினைச் சேர்ந்தோர் சடங்குகளை நடாத்துகின்றனர்.

சடங்கின் போது தவறு ஏற்பட்டால் மழை பெய்து சடங்கு முற்றாக தடைப்பட்டு நிறுத்தப்படும் எனும் அச்ச உணர்வு பெண்கள் பெரியசாமியின் குலக்குறி மையத்திற்கு செல்லக்கூடாது எனும் கட்டுப்பாடு உள்ளது. (கோபாலப்பிள்ளை, க., 2022) இவை இரண்டும் குலக்குறி மீதான பயஉணர்வினை வெளிப்படுத்துகின்றன.

ஆய்வின் பரிந்துரைகளும் முடிவுரையும்

மட்டக்களப்புத் தமிழகத்தில் குலக்குறி வழிபாட்டின் மூலம் குறித்த குலத்தினர் தமக்குள் ஒன்றுபட்ட எண்ணங்களையும் ஒரு குலக்குறியின் வழியில் நிற்பதால் தாம் அனைவரும் இரத்த உறவினர் என்ற எண்ணத்தினையும் கொண்டு தம்மிடையே பரஸ்பர புரிந்துணர்வுடன் இணைந்து ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ தலைப்படுகின்றனர். தம்முடைய குலக்குறிகளானது தம்மை மட்டுமன்றி தம் ஊரினையும் காக்க வேண்டும் என்ற எண்ணத்தின் வழியே அவர்கள் தம் குலக்குறிகளிடம் வேண்டுவர். இதனால் தன்னலமின்றி அனைவரையும் காக்க குலக்குறியை வழிபடும் உயரிய எண்ணம் வெளிப்படுகிறது.

மேலும் தம்முடைய குலக்குறிகளே தம்மைப் பாதுகாப்பதாக இப்பிரதேச மக்கள் நம்புகின்றனர். இயற்கை அனர்த்தங்களிலிருந்தும் விபத்துக்களினின்றும் பகைவர்களிடமிருந்தும் வறுமையிலிருந்தும் தன்னை, தான் வழிபடும் குலக்குறியே பாதுகாக்கின்றது என்ற எண்ணம், நம்பிக்கை குறிப்பிட்ட மக்களிடம் காணப்படுவதால் அக்குறிப்பிட்ட மக்கள் தம் குலக்குறியை பாதுகாக்கும் தன்மையைப் பெறுகின்றனர். அதாவது குறிப்பிட்ட குலக்குறி விலங்காக இருப்பின் அதனை கொல்லவோ உண்ணவோ மாட்டார்கள். உதாரணமாக, இப்பிரதேசத்தில் வண்ணான் குலத்தைச் சேர்ந்தவர் ஆற்றினை குலக்குறியாகக் கொள்வதால் ஆற்றினை அசுத்தப்படுத்தவோ அதில் மணல் அகற்றவோ மாட்டார்கள். இதனால் இவ்வியற்கை அம்சம் பாதுகாக்கப்படுகிறது. இவ்வாறு அவற்றைப் பாதுகாக்காவிடின் அதன் மூலம் அவர்கள் தண்டிக்கப்படலாம் என்ற அச்சமும் அவர்கள் அதனை பாதுகாப்பதற்கு ஓர் காரணமாய் அமைகிறது.

குலக்குறி அம்சம் விலங்காய் இருப்பின் அதனை வீட்டில் வளர்க்கும் வழக்கமும் சமூகத்திலே காணப்படுகிறது. வேளாளர், முக்குவர் போன்ற குலத்தினர் வதனமாரை வழிபடுவதால் மாட்டினை தம் இல்லங்களில் வளர்க்கும் வழமையினைக் கொண்டுள்ளனர். ஏனைய குலத்தவர் பசுக்களை சீவனோபாயத்திற்காக வளர்ப்பதற்கும் இவர்கள் தம் குலக்குறியாகப் போற்றி வளர்ப்பதற்குமிடையில் வேறுபாடென்பது நிச்சயம் உண்டு. குறிப்பிட்ட குலக்குறிகளின் அடையாளங்களாகக் காணப்படும் கத்தி, அரிவாள், சாட்டை போன்ற பல்வேறு சின்னங்களை வீடுகளில் குறிப்பிட்ட குலத்தவர்கள் தங்கள் குல பொக்கி'ம் போல் போற்றி பாதுகாக்கும் தன்மையும் சமூகத்தில் உண்டு. இதனை விட குலக்குறிகளினைக் குறிக்கும் விலங்குகள், பறவைகள் இறப்பின் தன் வீட்டின் உறுப்பினர் ஒருவர் இறந்தது போல் எண்ணி அவற்றிற்கு மரணக்கிரியை செய்து துக்கம் அனு'டிக்கும் வழக்கமும் அக்குலக்குறிச் சமூகத்தவரிடையே காணப்படுகிறது.

அதுமட்டுமன்றி குறிப்பிட்ட குலக்குறி தம்மைப் பாதுகாப்பது மட்டுமன்றி அதுவே தமக்கு அனைத்து சகுணங்களையும் காட்டுவதாகவும் அக்குலக்குறியினால் தமக்கு எதுவும் தீங்கு ஏற்பட்டால் அதற்கு காரணம் தாம் குலக்குறியை வழிபட தவறிவிட்டோம். அதற்கு நாம் தீங்கு இழைத்துவிட்டோம். அதனாலேயே அவ்வாறு நிகழ்ந்தது என்றும் அதற்கான பரிகார பூசை என்பது கட்டாயமாக செய்யவேண்டும். இல்லையெனில் மேலும் மேலும் நாம் குலக்குறியினால் தண்டிக்கப்படுவோம் என்ற எண்ணமும் சமூகத்தில் காணப்படுவதால் குறிப்பிட்ட குலம் தம் குலக்குறிக்கான பரிகாரச் சடங்குகளையும் மேற்கொள்கிறது.

அதாவது குலக்குறியானது வீட்டிற்குள்ளும் வீட்டிற்கு வெளியிலும் அருகிலும் அமைந்திருப்பதனாலும் குறிப்பிட்ட மக்கட் கூட்டம் தவறு செய்ய அஞ்சுகின்ற மனநிலையை உருவாக்குகிறது. குலக்குறியானது தவறு செய்தவர்களையும் பொய், சூள் கூறுபவர்களையும் தண்டிக்கும் என்ற எண்ணத்தால் மக்கள்

தவறு செய்ய அஞ்சுகின்ற பண்பாட்டைக் குலக்குறியானது சமூகத்தில் வளர்க்கிறது. இக்குலக்குறிகளுக்காக நிகழ்த்தப்படுகின்ற சடங்கு முறைமைகளில் தமக்கும் தம் குலக்குறிகளுக்குமிடையிலான உறவு முறைமையினை அக்குறிப்பிட்ட குலமானது வெளிப்படுத்துகிறது. அதாவது குறிப்பிட்ட குலத்தின் தலைவர் அல்லது அக்குலக்குறிக்கான சடங்கை நிகழ்த்துவோர் அல்லது அக்குலமே தம் குலக்குறியினை உணர்த்தும் வண்ணம் ஏதோவதொரு அடையாளச் சின்னத்தில் தன்னை அடையாளப்படுத்திக்கொள்வர். இவர்கள் தம் உடலில் குருதியோடு கலக்கும் வகையில் அக்குலக்குறியைப் பச்சைக்குத்திக்கொள்ளும் வழமையுமுள்ளது. பாம்பு, பசுவின் முகம், கொம்பு முதலியவற்றை பச்சை குத்திக் கொள்ளும் வழமை மட்டகளப்பில் பல பிரதேச மக்களிடம் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

மட்டக்களப்பிலே சில குலக்குறிகளுக்கு பெரியளவில் விழாவும் சில குலக்குறிகளுக்கு பொதுவான பூசை முறையும் அதாவது பொருளாதார வசதியை கருத்திற்கொண்டும் பூசைகள் இடம்பெறுகிறது. இந்நிலமைகளில் அது சமூகத்தை ஒற்றுமைப்படுத்துவதை முக்கிய நோக்காகக் கொண்டு செயற்படுகிறது. இதனால் குலத்தினை அடிப்படையாகக் கொண்ட குலக்குறியை சார்ந்த சமூகமும் தம் குலக்குறிக்கான பூசைகளின் போது தமக்குள் எத்தகைய தகுதிகளின் அடிப்படையில் வேறுபட்டிருந்தாலும் அத்தகைய தகுதிகள் நீக்கப்பட்டு அனைவரும் 'பக்தி' எனும் ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு 'பக்தன்' எனும் ரீதியில் ஒன்றுபட்டிருக்கும் நிலை ஏற்படுகிறது.

உசாத்துணை

1. ஈழத்துப் பூராடனார், 2000, வதனமார் வழிபாடு – ஒரு மதிப்பீடு, ஜீவா பதிப்பகம், இலங்கை
2. சண்முகசுந்தரம்.சு., 1999, நாட்டுப்புற இயல், மணிவாசகர் பதிப்பகம்
3. சிவசுப்ரமணியம்,வ., 2004, மட்டக்களப்பு நாட்டாரியல், வக்மி பதிப்பகம், கொழும்பு
4. சிவரெத்தினம்,சு., 2006, சடங்குகளினூடாக மட்டக்களப்பு, விபுலம் பதிப்பகம், மட்டக்களப்பு
5. சுகந்தி சுப்ரமணியம், 2002, மட்டக்களப்பு மாவட்டத்தின் கிராமிய வழிபாட்டுச் சடங்குகளும் அவை தொடர்பான பாடல்களும், இலண்டன் இந்து தமிழ் மன்றம்.
6. தங்கேஸ்வரி,க., 2008, கிழக்கிலங்கை வழிபாட்டுப் பாரம்பரியங்கள், மணிமேகலைப் பரசுரம், சென்னை
7. பக்தவக்சலபாரதி, 1990, தமிழர் மானிடவியல், புதுமை மொழியியல் பண்பாடு ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி.
8. பக்தவக்சலபாரதி, 1990, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை.
9. மகேஸ்வரலிங்கம்,க., 1996, மட்டக்களப்பு சிறு தெய்வ வழிபாடு ஓர் அறிமுகம், ஆதவன் அச்சகம் மட்டக்களப்பு
10. மகேஸ்வரலிங்கம்,க., 2008, மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும், கொழும்புத் தமிழ்ச் சங்கம்.
11. மௌனகுரு,சி., 2013, மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப் பண்பாடு, 2ம் உலக இந்து மாநாடு, மட்டக்களப்பு பிரதேசக்கிளை.
12. லூர்து,தே., 2000, நாட்டார் வழக்காற்றியல்: சில அடிப்படைகள் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையம்கோட்டை
13. வடிவேல் இன்பமோகன், 2012, கிழக்கிலங்கைச் சடங்குகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

நேர்காணல்

1. குணசிங்கம், க., நீலாவணை, 15.08.2022, 10.00
2. சதாசிவம், ச., கன்னன்குடா, 18.08.2022, 10.30
3. கோபாலப்பிள்ளை, க., மட்டக்களப்பு, 18.08.2022, 10.40

Discourse Study Conducted on Illegal Sand Mining in Sri Lanka

Kaushalya, G. N.[1*], Liyanage, D. L. N. P.[2] Jayawardene, K. J. A. C. M.[3],
[1,2,3] Postgraduate Institute of Humanities and Social Sciences, University of Peradeniya
*gnnipuni011@gmail.com

Abstract

Sand is considered as a one of the most consumed natural resources and it is essential for many sectors including building constructions, industries and electronics. With this demand this over exploitation of sand can be identify in the world and Sri Lanka and it has become a considerable discourse in today's society. Therefore, in this study mainly focused on to conduct discourse analysis on illegal sand mining in several areas in Sri Lanka as a qualitative methodological approach. The materials including research papers, reports, newspaper articles, books, periodicals, interviews and conversations used as a main data source of this study and data was analyzed using Discourse Analysis in a qualitative methodological approach. The findings of this research critically recognize that the dominant discourse that was pointed out in these articles is, this sand mining mafia has rapidly increased with the involvement of the government and politically backed paramilitary organizations. The alternative discourses that have been pointed out to the rise of illegal rapid sand mining are: becoming an organized process, abuse of powers, responsible authorities do not take appropriate action, failure to properly punish offenders, failure to enforce the law properly, lack of security in sand mining sites, use of new technology, injustice and inequality problems related to enforcement of rules and regulations, and problems related to judicial action and court decisions. This kind of studies enables us to identify real situation regarding the specific discoursal topics in the community in a spatial and temporal manner.

Keywords: Illegal Sand Mining, Discourse Analysis, Sri Lanka, Sand, Qualitative Methodological Approach

1. Introduction

Within the contemporary world, everything has a boundless demand including sand as a resource. Sand is considered as a one of the most consumed natural resources and it is essential for many including industries, construction, electronics, plastics and water filtration (Filho, et al., 2021). Worldwide, sand mining is a problem that has not been identified as a threat or a discourse topic for a long time. However, the catastrophe of this threat around the world is growing rapidly and it has become a considerable discourse in today's society. Due the over exploitation of the resources for various reasons, it has led to happen illegal and excessive sand mining in Sri Lanka (Pereira & Ratnayake, 2013; Piyadasa , 2011). Applicable to this research it aims to conduct discourse analysis on illegal sand mining in several areas in Sri Lanka as a qualitative methodological approach. Discourse analysis purposes at examining how language functions in a particular topic and how meaning is created in different social frameworks by authors including how language is used in real life situations.

Instead of focusing on smaller units of language, here it is used to study larger amounts of language, such as, collections of texts. Overall, this is a qualitative method of analyzing texts. To conduct the discourse analysis, it can be benefitted with materials including research papers, reports, newspaper articles, books, periodicals, interviews and also conversations. With reference to the materials that have been used to conduct the discourse analysis in this research, it shows how illegal and excessive sand mining acts in several areas throughout the country

that has led to the continuous and often illegal exploitation of sand from various sources, including river beds (Pereira & Ratnayake, 2013) and this illegal and unregulated sand mining has had a significant negative impact on the ecology of the river, with the rapid urbanization and landscape changes, the increase of river sand mining rate has produced serious social and environmental consequences (Ratnayake, 2015; Pereira & Ratnayake, 2013; Piyadasa , 2011).

Basically, it presents the nature of illegal sand mining which engaged to mafia, government backed paramilitary organizations and contemporary it witnesses the threat to social security as well. Apart from that, it reveals a dominant discourse and some alternative discourses about illegal sand excavation in several areas within the country formulating arguments and aims at making interpretations based on both the discourses of the material itself and on contextual knowledge. The main conditions that have to be used in this research are about main discourse, alternative discourses and their common features.

According to the qualitative methodological approach, we rely on materials about illegal sand mining in Sri Lanka including research papers, reports, newspaper articles and newspaper reports. This step involves closely examining various elements of the materials, such as words, sentences, paragraphs and overall structure and relating them to attributes, themes and patterns relevant to the discourse analysis on illegal and excessive sand mining in Sri Lanka. With relevant for the arising themes and patterns due to the coding analysis, this mainly assigned to go through with a critical analysis of illegal sand mining discourses with respect to their temporal and spatial changes including detailed inspection and evaluation of another person's ideas or his or her works. Regarding with this report, it argues and critically analyze author's point of view which present a perspective that backup with evidence from the text.

It depicts a subjective writing as it expresses our interpretation and analysis of the work by breaking down and studying its parts. So here we aim at conduct on several discourses own by several authors by assigning themes relevant for the discourse analysis. Its meanings going beyond the sentence which can be provide a major argument throughout the discourse with their temporal and spatial changes. Applicable to the discourse conduct on illegal sand mining in Sri Lanka, it aims at providing common features on illegal and excessive sand mining varying in spatially and temporally within the country. It benefitted to create a dominant discourse with respect to the author's perspective relates to its social and political context as well. By go through with all findings, it provides an idea about how this illegal sand mining

turns into a massive catastrophe or a mafia, who governed these processes and what type of threats it creates to the social security, the truth behind these all facts and so on.

Overall, this aims at conduct on a critical discourse analysis in a way of qualitative and interpretative method of analyzing texts based on the particular discourses arising from the themes with respect to the materials including illegal and excessive sand excavation discourses relevant for the several areas in the country including their spatial and temporal changes. The main discourses and the alternative discourses including their common features are used to interpret the nature of the illegal sand mining and their changes with regarding spatial and temporal changes.

2. Methodology

In general discourse analysis contains the examination of language beyond the sentence to understand how it functions in a real world which is concerned with the study of smaller bit of language such as sounds, parts of words, meaning and even the order of words in a sentence. Applicable to the research it conducts on a discourse analysis about spatial and temporal changes of illegal and excessive sand mining in Sri Lanka with findings about illegal sand mining in Sri Lanka including research papers, reports, newspaper articles and newspaper reports. Map 1 shows that the relative and absolute location of the study area.

As a qualitative methodological approach, it examined the text to identify how the main argument is structured and how the macro features of the text are aligned with the main argument and what are the supporting facts. For that it has driven through the coding by using MS Excel Office Software by doing in-vivo coding, analytical coding and memo writing by assigning codes to all different statements in the text and analyzed them to understand their underlying meaning. This method benefitted to have a good idea of what individual statements mean and the overall context of the material.

Map 1: Study Area Map



Source: Prepared by Author, 2022

According to the themes or the sections arise from the findings to all different statements, findings were analyzed by thematically to found the fundamental meaning of the discourses in the materials and started to analyze them critically about spatial and temporal changes of illegal and excessive sand mining in Sri Lanka. Applicable to the research discourse analysis, it explains and interprets of the different discourses respective to the illegal sand mining in Sri Lanka including the changes of spatial and temporal as well. With critical discourse analysis of the themes arising from the discourses, it aims to trace ideologies and assumptions underlying the discourse and link them to different views of experience and beliefs. After constructing the findings, they were shown in descriptions, maps, and figures to present the analysis. Figure 1 shows that the methodology of this report.



Figure 1: Methodology of the report

3. Results and Discussion

In Sri Lanka, artisanal or manual sand mining from rivers has provided the country's construction industry for hundreds of years. Since 1990, the introduction of mechanized methods has led to intensive river sand mining (RSM). The 2004 tsunami and the end of the civil war in 2009 triggered a construction boom, which doubled the pre-tsunami annual demand for sand from 5 to 10 million cubic meters. Despite Supreme Court intervention in 2004, which allowed artisanal mining only at specific locations, illegal mining continues. (Weerasekera D. , 2014) illegal sand mining associated several discourses are being discussed when finding solution for this matter.

Illegal sand mining is backing up by politicians, is one of the main discourses which derives from the community as a reason for the increasing level of increasing sand mining. Several Paper articles claim that illegal sand mining of most of the rivers are done at the backing up of the politicians, their cousins or their subordinators. According to the article, Sri Lanka's

Relentless Sand Mining Mafia by *Sulochana Ramiah Mohan* she strongly brings forward the argument about the political interference to the illegal sand mining (Mohan, 2021).

Another discourse which brought forward is the intervention and support of the authorized institutions and the bribes taken by the government officials from the grass root to top level officials. This issue also tremendously impacted to increase this illicit business, which is pathetic situation currently can be visible related to the sand mining industry. specially some government officers involving in this from bottom to top. The government representative in a village is Grama Niladhari, and he is having authority to act against the illegal activities. He has better interaction with people can make use of reduce the issue before it gets adverse. But most of these officials are taking bribes and act as unsighted. This is a privilege for the sand minors to continue their illicit conducts. However, most of the illegal sand minors have their license to practice and over mining, during the restricted days too.

Giving permission to conduct sand mining by using machinery such as excavators, tractors also make sand mining in disaster. Due to the approval of the government to intensify sand curbing prosses due to the necessity of sand as a raw material for development. In our counter 1/3 of the sand consumption is done movement's development activities. When the supplying of sand is in sufficient, the people who make legislations breaks the low and provide opportunities to over extract sand by the name of development. This over extraction finally has become permitted illegal sand mining in Sri Lanka as they don't have a proper policy framework towards the environmental protection.

Inability to engage environmental concerns along with the other civil affairs by the police is the other main apprehension that people took forward through the newspaper articles. As sand mining became a well-organized mafia, single or couple of police men are unable to handle this issue. In March 2006, the former officer in charge of the Rasnayakapura Police station, Pradeep Karunadeera was attacked and lost his sight in one eye. (Jayasinghe, 2021) Police does not have enough ability to deal with this paramilitary group of people as so, several attacks were recorded against the policeman. In such situation police also stepping back to react illegal activities. Dilanka Senanayake, of the Haritha Parapura Environmental organisation, states to the Daily news on Sunday, August 15, 2021 regarding the Politically-backed sand mining mafia wrecking Deduru Oya and livelihoods that the police must bear blame for not enforcing the law. "Tractors and tipper vehicles drive straight into Deduru Oya and sand mining continues unabated with the police ignoring these illegal activities, this also proves how the politicians

are conducting their practices recklessly toward the public natural resources. Anyhow, The Mihisara Foundation, an environmental organisation in Bangadeniya in Chilaw obtained a favourable Supreme Court order in 2006 (SCFR 226/2006), preventing the mining of sand, but it only had an effect for a few years

Inability to strengthen the policy framework, planning and monitoring sand mining activities also created another restriction to protect the river ecosystems and encourage illicit mining. Directly the government officials and the decisions taken by the government also must be responsible for the massive destructions and environmental deterioration due to excessive sand mining. As co-cabinet spokesperson Minister Ramesh Pathirana said "the army will be deployed to monitor and investigate cases of illegal mineral mining, and the cabinet had approved the proposal put forth by Environment Minister S. M. Chandrasena the cabinet on 5th of December 2020, decided to remove the permits for transportation of minerals, saying the construction industry was facing short-supply of raw materials" (Echelon Media (PVT) Ltd., 2020).

Some people especially, from north eastern side claims**,** paramilitary organizations baking up by Mr president, Gotabhaya Rajapaksa's government promotes this illegal sand mining by misleading people that this excessive mining is to the accelerated development projects which are ongoing currently. But villagers concern more about the environmental sustainability made a guise in between security forces and innocent sand minors (Jayasinghe, 2021; Tamil Guardian Ltd., 2020).

Finally, the attack carried out on the Derana TV journalist Indunil Wijenayake in Monaragala, (the poorest district in Sri Lanka) while he was there to cover an incident of unauthorized sand mining in the Kumbukkan Oya area in October 2020 while he was attempting to report the story of illegal sand mining shows, the public pressure toward the way of earning income during this pandemic situation. This might be the only option that could bring forward to survive from the poverty in this crucial moment (Free Media Movement, 2020).

River sand is an essential raw material for a number of significant industries in Sri Lanka and offers jobs for many rural people. In recent years mining activities in the country have expanded dramatically. This growth has been primarily driven by the boom in the construction industry that followed the Asian Tsunami of 2004 (Ratnayake, 2015; Pereira & Ratnayake, 2013). The construction industry is currently the main consumer of river sand and accounts for more than 95% of demand (Gunaratne, 2010)**.** It is estimated that a third of the sand mining in Sri Lanka

is illegal. Such indiscriminate mining has had a negative effect on most of the country's rivers and streams.

Several discourses are put forward regarding illegal sand mining so far, the main discourse for this issue is political involvement. most sand mining permits are obtained by politicians for their close associates, siblings, security personnel, relatives and their political backers; a reason why illegal sand mining is continuing uninterruptedly. Issuance of mining permits for minerals such as sand, soil, clay, and gravel generally get caught up with vicious cycle. As the issuance is done by Geological and Survey Bureau (GSMB) any person can obtain license for river sand mining according to the rules and regulations implemented by GSMB. But politically backing up groups use this mining in large scale by using the power of the politicians (Jayasinghe, 2021). Due to the severity of the involvement Government Authorities are unable to interfere to protect environment and river banks. According to the daily news Sunday, 15th August 2021, many police stations in the Kurunegala District — Nikaweratiya, Rasnayakapura, Kobeigane, Bingiriya and Pallama, Arachchikattuwa, and Chilaw in the Puttalam District have failed to follow the court order. This will prove political power is more when it go to practice than the judicial power, which is a pathetic situation which shows the nature of the political power in this country.

Furthermore, Sand, which is state property, is protected by the Mines and Minerals Act No. 33 of (1992) as amended by Act No.66 of 2009 (Jayasinghe, 2021; Rathnayake, 2008). There is heavy demand for sand from the construction industry. And mining it, with or without permits, has led to massive conflicts. Even though, the balance between sustainable development and environmental conservation in Sri Lanka is often weaken by the political leadership with policies best explained as short-sighted and environmentally unsound. 4th of December 2019, a number of decisions made by the Sri Lankan Cabinet along with the Geological Survey and Mines Bureau (GSMB), have deliberately disregarded the existing laws, particularly in terms of issuing licenses/permits for mines and minerals. There are two specific cabinet decisions which underlies the issue at hand. Firstly, removing the requirement of a license to transport sand, soil, clay etc. Secondly, the proposal to amend the Mines and Minerals Act, so that the procedure to obtain mining licenses are much “simplified”. Though the GSMB dispensed the requirement of environmental recommendations of the Central Environmental Authority (CEA) in issuing licenses/permits. However, on the 17th of July 2020 the Court ordered to take legal action against those transporting sand and rubble without permits, proving that the Cabinet cannot amend and invent laws at its own wish. Nevertheless, the saga of “relaxing”

procedure continues, and the GSMB's attempts to facilitate industrial and political needs by striking out any and all environmental compliance requirements is appalling and cannot be overlooked (Ranasinghe, 2020; Jayasinghe, 2021). however, article tried to explain how the decision-making process act bluntly towards protection the environment. Nevertheless, Reason might be large sum of money which deposits to their accounts by the name of development and acceleration of development and the magnitude of the projects determine the hidden profit what these parliamentarians receives. Until, the legislative power act, independently taking off the timidness the people who were appointed by the people must be fulfil the wish of the majority of the country.

Bribes taken by the government officials and well-organized sand mining mafia has become other threat to the sand mining. There are some license holders those who have man power as well as wealth earn by illegal conducts. They do not afraid to involve illegal activities due to the thuggery. On the other hand, people afraid to go against them as well as they are pampered by the parliamentarians in that particular area and they have mutual assistance in their own manner. They use innocent poor people by giving money as spies not only deprived villagers they use children also as spies when they do their illegal activities. During the Covid lock down period this was happened largely as students are centered to houses. They provided mobile phones for children to get messages when police or any other authorized people comes. however, illegal sand mining was supported by this poor people can be due to alleviate from poverty. During the covid period, people are offered sand mining work as an alternative during the pandemic when there is scarcity of jobs. These reasons also increase the scale of doing illegal sand mining in Eastern region.

Instead of the above, poverty also play a large role in illegal sand mining. This is largely carried out in Puttalam, Monaragala, Polonnaruwa and Anuradhapuraya area. In some occasions people are aggressive against the reporters, environmentalist who work against the illegal sand mining, the attack carried out on the Derana TV journalist Indunil Wijenayake in Monaragala, (the poorest district in Sri Lanka) while he was there to cover an incident of unauthorized sand mining in the Kumbukkan Oya area in October 2020 while he was attempting to report the story of illegal sand mining shows, the public pressure toward the way of earning income during this pandemic situation (Free Media Movement, 2020). This might be the only option that could bring forward to survive from the poverty in this crucial moment.

In general, illicit sand mining in Sri Lanka turns to huge environmental destruction based on many hindering factors as discussed above. Thus, mitigation of impact also can be done by empowering several sectors. Mainly political intermediation must be stopped and sustainable development practices are needed to implement within the country. Negligence of court orders, due to the political orders or bribe must be irradicated from the roots to find out solution. People appoints the parliamentarians therefore; they must be thinking about who must send to the parliament. Voice of public can be controlling these misuses made by the politicians. Public awareness is the other way that could reduce the illegal sand mining. Uneducated poor people must aware about the consequences of the excessive sand mining and illegal sand miner should go through high amount of fines which they unable to bear. Legislations also must be powerful and unbreakable. Authority which has given to GSMB must be empowered and there protecting environment must be given to the group of people such as STF who has ability to control thuggery going behind this sand mining. If these processes are happening smoothly illegal sand mining can be reduced.

4. Conclusion

Sand is considered as a one of the most consumed natural resources, and it is essential for many industries, including construction, electronics, plastics, and water filtration. Sand mining is a problem that has not been identified as a threat or a discourse topic for a long time. In this paper, it aimed at identify the main points of view of the community regarding the illegal sand mining mafia in Sri Lanka and critically point out about illegal sand excavation in several areas within the country and what issues have to be overcome. The findings of this research critically recognize that, this sand mining mafia has rapidly increased with the involvement of the government and politically backed paramilitary organizations. The alternative discourses that have been pointed out to the rise of illegal rapid sand mining are: becoming an organized process, abuse of powers, responsible authorities do not take appropriate action, failure to properly punish offenders, failure to enforce the law properly, lack of security in sand mining sites, use of new technology, injustice and inequality problems related to enforcement of rules and regulations, and problems related to judicial action and court decisions. On the other hand, this critical analysis found that there has been a debatable discourse about the lack of social security in the communities that are engaged in illegal sand mining sites.

5. Bibliography

1. Free Media Movement. (2020). *Sri Lanka: Journalist covering illegal sand mining operation attacked*. Retrieved from IFeX,: https://ifex.org/sri-lanka-journalist-covering-illegal-sand-mining-operation-attacked/
2. The Ministry of Environment and Natural Resources. (2005). *National Policy on Sand as a Resource for the Construction Industry (DRAFT)*. Retrieved from ELAW (Environmental Law allience Worldwild): https://www.elaw.org/content/sri-lanka-national-policy-sand-resource-construction-industry-draft
3. Echelon Media (PVT) Ltd. (2020). *Sri Lanka to deploy military as loosening transport permits triggers illegal sand mining*. Retrieved from Iconomynext: https://economynext.com/sri-lanka-to-deploy-military-as-loosening-transport-permits-triggers-illegal-sand-mining-38903/
4. Filho, W., Hunt, J., Lingos, A., Platje, J., Vieira, L., Will, M., & Gavriletea, M. (2021). The Unsustainable Use of Sand: Reporting on a Global Problem. *MDPI, sustainability*. Retrieved from https://doi.org/10.3390/su13063356
5. Gunaratne, L. (2010). *Can river sand mining be sustainable?* The Economy and Environment Program for Southeast Asia (EEPSEA). Retrieved from https://idl-bnc-idrc.dspacedirect.org/bitstream/handle/10625/46165/132655.pdf
6. Jayasinghe, H. (2021). *The Sundy Times*. Retrieved from Politically-backed sand mining mafia wrecking Deduru Oya and livelihoods: https://www.sundaytimes.lk/210815/news/politically-backed-sand-mining-mafia-wrecking-deduru-oya-and-livelihoods-452394.html
7. Mohan, S. (2021). *Ceylon Today*. Retrieved from Sri Lanka's Relentless Sand Mining: https://ceylontoday.lk/news/sri-lanka-s-relentless-sand-mining-maf-ia
8. Pereira, K., & Ratnayake, R. (2013). *Water Integrity in Action: Curbing Illegal Sand Mining in Sri Lanka*. Germany: Water Integrity Network. Retrieved from https://www.waterintegritynetwork.net/?docs=6813
9. Piyadasa , R. (2011). River sand mining and associated environmental problems in Sri Lanka. *Sediment Problems and Sediment Management in Asian River Basins*, (pp. 148 - 153). Hyderabad, India. Retrieved from https://iahs.info/uploads/dms/16301.19-148-153-349-10-Hyderabad-Ranjnana-Piyadasa-Sri-Lanka.pdf
10. Ranasinghe, P. (2020). *Colombo Telegraph*. Retrieved from Sand Mining, The Law & The Resource Curse In Sri Lanka: https://www.colombotelegraph.com/index.php/sand-mining-the-law-the-resource-curse-in-sri-lanka/
11. Rathnayake, R. (2008). *River Sand Mining - Boon or Bane?* Sri Lanka water partnership. Retrieved from https://lankajalani.org/wp-content/uploads/2017/04/RSM-English.pdf
12. Ratnayake, R. (2015). Corruption & Unregulated/Illicit River Sand Mining (RSM) in Sri Lanka. 2. Retrieved from https://lankajalani.org/wp-content/uploads/2015/03/crruptn_rr.pdf
13. Tamil Guardian Ltd. (2020). *Locals fear environmental damage and police brutality as illegal sand mining steps up*. Retrieved from Tamil Gardian: https://www.tamilguardian.com/content/locals-fear-environmental-damage-and-police-brutality-illegal-sand-mining-steps
14. Weerasekera, D. (2014). Digging for development: the hidden cost of Sand. *IWMI*, p. 1487.
15. Weerasekera, D. (2014). *IWMI*. Retrieved from Digging for development: the hidden cost of sand: https://www.iwmi.cgiar.org/2014/05/digging-for-development/

பஸ்பாகே கோரளை பிரதேச செயலகப் பிரிவில் நிலச்சரிவு அனர்த்தம்: ஓர் இடரீதியான பார்வை

டேனியல் காமதேனு கிறிஸ்டினா[1], வசந்தகுமாரி செல்வநாயகம்[2]
[1,2] புவியியல் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[1,2] christenadk@gmail.com, vasanthakumarys@esn.ac.lk

ஆய்வுச் சுருக்கம்

இலங்கையின் கண்டி மாவட்டத்தில் அமையப்பெற்றுள்ள பஸ்பாகே பிரதேசம் எதிர்கொண்டு வரும் இயற்கை பேரிடர்களுள் நிலச்சரிவு முதன்மையானதாக விளங்குகின்றது. அண்மைக் காலமாக அதிகரித்து வரும் நிலச்சரிவு நிகழ்வுகளினால் இப்பிரதேசம் அதிகளவிலான சமூகப் பொருளாதார பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றது. இப்பிரச்சினையை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட இவ்வாய்வின் பிரதான நோக்கம் பஸ்பாகே கோரளை பிரதேச செயலகப் பிரிவில் நிலச்சரிவு அனர்த்தத்தின் இடரீதியான பாங்கு, காரணிகள், தாக்கங்கள் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகள் ஆகியவற்றை மதிப்பீடு செய்வதாகும். கலப்பு முறை ஆய்வாக முன்னெடுக்கப்பட்ட இவ் ஆய்விற்கு தேவையான தரவுகள் வினாக்கொத்து, நேர்காணல், நேரடி அவதானிப்பு, குழுக்கலந்துரையாடல் ஆகிய முதலாம்நிலை தரவு சேகரிப்பு முறைகளின் ஊடாகவும், இரண்டாம் நிலைத்தரவு மூலங்களை பயன்படுத்தியும் பெறப்பட்டன. ஆய்வுப் பிரதேசமாக பஸ்பாகே கோரளை பிரதேச செயலகப் பிரிவில் நிலச்சரிவு அனர்த்திற்கு முகங்கொடுத்துவரும் தண்டுபெதிரூப, வெலிகொடவத்த மற்றும் நாவலப்பிட்டிய தெற்கு ஆகிய மூன்று கிராம சேவகர் பிரிவுகளும் தெரிவு செய்யப்பட்டு ஆய்வானது முன்னெடுக்கப்பட்டது. வினாக்கொத்து ஆய்விற்காக ஆய்வுப் பிரதேசத்தில் நிலச்சரிவினால் பாதிப்பிற்குட்பட்ட 56 குடும்பங்களும் தெரிவு செய்யப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகள் அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதுடன், GIS தொழினுட்பத்தின் ஊடாக இடரீதியான பரம்பலைக் காட்டுவதன் பொருட்டு படமாக்கலும் செய்யப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் ஏனைய அனர்த்தங்களை விட நிலச்சரிவு அனர்த்தமே உயர்வாகக் காணப்படுவதுடன், இடரீதியான வேறுபாடுகளையும் கொண்டுள்ளது. 75% மான பகுதி நிலச்சரிவின் அதிக ஆபத்தான பகுதியாகவும், 23% மான பகுதி ஓரளவு ஆபத்து கொண்ட பகுதியாகவும், 02% மான பகுதி மட்டுமே குறைந்த ஆபத்தை எதிர்கொள்ளும் பகுதியாகவும் விளங்குவதோடு ஆய்வுப் பிரதேசத்தில் தண்டுபெதிரூப பகுதியே உயர் நிலச்சரிவு அனர்த்தப் பகுதியாகவும் விளங்குகின்றது. நிலச்சரிவினை தூண்டும் காரணிகளை பொறுத்தவரையில் மானிட காரணிகளை விட பௌதிக காரணிகளே அதிக செல்வாக்கு செலுத்துகின்றன. பௌதிக காரணிகளுள் சாய்வின் தன்மை, மழைவீழ்ச்சி ஆகியன முக்கிய காரணிகளாக இனங்காணப்பட்டதோடு மானிடக் காரணிகளுள் முறையற்ற வடிகாலமைப்பு முறைமை, சாய்வுகளில் முறையற்ற வகையில் அமைக்கப்படும் குடியிருப்புக்கள் என்பன இனங்காணப்பட்டன. அதிகரித்து வரும் நிலச்சரிவு அபாய நிலையினால் சமூக பாதிப்புக்களுடன் பொருளாதார ரீதியிலான பாதிப்புக்களும் உயர்வாக உள்ளமையினால் இப்பிரதேச மக்களின் வாழ்க்கைத்தரம் பின்னடைவான நிலையில் காணப்படுகின்றது. ஆபத்தான வலயங்களில் வாழும் மக்களுக்கான மீள்குடியேற்றம், சமூக மட்டத்தில் முன்னெடுக்கப்படும் சில சாய்வு முகாமைத்துவ நடவடிக்கைகள், விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றுக்கு அப்பால் தொடர்ந்தும் மக்கள் ஆபத்து வலயங்களிலேயே வாழ்ந்து வருகின்றமை அவதானிக்கத்தக்கது. இந்நிலையில் மீள்குடியேற்ற செயற்பாடுகளை துரிதப்படுத்துவதும், அவசியமான முகாமைத்துவ நடவடிக்கைளை முன்னெடுப்பதும், மக்களுக்கு பாதுகாப்பான வாழ்வினை உறுதிப்படுத்துவதும் அவசியமாகியுள்ளது.

திறவுச் சொற்கள்: நிலச்சரிவு, இடர், அனர்த்தம், ஆபத்து, நிலச்சரிவு முகாமைத்துவம், இடரீதியான வேறுபாடு

1. ஆய்வு அறிமுகம்

இலங்கை எதிர்கொண்டு வரும் முக்கிய அனர்த்தங்களுள் ஒன்றாகவும், உயிரிழப்புக்களை மாத்திரமன்றி உடைமைகள் மற்றும் வாழ்வாதாரத்திற்கு பாதிப்புக்களை ஏற்படுத்தும் அனர்த்தமாகவும் நிலச்சரிவு விளங்குகின்றது *(Prasannaa & Gnanatheepan, 2018).* குத்துயர அடிப்படையில் நோக்குகையில் சராசரி கடல் மட்டத்திலிருந்து 300 மீற்றருக்கு மேல் உள்ள பகுதிகளிலேயே இலங்கையில் பொதுவாக நிலச்சரிவு ஏற்படுகிறது *(Cooray, 1984).* அவ்வடிப்படையில் இலங்கையில் மலைப்பாங்கான பகுதிகளில் ஏற்படும் இவ் அனர்த்தமானது செறிவான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய அனர்த்தமாக விளங்குகிறது, *(Dahanayake, 1986).*

நிலச்சரிவானது இயற்கை காரணிகளின் செல்வாக்கினால் ஏற்படுவதாக இருந்தாலும் மனித நடவடிக்கைகளுடன் நெருங்கிய தொடர்புடைய அனர்த்தமாகவும், இலங்கையில் அடிக்கடி இடம்பெறும் அனர்த்தமாகவும் விளங்குகின்றது. பெரும்பாலும் இலங்கையில் இடம்பெற்று வரும் நிலச்சரிவுகள் அதிக மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறும் காலங்களிலேயே இடம்பெறுவதனை அவதானிக்க முடியும் *(Prasannaa & Gnanatheepan, 2018).* அவ்வகையில் இலங்கை தேசிய

கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் (NBRO) தரவுகளின் அடிப்படையில் இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 13,780 சதுர கிலோமீற்றர் பரப்பு நிலச்சரிவு ஏற்படக்கூடிய பகுதியாக விளங்குகிறது *(Hemasinghe, et al, 2017).*

மாத்தளை, கண்டி, நுவரெலியா, பதுளை, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, மொனராகலை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, குருநாகல் ஆகிய மாவட்டங்கள் நிலச்சரிவு இடர்மிக்க மாவட்டங்களாக விளங்குகின்றன *(National Building Research Organization, 2018).* இவற்றுள் நிலச்சரிவுக்கு உயர் சாத்தியம் கொண்ட மாவட்டங்களில் ஒன்றாக கண்டி மாவட்டம் விளங்குகின்றது. இம்மாவட்டத்தின் பல பகுதிகள் நிலச்சரிவு இடருக்கு வாய்ப்பான பகுதிகளாக விளங்குவதுடன் அண்மைக்காலமாக இங்கு ஆபத்து நிலையும் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கண்டி மாவட்டத்தில் 27 சதவீதமான பகுதி நிலச்சரிவுக்கு உட்படும் பகுதியாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிலையத்தினால் இனங்காணப்பட்டுள்ளது *(Wickramasooriya & Amarasooriya, 2021).* இம் மாவட்டத்தில் காணப்படும் 20 பிரதேச செயலகப் பிரிவுகளுள் பஸ்பாகே கோரளை, கங்கா இஹல கோரளை, உடுநுவர, பதஹேவஹெட்ட, யட்டிநுவர, உடபலாத மற்றும் கங்கவட கோரளை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகள் நிலச்சரிவு அபாயமிக்க பகுதிகளாக உள்ளன. இவற்றில் கண்டி மாவட்டத்தின் தென்பகுதியில் அமையப்பெற்றுள்ள பஸ்பாகே கோரளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் அண்மைக்காலமாக நிலச்சரிவு அபாய நிலை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பஸ்பாகே கோரளை பிரதேச செயலகப் பிரிவின் 29 கிராம சேவகர் பிரிவுகளுள் பத்திற்கும் மேற்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் நிலச்சரிவு அனர்த்தம் ஏற்படக்கூடிய சாத்தியப்பாடுகள் உள்ளதாக NBRO இனங்கண்டுள்ளது. இப்பகுதிகளில் கடந்த சில வருடங்களாக நிலச்சரிவு ஆபத்தானது அதிகரித்து வருவதன் காரணமாக இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் பல்வேறுபட்ட சமூக பொருளாதார சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இப்பிரிவில் உள்ளடங்கும் பல பகுதிகள் நிலச்சரிவுக்கு வாய்ப்பான பகுதியென அடையாளப்படுத்தப்பட்ட போதிலும் தொடர்ச்சியாக மக்கள் குறித்த பகுதிகளிலேயே வாழ்ந்து வரும் நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் நிலச்சரிவு ஆபத்து பகுதிகளை சரியாக அடையாளப்படுத்தி, அபாய நிலையானது எவ்வாறு காணப்படுகின்றது என்பது குறித்து ஆராய்வதோடு, நிலச்சரிவை ஏற்படுத்தும் பௌதிக மற்றும் மானிட காரணிகளை கண்டறிவதானது ஆய்வுப் பிரதேசத்தில் நிலச்சரிவு மூலம் ஏற்படும் பாதிப்புக்களை குறைத்து கொள்வதற்கு வழிவகுக்கும். இதனை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட இவ் ஆய்வானது ஆய்வுப் பிரதேசத்தில் நிலச்சரிவின் தன்மை, நிலச்சரிவினை ஏற்படுத்தும் காரணிகள், சமூக, பொருளாதார பாதிப்புக்கள் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகள் என்பவற்றை ஆராய்வதாக அமைகின்றது.

2. ஆய்வு முறையியல்

2.1. ஆய்வுப் பிரதேசம்

பஸ்பாகே கோரளை பிரிவில் வடபகுதியில் அமைவுப் பெற்றுள்ள நிலச்சரிவு ஆபத்து மிக்க தண்டுபெதிரூப, வெலிகொடவத்த மற்றும் நாவலப்பிட்டிய தெற்கு ஆகிய மூன்று கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய பிரதேசமே ஆய்வுப் பிரதேசம் ஆகும். இதன் அமைவிடம் படம் 1 இல் காட்டப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேசமானது மலைப்பாங்கான பகுதியாக விளங்குவதுடன் அதிக மழைவீழ்ச்சி, குறைவான வெப்பநிலையைக் கொண்டுவிளங்குவதும், ஈரலிப்பான காலநிலையையும் அனுபவிக்கும் பகுதியாகவும் உள்ளது. சராசரி வெப்பநிலை 17^0C - 27^0C ஆகக் காணப்படுவதுடன் தென்மேல், இடைப்பருவ மழைவீழ்ச்சியின் மூலம் அதிக மழைவீழ்ச்சியை அனுபவிக்கும் பிரதேசமாகவும் உள்ளது *(Pasbage Korale DS Division, 2020).*



படம் 1: ஆய்வுப் பிரதேசத்தின் அமைவிடம்

ஆய்வுப்பிரதேசம் ஆறுகள், நீர்வீழ்ச்சிகள், ஊற்றுக்கள், சிறிய ஓடைகள் ஆகியவற்றை கொண்டு நீர் வளம் மிக்க பகுதியாக விளங்குவதுடன் இலங்கையின் நீளமான ஆறான மகாவலி கங்கை பஸ்பாகே கோரளையினூடாக பாய்கின்றமை குறிப்பிடத்தக்கது. இப்பிரதேசமானது அயனவலயக் காலநிலையை அனுபவிப்பதுடன் இயற்கைக் காடுகளினால் சூழப்பட்டுள்ளது. பற்றைக் காடுகள், புல்நிலங்கள், தேயிலை நிலங்கள் ஆகியனவும் இங்கு காணப்படுகின்றன.

ஆய்வுப் பிரதேசத்தில் பிரதேச செயலக புள்ளிவிபர அறிக்கையின்படி (2020) மொத்த சனத்தொகை 77,153 ஆகக் காணப்படுகின்றது. இதில் ஆண்கள் 37,158 பேரும், பெண்கள் 39,995 பேரும் உள்ளடங்குகின்றனர். மேலும் இன அடிப்படையில் நோக்கும் போது சிங்களவர்கள் 36,205 (47%) ஆகவும், தமிழர்கள் 28,623 (37%) ஆகவும், முஸ்லிம்கள் 11,556 (15%) ஆகவும் ஏனையோர் 456 (1%) ஆகவும் காணப்படுகின்றனர் *(Pasbage Korale DS Division, 2020).* ஆய்வுப் பிரதேசத்தில் துறை அடிப்படையில் நோக்குகையில் பெரும்பாலானோர் கிராமிய மக்களாகவும் (53%), தோட்ட மக்களாக 27% வீதமானோரும் காணப்படுவதுடன் 20% மானோர் நகர மக்களாவர். ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படும் 17,283 குடியிருப்புக்களில் 12,446 சொந்த வீடுகளும், 926 வாடகை வீடுகளும் 238 முறையற்ற (Unauthorized) குடியிருப்புகளும், 217 தற்காலிக குடியிருப்புகளும், 3,456 தோட்டக் குடியிருப்புக்களும் உள்ளடங்குகின்றன *(Pasbage Korale DS Division, 2020).*

ஆய்வுப் பிரதேச பொருளாதார நடவடிக்கைகளை பொறுத்தவரையில் தனியார் துறை சார்ந்த தொழில்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு, சுயதொழில் முயற்சி, தேயிலை செய்கை, அரச தொழில் ஆகியன முக்கியம் பெறுவதுடன், சிறியளவிலான விவசாயம், வீட்டுத் தோட்டப் பயிர்செய்கை, சிறு ஏற்றுமதி பயிர்களின் உற்பத்தி, பழப்பயிர்ச்செய்கை மற்றும் சிறு கைத்தொழில் நடவடிக்கை, கால்நடை உற்பத்தி என்பன ஏனைய பொருளாதார நடவடிக்கைகளாக விளங்குகின்றன *(Pasbage Korale DS Division, 2020).* இவற்றுடன் இப்பகுதியின் மற்றுமொரு முக்கிய பொருளாதார நடவடிக்கையாக வியாபார நடவடிக்கைகள் விருத்தியடைந்துள்ளதுடன் சேவை மற்றும் வணிக மையங்களும் உருவாகியுள்ளன.

2.2. தரவு சேகரிப்பும் தரவுப் பகுப்பாய்வும்

பஸ்பாகே கோரளை பிரதேச செயலகப் பிரிவில் நிலச்சரிவு அனர்த்தம் பற்றிய இவ் ஆய்வானது அளவை நிலை ஆய்வாக அமைவதுடன் இவ் ஆய்வு கலப்பு முறையியலை (Mixed Methodology) பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேசத்தின் பௌதிக அம்சங்கள், சனத்தொகை, சமூக பொருளாதார நிலை, நிலச்சரிவு அனர்த்தம், நிலச்சரிவினை ஏற்படுத்தும் பௌதிக மற்றும் மானிட காரணிகள், நிலச்சரிவினால் ஏற்பட்ட சமூக பொருளாதார பாதிப்புக்கள், முகாமைத்துவம் தொடர்பான தகவல்கள் ஆகியன முதலாம் மற்றும் இரண்டாம் நிலை தரவு மூலங்களில் இருந்து பெறப்பட்டு பண்புசார், அளவுசார் முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

முதலாம் நிலைத்தரவுகளானது நேரடி அவதானிப்பு, வினாக்கொத்து, நேர்காணல், குழுக்கலந்துரையாடல் ஆகிய முறைகளைப் பயன்படுத்தி பெறப்பட்டன. ஆய்வுப் பிரதேசத்திற்கு நேரடியாகச் சென்று நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகள், நிலச்சரிவிற்கான அறிகுறிகள், நிலச்சரிவிற்கான காரணங்கள், நிலப்பயன்பாட்டு முறைகள், குடியிருப்பு மற்றும் வடிகாலமைப்பு பாங்கு, அடிப்படை வசதிகள், மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், முகாமைத்துவ நடவடிக்கைகள், மீள்குடியேற்ற இடங்கள் ஆகியன அவதானிக்கப்பட்டு தரவுகள் திரட்டப்பட்டன.

ஆய்வில் பிரதான தகவல் சேகரிப்பு முறையான வினாக்கொத்து முறையின் ஊடாகவே அதிகளவிலான தரவுகள் பெறப்பட்டன. இந்நோக்கத்திற்காக தயாரிக்கப்பட்ட வினாக்கொத்தானது மூடிய, திறந்த வினாக்களை கொண்டிருந்ததுடன் தகவல் தருனரின் அடிப்படை விடயங்கள், நிலச்சரிவின் வகை, தன்மை தொடர்பான விடயங்கள், நிலச்சரிவிற்கான காரணிகள், பாதிப்புக்கள், முகாமைத்துவ நடவடிக்கைகள் சார்ந்த வினாக்களை உள்ளடக்கியிருந்தது. ஆய்வுப் பிரதேசத்தில் நிலச்சரிவு பாதிப்பிற்குட்பட்ட அனைத்து குடும்பங்களிடமும் (56) வினாக்கொத்துக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு தரவுகள் திரட்டப்பட்டன. தண்டுபெதிரூப – 22, வெலிகொடவத்த – 14, நாவலப்பிட்டிய தெற்கு – 20 என்ற அடிப்படையில் வினாக்கொத்துக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

பஸ்பாகே பிரதேச செயலகப்பிரிவின் அனர்த்த முகாமைத்துவ உத்தியோகஸ்தர்களான டப்ளியு.டி.சி.இரங்க வெல்லாலகே மற்றும் ஆர்.எம்.சி.எஸ். சோமதிலக்க ஆகியோருடனும் கிராமசேவகர் பிரிவின் உத்தியோகஸ்தர்களுடனும் (தண்டுபெதிரூப - திரு.ராம்.எம்.டி.பி.சி. ரத்னாயக்க, வெலிகொடவத்த- திரு.டி.எம்.பி.என். ஜயதிலக்க, நாவலப்பிட்டிய தெற்கு - திரு.ஜீ.

சஜ்ஜீவ குருதெனிய) நேர்காணல் இடம்பெற்று தரவுகள் திரட்டப்பட்டன. இவற்றுடன் இம்புல்பிடிய பகுதிக்கு மீள்குடியேற்றத்திற்கு உட்படும் குடும்பங்களுடன் குழுக்கலந்துரையாடலின் ஊடாக தரவுகள் திரட்டப்பட்டன.

இரண்டாம் நிலை தரவு சேகரிப்பினை பொறுத்தவரையில் கண்டி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய அறிக்கைகள், கண்டி மாவட்ட செயலக அறிக்கை, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன அறிக்கைகள், பஸ்பாகே பிரதேச செயலக அறிக்கைகள், கண்டி மாவட்ட புள்ளிவிபர அறிக்கைகள், கண்டி மாவட்ட நிலச்சரிவு இடர், அபாய படங்கள், இடவிளக்கப்படங்கள், புகைப்படங்கள், இணையத்தள மூலங்கள் ஆகியவற்றில் இருந்து பெறப்பட்டன. இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் ஆய்வின் நோக்கத்திற்கமைய அளவுசார், பண்புசார் பகுப்பாய்வு முறைகளை பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டன. பண்புசார் பகுப்பாய்வானது விபரண முறையாகவும், ஒப்பீட்டு ரீதியாகவும், தரப்படுத்தல் முறைகளை பயன்படுத்தியும் மேற்கொள்ளப்பட்டது.

வினாக்கொத்தின் ஊடாகவும் இரண்டாம் நிலை தரவு மூலங்களின் ஊடாகவும் பெறப்பட்ட அளவுசார் தரவுகள் எளிய புள்ளிவிபரவியல் முறையினைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணைகள், வரைபடங்கள் மற்றும் விளக்கப்படங்கள் என்பவற்றின் மூலம் காட்டப்பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசம், நிலச்சரிவு ஏற்படும் இடங்கள், நிலப்பயன்பாடு, தரையுயர வேறுபாட்டு படம், சாய்வுப்படம், சமவுயரக்கோட்டு படம், வடிகால் பாங்கு படம் போன்றன Arc GIS 10.4 மூலம் படமாக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் பஸ்பாகே கோரளை பிரதேச செயலக அறிக்கை மற்றும் வினாக்கொத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளை Microsoft Excel இல் பகுப்பாய்வு செய்யப்பட்டு Arc GIS 10.4 - Symbology Map மூலமாக காட்டப்பட்டுள்ளன.

USGS Earth Explorer மூலமாக செய்மதிப்படங்கள் பெறப்பட்டு ஆய்வுப்பிரதேசம் எல்லைப்படுத்தப்பட்டு தரையுயர வேறுபாட்டு படம் உருவாக்கப்பட்டுள்ளது. சமவுயரக்கோட்டுப் படம், சாய்வுப் படம் ஆகியன USGS Earth Explorer செய்மதிப் படங்கள் மூலமாக Spatial Analyst Tool இல் Contour Tool, Slope Tool ஆகியவற்றை பயன்படுத்தி WGS 1984 UTM Zone 44N எனும் Projection ஊடாக உருவாக்கப்பட்டுள்ளன. நதிஒழுங்கு (Stream Order) படமும் Spatial Analyst Tool இல் Hydrology- Fill -Flow Direction -Flow Accumulation முறையின் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இவற்றுடன் Google Earth Pro இனை பயன்படுத்தி ஆய்வுப் பிரதேசத்தின் நிலச்சரிவு ஏற்பட்ட இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

3. ஆய்வின் பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

3.1 ஆய்வுப் பிரதேசத்தில் நிலச்சரிவின் தன்மையும், வகைகளும்

பஸ்பாகே கோரளை பிரதேச செயலகப்பிரிவு தொடர்ச்சியாக பல இயற்கை அனர்த்தத்திற்கு உட்படும் பகுதியாக இருந்தாலும் அவற்றுள் நிலச்சரிவு முதன்மையானதாகக் காணப்படுகின்றது. நிலச்சரிவு, வெள்ளம், பலத்த காற்று மற்றும் இடிமின்னல் போன்ற அனர்த்தங்கள் இப்பகுதிகளில் இடம்பெறினும் இடரீதியான பரம்பலை பொறுத்தவரையில் நிலச்சரிவு (56%) பிரதான இடராக விளங்குவதுடன் பலத்த காற்று (35%), இடிமின்னல் (32%) ஆகியன அடுத்த நிலையில்

காணப்படுகின்றது. இப்பகுதி தொடர்ந்தும் நிலச்சரிவு இடரை எதிர்க்கொள்ளும் பகுதியாக அடையாளங் காணப்பட்டுள்ளது.





வரைபடம் 1, படம் 2: ஆய்வுப் பிரதேசத்தில் இயற்கை அனர்த்தங்களுள் நிலச்சரிவு
(மூலம்: பஸ்பாகே கோரளை பிரதேச செயலகத்தின் தரவுகளை கொண்டு தயாரிக்கப்பட்டது, 2022)

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட இடர்படத்தின் அடிப்படையில் நிலச்சரிவின் இடரீதியான பரம்பலை நோக்குகையில் பஸ்பாகே கோரளை பிரதேச செயலகப்பிரிவில் பத்திற்கும் மேற்பட்ட கிராம சேவகர் பிரிவுகள் நிலச்சரிவிற்கு உட்பட்டு வந்தாலும் தண்டுபெதிரூப, வெலிகொடவத்த மற்றும் நாவலப்பிட்டிய தெற்கு ஆகிய மூன்று கிராம சேவகப்பிரிவுகள் நிலச்சரிவு அனர்த்தத்தினை எதிர்கொள்ளும் முக்கிய பகுதிகளாக இனங்காணப்பட்டுள்ளன. இங்கு 75% உயர் ஆபத்தான பகுதிகளாகவும் 23% ஓரளவு ஆபத்து கொண்ட பகுதிகளாகவும் விளங்குகின்றன.

ஆபத்தின் வகை	சதவீதம்
உயர் ஆபத்து	75%
நடுத்தர ஆபத்து	23%
குறைந்த ஆபத்து	2%





அட்டவணை 1: ஆய்வுப் பிரதேசத்தில் நிலச்சரிவு ஆபத்தின் தன்மை, படம் 3, 4: நிலச்சரிவு ஆபத்தின் பரம்பலும், நிலச்சரிவு ஏற்பட்ட இடங்களும் *(மூலம் - பஸ்பாகே கோரளை பிரதேச செயலகம், NBRO ஆகியவற்றில் இருந்து பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது, 2022)*

நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளின் அடிப்படையில் நோக்கும் போது ஆய்வுப் பிரதேசத்தில் குறிப்பாக தண்டுபெதிரூப கிராம சேவகப்பிரிவு அதிக ஆபத்து கொண்ட பகுதியாக காணப்படுகிறது. வெலிகொடவத்த மற்றும் நாவலப்பிட்டிய தெற்கு பகுதிகளிலும் உயர்

ஆபத்தினைக் கொண்ட பகுதிகள் முறையே 58%, 60% மாகக் காணப்படுகின்றன. அத்துடன் அண்மைய வருடங்களில் நிலச்சரிவு ஆபத்து நிலை அதிகரித்து வரும் நிலை காணப்படுகின்றது. நீண்ட காலமாக இப்பகுதிகளில் மக்கள் வாழ்ந்து வருகின்ற போதிலும் கடந்த பத்து வருட காலப்பகுதியிலேயே நிலச்சரிவு அடிக்கடி இடம்பெறும் நிகழ்வாக மாறியுள்ளதுடன், எதிர்காலத்தில் இப்பகுதிகளில் நிலச்சரிவு அனர்த்தம் தீவிரமடைய அதிக வாய்ப்பு உள்ளது (நேர்காணல்: பஸ்பாகே பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர்). நிலச்சரிவு அனர்த்தத்தினை பொறுத்தவரையில் ஆய்வுப்பிரதேசத்தில் தற்போதைய நிலையை விட எதிர்காலத்தில் மோசமாகும் நிலை ஏற்படும் என்பதனையே இது சுட்டிக்காட்டுகின்றது.

தண்டுபெதிரூப கிராம சேவர் பிரிவில் 2012 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து நிலச்சரிவுக்கான அறிகுறிகள் இனங்காணப்படுகின்றன. இங்கு காணப்படும் பெரும்பாலான வீடுகளில் 4-8 அங்குல அளவில் வெடிப்புகள் இனங்காணப்படுகின்றன. அதிக மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறும் காலங்களில் நீரூற்றுக்களின் தோற்றம், மண் சேறாகி கீழிறங்கி வரும் தன்மை ஆகியன அவதானிக்கப்பட்டதுடன், குடியிருப்புகளின் உட்பகுதியிலும் பாதைகளிலும் நிலத்திணிவுகள் விலகிக் காணப்படுவதோடு, சில பகுதிகளில் நிலம் தாழிறங்கியுள்ளமையும் அவதானிக்கப்பட்டது. இவற்றுடன் இங்கு காணப்படும் மண்படைகள் சிறிய படைகளாக கீழிறங்கி வருவதுடன், பாறை வீழ்வு அபாயமும் இனங்காணப்பட்டது.

குடியிருப்புகளின் உட்பகுதியிலும் பாதைகளிலும் நிலத்திணிவுகள் விலகிக் காணப்படுவதோடு சில பகுதிகளில் நிலம் தாழிறங்கியுள்ளமையையும் அவதானிக்கப்பட்டது. நாவலப்பிட்டிய தெற்கு கிராம சேவகப்பிரிவில் 2014 ஆம் ஆண்டில் இருந்து நிலச்சரிவிற்கான அறிகுறிகள் அவதானிக்கப்பட்ட போதிலும் 2018 ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலச்சரிவு அனர்த்தத்தின் பின்னரே நிலச்சரிவு தொடர்பிலான கரிசனை அதிகரித்தது. குடியிருப்புப் பகுதிகளிலும் ஏனைய இடங்களிலும் வெடிப்புக்களின் உருவாக்கம், மண் சரிந்து வருதல், நீருற்றுக்கள் தென்படல் போன்ற அறிகுறிகள் அவதானிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சாய்வுகளின் உறுதித்தன்மை இழக்கப்படுவதன் காரணமாக ஆய்வுப் பிரதேசத்தின் பல இடங்களிலும் சாய்வு இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன (ஒளிப்படம் 1).

ஒளிப்படம் 1: ஆய்வுப் பிரதேசத்தில் அவதானிக்கப்பட்ட சாய்வு இழப்புக்கள்
(மூலம் - பஸ்பாகே பிரதேச செயலகத்தில் இருந்து பெறப்பட்டது)

தண்டுபெதிரூப மற்றும் நாவலப்பிட்டிய தெற்கு பகுதிகளில் சிறிய, நடுத்தர அளவிலான நிலச்சரிவு இடர்கள் பதிவாகியுள்ள போதும் 2018.05.21 அன்று ஏற்பட்ட நிலச்சரிவு அனர்த்தம் இதுவரை காலம் ஏற்பட்ட நிலச்சரிவுகளை விட அதிக பாதிப்புக்களை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

ஆய்வுப் பிரதேசத்தில் நிலச்சரிவின் வகைகளை பொறுத்தவரையில் பாறைச்சரிவு/வீழ்வு, சேறுவழிதல், மண்சரிவு, நகர்ச்சி மற்றும் நிலம் தாழிறங்கல் போன்ற வகைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இப்பகுதியின் பௌதிக நிலத்தோற்றம், தரையுயர வேறுபாடு, சாய்வின் கோணம், வடிகால் பாங்கு, மழைவீழ்ச்சி, சாய்வின் மீதான மானிட நடவடிக்கைகள் ஆகியவற்றினை பொறுத்து நிலச்சரிவின் தன்மை வேறுபடுகிறது. மூன்று கிராம சேவகர் பிரிவுகளிலும் வேறுபட்ட வகையிலான, ஒன்றுக்கு மேற்பட்ட நிலச்சரிவு வகைகள் பதிவாகியுள்ளன. அதில் சாய்வுகளின் நகர்ச்சியே (28%) அதிகமாக அவதானிக்கப்பட்டதுடன், மண்சரிவு (24%), பாறை வீழ்வு (21%), சேறு வடிதல் (17%) நிலம் தாழிறங்கல் (10%) ஆகியனவும் அவதானிக்கப்பட்டன. இவ் வேறுபட்ட வகையான நிலச்சரிவு வகைகளைப் பொறுத்து நிலச்சரிவு ஆபத்து நிலையிலும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.



வரைபடம் 2,3: ஆய்வுப் பிரதேசத்தின் பிரதான நிலச்சரிவு வகைகள்

(மூலம்: கள ஆய்வு, 2022)

நிலச்சரிவு வகைளின் இடரீதியான பரம்பலை நோக்குகையில் தண்டுபெதிரூப பகுதியில் நகர்ச்சி, மண்சரிவு, பாறைவீழ்வு ஆகியனவும், வெலிகொடவத்த பகுதியில் நகர்ச்சி மற்றும் மண்சரிவு ஆகியனவும் முக்கியமானவையாக விளங்குகின்றன. அதேவேளை நாவலப்பிடிய தெற்கு பகுதியில் நகர்ச்சி, சேறுவழிதல், மண்சரிவு ஆகியன முக்கியமானதாக விளங்குகின்றன.



படம் 5, 6, 7: ஆய்வுப் பிரதேசத்தில் இனங்காணப்பட்ட நிலச்சரிவு அறிகுறிகள்

(மூலம் - கள ஆய்வு, 2022)

இம்மூன்று பிரிவுகளிலும் நகர்ச்சியே அதிகளவில் அவதானிக்கப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் இனங்காணப்பட்ட நகர்ச்சிக்கான அறிகுறிகளுள் திடீர் நீரூற்றுக்களின் தோற்றம் (19%), மண் சரிந்து வருதல் (19%), சுவர்களில் வெடிப்பு (23%), பாறைகள் உருண்டு வருதல் (15%), நிலம் மற்றும் சுவர் என்பன ஈரத்தன்மையடைதல் (14%) போன்றன முக்கியமானவை. இவற்றுடன் மரங்கள் சாய்ந்து காணப்படுதல் (10%), நிலத்திணிவுகள் விலகிக் காணப்படுதல், பாதைகள் மற்றும் நிலப்பகுதிகள் தாழிறங்கல் ஆகிய அறிகுறிகளும் அவதானிக்கப்பட்டன. ஆய்வுப் பிரதேசத்தில் சாய்வுகளின் உறுதித்தன்மை குறைவாகக் காணப்படும் நிலையினையே இவை சுட்டிக்காட்டுகின்றன.

3.2 ஆய்வுப் பிரதேசத்தில் நிலச்சரிவை ஏற்படுத்தும் காரணிகள்

நிலச்சரிவு இடர் நிகழ்வதற்கு சாதகமாக அமையக்கூடிய தரைத்தோற்றப் பாங்கு, காலநிலை அம்சங்கள், கல்லியல் அமைப்பு, ஆகிய பௌதிகக் காரணிகளுடன் அதிகரித்து வரும் மானிட நடவடிக்கைகளும் இணைந்து ஆய்வுப் பிரதேசத்தில் நிலச்சரிவு இடரின் அதிகரிப்பிற்கு அடிப்படையாக அமைகின்றன. இப்பகுதியில் நிலச்சரிவை ஏற்படுத்துவதில் மானிட காரணிகள் செல்வாக்கு செலுத்தினாலும் பௌதிக காரணிகளான அதிக மழைவீழ்ச்சி, தரைதோற்றத்தின் தன்மை, சாய்வுகள், வடிகால் பாங்கு, மண்ணின் தன்மை, பாறைகளின் அமைப்பு போன்றவையே பெரிதும் தாக்கம் செலுத்துகின்றன (நேர்காணல்: பஸ்பாகே பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர்). குறிப்பாக தண்டுபெதிரூப பகுதியில் பௌதிக தரைத்தோற்றத்தின் தன்மையே நிலச்சரிவை அதிகம் தூண்டுவதுடன் குறிப்பாக அதிக மழைவீழ்ச்சியே இதனை மேலும் சிக்கலான நிலைக்கு கொண்டு செல்கிறது (நேர்காணல்: தண்டுபெதிரூப கிராமசேவகர் பிரிவு உத்தியோகத்தர்).

பஸ்பாகே கோரளை பிரதேசம் மிக சாய்வான மலைகளை கொண்டுள்ளதுடன் குறைந்த தூரத்தில் பாரிய உயர வேறுபாடுகளை கொண்டுள்ளது. இப் பிரதேசத்தின் தரைத்தோற்றம், சாய்வுகளின் தன்மை நிலச்சரிவில் செல்வாக்கு செலுத்தும் முக்கிய காரணிகளாக விளங்குகின்றன. பஸ்பாகே கோரளை பிரதேசம் கடல் மட்டத்திலிருந்து 550–1200 அடி உயரத்தில் அமையப்பெற்றுள்ளதுடன் 30-40 பாகைக்கு இடைப்பட்ட சாய்வினைக் கொண்டது. சாய்வுகோணம் கூடிய பகுதிகளை கொண்டிருப்பதுடன் குறைந்த தூரத்தில் பாரிய உயர வேறுபாடுகளை கொண்டுள்ளது.

ஆய்வுப்பிரதேசத்தின் சமவுயரக்கோட்டுப் படம் (Map – 8 Contour Map), மற்றும் சாய்வு படம் (Map – 9 Slope Map) ஆகியவற்றை நோக்கும் போது ஆய்வுப்பிரதேசத்தின் மேற்குப் பகுதி, தென்கிழக்குப் பகுதிகள் குத்துச்சாய்வான பகுதியாக இருப்பதனை அவதானிக்க முடிகின்றது. இதனால் இப்பகுதிகளிலேயே நிலச்சரிவு இடர் அதிகளவில் நிகழ்கின்றது. ஆய்வுப்பிரதேசத்தின் மத்திய பகுதி மென்சாய்வான பகுதியாதலால் இப்பகுதிகளில் நிலச்சரிவுகள் குறைவாக உள்ளன. குறிப்பாக $15^{\circ} - 45^{\circ}$ இடைப்பட்ட சரிவுடன் கூடிய சாய்வுகள் அதிகமாக நிலச்சரிவிற்கு உட்படும் தன்மை வாய்ந்ததாக காணப்படும். இத்தகைய தன்மையை ஆய்வுப் பிரதேசத்தில் அவதானிக்க கூடியதாக இருந்தது.



படம் 8, 9:

ஆய்வுப்பிரதேசத்தின் சமவுயரக்கோட்டுப் படமும், சாய்வு கோணமும்
(மூலம் - USGS இணைக் கொண்டு ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது, 2022)

குறிப்பாக தண்டுபெதிரூப பிரதேசத்தில் தரைதோற்றமானது உயர் மலைத்தொடர்களை கொண்டுள்ளது. இங்கு 1458 அடி சராசரி உயரத்தினை கொண்ட மலைத்தொடர்கள் காணப்படுகின்றன. இங்கு தரையுயர வேறுபாடு 1458 – 592 வரை காணப்படுகிறது. தரையுயர வேறுபாட்டு மாதிரி (Map 10 - DEM) படத்தை நோக்கின் ஆய்வுப்பிரதேசத்தின் மேற்கு பகுதி மிக உயரமான பகுதியாகவும், வடமேற்கு பகுதி, மத்திய பகுதி மற்றும் தென் பகுதி ஓரளவு உயரமான பகுதியாகவும் காணப்படுகின்றது. வடக்கு, கிழக்குப் பகுதிகள் உயரம் குறைந்த பகுதியாக உள்ளன. நிலச்சரிவினை தீர்மானிக்கின்ற காரணிகளுள் சாய்வின் தன்மை முக்கியமாக விளங்குவதுடன் நிலச்சரிவின் வேகத்திலும் இது செல்வாக்கு செலுத்துகின்றது.



படம் 10, 11: ஆய்வுப் பிரதேசத்தின் தரைத்தோற்றப் பாங்கு, சாய்வு கோணம், வடிநிலம்
மூலம் - USGS இணைக் கொண்டு ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது, 2022

ஆய்வுப் பிரதேசத்தில் ஆறுகள், கிளையாறுகள், நீரூற்றுக்கள் போன்ற நீர் மூலங்கள் உயர்வாகக் காணப்படுவதும் நிலச்சரிவை ஏற்படுத்தும் காரணிகளுள் ஒன்றாக விளங்குகின்றது. நதியொழுங்கு படத்தில் காட்டப்பட்டவாறு சாய்வுகளின் வழியே பயணிக்கும் கிளையாறுகள் ஆய்வுப் பிரதேசத்தில் சேற்றுப்பாய்ச்சல் வகையான நிலச்சரிவு ஏற்படுவதற்கு ஏதுவான

காரணியாக அமைகின்றன. ஆய்வுப் பிரதேசத்தில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நதியொழுங்குகளின் விபரம் அட்டவணை 2 இல் காட்டப்பட்டுள்ளது.

நதி ஒழுங்கு	நதி ஒழுங்குகளின் எண்ணிக்கை	மிக குறைந்த நீளம்	மிக கூடிய நீளம்	சராசரி நீளம்	மொத்த நீளம்
1	16	30.724	1184.700	367.326	5877.217
2	10	30.724	1582.571	369.551	3695.517
3	5	141.502	547.765	330.648	1653.243

அட்டவணை 2: ஆய்வுப்பிரதேசத்தில் நதி வடிநில ஒழுங்கு
(மூலம் - USGS இணைக் கொண்டு ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது, 2022)

இப்பௌதிக அம்சங்களுடன் ஆய்வுப்பிரதேசத்தில் நிலவும் மழைவீழ்ச்சியே நிலச்சரிவினை தூண்டும் முக்கிய காரணியாக விளங்குகின்றது. ஆய்வுப் பிரதேசம் அமையப்பெற்றுள்ள கண்டி மாவட்டத்தின் பெரும்பகுதி ஈரவலயத்திலும், ஒரு பகுதி இடை வலயத்திலும் அமைவு பெற்றுள்ளது. அவ்வடிப்படையில் தென்மேற்கு பருவப்பெயர்ச்சி (மே – செப்டெம்பர்) மற்றும் இரண்டாம் இடைப்பருவ (ஒக்டோபர் - நவம்பர்) காலங்களிலேயே அதிக மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறுவதனால் (வரைபடம் 4) இக்காலப்பகுதியிலேயே நிலச்சரிவுக்கான சாத்தியத்தன்மை அதிகமாக உள்ளது.



வரைபடம் 4: அண்மைய வருடங்களில் ஆய்வுப் பிரதேசத்தின் மழைவீழ்ச்சி
(மூலம் - பஸ்பாகே கோரளை பிரதேச செயலகத்தின் தரவுகளை கொண்டு தயாரிக்கப்பட்டது, 2022)

ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படும் பிரதான மண் வகைகளான சிவப்பு மஞ்சள் பொட்சோலிக் மண் (Red yellow podzolic soil), செங்கபில லற்றசோல் மண் (Reddish Brown Latesolic) ஆகியன நீர் ஊடுருவல் தன்மையினையும் அதிகளவில் கொண்டுள்ளது. உயர் மழைவீழ்ச்சி காலப்பகுதியில் மழைநீரானது உட்புகுந்து மண் படைகளின் உறுதித்தன்மையினை இழக்கச் செய்வதும் நிலச்சரிவு அனர்த்தத்திற்கு ஏதுவாகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் உயர் மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்ற காலங்களிலேயே குறிப்பாக 2012, 2014, 2018, 2019 ஆம் ஆண்டுகளில் நிலச்சரிவுக்கான சாத்தியத்தன்மை உயர்வாக இருந்தமையும், குறித்த ஆண்டுகளில் நிலச்சரிவு நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இப்பகுதிகளுக்கு

அதிக மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறும் காலங்களில் விடுக்கப்பட்டிருந்த முன்னெச்சரிக்கை செய்திகளை இதற்கு ஆதாரமாகக் கூறலாம். குறிப்பாக ஆய்வுப்பிரதேசத்தில் 2018 ஆம் ஆண்டில் நிலச்சரிவுகள் பதிவாகிய திகதிகளில் (22.05.2018, 23.05.2018, 24.05.2018, 25.05.2018, 26.05.2018) நிலச்சரிவு குறித்தான முன்னெச்சரிக்கையும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்காலப்பகுதியில் தொடர்ச்சியாக ஐந்து நாட்கள் முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் 24 மணித்தியாலத்தினுள் 100mm ற்கு மேல் மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றமையால் இப்பகுதிக்கு எச்சரிக்கை மட்டம் - 02 (Warning Level - 02) வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பௌதீக அம்சங்களுடன், ஆய்வுப் பிரதேசத்தில் நிலச்சரிவை ஏற்படுத்தும் மானிட காரணிகளுள் முறையான வடிகாலமைப்பு இன்மை, சாய்வுகளில் முறையற்ற கட்டுமாண நடவடிக்கைககள், நிலப்பயன்பாட்டில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள், தாவரப்போர்வை நீக்கப்படல், போக்குவரத்து பாதைகளின் அமைப்பு போன்றன முக்கியம் பெறுகின்றன.



வரைபடம் 5: நிலச்சரிவு ஏற்படுத்தும் மானிட காரணிகள்
(மூலம் - கள ஆய்வு, 2022)

வரைபடம் 5 இல் காட்டப்பட்டுள்ளவாறு நிலச்சரிவினை தூண்டும் முக்கிய மானிடக் காரணியாக முறையற்ற வடிகாலமைப்பு இனங்காணப்பட்டது. இப்பிரச்சினை வெலிகொடவத்த பகுதியில் உயர்வாகக் காணப்படுகின்றது. இக்கிராம சேவகர் பிரிவில் முறையான வடிகாலமைப்பு இன்மை ஒரு முக்கிய பிரச்சினையாக காணப்படுவதுடன் நிலச்சரிவு அபாயத்திற்கு இதுவே முக்கிய காரணமாக அமைகின்றது (நேர்காணல்: கிராம சேவக உத்தியோகத்தர், வெலிகொடவத்த).

ஆய்வுப்பிரதேச வீதிகளின் இருபுறமும் காணப்படும் முறையற்ற கட்டிடங்கள், சாய்வான பகுதிகளில் அமைக்கப்பட்ட முறையற்ற குடியிருப்புகள் ஆகியனவும் நிலச்சரிவுக்கு ஏதுவாகின்றன. தண்டுபெதிரூப பகுதியில் அமைந்துள்ள குடியிருப்புகள் பெரும்பாலும் இத்தகையன. இப்பகுதி அதிக உயரமான சாய்வுகளை கொண்டிருப்பதுடன் குடியிருப்புகள் சரியான வழிகாட்டலுக்கு இணங்க அமைக்கப்படாமையினால் சாய்வு இழப்புக்கள் அதிகளவில் ஏற்படுகின்றன. பாறைத்தொடர்கள், குத்துச் சாய்வுகள், புல்வெளிகள், அடர்ந்த காடுகள், புதர் காடுகள், பயிர்ச்செய்கைக்கு பொருத்தமற்ற நிலப்பகுதிகள் போன்றனவே இங்கு அதிகமாக காணப்படுகின்றன. ஆய்வுப்பிரதேசத்தின் முக்கிய நிலப்பயன்பாட்டு முறையாக விளங்கும் தேயிலைப் பயிர்ச்செய்கை பெரும்பாலும் உயர்வான சாய்வுகளிலேயே காணப்படுகின்றது.

ஓரளவு சமதரையான பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு குடியிருப்புக்கள் கட்டியெழுப்பப்பட்டுள்ள போதிலும் அண்மைக்காலமாக சாய்வு பகுதிகளினதும், உயர் நிலங்களினதும் நிலப்பயன்பாட்டு முறைமை மாற்றியமைக்கப்பட்டு வருவதும் இப்பகுதியில் நிலச்சரிவு ஏற்பட காரணமாக அமைகிறது. திட்டமிடப்படாதவாறு நடைபெறும் பயிர்செய்கை நடவடிக்கை காரணமாக மண்திணிவுகள் அசைவிற்குட்படுகின்றன. அத்துடன் சனத்தொகை அதிகரிப்பதனால் ஏற்படும் இடப்பற்றாக்குறை காரணமாக உயர்மலை பிரதேசங்களிலும் சாய்வான பகுதிகளிலும் கட்டிடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு சாய்வுகளின் மீது ஏற்படுத்தப்படும் அழுத்தம் சாய்வுகளின் உறுதித்தன்மையினை சீர்குலையச் செய்கின்றது.

ஆய்வுப் பிரதேசத்தின் தாவரப்போர்வையில் ஏற்பட்டுவரும் மாற்றம் நிலச்சரிவை ஏற்படுத்தும் மற்றுமொரு மானிடக் காரணியாகும். ஆய்வுப் பிரதேசத்தில் தாவரப்போர்வை அதிகமாக காணப்படும் இடங்களில் நிலச்சரிவு வீதமானது குறைவாகவும், தாவரப்போர்வை குறைவாக காணப்படும் இடங்களில் நிலச்சரிவு அதிகமாகவும் ஏற்படுவது அவதானிக்கப்பட்டது. இது

பெரும்பாலும் விவசாயம் மற்றும் குடியிருப்பு நடவடிக்கையுடன் தொடர்புடையதாக விளங்குகின்றது. குறிப்பாக ஆய்வுப் பிரதேசத்தில் வெலிகொடவத்த மற்றும் தண்டுபெதிரூப பகுதிகளில் இத்தகைய முறையற்ற நிலப்பயன்பாட்டை உயர் மலைப்பிரதேசம் சார்ந்து அவதானிக்க முடிகின்றது.

3.3 ஆய்வுப்பிரதேசத்தில் நிலச்சரிவின் சமூக பொருளாதார தாக்கங்கள்

ஆய்வுப் பிரதேசத்தில் நிலச்சரிவு காரணமாக சமூக பொருளாதார ரீதியாக பல சவால்களுக்கு மக்கள் முகங்கொடுத்து வருகிறனர். நிலச்சரிவின் போது உயர் நலிவுறுநிலை காரணமாக மக்கள் அதிக பாதிப்பிற்குள்ளாகின்றனர். தண்டுபெதிரூப கிராம சேவகப்பிரிவு அதிக சனத்தொகையை (39%) கொண்டுள்ளதுடன் நாவலப்பிடிய தெற்கு 36 சதவீதத்தினையும், வெலிகொடவத்த பகுதி 25 சதவீத சனத்தொகையும் கொண்டுள்ளது. அதிக பாதிப்பை எதிர்நோக்கி வரும் தண்டுபெதிரூப பகுதி அதிக சனத்தொகையை கொண்டு காணப்படுவதனாலேயே பாதிப்புக்களும் இழப்புக்களும் இங்கு அதிகமாக உள்ளன.

ஆய்வுப்பிரதேசத்தில் நிலச்சரிவினால் ஏற்படும் சமூக தாக்கங்களை விட பொருளாதார ரீதியான தாக்கங்களே அதிகமாக உள்ளது. சனத்தொகையின் அளவு, கல்வி மட்டம், தொழில், வருமானம் உட்பட பல விடயங்கள் நிலச்சரிவு மூலம் ஏற்படும் தாக்கங்களில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கம் செலுத்தி வருகின்றன. அந்தவகையில் ஆய்வுப் பிரதேசத்தில் வாழும் மக்கள் எதிர்கொள்ளும் சமூக பொருளாதார தாக்கங்களை வரைபடம் 6, 7 ஆகியவற்றில் நோக்கலாம். இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் சமூக தாக்கங்களுள் தங்குமிட வசதியின்மை, இடப்பெயர்வு, அகதிகளாக்கபட்டமை ஆகியன முக்கிய தாக்கங்களாக விளங்குகின்றன. 2 சதவீதமானோர் உறவுகளை இழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அதேவேளை பொருளாதார ரீதியாக நோக்குகையில் வாழ்வாதார மூலங்களின் இழப்பு,

உடமைகள் மற்றும் சொத்திழப்புக்கள், தொழில் இழப்பு ஆகியன முக்கியமானவையாக விளங்குகின்றன.



வரைபடம் 6: ஆய்வுப் பிரதேசத்தில் சமூக ரீதியான தாக்கங்கள் *(மூலம் - களஆய்வு, 2022)*



வரைபடம் 7: ஆய்வுப் பிரதேசத்தில் பொருளாதார ரீதியான தாக்கங்கள் *(மூலம் - களஆய்வு, 2022)*

ஆய்வுப் பிரதேசத்தில் நிலச்சரிவு காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புக்களை பொறுத்தவரையில் தண்டுபெதிரூப கிராம சேவகப்பிரிவில் 2018.05.21 ஆம் திகதியன்று ஏற்பட்ட இரண்டு உயிரிழப்புக்கள் முக்கியமானது. எனினும் இங்கு மக்களின் இயல்பு வாழ்க்கை அடிக்கடி பாதிப்படைகின்றமை குறிப்பிடத்தக்கது. உடமைகள் மற்றும் சொத்திழப்புக்களை பொறுத்தவரையில் முழுமையாகவும் பகுதியளவிலும் சேதங்கள் இடம்பெற்றுள்ளன. ஆய்வு பிரதேசத்தில் முழுமையான சேதத்தினை (16%) விட பகுதியளவிலான சேதமே (84%) உயர்வாக உள்ளது. சேதத்தின் அடிப்படையில் நோக்குகையில் ரூபா 50,000 மதிப்புள்ள உடமைகளின் இழப்பு 43% இற்கும் அதிகமாகவும் ரூபா 500,000 – ரூபா 1,000,000 வரையிலான இழப்பு 9% மாகவும் மதிப்பிடப்பட்டது.

சேதங்களின் பெறுமதி சார்ந்த விபரம்	சதவீதம்
ரூபா 50000 வரையானது	43%
ரூபா 50,000 – ரூபா 100,000	34%
ரூபா 100,000 – ரூபா 500,000	14%
ரூபா 500,000 – ரூபா 1,000,000	9%

அட்டவணை 3: நிலச்சரிவினால் ஏற்பட்ட சேதங்களின் பெறுமதி சார்ந்த விபரம் *(மூலம்: கள ஆய்வு, 2022)*

வாழ்வாதார மூலங்களின் பாதிப்பும் இங்கு முக்கிய பிரச்சினையாக இனங்காணப்பட்டது. பெரும்பான்மையானோர் தனியார் துறையிலும், சுயதொழில், கூலித்தொழில் மற்றும் தோட்டங்களிலும் பணிபுரிவதுடன், அரசாங்க துறையில் குறைந்தளவானோரே பணிபுரிகின்றனர் (வரைபடம் 8). நிலச்சரிவு ஏற்படும் காலப்பகுதியில் வேறு இடங்களில் இடம்பெயர்ந்து தங்கியிருத்தல், போக்குவரத்து தடைப்படல் போன்றவற்றால் சுயதொழிலில் ஈடுபடுவோர், கூலித்தொழில் புரிவோர், தேயிலை பயிர்ச்செய்கையுடன் தொடர்புடைய தொழிலாளர்கள், வியாபாரிகள், மேசன் மற்றும் பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்கள் பொருளாதார ரீதியாக அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். அத்துடன் வீட்டுத்தோட்டம், பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை, கோப்பி மற்றும் மரக்கறி பயிர்செய்கை போன்ற நடவடிக்கையில் ஈடுபடுகின்ற மக்களும் நிலச்சரிவினால் பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றனர்.



வரைபடம் 8, படம் 11: ஆய்வுப்பிரதேச மக்களின் வாழ்வாதாரம் *(மூலம்: கள ஆய்வு, 2022)*

அடிக்கடி மக்கள் இடப்பெயர்வுக்கு உள்ளாவதன் காரணமாக கால்நடைகளை சொந்த இடங்களில் கைவிட்டுச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுவதால் கால்நடை வளர்ப்பாளர்களும் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர். இதனால் இங்கு வாழும் மக்கள் நிலையான வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியாதவர்களாக உள்ளனர். இவ்வாறு மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதனால் நேரடியான மற்றும் மறைமுகமான பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு மக்கள் முகங்கொடுக்க வேண்டியேற்படுகின்றது.

3.4. ஆய்வுப்பிரதேசத்தில் நிலச்சரிவு முகாமைத்துவமும் மீள்குடியேற்றம்சார் பிரச்சினைகளும்

ஆய்வுப் பிரதேசத்தில் நிலச்சரிவு அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், மீள்குடியேற்றம், சமூக அடிப்படையிலான சாய்வு முகாமைத்துவ முறைகள் ஆகியன முக்கியம் பெறுகின்றன. நிலச்சரிவு ஆபத்து தொடர்பாகவும், பாதுகாப்பாக வெளியேறுதல் தொடர்பாகவும் மக்களிடம் ஓரளவேனும் விழிப்புணர்வு காணப்படுகின்றது. நிலச்சரிவு அபாயத்தில் இருந்து விடுபட உடனடியாக அதிகமான மக்கள் அவ்விடத்தை விட்டு இடம்பெயரும் முறையையே பின்பற்றுகின்றனர். தற்காலிக ஏற்பாட்டில் இடம் பெயர்ந்து சென்றாலும் மீண்டும் அவ் ஆபத்தான குடியிருப்புகளிலே தொடர்ந்து வாழ வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது. எனினும் சமூக மட்டத்திலான சில சாய்வு முகாமைத்துவ நடவடிக்கைகள் இங்கு பின்பற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. தடுப்புச் சுவர்களை அமைத்தல், சாதாரண

கல்வேலிகள், மணல்மூடைகளிலான தடுப்புச்சுவர் அமைத்தல், மரநடுகை போன்றன ஆய்வுப்பிரதேசத்தில் அவதானிக்கப்பட்டன (ஒளிப்படம் 2).

ஒளிப்படம் 2: ஆய்வுப் பிதேசத்தில் அவதானிக்கப்பட்ட சாய்வு முகாமைத்துவ நடவடிக்கைகள் *(மூலம்: கள ஆய்வு, 2022)*

இவை தவிர நிலச்சரிவு ஆபத்து முகாமைத்துவம் தொடர்பில் மக்களால் எதிர்பார்க்கப்படும் தீர்வுத்திட்டங்கள் சிலவும் கண்டறியப்பட்டன. இவற்றில் நிலச்சரிவுக்கான முறையான முகாமைத்துவம் (22%) அவசியம் என்பது முக்கியமான எதிர்பார்ப்பாக மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. இவை தவிர பொருளாதார ரீதியான உதவிகள் (20%), மீள்குடியேற்றம் (19%), கடன்சார்ந்த உதவிகள் (20%), பாதுகாப்பான தங்குமிட வசதிகள் (19%) போன்ற எதிர்பார்ப்புக்களும் இனங்காணப்பட்டன. ஆய்வுப் பிரதேசத்தில் ஆபத்தான பகுதிகளில் வாழும் மக்களை மீள்குடியேற்றுவதற்கான முயற்சிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மூன்று கிராம சேவகர் பிரிவுகளிலும் உயர் நிலச்சரிவு ஆபத்தை எதிர்நோக்கும் மக்களே மீள்குடியேற்றத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தண்டுபெதிரூப பகுதியில் 70 சதவீதமான மக்களும் வெலிகாடவத்தயில் 7 சதவீதமானோரும் நாவலப்பிடிய தெற்கு பகுதியில் 23 சதவீதமானோரும் மீள்குடியேற்ற திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர். இவர்கள் இம்புல்பிடிய எனும் கிராம சேவகர் பிரிவிற்கே மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளதுடன் மீள்குடியேற்ற மக்களின் வேண்டுகோளிற்கு இணங்கவே இவ் மீள்குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

படம் 3 : ஆய்வுப் பிரதேசத்தில் மீள்குடியேற்றம் *(மூலம் - களஆய்வு, 2022)*

தண்டுபெதிரூப கிராமசேவகப் பிரிவு அவதானம் கூடிய பகுதியாதலால் 2012 ஆம் ஆண்டில் இருந்து இப்பகுதிக்கு நிலச்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்படுகின்றது. இங்கு வாழும் மக்கள் அனைவரும் மீக்குடியேற்றத்திற்கு உட்பட வேண்டும் என NBRO வினால் அறிவிக்கப்பட்டு 2014 அம் ஆண்டு ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் 2018 ஆம் ஆண்டே கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதேபோல் வெலிகொடவத்த கிராம சேவகப் பிரிவிலும்

அபாய வலயத்தில் வாழும் மக்கள் அனைவரும் மீள்குடியேற்றத்திற்கு உட்பட வேண்டும் என NBRO அறிவித்துள்ள போதிலும் மக்கள் அதே இடத்தில் தொடர்ந்து வசித்து வருகின்றனர். நாவலப்பிடிய தெற்கு கிராம சேவகப் பிரிவில் 2014 ஆம் ஆண்டே நிலச்சரிவு ஏற்பட வாய்ப்புள்ளது என NBRO தெரிவித்தமையினால் மக்கள் தம் சொந்த இடத்தை விட்டு வேறு வீடுகள் மற்றும் கூலி வீடுகளில் வசித்து வருகின்றனர். மேலும் குறிப்பிட்டளவு மக்கள் மீள்குடியேற்ற செயன்முறையிலும் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

ஆய்வுப் பிரதேசத்தில் சிலர் சொந்த இடத்தை விட்டு வேறு இடங்களுக்கு நிரந்தரமாக இடம்பெயர்ந்துள்ள தன்மையும் அவதானிக்கப்பட்டது. ஏனையோர் தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் தற்காலிகமாக இடம்பெயர்ந்து பாடசாலைகள், ஆலயங்களில் தங்குகின்றனர். உதாரணமாக தண்டுபெதிரூப பகுதியில் வசிக்கும் குடும்பங்கள் உயர் மழைவீழ்ச்சி காலப்பகுதியில் பாதுகாப்பான இடங்களில் (கிறிஸ்தவ தேவாலயம்) தங்கியிருந்து மீண்டும் தங்களது இருப்பிடங்களுக்கு திரும்புகின்றனர்.

முன்னெச்சரிக்கை தகவல்கள் பஸ்பாகே பிரதேச செயலகப்பிரிவினாலும் கிராம சேவகர் பிரிவு உத்தியோகஸ்தர்களாலும் நேரடியாகவும், தொலைபேசி வாயிலாகவும் வழங்கப்படுகின்றன. இவை தவிர மக்கள் நிலச்சரிவு அனர்த்தத்திற்கு முகங்கொடுக்கும் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவிகளை பொறுத்தவரையில் தங்குமிட வசதிகள், உணவு மற்றும் குடிநீர் வழங்கல், ஏனைய நிவாரண உதவிகள், சுகாதார வசதிகள், மற்றும் மலசலகூட வசதிகள் ஆகியன முக்கியமானவை. குறிப்பாக பாடசாலைகள், கிறிஸ்தவ தேவாலயம், பௌத்த விகாரை போன்ற தற்காலிக முகாம்களை ஏற்படுத்தி அதில் மக்கள் பாதுகாப்பாக தங்கவைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும் பாதுகாப்பான புகழிடம் தொடர்பில் ஆராயும் போது 38 சதவீதமானோர் பாதுகாப்பான புகழிடம் இல்லை என குறிப்பிட்டுள்ளமை பிரதேசத்தில் ஆபத்து நிலையினை தெளிவுப்படுத்துகின்றது.

2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மீள்குடியேற்ற செயற்பாடு இன்னும் பூர்த்தியடையாத நிலையில் தொடர்ந்தும் மக்கள் அபாய வலயங்களிலேயே வாழவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. சில குடியிருப்புக்களில் வாழமுடியாத நிலை காணப்படும் அதேவேளை நிலச்சரிவினால் முழுமையாக சேதமடைந்த பகுதிகளிலும் மக்கள் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர். அதிகரித்த மழைவீழ்ச்சி பெறும் காலங்களில் குடியிருப்புகளில் நீர் ஊறுதல், வீடுகளில் வெடிப்பு ஏற்படுதல் போன்ற பிரச்சினைகள் காணப்பட்டாலும் இவை தொடர்பான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் குறைவாகவே உள்ளது. இந்நிலமையானது மக்களின் தயார்நிலையிலும் தாக்கம் செலுத்துகின்றது. இதனால் நிலையானதும், பாதுகாப்பானதுமான இருப்பு என்பது மக்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினையாக மாறியுள்ளது.

முடிவுரை

பஸ்பாகே கோரளை பிரதேச செயலகப் பிரிவில் நிலச்சரிவு அனர்த்தம் பற்றிய இவ் ஆய்வானது ஆய்வுப் பிரதேசத்தின் நிலச்சரிவின் தன்மை, வகைகள், நிலச்சரிவை தூண்டும் பௌதீக மற்றும் மானிட காரணிகள், மக்கள் எதிர்நோக்கும் சவால்கள் ஆகியவற்றை கண்டறிந்ததோடு

முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளது. கலப்பு முறை ஆய்வாக முன்னெடுக்கப்பட்ட இவ் ஆய்வானது பிரதானமாக முதலாம் நிலைத்தரவுகளையும் இரண்டாம் நிலைத் தரவுகளையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் பெறுபேற்றின் அடிப்படையில் ஆய்வுப் பிரதேசத்தில் உயர் ஆபத்தான பகுதிகளே அதிகமாகக் காணப்படுகின்றன. மூன்று கிராம சேவகர் பிரிவுகளில் தண்டுபெதிரூப பிரிவே அதிகளவில் நிலச்சரிவை எதிர்கொள்ளும் பகுதியாக கண்டறியப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் நிலச்சரிவினை ஏற்படுத்துவதில் மானிட காரணிகளை விட பௌதிக காரணிகளின் செல்வாக்கு முக்கியம் பெறுகின்றது. எனினும் ஆபத்து நிலை அதிகரிப்பில் மானிடக் காரணிகளின் செல்வாக்கும் முக்கியம் பெறுகின்றது. இதன் விளைவாக அதிகரித்து வரும் நிலச்சரிவு அபாய நிலையினால் ஆய்வுப்பிரதேசமானது வேறுபட்ட சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றது. சமூக பாதிப்புக்களுடன் பொருளாதார ரீதியிலான பாதிப்புக்களும் உயர்வாக உள்ளமையினால் அவற்றில் இருந்து மீள் எழுவதற்கு அதிகளவிலான சவால்களை இப்பிரதேச மக்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அரச மற்றும் சமூக மட்டத்தில் முன்னெடுக்கப்படும் உடனடி செயற்பாடுகள், நிவாரணங்கள், சாய்வு முகாமைத்துவ நடவடிக்கைகள், விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றுக்கு அப்பால் தொடர்ந்தும் மக்கள் ஆபத்து வலயங்களிலேயே வாழ்ந்து வருகின்றமையால் அவசியமான முகாமைத்துவ நடவடிக்கைளை முன்னெடுப்பதும் பாதுகாப்பான வாழ்வினை உறுதிப்படுத்துவதும் அவசியமாகியுள்ளது.

உசாத்துணை

1. Arambepola, N.M.S.I. and Weerasinghe, K.M. (1998) *Towards achieving the long – term objective of landslide hazard mapping programmed.* In: Proceeding of the workshop on the role of research & development. Institution in Natural disaster managements. Colombo. 1998. Sri Lanka
2. Arambepola, N.M.S.I., Pallawla, P.P.D.H. and Bandara, R.M.S. (1997) *Landslide Hazard zonation mapping and Geo Environmental Problems Associated with the occurrence of landslide.* In: CBRT Golden Jubilee year Conference.
3. Bhandari, R.K. (2000c) *Landslide in Focus*. Colombo: National Building Research Organization (NBRO)
4. Cooray, P.G. (1994). Geological factors affecting Landslide in Sri Lanka. In: Proceeding of the National Symposium on Landslide in Sri Lanka. Landslide Studies and Services Division. Colombo. 1994. Vol.1. Sri Lanka: NBRO & Ministry of Housing, Construction & Urban Development. pp. 15-22.
5. Dahanayake, K. (2009) *Approaches for landslide disaster risk reeducation and making community resilient.* In: Proceedings of the national symposium on creating disaster free safer environment. NBRO. Colombo. 2009. Sri Lanka: NBRO & Ministry of Disaster Management.
6. Hasali Hemasinghe, Rangali, Deshapriya and Lal Samarakoon. (2017) Landslide Susceptibility Mapping Using Logistic Regression Model - A Case Study in Badulla District, Sri Lanka Available From
7. https://cjs.sljol.info/articles/10.4038/cjs.v46i4.7466/galley/5919/download/
8. Jude Prasanna and Winson Gnanatheepan. (2017) Study on Housing Units Locate in Very High and High Landslide Hazard Prone Areas of Hali-Ela Divisional Secretariat Division, Sri Lanka Available From
9. https://r.search.yahoo.com/Study on housing units locate in very high and high landslide hazard pr one areas of Hali-Ela divisional secretariat division Sri Lanka
10. Wickramasooriya, A. K. and Amarasooriya, W. G. I. M. (2020), Analysis of Landslide risk using Geoinformatics applications in the North West of Gangawatakorale Divisional Secretariat Division in Kandy District, The 7th International Conference on Arts and Humanities (ICOAH 2020), Colombo, Sri Lanka, 17-18 September 2020.
11. தேசிய கட்டிட ஆராய்ச்சி நிலையம். (2012 – 2019) தேசிய கட்டிட ஆராய்ச்சி நிலைய அறிக்கைகள், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிலையம்.
12. கண்டி மாவட்ட செயலகம். (2020) கண்டி மாவட்ட புள்ளிவிபர அறிக்கைகள், கண்டி மாவட்ட செயலகம்.
13. பஸ்பாகே பிரதேச செயலகம். (2012-2019) மூளவளத்திரட்டு, பஸ்பாகே பிரதேச செயலகம்.
14. கண்டி மாவட்ட செயலகம். (2020) மூளவளத்திரட்டு, கண்டி மாவட்ட செயலகம்.

கினிகத்தேனை கிராம சேவகர் பிரிவில் நிலத்தோற்றத்துடன் தொடர்புடைய சூழலியல் பிரச்சினைகள்

ஆ.மோகனதர்ஷினி

புவியியல் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
mohanaarumugam03@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

அம்பகமுவ பிரதேச செயலகத்திற்குட்பட்ட 315யு எனும் கிராம சேவகர்பிரிவானது நிலத்தோற்றத்துடன் தொடர்புடைய பல சூழலியல் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றது. இவ் ஆய்வு முன்னெடுக்கப்பட்டதன் பிரதான நோக்கமானது ஆய்வு பிரதேசத்தில் பௌதிக மற்றும், மானிட காரணிகளுடன் தொடர்புடைய நிலத்தோற்றம் சார்ந்த சூழலியல் பிரச்சினைகளை அடையாளப்படுத்துதல், அதனை புஜளு தொழில்நுட்பத்திற்கூடாக படமாக்கல் மற்றும் அவற்றினை தடுப்பதற்கு ஆய்வு பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் எவையென கண்டறிதல் போன்றனவாகும். அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு கலப்பு முறையில் முன்னெடுக்கப்பட்ட இவ் ஆய்வில் முதலாம் நிலை தரவுகளாக வினாக்கொத்து நேரடி அவதானிப்பு, ஒளிப்படங்கள் மற்றும் நேர்காணல் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளதோடு இரண்டாம் நிலை தரவு சேகரிப்பு முறைகளாக பிரதேச செயலக புள்ளிவிபரவியல் அறிக்கை, ஆய்வுக்கட்டுரைகள், நூல்கள் இணையத்தளங்கள் ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி ஆய்வு பிரதேசத்தில் இனங்காணப்பட்ட பெதிக ரீதியிலான நிலத்தோற்றத்துடன் தொடர்புடைய சூழலியல் பிரச்சினைகளாக இயற்கை அனர்த்தங்களான நிலச்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு என்பனவும் மானிட ரீதியிலான காரணிகளில் அதிகரித்த பைனஸ் மரங்களினது உருவாக்கம் , மலைகளை தகர்த்தல், இயற்கையான நீர் வழிகளை மறித்தல்இ சனத்தொகை அதிகரித்தல் என்பனவும் இனங்காணப்பட்டுள்ளன. அத்தோடு ஆய்வு பிரதேசத்தினை பொறுத்தவரையில் நிலத்தோற்றத்துடன் கூடிய சூழலியல் பிரச்சினைகளை தடுப்பதற்காக கல்வேலி அமைத்தல், காடழிப்பினை தடுப்பதற்கான நடவடிக்கைகளினை முன்வைத்தல், என்பன இங்கு முக்கிய காரணிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. ஆய்வின்படி கினிகத்தேனை பிரதேசமானது அதிகளவிலான நிலத்தோற்றத்துடன் தொடர்புடைய சூழலியல் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளதோடு சமூக பொருளாதார அடிப்படையிலும் பாதிப்புக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அத்தோடு ஒப்பீட்டு ரீதியில் பௌதிக ரீதியான காரணிகளை விடவும் மானிட காரணிகளினாலே ஆய்வு பிரதேசத்தில் அதிகளவிலான நிலத்தோற்றங்களை அடிப்படையாகக் கொண்ட சூழலியல் பிரச்சினைகளை அவதானிக்க முடிந்தது. போதிய பொருத்தமான முகாமைத்துவ முறைகளை கடைபிடிக்காமையே இத்தகைய பிரச்சினைகளை மேலும் தூண்டுவதற்கான காரணங்களாக காணப்படுகின்றமை அடையாளங்காணப்பட்டுள்ளன.

திறவுச் சொற்கள்: நிலத்தோற்றம், சூழலியல், பௌதிக காரணிகள், மானிட காரணிகள், அனர்த்தம், பாதிப்புக்கள்

1.0 அறிமுகம்

சூழல் என்பதனை வரையறுப்பதென்பது கடினமான ஒன்றாகும். சூழலானது சுற்றுப்புறங்களிலுள்ள பொருட்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டதாக அமையும். பௌதிக தொடர்புகளைக் கொண்டு காணப்படக்கூடிய காற்று, ஆகாயம், நிலம் தாவரங்கள் மற்றும் வனவிலங்குகளை உள்ளடக்கியதாக கட்டமைக்கப்பட்டுள்ள ஒரு அமைப்பினை சூழல் என வரையறுக்க முடியும் (Simon Ball and Stuart Bell, 2002). அதே போல நுண்ணுயிர்கள், தாவர விலங்குகள் மற்றும் ஏனைய உயிரினங்களானது மனிதனை சூழ்ந்து காணப்படுவதன் மூலமாக அவை மனிதனுடன் இடைத்தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்கின்றன இத்தகைய வெளிப்புற நிலைமைகளின் கூட்டுத்தொகையே சூழல் என அழைக்கப்படுகின்றது (Herkovits,2018). மேலும் நீர், காற்று, நிலம் என்பவற்றுக்கிடையிலான இடைத்தொடர்புகளை கொண்டிருப்பதோடு நீருக்கும் காற்றுக்குமிடையிலான தொடர்பு, மனிதன், நுண்ணுயிர்கள் மற்றும் ஏனைய உயிர்வாழ் அங்கிகள் என்பவற்றுக்கிடையிலான தொடர்புகளைக் கொண்டிருப்பதனை சூழலென வரையறுக்க முடியும். இத்தகைய சூழல் நிலைமைகளில், பல்வேறு சூழலியல் சார்ந்த பிரச்சினைகளினை அடையாளம் காண முடியும் (Environment (protection) Act, 1986 / Anilkumar, 2018).

சூழலியல் பிரச்சினைகளென்பது அதிக கவனம் செலுத்த வேண்டிய முன்னுரிமை வழங்க வேண்டிய ஒரு விடயமாக காணப்படுகின்றது (Bakshi and Kumar,2013). மேலும் சுற்றுச்சூழல் சீர்கேடு என்பது சுற்றுச்சூழலினுடைய சீரழிவாகவே கருதப்படுகின்றது. சூழலிலுள்ள அனைத்து

உயிருள்ள மற்றும் உயிரற்ற கூறுகளான காற்று, நீர், மண், விலங்குகள் மற்றும் பிற உயிரினங்களை சூழலானது கொண்டுள்ளது. அதன் அடிப்படையில் சூழலியல் சீரழிவுகளுக்கான முக்கிய காரணங்களாக நகரமயமாக்கல், தொழில்மயமாக்கல், அதிக மக்கள் தொகை வளர்ச்சி, காடழிப்பு போன்றன மற்றும் இயற்கை அனர்த்தங்களான வெள்ளம், சூறாவளி, வரட்சி, உயர் வெப்பநிலை, தீ முதலியனவும் முக்கிய காரணங்களாக அமைகின்றன (Pradip Kumar Maurya,2020). எனவே மனிதன் வரலாற்று காலம் தொட்டு பல்வேறு சூழலியல் பிரச்சினைகளினை எதிர்கொள்வதனை அவதானிக்க முடிகின்றது (Riley etal, 2017). இடம், நேரம், சமூக, சூழல் மற்றும் அரசியல் ஆகிய காரணங்களினாலேயே சூழலியல் சார்ந்த பிரச்சினைகள் உருவாக்கப்படுகின்றன. எனினும் சூழலியல் பிரச்சினைகளானது பௌதிக செயன்முறைகளுடனும் அனர்த்தங்களுடனும் மட்டும் தொடர்புடையனவல்ல. மாறாக சமூக வரலாற்று செயற்பாடுகளும் தாக்கம் செலுத்துகின்றன (Patrick Pigeon, Julien Rebotier).

சூழலானது மிகவும் பரிச்சயமான ஒன்றாகவே கருதப்பட்டாலும் சுற்றுசூழல் பிரச்சினை என்பது உலகளவில் மிகவும் பாரதூரமான பிரச்சினையாகவே பார்க்கப்படுகின்றது. இப் பிரச்சினைகளானது சுற்றுப்புற சூழலை மாத்திரமன்றி மனித திறனையும் பாதிப்பதாக அமைகின்றது குறிப்பாக மாசாக்கம், உயிர்ப்பல்வகைமை இழக்கப்படல், காடழிப்பு, புவிவெப்பமடைதல் என்பன பல்வேறு பாரியளவிலான சிக்கல்களை தோற்றுவிப்பனவாக அமைகின்றன (Brown et al,1987). இலங்கையை பொருத்தவரையில் பரந்தளவிலான முன்னெப்போதும் இல்லாத அளவில் சூழலியல் சார் சிக்கல்கள் ஏற்பட்டு வருகின்றன. சுற்றுச்சூழல் சார்ந்த பிரச்சினைகளானவை இலங்கையின் சுற்றுசூழல் அமைப்புகளுக்கும் மனிதர்களுக்கும் மிகப்பெரிய சவாலாக மாறியுள்ளது (Chiran et al,2019**).** இலங்கையை பொறுத்தவரையில் இன்றும் பல சூழலியல் பிரச்சினைகள் தீர்க்கப்படாமலேயே உள்ளன. ஆதிகரித்த கைத்தொழில் மயமாக்கத்தினாலும் செறிவான பயிர்ச்செய்கை நடவடிக்கைகளினாலும் சூழலியல் மாசாக்கம், காடழிப்பு, மண்ணரிப்பு என்பன ஏற்படுவதற்கான பிரதான காரணங்களாகின்றன (Wasantha Athukorala and Muditha Karunarathna,2020).

குறிப்பாக இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் பொறுப்பற்ற திட்டமிடல் நடவடிக்கைகளினாலும் வளச்சுரண்டல், கழிவுகள், மாசாக்க செயற்பாடுகளினால் தொடர்ச்சியாக சூழல் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகின்றது. எனவே சூழலின்நிலைத்திருப்பினை உறுதி செய்வதோடு இச்சூழல் சார்பிரச்சினைகளை தீர்ப்பதென்பது மிகப்பெரிய சவாலாகவே அமைகின்றது (Wasantha Athukorala and Muditha Karunarathna,2020). எனவே பொருத்தமான முறைகளைக் கையாள்வதன் மூலமாக இலங்கையில் உள்ள சூழலியல்சார் பிரச்சினைகளை தீர்க்க முடியும்.

1.1 ஆய்வு பிரதேசம்

இலங்கையின் கூரை எனப் போற்றப்படுகின்ற நுவரெலியா மாவட்டமானது கண்டி, பதுளை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களை சூழ்ந்து மத்திய மாகாணத்தில் அமையப்பெற்றுள்ள ஒரு மாவட்டமாக காணப்படுகின்றது. கடல் மட்டத்திலிருந்து 900

அடியிலிருந்து 8000 அடிவரை உயர்ந்து செல்லும் இலங்கையின் அதிஉயர் மலையான பீதுருதாலகால மலைத்தொடர், கிரிகல்பொத்த மலைத்தொடர், கொட்டுப்பொல மலைத்தொடர், கிகிலியாமான மலை, கிரேட்வெஸ்டன் மலை, ஹக்கல மலைத்தொடர் மற்றும் புனித சமனலகந்த ஆகிய மலைத்தொடர்களினை உள்ளடக்கிக் காணப்படக்கூடிய ஒரு மாவட்டமாக இது காணப்படுகின்றது.

மொத்தமாக 1741முஆ^2 பரப்பளவினைக் கொண்டு காணப்படக்கூடிய இம் மாவட்டமானது 763,029 மக்கள் தொகையினைக் கொண்டுள்ளதோடு 05 பிரதேச செயலகங்களையும், 491 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளினையும், 09 பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கிக் காணப்படும் ஒரு பிரதேசமாக அமைகின்றது. இம் மாவட்டத்திற்குரிய பிரதேச செயலகங்களில் ஒன்றாகவே அம்பகமுவ பிரதேச செயலகமும் காணப்படுகின்றது. 489KM^2 பரப்பளவினைக் கொண்டு காணப்படும் இப்பிரதேசத்திலேயே ஆய்வு பிரதேசமான கினிகத்தேனை (315A) அமைந்து காணப்படுகின்றது. மொத்தமாக 7.05Km பரப்பளவினைக் கொண்டு காணப்படுகின்றது.

இது 926 குடும்பங்களையும் 3103 மக்கள் தொகையினையும் மொத்தமாக கொண்டு காணப்படுகின்றது. மேலும் இன அடிப்படையில் 1875 சிங்கள மக்களையும் 1222 இலங்கைத் தமிழர்களையும் 06 முஸ்லிம்களையும் கொண்டு காணப்படுகின்றது (Resource Profile, 2021).



மூலம்: ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது, 2022

1.2 ஆய்வுப்பிரச்சினை

அம்பகமுவ பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியிலுள்ள கினிகத்தேனை (315A) எனும் கிராம சேவகர் பிரிவில் பல்வேறு சூழலியல் சார்ந்த பிரச்சினைகளை அவதானிக்க முடிகின்றது. இதனால் அப்பிரதேச வாழ் மக்களும் தாவர, விலங்குகளும் நாளுக்கு நாள் பல்வேறு சூழலியல் சார்ந்த பிரச்சினைகளினால் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இவை பெரும்பாலும் இயற்கையாக

ஏற்படக்கூடிய சூழலியல் சார் பாதிப்புக்களாகவும், மானிட காரணிகளால் ஏற்படுத்தப்படும் பாதிப்புக்களாகவும் காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. எனவே அவற்றினை உரிய முறையில் அடையாளம் காண்பதோடு அத்தகைய சூழலியல் சார்ந்த பாதிப்புக்களினை குறைப்பதற்கு ஆய்வு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளினையும் முறையாக அடையாளப்படுத்துவது அவசியமாகின்றது. மேலும் அதன் பொருத்தப்பாடு எத்தகையது என்பதனையும் கண்டறிய வேண்டிய தெவை காணப்படுகின்றது. அதன் அடிப்படையில் ஆய்வு பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட முக்கிய பிரச்சினைகளாக

- பௌதிக காரணிகளினால் ஏற்படுத்தப்படக்கூடிய முக்கிய சூழலியல் பிரச்சினைகள்
- மானிட காரணிகளினால் ஏற்படுத்தப்படும் முக்கிய சூழலியல் பிரச்சினைகள்
- சூழலியல் பாதிப்புக்களால் மனிதன் மற்றும் ஏனைய உயிரினங்கள் அதிகமாக பாதிக்கப்படுகின்றமை
- ஆய்வு பிரதேசத்தில் முறையான முகாமைத்துவ நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்ற தன்மை போன்ற பல்வேறு பிரச்சினைகளை ஆய்வு பிரதேசத்தில் அவதானிக்க முடிந்தமையினால் இவை தொடர்பில் தேடியறிய வேண்டிய அவசியம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

1.3 ஆய்வு நோக்கம்

- ஆய்வு பிரதேசத்தில் ஏற்படக்கூடிய பௌதிக ரீதியிலான சூழலியல் பிரச்சினைகளை அடையாளப்படுத்துதல்
- ஆய்வு பிரதேசத்தில் ஏற்படக்கூடிய மானிட ரீதியிலான சூழலியல் பிரச்சினைகளை அடையாளப்படுத்துதல்
- ஆய்வு பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள முகாமைத்துவ முறைகளினை அடையாளம் காணுதல்.

1.4 ஆய்வு முறையியல்

ஆய்வு பிரதேசத்தினுடைய சூழலியல் சார் பிரச்சினைகளை அடையாளம் காணும் பொருட்டு ஆய்வுக்காக பல்வேறு ஆய்வு முறையியல்கள் கையாளப்பட்டுள்ளன. அந்த அடிப்படையில் ஆய்வு முறையியல் எனும்போது…

1. தரவு மூலம்
2. தரவு சேகரிப்பு
3. தரவு பகுப்பாய்வு என்பன மிக பிரதானமானவை ஆகும்.

1.4.1 தரவு மூலம்

இவ் ஆய்வினைப் பொறுத்தவரையில் ஆய்வுக்கட்டுரைகள், Google Earth Pro, Digital Elevation Model (DEM), புத்தகங்கள், கள ஆய்வின் மூலமாக பெறப்பட்ட புகைப்படங்கள என்பன ஆய்வுக்காக பயன்படுத்தப்படுகின்றன.

1.4.2 தரவு சேகரிப்பும் பகுப்பாய்வும்

இவ் ஆய்வினைப் பொறுத்தவரையில் ஆய்வு பிரதேசத்திற்கான தரையுயர்ச்சி வேறுபாட்டு படம் மற்றும் சாய்வுப்படம் என்பன STRM DEM data வினை கொண்டு Data Management Toool இன் மூலமாக Surface tool ஐ பயன்படுத்தி தயாரிக்கப்பட்டன. அத்தோடு ஆய்வு பிரதேசத்தில் காணப்படக்கூடிய நிலப்பயன்பாடு தொடர்பான தரவுகளை பெற்றுக்கொள்ளும் பொருட்டு Google earth pro பயன்படுத்தப்பட்டு polygon tool மூலமாக பொருத்தமான நிலப்பயன்பாடுகள் பிரித்தெடுக்கப்பட்டு பின்னர் ArcGIS மென்பொதியின் மூலமாக அவை தொடர்பான பகுப்பாய்வுகள் செய்யப்படன. அத்தோடு மழைவீழ்ச்சி தொர்பான தரவுகளை பகுப்பாய்வுக்கு உட்படுத்தும் பொருட்டு வானிலை அவதானிப்பு நிலையத்தினுடைய மழைவீழ்ச்சி தரவுகள் பெறப்பட்டு பின்னர் Google earth pro மூலமாக பொருத்தமான மழைவீழ்ச்சி நிலையங்கள் பிரித்தெடுக்கப்பட்டு IDW முறைக்கூடாக Interpolation செய்யப்பட்டுள்ளது. மேலும் ஆய்வுபிரதேசத்தில் காணப்படக்கூடிய முக்கிய சூழலியல் சார்ந்த பிரச்சினைகள் மற்றும் முன்னெடுக்கப்பட்டுள்ள முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பிலான அம்சங்கள் கள ஆய்வின் மூலமாக ஒளிப்படங்களாக பெற்பட்டவற்றைக் கொண்டும் தரவு பகுப்பாய்வு இடம்பெற்றுள்ளது.



மூலம்: ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது, 2022

1.5 பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்

ஆய்வு பிரதேசத்தினை பொறுத்தவரையில் அதிகளவிலான சூழலியல் சார்ந்த பிரச்சினைகளை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக பௌதிக காரணங்களினாலும், மானிட காரணங்களின் தாக்கத்தினாலும் அதிகளவிலான சூழலியல் சார்ந்த பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். அதன் அடிப்படையில்

1.5.1 நிலச்சரிவு ஏற்படல்

கினிகத்தேனை கிராமசேவகர் பிரிவினை பொறுத்தவரையில் அதிகளவிலான நிலச்சரிவு அனர்த்தங்கள் பதிவாகியுள்ளமையினை அவதானிக்க முடியும். குறிப்பாக கடவளை தொடக்கம் கினிகத்தேனை பிரதேச செயலகம் செல்லும் வரையான இடைப்பட்ட பகதிகளில் பாரியளவிலான நிலச்சரிவு அனர்த்தங்கள் இடம்பெறுவதனை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக தென்மேல் பருவ பெயர்ச்சி (மே - செப்டெம்பர்) வரையான காலப்பகுதிகளில் அதிகளவிலான நிலச்சரிவுகள் பதிவாகியுள்ளமையினை அவதானிக்க முடியும். குறிப்பாக சரிவு, சேற்றுப்பாய்ச்சல், பரவல் மற்றும் வீழ்ச்சி வகையிலான நிலச்சரிவுகளை கினிகத்தேனைனுடைய நகரப்பகுதிகளை அண்டிய பகுதிகளில் அவதானிக்க முடிகின்றது.

ஆண்டுக்கு சராசரியாக உயர் மழைவீழ்ச்சியினை பெற்றுக்கொள்ளும் பகுதியாக இது காணப்படுகின்றது. மேலும் இலங்கையில் அதிகளவிலான மழைவீழ்ச்சியினை பெற்றுக் கொள்ளக்கூடிய மாலிபொடையினை அண்டி காணப்படக்கூடிய பிரதேசமாக இது காணப்படுவதன் காரணமாக அதிகளவிலான பாதிப்புக்களை இங்கு அவதானிக்க முடிகின்றது. கடந்த 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற நிலச்சரிவின் காரணமாக ஏரத்தாள 10 இற்கும் மேற்பட்ட கடைத்தொகுதிகள் முழுமையான சேதத்திற்கு உள்ளானதுடன் ஒருவர் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக கினிகத்தேனை கிராம சேவகர் பிரிவுகளில் அதிகளவிலான நிலச்சரிவுக்கான அறிகுறிகளையும் அவதானிக்க முடியும்.

அதாவது கடவளை பாடசாலையை அண்மித்து காணப்படக்கூடிய பகுதிகளில் உள்ள சாய்வுப்பகுதிகளில் நீர்நிரம்பி வழிவதனை அவதானிக்க கூடியதாக காணப்படுகின்றது. பொதுவாகவே இங்கு அதிக உயரமான மற்றும் சாய்வான பகுதிகளினை அவதானிக்க முடிவதன் காரணமாக நிலச்சரிவானது அடிக்கடி இடம்பெறுவதற்கான வாய்ப்புக்களும் மிக அதிகமாக உள்ளமையினை அவதானிக்க கூடியதாக உள்ளது. எனவே ஆய்வு பிரதேசத்தில் அவதானிக்கக்கூடிய மிக முக்கிய பிரச்சினைகளில் இதுவும் ஒன்றாகவே காணப்படுகின்றது எனலாம். அதிகரித்த மழைவீழ்ச்சியும், இயல்பாகவே கினிகத்தேனை பிரதேசம் நிலச்சரிவு அபாயவலயத்திற்குள் உள்வாங்கப்பட்டிருப்பதாலும் மிகப்பெரிய சூழல் சார் பிரச்சினையாக மாறியுள்ளமையினை அவதானிக்க முடியம்.

தரையுயர்ச்சி வேறுபாட்டு படம்



சாய்வு படம்



1.5.2 மண்ணரிப்பு

ஆய்வு பிரதேசத்தினைப் பொறுத்தவரையில் இங்கு காணப்படக்கூடிய மற்றுமொரு பிரதான சூழலியல் பிரச்சினையாக மண்ணரிப்பு ஏற்படுவதனை அவதானிக்க முடிகின்றது. இது பெரும்பாலும் ஆய்வு பிரதேசத்தினுடைய தென் பகுதிகளில் 2006ம் ஆண்டு காணப்பட்ட தேயிலை நிலங்கள் மற்றும் காட்டுவளங்கள் 2022 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் குறைவடைந்துள்ளமையினை அவதானிக்க முடிகின்றது. எனவே, இப்பகுதிகளில் துரிதமாக மண்ணரிப்பு இடம்பெறுவதனை எம்மால் அவதானிக்கக்கூடியதாக அமைகின்றது. குறிப்பாக 2006 ஆம் ஆண்டு காணப்பட்ட (209.35) ஹெக்டேயர் தேயிலை நிலங்களானது 2022 ஆம் ஆண்டு (140.31) ஹெக்டேயராக குறைவடைந்துள்ளதுடன் 2006 ஆம் ஆண்டு காணப்பட்ட (259.98) ஹெக்டேயர் காட்டு வளமானது 2022 ஆம் ஆண்டு (115.743) ஹெக்டேயராக குறைவடைந்துள்ளமையினை அவதானிக்க முடிகின்றது எனலாம். குறிப்பாக இத்தகைய பிரச்சினைகளால் கினிகத்தேனை கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகள் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

ஆய்வு பிரதேசத்தினுடைய மத்திய பகுதிகளில் காணப்பட்ட தேயிலை நிலங்கள் தற்போது பாரியளவில் குறைக்கப்பட்டுள்ளன. அத்தோடு பல்வேறு குடியிருப்புக்களும் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே அப்பகுதிகளில் மண்ணரிப்பு துரிதப்படுத்தப்பட்டுள்ளமை மிக

முக்கிய விடயமாக விளங்குகின்றது. அத்தோடு 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டு காலப்பகுதிகள் காணப்பட்ட காட்டு வளம் குறைவடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனவே அது ஆய்வு பிரதேசத்தினுடைய சூழலில் பாரியதொரு சூழல் பிரச்சினையாக மாற்றமடைந்துள்ளது. காரணம் கினிகத்தேனை நகரினை அண்டிய பகுதிகளில் பாரிய கடைத்தொகுதிகள் தோற்றம் பெற்று வர்த்தக நகரப்பகுதியாக உருமாற்றம் பெற்று வருவதன் காரணமாக பெரும்பாலான காடுகள் அழிக்கப்பட்டு நகர விஸ்தரிப்பு இடம்பெற்று வருகின்றமையினாலாகும்.

எனவே இது ஆய்வு பிரதேசத்தில் அவதானிக்கப்பட்ட மிக முக்கியமான சூழலியல் பிரச்சினையாக பார்க்கப்படுகின்றது. அத்தோடு சரிவான பல பகுதிகளில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புக்களும் மண்ணரிப்பு நிகழ்வதற்கான முக்கிய காரணங்களாக விளங்குகின்றன. ஆய்வு பிரதேசத்தினை பொறுத்தவரையில் அதிகளவிலான 43^0 பாகை வரையிலான சாய்வு காணப்படுவதனை அவதானிக்க முடியும். எனவே அத்தகைய பகுதிகளிலம் இன்று குடியிருப்புக்களும் எனைய கட்டிடங்களும் கட்டப்பட்டு வருகின்றமையின் காரணமாக அவற்றினை அண்டி காணப்படக்கூடிய பகுதிகளில் தொடர்ச்சியாக மண்ணரிப்பினை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பாக அமைகின்றது. எனவே ஆய்வு பிரதேசத்தில் இனங்காணப்பட்ட அதிகரித்து வரும் ஒரு சூழலியல் பிரச்சினையாக இது பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

1.5.3 வெள்ளப்பெருக்கு

1.5.4 படம்: வெள்ளப்பெருக்கு

வெள்ளப்பெருக்கு என்பது ஆய்வு பிரதேசத்தில் காணப்படக்கூடிய மற்றுமொரு மிக முக்கிய பிரச்சினையாக காணப்படுகின்றது. குறிப்பாக கினிகத்தேனை வட்டவளை கிராமசேவகர் பிரிவினை அண்டி காணப்படுவதும் இங்கு வெள்ளம் ஏற்படுவதற்கான பிரதான காரணமாகவே விளங்குகின்றது. அதாவது வட்டவளை பிரதேசத்திலும் செறிவான மழைவீழ்ச்சி கிடைக்கப் பெறுவதன் காரணமாக அதனை அண்டி காணப்படக்கூடிய கினிகத்தேனை பிரதேசத்திலும் செறிவான மழைவீழ்ச்சியினை அவதானிக்க முடியும். அத்தோடு கினிகத்தேனை நகரில் களனி மற்றும் மகாவலி ஆகிய இரு நதிகளும் பிரிவடைகின்றன. மே – செப்டெம்பர் வரையிலான தென்மேல் பருவபெயர்ச்சி காலத்தில் செறிவான மழைவீழ்ச்சி கிடைக்கப் பெறுவதன் காரணமாக அக்காலப்பகுதிகளில் தொடர்ச்சியாக மக்கள் வெள்ள அனர்த்தத்தினால்

பாதிக்கப்படும் நிலைமை ஏற்படுகின்றது. அத்தோடு தொடர்ச்சியாக அகற்றப்படும் தாவரப்போர்வைகளும் இங்கு வெள்ளம் ஏற்படுவதற்கான பிரதான காரணங்களாகின்றன. இதன் காரணமாக கினிகத்தேனை நகரப்பகுதி வருடாவருடம் ஏற்படக்கூடிய வெள்ளத்தில் பாரியளவிலான பாதிப்புக்களை பெறுகின்றன. எனவே கினிகத்தேனை நகரை பொறுத்தவரையில் இது மிகப்பெரிய சூழலியல் பிரச்சினையாக பார்க்கப்படுகின்றது. செறிவான மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறும் காலங்களில் இப்பகுதியில் பாரியளவிலான வெள்ளம் வருவதனை அவதானிக்க முடிகின்றது.

மேலும் ஆய்வு பிரதேசத்தில் இடம்பெறக்கூடிய பாரியளவிலான பாதிப்பாக காடழிப்பு காணப்படுகின்றது. குறிப்பாக ஆய்வு பிரதேசத்தினுடைய தென்கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் மட்டுமே காடுகளை அவதானிக்க கூடியதாக அமைகின்றன. தற்காலத்தில் அவையும் அதிகளவில் அழிவிற்குட்பட்டு வருவதனை அவதானிக்க முடியம். காரணம் கினிகத்தேனை பகுதிகளில் தொடர்ச்சியாக செய்யப்பட்டு வரக்கூடிய வீடமைப்பு திட்டங்கள் மிக முக்கிய காரணங்களாகின்றன. தற்போது வளர்ச்சியடைந்து வரும் ஒரு நகரமாக கினிகத்தேனை காணப்படுவதனாலும் மக்கள் அதிகளவில் வீடமைப்புக்களை மேற்கொள்ள விரும்புகின்றனர். எனவே இது காடழிப்பினை துரிதமாக்குகின்றது.

அதேபோல ஆய்வு பிரதேசத்தில் சந்தனம், வெனிவேல் போன்ற உயர் பொருளாதார பெறுமதி மிக்க மரங்கள் காணப்படுகின்றன. எனவே அவற்றினை அழிக்க முற்படுவதன் காரணமாக அவையும் அதிகமாக அழிக்கப்படுகின்றன. எனவே இது கினிகத்தேனை பகுதியில் காடழிப்பு இடம்பெறுவதற்கான முக்கிய காரணங்களாக விளங்குகின்றன. அது மட்டுமன்றி வனவிலங்குகளின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக இப்பகுதிகளில் அதிகரித்து வருவதனை காணலாம். குறிப்பாக கினிகத்தேனை பிரதேசத்தினுடைய வனங்களில் சிறுதைப்புலிகள் அதிகரித்து வருவதன் காரணமாக அங்குள்ள காடகள் அழிக்கப்பட்டு வருகின்றன. வெயில் காலங்களில் இப்பகுதிகளிலுள்ள காடுகளுக்கு அடிக்கடி தீ வைக்கும் செயற்பாடுகளில் இங்குள்ள மக்கம் ஈடுபடுவதன் காரணமாக அதிகளவிலான தாவரப்போர்வை அழிவடைந்துள்ளமையினை எம்மால் அவதானிக்கக் கூடியதாக அமைகின்றது எனலாம். அது மட்டுமன்றி தொடர்ந்து விவசாய நடவடிக்கைகளை மெற்கொள்வதற்காகவும் இப்பிரதேச வாழ் மக்கள் தாவரப்போர்வையினை அழிக்கும் தன்மை காணப்படுகின்றது. எனவே காடழிப்பு இடம்பெறுவது மிக முக்கிய சூழலியல் பிரச்சினையாக காணப்பட்டாலும் அது அதிகளவில் இடம்பெறுவதற்கு அதிகளவான மானிட காரணங்களே தாக்கம் செலுத்துகின்றன.

1.5.4 பைனஸ் மரங்களினது செறிவு

அதே போன்று ஆய்வு பிரதேசத்தில் அவதானிக்கக்கூடிய மற்றுமொரு சூழல் பிரச்சினையாக பைனஸ் காடுகளது உருவாக்கம் காணப்படுகின்றது. கினிகத்தேனை பிரதேசத்தினை பொறுத்தவரையில் பைனஸ் காடுகளது செல்வாக்கு அதிகமாக காணப்படுகின்றது. குறிப்பாக ஆய்வு பிரதேசமான கினிகத்தேனையினுடைய கிழக்கு மற்றும் மத்திய பகுதிகளில் அடர்த்தியாக வளர்ந்த நிலையில் பையனஸ் காடுகள்

காட்சியளிப்பதனை அவதானிக்க முடியும். குறிப்பாக அவை அதிகரித்த இலைச்சருகுகளை மண்ணில் விழ செய்வதோடு அத்தகைய சருகுகளானது மண்ணரிப்பினையும், நிலச்சரிவினையம் தூண்டும் தன்மை கொண்டனவாக காணப்படுவதனை எம்மால் அவதானிக்கக் கூடியதாக அமைகின்றது. குறிப்பாக அவற்றின் பரம்பல் அதிகரித்து காணப்படக்கூடிய தியகலை மற்றும் கடவகை ஆகிய பகுதிகளில் பாரியளவிலான நிலச்சரிவினை ஏற்படுத்துவதை அவதானிக்க முடிகின்றது.

ஆரம்ப காலங்களில் காடுகள் காணப்பட்ட பகுதிகளுக்கிடையில் தற்போது பைனஸ் மரங்கள் அதிகளவு அதிகரித்துள்ளமையினை எம்மால் அவதானிக்கக் கூடியதாக அமையும். எனவே அவை மண்ணரிப்பையும் நிலச்சரிவு ஏற்படும் வீதத்தினையும் அதிகரிப்பதற்கான மிக முக்கிய காரணியாக அடையாளம் காணப்பட்டுள்ளமையினால் ஆய்வுபிரதேசத்தினை பொறுத்தமட்டில் அது ஒரு மிகப் பெரிய சூழல் பிரச்சினையாக பார்க்கப்படுகின்றது. 2006 ஆம் ஆண்டு 262.12 ஹெக்டேயராக காணப்பட்ட பைனஸ் மரங்களானது 2022 இல் 395.24 ஹெக்டேயராக அதிகரித்துள்ளது.

1.5.5 மலைகளை தகர்த்தல்

தொடர்ந்து ஆய்வு பிரதேசத்தில் அவதானிக்கப்பட்ட மற்றுமொரு பாரிய பிரச்சினையாக மலைகளினை குடைந்து பாரிய கட்டிடங்களை நிர்மானிப்பதாகும். குறிப்பாக வுசவைவைழளெ என அழைக்கப்படக்கூடிய ஒரு விடுதியானது ஆய்வு பிரதேசத்தினை அண்மித்த பகுதியில் கட்டப்பட்டிருப்பதனை எம்மால் அவதானிக்கக் கூடியதாக அமையும். இது தற்போது கட்டப்பட்டுள்ள இடமானது ஆரம்ப காலத்தில் முழுமையான மலையாகவே தோற்றமளித்தது. ஆனால் தற்போது அந்த மலைப்பகுதி முழுமையாக தகர்க்கப்பட்டு பிற்பட்ட காலங்களில் விடுதியாக மாற்றப்பட்டுள்ளது. மேலும் கினிகத்தேனை பிரதேசத்தினுடைய பேருந்து தரிப்பிட நிலையமானது ஆரம்பத்தில் மலையாகவே காணப்பட்டது. ஆனால் அபிவிருத்தி நடவடிக்கைகளின் அடிப்படையில் இன்று அம் மலைகள் கதர்த்தப்பட்டு பேருந்து தரிப்பிடம் உருவாக்கப்பட்டுள்ளமையும் அவதானிக்க கூடியதாக அமைந்தது. ஆய்வு பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட மிக முக்கிய சூழலியல் பிரச்சினையாக இதனை அடையாளம் காண முடிந்தது. காரணம் ஆரம்பத்தில் அப்பகுதியில் காணப்பட்ட இயற்கை அழகு சீர்குழைந்ததோடு மட்டுமன்றி அப்பிரதேசத்தினுடைய முழுமையான நிலத்தோற்றமும் செயற்கையாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. எனவே அது மிக முக்கிய பிரச்சினையாக பார்க்கப்பட வேண்டிய

ஒன்றாக அமைந்தது. மலைகளைத் தகர்த்ததன் மூலமாக அங்கு காணப்பட்ட முழுமையான உயிர்வாழ் அங்கிகளும் வாழிடங்களை இழந்தது மட்டுமன்றி உயிரிழப்புகளுக்கும் உள்ளாகியிருக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. எனவே ஆய்வு பிரதேசத்தினுடைய மிக முக்கிய சூழலியல் பிரச்சினையாக மலைகளை தகர்க்கும் செயற்பாடுகள் அவதானிக்கப்பட்டன.

படம்: மலையை தகர்த்து உருவான விடுதி



மூலம்: ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது, 2022

1.5.6 இயற்கையான நீர் வழிகளை மறித்தல்

இயற்கையான நீர்வழியினை தடைசெய்வது என்பது மற்றுமொரு சூழல் சார்ந்த பிரச்சினையாகவே என்னால் அடையாளம் காணப்பட்டன. குறிப்பாக ஆய்வு பிரதேசத்தில் காணப்படக்கூடிய மகாவலி ஆற்றினை இடைமறித்து தியகலையினை அண்டிய பகுதிகளில் தொடர்ந்து மின் உற்பத்தி செய்யப்படும் நிலைமைகளானது உருவாக்கம் பெற்று வரக்கூடியதாக அமைகின்றது. குறிப்பாக 02 மின் உற்பத்தி நிலையங்கள் தற்போது அப்பகுதிகளில் உருவாக்கப்பட்டு அதனை அடிய பகுதிகளுக்கு மின் விநியோகம் இடம்பெறுவதனை அவதானிக்க முடியும். அதன் அடிப்படையில் இயற்கையாக செல்லும் நீர் வழியினை மறித்து அதில் மின்உற்பத்தி செயற்பாடுகளினை மேற்கொள்வதன் காரணமாக குறிப்பிட்ட ஆற்றின் இயற்கையான போக்கானது மாற்றியமைக்கப்படுகின்றது. எனவே இதுவும் ஒரு மிக முக்கிய சூழலியல் பிரச்சினையாக பார்க்கப்படுகின்றது.

படம்: இயற்கையான நீர் வழிகளை மறித்தல்

மூலம்: ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது, 2022

1.5.7 சனத்தொகை அதிகரித்தல்

பொதுவாக சனத்தொகை அதிகரிப்பானது மிகப்பெரிய சூழலியல் பிரச்சினையாக பார்க்கப்படுகின்றது. குறிப்பாக கினிகத்தேனை பிரதேசத்தினுடைய வடக்கு, தெற்கு மற்றும் மத்திய பகுதிகளில் சனத்தொகை அதிரகித்து காணப்படுகின்றது. வடக்கு தொடக்கம் மத்திய பகுதி வரையிலும் சனத்தொகை அதிகரித்துள்ளமைக்கு கினிகத்தேனை நகரினுடைய அமைவிடமும் A7 வீதியும் மிக முக்கியமான காரணமாக விளங்குகின்றது எனலாம். எனவே சனத்தொகை அதிகரிப்பினால் வள நுகர்வு அதிகரித்தல் மற்றும் குடியிருப்பு தேவைகளினை பூர்த்தி செய்யும் பொருட்டு ஆய்வு பிரதேசத்திலுள்ள காட்டு வளங்கள் அழிக்கப்படல் என அது பாரிய பிரச்சினையாக மாற்றம் பெற்றுள்ளது. 2006 ஆம் ஆண்டு சனத்தொகையானது 12.34 ஹெக்டேயர் பரப்பிலே இருந்துள்ளது.ஆனால் 2022 ஆகும் போது அது 92.506 ஹெக்டேயராக மாற்றம் பெறுவது பாரியதொரு சவாலாக மாறியுள்ளது.

1.5.8 வெடிவைத்தல் பொறிமுறைகள்

இதுவும் மிக முக்கிய சூழலியல் பிரச்சினையாகவே பார்க்கப்படுகின்றது. குறிப்பாக ஆய்வு பிரதேசத்தில் காணப்படக்கூடிய பாறிய கற்கள் பாதைகளில் வீழுகின்ற ஒரு தன்மை காணப்படுகின்றது. குறிப்பாக ஆய்வு பிரதேசத்தின் கடவளையினை அண்டி காணப்படக்கூடிய பகுதிகளில் பாரியளவிலான பாறை வீழ்வுகள் இடம்பெறும் எனவே அவற்றினை தகர்த்துவதற்காக வீமி அபிவிருத்தி அதிகார சபையினரால் வெடிவைத்து தகர்த்தும் பொறிமுறை கடைபிடிக்கப்படுகின்றது. எனவே அது சூழலுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக அமையும். அதிக புகை வெளியீடுகளும், பாரிய சத்தங்களையும் கொண்டு காணப்படுவதன் காரணமாக அதனை பாரியதொரு சூழல் பிரச்சினையாக எம்மால் கருத முடியும்.

கினிகத்தேனை பிரதேசத்தினுடைய நிலப்பயன்பாட்டு மாற்றம்,



மூலம் :ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது, 2022

எனவே ஆய்வு பிரதேசத்தினை பொருத்தவரையில் மிக முக்கியமான பல சூழலியல் சார்ந்த பிரச்சினைகள் அவதானிக்கப்பட்டன. அவை முழுமையாகவோ பகுதியாகவோ சூழலுக்கு அச்சுறுத்தல் தரும் வகையிலான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியனவாக அமைகின்றன எனலாம்.

கினிகத்தேனை பிரதேச செயலகத்தினுடைய நிலப்பயன்பாட்டு மாற்றத்தினை 2006 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளோடு ஒப்பிடுகையில் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளமையினை அவதானிக்க முடிகின்றது.

நிலப்பயன்பாடு	2006 (ஹெக்டேயர்)	2022 (ஹெக்டேயர்)	மாற்றம் (ஹெக்டேயர்)
பைனஸ் மரங்கள்	262.12	395.24	+ 133.12
காடு	259.98	115.74	- 144.24
குடியிருப்புக்கள்	12.34	92.50	+ 80.16
தேயிலை	209.35	140.31	- 69.04

மூலம்: ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது, 2022

மேற்படி தரவினை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது 2006 இலிருந்து 2022 வரையான காலப்பகுதிக்குள் ஏற்பட்ட மாற்றங்களினடிப்படையில் பைனஸ் மரங்களின் தொகை அதிகரித்திருப்பது சூழலுக்கு மினப்பெரிய தீங்காக அமையும் அதே வேளை காடு குறைவடைந்திருப்பதும் காடழிப்பு இடம்பெறுவதனையே சுட்டுகின்றது. அத்தோடு குடியிருப்புக்கள் 12.34 ஹெக்டேயர் நிலப்பரப்பில் இருந்து இந்த ஆண்டு 14.31 கெ்டேயராக உயர்வடைந்துள்ளமையானது சனத்தொகை அதிகரிப்பமை சுட்டுகின்றது. அத்தோடு தேயிலை நிலமும் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. எனவே இம் மாற்றம் சூழலியல் பாதிப்புக்களை மேலும் தூண்டுவனவாகவே அவதானிக்கப்படுகின்றன.

1.6 ஆய்வு பிரதேசத்தில் அவதானிக்கப்பட்ட சூழலியல் பிரச்சினைகளுக்கான முகாமைத்துவ செயற்பாடுகள்.

ஆய்வு பிரதேசத்தினை பொறுத்தமட்டில் அதிகளவிலான சூழலியல் பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளமையினால் அவற்றினை முறையாக முகாமைத்துவம் செய்யம் வகையில் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சூழலியல் ரீதியாக ஏற்படக்கூடிய பிரச்சினைகளினை குறைத்துக்கொள்வதற்கும் அவற்றினை முகாமைத்துவம் செய்வதற்கும் என பல மூலோபாயங்களையும், பல திட்டங்களையும் முன்னெடுத்துள்ளனர். அதாவது குறிப்பாக ஆய்வுபிரதேசத்தில் சூழலையும், மக்களையம் பாதுகாப்பதற்கான திட்டங்களாக சிலவற்றினை முன்வைத்துள்ளனர். குறிப்பாக நிலச்சரிவினை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் அதே போல, காட்டு வளங்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள், சூழல் மாசாக்கத்தினை குறைப்பதற்கான நடவடிக்கைகள் என பல செயற்பாடுகளினை முன்னெடுத்துள்ளனர். அவையாவன.

1.6.1 நிலச்சரிவினை தடுப்பதற்கான முகாமைத்துவ முறைகள்

ஆய்வு பிரதேசத்தில் நிலச்சரிவினை தடுக்கும் முகமாக அடிக்கடி நிலச்சரிவு ஏற்படக்கூடிய இடங்களை முறையாக அடையாளம் கண்டு அவற்றினை கட்டுப்படுத்தும் நோக்கில் கல்வேலிகளை அமைத்துள்ளனர். குறிப்பாக தியகலை தொடக்கம் கடவளைக்கு உட்பட்ட பகுதிகளில் பாரிய அளவிலான கல்வேலி அமைப்புக்களினை எம்மால் அவதானிக்கக் கூடியதாக அமைந்துள்ளது. ஆரம்பத்தில் கடவளை பாடசாலையினை அண்மித்த பகுதியில் பாரிய இரும்பு ஆணிகளை கொண்டு தடுப்பு சுவர் அமைக்கப்பட்டிருந்தாலும் மீண்டும் அப்பகுதி நிலச்சரிவுக்கு உட்பட்டமையினை அவதானிக்க முடிந்தது. எனவே அது மீண்டும் நிகழாத

வண்ணம் தற்போது கினிகத்தேனை கிராமசேவகர் பகுதிகளில் நிலச்சரிவு தடுப்பு சுவர்களாக கல்வேலிகள் அமைக்கப்பட்டுள்ளமையினை அவதானிக்கக் கூடியதாக அமையும். இது தற்போது அப்பகுதிகளில் பாரிய நிலச்சரிவு அனர்த்தங்கள் ஏற்படுவதனை தடுப்பதாக உள்ளது.

சேறு வழிதலுக்கு உட்படக்கூடிய பகுதிகளில் இருந்து வரக்கூடிய நீரினை சேமித்து வடிகட்டல் முறைக்கு உட்படுத்தி அதனை ஏனைய பிரதேசங்களிலிருந்து வரக்கூடிய அல்லது கினிகத்தேனை பிரதேசத்தினை கடந்து செல்லக்கூடிய வாகனங்களினை சுத்திகரிப்பதற்கான பொறிமுறையினை உருவாக்கியுள்ளனர். அதற்கூடாக சேறுவழிதலுக்கு உட்படக்கூடிய இப்பகுதியிலிருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு குறைக்கப்பட்டு நிலச்சரிவு ஏற்படும் வீதம் குறைக்கப்படுவதாக அமைந்துள்ளது. இப்பொறிமுறையானது ஆய்வு பிரதேசத்தில் தொடர்ந்து சேறுவழிதலுக்கு உட்படுத்துவதனை கட்டுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

பொதுவாக கினிகத்தேனை பகுதியில் பாதைகளில் பரவல் வகையிலான நிலச்சரிவுகளினை அவதானிக்க முடியும். எனவே அச்சந்தர்ப்பங்களில் அந்த பாதைகளை பயன்படுத்தி போக்குவரத்து செய்ய இயலாத நிலைமைகள் உருவாகும் எனவே அவற்றினை தடுத்து போக்குவரத்தினை துரிதப்படுத்தும் முகமாக கினிகத்தேனை பேருந்து தரிப்பிடத்திலிருந்து 1KM வரையிலான மாற்றுப் பாதைகள் செய்து வழங்கும் தன்மையினை அவதானிக்க முடியும்.

1.6.2 மண்ணரிப்பினை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கினிகத்தேனை பிரதேசத்தினை பொறுத்தவரையில் குறிப்பாக பைனஸ் மரங்களின் இலைச் சருகுகுள் மண்ணரிப்பினை தூண்டும் ஒரு வகை தாவரப்போர்வையாக இனங்காணப்பட்டுள்ளதை அடுத்து அவற்றின் பரவலை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஹட்டன் வனவள திணைக்களம் தற்போது மேற்கொண்டு வருகின்றது. எனவே, அதிகளவில் நிலச்சரிவுக்கு உட்படக்கூடிய பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு அங்கு பரம்பி காணப்படக்கூடிய பைனஸ்

மரங்களை அழிப்பதற்கான நடவடிக்கைகளினை மேற்கொண்டு வருகின்றனர். தற்போது மண்ணரிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளை அடையாளப்படுத்தி அங்கு காணப்படக்கூடிய பைனஸ் காடுகளை அழித்து வருகின்றனர். எனவே இது மண்ணரிப்பு ஏற்படுவதனை தடுப்பதற்கான மிக முக்கியமான ஒரு தீர்வாக அமைகின்றது எனலாம்.

இனிவரும் காலங்களிலும் கினிகத்தேனை பகுதியில் தொடர்ச்சியான அபிவிருத்தி செயற்பாடுகள் இடம்பெறவே செய்யும் எனவே அதற்கேற்றாற் போல சூழல் மாசடைவென்பதும் தடுக்க முடியாத ஒன்றாகவே காணப்படும். எனவே சூழலியல் ரீதியிலான பாதிப்புக்களை தடுப்பதற்று நாம் மேற்கொள்ள வேண்டிய சில நடவடிக்கைகளாவன.

1.6.3 ஆற்று நீரை இடை மறிக்காது அதனை இயல்பான போக்கில் செல்ல அனுமதித்தல்

அதன் அடிப்படையில் நோக்குகின்ற போது இயற்கையாக செல்லக்கூடிய ஆற்று நீரை இடை மறிக்காது அதனை இயல்பான போக்கில் செல்ல அனுமதிக்க வேண்டும். கினிகத்தேனையிலுள்ள தியகலை பகுதியில் மகாவலி கங்கையினை இடைமறித்து மின்உற்பத்தி மேற்கொள்வதனை தவிர்த்து அருகில் உள்ள லக்'பான நீர்த்தேக்கத்தின மூலம் மின்உற்பத்தி அளவை கூட்டி அப்பிரதேசங்களுக்கும் மின்சாரத்தினை வழங்க முயற்சித்தல்.

1.6.4 வெடிவைத்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல் தொடர்பான பரிந்துரைகள்

பாறைவீழ்ச்சி இடம்பெறக்கூடிய பகுதிகளிலேயே வெடிவைத்து அப்பாறைகளினை தகர்த்துவதற்கு பதிலாக பார ஊர்திகளை பயன்படுத்தி அதனை முறையாக அகற்றிவிடுவதன் மூலம் பிரதேசத்தில் மீண்டும் ஏற்படுத்தப்படும் அதிர்வு செயற்பாடுகளினைக் கட்டுப்படுத்த முடியும். குறிப்பாக தற்போது எவ்வித சத்தமும் இன்றி இரசாயணங்களை கையாண்டு வெடிவைக்கும் உத்தி முறைகள் காணப்படுவதனால் அத்தகைய முறைகளை பின்பற்றுவதன் மூலம் கினிகத்தேனை பகுதியில் ஏற்படக்கூடிய சூழலியல் பாதிப்புக்களைக் குறைக்க முடியும்.

1.6.5 காடழிப்பினை தடுப்பதற்கான பரிந்துரைகள்

காடழிப்பு இடம்பெற்ற பகுதிகளில் மீள்காடாக்க செயற்பாடுகளினை வலியுறுத்துவதோடு சமூக காடாக்கம் (Social Forestry), சமுதாய காடாக்கம் (Community Forestry) போன்ற காடாகக் செயற்பாடுகளை ஏற்படுத்துவதன் மூலமாக தாவரப்போர்வை உருவாகும் வீதத்தினை அதிகரிக்க முடியும். அது மட்டுமன்றி காடழிப்பினை கட்டுப்படுத்த முடியும்.

1.7 முடிவுரை

கினிகத்தேனை கிராமசேவகர் பிரிவு பகுதியில் அதிகமாக சூழலிலயல் பாதிப்புக்கள் ஏற்பட்ட வருவதன் காரணமாக அப்பிரச்சினை தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது. ஆய்வுக்கென அளவு சார் மற்றும் பண்பு சார் தரவகள் திரட்டப்பட்டு கலப்புமுறையான ஆய்வாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் குறிப்பாக ஆய்வு பிரதேசத்தில் பல பௌதிக காரணிகளின் காரணமாக ஏற்படக்கூடிய சூழலியல் பிரச்சினைகள் தொடர்பிலும், மானிட காரணிகளினால் ஏற்படக்கூடிய சூழலியல் பிரச்சினைகள் தொடர்பிலும் எடுத்து விளக்கப்பட்டுள்ளன. குறிப்பாக சூழலை முழுமையாக மாற்றியமைக்கும் அல்லது

பிரச்சினைகளை ஏற்படுத்தும் ஒன்றாக பௌதிக காரணிகள் விளங்குகின்றன. மானிட காரணிகள் சார்ந்த சூழலியல் பிரச்சினைகளை சூழலில் அதிகமாக அவதானிக்க முடிந்தது. எனவே முறையான பரிந்துரைகளினை முன்வைப்பதன் மூலமாக இத்தகைய சூழலியல் பிரச்சினைகளை கட்டுப்படுத்த முடியும்.

References

1. Anilkumar (2018) *Brief Introduction Of Environment, Ecology And Environmental Pollution* (September 2022).
2. Athanasios Valavanidis (2019) *Current Environmental Issues and Emerging Global Challenges in the 21st Century for Environmental Protection and Sustainable Development* (September 2022).
3. Bakshiet al. (2013). *India and Sustainable Development Goals (SDGs). Policy brief, November 2013. Energy and Resources Institute, New Delhi* (September 2022).
4. Bandara Rajapakse, *Environmental Reporting Practices: Evidence from Sri Lanka* (September 2022).
5. Brown, B.J et al. (1987). *Global sustainability: toward definition. Environmental Management*, (September 2022).
6. DANILO (2019) *Environmental Awareness and Practices of Science Students: Input for Ecological Management Plan* (September 2022).
7. Hiren Mandalia (2011) *Impact of Environmental Pollution on Human Future* (September 2022).
8. Khalil et al (2011) *Sustainable Environment: Issues and Solutions from the Perspective of Facility Managers* (September 2022).
9. Patrick Pigeon, Julien Rebotier,(2016) Bridging the Gap between Disaster Prevention and Environmental Concerns (September 2022).
10. Pradip Kumar Maurya et al, (2021) An introduction to environmental degradation: Causes, consequence and mitigation (September 2022).
11. Ranvijay Pratap Singh (2020) *Environment & Ecology* (September 2022).
12. Rich Seymour (2008) *Understanding the Global Warming Discussion: Climate Change as a Context for Developing Standards-Based Research Skills in Secondary School Students* (September 2022).
13. Riley. E at al (2017) *Environmental Problems* (September 2022).
14. Saji George et al(2015) *Community Environment- A Study On Environmental Issues In Al Kharj* (September 2022).
15. Thomas Tomich .P et al(2004) *Policy analysis and environmental problems at different scales: asking the right questions* (September 2022).
16. Tonia Grace Ganta (2018) *Environmental Education to Mitigate Environmental Decay and Promote Sustainable Development* (September 2022).
17. Vijay Anand (2013) Global Environmental Issues (September 2022).
18. Wasantha Athukorala and Muditha Karunarathna, Environmental challenges and the sustainable development goals: A study about the emerging environmental issues in Sri Lanka(September 2022).
19. Zobaidul Kabir (2011) *Implementation of environmental mitigation measures and effective EIA practice in Bangladesh: A study of three development projects* (September 2022).

வெஞ்சர் கிராம நிலதாரி பிரிவில் காணப்படும் சூழலியல் பிரச்சினைகளும் அவற்றை இழிவளவாக்குவதற்கான வழிமுறைகளும்

தேவசகாயம் என்டன் சகாயராணி
புவியியல் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
dhevasagayamantonsagayarani@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

அம்பகமுவ பிரதேச செயலகப்பிரிவிற்குற்பட்ட வெஞ்சர் கிராம நிலதாரி பிரிவானது பசுமையான சூழலை கொண்டுள்ளதுடன் அவை சார்ந்த பிரச்சினைகளும் காணப்படுகின்றன. இங்கு சூழல்சார் பிரச்சினைகளை தோற்றுவிப்பதில் பல்வேறுப்பட்ட இயற்கை மற்றும் மானிடக் காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. சூழலின் வனப்பு அற்றுப்போதல், தாவரபோர்வை அழிவடைதல், சூழலில் வெறுக்கத்தக்க மணம் வீசுதல் போன்ற பல போன்ற ஆய்வுப்பிரச்சினைகளை மையமாக இவ்வாய்வு அமையபெற்றுள்ளது. வெஞ்சர் கிராம நிலதாரி பிரிவில் காணப்படும் சூழலியல் பிரச்சினைகளையும் அவற்றை இழிவளவாக்குவதற்கான வழிமுறைகளை அடையாளம் காணல் ஆய்வின் பிரதான நோக்கமாக காணப்படுகிறது. மேலும் வெஞ்சர் கிராம நிலதாரி பிரிவில் சூழலியல் பிரச்சினைகளுக்கு பொறுப்பான இயற்கை காரணிகளை கண்டறிதல் மற்றும் வெஞ்சர் கிராம நிலதாரி பிரிவில் சூழலியல் பிரச்சினைகளுக்கு பொறுப்பான மானிட காரணிகளை கண்டறிதல் ஆகிய உப நோக்கங்களையும் இவ்வாய்வானது கொண்டமைந்துள்ளது. மேலும் குறித்த ஆய்வில் பண்பு ரீதியான, அளவு ரீதியிலான இரு ஆய்வு முறையியல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுக்கு தேவையான தரவுகள் முதலாம் நிலைத்தரவு என்ற ரீதியில் நேரடி அவதானிப்பு, கள ஆய்வு, கலந்துரையாடல் மற்றும் வினாக்கொத்து என்ற அடிப்படையிலும், இரண்டாம் நிலை மூலங்களில் இருந்தும் பெறப்பட்ட தரவுகள் ஆய்வுக்காக பெறப்பட்டு விபரண மற்றும் பண்பு ரீதியான பகுப்பாய்வு முறைகள் மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் பெறுபேற்றின் படி வெஞ்ர்சர் கிராம நிலதாரி பிரிவில் நீரின் அளவு மற்றும் தரம் குறைவடைதல், மண் தரமிழத்தல், தாவர போர்வை அழிவடைதல், நிலத்தோற்றம் மாற்றமடைதல் போன்ற சூழலியல் பிரச்சினைகள் காணப்படுவது கண்டறியப்பட்டது. மேலும் இதனை தூண்டும் காரணிகளாக அபிவிருத்தி நடவடிக்கைகள், இரத்தினக்கல் மற்றும் மணல் அகழ்வு செயற்பாடு, முறையற்ற கழிவகற்றல் முறைகள், வெள்ளப்பெருக்கு மற்றும் காட்டுத்தீ, விவசாய நடவடிக்கைகள் மற்றும் நீர்மின் உற்பத்தி என்பன காணப்படுகின்றமையும் கண்டறியப்பட்டு சூழல் மாசடைவை இழிவளவாக்குவதற்கான வழிமுறைகளும் முன்வைக்கப்பட்டுள்ளது.

திறவுச் சொற்கள்: வெஞ்சர் கிராம நிலதாரி பிரிவு, சூழல், மாசடைவு, மண் தரமிழப்பு, தாவரப்போர்வை

அறிமுகம்

சூழல் என்ற பதமானது "Surrounding" என்ற பிரெஞ்சு மொழியிலிருந்து பெறப்பட்டதாகும். அதாவது சூழவுள்ளது, சுற்றி வளைத்தல் அல்லது சூழ்ந்துகொள் என இது பல பொருள் பெறும். (Praveen Kumar, 2020). சூழலானது நீர், காற்று, மண், தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளதுடன் (Zakaria Aissa Assia, 2019) ஒரு உயிரியை சுற்றியுள்ள அல்லது அதனில் தாக்கம் செலுத்தும் அனைத்தையும் உள்ளடக்கியதொரு எனலாம். மேலும் இது பௌதீக மற்றும் உயிரியல் ஆகிய இரண்டினதும் கூட்டாக காணப்படுவதுடன் உயிருள்ள மற்றும் உயிரற்ற கூறுகளை உள்ளடக்கியது (Enerijiofi, 2018). உயிருள்ள கூறுகள் எனும் போது அனைத்து உயிரினங்களையும் அவற்றின் உற்பத்திகளையும் உள்ளடக்கியிருக்கும். அதாவது விலங்குகள், தாவரங்கள், பக்டீரியாக்கள், பூஞ்சைகள் மற்றும் இலைகள் அல்லது கிளைகள் போன்ற அவற்றின் கழிவுப் பொருட்கள் ஆகிய அனைத்தும் இதில் உள்ளடங்கும் (Balasubramanian, 2008). உயிரற்ற கூறுகள் எனும் போது இது பிரதானமாக காலநிலை மற்றும் பௌதீகம் சார்ந்த கூறுகள் (காற்று, நீர், மண் சூரிய ஒளி மழைவீழ்ச்சி, வெப்பநிலை, ஈரப்பதம், மண் அமைப்பு மற்றும் புவியியல் நிலைமைகள்.), கனிம பொருட்கள் சார் கூறுகள் (கார்பன், நைட்ரஜன், கந்தகம்) மற்றும் சேதன கூறுகள் (புரதங்கள், கார்போஹைட்ரேட்டுகள், லிப்பிடுகள், ஹ்யூமிக் பொருட்கள்) ஆகிய மூன்றும் உள்ளடக்கப்படும். உயிருள்ள கூறுகள் உயிரற்ற கூறுகளுடன் இடைத்தாக்கம் புரிவதுடன் குறித்தப்பகுதியில் உயிருள்ள கூறுகளின் இருப்பையும் தீர்மானிக்கின்றன (Balasubramanian, 2017).

சூழலானது வறுமையிலுள்ள மக்களுக்கு நல்வாழ்வு மற்றும் அடிப்படை சேவைகளை வழங்குகின்றது. உதாரணமாக சுவாசிக்கும் காற்று, உண்ணும் உணவு மற்றும் நீர் என்பவற்றுடன் விவசாயம், மீன்பிடி, வனவியல் மற்றும் சுற்றுலா போன்றவற்றில் வருவாயை பெற்றுக்கொள்ள வழிவகுக்கிறது (Livia Bizikova, 2011). இவ்வாறான சூழலில் சனத்தொகை அதிகரிப்பானது அபிவிருத்திக்கான தேவையை தூண்டியுள்ளதுடன் இயற்கை வளங்களின் நுகர்வையும் அதிகரித்ததுள்ளது. இதன் விளைவாக உலகளாவிய சூழல்சார் பிரச்சினைகள் உருவாகியுள்ளது (Sinisa Franjic, 2018).

புவி சூழலில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அதன் தரம் மற்றும் அளவில் மாற்றமேற்படும் போது சூழல் பிரச்சினைகள் ஏற்படுகிறது. ‘‘சூழல்சார் பிரச்சினை என்பது புவிக்கோளுடன் தொடர்புடைய பிரச்சினைகள் (காற்று, நீர், மண் போன்றவை) என வரையறுக்கப்படுகின்றன. அவை மானிட நடவடிக்கை காரணமாகவோ அல்லது பௌதீக காரணிகளின் அடிப்படையிலோ ஏற்படலாம்” (Hemlata Pant,2020). இயற்கை அல்லது பௌதீக காரணிகள் எனும் போது காட்டுத் தீ, எரிமலை வெடிப்புகள், காற்று அரிப்பு (மண் மற்றும் பாறைத் துகள்களின் பரவல்), மகரந்தத்தின் பரவல், சேதன பொருட்களின் ஆவியாதல் மற்றும் ஞாயிற்று கதிர்வீச்சு ஆகியவை அடங்கும். மானிட காரணிகள் என்பதனுள் விரைவான நகரமயமாக்கல் மற்றும் தொழில்மயமாக்கல் என்பனவற்றை குறிப்பிட முடியும். இதனால், இயற்கை தாவரங்கள் மற்றும் பல உரினங்களின் அழிவு, இயற்கை வளங்கள் மீதான அதிகரித்த நுகர்வு, ஓசோன் சிதைவு, காடழிப்பு, பாலைவனமாக்கல், நிலச் சீரழிவு போன்ற விளைவுகள் ஏற்படுகின்றன. (Matthew et al, 2020). சூழலியல் பிரச்சினைகள் உள்ளூர் **(மாசடைவு, கழிவுகளை அகற்றுதல், பாலைவனமாக்கல், நீர் பற்றாக்குறை, அருகி வரும் உயிரினங்கள்)** , பிராந்திய மற்றும் உலகளாவிய அடிப்படை (**பூகோள வெப்பமடைதல், கடல் அமிலமயமாக்கல், மாசடைவு, அமில மழை, ஓசோன் சிதைவு**) ஆகிய மூன்று நிலைகளில் ஏற்படுகிறது (Hemlata Pant,2020).

மேலும் உலகில் ஏறக்குறைய 3000 விலங்குகளும் 24000 தாவர இனங்களும் ஆபத்தான நிலையில் உள்ளதுடன், அச்சுறுத்தலுக்கு உள்ளாகிவரும் 3500 முள்ளந்தண்டுள்ள இனங்களும், 2000 முள்ளந்தண்டில்லாத இனங்களும் 5700 தாவர இனங்களும் உலகப் பேணிப்பாதுகாத்தல் ஒன்றியத்தினால் சிவப்புபட்டியலில் சேர்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க விடயமாகும் (அன்றனி நோர்பட், 2014). FAO தலைமையிலான Global Soil Partnership அறிக்கையின்படி, உலகம் முழுவதும் உள்ள விளை நிலங்களில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் 75 பில்லியன் டன்கள் (Pg) மண் அரிக்கப்படுகிறது (Pasquale Borrelli, 2017). புவியின் மொத்த நிலப்பரப்பில் 75% ஏற்கனவே சீரழிந்துள்ளது, மேலும் 90% 2050 க்குள் சீரழிந்து போகலாம். உலகளவில், ஐரோப்பிய ஒன்றியத்தின் மொத்த பரப்பளவில் 4.18 மில்லியன் கிமீ^{2} ஆண்டுதோறும் சீரழிகிறது (relifeweb, 2018) . இவ்வாறாக சுமார் 100 நாடுகளில் 1 பில்லியனுக்கும் அதிகமான மக்கள் பாலைவனமாதலுடைய விளைவுகளுடன் தொடர்பிலான பிரச்சினைகளை எதிர்கொள்ளகின்றனர் எதிர்கொள்கின்றனர் (Rachele Rossi,2020). இவ்வாறு உலகலாவிய ரீதியில் சூழல்சார் காணப்படுகிறது.

இலங்கையிலும் நில சீரழிவு, கழிவுகளை அகற்றல் தொடர்பான பிரச்சினை, நீர்மாசடைதல், உயிரின பல்வகைமை இழப்பு, கரையோர வளம் குறைதல் போன்ற சூழல்சார் பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளன. இலங்கையில் 480 வகையான பூக்கும் தாவர இனங்களில் 90 வகையான இனங்கள் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளன. முள்ளந்தண்டுள்ள விலங்குகளில் 75% உம் 50 - 100% முதுகெலும்பில்லாத விலங்கினங்களும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றன. மேலும் மேல் மாகாணத்தில் தினசரி சேகரிக்கப்படும் கழிவுகள் சுமார் 2500 ton ஆக காணப்படுகிறது. (Environment Report, 2001). இவ்வாறாக இலங்கையிலும் சூழல்சார் பிரச்சினைகள் காணப்படுவதுடன் அது சூழலுக்கும் மனிதர்களுக்கும் சமூக, பொருளாதார ரீதியாக பாதிப்பை ஏற்படுத்துவதாக காணப்படுவதால் அவற்றை முகாமைத்துவம் செய்வது அவசியமாகிறது.

ஆய்வுப் பிரச்சினை

- வெஞ்சர் கிராம நிலதாரி பிரிவானது பல்வேறு வகையான சூழலியல் சார் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது இதற்கு பல்வேறு வகையான மானிட மற்றும் இயற்கை காரணிகள் காரணமாய் அமைகின்றன. இத்தகைய சூழலின் வனப்பு அற்றுப்போதல், தாவரபோர்வை அழிவடைதல், சூழலில் வெறுக்கத்தக்க மணம் வீசுதல் போன்ற பல போன்ற ஆய்வுப்பிரச்சினைகளை மையமாக கொண்டு இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளது.

பிரதான நோக்கம்

- வெஞ்சர் கிராம நிலதாரி பிரிவில் காணப்படும் சூழலியல் பிரச்சினைகளையும் அவற்றை இழிவளவாக்குவதற்கான வழிமுறைகளை அடையாளம் காணல்

உப நோக்கங்கள்

- வெஞ்சர் கிராம நிலதாரி பிரிவில் சூழலியல் பிரச்சினைகளுக்கு பொறுப்பான இயற்கை காரணிகளை கண்டறிதல்
- வெஞ்சர் கிராம நிலதாரி பிரிவில் சூழலியல் பிரச்சினைகளுக்கு பொறுப்பான மானிட காரணிகளை கண்டறிதல்

ஆய்வு வினா

- வெஞ்சர் கிராம நிலதாரி பிரிவில் காணப்படும் சூழலியல் பிரச்சினைகள் யாவை?
- வெஞ்சர் கிராம நிலதாரி பிரிவில் சூழலியல் பிரச்சினைகளுக்கு பொறுப்பான இயற்கை மற்றும் மானிட காரணிகள் யாவை?
- வெஞ்சர் கிராம நிலதாரி பிரிவில் காணப்படும் சூழலியல் பிரச்சினைகளை இழிவளவாக்குவதற்கான வழிமுறைகள் யாவை?

ஆய்வுப் பிரதேசம்



மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள அம்பகமுவ பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வெஞ்சர் கிராம நிலதாரி பிரிவு ஆய்வுப் பிரதேசமாக காணப்படுகிறது. இதன் மொத்த பரப்பளவு 1040.97 ஹெக்டயர்கள் ஆகும். இதன் மொத்த சனத்தொகை இங்கு 6757 காணப்படுவதுடன் 3394 பெண்களும் 3363 ஆண்களளும் காணப்படுகிறனர். (அம்கமுவ பிரதேச செயலக அறிக்கை, 2020). இது இலங்கையின் ஈரவலயத்தினுள் உட்படும் பிரதேசம் ஆகும். இது அதிகமாக தென்மேல் பருவப்பெயர்ச்சி மற்றும் இரண்டாவது இடைப்பருவப்பெயர்ச்சிக் காற்றுக்களினால் உருவாகும் மழைவீழ்ச்சியை அனுபவிக்கும் பிரதேசமாகும் (அம்கமுவ பிரதேச செயலக அறிக்கை, 2020). இங்கு சராசரி வெப்பநிலை 22.2^0 C ஆகும். சராசரி மழைவீழ்ச்சியாக 3563mm பதிவாகிறது. வறண்ட மாதமாக பிப்ரவரி விளங்குவதுடன் 108 mm (4.3 அங்குலம்) மழை வீழ்ச்சி கிடைக்கின்றது. காற்றின் வேகம் சராசரியாக மணிக்கு 6 கிலோமீற்றர் வேகத்தில் வீசுவதுடன் ஈரப்பதனானது 70%- 90% வரை வேறுபடுகிறது. இங்கு செம்பூரான் ஈரக்களி மண்ணும் செங்கபில ஈரக்களி மண்ணும் காணப்படுகிறது. குறிப்பாக சிவப்பு –மஞ்சள் பொட்சோலிக் மண் நிலையற்ற ஏற்ற இறக்கமும் மலையும் குன்றுமான, செங்குத்தாக ஆழமாக பிரிவுப்பட்ட நிலப்பரப்பும் காணப்படுகிறது. அத்துடன் மலைப்பகுதியில் ரெகோசோல்களும் மலைப்பாங்கான நிலப்பரப்பும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும் (இலங்கை நிலவளவைத் திணைக்களம், 2013). மேலும ் உயர்நில தொகுதிக்கு உரிய கேம்கிரியனுக்கு முற்பட்ட சாணோகைற்று, சாணோகைற்று நைஸ் பாறைகளையும் குவாட்சைற்று பாறைகளையும் கொண்டுள்ளது (இலங்கை நிலவளவைத் திணைக்களம், 2013). இங்கு அயன வலயத்திற்கு உரிய மலைக்காடுகள் மற்றும் உபமலைக்காடுகள் காணப்படுகின்றன. மேலும் இங்கு தேயிலை மற்றும், தேயிலை, காய்கறிகள், புல்நிலம், வீட்டுத்தோட்டங்கள் ஆகிய விவசாய நிலங்கள் காணப்படுகின்றன.

ஆய்வு முறையியல்

ஆய்வு முறையியலை பொறுத்தவரையில் பண்பு ரீதியான மற்றும் அளவு ரீதியான முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளமையால் இது கலப்பு முறையியல் ஆய்வாக காணப்படுகிறது. வெஞ்சர் கிராம நிலதாரி பிரிவில் காணப்படும் சூழலியில் சார் பிரச்சினைகளை அடையாளம் காணும் பொருட்டு முதலாம் நிலை தரவுகளான நேரடி அவதானம் மற்றும் நேர்காணல், கலந்துரையாடல் என்பன இடம்பெற்றதுடன் இரண்டாம் நிலை தரவுகளான **இடவிளக்கவியல் படம் (1:50000), புவிச்சரிதவியல் படம், Google Earth Map, ஆய்வுக்கட்டுரைகள், இணையத்தள தரவுகள்,**

நூல்கள் மற்றும் அறிக்கைகள், இணையத்தள சஞ்கிகைள் மற்றும் பத்திரிகைகள் என்பன பயன்படுத்தப்பட்டன. இங்கு அளவு சார் மற்றும் பண்புசார் பகுப்பாய்வு முறைகள் ஆகிய இரண்டு வகையான தரவுப்பகுப்பாய்வு முறைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளது. **அளவையியற் பகுப்பாய்வு முறையானது பிரதேசத்தின் நிலப்பயன்பாடுகளை புள்ளிவிபரவியல் ரீதியாக விளக்கவும்**, சூழலியல் சார் பிரச்சினையின் தன்மை, வகை அவற்றில் செல்வாக்கு செலுத்தும் மானிட நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களை விளக்கவும் விபரணப்பகுப்பாய்வு முறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது பிரதேசத்தின் நிலப்பயன்பாடுகளை படமாக்குவதற்கு ArcGIS10.4 மென்பொருள் பயன்படுத்தப்பட்டது. புள்ளிவிபரவியல் ரீதியான விடயங்களை விளக்க Excel மென்பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது. நேரடி அவதானம் அவதானிக்கப்பட்ட விடயங்கள், கலந்துரையாடல் மூலம் பெறப்பட்ட தகவல்கள் யாவும் விபரணமுறை ஊடாக விளக்கப்பட்டுள்ளது. நேரடி அவதான செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட நாட்குறிப்பேடுகள் மற்றும் ஒளிப்பதிவு செய்யப்பட்ட புகைப்படங்கள் மூலம் அவதானிக்கப்பட்ட விடயங்கள் தர்க்க ரீதியாகவும் தரப்படுத்தல் ரீதியாகவும் இங்கு தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. மேலும் சூழலியல் பிரச்சினைகளில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செல்வாக்கு செலுத்தும் மானிட நடிவடிக்கைகள் மற்றும் இயற்கை காரணிகள் தொடர்பாக விபரிக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடலும் பெறுபேறுகளும்

சூழல்சார் பிரச்சினைகள்

- **நீரின் தரம் மற்றும் அளவு குறைவடைதல்**

வெஞ்சர் கிராமநிலதாரி பிரிவில் சூழல்சார் பிரச்சினைகளாக நீரின் தரம் மற்றும் அளவு குறைவடைதல் முக்கிய பிரச்சினையாக காணப்படுகிறது. குறித்த ஆய்வுப்பிரதேசத்துக்கு ஊடாக செல்லும் களனிகங்கையின் கிளை நதியான கெசல்கமு ஓயாவின் தரம் மற்றும் அளவு என்பன குறைவடைந்துள்ளன. நீர்வளம் மிக்க பகுதியாக காணப்படுகிறது. நீரினது நிறம், சுவை, மணம் என்பவற்றில் மாற்றம் காணப்படுகின்றமை நீர் மாசடைந்திருப்பதை உறுதிப்படுத்துகிறது. ஆய்வு பிரதேசத்தில் காணப்படும் செம்மஞ்சள் நிற நீரானது நீரில் அதிக இரும்புசத்து காணப்படுவதை குறிக்கிறது. தொழிற்சாலைகளை அண்டியப்பகுதி மற்றும் குடியிருப்பு பகுதியை அண்மித்து காணப்படும் நீர் கருப்பு நிறமாக காணப்படல் அதிக மங்கனீசு காணப்படுவதை குறிக்கிறது. இவை நீரில் அதிகளவு இரசாயன பொருட்கள் கலந்திருப்பதையும் பக்றீரியாக்கள் காணப்படுவதையும் குறிப்பதுடன் நீர் மாசடைந்திருப்பதை உறுதிப்படுத்துகிறது.

- **நிலத்தோற்றம் மாற்றமுறல்**

.மேலும் கடந்த வருடங்களை விட தற்போது சூழலியல் நிலத்தோற்றம் மாற்றமடைந்து காணப்படல் மற்றுமொரு பிரச்சினையாக காணப்படுகிறது. வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக வீதயின் இரு பகுதிகளிலும் அகலமாக்கப்பட்டு சாய்வு நிலங்களில் மண்சரிவுகள் ஏற்படுவதற்கான சாத்தியத்தையும் உண்டாக்கியுள்ளது. இது நிலத்தோற்றத்தை செயற்கையாக மாற்றமடைய செய்யும் செயற்பாடாக காணப்படுகிறது.

- **தாவரப்போர்வை குறைவடைந்துள்ளமை**

மேலும் இயற்கை தாவரப்போர்வையின் அளவு குறைவடைந்துள்ளமையும் மண் தரமிழத்தலும் சூழலில் காணப்படும் பிரச்சினைகளாக காணப்படுகின்றன. கீழ்வரும் படமானது 2011 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ஆய்வு பிரதேசத்தின் நிலப்பயன்பாட்டை எடுத்து காட்டுகிறது. இதனூடாக 2011 ஆம் ஆண்டை விட 2021 இல் தாவரப்போர்வை குறைவடைந்துள்ளமை புலனாகிறது. இதற்கு ஆய்வுப்பிரதேசத்தில் இடம்பெறும் காடழிப்பு செயன்முறை மற்றும் புதிய குடியிருப்புகளை அமைத்தல் போன்ற செயற்பாடுகள் காரணமாய் அமைகின்றன. குறிப்பாக அடர்த்தி கூடிய காடுகள் அடர்த்தி குறைந்த காடுகளாக மாற்றம் பெற்றுள்ளதை நன்கு அவதானிக்கப்படுகிறது. இது இப்பகுதியில் காணப்படும் முக்கியமான சூழலியல் பிரச்சினையாக காணப்படுகின்றன.

ஆய்வு பிரதேசத்தின் நிலப்பயன்பாடு (2011 - 2021)



மூலம் : ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது, 2022

ஆய்வுப் பிரதேசத்தின் நிலப்பயன்பாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றம்

நிலப்பயன்பாடு	2011 ஆம் ஆண்டு பரப்பளவு (ஹெக்டயர்)	2021 ஆம் ஆண்டு பரப்பளவு (ஹெக்டயர்)	மாற்றம் பரப்பளவு (ஹெக்டயர்)
தேயிலை	727.03	699.94	27.09 குறைவு

அடத்தியான காடுகள்	54.89	37.43	17.46 குறைவு
அடர்த்தி குறைந்த காடுகள்	43.59	65.29	21.7 அதிகரிப்பு
கைவிடப்பட்ட நிலம்	0.96	28.35	27.39 அதிகரிப்பு
குடியிருப்பு பகுதி	38.95	41.85	2.9 அதிகரிப்பு
ஏனைய தாவரங்கள்	58.91	51.47	7.44 குறைவு

மூலம் : ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது, 2022

இதனை அடிப்படையாக வைத்து பார்க்கும் போது தாவரப்போர்வை குறைவடைந்துள்ளமை புலனாகும்.

- **மண் தரமிழத்தல் மற்றும் வளி மாசடைதல்**

மண் தரமிழத்தல் எனும்போது காட்டுத்தீ மற்றும் மண்ணரிப்பு செயன்முறைகள் இங்கு ஏற்படுவதையும் மற்றும் சாய்வான நிலங்களில் இருந்து நீர் கழுவுநீரோட்டமாக வருவதையும் அடிப்படையாக கொண்டு மண் தரமிழந்துள்ளது என கூற முடியும். நிலப்பயன்பாட்டு படத்தில் காட்டப்பட்டுள்ளதை போன்று கைவிடப்பட்ட நிலங்களின் 2.9 ஹெக்டயர் அளவிலான அதிகரிப்புக்கு மண் தரமிழப்பும் ஒரு காரணமாக அமையும். இதனால் அப்பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளோ அல்லது குடியிருப்பு செயற்பாடுகளோ இடம்பெறமல் காணப்படுகிறது. மேலும் குறித்த ஆய்வுப்பகுதியில் காணப்படும் இரண்டு தேயிலை தொழிற்சாலைகள் காணப்படுவதால் அவற்றில் இருந்து வெளியேறும் புகை வளியை மாசடைய செய்கிறது. குறித்த தொழிற்சாலைகளுக்கு அருகில் வளியின் நிறம் கருமையானதாக காணப்படுவதுடன் கழிவுநீர் கலக்கும் இடங்களில் வெறுக்கத்தக்க மணம் வீசுதல், போன்றன வளி மாசடைந்து காணப்படுவதற்கான உதாரணமாக காணப்படுகிறது. குறித்தப்பகுதியில் ஹட்டன் பொகவந்தலாவ வீதி காணப்படுவதால் வாகனப்புகைகள் வளியை மாசடைய செய்கின்றன. குறித்த ஆய்வு பிரதேசம் தேயிலை தோட்டப்புறம் சார்ந்ததாகையால் மக்கள் எரிபொருள் தேவைகளுக்காக விறகுகளை பயன்படுத்துவதாலும் வெளியாகும் புகை வளியை மாசடைய செய்கிறது. மேலும் ஆய்வு பிரதேசத்தில் தென்மேல் பகுதயில் காணப்படும் ஏற்படும் காட்டுத்தீயினால் வளி மாசடைவு ஏற்படுகிறமையை அவதானிக்க முடியும்

சூழல்சார் பிரச்சினையில் தாக்கம் செலுத்தும் இயற்கை மற்றும் மானிட காரணிகள்

- **அபிவிருத்தி நடவடிக்கைகள்**

புதிய குடியிருப்புக்களை அமைத்தல் மற்றும் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் சூழல் மாசடைவில் முக்கிய பங்கு வகிக்கின்றன. பொகவந்தலாவை நோர்வுட் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் தற்போது இப்பகுதியில் காணப்படும் சூழல் மாசுப்பாட்டை தூண்டும் காரணியாக காணப்படுகிறது. இதனால் பயன்படுத்தப்படுப்படும் பாரவூர்திகளின் இரைச்சல் சத்தம் ஒலியை மாசடைய செய்கிறது. வீதி அபிவிருத்தி அதிகார சபையால் மேற்கொள்ளப்படும் இந்நடவடிக்கையால் வீதியின் இருபுறமும் காணப்படும் தாவரங்கள், தேயிலை நிலங்கள் அழிக்கப்பட்டுள்ளதுடன் அருகில் காணப்படும் நீர் நிலைகள் என்பனவும் மாசடைந்துள்ளது.

அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது பயன்படுத்தப்படும் சீமெந்து, மணல், கொங்றீட் கற்கள் போன்றவற்றில் இருந்து வெளிவரும் புழுதிகள் வளியை மாசடைய செய்வதில் பங்குவகிப்பதை அவதானிக்க முடிந்தது.

- **விவசாய நடவடிக்கை**

ஆய்வுப் பிரதேச பகுதியில் வாழும் மக்களின் அடிப்படைத் தொழிலாக தேயிலை தோட்டம் சார்நது தொழில் காணப்பட்டாலும் பிற வருமான மூலமாக மரக்கறிக் செய்கை காணப்படுகிறது. இதனால் மரக்கறிப்பயிர்செய்கை இங்கு பரவலாக இடம்பெறுகின்றது. அதற்கான நீர்பாசன தேவையை கெசல்கமு ஓயா மற்றும் அதன் கிளை நதிகளுடாக மக்கள் பெற்றுக்கொள்கின்றனர். அந்தவகையில் ஆற்றின் கரைகளை அண்டியப்பகுதிகளில் மக்கள் மரக்கறி பயிர்ச்செய்கையில் ஈடுப்படுவதுடன் அதற்கான நீரை கெசல்கமு ஆற்றிலிருந்துப் பெற்றுக்கொள்கிறன்றனர். சிறிய வீட்டுத்தோட்டங்கள் மட்டுமன்றி பண்ணைகளை அமைத்தும் மரக்கறி உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். இத்தகைய செயற்பாடுகளின் போது நதியில் நீரின் கனவளவு குறைய காரணமாகிறதுடன் நீரை அதிகளவு பெற்றுக்கொள்ள நதியின் ஒரு பகுதி அகலமாக்கப்பட்டு டீசல் மூலம் நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் நீர் பெறப்பட்டு மறக்கறி செய்கை இடம்பெறுகிறது. இவை தவிர சிறிய வீட்டுத்தோட்டங்கள், பண்ணை நிலங்கள் என்பவற்றுக்கு நீர் பயன்படுத்தப்படுவதுடன் விவசாய செய்கைகளின் போது பயன்படுத்தப்படும் இரசாயன வளமாக்கிகளின் பாவனை மண் தரமிழப்பிலும் நீர் மாசடைவதிலும் தாக்கம் செலுத்துகிறது.

முறையற்ற திண்ம திரவகழிவகற்றல் முறைகள்

ஆய்வுப் பிரதேசமானது தேயிலை தோட்டபுற சமூகமாக காணப்படுவதால் நகரசபை மூலமாக கழிவுகளை அகற்றுவதற்கான செயற்பாடுகள் எதுவும் இடம்பெறாமையால் மக்கள் கழிவுப்பொருட்களை தமது சூழலில் எரிகின்றனர். குறிப்பாக திறந்த வெளிகளிலும் குடியிருப்புக்கள் தவிர்ந்த ஏனையப்பகுதிகளிலும் பழுததடைந்த உணவுகள், பிளாஸ்டிக் கழிவுகள், உக்கலடையாத பொருட்கள் மருத்துவ வில்லைகள் என்பவற்றை சூழலில் கொட்டுவதால் வெறுக்கத்தக்க மணம், மண்தரமிப்பு, வெறுக்கத்தக்க சூழல் என்பன உருவாகின்றன. மற்றும் பிரதேச மக்களால் ஆற்றில் எரியப்படும் திண்மகழிவுப் பொருட்கள் மற்றும் திரவ கழிவுகள் மலசலக்கூட இணைப்புகள் வீட்டு கழிவுகள் பிரதேச குப்பைகள் என்பன ஆய்வுப்பிரதேசத்தின் நீர் நிலைகளில் திருப்பப்படுவதால் கெசல்கமு ஓயா அதிக மாசடைதலுக்கு உட்படுகிறது.

நீர்மின் உற்பத்தி நடவடிக்கை

வெஞ்சர் கிராம நிலதாரி பிரிவின் சூழல் மாசடைவதில் தாக்கம் செலுத்தும் மற்றொரு காரணியாக நீர் மின் உற்பத்தி நடவடிக்கை காணப்படுகிறது. கெசல்கமு ஓயாவை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ள Kirkoswald Mini Hydro Power Project நீர்மின் திட்டமானது 2011.12.07ஆம் திகதி முதல் இயங்கி வருவதுடன் அதன் சராசரி ஆண்டு மின் உற்பத்தி 15.2GWh ஆக காணப்படுகிறது. டியன்சின் பகுதியில் இருந்து நீர் திசைதிருப்பபடுவதால் அதற்கு அடுத்த பகுதிகளில் கெசல்கமு ஓயாவின் ஆற்றுப்படுக்கை

பாதிக்கப்பட்டுள்ளதுடன் கெசல்கமு ஓயாவின் இயக்கச்செயற்பாட்டில் பாரிய தாக்கங்கள் ஏற்படுத்துகிறது. இதனால் இயற்கை வனப்பும் பசுமையும் அற்றுப்போகிறது. அதாவது நதி நீரை மறித்து மின் உற்பத்திக்காக ஆற்றின் மொத்த நீரும் பயன்படுத்தப்படுகிறது. இதனால் குறித்த பகுதியை அடுத்து நீர் இன்றிய நிலையில் ஆற்றுப்படுக்கை காணப்படுவதை அவதானிக்க முடிந்தது. இது ஆய்வு பிரதேசத்தின் நீரின் அளவு குறைவடைவதில் தாக்கம் செலுத்தும் முக்கிய காரணியாக காணப்படுகிறது.

சட்டவிரோத இரத்தினக்கல் மற்றும் மணல் அகழ்வு

வெஞ்சர் கிராம நிலதாரி பிரிவின் சூழல்சார் மாசடைவதில் செல்வாக்கு செலுத்தும் மற்றொரு காரணி இடம் பெறும் இரத்தினக்கல் அகழ்தல் செயற்பாடாகும். இது பெரும்பாலும் கெசல்கமு ஓயாவின் கரைப்பகுதிகளில் இடம்பெறுகிறது. இதனால் ஆற்றுப்படுக்கை ஆழமாக்கப்படுவதுடன் அதன் அமைப்பும் மாற்றமடைவதுடன் நிலத்தோற்றத்திலும் மாற்றத்தை உருவாக்குகின்றன. இதனால் சூழலில் மண் கட்டமைப்பு மாற்றமுறல், இதற்கான சிறந்த உதாரணமாக அடிக்கடி கெசல்கமு ஓயாவில் இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்டு கைது செய்யப்படும் செய்திகள் வெளிவருவதை குறிப்பிட முடியும். மேலும் ஆய்வுப்பிரதேசத்தின் பிரதான நதியிலும் கிளைநதிகளிலும் நிகழும் சட்டவிரோதமான மணல் அகழ்வு செயற்பாடுகள் மண்ணரிப்பு, மண்ணின் தரமிழப்பு, நதிநீர் படுகைக்யின் மீது ஏற்படுத்தப்படும் தாக்கம் என பல்வேறு சூழல்சார் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது.

வெள்ளச்செயற்பாடுகள் மற்றும் காட்டுத்தீ

ஆய்வுப்பகுதியானது தென்மேல் பருவப்பெயர்ச்சிக்கு உட்படுவதுடன் அதிக மழைவீழ்ச்சியை பெறும் பகுதியாக உள்ளமையால் வெள்ள நிகழ்வுகள் வருடம்தோறும் இடம்பெற்று வருகிறது. இதன்போது ஆய்வுப்பகுதி சூழலானது அதிக மாசடைவிற்கு உட்படுகின்றதுடன் மண்ணரித்தல் செயற்பாட்டையும் துரிதப்படுத்தியுள்ளது. மேலும் மண்ணரிப்பின் தீவிரதன்மையை அதிகரிக்கும் செயற்பாடாக இரத்தினக்கல் அகழ்வு நடவடிக்கைகள் காணப்படுகின்றது. இதனால் இரத்தினக்கல் அகழ்விற்கு உட்படும் பகுதிகளில் அதிக மண்ணரிப்பு ஏற்படுவதை அவதானிக்க முடிகிறது. இத்தகைய அகழ்வு நடவடிக்கைகள் காரணமாக ஆழமாக தோண்டி எடுக்கப்படும் மணல் மேற்பரப்பில் கொட்டப்படுவதால் மழை காலங்களில் மண் இலவாக அரித்தலுக்கு உட்படுவதையும் அவதானிக்கமுடிந்தது. அதாவது மழைக்காலத்தின் போதும் வெள்ளக்காலத்தின் போதும் மண் அரிக்கப்பட்டுள்ளளமையை வெள்ள அனர்த்தம் நிகழ்ந்து முடிந்த பின் ஆற்றுப்படுக்கையில் மண்ணரிப்பின் போது படியவிடப்பட்ட மண் மூலம் விளங்கிகொள்ளக்கூடியதாக அமைந்தது. ஆய்வு பிரதேசத்தில் இடம்பெறும் காட்டுத்தீ செயற்பாட்டால் காடுகளை அண்டிய தேயிலை நிலம் அழிவடைதல், தாவரப்போர்வை அழிவடைதல், மேற்படைமண் வளமற்று போதல், கரும் புகை வெளியீடு, காட்டுப்பகுதயில் ஊற்றெடுக்கும் நீரோடைகள் பாதிக்ப்படல் போன்ற சூழல்சார் பிரச்சினைகள் ஏற்படுவதாக பிரதேச மக்கள் (கியூ தோட்டம்) தெரிவித்தனர்.

ஆய்வு பிரதேசத்தின் சூழல் மாசடைவு

மூலம்: கள ஆய்வு

சூழல்சார் பிரச்சினைகளை இழிவளவாக்குவதற்கான வழிமுறைகள்

ஆய்வுப்பிரதேசமானது தோட்டப்புற சமூகமாக காணப்படுவதாலும் நகர்பகுதிகளை விட தொலைவில் அமைந்திருப்பதாலும் இங்கு காணப்படும் சூழலசார் பிரச்சினைகள் தொடர்பில் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் கவனம் குறைவாக உள்ளது. என்றாலும் சட்டவிரோதமான இரத்தினக்கல் மற்றும் மணல் அகழ்வு செயற்பாடுகளை கட்டுப்படுத்தும்

நோக்கில் இடம் பெறும் செயற்பாடுகள் மறைமுகமாக சூழல்சார் பிரச்சினைகளை இழிவளவாக்கும் வழிமுறையாக காணப்படுகிறது. அதாவது சட்டவிரோதமாக அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களை கைதுசெய்தல், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுத்தல் என்பன இதனை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக காணப்படுகிறது.

நதி நீரின் அளவு குறைவடைவதை தவிர்ப்பதற்கு நதி நீரை மறிக்காது, மழைநீரை குளங்களை அமைத்தும் நீர்தாங்கிகளில் நீரை சேமித்து வைப்பதன் மூலம் அனைத்துப் பருவக்காலங்களின் போதும் மரக்கறி செய்கைக்கான நீர்பாசன தேவையை பூர்த்தி செய்வதன் ஊடாக நீரின் அளவு குறைவடைவதை தவிர்க்க முடியும் மேலும் இப்பிரதேசத்தில் பிரதேச மக்களால் வீசியெரியப்படும் குப்பைகளை முறையாக அகற்றுவதற்கு நகரசபை முன்வரவேண்டும். அத்துடன் ஏனைய பகுதிகளில் காணப்படுவதை போன்று உக்கலடைய கூடிய குப்பை, உக்கலடையாத குப்பை, கண்ணாடித்துண்டுகள் என அவற்றை வேறுப்படுத்தி கூடிய வகையில் குப்பை தொட்டிகளை குடியிருப்புக்கள் காணப்படும் பகுதிகளில் வைக்க வேண்டும்.

வீதி அபிவிருத்தி பணிகள் Covid 19 முன்னரே ஆரம்பிக்கப்பட்டாலும் நாட்டின் சூழ்நிலை கருதி இடைநிறுத்தம் செய்யப்பட்டு பின்னர் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாகவும் மிக மெதுவான வேகத்தில் இடம்பெற்று வருகிறது. இதனால் சூழலானது மிகவும் 2019 ஆம் ஆண்டு முதல் பாதிப்படைந்து வருகிறது. இத்தகைய நிலைமையை தவிர்க வீதி அபிவிருத்தி அதிகார சபை இதனை விரைவாக செயற்படுத்த நடவடிக்கை எடுப்பதுடன் சூழலை சுத்தப்படுத்தும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலும் வீதியின் ஓரங்களில் காணப்படும் சாய்வு நிலங்களில் மண்ணரிவு ஏற்படாதிருக்க கல்வேலிகளை அமைப்பது, சாய்வு நிலங்களுக்கு பொருத்தமான தாவரங்களை நடல் போன்றன வரும் காக்கும் செயன்முறையாக அமையும்.

வருடம் தோறும் வெள்ள நிலைமைகளை தவிர்ப்பதற்கு ஆற்றை அகலப்படுத்தும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதும் தற்போது அது இடைநிறுத்தப்பட்டுள்ளது. எனவே இந்த உபாயத்தை மீளவும் நடைமுறைப்படுத்தல் பொருத்தமானதாக அமையும். மேலும் இரத்தினக்கற்கள், மணல் அகழ்வு அகழப்பட்டு கைவிடப்பட்ட குழிகளை நிரப்புதல். அவ்வாறான செயன்முறையின் போது குழிகளில் நீர்தேங்குதல், துர்மணம் வீசுதல், குழிகளில் விளிம்புகளில் அல்லது அதனை அண்மித்து காணப்படும் மணல் திட்டுகள் இடிந்துவிழல் மண்ணரிப்பு ஏற்படல் என்பன தடைப்படும்.

மண் தரமிழப்பதை தவிர்ப்பதற்கு சாய்வு நிலங்களில் SALT முறை பயிர்செய்கையை மேற்கொள்ள வேண்டும். மேலும் இரசாயன வளமாக்கிகளின் பாவனையை குறைத்து கூட்டெரு போன்ற இயற்கை பசளைகளை பாவிக்க வேண்டும். தொழிற்சாலை, வாகனப்புகை, எரிபொருள் செயற்பாட்டின் போது ஏற்படுவதை தவிர்க முடியாத போதும் அதிக மரநடுகை, தாவரங்களை வளர்த்தல் போன்ற நடிவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் வளி தூய்மையடைய வாய்ப்பு கிடைக்கும்.

நீர்சூழல்சார் பிரச்சினைகளை தூண்டும் நீர்மின் திட்டம் தொடர்பான சூழல் சார் நிலைமைகளை தொடர்ச்சியாக கண்காணித்தலும் மதிப்பிடலும் வேண்டும் இதன் போது நதி நீரின் பாய்ச்சலிலும்

கொள்ளளவிலும் தாக்கம் ஏற்படாதவாறு மின் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். அதாவது மழை இன்றிய காலத்திலும் ஆற்று நீர் முழுவதையும் பயன்படுத்தாது குறிப்பிட்டளவான நீரை ஆற்றின் ஓட்டத்திற்காக திறந்து விடல் வேண்டும். அகழ்வு செயற்பாடுகளில் ஈடுபடுவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் அதனை தீவிரப்படுத்தல் என்பது அவசியமாகிறது.

முடிவுரை

வெஞ்ர்சர் கிராம நிலதாரி பிரிவில் நீரின் அளவு மற்றும் தரம் குறைவடைதல், மண் தரமிழத்தல், வளி மாசடைதல், தாவர போர்வை அழிவடைதல், நிலத்தோற்றம் மாற்றமடைதல் போன்ற சூழலியல் பிரச்சினைகள் காணப்படுவதுடன் . மேலும் இதனை தூண்டும் மானிட மற்றும் பௌதீக காரணிகளான காரணிகளாக அபிவிருத்தி நடவடிக்கைகள், இரத்தினக்கல் மற்றும் மணல் அகழ்வு செயற்பாடு, முறையற்ற கழிவகற்றல் முறைகள், வெள்ளப்பெருக்கு மற்றும் காட்டுத்தீ, விவசாய நடவடிக்கைகள் மற்றும் நீர்மின் உற்பத்தி என்பன காணப்படுகின்றன. இத்தகைய பிரச்சினைகளை குறைப்பதற்கும் அதில் தாக்கம் செலுத்தும் காரணிகளை கட்டுப்படுத்துவதற்கு சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் முறையான சூழல் சார் கண்காணிப்பு, சாய்வு நிலதொழில்நுட்ப முகாமைத்துவ பயிர்செய்கை நடவடிக்கைகளை பின்பற்றல் போன்ற மேற்கொள்ளல் வேண்டும். இத்தகைய பரிந்துரைகளை பொறுப்புடைய நிறுவனங்கள் பின்பற்றுவதன் மூலமும் பிரதேச மக்கள் சூழல் நேயத்துடன் செயற்படுவதன் மூலமும் ஆய்வுப்பிரதேசத்தில் சூழல்சார் பிரச்சினைகளை தவிர்க்க முடியும்.

References

1. Zakaria Aissa Assia & Marie-Louise Larsson (2019) *Legal Definitions of the Environment and of Environmental Damage* [Online] Available from: https://www.researchgate.net/publication/336315959_Legal_Definitions_of_the_Environment_and_of_Environmental_Damage [Accessed on: 12th September 2022].
2. United Nation Environment Programme (2001) *Sri Lanka : State of the Environment* [Online] Available from: 2001-State-of-Environment-Report-Sri-Lanka.pdf [Accessed on: 12th September 2022].
3. Rachele Rossi (2020) *Desertification and agriculture* [Online] Available from: https://www.europarl.europa.eu/RegData/etudes/BRIE/2020/646171/EPRS_BRI(2020)646171_EN.pdf [Accessed on: 12th September 2022].
4. Pasquale Borrelli, David A. Robinson, Larissa R. Fleischer, Emanuele Lugato, Cristiano Ballabio, Christine Alewell, Katrin Meusburger, Sirio Modugno, Brigitta Schütt, Vito Ferro, Vincenzo Bagarello, Kristof Van Oost, Luca Montanarella & Panos Panagos (2017) *An assessment of the global impact of 21st century land use change on soil erosion* [Online] Available from: https://www.nature.com/articles/s41467-017-02142-7 [Accessed on: 12th September 2022].
5. Sinisa Franjic (2018) ***Importance of Environment Protection on the Global Level*** [Online] Availablefrom:https://www.researchgate.net/publication/334550140_Importance_of_Environment_Protection_on_the_Global_Level [Accessed on: 12th September 2022].
6. Balasubramanian.A, (2008) *Ecosystem and its Components* [Online] Available from: https://www.researchgate.net/publication/314213426 [Accessed on: 12th September 2022].
7. Praveen Kumar (2020) *Meaning and definition of Ecology and Environment* [Online] Available from: https://www.ccsuniversity.ac.in/ccsum/Departmentnews/2020-08-20_162.pdf [Accessed on: 12th September 2022].
8. Enerijiofi K. E., (2018) *Elements of Environmental Studies* [Online] Available from: https://oer.sau.edu.ng/uploads/books/elements-of-environmental-studies.pdf [Accessed on: 12th September 2022].
9. Matthew N. O. S., Tolulop J.A., Abayomi A. M., & Sarhan M. M. (2020) *Environmental Studies: An Introduction* [Online] Available from:

https://www.researchgate.net/publication/348640513_Environmental_Studies_An_Introduction [Accessed on: 12th September 2022].

10. Hemlata Pant (2020) *ENVIRONMENTAL ISSUES : LOCAL, REGIONAL AND GLOBAL ENVIRONMENTAL ISSUES* [Online] Available from: https://www.researchgate.net/publication/345674317_ENVIRONMENTAL_ISSUES_LOCAL_REGIONAL_AND_GLOBAL_ENVIRONMENTAL_ISSUES [Accessed on: 12th September 2022].

11. Relifeweb, (2018) *World Atlas of Desertification - Rethinking land degradation and sustainable management* [Online] Available from: https://reliefweb.int/report/world/world-atlas-desertification-rethinking-land-degradation-and-sustainable-management [Accessed on: 12th September 2022].

12. அன்றனி நோர்பட், S. (2014) *உயிரினப் புவியியல்* சேமமடு பதிப்பகம், கொழும்பு

நந்தினிசேவியரின் சிறுகதைகள் : உருவம் மற்றும் உள்ளடக்கம் பற்றிய ஆய்வு

அரியநாயகம் சிவரூபினி[1], நதிரா மரியசந்தனம்[2]
[1,2]தமிழ் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
[1]asivaroopini@gmail.com, [2]nadiraeusl@yahoo.co.in

ஆய்வுச் சுருக்கம்

நந்தினிசேவியரது எழுத்துக்கள் ஈழத்து இலக்கிய உலகில் முக்கியத்துவமுடையனவாகவும், தனித்துவமிக்கனவாகவும் அமைகின்றன. அந்தவகையில் நந்தினிசேவியரின் சிறுகதைகள் : உருவம் மற்றும் உள்ளடக்கம் பற்றிய ஆய்வு என்னும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வானது ஈழத்து இலக்கிய வரலாற்றில் தனக்கென ஓர் இடத்தைப் பெற்றுள்ள நந்தினிசேவியரது சிறுகதைகளை உருவ உள்ளடக்க ரீதியாக ஆராய்தல் என்ற வகையில் அமைகிறது. ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் முக்கியமானவர் என்ற வகையில் நந்தினிசேவியரின் படைப்பாளுமையையும், அவரது சிறுகதைகளின் தனித்துவத்தையும், முக்கியத்துவத்தையும் வெளிக்கொண்டு வருவது இவ்வாய்வின் நோக்கமாகும். நந்தினிசேவியரது கிடைக்கப்பெற்ற சிறுகதைகளே ஆய்விற்காக எடுத்துக்கொள்ளப்படுகின்றன. நந்தினிசேவியர் எழுதிய சிறுகதைகள் முழுமையாகக் கிடைக்காமையானது ஆய்வுப்பிரச்சினையாக அமைகின்றதுடன் இவ்வாய்வானது விமர்சன மற்றும் விளக்கமுறை ஆய்வு அணுகுமுறை என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாய்விற்காக நந்தினிசேவியரின் சிறுகதைத்தொகுப்புகள், நந்தினிசேவியரின் தொகுப்பு நூல்கள் மற்றும் சஞ்சிகைகள், பத்திரிகைகளில் வெளிவந்த அவரது ஆக்கங்கள் முதலாம் நிலைத்தரவுகளாகவும், நந்தினிசேவியரின் உறவினர்கள் மற்றும் இலக்கிய நண்பர்களுடனான நேர்காணல்கள், சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் நந்தினிசேவியர் படைப்புகள் பற்றி ஏனையோர் எழுதிய கட்டுரைகள், இணையத்தளத்தினூடாக பெற்றுக்கொண்ட நந்தினிசேவியர் பற்றிய தகவல்கள் என்பன இரண்டாம்நிலைத்தரவுகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன. எனவே நந்தினிசேவியரின் சிறுகதைகள் பெறுகின்ற முக்கியத்துவத்தை இலக்கிய உலகிற்கு வெளிக்கொண்டு வருதல் என்ற அடிப்படையில் இவ்வாய்வானது முக்கியத்துவம் பெறுகின்றது.

திறவுச் சொற்கள்: நந்தினிசேவியர், இலக்கியப்படைப்புக்கள், படைப்பாளுமை, தனித்துவம், சிறுகதைத் தொகுப்புக்கள்

1.0. ஆய்வு அறிமுகம்

1.1. அறிமுகம்

நந்தினிசேவியரின் சிறுகதைகள் : உருவம் மற்றும் உள்ளடக்கம் பற்றிய ஆய்வு எனும் தலைப்பில் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாய்வானது ஈழத்து இலக்கிய வரலாற்றில் தனக்கென ஓர் இடத்தைப் பெற்றுள்ள நந்தினிசேவியரின் கிடைக்கப்பெற்ற சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். நந்தினிசேவியரது இயற்பெயர் தே.சேவியர் ஆகும். இவர் ஆரம்பத்தில் வ.தேவசகாயம், சகாயபுத்திரன், தாவீது கிறிஸ்ரோ ஆகிய புனைபெயர்களில் ஆக்கங்களை எழுதிவந்துள்ளார். எனினும் நந்தினிசேவியர் எனும் புனைபெயரிலேயே எழுத்துலகில் அறியப்படுகின்றார். இவர் 1966ஆம் ஆண்டு தொடக்கம் 2021 வரை எழுதிக்கொண்டிருந்தவர். நந்தினிசேவியர் எழுத்து முயற்சியில் ஐம்பத்தைந்து வருடங்கள் வரை ஈடுபட்டுள்ளார். இவர் எழுப்பத்தியிரண்டாவது வயதில் (2021.09.16) மறைந்தார்.

எனவே ஈழத்து இலக்கிய வரலாற்றில் மூத்த எழுத்தாளராகக் கருதப்படும் நந்தினிசேவியரின் சிறுகதைகளை ஆய்வுக்குட்படுத்த வேண்டியது அவசியமாகின்றது.

1.2. ஆய்வு நோக்கம்

ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் முக்கியமானவர் என்ற வகையில் நந்தினிசேவியரின் படைப்பாளுமையையும், சிறுகதைகளின் தனித்துவத்தையும், முக்கியத்துவத்தையும் வெளிக்கொண்டு வருவது இவ்வாய்வின் நோக்கமாகும்.

1.3. ஆய்வுப் பிரச்சினை

ஈழத்து இலக்கிய வரலாற்றில் நந்தினிசேவியரது சிறுகதைகள் முக்கியத்துவம் பெற்று விளங்குவதுடன், சமூகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை முறைகளையும் அவர்கள்

எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் பிரதிபலிப்பவையாக விளங்குகின்றன. எனவே இவற்றை வெளிப்படுத்த வேண்டியது அவசியமாகின்றது. ஆனால் நந்தினிசேவியர் தனது சிறுகதைகள் தொலைந்து விட்டன என்று பல இடங்களில் குறிப்பிடுகின்றார் (சிறுகதை மஞ்சரி, இதழ் - 09,10,11, 2021: 40). எனவே இவரது சிறுகதைகள் முழுமையாகக் கிடைக்காதது ஆய்வுப் பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

1.5. ஆய்வுக் கருதுகோள்

ஈழத்து இலக்கிய வரலாற்றில் நந்தினிசேவியருடைய சிறுகதைகள் தனித்துவமுடையனவாகவும், முக்கியத்துவமுடையனவாகவும் அமைகின்றன.

1.6. ஆய்வு முறையியல்

விமர்சன மற்றும் விளக்கமுறை ஆய்வு அணுகுமுறை என்பவற்றின் அடிப்படையில் இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகின்றது.

1.7. ஆய்வு வரையறை

நந்தினிசேவியரின் கிடைக்கப்பெற்ற அனைத்து சிறுகதைகளும் ஆய்விற்காக எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

1.8. ஆய்வு மூலங்கள்

இவ்வாய்விற்காக முதல்நிலைத்தரவுகள், இரண்டாம்நிலைத்தரவுகள் என்பன பயன்படுத்தப்படுகின்றன.

1.8.1. முதல்நிலைத் தரவுகள்

நந்தினிசேவியரின் சிறுகதைத்தொகுப்புகள்

- அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் (1993)
- நெல்லிமரப்பள்ளிக்கூடம் (2011)

நந்தினிசேவியரின் தொகுப்பு நூல்கள்

- நந்தினிசேவியர் படைப்புகள் (2014)
- நந்தினிசேவியர் பிடித்த சிறுகதை (2019)

இவற்றைத் தவிர சஞ்சிகைகள், பத்திரிகைகளில் வெளிவந்த நந்தினிசேவியரின் ஆக்கங்களும் முதலாம் நிலைத்தரவுகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

1.8.2. இரண்டாம்நிலைத் தரவுகள்

- நந்தினிசேவியரின் உறவினர்கள் மற்றும் இலக்கிய நண்பர்களுடனான நேர்காணல்கள்
- சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் நந்தினிசேவியரின் படைப்புகள் பற்றி ஏனையோர் எழுதிய கட்டுரைகள்
- இணையத்தளத்தினூடாக பெற்றுக்கொண்ட நந்தினிசேவியர் பற்றிய தகவல்கள்

1.9. இலக்கிய மீளாய்வு

நந்தினிசேவியரின் சிறுகதைகள் குறித்து முழுமையான ஆய்வுகள் எதுவும் இதுவரை வெளிவரவில்லை. ஆனால் அவரது சிறுகதைகள் பற்றி சில ஆய்வுக்கட்டுரைகள் எழுதப்பெற்றுள்ளன. அவையாவன:

- யோகராசா.செ., 2007ஆம் ஆண்டு "பேச்சுக்கும் எழுத்துக்கும் வித்தியாசமில்லாதவரான நந்தினிசேவியர்" என்ற தலைப்பில் மல்லிகை சஞ்சிகையில் எழுதிய கட்டுரையில் இதழ்களில் வெளிவந்த நந்தினிசேவியரது இலக்கியப்படைப்புக்கள், நந்தினிசேவியரது சிறுகதைகள் ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் பெறுகின்ற முக்கியத்துவம், அவை வெளிப்படுத்தும் அரசியல் கருத்துக்கள் என்பன வெளிப்படுத்தப்படுகின்றன.
- முல்லை வீரக்குட்டி, 2012ஆம் ஆண்டு "யதார்த்தம் பிறழாது சம்பவங்களை விபரிக்கும் ஆற்றல் உடையவர் நந்தினிசேவியர்" என்ற தலைப்பில் மகுடம் சஞ்சிகையில் எழுதிய கட்டுரை நெல்லிமரப்பள்ளிக்கூடம் என்ற சிறுகதைத்தொகுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள சிறுகதைகள் வெளிப்படுத்தும் விடயங்களை ஆராய்கின்றது.
- லலிதகோபன்.தி., "நந்தினிசேவியர் மற்றும் பலர்" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை நந்தினிசேவியரது சிறுகதைகளில் வெளிப்படுத்தப்படுகின்ற பொதுவான அம்சங்கள், அவர் தொகுத்த நந்தினிசேவியர் பிடித்த சிறுகதை என்ற நூலின் உள்ளடக்கம், அந்நூலில் சிறுகதைகள் தொகுக்கப்பட்டுள்ள முறைகள், அத்தொகுப்பு நூல் ஈழத்து இலக்கிய வரலாற்றில் முக்கியம் பெறுவதற்கான காரணங்கள் என்பவற்றை வெளிப்படுத்துகின்றது.
- ஜிப்ரி ஹாசன், 2021ஆம் ஆண்டு "நந்தினிசேவியரின் கதைகள் மானுடத்தின் கலை" என்ற தலைப்பில் நடு இதழில் எழுதிய கட்டுரை நந்தினிசேவியரது இலக்கியப்பிரவேசம், அவரது படைப்புக்களின் முக்கியத்துவம், அவரது சிறுகதைகள் வெளிப்படுத்தும் கருத்துக்கள் என்பவற்றை வெளிப்படுத்துகின்றது.
- தருமராசா அஜந்தகுமார், 2021ஆம் ஆண்டு "படைப்புகளில் ஒலிக்கும் ஒரேயொரு குரல் - நந்தினிசேவியரின் நெல்லிமரப்பள்ளிக்கூடத்தின் ஊடான பார்வை" என்ற தலைப்பில் நடு இதழில் எழுதிய கட்டுரை நெல்லிமரப்பள்ளிக்கூடம் என்ற சிறுகதைத்தொகுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள சிறுகதைகள் பற்றிய குறிப்புக்களை வெளிப்படுத்துகின்றது.

எனவே மேற்கூறப்பட்ட ஆய்வுகள் நந்தினிசேவியரின் சிறுகதைகள் பற்றிய சுருக்கமான ஆய்வுகளாக அமைகின்றன. ஆனால் நந்தினிசேவியரின் சிறுகதைகள் : உருவம் மற்றும் உள்ளடக்கம் பற்றிய ஆய்வு எனும் இவ்வாய்வானது நந்தினிசேவியரது கிடைக்கப்பெற்ற சிறுகதைகள் அனைத்தையும் அடிப்படையாகக் கொண்டு அவரது சிறுகதைகளின் பலதரப்பட்ட அம்சங்களையும் எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது.

2.0. நந்தினிசேவியரின் வாழ்வும் இலக்கியப் பிரவேசமும்

ஈழத்து இலக்கிய வரலாற்றில் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினைகளை பேசுபொருளாகக் கொண்டு இலக்கியப் படைப்புகளை எழுதிவந்தவர்களுள் முக்கியமானவராக நந்தினிசேவியர் விளங்குகின்றார். இவர் யாழ்ப்பாண மாவட்டத்தில் சாவகச்சேரி பகுதியில் 1949ஆம் ஆண்டு,

வைகாசி மாதம், இருபத்தைந்தாம் திகதி வ.தேவசகாயம், தே.றோசம்மா ஆகியோருக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தார். நந்தினிசேவியர் தனது ஆரம்பக்கல்வியை நெல்லிமரப்பள்ளிக்கூடத்திலும் (மூன்றாம் ஆண்டுவரை படித்தார்), வேதக்கோயில் கிராமத்துப் பள்ளிக்கூடத்திலும், மட்டுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், மட்டுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், உயர்கல்வியை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும், வதிரி திருஇருதயக் கல்லூரியிலும் கற்றுக்கொண்டார். பின்னர் கொக்குவில் யாழ்/தொழில்நுட்பக் கல்லூரியிலும் (1969-1970), கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியிலும் தொழிற்கல்வியைக் கற்றுக்கொண்டார். பதினான்காவது வயதிலிருந்து எழுதத் தொடங்கிய இவர் ஆரம்பத்தில் வ.தேவசகாயம், சகாயபுத்திரன், தாவீது கிறிஸ்ரோ ஆகிய புனைபெயர்களில் ஆக்கங்களை எழுதிவந்துள்ளார். எனினும் நந்தினிசேவியர் எனும் புனைபெயரிலேயே எழுத்துலகில் அறியப்படுகின்றார். இவரது இலக்கியப் பணிகளுக்காக இவரை கௌரவிக்கும் பொருட்டு பல விருதுகள், பரிசில்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

1966ஆம் ஆண்டு சந்திரோதயம் எனும் கையெழுத்துச் சஞ்சிகையில் வெளிவந்த சுடலை ஞானம் சிறுகதையே நந்தினிசேவியரது முதல் சிறுகதை ஆகும். 1966இல் எழுதத்தொடங்கி 2021ஆம் ஆண்டு வரை எழுதிக்கொண்டு இருந்த இவர் 2021ஆம் ஆண்டு, புரட்டாதி மாதம், பதினாறாம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

நந்தினிசேவியர் படைப்புகள் (2014), அயல்கிராமத்தைச் சேர்ந்தவர்கள் (1993), நெல்லிமரப்பள்ளிக்கூடம் (2011), நந்தினிசேவியர் பிடித்த சிறுகதை (2019) ஆகியன நூலுருவம் பெற்ற இவரது படைப்புகளாகும்.

நந்தினிசேவியர் முகநூலில் பதிவிட்ட சிறுகதைகள் பற்றிய குறிப்புக்களின் முதல் பகுதியை கொடகே நிறுவனம் 2019ஆம் ஆண்டு நந்தினிசேவியர் பிடித்த சிறுகதை என்ற தலைப்பில் புத்தகமாக வெளியிட்டது. இந்நூலில் இருநூறு ஈழத்துச் சிறுகதையாசிரியர்கள், அவர்களுடைய சிறந்த சிறுகதைகள் பற்றிய குறிப்புக்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

நந்தினிசேவியர் இதுவரை இரண்டு நாவல்கள், இரண்டு குறுநாவல்கள், முப்பது சிறுகதைகள், இருபதுக்கு மேற்பட்ட கவிதைகள், கட்டுரைகள், பத்தி எழுத்துக்கள், கள ஆய்வுக்குறிப்பு, சுய ஆக்கம், கடிதங்கள், இரங்கல் குறிப்புகள், நூல் விமர்சனம், முன்னுரை, பின்னுரை, பின்னட்டைக்குறிப்புகள், பதிப்புரை என்பவற்றை எழுதியுள்ளார். இவற்றுள் இரு நாவல்கள், இரு குறுநாவல்கள், பதின்மூன்று சிறுகதைகள், கள ஆய்வுக்குறிப்பு என்பன தொலைந்துவிட்டன (நந்தினிசேவியர், 2014: 430). நந்தினிசேவியரால் மேற்கூறப்பட்ட ஆக்கங்கள் எழுதப்பட்டிருப்பினும் இவ்வாய்விற்காக அவரது சிறுகதைகளே எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

3.0. நந்தினிசேவியரின் சிறுகதைகள்: உருவமும் உள்ளடக்கமும்

நந்தினிசேவியரின் சிறுகதைகள் 1966 தொடக்கம் 2004 வரையான காலப்பகுதியில் சமூகத்தில் காணப்பட்ட பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகின்றன. குறிப்பாக இவருடைய சிறுகதைகள் தாழ்த்தப்பட்ட மக்கள் எதிர்நோக்கிய அடக்குமுறைகள், புறக்கணிப்புக்கள், சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான கருத்துக்கள், போர்க்கால அவலநிலை, வேலையில்லாப்

பிரச்சினைகள், பொருளாதாரப் பிரச்சினைகள் போன்றவற்றை மையப்படுத்தியதாக உள்ளன. அத்துடன் நந்தினிசேவியர் தன்னுடைய வாழ்க்கையில் நடைபெற்ற அனுபவங்களை சிறுகதைகளாக எழுதியுள்ளார். உதாரணமாக "நீண்ட இரவுக்குப் பின்", "பயணத்தின் முடிவில்" போன்ற சிறுகதைகளைக் குறிப்பிடலாம் (சிறுகதை மஞ்சரி, இதழ்-14, 2021: 40). அந்தவகையில் நந்தினிசேவியரது சிறுகதைகளின் உள்ளடக்கம், உருவம் பற்றியும், சிறுகதைகளில் கையாளப்பட்டுள்ள உத்திகள், மொழிநடை பற்றியும் ஆராயவேண்டியது அவசியமாகின்றது.

3.1. சிறுகதைகளின் உள்ளடக்கம்

நந்தினிசேவியர் முற்போக்குச் சிந்தனையாளராகவும், இடதுசாரிக்கருத்துக் கொண்டவராகவும், யதார்த்தத்தை பிறழாது எடுத்துரைப்பவராகவும், ஒடுக்கப்பட்ட மக்களது பிரச்சினைகளை பேசுபவராகவும், முதலாளித்துவ வர்க்கத்திற்கு எதிராகக் குரல் கொடுப்பவராகவும் விளங்கினார். இதன் காரணமாக அவரது படைப்புக்களில் இத்தகைய பண்புகள் குறிப்பிடத்தக்க செல்வாக்கினைப் பெறுகின்றன. இதனடிப்படையில் நந்தினிசேவியரின் சிறுகதைகள், ஒடுக்கப்பட்ட மக்களது பிரச்சினைகளையும், அவர்களது வாழ்க்கைமுறைகளையும் எடுத்துரைப்பனவாக உள்ளன. அந்தவகையில் இவை ஒவ்வொன்றும் விரிவாக ஆராயப்படுகின்றன.

3.1.1. சமூகப் பிரச்சினைகள்

ஒவ்வொரு சமூகத்திலும் நிலவுகின்ற பெரும்பாலான பிரச்சினைகளுக்குப் பொருளாதாரமே அடிப்படையாக விளங்குகின்றது. பொருளாதாரத்தில் வீழ்ச்சி நிலையில் உள்ள ஒரு குடும்பம் பல்வேறு சமூகப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வாழவேண்டிய நிலை காணப்படுகின்றது. எனவே சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவையாகவும், ஒன்றில் ஒன்று தங்கியிருப்பவையாகவும் காணப்படுகின்றன. எனவே இவை சமூகப்பிரச்சினைகளாகவே கொள்ளப்படுகின்றன. இத்தகைய சமூகப்பிரச்சினைகளை நந்தினிசேவியர் தனது சிறுகதைகளினூடாக வெளிப்படுத்துகின்றார். இவர் 1966 தொடக்கம் 2004 வரையுள்ள சூழலின் பின்னணியில் இப்பிரச்சினைகளை எடுத்துக்காட்டுகின்றார். அந்தவகையில் நந்தினிசேவியரின் சிறுகதைகள் சமூகத்தில் நிலவிய வறுமைநிலை, வேலையில்லாப் பிரச்சினைகள், சாதிப் பிரச்சினைகள், முதலாளித்துவச் சுரண்டல், அடக்குமுறைகள், அடக்குமுறைகளுக்கு எதிராக கிளர்ந்தெழல், போர்க்கால அவலங்கள் எனப்பல்வேறுபட்ட பிரச்சினைகளை வெளிப்படுத்தி நிற்கின்றன.

நந்தினிசேவியரது கதைகளில் வருகின்ற மக்கள் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றார்கள். அதுமட்டுமன்றி அவர்கள் வறுமையினால் சமூகத்தில் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள். அந்தவகையில் "அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்" சிறுகதையில் மக்களின் தொழில்முறைகளை எடுத்துக்காட்டுவதினூடாக தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்களின் வறுமைநிலை வெளிப்படுத்தப்படுகின்றது. இதனை,

> ஆண்கள், பெண்கள், வாலிபர்கள், முதியோர்கள் என்ற வித்தியாசம் இன்றி நாம் கூலித் தொழில் செய்து சீவியம் போக்காட்ட வேண்டியிருந்தது. நாம்

> கிணறு வெட்டுதல், மண் சுமத்தல், கல்லுடைத்தல் ஆகிய தொழில்களுடன் பனை அடித்தல், துலா வெட்டுதல் போன்ற தொழில்களிலும் ஓரளவு தேர்ச்சி பெற்று இருந்தமையால் எமக்குள்ளே போட்டிகளும் பொறாமைகளும் இருக்கவில்லை. அப்படியான ஒரு நிலைமை ஒருகாலத்தில் இருந்ததென்னவோ உண்மைதான். அவை மிகுந்த அவமானத்திற்கும் அசூசைக்குமுரிய பழைய மடிந்துவிட்ட நிலைமைகள் (நந்தனிசேவியர், 1993: 28).

என்பது வெளிப்படுத்துகின்றது.

அத்துடன் "விருட்சம்" சிறுகதையில் கூலித்தொழிலாளர்கள் குறிப்பிட்ட ஒரு தொழிலில் நிலைத்திருக்காது பலதரப்பட்ட தொழில்களை செய்யும் அவலநிலையை எடுத்துரைக்கின்றார்.

> கஸ்தூரியார் வீதியில் ஒரு வானொலிப் பெட்டித் திருத்தகத்தில், இருபாலையில் ஒரு மில்லில், மட்டக்களப்பில் ஒரு தனியார் நிறுவனத்தில், மன்னாரில் ஒரு மீன் வாடியில், கொழும்பில் ஒரு ஏற்றுமதி நிறுவனத்தில் என மூன்று மாதம், நான்கு மாதம் என நிலைத்திருக்காமைக்கு இவனது நேர்மையும், விட்டுக் கொடுக்காத்தன்மையும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம் (நந்தினிசேவியர், 2011: 78).

1960 காலப்பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் எதிர்நோக்கிய மற்றுமொரு பிரச்சினை சாதிப்பாகுபாடு ஆகும். மக்கள் தங்களுக்குள்ளே பாகுபாடு வகுத்து இன்ன வேலைகளை செய்வதற்கென்று தங்களை வகைப்படுத்திக்கொண்டார்கள். அந்தவகையில் வேளாளர், வண்ணார், தட்டார், திமிலர், பள்ளர், பறையர், அம்பட்டர், நளவர் போன்ற சாதியமைப்புக்கள் தோற்றம் பெற்றன. சாதியமைப்பில் குறைந்தவர்கள் சமூகம், தொழில் சார்ந்து பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டார்கள். சிலர் சாதி ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுத்தார்கள். நந்தினிசேவியர் மக்கள் எதிர்நோக்கிய முதலாளித்துவ வர்க்கத்தின் அடக்குமுறைகள், அடக்குமுறைகளுக்கு எதிரான குரல், சாதியப்புறக்கணிப்பு போன்றவற்றை மையப்படுத்தி சிறுகதைகள் எழுதியுள்ளார்.

அந்தவகையில் நந்தினிசேவியர் எழுதிய "அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்" சிறுகதை தாழ்த்தப்பட்ட மக்களுக்கெதிரான தடைகளையும், முதலாளித்துவ வர்க்கத்தினர் மீது தாழ்த்தப்பட்ட மக்கள் கொண்ட பயத்தினையும் எடுத்துக்காட்டுகின்றது.

> தனக்கும் ஊரின் சில பெரிய மனிதர்களுக்கும் இடையில் ஏற்பட்ட விரோதங்கள் பற்றியெல்லாம் அப்போது அவன் எங்களிடம் பூடகமாகக் கூறினான். தன்னுடைய சமூகத்தவர்களைத் தன்னுடன் நின்று கதைக்கத் தடை விதிக்கப்பட்டிருப்பதாகவும் கூறினான். அந்த மக்கள் மிகுந்த பயமுள்ளவர்களாக இருந்தமையால் கட்டுப்பாட்டுக்குள் அடங்கிக் கிடப்பதாக அவன் மனமுடைந்து மிக விசனப்பட்டான். நாமும் அதைப் பற்றிக் கவலை தெரிவித்தோம். இன்று அவன் இறந்துவிட்டான் (நந்தினிசேவியர், 1993: 31).

முதலாளித்துவ வர்க்கத்தினர் தங்களுடைய வேலைகளைச் செய்வதற்காக தாழ்த்தப்பட்ட மக்களை பயன்படுத்தியமை குறித்து,

> இரவு அவர் கூறினார் ஊரிலை மா, அரிசி தட்டுப்பாடு... தங்கச்சியின்ரை கலியாணமும் வருகுது. நான் கொஞ்சம் சாமான் வாங்கி வைச்சிருக்கிறன். அதைக்கொண்டு போய் வீட்டிலை குடும்... வீட்டிலை வேலி விராயள் அடைக்க வேணும்...கன வேலைகள் கிடக்குது...நீர்தான் நிண்டு செய்யவேணும்... அங்கை ஆம்பிளையாருமில்லை... (நந்தினிசேவியர், 1993: 67).

என "பயணத்தின் முடிவில்" சிறுகதையில் வெளிப்படுத்துகின்றார்.

நந்தினிசேவியரின் சிறுகதைகள் வெளிப்படுத்தும் பிரச்சினைகளில் ஒன்றாக வேலையில்லாப் பிரச்சினை காணப்படுகின்றது. அந்தவகையில் "நீண்ட இரவுக்குப்பின்" என்ற சிறுகதையில் பரீட்சை சிறப்பாகச் செய்தாலும் நேர்முகப்பரீட்சையில் வேண்டுமென்றே புறக்கணிக்கப்படும் அரசு என்ற பாத்திரத்தின் வழியாக இளைஞர்கள் வேலையற்ற நிர்ப்பந்தத்திற்குள்ளாவது வெளிப்படுத்தப்படுகின்றது. அத்துடன் அரசுக்கு கிடைக்கப்போகும் வேலையில் தங்கியிருக்கும் அவனது குடும்பத்தின் நிலையும் வெளிப்படுத்தப்படுகின்றது.

> இந்த வேலை மட்டும் எனக்குக் கிடைச்சால்... அம்மாவையும் அக்காவையும் என்ரை இரண்டு தம்பிகளையும் என்னால காப்பாத்த முடியும்... (நந்தினிசேவியர், 1993: 52).

அதுமட்டுமன்றி கிடைத்த வேலையைச் செய்துகொண்டு குடும்பத்தை காப்பாற்ற முடியாத நிலையில் வாழும் குலம் என்ற பாத்திரத்தின் வழியாக வேலை கிடைத்தாலும் வறுமைநிலையிலிருந்து மீள முடியாத சூழல் காணப்படுவது எடுத்துரைக்கப்படுகின்றது.

> சுருட்டோடும் சுருட்டுக் கொட்டிலோடும் மல்லாடும் தன் தகப்பனாரை ஓய்வெடுக்க வைக்க வேண்டுமென்று அவன் மிகவும் விரும்பினான்....
>
> .....கணபதியர் இன்றும் சுருட்டுக் கொட்டிலில் மல்லாடும் மசிய நிறமான காட்சி அவன் கண்ணில் நிழலாடியது (மேலது: 52).

1950கள் காலப்பகுதியில் இருந்து இலங்கையில் இனப்பிரச்சினைகள் தீவிரமடையத் தொடங்கின. காலப்போக்கில் இனப்பிரச்சினை ஆயுதப்போராட்டமாக விரிவடைந்த 1980கள் காலப்பகுதியில் தோற்றம் பெற்ற இலக்கியங்கள் போர்க்காலச் சூழலையும் அவை ஏற்படுத்திய தாக்கங்களையும் பெருமளவில் பிரதிபலித்தன. இதனடிப்படையிலேயே நந்தினிசேவியரின் சிறுகதைகள் போர்க்காலப் பின்னணியையும், அக்காலத்தில் இடம்பெற்ற வன்முறைகளையும் வெளிப்படுத்துகின்றன. 1986 தொடக்கம் 2004 வரையிலான காலப்பகுதியில் நந்தினிசேவியர் எழுதிய "தொலைந்துபோனவர்கள்" (1986), "மனிதம்" (1987), "தவனம்" (2002), "எதிர்வு" (2003)

ஆகிய சிறுகதைகள் போர்க்காலச் சூழலைப் பின்னணியாகக் கொண்டு போரானது மக்களது வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்களை எடுத்துரைக்கின்றன.

“மனிதம்” சிறுகதையில் போரினால் உயிரிழந்த ஒரு குடும்பத்தின் அவலநிலையும், அனாதையாக விடப்பட்ட மலையகத்துச்சிறுவன் மற்றும் குழந்தையின் பரிதாப நிலையும் எடுத்துக்காட்டப்படுகின்றது.

> …அவர்கள் அறுவராக புறப்பட்டிருந்தார்கள். அவன், அவனது மனைவி, மூன்று பிள்ளைகள், தொழில் உதவிக்கென தன்னிடம் வைத்திருக்கும் வவுனியாவிலிருந்து கூட்டி வந்த மலையகத்துச் சிறுவன்
>
> இப்போது மீதம் அந்தச்சிறுவனும், அக்குடும்பத்தின் ஒரு வாரிசும் (நந்தினிசேவியர், 2011: 40).

அதுமட்டுமன்றி “தவனம்” சிறுகதையிலும்

> என்ன… கண்ணாஸ்பத்திரியடியிலை ஒரு ஆளை வானோடை போட்டுக் கொழுத்தியிட்டாங்களோ… (மேலது: 51).
>
> இவனது இரண்டு நண்பர்கள் எரியுண்டதும், வெட்டுப்பட்டதும் செய்தியாகக் கிடைத்தது (மேலது: 52).

எனப் போரினால் உயிரிழந்தவர்கள் பற்றி எடுத்துரைக்கப்படுகின்றது.

போர்க்காலச் சூழலினால் இறந்தவர்களின் உடலை சமய முறைப்படி புதைக்கமுடியாமல் மக்கள் அவதியுற்ற நிலையினையும் இச்சிறுகதை வெளிப்படுத்துகின்றது.

> முறையான செபத்துடன் கிடங்குகள் அவனின் மாமனாரின் பிரேதம் பச்சைப்பெட்டியுடன் இறங்கியது. ராசன் சவுக்கு மரக்கம்புகளால் சிலுவை ஒன்றைக்கட்டி தலைமாட்டில் நாட்டிக்கொண்டிருந்த போது அவனின் மைத்துனன் பெரிதாகக் கதறினான்
>
> ….
>
> ….
>
> ஒருகாலம் துறைமுகநகரத்தில் மரணவீடுகளுக்கும், வைபவங்களுக்கும் யாழ்ப்பாணத்தின் இடிமேளக்காரர்களைப் போல எக்காளம் வாசிக்கும் ஒருவராக இருந்த அவனது மாமனாரின் மரணம் மிகச்சாதரணமாக நிகழ்ந்து முடிந்து போயிற்று (மேலது: 71).

எனவே நந்தினிசேவியரது சிறுகதைகள் மக்களின் வறுமைநிலை, சாதிப்பிரச்சினைகள், வேலையில்லாப்பிரச்சினைகள், போர்க்கால அவலங்கள் போன்ற பிரச்சினைகளை பேசுவதாக அமைந்துள்ளன.

3.1.2. பிரதேசச் சித்திரிப்புக்களும் மக்களின் வாழ்க்கை முறைகளும்

எந்தவொரு படைப்பும் தான்சார்ந்த புவியியல் பின்னணியையும், மக்களது வாழ்க்கை முறைகளையும் தாங்கி நிற்கின்றபோதே முழுமையடையும். இவற்றைத் தவிர்த்து படைப்புக்களின் எத்தகைய கருத்துக்களும் வாசகனின் மனதில் நிலைபெற்றிராது. பிரதேசம் என்ற எல்லைப்படுத்தப்பட்ட புவியியல் பின்னணியில் நிகழ்ந்த சம்பவங்களை அல்லது சமூகப் பிரச்சினைகளை அவற்றுக்கே உரித்தான களத்தில் வெளிப்படுத்துவதிலேயே படைப்பின் முக்கியத்துவம் தங்கியுள்ளது.

நந்தினிசேவியரின் சிறுகதைகள் நிலத்தினையும், அந்நிலத்து மக்களது வாழ்க்கை முறைகளையும் அவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளையும், அந்நிலத்துக்கேயுரிய மண்வாசனையையும் பிரதிபலிக்கின்ற பாத்திரங்களையும், அவற்றின் பண்பாட்டம்சங்களையும் வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எடுத்துக்காட்டாக "நீண்ட இரவுக்குப்பின்" சிறுகதையில் குலம் என்ற தலைமைப்பாத்திரம் வாழும் இடத்தின் அமைவிடத்தை கூறுவதனூடாக கொழும்பு நகரத்தின் இருப்பிடம் சித்திரிக்கப்படுகின்றது.

> 'குலம்' கொழும்பு வாசியாகி மூன்று வருடங்களாகி விட்டாலும் தலைப்பட்டிணத்தின் சந்து பொந்துகளைத் தரிசிக்கும் வல்லமையைப் பெற்றிருக்கவில்லை (நந்தினிசேவியர், 1993: 48).

இலக்கியங்கள் காலத்தைக் காட்டுகின்ற கண்ணாடியாக அமைகின்றதனால் அவற்றில் அக்கால மக்களின் வாழ்க்கைமுறைகள் பிரதிபலிக்கப்படுகின்றன. அந்தவகையில் நந்தினிசேவியரின் சிறுகதைகள் வடபகுதி மக்களது வாழ்க்கை முறைகளை யதார்த்தமாக படம்பிடித்துக்காட்டுவனவாக விளங்குகின்றன. மக்களின் வாழ்கை முறைகள் என்பது அம்மக்களின் வாழ்விடங்கள், உணவுப்பழக்கவழக்கங்கள், சடங்கு சம்பிரதாயங்கள், நம்பிக்கைகள், தொழில்கள், அணிகின்ற உடைகள், புழங்கு பொருட்கள் என அவர்கள் வாழ்க்கையோடு தொடர்புபடும் விடயங்களை குறிக்கின்றன. இவை நந்தினிசேவியரின் சிறுகதைகளினூடாக வெளிப்படுத்தப்படுகின்றன.

அந்தவகையில் "விருட்சம்" சிறுகதையில் வரும்

> அதிகாலை எழுந்து, தேநீருக்கான வரிசையில் காத்து நின்று, புறப்படும் உழவு இயந்திரத்தில் தொற்றி ஏறி, தொலைவில் கீப் கணக்கில் மண்வெட்டி, கைகளில் கண்டல், கொப்புளங்கள் ஏற்பட்டு மாணிக்கப்பிள்ளையார் ஆற்றில் குளித்து, சிவப்பு நிறப் பீற்றூட்டுடன் சோறும் பாணும் சாப்பிட்டு… (நந்தினிசேவியர், 2011: 76).

என்ற கூற்று நந்தினிசேவியரின் சிறுகதைகளில் வருகின்ற மக்களின் வாழ்க்கைமுறைகளை ஒன்றுசேர எடுத்துக்காட்டுவதாக அமைகிறது.

முன்னோர்களால் பிறப்பு முதல் இறப்பு வரையில் பல்வேறு சடங்குகளும், சம்பிரதாயங்களும் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. இவை மக்களின் வாழ்க்கையில் ஓர் அங்கமாகக் காணப்படுகின்றன. இவற்றை நந்தினிசேவியரின் சிறுகதைகளில் காணமுடிகின்றது. நந்தினிசேவியரின் "பெரியமனிதன்", "எதிர்வு", "அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்" சிறுகதைகளில் மரணவீட்டில் நடைபெறுகின்ற சடங்கு மற்றும் சம்பிரதாயங்களை அறிந்து கொள்ள முடிகின்றது.

தமிழ் மக்களது மரணவீட்டில் சிறு பந்தல் போட்டு வெள்ளை கட்டுதல், தலைமாட்டில் குத்துவிளக்கு ஏற்றுதல், மரணித்தவர் பற்றி உறவினர்களுக்கும், அக்கம் பக்கத்து கிராமங்களில் உள்ளவர்களுக்கும் தெரியப்படுத்துதல், இறந்தவர்களை பாடையில் கொண்டு செல்லுதல், பன்னாங்கு பின்னுதல், தேவாரம் பாடுதல், கொள்ளிச்சட்டி கொண்டு செல்லுதல், இறந்த உடலை பிறர் தூக்குதல் போன்ற சடங்கு, சம்பிரதாயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனை "அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்" சிறுகதை,

> …அவன் வீட்டின் முன்பு சிறு பந்தல் போட்டு வெள்ளை கட்டப்பட்டிருந்தது. கிட்டிணனது சடலம் பெரிய கட்டிலொன்றில் வளர்த்தப்பட்டிருந்தது. அவனது தலைமாட்டில் குத்துவிளக்கொன்று அழுது வடிந்து கொண்டிருந்தது. கிட்டிணனின் மனைவி தங்கச்சியம்மாவும்…மகள் செல்லக் கண்டுவும் பெரிதாக ஒப்பாரி வைத்து கொண்டிருந்தனர்.
>
> முருகன் எல்லாக் கிராமங்களுக்கும் 'இழவு' அறிவித்திருந்தான்.
>
> …இரண்டு பூவரசம் கதிகால்களைத் தறித்து, கிட்டிகளைப் பிணைத்து நாம் பாடை வேலைகளைத் தொடங்கி விட்டோம். ஆறுமுகம் பன்னாங்கு பின்னும் காரியத்தில் இறங்கியிருந்தான் (நந்தினிசேவியர், 1993: 32).
>
> …முருகன் தேவாரம் பாடினான் "கூற்றாயினவாறு… விலக்ககலீர் கொடுமைபல செய்தன…
>
> முன்னே கொள்ளிச் சட்டியுடன் கிட்டிணனின் புத்திரர் நடக்க அவர்களின் பிறகே வேலியைப் பிரித்துக் கிட்டிணனின் சவம் நாலு மாயக்கை மனிதர்களின் தோளில் ஏறிப் புறப்பட்டது (மேலது: 34).
>
> என எடுத்துரைக்கின்றது.

நந்தினிசேவியரின் சிறுகதைகளில் சமூகத்தில் காணப்பட்ட மத நம்பிக்கைகளும், மூடநம்பிக்கைகளும் எடுத்துக்காட்டப்படுகின்றன. அந்தவகையில் "தொலைந்து போனவர்கள்" சிறுகதையில் மாலை சுற்றிக் குழந்தை பிறந்தால் மாமனுக்கு கெடுதியெனவும், அதனால்தான் மணியம் மாஸ்டரின் கால் ஊனமாகிப்போய்விட்டதெனவும் மூடநம்பிக்கைகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

> அவனுடைய தங்கைக்கு ஒரு மகன் மாலை சுற்றிப் பிறந்த அந்த நாட்களில் சிலர் பேசிக்கொண்டது போல் 'மாலை சுத்திப் பிறந்தபடியாலை மாமனுக்கும் கெடுதி'
>
> அவனது இடதுகால் ஊனப்பட்டுப்போய் விட்டது. நிலையொன்று சீவுவதற்காகக் கொண்டுவந்த மாமரம் ஒன்று இவனது காலுக்கு மேல் விழுந்தது…இப்போது இவன்…
>
> சொத்தி… மணியம் (நந்தினிசேவியர், 1993: 94).

மனிதன் பேய், பிசாசுகள் மீது கொண்ட நம்பிக்கையை "விருட்சம்" சிறுகதை எடுத்துக்காட்டுகின்றது.

> இவனது பாலியகால நண்பன் ஜெயக்கொடி மூன்று நாள் காய்ச்சலில் மரணித்துப் போனமைக்கு பொடுங்கர் வளவு விளாத்தி மரத்தில் குடிகொண்டிருந்த ஊத்தைகுடியன் பேயின் வேலைதான் காரணம் என்ற கசமுசப்பு கேட்ட காலமொன்றும் இவனுக்கு சித்தித்திருந்தது (நந்தினிசேவியர், 2011: 75).

3.2. சிறுகதைகளின் உருவம்

சிறுகதைகள் தனித்துவமிக்கனவாக அமைவதற்கு அவற்றின் உருவம் முக்கியபங்கு வகிக்கின்றன. அந்தவகையில் நந்தினிசேவியர் தனது சிறுகதைகளில் தனித்துவமான உத்திகளையும், எளிமையான மொழிநடையினையும் கையாண்டுள்ளதைக் காணமுடிகின்றது.

3.2.1. சிறுகதை உத்திகள்

எந்தவொரு படைப்பினதும் உள்ளடக்கமே உருவத்தை தீர்மானிக்கின்றதாயினும் படைப்பாளரொருவர் அதனை வெளிப்படுத்தும் விதத்திலேயே படைப்பானது தனித்தன்மை பெறுகின்றது. இத்தகைய வெளிப்பாட்டு முறையே உத்தி எனப்படுகின்றது. அந்தவகையில் நந்தினிசேவியர் தனக்கென தனித்துவமான உத்திகளைக் கையாண்டு புனைகதைகளைப் படைத்துள்ளார். இவர் சிறுகதைகளில் கதைத்தலைப்பு, பாத்திரப்படைப்பு, பாத்திர உரையாடல் ஆகிய உத்தி முறைகளைக் கையாண்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

3.2.1.1. சிறுகதையின் தலைப்பு

சிறுகதைகளின் தலைப்புக்கள் கவர்ச்சியுடனும், பல்வகைப் பொருட்களையும் தன்னுள் சேர்த்துக் காட்டும் சிறிய கண்ணாடி போலவும் அமைதல் வேண்டும். சிறுகதைகளின் தலைப்புக்கள் அச்சிறுகதைகளில் வெளிப்படும் பிரச்சினைகளையோ அல்லது சம்பவங்களையோ எடுத்துக்காட்டுபவையாக அல்லது குறியீட்டுப்பாங்கிலோ அமையலாம்.

அந்தவகையில் குறியீட்டுப்பாங்கில் அமைந்த சிறுகதைகளுக்கு உதாரணங்களாக "ஒற்றைத்தென்னை", "நெல்லிமரப்பள்ளிக்கூடம்", "விருட்சம்" ஆகிய சிறுகதைகளைக்

குறிப்பிடலாம். "ஒற்றைத்தென்னை" சிறுகதையில் குருநகரில் உள்ள தென்னையையும், கதையில் வருகின்ற சந்தியாக்கிழவனையும் ஒப்பீட்டு அச்சிறுகதைக்கு "ஒற்றைத்தென்னை" என்னும் தலைப்பு முன்வைக்கப்பட்டுள்ளது.

கதையில் இடம்பெறும் முக்கியமானதொரு நிகழ்ச்சியைத் தலைப்பாக அமைத்தலுக்கு உதாரணமாக "மனிதம்", "தவனம்", "எதிர்வு" சிறுகதைகளைக் குறிப்பிடலாம். பொழுதுகளை மையமாக கொண்டு முன்வைக்கப்பட்ட தலைப்புக்களாக "ஒரு பகற் பொழுது", "நீண்ட இரவுக்குப்பின்", "மத்தியானத்துக்குச் சற்றுப் பின்பாக" ஆகிய தலைப்புக்கள் காணப்படுகின்றன. "வேட்டை" என்னும் தலைப்பு அக்கதையில் வேட்டையே பிரதான பேசுபொருள் என்பதால் முன்வைக்கப்பட்ட தலைப்பாகும்.

"அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்", "நீண்ட இரவுக்குப் பின்", "தொலைந்து போனவர்கள்", "நெல்லிமரப்பள்ளிக்கூடம்", "தவனம்" ஆகிய சிறுகதைகளில் கதையின் முடிவில் தலைப்பு வெளிப்படுத்தப்படுகின்றது. இதனை,

> அந்த அயல் கிராமத்து மனிதர்களுக்கு அன்றும் சரி அதற்குப்பிறகும்சரி எதுவித தீங்கும் பிறரால் நேரவில்லை (நந்தினிசேவியர், 1993: 35).
>
> நீண்ட இரவு கழிந்து அதிகாலை வேளையில் அந்த வண்டி சாவகச்சேரி புகையிரத நிலையத்தில் தரித்தபோது ஒரு புது மனிதனாகவே கீழே இறங்கினான் அரசு (மேலது: 59).
>
> மீண்டும் மீண்டும் பலர் காணாமற் போய் கொண்டிருக்கிறார்கள். தொலைந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்... (மேலது: 99).
>
> அதோடு சிதைந்தது நெல்லிமரப்பள்ளிக்கூடமும் (நந்தினிசேவியர், 2011: 46).
>
> வாய் சிகரெட்டுக்கு தவனப்பட்டது (மேலது: 55).

என்பன வெளிப்படுத்துகின்றன.

3.2.1.2. பாத்திரப்படைப்பு

சிறுகதையில் பாத்திரப்படைப்பு என்பது முக்கியமானதாகும். பாத்திரப்படைப்பு என்பது சிறுகதைகளின் வெற்றிக்கு அடிப்படையாக அமைகின்றது. ஆசிரியரினால் சிறந்த முறையிலும் வாசகர் மனதில் பதியும் முகமாகவும் பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளன. சிறுகதை ஆரம்பித்து முடியும் வரையிலான கதைப்பின்னலில் பாத்திரப்படைப்பின் முக்கியத்துவம் தங்கியுள்ளது. நந்தினிசேவியரின் சிறுகதைகளில் பாத்திரப்படைப்பை அவதானிக்கும்போது யதார்த்தமான பாத்திரங்களை சித்திரித்துள்ளமையைக் காண முடிகின்றது.

நந்தினிசேவியர் சமூகத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களைப் பாத்திரங்களாகப் படைத்துள்ளார். கூலித்தொழில் செய்கின்ற மக்களைப் பிரதான பாத்திரங்களாகவும், துணைப்பாத்திரங்களாகவும் கொண்டு சிறுகதைகள் எழுதியுள்ளார். முக்கியமாக நந்தினிசேவியரின் சிறுகதைகளில் ஆண்

பாத்திரங்களே பிரதான பாத்திரங்களாகவும், துணைப்பாத்திரங்களாகவும் வருவதை அவதானிக்க முடிகின்றது.

உதாரணமாக "நீண்ட இரவுக்குப்பின்" சிறுகதையில் குலம், அரசு பிரதான பாத்திரங்களாகவும் ரத்னபால, வரதன் துணைப்பாத்திரங்களாகவும் வருவதனையும், "ஒற்றைத் தென்னை" சிறுகதையில் சந்தியாக்கிழவன் பிரதான பாத்திரமாகவும், அதிரியார், செபஸ்தியாம்பிள்ளை, அல்போண்சன் துணைப்பாத்திரங்களாகவும் வருவதனையும் குறிப்பிடலாம்.

நந்தினிசேவியரின் சிறுகதைகளில் பெண் பாத்திரங்கள் குறைவாகவே படைக்கப்பட்டுள்ளன. "ஒரு பகற்பொழுது" சிறுகதையில் வருகின்ற செல்லம் என்ற பெண்பாத்திரம் பிரதான பெண் பாத்திரமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. ஏனைய சிறுகதைகளில் வருகின்ற பெண் பாத்திரங்கள் யாவும் துணைப்பாத்திரங்களாகவே சித்திரிக்கப்பட்டுள்ளன.

உதாரணமாக "ஆண்டவருடைய சித்தம்" சிறுகதையில் சிஸ்டர், "ஒற்றைத்தென்னை" சிறுகதையில் மாகிரற், "கடலோரத்துக்குடிசைகள்" சிறுகதையில் சாந்தா, "எதிர்வு" சிறுகதையில் மனைவியின் அன்ரிஅம்மா, "பெரியமனிதன்" சிறுகதையில் பொன்னாச்சி, வாத்தியாரின் மனைவி ஆகியோர் துணைப்பாத்திரங்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளார்கள்.

3.2.1.3. பாத்திர உரையாடல்

ஒரு படைப்பில் பாத்திரத்தின் உணர்ச்சியை நேரடியாக வெளிப்படுத்தும் உத்தியாக பாத்திர உரையாடல் விளங்குகின்றது. அந்தவகையில் நந்தினிசேவியர் தனது சிறுகதைகளில் கதையோட்டத்திற்கேற்ப பாத்திரங்களின் உரையாடலை அமைத்துக் கதையை நகர்த்திச் செல்கின்றார். அத்துடன் எவ்வித மிகைப்படுத்தலுமின்றி எளிமையான பாத்திர உரையாடல் மூலம் கதைகளை நகர்த்திச் செல்கின்றார்.

நந்தினிசேவியரின் சிறுகதைகளில் வருகின்ற மக்கள் தங்களால் வளர்க்கப்படுகின்ற விலங்குகளிடம் உரையாடுவதனூடாக தங்களது உணர்ச்சிகளை பகிர்ந்து கொள்வதனை காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான உரையாடல் பாங்கினை "வேட்டை", "ஒரு பகற் பொழுது" சிறுகதைகளில் அவதானிக்கலாம்.

"வேட்டை" சிறுகதையில் தம்பர் தான் வளர்க்கும் நாயோடு உரையாடுவது உழைக்கும் வர்க்கத்தினர் தமது வாழ்வில் விலங்குகளுடன் கொண்டுள்ள நெருங்கிய பிணைப்பினை எடுத்துரைக்கின்றது.

> 'எனக்குத் தெரியும் ராசாத்தி…எப்படியும் பிடிச்சுப் போடுவாய்' எண்டு வெள்ளையன் எஜமானின் பாராட்டினால் உடலை வளைத்து வாலைக் குழைத்து நெளிகிறது (நந்தினிசேவியர், 1993: 19).

"ஒரு பகற்பொழுது" சிறுகதையில் செல்லம் தான் வளர்க்கும் ஆட்டோடு உரையாடுவது செல்லத்தின் இயலாமையை, கோபத்தைக் காட்டுகின்றது.

உனக்கு மட்டுமே... பசி... எல்லாருக்குந்தான்... உன்னையும் வித்துத் துலைச்சிட்டால்...? (மேலது: 36).

3.2.2. மொழிநடை

ஒரு படைப்பாளி தான் எடுத்துக்கொண்ட கதைப்பொருளை வாசகர்களுக்கு எவ்வித மாற்றமும் இன்றி கொடுப்பதற்கு மொழிநடை பயன்படுத்தப்படுகின்றது. ஆசிரியர் கையாளும் உயிரோட்டமான மொழியினாலே பாத்திரங்கள் உயிர் பெறுகின்றன. இது வருணனை, பேச்சுவழக்குச் சொற்கள், உறவுமுறைச் சொற்கள், இரட்டைக்கிளவி, பிறமொழிச் சொற்கள் முதலான கூறுகளை உள்ளடக்கியுள்ளது. அந்தவகையில் நந்தினிசேவியரின் மொழிநடையில் இக்கூறுகள் உள்ளடங்கி இருப்பதனையும், அவை யதார்த்தத்தினையும், மண்வாசனையையும் வெளிப்படுத்துவனவாக உள்ளமையையும் அவதானிக்க முடிகின்றது.

உதாரணமாக நந்தினிசேவியர் "விருட்சம்" சிறுகதையில் "ஞான் இப்பொழுது கேள்வி கேட்கும். நீங்கள் சரியாக சொல்லாமல் விட்டால் ஞான் உங்களுக்கு அடிக்கும்" (நந்தினிசேவியர், 2011: 74) என்பதனூடாக மலையாள பேச்சுவழக்கினை கையாள்கின்றார்.

5.0. முடிவுரை

நந்தினிசேவியர் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் தனக்கென ஓர் இடத்தினைப் பெற்றுக்கொண்டுள்ளார். இவரது படைப்புகளில் பெரும்பாலானவை சாதி ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுப்பனவாக உள்ளன. இவர் 1966களில் எழுத்துலகில் பிரவேசித்து ஐம்பத்தைந்து வருடங்களாக இலக்கியப் படைப்புகளை எழுதிவந்துள்ளார்.

நந்தினிசேவியரின் சிறுகதைகளின் உள்ளடக்கத்தினையும், உள்ளடக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு விடயங்களையும் இவ்வாய்வு எடுத்துக்காட்டுகின்றது. சிறுகதைகளில் வெளிப்படுத்தப்படும் சமூகப்பிரச்சினைகளும் இவ்வாய்வில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. அந்தவகையில் நந்தினிசேவியர் வறுமை நிலை, சாதிப் பிரச்சினைகள், வேலையில்லாப் பிரச்சினைகள், போர்க்கால அவலங்கள் என்பவற்றை சித்திரித்துள்ளதனைக் காணமுடிகின்றது.

சிறுகதைகளில் கையாண்டுள்ள உத்திகளான சிறுகதையின் தலைப்பு, பாத்திரப்படைப்பு, பாத்திர உரையாடல் முதலானவற்றையும் எடுத்துக்காட்டுகின்றது. அத்துடன் நந்தினிசேவியர் சிறுகதைகளில் கையாண்டுள்ள மொழிநடையைப் பற்றியும் எடுத்துரைக்கின்றது.

எழுதுவதை விட வாசிப்பில் ஆர்வமிக்கவராக விளங்கிய நந்தினிசேவியர் பல்துறை சார்ந்த அறிவுமிக்கவராக விளங்கினார். அத்துடன் ஈழத்து இலக்கியவாதிகளின் படைப்புக்களைத் தேடி எடுத்து சேகரிப்பதிலும் ஈடுபட்டார். இதற்கு எடுத்துக்காட்டாக இவரது பிடித்த சிறுகதைத்தொகுப்பு நூலைக் குறிப்பிடலாம். எனினும் இவரது படைப்புக்கள் பல தொலைந்துவிட்டன. மேமன்கவி என்பவர் குறிப்பிட்டது போல் (நடு, இதழ்-47, 2021) இவருடைய தொலைந்துபோன படைப்புகளை தேடியெடுத்து நூலுருவாக்கம் செய்வதுடன், இவரைப் பற்றிய நூல் வெளியிட வேண்டியது அவசியமாகும். எனவே இளம்தலைமுறையினரின் எழுத்துக்களை ஊக்கப்படுத்தி வந்த இவரது படைப்புக்கள் ஈழத்து இலக்கிய வரலாற்றில் தனித்துவமிக்கனவாகவும், முக்கியத்துவமிக்கனவாகவும் விளங்குகின்றன.

உசாத்துணை

1. நந்தினிசேவியர், 1993, “அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்”, தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ், சென்னை.
2. நந்தினிசேவியர், 2011, “நெல்லிமரப் பள்ளிக்கூடம்”, எஸ்.கொடகே சகோதரர்கள் பிரைவேட் லிமிடட், கொழும்பு - 10.
3. நந்தினிசேவியர், 2014, “நந்தினிசேவியர் படைப்புகள்”, விடியல் பதிப்பகம், கோயம்புத்தூர்.
4. நந்தினிசேவியர், 2019, “நந்தினிசேவியர் பிடித்த சிறுகதை – முதலாம் தொகுதி”, எஸ்.கொடகே சகோதரர்கள் பிரைவேட் லிமிடட், கொழும்பு – 10.
5. நந்தினிசேவியர், 1974, “பயணத்தின் முடிவில்”, அலை, இதழ்-08, பக்: 187-190.
6. நந்தினிசேவியர், 1982, “ஆண்டவருடைய சித்தம்”, புதுசு இதழ், பக்: 03-08.
7. நந்தினிசேவியர், 2001, “நெல்லிமரப் பள்ளிக்கூடம்”, கண்ணில் தெரியுது வானம், பக்: 33-36.
8. நந்தினிசேவியர், 2002, “தவனம்”, பெயர், இதழ், பக்: 50-57.
9. நந்தினிசேவியர், 2004, “விருட்சம்”, தூண்டில், இதழ்-07, பக்: 17-22.
10. இதயராசன், 2012, “நந்தினிசேவியரின் நெல்லிமரப்பள்ளிக்கூடம் வாசக நோக்கில் சில குறிப்புக்கள்”, மல்லிகை இதழ், பக்: 31-35.
11. முல்லை வீரக்குட்டி, 2012, “யதார்த்தம் பிறழாது சம்பவங்களை விபரிக்கும் ஆற்றல் உடையவர் நந்தினிசேவியர்”, மகுடம், இதழ்-03, பக்: 25-27.
12. யோகராசா.செ., 2007, “பேச்சுக்கும், எழுத்துக்கும், வித்தியாசமில்லாதவரான நந்தினிசேவியர்”, மல்லிகை இதழ், பக்: 04-07.
13. அருண்மொழிவர்மன், “நந்தினிசேவியரின் அயல்கிராமத்தைச் சேர்ந்தவர்கள்”, https://arunmozhivarman.com, 2015.08.19.
14. தருமராசா அஜந்தகுமார், 2021, “படைப்புக்களில் ஒலிக்கும் ஒரேயொரு குரல்- நந்தினிசேவியரின் நெல்லிமரப்பள்ளிக்கூடத்தின் ஊடான பார்வை”, https://naduweb.com, 2021, நடு, இதழ்-47.
15. பிரேமா, “சிறுகதை உத்திகள்”, http://www.tamilvu.org, 2017.08.14.
16. ஜி.ஃப்ரிஹாசன், 2021, “நந்தினிசேவியர் கதைகள்-மானுடத்தின் கலை”, https://naduweb.com , 2021, நடு, இதழ்-47.

ஆய்வாளரினால் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்கள்

1. எலிசபெத்ராணி, 2021.12.08, திருகோணமலை.
2. குணேஸ்வரன்.சு., 2021.12.11, தொலைபேசி உரையாடல் மூலம்.
3. தயாளன்.மு., 2021.12.09, தொலைபேசி உரையாடல் மூலம்.
4. நிலாவெளியூர் கெஜ தர்மா, 2021.12.08, திருகோணமலை.
5. பொய்கை ஜெயா, 2022.02.07, தொலைபேசி உரையாடல் மூலம்.
6. மேமன்கவி, 2021.12.09, தொலைபேசி உரையாடல் மூலம்.
7. ஸ்ரெப்னி, 2021.12.08, திருகோணமலை.
8. ஷெல்லிதாசன், 2022.02.06, தொலைபேசி உரையாடல் மூலம்.

சடங்குப் பாடல்கள் வெளிப்படுத்தும் இலக்கியச் சிறப்புக்கள் - ஆரையம்பதி பிரதேசத்தில் பயில்நிலையிலுள்ள சடங்குப் பாடல்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

கஸ்தூரி சர்வேஸ்வரன்[1], சி.சந்திரசேகரம்[2]
[1,2]தமிழ் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
warankasthuri1284@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இலக்கியங்கள் என்பவை குறிப்பிட்ட சமூகத்தின் பண்பாடு, வரலாறு போன்ற இன்னோரன்ன அம்சங்களை வெளிப்படுத்தும் காலத்தின் கண்ணாடிகளாக அடையாளப்படுத்தப்படுகின்றன. குறிப்பாகப் பிரதேசம் சார்ந்து எழுகின்ற இலக்கியங்கள் அப்பிரதேசத்தின் பின்னணியை தெளிவுற எடுத்தாளுகின்றன. அதனடிப்படையில் நோக்குகின்றபோது ஆரையம்பதி பிரதேசத்தில் பயில்நிலையிலுள்ள சடங்குப் பாடல்களும் அத்தன்மையதே. பொதுவாக இலக்கியங்கள் இலக்கிய நெறிமுறைக்குள் நின்று படைக்கப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக மொழி, வடிவம், பொருள் போன்ற இலக்கிய வடிவத்தினை கவனத்திற்கொண்டு படைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் சடங்குப் பாடல்கள் குறித்த பிரதேசத்தின் சடங்கு வழிபாட்டம்சங்களை எடுத்துரைக்கும் அதேவேளை இலக்கியநெறிக்குட்பட்டும் அவை பாடப்பட்டுள்ளன. அவ்வாறான சடங்குப் பாடல்களில் சுட்டப்படும் இலக்கியச் சிறப்புக்களை மையப்படுத்தியதாகவே இவ் ஆய்வு அமைகின்றது. இவ்வாய்வின் எல்லை மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரையம்பதி பிரதேசச் சடங்குக் கோயில்களுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கான முதன்மை மூலங்களாக சடங்குக் கோயில்களில் களஆய்வு செய்து பெறப்பட்ட தகவல்களும், கோயிற் பூசகர்களைச் செவ்வி கண்டு பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளும் பயன்படுத்தப்பட்டன. துணை மூலங்களாகச் சடங்குப் பாடல்கள் தொடர்பாக வெளிவந்த நூல்களும், அவை தொடர்பான பழமையான ஏடுகளும், எடுத்தாளப்பட்டன. கோயில்களிலும், கோயிற் பூசகர்களிடமும் தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு களஆய்வு முறையும், இலக்கியங்களை ஆய்வு செய்வதற்கு விவரண ஆய்வு முறையும், சங்க இலக்கியங்களுடன் சடங்குப் பாடல்களை ஒப்பிட்டு நோக்குவதற்கு ஒப்பியல் ஆய்வு முறையும் ஆய்வு முறையியல்களாகப் பயன்படுத்தப்பட்டன. பாமர மக்களின் பக்தி இலக்கியங்களாகக் காணப்படும் சடங்குப் பாடல்களில் காணப்படும் இலக்கியச் சிறப்புக்களை அடையாளப்படுத்துவதனை முக்கிய நோக்காகக் கொண்டு இவ்வாய்வு கட்டமைக்கப்பட்டுள்ளது.

திறவுச் சொற்கள் : இலக்கியச் சிறப்பு, சடங்குப்பாடல், கோயில், பிரதேசம், ஏடுகள், பூசகர்

ஆய்வு அறிமுகம்

ஆகமம் சாரா வழிபாட்டுச் சடங்குகளுக்கு உந்து சக்தியாக அமைவது சடங்குப் பாடல்களேயாகும். ஆரையம்பதி பிரதேசத்தில் சுமார் நாற்பத்தி ஐந்திற்கும் மேற்பட்ட இந்துசமயக் கோயில்கள் காணப்படுகின்றன. அவற்றில் பதினைந்திற்கு உட்பட்ட ஆலயங்களே ஆகமம் சார்ந்த வழிபாட்டை மேற்கொள்கின்றன. ஏனைய அனைத்து ஆலயங்களும் ஆகமம் சாரா வழிபாட்டுச் சடங்கை மேற்கொள்ளும் ஆலயங்களாகவே காணப்படுகின்றன. அவ்வாறான ஆரையம்பதி பிரதேசத்திற்குட்பட்ட ஆலயங்களில் பயில்நிலையிலுள்ள சடங்குப்பாடல்கள் சுட்டும் இலக்கியச் சிறப்புக்களை அடையாளப்படுத்தும் ஆய்வாக இவ்வாளய்வு அமைகின்றது.

ஆய்வு முறையியல்

பத்ததிகள், ஏடுகள், மற்றும் சடங்குப் பாடல்கள் குறித்து வெளிவந்த ஏனைய இலக்கியங்கள் என்பனவற்றிலுள்ள சடங்குப் பாடல்களை இனங்கண்டு கொள்ள விவரண ஆய்வு பயன்படுத்தப்படுகின்றது.

ஆரையம்பதி பிரதேச சபைக்குட்பட்ட கோயில்களில் பாடப்படும் பாடல்கள் பற்றி அறிந்து கொண்டு அவற்றைச் சேகரிப்பதற்காக, ஆரையம்பதி பிரதேச சபைக்குட்பட்ட கோயில்களுக்குச்

சென்று களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் குறித்த பிரதேசத்திலுள்ள பாரம்பரியமான பூசகர்களை அணுகி அவர்களைச் செவ்வி கண்டு பெறப்பட்ட தகவல்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டன.

பழந்தமிழ் இலக்கிய இலக்கண மரபுகள் ஆரையம்பதி பிரதேச சடங்குப் பாடல்களிலும் கையாளப்பட்டுள்ளனவா என்பதனை ஆராய்ந்து இலக்கியச் சிறப்பை விளக்க ஒப்பீட்டு ஆய்வு முறை கையாளப்பட்டுள்ளது. மேலும் சாஸ்திரீய இசைப் பாடல்களுக்கும், பாமர மக்களின் சடங்குப் பாடல்களுக்குமிடையிலான சிறப்புத் தன்மைகளை ஒப்பிட்டு நோக்குவதற்கும் அவ் ஒப்பியல் ஆய்வே பயன்படுத்தப்பட்டுள்ளது.

சடங்குப் பாடல்கள் வெளிப்படுத்தும் இலக்கியச் சிறப்புகள்

பொதுவாகவே இலக்கியங்கள் தனக்கென்று தனித்துவமான சிறப்பம்சங்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்டிருக்கும். அந்தவகையில் இலக்கிய வடிவமாகக் கொள்ளப்படுகின்ற சடங்குப் பாடல்களும் குறிப்பிடத்தக்க இலக்கியச் சிறப்புகளைக் கொண்டு விளங்குகின்றன. ஆரையம்பதி பிரதேச ஆலயச் சடங்குப் பாடல்களிலும் இச்சிறப்பம்சகளை உய்த்துணர முடிகின்றது. அவை கீழ்வரும் தலைப்புகளின் துணை கொண்டு ஆராயப்படுகின்றது.

- **அணிப் பயன்பாடு**

கவிஞர் கூறவந்த விடயத்தை யாவரும் விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் கூறுவதற்கு கையாள்கின்ற உத்திமுறைகளுள் அணிப் பயன்பாடும் ஒன்றாகும். ஓர் இலக்கியத்திற்கு அழகளிப்பது அணிகளாகும். அணி என்பதற்கு அழகு என்று பொருள். பண்டைக் காலந்தொட்டு இன்றுவரை இலக்கியங்களில் குறிப்பாக, பாடல்கள், செய்யுள்களில் அணிகள் தனக்கானதோர் இடத்தினை வகித்து வருகின்றன. கூறவந்த கருத்தை விளக்கும் வகையில் அணிகள் பாடல்களில் பயன்படுத்தப்படுகின்றன. சுருங்கக்கூறின் அணிகள் இல்லாத பாடல்களையோ, செய்யுள்களையோ காண்பதென்பது அரிது. ஆரையம்பதி பிரதேசத்திற்குட்பட்ட ஆலயங்களின் சடங்குப் பாடல்களும் இப்போக்கினைக் கையாண்டுள்ளன. அந்தவகையில் உவமை அணி, உருவக அணி, போன்ற அணிப்பிரயோகங்கள் சடங்குப் பாடல்களில் வெளிப்பட்டு நிற்பதை அவதானிக்க முடிந்தது. எடுத்துக்காட்டாக, ஆரையம்பதி வடபத்திரகாளி அம்மன் வீதியுலாப் பாடலில் அன்னையின் தோற்றப் பொலிவை எடுத்துக்கூறும் போது, ‘‘மானின் விழியாள், மரகத மொழியாள்’’ என்ற உருவக அணிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இதேபோல,

‘‘உலகுபுகழ் ஆரையம்பதி மேவி வந்தாய்
சுளகுசெவி யானைமுக மைந்தனை தந்தாய்
அழகுமயில் தோகை போல் ஆடையதை நெய்தாய்
நிலவுபொழி குளிர்மை போல் கருணையது ஈந்தாய்’’

(காளியம்மன் காவியம், வழங்கியவர் - கி.சர்வேஸ்வரன், ஸ்ரீவடபத்திரகாளியம்மன் ஆலய முதன்மைப் பூசகர்) என்ற பாடலில் ‘‘அழகு மயில் தோகை போன்ற ஆடை’’, ‘‘நிலவுபொழி குளிர்மை போன்ற கருணை’’ என்ற உவமையணிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

"ஞாலம் புகழ் நாரணண் தங்கையென வாகி
நவயாக சிவபாக நங்கை உருவாகி
கோடிமதி சேரழகு போல் கோலவிழி கொண்டு
கோரமுடை மகிடவதை தானது புரிந்து
பரதம்புரி பரனாரை பாதமதடக்கி
பகலொளி போன்றதொரு சோதி சுடராகி"

என்ற பாடலில் 'கோடிமதி சேரழகு போன்ற கோலவிழி', 'பகலொளி **போன்ற சோதிசுடர்'** ஆகிய இரு உவமை அணிகள் கையாளப்பட்டுள்ளன.

இதைவிட சடங்குப்பாடல்களில் எதுகை, மோனை அணிப் பயன்பாட்டையும் காணமுடிகின்றது. அந்தவகையில் ஆரையம்பதி பிரதேச ஆலயச் சடங்குப்பாடல்களில் குறிப்பாக காவியப்பாடல்களில் இவ் எதுகை, மோனை பிரயோகம் சிறப்புற எடுத்தாளப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது.

"**து**ணை என்று துயர் வென்று உயிர்காக்க வந்த நீ
துடியின் ஒலி கானத்தில் பயிர் காத்து நின்ற நீ"

"**ஐ**வருடன் பாரதப் போரது முடிக்க
ஐயை நீ பாஞ்சாலி என வந்த பத்தினி"

"**அ**ருள் வாழி திருவாழி ஆவினமும் வாழி
அந்தணரும் ஐந்தொழிற் கம்மியரும் வாழி"

என்பதில் மோனை அணிப் பிரயோகமும்,

"அ**ட்**டகரம் தொட்டுசிரம் வெட்டி உயிர் கொன்ற நீ
ப**ட்**டமரம் மொட்டுவர எட்டுத் திசையும் செய்த நீ
அ**டை**யலமர் அன்னையென அரிஏறி வந்த நீ
ம**டை**யில் அமர்ந்தே எனை துதி புரிய வைத்த நீ
ச**டை** விரித்தே சதுரமிட்டாடி நின்ற நீ
த**டை**கள் பறந்தோட வருகாளி என் தாயே" என்பதில் எதுகை அணிப்பிரயோகமும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

- **சந்தச் சிறப்பு**

தாளக் கட்டமைக்கேற்ப பாடல் வடிவமைக்கப்படுதல் சந்தமாகும். இச்சந்தச் சிறப்பு சடங்குப்பாடல்களில் அதிகம் விரவிக் காணப்படுகின்றது. அந்தவகையில்,

"ஆரமிர்த மாழிகட லேழ்சுவறி னாலம்
ஆதிமக மேருமுத லசைவுகொண் டாலும்
பாரமிர்த மாரியை மறந்தாலு மின்ன
கலிகால மதனிலுன் கட்டுரை பொய்யாமோ
ஆரமிர்த ஞாயிறென வேபொலியும் வீரமணி
கண்டசண் டப்பிர சண்டனே வானோர்

சீலமுள் ளபனஞ் காமநகர் தழையவரு
தெய்வங்கள் சுவாமியே பழைமைய னாரே''

(அடையல் பத்ததி, வழங்:அழகையா வள்ளியம்மமை)

என்ற சடங்குப் பாடல் சிறந்த சந்த அமைப்பில் பாடப்பட்டுள்ளது.

- **பா சிறப்பு**

அடிகள் இரண்டு முதலியனவாக தொடர்ந்து அடுக்கிப் பாடுவது பா ஆகும். இப்பாக்கள் ஓசைநயத்தை வேறுபடுத்தி அறிவதன் பொருட்டு நால்வகையாக பாகுபடுத்தப்பட்டு நோக்கப்படுகின்றன. அவை, வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பனவாகும். வெண்பா என்பது செப்பலோசையை உடைய பா வகையாகும். வஞ்சிப்பா தூங்கலோசையையும், கலிப்பா துள்ளலோசையையும், ஆசிரியப்பா அகவலோசையையும் உடையன. பெரும்பாலான சடங்குப் பாடல்கள் இப்பா அடிப்படையிலமைந்த பாடல்களாகவே பாடப்பட்டு வருகின்றன. அந்தவகையில் ஆரையம்பதி பிரதேச ஆலயச் சடங்குப் பாடல்களும் இத்தன்மையைக் கொண்டுள்ளன. அவற்றை இப்பாடல்கள் பாடப்படுகின்ற ஓசை அடிப்படையில் இனங்கண்டு கொள்ள முடியும். எடுத்துக்காட்டாக,

''அண்டம் ஒரு கையில் கொண்டவளாம்
அன்னை சண்டர் நிருதரை சாய்த்தவளாம்
தண்டை அணிநீல கண்ட சிவனிடம்
கண்டசர மாலை பெற்றவளாம்...'' (அடையல் பத்ததி, வழங்கியவர் - கி.சர்வேஸ்வரன், ஸ்ரீவடபத்திரகாளியம்மன் ஆலய முதன்மைப் பூசகர்)

என்ற பாடல் வெண்பா யாப்பில் அமைந்துள்ளது.

''தங்கியருளே அம்மா... தங்கியருளே
தங்கியருளே அம்மா தங்கியருளே
தங்கியருளன் அம்மா தங்கியருளே தாயே
தங்கியருளன் அம்மா தங்கியருளே...'' (பூசகர் கையேடு : வழங் - அ.கிருபைரெத்தினம்)

என்ற உருத்தணிப்பு பாடல் தூங்கலோசையில் பாடப்படுகின்றது.

மேலும் சடங்குப் பாடல்களில் ஒரு பகுதியாக அமைந்துள்ள கும்மிப் பாடல்கள் துள்ளலோசை கொண்டவாறு பாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

- மொழிநடை

அணிகளைப் போன்றே மொழிநடையும் இலக்கியத்திற்கு அழகளிப்பதாகும். அந்தவகையில் ஆரையம்பதி பிரதேச ஆலய ஆரம்பகாலச் சடங்குப் பாடல்கள் செய்யுள் மொழிநடையிலும், பிற்கால பாடல்கள் குறிப்பாக, புதுமுக கவிஞர்களால் படைக்கப்பட்ட சடங்குப் பாடல்கள் இலகுவான மொழிநடையிலும் பாடப்பட்டு வருகின்றன. அந்தவகையில்,

''ஒன்றாகி ஐந்தொழிற்கு மைந்துவித முற்றுயிருள்
நின்றநின் னன்னை தனைநினைக்க – நன்றருள்வாய்

தொந்திவயிற் றைந்துகரத் தும்பிமுகா வுன்பதத்தை
வந்தனைகள் செய்வோம் மகிழ்ந்து''

''மறையொக்கு பிறையொத்த நுதல் பெற்ற விழிசித்ர
வடிவுற்ற தனமொத்து குழலுற்ற மயிலாள்
நிறையட்ட கிரியெட்டு முறையிட்டு வழிபட்டு
நிகரட்ட கசமெட்டு முடலுக்கிரம் வெருவ
கறைபெற்ற மிடருற்ற பரமற்கு மேயன்று
கண்டுகொள் ளென்று சோதித்த புகழாள்...''

ஆகிய ஆரம்பகால பாடல்கள் செய்யுள் வடிவிலும்,

''ஓங்காரப் பொருளவனை ஈன்றவளும் நீயே
உலகு வளமான வேலனைத் தந்தவளும் நீயே
நீங்காமல் என்றும் ஆரையூர் பதியில் நிறை
கோயில் கொண்டருள்கின்ற தாயவளும் நீயே...''

''தேவியென தேடி வந்தருள் புரியும் ஜோதி
பாதியென அரனாரின் உடலிருக்கும் காளி
மாயி மகமாரி வடிவாகிவரு தேவி
தாயின் புகழ் ஓதிடின் குறையேது தோழி
எண்திசையும் ஆடையாய் அணிந்தாளும் காளி
பண்ணிசையில் பாவையாய் நடமாடும் சூலி
மண்மிசையில் காளியின் அபிஷேகம் கண்டால்
கண்தசையில் ஆனந்த நீர்வழியும் தோழி''

என்ற சில பாடல்கள் இலகுவான மொழிநடையிலும் காணப்படுகின்றன.

- **உரையாடல் பாங்கு**

உரையாடல் என்பது இருவர் அல்லது இரண்டிற்கு மேற்பட்டோர்களிடத்தில் நிகழும் கருத்துப் பரிமாற்றமாகும். உரையாடல் பாங்கில் அமைந்த இலக்கியங்களும் காணப்படுகின்றன. பெரும்பாலும் இலக்கியத்தைப் பொறுத்தவரையில் இவ்வுரையாடல் பாங்கானது வினாவிடைப் போக்கின் அடிப்படையிலேயே நிகழ்த்தப்படுகின்றது. அதன்படி உரையாடல் பாங்கிலமைந்த சடங்குப் பாடல்களும் ஆரையம்பத பிரதேச ஆலயச் சடங்குகளின் போது பாடப்படுகின்றன. குறிப்பாக மாரியம்மன் சடங்குகளில் இவ்வுரையாடல் பாணியிலமைந்த பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன. அந்தவகையில் ஆரையம்பதி ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயச்சடங்கின் போது,

மாலையொன்று கண்டுவந்தேன் மாதா கண்டுவந்தேன் - நானும்
கலையாட போகையிலே தாயே போகையிலே
கண்டுவந்த நாள்முதலாய் தாயே நாள்முதலாய் - எந்தன்
கண்ணுறக்கம் இல்லையம்மா மாதா இல்லையம்மா

என்ன மலை கண்டு வந்தாய் மகனே கண்டு வந்த – நீயும்
வண்ணமலை பவளமலை மகனே பவளமலை
முத்துமலை தங்கமலை மகனே தங்கமலை – உனக்கு
எத்தனை வேணுமடா மகனே வேணுமடா

இந்தமலை இல்லையம்மா மாதா இல்லையம்மா – அந்த
ஆரியப்பூ மாலையல்லோ தாயே மாலையல்லோ
ஆரியப்பூ மாலையென்றால் மகனே மாலையென்றால் - எனக்கு
தெரியா தான் சொல்லுமடா மகனே சொல்லுமடா…'' (மாரியம்மன் காவியம், வழங்: விஜயகுமார்)

என்ற பாடல் பாடப்படுகின்றது. இது வினாவிடைப் போக்கிலமைந்த உரையாடல் பாடலுக்கு தக்க சான்றாகும்.

- **அகத்திணை, புறத்திணை மரபு**

அகம் என்பது காதல் ஒழுக்கத்தையும், புறம் என்பது போர், வீரம், கொடைச்சிறப்பு முதலியவற்றையும் அடிப்படையாகக் கொண்டவை. இவ்வக, புற ஒழுக்கங்களைத் தழுவி பழந்தமிழ் இலக்கியங்கள் பல படைக்கப்பட்டுள்ளன. இம்மரபை சடங்குப் பாடல்களிலும் கண்டு கொள்ள முடிகின்றது. உதாரணமாக, காத்தவராயன் வரலாறு ஏழு கன்னிப் பெண்களோடு அவர் கொண்ட காதலைப் படம் பிடித்துக் காட்டுவதா அமைந்துள்ளது.

''வண்ணார நெல்லியைக் கண்டவுடன் மாமியார் என்று
உறவுகொண்டு
வண்ணாரப் பெண்ணான சாந்தழகி முத்துமோதிரத்தை கொள்ளை
கொண்டாண்டி
ஆரியமாலையில் ஆசை கொண்டான் அவன் அம்பிகை காமாட்சி
தன்னைக் கண்டான்
காரியமான வரங்கள் பெற்றே இதோ காத்தவன் வாரதைப்
பாருங்கடி…'' என்ற காத்தவராயன் கும்மிப்பாடல் வரிகள் ஆரியமாலையில் காதல் கொண்ட காத்தவ சுவாமி பற்றிய செய்தியை எடுத்துரைக்கின்றது. இதேபோன்று சடங்குப் பாடல்களிலே புறத்திணை மரபும் பாடுபொருளாக்கப்பட்டுள்ளது. தக்கனுடைய யாகத்தை அழிக்க போர் முழக்கத்தோடு வீரியம் கொண்டு புறப்பட்ட வீரபத்திரருடைய வரலாற்றை குறிப்பிடுகின்ற சடங்குப் பாடல்களில் போர் சார்ந்த புறத்திணை மரபு எடுத்தாளப்பட்டுள்ளதை காணமுடிகின்றது.

''செய்தபின் அதுகண்டு திரிசூலமோடு
செம்முளறி வாள்பரிசை திறமுடைய சக்கரம்
கைதனிலே ஆயிரம் பாணமும் எடுத்து
காளியுடனே கூழி பூத வேதாளம்
ஐயனே மெய்யனே அருளுடைய தெய்வமே
ஆதிவீர பத்திர சுவாமிதான் எழுந்து

துய்யபுகழ் சேர் தக்கன் யாகசாலை தன்னை

திறமாகவே வந்து சுற்றி நின்றனரே...'' என்ற வீரபத்திரர் காவிய வரிகள் பல்வேறு பரிகலன்களுடன் தக்கனுடைய யாகத்தை அழிக்க போர்படை கொண்டு சென்ற வீரபத்திரரது வீரத்தை சிறப்புறப் பேசுகின்றன.

பொதுவாக இலக்கியங்களில் புறத்திணை மரபானது ஆண்நிலை நின்று நோக்கப்படுகின்றது. அதாவது வீரம், போர் என்று பேசுமிடத்து ஆண்மகனது வீரமே அங்கு பெரும்பாலும் சிறப்பிக்கப்படுகின்றது. ஆயினும் நாட்டுப்புற மக்களின் சடங்குப் பாடல்கள் பெரும்பாலும் பெண் தெய்வங்களை போற்றிப் பாடும் பாங்கில் அமைந்தமையினால் அவற்றிலே பெண் தெய்வங்களின் வீரம், போர் நிகழ்த்தும் ஆற்றல் ஆகிய சிறப்புத் தன்மைகள் வெளிப்பட்டு நிற்கின்றன.

''படைகளிலே சமர் செய்து பாதகரைக் கொன்றவளே

அடையலிலே ஆட்சி செய்யும் காளிக்கா தேவியரே''

(காளியம்மன் பத்ததி, வழங்கியவர் - கி.சர்வேஸ்வரன், ஸ்ரீவடபத்திரகாளியம்மன் ஆலய முதன்மைப் பூசகர்)

''படையிலுறை பாதகர் பயந்தோடினாரே''

''பலிகொள்ள பாரதப் போர் புரிந்தாயே''

''உறுதரராசன் அவன் உயிர் வாங்கினாயே''

(காளியம்மன் பத்ததி , பூஜை ஒப்புக் கொடுக்கும் பாடல், வழங் - கி.சர்வேஸ்வரன், ஸ்ரீவடபத்திரகாளியம்மன் ஆலய முதன்மைப் பூசகர்)

''பன்னிரெண்டாயிரம் பரிகலஞ் சூழலும்
முன்னிரெண்டாயிரம் தேர்ப்படை நீளவும்
கண்ணிலே கனலொளி கதிரகோடி வீசவும்
பெண்ணிலே சிறந்தவள் போர்க்களம் ஏகினாள்...''

(காளியம்மன் காவியம், வழங் - மு.கணபதிப்பிள்ளை, ஆரையம்பதி)

- அந்தாதி அமைப்பு

அந்தாதி என்பது ஒரு செய்யுளின் இறுதியில் உள்ள எழுத்து, அசை, சீர், சொல், அடி ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்று அதற்கு அடுத்த செய்யுளில் வருவதாகும். எடுத்துக்காட்டாக, அற்புத அந்தாதியின் முடிவுச் சொல் கடைசிப்பாட்டின் இறுதிச் சொல்லோடு ஒன்றி வந்துள்ளதைக் குறிப்பிடலாம்.

''பிறந்துமொழி பயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன் - நிறத்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்

"இடர் களையாரேனும் எமக்கு இரங்காரேனும்..."

சங்கமருவிய கால இலக்கியமாகிய அற்புதத்திருவந்தாதியைத் தொடர்ந்து பல்லவ, சோழர் நாயக்கர் காலங்களிலும் அந்தாதி முறைப் பாடல்கள் வழங்கிலிருந்துள்ளன. நாயக்கர் காலத்தில் எழுந்த சிறந்த அந்தாதி இலக்கியமாக அபிராமிப் பட்டரின் அபிராமி அந்தாதியை அடையாளப்படுத்தலாம்.

"துணையும் தொழுந்தெய்வமும் பெற்ற தாயும்
சுருதிகளில் பனையும் கொழுந்தும்
பதி கொண்ட வேலும் பணிமலர் பூங்கனையும்
கருப்புச் சிலையும் பாசாங்குசமும்
கையில் அணையும் திருபுர சுந்தரியாவது அறிந்தனமே
அறிந்தே எவரும் அறியா மறையை அறிந்துகொண்டு செரிந்தேன்..."

என்றமைந்த அபிராமி அந்தாதிப் பாடல் அந்தாதி முறைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. இவ் அந்தாதி இலக்கண மரபை சடங்குப் பாடல்களிலும் கண்டுகொள்ள முடிகின்றது. எடுத்துக்காட்டாக,

"அம்மை நீ அமிர்தத்தில் அன்றுதித்தாயே
அழகான அலரி மலராக வந்தாயே
செம்மை நீ தேசியின் கனியுகந்தாயே
செவ்வந்தி மலர் மீது சேர்ந்திருந்தாயே
எம்மை யாள் அரசன் மகளாக வந்தாயே
எழிலான எக்கிசம் தனில் வளர்ந்தாயே
உண்மையாய் அக்கினி தனில் உதித்தாயே
உலகுதனில் அதிக தவமான நாயகியே

உலகுதனில் மகமாரிதாய் அவதரித்து
ஓதரிய முத்துவகை தான் உகந்து..."

இம் மாரியம்மன் காவியத்தில் உலகுதனில் என்ற சொல் முதல் பாட்டின் இறுதிவரியில் அமைந்து அடுத்த பாட்டில் தொடக்கமாக வருவதைக் காண முடிகின்றது.

- **அம்மானை**

அம்மானை என்பது தமிழ்நாட்டு மகளிர் விளையாட்டாகும். மூன்று பெண்கள் அமர்ந்து அம்மானைக் காயை வீசி விளையாடும் விளையாட்டாகும். அதாவது முதற்பெண் யாரேனுமொரு பாட்டுடைத் தலைவனை மனதிற்கொண்டு பொதுவான ஒரு செய்தியைக் கூறி காயை வீசிப் பிடித்து 'அம்மானை' என்பாள். இரண்டாவது பெண் அப்பொதுச் செய்தியோடு பொருந்திய ஒரு வினாவைக் கேட்டுக் காயை வீசி 'அம்மானை' என்பாள். மூன்றாமகள் இவ்வினாவிற்கு இரு பொருள்படும்படி விடை கூறி காயை வீசிப்பிடித்து 'அம்மானை' என்பாள். உதாரணமாக, பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் பாடிய திருவெங்கைக் கலம்பகத்து அம்மானைப் பாடலைக் குறிப்பிடலாம். அந்தகையில் முதற்பெண்,

"தேனமருஞ் சோலைத் திருவரங்கர் எப்பொருளு

மானவர் தாம் ஆண் பெண் அலியலர் காணம்மானை''

என்ற பொதுவான செய்தியைக் கூற (வண்டுகள் விரும்பும் சோலைகள் சூழ்ந்த திருவரங்கநாதர் எல்லாப் பொருளாகவும் திகழ்வாராயினும் ஆணும், பெண்ணும் அலியும் அல்லர் அம்மானை), இரண்டாம் மகள்,

''ஆனவர் தாம் ஆண்பெண் அலியலரே யாமாகில்
சானகியை கொள்வாரோ தாரமாய் அம்மானை?''

என்றவாறு வினாவெழுப்ப அதாவது அவ்வாறான திருவரங்கர் ஆணும் பெண்ணும் அலியும் அல்லாதவரேயானால் சீதையை மணந்தது ஏன் என்ற கேள்வியை எழுப்புகிறாள். இதற்கு மூன்றாம் மகள், சீதையை மணந்ததும் சாபத்தால் அம்மானை. சாபம் - பிருகு முனிவர் சாபத்தால், சிவபிரானது வில்லால் என்னும் இருபொருள்பட விடைகூறி அம்மானைக் காயை வீசி முடிப்பாள். இதனை,

''தாரமாய் கொண்டது மோர் சாபத்தாலம்மானை''

என்ற வரி சுட்டி நிற்கின்றது. இவ் அம்மானை ஓர் விளையாடும் முறையாக இருப்பினும் கவிதை புனையும் அறிவு பூர்வமான அமைப்புடையதாக இருந்ததால் இலக்கிய வடிவமாக கொள்ளப்பட்டது. இதற்கு மேற்கண்ட திருவெங்கைக் கலம்பகத்து அம்மானைப் பாடல் சான்றாகின்றது.

இத்தகு அம்மானை வடிவிலான பாடல்களை ஆரையம்பதி பிரதேச சடங்குப் பாடல்களும் அடையாளப்படுத்தத் தவறவில்லை.

''கூர்விழி தீட்டிய மையல் இயக்க
குங்குமப் கொங்கை குமிழ் செரிய
பாருலகெங்கும் நிறைந்த பராபரி
பத்தினியம்மானை ஆடினாளே'' (கணபதிப்பிள்ளை,சி, 1970)

''தென்மது ராபுரி தீயெழச் சுட்டு
செட்டி குலத்தி லவத ரித்து
தன்கண வன்துயர் தன்னை மூடத்
தையல் நின் றம்மானை யாடினாளே'' (கணபதிப்பிள்ளை,சி, 1970)

''பாதகர் நெஞ்சிற் பயங் கொடுத்துங்
பத்திசெய் வோர்க்கு அமிர்த வித்து
மேதினி யெங்கும் பரிகலஞ் சூழ
மெல்லிமுத் தம்மானை யாடினாளே'' (கணபதிப்பிள்ளை,சி, 1970)

எனவரும் சடங்குப் பாடல் அம்மானை ஆடல் பற்றியதாகும்.

- **காவியப்பாங்கு**

காவியம் என்பது கா+இயம் எனப் பகுக்கப்பட்டு காத்து இயம்புதல் என்ற பொருள் கொள்ளப்படுகின்றது. காவியம் என்பது ஓர் இலக்கிய வகை. வாய்மொழி இலக்கியம், தன்னுணர்ச்சிப் பாடல்கள், கதைப்பொதி பாடல் என்ற விரிந்த இலக்கிய வளர்ச்சி

காவியமாகின்றது. எந்த மொழியாயினும் படிமுறை வளர்ச்சியின் அடிப்படையிலேயே இலக்கிய வடிவம் பெறுகின்றது. எழுத்துக்களாக இருந்து பின்னர் சொல்லாக்கம் பெற்று தனிப்பாடல்களாகவும், செய்யுள்களாகவும் உருப்பெற்று மெல்ல மெல்ல வளர்ச்சியடைந்து கதையை தொகுத்துக் கூறும் பாடல்களாக வடிவம் கொள்கின்றன. இதன்வாயிலாக கற்பனை வளமும் அதிகரிக்கும் போது அவை காவியமாக தோற்றம் பெறுகின்றது. கதையைத் தொகுத்துக் கூறும் காவியப்பாங்கான பாடல்களின் இருப்பினை சடங்குப் பாடல்களிலும் காணமுடிகின்றது. அந்தவகையில்,

"கனகமக மாரிதன் பாலனென வந்த நீ
கரியதிரு மாயவன் திருமருக னானநீ
அனகசர வணைதன்னி லறுமுவ னானநீ
அமரருல குய்யவே யசுரரை வதைத்தநீ
வினையேவல் பில்லிவஞ் சனைநோய் தவிர்த்தநீ
வெற்றிமயி லேறிவரு வேதநா யகனும் நீ
மனமகிழ்ந் துன்கிருபை தந்துரட்சிப்பாயே
மாதுவளர் பூவுலகிற் காத்தவ ராயனே..." (கணபதிப்பிள்ளை,சி, 1970)

என்ற காத்தவராயன் காவியம் காவியபோக்கில் படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் இச்சடங்குப் பாடலில் காத்தவராயன் வரலாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

- **பள்ளு வடிவ மரபு**

பள்ளு என்பது பள்ளர்களின் வரலாற்றை எடுத்துரைக்கும் இலக்கிய வடிவமாகும். தமிழில் பெருந்தொகையான பள்ளு இலக்கியங்கள் காணப்படுகின்றன. காப்பு, கடவுள் வணக்கம், பாயிரம் முறையாக படைக்கப்பட்டுள்ளன. நூலின் தொடக்கமாக பள்ளன் தோன்றி தலைவனின் உயர்வை பேசுவான். பின்பு பள்ளன், பள்ளியர் தம் குடிப் பெருமைகளைப் பேசுவர். இவற்றைத் தொடர்ந்து நாட்டுவளம், நகர்வளம் பேசப்படும். இத்தகைய அமைப்பு முறையை சடங்குப் பாடல்களிலும் காணப்படுகின்றது. அந்தவகையில் கடல்நாச்சியம்மன் பள்ளு பள்ளு மரபை தழுவி எழுதப்பட்டுள்ளது. ஆயினும் இப்கடல்நாச்சியம்மன் பள்ளில் நெய்தல் நில வாழ் மக்களும், அவர்களுடைய குலதெய்வமான கடல்நாச்சியும் போற்றப்படுகின்றார். அந்தவகையில் ஆரையம்பதி பிரதேச சடங்கு ஆலயங்களில் கடல்நாச்சியம்மன் பள்ளு பாடப்படுவதை பின்வரும் பாடலிலிருந்து அறிந்து கொள்ள முடியும்.

**"நீறணி கங்கைச் சடையேன் எங்கள்
நித்திய கல்யா ணத்த னருளால்
தாரணியெங்குந் தழைக்கச் - சிவ
தந்திமுக கன்வந்து முந்திந டக்க
வாரணி கும்பத் தனத்தாள் - திரு
வாணி சரசு பதியெனந்தன் நாவில்..." (வழங்கியவர், செல்வநாயகி,க.)**

- **உலா அமைப்பு**

உலா என்பது பாட்டுடைத் தலைவன் ஊர்வலம் வருவதாகப் பாடப்படும் பாடல் வகையாகும். உலா இலக்கிய வகையின் இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல், வெண்பா பாட்டியல், நவநீதப்

பாட்டியல், பிரபந்த மரபியல், சிதம்பர பாட்டியல், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், பிரபந்த தீபிகை, சுவாமிநாதம் முதலிய பாட்டியல் நூல்கள் கூறுகின்றன.

''ஊரொடு தோற்றமும் உரித்துஎன மொழிப வழக்கொடு
சிவணிய வகைமை யான''

என்ற தொல்காப்பியப் பொருளதிகாரப் புறத்திணையியல் (83) நூற்பா உலா இலக்கிய வகையின் இலக்கணம் என்பதை எடுத்துரைக்கின்றது. இதைவிட சிலப்பதிகாரத்திலும், சேரசெங்குட்டுவன் உலா வருகின்ற குறிப்பும் இடம்பெற்றுள்ளது.

''தேர்கொள் வீதி விழவுஆர் திருப்புன்கூர்'' என்ற சம்பந்தர் தேவாரத்தில் தேரில் உலாவருகின்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு இலக்கணத்திலும், இலக்கியத்திலும் காணப்படும் செய்திகளை கருவாகக் கொண்டு உலா என்ற தனியானதோர் இலக்கியம் வடிவம் தோற்றம் பெற்றது.

இவ்வுலா இலக்கிய மரபைத் தழுவி பல பாடல்கள் பிற்காலத்தில் தோற்றம் பெறலாயின. அந்தவகையில் சடங்குப் பாடல்களிலும் இத்தகு உலாப்பாடல் மரபு பின்பற்றப்பட்டுள்ளது.

''கண்டந்தக் கன்னியர் கப்பலி லேறிக்
மட்டக்களப்பின் ஆரையூர் நகரிலிறங்கி
வந்தாள் கன்னியர் வந்தாள்
மழைமாரி பொழிந்திட வந்தாள் வந்தாள்...'' (அடையல் பத்ததி, வழங்: தட்சணாமூர்த்தி, கண்ணகியம்மன் பிரதம பூசகர்)

என்ற பாடல் பழந்தமிழ் உலா மரபைத் தழுவி எழுதப்பட்டதாகும்.

முடிவுரை

எனவே தொகுத்து நோக்குகின்றபோது ஆரையம்பதி பிரதேசத்தில் வழக்கிலுள்ள சடங்குப் பாடல்கள் அப்பிரதேச சடங்கு வழிபாடுகளை வெளிப்படுத்துவதோடு மட்டுமன்றி பழந்தமிழ் இலக்கியங்களில் இழையோடிக் காணப்படுகின்ற இலக்கியச் சிறப்புக்களையும் பிரதிபலிக்கின்றன என்பது புலனாகின்றது. அத்துடன் பாமர மக்களின் பக்தி உணர்வினைப் முதன்மையானதாகப் வெளிப்படுத்தும் இலக்கிய வடிவமாகக் காணப்படும் சடங்குப் பாடல்கள் பாமர மக்களின் பக்தி உணர்வாலும், கற்பனை ஆற்றலாலும் பிறந்தவை. ஆயினும் அவற்றில் பக்தி உணர்வு மாத்திரமன்றி இலக்கியச் சிறப்புக்களும், இலக்கிய நயமும் காணப்படுகின்றன என்பதனை இவ்வாய்வு பதிவுசெய்ய விளைகின்றது. மேலும் சமகாலத்தில் பழந்தழிழ் இலக்கியங்களைச் சீர்தூக்கி பார்க்கின்ற தருணங்களில் பாமர மக்களின் பக்தி இலக்கியங்களான சடங்குப் பாடல்களையும் நினைவுகூர்தல் வேண்டும் என்பதனை முக்கியப்படுத்துவதாக இவ்வாய்வு கட்டமைக்கப்பட்டுள்ளது.

உசாத்துணை

1. கணபதிப்பிள்ளை,ச., (1971), மகாமாரித் தேவி திவ்விய காரணி, விவேகானந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.
2. பொன்னம்பலம்,சி,க.,(2008), ''சரீரம் - நிஷப்தம்'', ஸ்ரீமஹாவிஸ்ணு தேவஸ்தானம், தாழங்குடா.
3. புலியூர் தேசிகன்., (2017), ''தொல்காப்பியம் - முழுவதும்'', பாரிநிலையம், சென்னை.
4. இரகுநாதன்,ம., குமரன்,ஈ., (2020), பன்முக நோக்கில் சங்க இலக்கியம்- ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு, தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
5. பத்ததிகள் (கனவு கண்ட பத்ததி, கும்ப பத்ததி, முனி பத்ததி, திரௌபதையம்மன் பத்ததி, அடையல் பத்ததி)

6. ஏடுகள் (பூசகர்களின் மந்திர ஏடுகள் மற்றும் வைத்திய ஏடுகள்)

செவ்வி கண்டோர் விபரம்

1. திரு.விஸ்வபிரம்மஸ்ரீ, இளஞ்சைவப்புலவர் கி.சர்வேஸ்வரன், ஆரையம்பதி – 02.
2. திருமதி.க. செல்வநாயகி, ஆரையம்பதி -03.
3. திரு.மு.கணபதிப்பிள்ளை, ஆரையம்பதி – 03.
4. திருமதி.அ. வள்ளியம்மை, ஆரையம்பதி- 02.
5. திரு.அ.கிருபைரெத்தினம், ஆரையம்பதி – 02.
6. திரு.இ. விஜயகுமார், வம்மிக்கேணி, ஆரையம்பதி-01.
7. திரு.ம. தட்சணாமூர்த்தி, ஆரையம்பதி -01.

சைவசித்தாந்த சிந்தனைகள் தொடர்பான ஆய்வுகள்: இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆய்வரங்க கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டது

தி.குறிஞ்சி
இந்துநாகரிகத் துறை, கலை கலாசார பீடம், கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை
sivakurinchy95@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இந்திய தத்துவச்சிந்தனைகளுள் ஒன்றாகச் சைவசித்தாந்தம் சிறப்புற்று விளங்குகிறது. வேதாகமங்களை பிரமாண நூல்களாகக் கொண்டமைந்த சைவசித்தாந்தமானது சிவசம்பந்தமுடையதாகக் கருதப்படுகின்றது. வடமொழி மரபில் அஷ்டப்பிரகரணங்களையும் தமிழ் மரபில் சங்கஇலக்கியம், பக்தி இலக்கியம் எனும் இலக்கியங்களின் வழி சைவசித்தாந்தம் பெருவளர்ச்சி கண்டது. சாத்திரங்கள் சைவசித்தாந்தத்தைக் கோட்பாட்டு நிலைப்படுத்தின. இந்த வரலாற்று முறைமையில் திருமுறைகளின் பங்களிப்பு அளவற்றது எனலாம். சமண, பௌத்த செல்வாக்கு தமிழகமெங்கும் நிறைந்திருந்த வேளையில் வணிகமரபில் இருந்துவந்த பெண்மணியான காரைக்காலம்மையார் சைவத்தின் அடிநிலைக்கருத்துக்களைத் தன் பாடல்களின் வழி முன்வைக்கிறார். அவரது தடத்தில் தேவாரமுதலிகள் சைவத்தை சமய, தத்துவ மரபின் வழி வளர்த்தெடுக்கின்றனர். திருமூலர், மாணிக்கவாசகர் மற்றும் பல்லவர், சோழர் காலங்களில் வாழ்ந்த ஏனைய நாயன்மார்கள் அதனை மேனிலைப்படுத்துகின்றனர். அந்த அடிப்படையில் பன்னிரு திருமுறை சைவத்தின் பன்முக அடையாளமாகத் திகழ்கின்றது. ஈழத்தின் அரச திணைக்களமாகத் திகழும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்து சமயம் சார்ந்து பல்வேறு பணிகளைக் காலங்காலமாக முன்னெடுத்து வருகின்றது. அவற்றுள் தலையான ஒன்றாக வருடாவருடம் நடாத்தி வருகின்ற ஆய்வரங்குகள் அமைந்துள்ளன. அவை பல்வேறு பொருண்மைகளைக் கொண்டவையாக இந்து சமயத்தின் பல்பரிணாமக் கூறுகளை காலம், கருத்து, என்ற பல்வேறு தளங்களில் வெளிப்படுத்துவனவாக அமைந்திருக்கின்றன. அந்த அடிப்படையில் இவ்வாய்வரங்குகளில் வாசிக்கப்பட்ட கட்டுரைகள் பின்பு நூலுருப்பெற்று வெளிவந்துள்ளன. அந்த ஆய்வரங்கக் கட்டுரைத்தொகுப்புக்களை அடிப்படையாகக் கொண்டே இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது. குறிப்பாக இக்கட்டுரைத் தொகுப்புக்களில் சைவசித்தாந்த சிந்தனைப்புலம் எவ்வெவ்வாறு எவ்வெவற்றினூடாக ஆராயப்பட்டுள்ளது, அதன் பொருத்தப்பாடு என்பவற்றை விமர்சன ரீதியில் மதிப்பீடு செய்கின்றது. இந்தவகையில் திணைக்களத்தின் ஆய்வரங்கக் கட்டுரைகள் எவ்வளவு தூரம் சைவசித்தாந்த சிந்தனைகளை முழுமையாக வெளிப்படுத்துகின்றன என்பதே இங்கு ஆய்வுப் பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றது. அதே போல இந்த ஆய்வின் நோக்கம் ஆய்வரங்கக் கட்டுரைகள் சைவசித்தாந்த சிறப்பினை வெளிக்கொண்டு வருவதற்கு உதவுமாற்றை அறிவதே ஆகும். இவ்வாய்வின் எல்லையாக பத்தாம், பதினொராம், பன்னிரெண்டாம் திருமுறைகள், சோழர்கால மற்றும் சமஸ்கிருத இலக்கியங்கள், உந்தி, களிறு பற்றிய ஆய்வுகள் என்பனவற்றில் காணப்படும் சைவசித்தாந்த சிந்தனைகளே எடுத்தாளப்படுகின்றது. இவ்வாய்வில் விவரணஆய்வு முறையியல், பகுப்பாய்வு முறையில் என்பன பயன்படுத்தப்படுகின்றன. அநேக சந்தர்ப்பங்களில் தரவுகள் உள்ளடக்கப் பகுப்பாய்வுக்கு (Analytical Method) உட்படுத்தப்படுகின்றன. இவற்றின் வழி இவ்வாய்வரங்கக் கட்டுரைகள் சைவசித்தாந்த சிந்தனைகளை கருத்தியல் ரீதியிலும், வாழ்வியல் நோக்கிலும் அணுகி விமர்சன நோக்கில் பகுப்பாய்வு செய்கின்றன. இதனூடாக சைவசித்தாந்தம் சார்ந்த சமகால வாசிப்புக்கள் ஆராயப்படுதல் இந்த ஆய்வின் பயனாக அமைகிறது.

திறவுச் சொற்கள்: சைவசித்தாந்தம், திருமுறை, திணைக்களம், ஆய்வரங்கக் கட்டுரைகள், கருத்தியல், வாழ்வியல்.

அறிமுகம்

சைவம், சித்தாந்தம் எனும் இரு சொற்களின் சேர்க்கையே சைவசித்தாந்தமாகும். ‘சைவம்’ சிவத்தோடு தொடர்புடையது. அதாவது சிவனை முழுமுதல் பரம்பொருளாகக் கொண்ட சமயம் சைவசமயமாகும். ‘சித்தாந்தம்’ எனும் சொல்லானது சித்தம், அந்தம் எனும் பகுப்பிற்குட்பட்டன. சித்தம் என்பது முடிவானது என்பதனையும், அந்தம் என்பது முடிவு என்பதனையும் சுட்டி நிற்கின்றது. இதன்படி சித்தாந்தம் என்பது முடிந்தமுடிவாகும். சைவசித்தாந்தமென்பது பரந்த நோக்கில் சைவசமயத்தின் முடிந்த முடிவினை எடுத்தியம்புவது எனலாம். (சாம்பசிவனார்,1997:14).

சைவசித்தாந்தமானது இறைவன் (பதி), ஆன்மா (பசு), தளை (பாசம்) ஆகிய முப்பொருட்களின் உண்மைத் தன்மையினை பிரத்தியட்சம் (காட்சியளவை), அனுமானம் (கருதலளவை), ஆப்தவாக்கியம் (சொல்லளவை) ஆகிய பிரமாணங்களின் வழி நிறுவுகின்றன. இம்முப்பொருட்கள் பற்றிய நிறுவல்கள் சைவசித்தாந்தத்தின் அடிப்படை உண்மைகளாகும்.

இவற்றை முடிந்த முடிவாகத் தர்க்க ரீதியில் எடுத்து விளக்குவதில் சைவசித்தாந்தம் சிறப்பிடம்பெற்று விளங்குகிறது. (நா.ஞானகுமாரன், 2012:13).

சுதந்திர இலங்கையில் தோற்றுவிக்கப்பட்ட சமயம்சார் திணைக்களங்களுள் இந்துசமயகலாசார அலுவல்கள் திணைக்களமும் ஒன்றாகும். இத்திணைக்களம் நீண்ட காலம் இருந்து வந்திருப்பினும் இராசதுரை அவர்கள் அமைச்சராக பொறுப்பேற்றதன் பின் இத்திணைக்களத்தின் பணிகள் விரிவாக்கம் உற்றன. இற்றைக்கு விபுலானந்தக் கல்லூரியில் இருக்கும் இராசதுரை அரங்கிலிருந்து யாழ்ப்பாணத்திலிருக்கும் நாவலர் கலாசார மண்டபம் வரை கட்டியமை என ஈழத்தில் இந்துக்கள் வாழும் நிலங்கள் எங்கும் இத்திணைக்களத்தின் பணி விஸ்தீரணம் பெற்றதெனலாம்.

அதே போல திணைக்களச் செயலாளராக க.சண்முகலிங்கம் அவர்கள் பணியாற்றிய வேளையில் வருடாந்தக் கருத்தரங்கு, பண்பாட்டு ஆய்வுமலர், இந்துக்கலைக்களஞ்சிய உருவாக்கம் என்பன நிகழ்ந்தன. திணைக்களப் பணிப்பாளராக திருமதி சாந்தி நாவுக்கரசர் இந்தப் பணிகளை மேலும் விரிவாக்கினார். அவர் பணிப்பாளராக இருந்த காலத்திலேயே இந்து சமயம், இந்து தத்துவம், இந்து கலைகள் என இந்து எனும் அடையாளத்துக்குரிய வகையில் திணைக்களங்களின் செயற்பாடுகள் எழுச்சிபெற்றன.

அவரின் பின் உமாமகேஸ்வரன் அவர்கள் பணிப்பாளராக பொறுப்பேற்றதன் பின் இப்பணிகள் தலைநகரில் இருந்து பட்டிதொட்டிவரைக்கும் மேலும் பரவின. தேசிய ஆய்வரங்குகள் சர்வதேச ஆய்வரங்குகளாக பரிணாமமுற்றன. ஆய்வரங்க சிறப்பு மலர்கள் ஆய்வரங்கக் கட்டுரைத் தொகுப்புக்கள் என்பவற்றுக்கு அப்பால் புதிய நூல்களைப் பதிப்பித்தல், தொகுத்துப் பதிப்பித்தல், மீள்பதிப்புக்கள் செய்தல், புதிய வெளியீடு என்பனவும் நிகழமுற்பட்டன. அறநெறிப் பாடசாலைகளை இயல்பூக்கத்தோடு நடாத்துதல் தேசியமட்டப் போட்டிகள் அவற்றுக்கான பாடவிதான நூல்கள், துணை நூல்கள் என்பவற்றை பதிப்பித்தல், இந்துதர்மாசிரியர் - தேசிய பரீட்சை என்பவற்றை சிறப்புற முன்னெடுத்து வருகின்றது. இவை தவிர ஆறுமுகநாவலர், சுவாமி விபுலானந்தர் ஆகியோருக்கு வருடாந்தம் விழா எடுத்தலும் நடைபெறுகிறது. இந்துசமய வளர்ச்சிக்கு ஆன்மீகப்பிரசாரகர் சான்றிதழ் கற்கை, டிப்பிளோமாகற்கை நெறி என்பனவும் நடைபெற்று வருகின்றது.

இவ்வாறான பல்வேறு பணிகள் நீண்ட காலம் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது அவற்றில் முக்கிய பணியாகத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் ஆய்வு மாநாடுகளும் அதில் படிக்கப்படும் கட்டுரைகளில் இந்திய மெய்யியலுள் ஒன்றான சைவசித்தாந்தத்தை ஆய்வரங்க மலர்களில் ஆய்வாக வெளிவந்த சிந்தனைகளின் வழி ஆராய்வதாக இவ்வாய்வுக்கட்டுரை கட்டமைக்கப்படுகின்றது.

ஆய்வுப் பிரச்சினை

திணைக்களத்தின் ஆய்வரங்கக் கட்டுரைகள் எவ்வளவு தூரம் சைவசித்தாந்த சிந்தனைகளை சமகாலத்தில் முழுமையாக வெளிப்படுத்துகின்றன என்பதே இங்கு ஆய்வுப் பிரச்சினையாக இனங்காணப்படுகிறது.

ஆய்வின் நோக்கம்

ஆய்வரங்கக் கட்டுரைகள் சைவசித்தாந்தச் சிறப்பினை வெளிக்கொண்டு வருவதற்கு உதவுமாற்றையும் சைவசித்தாந்தம் சார்ந்த சமகால வாசிப்புக்களை ஆராய்வதும் இந்த ஆய்வின் நோக்கமாகும்.

ஆய்வு முறை

இவ்வாய்வில் வரலாற்று முறையியல் முதன்மையான ஆய்வு முறையியலாகப் பயன்படுத்தப்படுகிறது. அதேவேளை தேவைக்கேற்ப விவரணஆய்வு முறையியல், பகுப்பாய்வு முறையில் என்பன பயன்படுத்தப்படுகின்றன. அநேக சந்தர்ப்பங்களில் தரவுகள் உள்ளடக்கப் பகுப்பாய்வுக்கு (Analytical Method) உட்படுத்தப்படுகின்றன.

இலக்கிய மீளாய்வு

திணைக்களத்தின் ஆய்வரங்க கட்டுரைகள் தொடர்பான ஆய்வுகள் இதுவரை நிகழ்த்தப்பட்டதாக அறியப்படவில்லை. அந்த வகையில் இவ்வாய்வுக்கான மூலநூல்களாக ஆய்வரங்க கட்டுரைத் தொகுதிகளும் சைவசித்தாந்தம் தொடர்பான மெய்கண்டசாஸ்திரங்கள், திருமுறை நூல்கள் என்பனவும் துணை மூலங்களாக சைவசித்தாந்தம் தொடர்பாக வந்த கருவிநூல்கள் கட்டுரைகள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

சைவசித்தாந்தம் தொடர்பான ஆய்வுகள்

இந்துசமயகலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட ஆய்வரங்கக் கட்டுரைகளின் தொகுப்பிலிருந்து சைவதித்தாந்தம் தொடர்பான ஆய்வுக்கட்டுரைகளை ஆராய்வதாக இவ்வாய்வானது அமைகின்றது.

காரைக்கால் அம்மையார் பாடல்களில் கடவுட்கொள்கை

சைவ உலகில் பக்தி மரபிற்கு வழிவகுத்தவராகவும், இலக்கியம் படைத்த பெண்ணடியாராகவும் திகழ்பவர் காரைக்காலம்மையாராவார். சிவனின் பதிபரத்துவத்தை விளக்கி இவரால் பாடப்பட்ட நூல்களாக திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம், அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை என்பனவாகும். சிவனை முதன்மைப்படுத்தும் அம்மையாரது பாடல்களில் கடவுட் கொள்கையானது சித்தாந்த பதிக் கோட்பாட்டின் முன்னோடியாக அமைந்துள்ளது. இவர் சிவன் நாமத்தினை வெளிப்படையாகப் பேசாதபோதும் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் ‘‘சிவகதிசேர்வார்’’ என்ற சொல் இடம்பெற்றுள்ளது. காரைக்காலம்மையார் சுருதிப் பிரமாணத்தினை ஏற்று வேதத்தினை குறிப்பிட்டுப் பாடியுள்ளார். கடவுள் கோட்பாட்டினை நோக்கும்போது இறைவன் உயிர்களுடன் ஒன்றாகவும், வேறாய், உடனாய் இருப்பவன் என்றும் இறைவன் சொரூபநிலையில் எல்லாவற்றையும் கடந்தவர், சிவம் அறிவுருவமானவர், சிவன் மூவராய் வருபவர் என்று பதியின் சொரூப நிலையினையும் எடுத்துக் கூறுகின்றார், சக்தி தத்துவத்தினையும் சிவனுடன் இணைத்துக் கூறுகின்றார். அம்மையாரது இலக்கியங்களில் கடவுட்கொள்கை சித்தாந்தக் கருத்தியல்களை உள்ளடக்கியவையாக இடம்பெற்றுள்ளன. பெருந்தத்துவமான சைவசித்தாந்தத்தின் பதி கோட்பாட்டிற்கு இவை முன்னோடியாகத் திகழ்கின்றன. (மேகலா,சி.,2015,பக்:61-63)

காரைக்கால் அம்மையார் பாடல்களில் முத்திக்கோட்பாடு

அம்மையார் உருவாக்கிய 'சிவகதி' என்னும் சைவசமய முத்திக் கோட்பாட்டை எத்தகைய மெய்யியல் பின்னணியில் உருவாக்கினார்? அவர் கூறும் முத்தியின் தன்மைகள் என்ன? பிற்காலத்தில் அவரது முத்தி பற்றிய கருத்துக்கள் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தின? குறிப்பாகச் சைவமெய்யியலில் தற்காலம் வரை செல்வாக்குப் பெற்றுள்ள சைவசித்தாந்தக்கோட்பாட்டு உருவாக்கத்திலும் அவரது கருத்துநிலைகள் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளன என்பதனைக் ஆராய்கின்றது. திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகத்தில் 'சிவகதி' என்ற சொல்லைப் பயன்படுத்தியதுடன் பதிகப்பெருவழி, கட்டளைக்கலித்துறை, முத்திரைக்கவி, உருவத்திருமெனி பற்றிய விளக்கம் என்பவற்றை முதன்முதலாக விளக்கியதுடன் 'சிவகதி' என்று சைவசித்தாந்த முத்தியை வரையறுத்தவரும் அம்மையாராகிறார். அம்மையார் முத்திக்குரிய வழிகளை எளிமையாக அமைத்துச் சைவசமய எழுச்சிக்குக் காரணமானார். இவ்வகையில் சைவசமயத்திற்கான முத்திக்கோட்பாட்டைத் தமிழிலக்கிய மரபில் முதன் முதலாக ஓரளவு வரையறுத்துக் கூறியவர் காரைக்காலம்மையாரே. சரியை, கிரியை, யோகம், ஞானம், சத்திநிபாதம், இருவினை ஒப்பு முதலிய சைவசித்தாந்தக் கலைச்சொற்களை அம்மையார் பயன்படுத்தாவிடினும் அச்சொற்கள் விளக்கும் கருத்துநிலைகளையும் திறம், தவம், ஞானம், திருவடி முதலிய கலைச் சொற்களையும் அம்மையார் பாடல்களில் காணலாம். தமிழகத்தில் சைவசமய வளர்ச்சிக்கான அடித்தளத்தை உருவாக்கிய காரைக்காலம்மையார், சைவமெய்யியல் கோட்பாட்டு நிலையில் வளர்வதற்கு ஏதுவாகிய வகையில் சைவசமய முத்திக்கோட்பாட்டைச் 'சிவகதி' என்று வரையறுத்ததுடன், அதனை அடைவதற்கான பாதையைச் சமண, பௌத்த சமயக் கருத்து நிலைகளில் இருந்து வேறுபட்ட வகையில் எளிமையானதாக, எட்டப்படக்கூடியதாகக் குறிப்பிட்டுள்ளார். இவர் முத்திக்குக் காட்டும் பாதை மிக எளிமையாக அமைந்துள்ளதுடன் சைவசித்தாந்த சாஸ்திர நூல்கள் கூறும் முத்திநிலை பற்றிய கருத்துக்கள் இவர்தம் பாடல்களில் பரவலாகக் காணப்படுகின்றது. (சந்திரசேகரம்,பொ.,2016,பக்:215-237)

பதினொராந் திருமுறையில் சிவன்

நாற்பது பிரபந்தங்களைக் கொண்டமைந்த பதினொராந் திருமுறையில் இருபத்தைந்து பிரபந்தங்கள் சிவபெருமானைப் போற்றிப் பாடப்பட்டுள்ளன. சிவபெருமானின் திருவருளைத் தோத்திர முறையிலன்றிப் பிரபந்த நெறியில் தந்தது பதினொராந் திருமுறையாகும். பதினொராந் திருமுறையில் சிவன் பற்றிய கருத்துக்கள் இவ்வாய்வில் இரண்டு முறையாக நோக்கப்பட்டுள்ளது. சமய நோக்கு, தத்துவ நோக்கு. இவற்றில் சமய நோக்கில் சிவ வடிவங்களின் பெருமையினைப் பாடுதல் திருமுறை ஆசிரியர்களிற் பலர் எண்ணற்ற சிவ வடிவங்களைத் தம் அக, புற கண்களால் கண்டு தம் பாடல்களில் பதிவு செய்துள்ளனர். பிற்காலங்களில் கோயில்களில் சிற்ப வடிவங்களை அமைப்பதற்கும் இவர்கள் பாடல்கள் முன்மாதிரியாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. (வாமன்,நா.,2016,பக்:238-250)

ஆலமர் செல்வன், உமையொருபாகன், ஆடல்வல்லான், நீலகண்டன், இலிங்கோற்பவ வடிவம், கங்காதரர், இடபாரூடர், சந்திரசேகரர், பிச்சாடனர், சங்கர நாராயணன் எனப் பல சிவ

வடிவங்களின் பெருமையும் புகழும் பாடப்பட்டாலும், உமையொருபாகன் (அர்த்தநாரீஸ்வரர்), நடராஜர், சங்கரநாராயணன் வடிவங்கள் சிறப்பாகப் பேசப்படுவதைக் காணலாம். சிவன் பற்றிய புராணக் கதைகளைக் பாடுதல், ஐந்தெழுத்துப் பெருமை, தத்துவ நோக்கில் சிவன் பொதுவாக திருமுறைப் பாடல்கள் சைவசித்தாந்த கருத்துக்களை வெளிப்படுத்துவதாகவே அமையப் பெற்றுள்ளன. பதினொராந் திருமுறையில் சித்தாந்த நோக்கில் சிவன் பற்றிய கருத்துக்களை நோக்க முடியும். பதினொராந் திருமுறை அருளாளர்களுள் சைவசித்தாந்தக் கோட்பாடுகளை அதிகம் பேசியவர்களாக நக்கீரர், காரைக்காலம்மையார், பட்டினத்தார், சேரமான் பெருமாள் நாயனார் ஆகியோர் அடையாளங் காணப்படுகின்றனர். சிவனே பரம்பொருள், இறைவனின் சர்வ வியாபகம், உலகின் தோற்றத்திற்குக் காரணன், ஒன்றாய் - வேறாய் - உடனாய் நிற்றல், சொரூப நிலை, தடத்த நிலை, சிவனே குரு வடிவாய் அருளல், முத்தி நிலை என்பன தத்துவக் கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன.

திருமந்திரம் எடுத்தாளும் சைவப் பிரிவுகள்

திருமூலரின் திருமந்திரமானது சைவம் பற்றிய சிந்தனையில் குறிப்பிடத்தக்க பங்காற்றுகின்றது. 'மேருவும் மூவுலயாளியிலங் கெழுந் தாரணி நால்வகைச் சைவமுமாமே' என நான்கு வகையான சைவப் பிரிவினை எடுத்தாண்டமை குறிப்பிடத்தக்கதாகும். சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடுஞ் சுத்தசைவம் என்னும் நான்கு சைவப்பிரிவுகளை ஐந்தாம் தந்திரத்தில் சுட்டியுள்ளார். இந்நான்கு பிரிவினைப் பற்றி மொத்தம் இருபத்திநான்கு பாடல்கள் திருமந்திரத்தில் வருகின்றது. பதினொரு பாடல்கள் மார்க்கசைவரை விபரித்த போதிலும் சுத்த சைவரைச் சுட்டுவனவாக நான்கு பாடல்களும் அசுத்த சைவரை பற்றியனவாக நான்கு பாடல்களும் என அமைகின்றன. கடுஞ்சுத்த சைவரை விபரிப்பனவாக ஐந்து பாடல்கள் இடம் பெறுகின்றன. திருமூலர் பகுப்பில் சுத்த சைவப்பிரிப்பினை தெளிவாக எடுத்தாண்டுள்ளார். 'மேலான தற்பரங் கண்டுள்ளோர் சைவசித்தாந்தரே' என்னும் அடியின் மூலம் அறியலாம். அசுத்த சைவரானவர்கள் திருவேடந் தரித்தவர்களாக சரியை, கிரியை எனும் இரு நெறியென அழுத்திக் குறிப்பிடுகின்றார். இவர்கள் காதுகளுக்கு இரு குண்டலங்களைப் பொருத்தியவர்களாகவும் தலைமாலையும் திருநீறு ஆகிய இரு முத்திரைகளைக் கொண்டவர்கள். திருமூலர் எடுத்தாளும் மூன்றாவது சைவப் பிரிவாக மார்க்க சைவம் அமைகின்றது. நல்ல வழியைப் பின்பற்றுபவராக மார்க்க சைவர் எடுத்தாளப்படுகின்றனர். இவர்கள் உருத்திராக்கம், திருநீறு ஆகிய சன்மார்க்க சாதனங்களை அணிபவர்களாகக் குறிப்பிடப்படுவர். இவரால் இறுதியாக சுட்டும் பிரிவாக அமைவது கடுஞ் சுத்தசைவம் இவர்கள் தீவிரவாதப் போக்குடைய சைவப்பிரிவினர் போல் புறவேடந்தரிக்காது ஞானநிலை கொண்டவர்களாக விளங்குபவர்களாவர். இவற்றில் சுத்த சைவத்தை சைவசித்தாந்தப் பிரிவாக விளக்கியுள்ளார் திருமூலர். திருமூலரினால் பகுக்கப்பட்ட நான்கு சைவப்பிரிவுகளைப் பற்றிய ஏனைய ஆராய்ச்சியாளர்கள் கூறியமை மற்றும் சித்தாந்த சாஸ்திர நூல்களில் உள்ளவை என்பவற்றை இவ்வாய்வுக் கட்டுரையானது மிக விரிவாக ஆராய்ந்துள்ளது.(ஞானகுமாரன்,நா.,2016,பக்:107-133)

திருமூலரின் சுத்த சைவம்

திருமூலர் தனது திருமந்திரத்தில் சமணர்கள் கூறும் பஞ்சமாபாதங்கள், புலால் மறுப்பு என்பவற்றை இவர் சுத்த சைவர்களுக்கு குறிப்பிடுவதாக கூறப்படுவதுடன். அன்பு, அஹிம்சை போன்றவற்றினையும் பேசுகின்றார். அன்பு வேறு சிவம் வேறு இல்லை இரண்டுமே ஒன்றுதான் என்கின்றார். இவர் உடம்பினை வளர்த்தவர் உயிரினை வளர்ப்பார் என்பதன் மூலம் உடம்பினை பாதுகாப்பதற்கு யோகப்பயிற்சி, பிராணாயாமம், அட்டமாசித்தி போன்றவற்றை வலியுறுத்தி நிற்கின்றார். ஐந்தாம் தந்திரம் சுத்த சைவம் எனும் பகுதி உள்ளது அதிலே சுத்த சைவம் என்றால் என்ன என்பதற்கு 'சமய வேடங்கள் இல்லாமல், ஆடம்பரம் இல்லாமல், ஆசாபாசத்தை ஒழித்து, அன்பால் மேவி பசுவைக் கட்டிப் போட்டிருக்கும் பாசத்தை இல்லாமல் ஒழித்து பசியாகிய சிவபோதகரே சுத்த சைவர்' என்கின்றார். பதி, பசு, பாசம் ஆகிய சைவசித்தாந்த முப்பொருள்களை இதிலே காண முடிகின்றது. பூணூலும் உச்சியில் குடுமியும் மட்டும் இருந்து விட்டால் அவர் உண்மையான அந்தணர் ஆகிவிட மாட்டார்கள். அவர்கள் கூறுவது பிரம்மம் ஆகிவிடாது என்கிறார். திருமூலர் ஏனையவற்றை விட சுத்த சைவத்திற்கே முதன்மை கொடுத்துள்ளார். திருமந்திரம் தமிழில் எழுந்த ஒரு தனிச் சைவசித்தாந்த நூலாகும். (அருணன்,2015,பக்:43-47)

திருமந்திரங்களும் ஆகமங்களும்

ஆகமங்களின் சாரமே திருமந்திரம் தமிழில் ஆகமங்களின் சாரம்சத்தை விளக்கும் பெருநூலாக திருமந்திரம் திகழ்வது ஒவ்வொரு தந்திரத்தின் ஊடாகவும் எடுத்துரைப்பதோடு உதாரணம் காட்டி விளக்குகின்றது. திருமந்திரம் சைவசித்தாந்த பிரமாணநூல்களை வேதங்களோடு ஆகமங்களுக்கு சிறப்பு முதன்மை கொடுப்பதை சிறப்புற வெளிப்படுத்துகிறது. (பாலகைலாசநாதசர்டமா,2016,பக்:276-284)

திருமந்திரம் உபதேசம்

திருமந்திரத்திரத்தினை திருமூலர் திருமந்திரமாலை என அழைக்கின்றார் திருமந்திரம் என்பதற்கு 'நினைப்பவரைக் காப்பது' என்பது பொருள்கொள்வர். திருமந்திரத்தில் உபதேசம் எனும் தலைப்பில் இடம்பெற்றுள்ள முப்பது பாடல்களின் விளக்கமாகவே ஏனைய மூவாயிரம் பாடல்களும் அமைந்துள்ளன. 'உபதேசப் பகுதியிலுள்ள பாடல்களை ஒருவர் ஊன்றிப் படித்து, உணர்ந்தால் அவரே மந்திரமாகி விடுவார்' எனும் கட்டுரையாசிரியரின் கூற்று அவரது நம்பிக்கையையும் ஆய்வு முன்முடிவையும் வெளிப்படுத்துகிறது. குருவருளால் தன்னையறிந்த சீவன் தானே அதுவாக இருப்பதை உள்ளத்தால் உணர்கிறது. திருமந்திரத்தின் உபதேசப் பகுதி இதுபோன்ற பல்வேறு உண்மைகளையும் தீட்சை இரகசியங்களையும் கொண்டு விளங்குகிறது. குருவும் சீடனும் கொண்டிருக்கின்ற உறவுநிலையை மிகச் சரியாக எடுத்துக்காட்டுகின்றது.(139, 1581) ஆன்மத் தெளிவு பெறுவதற்குத் குரு எந்தளவுக்கு இன்றியமையாதவர் என்பதை உபதேசப் பகுதியின் பாடல்களால் அறிய முடிகின்றது. பேரறிவுப் பெரும்பொருளான இறைவனைக் குரு காட்டிக் கொடுத்த நெறிப்படி அணுகினால் அறிவுக்கண் திறக்கப்பெறும். அருட்காட்சி சித்திக்கும் என்பது திருமந்திர உபதேசப் பகுதியின் வாயிலாக அறிய முடிகின்றது. குரு தன் உபதேசத்தால் 'மூன்றாவது கண்' எனக் கூறப்பெறும்

நினைவுக்கண்ணைத் திறந்து வைக்கிறார். திருமந்திரத்தில் உபதேசம் என்பதை வினைக்கு ஈடாய் மெய், குருவே துணை, இறைவன் காட்சி, பசு, பாசம் விலக எல்லாம் அவன் செயல், அறிவின் நிலை, திருவடி ஞானம், உபதேசப் பாடல் கருத்து எனப் பல்வேறு உபதலைப்புக்கள் மூலம் ஆராயப்பட்டுள்ளது. உயிரின் வினைக்கு ஈடாக விண்ணிலிருந்து மண்ணுற்குக் குருபிரான் உபதேசத்தால் படிப்படியாக உணர்வு பெற்று, உயர்ந்து மீண்டும் உயிர் விண்ணை அடைகிறது. திருமூலர் முதல் பாட்டில் உயிரின் தோற்றத்தை எடுத்தோதினார். பின் ஒரு மெய்க்குருபிரானின் அருளினால் பல படிநிலைகளைக் கடந்த சிரசின்மேல் இருக்கும் சிதாகாசப் பேரொளியில் இணையும் பெரும்பேற்றைப் பெறுகிறது என ஓதினார். இப்பேறுபெற்ற சித்தர்களின் பெருமைகளையும் அவர்தம் யோக நெறிகளையும் உபதேசத்தின் வழி உணர்த்தி அருளியிருக்கிறார் திருமூலர். (இராமலிங்கம்,.,2016,பக்:73-93)

திருமூலரின் சைவசித்தாந்தக் கருத்துக்கள்

திருமந்திரப் பாடல்களில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் நிரம்பிக் கிடக்கின்றன. பதி, பசு, பாசம் என்னும் மூன்றும் உண்மைப் பொருள் எனவும் விளக்குகிறார். உலகமானது கருத்தில் அமையாமல் காட்சியில் அமைகின்றது. காண்பனவாக உயிர்கள் அமைகின்றன. காட்டுபவனாக, உயிர்களை ஆட்டுபவனாக இறைவன் அமைகின்றான். அளவையியலில் சைவசித்தாந்தம் காட்சி, கருதல், உரை மூன்று அளவைகளினை முதன்மைப்படுத்துகின்றார். இவற்றில் திருமூலர் உரை அளவையையே அழுத்தமாகவும் வெளிப்படையாகவும் வலியுறுத்துகிறார். இதனோடு காட்சி, கருதல் அளவை பற்றியும் சில குறிப்புக்கள் வருகின்றது. பொருள்களைக் காட்சி அளவை மூலமும், தெய்வத்தை கருதல் அளவை மூலமும் அறியக்கூடும் என்கின்றார். இம்மூன்று அளவைகளையும் கொண்டு முப்பொருட்களை திருமூலர் நிறுவுகின்றார். பதியினை குறிப்பிடும் போது அவரின் ஐந்தொழில்கள், இரண்டு நிலைகள், எண்வகை குணங்கள் என்பவற்றுடன் மும்மலங்கள், முத்திபெறுவதற்கான வழி போன்றன கூறப்படுகின்றன. (ஆறுமுகத்தமிழன்,க.,2015,பக்:53-56)

திருமந்திரத்தின் கடவுட்கோட்பாடு

திருமந்திரத்தின் சிறப்பு, வேத உபநிடதங்களில் இருந்து பன்னிரு திருமுறை வரையான கடவுள் கோட்பாடு பற்றிய கருத்தியல்களை பட்டியலிடுகிறார். தொடர்ந்து திருமூலரின் பக்திநிலை, சிவனை முழுமுதல் பொருளாகக் கூறும் தன்மை, சிவசக்தி வடிவம், உள்ளம் பெருங்கோவில், அன்பே சிவம் என்பனவற்றை விளக்கி சிவகதிக்கு வழிகாட்டும் மந்திரங்களாக திருமந்திரம் அமைந்திருப்பதை சிளாகித்துரைக்கின்றார். (மகாலிங்கம்,சி.,2016,பக்:350-373)

திருமூலர் கண்ட சிவம்

சிவபெருமானிடம் உபதேசம் பெற்ற எட்டு ஞானிகளுள் திருமூலரும் ஒருவராவர். ‘‘சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம்’’ என திருமூலர் திருமந்திரத்தினை அழைக்கின்றார். அதாவது சதாசிவக் கடவுளுடைய தத்துவத்தினின்றும் வெளிப்பட்ட தமிழ்மறை என்கின்றார். இவரின் திருமந்திரத்திலுள்ள ஒன்பது தந்திரங்களும் ஒன்பது சைவ ஆகமங்களாகும். நடுநிலைமை தவறாதவர்கள் சிவனாக விளங்குவார்கள் என்கின்றார். சமயத்தினை வாதப்பொருளாக்காமல்

அதனை வாழ்க்கை நலன் நோக்கி அனுட்டிக்க வேண்டும் எனவும் அன்பே சிவம் எனவும் சிவனை அடைவதற்குரிய வழி அன்பு எனவும் சுட்டுகின்றார். (தில்லைநாதன்,தி.,2015,பக்:48-52)

திருமந்திரத்தில் பசுக்கோட்பாடு

பிரபஞ்சத்தின் இயக்கவியலுக்கு அடிப்படையாக இருப்பது ஆன்மாக்கள் அந்த ஆன்மாக்களையே சைவசித்தாந்தம் பசு என்கிறது. இக் கட்டுரை பசு என்னும் சொல்லை பல்வேறு தளங்களில் விளக்கியுரைத்து அதன் உண்மைத்துவம் இலக்கணம், அதன் இயல்புகள், பன்மைத்துவம், மூவகை, யோனிபோதங்கள் அவற்றின் பசுக்களின் இயல்புகள் என்பனவற்றை விளக்குகிறது. அதே வேளை பசுவுக்கும் பாசத்திற்கும், பசுவுக்கும் பதிக்கும் இடையில் இருக்கக் கூடிய தொடர்பினை ஆராய்கிறது. பசு என்னும் சொல் திருமந்திரத்தில் பல்வேறு பொருள்களில் கையாளப்பட்டுள்ள போதும் உயிர்பற்றிய கருத்தியலை விளக்குவதை முதன்மையுற்று காணுவதை இக்கட்டுரை ஆசிரியர் ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். (வேதநாதன்,மா.,2016,பக்:308-322)

திருமந்திரத்தில் ஆணவம்

சைவசித்தாந்தத்தில் மூலமலமாக வர்ணிக்கப்படும் ஆணவம் பெறும் முக்கியத்துவம், ஆணவம் என்பதன் பொருள் உண்மையியல்பு, ஆன்மாவைப் பற்றி நிற்றல், மூவகை அவத்தை மூவகை இயல்புகள் ஆணவத்தால் பீடிக்கப்பட்ட ஆன்மாவின் நிலை என்பன விளக்கப்படுகின்றன. உயிர்களுக்கு அறியாமையைத் தரும் ஆணவத்தின் நின்றும் அவை விடுபட உதவுவனவாக நாற்பாதங்கள், மந்திர உட்சாடனம், சக்தி உபாசனை என்பனவற்றை எடுத்துரைக்கின்றன. முத்தி நிலையில் ஆணவத்தின் நிலை பற்றி விளக்கி சைவசித்தாந்த ஆணவக் கருத்தியலை தமிழில் கூறிய முன்னோடி நூலாக திருமந்திரத்தை அவர் இனங்காண்கின்றார். (வாமன்,நா.,2016,பக்:238-252)

திருமந்திரத்தில் கன்மம்

ஆகந்துக மலங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இக்கன்மம் சைவசித்தாந்தத்தில் பெறும் முக்கியத்துவம், சொற்பொருள் விளக்கம், உயிருக்கும் கன்மத்துக்குமான இடைவினை, மூவகைக் கன்மங்கள் கன்மத்திற்கும் மறுபிறப்புக்கும் இடையிலான தொடர்பு, வினைதரும் துன்பம் என்பன எடுத்தரைக்கப்பட்டு முயல் தவம் செய்து, இருவினை ஒப்பு அடைவதனூடாக கன்மத்தின் நின்றும் ஆன்மா ஈடேற்றம் பெறமுடியும் என்பதைக் இக்கட்டுரை விளக்குகின்றது. (சுபராஜ்,ந.,2016,374-385)

திருமந்திரத்தில் மாயை

இக்கட்டுரையில் ஆசிரியர் திருமந்திரத்தின் நூலமைப்பு, காலம், திருமந்திரத்தின் சிறப்பு அது கூறும் சைவசித்தாந்த மரபு என்பனவற்றை எடுத்துரைக்கின்றார். மாயை என்பதை விளக்கி சைவசித்தாந்த தளத்தில் அதன் இயல்புகளை வகைப்பாட்டை எடுத்துரைத்து, அது கூறும் முப்பத்தாறு தத்துவங்களையும் திருமந்திரத்தின் ஊடாக விளக்கி உரைக்கின்றார். மாயாதத்துவங்களை ஒழுங்குறக் கூறாவிடினும் திருமந்திரம் சர்வசிரு‘டி, உடலின் பஞ்சபேதங்கள், அவத்தைகள் பற்றிய பகுதியில் அவைபற்றி விரிவாகக் கூறுகிறார். இந்த

அடிப்படையில் மாயாதத்துவ விளக்கத்தை சைவசித்தாந்த தளத்தில் திருமந்திம் எடுத்துரைப்பதாக முடிவுறுத்துகிறார். (சந்திரசேகரம்,பொ.,2016,பக்:215-238)

திருமூலர் கூறும் முத்திக்கோட்பாடு

திருமந்திரமானது தோத்திரம், சாஸ்திரம் எனும் இருநிலைப் பண்புகளையும் கொண்டமைந்துள்ளது. இதனடிப்படையில் சித்தர் மரபினையும், சைவசித்தாந்த செல்நெறிகளையும், யோகப்பயிற்சி நுட்பங்களையும் மரபுரீதியாகச் செழுமையடையச் செய்ததில் திருமூலரின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். சைவசித்தாந்தம் வேதங்களையும் ஆகமங்களையும் மூலநூலாகக் கொள்கின்றது. திருமந்திரம் ஆகமங்களின் சாரமாக காணப்படுகின்றது. சைவசித்தாந்தம் என்னும் சொற்பதத்தை திருமந்திரமே முதலில் குறிப்பிட்டுள்ளது. இதில் அக்கோட்பாட்டின் அடிப்படை அம்சங்களான கடவுள், உயிர், தளை பற்றியும், உயிர்களுடன் தொடர்பாக அதன் உயர் இலட்சியமாகிய வீடுபேறு, சாதனைகள் பற்றிய சிந்தனைகளையும் திருமந்திரம் விளக்கிநிற்கின்றது. நூறு சமயங்கள் இருந்தாலும் வீடுபேற்றை அளிக்கும் நெறி சிவநெறி என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். சைவசித்தாந்த தத்துவத்தில் உயிர்க்கோட்பாடுடன் தொடர்பான முத்தி பற்றிய சிந்தனையில் பதி – பாசம் - குரு – திரிமல நீக்கம் - இருவினை ஒப்பு – சக்திநிபாதம் - மற்றும் சாதனங்கள் முதலியன தொடர்புறுகின்றன. இவை தொடர்பான முழுமையான விடயங்களையும் திருமந்திரத்தில் கண்டுணரலாம். குறிப்பாக ஒன்பதாம் தந்திரத்தில் அதிகளவில் குறிப்பிடப்பட்டுள்ளது.இவ்வாய்வில் திருமந்திரம், ஆன்மாக்களின் உயர் இலட்சியம், சித்தாந்த முத்தியும் திருமந்திரச் சிந்தனைகளும், மோட்ச சாதனங்கள் என ஆன்மாக்களின் உயரிலட்சியமாக எடுத்தாளப்படுகின்ற முத்தி பற்றியும், முத்தியின் இயல்பு, மற்றும் சாதனங்கள் பற்றியும் மிக விரிவாக இவ்வாய்வில் ஆராயப்பட்டுள்ளது. இந்நூலானது சைவசித்தாந்த மூலநூல் எனக்கருதும் அளவிற்கு சித்தாந்த கருத்துக்களைக் எடுத்துரைக்கின்றது. (ரமணராஜா,சி.,2016,பக்:92-106)

திருமந்திரத்தில் பக்தி

இக் கட்டுரையானது திருமந்திரத்தின் பெருமைகளையும் சிவனடியார் இயல்புகளையும் எடுத்துரைக்கின்றது. முத்தியடைவதற்கான அனைத்து உபாயங்களையும் விளக்கி நிற்கின்றது. திருமந்திரத்தின் பல்வேறு உத்திகளின் ஊடாக பல்வேறு நிலையில் பக்தி வெளிப்பட்டிருப்பதாக விபரிக்கின்றது. (றூபி வலன்ரீனா பிரான்சிஸ்ஸின்,2016,பக்:201-214)

அடியார் வழிபாடு

ஆன்மா முத்தியின்பத்தை அனுபவிக்க உதவும் மார்க்கங்களில் ஒன்றான ‘‘அடியார் வழிபாடு’’ பற்றி தி.செல்வமனோகரன் கட்டுரை அமைந்துள்ளது. திருமந்திரம் பற்றிய அறிமுகத்தோடு சங்கமம் என்னும் சொல் தமிழ் வந்த வரலாற்றை கூறி திருமந்திரத்தில் அச்சொல் இல்லை என்பதையும் கூறி அடியார் எனும் சொல்லே பெரிதும் பயன்பட்டுள்ளது என விளக்குகிறார் அது அடியார் வழிபாட்டினையும் தொண்டர் பெருமையாகவும் அணைந்தோர் இயல்பையும் கூறி அவர்களின் பெருமை, அவர்களை வழிபடுவதால் ஏற்படக்கூடிய பயன் என்பவற்றை சித்தாந்த

சாஸ்திர வழி விளக்கி திருமந்திரத்தில் அதனை எடுத்துக் காட்டுகிறார். (செல்வமகோகரன்,தி.,2016,பக்:252-263)

திருமந்திரத்தில் ஆலய வழிபாடு

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி, அந்தடிப்படையில் திருமதி விக்னேஸ்வரி பவநேசன் எழுதிய ''திருமந்திரத்தில் ஆலய வழிபாடு'' எனும் கட்டுரை கவனத்தை கோருகின்றது ஆலயம் எனும் கருத்தியல் தமிழ்ச் சூழலில் எழுந்து வளர்ந்த வரலாற்றை எடுத்துரைத்து சிவவழிபாடு, அன்பேசிவம் என்னும் எண்ணக்கருக்களின் வழி திருக்கோயில் முதன்மையை எடுத்துரைக்கிறார். திருக்கோயிலில் அடியவர் நிகழ்த்தக் கூடிய சரியா, கிரியா நெறிகளை விளக்குவதன் ஊடாக ஆலய வழிபாட்டின் முதன்மையை எடுத்துரைத்து நிற்கின்றார். (விக்னேஸ்வரி,ப.,2016,பக்:323-337)

திருமந்திரத்தில் வாழ்வியல்

திருமந்திரம் அறநூலாக தாந்திரிக நூலாக சாஸ்திர நூலாக தோத்திர நூலாக இருப்பதைப் போல வாழ்வியல் நூலாகவும் இருக்கின்றது என்பதை கலாநிதி சி. செல்வரஞ்சிதம் அவர்களின் ''திருமந்திரத்தில் வாழ்வியல்'' என்னும் கட்டுரை விளக்கி நிற்கின்றது. வாழ்வியலின் ஒழுங்கமைப்புக்களை கூற விளைந்த திருமூலர் பஞ்சமாபாதகங்களை செய்யாது இருத்தல் வாழ்வின் நிலையாமைகளை எடுத்துரைத்தல் என்பனவற்றை எடுத்துக் கூறி வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நியமங்களாக பெரியோரை துணைக்கொள்ளல், விருந்தோம்பல், அன்பு, கல்வி, அறம் என்பவற்றோடு சமூகத்தோடு ஒன்றி வாழ்தல் என்பவற்றையும் எடுத்துரைத்து அது வாழ்வியல் நூலாக திகழ்வதை நிறுவுகிறார். (செல்வரஞ்சிதம்,சி.,2016,பக்:276-284)

சோழர் காலத்தில் சமஸ்கிருத நூல்களில் சைவ சித்தாந்தம்

சோழபெரு மன்னர் காலத்தில் தமிழ் இலக்கியம் பெருவளர்ச்சி பெற்றது சமஸ்கிருத இலக்கியத்தில் அத்தகைய வளர்ச்சியினைக் காண முடியாவிட்டாலும் சமயம், கலை, தத்துவம் போன்ற துறைகளில் சமஸ்கிருதத்தில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இராஜ ராஜன் காலத்தில் சமஸ்கிருதக் கல்வியானது தமிழகத்தில் உயர்நிலை பெற்றிருந்தது. தமிழ் சைவசித்தாந்த மெய்யியல் வளர்ச்சியில் அரும் பெரும் சாதனைகளை நிலைநாட்டிய மெய்கண்டார் வாழ்ந்த காலம் ஆதலால், சமஸ்கிருத சித்தாந்த நூல்கள் எழுச்சி பெற்றமையைக் காணமுடியும். தமிழ்நாட்டின் அரும்பெரும் சொத்தாகப் போற்றப்படும் சைவசித்தாந்தமும் அதன் சாத்திர நூல்களும் தமிழ்மொழியில் சமஸ்கிருத மொழியிலும் விரவிக் கிடக்கின்றன. சைவசித்தாந்த ஞானத்தை இனிது விளக்கும் காலத்தால் மிக முற்பட்ட நூல்கள் சிவாகமங்களாகும். தமிழ்ச் சைவசித்தாந்த சாத்திரங்கள் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் பற்றியே மிகுதியாகப் பேசுகின்றது. எனினும் சோழர்கால சமஸ்கிருத சித்தாந்த நூல்கள் பற்றிய பூர்வாங்க ஆய்வுகள் கூட இன்னும் பெரியளவில் நடைபெறவில்லை என்றே கூறலாம். அவ்வாறான ஆய்வு முயற்சிகள் வெளி வரும் போது தான் சமஸ்க்ருத மொழியில் சைவசித்தாந்தக் கோட்பாடு பற்றி முழுமையாக அறியலாம். (கலைவாணி,இ.,2009,பக்:177-188)

திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் நூல்களில் ஆணவம்

திருவுந்தியாரிலும் திருக்களிற்றுப்படியரிலும் பின்நாட்களில் சைவசித்தாந்தத்தில் நாம் தெள்ளெனக் காணும் சைவ மெய்யியலின் கலைச்சொற்களைக் காண இயலவில்லை. சைவ மெய்யியலில் ஆணவமலமே மும்மலங்களில் அடிப்படை மலம் எனக் கூறப்படுகின்றது. தான் என்ற உணர்வையே இம்மலம் புலப்பகுத்தி நிற்கிறது. அவ்வுணர்வை விலக்க வேண்டும் என்ற இலக்கை சைவசமயமும் முன்வைத்தது. இதை ஒட்டியே உள்ளம் உருகுதல், அன்பு செய்தல் என சைவ இலக்கியங்கள் உருக் கொள்கின்றன. ஆணவ மலத்திற்கும் அறிவுக்கும் இடையிலான உறவையும் சைவசித்தாந்தம் சிந்தனை அறிந்திருந்ததாகத் தெரிகிறது. சைவச் சிந்தனையில் ஆணவமலம் அகற்றல் பதிக்கு அடிமையாதலோடு இரண்டற இணைத்தே நிகழுகிறது. ஆணவமலம் அகற்றலும் பதிக்கு அடிமையாதலும் இயங்கியல் ரீதியாகத் தொடர்பு கொண்டுள்ளன. இருப்பினும் ஆணவமலம் அகற்றல் எனும் சைவக்கோட்பாட்டிற்கு நாம் இத்தனைச் சுதந்திரமாக விளக்கம் அளிக்க முடியாது என்றும் இம்மலத்தை அகற்றல் பதிக்கு அடிமையாதலுடன் மிக இறுகக்கட்டப்பட்டுள்ளது என்றும் விளக்கப்படுகிறது. (முத்துமோகன்,ந.,2009,பக்:189-196)

சேக்கிழார் காட்டும் சைவசித்தாந்தம்

தொண்டை நாட்டின் குன்றத்தூரைச் சார்ந்த சேக்கிழார் குலோத்துங்க சோழன் காலத்தில் வாழ்ந்தவர். அவரால் சங்க இலங்கியங்கள் தேவாரம், திருவாசகம், திருமந்திரம் முதலிய நூல்களில் சித்தாந்தக்கருத்து மூலங்களை அறிந்து கொள்ள முடிகிறது. சித்தாந்த தத்துவத்தில் முப்பொருள் உண்மை முக்கியமானது. பதி, பசு, பாசம் ஆகியன சித்தாந்தம் கூறும் உட்பொருள். பதி குறித்துப் பேசுகின்ற சைவசித்தாந்தம் தடந்தநிலை, சொரூபநிலை ஆகிய நிலைகளைப் பதிக்குக் குறிப்பிடுகின்றது. பசுக்கோட்பாட்டில் பன்மை வாதம் பேசுகின்றது. பாசமானது வியாபகமான பசுக்களைக் கண்டுண்ட நிலையின் கீழ்வைத்திருக்கும் இது ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றை உள்ளடக்கியது. இம்மும்மலங்களுள்ளும் சேக்கிழார் வினைக் கோட்பாட்டினை அதிகம் சுட்டியுள்ளார். பசுக்கள் வீட்டின்பத்தைப் பெற சில வழிகளைக் காட்டுகின்றது சித்தாந்தம். பதியை நோக்கிய ஆன்மாக்களின் பயணத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நெறிகளைச் சித்தாந்தம் தந்துள்ளது. பதியாகிய சிவனை மந்திரங்களால் வழிபடும் நெறியும் சைவசித்தாந்த தத்துவத்தில் முக்கியமாகின்றது. இத்தத்துவத்தில் பஞ்சாட்சரத்தின் பெருமை சிறப்பாகப் பேசப்படுகின்றது. பக்திச்சுவை நனி சொட்டப்பாடப்பெற்ற பெரியபுராணத்தில் தத்துவக் கருத்துக்களும் சிறப்பாக வெளிப்படுத்தப் பட்டுள்ளன. திருமுறைகளில் வழங்கப்பெற்றிருந்த சிந்தாந்த கருத்துக்கள் பெரியபுராணத்தில் மேலும் செழுமைப்படுத்தப்பட்டு உள்ளன. இவ்வாறு சைவ சித்தாந்தத்தின் அடிப்படைகளைக் காவியத்தில் விளக்கியுரைத்த சேக்கிழாரின் பணி சைவ சித்தாந்த தத்துவ வரலாற்றில் குறிப்பிடத்தக்கதொரு நன்முயற்சியாகும். (பிரசாந்தன்,ஸ்ரீ.,2009,பக்:197-210)

முடிவுரை

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்து சமய, தத்துவ வளர்ச்சிக்கு நீண்ட காலமாகப் பெரும் பங்காற்றி வருகிறது. அவற்றுள் தலையானதாக வருடாவருடம் நிகழ்த்திவரும்

ஆய்வரங்குகள் அமைந்துள்ளன. அவ்வரங்குகளில் நிகழ்த்தப்பட்ட உரைகள் ஆய்வுக் கட்டுரைத் தொகுப்புக்களாக, வெளிவந்துள்ளன. அந்நூல்களில் சைவசித்தாந்த சிந்தனைகள் பற்றிப் பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன. குறிப்பாகக் காலரீதியாகக் காரைக்காலம்மையார் தொட்டு சாத்திர நூல்களான உந்தி, களிறு வரையான கட்டுரைகள் இங்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. இவை சைவசித்தாந்தத்தின் முப்பொருட்தத்துவம், முக்தி, அதற்கான வழிகள் பற்றி ஆராய்கின்றன. அந்தவகையில் இவ்வாய்வரங்க மலர்கள் சைவசித்தாந்த மெய்யியலை நுண்ணாய்வுக்கு உட்படுத்துகின்றன. சாத்திரமயப்படுவதற்கு முற்பட்ட சைவசித்தாந்த சிந்தனைகள் இனங்காண்பிக்கின்றன. சிவஞானபோதப் பெருநூலுக்கு முன்வந்த சிந்தனைகளை எடுத்தாராய்ந்து சாத்திர நூல்களுடன் ஒப்பிடுகின்றன. இதனூடாக சைவசித்தாந்த சிந்தனைகளை மக்கள்மயப்படுத்துவதற்கு உதவுகின்றன. புதிய தலைமுறையினரிடம் தற்கால மொழி வடிவத்தின்வழி சைவசித்தாந்த சிந்தனைகளை இற்றைப்படுத்துகின்றன.

உசாத்துணை

1. இரகுபரன்,க., பிரசாந்தன்,ஸ்ரீ, (பதி) 2013, இந்து சமயமும் அவைதிக நெறியும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
2. இரகுபரன்,க., பிரசாந்தன்,ஸ்ரீ, (பதி) 2017, பன்முக நோக்கில் பதினொராம் திருமுறை, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
3. பத்மநாதன்,சி., இரகுபரன்,க, பிரசாந்தன்,ஸ்ரீ, (பதி) 2011, அறநெறிக் காலமும் தமிழகப் பண்பாட்டு மரபுகளும், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
4. இரகுபரன்,க., தேவகுமாரி,ஹ (பதி) 2015, பிரபந்த மாலை, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
5. இரகுபரன்,க.,(பதி),2008, பக்தி நெறியும் பண்பாட்டுக் கோலங்களும், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு. கொழும்பு.
6. இரகுபரன்,க., பிரசாந்தன்,ஸ்ரீ, 2014, மூவர் தமிழும் சைவ நெறியும், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம். கொழும்பு.
7. பத்மநாதன்,சி., இரகுபரன்,க, 2009, சோழப் பேரரசும் பெருநெறியும், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம். கொழும்பு.
8. குணபாலசிங்கம் வ. - (2015) ‘‘முருகக் கடவுள் மீதான திருவிசைப்பா’’, திருமுறையும் சைவத்திருநெறியும், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம். கொழும்பு.
9. குணபாலசிங்கம்.வ, (2017), ‘‘திருமுருகாற்றுப்படை வெளிப்படுத்தும் முருக வழிபாட்டு முறைகள்’’, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம். கொழும்பு.

சைவ சித்தாந்தம் மற்றும் கிறிஸ்தவ வேதாகமம் கூறும் ஆன்மா எனும் எண்ணக்கரு – ஓர் ஒப்பீட்டு ஆய்வு

சித்திரவேல் மேரி ஆஞ்சலா[1], சோ.ஜெகநாதன்[2]
[1,2]தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்
[1]anjalasuthan@gmail.com, [2]jeganathans@esn.ac.lk

ஆய்வுச் சுருக்கம்

தற்கால சமூகத்தில் நடைபெறுகின்ற பாரிய பிரச்சினையாக ஒழுக்க மீறல்கள் காணப்படுகின்றன. ஒழுக்கம் என்பது மனிதனால் உருவாக்கப்பட்ட ஒழுங்குமுறைமையாகும். இதனால் மனிதனே தன்னால் உருவாக்கப்பட்ட ஒழுக்கத்தை பின்பற்ற அஞ்சுகிறான். ஆனால் இவ்வொழுக்கம் தொடர்பான விடயங்களை இறைவன் கூறினார் என்றால், அதனை எந்த வித சந்தேகங்களுமின்றி ஏற்றுக்கொள்வான். அந்த வகையிலேயே உலகில் சமயங்களும் அதனைப் பின்பற்றும் சட்டங்களும் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இந்து மற்றும் கிறிஸ்தவ சமயங்கள், ஆன்மாவைப் பற்றி விளக்கும் போது பல்வேறு வகையான ஒழுக்கங்களைக் கூறி நிற்கின்றன. அவற்றினைத் தெளிவுபடுத்துவதன் மூலம் இச்சமயங்களைப் பின்பற்றுபவர்கள் மட்டுமல்லாது ஏனையவர்களும் ஏற்கும் வகையில் அறத்துடன் தொடர்புபட்டதாக இவ்வாய்வு காணப்பபடுகின்றது. இந்த ஆய்வானது சைவ சித்தாந்தம் மற்றும் கிறிஸ்தவ வேதாகமம் கூறும் ஆன்மா தொடர்பான விடயங்களை ஒப்பிடுவதுடன், ஆரம்ப காலம் தொடக்கம் தற்காலம் வரை நிலவி வருகின்ற ஆன்மீகம் மற்றும் ஒழுக்கம் தொடர்பான பிரச்சினைகளுக்கு சைவசித்தாந்தத்திலும் கிறிஸ்தவ வேதாகமத்திலும் கூறப்படுகின்ற ஆன்மா தொடர்பான கருத்துக்கள் மூலம் எவ்வாறான தீர்வுகளை முன்வைக்கலாம் என்பதனை முக்கிய நோக்கமாகவும் கொண்டது. இந்நிலையில் இவ்வுலகில் வாழுபவர்கள் சரியானது எது பிழையானது எது என்று அறிந்தும் கூட நன்மையானவைகளை விடுத்து தீமைகளையே அதிகம் செய்கின்றனர். இவ்வாறான நிலை தொடர்ந்தும் காணப்பட்டால் இவ்வுலகமானது மிகவும் பிரச்சினைக்குரிய ஒன்றாக மாறிவிடும். சூழலை மாசுபடுத்துவதனால் இப் பூமியானது வெகு சீக்கிரத்தில் அழிந்து விடும் என்று எவ்வாறு விஞ்ஞானிகள் அஞ்சுகின்றார்களோ அதே போலவே இவ்வுலகில் ஒவ்வொரு மனிதன் செய்யும் தீமையான காரியங்கள் சமூகத்தை சீரழித்து விடும் என்பதும் அச்சத்துக்குரிய விடயமாகவே காணப்படுகின்றது. இந்நிலையினை மாற்றியமைக்க ஆன்மா தொடர்பான விழிப்புணர்வும் புரிதலும் கட்டாயமானதாகக் காணப்பட வேண்டும் என்பதை விபரிப்பு, ஒப்பீட்டு, விமர்சனம் முதலான முறையியலினூடாகத் தெளிவுபடுத்த இந்த ஆய்வு முனைகிறது. .

திறவுச் சொற்கள் : கிறிஸ்தவ வேதாகமம், சைவசித்தாந்தம், அறநெறி, பசு, ஆத்துமா

ஆய்வின் அறிமுகம்

மெய்யியலின் ஒரு பிரிவான சமய மெய்யியலில் ஒரு முக்கிய விடயமாக ஆன்மா எனும் ஆய்வு காணப்படுகின்றது. இவ் ஆய்வானது சமயத்தை மெய்யியலின் பார்வையிலும் விஞ்ஞான பார்வையிலும் சிந்திக்க வைக்கின்றது. அந்த வகையில் ஆன்மா என்பதற்கான வரைவிலக்கணத்தை நாம் உடனடியாக கூறிவிட முடியாது. அதற்கான காரணம் என்னவெனில் ஆன்மாவை ஏற்கும் பலரிடம் அது தொடர்பான வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுவதுடன் அதனை மறுக்கும் அதிகமானோர் இன்றைய நவீன காலத்தில் அதிகமாக காணப்படுகின்றனர். ஆனாலும் ஆன்மா என ஒன்று இல்லை என முழுமையாக மறுக்க முடியாத நிலையில் இக்கால சமூகம் காணப்படுகின்றது. இருப்பினும் ஆன்மா பற்றிய ஆய்வானது இன்றியமையாத ஒன்றாக இன்றும் காணப்படுகின்றது. அந்த வகையில் பொதுவாக நோக்கின் ஆன்மா என்பது ஒவ்வொரு மனித உடலுக்குள் இருந்து அவனைச் செயற்பட வைக்கும் ஒரு சக்தியாகும். இவ்வான்மாவானது உடலை இயற்கையோடும் இறைவனோடும் தொடர்பு கொள்ளவதற்கு உதவுகின்றது. இதனடிப்படையில்

1. ஆன்மா உண்மையில் உள்ளதா?
2. ஆன்மாவை பார்க்க முடியுமா?
3. ஆன்மாவின் இயல்புகள் எத்தகையது?
4. உடலுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள தொடர்பு என்ன?

5. மனிதன் இறந்த பின் ஆன்மா எங்கே செல்லும்?

6. அதன் நோக்கம் என்ன?

7. ஆன்மா தன்னுடைய நோக்கத்தை அடைய என்ன செய்ய வேண்டும்?

எனும் கேள்விகளுக்கு விடைகாண முனையும் போது ஆன்மா தொடர்பாக முழுமையான அறிவினை பெற்றுக்கொள்ளலாம். பல சமயங்கள், விஞ்ஞானிகள் ஆன்மாவை பற்றி பல்வேறு கருத்துக்களை கூறியிருந்தாலும் பலரது ஆதரவை பெற்றதும் பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ள கூடியதுமான சைவசித்தாந்தம் மற்றும் கிறிஸ்தவ வேதாகமம் கூறும் ஆன்மா எனும் விடயத்தினை விளக்குவதன் மூலம் தெளிவான அறிவை பெற்றுக் கொள்ள முடியும். மேலே குறிப்பிட்ட வினாக்களுக்கு இவை பதில்களை தரும் என்பது சந்தேகத்திற்கு இடமில்லை.

பிரதான நோக்கம்

சைவசித்தாந்தமும் கிறிஸ்தவ வேதாகமமும் ஆன்மா தொடர்பாக எவ்வாறான விடயங்களை கூறுகின்றது என்பதை கண்டறிதலும் அதனை ஒப்பிடுதலும்

ஆய்வுப் பிரச்சினை

“ சைவ சித்தாந்தம் மற்றும் வேதாகமம் கூறும் ஆன்மா எனும் எண்ணக்கரு - ஓர் ஒப்பீட்டு ஆய்வு” எனும் தலைப்பினூடாக முன்வைக்கப்பட்ட ஆய்வானது சைவ சித்தாந்தம் மற்றும் கிறிஸ்தவ வேதாகமம் ஆன்மா தொடர்பாக கூறுகின்ற விடயங்களுக்கிடையில் எதோனும் தொடர்பு காணப்படுகின்றதா? என்பதுடன் ஆரம்ப காலம் தொடக்கம் தற்காலம் வரை நிலவி வருகின்ற ஒழுக்கம் தொடர்பான பிரச்சனைகளுக்கு ஆன்மா என்ற எண்ணக்கரு பொருத்தமானதாக அமையுமா? என்பதே இதன் ஆய்வு பிரச்சினைகளாகும்.

ஆய்வுக் கருதுகோள்

சைவசித்தாந்தம் கூறும் ஆன்மாவும் கிறிஸ்தவ வேதாகமத்தில் கூறப்படும் ஆன்மா என்ற எண்ணக்கருவும் ஒன்றுக்கொன்று தொடர்புபட்டும் வேறுபட்டும் காணப்படுகின்றது என்பதுடன் அக்காலத்தில் மட்டுமல்ல எக்காலத்திலும் இவ்வான்மா தொடர்பான எண்ணக்கரு ஒவ்வொரு தனிமனித வாழ்க்கைக்கும் அவனது ஒழுக்க செயற்பாட்டிற்கும் இன்றியமையாத ஒன்றாக காணப்படுகின்றது.

ஆய்வு வரையறை

மெய்யியலில் ஆன்மா தொடர்பாக பல சமயங்கள் , பல அறிஞர்கள் விடயங்களை கூறியிருக்கின்ற அதே சமயம் ஆன்மா தொடர்பாக பல நூல்களும் காணப்படுகின்றபொழுதும் சைவ சித்தாந்ததிலும் (குறிப்பாக மெய்கண்ட சாஸ்திரத்தில் சிவஞான போதம், சிவஞான சித்தியார் போன்ற நூல்கள்),கிறிஸ்தவ வேதாகமதிலும் (எபிரேய, கிரேக்க தமிழ் மொழிபெயர்பாகிய பரிசுத்த வேதாகமம்) உள்ள ஆன்மா என்ற எண்ணக்கருவுடன் தொடர்புடைய கருத்துக்களையே இவ் ஆய்வில் உள்ளடக்கியுள்ளேன்.

ஆய்வின் முறையியல்

இவ்வாய்வானது பண்புசார் தரவுகளை கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளது. இங்கு இரண்டாம் நிலைகளும் மூன்றாம் நிலை தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது ஒப்பீட்டாய்வு, விமர்சன ஆய்வு, விபரண ஆய்வு, உள்ளடக்கப்பகுப்பாய்வு என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இலக்கிய மீளாய்வு

ஜெகநாதன்,(2016) ஆய்வில் ஆன்மா தொடர்பான உண்மையை மேலைத்தேயத்தோடு ஒப்பிட்டு, இவ்வான்மா தொடர்பான கருத்துக்கள் ஓர் உளவியல் நோக்கில் விஞ்ஞான போக்கில் அமையும் என்பதனை எடுத்துக்காட்டியுள்ளார். அதுமட்டுமல்லாது ஆன்மாவின் ஏற்புடமை மற்றும் மறுப்பின் சங்கமமாக சைவசித்தாந்தம் காணப்படுகின்றது என எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

பிரகாசன்,(2021) ஆய்வில் ஆன்மாவின் அடிப்படையான சமயங்கள் எவ்வாறு கலாசாரத்துடன் தொடர்புடையவையாக வளர்ச்சி பெற்றுள்ளது என்றும் அவை ஒழுக்கத்துடன் கொண்டுள்ள தொடர்பு பற்றியும் விளக்கப்பட்டுள்ளது.

சிவத்தம்பி,(2011) கட்டுரையில் சைவசித்தாந்தம் உருவாக்கப்பட்ட காலப்பகுதியில் இருந்த சமயங்கள் மற்றும் ஆன்ம விடுதலைக்கான வழிகளை அவர்கள் பின்பற்றிய முறை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

பெறுபேறும் கலந்துரையாடலும்

சைவசித்தாந்தத்தில் கூறப்படும் ஆன்மா எனும் விடயத்தை நோக்கும் போது இங்கு ஆன்மா உண்மையில் உள்ளதா எனும் கேள்விக்கு ஆன்மாவை மறுக்கும் வைதீக மற்றும் அவைதீக கருத்துக்களையும், வேதங்கள், ஆகமங்களையும் அடிப்படையாக கொண்டு ஆன்மாவின் இருப்பை சைவ சித்தாந்தம் நிரூபிக்கின்றது. மற்றவர்களுடைய கொள்கைகளினை மறுத்து ஆன்மா இல்லை என்று முடிவு செய்யும் அறிவு எதுவோ அதுவே ஆன்மா என்று சித்தாந்திகள் குறிப்பிடுகின்றனர். தேகத்தின் உள்ளேயிருந்து அதனை இயக்கிய சக்தி எதுவோ அதுவே ஆன்மா என்றும் குறிப்பிடுகின்றனர். பிராணனுக்கும் மேலாக உடலை இயக்கி அறிவை பெறும் சக்தி எதுவோ அதுவே ஆன்மா என்று குறிப்பிடுகின்றனர்.

சைவ சித்தந்தாந்தம் உண்மைப் பொருள் என ஏற்றுக்கொண்டிருக்கும் இரண்டாவது விடயம் ஆன்மா என்பதாகும். பசு, உயிர் என்று பல்வேறு பெயர்களினால் குறிப்பிடப்படும் ஆன்மாவானது எண்ணில் அடங்காதது, நித்தியமானது, வியாபகமானது என்றும் இயல்பாகவே ஆவணமலத்தினால் பாதிக்கப்பட்டிருக்கின்றது எனவும் குறிப்பிடப்படுகின்றது. அதுமட்டுமல்லாது இவ் ஆன்மாவானது எங்கும் பரவியதாயும், என்றும் உள்ளதாகவும், அறிவுடையதாகவும் இருக்கின்றது எனக் கூறி அதன் இயல்பையும் சைவசித்தாந்திகள் விளக்குகின்றனர். அத்துடன் அது ஒரு போதும் தானாக தனித்து நிற்பதில்லை என்பதுடன் ஆன்மா எதை சார்ந்திருக்கின்றதோ அதன் தன்மையினையே அவ்வான்மா கொண்டிருக்கும் என விளக்குகின்றது. இத்தகைய தன்மையுடைய ஆன்மாவினை செம்பில் களிம்பு தொடர்ச்சியாக பற்றியிருப்பது போன்று ஆணவமலமானது பற்றியுள்ளது என்று குறிப்பிடுகின்றனர். இதனை உணர்த்தும் பொருட்டே ஆன்மாவினை பசு என்று குறிப்பிடுகின்றனர்.

ஆன்மாவின் இலட்சியம் தொடர்பில் சித்தாந்தம் குறிப்பிடும் போது ஆன்மாவானது மலங்களுடன் தொடர்புபட்டு நிற்கும் தன்மையினை அடிப்படையாக கொண்டு அதனை மூன்றாக பிரிக்கின்றது. அவை முறையே கேவலாவத்தை, சகலாவத்தை, சுத்தாவத்தை என்பனவாகும். இம்மலங்களிலிருந்து விடுபட்டு பரம்பொருளைச் சேர்வதே ஆன்மாவின் இலட்சியமாகும். ஆன்மாவானது தன்னுடைய இலட்சியத்தை அடைய சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் மார்க்கங்களைக் கடைபிடிக்க வேண்டியது அவசியமாகக் காணப்படுகின்றது.

இதனைப் போலவே கிறிஸ்தவ வேதாகமமும் ஆன்மா குறித்து தன்னுடைய கருத்தை முன்வைக்கின்றது. கிறிஸ்தவ வேதாகமத்தில், ஆன்மா எனும் சொல்லுக்குப் பதிலாக ஆத்துமா எனும் சொல்லானது பிரயோகிக்கப்படுகின்றது. இங்கு மனிதனானவன் ஆவி, ஆத்துமா, சரீரம் என்பவற்றால் உருவாக்கப்பட்டவனாக காணப்படுகின்றான். இருப்பினும் சில இடங்களில் ஆவியையும் ஆத்துமாவையும் ஒன்று என கூறும் கருத்துக்களும் உண்டு. இங்கு ஆத்துமா என்பது ஒரு மனிதனை ஏனைய உயிரினங்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும் ஒரு பகுதியாகும்(ஆதியாகமம் 2 : 7). அது மட்டுமல்லாது இது சரீரத்திற்குள் நின்று இயக்குகின்ற ஒன்றாக காணப்படுகின்றது. இவ் ஆத்துமாவானது இயற்கையோடு தொடர்பு கொள்ளவதற்கு உடல் தேவைப்படுகின்றது.

ஆன்மாவின் இயல்புகளாக அறிவுடையது (நீதிமொழிகள் 24:14), உணர்வுடையது (1 சாமுவேல் 18:01), சுயசித்தம் அல்லது சிந்தனை உடையது எனக் கூறிக்கொண்டே போகலாம். இவ்வாறு காணப்படுகின்ற ஆன்மாவானது கடவுளை அன்பு செலுத்தும் நோக்கத்தை கொண்டே இவ்வுலகில் வாழ உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆன்மாக்களுக்கென பரலோகம், நரகம் என இரு இடங்கள் காணப்படுகின்றன. ஆத்துமா இவ்வுலகில் செய்யும் பாவங்களுக்கேற்ப இவ்விரு இடங்களில் ஒன்றிற்கு செல்லும். இதில் பரலோகம் செல்வதையே ஆன்மா விருப்பமாக கொண்டிருக்கும். இருப்பினும் ஆன்மாவை அங்கே செல்லவிடாதபடிக்கு தீமைகள் அல்லது பாவங்கள் ஆன்மாவை தடை செய்யும். அத்தடையிலிருந்து விடுபடுவதற்கும், ஆத்துமா தன்னுடைய நோக்கத்தை அடைவதற்கும் கடவுளுடைய கட்டளைகள் உதவியாக காணப்படுகின்றது. கடவுளுடைய வார்த்தையின் படி நடந்தாலே ஆத்துமா தன்னுடைய விருப்பத்தை அடைந்துவிடும் என கிறிஸ்தவ வேதாகமம் அறிவுறுத்துகின்றது.

ஆன்மா தொடர்பாகக் கூறும் சைவசித்தாந்தமும் கிறிஸ்தவ வேதாகமமும் பெரும்பாலும் ஒத்த கருத்துக்களையே கொண்டுள்ளன. அவற்றில் சிலவருமாறு சைவ சிந்தாந்தமானது உண்மையென ஏற்கும் முப்பெரும் தத்துவங்களுள் ஆன்மாவும் ஒன்றாக காணப்படுகின்றது. இங்கு ஆன்மா என ஒரு விடயம் உள்ளது என்பதனை நிரூபிக்கும் முகமாக சைவ சித்தாந்திகள் அதனை மறுப்பவர்களின் கொள்கைகளை மறுத்து, ஆன்ம இருப்பை நிறுவ முற்படுகின்றனர். இதனைப் போலவே கிறிஸ்தவ வேதாகமானது மனிதனில் காணப்படும் முப்பரிமாணங்களுள் உண்மையென ஏற்கும் ஒரு விடயமாக ஆன்மா காணப்படுகின்றது.

உடல், இந்திரியங்கள், உயிர், மனம் போன்றவை தான் ஆன்மா எனக்கூறும் சிந்தனைக்கு எதிராக இவ்விரு கொள்கைகளும் உடல், இந்திரியங்கள், உயிர், மனம் போன்றவை ஆன்மா அல்ல என்றும் அவற்றுக்கு மாறாக அவற்றை கடந்து அதனை இயக்குகின்ற ஒன்றே ஆன்மா என குறிப்பிடுகின்றன. (முத்தப்பன்,2009:334)

ஆன்மாவின் இயல்புகள் என்ற நிலையில் சில இடங்களில் இவை ஒன்றுபட்டும் வேறுபட்டும் நிற்கின்றன. சைவ சிந்தாந்தமானது ஆன்மாவானது எங்கும் பரவியதாய், என்றும் உள்ளதாய், அறிவுடையதாய் காணப்படும் எனக் குறிப்பிடப்படுகின்றது. இங்கு ஆன்மா முத்தி நிலை, பெத்த நிலை என இரு நிலைகளினடிப்படையிலேயே அதன் இயல்புகள் காணப்படும் எனக் கூறப்படுகின்றது.

அதேபோலவே கிறிஸ்தவ வேதாகமமும் ஆன்மாவை அழிவடையாததாக, பலவாக, அறிவுடையதாக காணப்படுகின்றது எனக் கூறினாலும் இறைவனோடு இயைந்த வகையில் ஒரு வகையான இயல்புகளையுடையதாகவும் இறைவனை விட்டு பிரிந்த நிலையில் வேறொரு இயல்புகளையுடையதாகவும் காணப்படுகின்றது. அதாவது இவ்விரு தத்துவங்களும் ஆன்மா எதை சார்ந்திருக்கின்றதோ, அவ்வியல்புகளையே ஆன்மா கொண்டிருக்கும் என்பதனை இவை ஏற்றுக் கொள்கின்றன.

இவ்விரு கொள்கைகளிலும் ஆன்மாவானது உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடியதாக காணப்படுகிறது. இருப்பினும் சைவ சித்தாந்தத்தின்படி ஆன்மாவின் மூன்று நிலைகளிலும் உணர்வு வெளிப்பாடு காணப்படுவதில்லை.

ஆன்மாவானது கண்ணுக்குப் புலப்படாத ஒன்றாக காணப்படுகிறது. இவற்றினை அதன் செயற்பாடு மற்றும் அவற்றின் இயல்புகளின் அடிப்படையிலேயே உணர முடியும் என இவ்விரு கொள்கைகளும் கூறுகின்றன.

ஆன்மாவானது கேவலாவத்தை, சகலாவத்தை, சுத்தாவத்தை என்ற மூன்று நிலைகளில் இருப்பதாக சைவசித்தாந்தம் குறிப்பிடுகின்றது. கிறிஸ்தவ வேதாகமத்திலும் ஆன்மாவிற்கு மூன்று நிலைகள் இருக்கின்றன. அவை முறையே உலகோடு கொண்டுள்ள நிலை, நியாய தீர்ப்பிற்காக காத்திருக்கும் நிலை, நியாயத்தீர்ப்பின் பின்னர் இறைவனிடம் அல்லது நரகம் செல்லும் நிலை என்பவை ஆகும். வினை பற்றிய நியதியில் தீவினையின் பயனான பாவத்தை நல்வினையின் பயனான புண்ணியம் நீக்க மாட்டாது எனும் விடயத்தில் இவ்விரு கொள்கைகளும் ஒத்துப்போகின்றது.

சைவ சித்தாந்தத்திலும் கிறிஸ்தவ வேதாகமத்திலும் ஆன்மா இலட்சியத்தை அடைய வேண்டுமாயின் அதற்காக முயற்சிகளை செய்ய வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றது. அவற்றினை அடைவதற்கான வழிமுறைகளை இவ்விரு விடயங்களுமே ஏற்று நிற்கின்றது.

மரணத்தின் போது ஆன்மாவானது உடலை விட்டு பிரிந்து விடும். இந்நிலைப்பாடு இவ்விரு கொள்கைகளிலும் உள்ளது. இங்கு உடல் என்பது அழியக்கூடிய ஒன்று என இரு கொள்கைகளும் ஏற்றுக்கொண்டாலும் நியாயத்தீர்ப்பின் பின் உடலானது மறுபடியும் உருவாக்கப்படும் என கிறிஸ்தவ வேதாகமம் கூறுகின்றது. ஆன்மா தான் செய்யும் ஒவ்வொரு விடயங்களையும் தனக்கென்றும் தன் முத்தியை பெற வேண்டும் என்றும் தொழிற்படக் கூடாது என்பதில் இவ்விரு கொள்கைகளும் ஒத்துப்போகின்றன.

இவ்வாறு ஒருமைப்பட்ட விடயங்களை கூறினாலும் சில இடங்களில் வேறுபடுகின்ற சந்தர்ப்பங்களும் உள்ளன. ஆன்மாவின் உருவாக்கம் தொடர்பில் இவர்கள் வேறுபட்டு

நிற்கின்றனர். ஏனெனில் சைவசித்தாந்தம் ஆன்மா என்பது உருவாக்கப்படுகின்ற ஒன்றல்ல எனக்கூற, கிறிஸ்தவ வேதாகமம் ஆன்மா இறைவனால் உருவாக்கப்பட்ட ஒன்றாக காணப்படுகின்றது என கூறுகின்றது.

சைவ சித்தாந்தத்தின் படி ஒரு ஆன்மா அனுபவிக்கும் துன்பங்களுக்கு காரணம் அவை முன்னே செய்தவினை எனக் கூறப்படுகிறது. ஆனால் கிறிஸ்தவ வேதாகமத்தின் படி இவ்வுலகில் ஆன்மா அனுபவிக்கும் துன்பங்களுக்கு வினைகள் காரணமாவதில்லை அதாவது சில நேரங்கள் ஆன்மா இறைவனோடு தொடர்பு படாத பட்சத்தில் துன்பத்தை அனுபவிக்கின்றது. சில நேரங்களில் இறைவனுடன் இணைந்த வகையிலும் துன்பத்தை அனுபவிக்கின்றது என்பது இதற்கு காரணம் வாழ்க்கை என்பது ஒரு நிரந்தரமானது அல்ல என்பதாகும்.

கிறிஸ்தவ வேதாகமத்தின்படி ஒரு மனிதன் இறந்தவுடன் அவனது செயலுக்கு ஏற்ற தண்டனை கொடுக்கப்படாது மாறாக அதற்காக அவன் காத்திருக்கும் நிலை என்ற ஒன்று ஆன்மாவுக்கு உண்டு. இந்நிலையில் ஆன்மாவிற்கு என தனி இடம் ஒன்று உண்டு அதனை பாதாளம் என அழைப்பர். இவ்விடத்தில் ஆன்மாக்கள் இளைப்பாறுதல் அடைந்து நியாயத்தீர்ப்பிற்காக காத்திருக்கும். இது சைவசித்தாந்தத்தில் காணப்படாவிட்டால் ஆன்மா தன்னுடைய இளைப்பை சற்று தீர்ப்பதற்காக கேவல நிலையை அடைவதாக கூறப்படுகிறது.

ஆன்மாவின் இலட்சியம் தொடர்பில் இவை இரண்டும் வேறுபட்ட கருத்து உடையவையாக காணப்படுகின்றது. சைவ சித்தாந்தத்தில் ஆன்மாவானது ஆணவம், கன்மம், மாயை என்பவற்றிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதே ஆன்மாவின் இலட்சியமாக காணப்படுகிறது. ஆனால் கிறிஸ்தவ வேதாகமத்தின் படி ஆன்மாவின் இலட்சியம் இறைவனை முழுமையாக அன்பு செய்வதையே நோக்காக கொண்டு காணப்படுகிறது.

மாயை எனும் போது ஆன்மா தன்னுடைய இலட்சியத்தை அடைவதற்கு உடலையும் உள்ளத்தையும் கொடுக்கின்ற ஒரு விடயமாகும். இது கண்ணுக்கு புலப்படாததாக காணப்படுகின்றது. ஆனால் இம் மாயையின் பணிக்கு எதிராக கிறிஸ்தவ வேதாகமம் கூறுகின்றது என்னவெனில் இறைவன் தான் இவ்வுலகு மற்றும் இவ்வுடலை படைத்தார் என்று கூறப்படுகின்றது.

கன்மம் என்பது பற்றி நோக்கும்போது இக்கன்மம் பற்றிய கருத்து சைவ சித்தாந்தத்திற்கும் கிறிஸ்தவ வேதாகமத்திற்கும் பாரிய முரண்பாட்டைத் தோற்றுவிக்கின்றது. சைவ சித்தாந்த முறைப்படி கன்மம் என்பது ஒவ்வொருவரின் செயலால் உருவாக்கப்படுகின்ற ஒன்றாகக் கூறப்படுகின்றது. இச்செயலில் பலனாக ஒருவனது ஆன்மா மீண்டும் மீண்டும் என்று பல பிறவிகளை எடுக்கின்றது. இப்பிறவி பயனற்றவினை ஏற்படும் அளவும் ஒரு ஆன்மாவிற்கு மாறி மாறி நிகழ்கிறது என கூறப்படுகின்றது. இதில் கிறிஸ்தவ வேதாகமம் ஒருவனின் செயலுக்கு ஏற்ப பலன் கிடைப்பது தொடர்பான விடயங்களை ஏற்று நிற்கின்றது. ஆனால் பலனை அடைய ஆன்மா பல பிறவிகளை எடுக்கும் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக வேதாகமம் கருதுகின்றது.

ஆன்மாவானது தன்னுடைய இலட்சியத்தை அடைய முடியாத படிக்கு ஆணவம், கன்மம், மாயை காரணமாகி நிற்கின்றது என சைவ சித்தாந்தம் கூறுகின்றது. கிறிஸ்தவ வேதாகமத்தில் ஆன்மா

தன்னுடைய இலட்சியத்தை அடைய இவ்வுலக காரியங்கள், ஆசைகள், பாவங்கள் காணப்பட்டாலும் அதனை செயல்படுபவனாக இறைவனுக்கு எதிராக ஒரு சக்தி இருப்பதாக கூறப்படுகின்றது. சக்தியே இறைவனையும் மனிதனையும் பிரிக்கும் சக்தியாக காணப்படுகின்றது எனக் கூறப்படுகின்றது.

சைவசித்தாந்தத்தமானது தன்னுடைய இலட்சியத்தை அடைய இறைவனது அருள் தேவைப்படுவது போல கிறிஸ்தவ வேதாகமத்திலும் ஆன்மாவானது இவ்வுலக விடயங்களை விட்டு இறைவனை முழுமையாக அன்பு செய்யவும் அவருடைய சமூகத்தை சேரவும் கடவுளுடைய கிருபை அதாவது அவருடைய அருள் வேண்டும் என கூறப்படுகின்றது.

இலட்சியத்திற்கான வழிமுறைகள் என நோக்கும்போது சைவ சித்தாந்தமானது ஆரம்பத்தில் எவ்வாறான நிலைபாடுகளை கொண்டதோ அதாவது சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றின் வழியே விடுதலையை அடைய முடியும் என கூறியதற்கு இணங்க, அவ்வாறான நிலைப்பாட்டை இன்றும் எந்தவித மாற்றமும் இல்லாமல் பின்பற்றுகிறது. ஆனால் கிறிஸ்தவ வேதாகமத்தை பொறுத்தவரையில் வேதாகமத்தின் இரு பிரிவுகளும் அதாவது பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு வெவ்வேறு வழிமுறைகளை வலியுறுத்தி நிற்கின்றது.

முத்தி நிலை பற்றி நோக்கும் போது சைவ சித்தாந்தத்தின்படி ஆன்மா துன்பம் துளியற்று பேரின்பமே நிலையாகக் கொண்டு காணப்படும் என கூறப்படுகின்றது. கிறிஸ்தவ வேதாகமமும் ஆன்மாவின் இறுதி நிலை பற்றிக் கூறுகின்றதே தவிர முத்தி என ஒன்று இங்கு குறிப்பிடப்படவில்லை.

சைவசித்தாந்தத்தில் அவரவர் செய்த பாவத்திற்கு அவரவர் தண்டனையை அனுபவிப்பார். ஆனால் கிறிஸ்தவ வேதாகமத்தில் பெற்றோர்கள் செய்த பாவம் பிள்ளைகளை தலைமுறை தலைமுறையாக பின் தொடரும் என கூறப்படுகின்றது.

கிறிஸ்தவ வேதாகமத்தின் படி ஆன்மாவினது இறுதியில் தனக்கென ஒரு வாழ்வை கொண்டதாக காணப்படும். இவ்வாழ்வில் இறைவன் கூடவே இருப்பார். இக் கொள்கை சைவசித்தாந்தத்தில் காணப்படுவதில்லை ஏனெனில் ஆன்மா இறுதியில் இறைவனுடன் கலந்து விடும். இந்நிலையில் ஆன்மாவுக்கென தனி வாழ்வு காணப்படுவதில்லை. கிறிஸ்தவ வேதாமத்தின் படி இறைவன் ஆன்மாக்கென தனி வாழ்வையே வைத்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

ஆன்மாவானது தன்னுடைய தீய செயலுக்கு ஏற்ப தண்டனையாக மறுபிறவி எடுத்து அனுபவிக்கும் என சைவசித்தாந்தம் கூறுகின்றது ஆனால் கிறிஸ்தவ வேதாகமத்தில் தண்டனை என்பது இவ்வுலகில் கொடுக்கப்படுவது இல்லை மாறாக அதற்கென தனி இடம் உண்டு அது அக்கினிமயமான இடமாக காணப்படும் இங்கு தண்டனை நொடிக்கு நொடி காணப்படும். ஆனால் இவ்வுலகில் மறுபிறவியின் ஊடாக தண்டனை அனுபவிக்கும் ஆன்மாக்கு அவ்வாறான வேதனை காணப்படுவதில்லை. இன்னும் நன்மையினை அனுபவிக்கவும் இவ்வுலகிலேயே ஆன்மாக்கள் பிறவி எடுக்கும். ஆனால் கிறிஸ்தவ வேதாகமத்தின்படி நன்மையை செய்த அதாவது இறைவனுக்கு பிரியமானதைச் செயல்களைச் செய்த ஆன்மாக்கள் அதன் பலனை அனுபவிக்க பரலோகம் எனும் இடத்தை சென்றடையும் என கூறப்படுகின்றது. இருப்பினும் சில ஆன்மாக்கள்

தங்களுடைய செயற்பாட்டின் அடிப்படையில் இவ்வுலகிலும் அதன் தண்டனையை அனுபவிக்க கூடிய சாத்தியப்பாடு காணப்படுகின்றன. இவ்வாறு பலவற்றைக் கூறிக்கொண்டே போகலாம்.

ஆன்மாவினை ஏற்பது என்பது தற்கால மனிதர்களுக்கு முட்டாள்தனமான ஒன்றாக காணப்படும். ஆனால் அவர்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் ஆன்மா என ஒன்று உண்டு என்பதுடன் நாம் செய்கின்ற தீமைக்குத்தக்க பலன் கிடைக்கும் என்பதனை மறந்துவிடக் கூடாது. இவ் ஆன்மா பற்றிய தெளிவு ஏற்படும் நிலையில் பல மனிதர்கள் ஒழுக்கமாகவும் ஏனையவர்களுக்கு நன்மைபயக்கும் செயல்களிலும் ஈடுபடுவார்கள். பொதுவாக ஒரு ஆன்மா தன்னுடைய இலட்சியத்தை அடைய செய்யும் காரியங்கள் எமது நடைமுறை வாழ்க்கைக்கு பயனுள்ளதாக அமையும். ஒழுக்கமற்ற இக்காலத்தை சீர்படுத்தவும் நமது தொலைந்த மரபை திரும்பக் கட்டியெழுப்பவும் ஆன்மா பற்றிய தெளிவு உதவியாக அமையும்.

முடிவுரை

மெய்யியலின் ஒரு பிரிவான சமய மெய்யியலானது மேலைத்தேயம் மட்டுமல்லாமல் கீழைத்தேயத்திலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. சமயத்தை மெய்யியல் பார்வையில் நோக்குவதே சமய மெய்யியல் ஆகும். அந்த வகையில் சமயத்தை மெய்யியல் பார்வைக்கு கொண்டு செல்லும் ஒரு எண்ணக்கருவாக ஆன்மா காணப்படுகின்றது. அந்த வகையில் இவ்வாய்வின் அடிப்படையில் ஆரம்பத்தில் ஆன்மா பற்றியதான ஆய்வு சைவசித்தாந்தம் மற்றும் கிறிஸ்தவ வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்றது. இங்கு ஆன்மா தொடர்பாக பலவிதமான கேள்விகள் எமது மனதிலே காணப்படுகின்றது. அவற்றினை இவ்விரு கொள்கைகளின் மூலமாக தீர்க்க கூடியதாகவுள்ளது. ஆன்மா தொடர்பாக ஒருமித்த கருத்துகள் அதிகமாக காணப்பட்டாலும் கூட சில இடங்களில் மட்டுமே இக்கொள்கைகள் வேறுபட்டு நிற்கின்றன. இருப்பினும் அதனை தற்கால மனித வாழ்வுடன் தொடர்புபடுத்தி பார்க்க இது உதவியாகவுள்ளது.

உலகில் அதிகளவான மக்களால் பின்பற்றபட்டு வருகின்ற சமயங்களாக இந்து சமயம் மற்றும் கிறிஸ்தவ சமயம் காணப்படுகின்றது. இச்சமயங்கள் உலகிற்கு கூறவருகின்ற ஒவ்வொரு விடயமும் மனித வாழ்வுடன் தொடர்புபட்டு இருப்பதாக காணப்படுகின்றது. இவை கூறும் ஆன்மா தொடர்பான விடயமானது சமயத்துடன் தொடர்புபட்டு காணப்பட்டாலும் அவை எமக்கு எவ்வாறான வகையில் உதவுகின்றது என்பதனை அறிய கூடியதாக இருக்கின்றது.

சைவ சித்தாந்தமும், கிறிஸ்தவ வேதாகமமும் ஆன்மா என்பதன் விளக்கத்தை தந்து நிற்கின்றது. இங்கு ஆன்மா பற்றிய அறிவை விளங்கிக் கொள்வது முக்கியமானதல்ல மாறாக அதன் மூலம் கிடைக்கும் நன்மைகளே முக்கியமானதாகும். நன்மைகள் எனும் போது இவ்விரு சமயங்களும் மறுவுலக நன்மையை பேசுகின்றது. உண்மையில் மறுவுலக நன்மையை காட்டிலும் இவ்வுல நன்மைக்கே இது வழிசமைத்துக் கொடுக்கின்றது.

ஆன்மா தொடர்பான தெளிவானது சமயங்களாலேயே விளக்கப்படுகின்றது. சமயங்கள் நன்மையான விடயங்களையும் தீமையான விடயங்களையும் வெளிப்படுத்துகிற ஒன்றாக காணப்படுகின்றது. அதாவது இச்சமயங்களின் அடிப்படை நோக்கம் ஒரு மனிதன் நல்வாழ்வு உடையவனாக அதாவது ஒரு ஒழுக்கம் உடையவனாகவும் சமூகத்தில் ஏனையவர்களுக்கு

தீங்கு விளைவிக்காத வாழ்க்கை வேண்டும் என்பதே ஆகும். இதனடிப்படையில் ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு நிலைப்பாட்டை உடையதாகக் காணப்படும் அச்சமயங்களில் காணப்படும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயங்கள் தொடர்பில் நாம் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். ஒரு சமயம் ஒரு விடயத்தை கூறுகின்றது என்ற நோக்கில் அல்லாமல் சமயங்கள் கூறும் விடயங்களிலுள்ள உண்மைத் தன்மையைப் புரிந்து நாம் செயற்பட வேண்டும். இன்றைய அதி நவீன காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் நம்முடைய சமயத்தின் எந்த சமயம் உயர்ந்தது என்ற நோக்கில் செய்யப்படாமல் ஒவ்வொரு சமயங்களும் கூறுகின்ற ஒவ்வொரு அறக் கருத்துக்களையும் ஆராய்ந்து அதனை ஒப்பிட்டு, வேறுபடுத்தி, தீயவைகளைக் களைந்து வாழ ஆன்மா பற்றிய ஆய்வானது உதவியாக இருக்கும். அதாவது ஒரு மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் என்பதற்கு அது அறமாக இருந்தாலும் சரி அல்லது சமயமாக இருந்தாலும் சரி ஒரே விடயத்தை தான் கூறி நிற்கின்றது என்பதை மறந்துவிடக்கூடாது. அந்த வகையில் ஒவ்வொரு சமயமும் கூறுகின்றன நல்ல விடயங்களை எடுத்து அதன்படி செய்பவர்களாக நாம் ஒவ்வொருவரும் காணப்பட வேண்டும். ஆன்மா பற்றிய விளக்கமானது இதனையே எமக்கு தெளிவுபடுத்துகின்றது.

பரிந்துரை

சைவசித்தாந்தத்திலும், கிறிஸ்தவ வேதாகமத்திலும் காணப்படும் ஆன்மா தொடர்பான கருத்துக்களில் எமது வாழ்வியலுக்குத் தேவைப்படும் கருத்துக்களை ஏற்று அவற்றினை நடைமுறைபடுத்தவே இதனை பயன்படுத்த வேண்டுமே தவிர அவற்றிக்கிடையிலான வேறுபாட்டை கண்டுபிடிப்பது இங்கு முக்கியமானதல்ல என்பதனை புரிந்த கொள்ள வேண்டும்.

ஆன்மாவின் செயற்பாடு பற்றி பேசும் போது மறுவுலக நன்மைகள் குறித்து அதிகம் பேசாமல் ஆன்மாவின் செயற்பாடானது இவ்வுலகில் எவ்விதமான நன்மையை தருவதாக காணப்படுகின்றது என்பதனை அதிகம் தெளிவுபடுத்த வேண்டும்.

இவ்வான்மா தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள கருத்துகள் ஒழுக்கவியலுடன் தொடர்புபட்டனவாக காணப்படுகின்றது. இவ்வாறான கருத்துக்களை பாடசாலைகளில் சமயம் என்ற பிரிவுக்குள் கற்பிக்காமல் தனிப்பாடமாகவும் கட்டாயப்பாடமாகவும் கற்பிக்கப்பட வேண்டும்.

சமயம் சார்ந்த அறநெறி மற்றும் மறைக்கல்வி பாடசாலைகளில் அவர்களுடைய சமயம் சார்ந்த விடயங்களை மட்டும் கற்பிக்காமல் ஏனைய சமயங்களுக்கிடையான ஒற்றுமைகளையும் எடுத்துக் கூறி அதில் பிள்ளைகளை வளர்க்க வேண்டும். அதுமட்டுமல்லாது இந்த அறநெறியின் முக்கியத்துவத்தை நாம் பெற்றோர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

கிழக்கு பல்கலைகழகத்தில் மெய்யியல் பிரிவில் கிறிஸ்தவ மெய்யியல் தொடர்பாக அதிகம் கவனம் செலுத்தப்பட வேண்டும். அதுமட்டுமல்லாது ஆன்மா தொடர்பான ஆய்வுக்கு இவ்வாய்வானது பயனுள்ளதாக அமையும்.

உசாத்துணைகள்

1. அறிவொளி,அ., (2005), மெய்கண்ட சாத்திரம். சென்னை: பரமேஸ்வரி கிராபிக்ஸ்.
2. அனஸ்,எஸ்,எஸ். (2006), கிரேக்கம் முதல் தற்காலம் வரை. கொழும்பு: குமரன் அச்சகம்.
3. நாராயணன்,க., (1989), மேல்நாட்டு மெய்ப்பொருளியல். புதுச்சேரி: மாரிபதிப்பகம்.

4. பில்ப்,பெ., (1984), பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படை வெளிப்பாடு. சென்னை: கொஸ்பல் புத்தகநிலையம்.
5. பூலோகநாதன்,பொ., (2014), நவீன மெய்யியல் - ஓர் அறிமுகம். கொழும்பு: குமரன் புத்தக இல்லை.
6. போல் றொகான்,கி., (2020), கிறிஸ்தவ மெய்யியல். பண்டதரிப்பு: ஜே.எஸ்அச்சகம்.
7. முத்தப்பன்,ப., (2009), சைவ சித்தாந்த சாஸ்திரங்கள். சென்னை: உமாபதிப்பகம்.
8. லக்ஷ்மணன்,கி., (1960),. இந்திய தத்துவ ஞானம். சென்னை: பழனியப்பா பிரதர்ஸ்.
9. பரிசுத்த வேதாகமம். பெங்களூர். இந்தியா வேதாகம சங்கம்.
10. பிரகாசன்,மா., சமயம்,கலாசாரம், ஒழுக்கம் - சில புரிதல்களும் பல கேள்விகளும். கிழக்குபல்கலைகழக ஆசிரியர் சங்கம்.
11. உமா மகேஸ்வரன்,அ., (2016.02.25), ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் அறநெறி கட்டாயம் அவசியம். Retrieved: https://www.virakesari.lk/article/3603 LAST accessed Date_12/06/2022 & 9.00am
12. வத்திக்கான் வானொலி, கத்தோலிக்க மறைக்கல்வியின் முக்கியத்துவம், (2007), Retrieved: http://www.archivioradiovaticana.va/storico /2017/10/12/LAST accessed Date_09/06/2022 &7.40 pm
13. ஜெகநாதன்,சோ., (2016.02), மேலைத்தேய, சைவசித்தாந்த மெய்யியற் சிந்தனைகளில் ஆன்மாவின் உண்மைத்துவம் - ஓர் ஒப்பீட்டு ஆய்வு. Retrieved: https://www.reserchgate.net/publication/35860211- LAST accessed Date_27/05/2022 & 3.50pm

இலங்கை முஸ்லிம்களின் சமய, சமூக எழுச்சிக்கு மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் ஆற்றிய பங்களிப்புக்கள் - ஒரு வரலாற்றுப் பார்வை

ஏ. ஜ.ஃபர் ஹுஸைன்
இஸ்லாமிய கற்கைகள் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
hussainaj@esn.ac.lk

ஆய்வுச் சுருக்கம்

அறேபியர்களின் வழிகாட்டல்களின் மூலம் கிடைக்கப்பெற்ற இஸ்லாம் எனும் மார்க்கத்தை இலங்கை முஸ்லிம்கள் பின்பற்றிவிடாமல் தடுப்பதில் ஈடுபட்ட ஐரோப்பியர்களின் சதித்திட்டத்திற்கு எதிராக மார்க்கப் பணி செய்து வழிகாட்டிய தென்னிந்திய இஸ்லாமிய அறிஞர்களுள் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களின் பங்களிப்பு அளப்பரியதாகும். இவ்வகையில் இவ்வறிஞர் மேற்கொண்ட சமய, சமூகப் பணிகள் மற்றும் அவரின் தகைமைகள் ஆகியவைகளை வெளிக்கொணர்தல் இவ்வாய்வின் நோக்கங்களாகும். பண்புரீதியில் அமைந்த இவ்வரலாற்றாய்வு இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியதாகும். மேலும் இவர் தொடர்பாக வெளியிடப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் வரலாற்று ஆவணங்கள் என்பன மீளாய்வு செய்யப்பட்டன. அதன்படி மார்க்கப் பணிகளை மேற்கொள்வதற்குரிய அடிப்படைத் தகைமைகளை கொண்டவராக ஆலிம் அவர்கள் திகழ்ந்தார்கள். அறபு மொழி, வரலாறு, தத்துவம், மெய்ஞ்ஞானம் போன்ற கலைகளில் பாண்டித்தியம் பெற்றதோடு, அல்குர்ஆன் மீது கொண்ட பற்று அவரை ஹாபிழாக வடிவமைத்தது. 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இலங்கை முஸ்லிம்களின் நிலை அவருக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியதன் விளைவாக அவரது வியாபாரத்தை இரண்டாம் நிலைக்கு மாற்றி மத்ரஸதுல் பாரியை உருவாக்கி அதன் மூலம் அறிவுப் பணிபுரிந்தார். முஸ்லிம்கள் மார்க்கக் கடமைகளைப் புரிந்து கொள்ள பத்ஹுல் மதீன், பத்ஹுத் தையான், பத்ஹுஸ் ஸலாம் ஆகிய பிக்ஹ் சார்ந்த நூல்களை எழுதி மக்களின் அறியாமைக்கு முற்றுப்புள்ளி வைத்தார். இவை அனைத்தையும் தொகுத்து 'மஹானி' எனும் சட்டத் தொகுப்பை உருவாக்கி, மார்க்கக் கடமைகளை மேலும் தெளிவுபடுத்தினார். அன்றைய சூழ்நிலையில் அறபு மொழியில் இடம்பெற்ற குத்பா பிரசங்கங்களை அறபுத் தமிழில் தொகுத்ததோடு, அந்நியக் கலாசாரத்துடன் முஸ்லிம் பெண்களுக்கு இருந்த தொடர்பை நீக்க தலைப்பாத்திஹாவை உருவாக்கி பாத்திமா நாயகியின் வரலாற்றை பெண்கள் தெரிந்துகொள்ள வழிசெய்தார். மேலும் பல தரிக்காக்களை உருவாக்கி இன்றுவரை முஸ்லிம்களை ஆன்மீக உயிரோட்டத்தில் இணையச் வழிசெய்தார். எனவே, முஸ்லிம்களுக்கு வழிகாட்டுவதற்கான தனிமனித ஆளுமைகளின் அவசியம் வலியுறுத்தப்படுவதோடு, அதற்கான முன்னெடுப்புக்கள், வழிகாட்டல்கள் பற்றிய முன்மொழிவுகளைத் தருவதாகவும், எதிர்காலத்தில் இவ்விடயத்தில் ஆய்வை மேற்கொள்வோருக்கு உதவுவதாகவும் இவ்வாய்வு அமைகிறது.

திறவுச் சொற்கள்: தென்னிந்தியா, மாப்பிள்ளை லெப்பை ஆலிம், இலங்கை முஸ்லிம்கள், சமய – சமூகப் பங்களிப்புக்கள், மஹானி

ஆய்வுப் பின்னணி

தென்னாசிய நாடுகளின் வரலாற்றில் இலங்கை - இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையிலான தொடர்பு தொண்மையானதாகும். இவ்விரு நாடுகளிலும் காணப்பட்ட வளங்கள் மற்றும் இயற்கை வடிவமைப்பு என்பன வெளிநாட்டவர்களைப் பெரிதும் ஈர்ப்பதற்குத் துணையாக அமைந்தன. அவர்களில் அறேபியர்கள் மற்றும் ஐரோப்பியர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவ்வகுப்பார்கள் இவ்விரு நாடுகளிலும் தமது தொடர்புகளை மேற்கொண்டிருந்தமைக்கு வரலாற்று நூல்கள் சான்றுபகர்கின்றன. (அமீன், எம்.ஐ.எம், 2009)

அறேபியர்கள் இயல்பாகவே வர்த்தக இயல்பு கொண்டவர்களாகக் காணப்பட்டதால் இலங்கையுடன் வர்த்தகத் தொடர்புகளை அதிகம் வைத்திருந்தார்கள். அறேபியர்களின் வர்த்தகத்தில் காணப்பட்ட நேர்மை, நாணயம் என்பன பல்லின சமூக மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெறுவதற்கு வித்திட்டது. பின்னர் அறேபியர்கள் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றது மாத்திரமன்றி, தமது வர்த்தகத் தொடர்புடைய நாடுகளில் ஒன்றான இலங்கையிலும் இம்மார்க்கத்தை அறிமுகம் செய்தார்கள். அறேபியர்களைப் பற்றி முன்னரே இந்நாட்டவர்கள் அறிந்திருந்ததன் காரணமாகவும் அவர்களின் நேர்மை அலாதியாகக் காணப்பட்டதாலும் இவர்களின் மார்க்கத்தை இலங்கை சுதேசிகள் பலர் தமது சமயமாக ஏற்றுக் கொண்டார்கள். இஸ்லாமிய சமயத்திற்கு உதவியாகவும் அன்றைய சிங்கள ஆட்சியாளர்கள் இருந்தார்கள் என்பதற்கு ஆதாரங்கள் பல காணப்படுகின்றன. (சுக்ரி, எம்.ஏ.எம், 2010)

இலங்கையை ஆட்சி செய்த வெளிநாட்டவர்களில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்கள் கி.பி. 1505 – 1948ஆம் ஆண்டு வரை இலங்கையில் தமது ஆட்சியை நிலைநாட்டியிருந்தார்கள். இவர்களின் ஆட்சியில் ஐரோப்பிய மதம் (கிறிஸ்தவம்) மற்றும் அவர்களின் கல்வி முறைமை (ஆங்கிலம்) என்பனவற்றை விஸ்தரிப்பதில் பெரிதும் ஈடுபட்டதால் இவை முஸ்லிம்களின் வாழ்வொழுங்கில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. இத்தகைய ஆட்சியாளர்களின் கொடுமைகளால் இலங்கை முஸ்லிம்களின் கல்வி நிலையங்கள் பாதிக்கப்பட்டதாலும் சமய, கலாசார முன்னேற்றம் தடைப்பட்டு முஸ்லிம் சமூகத்தின் வளர்ச்சி குன்றியது. அத்தோடு, ஐரோப்பியரின் இலங்கை வருகை முதல் இலங்கைக்கும் அறேபியாவுக்குமிடையில் இருந்த நெருக்கமான தொடர்பு வெகுவாகக் குறைந்தமையானது முஸ்லிம்கள் மேலும் சமய வழிகாட்டல் இன்றி சமய விடயங்களில் பின்னடைவதற்கு வழிகோலியது. (அமீன், எம்.ஐ.எம், 2009)

இதனால் இஸ்லாத்துக்கு மாற்றமான சடங்குகள், சம்பிரதாயங்களை இஸ்லாமாகக் கருதி பின்பற்றும் சூழ்நிலையும் உருவாகியது. மார்க்க அறிவின்மையால் சமயக் கடமைகளை நிறைவேற்றுவதில் கூட பித்அத்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். மார்க்க வழிகாட்டல்கள் உரிய முறையில் கிடைக்காததால் ஆன்மீகத் துறையைப் புறக்கணித்து, லௌகீகத் துறையை இலட்சியமாகக் கொண்டு வாழும் நிலையும் தோன்றியது.

இத்தகைய பின்னணியில் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேற்குறிப்பிடப்பட்டவர்களின் தாக்கத்திலிருந்து முஸ்லிம்களையும் இஸ்லாமிய சமயத்தையும் பாதுகாப்பதற்கு வேண்டிய சூழ்நிலைக்கு சுதேச முஸ்லிம் தலைவர்கள் தள்ளப்பட்டார்கள். முஸ்லிம்களை சன்மார்க்க ரீதியாக நெறிப்படுத்துவதையும், அவர்களுக்கு சன்மார்க்க வழிகாட்டல்களை வழங்கி, அதனூடாக அவர்களின் சமய, கலாசார, கல்வி மேம்பாட்டுக்கு உதவுவதையும் நோக்கங்களாகக் கொண்டு செயற்பட்டார்கள். இக்கால கட்டத்தில் இலங்கையில் இஸ்லாமிய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு அயல்நாடான இந்தியாவில் வாழ்ந்த இஸ்லாமிய அறிஞர்களின் பங்களிப்பு அளப்பரியதாகும்.

இத்தகைய அறிஞர்களின் தொடரில் 'மாப்பிள்ளை லெப்பை ஆலிம்' என பலராலும் அழைக்கப்பட்ட 'ஸெய்யத் முஹம்மத் ஆலிம்' குறிப்பிடத்தகவராவார். இவர் கி.பி.1816 / ஹிஜ்ரி 1232 ஆம் ஆண்டு 'வெள்ளை அஹ்மத் லெப்பை ஆலிம்' என்பவருக்கும், 'ஆமினா உம்மா' என்பவருக்கும் குழந்தையாக தென்னிந்தியாவின் திருநெல்வேலி மாவட்டத்தின் கிழக்குத் திசையிலுள்ள காயல்பட்டணத்தில் பிறந்தார். அவருக்கு இரண்டு வயதானபொழுது அவரின் பெற்றோர் இராமநாதபுரத்திலுள்ள கீழக்கரையில் குடியேறினார்கள்[4].

இலங்கை - அறேபிய தொடர்பு துண்டிக்கப்பட்டதால் இலங்கை முஸ்லிம்களின் கலாசார வாழ்வில் தென்னிந்திய முஸ்லிம்களின் செல்வாக்கு வலுப்பெற ஆரம்பித்தது. மிக அண்மை நாடுகளாக இவ்விரு நாடுகளும் இருந்தமையும் இரு நாடுகளிலுமுள்ள முஸ்லிம்களின் தாய் மொழி தமிழாக இருந்தமையும் அவர்களுடனான வர்த்தக, விவாக உறவுகள் அதிகரித்தமையும் இலங்கை முஸ்லிம்களின் கலாசாரத்துக்கும், தென்னிந்திய முஸ்லிம்களின் கலாசாரத்துக்குமிடையே நெருக்கமான தொடர்பை ஏற்படுத்தின. (ஹுஸைன் ஏ. ஜே: 2010) அவர்களில் மேற்குறிப்பிடப்பட்ட அறிஞரான மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களின் சமய, சமூக, கலாசார பங்களிப்புக்களை வெளிக்கொணர்வதை நோக்காகக் கொண்டு இவ்வாய்வு அமையப் பெற்றுள்ளது.

[4] அப்தல் றஹீம் 2004, வலிமார்கள் வரலாறு, ப. 247

ஆய்வுப் பிரச்சினை

இலங்கை முஸ்லிம்களின் சமய, சமூக வளர்ச்சிக்கு வித்திட்ட சுதேச அறிஞர்களின் பங்களிப்புக்கள் அதிகளவில் ஆராயப்பட்ட போதிலும் தென்னிந்திய இஸ்லாமிய அறிஞரான மாப்பிள்ளை ஆலிம் அவர்களின் இலங்கைக்கான இத்துறைசார் பங்களிப்புக்கள் வெளிவந்தமை குறைவாகும்.

ஆய்வின் நோக்கங்கள்

இலங்கை முஸ்லிம்களின் சமய, சமூக எழுச்சிக்கு தென்னிந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் ஆற்றிய பங்களிப்புக்கள் மற்றும் சீர்திருத்தப் பணிக்கான அவர்களின் கல்விப் பின்புலம் ஆகியவற்றை வெளிக்கொணர்தல் என்பன இவ்வாய்வின் பிரதான நோக்கங்களாகும்.

ஆய்வு முறையியல்

பண்புரீதியில் அமைந்த இவ்வரலாற்றாய்வு இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியதாகும். மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் வரலாற்று ஆவணங்கள் என்பன மீளாய்வு செய்யப்பட்டன. கிடைக்கப் பெற்ற தகவல்கள் குறிமுறை அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

இலக்கிய மீளாய்வு

எம்.ஐ.எம். அமீன் அவர்களால் 2010இல் எழுதப்பட்ட 'இலங்கை முஸ்லிம்களின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட முன்னோடிகள்' எனும் நூலானது 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையில், படித்த முஸ்லிம்கள் இஸ்லாமிய சூழலில் நவீன கல்வியை வழங்கி முஸ்லிம் சமூகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல முயற்சித்தவேளையில் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் இலங்கை முஸ்லிம்களிடையே சமய அறிவையும், மார்க்கக் கடமைகளை சரிவர நிறைவேற்றப் போதுமான அறிவையும் வழங்க முயற்சித்த பான்மையை விளக்க முற்படுகிறது.

தைக்கா ஷுஜப் ஆலிம் அவர்களால் எழுதப்பட்ட 'Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu' எனும் நூல் மாப்பிள்ளை லெப்பை அவர்கள் அறபுத் தமிழுக்கு ஆற்றிய பங்களிப்பை விளக்க முற்படுகின்றது.

எனவே இவ்வாய்வானது மேற்படி அறிஞர்களின் ஆய்வுகளிலிருந்து வேறுபட்டு மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் இலங்கை முஸ்லிம்களிடையே மேற்கொண்ட சமய, சமூக கலாசாரம் தொடர்பான பங்களிப்புக்களை ஆராய முயற்சிக்கின்றது.

ஆய்வின் கண்டறிதல்கள்

சீர்திருத்தப் பணிக்கும் கல்விக்குமிடையிலான தொடர்புகள்

இலங்கை வாழ் முஸ்லிம்களின் சமய, சமூக எழுச்சிக்கு அவசியமான வழிகாட்டல்களை வழங்குவதற்குப் போதுமான மார்க்க கல்வித் தகைமைகளை மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் பெற்றிருப்பதானது சீர்திருத்தப் பணிபுரிய உரித்துடையவர் என்பதை இவ்வாய்வு வெளிக்கொண்டு வருகின்றது. அதாவது 'வெள்ளை அஹ்மத்' என அழைக்கப்படும் அவரது தந்தையான அஹ்மத் ஆலிமிடம் ஆரம்பக் கல்வியையும் அறபு மொழியையும் பயின்ற அவர் பத்து வயதிற்குள் குர்ஆன் முழுவதையும் மனனம் செய்து ஹாபிழாகி விட்டார். தன் இல்லத்திலேயே மகனுக்கு மார்க்க நூல்களைப் போதித்த அஹ்மத்

ஆலிம், அவரது பதினெட்டாவது வயதில் அவரைக் கீழக்கரை 'சின்ன தைக்கா ஸாஹிப்' என அழைக்கப்பட்ட ஷெய்க் அப்துல் காதிர் லெப்பை அலிம் (கி.பி.1778 – 1850) அவர்களிடம் அழைத்துச் சென்று மார்க்க, ஆன்மீக நூல்களைக் கற்க வைத்தார். சிறுவர் ஸெய்யித் முஹம்மத், சின்ன தைக்கா ஸாஹிபிடம் தத்துவம், வரலாறு, மெய்ஞ்ஞானம் முதலிய கலைகளைப் பயின்றார்[5]. குணங்குடி மஸ்தான் ஸாஹிப் புலவர் நாயகம், செய்கு அப்துல் காதிர் நெய்னார் லெப்பை ஆலிம் முதலானோர் இவரது வகுப்புத் தோழர்களாவார்கள். இத்தகைய ஆன்மீகத்துறை நண்பர்களுடனான தொடர்பு, அறபு மொழிப் பரிச்சயம், அல்குர்ஆனை மனனம் செய்திருந்தமை ஆகிய அம்சங்கள் சீர்திருத்தப்பணிக்கு அவசியமாக அமைவதால் சீர்திருத்தப் பணியை மேற்கொள்ளக்கூடிய கல்வித் தகைமையைப் பெற்றிருக்கிறார் என்பதை வெளிக்காட்டுகின்றது.

மாணவப் பருவத்திலேயே அவரிடம் காணப்பட்ட அறிவு, ஒழுக்கநெறி மற்றும் அருங்குணப் பண்புகள் என்பவற்றை அவரது ஆசிரியரான சின்ன தைக்கா ஸாஹிப் அவர்கள் உறுதிப்படுத்துவதானது அவர்கள் சீர்திருத்தப் பணி மேற்கொள்ள தகுதியானவர் என்பதை வெளிபடுத்தப் போதுமான சான்றாக அமைந்துள்ளன. மேற்படி பண்புகளை கொண்டிருந்ததன் காரணமாக இவ்வாசிரியரின் மகளைத் திருமணம் செய்து கொள்ளவும் வாய்ப்புக் கிடைத்தமையானது மேலும் ஆசிரியர் மாணவர் உறவு குடும்ப உறவாக வலுப்பெறுவதற்கும், சீர்திருத்தப் பணிகளை சிறப்பாகச் செய்யவும் வழிகோலியது எனலாம்.

மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் ஜீவனோபாயத்திற்காக பிறரில் தங்கியிருக்காமல் தான் உழைத்து வாழ்வதற்காக பல தொழில் நிறுவனங்களை (தைக்கா ஹார்ட்வெயார் ஸ்டோர்ஸ், தைக்காக் கடை) நடாத்தி அவற்றினூடாகக் கிடைத்த வருமானத்தின் மூலம் தான் உண்ணவும் பிறரை வாழவைக்கவும் எடுத்த முயற்சி அவர் ஒரு சீர்திருத்தவாதி என்பதைப் வெளிப்படுத்த போதுமான சான்றாக உள்ளது.

இலங்கை வருகையும் - சமய மற்றும் சமூகப் பணிகளும்

கி.பி. 1835 ஆம் ஆண்டில் வர்த்தகத்தின் பொருட்டு முதன் முதலாக அவர் இலங்கை வந்த பொழுது இலங்கை முஸ்லிம்கள் மார்க்கத்தில் மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கக் கண்டார். முஸ்லிம்கள் எனத் தங்களைச் சொல்லிக் கொண்ட பலர் பெயரளவில் மாத்திரம் முஸ்லிம்களாக இருந்ததுடன் இஸ்லாத்தில் பற்றுக் குறைந்தவர்களாகவும் இருக்கக் கண்டார். உள்நாட்டிலே மார்க்க அறிவைப் பெற மத்ரஸாக்களோ, போதியளவு மார்க்க நூல்களோ இருக்கவில்லை. பிற சமய கலாசாரத் தாக்கங்களால் அநாசாரங்களும் மூட நம்பிக்கைகளும் மலிந்து காணப்பட்டன. இதேவேளை, ஆங்கிலேயரின் மத மாற்றத் திட்டத்தின் அபாயமும் நிலவியது[6]. இதன் காரணமாக கிறிஸ்தவ மதகுருமார்களைத் தலைமை ஆசிரியராகக் கொண்டு இயங்கிய ஆங்கில மிஷனரிப் பாடசாலைகளை முஸ்லிம்கள் புறக்கணிக்க ஆரம்பித்தனர்.

இலங்கை மக்களின் இந்த அவல நிலையைக் கண்ட அவர் மக்களுக்கு மார்க்கப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார். ஊர் ஊராக, கிராமம் கிராமமாக இரவு பகலாகப் பயணம் செய்து உபன்னியாசம் செய்ய ஆரம்பித்த அவர், தான் இலங்கைக்கு வந்த வர்த்தக நோக்கத்தை இரண்டாவது நோக்கமாக்கினார்[7]. அவரின் மார்க்க ஆர்வத்தைக் கண்ட இலங்கை முஸ்லிம்கள் அவரை அடிக்கடி இங்கு வந்து மார்க்க

[5] யூசுப் ஏ.எச்.எம்., 1984, மகான் மாப்பிள்ளை லெப்பை ஆலிம், ப. 102
[6] அரீழ், எம்.ரி.எம்., 2001, அரூஸிய்யதுல் காதிரிய்யாவின் ஆத்மஞானிகளும் அறப் பணிகளும், ப. 2-3
[7] மக்கீன், மானா, மே.கு.நூ. ப. 106

போதனை செய்யுமாறு வேண்டிக்கொண்டதற்கிணங்க மார்க்க பிரசார நோக்கத்திற்காக அடிக்கடி இலங்கை வந்து செல்லலானார்.

இவ்வாறு நிகழ்ந்து கொண்டிருக்கையில் கடும் நோய்வாய்ப்பட்ட சின்ன தைக்கா ஸாஹிப் அவர்கள் தன் மரண நேரம் நெருங்கியதும் தமது சீடரும் மருமகனுமாகிய மாப்பிள்ளை லெப்பை ஆலிமையே தமது கலீபாவாகவும், தம்முடைய தைக்காவின் தலைவராகவும் நியமித்து விட்டு ஹிஜ்ரி 1267 (கி.பி. 1851)இல் மரணமடைந்தார்[8]. இதன் பின்னர் தைக்கா ஸாஹிப் நடாத்தி வந்த தைக்கா, 'அரூஸிய்யா தைக்கா' என்று பெயர் மாற்றம் பெற்று வளர்ச்சி கண்டது. இந்தியாவிலிருந்து மட்டுமன்றி இலங்கையிலிருந்தும் மாணவர்கள் அங்கு சென்று கல்வி கற்கலாயினர்.

தனது ஒரு சிறுபொழுதையேனும் வீணாக்காத மாப்பிள்ளை லெப்பை ஆலிம், மாணவர்களுக்கு மார்க்கக் கல்வி போதிப்பதோடு இரவு பகலாக அமல் செய்வதிலும் அல்லாஹ்வின் மகத்துவத்தைப் பற்றி சிந்திப்பதிலும் தனது நேரத்தைச் செலவிட்டதுடன் அறபியிலும், அறபுத் தமிழிலும் பல நூல்களை எழுதி மக்களுக்கு அறிவு விருந்தும் வழங்கிக் கொண்டிருந்தார். வர்த்தக நோக்கில் தான் சென்ற இடங்களிலெல்லாம் வர்த்தகத்துடன் சேர்த்து கூடவே இஸ்லாமியப் பிரசாரப் பணியையும் மேற் கொண்டார். வர்த்தக நோக்கத்திற்காக சில இடங்களில் தொடர்ந்து பல நாட்கள் தங்க வேண்டிய நிலையும் அவருக்கு ஏற்பட்டது. இதனால், அவ்வவ்விடங்களில் வாழ்ந்த மக்களின் சமய, சமூக நிலைகள் பற்றியும் தேவைகள் பற்றியும் அவரால் அறிந்து கொள்ள முடிந்தது. இதுவே அவரை முஸ்லிம்களின் சமய, சமூக, கலாசாரத் துறைப் பணிகளில் ஈடுபடத் தூண்டியது. பல இடங்களில் அவர், மஸ்ஜித்களையும், தைக்கியாக்களையும் நிர்மாணிக்கத் தூண்டுகோலாய் அமைந்தார். சுமார் 355 மஸ்ஜித்கள் அவரின் தூண்டுதலால் நிர்மாணிக்கப்பட்டதாக கலாநிதி அஜ்மல் கான் என்பவர் எழுதிய 'தமிழ் நாட்டு முஸ்லிம்கள் - போர்த்துக்கீசருக்கு முன்பும் பின்பும்' எனும் நூலை ஆதாரம் காட்டி கலாநிதி தைக்கா ஷுஜப் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்[9].

முஸ்லிம்கள் செறிவாக வாழ்ந்த கொழும்பு மாவட்டத்தின் மருதானை நகரில் மஸ்ஜித் ஒன்றை நிர்மாணிக்க கொழும்பு முஸ்லிம்கள் தீர்மானித்து, அதற்கு அடிக்கல் நடுவதற்காக கீழக்கரையில் வாழ்ந்த புகழ்பூத்த மெய்ஞ்ஞானியும் அறிஞருமான தைக்கா ஸாஹிப் என்பவருக்கு அழைப்பு விடுத்தனர். அவர் தனது மாணவரும் மருமகனுமாகிய மாப்பிள்ளை லெப்பை ஆலிமை அப்பணியை நிறைவேற்றுமாறு கேட்டுக் கொண்டதால் மருதானை மஸ்ஜிதுக்கு அவர் அடிக்கல் நாட்டினார். கட்டட நிர்மாணப் பணிகள் பூர்த்தியானதும் அவரே திறந்து வைத்தார். இது பற்றிய குறிப்பு ஒன்றை அவர் தனது நாட்குறிப்பேட்டில் (Diary) இல் குறித்து வைத்துள்ளதுடன், மஸ்ஜித் திறப்பு விழா பற்றி ஏழு வரிகளைக் கொண்ட ஒரு கவிதையையும் பாடியுள்ளார்[10].

இலங்கை முஸ்லிம்களின் சமய மறுமலர்ச்சிக்காக தமது உடல், பொருள், காலம் அனைத்தையும் தியாகம் செய்து கொழும்பு, காலி, மாத்தறை, வெலிகாமம், அம்பாந்தோட்டை போன்ற நகரங்களில் மட்டுமன்றி ஏனைய குக்கிராமங்களிலும் பெருமளவு பள்ளி வாயல்களையும், தைக்கியாக்களையும் நிறுவியதோடு அங்கெல்லாம் தமது முரீதீன்களையும் உற்பத்தி செய்தார். தாம் தாபித்த நிலையங்களில்

[8] அப்தல் றஹீம் 2004, மே.கு.நூ, ப. 249
[9] அமீன், எம்.ஐ.எம்., 2010, இலங்கை முஸ்லிம்களின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட முன்னோடிகள், ப.82
[10] மேலது

சமயக் கடமைகளைச் செய்யும் திட்டங்களை வகுத்து அவற்றுக்கு செயல் வடிவமும் கொடுத்தார். அவை றாத்திப், திக்ர், ஸலவாத் மஜ்லிஸ்களாகப் பரிணமித்தன[11].

தென்னிந்தியாவில் பிறந்து வளர்ந்திருந்தாலும் இலங்கை அவருக்கு அந்நியமானதாக இருக்கவில்லை. அதனால் அவர் இலங்கை முஸ்லிம்களின் சமய, சமூக மேம்பாட்டில் பெரும் அக்கறை கொண்டிருந்தார். எனவே, பள்ளிவாயல்கள், தைக்கியாக்களை மட்டுமன்றி, கீழக்கரையில் தாம் நடாத்தி வந்த அறபு மத்ரஸாவைப் போன்று இலங்கையிலும் ஒரு மத்ரஸாவை அமைக்க வேண்டும் என்று ஆவல் கொண்டார். அதற்காக முயற்சித்ததன் விளைவாக 'அல் மத்ரஸதுல் பாரி பி மஸ்ஜிதில் புகாரி அலா நஹ்ரில் ஜாரி' என்று அழைக்கப்படுகின்ற அறபுக் கல்லூரியை கி.பி. 1884 இல் வெலிகாமத்தில் ஆரம்பித்தார்[12]. முஸ்லிம் உலகெங்கும் இருக்கின்ற மத்ரஸா கல்விக் கூடம் இலங்கையில் இருக்கவில்லை. இதனால், அத்தகைய கல்விக் கூடம் ஒன்றை நிறுவுவது ஒரு கட்டாயமான தேவை என்று உணர்த்தி, நெருக்கமான உறவு வைத்திருந்த தென் இலங்கை மக்களிடம் உதவி கோரிப் பெற்று, இம்மத்ரஸாவை ஆரம்பித்தார். இதனை நிறுவியதோடு நின்றுவிடாது இப்பகுதி இளைஞர் ஒருவரைக் கீழக்கரைக்கு அழைத்துச் சென்று, அங்குள்ள அரூஸிய்யா மத்ரஸாவில் கற்கச் செய்து ஆலிமாக்கி, அவரையே இம்மத்ரஸாவின் (மத்ரஸதுல் பாரி) முதல் அதிபராகவும் ஆசானாகவும் நியமித்ததுடன் தனது தரீக்காவின் நடவடிக்கைகளை முன்னின்று நடாத்தும் கலீபாவாகவும் நியமித்தார். இவ்விளைஞரே பிற்காலத்தில் 'சின்ன லெப்பை ஆலிம் சாஹிப்' என்று பிரசித்தி பெற்று விளங்கிய முஹம்மது இப்றாஹீம் ஆலிம் ஆவார்[13].

இம்மத்ரஸா நிறுவப்பட்ட ஆண்டான 1884 இலங்கை முஸ்லிம்களின் கல்வி வரலாற்றில், பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஓர் ஆண்டாகும். ஏனெனனில், கண்டியிற் பிறந்த முஹம்மத் காஸிம் சித்தி லெப்பை கொழும்பிற் குடியேறி, மேனாட்டுக் கல்வியை இஸ்லாமிய சூழலில் முஸ்லிம்களுக்கு வழங்க 'மத்ரஸதுல் கைரிய்யதில் இஸ்லாமிய்யா' எனும் பாடசாலையை இதே ஆண்டில் கொழும்பில் ஆரம்பித்தார். இந்தியாவின் கீழக்கரையில் வாழ்ந்த மாப்பிள்ளை லெப்பை ஆலிம் வெலிகமைக்கு வந்து, இலங்கை முஸ்லிம்களிடையே மரபு ரீதியான கல்வியை வழங்கி, சமய மறுமலர்ச்சியை தோற்றுவிப்பதற்காக 'மத்ரஸதுல் பாரி' எனும் அறபு மத்ரஸாவை இதே ஆண்டில் தோற்றுவித்தார். இவ்விரு அறிஞர்களும் சமூக முன்னேற்றம் கருதி, கல்லூரிகளை அமைத்து, நூல்களை எழுதி, மக்களைச் சீர்திருத்த முயற்சித்தார்கள். எனினும், தமது இலக்கை அடைய இவ்விரு அறிஞர்களும் இரு வெவ்றேபட்ட சிந்தனை வழிமுறைகளைக் கையாண்டுள்ளார்கள்.

மத்ரஸாக்கள் காலத்தின் தேவை என மக்கள் உணர்ந்தமையால் அவை சமூகத்தின் ஆதரவைப் பெற்றன. எனினும், மத்ஸதுல் பாரி ஆரம்பிக்கப்பட்ட அதே ஆண்டில், கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட மத்ஸரதுல் கைரிய்யதுல் இஸ்லாமிய்யாவை மக்களிடையே தோன்றிய வேற்றுமை காரணமாகவும், பணப் பற்றாக்குறை காரணமாகவும் ஆரம்பித்த ஓரிரு வருடங்களில் மூடவேண்டியேற்பட்டது. இப்பாடசாலையின் ஆசிரியருக்கான சம்பளத்தை வழங்கக்கூட போதிய பணம் சேராதிருந்த நேரத்தில் மத்ரஸதுல் பாரியின் ஆசிரியர்களுக்கான சம்பளத்தையும் இலவச உணவையும் வழங்க மக்கள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள்[14]. இன்று வரை இயங்கிவரும் இம்மத்ரஸாவை மக்கள் எவ்வளவு ஆதரித்தார்கள் என்பதையும், மரபு ரீதியான கல்வியை மக்கள் எவ்வளவு தூரம் விரும்பியுள்ளார்கள் என்பதையும் இவை

[11] யூசுப், ஏ.எச்.எம்., 1984, மகான் மாப்பின்னை லெப்பை ஆலிம், மிஷ்காதுல் பாரி நூற்றாண்டு விழா சிறப்பு மலர், ப. 104
[12] அமீன், எம்.ஐ.எம்., 2010, ப.68
[13] அரீழ், எம்.ரி.எம்., மே.கு.நூ., ப. 07
[14] அமீன், எம்.ஐ.எம்., மே.கு.நூ. ப. 71

காட்டுகின்றன. சுமாராக 135 வருடங்களுக்கு மேலாக மார்க்க அறிஞர்களை உருவாக்கிவரும் இம்மத்ரஸாவினூடாக இந்நாட்டு முஸ்லிம்கள் அடைந்துள்ள பயன்கள் ஏராளம் எனலாம்.

பிரசாரப் பணிகள், பள்ளிவாயல்களையும் மத்ரஸாக்களையும் நிறுவுதல் என்பவற்றோடு எழுத்துத் துறை மூலமாகவும் தனது பணியைத் தொடர்ந்தார். மார்க்கக் கடமைகளோடு தொடர்பான சட்டங்களை விளக்கும் 'பத்ஹுல் மதீன், 'பத்ஹுத் தய்யான்', பத்ஹுஸ் ஸலாம் போன்ற நூல்களைப் பொது மக்களுக்கு விளங்கக் கூடிய வகையில் அறபுத் தமிழில் சுருக்க நூல்களாக வெளியிட்டார். பின்னர் இவை அனைத்தையும் உள்ளடக்கி, 'மஹானி' என்ற பெயரில் விரிவான சட்டக் கிரந்தம் ஒன்றை அறபுத் தமிழில் எழுதி வெளியிட்டார். அன்னாரின் இந்நடவடிக்கையினால் இஸ்லாமிய சட்ட நுணுக்கங்களை சாதாரண அறிவு படைத்தோரும் அறியும் பாக்கியம் பெற்றதோடு மக்கள் இஸ்லாமிய சட்டங்களை உணர்ந்து நடக்கவும் வழியேற்பட்டது. இந்நூல் 1994ஆம் ஆண்டு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது[15]. இந்நூலுக்கு ஏற்பட்ட அதிகரித்த கேள்வியின் காரணமாக 2001ஆம் ஆண்டு அதன் நான்காவது பதிப்பு வெளியிடப்பட்டது. "ஒரு முஸ்லிமின் இல்லத்தில் மஹானி இருப்பது ஓர் ஆலிம் இருப்பதற்குச் சமன்"[16] என்ற எமது சான்றோர்களின் கருத்து இங்கு சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

இந்நூலில் ஈமான், தவ்ஹீத், தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ், வியாபாரம், வட்டி, கடன், பாகப் பிரிவினை, விவாகம், விவாகரத்து, திக்ருகள், தஸ்பீஹ்கள் முதலிய தலைப்புகளில் ஒவ்வோர் அம்சமும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. தொழுகை பற்றி எழுதும் போது ஐந்து நேரத் தொழுகை, சுத்தம், வுழு, தயம்மும், நஜீஸ், அதான், இகாமத், தொழுகையின் பர்ழுகள், சுன்னத்துகள், கழாத் தொழுகை, சுன்னத்தான தொழுகைகள், ஜும்ஆ, ஜனாஸாத் தொழுகை போன்றன பற்றி விளக்கியுள்ளார். இவ்வாறே ஏனைய தலைப்புகளையும் விளக்கியுள்ளார். மனித வாழ்வின் அன்றாட நிகழ்வுகளுடன் தொடர்புடைய விடயங்கள் பற்றிய ஏவல், விலக்கல்களை உள்ளடக்கிய 'ஷரீஆ விதிகளை 'ஷாபிஈ மத்ஹபினரின் சிந்தனைச் செயற்பாட்டு வழிமுறையில் தொகுத்துத் தந்துள்ளார். இலங்கையிலும், தென்னிந்தியக் கரையோரங்களிலும் வாழ்ந்த முஸ்லிம்களிற் பெரும்பான்மையினர் 'ஷாபிஈ மத்ஹபைச் சேர்ந்தவர்களாதலால், அவர்களின் பயன்பாடு கருதி, 'ஷாபிஈ மத்ஹப் வழிமுறையில் இந்நூலை எழுதியுள்ளார்[17].

அறபு மொழியில் மாத்திரம் நிகழ்த்தப்பட்ட வெள்ளிக்கிழமை ஜும்ஆப் பிரசங்கங்களைப் பாமர மக்கள் விளங்கிக் கொள்ளமாட்டார்கள் என்பதை அறிந்த அவர் புகழ்பெற்ற ஜும்ஆப் பேருரைகளின் ஆசிரியரான 'அபூ யஹ்யா அப்துர் ரஹ்மான் இப்னு முஹம்மத் இப்னு நபாதா' என்பவரின் 'குத்பா நபாத்தியாவை அறபுத்தமிழில் மொழிபெயர்த்து, அவற்றை ஜும்ஆப் பிரசங்கத்தின் போது வாசிக்க வழி செய்தார்[18]

இலங்கை முஸ்லிம் பெண்கள் சிங்களவர்களின் கலாசாரத்தோடு தொடர்புடைய பாடல்களைப் பாடிவருதைக் கண்டு மனம் வருந்திய அவர் 'தலைப் பாத்திஹா' என்ற பெயரில் உரை நடையும் பாடலும் இணைந்த வகையில் அறபும் அறபுத் தமிழும் கலந்த நூலொன்றை எழுதி அதனை நமது நாட்டின் முஸ்லிம் பெண்கள் தமது இல்லங்கள் தோறும் பாடி மகிழ வழிசெய்ததன் மூலம் அவர்களுக்கு பாத்திமா (றழி) அவர்களின் பரிசுத்த வாழ்க்கை நெறி பற்றிய அறிவை ஊட்டினார். தலைப் பாத்திஹா குறித்து கலாநிதி தைக்கா ஷுஜப் ஆலிம் தரும் கீழ்வரும் கருத்து நோக்கத்தக்கதாகும்.

---

[15] Nuhman, M.A., 2007, Sri Lankan Muslims : Ethnic Identity with Cultural Diversity, p.168
[16] அரீழ், எம்.ரி.எம்., மே.கு.நூ., ப. 04
[17] அமீன், எம்.ஐ.எம்., மே.கு.நூ. ப. 72
[18] Shukri, M.A.M., 1986, Muslims of Sri Lanka – A Cultural Perspective in Muslims of Sri Lanka Avenues to Antiquity. p. 354

> "தலைப் பாத்திஹா இலக்கியம், அதி விசேடமாக இலங்கைப் பெண்களுக்கென்றே அவர்களது வேண்டுகோளுக்கிணங்க உருவான ஒன்று. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் உருவாக்க முயன்ற ஒரு கலாசாரப் பண்பாட்டுச் சீரழிவுக்குள் உட்படவிருந்த அருமைப் பெண்களைக் காக்கும் கேடயமாகவும் அது பயன்பட்டது. இஸ்லாத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளிலிருந்தும் அவர்களை அது மீட்டெடுத்தது"[19].

இலங்கையில் காதிரிய்யா தரீக்காவின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் பெரும் தொண்டாற்றியுள்ளார். இதன் நிமித்தம் கி.பி. 1848இல் 'அரூஸிய்யதுல் காதிரிய்யா' சங்கத்தை ஆரம்பித்தார். இதன் மத்திய பீடமாக கொழும்பு பழைய சோனகத் தெருவிலுள்ள 'ம.ன்முஸ் ஸுஅதா' தைக்கா தொழிற்பட்டு வந்தது. குறுகிய காலத்திற்குள் இதன் கிளைகள் நாடெங்கிலும் வியாபித்தன. பாணந்துறை, களுத்துறை, பேருவலை, அளுத்கம, மக்கூன், காலி, மாத்தறை, வெலிகம, அம்பாந்தோட்டை, மாத்தளை, கண்டி, கம்பளை. மாவனெல்ல, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், இரத்தினபுரி முதலிய இடங்களில் இதன் கிளைகள் தாபிக்கப்பட்டன[20].

மகான் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் தமது முரீதீன்களுக்கு 'பைஅத்' அளிப்பதோடு மட்டும் நின்று விடாது நாளாந்த விர்துகள், திக்ர், ஸலவாத்துகள் என்பவற்றையும் சொல்லிக் கொடுத்தார்.

இவ்வாறாக தனது சமயப் பணிகளின் மூலம் மார்க்கக் கடமைகளில் அலட்சியமாய் வாழ்ந்த முஸ்லிம்களைப் பள்ளிவாயல்களோடு தொடர்புள்ளவர்களாகவும் தொழுகை மற்றும் இதர வணக்க வழிபாடுகளை நிறைவேற்றுபவர்களாகவும் மாற்றியமைத்தார்.

இவ்வாறு சுமார் 65 ஆண்டு காலம் மார்க்கத்திற்காக அயராது உழைத்த அல்லாமா மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் ஹிஜ்ரி 1316 றஜப் பிறை 05 (கி.பி.1898 நவம்பர் 19) இல் மரணமெய்தினார்கள். அன்னாரின் ஜனாஸா கீழக்கரையிலுள்ள அரூஸிய்யா தைக்கியாவில் அவரது மாமனாரான 'முத்து வாப்பா' என்று அழைக்கப்பட்ட தைக்கா ஸாஹிப் அவர்களின் அடக்கஸ்தலத்திற்கு அருகாமையில் மறுதினம் லுஹர் நேரத்துக்கு சற்று முன்னர் நல்லடக்கம் செய்யப்பட்டது[21]. அடுத்து வந்த வெள்ளிக் கிழமை ஜும்ஆவுக்குப் பின் பல மஸ்ஜித்களில் அவருக்காக ஜனாஸா தொழுது பிரார்த்தித்தார்கள். மதுரையைச் சேர்ந்த பிரபல அறிஞர் ஸாலிம் அப்துஸ் ஸலாம் என்பவரும் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களின் சமகாலத்தவரான நூஹ் லெப்பை ஆலிம் ஸாஹிப் என்பவரும் அவரது சேவையைப் பாராட்டி கஸீதா பாடியுள்ளார்கள்[22].

முடிவுரை

19ஆம் நூற்றாண்டில் இலங்கை முஸ்லிம்கள் எதிர்கொண்ட ஆன்மீகத் தாகத்தைத் தீர்த்து வைத்ததில் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களின் பங்களிப்புக்கள் அளப்பரியதாகும். இதற்கு அவர் உருவாக்கிய மஸ்ஜித்கள், தரீக்காக்கள், மத்ரஸாக்கள் மற்றும் நூல்கள் என்பன சான்றுபகர்கின்றன. இவர் மேற்கொண்ட முயற்சியின் விளைவாக முஸ்லிம்கள் ஆன்மீகத்துறையுடன் இணைக்கப்பட்டதோடு, அந்நியக் கலாசாரத்திலிருந்தும் பாதுகாக்கப்பட்டார்கள். இன்றைய காலகட்டத்தில் இவர் போன்று பெயர்

---

[19] Alim. Tayka Shu'ayb, 1993, Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu, p. 74 - 75
[20] அரீழ், எம்.ரி.எம்., மே.கு.நூ., ப. 09

[21] அப்தல் றஹீம், மே.கு.நூ. ப. 273
[22] அமீன், எம்.ஐ.எம்., மே.கு.நூ. ப. 67

குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு தனிமனித ஆளுமைகள் காணப்படவில்லை. பன்மைத்துவ சமூகத்தில் மார்க்க போதனைகளை மேற்கொள்ளும் தனிமனித ஆளுமைகள் மற்றும் நிறுவனங்களுக்கு மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களின் இத்துறைசார்ந்த செயற்பாடுகள் பெரிதும் வழிகாட்டியாக அமையும் என்பதை இவ்வாய்வின் கண்டறிதல்கள் வெளிப்படுத்தியுள்ளன.

உசாத்துணை

தமிழ் நூல்கள்

1. அமீன், எம்.ஐ.எம். (2010), "இலங்கை முஸ்லிம்களின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட முன்னோடிகள், ஹெம்மாத்தகம: அல் ஹஸ்ஸனாத் பதிப்பகம்.

2. அமீன், எம்.ஐ.எம். (2009), "இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும் (1870 – 1915) கொழும்பு: இஸ்லாமிய புத்தக இல்லம்.
3. அரீழ், எம்.ரி.எம். (2001), "அரூஸியத்துல் காதிரியாவின் ஆத்மஞானிகளும் அறப் பணிகளும், வெலிகாமம்.
4. சுக்ரி, எம்.ஏ.எம். (2010), "இலங்கை முஸ்லிம்கள் - தொண்மைக்கான வரலாற்றுப் பாதை", பேருவளை: நளீமிய்யா இஸ்லாமிய வெளியீடுப் பணியகம்.
5. பாரி, எம்.எஸ். அப்துல், (2001), "இலங்கை முஸ்லிம்களின் சமூக கலாசார மறுமலர்ச்சியில் அறபு மத்ரஸாக்களின் பங்களிப்புக்கள், இலங்கை: (பதிப்பிக்கப்படாத முது தத்துவமானி ஆய்வுக் கட்டுரை, பேராதனைப் பல்கலைக்கழகம்).
6. றஹீம், அ. (2004), "வலிமார்கள் வரலாறு (ஐந்தாம் பாகம்)" சென்னை: யுனிவெசல் வெளியீடு.
7. மக்கீன், ம. (1998), "இலங்கை – கீழக்கரை இனிய தொடர்புகள்", சென்னை: மணிமேகலை பதிப்பகம்.
8. ஹுஸைன், ஏ,ஜே. (2010), "இலங்கை முஸ்லிம்களிடையேயான சமய, சமூக சீர்திருத்தப் பணிகள் - சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலம் பற்றிய விசேட ஆய்வு, பதிப்பிக்கப்படாத முதுதத்துவமானி ஆய்வேடு, பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை.

சஞ்சிகை

1. யூசுப், ஏ.எச்.எம். (1984), மகான் மாப்பிள்ளை லெப்பை ஆலிம், மிஷ்காதுல் பாரி நூற்றாண்டு விழா சிறப்பு மலர், வெலிகாமம்: அல் மத்ரஸதுல் பாரி அறபுக் கல்லூரி.

ஆங்கில நூல்கள்:

1. Alim, Tayka Shu'ayb, (1993), "Arabic, Arwi and Persian in Serandib and Tamil Nadu, Madras: Imamul Arus Trust.
2. Nuhmam, M.A. (2007), "Sri Lankan Muslims: Ethinic Identitiy within Cultural Diversity, Colombo: International Center for Ethinic Studies.
3. Sukri, M.A.M. (1986), "Muslims of Sri Lanka Avenues to Antiqutiy, Beruwela: Jamiya Naleemiya Institute.

பெண் ஏன் அடிமையானாள்? மற்றும் இரண்டாம் பாலினம் (The Second Sex) நூல்களின் நோக்கில் பெண் விடுதலை- ஒரு பெண்ணிய மெய்யியல் ஒப்பீட்டாய்வு

சந்திரபோஸ் பபிதாதர்ஷி[1], இரத்தினசபாபதி பிரேம்குமார்[2]
[1,2] தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[1]bbi2428dharshi@gmail.com, [2]premkumarr@esn.ac.lk

ஆய்வுச் சுருக்கம்

மானுடத்தின் உயர்ந்த பண்பே மனிதனை மனிதன் மதிக்க வேண்டுமென்பதே. ஆனால் பெண்களை ஆண்களின் உலகமானது சக உயிரியாகக்கூட மதிப்பதில்லை. ஒத்த தகுதியுடைய இரண்டு கூறுகளிடையே எப்போதும் முரண்பாடுகள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். இதனால் தான் ஆண், பெண் என்ற இரு உயிரிகளுக்கிடையே போராட்டங்கள் தொடர்ந்துக்கொண்டே இருக்கின்றன. பெண்ணுக்குரிய சமூக ஏற்றத்தாழ்வு என்பது சமத்துவமின்மையை தான் கொண்டுவருகின்றது என்பது கண்கூடு. அந்தவகையில், 'பெண் ஏன் அடிமையானாள்?' மற்றும் 'இரண்டாம் பாலினம்' நூல்களின் நோக்கில் பெண் விடுதலை - ஒரு பெண்ணிய மெய்யியல் ஒப்பீட்டாய்வு' எனும் இவ் ஆய்வானது 'பெண்விடுதலை' என்பதனை அடிப்படையாகக் கொண்டது. பெண்ணிய விடுதலைக்கு 'இரண்டாம் பாலினம்' மற்றும் 'பெண் ஏன் அடிமையானாள்?' என்ற நூல்கள் அடிப்படையில் ஏறத்தாழ ஒரே கருத்துக்களைக் கொண்டுள்ளன என்பதோடு சமூகத்திற்கு பெண்மை பற்றிய ஒரு தீவிரத்தன்மையை ஒட்டிய தீர்வினை வழங்கியுள்ளன என்ற கருதுகோளை அடிப்படையாக இவ்வாய்வு கொண்டுள்ளது. இவ்வாய்வானது, பண்பு ரீதியானதாக காணப்படுவதுடன் இரண்டாம் நிலைத்தரவுகளான நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் கட்டுரைகள் என்பனவும் மூன்றாம் நிலைத்தரவான இணையத்தள மூலங்களும் பயன்படுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பகுப்பாய்வின் மூலம் மேலைத்தேய பெண்ணியமும் கீழைத்தேய பெண்ணியமும் பொதுவில் ஒன்று போலவும் தீவிரவாதத்தன்மை கொண்டவையாகவும் காணப்படுகிறது என்கிற முடிவினை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் இவ் ஒப்பீட்டாய்வின்படி, பெண் ஏன் அடிமையானாள்? என்ற நூலும் இரண்டாம் பாலினம் என்ற நூலும் பெண் விடுதலை பற்றிய ஒருமித்த கருத்தினை கொண்டிருப்பதனை காணமுடிகின்றது. மேலும் இவ்வாய்வு பெண்ணானவள் அடையவேண்டிய விடுதலைக்கான பரிந்துரைகளையும் முன்வைப்பது குறிப்பிடத்தக்கது..

திறவுச் சொற்கள்: பெண் விடுதலை, பெரியார், பெண் ஏன் அடிமையானாள்?, இரண்டாம் பாலினம், சைமன் டீ பெவாயர்

1.0 ஆய்வு அறிமுகம்

உலக சனத்தொகையில் ஒரு பாதியாய் மக்களின் தோற்றத்திற்கு நிலைக்கல்லாய் விளங்கும் பெண்களின் உலகமானது அவளுக்கென்றே வரையறுக்கப்பட்ட தனித்துவமான சில விடயங்களான கற்பு, காதல், விபச்சாரம், கைம்மை, சொத்துரிமையற்ற நிலை , சக்தி, தேவதாசி, உடன்கட்டை ஏறுதல் போன்ற இன்னும் பல கட்டுப்பாட்டு விலங்குகளை கொண்டு காணப்படுகின்றது. அவை இயல்பாகவே பெண்களை இரண்டாம் நிலைப்படுத்துபவையாக இருப்பதோடு, இத்தகைய சொற்களும் நடைமுறைகளும் சமூகத்தை ஒழுங்கில் வைத்துக்கொள்ள உதவுவதாக ஆண்களால் கருதப்படுவதுடன் வலிந்து உருவாக்கப்பட்டதாகவும் பெண்கள் மீது திணிப்பட்டுள்ளதாகவும் காணப்படுகின்றது. இத்தகைய சுதந்திரமற்றதன்மை ஆதி கிரேக்கம் முதல் இருந்து வந்துள்ளதை வரலாற்றில் காணமுடிகிறது. ஆரம்ப காலம் முதலே மெய்யியலாளர்கள் பெண்கள் குறித்து கொண்டிருந்த பாலினஞ் சார்ந்த பாரபட்சமான கருத்துக்களே இன்றைய தீவிர பாலின நோக்குகளுக்கும் அநீதிக்கும் அடிப்படையாகவும் ஆண், பெண் என்ற வெவ்வேறான போக்கினை கொண்ட சமூகமாக உருவாக்கம பெறவும் காரணமாக இருக்கலாம்.

தொடக்கநிலையில் பெண்ணியம் 'பெண்களின் தேவைகளை நிறைவேற்றல் அவர்கள் சார்பாக வாதிடல்..' (Advocacy of the Claim of Women) என்ற பொருளையே கொண்டிருந்தது. காலப் போக்கில் அது 'பால்நிலை சமத்துவம்' (Sexual Equality) என்ற எண்ணக்கருவினை மையப்பொருளாக்கிக் கொண்டது. 1848 ஆம் ஆண்டு அமெரிக்காவில் செனெகா பால்ஸ் (Seneca

falls) என்ற இடத்தில் பெண்ணிய மாநாடு நடத்தப்பட்டது. இம்மாநாட்டினை லுக்ரிடியா மாட் (Lucretia Mott), எலிசெபெத் ஸ்டான்டன் (Elizabeth Stanton) என்ற இரு பெண்கள் தலைமைத்தாங்கி நடத்தினர். இவர்களின் உத்வேகத்தினை தூண்டிய நூல்களாக, மேரி வொட்சன் கிராப்ட் எழுதிய "பெண்ணுரிமை கொள்கை நிறுவீடு" (A Vindication of the Rights of Women) என்ற நூலும் ஜோன் ஸ்டுவார்ட் மில் எழுதிய "பெண்ணடிமைத்தனம்" (The Subjection of Women) என்ற நூலும் சிறப்பிடம் பெறுகின்றன.

1960 மற்றும் 1970களில் பெண்ணிய இயக்கங்கள், அக்காலம் வரை பெண் என்பவள் குறித்து முன்மொழியப்பட்ட அனைத்து வேறுப்பாட்டினையும் மறுதலித்து, இயற்கை இருபாலாருக்கும் இடையில் உடல் ரீதியாகவோ உளரீதியாகவோ எந்தவித பாகுபாட்டினையும் உருவாக்கவில்லை என்றது.

சமகாலப்பெண்ணியவாதிகள் மேற்குறித்த கருத்தாக்கத்தில் ஒரு தளர்வான போக்கினை உள்வாங்கி, பெண்கள் ஆண்களை காட்டிலும் வித்தியாசமான முறையில் சிந்திக்கிறார்கள் என்றும், பெண்களின் சிந்தனைப்பாங்கு ஆண்களைக்காட்டிலும் தாழ்வானது அல்ல என்ற கருத்துக்களை அதிகம் வெளிப்படுத்துகிறன்றனர். பெண்ணியம் என்ற சொல்லின் பொருளை வளர்த்தெடுக்க சுமார் மூன்று நூற்றாண்டுகள் தேவைப்பட்டிருக்கின்றன. அதன் முக்கியக்கர்த்தாக்களே அப்ராபெண், கேட் மில்லட், மேரி வொல்ஸ்டன், ஜோன் ஸ்டுவார்ட் மில், சைமன் டீ பெவாயர், பெட்டி ∴ப்ரைடன் என்பவர்களாவர்.

இந்தப்பின்னணியில் தான் பிரான்சு நாட்டைச் சேர்ந்த சைமன் டீ பெவாயர் (Simone de Beauvoir) 'இரண்டாம் பாலினம்' (The Second Sex) என்ற நூலை 1949 இல் வெளியிட்டார். இந்த நூலை முன்னோடியாகக் கொண்டு, பெண்ணியம் ஓர் அறிவார்ந்த கொள்கையாகவும் போராட்டக் கருவியாகவும் முன்வைக்கப்பட்டது. சைமன் டீ பெவாயர் (Simone de Beauvoir) பெண்ணியம் மற்றும் இருத்தலியல் பற்றிய எழுத்தாளர் ஆவார். இவர் நாவல்களையும் எழுதியுள்ளார். இவரது 'இரண்டாம் பாலினம்'ஆண்களும் பெண்களும் வெவ்வேறு போக்குகளைக் கொண்டிருக்கும்போது, ஒவ்வொரு நபரும் தனித்தன்மை வாய்ந்தவர்கள் என்றும் நாம் வாழும் சமூகத்தில் பெண்ணை ஆண்கள், 'மற்றையது' என்ற நிலையில் வைத்திருப்பதாகவும் இதனால் 'பெண் பிறப்பதில்லை, உருவாக்கப்படுகின்றாள' என்று குறிப்பிடுகின்றது. இரண்டாம் பாலினம் பற்றிய பகுப்பாய்வு பெவாயர் ஒரு பெண்ணாக அவர் எதிர் கொண்ட அனுபவங்கள் மற்றும் யதார்த்தங்களின் எதிர் வினைகளாக இருக்கின்றன.

இந்தியாவில் "பெண்ணியம்" என்ற சொல் 1960க்குப் பிறகே அதிகமாகப் பேசப்பட்டது. இந்திய தேசியமும் இந்தியப் பெண்ணியமும் ஒரே காலகட்டத்தில் கட்டமைக்கப்பட்டது. மேலைநாட்டுப் பெண்ணியத்திற்கு எதிராகவே இந்தியப் பெண்ணியம் உருவாக்கப்பட்டது. பெண்மையின் வலிமை சக்தியை அடிப்படையாகக் கொண்டே இந்திய நாகரிகம் என்னும் மாளிகை எழுப்பப்பட்டிருக்கிறது என்று சரோஜினிதேவி போன்றவர்கள் குரல் கொடுத்தனர். இந்தப் பின்னணியில்தான், பெண் தெய்வமாக்கப்பட்டாள் சக்தியின் வடிவமாக கொண்டாடப்பட்டாள்.

ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி என்று வகுத்து பெண்ணடிமைத்தனத்தைச் சட்டமாக்கியிருந்த மனுநீதியை(மனுதர்ம சாஸ்திரம்) எதிர்த்துக் குரல் கொடுக்கும் போக்குகள் ஆங்கில ஆட்சிக்குப் பின்னரே பெண்களிடையே ஏற்பட்டது. மனுநீதியில், 'ஒரு பெண் சிறுவயதில் தந்தைக்கும், திருமணமானபின் கணவனுக்கும், முதுமையில் தன் மகனுக்கும் கட்டுப்பட்டவள்.' என அடிமைசாசனம் எழுதிவைக்கப்பட்டிருந்தது.

பெண்கள் பிரச்சினைகளைப் பெண்களே சிந்திக்காத வேளையில் அவற்றை பிரச்சினை என்று சொல்வதற்கு ஓர் ஆணுக்கு என்ன புரிதல் இருக்க முடியும்? பூனைகளால் எலிகளுக்கு விடுதலை உண்டாகாது. அப்படியிருக்க இவரின் நூல் மட்டும் பெண் விடுதலைக்கு வழிவகுக்குமா? இவை போன்ற ஏராளமான கேள்விகளுக்கான பதிலாகத்தான் பெரியார் என்று பரவலாக அறியப்படுகின்ற ஈ.வே. ராமசாமி எழுதிய ''பெண் ஏன் அடிமையானாள்?' என்ற நூல் வெளிவந்தது.

பெண் என்பவள் தெய்வமாக கருதப்படும் அதே சமூகத்திலே பெண் என்பவள் போகப்பொருளாகவும் தாழ்த்தப்பட்டவளாகவும் கருதப்படுகின்றாள். இவ்வகையில், பெண்கள் ஒன்றில் தெய்வம் எனும் நோக்கில் உயர்வாகவும், மதிப்பிற்கு உரியவளல்ல என தாழ்வாகவும் தான் நோக்கப்படுகின்றாளே தவிர, ஆணுக்கு சமமாக பெண் பார்க்கப்படுவதில்லை என்பதே மாக்சிசவாதியும் தீவிரபெண்ணியவாதியுமான பெரியார் மற்றும் பெவாயர் எழுப்பும் முக்கியப் பிரச்சினையாக காணப்படுகிறது.

1.2 ஆய்வு நோக்கங்கள்

இவ்வாய்வு மேலைத்தேய பெண்ணிய மெய்யியலாளரான சைமன் டீ பெவாயரின் 'இரண்டாம் பாலினம்' மற்றும் கீழைத்தேயத்தில் பெண்ணியம் பற்றி பேசிய ஈ.வே. ராமசாமியின் (பெரியார்) ''பெண் ஏன் அடிமையானாள்?'' என்ற இரண்டு நூல்களிலும் காணப்படும் பெண்மை மற்றும் பெண் விடுதலைத் தொடர்பான கருத்துக்களை ஒப்பிட்டுப் பகுப்பாய்வு செய்தலை பிரதான நோக்கமாக கொண்டுள்ளதுடன், பெண்மை பற்றிய மேற்கத்தேய சிந்தனையாளரான பெவாயரின் சிந்தனைக்கும் கீழைத்தேய சிந்தனையாளரான ஈ.வே. ராமசாமியின் சிந்தனைக்கும் இடையே காணப்படும் ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகளை கண்டறிதல், பெண்மை அல்லது பெண்ணியம் தொடர்பில் சமூகத்திற்கு பொருத்தமான கருத்தினை கொண்டிருப்பது ''இரண்டாம் பாலினமா?'' அல்லது ''பெண் ஏன் அடிமையானாள்?'' என்ற நூலா? என்பதனைக் கண்டறிதல், பெண்ணிய சிந்தனைகள் பற்றிய எண்ணக்கருக்கள் சமூகத்தில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்பதனை கண்டறிந்து பரிந்துரைகள் மூலம் இணக்கமான சூழலை கட்டியெழுப்புதல்,பெண்களின் மீதான அனைத்துவகை ஒடுக்குமுறைகளையும் ஆராய்ந்து அவற்றைப் போக்குவதற்கான தீர்வுகள் மற்றும் விடுதலைப் பெறுவதற்கான வழிமுறைகளைப் பின்பற்றுதல் என்பன ஆய்வின் துணை நோக்கங்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

1.3 ஆய்வுப் பிரச்சினை

பெண் ஏன் அடிமையானாள் மற்றும் இரண்டாம் பாலினம் ஆகிய இரண்டு நூல்களும் பெண் விடுதலை தொடர்பில் எந்தளவுதூரம் ஒற்றுமையான மற்றும் வேற்றுமையான கருத்துக்களைக் கொண்டிருக்கின்றன? என்பது இங்கு ஆய்வுப்பிரச்சினையாக எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

ஆய்வு வினாக்கள்

- பெண் விடுதலை தொடர்பில் எத்தனை கருத்துருவாக்கங்கள் வெளிவந்திருந்தாலும் அதனை ஏற்றுக்கொள்வதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் காணப்படும் சிக்கல் தன்மைகள் யாவை?
- சமகாலத்தில் பெண் சுதந்திரம் பற்றி பல கருத்துக்கள் காணப்பட்டாலும் கூட சமூகத்திற்கு ஏற்ற கருத்துக்களை மேற்குறிப்பிட்ட நூல்கள் வெளிப்படுத்துகின்றதா?
- மேற்குறிப்பிட்ட நூல்களின் உருவாக்கமும் வாசிப்பும் மாறுபட்ட சூழலை மையமாக கொண்டிருப்பதன் காரணமாக ஏற்படும் நன்மைகள் மற்றும் தீமைகள் யாவை?
- பெண் என்பவள் எல்லா இடங்களிலும் சமமாக பார்க்கப்பட வேண்டியவள் தானா? இல்லையாயின் குறிப்பிட்ட இடங்களின் கலாசார மற்றும் ஒழுக்க நியமங்களுக்கேற்ப பெண் என்பவள் நோக்கப்படும் விதங்களில் ஏதேனும் மாற்றங்கள் காணப்படுகிறதா?, தேவையா?

1.4 இலக்கிய மீளாய்வு

‘பெண் ஏன் அடிமையானாள்? மற்றும் இரண்டாம் பாலினம் நூல்களின் நோக்கில் ‘பெண் விடுதலை’ - ஒரு பெண்ணிய மெய்யியல் ஒப்பீட்டாய்வு’ என்ற ஆய்வினை மேற்கொள்வதற்கு பல நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக்கட்டுரைகள் என்பன மீளாய்வு செய்யப்பட்டுள்ளன.

தந்தை பெரியார் (1930) எழுதிய **‘அழியட்டும் ஆண்மை’** என்ற நூலின் கற்பு, பெண்கள் விடுதலை அடைய வேண்டுமானால் ஆண்மை அழிய வேண்டும், கர்ப்பத்தடை, புதிய முறை விவாகம், கல்யாண விடுதலை, மறுமணம் தவறல்ல, பெண்களின் சொத்துரிமை, விபச்சாரம், காதல், கர்ப்பத்தடை மற்றும் விபச்சாரம் போன்ற கருத்துக்கள் இவ்வாய்வுக்கு பெரிதும் துணைப்புரிந்துள்ளன.

ஆறு. அழகப்பன் (2006) எழுதி வெளியிட்ட **‘பெரியார் ஈ.வே.ரா’** எனும் நூலில் பெரியார் பற்றிய அறிமுகத்தினையும் சமதர்மம் பற்றிய எண்ணக்கருக்களையும் பெரியாரும் பெண்ணியமும் என்ற அத்தியாயத்தில் பெண்ணடிமைக் கொடுமை பற்றியும் பெண் போகப்பொருளா?, மறுமணம், சொத்துரிமை, கர்ப்பத்தடை போன்றவைகள் குறித்ததான தெளிவினையும் பெறமுடிந்தது.

இரா.பிரேமா (2000) எழுதிய **‘பெண்ணியம்’** என்ற நூலில் பெண்ணிய கோட்பாட்டாளர்கள் எனும் அத்தியாயத்தில் சைமன் டீ பெவாயர் குறித்தும், பெண்ணிய நூல்கள் எனும் அத்தியாயத்தில் இரண்டாம் பாலினம் எனும் நூல் பற்றிய சுருக்கமான அறிமுகத்தினை காணக்கூடியதாக இருந்தது.

காவ்யா சண்முகசுந்தரம் (2007) எழுதிய **‘பெண்ணியமும் பிரதிகளும்’** எனும் நூலில் சைமன் டீ பெவாயர் பற்றிய எண்ணக்கருக்களும் மற்றும் பெரியாரின் கருத்துக்கள் தொடர்பான திறனாய்வும் மேலும் இவ்வாய்வினை நோக்கி செல்ல உந்தியது.

நாகரத்தினம் கிருஸ்ணா (2021) எழுதி, இந்தியன் பதிப்பகம் வெளியிட்ட நூலான **'சிமொன் தெ பொவ்வார்'** என்ற நூலில் இரண்டாம் பாலினம் பற்றிய பெவாயரின் அனைத்து கருத்துக்களின் உள்ளடங்களாக சிறந்த இலக்கிய மீளாய்வுக்கு உதவியது. இந்நூலானது ஆய்வின் தகவல்களை ஆங்கில மொழியில் இருந்து தமிழில் தொகுத்து தரக்கூடியதாக இருந்தது.

Ruth Evanc (2016) என்பவரால் எழுதப்பட்ட **'Simone De Beauvoir`s The Second Sex'** எனும் நூல் இரண்டாம் பாலினம் பற்றிய பெவாயரின் அனைத்து கருத்துக்களையும் உள்ளடக்கிய வகையில் அவரின் கருத்துக்களை சுருக்கமாகவும் குறைந்தளவு பக்கங்களுடனும் தெளிவாக விளக்குகிறது.

Dharani Ragasingam எழுதிய **'Nivedini'** எனும் சஞ்சிகையில் "Liberal Reforms and National Models, Ambivalent Construction within Nationalism" எனும் தலைப்பின் கீழ் பெண்கள் கொண்டுள்ள சவால்கள் மேலும் இந்திய சுதந்திர போராட்டத்தோடு தொடர்புப்பட்டு பெண் விடுதலை என்பது குறித்தும் மற்றும் பெண் எப்படி அடிமையாக்கப்பட்டிருப்பாள்? என்பதான விளக்கங்களையும் காணமுடிகிறது.

Celine Leboeuf (2015) எழுதிய **' One is not born, but rather becomes a woman: The sex-Gender Distinction and Simone de Beauvoir'** கட்டுரையில் பெவாயரின் சிந்தனைகளில் மிக முக்கிய எண்ணக்கருவான, பெண் பிறப்பதில்லை. மாறாக உருவாக்கப்படுகிறாள் என்பது தொடர்பான கருத்துக்களை காணமுடிகிறது.

1.5 ஆய்வு இடைவெளி

பெரியார் 'பெண் ஏன் அடிமையானாள்?' என்ற படைப்பின் மூலம் இந்திய பண்பாட்டு பிற்புலத்தில் பெண் விடுதலை பற்றிப் பேசுகின்றார். பெவாயர் 'இரண்டாம் பாலினம்' என்ற படைப்பு மூலம் மேலைத்தேய பண்பாட்டுப் பிற்புலத்தில் பெண் விடுதலை பற்றிப் பேசுகிறார். பெரியார் இந்திய தமிழ் ஆணாக இருக்கின்றார். பெவாயர் மேலைத்தேய பெண்ணாக இருக்கின்றார். இத்தகைய இரண்டு வேறுபட்ட பண்பாட்டு வெளிகளில் இருந்து வெளிப்படும் கருத்துக்களை ஒப்பிடுவது இதற்கு முன்னர் இடம்பெறாத ஒன்றாகும். இவ்வகையில் இவ்வாய்வு புதியதாகவும் புதுமையானதாகவும் காணப்படுகின்றது.

02. ஆய்வு முறையியல்

ஆய்வுக்கான வடிவமைப்பு, ஆய்வுக்கான தரவு மூலங்கள், பயன்படுத்தப்பட்டுள்ள தரவுகளின் வகைகள், தரவுகளை சேகரிக்கும் முறை, பகுப்பாய்வு முறை, ஒப்பீட்டாய்வு முறை, விபரண பகுப்பாய்வு முறை, உள்ளடக்க பகுப்பாய்வு முறை மற்றும் விமர்சன ஆய்வு முறை என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

3.0 பெறுபேறும், கலந்துரையாடலும்

3.1 பெண்ணிய மெய்யியல்

மெய்யியல் என்பது உண்மை பற்றிய தேடல் ஆகும். இத்தகைய மெய்யியலானது அனைத்து துறைகளையும் ஆய்வு செய்வதை போல பெண்ணியம் தொடர்பான விடயங்களையும் அதன் பொருத்தப்பாடு தொடர்பாகவும் ஆய்வு செய்கிறது. இதனையே நாம் பெண்ணிய மெய்யியல் என்கிறோம். பெண்ணிய மெய்யியல் (Feminist philosophy) என்பது பெண்ணியப் பார்வையில் மெய்யியலை அணுகுவதைக் குறிக்கிறது. இது மெய்யியல் முறைகள் மூலமாக பெண்ணியக் கருத்துக்களுக்கு வலுவூட்டுவதாகவும் மரபுவழி மெய்யியல் கருத்துக்களை பெண்ணியக் கோணத்திலிருந்து மீள்மதிப்பீடு செய்வதாகவும் அல்லது விமர்சிப்பதாகவும் உள்ளது.

3.2 'பெண் ஏன் அடிமையானாள்?'

உலகத்திலேயே பெண் விடுலையைப் பற்றி சிந்தித்தவர்கள் மிகவும் குறைவானவர்கள். அவர்களுள் பெரியார் குறிப்பிடத்தக்கவர். 'பெண் ஏன் அடிமையானாள்?' என்ற தன்னுடைய நூறு பக்கங்களை கூட மிஞ்சி விடாத இந்த சிறு நூலில் தன் கருத்துக்களை விளக்குகிறார். 1933-ல் ஈரோடு, பகுத்தறிவு நூற்பதிப்பு கழகம் லிமிட்டெட், முதல் பதிப்பாக பெரியார் எழுதி வெளியிட்ட 'பெண் ஏன் அடிமையானாள்?' என்ற நூலை வெளியிட்டாலும் இதன் முறைப்படுத்தப்பட்ட வடிவம் 1942இல் தான் வெளியிடப்பட்டது. பிரசுரிப்போரின் முன்னுரையில், 'இந்நூல் சுயமரியாதை இயக்க ஸ்தாபகர் பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்களால் பல சந்தர்ப்பங்களில் எழுதப்பட்டவைகளை திரட்டி வெளியிடுவதாகும்' என்கிற குறிப்பு காணப்படுகிறது. பத்து அத்தியாயங்களைக் கொண்ட இந்நூல் 'பெண்கள் பிரச்சினை' பற்றிய பெரியாரது கருத்துக்கள் யாவற்றையும் ஒருங்ணைத்து தருகின்றது. கற்பு, வள்ளுவரும் கற்பும், காதல், கல்யாண விடுதலை, மறுமணம் தவறல்ல, விபச்சாரம், விதவைகள் நிலைமை, சொத்துரிமை கர்ப்பத்தடை, பெண்கள் விடுதலைக்கு ஆண்மை அழிய வேண்டும் ஆகியவை இந்த அத்தியாயங்களின் தலைப்புக்களாகும். இவற்றில் சில பெரியாரது 'குடியரசு' என்ற பத்திரிகையில் முன்னரே வெளிவந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

இப்புத்தகத்தில் முதலாவது அத்தியாயமாகிய 'கற்பு' என்பதில் முக்கியக் கருத்து, மக்கள் ஆண், பெண் என்ற இரு சாராரில் பெண்களுக்கு மாத்திரமே அது (கற்பு) வலியுறுத்தப்பட்டிருக்கிறதென்பதனை விளக்குகிறது. இரண்டாவது அத்தியாயமான 'வள்ளுவரும் கற்பும்' என்னும் அத்தியாயத்தின் நோக்கம், எந்தக் கொள்கையும் எக்காலத்தும், எல்லாத் தேசத்திற்கும், எல்லோருக்கும் சௌகரியமாயிருக்குமென்றும் கருதி, கண்மூடித்தனமாய் பின்பற்றக் கூடாது என்றும் வலியுறுத்த எழுதப்பட்டதாகும்.

மூன்றாவது அத்தியாயமான 'காதல்' என்பது ஆசையென்றும், அந்த ஆசை ஏற்படவும் மறைந்து போகவுமான தன்மை கொண்டதென்றும் எடுத்துக்காட்ட எழுதப்பட்டதாகும். நான்காவது அத்தியாயமாகிய 'கல்யாண விடுதலை' என்பது கல்யாணம் என்பது ஆண் - பெண் இவர்களுடைய வாழ்க்கை சௌகரியத்திற்கேற்பட்ட ஒரு ஒப்பந்த விழாவே ஒழிய, இருபாலார்களுடைய வாழ்க்கைச் சௌகரியத்திற்கு ஒத்துவரவில்லையானால், ரத்து செய்துவிடத் தக்கது என்பதை விளக்க எழுதப்பட்டதாகும்.

ஐந்தாவது அத்தியாயமாகிய 'மறுமணம் தவறல்ல' என்பதும், முன் அத்தியாயத்தை அனுசரித்தும் ஒருதரம் கல்யாணம் செய்தோர் மறுபடியும் கல்யாணம் செய்துகொள்வது தவறு இல்லையென்று விளக்க எழுதப்பட்டதாகும்.

ஆறாவது அத்தியாயமானது 'விபச்சாரம்' என்னும் தலைப்புக் கொண்டது. விபச்சாரம் என்பது எந்தப் பொருளிலாவது குற்றமாகுமானால், அது இருபாலாருக்கும் சமமாய் இருக்கவேண்டும் என்று வலியுறுத்த எழுதப்பட்டதாகும்.

ஏழாவது அத்தியாயமாகிய 'விதவைகள் நிலைமை' என்னும் தலைப்புக்கொண்ட அத்தியாயமானது பெண்கள் விதவைத் தன்மையால் அனுபவிக்கும் கொடுமையை எடுத்துக்காட்டவும், அவர்களுக்கு மறுமணம் செய்யவேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்த எழுதப்பட்டதாகும்.

எட்டாவது அத்தியாயமாகிய 'சொத்துரிமை' என்னும் தலைப்புக் கொண்ட அத்தியாயமானது பெண்களுக்குச் சுதந்திரம் ஏற்படவேண்டுமானால், ஆண்களைப்போலவே வாழ்க்கையில் சகல துறைகளிலும் சம அந்தஸ்துடையவர்களாகவும் பெற்றோர்களுடைய சொத்துகளுக்குப் பெண்களும் ஆண்களைப் போலவே பங்குபெற உரிமையுடையவர்கள் ஆகவேண்டும் என்பதை வலியுறுத்த எழுதப்பட்டதாகும்.

ஒன்பதாவது, பத்தாவது அத்தியாயங்களாகிய 'கர்ப்பத்தடை', 'பெண்கள் விடுதலைக்கு ஆண்மை அழியவேண்டும்' என்கிற தலைப்புகளை முறையே கொண்ட அத்தியாயங்களானவை கர்ப்பத்தினாலும், பிள்ளைகளைப் பெறுவதனாலும் பெண்களுக்கு ஏற்படும் கஷ்டங்களையும், அடிமைத்தனங்களையும் எடுத்துக்காட்டவும், மற்றும் பிள்ளைகளை அதிகமாகப் பெறுவதனால் ஆண், பெண் இவர்களுக்குள்ள கஷ்டங்களையும் எடுத்துக்காட்டுவதுடன், பெண்கள் தங்களை ஆண்களுக்கு அடிமையாக இருக்கவே கடவுள் படைத்தார் என்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் எண்ணத்தை அடியோடு விட்டுவிட்டு, தாங்களும் ஆண்களுக்குச் சமமானவர்கள் என்றும், எவ்விதத்திலும் தாழ்ந்தவர்கள் அல்ல என்றும் கருதிக்கொண்டு தங்களுக்குத் தாங்களே பாடுபடவேண்டும் என்பதை வலியுறுத்த எழுதப்பட்டவையாகும்.

எனவே, இந்தப் புத்தகத்தில் கண்ட மேற்படி பத்து அத்தியாயங்களும் பெண்கள் எந்தெந்தக் காரணங்களால் அடிமைப்படுத்தப்பட்டார்கள், அடிமையானார்கள், அடிமைகளாக இருந்து வருகிறார்கள் என்பதை எடுத்துக்காட்டி, எவ்வாறான செயற்பாடுகளினால் பெண்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டுச் சுதந்திர மக்களாக வாழமுடியும் என்பதை எடுத்துக்காட்டுவதை நோக்கங்களாகக் கொண்டு எழுதப்பட்டவையாகும். (பெரியார் 2002, ப.7,8)

3.3 இரண்டாம் பாலினம்

பெண்ணியம் என்பதை வித்தியாசமான கருத்தாக்கங்களைக் கொண்டு விமர்சிப்பவர்களும் உண்டு பாராட்டுபவர்களும் உண்டு. இருத்தலிய பெண்ணியவாதியான பெவாயரின் சிந்தனைகளும் அவரின் நூல்களும் கூட இந்த தன்மையினை பெற்றிருக்கிறது எனலாம்.

பெண்ணியத்தின் தோற்ற வளர்ச்சியில் இரண்டாம் அலை பெண்ணியத்திலேயே பெவாயர் காலடியெடுத்து வைக்கின்றார்.

இரண்டாம் பாலினம் என்ற நூலானது, உலகத்தையே அதிரவைத்த நூல் என்றால் மிகையில்லை. பிரான்சிய மொழியில் எழுதப்பட்ட இந்நூல் "Le Deuxieme Sexe" எனப்படுகிறது. அதன் தமிழ் மொழிப்பெயர்ப்பே இரண்டாம் பாலினம் என்பதாகும். இன்று நாம் பேசக்கூடிய எல்லாவித பெண்களின் உரிமைகளுக்கும் சுதந்திரத்துக்கும் அடிநாதமாக காணப்படுகின்ற இந்நூலானது, பெண்களுக்கான நிலை என்ன? உள்ளிட்ட பல கேள்விகளுக்கான விளக்கங்களை உள்ளடக்கியதுமன்றி இன்றைய பெண்ணியவாதிகளுக்கு ஒரு ஒளிவிளக்காகவும் திகழ்கிறது.

பெவாயர் பெண்களின் வெறும் உரிமைகளை மட்டும் பற்றி குரல் கொடுக்கும் போராளியல்ல. மாறாக, கல்வி ரீதியான அடிப்படையினைப் (Academic base) அவர் வழங்கியுள்ளார். இதனாலேயே பெண்ணியமென்பதை நாம் தத்துவமாக பார்க்கிறோம்.

பெண்களின் நிலையென்ன? பெண்களை நாம் எப்படி புரிந்துக்கொள்ள வேண்டும்? என்பதனை எல்லாத்தளங்களிலும் வைத்துப்பார்ப்பதோடு, மனோதத்துவ ரீதியாக, உயிரியல் ரீதியாக, சமூகவியல் ரீதியாக மற்றும் இலக்கியத்தில் பெண்கள் எப்படி வரைவிலக்கணப் படுத்தப்படுகின்றார்கள் என்பதனை ஒவ்வொரு பிரிவுகளுக்குள்ளும் மிக நுணுக்கமாக ஆராய்ந்து பெண் எப்படியெல்லாம் அடிமையாக்கப்பட்டிருக்கிறாள்? என்பது பற்றிய தத்துவ புரிதலை பெவாயர் வழங்குகிறார். (முரளி, 2021)

இரண்டாம் பாலினம் நூலானது இரண்டு பாகங்களை கொண்டதாக வெளிவந்தது. உயிரியலாலும் உளவியலாலும் பெண் என்னும் கருத்தாக்கம் எப்படிக் கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை எந்த ஒரு சிறு அம்சத்தையும் விட்டுவிடாமல் எல்லாவற்றையும் தொகுத்து, ஒவ்வொன்றும் சுட்டுகிற உட்பொருளையும் அதன் நீட்சியையும் இணைத்து, தர்க்கங்களின் அடிப்படையில் ஒரு முடிவை நிறுவுகிறார் பெவாயர். எடுத்துக்காட்டாக ஒன்றை மட்டும் இங்கே குறிப்பிடலாம். நுரையீரல், மூச்சுக்குழல், குரல்வளை மூன்றுமே அளவில் ஆணைக்காட்டிலும் பெண்ணுக்குச் சிறியவையாக இயற்கையிலேயே அமைந்திருக்கிற பேதத்தை முதலில் சுட்டிக்காட்டுகிறார் பெவாயர். பெண்ணின் குரல் மாறுபட்டு மென்மையாக ஒலிப்பதற்குக் காரணம் குரல்வளை அமைப்பில் உள்ள பேதமே என்றார். அதேபோல பெண்களின் கன்னம் சிவப்பிற்கு காரணம் குறைவான இரத்த புரதத்தால் நேரும் இரத்த சோகை என்றும் நிறுவுகிறார் பெவாயர்.

இப்படி உயிரியல் கட்டமைப்பில் உள்ள பல விஷயங்களை ஒவ்வொன்றாக அடுக்கி அதற்கான காரணத்தையும் விளக்குகிறார். மனித மனபோக்குக்கு நனவிலி மனநிலையைக் காரணமாகச் சொல்கிற பிராய்டின் உளவியல் பார்வையை ஏற்க மறுக்கிறார் பெவாயர். அதற்கான மற்ற காரணங்களை தர்க்க அடிப்படையில் முன்வைக்கவும் அவர் தவறவில்லை.

குறியீடென்பது வானிலிருந்து குதித்ததுமில்லை.பூமியிலிருந்து முளைத்ததுமில்லை. மொழியைப்போல அவ்வபோது தன்னை செறிவூட்டிக்கொண்டு வளர்ந்து, கூட்டத்தோடும் தனித்தும் வாழப்பழகிய மனிதரின் இயல்பானப் பண்பாக வடிவமைக்கப்பட்டது. இவற்றின்

அடிப்படையிலேயே கோட்பாடுகளை அணுக வேண்டியிருப்பதால் உளப்பகுப்பாளர்களின் கருத்தியல்களில் சிலவற்றை ஏற்கவும் நிராகரிக்கவும் வேண்டியிருக்கிறதென்பதே பெவாயாரின் கருத்தாகும். பொருள்முதல்வாதமும் பெண்களும் என்னும் பகுதியில் பெண்களின் மீதான ஒடுக்குதலுக்கான காரணங்களாக பொருளாதார வரலாற்றில் தேடிய மார்க்ஸிய சிந்தனையாளர்கள் முன்வைத்த கருத்துக்களை விரிவாக ஆய்வுக்குள்ளாகிறார் பெவாயர். இவையனைத்தும் இரண்டாம் பாலினம் நூலின் முதல் பகுதியில் இடம்பெற்றுள்ளன.

இரண்டாம் பகுதியில் வரலாறும் பழங்கதைகளும் முன் வைத்த நோக்குகளை, தனித்தனிப்பகுதிகளாக வகுத்துக்கொண்டு ஆய்வை நிகழ்த்துகிறார் பெவாயர். அவற்றுடனான இன்றைய நிலைகளையும் வாழ்க்கை முறைகளையும் சூழல்களையும் கணக்கில் எடுத்துகொள்கிறார். அவருடைய முடிவுகள் தெளிவாகவும் மறுக்க முடியாதவைகளாகவும் உள்ளன.(மேலது)

இரண்டாம் பாலினம், பெண்களின் சமத்துவத்திற்காக வாதிடுகிறது. அதே நேரத்தில் பாலியல் வேறுபாட்டின் யதார்த்தத்தை வலியுறுத்துகிறது. பெண்களின் அடிபணியலுக்கான ஒரு வாதமாக பாலியல் வேறுபாட்டைப் பயன்படுத்துவது நியாயமற்றது மற்றும் ஒழுக்கக்கேடானது என்று பெவாயர் கருதுகிறார்.

இந்நூல் வெளிவந்து 60 வருடங்கள் கடந்தும் வந்தும் கூட பல பிரச்சினைகள் அதே நிலையில் தான் காணப்படுகின்றது. மாற்றம் ஒன்று ஏற்படும் போது எல்லாமே மாறிவிடும் என்பர். ஆனால் என்னுடைய இந்த நூல் எப்போதும் ஒன்றுமில்லாமல் போகாது. எப்போதும் அதற்கான பெறுமதி இருந்துக்கொண்டே இருக்குமென்கிறார். இருத்தலியல், உளவியல், மார்க்சியம் என எல்லாத் தளங்களிலும் நிலவும் பெண் கருத்தியலைத் தொகுத்து சமகாலத்திய சிக்கல்களுடன் அவை பொருந்தியும் விலகியும் செல்கிற தடங்களை அடையாளம் கண்டு முன்வைக்கின்றார். இவருடைய ‘‘இரண்டாம் பாலினம்’’ என்னும் நூல் உலக அளவில் வாசிக்கப்பட்ட முக்கியப் புத்தககமாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

3.4 ‘பெண் ஏன் அடிமையானாள் ?’ மற்றும் ‘இரண்டாம் பாலினம்’ நூல்களிடையே காணப்படும் ஒற்றுமைகள்

பெண் விடுதலைக்கு காலம்காலமாக இருந்து வரும் பழங்கதைகள் தொடக்கம் இன்றைய காலம் வரை பொருந்தக்கூடிய அனைத்து விடயங்களையும் உடைத்தெறிந்து பேசியிருக்கும் இந்நூல்களில் காணப்படும் சில ஒற்றுமைகளை ஆராய்வதே இப்பகுதியின் நோக்கமாகும்.

கற்பு என்பது உன்னதமான பரிசுத்த நிலையை குறிப்பது அல்லது கற்பு என்பது பெண்மையை காக்க உதவுவது என்ற கருத்துக்களுக்கு எதிரான போக்கினை கொண்டதாகவும் கற்பு என்ற ஒன்றினை கையில் வைத்துக்கொண்டு செயற்படும் கணவனின் நிர்பந்த உறவினை பெண்கள் வெறுக்கின்றார்கள் என்பதில் இந்த இரண்டு நூல்களிலுமே ஒற்றுமைத் தன்மை வெளிப்படுத்தப்படுகின்றது.

காதல் என்பது ஏதோவொரு திருப்தியை எதிர்பார்த்தே தான் நிகழ்த்தப்படுவதாகவும் கட்டுப்பாடுகளோ நிர்பந்தமோ இதற்கு விதிக்கப்படுவது இல்லை எனும் கருத்தில் இரண்டு நூல்களுக்கும் ஒற்றுமை இருப்பதை காணமுடிகிறது.

திருமணம் என்பது ஒரு தெய்வீகமானதோ அல்லது புனிதத்தன்மை வாய்ந்தது என்பது எல்லாம் பெண்களை அடக்கி வைக்கும் உபாயங்கள் என்பதில் இரண்டு நூல்களும் உடன்படுவதோடு விபச்சாரம் என்பது குற்றமாகுமானால் அது ஆண் பெண் என இருபாலாருக்கும் சமமாய் இருக்கவேண்டும் என்ற கருத்து இந்நூல்களில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பெண் என்பவள் எல்லாக்காலங்களிலும் போகப்பொருளாகவே காணப்படுகிறாள் என்றும் பெண்கள் செய்துக்கொள்ளும் அலங்காரங்கள் கூட அவளை ஒரு போகப்பொருளை போல தென்பட வைக்கிறது எனவும் இதனாலே பலர் அடிமையாக்கப்படுகிறார்கள் எனவும் இவ்விரு நூல்களும் கருதுகின்றன.

பெண்களின் விடுதலைக்கும் தனித்துவத்திற்கும் தாய்மை தடையாய் இருப்பதாகவும் கருத்தடை முறைகள் அதிகம் பின்பற்றப்பட வேண்டும் என்பது தொடர்பாக இவ்விரண்டு நூல்களும் ஒருமித்த கருத்தினையே கொண்டுள்ளமையை காணமுடிகிறது. **பெண்கள் அடிமைகளாக இருக்கவே கடவுளால் படைக்கப்பட்டார்கள் என்ற கருத்தினை இரண்டு நூல்களுமே மறுப்பதனைக் காணமுடிகிறது.**

பெண் அடிமையாகாமல் இருக்க அவளுக்கென தனித்த பொருளாதார சுதந்திரமும் ஆணை போல சம சந்தர்ப்பங்களும் வழங்கப்படும் போது அவர்களாலும் (பெண்களாலும்) வாழ்க்கையில் வெற்றி பெறமுடியும் எனும் கருத்தில் இரு நூல்களும் சம கருத்தினை கொண்டுள்ளது. **ஆண் பெண் என்ற இருபாலாரினையும் உயிரியல் ரீதியாக வேறுப்படுத்துவது தாய்மைதான். பத்துமாதம் சுமந்து குழந்தை பெற்றெடுக்கும் தன்மைதான் ஒரு ஆணிலிருந்து பெண்ணை வேறுபடுத்துகிறது என்பதோடு பெண்களின் விடுதலைக்கு எப்போதும் பெரிதும் பெண்கள் தான் தடையாக இருக்கிறார்கள் என்ற கருத்தினை இரு நூல்களும் ஏற்றுக் கொள்கின்றன.**

இந்நூல்களில் பெண்ணியம் தொடர்பான பல கருத்துக்களில் ஒற்றுமைகள் காணப்பட்டாலும் இங்கு பேசப்படுகின்ற சிந்தனை மரபுகள் இரண்டும் வேறுப்பட்ட சூழலை மையமாகக் கொண்டு எழுந்தவை. இத்தகைய மாறுப்பட்ட சூழல்களில் பேசப்பட்ட பெண்ணியம் குறித்ததான கருத்துக்கள் பெருமளவில் ஒற்றுமைப்பண்புகளை தான் அதிகமாக காணப்படுவதை ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றது.

3.5 'பெண் ஏன் அடிமையானாள்?' மற்றும் 'இரண்டாம் பாலினம்' நூல்களிடையே காணப்படும் வேற்றுமைகள்

பெண் விடுதலைக்கு காலம்காலமாக இருந்து வரும் பழங்கதைகள் தொடக்கம் இன்றைய காலம் வரை எதிராக இருக்க கூடிய அனைத்து விடயங்களையும் உடைத்தெறிந்து பேசியிருக்கும் இந்நூல்களில் காணப்படும் பெண் விடுதலை பற்றிய சில ஒற்றுமைகளை ஆராய்ந்த அதே சமயம் சில வேற்றுமைகளையும் அறிய முற்படுவதே இப்பகுதியின் நோக்கமாகும்.

பெண்களுக்கான விடுதலையை பெறவேண்டுமானால், பெரியாரின்படி பெண் என்பவள் ஆண்களைப்போல ஆடைகளை அணிந்துக்கொண்டு போராடுவது என்பது மீண்டும் ஆண் என்பவனின் கீழே தான் அடிமையாக்கப்படுவது போல் தென்படுகிறது. பெவாயரின்படி, பெண் என்பவள் பெண் எனும் தன்மையோடு போராட வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்படுகின்றது.

பெண் விடுதலையில் திருமணம் என்பது குறித்த வேறுப்பட்ட நோக்கினை இவ்விரண்டு நூல்களிலும் காண முடிகிறது. பெரியாரின் கருத்துப்படி விருப்பமின்றி திருமணம் செய்வது தவறு என்றும் அவ்வாறு விரும்பாத திருமணங்கள் காணப்படுமாயின் மறுமணம் செய்துக்கொள்ளும் உரிமையை பெண்களுக்கு வலியுறுத்துகின்றார். (பெண் ஏன் அடிமையானாள்.ப.37) இக்கருத்திற்கு முரணாக திருமணம் என்பதே பெண்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் காரணம் என்கிறார் பெவாயர். திருமணமே வேண்டாம் என்ற கருத்துக்களை கொண்ட பெவாயர் மறுமணம் என்பதனைப்பற்றி துளியும் இந்நூல்களில் பேசவில்லை.

விபச்சாரம் என்பது பெண்விடுதலையில் பல கண்டனங்களுக்கு உள்ளாகியிருக்கும் ஒரு எண்ணக்கரு எனலாம். பெரியாரின் 'பெண் என் அடிமையானாள்?' நூலின்படி, விபச்சாரம் என்பது பெண்களுக்கு மட்டும் ஏன் வலியுறுத்தப்பட்டது? ஆண்கள்தானே பெண்களை விபச்சாரம் செய்ய தூண்டுகின்றார்கள். இவ்வாய்வில், ஆண்களுக்கு ஏன் விபச்சாரகன் என்ற பட்டமில்லை? என்ற வினா எழுப்பபடுகின்றது. (பெண் ஏன் அடிமையானாள்.ப:47) இரண்டாம் பாலினம் நூலானது திருமணம் தான் பெண்ணை விபச்சாரத்திற்குள் தள்ளுகிறது என்ற விவாதத்திற்குரிய கருத்தினை முன்வைக்கிறது. (The Second Sex.Vol II.p.573)

ஓரினச்சேர்க்கை என்பது தற்காலத்தில் வெகுவாக பேசப்படும் உரிமையாக வளர்ந்துவிட்டது. பெண் ஏன் அடிமையானாள்? எனும் நூலில் ஓரினச்சேர்க்கை குறித்ததான எதுவித பெண்விடுதலை கருத்துக்களும் சொல்லப்படவில்லை என்றாலும் ''இரண்டாம் பாலினம்'' நூலில், பெண்களை விபச்சாரத்திற்குள் தள்ளாது பாதுகாப்பது இந்த ஓரினச்சேர்க்கையே என்கிறது.(The Second Sex.Vol II.p.215) பெண்களின் விடுதலைக்கு முட்டுக்கட்டைகளாக இருக்கும் அனைத்து அம்சங்களையும் வெளிக்கொண்டு வந்திருக்கிறது இரண்டாம் பாலினம்.

பெண் என்பவளின் அலங்காரங்கள் மற்றும் பூப்படைந்தது முதல் அவள் படும் பாடுகள் தொடர்பான தெளிவான விளக்கங்கள் அனைத்துமே இரண்டாம் பாலினம் நூலில் கூறப்பட்டுள்ளன. இருப்பினும் விதவைகள் மற்றும் மறுமணம் குறித்து பெவாயர் இரண்டாம் பாலினம் நூலில் குறிப்பிட்டதை காணக்கிடைக்கவில்லை.

ஈ.வே. ராமசாமியின் (பெரியார்) பெண்விடுதலையானது, இந்தியபண்பாட்டிற்குள் அமைந்த பகுத்தறிவு பெண்ணியமாகும். சைமன் டீ பெவாயரினது பெண்விடுதலை என்பது உலக பெண்கள் அனைவருக்கும் அடிமைத்தனத்தை உருவாக்கும் பெண்ணியத்தினை தூக்கியெறியும் பகுத்தறிவு பெண்ணியமாகும். பெரியாரின் கடவுள் மறுப்பு கருத்துக்கள், பார்ப்பனீய எதிர்ப்பு கருத்துக்கள் உள்ளிட்ட கருத்துக்கள் பிரபலமாக்கப்பட்ட அளவிற்கு பெண்ணியம் சார்ந்த கருத்துக்கள் பரவலாக்கப்படவில்லை. ஆயினும் பெரியார் ஒரு பெண்ணிலைவாதியாகவே காணப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது(பிரேமா2001,ப.85). ஆனால் பெவாயர் பெண்ணியவாதியாக காணப்பட்ட அதேசமயம் ஒரு மெய்யியலாளராகவும் காணப்பட்டமை தான் பெண்விடுதலை பற்றிய அத்தனை

தெளிவான விளக்கங்களுக்கு காரணம் என்றுக்கூட எண்ணத்தோன்றுகிறது. இதனாலேயே இவரின் இந்த நூல் குறுகிய காலத்திற்குள்ளேயே நல்ல வரவேற்பினை பெற்றதுமன்றி இன்றும் எல்லோராலும் பேசப்படும் ஒரு நூலாக காணப்படுகிறது. பெவாயரின் இரண்டாம் பாலினமானது போராட்டங்களோ புரட்சியோ இன்றி பெண்களுக்கான அடிமைத்தனத்தை பற்றி பேசும் அதேவேளை பெரியாரின் பெண் ஏன் அடிமையானாள்? என்ற நூலின் பெண்விடுதலை தொடர்பான கருத்துக்கள் தீவிரமான நிலைக்கு இட்டுச்சென்றிருக்கிறது எனலாம்.

4.0 முடிவுரை

பெண் ஏன் அடிமையானாள்? மற்றும் இரண்டாம் பாலினம் நூல்களின் நோக்கில் 'பெண் விடுதலை' - ஒரு பெண்ணிய மெய்யியல் ஒப்பீட்டாய்வு என்ற ஆய்வு வேறுபட்ட சூழல்களை மையமாக கொண்டு எழுதப்பட்ட நூல்களை அடிப்படையாக கொண்டிருந்தாலும் ஏறத்தாழ ஒரே விதமான பெண்விடுதலை கருத்துக்களை தான் கொண்டுள்ளது என்ற முடிவினை வெளிப்படுத்துகின்றது.

பெண் ஏன் அடிமையானாள்? எனும் நூலானது பெரியாரால் எழுதப்பட்டதும் கீழைத்தேய பெண்ணிய சிந்தனைக்குரியதுமாகும். மனிதகுல வளர்ச்சி மேம்பாட்டில், பெரியார் கொண்டிருந்த மட்டற்ற பற்றையும், அதன்வழி அவர் வெளிப்படுத்திய மதிப்பு மிக்க கருத்துக்களையும், அவற்றை நடைமுறைப்படுத்த உருவாக்கிய வழிமுறைகளையும், ஒருசேர விளங்கிக்கொள்ள வழிவகுக்கும் சிறு அரிய நூல் தொகுப்பு பெண் ஏன் அடிமையானாள்?. இந்த நூலில் பெண்கள் விடுதலை பெறுவதற்கான வழிமுறைகளை புரட்சிகரமாகவும் நடைமுறையில் சாத்தியம் உள்ளதாகவும் விவரிக்கிறார் பெரியார்.

பெண்விடுதலை தொடர்பாக, மேலைத்தேய சிந்தனையாளர் சைமன் டீ பெவாயர் எழுதிய இரண்டாம் பாலினம் எனும் நூலானது, எக்காலத்திலும் பொருந்தக்கூடிய கருத்துக்களை தன்னகத்தே கொண்டுள்ளமையைக் காணமுடிகிறது. இந்நூல் மனனம் செய்யப்படவோ பிரச்சாரம் செய்யப்படவோ இல்லை. என்றாலும் கூட இதன் ஆழமான ஆய்வுகள் இன்றும் பேசப்பட்டு மறக்கப்படமுடியாதளவு பாதிப்பை ஏற்படுத்திக்கொண்டே இருக்கிறது.

பெண் என்ற கருத்தியலை கட்டவிழ்ப்பு செய்யவேண்டும். பெண்ணுக்கு சமூகத்தில் நிலவும் இரண்டாந்தர நிலமை குறித்து விமர்சனங்கள் எழவேண்டும். பெண்ணுக்கென ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள அர்த்தங்களை மாற்ற வேண்டும். பெண்மை பற்றிய மரபுசார்ந்த பார்வையை தகர்த்து ஒரு புதிய பார்வை போக்கினை மீட்டெடுக்க வேண்டும். அப்போதுதான் இல்லாமல் ஆகிப்போன பெண் இருப்பவளாக காணப்பட முடியும் என்பது தான் இவ்வாய்வின் வாதமாகின்றது. இவ்வகையில், எனது ஆய்வின் கருதுகோளின்படி பெண் ஏன் அடிமையானாள்? மற்றும் இரண்டாம் பாலினம் ஆகிய இரண்டு நூல்களும் ஏறத்தாழ ஒரே கருத்துக்களை கொண்டுள்ளது என்பதோடு ஒரு தீவிரத்தன்மையையொட்டிய தீர்வினை சமூகத்திற்கு முன்வைப்பதாக உள்ளது.

5.0 பரிந்துரைகள்

1. பெண்ணானவள் தன்னுடைய கல்வி, தேர்ந்தெடுக்கும் நிறுவனம், ஆற்றப்போகும் தொழில் தொடக்கம் வாழ்ந்து முடிக்கும் வரையான சின்னச்சின்ன தேவைப்பாடுகள், விருப்பங்களில்

கூட மற்றவர்களை சார்ந்து அதாவது தந்தை, தமையன், தம்பி, கணவன் என ஆண் சார்ந்தே சிந்திக்கவேண்டியவளாக நிர்ப்பந்திக்கப்படுகின்றாள். இத்தகைய போக்கினைத் தவிர்ப்பதற்கு ஆக்கப்பூர்வமான தொழில்வாண்மை செயற்பாடுகள் மூலம் தனக்கான வருமானத்தையும் தனித்துவத்தையும் அடைந்துக்கொள்ளலாம். இதன் மூலம் அடக்குமுறைகள் தவிர்க்கப்படுவதோடு பொருளாதார சுதந்திரமும் கிடைக்கக்கூடியதாக இருக்கும்.உதாரணம்: சிறு வியாபாரங்கள், கைத்தொழில்கள், வேளாண்மை

2. பெண்கள் முன்னேற்றப் பாதையில் கல்வியில் வளர்ச்சி பெறுவதனால் அடக்குமுறைகளுக்கு உள்ளாகுவது குறைக்கப்படும். அதற்காக, தனித்து இயங்கவும் கல்வியில் உயர்ந்த நிலையை அடையவும் கிடைக்கப்பெறும் வாய்ப்புக்களை பயன்படுத்தலாம். உதாரணம்: உயர்கல்வி கற்றல் மற்றும் மொழி ரீதியான கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளலாம்.

3. பெண்கள் தனது குடும்பத்தில் முதலில் முக்கியத்துவப்படுத்தப்பட வேண்டும். பெண்ணின் பணிகளுக்கு எற்ற வரவேற்பினை குடும்பம் முதலில் வழங்கவேண்டும்.

4. பெண்களுக்கான விடுதலை பெரும்பாலும் கொடுக்கப்பட்டு தான் இருக்கிறது. பல பெண்கள் இன்று சுயமாக முன்னேற்றம் கண்டிருந்தாலும் தனக்கான சுதந்திரம் எது? என அறியாமல் அதனை தவறாக பயன்படுத்துவோரும் உள்ளனர். எனவே பெண்களின் சுதந்திரத்தினை தடை செய்வதற்கு பெண்களே காரணமாகாத படிக்கு தங்களுக்கான சரியான வழிகளை தெரிந்துக்கொண்டு செயற்படுதல் வேண்டும்.

5. சுயமாக இயங்கவும் பணியாற்றவும் தனக்கான கருத்து சுதந்திரமுடைய தன்மையை வெளிப்படுத்தவும் முயற்சிகளை மேற்கொள்ளலாம். அத்தோடு விசேட திறமைகளை வளர்த்துக்கொள்ளலாம். உதாரணம்: விளையாட்டுகளில் ஈடுபடுதல், தனது திறமைக்கேற்ற தொழில்களை தெரிவு செய்தல், கைவினை பொருட்கள் உற்பத்தி உள்ளிட்ட பல்வேறான தனித்துவ திறமைகள் வெளிப்படுத்தல்.

6. அபிவிருத்தியடைந்த நாடுகளில் பால்நிலை சமத்துவம் பேணப்படுவதுடன் ஆண்களுக்கு நிகராக முடிவெடுக்கும் துறைகளில் பெண்களை உள்வாங்குகின்றமை சாதாரண விடயங்களில் ஒன்றாகிவிட்டது. ஆனால் மூன்றாம் உலக நாடுகளைப்பொறுத்தவரை இன்றும் பெண்கள் பிரதிநிதித்துவம் கேள்விக்குறியாகவே இருக்கின்றது. அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் பெண்கள் மற்றப்பெண்களுக்கு வழிகாட்டுவதுடன் தமக்கான அங்கீகாரத்தையும், தீர்மானம் எடுக்கும் பங்கையும் போராடிப் பெற ஒன்றிணைய வேண்டும். இதனை பெண்கள் கல்வி கற்கும் நிறுவனங்கள் உட்பட பல்கலைக்கழகங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

7. சில இளவயது திருமணங்கள் தான் பெண்களை அடக்குமுறைக்கு உள்ளாக்குகிறது. கிராமப்புறங்களில் இன்றும் இம்மரபினை காணமுடிகிறது. எனவே திருமணம் பற்றிய தெளிவான விழிப்புணர்வை பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு கொடுப்பதன் மூலம் இளவயது திருமணங்கள் உட்பட தகாத காதல் உறவுகள் போன்றவற்றில் இருந்து பாதுகாப்பு பெறமுடியும்.

8. பெண்களின் பிரச்சினைகள் என்கின்ற போது ஒன்று, இரண்டு என எண்ணமுடியாதளவு ஒன்றன்பின் ஒன்றாக சங்கிலித்தொடர் போல பல்வேறு பிரச்சினைகள் வந்துசேர்ந்துவிடும். ஆகவே அரசியலுக்குள் பெண்களை உள்நுழைத்துப் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கவேண்டும். அப்போது தான் பெண்களுக்கானதொரு மகிழ்வான உலகத்தைக்கட்டியெழுப்ப முடியும். அதனை பாடசாலைகளில் இருந்தே ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

9. பெண்கள் கல்வியில் மிகச்சிறந்த பெறுபேறுகளையும் அடைவுகளையும் பெற்றும் அவர்கள் தொழில்களுக்கு செல்லாமல் இருப்பதும், தொழில் செய்பவர்கள் தொழில் சந்தையில் தமது திறமைகளை வெளிக்கொணர்வதிலும் உயர் பதவிகளை அடைவதிலும் பின்னிற்பதும் பெண்களின் சமூக ரீதியான சமநிலைக்கு பாரிய சவாலாக மாறியுள்ளது. எனவே கல்வி கற்ற பெண்கள் தைரியமாக தொழிலுக்கு சென்று தமது வாழ்வை சீர்படுத்திக்கொள்ள முயற்சிக்கவேண்டும்.

10. பெண்கள் கல்வியில் வளர்ச்சி பெறுவதனால் சமூகத்தில் இடம்பெறும் குற்றங்களை எதிர்த்து கேள்வி கேட்கும் அதிகாரம் பெறுகின்றனர். சமூக குற்றங்கள் தடுக்கப்பட்டு அந்த சமுதாயமும் வெற்றிகரமாக அமையும்.

11. பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள், சிறுவயது அல்லது கட்டாயத் திருமணம், பொது மற்றும் தொழில்புரியும் இடங்களில் பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள், இளம் பெண்களுக்கு எதிரான அனைத்துவிதமான வன்முறைகளும் நிறுத்தப்படல் வேண்டும். அத்துடன் பெண்களின் சமூகப்பங்களிப்பிற்கு தடையாக இருக்கும் ஏனைய காரணிகள் நீக்கப்பட்டு பெண்களின் சமூக செயற்பாட்டிற்கான சாதகமான சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

12. தேசிய ரீதியான வேலைத்திட்டங்களுக்கு மேலதிகமாக ஒவ்வொரு சமூகத்திலும் அவ்வப்பிரதேசங்களில் முதன்மைப்படுத்தப்பட்ட பிரச்சினைகளை அடையாளப்படுத்தி, அவற்றிற்கான தீர்வுகளை சமூகத் தலைமைகள் அரச ஊழியர்களின் உதவியுடன் முன்கொண்டு செல்ல வேண்டும்.

13. பெண்களின் முழுமையானதும் வினைத்திறனானதுமான பங்குபற்றல் மூலம் அரசியல், பொருளாதார, சமூக ரீதியான மற்றும் பொது வாழ்க்கை சம்பந்தமாக முடிவுகளை மேற்கொள்ளும் சகல படிநிலைகளிலும் பெண்களின் தலைமைத்துவத்துக்கும் சமமான வாய்ப்பு வழங்கப்படுதல் வேண்டும்.

இவ்வாய்வானது மறைந்துள்ள நேர்வுகளையும் உண்மைகளையும் (Truths) கண்டறிய உதவியதுடன் வேறுப்பட்ட சிந்தனை மரபாயினும் பேசப்பட்டிருக்கின்ற பெண்விடுதலை கருத்துக்கள் பெருமளவில் ஒற்றுமைத்தன்மையினை தான் கொண்டிருக்கின்றன என்பதை வெளிப்படுத்துகின்றது. ஆயினும் மேலைத்தேய மற்றும் கீழைத் தேய கலாசார நெறிமுறைகளுக்கு முரணாக பெண்கள் உரிமைகள் தொடர்பாக இவ்வாய்வு பல கருத்துக்களை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய கருத்துக்கள் தொடர்ாபக தீர்மானங்களை மேற் கொள்ளும் போது பல்வேறு விதமான சிக்கல்களையும் பிரச்சினைகளையும் ஒரு சமூகம் எதிர் கொள்ளலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

உசாத்துணை

01. இராமாத்தாள், கு.ம. (2007). *பெரியாரிய பெண்ணியம்.* சென்னை 600 113: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
02. காவ்யா சண்முகசுந்தரம். (2007). *பெண்ணியமும் பிரதிகளும்.* சென்னை 600 024: காவ்யா பதிப்பகம்
03. பிரேமா, இரா. (2001). *பெண் மரபிலும் இலக்கியத்திலும்.* சென்னை 600 017: தமிழ் புத்தகாலயம்.
04. பிரேம்குமார், இ. (2018-2019). கிரேக்க சிந்தனையில் 'பெண்மை' – ஒரு மெய்யியல் நோக்கு. *பால்நிலை கற்கை நெறி சஞ்சிகை.* நிவேதினி. இதழ்-18. இலங்கை: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்.
05. பெரியார். (2004). *பெண் ஏன் அடிமையானாள்?* , சென்னை-7: பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவன வெளியீடு
06. பெரியார். (1930). *அழியட்டும் பெண்மை.* சென்னை- 600 041: பெரியார் திராவிட கழகம்
07. நாகரத்தினம் கிருஸ்ணா. (2021). *சிமொன் தெ பொவ்வார்.* சென்னை 600 106: பரிசில் புத்தக நிலையம்
08. Constance Borde., & Sheila Malovany Chevallier. (2009).*The Second Sex***.** New York: United States by Vintage Books

இணையதள முகவரிகள்

1. குப்புவீரமணி. (2018, ஏப்பிரல் 13). *பெண் ஏன் அடிமையானாள்?.* Available from: https://bookday.in/pen-yen-adimaiyanal-periyar/ (Accessed 09.04.2022)
2. மீனாட்சி (2008, டிசெம்பர்). இரண்டாம் பால். Available from: http://www.keetru.com/penniyam/dec08/menakshi.php (21.06.2022)
3. முரளி,இ. (2021). சைமன் டீ பெவாயர் மற்றும் இரண்டாம் பாலினம் பற்றிய அறிமுகம், Retrieved from https://youtu.be/bRjpt7azIbg (Accessed 20.06.2022)
4. SparkNotes. (2022). The Second Sex: Full Book Summary. Available from: https://www.sparknotes.com/lit/secondsex/summary/ (Accessed 22.02.2022)

திருக்குறளிலும் நாலடியாரிலும் நட்பு எனும் எண்ணக்கரு – ஒரு தத்துவார்த்த ஒப்பீட்டு ஆய்வு

அ.அணேஜா
தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்
anejaariyarethnam@mail.com

ஆய்வுச் சுருக்கம்

தமிழர் மெய்யியலின் ஆய்வுப் பொருண்மைகளில் திருக்குறள் மற்றும் நாலடியார் எனும் இரு பதினெண் கீழ்க்கணக்கு நீதி நூல்களும் தனித்துவமான இடத்தினைப் பெற்றுக்கொள்கின்றன. இப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அறத்தினை வலியுறுத்தும் முக்கிய நூல்களாகவே இவ்விரு நூல்களும் விளங்குகின்றன. திருக்குறள் அறம், பொருள், இன்பம் என மூன்று பிரதான பகுதிகளையும், ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்து குறள்கள் உள்ளடங்கலாக நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையும் கொண்டதாக அமைந்துள்ளது. இதில் பொருட்பாலில் உள்ளடங்கும் எழுபத்து ஒன்பது தொடக்கம் எண்பத்து மூன்று வரையான ஐந்து அதிகாரங்களான நட்பு, நட்பாராய்தல், பழமை, தீ நட்பு, கூடா நட்பு என்வற்றில் உள்ள ஐம்பது குறள்களிலும் நட்பு தொடர்பாக பேசப்பட்டுள்ளது. நாலடியார் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பிரதான பகுதிகளையும், அறத்துப்பாலில் இரண்டு இயல்களும், பொருட்பாலில் ஏழு இயல்களும், காமத்துப்பாலில் இரண்டு இயல்களுமாக மொத்தம் பதினொரு இயல்களில் நாப்பது அதிகாரங்களையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்து பாடல்கள் உள்ளடங்கலாக நானூறு வெண்பா பாடல்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. இதில் பொருட்பாலில் உள்ளடங்கும் நட்பியலில் இருபத்து ஒன்று தொடக்கம் இருபத்து மூன்று வரையான மூன்று அதிகாரங்களான சுற்றம் தழால், நட்பு ஆராய்தல், நட்பிற் பிழை பொறுத்தல் என்வற்றில் உள்ள முப்பது வெண்பா பாடல்களிலும் நட்பு தொடர்பான கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. எனவேதான் நாலடியாரிலும் திருக்குறளிலும் நட்பின் சிறப்பு மற்றும் கூடா நட்பு தொடர்பான விடயங்களை பகுத்தறிந்து சிறந்த நட்பிற்கான அடையாளத்தினை இனங்கண்டு கொள்வதனை பிரதான நோக்கமாகக் கொண்டதாக இவ்வாய்வு அமைந்துள்ளது. இதற்காக நாலடியார் மற்றும் திருக்குறளின் மூலநூல்களும் தெளிவுரைகளும் மற்றும் இவை தொடர்பாக இணையத்தளத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களும் இரண்டாம் நிலைத்தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டு பண்புசார்ந்ததாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நட்பின் பல பரிமாணங்களிலிருந்து மிகச்சிறந்த நட்பினை கண்டறிவதில் நாலடியார் மற்றும் திருக்குறளில் உள்ள தத்துவ சிந்தனைகள் எவ்வாறு பிரயோகிக்கப்பட முடியும் என்ற ஆய்வுப் பிரச்சினையினை மையமாகக் கொண்டு இந்த ஆய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. நாலடியாரிலும் திருக்குறளிலும் நட்பின் சிறப்பு மற்றும் கூடா நட்பு போன்ற விடயங்கள் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன?, இவ்விடயத்துவங்களில் இரண்டு நூல்களும் எவ்வகையில் ஒருமித்த கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன?, நட்பின் சிறப்பு மற்றும் கூடா நட்பு என்பன பற்றிய முன்வைப்புக்களில் இரு நூல்களிலும் உள்ள தத்துவார்த்த போக்கு என்ன? என்பன குறித்த ஆய்வு வினாக்களிற்கு விடைகளைக் கண்டறியும் முயற்சியாக இவ்வாய்வு உள்ளது. இவ்வாய்வின் மூலம் சிறந்த நட்பின் பண்புகளையும், நட்பின் முக்கியத்துவத்தினையும், சிறந்த நண்பர்களை அடையாளம் காண்பதற்கான அடிப்படைகளையும், தீய நட்பினை அறிந்து கொள்ளவும், எத்தகைய தன்மை கொண்டவர்களை நண்பர்களாகக் கொள்ளாமல் தவிர்ப்பது என்பது குறித்தும் அறிந்து கொள்வதோடு நட்பிற்கான சரியான அர்த்தத்தினையும், பண்டைய தமிழர் வாழ்வில் 'நட்பு' எத்தகைய சிறப்பிடம் பெற்றிருக்கின்றது என்பதனையும் விளங்கிக்கொள்ளவும் முடியும்.

திறவுச் சொற்கள்: நட்பின் சிறப்பு, நாலடியார், திருக்குறள், கூடா நட்பு

அறிமுகம்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறள் மற்றும் நாலடியார் எனும் இவ்விரு நூல்களும் தனிச்சிறப்பு வாய்ந்த நீதி நூல்களாகும். ''ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'', ''பழகுதமிழ் சொல்லருமை நாலிரண்டில்'' என்கிற கூற்றுகள் நாலடியார் மற்றும் திருக்குறளின் பெருமையினை எடுத்தியம்புகின்றன. திருக்குறள் நாலடியாருக்கு முன்பாகவே எழுதப்பட்ட இலக்கியமென தமிழ் வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். நாலடியார் கி.பி ஏழாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இலக்கியம் என அறியப்படுகின்றது. (Vaiyapuripillai, S. 1988:64) இவ் இரு நூல்களும் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் முப்பிரிவுகளை உடையதாக விளங்குகிறன. இரண்டு நூல்களும் வெண்பா பாடல் முறையினைப் பின்பற்றுகின்றன. நாலடியார் நானூறு நான்கடி வெண்பாக்களையும், திருக்குறள் ஆயிரத்து முன்னூற்று முப்பது இரண்டடி வெண்பாக்களையும் கொண்டமைந்திருக்கின்றன. திருக்குறள் ஒரே ஆசிரியரால் இயற்றப்பட்டது. நாலடியாரோ சமண முனிவர் நானூறு பேர் பாடிய வெண்பாக்களின் தொகுப்பாகும்.

இவ்விரு நூல்களும் தம்மளவில் ஒத்த பல கருத்தாக்கங்களைக் கொண்டமைந்துள்ளமையினைக் காணமுடிகின்றது. இவற்றில் நட்பியல் எனும் இயலானது நட்பினைப் பேசுபொருளாகக் கொண்டமைந்துள்ளது. இவ்விரு நூல்களிலும் நட்பின் முக்கியத்துவம், நட்பிற்கான அடிப்டை அம்சம், நல்ல நண்பனுக்கான அடிப்படைகள், தீய நட்பின் செயற்பாடுகள், நட்பினால் கிடைக்கும் நன்மைகள், தீய நட்பிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறைகள் போன்ற விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. எனவே இவ்விரு நூல்களிலும் நட்பு குறித்த வெளிப்பாடும் அதன் பின்னணி அம்சங்களையும் அறிந்துகொள்ளும் வகையிலான தகவல்கள் பெறப்பட்டு ஆய்வு முன்னகர்த்தி செல்லப்பட்டுள்ளது.

ஆய்வுப் பிரச்சினையும் ஆய்வு வினாக்களும்

ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் நட்பு எனும் உறவு இன்றியமையாத ஒன்றாக உள்ளது. இந்த உறவுமுறையினை நாம் சரியான விதத்தில் அடையாளம் கண்டுகொள்வதும் அதன் முக்கியத்துவத்தை அறிந்து செயற்படுவதும் அவசியமாக உள்ளது. இந்நிலையில் நட்பின் பல பரிமாணங்களிலிருந்து மிகச்சிறந்த நட்பினை கண்டறிவதில் நாலடியார் மற்றும் திருக்குறளில் உள்ள தத்துவ சிந்தனைகள் எவ்வாறு பிரயோகிக்கப்பட முடியும்? என்பது இந்த ஆய்வின் பிரதான பிரச்சினையாக உள்ளது. இதனடிப்படையில் நட்பின் இலக்கணத்தைப் பேசுபொருளாகக் கொண்டுள்ள நாலடியாரிலும் திருக்குறளிலும் நட்பின் சிறப்பு மற்றும் கூடா நட்பு போன்ற விடயங்கள் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது?, இவ்விடயத்துவங்களில் இரண்டு நூல்களும் எவ்வகையில் ஒருமித்த கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன?, நட்பின் சிறப்பு மற்றும் கூடா நட்பு என்பன பற்றிய முன்வைப்புக்களில் இரு நூல்களிலும் உள்ள தத்துவார்த்த போக்கு என்ன? எனும் ஆய்வு வினாக்கள் கட்டமைக்கப்பட்டு அவற்றுக்கான விடையினை பெற்றுக்கொள்வதனை இலக்காகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வின் நோக்கம்

நட்பு எனும் பந்தத்தில் தம்மை இணைத்துக்கொள்ளும் எந்தவொரு உயிரியும் நட்பின் தன்மையறிந்து செயற்பட வேண்டியது அவசியமானது. பலர் தீயவர்களுடன் நட்பினை ஏற்படுத்திக்கொண்டு தம்மளவில் தீய செயல்களிலிருந்து மீள முடியாதபடிக்கு சிக்கித் தவிக்கின்றனர். இந்நிலையினை தவிர்த்துக்கொள்ள சிறந்த நட்பினையும், தீய நட்பினையும் வேறுபடுத்தி பகுத்தறிந்துகொண்டு செயற்பட வேண்டியது மிக அவசியமானதாகும். இதனடிப்படையில் நாலடியாரிலும் திருக்குறளிலும் நட்பின் சிறப்பு மற்றும் கூடா நட்பு தொடர்பான விடயங்களை பகுத்தறிந்து சிறந்த நட்பிற்கான அடையாளத்தினை இனங்கண்டு கொள்வது என்பது இந்த ஆய்வின் நோக்கமாக அமைந்துள்ளது.

ஆய்வு முறையியலும் ஆய்வின் வரையறையும்

இந்த ஆய்வானது பண்பு சார்ந்த ஆய்வாகவும் இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வாகவும் உள்ளது. இதற்காக நாலடியார் மற்றும் திருக்குறளின் மூலநூல்களும் தெளிவுரைகளும் மற்றும் இவை தொடர்பாக இணையத்தளத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களும்

பயன்படுத்தப்பட்டுள்ளன. திருக்குறள் மற்றும் நாலடியாரில் நட்பியல் எனும் அதிகாரத்தில் நட்பு, நட்பாராய்தல், கூடா நட்பு, தீ நட்பு, நட்பிற் பிழை பொறுத்தல், சுற்றம் தழால் போன்ற பல விடயங்கள் பேசப்பட்டிருந்தாலும் இவ்வாய்வானது விசேடமாக நட்பின் சிறப்பு, கூடா நட்பு போன்ற விடயங்கள் குறித்து தனது ஆய்வு எல்லையினை மட்டுப்படுத்தியுள்ளது.

இலக்கிய மீளாய்வு

''நட்பு எனும் எண்ணக்கரு தொடர்பில் திருவள்ளுவர் மற்றும் அரிஸ்டோட்டிலின் கருத்துக்கள் - ஓர் தத்துவார்த்த ஒப்பீட்டு ஆய்வு'' எனும் தலைப்பில் மா. பிரகாசன் என்பவர் எழுதிய ஆய்வுக் கட்டுரையானது திருக்குறள் மற்றும் அரிஸ்டோட்டிலின் நிகோமாசியன் எதிக்ஸ் (Nicomachean Ethics) எனும் இரு நூல்களையும் ஆய்வுக்குட்படுத்தி நட்பின் தன்மை குறித்தும் சிறந்த நட்பின் அடிப்டைகள் குறித்தும் எழுதப்பட்டுள்ளது. இதிலிருந்து திருக்குறளில் நட்பு தொடர்பில் பேசப்படும் கருத்து முன்வைப்புக்கள் ஆய்வு வாசிப்பினூடாக பெறப்பட்டன. (பிரகாசன், மா. 2020)

''நாலடியாரிலும் திருக்குறளிலும் ஊழ் - ஓர் ஒப்பீட்டு ஆய்வு'' எனும் தலைப்பில் இ. பிறேம்குமார் என்பவர் எழுதிய ஆய்வுக்கட்டுரையானது ஆய்வு வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்டு தகவல்கள் பெறப்பட்டன. இதில் திருக்குறள் மற்றும் நாலடியார் தொடர்பான காலப்பாகுபாடு குறித்தும் திருக்குறள் மற்றும் நாலடியார் ஒருங்கிணையும் விதங்கள் குறித்தும் அறிந்துகொள்ள முடிந்தததது. (பிரேம்குமார், இ. 2022)

''வள்ளுவர் காட்டும் நட்பு'' எனும் தலைப்பில் முனைவர் க. அரிகிருஷ்ணன் எழுதிய ஆய்வுக் கட்டுரையானது ஆய்வு இலக்கிய வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்டு அதிலிருந்து உண்மை நட்பு, தக்கார் நட்பு, தகவிலார் நட்பு, நட்புப்போலி போன்ற விடயங்கள் அறிந்துகொள்ளப்பட்டது. (அரிகிருஷ்ணன், க. 2014)

''குறள் காட்டும் நட்பு'' எனும் தலைப்பில் முனைவர் கோ. விசயராகவன் எழுதிய ஆய்வுக் கட்டுரையிலிருந்து நட்பு என்பதன் விளக்கம், நட்பின் சிறப்பு, நட்பு குறித்து கண்ணதாசன் கூறிய கூற்று, பாரதத்தில் நட்பு, பார்காமல் நட்பு கொள்ளுதல் போன்ற பல நட்பினைக் குறித்த கருத்துக்களை அறிந்துகொள்ள முடிந்தததது. (விசயராகவன், கோ. 2022)

எவ்வாறு இருப்பினும் நாலடியாரையும் திருக்குறளையும் ஒப்பிட்டு இரண்டிலும் நட்பின் முன்வைப்புக்களை ஆராய்வதில் இவ்வாய்வு முயன்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நட்பு எனும் எண்ணக்கரு பற்றிய அறிமுகம்

''நட்பு'' எனும் சொல்லானது ''தோழமை'', ''கேண்மை'', ''சிநேகம்'' போன்ற பல வார்த்தைகளால் அழைக்கப்படுகின்றது. இரு உயிர்களுக்கு இடையே காணப்படும் ஒன்றுபட்ட, ஒத்த உணர்வும் எண்ணங்களும் ''நட்பு'' என்னும் சொல்லுக்குப் பாலமாய் அமைகின்றன. நம்மை நாடி வந்து அன்பு செய்பவரும், நாம் நாடிச் சென்று அன்பு கொள்பவரும் நண்பர்கள் ஆவார்கள். மேலும்,

நட்பானது ஒருவரிடம் காணப்படும் செல்வத்தையோ, பதவியையோ மையமாகக் கொள்ளாது, இறுதி மூச்சு வரை அவரது இன்ப துன்பங்களில் பங்கிடத் தூண்டும் ஓர் உணர்வு என்றே கூறலாம். 'நட்பு' எனும் எண்ணக்கரு இன்றைய வாழ்வியலோடு மிகவும் பொருத்தமானதாகவும், உளவியல் தன்மை கொண்டதாகவும் விளங்குகிறது.

சங்க காலத்தில் அரசர்களுக்கும், புலவர்களுக்கும் இடையே காணப்பட்ட நட்பினை சிறப்பாக வெளிப்படுத்திக் காட்டும் இலக்கிய வடிவமாக எட்டுத்தொகை எனும் நூல் விளங்குகின்றது. சங்க காலத்தையடுத்துவந்த காலமாகிய சங்கமருவிய காலத்தில் தோன்றிய கீழ்க்கணக்கு நூல்களில் 'நட்பு' எனும் எண்ணக்கருவினை வெளிப்படுத்திக் காட்டுவதில் நாலடியார் மற்றும் திருக்குறள் என்பன பெரும்பங்காற்றுகின்றன. நட்பு, நட்பாராய்தல், கூடாநட்பு, தீ நட்பு முதலியன பற்றி அறநூல்கள் பலவும் பலவிதமாக விளக்கினாலும், நாலடியார் மற்றும் திருக்குறளில் இது தொடர்பான வெளிப்பாடுகள் தெளிவானதாகவும் அனைவராலும் இலகுவில் பொருளறிந்து வாசிக்கக்கூடிய எளிய நடையிலும் அமைந்திருப்பது சிறப்பிற்குரியது.

திருக்குறள் மற்றும் அதனை அடியொற்றி இயற்றப்பட்ட அற இலக்கியமாகிய நாலடியாரில் நட்பு என்பது எடுத்தாளப்படுவதில் பல்வேறுபட்ட விடயங்களை அறிந்து கொள்ள முடிகின்றது. தனிமனிதன், குடும்பம், சமுதாயம் என்ற நிலைகளில் சிறந்த வாழ்க்கைக்கு வழிகாட்டும் அற இலக்கியங்களாகிய இவ் இரு நூல்களும் சமுதாயத்தில் முக்கிய இடம் வகிக்கும் 'நட்பு' எனும் எண்ணக்கரு குறித்து பேசியிருப்பது அவற்றை இன்னும் மேன்மையடையச் செய்கின்றது. இலக்கியச் சுவையோடு இணைந்து உவமைகளைக் கொண்டு நட்பின் சிறப்பினை இவ் இரு நூல்களும் எடுத்துக்கூறுகின்றன. மனிதனுக்கு நட்பு என்பது ஒரு வலிமையாகவும், உற்ற துணையாகவும் அமைந்து வாழ்வினைச் சிறக்க செய்யும். இத்தகைய நட்பினை திருக்குறள் மற்றும் நாலடியார் எடுத்தாளும் விதத்தினை இனி ஆராய்வோம்.

திருக்குறளிலும் நாலடியாரிலும் நட்பின் சிறப்பு

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாக விளங்கும் திருக்குறள் முப்பால், உத்திர வேதம், தெய்வநூல், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, பொதுமறை, திருவள்ளுவம் என்ற பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இந்நூலின் ஆசிரியர் திருவள்ளுவர், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகன், மாதாநுபங்கி, செந்நாப் போதார், பெருநாவலர், பொய்யில் புலவன் போன்ற பல பெயர்களால் அழைக்கப்படுகின்றார். (பிறேம்குமார், இ. 2022) திருக்குறளில் எழுபத்தி ஒன்பதாவது அதிகாரமாக அமைந்த நட்பு எனும் அதிகாரத்தில் உள்ள பத்து குறள்களிலும் நட்பின் சிறப்புக் குறித்து வள்ளுவர் எடுத்துக்கூறுகின்றார். அதேபோல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அறத்தினை வலியுறுத்தும் முக்கிய நூலாக நாலடியார் காணப்படுகின்றது. 'நாலடியார்' என்பதற்கு நான்கடிகளையுடைய வெண்பாவாலாகிய நூல் என்பது பொருள். இது சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நானூறு தனிப்பாடல்களின் தொகுப்பாகக் கருதப்படுகிறது. இதனை நாலடி நானூறு, வேளாண் வேதம் என்றும் அழைப்பர். திருக்குறளில் வெளிப்படுத்தப்பட்டிருப்பது போன்று நாலடியாரிலும் பத்து வெண்பாக்களில் நட்பின் சிறப்பு பற்றிய கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

ஒருவர் சம்பாதிப்பதற்கு நட்பைப் போல அரிய பொருள் வேறு எவையும் இல்லை. அதுபோல அவ் நட்பைச் சம்பாதித்துவிட்டால் பிறர் புகமுடியாதபடி நம்மைக் காப்பதற்கு அரிய பொருள் வேறு எதுவும் இல்லை என கீழ்வரும் குறளில் காணலாம்.

செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு. (குறள் - 781)

மேலும் நற்பண்புடையவருடன் கொண்ட நட்பு தொடர்பாக கூறும்போது நல்ல தன்மையுள்ளவரோடு கொண்ட நட்பானது, வளர்பிறை போல நாளுக்குநாள் வளரும் பேதைகளின் நட்பு, தேய்பிறைபோல நாளுக்குநாள் தேய்ந்து போகும் எனவும் மற்றும் படிக்கும்போது எல்லாம் மகிழ்ச்சி தரும் நூலின் இன்பம் போல நல்ல குணமுள்ளவரோடு கொண்ட நட்பு அவரோடு பழகும் போதெல்லாம் மகிழ்ச்சி தரும் என 782, 783 ஆவது குறளில் வள்ளுவர் எடுத்துரைக்கின்றார்.

அதே கருத்தினை நாலடியாரிலும் காணமுடிகின்றது. நூல்களின் உட்பொருளை உணர்ந்து கற்று அறிந்தவருடன் கொண்ட நட்பு எப்போதும் குருத்திலிருந்து கரும்பைத் தின்பது போல் இனிமை அதிகமாகும் எக்காலத்தும் நன்மையில்லாதவரிடம் கொண்ட நட்பு, கரும்பை அடியிலிருந்து நுனியை நோக்கித் தின்பது போல் இனிமை குறைந்து நட்புச் சுவை குறைந்து வெறுக்கப்படும் என்பதனை கீழ்வரும் நாலடியார் பாடல் வெளிப்படுத்தி நிற்கின்றது.

கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை எஞ்ஞான்றும்
குருத்திற் கரும்புதின் றற்றே - குருத்திற்கு
எதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ, என்றும்
மதுரம் இலாளர் தொடர்பு. (நாலடி 211)

நட்புக் கொள்ளும் போது நண்பன் விடும் தவறுகளை திருத்துவதும் அறிவுரை கூறுவதும் நட்பிற்கு அவசியமானது என்பதனை வள்ளுவர் பின்வரும் கருத்தாக்கங்களினூடாக வெளிப்படுத்துகின்றார். நட்புச் செய்து கொள்வது நண்பரோடு சிரித்து மகிழ்வதற்காக மட்டும் அல்ல அவர் மிகுதியாகத் தவறு செய்யும் போது, அவரைக் கடிந்து திருத்துவதற்கே என்றும் அதுபோல அழிவைத் தரும் தீமைகளிலிருந்து நீக்கி, நல்ல வழியில் நடக்கச் செய்து, அழிவுவந்த காலத்தில் உடனிருந்து துன்பப்படுவதே நட்பாகும் எனவும் மற்றும் அணிந்திருக்கும் உடை உடலைவிட்டு நழுவும்போது எப்படிக் கைகள் உடனடியாகச் செயல்பட்டு அதனைச் சரிசெய்ய உதவுகின்றனவோ அதைப்போல நண்பனுக்கு வரும் துன்பத்தைப் போக்கத் துடித்து செல்வதே நப்புக்கு இலக்கணமாகும் என்றும் முறையே 784, 787, 788 எனும் குறட்பாக்களினூடாக வெளிப்படுத்துகின்றார்.

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும். (குறள் - 785)

எனும் குறளினூடாக நட்புச் செய்வதற்கு ஒருவரோடு ஒருவர் கலந்து பேசிப் பழகுதல் வேண்டியதில்லை. இருவரிடமும் உள்ள ஒத்த உணர்ச்சிகளே, நட்பு என்னும் உரிமையைத் தந்துவிடும் என நட்பின் இலக்கணத்தை சுட்டிக்காட்டுகின்றார்.

அதுபோலவே நாலடியாரிலும், உண்மையான நட்புடன் பழகும் ஒருவர் அன்பாகப் பரிமாறும் அரிசி கழுவிய நீரிலே உப்பின்றி வெந்த, கறுத்த கீரைக் கறியானாலும் அது அமிர்தமாகும். ஆனால் சீரிய தாளிப்பினையுடைய துவையலுடன் கூடிய வெள்ளிய சோறேயாயினும், அன்பில்லாதவர் கையிலிருந்து வாங்கி உண்பதாயின், அது எட்டிக்காயைத் தின்பது போலாகும் என்று நட்பிற்குள் அன்பின் அவசியத்தினை வலியுத்தி நிற்கின்றது நாலடி 217ஆவது பாடல்.

அதுமட்டுமல்லாமல் பார்க்கும்போது முகமலர்ச்சியுடன் பழகுவதே நட்புக்கு அழகாகும் என நாலடியாரின் பின்வரும் பாடல் எடுத்துரைக்கின்றது.

கோட்டுப்பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது
வேட்டதே வேட்டதாம் நட்பாட்சி - தோட்ட
கயப்பூப்போல் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
நயப்பாகும் நட்பாரும் இல். (நாலடி 215)

அதாவது கொம்பிலே பூக்கும் பூக்கள் முதலில் மலர்ந்து பின் உதிரும் வரை குவியாதிருத்தல் போல, முதல் நாள் உள்ளம் மகிழ்ந்து விரும்பியது போலவே முடிவு வரையில் மகிழ்ந்து விரும்பியிருப்பது நட்புடைமையாகும். அப்படியின்றி, தோண்டப்பட்ட குளத்திலே இருக்கும் பூவைப் போல முதலில் மலர்ச்சியைக் காட்டிப் பின்பு முகம் சுருங்கும் தன்மையுடையவரை விரும்புவாரும் இல்லை நட்புச் செய்வாரும் இல்லை என குறிப்பிடுகின்றது. அதே கருத்தினையே மனம் மகிழாமல், முகம் மட்டுமே மலரப் பழகுவது நட்பு அன்று. அன்பால் மனமும் மலரப் பழகுவதே நட்பு என 786ஆவது குறளில் குறிப்பிடுகின்றார்.

மேலும் நட்பின் சிறப்பு பற்றி கூறும்போது வள்ளுவர் மனவேறுபாடு கொள்ளாமல் தன்னால் இயலும் வழிகளிலெல்லாம் துணைநின்று நண்பனைத் தாங்குவது தான் நட்பின் சிறப்பு என 789ஆவது குறளில் வெளிப்படுத்துகின்றார்.

இனையர் இவரெமக்கு இன்னம்யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு. (குறள் - 790)

எனும் குறளில் நட்பு என்பது அளவிட முடியாதது என்பதனை உணர்த்தும் வண்ணம் ‘இவர் எமக்கு இப்படிப்பட்டவர்’, ‘யாம் இவருக்கு இத்தன்மைவர்’ என்று, நட்பின் அளவைச் சொன்னாலும், அந்த நட்பு தன் சிறப்பை இழந்து போகும் எனக் குறிப்பிட்டு அதனை மேலும் மேன்மைப்படுத்தியிருக்கின்றார். இக்கருத்தினையொட்டியே நாலடியாரில் நட்பு வகைப்படுத்தப்பட்டு விளக்கப்பட்டுள்ளது.

கடையாயார் நட்பிற் கமுகனையார் ஏனை
இடையாயார் தெங்கின் அனையர் - தலையாயார்

எண்ணரும் பெண்ணைபோன்று இட்டஞான்று இட்டதே,
தொன்மை யுடையார் தொடர்பு. (நாலடி 216)

எனும் இப் பாடல் முதல், இடை, கடை என்று மூன்றுவகை நட்புப் பற்றிக் கூறுகின்றது. அதாவது நட்புத் தன்மையில் கடையாயவர், நாள்தோறும் தண்ணீர் பாய்ச்சிப் பராமாகிக்க உதவும் பாக்கு மரம் போல, நாள்தோறும் உதவி செய்தால்தான் பயன்படுவர் இடையாயவர், விட்டு விட்டு நீர் பாய்ச்சிக் கவனித்து வந்தால் உதவும் தென்னை மரம்போல அவ்வப்போது உதவி செய்தால் பயன்படுவர். தொன்மைத் தொடர்பு பாராட்டும் (ஒரு முறை செய்த நட்பினைப் போற்றும்) தன்மையுடைய தலையாயவர், விதையிட்ட நாளில் வார்த்த தண்ணீரன்றிப் பிறகு ஒரு பராமரிப்பும் செய்யாமலே உதவும் மதிப்பு மிக்க பனைமரம் போல் பயன்படுவர்.

இருப்பினும் திருக்குறளில் நேரடியாக கூறப்படாமல் மறைமுகமாக கூறப்பட்ட கருத்துக்கள் சிலவும் நாலடியாரில் நேரடிப் பொருளில் கூறப்பட்டிருப்பதனையும் காணமுடிகின்றது. ஒருவரின் மனநலத்தையும் அறிந்து ஒருவரிடம் நட்புக்கொள்ள வேண்டும் என்பதனை ஒருவரின் உயர் குடிப்பிறப்பை நோக்கி, “இவர் இடையில் மாறமாட்டார்” என்னும் நம்பிக்கையால் நட்புக் கொள்ள வேண்டும் என நாலடியாரின் 212 ஆவது பாடலின் மூலமும் அதேபோல் யானை போன்ற பெருமையுடையார் நட்பை விலக்கி, நாய் போன்ற இழிவுத் தன்மை உடையராயினும் அவரது நட்பை விரும்பிக் கொள்ளல் வேண்டும். ஏனெனில் யானை பலநாள் பழகியிருந்தும் சமயம் வாய்க்கும்போது பாகனையே கொல்லும். ஆனால் நாயோ, தன்னை வளர்த்தவன் சினம் கொண்டு எறிந்த வேலானது தனது உடலில் அழுந்திக் கிடக்க, அவனைக் கண்டதும் வாலை ஆட்டி அவன் அருகே செல்லும். அகன்ற கல்வியும், சிறந்த குடியும் இல்லையெனினும் மனம் தூயராயின் அவருடன் நட்புக் கொள்ளலாம் என்ற அர்த்தத்தில் நாலடியாரின் 213ஆவது பாடலிலும் நட்பிற்கு இருவரின் மனமும் இணைய வேண்டும் என்பது வெளிப்படுகின்றது.

அதே கருத்தினையே நாலடியாரின் 214ஆவது வெண்பா வரிகளினூடாகவும் அறிய முடிகின்றது. பலநாட்களாகப் பக்கத்தில் இருந்து பழகுவராயினும் சில பொழுதேனும் தன் மனத்துடன் பொருத்தமில்லாதரோடு அறிவுடையோர் சேரமாட்டார்கள். அங்ஙனமின்றித் தம் நெஞ்சம் பிணித்தாரோடு கொண்ட நட்பினை, தம்மை விட்டுப் பல நாட்கள் விலகியிருந்தார்கள் என்பதற்காக அவர்களைக் கைவிடமாட்டார்கள் என்ற அர்த்தத்தினை வெளிப்படுத்துகின்றது.

நாய்க்கால் சிறுவிரல்போல் நன்கணியா ராயினும்
ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னாம்?
சேய்த்தானும் சென்று கொளல்வேண்டும், செய்விளைக்கும்
வாய்க்கால் அனையார் தொடர்பு. (நாலடி 218.)

எனும் வெண்பாவில் நாயின் காலில் இருக்கும் சிறிய விரல்களைப் போல மிகவும் நெருக்கம் உள்ளவராக இருந்தாலும், ஈயின் காலளவாயினும் உதவி செய்யாதவர் நட்பினால் எத்தகைய பயனும் உண்டாகாது. ஆதலால், வயலை விளையும்படி செய்கின்ற வாய்க்காலைப்

போன்றவரின் நட்பினை, தூரத்தில் இருப்பதாயினும் போய்க் கொண்டுவர வேண்டும். அதாவது பண்புடையவரது நட்பினை நாடிப் பெற வேண்டும் என்பது கருத்து.

நோயினும் சாதல் நன்றாதல் போல, புகழ்தலை விடப் பழித்தல் நன்றாதல் போல, அறிவிலார் நட்பைவிடப் பகை நல்லது என்பதனை நாலடியாரின் 219ஆவது பாடலும் கூடிப் பழகியபின் பிரிதல் துன்பம் ஆதலால் முன்பே ஒருவரது குணங்களை ஆராய்ந்து நட்புக் கொள்ள வேண்டும் என்பதனை நாலடியாரின் 220 ஆவது பாடலும் வெளிப்படுத்தி நிற்பதனை அறியலாம்.

அத்தோடு திருக்குறளின் நட்பியலில் வரும் ஏனைய அதிகாரங்களான நட்பாராய்தல், பழமை போன்றவற்றிலும் நட்பின் சிறப்பு வெளிப்படுகின்றமையினையும் காணமுடிகின்றது. அதாவது பழகிய நண்பர்கள், தங்களின் உறவை அழியாமல் பாதுகாக்க வேண்டும் என்றும் அதுவே சிறந்த நட்பாகும் எனவும் கீழ்வரும் குறள் வெளிப்படுத்துகின்றது.

பழைமை எனப்படுவது யாதெனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு (குறள். 801)

மற்றும் தம் நண்பர் உரிமை எடுத்துக் கொண்டு தம்மைக் கேளாமலேயே ஒரு காரியத்தைச் செய்தால் அக்காரியத்தைத் தாம் அறிந்திருந்தாலும் நண்பரால் அச்செயல் விரும்பிச் செய்யப்படுகின்றமையினால் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும், நீண்டகால நண்பர்கள் தமக்குக் கேடு தருவதாக இருந்தால்கூட நட்பின் இலக்கணம் உணர்ந்தவர்கள் அவர்களது நட்பைத் துறக்க மாட்டார்கள் எனவும், உரிமையை விடாது நெடுங்காலமாக வரும் நட்பினை உடையவர் கேடு செய்தாலும் அந்த நட்பை விட்டு விடாதவரை இவ் உலகம் விரும்பும் எனவும் கூறுவதன் மூலம் சிறந்த நண்பருக்கான அடிப்படைகளை குறள் எண் முறையே 804, 806, 809 என்பன எடுத்துக்காட்டியுள்ளன.

இவ்வாறு நாலடியார் மற்றும் திருக்குறள் எனும் இவ்விரு நூல்களும் நட்பின் அவசியத்தையும், நட்பின் மேன்மையினையும் எடுத்தாண்ட விதத்தினை கண்டுகொள்ள முடிகின்றது.

திருக்குறளிலும் நாலடியாரிலும் கூடா நட்பு

திருக்குறளில் எண்பத்து மூன்றாவது அதிகாரமாக அமைந்த கூடா நட்பு எனும் அதிகாரத்தில் உள்ள பத்து குறள்களிலும் பொருத்தமற்ற சினேகம் குறித்து வள்ளுவர் எடுத்துக்கூறுகின்றார். திருக்குறளில் வெளிப்படுத்தப்பட்டிருப்பது போன்று நாலடியாரிலும் பத்து வெண்பாக்களில் கூடா நட்பு பற்றிய கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

மனத்தால் நம்மை விரும்பாமல், தமக்கான வாய்ப்பை எதிர்நோக்கி நம்முடன் பழகுபவரின் நட்பானது, பொருளைத் தாங்குவதுபோல் தோன்றினாலும் பொருளை வெட்டி எறிவதற்குத் துணை செய்யும் பட்டடை போன்றதாகும் இதனை கீழ்வரும் குறளில் காணலாம்.

சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு. (குறள். 821)

அதுபோன்றே நாலடியாரிலும், சிலர் ஒருவரால் ஒரு காரியம் ஆக வேண்டியிருந்தால், அக்காரியம் முடியும்வரை, அவர் துன்புறுங்காலத்தில் அதனைத் தாங்களும் தாங்கிக் கொண்டிருந்து அக்காரியம் முடிந்தபின் அவரை விட்டு நீங்கிவிடுவர். ஆதலின், இப்படிப்பட்டவருடன் நட்புக் கொள்ளக்கூடாது என்பதனை நாலடியார் 231 ஆவது பாடல் எடுத்துக்காட்டுகின்றது.

செறிப்பில் பழங்கூரை சேறணை யாக
இறைத்துநீர் ஏற்றும் கிடப்பர், - கறைக்குன்றம்
பொங்கருவி தாழும் புனல்வரை நன்னாட!
தங்கருமம் முற்றும் துணை. (நாலடி. 231)

மேலும் வேண்டாத அல்லது பகையுணர்வுள்ள ஒருவருடன் கொண்ட நட்பு தொடர்பாக குறள் எண் 822, 823 இல் வள்ளுவர் கூறும்போது வேண்டியவர் போலத் தோன்றி, மனத்தால் வேண்டாதவராக இருப்பவரோடு உண்டான நட்பு விலைமகளிர் மனம் போலப் பெறுகிற பயனுக்குத் தகுந்தபடி மாறிவிடும் எனவும் அரிய நூல்கள் பலவற்றைக் கற்றிருந்த போதிலும், பகையுணர்வு படைத்தோர் மனம் திருந்தி நடப்பதென்பது அரிதான காரியமாகும் எனவும் எடுத்துரைக்கின்றார். இதனை முறையே 822, 823 குறள்களின் வாயிலாக அறியலாம்.

கூடா நட்பினால் நன்மை இன்றி தீமை வந்து சேரும் என்பதனை நாலடி 232, 233, 234 பாடல்கள் எடுத்துக்காட்டி நிற்கின்றன. நற்குணமில்லாதார் நட்பு மழை பெய்யாத வறண்ட காலத்தை போன்றது. அதாவது மழை இல்லாததால் வளம் குறைதலோடு வெயிலும் சுட்டெரப்பதுபோல, கூடா நட்பால் நன்மையின்றித் தீமை நேரும் என்கிறது நாலடி 232 ஆவது பாடல்.

நுட்பமான அறிவினை உடையவர்களுடன் நட்புச் செய்து அதன் பயனை அனுபவித்தல், விண்ணுலக இன்பத்தினைப் போல மேன்மையுடையதாகும். நுட்பமான நூலறிவு அற்ற பயனில்லாதவருடன் நட்புக் கொள்ளுதல் நரகங்கள் ஒன்றினுள் சேர்ந்திருத்தல் போல் துன்பம் தருவதாகும் என நாலடியார் 233 வது பாடல் எடுத்துக்காட்டுகின்றது. அதேபோல் 234 ஆவது பாடலில் அன்பு இல்லாதவருடன் கொண்ட நட்பு வளர்வது போலத் தோன்றி வைக்கோலில் பற்றிய தீயைப் போல ஒரு கணப்பொழுதும் நில்லாது கெடும் என்றும் மற்றும் 237 ஆவது பாடலானது மனம் பொருந்தாதவாகிடம் கொள்ளும் நட்பு துன்பம் தருவதாகும் என்ற அர்த்தத்திலும் பயன்படுத்தப்பட்டு கூடா நட்பு விமர்சிக்கப்படுகின்றது.

மேற்கூறியது போன்று பொருந்தாதவர்களுடனான நட்புக் குறித்து திருக்குறளும் தன் கருத்தை வழங்கியிருக்கின்றது. தீயாரது நட்பினையும் அதே நேரம் வஞ்சக உணர்வு கொண்டவர்களது நட்பினையும் அறிந்து அதிலிருந்து விலகிவிட வேண்டும் என்ற கருத்தினை குறள் எண் 824, 827, 829, 830 வெளிப்படுத்துகின்றன. அதாவது முகத்திலே இனிமை தோன்றச் சிரித்துப் பேசியபோதும் அகத்திலே துன்பத்தையே நினைக்கும் வஞ்சகரின் உறவினை, விளையும் தீமைக்கு அஞ்சி, விட்டு விட வேண்டும் என

முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும். (குறள் - 824) எனும் குறள் மூலமும்

பகைவரிடம் காணப்படும் சொல் வணக்கம் என்பது வில்லின் வணக்கத்தைப் போல் தீங்கு விளைவிக்கக் கூடியது என்பதால், அதனை நம்பக் கூடாது என்பதனை

சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான். (குறள் - 827)

எனும் குறள் மூலமும் விளக்கிக் கூறுகின்றார். அதுபோலவே

829 ஆவது குறளின் மூலம் வெளிப்பட மிகுதியாக நட்புச்செய்து, உள்ளத்திலே நம்மை இகழுகிறவர்களை, நாமும் மகிழ்ச்சியடையச் செய்து, நம் உள்ளத்தில் அந்த நட்பை அழித்துவிடல் வேண்டும் என்றும் குறள் 830 இல் பகைவர் நண்பராகும் காலம் வரும் போது முகத்தளவில் நட்பு கொண்டு அகத்தில் நட்பு நீங்கி வாய்ப்புக் கிடைத்த போது அதையும் விட வேண்டும் என்றும் திருவள்ளுவர் தம் குறட்பாவில் கூறியுள்ளார்.

குறள் எண் 826, 828 இன் மூலம் ஒருவர் எம்மோடு வெளித்தோற்றத்திற்கு நட்புள்ளவர் போல பழகியும் அதேநேரம் மனதளவில் எம்மீது வஞ்சக உணர்வு கொண்டவராகவும் உள்ள தன்மையினை அற்ந்துகொள்ள அறிவுரை வழங்கி அத்தன்மையானவரை அறியும் முறையினையும் வள்ளுவர் கூறியிருக்கின்றார்.

நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும். (குறள் - 826) எனும் குறட்பாவில்

நண்பர்களைப் போல், நன்மை தருவனவற்றைச் சொன்னாலும், நம்மோடு மனத்தால் கூடாதவர்களின் சொற்கள் நன்மைதராதனவே என்பதனை விரைவில் அறிந்து கொள்ளலாம் என்றும் 828 ஆவது குறட்பாவில் பகைவர் தொழும் கைக்குள்ளும் ஆயுதம் மறைந்திருக்கும் அவர் அழுது சிந்தும் கண்ணீரும் அப்படிப்பட்டதே என்றும் குறிப்பிடுகின்றார். இத்தகையவர்களுடன் நட்புக் கொள்ளக் கூடாது.

இவ்வாறு நாலடியாரிலும் எத்தகைய தன்மைத்தவருடன் நட்புக்கொள்ளக் கூடாது என்பதனை கீழ்வரும் வெண்பா பாடல் காட்டுகின்றது.

செய்யாத செய்தும்நாம் என்றலும் செய்தவனைச்
செய்யாது தாழ்த்துக் கொண்டு ஓட்டலும் - மெய்யாக
இன்புறூஉம் பெற்றி யிகழ்ந்தார்க்கும் அந்நிலையே
துன்புறூஉம் பெற்றி தரும். (நாலடி. 235)

செய்ய முடியாததைச் செய்வோம் என்பது வெற்று ஆரவார மொழியாகும் செய்ய முடிந்ததைச் செய்யாது காலத்தை ஓட்டுதல் நம்பிக்கை மோசடியாகும். எனவே, இத்தகையோருடன் நட்புக் கொள்ளக்கூடாது என்கிறது. அதேபோல நாலடியாரின் 236 ஆவது பாடல் குறிப்பிடுவதானது, ஒரே குளத்தில் தோன்றி ஒன்றாகவே நீண்டு வளர்ந்த போதிலும் விரிந்து மணம் வீசும்

தன்மையுள்ள குவளை மலர்களுக்கு அல்லி மலர்கள் இணையாக மாட்டா. அது போல சிறந்த குணங்கள் பொருந்தியவருடைய நட்பைப் பெற்றாலும் நற்குணங்கள் இல்லாதார் செயல்கள் வேறுபட்டிருக்கும் ஆகவே நல்லோருடன் பழகினாலும் தமது கெட்ட குணத்தை விடாதவருடன் நட்புக் கொள்ளக்கூடாது என்கிறது.

ஒருவர் தன் நட்பிற்கு செய்யத்தகாத செயல்கள் எவை எனவும் அவ்வாறு செய்தால் அது பெரும் பாவத்திற்குரிய செயலாகும் எனவும் 238, 239, 240 பாடல்கள் வெளிப்படுத்தி காட்டுகின்றன. அதாவது 238 ஆவது பாடலில் நண்பன் துன்புற்றபோது விரைந்து சென்று தன் அருமையான உயிரை அவன் கையில் கொடுத்து அவனது துன்பத்தைப் போக்காவிடின், மிக்க புகழுடைய இந்த உலகம் சிரிக்குமாறு, நண்பனின் சிறந்த மனைவியைக் கற்பழித்த பாவி செல்லும் நரகத்திற்கு செல்வது போன்றது என்றும் நாலடியாரின் 239 ஆவது பாடலில் நன்மையை அறிவாரோடு கொண்ட நட்பை நீக்கிப் புல்லறிவினையுடையாரோடு கொண்ட நட்பு, பசுவின் நெய் ஊற்றி வைக்கும் பாத்திரத்தில் அந்த நெய்யை நீக்கி, வேப்பெண்ணெயை ஊற்றி வைத்தது போலாகும் என்றும் கூறப்படுகின்றது.

மேலும் ஒருவர் அழகாக இருந்தாலும் உதவும் பண்பு இல்லாத பட்சத்தில் அது பருகுதற்கான பாலில் நீரைக் கலந்தது போலாகும். அதாவது அறிவுடையோர் தீயோரைச் சார்ந்து கெடுதல் என்பதானது நாகப்பாம்பு விரியன் பெடையுடன் புணர்ந்து உயிரை விட்டது போலாகும் என்று கூறப்படுகின்றது. இவ்வாறு நாலடியாரின் பொருட்பாலில் நட்பியலில் கூடாநட்பு குறித்தும், திருக்குறளில் கூடா நட்பு குறித்தும், அதனை எவ்வாறு அடையாளம் காண்பது என்பது குறித்தும் அறிந்துகொள்ள முடிகின்றது.

பகுப்பாய்வு

மேற்காட்டியவாறு ஆய்வுக்குள்ளாக்கப்பட்ட இரண்டு நூல்களிலும் நட்பு எனும் எண்ணக்கரு தொடர்பில் பல்வேறு ஒருமித்த கருத்துக்கள் உள்ளமையினை அறிய முடிகின்றது. நட்பின் பெருமை, மக்கள் மத்தியில் நட்பின் செல்வாக்கு, நட்பின் முக்கியத்துவம், நட்பிற்கான அடிப்படை விடயங்கள், நட்பின் பயன்பாடுகள், நல்ல நண்பர்களின் செயற்பாடுகள், தீய நண்பனின் செயற்பாடுகள், தீய நட்பால் ஏற்படும் விளைவுகள், எத்தகைய நட்பிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள வேண்டும் என பல்வேறுபட்ட விடயங்களை இவை இரண்டும் ஒரேதன்மையுடையதாக வெளிப்படுத்தியிருக்கின்றன.

அரிஸ்டோட்டில் தனது 'நிகோமாசியன் எதிக்ஸ்' எனும் நூலில் மூன்று வகையான நட்பு பற்றிக் குறிப்பிடுகின்றார். அவையாவன ஒருவரிடமிருந்து பெறப்படும் நலன்களின் அடிப்படையில் உருவாகும் நட்பு, ஒருவரிடமிருந்து கிடைக்கும் இன்பத்தின் அடிப்படையில் உருவாகும் நட்பு, ஒருவரிடமிருக்கும் நற்பண்புகளால் வியந்து உருவாகும் நட்பு. இம் மூன்று நட்புக்களிலும் உயர்ந்ததாக மூன்றாவதாக குறிப்பிடும் ஒருவருடைய சிறந்த நற்பண்புகளைப் போற்றி ஏற்படுகின்ற நட்பு உள்ளது. இது எக்காலத்திலும் மாற்றமடையாததாக, நிலைபேற்றுத் தன்மையுடையதாக இருக்கும் என்கின்றார். எனினும் இம் மூன்றுவகை நட்பும் அவசியமானவையே. (பிரகாசன், மா. 2020)

இவ்வாறு நோக்கும் போது 'நட்பு' என்பது மேலைத்தேயத்திலும் சரி, கீழைத்தேய சிந்தனைகளிலும் சரி பேசு பொருளாக அமைந்திருக்கின்றது என்பதனை அறிய முடிகின்றது. ஆனால் உண்மையான நட்பிற்கு இத்தனை தன்மைகள் கூறப்பட்டிருப்பது நட்பின் தன்மையை பன்முகப்படுத்தியிருக்கின்றதே தவிர ஒரு சரிநிலையான தன்மையோடு நட்பை வரையறுப்பதாக அமையவில்லை. உண்மையில் நட்பு என்பதன் இலக்கணம் என்ன? மேற்கூறிய பண்புகள் அனைத்தையும் கொண்டமைவதா? மாறாக மேற்கூறியவற்றில் ஒன்று இருக்கும் பட்சத்திலும் நாம் அதனை சிறந்த நட்பு என ஏற்றுக்கொள்ள முடியுமா? என்ற குழப்பமான ஒரு மனப்பாங்கிற்கு எம்மை இட்டுச் செல்கின்றது.

நட்பின் சிறப்புக்களாக நாம் நாலடியாரின் முன்வைப்புக்களையும், திருக்குறளின் முன்வைப்புக்களையும் ஏற்றுக்கொள்வதில் எவ்வித தயக்கமும் இல்லை. ஆனால் உண்மையான, நிலைத்திருக்கக்கூடிய நட்பினை அடையாளம் காண்பதற்கான வழிகள் குறித்த தெளிவுத்தன்மையினை இவ்விரு நூல்களும் வெளிப்படுத்துவதில் சற்று மிதமிஞ்சிய போக்கினைக் கொண்டிருக்கின்றன என்பதனையே கருதவேண்டியுள்ளது. நப்பினை இவ்வளவு அழகாக வெளிப்படுத்திக்காட்ட வேறு எந்த நூல்களாலும் முடியாது என்ற அளவிற்கு நாலடியாரும், திருக்குறளும் நட்பின் சிறப்பினை சிறப்பாகவே முன்வைத்திருக்கின்றது. இரு நூல்களிலும் பல்வேறுபட்ட உவமைகளினுர்டாகவும் அன்றாட நடைமுறைகளினூடாகவும் தத்துவங்களினூடாகவும் தாம் கூறவந்த பொருளை சரியான அர்த்தப்பாட்டுடன் வெளிப்படுத்தியிருப்பது தனிச்சிறப்பு வாய்ந்ததே ஆகும்.

முடிவுரை

'நட்பு' என்பது நாமாகத் தேடிக் கொள்ளும் ஒரு பந்தம். இது எம்மை நற்பாதையில் வழிப்படுத்துவதாக அமைய வேண்டும். ஒருவரின் வாழ்க்கை முழுவதிலுமே சிறந்த நட்பு அவசியமாகின்றது. அந்தவகையில் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட குறள்கள் மற்றும் நாலடியாரின் வெண்பாப் பாடல்கள் சிறந்த நண்பர் ஒருவர் கொண்டிருக்கவேண்டிய பண்புகளையும் சிறந்த நண்பரை அடையாளம் காண்பதற்கான வழிகாட்டல்களையும் வழங்கியுள்ளமையானது ஆய்வு நோக்கத்தினை அடைந்துகொள்ள துணைநின்றுள்ளது. அதேபோன்று நட்பின் சிறப்பு மற்றும் கூடா நட்பு போன்ற விடயங்கள் இவ்விரு நூல்களிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ள விதம், இவ்விடயத்துவங்களில் இரண்டு நூல்களும் கொண்டுள்ள ஒருமித்த கருத்துக்கள், நட்பின் சிறப்பு மற்றும் கூடா நட்பு என்பன பற்றி தத்துவார்த்த ரீதியான புரிந்துகொள்ளுதல் போன்ற பல விடயங்களை ஆய்வின்மூலம் அடைந்துகொள்ள முடிந்துள்ளது. இதன் மூலம் ஆய்வு வினாக்களுக்கான விடைகள் கண்டறியப்பட்டுள்ளன.

குறிப்பாக ஒருவரின் ஆரம்ப பருவத்தில் நட்பின் தாக்கம் அளப்பரிய பங்காற்றுகின்றது. நாம் சீரான பாதையில் செல்வதற்கும், தவறிழைப்பதிலிருந்து எம்மைப் பாதுகாப்பதற்கும் நட்பு அவசியம். அதுபோலவே ஏனைய பருவத்திலும் உடனிருந்து செயற்பட வைக்கும் கருவியாக அமையும் நட்பு சிறப்பிக்கத்தக்கது. நட்பினைப் பொறுத்தவரையில் அதன் எல்லை பரந்துபட்டது. ஒரு வகுப்பறைக்குள்ளோ, ஒரு ஊருக்குள்ளோ, ஒரு தேசத்திற்குள்ளோ மட்டுப்பாடுடைய எல்லையுடையதல்ல. அது தேசங்கள் கடந்தும் நிலைபெறும் பரந்த தன்மையுடையது. இன்று

இடம்பெறும் உலகளாவிய அரசியல், பொருளாதார மாறுதல்களுக்கும் நிலைபேறுகளுக்கும் நாடுகளுடனான நட்பும் இன்றியமையாததே ஆகும். நாம் எவ்வளவு நண்பர்களை பெற்றிருக்கின்றோம் என்பதல்ல எத்தகைய நண்பர்களைப் பெற்றிருக்கின்றோம் என்பதே இங்கு முக்கியமானது. தனிமனித உறவில் முக்கிய பங்கு வகிப்பது நட்பு. இத்தகைய நட்பு கொள்ளும் பாங்கு நற்குணமுள்ளவர்களுடன், அறிவுடையோருடன், கற்றறிந்த சான்றோர்களுடன், இருக்க வேண்டும். இக் கருத்துக்களை வெளிப்படுத்துவதில் இவ் இரு நூல்களும் மிகச் சிறப்பான பங்கினையே கொண்டுள்ளன.

உசாத்துணை

1. பரிமேலழகர் உரை. (2022). திருக்குறள்- மூலமும் உரையும், சென்னை, இந்தியா: பழனியப்பா பிரதர்ஸ்
2. பழனிவேல்பிள்ளை, பெ. (1960). நாலடி இன்பம், சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு
3. பிரகாசன், மா. (2020). நட்பு எனும் எண்ணக்கரு தொடர்பில் திருவள்ளுவர் மற்றும் அரிஸ்டோட்டிலின் கருத்துக்கள் - ஓர் தத்துவார்த்த ஒப்பீட்டு ஆய்வு, பல்சமய ஆய்வாளர் மன்றம்
4. பிரேம்குமார், இ. (2022). நாலடியாரிலும் திருக்குறளிலும் ஊழ் - ஓர் ஒப்பீட்டு ஆய்வு சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
5. மதுரை முதலியார், கு. (1988). நாலடியார்: விளக்கவுரை, சென்னை: முல்லை நிலைய வெளியீடு
6. Vaiyapuripillai, S. (1988) History of Tamil Language and Literature, Madras: New Century Book House
7. Premkumar, R. (2021). Destiny in Nālaṭiyār and Tirukkuṟal – A Comparative Study, International Research Journal of Tamil, 4(1), pp. 66-76. doi: 10.34256/irjt2218.
8. அரிகிருஷ்ணன். க, (2014). வள்ளுவர் காட்டும் நட்பு, தமிழ்க்கடல், Recived from: https://www.thamizhkadal.com/2014/12/blog-post.html (Accessd on 2022.08.20)
9. விசயராகவன். கோ, (2022). குறள் காட்டும் நட்பு, முத்துக்கமலம், Recived from: http://www.muthukamalam.com/essay/literature/p281.html (Accessd on 2022.08.20)

சமூக சீர்திருத்த திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற மாற்றீட்டுத் தண்டனை ஏற்பாட்டினால் சிறு குற்றமிழைத்தோர் எதிர்நோக்கும் சமூகத்தாக்கம் - மட்டக்களப்பு நீதிவான்நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பிரதேசங்களை மையப்படுத்திய ஓர் ஒழுக்கவியல் ரீதியான ஆய்வு

சபேசன் சஜிதா,[1] முனியாண்டி ரவி[2]
[1,2]தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[1]sabeshanshyllu@gmail.com, [2]vijiarts@yahoo.com

ஆய்வுச் சுருக்கம்

இன்றைய காலகட்டத்தில் சிறு குற்றவாளிகளுக்கான மாற்றீட்டுத் தண்டனை முறையானது மிகவும் முக்கியமான விடயமாக காணப்படுகின்றது. மனித வரலாற்றினை எடுத்து நோக்குவோமானால் தவறுகளின் திருத்தமே மனித நாகரீகமாகிறது. மனிதப் பரிணாமம் ஆனது அவன் செய்யப்பட்ட செயல்களில் உள்ள தவறுகளை திருத்துவதன் மூலமே விருத்தியடைந்தது எனலாம். அந்தவகையில் தவறுகள் மனித குலத்திற்கு மிகவும் அவசியமானதொன்றாகவே காணப்பட்டு வந்துள்ளது. மேலும் மனித சமூகத்தில் தவறானது தவிர்க்க முடியாத ஒன்றாகவும் மனிதர்கள் தங்கள் வாழ்நாட்களில் தெரிந்தோ, தெரியாமலோ சில பல, சிறிய பெரிய தவறுகளை ஆற்றுகின்றனர். ஒரு மனிதன் தான் செய்யும் செயல் தவறு என்று தெரிந்தும் மீண்டும் அதனை ஆற்றுவான் ஆயின் அது சமூகத்தின் பார்வையில் அச் செயல் குற்றம் ஆகிறது. அந்தவகையில், அவர்கள் ஆற்றும் குற்றங்களின் தாக்கத்திற்கு ஏற்ப குடும்பத்தாரால் வழங்கப்படும் தண்டனை, சமூகத்தால் வழங்கப்படும் தண்டனை மற்றும் நீதிமன்றினால் வழங்கப்படும் தண்டனை என தண்டனைகள் வழங்கப்படுகின்றன. எவ்வாறாயினும், நீதிமன்றினால் வழங்கப்படும் தண்டனையே சமூகத்தில் அதிகம் தாக்கம் செலுத்துகிறது. அவ்வாறு நீதிமன்றினால் வழங்கப்படும் தண்டனைகள் பலவகை உண்டு. அதில் எனது ஆய்வானது நடைமுறையில் சிறைப்படுத்தப்பட்டுள்ள கைதிகளில் இரண்டு வருடங்களுக்கு குறைவான உள்ள அல்லது தண்டப்பணம் செலுத்த முடியால் சிறைப்படுத்தபட்டவர்களுக்கான மாற்றீட்டு தண்டனை முறையாக சிறு தவறு செய்த குற்றவாளிகளை சமுதாயசீர்திருத்த கட்டளைக்கு உட்படுத்துவதன் மூலம் அந்நபரின் வாழ்வில் ஏற்படும் சமூக, பொருளாதார, உளவியல் ரீதியாக எவ்வாறான சாதகங்களை பெறுகின்றனர் என்பதை மெய்யியல் ரீதியாக ஆராய்வதாக அமைந்துள்ளது.

திறவுச் சொற்கள்: மாற்றீட்டு தண்டனை முறை, சிறு குற்றம் இழைத்தோர், சமுதாயசீர்திருத்த திணைக்களம், சமூகத்தின் நோக்கு.

ஆய்வு அறிமுகம்

மனித வாழ்வில் குற்றம், தண்டனை என்பன பிரிக்க முடியாத விடயங்களாக காணப்படுகின்றது. ஆரம்ப காலத்தில் இருந்து இன்று வரை குற்றத்திற்கான தண்டனைகள் பல பரிணாமங்களை எடுத்துள்ளதை காணமுடிகின்றது. நீதிமன்றினால் நடைமுறையில் சிறைப்படுத்தப்பட்டுள்ள கைதிகளில் இரண்டு வருடங்களுக்கு குறைவாக உள்ள அல்லது தண்டப்பணம் செலுத்த முடியால் சிறைப்படுத்தபட்டவர்களை மாற்றீட்டுத் தண்டனை முறையாக சிறு தவறு செய்த குற்றவாளிகளை சமுதாயசீர்திருத்த கட்டளைக்கு உட்படுத்துவதன் மூலம் அந்நபரின் வாழ்வில் ஏற்படும் சமூக, பொருளாதார, உளவியல் பிரச்சினைகளை மெய்யியல்ரீதியாக ஆராய்வதாக அமைந்துள்ளது.

தண்டனைகளில் சிறைத்தண்டனையானது சமூகத்தினால் வெறுக்கத்தக்க தண்டனையாக உள்ளது. தண்டனையை அனுபவித்த குற்றவாளி அத்தண்டனையை அனுபவித்து பின்னர் மீண்டும் சமூகத்தில் நுழைகையில் இச்சமூகம் அவர் இழைத்த குற்றத்திற்கான தண்டனையை அனுபவித்தவர் என்பதை விடுத்து மீண்டும் குற்றவாளியாகவே காண்கின்றனர். இச்சிறைத்தண்டனையானது ஒரு மாதகாலத்தில் இருந்து ஆயுள் காலம் வரை கால வரையறை கொண்டது. இருந்த போதும் சமூகத்தினால் கால வரையறை கருத்தில் கொள்ளாது. சிறைத்தண்டனை அனுபவித்ததை மாத்திரமே கருத்தில் கொள்கின்றனர். இதனால் சிறிய தவறுகளை புரிந்தவர்கள் சிறைத்தண்டனை அனுபவித்து திரும்பும் போது அவர்களை சமூகம் புறம்தள்ளுகின்றது. இதனால் அந்நபர் சமூக, பொருளாதார, உளவியல் ரீதியாக பல

தாக்கங்களை எதிர்நோக்குகின்றனர். இதனை கருத்தில் கொண்டு 1999 ஆம் ஆண்டின் 46 ம் இலக்க சமுதாய சீர்ரிருத்த சட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் சிறு குற்றம் புரிபவர்களை சிறைச்சாலை செல்வதை தவிர்ப்பதும் சமூகத்தில் வைத்தே அவர்களை சீர்செய்வதுமாகும்.

ஆய்வு நோக்கம்

மாற்றீட்டுத்தண்டனை முறையினால் அவர்கள் வாழ்வில் எவ்வாறான தாக்கத்தினை பெறுகின்றனர். என்பது பற்றியதாக இவ்வாய்வு அமைகிறது. இதன்படி சிறைத்தண்டனை அனுபவிக்கும் நபர்கள் எதிர்நோக்கும் சவால்களை அறிதல், சமூக சீர்திருத்ததிணைக்களப் பணிகள் பற்றிய விளக்கம் அறிதல், மாற்றீட்டுத்தண்டனையினால் குற்றவாளிகளின் வாழ்வில் ஏற்படும் சமூக, பொருளாதார, உளவியல் தாக்கங்கள் பற்றி ஆராய்தல், மாற்றீட்டுத்தண்டனையானது இக்கால சூழ்நிலைக்கு தேவையானதா தேவையற்றதா என்பதை ஆராய்தல் என்பவை இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.

அத்துடன் மாற்றீட்டுத்தண்டனைக்கான திணைக்களமான சமூகசீர்திருத்த திணைக்கள செயன்முறை பற்றி தெளிவூட்டல், தண்டனைகள் பற்றிய விளக்கத்தை பெறல், சமூக சீர்திருத்ததிணைக்களப் பணிகள் பற்றிய விளக்கம் அறிதல், சமூக சீர்திருத்ததிணைக்களத்தினால் எவ்வாறான மாற்றீட்டுத்தண்டனை வழங்கப்படுகின்றது என்பதை அறிதல் போன்ற உப நோக்கங்களை மையமாக கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

ஆய்வுப் பிரச்சினை

இவ்வாய்வானது 'குற்றவாளிகளுக்கான மாற்றீட்டு தண்டனை முறையில் அவர்கள் எவ்வாறான சமூக தாக்கங்களை பெறுகின்றனர்.' என்பதை மையமாக கொண்டமைகிறது. இங்கு பிரதான பிரச்சினையாக தண்டனை எவ்வாறானதாக இருக்கவேண்டும்? இவ் திணைக்களத்தினால் வழங்கப்படும் மாற்றீட்டுத் தண்டனையால் ஏற்படும் சமூக மாற்றம் என்ன? மாற்றீட்டுத் தண்டனையால் குற்றவாளிகள் வாழ்வில் எவ்வாறான தாக்கங்களை பெறுகின்றனர்? தற்கால சூழ்நிலைக்கு மாற்றீட்டுத் தண்டனை முறையானது எந்தளவு ஏற்புடையதாக உள்ளது? என்பன அடையாளப்படுத்தப்படுகின்றது.

ஆய்வுக் கருதுகோள்

இவ்வாய்வின் கருதுகோள் ஆனது ''தண்டனைக்கான மாற்றீட்டு ஏற்பாட்டினால் சிறு குற்றம் இழைத்தோர் சாதகமான தாக்கங்களை அடைகின்றனர்'' என்ற ஆய்வுக் கருதுகோளின் அடிப்படையில் ஆய்வு செய்யப்படுகின்றது.

ஆய்வு முக்கியத்துவம்

சமூக சீர்திருத்ததிணைக்களம் ஆனது சிறு குற்றம் புரிபவர்களை சிறைச்சாலை செல்வதை தவிர்ப்பதும் சமூகத்தில் வைத்தே அவர்களை சீர்செய்வதுமாகும். இச்சீர்திருத்தத்தினால் சிறு குற்றம் இழைத்தவர் பெறும் நன்மை யாது? மாற்றீட்டுத்தண்டனையானது இக்கால சூழ்நிலைக்கு ஏன் தேவையானது? என்ற பூரணத்துவ அறிவை வழங்குவதன் மூலம் முக்கியத்துவத்தை எடுத்தியம்புகிறது.

எனவே, தண்டனைக்கான மாற்றீட்டு ஏற்பாட்டினால் தனிநபரின் வாழ்வில் பல மாற்றங்கள் ஏற்படுவதனையும், பொருளாதார ரீதியாக சமூக ரீதியாக உளவியல் ரீதியாக ஏற்படும் மாற்றங்களையும், அவர்களின் தனி வாழ்விலும் குடும்ப வாழ்விலும் ஏற்படும் சாதக தன்மையினை நேர்த்தியாகவும், திறன்படவும், பூரணமாகவும் இவ்வாய்வு எடுத்துரைக்கிறது.

ஆய்வு முறையியல்

இவ்வாய்வு முதன்நிலைத் தரவும், இரண்டாம்நிலைத் தரவும் கொண்டமைகிறது. அதாவது முதன்நிலைத் தரவுகளான நேர்காணல் மற்றும் அவதானித்தல் மூலம் சிறு குற்றம் புரிந்தோருக்கு சமூக சீர்திருத்ததிணைக்களத்தினால் வழங்கப்பட்ட மாற்றீட்டுத்தண்டனை முறையால் அவர்கள் பெற்ற அனுபவங்களை நேர்காணல் மற்றும் அவதானித்தல் மூலம் தரவு திரட்டல். அடுத்து இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிக்கைகள், ஆய்வு அறிக்கைகள், சமூக சீர்திருத்த உத்தியோகத்தர்களிடம் இருந்து பெற்ப்பட்ட தரவுகள் மூலம் இவ்வாய்வுக்கான ஆவணங்களை திரட்டிக்கொள்ளல்.

ஆய்வு வரையறை

இவ்வாய்வானது பெரும் பரப்பை கொண்டமைந்திருப்பதால் சமூக சீர்திருத்த திணைக்களத்தின் மட்டக்களப்பு நீதிவான்நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பிரதேசங்களை மையப்படுத்திய 3 வருடங்களுக்கு இடைப்பட்ட ஆய்வாகும். இவ் ஆய்வானது 2017 தொடக்கம் 2019 காலப்பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. இக்கால கட்டத்தில் மாற்றீட்டுத்தண்டனைக்கு உட்பட்ட நபர்களை பற்றிய ஓர் ஆய்வாக இது காணப்படுகின்றது.

“தண்டனைக்கான மாற்றீட்டு ஏற்பாட்டினால் சிறு குற்றமிழைத்தோர் பெறும் வாழ்வியல் தாக்கம்” எனும் தலைப்பை கொண்ட இவ்வாய்வு முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளை மையமாக கொண்டு காணப்படுகின்றது. வெறுமனே பெற்றுக்கொள்ளப்பட்ட தூயஅறிவை மட்டும் கொண்டிராது நடைமுறை ரீதியான கண்ணோட்டத்தில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

அத்தோடு எனது இவ்வாய்வினை முன்னெடுத்துச் செல்லும் காலகட்டத்தில் கொரோனா வைரஸ் பிரச்சினையானது ஆய்வினை முன்னெடுத்துச் செல்வதற்கு ஓர் சவாலாக அமைந்திருந்தது. 2019.012.23 அன்று சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட இவ் வைரசினால் இன்றளவும் முழு நாடும் பெரும் சாவாலை எதிர்நோக்கி வருகிறது. இப்பிரச்சினையானது எனது ஆய்விலும் தாக்கத்தை செலுத்தியது. நான் எனது ஆய்வுக்கான தகவல் திரட்டும் பணியில் மிகவும் சிக்கல்களை எதிர்நோக்கினேன். மேலும் ஊரடங்கு காரணமாக திணைக்களங்களுக்கும் சென்று தரவுகளை பெற முடியாத நிலையும் காணப்பட்டது. அத்தோடு பல்கலைகழக மாணவர் என்ற ரீதியில் பல்கலைகழகம் சென்று வருதல் காரணமாக தவறாளர்கள் என்னுடன் சகஜமான முறையில் தரவுகளை தர முன்வரவில்லை. அதனால் எனது ஆய்வுக்கான மாதிரியை குறைக்க வேண்டி ஏற்பட்டது. எனவே என்னால் முயன்றளவு சரியான தரவுகளை பெற்று இவ்வாய்வினை மேற்கொண்டுள்ளேன்.

இலக்கிய மீளாய்வு

இலக்கிய மீளாய்வு என்பது ஆய்வாளனால் தெரிவு செய்யப்பட்ட தலைப்பின் அருஞ்சொற்களை வைத்து அது தொடர்பான கோட்பாடுகள், எண்ணக் கருக்கள் பற்றிய அறிவினைப் பெற்று முடிவினை வியாக்கியானம் செய்யும் பொருட்டு ஆய்வோடு தொடர்புடைய வாசிப்பு நூல்கள், முன்னைய ஆய்வுகள், இணையத்தளங்கள் போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வினை மேற்கொள்ளும் செயற்பாடாகும். அதாவது சுருக்கமாகக் கூறினால் ஆய்வின் எண்ணக்கருக்களோடு தொடர்புடைய கருத்தாக்கங்கள் சார்பான கொள்கை சார் கண்ணோட்டமாகும். எனவே தான் இலக்கிய மீளாய்வின் மூலமாக ஆய்வினை சிறப்பாக நடத்திச்செல்வதற்கான எண்ணக் கருவாக்கச் சட்டகம் ஒன்றினை உருவாக்கவும் , ஆய்விற்குத் தேவையான பல தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும் முடிகின்றது.

அதுமட்டுமன்றி தண்டனை என்பது யாது, சமூக சீர்திருத்த திணைக்களத்தினால் குற்றவாளி வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்கள் தொடர்பில் ஆய்விற்காக பின்வரும் நூல்கள் வழிகாட்டியாக அமைந்தன. மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றிக்கு உட்பட்ட , சமூக சீர்திருத்த திணைக்களத்தினால் குற்றவாளி வாழ்வில் ஏற்படும் தாக்கங்களை ஒழுக்கவியல் ரீதியாக நோக்கும் ஓர் ஆய்வாக இது காணப்படுகின்றது.

இலக்கிய மீளாய்வு என்பது செயன்முறையில் ஒரு ஆய்வுப்பிரக்கினையை முன்னெடுப்பதற்கு துணை கெய்கின்றது. அதாவது ஏனைய ஆய்வுகளில் இருந்து குறித்த ஆய்வு எவ்வாறு தனித்துவம் கொண்டுள்ளது என்பதனை இனங்கண்டு கொள்வதற்குரிய ஏற்பாடாகும். குறித்த ஆய்வொன்றினை தெளிவுபடுத்துவதற்கும், ஆய்வு பற்றிய மேலதிக சிபாரிசுகளை முன்வைப்பதற்கும் மேற்கொள்ளப்படவுள்ள ஆய்வு பற்றிய பரவலான அறிவை பெற்றிருத்தல் அவசியமாகும். இவ்வாய்வுக்காக வாசித்த நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிக்கைகள், ஆய்வு அறிக்கைகள், சமூக சீர்திருத்த உத்தியோகத்தர்களிடம் இருந்து பெற்ப்பட்ட இணையதள தரவுகள் தொடர்பாகவும் இங்கு நோக்கப்படுகின்றது.

அனஸ்.எம்.எஸ்.எம் (2003) என்பவரின் ‘‘மெய்யியல் அறிமுக உரைகள்’’ மெய்யியல் தொடர்பான ஓர் அறிமுகத்தை முன்வைத்துள்ளார். அத்துடன் மெய்யியல் விஞ்ஞானம், பௌதீக வதீதம், பெறுமானம் பற்றியும் பெறுமானத்தில் அளவையியல் பற்றிய விரிவான விளக்கத்தையும் கொடுத்துள்ளார். மேலும் ஒழுக்கவியல் நோக்கில் தண்டனைக்கோட்பாடு என்ற தலைப்பின் கீழ் தண்டனை பற்றிய மெய்யியல் நோக்கு, காண்டின் நோக்கு, தண்டனை வகை என்பனவற்றையும் குறிப்பிட்டுள்ளார்.

றக்மான்.இசட்.ஏ.எச் (2006) என்பவரின் ‘‘பொலிசாரும் பொமக்களும்’’ தண்டனை சட்டக்கோவை பற்றிய முழுவிளக்கம் மக்கள் புரியும் சிறிய மற்றும் பெரிய குற்றங்களும் அதற்கான தண்டனைகள் பற்றியும் குறிப்பிடுகின்றார்.

செல்வகுணபாரன்.செ (2005) என்பவரின் ‘‘ சட்டமும் அதன் பின்னணியும்’’ கட்டமுறைமைகள் பற்றியும் இலங்கையின் நீதிமன்ற வரலாறு மற்றும் இலங்கையின் தற்போதைய நீதிமன்றங்கள் பற்றிய விளக்கத்தையும் தந்துள்ளார்.

ஜோன்.கே.ஜி (2007) என்பவரின் ‘‘சட்டமும் நீங்களும்’’ எனும் நூலில் சிறுகுற்றங்கள் பற்றிய விளக்கத்தை முன்வைத்துள்ளார். அதோடு சிறு குற்றங்களுக்கான தண்டனைகளின் முழு விளக்கத்தையும் அளித்துள்ளர்.

முகைதீன்.எம்.பி (2017) என்பவரின் ‘‘பிணையா விளக்க மறியலா’’ எனும் நூலில் ஓர் குற்றவாளியின் மனஉளைச்சல் பற்றி விளக்கி உள்ளார். அவர் சமூகம் மற்றும் குடும்ப உறுப்பினர் மத்தியில் தாழ்த்தப்படல் அதோடு ஒதுக்கப்படல். இது போன்ற காரணங்களால் அவர்கள் எதிர்நோக்கும் உளவியல் பிரக்கினைகள் பற்றி கூறுகிறது.

2017ம் ஆண்டு வெளியிடப்பட்ட ‘‘செயலாற்று அறிக்கை’’ எனும் சஞ்சிகையில் சமூக சீர்திருத்த திணைக்களத்தின் பணிகள் அடையும் இறுதி அடைவுகள், எதிர்நோக்குகின்ற சவால்கள் என்பனவற்றை முன்வைக்கின்றது.

பெறுபேறும் கலந்துரையாடலும்

இவ் ஆய்வில் நிகழ்தகவுசாராத மாதிரியினுள் உள்ளடங்கும் நோக்கமாதிரி பயன்படுத்தப்படுகிறது. ஆய்வின் இயல்பினை பொருத்து குறித்த ஆய்வுக்கு மிகவும் பொருத்தமான தகவல்களை வழங்கக் கூடியவர்கள் என்று கருதப்படுகின்றவர்களை ஆய்வாளர் தான் முன்கூட்டியே தீர்மானித்து அவர்களிடமிருந்து தகவல்களை பெற்றுக்கொள்ளும் முறை நோக்க மாதிரி முறை எனப்படும்.

சமூக சீர்திருத்த திணைக்களத்தால் வழங்கப்படும் தண்டனையினால் தவறாளர் பெறும் வாழ்வியல் தாக்கம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஆய்வுக்கு தேவையான தரவுகள் இரண்டு வழிகளில் இருந்து பெறப்படுகின்றது.

I. முதலாம் தர தரவுகள்
   - வினாக்கொத்து
   - நேர்காணல்
   - மைய குழு கலந்துரையாடல்

II. இரண்டாம் தர தரவுகள்
   - ஆவணச் சான்றுகள்

எனது ஆய்வில் ஆய்வுக் கருவிகளின் நம்பகத்தன்மை அதிகரிக்கும் வகையில் வினாக்கொத்து, நேர்காணலில் வினாக்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், வினாக்கள் தரவுகள் வழங்குபவர்களின் மனதை பாதிக்காதவாறு தயாரிக்கப்பட்டிருக்கின்றமையும் குறிப்படத்தக்கது. வினாக்களின் வாக்கிய அமைப்பு, வினாவின் நீளம் என்பவற்றில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வினாவிற்கு விடை அளிப்பவரின் ஊக்கிகள், கவனச்சிதைவுகள்,கவலை, பதட்டம் போன்ற உடல் உள நிலைப்பாடுகளில் கவனம் செலுத்துதல் போன்ற செயற்பாடுகளும் இங்கு மேற்கொள்ளப்படுகின்றது.

தரவு வடிவங்களை தெரிவு செய்து தரவுகளைச் சேகரித்ததன் பின்னர் அத்தரவுகளை பகுப்பாய்வு செய்யப்பட்டு குறித்து காட்டப்பட்டுள்ளது. வினாக்கொத்து ஊடாக பெறப்பட்ட

தரவுகள் தகவலாக மாற்றப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணை ஆக்கம், முப்பரிமாண வரிப்படம், சலாகை வரைபுகள் போன்றவற்றின் வாயிலாக விளக்கப்படுகின்றது. பகுப்பாய்விற்காக Microsoft Excel முறை பயன்படுத்தப்படுகின்றது. அதுபோன்று நேர்காணல் மூலமாக பெறப்பட்ட தரவுகள் எண் ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு விளக்கப்படுகின்றமையினால் இது கலப்புமுறையான பகுப்பாய்வாக உள்ளது.

எனது ஆய்வானது சமூக சீர்திருத்த திணைக்களத்தில் மட்டக்களப்பு மற்றும் ஏறாவூர் பிரதேசங்களில் 2017, 2018, 2019 வரை சிறு குற்றம் புரிந்த தவறாளர்களை மையப்படுத்தியதாக உள்ளது. அந்தவகையில் மொத்தமாக 650 நபர்கள் தவறாளராக அடையாளம் காணப்படுகின்றனர். எனவே 100: 10 என்ற விகிதத்தில் 65 தவறாளரை எனது ஆய்வுக்காக தெரிவு செய்து அவர்களிடம் இருந்து வினாக்கொத்து மற்றும் நேர்காணல் மூலம் தகவல்கள் திரட்டினேன். அந்தவகையில் 50 வினாகொத்துகளில் 25மட்டக்களப்பிலும், 25ஏறாவூரிலும் நேர்காணலில் 9மட்டக்களப்பிலும், 6ஏறாவூரிலும் திரட்டப்பட்டது.



பால்நிலை

மட்டக்களப்பு தவறாளரின் பால்நிலையை சதவீதத்தில் பார்க்கும் போது குற்றமிழைத்த ஆண்கள் 72.7 ஆகவும் குற்றமிழைத்த பெண்கள் 27.7 உள்ளனர் மேலும் ஏறாவூர் தவறாளரின் பால்நிலையை சதவீதத்தில் பார்க்கும் போது குற்றமிழைத்த ஆண்கள் 62.5 ஆகவும் குற்றமிழைத்த பெண்கள் 37.5 உள்ளனர். அங்கு ஆண்களே அதிகம் சமூக சீர்திருத்த திணைக்களத்தால் தண்டனை பெறுபவராக உள்ளனர்.

விபரம்	மட்டக்களப்பு					ஏறாவூர்				
	ஆண்டு			மொத்தம்	சதவீதம்	ஆண்டு			மொத்தம்	சதவீதம்
	2017	2018	2019			2017	2018	2019		
குற்றமிழைத்த ஆண்	06	10	08	24	72.7	08	08	04	20	62.5

குற்றமிழைத்த பெண்	04	02	03	09	27.2	02	04	06	12	37.5

குடியியல் நிலை

மட்டக்களப்பு தவறாளரின் குடியியல் நிலையினை சதவீதத்தில் பார்க்கும் போது விவாகமானவர் 75.7, விவாகமாகாதவர் 24.2, கணவன்/மனைவி இழந்தவர் 0 ஆகவும் உள்ளது. மேலும் ஏறாவூர் தவறாளரின் குடியியல் நிலையினை சதவீதத்தில் பார்க்கும் போது விவாகமானவர் 81.2, விவாகமாகாதவர் 15.6, கணவன்/மனைவி இழந்தவர் 3.1 ஆகவும் உள்ளது.

விபரம்	மட்டக்களப்பு					ஏறாவூர்				
	ஆண்டு			மொத்தம்	சதவீதம்	ஆண்டு			மொத்தம்	சதவீதம்
	2017	2018	2019			2017	2018	2019		
விவாகமானவர்	07	09	09	25	75.7	09	09	08	26	81.2
விவாகமாகாதவர்	03	03	02	08	24.2	01	02	02	05	15.6
கணவன்/மனைவி இழந்தவர்	-	-	-	0	0		01		01	3.1

மதம்

மட்டக்களப்பு தவறாளர்களை மத அடிப்படையில் பார்க்கும் போது சதவீதத்தில. இந்துக்கள் 57.5, இஸ்லாம் 33.3, கிறிஸ்தவம் 9.0 ஆகவும் உள்ளனர். ஏறாவூர் தவறாளர்களை மத அடிப்படையில் பார்க்கும் போது சதவீதத்தில. இந்துக்கள் 53.7, இஸ்லாம் 31.2, கிறிஸ்தவம் 15.6 ஆகவும் உள்ளனர். இதனை பார்க்கும் போது இவ்விரு பிரதேசங்களிலும் மூன்று மதத்தினரும் தவறுகளை புரிந்து சீர்திருத்த திணைக்களத்தால் தண்டனைக்கு உட்படுபவராக உள்ளனர்.

விபரம்	மட்டக்களப்பு					ஏறாவூர்				
	ஆண்டு			மொத்தம்	சதவீதம்	ஆண்டு			மொத்தம்	சதவீதம்
	2017	2018	2019			2017	2018	2019		
இந்து	06	06	07	19	57.5	03	08	06	17	53.1
இஸ்லாம்	03	04	04	11	33.3	05	03	02	10	31.2
கிறிஸ்தவம்	01	02	-	03	9.0	02	02	01	05	15.6

சிறைச்சாலை தண்டனை பற்றிய தவறாளர்களின் கருத்து



சிறைச்சாலை செல்வதினால் ஏற்படும் பாதிப்புக்கள்



தவறாளர் குற்றம் புரிந்த தடவைகள்

மட்டக்களப்பு தவறாளர்களை தவறாளர் குற்றம் புரிந்த தடவைகள் அடிப்படையில் சதவீதத்தில் பார்க்கும் போது சமூக சீர்திருத்த திணைக்களத்தின் ஊடாக முதல் தடவை தண்டனை பெறுபவர் 84.8 ஆகவும் சமூக சீர்திருத்த திணைக்களத்தின் ஊடாக ஏற்கனவே தண்டனை பெற்றவர் 15.1 ஆகவும் உள்ளனர். ஏறாவூர் தவறாளர்களை தவறாளர் குற்றம் புரிந்த தடவைகள் அடிப்படையில் சதவீதத்தில் பார்க்கும் போது சமூக சீர்திருத்த திணைக்களத்தின் ஊடாக முதல் தடவை தண்டனை பெறுபவர் 84.3 ஆகவும் சமூக சீர்திருத்த திணைக்களத்தின் ஊடாக ஏற்கனவே தண்டனை பெற்றவர் 15.6 ஆகவும் உள்ளனர். இங்கு பார்க்கும் போது அனேகமானவர்கள் முதல் தடவை குற்றம் புரிந்தவர்களாகவே உள்ளனர். இவர்களில் மறுபடியும் குற்றம் புரிந்து தண்டனை அனுபவிக்கும் தவறாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளனர்.

விபரம்	மட்டக்களப்பு					ஏறாவூர்				
	ஆண்டு			மொத்தம்	சதவீதம்	ஆண்டு			மொத்தம்	சதவீதம்
	2017	2018	2019			2017	2018	2019		
சமூக சீர்திருத்த திணைக்களத்தி	08	11	09	28	84.8	08	10	09	27	84.3

ன் ஊடாக முதல் தடவை தண்டனை பெறுபவர்										
சமூக சீர்திருத்த திணைக்களத்தி ன் ஊடாக ஏற்கனஆவ தண்டனை பெற்றவர்	02	02	01	05	15.1	02	02	01	05	15.6

தண்டனை பற்றிய விபரம்

மட்டக்களப்பு தவறாளர்களில் சமூக சீர்திருத்த திணைக்களம் மற்றும் சிறைச்சாலை தண்டனை பெற விரும்புபவர்களை ஒப்பீடு பற்றிய கருத்தக்களை சதவீதத்தில் பார்க்கும்போது சிறைச்சாலை ஊடாக தண்டனை பெற விரும்புபவர்கள் 9.0, **ச**மூக சீர்திருத்த திணைக்களத்தின் ஊடாக தண்டனை பெற விரும்புபவர்கள் 91.0 ஆகவும், ஏறாவூர் தவறாளர்களில் சமூக சீர்திருத்த திணைக்களம் மற்றும் சிறைச்சாலை தண்டனை பெற விரும்புபவர்களை ஒப்பீடு பற்றிய கருத்தக்களை சதவீதத்தில் பார்க்கும்போது சிறைச்சாலை ஊடாக தண்டனை பெற விரும்புபவர்கள் 9.0, **ச**மூக சீர்திருத்த திணைக்களத்தின் ஊடாக தண்டனை பெற விரும்புபவர்கள் 91.0 ஆகவும் உள்ளனர்.

தண்டனை பற்றிய விபரம்	மட்டக்களப்பு					ஏறாவூர்				
	ஆண்டு			மொத் தம்	சதவீ தம்	ஆண்டு			மொத் தம்	சதவீ தம்
	2017	2018	2019			2017	2018	2019		
சமூக சீர்திருத்த திணைக்களத்தி ன் ஊடாக தண்டனை பெற விரும்புபவர்கள்	10	11	09	30	91.0	10	11	09	30	93.75
சமூக சீர்திருத்த திணைக்களத்தி ன் ஊடாக தண்டனை பெற விரும்பாதவர்கள்	-	01	02	03	9.0	-	01	01	02	6.25

தவறாளர் எதிர்நோக்கும் சவால்கள்

மட்டக்களப்பு தவறாளர்களில் சமூக சீர்திருத்த திணைக்களம் ஊடாக தண்டனை பெறுவதினால் தமது வாழ்வில் ஏற்படும் தாக்கங்களை சதவீதத்தில் பார்ப்போமானால் சவால்கள் இல்லை 58.8, சமூகம் மத்தியில் அவமானம் 20.5, பொருளாதாரத்தில் பாதிப்பு 20.5, உளவியல்

பாதிப்பு 0 ஆகவும், ஏறாவூர் தவறாளர்களில் சமூக சீர்திருத்த திணைக்களம் ஊடாக தண்டனை பெறுவதினால் தமது வாழ்வில் ஏற்படும் தாக்கங்களை சதவீதத்தில் பார்ப்போமானால் சவால்கள் இல்லை 71.8, சமூகம் மத்தியில் அவமானம் 15.6, பொருளாதாரத்தில் பாதிப்பு 0, உளவியல் பாதிப்பு 12.5 ஆகவும், காணப்படுகின்றது. சிறைச்சாலை தண்டனையுடன் ஒப்பிடும் போது தவறாளர்கள் சீர்திருத்த திணைக்களம் ஊடாக தண்டனை அனுபவிக்கும் போது குறைந்த அளவிலான சவால்களையே எதிர்கொள்கின்றனர்.

தவறாளர் எதிர்நோக்கும் சவால்கள்	மட்டக்களப்பு					ஏறாவூர்				
	ஆண்டு			மொத்தம்	சதவீதம்	ஆண்டு			மொத்தம்	சதவீதம்
	2017	2018	2019			2017	2018	2019		
சவால்கள் இல்லை	08	06	06	20	58.8	08	07	08	23	71.8
சமூகம் மத்தியில் அவமானம்	-	03	04	07	20.5	02	01	02	05	15.6
பொருளாதாரத்தில் பாதிப்பு	02	03	02	07	20.5	-	-	-	-	-
உளவியல் பாதிப்பு	-	-	-	-	-	-	04	-	04	12.5

தவறாளர் எதிர்நோக்கும் சவால்கள்

மட்டக்களப்பில் சமூக சீர்திருத்த திணைக்களத்தினால் ஏற்படும் தவறாளர்ளரின் வாழ்வியல் குற்றம் அனுபவித்ததற்கு பின்னரான மாற்றம் பற்றி நோக்குவோமானால் வாழ்வில் மாற்றம் உண்டு 100, வாழ்வில் மாற்றம் இல்லை 0, ஏறாவூரில் சமூக சீர்திருத்த திணைக்களத்தினால் ஏற்படும் தவறாளர்ளரின் வாழ்வியல் மாற்றம் பற்றி நோக்குவோமானால் வாழ்வில் மாற்றம் உண்டு 100, வாழ்வில் மாற்றம் இல்லை 0 ஆகவும் உள்ளது. எனவே இவ் சமூக சீர்திருத்த திணைக்களத்தினால் தவறாளரின் வாழ்வியல் மாற்றமானது நிச்சயமாக ஏற்பட்டுவருகிறது.

விபரம்	மட்டக்களப்பு					ஏறாவூர்				
	ஆண்டு			மொத்தம்	சதவீதம்	ஆண்டு			மொத்தம்	சதவீதம்
	2017	2018	2019			2017	2018	2019		
வாழ்வில் மாற்றம் உண்டு	10	12	11	33	100	10	13	09	32	100
வாழ்வில் மாற்றம் இல்லை	-	-	-	-	0	-	-	-	0	0

சமூக சீர்திருத்த திணைக்களத்தினால் தவறாளர்ளரின் எதிர்காலத்திற்காக செய்யப்படும் நடவடிக்கைகள்

மட்டக்களப்பில் சமூக சீர்திருத்த திணைக்களத்தினால் தவறாளர்ளரின் எதிர்காலத்திற்காக செய்யப்படும் நடவடிக்கைகள் பற்றிய செயற்பாடுகளைகளை சதவீதத்தில் பார்க்கும்போது சிறு கைத்தொழில் பழக்கல் 20.5, வட்டியில்லாக் கடன் வசதி 23.5, ஆலோசனை வழங்கள் 29.5,பிள்ளைகளின் கல்விக்கு உதவுதல் 11.7, மது போதைக்கான சிகிச்சை வழங்கள் 8.8, ஆகவும் ஏறாவூரில் சமூக சீர்திருத்த திணைக்களத்தினால் தவறாளர்ளரின் எதிர்காலத்திற்காக செய்யப்படும் நடவடிக்கைகள் பற்றிய செயற்பாடுகளை சதவீதத்தில் பார்க்கும்போது சிறு கைத்தொழில் பழக்கல் 12.8, வட்டியில்லா கடன் வசதி 20.5, ஆலோசனை வழங்கள் 33.3. பிள்ளைகளின் கல்விக்கு உதவுதல் 20.5, மது போதைக்கான சிகிச்சை வழங்கள் 12.8 ஆகவும் உள்ளது. இவ் நடவடிக்கைகள் மூலம் மீண்டும் தவறாளன் அத் தவறை செய்ய தவிர்க்கும் பொருட்டு செய்யப்படுகின்றது.

சமூக சீர்திருத்த திணைக்களத்தினால் தவறாளர்ளரின் எதிர்காலத்திற்காக செய்யப்படும் நடவடிக்கைகள்	**மட்டக்களப்பு**					**ஏறாவூர்**				
	ஆண்டு			**மொத்தம்**	**சதவீதம்**	**ஆண்டு**			**மொத்தம்**	**சதவீதம்**
	2017	2018	2019			2017	2018	2019		
சிறு கைத்தொழில் பழக்கல்	03	02	02	**07**	**20.5**	01	02	02	**05**	**12.8**
வட்டியில்லா கடன் வசதி	03	03	02	**08**	**23.5**	02	04	02	**08**	**20.5**
ஆலோசனை வழங்கள்	02	06	02	**10**	**29.5**	06	02	03	**13**	**33.3**
பிள்ளைகளின் கல்விக்கு உதவுதல்	01	02	03	**06**	**11.7**	02	02	04	**08**	**20.5**
மது போதைக்கான சிகிச்சை வழங்கள்	0	01	02	**03**	**8.8**	01	02	02	**05**	**12.8**

முடிவுரை

மேற்கூறியவாறு பார்தோமேயானால் சமூக சீர்திருத்த திணைக்களம் மூலம் சிறு குற்றவாளிகள் தாங்கள் செய்த தவறுக்காக தண்டனை பெறுவதன் ஊடாக அவர்களின் சுயம் மற்றும் குடும்ப பொருளாதாரம் மற்றும் உளவியல் ரீதியாக அவர்கள் பின்தள்ளப்படாமல் இயன்ற அளவு அவர்களை நல்வழிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இதனால் சிறு குற்றம் புரிந்த குற்றவாளிகள் பெரும் குற்றவாளி போல் சமூகத்தினால் முத்திரை குத்தப்படுவதும், சிறு குற்றம் புரிந்து

சிறைச்சாலை செல்வதினால் அங்குள்ள பெரும் குற்றவாளிகளுடன் இணைந்து பின்னரான காலங்களில் பெரும் குற்றவாளியாக மாறும் நிலையும் தடுக்கப்படுகின்றது.

அதுமட்டும் இன்றி சிறைத்தண்டனையானது ஒரு குற்றவாளி செய்த குற்றத்திற்கான தண்டனையை மட்டும் கொடுப்பதாக அமைந்துள்ளது ஆனால் சமூக சீர்திருத்த திணைக்களம் ஓர் குற்றவாளி குற்றம் இழைத்தால் அக் குற்றத்திற்கான மூல காரணம் வரை சென்று அதனை நிவர்த்தி செய்வதாகவும் மீண்டும் அக்குற்றவாளிக்கு அவ்வாறான ஒரு குற்றம் இழைக்காத வகையில் தனது செயற்பாட்டினை முன்னெடுக்கிறது. இதன் மூலமாக சமூகத்தில் ஏற்படும் குற்றங்களை குறைக்கவும் இது வழி செய்கிறது.

இருந்த போதிலும் சிறு சிறு குற்றங்களே பெரும் குற்றங்களுக்கு அடித்தளமாக அமைகின்றது என்ற அடிப்படையில் இச் சிறு குற்றங்களுக்கு கண்டிப்பான தண்டனை கொடுக்காவிட்டால் தவறாளன் மீண்டும் மீண்டும் குற்றம் புரியவும் அதை விட பெரும் குற்றம் புரியவும் வாய்ப்புள்ளது என்ற கருத்தும் உண்டு.

என்றாலும் கூட சமூக சீர்திருத்த திணைக்களத்தினால் சிறு தவறாளனுக்கு வழங்கும் தண்டனையானது தவறாளனை மட்டும் மையப்படுத்தாமல் அவரின் குடும்பத்தையும் மையப்படுத்தி இருப்பது பாராட்டத்தக்கது.

பரிந்துரைகள்

தண்டனைகள் மற்றும் திருத்தக் கொள்கைகளில் நேர்மை விகிதாசார மற்றும் வாய்ப்புகள் என்பவற்றை சரியான முறையில் அமைப்பது என்பது மிக முக்கியமானது இங்கு நேர்மை என்பது எவ்விதமான அதிகாரம், ஊழல் என்பவற்றுக்கு இடமளிக்காது நீதியான முறையில் நன்கு வழக்கை விசாரித்து குற்றம் உறுதியாகும் போது மட்டுமே தண்டனையை வழங்குவதைக் குறிக்கின்றது. விகிதாசாரம் எனும் போது தண்டனை குற்றத்தின் அளவை மீறாததாகவும் தண்டனையின் பிரதான நோக்கை நிறைவு செய்வதையும் உறுதிப்படுத்துவதைக் குறிக்கின்றது. வாய்ப்புக்கள் எனும் போது சீர்திருத்தக் கொள்கையில் ஏற்படுத்தப்படும் வாய்ப்புக்களை இது குறித்து நிற்கின்றது இவ் வாய்ப்புக்கள் அவர்களை மேன்மைப்படுத்துவதாகவும் குற்றத்தில் இருந்து திருத்துவதாகவும் அமைய வேண்டும் இவை அனைத்துமே கருத்தளவில் மட்டும் இன்றி நடைமுறைகளாலும் அமைவது இங்கு முக்கியமானதாகின்றது.

- தன் தண்டனையை வேறு வழியில் அனுபவிக்க வழி செய்கிறது.
- தவறாளர்ளரின் பொருளாதாரத்தில் எதுவித முரண்பாடும் இன்றி கொண்டு செல்ல வழி செய்கிறது.
- தவறாளருக்கும் அவரது குடும்பத்திற்கும் ஏற்படும் அவ பெயரைத் தடுக்கிறது.
- தவறாளருக்கு தண்டனை அனுபவித்தன் பின்னரான காலப்பகுதியில் அவரின் பொருளாதாரத்தை முன்னேற்றத்திற்கு வழி செய்கிறது.
- தவறாளரின் பிரச்சினையை அறிந்து அதனை சீர்செய்கிறது.
- தவறாளரைமீண்டும் அது போன்ற தவறை செய்யாது தடுக்கிறது
- தவறாளரின் குடும்ப சுயம் பாதுகாக்கப்படுகிறது.

- தவறாளரின் பிள்ளைகளின் கல்விக்கு உதவி செய்கிறது.

இருந்த போதும் சிறு தவறுகளே பெரிய தவறுகளுக்கு வித்திடுகின்றன அதனால்,

- பொது மக்களுக்கு வெளிப்படையாக சட்டங்கள் பற்றியும் அதற்காக வழங்கப்படும் தண்டனைகள் பற்றியும் மிக தெளிவாக அறியத்தருவது அவர்களை எச்சரிப்பதாகவும், சட்ட ஒழுங்கு பற்றிய விடயங்களை அவர்கள் அறிந்து கொள்ளவும் ஏதுவாக அமையும். கிராமங்களில் பல சிறியளவிலான குற்றங்கள் இடம்பெற இதுவே துணைபுரிகின்றது எனவே பொதுமக்களிடையே இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்
- மீண்டும் மீண்டும் இவ்வாறாக குற்றம் புரிந்த குற்றவாளிகளுக்கும், தொடர்ச்சியான குற்றவாளிகளுக்கும் தண்டனை வழங்குவதுடன் தகுந்த மேற்பார்வையின் கீழ் அவர்களை திருத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. ஏனெனில் குற்றவாளி தண்டிக்கப்படுவது அவசியமானதே எனவே அதனை வழங்கவே வேண்டும் ஆனால் அவன் திருந்துவதற்கான வாய்ப்புகளை சரியான முறையில் அமைத்துக் கொடுப்பதே குற்றவாளிகளை தடுக்கவும், திருத்தவும் உதவும்
- தண்டனைகளை கையாளும் போது தண்டனையின் பயன்கள், உணர்வுரீதியான விடயங்கள் அரசின் செலவு என்பவற்றை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. உணர்வு ரீதியான திருத்தங்களை ஏற்படுத்துவதே சிறந்த பயனை விளைவிக்கும் எனவே பொது நிறுவனங்களை இதற்காக கையாள்வது அரசிற்கு மேலும் உதவியளிப்பதாக அமையும். அதாவது உளநல நிறுவனங்கள், மனித உரிமை அமைப்புக்கள், சீர்திருத்த கல்வியை மேற்கொள்வதற்கான பொது நிறுவனங்களை கையாள்வது உணர்வு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்த வழியமைக்கின்றது.
- தண்டனைகள் தற்போதைய சூழல் தேவையை பிரதிபலிப்பதாக அமையவேண்டும் அதாவது இன்றைய மக்களின் விருப்புக்கள் மனநிலைகள் என்பவற்றை கருத்தில் கொண்டு அவர்களுக்கு ஏற்றவகையில் தண்டனைகளை அமைக்க வேண்டும் இதனாலேயே குற்றங்கள் காலத்திற்கு காலம் சட்டத்தினால் புதிதாக இணைக்கப்படுவதுடன் சில குற்றங்கள் களையப்படுகின்றது இது போலவே தண்டனைகளையும் மாற்றியமைக்க வேண்டும் பெரும்பாலும் இன்று புரிந்து கொள்ளக்கூடிய மக்களே நிறைந்துள்ளனர் எனவே அவர்களுக்கு சரியான முறையில் புரிந்துணர்வை ஏற்படுத்தல் குற்றங்களை குறைக்க வழியமைக்கும்
- எவ்வாறு சமூக சீர்திருத்த திணைக்களமானது தவறாளனுக்கு தண்டனையை அனுபவிப்பதற்து இலகு முறைகளை கொடுத்தாலும் கூட இத் தண்டனையின் மீது ஒரு வெறுப்புணர்வையும், விமர்சனத் தன்மையையும் அதிகரித்து மீண்டும் அக் குற்றங்களை செய்யாது அருக்க வழிசெய்ய வேண்டும்.
- சமயங்கள் நகரத்தில் உள்ள தண்டனைகளை எடுத்துரைத்து பாவங்களில் இருந்து விலக வழியமைத்தது போல் சட்டமும் சட்டத்தையும், அதற்கான தண்டனைகளையும் எடுத்துரைப்பது மிக பொருத்தமானதாக அமையும் உதாரணம் போலீஸ் அதிகாரிகள் பாடசாலை மாணவர்களுக்கு வீதி விபத்தினால் ஏற்படும் பாதிப்புக்களைப் பற்றிய வழிப்புணர்வு நிகழ்வொன்றை வடிவமைத்து வீதி ஒழுங்கை பேணுவதற்கான

அவசியத்தை வழியுறுத்தினர். (2005, Vincent girls school Batticloa) இது வீதி ஒழுங்கு பற்றிய விழிப்புணர்வை மாணவர்கள் அறிந்துகொள்ள ஏதுவாக அமைந்ததுடன் அவற்றை பேணவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர்.

உசாத்துணை

1. அனஸ்.எம்.எஸ்.எம். (2003). மெய்யியல் அறிமுக உரை. பேராதனை: பண்பாட்டு வட்டம்
2. இராசேந்திரன், ரா. (2000). சமூகப்பிரச்சனைகள். தமிழ்நாடு: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
3. கனகசபை சிவானந்தமூர்த்தி. (2012). ஒழுக்க நியமங்களும் அதன் நடைமுறைகளும். கொழும்பு 12: லங்கா புத்தகசாலை
4. குமாரசாமி சோமசுந்தரம், (2009). மனித மேம்பாட்டுச் சிந்தனைகள். இலங்கை: ரஜி வெளியீடு
5. கோணேஸ்வரன்.சி. (2000). சமூகவியல் சிந்தனைகள். கொழும்பு: குமரன்பிரஸ் 201
6. சண்முகப்பிரமணியம், மா. (1962). சட்டவியல். இந்தியா: சைவசிந்தாந்த நூற்பதிப்புக்கழத்தார்
7. சாறுக்க சமரசேகர. (2005). இலங்கையின் சட்டம் மற்றும் மனிதஉரிமைகள். இலங்கைதேசிய நூலகம்
8. செல்வகுணபாலன், செ. (2004) சட்டமும் அதன் பின்னனியும். கொழும்பு: தழிழ் சட்டங்கல்வி வட்டம் கொழும்பு
9. ஞானகுமாரன், நா. (2012). மெய்யியல். கொழும்பு II: சேம்மடு புத்தகசாலை
10. பூரணாணந்தா, கு. (1971). சட்டமும் மழிழும். கொழும்பு: இரஞ்சண அச்சகம்
11. வேங்கடசாம். (2001). இந்திய தண்டனைச்சட்டம். சென்னை: தாமரைப்பப்ளிகேஷன்ஸ்
12. வேலுப்பிள்ளை குணரத்தினம்., குணநாயகம் விக்கினேஸ்வரன். (2000). மனித உரிமைகள் கோட்பாடுகளும் வியாபகமும். இலங்கை: கிழக்கு பல்கலைக்கழகம்
13. ஜயவர்த்தன, ஈ. ற. (1992). இலங்கையில் மனித உரிமைகளும் சமயங்களும் - சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் மீதான கருத்துரை. கொழும்பு: இலங்கை
14. ஜகத் வியணாராச்சி. (2010). மனிதஉரிமைகள் அடிப்படை உரிமைகள் மற்றும் உரிமைகள். இலங்கை தேசிய சமாதானப் பேரவை.
15. ஜமாஹீர். பீ. எம். (2012). ஒழுக்கவியல் ஓர் அறிமுகம். கண்டி: ஈஸ்வரன் புத்தகாலயம்
16. ஜைனுஸ் அபிதீன். (1997). இஸ்லாத்திற்கெதிரான குற்றச் சட்டகளும் பதில்களும். சென்னை: நபீலா பதிப்பகம்
17. ஹன்ஸ், ஏ.டபிள்யு எம். (1989). குற்றவியல் சட்டம். கண்டி.தமிழ் மன்றம் கல்ஹின
18. Paul adwards. (2001). encyclopedia of philosophy volumes 7 and 8. New York; Macmillan publisbingco jnc and the free press
19. William littie. (1948). An introduction to ethics. London: methucn and co.ltd **சஞ்சிகைகள்**
20. தவறாளர்ஜன் பெனடிக்ற், அ. (1960). 'சமூக மஞ்சரி (சமூகவிஞ்ஞான சஞ்சிகை)', இலங்கை பல்கலைக்கழகம் பேராதனை
21. தனபாலசிங்கம் ஜனகன். (2003). 'நக்கீரம்'. சட்டமாணவர் இந்து மாகானசபை இலங்கை சட்டக்கல்லூரி கொழும்பு 12
22. 'நீதிமுரசு'. (1970). தழிழ்மன்றம் இலங்கை சட்டக்கல்லரி கொழும்பு 12
23. பாலுசாமி,நா. (1988). 'வாழ்வியற்களஞ்சியம் தொகுதி ஒன்பது'. தமிழ் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.
24. 'வீரகேரசி'.(02.11.2014), இலங்கை

இணையத்தள முகவரி

25. beatsviews wordpress.com(2020.03.05- 11.00a.m)
26. en.wikipedia.org/.list to most recent ezecute (2020.03.12-4.00p.m)
27. internet encyclopedia of philosophy(2020.03.20-5.00p.m)
28. Lewis Lyons, 2003, the history of punishment(2020.04.03-11.30a.m)
29. List verse com /./ top – most – deserved(2020.04.15- 12.30p.m)
30. muse jhu.edu/journals(2020.05.12- 10.45a.m)
31. plato.stanford.e(2020.05.20 – 9.00p.m)
32. publisning.cdllb.org(2020.06.15- 10.00p.m)
33. publishing.cdlib.org/(2020.08.07- 5.30 a.m)
34. www.traditionaction.org/religious (2020.10.20- 11.00a.m)
35. www.russellsage.org (2020.10.21- 12p.m)
36. www.ipe.utm.edu (2020.10.22-10.00a.m)
37. www.redwoods.edu/instruct (2020.11.02-9.00a.m)
38. www.wikipedia.org (2020.11.10- 8.00a.m)
39. http://www.tamilmirror.lk-(12/11/2020,-11.30PM)
40. www.bbc.com (2019.11.21-8.00pm)
41. https://en.m.wikiversity.org (2019.12.02-7.00pm)
42. https://srilankamuslims.lk/சமூகப்-பிரச்சனையும்-உள-ஆ/ (2019.12.02- 9.00p.m

குடும்ப பிரச்சினைகளும் தீர்வுகளும் - ஒரு குடும்ப உளவளத்துணை நோக்கு களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகப்பிரிவை மையப்படுத்திய ஆய்வு

சுரேஸ்குமார் யுகானா[1], சோ.ஜெகநாதன்[2]
[1,2]தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்,
[1]anjalasuthan@gmail.com, [2]jeganathans@esn.ac.lk

ஆய்வுச் சுருக்கம்

"குடும்பம் எனும் எண்ணக்கரு – மெய்யியல்சார் உளவளத்துணை நோக்கு" ஆய்விற்காக மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட சூரையபுரம் ஆய்வுப்பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டு ஆய்வு இடம்பெற்றுள்ளது. சுனாமி பேரலைக்குப் பின்னர் குடியேற்றப்பட்ட கிராமமாக இது அடையாளங் காணப்படுகிறது. இங்கு குடும்பத்தினுடைய பிரச்சினைகள் அறியப்படுவதோடு அதனால் ஏற்படும் பாதிப்புக்களை தெளிவுபடுத்திக் கொண்டு அதற்கான உளவளத்துணை அறிவுகளை மேம்படுத்துதலை மையமாகக் கொண்டு இவ் ஆய்வானது இடம்பெறுகின்றது. குடும்பங்களுக்கிடையிலான பிரச்சினைகள் ஏற்படுவதும் அது நிச்சயமாக தீர்க்கப்பட வேண்டியதுமாகும் என்பதனால் குடும்ப உளவளத்துணையினது இன்றியமையாமையானது தெளிவுபடுத்தப்பட்டு எவ்வாறு உளவளத்துணை மேற்கொள்வது குறித்த பிரச்சினைகளை மாற்றியமைக்க வாய்ப்புக்களை நல்கும் எனவும் விளக்கப்படுகிறது. இவ்வாய்வின் மூலமாக சமூகத்தினுடைய முக்கியமான அங்கமாக திகழும் குடும்பத்தினுடைய பிரச்சினைகளை குறைப்பதும் மற்றும் அதற்கான வழிகாட்டியாக குடும்ப உளவளத்துணையினை பங்கு கொள்ளச் செய்தலும் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது. எதிர்காலத்தின் வாழ்வினுடைய நிலையாமையையும் அறியப்படாத விடயங்களினை விழிப்புணர்வின் மூலம் அறியச்செய்தலுமே இவ்வாய்வினது எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது.

திறவுச் சொற்கள்: உளவளத்துணை குடும்பம் உளநோய் சமூகம் விழிப்புணர்வு

ஆய்வு அறிமுகம்

குடும்பம் என்பது இரத்த உறவாலோ அல்லது திருமணம் மற்றும் தத்தெடுத்தல் போன்ற பல்வேறு சட்டபூர்வமான முறைகளாலோ தொடர்புபட்ட ஓர் உறைவிடக் குழுவாகும். பல சமுதாயங்களில் மேற்குறிப்பிட்டவை தவிர்ந்த வேறு கருத்தாங்கங்களாலும் புரிந்து கொள்ளப்பட்டிருப்பதால் "குடும்பம்" என்பது பல வேளைகளில் பெரிய மனிதக்குழுவினரை உள்ளடக்கும் ஓர் உருவகமாகவும் உள்ளடக்கப்படுவதனையும் காணலாம். எடுத்துக்காட்டாக சமூகம் சுற்றம் நாடு மனிதகுலம் போன்றவற்றையும் குடும்பம் என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர். அனைத்துலக மனித உரிமைகள் சாசனத்தின் 16(3) ஆவது விதிப்படி குடும்பம் என்பது சமூகத்தின் இயல்பானதும் அடிப்படையானதுமான குழு அலகாகும் என்பதுடன் அது சமூகத்தாலும் தேசத்தாலும் பாதுகாக்கப்படுவதற்கு தகுதி பெற்றுள்ளது. குடும்ப அலகில் மையப்படுத்தப்பட்ட விரிவாக்கப்பட்ட ஒற்றைப் பெற்றாருடைய என பல வகையான குடும்ப அமைப்புகளை காணலாம் (பத்மா சோமகாந்தன்,1998:2).

இரு நபர்களுக்கிடையில் பிணைப்பின் மூலம் பொருளாதாரத்தின் அடிப்படையில் ஓர் ஆக்கபூர்வமான அமைப்பை உருவாக்குவதுமாகும். பிள்ளைகளைப் பொறுத்த வரையில் குடும்பமானது குடும்ப அமைப்பிற்கான ஒரு அறிமுகத்தையும் வழிகாட்டலையும் வழங்கும் இடமாக இருக்கிறது. அதேவேளை பெற்றோரை பொறுத்த வரையில் குடும்பமானது பிள்ளைகளை உருவாக்கி சமூகத்துடன் அவர்களை பிணைக்கும் இடமாகவும் அமைகிறது. மேலும் கூறுவதானால் உறவினர் பட்டம் பெற்ற மற்றும் வாழும் நபர்களின் குழு ஒரு குடும்பமாக நியமிக்கப்படுகிறது. சமூகவியலின்படி குடும்பம் என்ற சொல் தாய் தந்தை மற்றும் குழந்தைகளாலான குறைந்தபட்ச சமூக அலகு என்பதைக் குறிக்கிறது. குடும்பம் என்பதன் பல்வேறுபட்ட விளக்கங்கள் அடிப்படை அலகு என்பதில் இருந்துதான் ஆரம்பிக்கிறது. மனிதனின் அனைத்து துறை சார்ந்த எழுச்சியாக இருந்தாலும் வீழ்ச்சியாக இருந்தாலும் சரி அனைத்தும்

குடும்பம் என்பதிலிருந்துதான் கட்டியெழுப்பப்படுகின்றது. (https://ta.m.wikipedia.org>wiki குடும்பம்-தமிழ் விக்கிப்பீடியா)

குடும்பம் எனும் அமைப்பின் வகைகளை வெவ்வேறாக பிரித்து பார்க்கலாம். வேகமான சமூகமாற்றம் காரணமாக பல்வேறு விதமான புதிய குடும்ப அமைப்புக்கள் தோன்றியுள்ளன. இருந்தாலும் ஆரம்பகட்டமைப்புக்களைக் கருத்திற்கொண்டு

- கணவன் மனைவி தொடர்பு
- பெற்றோர்- பிள்ளைகள் தொடர்பு
- உடன்பிறந்தோருக்கிடையிலான தொடர்பு

போன்ற அம்சங்களில் அநேகமாக எல்லாவகைக் குடும்பங்களும் ஒத்த இயல்புகளை வெளிப்படுத்தினாலும் வேறுபல அம்சங்களின் அடிப்படையில் பல்வேறு பிரிவுகளாகவும் அமைகின்றன. அதாவது குடும்பங்களின் அமைப்பினை கருத்திற்கொண்டு பின்வருமாறு வகைப்படுத்தலாம். (https://ta.delachieve.com, குடும்பங்கள் வகைகள்)

இன்றைய காலகட்டத்தில் அதிகளவான அடிப்படை பிரச்சினைகளில் குடும்பத்தை மையமாக வைத்தே உளரீதியான பல இடர்கள் இடம்பெறுவது முக்கியமானதாகும். எனவேதான் குடும்ப உளவளத்துணை என்ற அம்சமானது ஆய்வின் தலைப்பாக கொள்ளப்படுகின்றது. மனிதனின் சுகாதார நிலை மேம்பாட்டுக்கு உடல், உள்ளம் மற்றும் ஆன்மிகம் ஆகிய மூன்று விடயங்களும் முக்கியமானவை. ஒரு மனிதன் உடல் ரீதியாக பாதிக்கப்படுகின்ற போது அப்பாதிப்பானது பெருமளவு அவனை மாத்திரமே பாதிப்புக்குள்ளாக்குகின்றது. அதே மனிதன் உளரீதியான பாதிப்புக்குள்ளாகின்ற போது அதன் தாக்கம் அவனை மட்டும் பாதிப்பதில்லை. ஒரு நாட்டின் அபிவிருத்தியில் உள ஆரோக்கியத்தின் பங்கு அத்தியாவசியமானதொன்றாகும்.

நவீன உலகின் இயந்திரமயமான வாழ்க்கை முறையால் சமூகத்திலும் சுற்றாடலிலும் கலாசாரத்திலும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பல கோணங்களில் மனிதரிடையே உளப் பாதிப்புக்களை தோற்றுவிக்கிறது. குடும்ப அங்கத்தவர்கள் ஒவ்வொருவரினதும் மாறுபட்ட நடத்தைகள் குடும்ப பிணக்குகளை உருவாக்குகிறது. நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சமூக கலாசார மாற்றங்களினால் மக்கள் தமது பாரம்பரிய சமூக கலாசார பண்புகளை விட்டு தூரமாக செல்கின்றனர். ஒவ்வொரு வயது பிரிவினருக்குமிடையில் இடைவெளிகளும் முரண்பாடுகளும் இடம்பெறுகின்றன. இவ்வாறான பிணக்குகள் குடும்ப தகராறுகளையும் வன்முறைகளையும் ஏற்படுத்துவதோடு உள பாதிப்புக்களையும் ஏற்படுத்தி உளவளத்துணையின் உதவியை வேண்டி நிற்கிறது.

உளவளத்துணை சேவையும் உளக்கோளாறுகளும் மருந்துகளால் குணப்படுத்தக்கூடிய பாரிய உள நோய்களைத் தவிர ஏனைய உளநோய்களை உளவளத்துணை சிகிச்சை முறையினால் குணப்படுத்த முடியும். அந்த வகையில் உளவளத்துணை பற்றிய விழிப்புணர்வும் அது பற்றிய அறிவும் இன்றியமையாததாகும். உளவளத்துணையானது ஒருவர் நாளாந்த வாழ்க்கை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போது முகம் கொடுக்கும் எதிர்பார்த்த மற்றும் எதிர்பாராத சம்பவங்களினால் ஏற்படுகின்ற உளரீதியான பிரச்சினைகளுக்கு உளவியல் முறைகளைப்

பயன்படுத்தி அவரிடம் காணப்படும் உள்ளார்ந்த சக்தி திறன்களை வெளிக்கொணர்வதன் மூலம் நம்பிக்கையீனத்தை இல்லாமல் செய்து ஆளுமையை விருத்தி செய்து அவரது பிரச்சினைகளுக்கு அவராகவே தீர்வு காண்பதற்கு உதவுவதாகும்.

இவ்வாறாக குடும்பங்களினது வகைப்பாடுகள் பிணக்குகளின் தோற்றப்பாட்டிற்கு முக்கியமானதாகும்.

மோர்கனின் குடும்பம் குறித்த வகைப்பாடுகள்

- ✓ இரத்த உறவுக் குடும்பம்
- ✓ குழுமணக் குடும்பம்
- ✓ நிரந்தரமற்ற குடும்பம்
- ✓ தந்தை தலைமைவழிக் குடும்பம்
- ✓ ஒரு துணைமணக் குடும்பம்

எவ்வாறாக குடும்ப உளவளத்துணை அமைக்கப்படும் என்பதனை பின்வரும் பிரதிபலிப்புகளில் இருந்து விளங்கிக் கொள்ளலாம்.

- கணவன்-மனைவி தொடர்பு
- பெற்றோர்-பிள்ளைகள் தொடர்பு
- உடன் பிறந்தோர்க்கான தொடர்பு

குடும்பங்களின் பல்வேறு காரணங்களினால் ஏற்படும் உடல் ரீதியான தாக்கம் கூட பிற்கால உளரீதியான ஆற்றுப்படுத்தலை தூண்டுகிறது. பொறுப்பின்மை எனும் பொதுமைப்படுத்தப்பட்ட விடயமானது குடும்ப பிணக்கினை ஏற்படுத்துவதில் முக்கியமான இடத்தினை கொண்டுள்ளது. பொறுப்பின்மையானது குடும்பங்களின் அங்கத்தவர்களுக்கிடையிலான பல்வேறுபட்ட உடைவுகளையும் ஒழுக்கமீறல் செயற்பாடுகளையும் புகுத்துகிறது. அதாவது சிறுபிள்ளை முதல் முதியோர் வரை ஏற்படக்கூடிய உடல் சித்திரவதைகள், பிரிவுகள், தவறான பழக்கங்கள்,மற்றும் பாரிய நோய்கள் என்பவை குடும்ப பிணக்குகளால் வெளிப்படுவைகளாக அமைகின்றன. எனவேதான் பிரதேச மட்டத்திலான குடும்ப பிணக்குகள் தீர்க்கப்பட வேண்டும் என்ற சிந்தனை பல நிறுவனங்கள் ஊடாக செயற்படுத்தப்படுகிறது.

மனித குலத்தின் சிறந்த ஒழுக்கவியல் பண்புகள் மற்றும் பொறுப்புகள் என்பவை பிணக்குகளின் உடைவில் இருந்து பாதுகாக்கப்படுகிறது. எனவே இவ்வாறான தீர்விற்கு மெய்யியல் ரீதியாக பெரிதும் உதவுகின்றதும் மற்றும் பொருத்தமுடையதுமாக உளவளத்துணை அல்லது ஆற்றுப்படுத்தல் இன்றியமையாததாக விளங்குகிறது. கலந்துரையாடல் சிறந்த தொடர்பாடல் விளக்கமளித்தல் தேர்ந்தெடுத்தல்(மாதிரி) வழியமைத்தல் போன்றவற்றினை முன்னுரிமைப்படுத்தி ஆற்றுப்படுத்தலானது இடம்பெறும். எனவே இங்கு மோதல் வெறுப்புணர்வு கோபம் முதலானவை தவிர்க்கப்படும் அளவிற்கு முறையான ஆற்றுப்படுத்தலானது குடும்ப பிணக்கினையுடைய நபர்கள் மத்தியில் இடம்பெறுவதானது சிறந்த குடும்ப ஒருங்கிணைவை ஏற்படுத்தும். மதுபாவனை மனைவி-கணவன் சச்சரவுகள் போதைப்பொருள்பாவனை துஸ்பிரயோகங்கள் பிற

தவறான தொடர்புகள் போன்றவை குடும்ப பிணக்குகளை பிரதானப்படுத்தும். எனவேதான் உளவளத்துணை மையங்கள் பல பிரதேச மட்டத்தில் இருந்து ஆரம்பிக்கப்படுகிறது.

உதாரணம்: பிரதேச செயலகங்களில் உளவளத்துணை ஆற்றுப்படுத்தல் மையத்தில் கலந்துரையாடல் மாநாட்டிற்கு சம்மந்தப்பட்ட குடும்பங்களினை அழைத்தல்

சாதாரணமாக குடும்பத்தினது தேவைகள் அதிகரிக்கும் போது அங்கத்தவர்களினது தேடல்களும் அதிகரிக்கும். அந்த வகையில் நேரம் எனும் அம்சமானது பாரியளவு குடும்ப பிணைப்பில் செல்வாக்கு செலுத்தும். எனவேதான் ஏற்படும் சண்டைகள் உறவுகளின் பல்வேறு விதமான தாக்கத்திற்கு காரணமாக அமையும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் உளவளத்துணையின் தேவை என்பது முக்கியமானதொன்றாக அமையும். ஆரம்பகாலங்களில் கூட்டுக் குடும்பமாக அமைந்த குடும்ப அமைப்பு காலம் செல்லச் செல்ல தனிக்குடும்ப வடிவிற்குள் அமைந்தது. இவ்வாறாக பல பிணக்குகளை இனங்கண்டு அதற்குரிய காரணங்களையும் சிறந்த வழிகாட்டல்களையும் விளக்குவதாக இவ்வாய்வு அமைகின்றது. அதாவது உளவளத்துணையினது பிரிவுகளான தனியாள் தொடங்கி கூட்டம் வரையான வழிகாட்டுதல்களின் அமைப்புக்களில் இருந்து குடும்ப உளவளத்துணை எனும் கூறானது குடும்பங்களின் பிரதான பிரச்சினைகளை அடையாளங்காணுவதோடு தீர்விற்கான பாதையையும் காட்டுவதாக அமைகிறது. எனவே குடும்பத்தினுடைய எல்லா வகையான அங்கத்தினரையும் வளப்படுத்தும் வகையில் உளவளத்துணை எனும் அம்சமானது அமையலாம். அவற்றுள் பின்வரும் நிலைகளில் உளவளத்துணையின் கூறுகள் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது.

- தனியான நிலை
- தம்பதி நிலை
- மொத்தமான குடும்ப அங்கத்தினர் நிலை

அது மட்டுமல்லாது மாதிரிகளை பயன்படுத்தி தரவுகளை திரட்டி உரியமுறையில் ஆய்விற்கான விடயங்கள் நிகழ்த்தப்படுகின்றன. மேலும் குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் ஆய்வானது உளரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஏற்படுத்தியிருக்கும் தாக்கங்கள் குடும்ப பிரச்சினைக்கு எவ்வாறான பின்னணியை கொண்டது என ஆராயப்படுகிறது. இவ்வாறாக குடும்ப உளவளத்துணையானது தனது இன்றியமையாமையை குடும்ப பிரச்சினைகளின் ஊடாக வழிகாட்டுதல்களின் மையமாக தன்னை அடையாளப்படுத்துகிறது. குடும்பம் எனும் அமைப்பின் வகைகளை வெவ்வேறாக பிரித்து பார்க்கலாம். வேகமான சமூகமாற்றம் காரணமாக பல்வேறு விதமான புதிய குடும்ப அமைப்புக்கள் தோன்றியுள்ளன. இருந்தாலும் ஆரம்பகட்டமைப்புக்களைக் கருத்திற்கொண்டு

- கணவன் மனைவி தொடர்பு
- பெற்றோர்- பிள்ளைகள் தொடர்பு
- உடன்பிறந்தோருக்கிடையிலான தொடர்பு

போன்ற அம்சங்களில் அநேகமாக எல்லாவகைக் குடும்பங்களும் ஒத்த இயல்புகளை வெளிப்படுத்தினாலும் வேறுபல அம்சங்களின் அடிப்படையில் பல்வேறு பிரிவுகளாகவும்

அமைகின்றன. அதாவது குடும்பங்களின் அமைப்பினை கருத்திற்கொண்டு பின்வருமாறு வகைப்படுத்தலாம். (https://ta.delachieve.com, குடும்பங்கள் வகைகள்)

ஆய்வுப் பிரச்சினை

'குடும்பங்களிற்கு இடையில் ஏற்படும் பிணக்குகள் குடும்ப அங்கத்தவர்களின் மத்தியில் பல தாக்கங்களை ஏற்படுத்துகின்றது' என்பதை மையமாகக் கொண்டு விளங்குகின்றது. இங்கு குடும்பங்களினால் எவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுகின்றன? அவற்றால் பாதிப்படையும் விடயங்கள் யாவை? அவற்றினை எவ்வாறு குடும்ப உளவளத்துணையானது எதிர்கொள்கிறது? என்பன அடையாளப்படுத்தப்படுகின்றன. குறித்த பிரச்சினைகளால் குடும்பத்தினர் அனுபவிக்கும் கொடுமைகள் பல எதிர்காலத்தின் மீதும் கேள்வியெழுப்புவதாக அமையலாம். இதனால் பாரிய மனஉளைச்சலுக்கு உள்ளாவதனை காணமுடிகிறது. பலவாறான பிரச்சினைகளின் மூலம் அடையும் உளைச்சல்கள் என்பதே இங்கு ஆய்வுப்பிரச்சினையாக காணப்படுகின்றது.

ஆய்வுக் கருதுகோள்

'குடும்பத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்கான தளத்தினை ஏற்படுத்துவதில் குடும்ப உளவளத்துணையின் பங்கு இன்றியமையாததாகும்.'

ஆய்வு வரையறை

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்திற்குட்பட்ட சூரையபுரம் எனும் குடியேற்ற கிராமத்தை மையமாகக் கொண்டு நிகழ்கின்றது. அப்பிரதேசத்தில் அதிகமாக எழும் பிரச்சினைகளை இனங்கண்டு உளவளத்துணையின் செயற்பாடு தொடர்பில் விளக்குவதாக அமைந்துள்ளது.

ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது முறையே முதலாம் நிலைத்தரவு இரண்டாம் நிலைத்தரவு என்பவற்றை கொண்டமைந்துள்ளது. இவ்வாய்வினை பொறுத்தமட்டில் முதலாம் நிலைத்தரவுகளாக நேர்காணல் மற்றும் அவதானித்தல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு குடும்ப பிரச்சினைகள் கண்டறியப்பட்டது. மேலும் இரண்டாம் நிலைத்தரவுகளிலே நூல்கள் சஞ்சிகைகள் கட்டுரைகள் மற்றும் ஆற்றுப்படுத்தல் மைய நிலையத்தில் இருந்து பெறப்பட்ட தரவுகள் கிராம சேவையாளரிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகள் என்பன மூலம் ஆய்விற்கான தகவல்கள் பெறப்பட்டன.

1.9 இலக்கிய மீளாய்வு

சம்மந்தப்பட்ட ஆய்வு வினாக்கள் மற்றும் ஆய்வுப்பிரச்சினை ஆய்வுக்கருதுகோள் என்பவற்றுடன் தொடர்புபட்ட கருத்துக்களுடன் ஆய்வுப்பொருளுடன் தொடர்புபட்ட பிரதான கோட்பாடுகளையும் வாதங்களையும்இ கருப்பொருள்களையும்இ முறையியல்களையும், அணுகுமுறைகளையும் ஆய்வு இலக்கியங்களிலுள்ள மாறுபட்ட கருத்துக்களையும் விபரித்தல்இ ஒப்பிடுதல்இ வேறுபாடு காணல் மற்றும் மதிப்பிடுதல் என்பன இலக்கிய மீளாய்வில் இடம்பிடித்துக்கொள்கின்றன. ஆய்வுப்பொருளோடு தொடர்புபட்ட குழுவையும் வாதங்களையும் முன்வைக்கவென எனது

ஆய்விற்காக இலக்கியங்கள் சஞ்சிகைகள் இணையத்தளங்கள் என்பன ஆதாரமாக பயன்படுத்தப்படுகின்றன. ஆய்வினை முழுமையடையச் செய்யும் அங்கமாக ஆய்வில் முக்கியப்படுத்தப்படுகின்றது.

அனஸ்.எம்.எஸ், (2006). என்பவரின் **'மெய்யியல்'** மெய்யியலின் தோற்றம் பற்றிய விளக்கமும் மெய்யியல் தொடர்பான ஒரு அறிமுகத்தை முன்வைத்துள்ளார்.

சபா.ஜெயராசா, (2008). என்பவரின் **'உளவியல் ஊடுதலைகள்'** தனிநபரை மையப்படுத்தும் சிகிச்சை முறைகள் பற்றியும் உளச்சுகம் பற்றிய விளக்கமும் எவ்வாறு ஒருவருடைய நடத்தையானது அமைய வேண்டும் எனவும் விள்கப்படுவதோடு பால்நிலை சீர்மியம் தொடர்பில் பெண்களின் வகைகள் கொள்ளும் பங்கினை பற்றியும் முன்வைத்துள்ளார்.

மணியம் சிவகுமார், (2009). என்பவரின் **'ஆளுமை உளவியல்'** உளம் என்றால் என்ன என்பது பற்றியும் ஆளுமைச் சோதனை முறைகள் பற்றிய விளக்கமும் ஆளுமை பற்றிய தன்மைகளையும் முன்வைத்துள்ளார்.

றொக்ஸானா காரியோ, (1995). என்பவரின் **'பெண்களுக்கெதிரான வன்முறை அபிவிருத்திக்கு ஓர் தடை'** வன்முறை பற்றிய விளக்கமும் பெண்ணானவள் குடும்பத்தினுள் எவ்வாறான வன்முறைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றாள் தொடர்பாகவும் சர்வதேச ரீதியில் பெண்களின் பாதுகாப்பு தொடர்பான அம்சங்களையும் விளக்குகிறார்.

மணியம் சிவகுமார் (2016). என்பவரின் **'அடிப்படை உளவியல்'** உளவியல் முறைகள் பற்றியும் குழந்தை உளவியலில் குழந்தையானது எதிர்பார்க்கும் விடயங்கள் எவ்வாறு குடும்பத்தினை பொறுத்த மட்டில் அணுகப்பட வேண்டும் போன்றனவும் இல்வாழ்வியல் உளவியலில் ஆண் பெண் என்போரின் உறவு முறைகள் பற்றியும் வெற்றிகரமான குடும்பத்தினுடைய தன்மை பற்றியதுமாக விளக்கப்பட்டிருப்பதோடு குடும்பத்தினுடை.ய எதிர்பார்ப்புகளும் முதியோர் உளவியல் குறித்த விடயங்களையும் முன்வைத்துள்ளார்.

டேமியன்,எஸ் (2005). என்பவரின் **'உளவளத்துணை'** உளவளத்துணையின் வரலாற்றுப்பின்னணி உளவளத்துணை பற்றிய வரைவிலக்கணங்கள் எவ்வாறு காலத்திற்கேற்ற வகையில் அமைந்துள்ளது என்பது பற்றியும் பல்வேறான உளத்தாக்கங்களுக்கான உளவளத்துணையானது நிகழ்த்தப்படும் விதம் பற்றியதுமாகவும் அமைவதோடு இளைஞர்களுக்கான உளவளத்துணை அணுகுமுறை குடிப்பழக்கமுடையோருக்கான உளவளத்துணை அணுகுமுறை இழப்பின் துயரில் உள்ளோருக்கான உளவளத்துணை நோக்கு மற்றும் பிரச்சினைகளை மையப்படுத்தி குவியவைத்தல் தொடர்பான விளக்கங்களையும் முன்வைத்துள்ளார்.

சிவயோகன் சா.கோகிலா ,மகேந்திரன் தயா. சோமசுந்தரம் (2017) **'சிறுவர் உளநலன்'** என்பதில் குடும்பம் பற்றிய விளக்கங்களும் பிள்ளைகளினுடைய உளநலப்பிரச்சினை தொடர்பான விடயங்களும் அமைவதோடு அவர்களுக்காக எவ்வாறு உளவளத்துணையின் மூலம் உதவலாம் போன்றனவும் விளக்கப்பட்டுள்ளன.

(1997) **'நான் ஒரு பெண்'** என்பதில் பெண்கள் எவ்வாறு குடும்பங்களுடனான உறவினை கொண்டுள்ளனர் எனவும் அவர்களுக்கு மத்தியில் ஏற்படும் பிரச்சினைகள் பற்றியதுமான விளக்கங்களை கொண்டதாக அமைந்துள்ளது.

தயா சோமசுந்தரம், .கோகிலா மகேந்திரன் கடம்பநாதன் (2005) **'சின்னச்சின்ன பிள்ளைகள்'** என்பதில் குடும்பம் என்பதன் விளக்கம் பற்றியும் உறவுகள் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்பன குறித்தும் முரண்பாடுகளின் வகைகள் பற்றியும் நன்னடத்தை சமாதானம் ஒழுக்க விழுமியங்கள் பற்றிய வாழ்வியல் பற்றியதாகவும் முன்வைத்துள்ளார்.

பத்மா சோமகாந்தன் (1998) **'பெண்ணின் குரல்'** என்பதில் தந்தைவழி சமூக அமைப்பின் அதிகாரம் எவ்வாறு இல்லங்களில் காணப்படுகின்றது எனவும் குடும்பம் என்றால் என்ன என்பது பற்றியும் பெண்களின் இல்லவாழ்வு பற்றியும் வீட்டு வன்முறைகளின் தாக்கங்கள் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்பதுமாக முன்வைத்துள்ளார்.

ரிட்லி ஜயசிங்க (2010) என்பவரின் **'உளவியல்சார் உளவளத்துணை அணுகுமுறை'** உளவளத்துணை பற்றிய விளக்கம் மற்றும் உளவளத்துணை சிகிச்சை முறை தொடர்பான விடயங்களை முன்வைத்துள்ளார்.

கலந்துரையாடல்

ஆய்வுப்பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட குடும்ப பிரச்சினைகளுக்கான ஆலோசனையையும் வழிகாட்டுதல்களையும் தெளிவுபடுத்துதல் என்பது பற்றியதாக இவ்வாய்வு காணப்படுகின்றது.

இதன்படி

- குடும்ப பிரச்சினையினால் ஏற்படும் தாக்கங்களை அறிதல்
- குடும்ப பிரச்சினைகளுக்கான காரணங்களினை அறிதல்
- எதிர்நோக்கும் சவால்களை அறிதல்
- குறித்த பிரச்சினைக்காக குடும்ப உளவளத்துணையின் வகிபங்கினை அறிதல்

என்பன இவ்வாய்வின் பிரதான நோக்கமாக அமைகின்றது.

அத்துடன் குடும்பம் என்ற எண்ணக்கரு உளவளத்துணையில் பெறும் முக்கியத்துவத்தை அடையாளப்படுத்துவதாக ஆய்வினுடைய உபநோக்கம் காணப்படுகின்றது. குடும்பம் பற்றிய தெளிவூட்டல் உளவளத்துணை பற்றிய விளக்கத்தைப் பெறல் குடும்ப உளவளத்துணை பற்றிய அறிமுகம் என்றவாறு இவ்வாய்வானது அமைகிறது.

குடும்பத்தினுடைய பிரச்சினைகளை இனங்காண்பதற்கு முன்னால் குறித்த பிரதேசத்தினுடைய ஆய்வு நிலை பிரதேசத்தினுடைய பால் நிலை என்பது முக்கியமானதாகும். இங்கு தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கையில் பெண்கள் ஆண்கள் வயோதிபர்கள் மற்றும் குழந்தைகள் என வகுதியர் அமைகின்றனர். இவர்களுள் குழந்தைகள் வகுதியினர் பெரும்பாலும் தரும் தரவுகள் எவ்வளவு தூரம் சாத்தியமாகும் என்பதை கவனத்திற் கொண்டே தெரிவானது

குறைவாகும். அந்த வகையில் நேர்காணலின் மூலம் தரப்பட்ட தரவுகளை பின்வரும் வரைபடம் மூலம் காட்டலாம்.

பால்நிலை வகுதியினர்	எண்ணிக்கை	சதவீதம்
பெண்கள்	72	36
ஆண்கள்	66	33
குழந்தைகள்	26	13
வயோதிபர்கள்	36	18
மொத்தம்	**200**	**100**

மேற்படி வரைபடத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதேச குடும்பங்களினது எண்ணிக்கையினை பார்க்கும் போது 100 குடும்பங்களில் 200 நபர்கள் ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்டனர் ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்டன. அதில் பெண்கள் 36 வீதமாகவும ஆண்கள் 33 வீதமாகவும் வயோதிபர்கள் 18 வீதமாகவும் மற்றும் குழந்தைகள் 13 வீதமாகவும் உள்ளனர். இதில் பெண்களே பெரும்பான்மையுடையவர்களாக காணப்படுகின்றனர்.

குடும்பம் என்ற சமூகத்தினுடைய அடிப்படை அலகாகும். இங்கு எவ்வித பிரச்சினைகள் அற்றதும் மற்றும் புரிந்துணர்வுகளை கொண்டதுமான இருப்பிடமாக வரையறுக்கப்படுகின்றது. இவ்வாறாக ஓர் குடும்பம் அமையும் பட்சத்தில் மாத்திரமே அது ஆரோக்கியமான குடும்பமாக அமையும். இவ்வாறாக ஓர் குடும்பமானது தமக்குள் கொள்ளும் நிலையானது எவ்வாறானதொரு குடும்ப பிணைப்பை ஏற்படுத்தியுள்ளது என்பது முக்கியமானதாகும். இந்த அடிப்படையிலேயதான் ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட பிரதேசத்தினுடைய குடியியல் நிலையானது காணப்பட்டிருக்கும் அமைப்பு பற்றிய விபரமானது நேர்காணலின் மூலம் பெறக்கூடியதாக இருந்தது.

பகுதியினர்	எண்ணிக்கை	சதவீதம்
விவாகமானவர்	86	43
விவாகமாகாதவர்	64	32
கணவனை இழந்தவர்	28	14
மனைவியை இழந்தவர்	22	11
மொத்தம்	**200**	**100**

மேற்படி வரைபடத்தின் மூலம் விவாகமானவர்கள் 43 வீதமாகவும் விவாகமாகதவர் 32 வீதமாகவும் கணவனை இழந்தவர் 14 வீதமாகவும் மனைவியை இழந்தவர்கள் 11 வீதமாகவும் காணப்படுகின்றனர்.

ஓர் குடும்பம் பற்றிய தெளிவினையும் விபரங்களையும் பெற குறித்த ஆய்வினை தெரிவு செய்யப்படும் குடும்பங்களது நிலை என்பது ஆய்வு செய்யப்படுவது மிகவும் முக்கியமானதாகும். ஏற்படும் பிரச்சினைகளின் தன்மை என்பது குடும்ப நிலைகளைப் பொறுத்தே அமையும். குடும்பத்தினுடைய நிலையில் ஆணின் நிலை பெண்ணின் நிலை இருவரும் இணைந்த நிலை என்ற அடிப்படையில் அமைகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் தெரிவு செய்யப்பட்ட ஆய்வு பிரதேசத்தினுடைய நிலையினை குடும்பத்தினரின் குழுக் கலந்துரையாடல் மூலம் பெறக்கூடியதாக இருந்தது. பின்வரும் வரைபடம் இதனை காட்டுகின்றது.

வகுதியினர்	எண்ணிக்கை
பெண் தலைமைத்துவ குடும்பம்	35
ஆண் தலைமைத்துவ குடும்பம்	8
ஆண் பெண் இணைந்த குடும்பம்	57
மொத்தம்	**100**



இவ்வாறாக பெண் தலைமை தாங்கும் குடும்பம் 35 வீதமாகவும் ஆகவும் ஆண் தலைமை தாங்கும் குடும்பம் 8 வீதமாகும் ஆகவும் ஆண் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் 57 வீதமாகவும் ஆகவும் காணப்படுகின்றது.

அதிகளவு ஏற்படுத்தும் பிரச்சினைகளை அடையாளம் காண்தல்

குறித்த ஆய்வு பிரதேசத்தில் முக்கிய நோக்காக அமையும் பிரச்சினைகளை கண்டறிதல் என்பது இன்றியமையாததாக அமைகின்றது. இந்த வகையில் குறித்த பிரதேசமானது குடியேற்ற பிரதேசம் என்ற வகையில் பல பிரச்சினைகள் காணப்பட்டது. அவற்றுள் மிகவும் அதிகமாக எவ்வாறான பிரச்சினைகளினால் பாதிப்புக்குள்ளானார்கள் என்பதை வினாக்கொத்தின் மூலமும் நேர்காணலின் மூலமும் பெற்ற தரவுகளை கொண்டு பின்வரும் வரைபடம் மூலம் காட்டலாம்.



மேற்குறித்த வரைபடம் மூலம் குறித்த பிரதேசத்தில் குடிப்பழக்கம் அதிகமாக உள்ளது என 48 குடும்பங்கள் கூறுகின்றனர். இதன் அடிப்படையில் குடிப்பழக்கமானது ஏனைய பிரச்சினைகளான சிறுவயது திருமணம்இ விவாகரத்து மற்றும் மறுமணம் என்பவற்றிலும் பார்க்க அதிகமான பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்றே கூறலாம்.

பிரச்சினைகளை ஏற்படுத்தும் பாதிப்புக்களை இனங்காணல்

ஆய்வுக்குட்படுத்தும் பிரதேசத்தில் காணப்படும் அதிகளவு பிரச்சினைகள் மட்டுமல்லாது ஏனைய பிரச்சினைகளும் குறித்த குடும்பங்களிடையே எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது என்பது இன்றியமையாததாகும். அதாவது இவ்வாறாக ஏற்படும் பாதிப்புக்களில் உளவளத்துணையின் பங்கானது எவ்வாறாக அமைகின்றது என்பதானது இத்தரவுகளில்

இருந்தே பெறப்படுவதாகும். ஏற்படும் பாதிப்புக்களானது குடும்பங்களில் தற்கால தடைகளுக்கு மட்டுமல்லாமல் எதிர்காலத்தையும் சீரழிப்பாதாக அமைகின்றது இத்தரவுகளை பின்வரும் வரைபடம் மூலம் காட்டலாம்.

குடும்ப பிரச்சினைகளில் அதிகமாக ஏற்படுத்தும் வகுதியினரை அடையாளங் காணல்

குறித்த பிரச்சினைகளினால் ஏற்படுத்தும் பாதிப்புக்களை யாரை வெகுவாக பாதிக்கின்றது என்ற அடிப்படையில் வழங்கப்பட்ட வினாக்கொத்தின் மூலம் பலர் பலவாறாக விடையளித்தனர். ஏற்படுத்தும் பாதிப்பானது தரும் விளைவு பாரியதாக மாறும் போது அது வன்முறையை சாருவதாகும். இதனால் பல மனவழுத்தங்கள் நோய்கள் போன்ற பல உளத்தாக்கங்கள் குடும்பத்தில் ஏற்படுத்துகின்றது. இதன்படி வழங்கப்பட்ட தரவுகளை பின்வரும் வரைபடம் மூலம் காட்டலாம்.

வரைபடத்தின் மூலம் பெண்களே குறித்த பாதிப்பினை எதிர்கொள்ளும் நிலையில் காணப்படுகின்றனர் 46 வீதமானவர்களே அதிகளவில் பிரச்சினைகளை சந்திக்கின்றனர் எனக் குறிப்பிட்டிருந்தனர்.

குடும்பங்களில் அதிக பட்ச கவலைகளை அறிதல்

குறித்த பிரதேசத்தில் பலரை சந்தித்த போது அவர்களுடைய சொந்த கதைகள் பலரால் துன்பப் பட்டதையே காணக்கூடியதாக இருந்தது. அந்த வகையில் அவர்கள் எதிர்கொள்ளும்

பாதிப்பானது பரந்த அளவிலேயே அமைகின்றது. இதனை பின்வரும் வரைபடம் மூலம் காட்டலாம்.

கடந்தகால பிரச்சினைகளின் தீர்வு பற்றிய கலந்துரையாடல்

கடந்த காலங்களில் பல குடும்பங்களில் பல்வேறு பிணக்குகள் ஏற்பட்டிருக்கும். அவற்றினை எவ்வாறு தீர்த்தனர் அவ்வாறு தீர்க்கபட்ட வழிமுறைகள் சரியாக அமைந்து பெறுபேறுகளை தந்தனவாக இருந்ததா போன்ற தரவுப்புகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டது இதனை பின்வரும் வரைபடம் மூலம் காட்டலாம்.

மேற்படி தரவிலிருந்து பிரதேச செயலகம் ஊடாக ஏற்பட்டுத்தப்பட்டிருக்கும் ஆற்றுப்படுத்தல் மையம் ஊடாக பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதாக 36 குடும்பங்கள் கூறியிருந்தனர். மேலும் பல பிரச்சினைகள் தீர்க்ப்படாமல் இருப்பதாக 27 குடும்பங்கள் தெரிவித்தனர்

குறித்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கான குடும்பங்களின் கருத்துக்கள்

அந்த வகையில் குடும்பப் பிரச்சினை ஒன்று இடம்பெறுகின்ற போது அது அவ்விடயத்தினை அடிப்படையாக் கொண்டு இடம்பெறுகின்றது என்பதன் அடிப்படையில் குடும்ப

அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட வினாக்கொத்துகளுக்கு பதிலளித்ததன் மூலமாக பெறப்பட்ட தரவுகளை பின்வரும் வரைபடம் மூலம் காட்டலாம்.

மேற்படி வரைபடத்தின்படி 33 வீதமானோர் பிறரின் அறிவுரை தேவை எனவும் 26 வீதமானோர் புதிய வேறு தொழில் ஒன்று கிடைத்தால் நன்று எனவும் 17 வீதமானோர் அமைதியாக இருத்தல் சிறந்தது எனவும் 24 வீதமானோர் அரசியல் மாற்று நலன்புரி திட்டங்கள் தேவை எனவும் தெரிவித்தனர்.

குடும்ப உளவளத்துணை பற்றிய தெளிவினை பெறல்

குடும்ப உளவளத்துணையே பல குடும்ப பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வுகளை வழங்குவதோடு எதிர்கால வாழ்விற்கும் வழிகாட்டலாகும். இவ்வாறான குடும்ப உளவளத்துணை பற்றி யாரெல்லாம் அறிந்துள்ளீர்கள் யாரெல்லாம் இவற்றின் மூலம் பிரச்சினைகளை தீர்த்தள்ளீர்கன் என்ற வினாவிற்கு விடைகளை பின்வரும் வரைபடமானது காட்டுகின்றது.



குடும்ப உளவளத்துணை குறித்த தெளிவானது தெரியும் என்பதற்கு பதிலை 40 வீதமானவர்களும் இல்வை என்பதை 60 வீதமானவர்களும் குறிப்பிட்டிருந்தனர்.

முடிவுரை

குடும்ப உளவளத்துணை மூலம் குடும்பத்தினுடைய பாரியளவு பிரச்சினைகள் வரையறுக்கப்பட்டு குடும்ப அங்கத்தினர் ஒவ்வொருவரினதும் பொருளாதார பிரச்சினைகள் பல குடும்ப குற்றங்களைகுறைப்பதன் ஊடாக தீர்க்கலாம் என்ற பல தீர்வுகள் முன்வைக்கப்பட்டு ஆலோசனைகளும் வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டுள்ளன. இதனால் பொருளாதார பிரச்சினைகளை எதிர்நோக்கும் பல குடும்பங்களுக்கான மறுவாழ்வானது நிச்சயப்படுத்தப்பட்டதொன்றாக மாறும். இயன்றளவு நல்வழிபடுத்துவதற்கான அனைத்து விதமான நடவடிக்கைகளும் இங்கு வழங்கப்படுகின்றது. குடும்ப பிரச்சினையானது வன்முறையாக மாறும் சந்தர்ப்பங்களில் அதிகளவு ஏற்படும் உடல் மற்றும் உள ரீதியான பிரச்சினைகளுக்கு பல ஆலோசனைகளை வழங்கி அழுத்தங்களில் இருந்து மீட்டெடுப்பதாக குடும்ப உளவளத்துணையின் பங்கானது இன்றியமையாததாக விளங்குகிறது.

இவ்வாறான வழிகாட்டுதல்களானது ஒருவருக்கு மன அழுத்தத்தால் ஏற்பட்டிருக்கும் மன உளைச்சலை தகர்த்தெறியும் வகையில் வளப்படுத்தும் ஒன்றாக அமைகிறது. அதனால் பல பிரச்சினைகள் தடைசெய்யப்படுகின்றன. இவ்வாறாக பிறரில் ஏற்படும் வெறுப்புணர்வு கொலையுணர்வு போன்றன மாற்றியமைக்கப்பட்டு உண்மையான வாழ்வினுடைய நிலையாமையானது பேணப்படுகிறது. தனி ஒருவரை மாத்திரம் மையப்படுத்தாமல் ஒட்டுமொத்த குடும்பத்தினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் முறை என்றபடியால் பிரச்சினைகள் கூட பொதுமைப்படுத்தப்பட்டதான ஆலோசனைகளை வழங்குவதாகவே அமையும். இதனால் குடும்ப மட்டத்தில் ஏற்படும் பிரச்சினைகள் அனைத்தும் குடும்ப உளவளத்துணை என்ற முழுமைக்குள் கொண்டுவரப்பட்டு பொருத்தமான வழிகாட்டுதல்களையும் ஆலோசனைகளையும் வழங்குகின்றன.

எனவே ஆய்வின் மூலமாக மையப்படுத்தப்படும் குடும்ப பிரச்சினைகளானது குடும்ப உளவளத்துணை கொண்டு பல படிமுறைகளின் ஊடாகவும் முன்னெடுக்கப்பட்டு குறித்த பிரச்சினையானது உரியவர்களுடனான கலந்துரையாடல் மற்றும் தகவல்களைப் பெறுதல் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு ஒழுங்கு முறையான தீர்மானங்களினை முன்வைத்து அதிலிருந்து குடும்பங்களுக்கிடையில் ஏற்படும் பிரச்சினைகளுக்கான காரணிகளினை மறக்க செய்யும் செயற்பாடுகளை மேற்கொள்வதில் குடும்ப உளவளத்துணையானது இன்றியமையாததாக விளங்குகிறது. வழங்கப்படும் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்களின் பாதை சரியானதாக அமைக்கப்படுதல் முக்கியமானதாகும். பிரச்சினைகளை கட்டுப்படுத்தவென பலதரப்பட்ட முறைகள் கையாளப்படுவது இன்றியமையாததாக அமைக்கப்படுதல் நிச்சயமான தீர்வினை ஏற்படுத்தும்.

- வரையறுக்கப்பட்ட வினாக்கள்
- முழுமையாக அறியப்பட்ட குடும்பத்தினுடைய பிரச்சினைகள்
- சரியான வழிகாட்டுதல்கள்
- அதனுடைய பிரயோகங்கள்

போன்றன நன்றாக அமையும் பட்சத்தில் உளவளத்துணையின் செயற்பாடுகளும் முறையானதாக அமையும். பல கடந்த கால பிரச்சினைகளை ஒப்பிட்டு தற்கால பிரச்சினைகளோடு நோக்குவது

மற்றும் பல முன்னுதாரணங்களை முன்வைப்பது போன்ற உத்திகள் கையாளப்பட்டு பிரச்சினைக்குரியவரின் மனோநிலையானது மாற்றியமைக்கப்படுவதில் அவதானமாக இருப்பது இன்றியமையாததாகும். குடும்பங்கள் தமது அச்ச உணர்வு தயக்கம் போன்றவற்றினை இல்லாதொழித்து தமது சொந்த பிரச்சினைகளை பிறரிடம் கூறும் போது குறித்த பிரச்சினையானது தீர்த்து கொள்ளப்படுவதற்கு அதிகமான வாய்ப்புக்கள் அமையும்.

குடும்ப உளவளத்துணையினால் முன்வைக்கப்படும் பல்வேறான உத்திகள் சிகிச்சை முறைகள் என்பவற்றினால் குறித்த பிரச்சினைகளை அணுகுதல் என்பது பல பிரச்சினைகளை குறைத்து கொள்ள வசதியாக அமைவதுடன் பலர் திருந்துவதற்கான வாய்ப்புக்களையும் அமைத்துள்ளது. இருந்தாலும் உளவளத்துணையில் சில வேளைகளில் சுயத்தினை அடைவதிலுள்ள சிரமங்களிளை அடையாளங் கண்டுகொள்வதுடன் மேலும் புதிய வழிமுறைகளான மன ஒருநிலைப்படுத்தும் விளையாட்டுக்கள் சுய மதிபபீடு போன்றவற்றையும் ஏற்படுத்துவதன் மூலம் உள ஆற்றுப்படுத்தலானது குடும்ப மட்டத்தில் மட்டுமல்லாது சமூகத்தின் அனைத்து பிரச்சினைகளுக்கும் நல்வழியை ஏற்படுத்துவதில் சிறப்பானதாக அமையும்.

உசாத்துணை

1. அனஸ்.எம்.எஸ்.எம் , (2003). மெய்யியல் அறிமுக உரை:பண்பாட்டு வட்டம் பேராதனை
2. கலாநிதி விமலா, கி . (2001) . வழிகாட்டலும் ஆலோசனையும் :கே.எஸ்.யு.கிராபிக்ஸஇ ராஜகிரிய
3. பிறேமா, ஆர். (1998) . பெண்ணியம் அணுகுமுறைகள் : மலர் பிறிண்டர்ஸ்.
4. நம்பி ,எஸ்இ (2000). மனநலமும் மருத்துவமும் : தமிழ்நாடு இந்தியா.
5. ரிட்லி ஜயசிங்க உளவியல்சார் உளவளத்துணை அணுகுமுறை
6. அப்துற் - றஹீம் (2005). மனத்தை வெல்லாய் மனிதனாகுவாய்: விக்னேஸ்வரர் கிராபிக்ஸ்.
7. குமாரசாமி, எஸ் (1996). நல்வாழ்விற்குரிய நடைமுறைச் சிந்தனைகள் ரஜி வெளியீடு 29, முதலாம் ஒழுங்கை தெஹிவளை:கொழும்பு இலங்கை.
8. ஜெயராசா, ச. (1997). ஆற்றுப்படுத்தலும் சீர்மியமும் (முதற்பதிப்பகம்), கந்தர்மடம் யாழ்ப்பாணம் ஆசிரியர் வாண்மை விருத்தி அமைப்பு பதிப்பகம்.
9. ஜமாஹிர், பி.எம் (2002). பொது உளவியல் ஓர் அறிமுகம். டொங்கல கண்டி: தென்கிழக்கு ஆராய்ச்சி மையம்.
10. மல்லிகா, அ. (2006). வழிகாட்டலும் ஆலோசனையும் அம்பத்தூர்: சென்னை நியூ ஸ்கரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டட்.
11. http://www.kalpitiyavoice.com/2014/12/counseling-introduction (2022.04.02,10.30pm)
12. http://www.thinakaran.lk(2022.04.02-11.30pm)
13. http://srilankamuslims.lk/உளவளத்துணையின்..... (2022.04.05,11.52pm)
14. http://www.vidivelli.lk/article/1385(2022.05.04-10.30pm)
15. https://ta.lifehackk.com/8-common-family-issues(2022.07.05 ,6.00am)

கணவனை இழந்த பெண்களின் வாழ்வியல் பிரச்சினைகள் - உளவியல் நோக்கு - மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவை மையப்படுத்திய ஆய்வு

பவளசிங்கம் சசித்தா
தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
sasiththa96@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

கணவனை இழந்த பெண்கள் என்று நோக்குமெ் போது இயற்கையாகவோ, விபத்து மூலமோ, தற்கொலை செய்து கொண்டோ அல்லது யுத்தத்தில் பாதிக்கப்பட்டோ கணவன் இறந்த பின் தனது குடும்ப சுமையை தாங்கி நிற்கும் பெண்ணாக காணப்படுகின்றாள். இவ்வாறான பெண்கள் சமூகத்தில் பல வகையான நெருக்கீடுகளை சந்திக்கின்றாள். இறந்த கணவனின் உறவுகள் மூலம், சமூக உறவுகள் மூலம், பொருளாதார ரீதியாக, சமய கலாசார ரீதியாக, உடலியல் மற்றும் உளவியல் ரீதியாக என பல வழிகளில் ஏற்படும் சவால்களை எதிர் கொண்டு வாழ்கின்றாள். அந்த வகையில் **"கணவனை இழந்த பெண்களின் வாழ்வியல் பிரச்சினைகள் - உளவியல் நோக்கு"** எனும் தலைப்பில் மட்டக்களப்பின் மண்முனை மேற்கு பிரதேச செயலகத்தை மையமாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மனிதனின் வாழ்க்கையானது பல்வேறு பிரச்சனைகளின் மூலமாக தீர்வுகளை தேடுவதன் மூலமும் நகர்வதாக அமைகின்றது. பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் பாரிய அளவில் பேசப்படுகின்றது. அதிலும் கணவனை இழந்த பெண்களின் பிரச்சினைகள் குறிப்பிட்டுக் கூறக்கூடியது. கணவனை இழந்த பெண்களின் வாழ்வியல் பிரச்சினைகள் எவ்வாறாக அவர்களின் உளநிலையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை அடிப்படையாகக் கொண்டதும், சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார ரீதியாக ஏற்படும் பிரச்சனைகள் உளவியல் ரீதியாக எவ்வாறான தாக்கத்தை ஏற்கடுத்துகின்றது என்பவற்றை உள்ளடக்கியதாக இவ் ஆய்வு அமையப்பெற்றுள்ளது.

திறவுக் சொற்கள்: கணவனை இழந்த பெண்கள், உளவியல், பொருளாதாரம், சமூகம், கலாசாரம்.

ஆய்வு அறிமுகம்

உயிரினங்கள் தனித்து வாழ முடியாது என்பதற்காகவே துணை தேடுக்கின்றன. அவ்வாறான ஒரு விலங்காக மனிதனும் காணப்படுகின்றார். ஆண், பெண் இருவரும் தனித்து வாழ முடியாது என்பதற்காகவும் தங்களுடைய சந்ததியின் வளர்ச்சிக்காகவும் திருமணம் என்ற பந்தத்தில் இணைந்து கொள்கின்றனர். அவ்வாறாக இணைந்து கொண்ட தம்பதியினரில் கணவன் இறந்து போகும் பட்சத்தில் அப் பெண் ''விதவை'' என்ற பெயரைப் பெறுகின்றாள். அவ்வாறாக கணவனை இழந்த பெண் பலவகையான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது. தன் பிள்ளைகளின் எதிர்காலம், குடும்ப வருமானம், தன் எதிர்கால வாழ்க்கை மற்றும் சமூகத்தில் இருந்து தன்னை எவ்வாறு காப்பாற்றிக் கொள்வது என பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றாள்.

சங்ககாலத்தில் திருமணமான பெண் கணவன் இறந்த பின்னர் கைம்பெண் நோன்பு இருப்பது கட்டயமாக்கப்பட்டது. மேலும் தலையை மழித்துக்கொள்வது, மங்கள நிகழ்வுகளில் இருந்து தம்மை விலக்கிக்கொள்வது, நெய் முதலிய பண்டங்களை உண்பதை தவிர்ப்பது என பல கடுமையான கட்டுப்பாடுகள் இருந்தன. பூதப் பாண்டியன் பெருங்கடுக்கோன் பாடிய ''காழ் பேர் நல்விளர்'' (புறம்:246) என்ற புறப்பாடல் இதனை திட்டவட்டமாக விவரிக்கிறது. மேலும் இந்த பாடலில் இவ்வாறான கட்டுப்பாடுகளுடன் வாழ்வதை காட்டிலும் பெண்கள் தங்களை மாய்த்துக்கொள்ளும் உடன்கட்டை ஏறும் வழக்கத்தை கைக்கொள்வது சிறப்பு எனவும் கூறப்பட்டுள்ளது. பிற்காலத்தில் இவ்வாறான பழக்கவழக்கங்கள் மாற்றப்பட்டாலும் தற்காலத்திலும் கணவனை இழந்த பெண்கள் பல இன்னல்களை எதிர்கொள்ளும் வண்ணம்

காணப்படுகின்றனர். இவ்வாறான பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் உளவியல் ரீதியாக ஏற்படுத்தும் தாக்கம் எவ்வாறானது என்பதை அறியக் கூடியதாக இவ் ஆய்வு அமைகின்றது.

ஆய்வுப் பிரச்சினை

பிரச்சினைகள் மனித வாழ்வில் பல விதமாக தோற்றம் பெறுகின்றன. கணவனை இழந்த பெண்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் பன்முகத்தன்மை கொண்ட தொடர்ந்தேர்ச்சியான சிக்கல்களை உருவாக்குகின்றன. இதுவே இங்கு ஆய்வின் பிரச்சினையாக அடையாளப்படுத்தப்படுகின்றது.

ஆய்வின் நோக்கம்

ஒரு மனிதன் தனக்குரிய தேவைகளை நிறைவேற்றி கொள்ளும் பொருட்டு ஆண் மற்றும் பெண் ஆகிய இரு பாலாரும் திருமண பந்தத்தில் இணைகின்றனர். இவ்வாறு இணையும் போது கணவன் மனைவி மற்றும் பிள்ளைகளுடனான குடும்பம் என்ற அலகு தோற்றம் பெறுகின்றது. இவ்வாறான குடும்பம் சீரான நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் போது கணவன் இறக்கும் சந்தர்ப்பத்தில் குடும்பத்தில் கணவனக்குரிய சுமைகளையும் மனைவி ஏற்க வேண்டி நேரிடுகின்றது. கணவன் இல்லாத நிலையில் ஒரு கணவனை இழந்த பெண் சமூகத்தில் பல வகையான இன்னல்களை சந்திக்க நேரிடுகின்றது. அந்த வகையில் மண்முனை மேற்கு பிரதேச செயலகப்பிரிவில் காணப்படும் கணவனை இழந்த பெண்கள் எவ்வாறான பிரச்சினைகளை எதிர் கொள்கின்றார்கள் என்பதைக் கண்டறிதலும், வெளிக்கொண்டு வருதலும் ஆய்வின் பிரதான நோக்கமாக உள்ளது.

ஆய்வு வினாக்கள்

இவ்வாய்வின் பிரதான வினாவாக காணப்படுவது மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள கணவனை இழந்த பெண்கள் எதிர் கொள்ளும் பன்முக தன்மை வாய்ந்த பிரச்சினைகள் எவை? இப் பிரச்சினைகள் உளவியல் தாக்கத்னை ஏற்படுத்துகின்றது? என்பது இவ் ஆய்வின் வினாவாக உள்ளது.

ஆய்வு முறையியல்

மட்டக்களப்பின் மண்முனை மேற்கு பிரதேச செயலகப் பிரிவை மைப்படுத்தி இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கணவனை இழந்த பெண்களில் 100 மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இவ் ஆய்விற்காக முதலாம் நிலைத்தரவுகளான நேர்காணல்கள், வினாக்கொத்து முறை, அவதானம், கலந்துரையாடல்கள் போன்றவற்றின் மூலமும் பெறப்பட்ட தரவுகள் சம்பவக் கதைகளாக அடையாளப்படுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளாக புத்தகங்கள், சஞ்சிகைகள், ஆய்வு அறிக்கைகள், இணையங்கள் போன்றவற்றின் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இலக்கிய மீளாய்வு

திருச்சந்திரன் செல்வி(2001) இல் கணவனை இழந்த பெண்களின் ஓலம் எனும் தலைப்பில் கணவன் இறந்த பின்பு மனைவி கணவனின் புகழ் பதவி அந்தஸ்து என்பன பற்றி ஒப்பாரி

மூலம் வெளிப்படுத்துதல், விதவை என்ற நிலைக்கு பெண் மாறுதல் தாலி அறுக்கப்பட்டு என்பன பற்றியும் விதவை எளிமை கோலம் போடுதல் ஆடவரை கவரும் வகையில் தோற்றமளிக்கலாகாது என்று இந்துக்கள் மத்தியிலான மரபு கூறப்படுகின்றது. கூறை தாலி அகற்றப்பட்ட பின் பெண்ணின் கதி என்னவாகும். தனது பாதுகாப்பு சமூகத்தில் அவள் ஒதுக்கப்படல், எதிர்கால அனுமானத்தை எண்ணுதல் என்பது பற்றியும் கூறப்பட்டுள்ளது.

பெண்களின் உளவியல் ரீதியான பிரச்சினைக்கு முக்கியமாக அமைவது சமுகத்தில் அவர்கள் மீது செலுத்தும் கலாசார ஆதிக்கம் ஆகும். அதாவது கணவன் எப்பேது இறந்து விடுகிறானோ அன்றிலிருந்து அப்பெண்ணிற்கு கொடுக்கப்படும் மதிப்பு பெருமை என்பன இல்லாமல் போகிறது. கணவன் இறந்த நாள் அன்று குங்குமம், தாலி, பூ என்பனவற்றை அமங்கலிப் பெண்களைக் கொண்டு அணிவித்து, அழித்து வெள்ளைப்புடைவை அணிவித்து விடுவார்கள். இதனால் கணவனை இழந்த பின்னர் மன அழுத்தத்தை கொடுக்கின்றது. (சோமசுந்தரம்.தயா சிவயோகம் .சா: 2004, 182).

கணவனோடு உள்ள பெண் ‘‘சுமங்கலி’’ என்று போற்றப்படுகின்றாள். அவளுக்கு சமூகத்தில் மதிப்பு அதிகம் கணவனை இழந்த பெண் ‘‘அமங்கலி’’ என்று தூற்றப்படுகின்றாள். அவள் உயிர் உள்ள வரை கைம்மை நோன்பு நோற்று வாழவேண்டும் என்று மதம் வற்புறுத்துகின்றது. இன்றைக்கு இந்நிலையில் சிறிதான மாற்றம் காணப்படினும் பழைய பழக்க வழக்கங்களில் இருந்து இந்து மதத்தினர் பூரண விடுதலை பெறவில்லை (பிரேமா.இரா. 2001 பக்18-19)

‘‘பொதுவாக கணவன் இறந்து விட்டால் மனைவி எப்படி இருக்க வேண்டும் என அந்தக்காலத்தில் இருந்து ஒரு வரையறை உள்ளது. தாலியை கழட்டி விட்டு பூ, போன்றவை வைக்க கூடாது அமங்களமாக இருக்க வேண்டும். என்று அந்தக்காலத்தில் ஒரு விதிமுறை சமூகத்தில் ஏற்படுத்தி வைக்கப்பட்டுள்ளது. இது போன்ற விதிமுறைகள் தவறு என நடிகர் விவேக் கூறியுள்ளார். உதாரணத்திற்கு அவர் வள்ளலாரும், திருவள்ளுவரும் சொன்னவற்றை பின்பற்ற செய்ய வேண்டுமென கூறியுள்ளார்.’’ ‘‘கணவன் இறந்தால் மனைவி தாலி அறுக்க வேண்டாம். ஆணுக்கும் பெண்ணுக்கும் கல்வி அவசியம். சமய நூல்களை விட திருக்குறளைப் படிப்பது சிறந்தது’’ (TN News Repoter ,2021)

விதவை பெண்களின் நிலை குறித்து பெரியார் (2004) பின்வருமாறு கூறியுள்ளார். உடன்கட்டை ஏறுவது ஒருநாள் துன்பம் உதவியாய் வாழ்வதோ வாழ்நாள் முழுவதும் தாங்கமுடியாத சித்திரவதைக்கு ஒப்பான துன்பமாக இருந்துவருகின்றது. விதவைகள் மறுமணம் செய்து கொள்ளும் வழக்கம் கற்புக்கு பங்கம் விளைவிப்பதாகும் என்று கூறினால் அது சற்றும் பொருந்தாது. விதவைக்கு மறுமணம் செய்விக்கா விட்டால் தான் கற்பிற்கு ஆபத்து உண்டாவது பெரிதும் அபூர்வமாய் யாரும் அறிய கிடைத்த உண்மை. விதவையாகி விட்டால் ஒரு பெண்ணின் உள்ளத்தில் உண்டாகும் இயற்கையை இன்ப உணர்ச்சி மங்கி விடுமா? இயற்கையில் எழும் இன்ப உணர்ச்சியை எங்கம் அடக்கிக் கொண்டிருத்தல் சாலும்? மறுமணம் செய்ய விரும்பும் பெண்களுக்கு தாராளமாய் மறுமணம் செய்து கொள்ள இடம் அளிக்க வேண்டும்.

பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

சமூகத்தின் ஒரு அங்கமாகவும் குடும்பத்தில் பிரதானமாகவும் உறுப்பாகவும் காணப்படும் பெண் ஆனவள் அம்மா, மகள், மனைவி, சகோதரி என பல உறவுமுறைகளால் குடும்பத்தில் பிணைக்கப்பட்டுள்ளாள். இதில் மனைவி என்ற உறவு குடும்ப அலகில் முக்கியமானதாக அமைகின்றது. மனைவி என்ற சொல் கணவன் எனும் சொல்லோடு தொடர்பு பட்டதாகும். இவை ஒன்றை ஒன்று விளக்குவதாக அமைகின்றது. கணவன் - மனைவி என்ற உறவு ஒரு ஆணும் பெண்ணும் திருமண பந்தத்தில் இணையும் போது ஏற்படுகின்றது. கணவனோடு வாழும் போது 'சுமங்கலி' என்று அழைக்கப்படும் பெண், கணவன் இறந்த பின் விதவை, அமங்கலி, அறுதலி



(தாலி அறுக்கப்பட்டவள்), கைம்பெண் என பல பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றாள். சுமங்கலியாக வாழும் போது பூ, பொட்டு, மஞ்சள் போன்ற மங்கள பொருட்களை அணிந்திருப்பவள் கணவன் இறந்த பின் அவற்றை ஏற்க கூடாதவளாக மாறுகின்றாள். இவ்வாறான பெண் தனது கணவன் இறந்த பின்பு பலவகைகளில் பிரச்சனைகளை எதிர் கொள்கின்றாள். வாழ்வியல் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் கணவனை இழந்த பெண்களின் உளநிலை குறித்த இவ் ஆய்வானது மட்டக்களப்பின் மேற்கில் உள்ள மண்முனை மேற்கு-வவுணதீவு பிரதேச செயலகத்தை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. அந்த வகையில் ஆய்வு பிரதேசத்தில் 2021 ஆம் ஆண்டு புள்ளிவிபரவியல் தரவின் படி 1777 பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் உள்ளன. அதில் 1226 குடும்பங்கள் கணவனை இழந்த பெண்களின் குடும்பங்கள் ஆகும்.

(மூலம்: மண்முனை மேற்கு பிரதேச செயலகம் - 2021)

கணவனை இழந்த பெண்களது பொருளாதார பிரச்சினைகள் உளவியல் நோக்கு

பொருளாதார இடர்களில் அவர்களை தங்கி வாழும் ஏனைய குடும்ப உறுப்பினர்களது அடிப்படைத் தேவைகளையும் நிவர்த்தி செய்யும் நிமித்தம் மேலும் இறுக்கமானதாக இருக்கின்றது. சாதாரணமாக உணவு, உடை, உறையுள், கல்வி, சுகாதாரம், மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்வதற்கு கூட பல்வேறான இடர்களை எதிர்கொள்பவர்களாக இருக்க நேரிடுகின்றனர். பசி பட்டினியற்ற வாழ்வியலும், சம உரிமைக்கல்வியும், உடல் ஆரோக்கியமும், பாதுகாப்பான வாழ்வும் வெறும் கனவாகவே நகர்கின்றன.

குடும்ப அங்கத்தவர்களையும் கவனித்துக்கொண்டு, பிள்ளைகளது பாதுகாப்பையும் அடிக்கடி உறுதி செய்து கொண்டும் வருமானத்திற்காக தொழிலுக்கு செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இதன் காரணமாக முறையான போதியளவு வருவாயை ஈட்டிக் கொள்ளுதல் என்பது சவாலாகவே அமைகின்றது. அதிலும் குறிப்பாக இச்சமூகத்தில் உடல் உள ரீதியான துன்பங்களால் பாதிக்கப்படும் சமூக வகுப்பினருள் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் சார்ந்த பெண்கள் எளிதில் அடங்குகின்றனர். சமூகத்தின் அணுகுமுறை என்ற அளவில் நோக்குகின்றபோது கணவனை இழந்த பெண்கள் வலுவிழந்தவர்களாக அணுகப்படுதல் கவலைக்குரியது. அத்துடன் இலகுவில் விமர்சனங்களை இத்தகைய குடும்பங்கள் மீது இச்சமூகம் எளிதில் வீசிச் செல்கிறது.

உடல் ரீதியான துஸ்பிரயோகங்கள் என்ற அளவில் இவ்வாறான குடும்பத்தை சேர்ந்த குழந்தைகள் மட்டுமல்லாமல் தலைமை பொறுப்பில் இருக்கும் பெண்களும் நெருடல்களை சந்திக்கவே செய்கின்றனர். வறுமை, பொருளாதார பின்னணி, ஆள்பலமின்மை, பயம், விரக்தி, என்ற பல்வேறுபட்ட காரணிகளால் சந்திக்கும் துன்பங்கள் தொடர்பாக பேசுவதற்கும் பின்னிற்பதாகவே தெரிகிறது. குறிப்பாக நெருங்கிய உறவினர்களாலேயே இத்தகைய அசௌகரியங்கள் ஏற்படுத்தப்படுகின்றன என ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. கணவன் இறந்த பெண்ணின் உதவ வேண்டிய உறவுகளான கணவனின் சகோதரிகள், சகோதரர்கள் மூலமான பிரச்சினைகளில் சொத்துப் பிரச்சினை தகராறுகள் என்பவற்றால் ஏற்படும் பிரிவுகளால் பலவகையில் துன்பத்தை கொடுக்கின்றனர். அடையானம் காணப்பட்ட பிரச்சினைகளாக வேலி கட்டும் போது ஏற்படும் சண்டைகள், வயல் காணிகள் பங்கிடும் போதும், பிள்ளைகளின் திருமணத்தில் முன்னுரிமை வழங்கவில்லை என்றும் காரணங்களை காட்டி முரண்பட்ட உறவினர்கள் தங்களுக்குள்ளே மனரீதியான விரிசல்களால் சிறிய தவறகளை செய்கின்றனர்

கணவனோடு வாழும்போது தொழில் அனுபவம் மற்றும் வெளி உலகம் என்பது தெரியாத நிலையில் கணவன் இறந்த பின் தனி நபராக குடும்ப சுமையை ஏற்கின்றார். செய்வதென்ன என அறியாது பொருளாதார நெருக்கடியில் முதலில் மூழ்கி போகின்றாள்.

ஆய்வு செய்யப்பட்ட பகுதியில் உள்ள பெண்கள் செய்யும் தொழில்களை கீழே அட்டவணையில் பார்ப்போம்.

தொழில்கள்	**எண்ணிக்கை**
மீன்பிடி	10
அரச தொழில் அல்லது ஓய்வூதியம்	4
சுயதொழில்	80
கூலித்தொழில்	174
மத்திய கிழக்கு நாட்டு பணிப்பெண்	6
எதுவும் இல்லை	95
மொத்தம்	369

(மூலம் ஆய்வுத் தரவு)

அட்டவணையின் படி 174 பெண்கள் கூலித் தொழிலையும் 80 பெண்கள் சுய தொழிலையும் செய்கின்றனர்.

தன்னுடையதும் பிள்ளைகள் உடையதும் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை மற்றும் ஏனைய தேவைகளையும் பூர்த்தி செய்யும் பொருட்டு தொழில் ஒன்றை நாடவேண்டி ஏற்படுகின்றது. இப்பிரதேசத்தில் மக்களின் பிரதான ஜீவனோபாயமாக விவசாயமும் மீன் பிடியுமே காணப்படுகின்றது. மூன்று வேளையும் நெல் அரிசிச் சோற்றை உணவாக உட்கொள்பவர்களாக மண்முனை மேற்கு பிரதேச வாசிகள் காணப்படுகின்றனர். அந்த வகையில் கணவனை இழந்த பெண்கள் வயலில் களை பிடுங்க செல்லுதல், நெற்பயிர் நடுதல், வயல் வேலை செய்பவர்களுக்கு உணவு சமைக்க செல்லுதல், கச்சான் மற்றும் சோளம் போன்ற பயிர்கள் நடச் செல்லுதல் அத்தோடு அறுவடைக் காலத்தில் நெல் வாங்க செல்லுதல் என்றவாறாக தொழில் செய்கின்றனர்.



(மூலம்: ஆய்வுத் தரவு)

வரைபடத்தின் படி ஆய்விற்குட்படுத்தப்பட்ட பகுதியில் 18 பெண்கள் தோட்டப் கூலிகளாகவும் 25 பேர் வீட்டு வேலைக்கு செல்பவர்களாகவும் 141 பெண்கள் தோட்டக் கூலிகளாகவும் கண்டறியப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு நகரை அண்டிய பிரதேசமாக காணப்படுவதால் இங்குள்ள கிராமங்களில் வாழும் கணவனை இழந்த பெண்கள் நகர்ப்புறங்களில் உள்ள வீடுகளுக்கு சென்று வேலை செய்கின்றனர். அங்கு சமைத்தல், பாத்திரம் கழுவுதல், வீடு மற்றும் முற்றம் பெருக்குதல், உடைகளைத் துவைத்தல், முதியோர் இருப்பின் அவர்களை குளிப்பாட்டி சுத்தப்படுத்தல், குழந்தைகளின் வேலை பார்த்தல் என்றவாறாக பல வேலைகளை செய்து அதில் கிடைக்கும் வருமானத்தை கொண்டு தங்களது குடும்பத்தை நடத்தி வருகின்றனர். இவ்வாறு நகர்புற வீடுகளில் வேலைக்கு செல்லும் பெண்கள் ஆய்வு பிரதேசத்தில் 25 பெண்கள் காணப்படுகின்றனர். இவர்கள் வேலைக்கு கெள்ளும் போது எதிர் கொள்ளும் பிரச்சினைகளை நோக்குகையில்:

- போக்கு வரத்து சிக்கல்: ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட கிராம சேவசர் பிரிவுகளின் ஊடாக இலங்கை போக்குவரத்து சபையின் கீழ் பேருந்து சேவை இருப்பினும் தகுந்த நேரத்திற்கு வருவதிலை.

- வேலை அதிகமாகவும் சம்பளம் குறைவாகவும் வழங்கப்படல். அதிகரித்து தர கோரினால் கிடைக்கும் வருமானத்தையும் இழக்க நேரிடும்.
- பாலியல் ரீதியான தொந்தரவுகள் ஏற்கட்டாலும் வெளியில் கூற முடியாத நிலை. வெளியில் கூறும் போது சமூகம் பெண்ணைத்தான் தவறாக பெசும் என்ற அச்சம்
- பிள்ளைகளை கவனிக்க முடியாமை.
- காலையில் சென்று மாலையில் வருவதால் சொந்த விடயங்களை கவனித்துக் கொள்ள நேரம் இல்லாமல் சிக்கல் தன்மைக்கு ஆளாகுதல்

போன்ற காரணங்களை கண்டறிய கூடியதாக இருந்தது. இவ்வாறான வாழ்க்கை மீதும் சமூக கட்டமைப்பு மீதும் வெறப்பு கொண்டவர்களாக இங்கு வாழும் கைம் பெண்கள் காணப்படுகின்றனர்.

கணவனை இழந்த பெண்களது சமூக, சலாசாரப் பிரச்சினைகள் உளவியல் நோக்கு

தாயின் அரவணைப்பிலும் தந்தை பாதுகாப்பிலும் இருந்து பின் கணவரின் பாதுகாப்பில் வாழ்ந்த பெண் கணவன் இறந்த பிறகு பாதுகாப்பை எண்ணி அச்சமும் கவலையும் கொள்பவளாக காணப்படுகின்றார்.

சமூகத்தின் தவறான கருத்துக்களுக்கு பயந்தும் தனது குடும்பப் பொறுப்புகளை ஏற்றும் வாழும் இப்பெண்கள் தன் பிள்ளைகளை விட்டுப்பிரிந்து மத்திய கிழக்கு நாடுகளில் பணிப்பெண்களாக சென்று கூட துயரத்தை அனுபவிக்கின்றார்கள். பிள்ளைகளின் கல்வி மற்றும் ஏனைய தேவைகளை பூர்த்தி செய்ய மட்டுமன்றி சமூகத்தினால் தான் நோக்கப்படும் விதத்தில் தப்பி கொள்ளவும் இவ்வாறாக அயல்நாட்டு பணிப்பெண்களாக செல்கின்றனர்.

மறுமணம் குறித்த எண்ணமும் மறுமணம் புரியாமைக்காகான காரணங்களும் இங்கு அடையாளம் காணப்பட்டுள்ளன.

1. கணவன் மீது கொண்ட பற்று.
2. சமூகம் தவறாக பேசும் என்ற அச்சம்.
3. பிள்ளைகள் தனித்து விடுவார்கள் என்ற சிந்தனை.
4. நறுமணத்தின் பின் கணவன் தன்னை புரிந்து கொள்ளாமல் போவாரோ என்ற பயம்.
5. இறந்த கணவனால் பட்ட துன்பம் மரணத்தின்பின் ஏற்படுமோ என்ற அச்சம்.

வாழ்வியல் சடங்குகள் எனப்படுபவை ஒரு குழந்தை பிறப்பிலிருந்து அதன் மரணம் வரை நிகழ்த்தப்படும் சடங்கு முறைகள் ஆகும். இச் சடங்குகளில் கணவனை இழந்த பெண்களின் பங்கானது குறிப்பிட்டு கூறக்கூடிய விதத்தில் அமைந்துள்ளது. அந்த வகையில் சடங்குகளில் நல்லது கெட்டது என்று பிரித்து மரணச் சடங்குகளில் கைம் பெண்களுக்கு முன்னுரிமையும் வாழ்வியல் சடங்குகளில் எட்டி நின்று பார்க்கும் வளமையும் இங்கு காணப்படுகின்றது. திருமண நிகழ்வுகள், பூப்படைதல் சடங்குகள் போன்றவற்றில் முழிப்பிற்கு நிற்கக்கூடாது, ஆரத்தி எடுக்கவும் ஆசிர்வாதம் பண்ணவும் நிற்கலாகாது என்று கூறப்படுகின்றது. பெற்ற பிள்ளைக்கு கூட முன்னின்று சடங்குகள் செய்ய முடியாத நிலையிலும் தாய்மார் காணப்படுகின்றனர்.

இதனால் இச் சடங்கு சம்பிரதாயங்களை கட்டாயத்தின் அடிப்படையில் பின்பற்றுபவர்களாக காணப்படுகின்றனர்.

இவ்வாறான சுபகாரியங்களுக்கு பெண்ணிற்கும் விதவைகள் மரண வீடுகளில் இறுதி மரணச் சடங்கின் பின்னர் வீடு கழுவுதல், முற்றம் கூட்டுதல் போன்ற வேலைகளை செய்ய அழைக்கப்படுபவர்கள் ஆக காணப்படுகின்றனர். சுமங்கலிப் பெண்கள் இவற்றை செய்தல் ஆகாது என்றும் கூறி வருகின்றனர். இவ்வாறாக கணவனை இழந்த பெண்களை வழி நடத்தி வருகின்றனர்.

இவ்வாறான பிரச்சனைகளை எதிர்கொள்ளும் விதவைப்பெண்கள் மனதில் விரக்தியும், ஏன் வாழ்கின்றோம் என்ற குறிக்கோள் அற்ற நிலையிலும் நாட்களை கடத்தினால் போதும் என்ற எண்ணத்திலும் வாழ்ந்துவருகின்றனர். எதிர்காலம் குறித்த சிந்தனை இல்லாமல் இன்றைய நாளை கடத்தினால் போதும் என வாழ்கின்றனர்.

இப் பிரதேசத்தில் வாழும் விதவைப் பெண்களின் பிள்ளைகளில் பெரும்பாலானோர் குறிப்பிட்ட வயதிற்கு மேல் பாடசாலைக்கு செல்வதை தவிர்த்துள்ளனர். இதற்கு காரணம் தாயின் பருத்த குடும்ப சுமையும் கவலையும் பிள்ளைகளின் கல்வியில் தாக்கம் செலுத்துவதாக அமைகின்றது. சில பிள்ளைகள் இடைவிலகியும் சில பிள்ளைகள் சாதாரண தரம் வரை பாடசாலைக்கு சென்று உயரத்திற்கு செல்லாமல் குடும்ப வருமானத்தை விட போவதாக தொழிலுக்கு செல்கின்றனர். இந்நிலை காலாகாலமாக தொடர்ந்துவரும் ஒரு நிலையாக காணப்படுகின்றது. இருப்பினும் தந்தையை இழந்த பிள்ளைகள் தற்போது பல்கலைக்கழகம் வரை சென்று கல்வி கற்று வருவதையும் காணக் கூடியதாக உள்ளது. தாயின் ஊக்குவிப்பும் தாயின் ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்ற பிள்ளையின் நோக்கமும் காரணமாக அமைந்துள்ளது.

பிரதேச செயலகத்தில் பெண்கள் நலன் கருதியும் குடும்பங்களின் அபிவிருத்தியை கருத்திற்கொண்டு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிறுவனம், காவியா பெண்கள் அமைப்பு, கிராமப்புற வளர்ச்சி திட்டமிடல் அமைப்பு (RDPO) போன்ற அரசசார்பற்ற அமைப்புகளும் சமுர்த்தி போன்ற அரசின் கீழ் இயங்கும் நிறுவனங்களும் இயங்குகின்றன. இவ்வாறான வசதிகள் காணப்படுகின்ற போதிலும் இப்பிரதேசத்தில் உள்ள கணவனை இழந்த பெண்கள் இவை குறித்து கருத்திற் கொள்ளாமல் இருப்பதும் கவலைக்குரிய விடயமாக காணப்படுகின்றது. இதற்காக பல காரணங்கள் இங்கு அடையாளம் காணப்பட்டுள்ளன.

இங்கு வாழும் விதவைப் பெண்கள் கணவன் இறந்த பின்பு தங்களுக்கு என்று ஒரு நோக்கமோ குறிக்கோளும் இல்லாதவகையில் அர்த்தமற்ற ஒரு வாழ்க்கையில் வாழ்ந்து வருகின்றனர். எதிர்காலம் ஒன்றை எண்ணிப்பார்க்காத வகையில் இன்றைய பொழுதை கடத்தினால் போதும் என்ற நிலைப்பாட்டில் வாழ்க்கையை கடத்துகின்றனர்.

சுய நோக்கு ஒன்று இல்லாமல் பிள்ளைகளின் சந்தோ'ம், பிள்ளைகளின் வாழ்க்கை அது மட்டும் போதும் என்று எண்ணிக்கொண்டு வாழ்பவர்களாகவும் காணப்படுகின்றனர். இவ்வாறான நோக்கமற்ற தன்மை வாழ்க்கையில் முன்னேற்றத்தை நோக்கி செல்ல தடையாக அமைகின்றது.

அரசசார்பற்ற நிறுவனங்களில் குறிப்பிட்ட பிரதேசத்தில் மட்டும் சேவை ஆற்றுவதால் அதன் மூலம் குறித்த பகுதி மக்கள் மட்டுமே பயன் பெறுகின்றனர். நிறுவனங்கள் உதவி செய்ய தயாராக இருந்தாலும் அவை குறித்த அறியாத நிலையில் பெண்கள் காணப்படுகின்றனர். பிரதேச செயலகம் ஊடாக மகளிர் அபிவிருத்தி அமைச்சின் கீழ் சுயதொழிலுக்காக ஒதுக்கப்பட்ட உதவிகள் சில நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படுகின்றன. இவைக்குறித்து அறியாத நிலை இங்கு காணப்படுகின்றது. அவ்வாறு அறிந்து இருப்பினும் அவற்றைப் பெறுவதில் உள்ள படிமுறைகள், கால நீடிப்பு என்பவற்றைக் கருத்தில் கொண்டு அதைப் பெறுவதற்கும் தயாராக இல்லாத நிலை காணப்படுகின்றது.

அதுமட்டுமன்றி இவ்வாறான உதவிகள் குறித்து கூறுவதற்கும் யாரும் முன்வராத நிலையில் இங்கு அறியக்கூடியதாக உள்ளது. சுயமாக தேடி அறிந்து கொள்வதற்குரிய கல்வி அறிவு குறைந்தவல்களாகவும் இவர்கள் காணப்படுகின்றனர். உளநிலை ரீதியாக ஏற்படுத்தும் தாக்கங்களில் இருந்து மீண்டு வருவதற்கும் பிரச்சினைகளுக்கு தீர்வை வருவதற்கும் ஆக ஆலோசனை சேவைகள் வழங்கப்படுவது குறித்தும் இங்கு மக்கள் அறியாமலேயே இருக்கின்றனர். உதவி கேட்க விருப்பம் இல்லாத மனநிலை கொண்ட பெண்களும் இங்கு காணப்படுகின்றன. இவர்களின் கூச்ச சுபாவம், வெளி இடங்களுக்கு சென்று பழகாத தன்மை என்பன தற்போதும் வீட்டில் முடங்க வைத்துள்ளதாக காணப்படுகின்றது.

இப் பிரதேசத்தில் வாழும் கணவனை இழந்த பெண்கள் சமுர்த்தி மூலம் கிடைக்கும் உதவிகள் குறித்து அறிந்தவர்களாக காணப்படுகின்றனர். இதற்கு காரணம் சமுர்த்தி கொடுப்பனவை பெறுபவர்களாக பெரும்பாலானோர் உள்ளனர். மேலும் ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிற்கும் சமுர்த்தி உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். சமுர்த்தி உத்தியோகத்தர் இன் தலைமையில் மாதம் ஒருமுறை ஒன்று கூடல்கள் இடம்பெறுகின்றன. மாதாந்தம் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதால் சமுர்த்தி மூலம் கிடைக்கப்பெறும் உதவிகள் குறித்து அறிந்தவர்களாக காணப்படுகின்றனர்.

அந்த வகையில் நோக்கும் போது இங்கு வாழும் கணவனை இழந்த பெண்கள் தங்களுக்கு என்ற ஒரு நோக்கம் இல்லாதவர்களாக இருப்பது அறியப்படுகின்து. அதோடு இங்கு காணப்படும் வளங்களையும் வசதிகளையும் கொண்டு எவ்வாறு முன்னோக்கி வாழ்வை நகர்த்தலாம் என்பது குறித்து ஒரு ஆலோசனையும் இவர்களுக்கு வழங்கப்படவில்லை. அத்தோடு அதற்குரிய அமைப்பு முறைகள் குறித்து அவர்கள் அறிந்திருக்கவும் இல்லை என்பதும் தெரியவருகின்றது.

சுயமாக பல காரணங்களும் காணப்படுகின்றது தனித்து வாழும் பெண்களாக காணப்படுவதால் சமூகத்திலிருந்து ஒதுங்கி வாழ்பவர்களாகவும் சமூகத்தின் தவறான பார்வையில் இருந்து தப்பித்துக் கொள்ள நினைப்பவர்கள் ஆகவும் காணப்படுகின்றனர். அத்தோடு வாழ்க்கையை விரும்பாதவர்கள் ஆகவும் வாழ்க்கையை வெறுத்தவர்களாகவும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

மனதளவில் முடக்கப்பட்டவர்களாகவும் உடல்ரீதியாக பலவீனம் கொண்டவர்களாக மாற்றுகின்றனர். பிள்ளைகளின் மீதான எண்ணம் கணவனை இழந்த பெண்களின் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அதைவிட இங்கு காணப்படும் அமைப்பு முறைகள், உதவிகள்

வழங்கப்படும் விதம், உதவிக்காக தெரிவுசெய்யப்படும் குடும்பங்களின் பொருளாதார நிலைகளில் மிகவும் சரியாக நோக்கப் படுவதில்லை.

பிரதேச செயலகத்தில் பணியாற்றும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளார் என்பது குறித்து அறியாத பெண்களும் இங்கு காணப்படுகின்றனர். ஏனெனில் இங்கு சேவை செய்யும் உத்தியோகத்தர்களை பெரும்பாலானோர் பொலிசாரின் ஊடாக கொண்டுவரப்படும் பிரச்சினைகளை மட்டுமே கருத்தில் கொண்டு செயற்படுகின்றனர். இதனால் பெரும்பாலானோருக்கு இவ்வாறான உத்தியோகத்தர்கள் எவ்வாறான சேவைகளை புரிகின்றார்கள்? எவ்வாறான சேவைகள் இருக்கின்றன? என்பது குறித்து அறியாதவர்களாக காணப்படுகின்றனர்.

முடிவுரை

கணவன் இறந்த பின்பு வாழ்க்கை குறித்த ஓர் குறிக்கோள் அல்லது நோக்கம் இல்லாதவர்களாக கணவனை இழந்த பெண்கள் காணப்படுகின்றனர். பிரச்சினையை முகம் கொடுக்க முடியாமலும் வாழ்வில் ஏற்படும் சவால்களை சந்திக்க முடியாமலும் பயந்து ஒதுங்கி வாழ்பவர்களாக இவர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். வாழ்வின் அர்த்தத்தை புரிந்து கொண்டு சூழ்நிலைக்கு ஏற்ப சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்வது இவ்வாறான பெண்களுக்கு மகிழ்ச்சியைத் தர வல்லதாகும். ‘‘குறிக்கோள் ஒன்று உருவாகும்போது எதிர்காலம் தேடி வரும்’’ என்பதை உணர்ந்து செயற்படும் போது சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகள் ‘‘கண்ணுக்குப் புலப்படாத தூசி போல்’’ மாறிவிடும். அவ்வாறு இல்லாவிடின் உளநல பிரச்சினைகளை ஏற்படுத்தக் கூடும்.

கணவனின் இறப்பு தனது வாழ்க்கையை தோல்விக்குள் தள்ளிவிட்டதாக நினைத்து விரக்தியுடன் நாட்களை கடத்தும் கைம்பெண்கள் வாழ்க்கை என்பது வெற்றி தோல்விகளை உள்ளடக்கியது என்பதை உணர வேண்டும். Victor E. Frankl (1949) இல் ‘‘மகிழ்ச்சியைப் போல வெற்றியை தொடர முடியாது. அது நிகழவேண்டும். ஒரு வார்த்தையில் கூறுவதாயின் ஒருவர் வெற்றிகரமாக வாழலாம் ஆனால் வெற்றி என்பது மட்டுமே ஒரு குறிக்கோள் அல்ல’’ எனக் கூறுவதன் அடிப்படையில் கணவனை இழந்தபின் பெண்கள் வீட்டினுள் முடங்கி விடாது வாழ்க்கையில் முன்னோக்கி செல்ல உழைக்க வேண்டும்.

வருமானம் ஒன்றை பெறும் பொருட்டு செய்யும் தொழிலில் முன்னேற்றத்தைப் பெற்று எதிர்கால வாழ்க்கையை வாழ்வதற்குரிய அடித்தளத்தை இவர்கள் இட வேண்டியது கட்டாயமாகும். உதவிகளை பெற்றுக் கொள்ளவும், அவை கிடைக்கப் பெறும் வழிகள் குறித்து அறியாமல் இருப்பதால் பயன் எதுவும் கிடைப்பதில்லை என்பதை உணர வேண்டியவர்களாகவும், தேடலை கொண்ட வாழ்வை வாழ வேண்டியவர்களாக விதவைப்பெண்கள் காணப்படுகின்றனர். காலம் காலமாக தொடரும் பிரச்சினைகள் அனைத்தும் உளரீதியான தாக்கத்தை ஏற்படுத்தி கணவனை இழந்த பெண்களை வீட்டினுள் முடங்க செய்துவிட்டன. உளம் பாதிக்கப்படுவதால் உடல்ரீதியாக பலவீனம் அடைந்து நோய்களுக்கு ஆளாகி வாழ்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இளம் விதவை பெண்கள் பாதுகாப்பு பிரச்சனையை எதிர்கொள்வதை விட தனக்கு உரிய பாதுகாப்பை தானே தேடிக் கொள்வது சிறந்ததாகும். அதற்கு மறுமணம் ஓர் முடிவாக அமையலாம். பெரியார் கூறுவதை போல மறுமணம் தவறு இல்லை. தனக்குத் தகுந்த ஒருவரை திருமணம் புரிவதில் தவறில்லை என்கிறார். இதற்கிணங்க வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முடியும். இதை ஏற்க மறுக்கும் சமூக கலாச்சாரத்தை மறுதலித்து வாழ்வது சிறந்தது என்பதை இங்கு முடிவாக கூறமுடியும். மறுமணம் புரிந்து வாழ விருப்பம் இருந்தும் பிள்ளைகளின் எதிர்காலம் அவர்களை இழக்க வேண்டிய கடமை மற்றும் சமுதாயத்தின் பார்வை என்பவற்றை கருத்திற் கொண்டும் தனது ஆசைகளையும் உணர்வுகளையும் அடக்கி ஆளும் பெண்களும், மறுமணம் குறித்து நம்பிக்கை இல்லாமலும் மரணத்தின் பின்னர் மேலும் பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்ற அச்சத்தாலும் இங்குள்ள விதவைப் பெண்கள் மறுமணம் புரிய தயங்குகின்றனர்.

பிள்ளைகளின் வளர்ப்பில் சவால்களை எதிர்கொள்ளும் நிலையானது இங்கு அடையாளம் காணப்பட்டதற்கு இணங்க பொருளாதார ரீதியான சிக்கல்கள், பிள்ளைகளின் பாதுகாப்பு பிரச்சினைகள், கல்வியில் இருந்து பிள்ளைகள் இடை விலகுதல், நோய்களுக்கு உள்ளாகுதல் என்பவற்றோடு தந்தை இல்லை என்ற தாக்கத்திலும் பிள்ளைகள் உள்ளமையால் அவற்றை தீர்க்கம் பொருட்டு சவால்களை எதிர்கொண்டு பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்கும் பொருட்டு பாடுபடுபவர்களாக பெண்கள் காணப்படுகின்றனர். பொருளாதார தேவையை நிறைவேற்ற உழைப்பதோடு அவர்களின் கல்வி சீராக அமைய வேண்டும் எனவும் உடல் ஆரோக்கியத்துடன் பிள்ளைகள் வாழ வேண்டும் எனவும் ஒரு தந்தையின் இடத்திலிருந்து தாயின் இடத்திலிருந்தும் செயப்படுபவர்களாக கணவனை இழந்த பெண்கள் காணப்படுகின்றனர்.

பரிந்துரைகள்

கணவனை இழந்த பெண்கள் சுயமாகவே தாழ்ந்த மனப்பான்மையில் இருந்து வெளிவர வேண்டும். அத்தோடு கணவனை இழந்த பெண்கள் இவ்வாறுதான் வாழ வேண்டும் என்று கூறப்பட்டு வரும் ஆனாதிக்க சிந்தனைகளில் இருந்து சுயமாக வெளிவருதல் வேண்டும். கடந்த காலத்தை நினைத்து கவலை கொள்வதை விடுத்து எதிர்காலத்தில் நோக்கம் ஒன்றினை கண்டறிந்து அந்நோக்கத்தை அடைவதற்காக நிகழ்காலத்தை மாற்றிக் கொள்ள வேண்டியது இவ்வாறான பெண்களின் வாழ்வில் ஓர் திருப்புமுனையை ஏற்படுத்தும் இதற்காக சுயமாகவே தங்களை தயார் படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு சுயதயார் படுத்தல் நடவடிக்கையானது சமூகத்தின் புறக்கணிப்பிலிருந்து பெண்களை பாதுகாத்துக் கொள்ள உதவும். இதற்கு அடித்தளம் இடுவதாக உளவளத்துணை செயற்பாடு அமைய வேண்டும். குடும்பத்தார் கணவனை இழந்த பெண்களை புறம் தள்ளி வைக்காது பிரச்சினைகளில் இருந்து வெளிவருவதற்கு துணையாக இருக்க வேண்டும்.

பிரதேச செயலகத்தில் உளவளத்துணை செயற்பாட்டில் ஈடுபடும் வழிகளை உத்தியோகத்தர் பிரச்சினைகள் உள்ள இடங்களுக்கு சென்று கணவனை இழந்த பெண்களுக்கு பொதுவான ஆலோசனைகளை கட்டம் கட்டமாக நடத்தல் வேண்டும். பொருளாதார பிரச்சனைகளை தீர்ப்பதற்காக இப்பிரதேசத்தில் உள்ள வளங்களை பயன்படுத்தும் பொருட்டு ஊக்குவிப்புகளை வழங்க வேண்டியது அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடாக அமைய

வேண்டும். சுயதொழில் ஊக்குவிப்பு திட்டங்கள் உட்கட்டுமான வசதி திட்டங்கள் அமல்படுத்தப்படும் முறைகளில் மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும்.

பிரதேச செயலகங்களில் வழங்கப்படும் சேவைகள் குறித்து அறிவினை கிராம சேவக உத்தியோகத்தர் ஊடாக வழங்கப்படுதல் முக்கியமான விடயமாகும். அரச சார்பற்ற நிறுவனங்கள் பிரதேச செயலகம் ஊடாக வழங்கப்படும் சேவைகளை வழங்காது அவை தவிர வேறு எவ்வாறான தேவைகள் அவசியமாக உள்ளது என்பதையும், யார் அதற்கு தகுதியுடையவர்கள் என்பதையும் அறிந்து செயற்பட வேண்டும்.

பிரதேச செயலகத்தின் ஊடாக கடமையாற்றும் ஊழியர்கள் அலட்சியப் போக்கினை தவிர்ப்பதோடு பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும். மாதம் ஒருமுறையேனும் மகளிர் அபிவிருத்தி வெளிக்கள உத்தியோகத்தர்கள் கணவனை இழந்த பெண்களின் பொருளாதார நிலை பற்றி கணக்கெடுக்க வேண்டும். இதற்கான செயற்பாட்டு திட்டத்தை அரசின் ஊடாக அமுல்படுத்தல் சிறந்தது அவை பிரதேச செயலகம் ஊடாக தகுதி உடையோருக்கு வழங்கப்படுவதுடன் கணவனை இழந்த பெண்கள் மட்டுமின்றி கிராமங்களில் உள்ளோரும் பயனடைவர். முக்கியமாக உளவளத் துணையாளர் மூலம் கணவனை இழந்த பெண்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்க்கைக்குரிய நோக்கமொன்றை கண்டறிய செய்ய வேண்டும்.

சமூக கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். கணவன் இறந்த பின் இவ்வாறுதான் வாழவேண்டும் என காலம் காலமாக பின்பற்றி வரும் பழக்கவழக்கங்கள் மாற்றப்படவேண்டும். தனித்து வாழும் கைம்பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய சமூகத்தார் ஒன்றிணைய வேண்டும். இவை குறித்து கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுமிடத்து மண்முனை மேற்கு பிரதேச செயலகத்தில் வாழும் கணவனை இழந்த பெண்களின் வாழ்க்கையில் ஓர் முன்னேற்றத்தினை காண முடிவதோடு உளவியல் ரீதியாக ஏற்படும் பாதிப்புகளில் இருந்து இப் பெண்களால் விடுதலை பெறவும் முடியும்.

உசாத்துணை

1. இராயாகரன்,பி.(2001).ஆணாதிக்கமும் பெண்ணியமும்.சென்னை:கீழைக்காற்று வெளியீட்டகம்.
2. ஔவை.(1997).நான் ஒரு பெண், பெண்கள் தொடர்பான சரிநிகர் கட்டுரையின் தொகுதி. யாழ்ப்பாணம்:பாரதி வெளியீட்டகம்.
3. பிரேமா,இரா.(2001).பெண்- மரபிலும் இலக்கியத்திலும்.இந்தியா:தமிழ் புத்தகாலயம்.
4. நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்.(1997). பண்படும் பெண். Colombo12:Top Print
5. பெரியார்.(2004).பெண் ஏன் அடிமையானாள் (22ஆம் பதிப்பு). சென்னை:பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவன வெளியீடு.
6. திருச்சந்திரன் செல்வி, (2001), பெண்களின் வாய்மொழி இலக்கியம் தாலாட்டு, ஒப்பாரி பற்றிய சமூகவியல் நோக்கு. கொழும்பு:பெண்கள் கல்வி ஆய்வு நிறுவன வெளியீடு.
7. Victor E.Frankle, (1946). The Original From Death-Camp to Existentialism: Man's Search For Meanig. Austria:Verlag für Jugend und Volk
8. கரிகாலன், ஆர்..(2019, "இப்போ இதுதான் பேச்சு: இனி, பெண்கள் உட்காரட்டும்": Retrived From: https://www.hindutamil.in/news/supplements/penn-indru/524397-ladies-advertisement.html: 3.6.2022,944am
9. டினோஜா,ந.(2021)."பெண் தலைமைத்துவ குடும்பங்கள் எதிர் கொள்ளும் சவால்களும் சிக்கல்களும்". Retrived From: https://hashtaggeneration.org/ 01.3.2022, 11.40 am

10. TN News Repoter ,(2021). "கணவன் இறந்தால் மனைவி எப்படி இருக்க வேண்டும்", Retrived From: (https://www.google.com/amp/s/tamilnaduflashnews.com/tamil-flash- news/husband-and-wife/12686/%3famp=1.) : 02.06.2022, 11.13pm
11. The Ohio State University, "What is Psychology, Retrived From: https://psychology.osu.edu/about/what-psychology: 5.6.2022, 10.12 am